MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor :
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental Manuscripts Library, Madras.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

No. LXXXII

ஸப்தரிஷி நாடி

(மேஷ லக்னம்)

SAPTARIṢI NĀḌI

(Mēṣalagnam)

CRITICALLY EDITED WITH INTRODUCTION
AND NOTES

BY

Prof. K. NATESAN

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

1951

Price Rs. 20-0-0

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
MADRAS-1

INTRODUCTION

zA 66

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May, 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication, The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai. B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.

13. Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Haq, M.A., D. Phil., (Oxon.)
18. Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. Sri P. D. Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Govt. Memo. 7297-E/50-3, Edn., D/—19—5—'50 and Govt. Memo. No. 15875-E/50-4, Edn., D/—7—9—'50.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., and C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph. D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication during 1949-50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

TAMIL

1. Kappal Śāttiram
2. Anubhava Vaiddiya Muṟai
3. Āttānakōlāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōḷaṉ Pūrva Paṭṭayam
6. Śivajñāna Dīpam

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭuvu
3 Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam—(Tantrasārasaṅgraha)
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

MALAYĀLAM

1. Garbha Cikitsa
2. (a) Vāstulakṣaṇam
   (b) Śilpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram—(Bālaprabōdham)

KANNAḌA

1. Lōkōpakāram
2. Raṭṭamatam

3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra

ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

"B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

TAMIL

1. Śarabendra Vaidya Muṟai (Diabetes)
2. Do. (Eyes)
3. Do. (Anaemia)
4. Do. (Svāsakāsam)
5. Agastiyar
6. Koṅkaṇarśarakku Vaippu
7. Tiruccirṟambalakkovaiyār with Padavurai
8. Tālasamudram
9. Bharatanāṭyam
10. (a) Paṇḍikēḷi Vilāsa Nāṭakam
    (b) Purūrava Cakravarti Nāṭakam
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library
12. Rāmaiyaṉ Ammāṉai

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāladaśāprāṇapradīpikā
3. Raghunātha Nāyakābhyudayamu
4. Rājagōpāla Vilāsamu
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRĀṬHI

1. Nāṭyaśāstra Saṅgraha
2. (a) Book of Knowledge
   (b) Folk Songs
   (c) Dora Darun Veṇi Paddhati
   (d) Asvasa Catula Dumaṇi
3. (a) Pratāpasimbendra Vijaya Prabandha
   (b) Sarabhendra Tīrthāvali
   (c) Lāvaṇi
4. Devendra Kuravañji
5. Bhakta Vilāsa
6. Śloka Baddha Rāmāyaṇa

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations
2. Rājamṛgāṅka
3. Ānandakandam
4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. (a) Colacampū
   (b) Sahendra Vilāsa
7. Dharmākūtam—Sundara Kāṇḍa.
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Saṅgīta Darpaṇa
11. Bījapallava

During 1950, only the Sub-committee for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages during 1950-51.

TAMIL

1. Daṭcaṇāyaṇār-Vaiddiya-Aṭṭavaṇai
2. Vaiddiyak Kalañciyam
3. Anubhava Vaiddiya Muṛai Vol. 3

TELUGU

1. Śaivācārasaṅgrahamu
2. Anubhava Vaidyam
3. Abhinayadarpaṇamu

SANSKRIT

1. Ārogyacintāmaṇi
2. Tattvasāra with Ratnasāriṇī
3. Sūtrārthāmṛta Lahari
4. (a) Ratnadīpikā
   (b) Ratnaśāstra

MALAYĀLAM

1. Aśvacikitsa
2. Phalasārasamuccaya

KANNAḌA

1. Vaidya Sāra Saṅgraha

During 1951-52, only the Sub-committees for TAMIL, TELUGU and MALAYALAM met in the month of April 1951. The following books were taken up for publication in the various languages.

TAMIL

1. Saptariṣināḍi
2. Karnāṭakarājākkaḷ Savistāra Caritram
3. Bharata Siddāntam
4. Pillaippiṇivākaṭam
5. Anubhava Vaiddiyam Vol. 4
6. Māṭṭuvākaṭam

TELUGU

1. Brahmavidyā Ṣudhārṇavamu
2. Rāgatāḷacintāmaṇi
3. Vaidyacintāmaṇi
4. Kumārarāmuni Kathā
5. Kāṭamarāju Kathā

SANSKRIT

1. Devakeralam—Candrakaḷā Nāḍi
2. Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri Śaṅkarācārya

MALAYĀLAM

1. Kiḷivaṇḍusamvādam
2. Advaita Vedāntam
3. Bārhaspatyasūtra with Malayālam commentary
4. Karaṇapaddhati

KANNAḌA

1. Sadgururahasyam

ARABIC

2. Shawakil-Ul-Hur

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the footnotes except in the case of a few books in which the correct readings have been given in the footnote or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through

the press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

There are certain types of astrological works containing copies of several horoscopes illustrating in a practical manner and explaining in detail the life reading of a person in all the twelve *bhavas* according to the positions of the planets at the time of birth. Such works are known as Nāḍī Granthas. They are of much interest to a student of astrology relating to the predictive portion of that science. Saptarisinadi in Tamil and Śukranāḍī, Candrakalānāḍī, Bhārgavanāḍī, etc., in Sanskrit are of this type. A person whose horoscope corresponds identically to any one of the horoscopes contained in the Nāḍi Granthas can easily know his future in a detailed manner with accurate statements. These works are, therefore, of much practical value even to those who pretend to have no faith in the professional astrologers.

The present work which deals with Mēṣa Lagna is based upon a single palm-leaf manuscript preserved in the Government Oriental Manuscripts Library, Madras. The manuscript consists of 12 volumes each dealing with one lagna. The manuscript is described under R. No. 305 in the Triennial Catalogue Volume II. The size of the volume is 15 × 1¼ and 20 × ½ inches. The first volume contains 204 folios having 6 to 15 lines on a page. This manuscript was purchased in 1914–15 from Sri Krishnaswami Pillai, George Town, Madras.

The work is in simple Tamil verses consisting of several horoscopes under each Lagna. The planetary position of the horoscope of any native is described in the first verse according to which the charts are given by the editor, Then the predictive part runs as a sort of conversation between the Saptariṣis and Pārvati. Though the present work may not help to study the technique of Astrology directly, it will certainly create a living interest in the minds of those who are doing research in the field of Astrology and of the lay people who wish to know the extent

of this ancient science. The treatment of the predictive portion is remarkably good.

It is expected to publish the whole Saptariṣi Nāḍi in twelve volumes taking at least one volume annually.

Reference is to be made to the good work done by Sri V. R. Kalyanasundaram, and V. S. Krishnan, Pandits of the Library, in seeing the work through the press.

Government Oriental Manuscripts Library, Madras-5.
16—11—1951

T. CHANDRASEKHARAN,
General Editor,
Madras Govt. Oriental Series.

PREFACE

The present volume forms the first part of the rare Tamil manuscript called by the name of "Sapta Riṣi Nāḍi," an ancient work on practical astrology, being a symposium of the then extent works on the subject in the various languages of India. It is the quintessence of the Jothiṣa Śāstra in practice. It deals with all the fundamentals of the Science in Tamil verses, the contents of which appear similar to the thoughts expressed in mightly works of old in Sanskrit, like the Bṛhat Samhitā of Varāhamihira, Sārāvalī, Nīlakaṇṭha Tājakam and Jainendramālā.

Instead of dabbling with the rigmarole of the Science, instead of dwelling upon the technicalities of the subject, instead of running through the mathematical and calculative portions of it, the present work dwells in an extremely practical manner, easily to be understood by the erudite scholar, as well as by the lay reader. Hence the abnormal interest created by the work on hand and any reader can have a clear conception of what the future prospects of a particular horoscope, with a particular lagna to start with, should be.

The work in question has been copied from original manuscripts of Cadjan leaves with as much care as possible, deciphering the handwriting of olden days. The copied manuscript was edited by me, explaining the contents of each verse in its setting, putting astrological notes and sufficient explanations wherever necessary to the better understanding of the subject, and dwelling upon the several aspects of the planets and their connotations.

This volume treats with horoscopes which have Mēṣa as their Lagna to start with. There are in this work 78 horoscopes having Mēṣa as their Lagna and the horoscopes have as many permutations and combinations of planetary positions, and the

study has been made in a complete form as to leave nothing to be desired on the subject of enquiry.

Each of the horoscopes is taken on its individual merit and the planetary positions are studied in a scientific manner, as to create a laudable interest in the practicalities of the subject. The book is written in such a simple manner as to please the house wife, the day labourer, the learned critic and anybody who wishes to have a good knowledge of his future. But all the truths are based on the fundamental principles of this exact ancient science of our land.

Each horoscope dwells upon the location of the nativity, the native's past, present and future births, their good and bad effects, his ancestry and the relationships of his parents, their past, present and future births, the characteristic qualities of each and how each spent his or her life in this mundane world. The whole is an interesting study pictured in the glowing pages of this extraordinarily brilliant and rare work.

In common parlance people use to say thus "The future is in the distance. It lies on the lap of the gods." It is the prophetic sense of future change which gives interest to this great work. It studies the past of individuals to divine their future. Whoever wishes *to* know what shall be must consider what has been already. So a wise man is always on his guard against future.

Every body is made to believe that there is a final day of judgment for him. This is what is called justification of one's life and its actions. It is an acquittal from the pains of hell by the acceptance of our faith in God. It is an inner assurance of salvation given by faith to the believer. It includes a high degree of moral purification. A somewhat parallel line of thought to justification is to be seen in the more personal terms of reconciliation and forgiveness.

This Sapta Riṣi Nāḍi reads the character and destiny of human beings by the position of the Sun, Moon and

other planets at the time of birth. The book easily distinguishes the characteristic qualities of a variety of people born under a variety of circumstances and planetary positions and foretells events in an exact manner.

In Hindu doctrine, Karma constitutes the sum total of a man's acts in past lives, which determines his future lives. "Sow an act and reap a habit, sow a habit and reap a destiny." We always say that destiny is big with us. Destiny is the inscrutable power believed to control human and cosmic processes. "Whatever a man soweth, that shall he also reap." So says St. Paul. Thus the law of Karma is said to act and react like the swing of a pendulam.

Tamilians believe in Vidhi. It is nothing but fate. It is the belief that events constitute a chain of causes and effects within determinism. It is something like an allotment whose boundaries must not be transgressed. Each individual is assigned a sphere or a becomingness which he is obliged to acknowledge and observe. It is the power which orders events. Some consider it as the will of God and some regard it as an independent and higher power. It is the mysterious force which rules and determines men's lives. The christian doctrine of predestination is akin to the classic spiritual adventures in search of truth rather than the acceptance of a body of doctrines. Faith is the supreme confidence in the reality of that which is not proved or is incapable of proof.

So also this Sapta Riṣi Nāḍi, is an ancient Science of divining the fate and future of human beings from indications given by the positions of the stars and other heavenly bodies. It is a study of astrology and the belief in it, as part of astronomy, is found in a developed form. It is based on a theory of divine government of the world, which assumes a scientific or pseudo scientific aspect.

We believe, even to day, the indisputable fact that man's life and happiness are largely dependent upon phenomena in the heavens. We find in this book the authors have perfected a

theory of a complete accord between phenomena observed in the heavens and occurences on earth. The planets are divine powers. Their regular movements produce the conception of law and order in the Universe, as against the more popular notion of chance and caprice.

The Seven Riṣis of old had applied themselves to the task of perfecting a system of interpretation of the phenomena to be observed in the heavens. It was natural that the system was extended from the Moon, Sun and other planets to the more prominent and recognisable fixed stars. That system involved not merely the movements of the planets but the observation of their relative position to one another and to all kinds of peculiarities noted at any point in the course of their movements. To all these phenomena some significance was attached.

The fate of an individual, as that feature of the future which has a supreme interest leading to the association of ideas, is applied to the constellations of the *Zodiac*. The fate of the individual in the combination of planets with the *Zodiac*, is made dependent, not merely upon the planet which happens to be rising at the time of birth or of conception, but also upon its local relationship to a special sign or to certain signs of the Zodiac, which is regarded as the prototype of the human body.

In this Nāḍi special stress is laid upon the Saptama Bhāva, or the union of man and woman, as husband and wife; the Pañcama Bhāva, or the procreation of children and their welfare; the wages of sin and death; the ancestry of the natives of particular horoscopes and the effects of previous births upon them. What does not come from faith is sin. In religion it is the doing of acts contrary to divine approval. This Nāḍi grantham gives out a list of ablutions and atonements for the sins committed In the previous births.

Another strange feature of this rare work on horoscopy is the commingling of both astrology and palmistry. The Riṣis answer to the questionaire of Pārvati Devi that such and such a native has such and such lines in his palm and some peculiar

cakras, which are harbingers of good times. The one amplifies the other in a beautiful manner and such a visible evidence to the worthy predictions given by the learned Riṣis of old is worth noting in these days of scientific advancement and matter of fact civilisation.

In fine, I am indebted to the good suggestions offered by Sri T. Chandrasekharan, the Curator of the Government Oriental Manuscripts Library and the learned Pandits who went through the proofs and helped me with much scholarly information in enabling me to get on with the work of editing this valuable ancient manuscript on practical astrology.

Triplicane,
16—11—1951.

Prof. K. NATESAN.

முன்னுரை

சென்னைத் துரைத்தனத்தாரின் கையெழுத்துப் பிரதிகளின் நூல்நிலைய அதிகாரி, பண்டைக் காலத்து ஓலைச்சுவடிகளிலிருந்து பிரதி செய்யப்பட்டதும், "ஸப்தரிஷி நாடி" என்று பெயர் கொண்டதும் ஆகிய இவ்வரிய அனுபவ சோதிட நூலை என்னிடம் கொடுத்து, இதன் செய்யுள்களின் கருத்துக்களை விளக்கி, சோதிடக் குறிப்புக்களும், ஆராய்ச்சி விளக்கங்களும் வரைந்து, இன்னும் மற்ற அருமை பெருமைகளையும் எடுத்துக் காட்டி, படித்தவர்களும் பாமரர்களும் உணருமாறு, இந்நூலில் அடங்கிய கருத்துக்களை நன்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இயன்றவரை செவ்வனே இப் பணியைச் செய்துள்ளேன்.

இந்நூல் இதுபரியந்தம் தமிழில் வாராதது. தமிழ் நாட்டிற்கே புதியது. சோதிட உலகத்தின் நவீனம் எனலாம். தற்போது உலாவும் தமிழ்ச் சோதிட நூல்களினும் சாலச் சிறந்தது. மிக்க எளியநடையில் எழுதப்பட்டுள்ளது. சாஸ்திர நுட்பங்களைச் சிக்கறுத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல விஷயங்களை விளக்கியுள்ளது. படிக்கப்படிக்க அதிக உற்சாகத்தையும், புதிய வழிகளையும், விஷயங்களையும், சோதிட இரகசியங்களையும் தெற்றெனப் புலப்படுத்தியுள்ளது. எவ்விடங்களில் சோதிடர்களுக்கு ஸந்தேக புத்தி ஏற்படுமோ, அவ்விடங்களில் பிரத்தியேகமாக, சப்தரிஷிகள் தங்கள் அனுபவங்களைக் கொண்டு நிச்சய புத்தியுடன் தத்துவங்களை விளக்கிக் கூறியுள்ளனர்.

உலக வழக்கில் "அன்று எழுதியவன் அழித்து எழுதப் போவதில்லையே" என்று மார்தட்டிப் பேசுவது வழக்கம். அன்று அந்தப் பிரமன் எழுதியதுதான் என்ன? என்ற ஒரு பிரச்னை ஏற்படுகின்றதல்லவா! அதைப் பலர் எவ்வாறு அறிய வல்லர்? அத்தகைய மகத்தான விஷயத்தை அறிந்து கொள்ளுவதற்கே இந்த நாடிக்கிரந்தம் தக்க திறவுகோலாக இருக்கின்றது.

தவிர, "நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார்", என்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோமல்லவா! நமது வாழ்க்கைச் சித்திரங்களைச் சோடித்திருக்கும் இந்நூலில்தான் நமது வாழ்க்கையில் நாளை நடப்பதை யறியக்கூடும். அறப்பளீசுவரர் சதகத்தில் "சோதிடம் பொய்யாது" என்று கூறியிருப்பதை யாவரும் அறிவர். நாம், நமது வாழ்க்கையில் பொய் பொரை சொல்லிப் பல பேத்து மாத்தல்களை எவ்வாறு செய்கின்றோம், செய்து வருகின்றோம், செய்யப் போகின்றோம் என்பனவற்றையெல்லாம் பொய்யாமொழிப் புலவர்களாகிய சப்தரிஷிகளும், பார்வதிதேவிக்கு ஸம்பாஷணை வாயிலாக, சோதிட சாஸ்திர நுட்பங்களைக் கொண்டு விளக்கிக் காட்டியுள்ளனர். மனித வாழ்வில் ஏற்படும் புண்ணிய பாவங்களின் உருவங்களைக் காட்டி இருப்பதைப் படிக்கப் படிக்கப் பரவசமடைகின்றோம்.

சாதாரணமாக, சோதிட சாஸ்திர வாயிலாக நாம் அறிந்து கொள்ளுவது முக்கால்வாசி எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய பிரச்னைகள்தாம். உதாரணமாக, ஒருவனுக்கு எப்பொழுது, எந்த இடத்தில் கலியாணமாகும்; எத்தகைய மனைவி வாய்ப்பாள்; ஏன் ஒருவனுக்குப் புத்திரனே பிறக்கவில்லை; ஒருவனுடைய வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் யாவை; எப்படிப் பலவித கண்டங்களிலிருந்து தப்புவது; ஒருவனைப் பிடித்தாட்டும் ஊழ்வினை யாது; அதை நிவர்த்தி செய்யும் கர்மசாந்திகள் யாவை; ஒருவனுக்கு எத்தகைய ஜீவனம் ஏற்படும்; ஜாதகத்தில் ஜீவனஸ்தானங்களும் யோகபாவங்களும் எவ்விதமிருக்கின்றன; காலம், ஒருவனுக்கு நல்லதாகவும், மற்றொருவனுக்குக் கெட்டதாகவும் ஏன் இருக்கிறது? ஒரு பாவமுமறியாதவர்கள் கஷ்டப்படுவதன் காரணங்கள் என்ன? என்று இவைபோன்ற நூற்றுக்கணக்கான விதவிதமான கேள்விகளுக்குச் சோதிட சாஸ்திரத்தைக்கொண்டு காலசக்ர நிர்ணயங்கள் செய்து, தசாபுக்தி விவரங்களைக்கூறி, ஆக்ஷேபணை சமாதானங்களுடன் உரிய பலாபலன்களை நிச்சயபுத்தியுடன் கிரகநிலைகளின் வேறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து கூறும் அரிய பெரிய நூல் இந்த சப்தரிஷிநாடிக் கிரந்தமேயாகும்.

மேலும், புத்திரதோஷங்களையும், சகோதரனில்லாமலிருப்பதையும், ஒரு பெண்டாட்டி இறந்து மறுமனைவி வாய்ப்பதை

யும், இன்னும் இவைபோன்ற அதிநுட்பமான கட்டங்களையும் தக்க காரண காரியங்களுடன் மேற்கோள்கள் வாயிலாக எடுத்துக் காட்டி விரித்துக் கூறுகின்றது இந்நூல்.

தவிர, வடமொழிக் கிரந்தங்களில் மிகவும் சிறந்துள்ள சாராவளி, பிரகத்சம்ஹிதை, நீலகண்டதாஜகம், ஜைமினி சூத்திரம், ஜைநேந்திரமாலா, என்பனவற்றைப் படித்துப் பண்டிதர்களான பெரிய படிப்பாளிகள் இந்நூலின் அவசியத்தை மெச்சி மதிப்பார்கள். ஜாதக ஸ்புடம்செய்து திரும்சாம்சங் களையும் வரைந்து பலன் சொல்லக்கூடிய பண்டிதர்களுக்கு இந்த நாடிக்கிரந்தம் கைப்பொருளை எடுத்துக்காட்டும் கண்ணுடி போலிருக்கின்றது.

இனி, இப்புத்தகத்தில் சப்தரிஷிகள் பார்வதிதேவிக்கு ஒவ்வொரு ஜாதக பலன்களையும் எங்ஙனம் எடுத்துரைக் கின்றனர்? என்பதைப் பார்ப்போம். ஆரம்பச் செய்யுளில் ஜாதகத்தின் கிரகநிலைகளை விவரமாய்க் கூறியபின், ஆண் சென்மமா, பெண்சென்மமா என்று வரையறுத்துப், பிறகு, அவன் பிறந்த வீடு எந்த ஊரில் உள்ளது? அவ்வூரின் அடையாளங்களென்ன? என்று விவரித்துப் பொதுவாக எல்லா ஜாதகங்களுக்கும்,

“ வந்தவன் செனனயோகம் வளமுள துணைவர்யோகம்
முந்திய தாயின்யோகம் முயன்றிடும் தந்தையோகம்
பிந்திய களத்திரபுத்திரர் பேசுவோம் முன்பின்சென்மம்
சந்ததம் நவக்கோளாய்ந்து சாற்றுவோம் இந்நூல்
[தன்னில் ”

என்று கூறியபடி, விவரங்கள் அதிஅற்புதமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளன.

விசேஷமாக, ஏன் ஒருவனுக்குச் சகோதரபாவம் சரியா யில்லை; என்ன காரணத்தினுலே முதல் மனைவி மாரகம் அடைந்து மறுவிவாகம் ஏற்பட்டது என்பதும்; புத்திரதோஷம், சகோதரதோஷம், மனையாட்டிதோஷம் ஆகியவற்றைக் காரண காரியங்கள் கொண்டு நிரூபித்திருப்பதும்; “பாலகன் வாழும் நாளில் குலவியே வந்த ஊழைக் கூறுவோம்” என்று பிராரப்த வினைகளையும், சஞ்சித பாவங்களின் காரணங்களையும் எடுத்துக் காட்டியிருப்பதும், பிறரிட்ட சாபங்கள், தெய்வக்குற்றங்கள்,

நாம் செய்யும் பிரம்மஹத்தி தோஷங்கள், அவற்றிற்கு உரித்தான பரிகாரங்கள், சாஸ்திரத்தில் விதித்துள்ள கருமசாந்திகள் ஆகிய இன்னோரன்ன செய்திகள் படிப்படியாக ஒன்றன்பின் ஒன்றாய்க் கூறப்பட்டுள்ள வனப்பை இந்நூலைப் படிப்போர்தாம் அனுபவித்து உணர்ந்து ஆனந்தங் கொள்ளலாகும்.

இவை தவிர, ஒவ்வொரு ஜாதகத்தின் முன்பின் சென்ம விவரங்கள், பிறவிப்பெருங்கடலை நீந்துவது, சந்தோஷ வாழ்க்கை, சிரமகாலங்கள், பொதுவான யோகபாவங்கள், மாரககால நிர்ணயங்கள் ஆகியவற்றை சாஸ்திர வாயிலாகக் கூறியிருப்பது படிப்போர் மனத்தைப் பரவசப்படுத்தும். இன்னும், சோதிட நுட்பங்களைக் கைரேகை சாஸ்திரங்களைக் கொண்டு ஆங்காங்கு இந்நூலில் விளக்கி இருப்பதைக் காணலாம். ஜாதகர்களுடையவும், பெற்றோர், உற்றோர், பெண்டு, பிள்ளைகள், இவர்களுடையவுமான குணாதிசயங்களைக் கோர்வையாகவும் விவரமாகவும் கூறியிருப்பது இம்மாய வாழ்க்கையின் சித்திரங்கள் என்றே சொல்லலாம்.

வெள்ளம் வருவதற்கு முன்பே அணை கோலுவதுபோல, நாளைவரும் ஜென்மத்திற்கு, அப்பொழுதைக்கிப்பொழுதே கடவுளைத் தியானித்துப் பாவ விமோசனத்தையடைந்து, புண்ணிய கர்மாக்களைச் செய்து பரமபதத்தையடைய வேண்டிய மார்க்கங்களையும், விதிவசத்தால் ஏற்பட்ட தீமைகளை நம் செயலாலேயே போக்கிக்கொள்ளும் வழிகளையும் இந்நூல் ஆங்காங்கு எடுத்துப் போதிக்கின்றது. விதியை மதியினால் வெல்லலாம் என்றும், கிரகக்கோளாறுகளுக்கு நல்ல ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பதையும், போதாத காலஸ்திதிகளை எவ்வாறு நன்குணர வேண்டுமென்றும், நவக்கிரகங்களின் போக்கைஅறிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதையும் இந்த நாடிக்கிரந்தம் ஒரு வழிகாட்டியாயிருந்து எச்சரிக்கை செய்கின்றது.

இப்புத்தகம் பண்டைக்காலத்து ஓலைச்சுவடிகளிலிருந்து நகல் எடுத்து நன்கு பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டதாயினும் ஆங்காங்கு சிற்சில பிழைகள் நம் பார்வைக்குத் தப்பி இருக்கக்கூடும். வாசகர்கள் அப்பிழைகளைத் திருத்திக் கொள்ளுவார்கள் என்று நினைக்கின்றேன்.

இப்புத்தகத்தில் மேஷலக்கின ஜாதகங்கள் மாத்திரம் அடங்கியுள்ளன. மொத்தம் 78 ஜாதகங்கள் ஈண்டுக் குறிக்கப் பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறான கிரக நிலைகளைக் கொண்டுள்ளன. அநேகமாக மேஷத்தை லக்கின மாகக் கொண்ட ஜாதகர்களுடைய பாவசக்ரங்களும், கிரகபேதா பேதங்களும் சீர்தூக்கிக்காட்டப்பட்டு, பண்டைக்கால சாஸ்திர விதிப்படி பலாபலன்கள் வரையப்பட்டுள்ளன. மேஷலக்ன ஜாதக மூலச்சுவடியில் இரண்டாம் பாகம் என்ற தலைப்பில் மூன்று அனுபந்தங்கள் உள்ளன. அவற்றையும் முறையே மூன்று பகுதிகளாக இறுதியில் வெளியிட்டுள்ளோம். இன்னும் இப்புத்தகத்தின் தொடர்ச்சியாக மற்றைய லக்கினங்களைக் கொண்ட புத்தகங்களையும் தனித்தனியே வெளியிட நூல்நிலைய அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

கடைசியாக, நூல் நிலைய க்யூரேடர் கனம் T. சந்திரசேகர ருக்கும், அச்சுப்பிரதிகளை சீர்படுத்திய அந்நூல்நிலைய பண்டித சிரோமணிகளுக்கும், இப்புத்தகத்திற்கு வேண்டிய ஆலோசனை களை அவ்வப்போது அளித்த நண்பர்களுக்கும் நான் என்றைக்கும் கடமைப்பட்டுள்ளேன். எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசையை அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

திருவல்லிக்கேணி,
சென்னை.
16—11—51

Prof. K. நடேசன்

இப்புத்தகத்தில் மேடம் முதலிய பன்னிரண்டு இலக்கினங்களுக்கும் உபயோகித்திருக்கும் மறுபெயர்களின் அட்டவணை

மேடம் : ஆடு, கொச்சை, கொண்டல், தகர், மேழகம், மொத்தை, வருடை.

இடபம் : குண்டை, எருது, நரை, புல்லம், நந்தி, வெண்மை.

மிதுனம் : இரட்டை, ஆண் பெண், சபைமகள், பாடவன், பாடவள், பாடவை.

கடகம் : அலவன், கங்கணம், கர்க்கடகம், கிம்புரி, கைவளை, நண்டு, நள்ளி.

சிம்மம் : அரி, சிங்கம், சீயம், புலி, பாரி.

கன்னி : குமரி, சேடிகை, தவப்பெண், துர்க்கை, நாரி, பெண்.

துலாம் : ஏற்றமரம், கோல், சீர்; துலை, துலை, நிறை கோல்.

விருச்சிகம் : சாரணை, தேள், பறப்பன், புழு, நண்டுத்தெருக் கால், மயிர்க்குட்டி.

தனுசு : காண்டீபம், சிலை, தனுர்ராசி, மேரு, வியாழ ராசி, வில்.

மகரம் : சுறுமீன், தைமாசம், மான், முதலை.

கும்பம் : குடம், கும்பக்கலசம், குவியல், மாசி, சாடி.

மீனம் : சேல், பங்குனி, பார்க்குனீயம், மீன்.

நவக்கிரகங்களுடைய மறுபெயர்களின் அட்டவணை

சூரியன் : அகர்மணி, அகர்நாதன், அகர்ப்பதி, அசிரன், அரி, அலரி, இரவி, ஆதித்தன், கடவுள், கதிர், எல்லை, தினகரன், நர்மடன், ஞாயிறு, நிசாரி, பகலவன், பசதன், பதுமபாணி, பரிதி, பரியாறுடையான், பருதி, பற்கன், மார்த்தாண்டன், மித்திரன், பங்கயன், புரவி, வியாழசிநேகன், பொன்கதிர்.

சந்திரன் : அரி, அறிவு, உடுக்கோள், உடுபதி, அத்திரி, கலை, கற்கடகவிராசி, அந்திகேசன், உடுவேந்து, தீகன், நிசாபதி, நாண்மதி, நிசார்த்துனன், நிலவு, மதி, பபசி, முசலி.

செவ்வாய் : அங்காரகன், ஆரல், ஆரம், அதிதி, கோணம், சேய், குருதி, சிவந்தவாய், பூமகன், புகழ், போராறு, பாரி, மகரவுச்சன், மங்கலன், மைமீன், நிலமகன்.

புதன் : அறிஞன், அருணன் தூதுவன், கூரியன், கணக்கன், சாமன், சந்திரன்புதல்வன், தேவன், மதிமகன், மந்திரி, மால், பருதி, சௌமியன், புலவன், மாலவன்.

வியாழன் : குரு, ஞானி, இரணியன், தேவகுரு, பீதகன், பொன், பொன்னவன், பகவன், பிருகஸ்பதி, மந்திரி, மாதவன், மறைஅரசன், வியாழம்.

சுக்கிரன் : அசுரகுரு, அசுரமந்திரி, ஒருகண்ணுளான், கவிமகன், தீ, தயித்தியமந்திரி, நற்கோள், நீர், நதிகோள், சல்லியன், சுங்கன், பார்க்கவன், பிருகுசுதன், புயல், பிரசுரன், மழைக்கதிபதி, மழைக்கோள், வெள்ளி.

சனி: அந்தகன், அருணன், கதிர்மகன், கரியவன், கலி, கோலம், துன்பம், நொண்டி, நீலவசனம், நீலவண்ணன், நீலவாசன், பங்கு, முதுமகன், மைந்தன், மந்தன், காரி, கெட்டவன், கோணம், விதி.

இராகு: அசுரன், கருங்கோள், கரும்பாம்பு, நீசக்கிரகம், நீடுதருங்கோள், பணி, நாகம், மந்தரகயிறு,

கேது: அசுரன், அடையாளம், இரணியன், ஞானி, செம்பாம்பு, நீசக்கிரகம், நோய், பரியாறுடையான், வெளிச்சம்.

பிழை திருத்தம்

---

1. முதல் பக்கத்தில், 15, 16, 17-ஆவது வரிகளில் "சனியும், புதனும் சனியுடைய ஆட்சி வீடாகி கும்பத்தில்" என்பது "சனியும் புதனும் துலாத்தில்" என்று இருக்க வேண்டும்.

2. முதல் பக்கத்தில் கும்பத்தில் "சனி, புதன்" என்றிருப்பது துலாத்தில் இருக்கவேண்டும்.

3. 408-ஆம் பக்கம் நெ. 2 கீழ்க்குறிப்பில் "திருவோத்தூர்" என்பதனைத் "திருக்கழுக்குன்றம்" என்று படித்துக் கொள்ளவும்.

ஸப்தரிஷி நாடி

மேஷலக்னம்

முதல் பாகம்

ஸப்தரிஷி நாடி

மேஷலக்னம்

ஜாதகம் 1

1. சந்திரன் மானதாக செய[1]மேடம் ராகுமீனம்
புந்தியுமுடவன் கோவில்[2] புகர்[3]ரவி தேளதாக
மந்திரி [4]வீணையாக மாதையில்[5] கேதுதங்க
சுந்திர மேடம்சென்மம் சொல்லுவாம் பலனைத்தானே.

1. எப்படி சரீரத்திற்கு மனசு முக்கியஸ்தானமோ அதைப்போல பிரம்மாவின் மானசபுத்திரனை சந்திரபகவான் மங்களஸ்தானமாகிய மேஷத்தில் மங்களவாரத்திற்கு அதிபதியான செவ்வாயுடன் எறிநிற்க, மீனராசியில் இராகுவும், சனியும், புதனும் சனியுடைய ஆட்சி வீடாகி கும்பத்தில் வீற்றிருக்க, சுக்கிரனும், சூரியனும் விருச்சிகத்தில் சேர்ந்திருக்க, குரு மிதுனத்திலும், கேது கன்னியா ராசியிலும் இருக்கும் மேஷத்தை ஜன்ம லக்கினமாகக் கொண்ட இந்த ஜாதகத்திற்குண்டான பலனை இங்கே எடுத்துரைப்போம். (சேய்மேடம் = செவ்வாய் மேடத்திலிருக்க).

ராகு	லக்கினம் சந்திரன் செவ்வாய்		குரு
சனி புதன்	இராசி		
	சக்கரம்		
	சுக்கிரன் சூரியன்		கேது

---

1. சேய் = செவ்வாய். செவ் = சிவப்பு நிறங்கொண்ட செவ்வாய். செம் = சிவப்பு

2. கோள் = வீடு

3. புகர் = புகரோன், சுக்கிரன்

4. வீணை = பாடலை, மிதுனம்

5. மாது = பெண், கன்னி

2. இந்தசே யானே[1]யாகும் இயம்புவோம் கிழக்குமேற்கு
அந்தமில் தெற்குவாடை அதின் [2]ருடக்கதனிலத்தில்
சுந்தரகாளி[3] உத்திரம் சிவன்கோஷ்ட மீனகோணம்[4]
வந்திடுமாரி[5] தெற்கில் மாதுரு கிரகமென்றேும்.

2. இந்த ஜாதகத்திற்கு அதிபதியான புண்ணிய குமாரனைப்பற்றி விவரமாகச் சொல்லுவோம். கீழ்மேல் தெருவில் எல்லையில்லாத தெற்கு வாடையின் ஆரம்பத்தில் எட்டிமர உத்திரங்களால் கட்டப்பட்ட அழகிய சிவன் கோவிலும், நீர்நிலையுமுள்ள இடத்தில் தெற்குப்பார்த்த வீட்டில் இக்குழந்தையின் தாய் வசித்துவந்தாள். (உத்திரமீனகோணம் = வட கோடியில்.)

3. இன்னமும் பலதேவாசம்[6] இலகிய சமவூர்தன்னில்
சொன்னனே சேஷ்டனுக தோன்றுவா னிவனே யென்றேும்
தந்தையின் கிரகந்தன்னில் சாற்றுவோம் உத்திரத்தில்
உன்னத கீழ்மேல்வீதி உத்திரம் வாசலாகும்.

3. எப்பொழுதும் காற்று வீசும்படியான அழகிய சமவெளியில் ஏற்பட்ட ஊரில் இக்குழந்தை மூத்தகுமாரனுக அவதரித்திருப்பான். இதை நிச்சயமாகச் சொல்லலாம். இவன் தந்தை வடக்குப்பார்த்த வாயிலுடைய வீட்டில் உன்னதமான கீழ்மேல் வீதியில் வடக்கு வாடையில் வசித்து வந்தார்.

4. குணக்கினில் நந்தி[7]யாகும் கூறுவோம் தெற்கில் [மாயோன்[8]
இணக்கமாய் தென்மேல்திக்கில் இருப்பளே மாரிதானும்
பிணக்கான மால்தான்சந்தி பேசுவோம் மேற்கிலேதான்
கணக்கன்[9] தன் திசையில் காளிகால கண்டனுமே நிற்பான்.

4. இன்னும் இவன் தந்தையின் வீட்டுச்சிறப்பைக் கூறுவாம். கிழக்கே சிவன் கோவிலும், தெற்கில் விஷ்ணுவாலயமும், தென்மேற்கு திக்கில்

1. சேயன் = குழந்தை. சேயான் = நீட்டல் விகாரம்
2. தொடக்கம்
3. காளி = எட்டிமரம்
4. தெருக்கோடி, முடுக்கு
5. மாரி = நீர்நிலை
6. பலதேவன் வசிக்கும்படியான, காற்றேட்டமான
7. சிவன்
8. திருமால்
9. புதன்

துர்க்கையும், பலர்கூடி தரிசிக்கும் புதன் திசையில் காளியும், யமனுடைய ஆலயமும் உண்டு.

5. இவ்வித அடையாளத்து ளிலகிய சமஜூர்தன்னில்
ஒவ்விய தந்தையில்லம் உரைத்திட்டோம் இவனின்யோகம்
பவ்வமாய்[1] மாதுர்தந்தை பாலகன் மனைவியோகம்
நவ்விய[2] முன்பின் சென்மம் நாட்டுவோ மின்னூல்தன்னில்.

5. இப்படிப்பட்ட அடையாளங்களைக் கொண்ட இவன் தந்தையின் அழகான வீட்டைப்பற்றி விரிவாக உரைத்துவிட்டோம். இவன் மகத்தான யோகவான், தாய், தந்தை, மனைவி, மக்கள் இவர்களைப்பற்றியும் இவனுக்கேற்பட்ட பூர்வஜன்ம பலனையும் வருங்கால பலன்களையும் எடுத்தினி உரைப்போம்.

6. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்தமேனி
சிந்தையும் வெகுளியாவன் சிலவுகள் அதிகம் செய்வன்
நொந்திடு மனத்தனுகும் நெ[3]சிவுகள் தொழிலைச் செய்வன்
கந்தன் தன் குலதெய்வங்கள் கருத்தினில் கொள்வோ
[மென்றேம்.

6. தந்தையின் குணத்தை இனிக் கூறுவோம். நல்ல நிறங்கொண்ட சரீரத்தையுடையவன். நல்ல எண்ணங்களையே கொண்டவன். மனதில் ஒன்று வெளியில் ஒன்று என்பதில்லாதவன்; பெருத்த செலவாளி. கவலை மேலிட்டிருப்பான். துணி நெய்தலையே தொழிலாகக் கொண்டவன். சதா சுப்பிரமணிய சுவாமியையே நினைத்து வழிபாடுகள் செய்து வருவான்.

7. தந்தையினுர்ச் சிதத்தை தானவனுலேதி[4] செய்வன்
விந்தையாய்ப் பேசவல்லன் வீணப வாதமுள்ளான்
பந்தமாய்ச் சல்லிய[5]முள்ளான் பலபல புத்தியுள்ளான்
சிந்தையும் வெகுளியாவன் தேவிமேல் பிரியனுவன்.

7. இவன் தன் தந்தையினுல் கொடுக்கப்பட்ட பிதிரார்ச்சித சொத்தைக்கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்வான். வேடிக்கையாகப் பேசுந்திறமை பூண்டவன். காரணமில்லாமல் பலர் இவனைப்பற்றிப் பலவிதமாகப்

---

1. பூரணமாய்
2. அழகிய
3. நெசவு
4. லேவாதி = கொடுக்கல் வாங்கல்
5. சல்லியம் = கடன்

பேசுவார்கள். பலர் சொத்துக்களைப் பந்தம்பெற்று ஈட்டுப்பத்திரக் கடன்கள் கொடுப்பான். பற்பல யோசனைகள் கொண்டவன். துல்லியமான மனதையுடையவன். பார்யையிடம் பிரியமுள்ளவன்.

8. தாதையி னுளிலேதான் தனமுண்டு கீர்த்தியுண்டு
பேதங்க ளிவனும்செய்வன் புண்ணிய மனத்தனாகும்
பாதக மெண்ணுகும் பந்துவும் பகையுமுள்ளான்
வேதனை யொருவர்க்கெண்ணுன் வித்தகி மேலுங்கேளே.

8. இவன் தந்தை இருக்கும் காலத்தில் தனசம்பத்து, கீர்த்தி யெல்லாம் உண்டு. மனவேறுபாடுகளிலும் இவன் ஈடுபடுவான். தரும சிந்தனையுள்ளவன். கெட்ட நினைவுகளே இவனிடம் எள்ளளவும் இல்லை. சிநேகிதர்களும் விரோதிகளும் இவனுக்குண்டு. பிறருக்குத் துன்பம் செய்ய மனத்தாலும் நினையான். இன்னும், புத்தியுள்ளவளே! சொல்லுகிறேன்; கேள்.

9. தன்னுட தந்தைக்கேதான் தாழ்வான குடும்பமுள்ளான்
பொன்னெடு பணி(யி)யில்லான் புகழிலான் காலியில்லான்
இன்னவன் சோம்பலுள்ளான் இடறுகள னந்தமுள்ளான்
[1]பன்னியே பேசவல்லான் பார்வதி கேட்டிடாயே.

9. இப்படிப்பட்ட தந்தைக்கு இவன் தாழ்மையான குடும்ப சம்பத்துக்களைக் கொண்டவன். வேலைசெய்து பணம் சம்பாதிக்கும் யோக்கியதை இல்லாதவன். கீர்த்தியற்றவன். உபயோகமற்றவன். சுத்தச்சோம்பேறி. இவனுக்கு ஏற்படும் இடைஞ்சல்கள் சொல்லி முடியாது. மனைவியிடம் பேச பயப்படுவான். ஹே! பார்வதிதேவி! கேட்பாயாக.

10. இவனுடைய துணைவர்தன்னை இயம்பவே பலத்தைக் [காணும்
தவசியே இக்குணத்தானுக்கு சாதகன் சேஷ்டனாக
அவனியி லுதிப்பானாகும் அவன்குணம் சொல்லக்கேளாய்
நவனியில் சிவந்தமேனி நாயகன் பித்ததேகி.

10. இவனுடைய பந்து சுற்றத்தாரைப்பற்றிச் சொல்லுவதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை. பரதேசிகள்தான் இவனுக்கு உற்ற துணைவர்கள். பூலோகத்தில் மூத்த பிள்ளையாய்ப் பிறந்தான். அவன் குணாதிசயங்களைச் சொல்லுகிறேன்; கேள். சரீரமோ சிவந்த நிறமுடையது. பித்தசோகை பெற்றவன்.

1. பன்னி = மனைவி, பயந்து.

11. வித்தையு மொன்றுண்டாகும் விளம்புவான் பொறுமை
[யாக
புத்தியா லெதையும்வெல்வான் புத்திர வாஞ்சை யுள்ளான்
வெ[த்தி](ட்டி)யாம்[1] தொடுவழக்கு வீண்டம்பம்
தன்னேச்சாரான்
சத்தியாய் சவுக்கியமுண்டு சம்பத்து சேயில்[2] லுண்டாம்.

11. விசேடமாக ஒருவித வித்தையை அப்பியசித்திருப்பான். சொல்லுவதைப் பொறுமையுடன் கூறுவான். எதையும் மதியினுல் வெல்லும் திறமையுடையான். குழந்தைகளிடத்தில் பிரியமுடையயின். வீண் சண்டை சச்சரவுகளில் தலைவட்டமாட்டான். (கிராம ஊழியக்காரனை வெட்டியானைப்போல வீண் டம்பப்பேச்சுப் பேசமாட்டான்.) தன்னுடைய சாமர்த்தியத்தைக் கொண்டு சுகபோகங்களை அனுபவிப்பான். செல்வம், மனைவி, மக்கள், வீடுவாசல் உடையவனுவான்.

12. தன்னுட தாதைமேலாய் தானவன்[3] வாழ்வானுகும்
பொன்பொருள் சேர்ப்பானுகும் பூமியும் விருத்திசெய்வான்
கன்னென கவிகள்செய்வன் காலாள்க ளுடையனுகும்
[4]நன்[னை](ன)ய வார்த்தை கூ[ர்](று)வன் நற்சுகம்
[ஏழாண்டின்மேல்.

12. இவன் தன்னுடைய தகப்பனைக்காட்டிலும் மேலாக வாழ்ந்து வருவான். பணம் காசுகளையும், சொத்து சுதந்திரங்களையும் சேமித்து வருவான். நிலபலங்களையும் விருத்திக்குக் கொண்டு வருவான். கேட்போர் கனிந்துருகும்படியான கவிகளைக் கவனம்செய்யும் சமார்த்தியமுள்ளவன். குடியானவர்களையும், பரிவாரங்களையும் உடையவனுவன். இனிய நல்ல மொழிகளைக் கூறும் இயல்புடையவன். பிறந்த ஏழாவது வயதிற்குப் பிறகே நல்ல சுகசௌக்கியங்களை அடைவான்.

13. புத்தியு மதியுமுள்ளோன் புகழுறுமற்ப கோபி
எத்தொழில் செய்தபோதும் இளம்பிறை போல்விளங்கும்
நித்தியம் தெய்வபக்தி நிதானமாய்ப் பேசவல்லான்
சத்தியைப் பூசைசெய்வன் சாஸ்திரபண் டிதங்கள்
[கற்பன்[5].

---

1. வெட்டியான்
2. சேய் + இல்லம்
3. புத்திரன் (தான் + அவன்)
4. நல் + நைய
5. பண்டித சாத்திரம்—வைத்திய நூல். பண்டிதம்—வைத்தியம், கல்வித்திறம், (பண்டிதங்கள்).

13. இவன் மிக்க புத்தி சாதுர்யமுள்ளவன். கீர்த்திமான். சிறிது கோபக்காரன். எந்தக் காரியத்தைச் செய்தபோதிலும் இளம்பிறைச் சந்திரனைப்போல் மேன்மேலும் விருத்தியாகி விளங்கிநிற்பான். சதாசர்வ காலமும் தெய்வவழிபாடுகள் செய்வான். கூடக்குறைவு இல்லாமல் நிதான மாகப் பேசும் திறமை பூண்டவன். அம்பிகையைப் பூசித்து வருவான். தர்மசாஸ்திரங்களைப் படிப்பான்.

14. இந்நெறி யுடையானுக்கு இயம்புவோம் துணைவர்தன்னை
தன்னிலே ஆண்பாலொன்று சத்திமார் ரெண்டுமாகும்
பின்னமா மூன்றுதானும் பேசுவோ மிவனுக்கேதான்
அன்னமே! யாங்கள் சொல்லு மருள்மொழி குன்று
[தென்றோம்.

14 இப்படிப்பட்ட நியமநிஷ்டைகள் பூண்ட இவனுக்கு எத்தனை சகோதரர்கள் (உடன் பிறந்தோர்) என்று ஈண்டுக் கூறுவோம். ஆண்பிள்ளை (சகோதரன்) ஒன்று. பெண்கள் (சகோதரிகள்) இரண்டு பெயர்கள். பிறந்து இறந்துபோனவர்கள் மூன்றும். அன்னம் போன்ற நடையழகையுடையவளே! நாங்கள் சொல்லும் அருள்வாக்கு என்றும் சத்திய மாகும்.

15. இவனுட மணத்தின்காலம் இயம்புவோம், இருபான்
[ரெண்டில்
அவனியில் தெற்குதிக்கில் அம்மான்தன் வர்க்கந்தன்னில்
கவனமாய் மனைவிவாய்க்கும் காதலி குணத்தைக்கேளாய்,
பவளம்போல் நிறத்தளாகும் பாரினில் நல்லோளாவள்.

15. இவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய இருபத்திரண்டாம் பிராயத்தில் இவன் ஊருக்குத் தெற்குதிக்கில் தன்னுடைய தாய்மாமனுடைய வமிசத்திலேதான் மனைவி ஏற்படுவாள். இவன் மனைவியின் குணவிசேடங்களைக் கேட்பாயாக. பவளம்போன்ற மேனியையுடையவள். பூலோகத்தில் நல்லவள் என்று சொல்லப்படுவாள்.

16. நீதியாய் நடக்கவல்லள், நிதானமாய்ப் பேசுவாளாம்,
பாதகம் செய்யாளாகும், பந்துவுக் கினியளென்றோம்,
கோதிலா வரனுக்கேதான் குணம்போலே நடக்கவல்லாள்,
சூதிலா னன்னமீவள் சுந்தரி மேலுங்கேளே.

16. இவள் தருமமுறையைக் கைக்கொண்டவள். நிதானமாகப் பேசும் திறமையுள்ளவள். பிறருக்குத் தீங்கிழையாள். சொந்தக்காரர்களுக்குப் பிரியமானவள். குற்றமற்ற கணவனுக்கு ஏற்ற குணபூஷணி.

அவன் குறிப்பறிந்து நடப்பாள். அன்னதானம் செய்வாள். வஞ்சகம் இல்லாத இந்த சுந்தரியைப்பற்றி மேலுங் கேட்பாயாக.

17. புத்திர விருத்திதன்னை புகலுவோம் ஆண்பாலொன்று
பத்தினி யிரண்டுமாகும் பருகிடும் மூன்றும்தீர்க்கம்
சித்தமாய் மூன்றுநஷ்டம் செப்புவோ மிவனுக்கேதான்
அத்தியைப் பெற்றமாதே ![1] அறைந்தன மொழிகுன்றுது.

17. இவர்களுடைய புத்திர பாக்கியத்தைப் பற்றிக் கூறுவோம். புருஷப்பிரஜை ஒன்று. பெண் குழந்தைகள் இரண்டாகும். குடும்பம் விருத்தியாகும். மூன்று குழந்தைகள் விசிரியாய்ப் (abortion) போம். எப்படி இருந்தாலும் மேலேசொன்ன மூன்று குழந்தைகள் நிச்சயம். ஏ, லட்சுமிகடாக்ஷம் பெற்றவளே! சொல்லுவதில் சிறிதும் தப்பாது.

18. மாதுரு[2] குணத்தையாங்கள் வரைகிறோம், சிவந்தமேனி
தீதிலா குணத்தாளாகும், தீங்கதை மனதிலெண்ணுள்,
கோதிலா பித்ததேகி, கூறுவாள் சுகமாய்வார்த்தை,
பாதக மில்லாளாகும், பரந்ததோர் முகமுமுள்ளாள்.

18. இனி மாதாவின் (பெற்ற தாயின்) குணத்தைக் கூறுவோம். சிவந்த நிறமுடையவள். குற்றமற்ற குணவிசேஷத்தைப் பெற்றவள். மனதில் தீங்கென்பது தீர்ப்பாயில்லை. பித்தாதிகாரமான தேகத்தைக் கொண்டவள். சிறிது மயக்கங்கொண்டவள். இனிமையான பேச்சுக்களைப் பேசுவாள். குற்றங்குறையில்லாதவள். விசாலமாய்ப் பரந்தமுகத்தைக் கொண்டவள்.

19. பித்தகூடு[3]டையளாகும் பேதையும் சோம்பலுள்ளாள்
வித்தகி அதிர்ஷ்டம்கொஞ்சம் மெல்லிநன் னடக்கை
[யுள்ளாள்
சுத்தமா மனதுமுள்ளாள் துணைவர்க ளதிகமுள்ளாள்
அத்தியைப் பெற்றமாதே அம்பிகை யாளேகேளாய்.

19. இவள் பித்தகாங்கையுடையவள். பேதைக்குணமுடைய இவள் சோம்பலுக்கு இடம் கொடுப்பாள். நல்ல புத்தியுடையவள். அதிருஷ்டக் குறையுள்ளவள். மெல்லிய சுவாபமுடையவள். நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டவள். மனத்தூய்மை பூண்டவள். உடன்பிறந்தோர் அநேகர் உண்டு. லட்சுமிகடாக்ஷம் பெற்றவளே! தெய்வத்தன்மை பொருந்திய வனே! கேட்பாயாக.

---

1. இலக்குமி (அக்காளைப் பெற்றவள்)
2. தாய் (பெற்ற)
3. சுரம்

20. மாதுரு முன்ஜென்மத்தை வரைகிறோம் தோகைகீழ்பால்
மேதினில் சிற்றூர்தன்னில்வித்தகி தீயின்வம்சம்
கோதிலா உதித்தாளென்றோம் குலத்துக்கு மேம்பாடாக
சூதுக ளில்லாளாகி சுதர்களு[1] முள்ளாளாகி.

20. மாதாவின் பூர்வ ஜன்மத்தை இனிக் கூறுவோம். இவள் கிழக்கு திக்கில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவள். மிகவும் சாமர்த்திய சாலி. குற்றமற்ற அக்கினிகுலத்தில் (வன்னியர் குலத்தில்) உதித்தவள். தன் குலத்திற்கு ஒரு மதிப்பு அளிப்பவள். சூதுவாதுகள் சிறிதும் இல்லாள். புத்திரபாக்கியமும் பெற்றவள். (நல்ல அறநெறி பூண்டவள்.)

21. அறுமுகர்க் கடிமையாகி யாவர்க்கும் நல்லோளாகி
பெருமையாய் வாழ்ந்துபின்பு புருடன்தன் முன்னேமாண்டு
இறைதலை கஞ்சன்[2] தன்னால் குணமுடன் வரியப்பட்டு
விரவில் செங்குந்தவம்சம் மீதினி லுதித்தாளென்றோம்.

21. முருகக்கடவுளையே வழிபடும் இயல்புடையாள். எல்லோரும் மெச்சும் நல்ல சுவபாவமுடையவள். சீர்சிறப்புடன் சிலகாலம் வாழ்ந்து பிறகு புருஷனுக்கு முன்னமேயே மங்கலியத்துடன் மாண்டு, பிரம்மாவின் அபூர்வசிருஷ்டிவிசேஷத்தால் சகலகுண சம்பன்னளாய் செங்குந்த வம்சத்தினில் மீண்டும் உதித்தனள்.

22. பின்ஜென்மம் காஞ்சிதன்னில் பிறப்பளே கங்கைவம்சம்
தன்னிலே யுதிப்பளாகும் சகலபாக் கியமுமுள்ளாய்
அன்னவள் வாழ்வாளாகும் அறைகிறோம் தந்தைபூர்வம்
உன்னித காஞ்சிமேல்பால் உற்றதோர் பேரூர்தன்னில்.

22. அடுத்த ஜன்மத்தில் இவள் காஞ்சிபுரத்தில் காங்கேயர் வமிசத்தில் (வேளாளர் குலத்தில்) உதித்தாள். சகல சௌபாக்கியங்களையும் பெற்றிருந்தாள். அவள் அருமையாய் வாழ்ந்து வரும் நாளில் இவள் தகப்பனார் ஆதியில் மகத்தான காஞ்சிபுரத்திற்கு மேற்கே ஒரு பெரிய பட்டணத்திலிருந்து வந்தார் என்று சொல்லுவோம்.

23. கங்கையின் குலமுதித்து கனதன மேன்மேலுண்டாய்
பொங்கமாய்க் குடும்பியாகி பூமிக ளதிகமுண்டாய்
இங்கிவன் வாழ்நாளில் இயம்புவோம் ஊழிதானும்
சங்கையாய்[3] விதவைதானும் தன்குல மாமன்பெண்ணை.

---

1. சுதர்மம்
2. பிரம்மா
3. பைசாசம்

23. காங்கேயர் குலத்துதித்த இவன் பலதிரவிய சம்பத்துக்களை மேன் மேலும் அடைந்து புஷ்டியாய்க் குழந்தை குட்டிகளுடனும், நிலபலங்களு டனும் விருத்தியாகி வாழும் நாட்களில் விதிவசத்தால் பிசாசு பிடித்த பெண்டாட்டியை இழந்து வைதவ்வியமடைந்தான். பிறகு இவனுடைய சொந்த மாமன் பெண்ணை,

24. அணையவே கருத்துக்கொண்டு அநேகமாய்ச் சிலேடைபேசி
இணையிலா போகம்துய்த்து இருந்துபின் சின்னாள்சென்று
பிணையான கருவுதங்கி பேதையு மனதுவாடி
கனமுடன் இவன்பால்சென்று காதலி சொல்லும்போது.

24. கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று மனதில் எண்ணங் கொண்டு, அனுராகத்துடன் காதல்பூண்டு இன்பமான பல வார்த்தைகளைப் பேசி, ஒப்பில்லா காமபோகங்களை அனுபவித்து வந்தான். கொஞ்சகாலம் சென்றதும், ஆசைப்பட்டபடி கர்ப்பமாகி, உள்ளமும், சரீரமும் வாடிய தன் பார்யையுடன் காதலாகிக் கசிந்துருகி சம்பாஷிக்கும் பொழுது,

25. என்னாலே வந்ததல்ல எவனையோ சேர்ந்தாய்மாது
என்னிடம் வரத்தகாது ஏகுவா யிஷ்டம்போலே
அன்னவள் மனதுநொந்து அடாநிந்தை சொல்லலுற்றாய்
அன்னமும் வெறுப்புண்டாகி அண்ணனும் தம்பியின்றி.

25. உனக்கு என்னாலே கர்ப்பம் ஏற்படவில்லை. யாரையோ புணர்ந்து கருத்தரித்திருக்கின்றாய். பெண்ணே! இனி நீ என்னிடம் வருவதற்கு யோக்கியதை இல்லை. நீ எங்கு வேண்டுமானாலும் இஷ்டம் போல் போகலாம் என்றான். பெண்டாட்டி மனம் நொந்துபோய், சொல் லக்கூடாத படுபழியைக் கூறினாய். இனி பட்டினி கிடந்து, சோற்றில் வெறுப்புண்டாகி, இனி நீங்கள் சகோதர சகோதரிகள் இல்லாமல்,

26. மறுசென்மம் அவ்வாறாக வாழ்குவா யென்றுசொல்லி
திருமகள் போலேயொத்த தேவியும் கயறுமாட்டி
விரவினில் மிரண்ட[1]ளென்றோம் மேவிற்று அந்ததோஷம்
குறைவுண்டு குடும்பந்தன்னில் குளறுவார்த்தைகளுமாகி.

26. அடுத்த ஜன்மத்திலும் அப்படியே வாழ்வாய் என்று சபித்துவிட்டு இலக்குமிக்குச் சமானமான தேவியானவள் தன் கழுத்தில் கயிறுகொண்டு சுருக்குப்போட்டு விரைவினில் மாண்டாள். இந்த பிரம்மஹத்திதோஷம் அந்தக் குடும்பத்தைப் பிடித்தது. அக்குடும்பத்திற்கே அது ஒரு குறைதான். உலகினில் பலர் பல பேசலாயினர்.

---

1. மாண்டாள்

27. அந்திய காலந்தன்னில் அன்னங்கள் குறைவுநேர்ந்து
அந்தகன் பக்கல்சேர்ந்து அங்குசின் னாளிருந்து
பிந்திய பிரமனாலே பூமியில் வரியப்பட்டு
வந்தவன் இவனேயென்றோம் வரைகிறோம் முன்னாழ்
[சாபம்.

27. இவனுடைய வாழ்நாளில் கடைசிகாலத்தில் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்பட்டான். யமலோகம் சேர்ந்து சிலகாலம் அங்கே தங்கி பிறகு பிரம்மாவினால் பூமியில் சிருஷ்டிக்கப்பட்டான். அவன்தான் இந்த மேஷலக்கின ஜாதகன் என்றோம். போன ஜன்மத்தில் ஏற்பட்ட விதியினால் சாபம் ஏற்பட்டது. இதை விவரித்தோம்.

28. இச்சென்மம் தன்னிலேதான் இலகிடும் பலனைச்சொல்
[வேன்
லச்சைக ளதிகமுண்டு நாயகன் துணைவர்தோஷம்
மிச்சமாய் விரையமுண்டு வீணப வாதமாகும்
அச்சுதன் தங்கையாளே அறைகிறோம் இவன்பின்
[சென்மம்.

28. இந்த ஜன்மத்தில் இவனுக்கு ஏற்பட்ட பலனைச் சொல்லுவேன். பலவிதமான வேட்கக்கேடுகள் உண்டு. ஆம்படையான் பெண்டாட்டி விரோதமதிகம். பண விரயமுண்டு. வீண் அபவாதங்களுமுண்டு. ஹே! லட்சுமிகடாக்ஷமுடையவளே! இவனுடைய அடுத்த ஜன்மபலனைச் சொல்லுவோம்.

29. கம்பமா[1] நதிக்குக்கீழ்பால் கனமுள பேரூர்தன்னில்
தெம்பாக யிக்குலத்தில் செனிப்பனும் பெருமையுண்டு
துன்பமில் லாதுவாழ்வன் துறவிகள் சொன்னவாக்கு
வம்புகள் வாராதம்மா வரைமகள் தாயேகேளாய்.

29. தாமிரபரணி நதிக்குக் கிழக்கேயுள்ள பெரிய பட்டணத்தில் சரீர சௌக்கியத்துடன் இக்குலத்தில் பிறப்பான். பேறுபெற்று சிரமமில்லாமல் வாழ்ந்து வருவான். சன்னியாசிகள் சொன்ன தருமங்களைக் கைக்கொள்ளுவான். பிறர் இவனைப்பற்றி வம்புகள் பேசமாட்டார்கள். லட்சுமிகடாக்ஷமுள்ளவளே! கேட்பாயாக.

1. தம்பம்

30. இன்னவன் முன்சென்மத்தை இயம்புறோம் பெண்ணை
[தென்பால்
தென்புலி யூரிலேதான் தெளிகுல வைசியவம்சம்
அன்னவன் உதித்தானென்றோம் அனேகமாய் செட்டு
[செய்து
கன்னென மொழியாளுள்ளாய் கவுரமாய் வாழ்ந்தா
[னென்றோம்.

30. இப்படிப்பட்டவனுடைய போன ஜன்மத்தை சொல்லுகிறோம். பெண்ணையாற்றின் தெற்கேயுள்ள தென்புலியூரிலே உயர்ந்த வைசியர்களுடைய குலத்தில் பிறந்துள்ளான் என்று முன்னமே சொன்னோம். மிகவும் செட்டுக்கட்டுமாய் வாழ்ந்தான். இனிமையான வார்த்தைகளைப் பேசுவான். கௌரவமாயும் வாழ்ந்துவந்தான் என்று சொன்னோமல்லவா !

31. அப்படி வாழுநாளில் யாவர்க்கும் நல்லோனாகி
எப்பவும் தெய்வபக்தி யிவனும் செய்துவந்து
தப்பித மொன்றுமில்லா தானவன் மரணமாகி
செப்புவே னிக்குலத்தில் செனிப்பவ னிவனேயென்றோம்.

31. அவ்விதம் வாழ்ந்து வரும்நாட்களில் இவன் எல்லோர்க்கும் நல்லவனாக நடந்து வந்தான். எப்போதும் தெய்வபக்தி கொண்டுள்ளான் கடவுளையே வழிபட்டு வரும்நாளில் யாதொரு பாவமுமறியாத இவன் இப் பூவுலகைவிட்டு நீங்கினான். இத்தகைய இவன் இக்குலத்திலே பிரகிருதம் ஜனிப்பான் என்று முன்னமே சொன்னோமல்லவா !

32. இவனுட யோகச்சேதி இயம்புவோம் செனனம்தொட்டு
நவனியில் ஏழாண்டுக்கும் நவிலுவோம் பலனையாங்கள்
அவனியி லலைச்சலுண்டு அம்மான்தன் பூமிசேரும்
கவனமா யலைதான்பேதம் காதலி கேட்டிடாயே.

32. இவன் ஜனனம் முதல் பூமியில் ஏழு வருடங்கள் எப்படி வசித்துவந்தான் என்ற யோகக்ஷேமங்களைக் கூறுவோம். பலன்களைக் கேட்பாயாக. பிரியே ! இவனுக்குப் பூமியில் அலைச்சலுண்டு. மாமனுடைய சிலபலன்கள் இவனைச் சேரும். மிக்க கவலைகளால் பாதிக்கப்படுவான். இதை நீ கேட்பாயாக.

33. முனிவரின் விதமாய்க்கூற மொழிகுவளம் மன்றானும்
இனிமையாய் மாதுர்வுக்கு எத்தனை துணைவர்சொல்வாய்
கனிவுள ஆண்பால்மூன்று காதலி அவ்வாறுரும்
பின்யாரு மற்றதெல்லாம் பேசுவோம் மேலுங்கேளாய்.

33. முனிவர் இவ்விதம் பலன்களைக் கூற, இவன் தாய் பின்னும் வினவுவாள். 'இவன் தாய்க்கு எத்தனை துணைவர்கள் உண்டு? சொல்லுவாய்' என்று கேட்க, அன்புள்ள சகோதரர்கள் மூன்றாகும்; சகோதரிகளும் மூன்று. இனி வேறு பலன்களைக் கூறுவோம். காதலி! கேட்பாயாக.

34. செலவுக ளதிகமுண்டு சோம்பலுங் கொஞ்சமாகும்
நலமில்லை தாதைபூமி நயப்புடன் விரையமாகும்
நலவர புத்தியுண்டாம் காரியம் நஷ்டமாகும்
பலபல விதத்தினாலும் பகைவரும் சூதுமுண்டு.

34. செலவுகள் மேலும் மேலும் ஏற்படும். சிறிது சோம்பேறித்தனமும் உண்டு. பூமி விளைச்சலில் நன்மையில்லை. ஆசையினால் சொத்து விரையமாகும். சத்விஷயங்களில் புத்தி ஏற்படும் (மனதைச் செலுத்துவான்) எடுத்த காரியம் கைகூடாது. பற்பல வழிகளில் பகைவர்கள் ஏற்பட்டு இடைஞ்சல்கள் ஏற்படும்.

35. அதுமுதல் மரணம்மட்டும் அம்புலி பிறைபோல்யோகம்
நிதிமிக லாபமுண்டு நேமி[1]யோர்க் குதவிசெய்வன்
பதியது புதிதாய்ச்செய்வான் பலவித லாபம்காணும்
விதியினாலே சல்லியநீங்கும் விளைபுல[2] மேன்மேலோங்கும்.

35. அதுமுதற்கொண்டு சாகும் பரியந்தம் வளர்பிறைச் சந்திரனைப் போல் பிரமாத யோக மேற்படும். சொத்துக்களை மேன்மேலும் விருத்தி செய்வான். அதிக லாபங்களை அடைவான். உலகிலுள்ள யாவர்க்கும் தான தருமங்களைச் செய்வான். புதிய வீட்டைக் கட்டுவான் (புதிப்பிப்பான்). இப்படிப் பலவித இலாபங்கள் ஏற்படும். விதிவசமாகக் கடன் உபாதைகள் நீங்கும். நில சாகுபடி செய்து கண்டு முதல் மேன்மேல் அதிகரிக்கும்.

36. மாதுரு வர்க்கத்தாலே வந்திடும் நஷ்டம்பொன்னும்
மேதினில் கீர்த்தியோங்கும் நினைத்தகா ரியங்கள்கூடும்
பேதவே[3] கிரிஷியோங்கும் புராதன பூமிசேரும்
சேமமாம் குடும்பமாகும் சல்லிய நிவர்த்தியென்றேம்.

36. இவனுடைய கடன்கள் எப்படி நிவர்த்தி யாகும்? தாயார் வமிசத்தினால் திரவிய நஷ்டம் ஏற்படும். ஆனால் கீர்த்தி அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் கைகூடும். பகைவர்களுடைய இடைஞ்சல் இல்லாமல் நில

1. பூமி
2. விளைநிலம்
3. பேதமே = மாறுதலாலேயே

சாகுபடி அதிகரிக்கும். பூர்விக சொத்துச் சேரும். குடும்ப க்ஷேமம் அதிகரிக்கும். கடன் ஹிம்சையும் தானே தீரும்.

37. பூமியில் பொருள்கள்சேரும் புண்ணியம் செய்வானும்
நேமியோர் தன்சொல்மென்மை நிகர்கன்று காலிவிர்த்தி
மாதுந்து[1] மெச்சவாழ்வான் மன்னர்கள் பேட்டிபூண்பன்
காமியே சகலசேதி கழறுவோம் விபரம்ரெண்டில்.

37 பூமி லாபங்கள் ஏற்படும். தர்ம காரியங்களை இவன் செய்வான். பூமியில் உள்ளோர் பெருமையுடன் இவன் புகழ் பேசுமாறு கால் நடைகள், பசுக் கூட்டங்கள் விருத்தி யாகும். பெருமை மிக்க வாழ்வான். அரசர்களைப் பேட்டி காணச் செல்வான். போக போக்கியங்களையுடையவனே! சகல விவரங்களையும் நல்லது பொல்லாததுகளையும் கூறுவோம் இரண்டாம் பாகத்தில்.

38. இவன்பிதா மரணகாலம் இயம்புவோம் முப்பானேழில்
அவனியில் மகரமாதம் அறைகிறேம் கெண்டந்தானும்
நவனியில் மாதுருவுக்கு நாட்டுவோம் அதின்மேல்அந்தும்[2]
கவனமாய்க் கன்னிமாதம் கழறுவோம் கேளுமம்மா.

38. இவன் பிதாவின் மரண காலத்தைக் கூறுவோம். இவன் பூமியில் ஜனித்த முப்பத்தேழாவது வயதில், தை மாசத்தில் இவன் பிதாவிற்கு கண்டம் ஏற்படும் என்று சொல்லலாம். அப்பொழுது இவன் பெற்ற தாய்க்கு மரண காலம் எப்பொழுது என்று நிச்சயிப்போம். இதற்குமேல் ஐந்து வருடங்களுக்குப் பிறகு கன்னி மாசத்தில் (புரட்டாசியில்) ஏற்படும். கவனமாய்க் கேள்.

39. சாதகன் மரணகாலம் சாற்றுவோம் நாற்பானெட்டில்
மேதினில் ஆனிமாதம் விளம்பினோம் கெண்டம்வந்து
போதவே முருகனாலே போய்விடு மந்தகெண்டம்
தீதிற்கும் அன்பானாரில் சிறந்ததோம்[3] சிம்மமாதம்.

39. இந்த ஜாதகனுடைய மரண காலத்தை இனிக் கூறுவோம். இவனுடைய நாற்பத்தெட்டாம் ஆண்டில் ஆனி மாதத்தில் கண்டம் ஏற்பட்டு விலகும். அதுவும் முருகக் கடவுளின் கிருபையினால் விலகும். அதற்குப் பின் ஆறு வருடங்கழித்துச் சிறப்புப் பொருந்திய சிம்மமாதத்தில்,

---

1. பெருமையுடன்
2. ஐந்தும்
3. சிறந்ததாம்

40. பூரணை நாளிலேதான் புகலுவோம் கெண்டந்தானும்
கூறுவோ மிவன்பின்சென்மம் குறிக்கிறோம் புதுவை [தன்னில்
சீரிலா பிரம்மசேயாய் செப்பனும் அரசு[1]செய்வன்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

40. பௌர்ணமி திதியில் (பூர்ண சந்திரன் உதிக்கும் நாளில்) கண்டம் திரும்பவும் ஏற்படும் என்று சொல்வோம். இவனுடைய அடுத்த ஜன்மத்தைக் குறிக்கிறோம். ஒரு துறைமுகப் பட்டணத்தில் சாதாரண பிராம்மண குலத்தில் குழந்தையாய் ஜனிப்பான். இராஜயோகத்திலிருப்பான். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி தேவியே. கேட்பாயாக!

41. இருநான்கு ஆண்டுகொண்டு இயம்புவோம் யோகம் [தானும்
வரவர செல்வமோங்கும் மாநிலம் சேர்ப்பானுகும்
வருந்துன்பம் யாவும்நீங்கும் மாதுரு குடும்பக்ஷேமம்
திறமையா யிரண்டிலேதான் செப்புவோம் விபரமாக.

41. பிறந்து எட்டு வருஷங்களில் பிரமாத யோகத்தை அனுபவிப்பான். நாளடைவில் செல்வ விருத்தி உண்டாகும். பூஸ்திதிகளை அதிகமாகச் சேர்ப்பான். வரும் இடைஞ்சல்களை நீக்கிக் கொள்வான். பெற்ற தாயின் குடும்பம் க்ஷேமமாயிருக்கும். இவற்றை எல்லாம் (நன்மை தீமைகளை) திறமையாயும் விவரமாயும் இந்நூலின் இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

---

1. அரச யோகம்

ஜாதகம் 2

1. மதிசனி மாதையாக மால்தினும் சேயும்[1]சாடி
நிதிகுரு மீனமாக நீள்(ர்)புகழ்(ர்) கேதுதூக்கம்[2]
அதிரவி தேளதாக அரவுமே மேடமாக
வதிபனும் சென்மம்கொச்சை[3] வரைகுவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் சனியும் கன்னியில் இருக்க, புதன், செவ்வாய், கும்பத்திலிருக்க, தனுதிபதியான வியாழ பகவான் மீனத்திலிருக்க, மகத்தான சுக்கிரனும் கேதுவும் துலாத்தில் சேர, சூரியன் விருச்சிகத்திலும், இராகு மேடத்திலும் இருக்க, அதிபனை மேட இலக்கின ஜாதகனுக்கு உண்டான பலனைச் சொல்லுங்கள்.

குரு	லக்கினம் ராகு		
புதன் செவ்வாய்	இராசி சக்கரம்		
	ரவி	கேது சுக்கிரன்	சந்திரன் சனி

2. இந்தசே யானையாகும் இவன்தந்தை யில்லம்சொல்வேன்
அந்தகன் வாசலாகும் அறைகுரேம் கீழ்மேல்வீதி
நொந்திடும கீழ்பால் மாபோன் ரிடபவாகனத்தோன்காளி
சந்ததம் வடகீழ்தன்னில் தங்கிடு மென்றுசொல்லே.

2. இந்த ஜாதகனுடைய தந்தையின் வீட்டின் விவரம் சொல்லுவேன். சனி மூலையில் உள்ளது. வீதி கீழ் மேலுள்ளது. கிழக்கே விஷ்ணுவாலயம். வட கிழக்கே சிவன் கோவிலும் பராசக்தி கோவிலும் உண்டு.

3. குடகினில் மாரிநந்தி கூறிஞேம் சிற்றூர்தன்னில்
அடவுட னிந்தபாலன் அவனுமே வாழ்வானுகும்
திடமில மாதுரியில்லம் செனித்தவ னிந்தசேயும்
இடமது உத்திரத்தில் இருகாத தூரம்தன்னில்.

---

1. செவ்வாயும்
2. தூக்கு = துலாம்
3. சொச்சேத்திரம்

3. மேற்கு திக்கில் ஒரு குளம் உண்டு. சிறிய கிராமத்தில் சோலை களுண்டு. இப்படிப்பட்ட இடத்தில் இந்த ஜாதகன் வசித்து வந்தான். மாதாவின் வீடு சாதாரணமானது. அது இரண்டு காதங்கள் தூரத்திலுள்ளது. குழந்தை இந்த விடத்தில் வடக்குப் பாகத்தில் பிறந்தான்.

4. வீதியும் கிழக்குமேற்கு விளங்கிடும் உத்திரம்சத்தி
ஓதினேன் ஒருபால்சந்து உமையவ ளீசன்மீனம்
மேதினில் சிற்றூர்தன்னில் வித்தக னுதிப்பானுகும்
போதக வானை[1]மேற்கில் போற்றுவமிவ் வடையாளத்துள்.

4. கிழக்கு மேற்கு ஓடும் வீதியில் இவன் வீடு வடக்குப் பார்த்துள்ளது. ஒரு பக்கத்திலுள்ள சந்தினில் சிவன் கோவில். இத்தகைய சிறிய கிராமத்தில் புத்திக் கூர்மையுள்ள இவன் அவதரித்தான். மேற்கு திக்கில் விக்கினேசுவரர் கோவிலுண்டு. இந்த அடையாளத்தைக் கொண்டு சொல்லுவோம்.

5. செனித்தவன் யோகச்செய்கை தேவியன் புத்திரயோகம்
குனித்திடு தந்தையோகம் கூறுவோம் மாதுர்யோகம்
வனிதையே முன்பின்சென்மம் வரைகிறே மின்னூல் [தன்னில்
பனிவரை மகளாய்வந்த பார்வதி கேட்டிடாயே.

5. ஜனித்தவன் யோகவான். அவன் யோகச் செய்கையையும், பெண்டாட்டியின் புத்திர யோகத்தையும், கூனல் முதுகுடைய தந்தையின் யோகமும், பெண்டாட்டியின் அதிர்ஷ்டமும் கூறுவோம். தேவி! இன்னவன் முன்பின் ஜன்மங்களைப்பற்றியும், இந்தப் புஸ்தகத்தில் கூறுவோம். இமவானின் புத்திரியாய் அவதரித்த பார்வதி தேவியே! கேட்பாயாக.

6. தந்தையின் வர்க்கந்தன்னை சாற்றுவோம் பதினொன்றும்
நொந்திடு சிலதுதானும் நேமியி லாண்பால்ரெண்டு
எந்தையே பெண்பால்மூன்று இலகிடும் தீர்க்கமாக
கந்தனைப் பெற்றமாதே கழறுவோம் மேலுங்கேளே.

6. தந்தையின் வர்க்கத்தைக் கூறுவோம். பதினோறு பேர்கள். சிலர் சிரமத்திலிருந்தனர். உலகில் பிறந்தது இருந்தது ஆண் இரண்டு, பெண்கள் மூன்று. சௌக்கியமாய் வசித்தார்கள். முருக பகவானைப் பெற்ற பார்வதியே! மேலும் சொல்லுகிறேன்; கேள்.

---

1. இளங்கன்று என்றும் சொல்லலாம்.

7. சொல்லுவோம் பிதாகுணத்தைச் செவந்திடு மேனியாவன்
வெல்லுவான் எதிரிதன்னை வேல்விழி சாயலுள்ளான்
இல்லறம் புதிதாய்ச்செய்வான் இன்பமாய் வார்த்தை
[சொல்வான்
கல்வியு முடையதாகும் காவலன் சமதேகத்தன்.

7. இவன் பிதாவின் குணத்தைச் சொல்லுவோம். சிவப்பு நிற முடையவன். எதிரிகளை ஜயித்திடுவான். வேலைப்போன்ற விழிகளை யுடையவன். இல்லற வாழ்வில் புதிய மாதிரி வசிப்பான். இன்பமான வார்த்தைகளையே பேசுபவன். கல்விச் செல்வ முடையவன். நிதானமான சரீரப் பாங்குடையவன்.

8. அன்னையால் செல்வமுள்ளான் அவன்தன மிச்சையுள்ளான்
பன்னியே பேசவல்லன் பங்கய ரேகையுள்ளான்
செந்நெல்லும் கிருஷிசெய்வான் செய்வினை யறிந்து
[செய்வான்
முன்கோபம் பின்புசாந்தம் மொழிகுவான் தந்திரவார்த்தை.

8. பிதிரார்ச்சித சொத்துக்களுடையவன். பணத்திலாசை கொண்டவன். பிரியமாய்ப் பேசவல்லான். கையில் பத்மரேகை யுடையான். செந்நெல் சாகுபடி செய்யும் நிலபலங்களை யுடையோன். செய்வன திருந்தச் செய்வான். முன்கோபப்பட்டாலும், பின்னாலே சாந்தமடைவான். சாமர்த்தியமாய்ப் பேசக்கூடியவன்.

9. கபடது கொஞ்சமுண்டு கனதனம் பின்னுலுள்ளான்
தபசிக ளுறவுகொள்ளான் சதியான சொல்லுமுள்ளான்
செபமது கொள்ளானாகும் தேவிமேல் பிரியனவன்
பவசிறு தீனிகொள்வான் பதார்த்தங்கள் அதிகம்
[கொள்வான்.

9. சிறிது கபட முள்ளவன். பிற்காலத்தில் மகத்தான திரவிய லாபத்தைப் பெறுவான். சன்னியாசிகளின் பிரியத்தைச் சம்பாதிப்பான். வஞ்சமாகவும் பேசுவான். ஜபதபங்களைச் செய்வான். பெண்டாட்டியிடம் பிரியமாக இருப்பான். குறைவான உணவை விரும்புவான். காய்கறிகளை அதிகமாகச் சாப்பிடுவான்.

10. இவன்றனை யீன்றதந்தை இல்லங்கள் விட்டுமேதான்
அவனியில் மனைவிபக்கல் அணுகியே சீவிப்பானும்
குலவாது தந்தையாலேதி கூறினேம் மாதுர்வாலே
பலபல பூமியுண்டு பஞ்சைகட் குதவிசெய்வான்.

10. இவனுடைய தந்தை வீடு வாசல்களை விட்டு பெண்டாட்டி யிருக்குமிடத்தில் போய் ஜீவிப்பவனுதும். பிசகில்லாமல் தந்தையைப்பற்றிக் கூறினோம். பெற்ற தாயார் வழியிலே பற்பல பூஸ்திதிகள் உண்டு. ஏழை களுக்கு தர்மம் செய்வான்.

11. இக்குண முடையானுக்கு இவனுமே சேஷ்டனாக
மிக்கவே யுதிப்பானாகும் விளம்புவோ மிவன்குணத்தை
தொக்கவே சிவந்தமேனி துருசான நடையுமாவன்
மிக்கவே கபடுமில்லான் வித்தையு முடையனாமே.

11. தந்தைக்கு மூத்த குமாரனாய்ப் பிறந்த இவன் மேன்மையாயிருப் பான். இன்னவன் குணத்தைக் கூறுவாம். பொருத்தமான சிவந்த மேனியை யுடையான். வேகமாக நடக்கும் இயல்பினன். கபடு சூது அதிகம் இல்லாதவன். கல்விச் செல்வ முமுடையவனாவன்.

12. தன்முனும் குணவானாகும் தன்குல மேம்பட்டுள்ளான்
சினமது கொஞ்சமுண்டு சொன்னசொல் தவறானாகும்
மனவஞ்ச ரிடத்தில்சாரான் மைந்தரால் யோகமுண்டாம்
கனவிலும் பிரபுநேயன் கனவன்னை தன்னால்நன்மை.

12. குடும்பத்தினரில் குணவிசேஷமுடையவன். தான் பிறந்த குலத் தின் மேம்பாடுகளைக் கருதுவான். சிறிது கோபக்காரன். சொன்ன சொல் தவறமாட்டான். வஞ்சனையுள்ளவர்களுடன் சேரமாட்டான். புத்திரர் களால் பாக்கிய முண்டு. சொப்பனத்தில்கூட பிரபுக்களுடன் சம்பாஷிப் பான். கௌரவமுள்ள தாயாரால் நன்மை யுண்டு. (லட்சுமி கடாக்ஷ முடையவன்.)

13. வஞ்சக வஞ்சனுவன் வசனிப்பான் சமையும்பொய்யும்
நெஞ்சுமே யிரக்கமுள்ளான் நெறிமுறை(கள்) நடத்த [வல்லான்
செஞ்சொலி னுணுக்கம்தேர்வன் சிநேகித பெரியோர் [நேயன்
அஞ்சு[1]பா வங்களுக்கு அவன்மனம் செல்லாதென்றோம்.

13. வஞ்சகர்களை வஞ்சனையாலேயே வெல்லுவான். பேசும்போது பொய்யையும் பொருந்தும்படி பேசுவான். மனதில் இரக்க புத்தி யுள்ள வன். தரும வழிகளில் நடக்கும் இயல்புடையான். சொற்களின் தத்துவப் பொருள்களை அறியும் ஆற்றல் பூண்டவன். சிநேகம் செய்யத் தகுந்த

1. பஞ்ச

பெரியோரைத் துணைக்கொள்வான். பஞ்சமா பாதகங்களில் அவன் மனம் செல்லாது என்றோம்.

14. அன்னமு மற்பமீவன் அடுத்தவர்க் குதவிசெய்வான்
பொன்னொடு மணிநற்றாசு புகழுற செய்யிலுண்டாம்
சொன்னயப் புடையவார்த்தை சொடு(கு)[1] சூணும் [காலாளுள்ளான்
இன்னமும் செல்வம்பின்னால் ஓங்கிடும் இவனுக்கேதான்.

14. ஆதுலர்க்குச் சிறிது அன்னமுமளிப்பான். அண்டினவருக்குதவி செய்வான். பொன், மணி, பூஷணங்கள் செயலுள்ள புகழ் இவனுக்கேற்படும். நயமும் பிரியமுமுள்ள வார்த்தைகளைப் பேசுவான். சௌக்கியமான ஆகாரமும் சேவகர்களும் உடையோன். இவனுக்கு இன்னும் பிற்காலத்தில் செல்வம் ஓங்கித் தழைக்கும். (சோம்பலில்லாத வேலைக்காரர்களை உடையவன். = சொடகு + ஊணும் காலாளுள்ளான். சொடுகு—சொடகின் திரிபு.)

15. இவனுட துணைவர்தன்னை இயம்புவோ மாண்பாலொன்று
அவனியில் கன்னிமூன்று அறைகிறோம் தீர்க்கமாகும்
நவனியில் மூன்றுசேதம் நாட்டுவோ மிவனுக்கேதான்
தவசியே துணைவரெல்லாம் தனக்கிளை யோராமென்றும்.

15. இவனுடன் கூடப்பிறந்தவர்களைப் பற்றிப் பேசுவோம். ஆண் ஒன்று, பெண் மூன்று கூடப் பிறந்தவர்கள். இதை நிச்சயமாய்ச் சொல்லலாம். மூன்று பேர் பிறந்து இறந்தனர். அதுவும் இவனைச் சேர்ந்த விஷயம் என்றே சொல்லுவோம். துணைவர்கள் எல்லோரும் இவனுக் கிளையவர்கள்.

16. இன்னவன் மணத்தின்காலம் இயம்புவோ மீரோன் [பாண்டுள்
கன்னிகை உத்திரத்தில் காதலி வருவாளாகும்
அன்னம்போல் சாயலுள்ளாள் அனைவரும் நல்லோ [ளென்பர்
கன்னென மொழியுமுள்ளாள் கழறுவோம் சிவந்தமேனி.

16. இவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோமாக. இவனுடைய பதினெட்டாம் பிராயத்தில் வடதிக்கிலிருந்து இவனைக் காதலிக்கும் கன்னிப் பெண் வருவாள். அன்னம் போன்ற சாயலை யுடையாள். எல்லாரும் இவளை மிக்க நல்லவள் என்பார்கள். கனிவுள்ள வார்த்தைகளைப் பேசுவாள். சிவந்த மேனியை யுடையவள்.

---

1. சொகுசு = அழகு, சௌக்கியம். சொகுசு + ஊண் = சொகுசூண்

17. வயதுமே தீர்க்கமென்றோம் அம்பிகை கேட்கலுற்றாள்
செயமுனி சொன்னீரேநீர் செம்பாம்பு[1] ஏழில்நிற்க
தயவிலா தாரம்ரெண்டு தயங்கிடு மிவனுக்கேதான்
வியமில்லை தாரமொன்றே விளம்பினோம் கேளுமம்மா.

17. இவனுக்கோ தீர்க்காயுசு என்றோம். அம்பிகை சொல்வதைக் கவனமாய்க் கேட்கிறாள். ஜயமுனி சூத்திரத்தில் கேது ஜன்மத்திற்கேழில் சுக்கிரனுடன் இருந்தால் இரண்டு தாரம் இவனுக்கே ஏற்படும் என்று சொல்லியிருந்தபோதிலும் தாரத்திற்கு வியோகம் (சாவு) இல்லை. இவனுக்கு ஏகபத்தினிதான். சொன்னோம்; கேளம்மா! (வியம் = விரயம்).

18. எப்படி சொன்னீரய்யா ஏழிரண் டிடத்தோன்வெள்ளி
மெய்ப்புட னேழிலாட்சி விற்றதால் மனைவிஒன்றே
செப்புவோ மிதற்குநேராய்ச் சாதகம் சுரிதியே[2] தான்
ஒப்புட னேழாம்பாவம் உரைத்திட்டோம் பார்ப்பாயாக.

18. எப்படிச் சொன்னீர் என்று கேட்பாயாகில், இலக்கினத்திற்கு இரண்டாமிடத்திற்கும் ஏழாமிடத்திற்கும் உரிய சுக்கிரன் உண்மையில் ஏழாமிடத்தில் ஆட்சி பெற்றிருப்பதனாலேயே இவனுக்கு மனைவி ஒன்று தான். இப்படிப்பட்ட ஜாதகம் தான் இந்த விஷயத்திற்கு சுருதி வாக்கியமாகும். (மந்திர ஸ்லோகமாகும்.) இந்த ஜாதகத்தின் ஏழாம் பாவத்தை அழகாக உரைத்தோ மல்லவா! இதை நீ அறிந்து கொண்டாயா. (சொச்சேத்திரத்திலுள்ள சுக்கிரனையே வைத்துச் சொன்னால் போதும். கேது தனித்தில்லாமல் சேர்ந்திருப்பதனால் காரியா காரிய மில்லை.)

19. கேதுவு மேழில்நிற்க கிட்டிய பலனைச்சொல்வாய்
ஓதுவேன் அநேகமாதை உத்தமன் சேர்வானென்றோம்
மேதினில் விதவைமாதை வீரியன் போகம்செய்வான்
ஆதலால் அபிமானந்தான் அணுகிடு மொருத்தியென்றோம்.

19. ஏழாம் வீட்டில் கேதுவும் இருப்பதனால் பலன் என்ன என்று சொல்லுவதைக் கேள். உத்தமனாயுள்ள இவன் பல ஸ்திரீகளைப் புணர்வான். உலகினில் கைம்பெண்களை வீரியம் மேலிட்டு போகம் செய்வான். ஆனால் கட்டின பெண்டாட்டி ஒருத்தி தான். அபிமான பத்தினிப் பெண்கள் பலர் உண்டு.

---

1. கேது (கரும்பாம்பு = இராகு). மலையாளத்தில் ஏழாமிட கேதுவைப் பார்ப்பார்கள்.

2. மந்திர ஸ்லோகம், சுருதி வாக்கியம்

20. புத்திர விருத்திதன்னை புகலுவோம் ஆண்பாலொன்று
சத்திய மிரண்டுளென்றோம் சதிருடன் மூன்றுதீர்க்கம்
சித்தமாய் நான்குசேதம் செப்புவோ மிவனுக்கேதான்
அத்தியைப் பெற்றமாதே! அறைந்தன மொழிகுன்றுது.

20. இவனுக்குண்டான புத்திர விருத்தியை ஈண்டுக் கூறலாம். ஆண் குழந்தை ஒன்று. பெண் பிள்ளைகள் இரண்டு. நேர்மையாக இம்மூவர் தீர்க்காயுசுடனிருப்பர். தவிர, நான்கு குழந்தைகள் பிறந்து சேதமாகும். லட்சுமி தேவியே! சொன்ன சொல் தவறுது. இது சத்தியமாகும்.

21. அன்னையும் புத்திசாலி அன்புட னன்னமீவள்
சொர்ணமும் பணிநற்றூசு சுகம்பெற வணிவாளாகும்
மன்னிய வாததேகி மருமலாள் சிவந்தமேனி
தன்னுட துணைவர்[1]பெண்பால் சாற்றினே மூவராகும்.

21. தாயாரும் நல்ல புத்திசாலி. பிரியத்துடன் வறியோர்க்கு அன்ன மீவாள். தங்கத்தினுலும், நல்முத்துக்களாலும் செய்யப்பட்ட நகைகளை அணிந்துகொள்ளுவாள். வாதசரீரமுள்ளவள். சிறந்தமேனியுள்ளாள். அவளுக்குச் சகோதரிகள் மூன்றுபேர்கள் என்று சொன்னேம்.

22. ஆணது காணுளாகும் அத்திரி சொல்லுகின்றுர்
காணவே யவர்களாலேதி கருதுவா ரெவர்தான்சொல்வாய்
தோணவே பாதிபாகம் சுந்திரன் அடைவானுகும்
பூணுவோம் மாதுர்பூர்வம் புண்ணிய வதியேகேளாய்.

22. அத்திரி மகரிஷி சொல்லுவதாவது. அவளுக்குச் சோதரர் களில்லை. ஆதலால் அதன்பயன் என்னவென்று ஆராய்ந்தால், இவள் புருஷனுக்கு இவள் சொத்தில் பாகம் உண்டு. இம்மாதின் பூர்வஜன்மத்தை, புண்ணியவதியே! கேட்பாயாக. அதைச் சொல்லுவோம்.

23. சேய்ந்திதென் பாகத்தில் திருக்குடந் தைக்குமேல்பால்
தீயின்வம்சம் தன்வம்சத்தில் செனித்தவ ளிவளே
[யென்றேம்.
ஆயவே குடும்பியாகி அவளுக்குச் சுதர்களுண்டாய்
நேயமாய் தானதர்மம் நிமலியும்[2] செய்தாளென்றேம்.

23. ஜாதகன் மனைவி தெற்குபாகத்தில் திருக்குடந்தை க்ஷேத்திரத்திற்கு மேற்கே வன்னியர் வமிசத்தில் உதித்தாள் என்று சொன்னேம். இவளைச் சம்சாரமாக அடைந்து குடும்பியாகிக் குழந்தைகுட்டிகள் ஏற்பட்டு ஒழுங்கான தர்மங்களைச் செய்து வருவான். பத்தினியும் அப்படியே.

---

1. சகோதரிகள்
2. அழுக்கில்லாதவள்

24. செய்துமே மரணமாகி சிரசுநான் குடையோன் தன்னால்
உய்யவே வரியப்பட்டு உதித்தவ ளிவளேயென்றோம்
தையலின் பின்சென்மத்தைச் சாற்றுவோம் அவ்வூர்மேற்கில்
உய்குவாள் பிரம்மசேயாய் உத்தமி கேட்டிடாயே.

24. இவளும் காலந்தரமானாள். நான்கு சிரசுகளையுடைய பிரமதேவன் கிருபைகூர்ந்து இவளை மறுபடியும் ஸ்ருஷ்டிசெய்தான். அப்படி மறுபடியும் உதித்தவள் இவளே என்று சொன்னோமல்லவா! இம்மாதின் அடுத்த ஜன்மத்தை இனிச் சொல்லுவாம். அந்த ஊரில் மேற்குதிக்கில் பிராமணப்பெண்ணாய் இவ்வுத்தமி பிறந்து வளர்ந்து வந்தாள்.

25. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் உவரிபக்கல்
முந்துமா பெலியிரேரம் உயர்சம்பு வம்சம்[1]தோன்றி
சந்ததம் தனங்கள்பூமி சகலமும் குறைவில்லாமல்
பந்தமாய்ப் பஞ்சைகட்டு பாலகன் உதவிசெய்து.

25. தந்தையின் முன்ஜன்மத்தை இனிச் சொல்லுவோம். சமுத்திர தீரமாகிய மகாபலிபுரத்தின்பக்கலில் உயர்ந்த சைவவம்சத்தில் உதித்து எப்பொழுதும் தனம், தான்யம், பூமி மற்றெல்லாசம்பத்துக்களையும் யாதொரு குறைவுமில்லாமல் பெற்றுப் பிரியத்துடன் ஏழைகட்குத் தருமங்களைச் செய்து,

26. அன்னமும் தாகமீ(ய்)ந்து அரன்பூசை அதிகம்செய்து
பன்னிய சுதர்களின்றி பலபல தலங்கள்சென்று
இன்னவன் மதலைகாணு யிமபுரம் சென்றானென்றோம்
பன்னிய பிரமன்தானும் பாரினில் வரியப்பட்டு.

26. அன்னதானமும், தண்ணீர்ப்பந்தலும் வைத்து ஏழைகட்குதவியும், சிவனைச் சதா காலமும் பூசை செய்துவரும் நாளில் குடும்பவிருத்திக்குப் புத்திரபாக்கியம் இல்லாமல் அநேக ஸ்தலங்களைத் தரிசித்துக் கடைசியில் குழந்தையே இல்லாமல் எமனுடைய உலகம் போய்ச்சேர்ந்தான்; மறுபடியும் பிரம்மா இவனைப் பூமியில் பிறக்கும்படி சிருஷ்டி செய்தான்.

27. வந்தவ னிவனேயென்றோம் வரைகிறோ மிவன்பின்சென்மம்.
எந்தையே வேங்கடத்துக் கிலகிய உததி[2] ஓரம்
சந்ததம் ரெட்டியாகி தனம்பூமி யுள்ளானாகி
பந்துவு மெச்சவாழ்வன் பார்வதி கேட்டிடாயே.

27. இவ்வாறு உதித்தவன் நம் ஜாதகனேயாவன். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். புண்ணிய க்ஷேத்திரமாகிய திருவேங்

1. சைவம்
2. கடல்

கடத்துப் பக்கலில் சமுத்திரதீரத்த நகில் ரெட்டியாராகி தனம், பூமி இவை போன்ற சொத்துக்களைப்பெற்றுச் சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்ந்து வந்தான். பார்வதியே! இதைக் கேட்பாயாக!

28. இவர்கள்தன் காலந்தன்னை இயம்புவோம் கேளுந்தாயே
அவனியில் முப்பானேழில் அழகிய மகரமாதம்
நவனியில் தந்தைகெண்டம் நவின்றமி துவல்லாமல்
பவ[1]முள மாதுர்வுக்கு பகருவோம் அதின்மேல்மூன்றும்.

28. இவர்களுடைய ஆயுட்காலத்தை இனிக் கூறுவோம். தாயே! கேளுங்கள். புருஷன் பூமியில் அவதரித்த முப்பத்தேழாம் பிரயாத்தில் உத்தராயணத்தில் தைமாசத்தில் கண்டத்தை அனுபவிப்பான். இது நீங்கலாக, பவளநிறமுடைய பெண்டாட்டிக்கு அதற்குமேல் மூன்று வருஷம் கழிந்தபின் அவளுடைய பவ வினைகள் தீரும்.

29. சிம்ம(ப)மா தங்கள்தன்னில் செப்புவோம் கூர்மம்[2]தானும்
பொங்கமாய்ச் சாதகர்க்கு புகலுவோ அன்பானுலில்
சங்கையாய் மேடமாதம் சதுர்த்தசி குறைபக்கத்தில்
இங்கிவ னுடலம்வாடும் இனிவரும் சென்மம்சொல்வேன்.

29. ஆவணிமாதங்களிலெல்லாம் சாதகனுக்கு உயர்ந்த நிலையைக் கொடுக்கும் மாறுகிரகங்கள் சேர்ந்தமைந்த ஒரு யோகம் உயர்வாகச் சொல்வோம். சந்தோஷமாயிருக்குநாளில் சித்திரைமாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் பூதபிசாச ஹிம்சையினுல் இவன் உடம்பு வாடி இறக்கும். இனி இவனுடைய அடுத்த ஜன்மத்தைக் கூறுவோம்.

30. தில்லைக்கு மேல்பாலாக தெளிகுல மறையோன்வம்சம்
அல்லல்க ளில்லாதாகி அதிகமாய்ப் பூமிபெற்று
நல்லவ னுகிவாழ்வன் நவின்றது தப்பாதாகும்
அல்லலை அகற்றும்மாதே அம்பிகை யாளேகேளாய்.

30. சிதம்பர ஸ்தலத்திற்கு மேற்கே உயர்வான பிராமண வம்சத்தில் உதித்து யாதொரு சிரமமுமில்லாமல், அதிக நிலபலங்களைப் பெற்று நல்ல வழியில் வாழ்ந்து வந்தான். நான் சொன்னது தப்பாது. பிசகில்லை. துன்பத்தை யொழிக்கும் பராசக்தியே! கேட்பாயாக.

31. இதுமட்டி(த்தி)ல் சாதகர்க்கு இலகாதோ மாரகங்கள்
விதியினுல் காணும்மம்மா விளம்புவீ ரந்தக்காலம்
சதியிலா மூன்றுஏழில் தக்கதோர் பிணியுமுண்டு
அதுகாலம் நிவர்த்தியாகில் அறைந்தனம் வயதுதீர்க்கம்.

---

1. பிறவிக்கட்டு
2. உயர்ந்தநிலை

31. இந்த ஜாதகர்க்கு விதிவசத்தால் மாரககாலங்கள் ஏற்படலாமே. அவற்றை விவரமாய்ச் சொல்லுங்கள். அக்காலம் ஜாதகர்க்கு இருபத்தொன்றுமாண்டில் சரியான வியாதி ஏற்படும். அந்த கண்டத்தைவிட்டு நீங்குவான். அது நிவர்த்தியானதும் அவருக்கு தீர்க்காயுசுதான்.

32. இன்னவன் யோகச்சேதி இயம்புவோம் கேளும்தாயே
தந்தையி ஞர்ச்சிதத்தை தானவன் விருத்திசெய்வன்
அன்னவன் தந்தைமேலாய் அவனுமே வாழ்வானாகும்
தன்னிலே தனதானியங்கள் சகலமும் குறைவில்லாமல்.

32. இனி ஜாதகனுடைய யோகபாவத்தைக் கூறுவோம். தாயே! கேளுங்கள். தன்னுடைய பிதாவின் சொத்துக்களை அடைந்த இவன் அதை விருத்தி செய்து வருவான். தந்தையும் சிரும்சிறப்புடனுமிருப்பான். ஜீவ பிதாவுடன் இவனும் பிரமாதமாக வாழ்வான். தன தானியங்களுக்கு யாதொரு குறையில்லாமலிருப்பான்.

33. தன்சொல்லும் மேம்பாடாகும் சதுஷ்பாதம்[1] விருத்தி [யென்றோம்
பன்னுமா சாரனவன் புகழுளான் சல்லியமில்லான்
இன்னமும் பிறைபோல்யோகம் இலகிடு மென்றுசொன் [னேம்
தன்னிலே குடும்பச்சேதி சாற்றுவோம் கேளுமம்மா.

33. இவனுடைய வார்த்தையை எல்லோரும் மதித்து அதன்படி நடப்பார்கள். கால்நடைகள் (பசுக்கள்) விருத்தியாகும். ஆசார சீலனாயிருப்பான். கீர்த்திமான். கடன்தொந்தரவில்லாதவன். மேன்மேலும் வளர்பிறைச் சந்திரனைப்போல யோகங்கள் விருத்தியாகும் என்று சொன்னோம். இந்த நாளில் இவனுடைய குடும்பச்சேதிகளைப்பற்றிக் கூறுவாம்; கேளும்! அம்மையே!

34. சாதகன் குடும்பச்சேதி சாற்றுவோ மீராறுண்டில்
மேதினில் வேறதாகும் விளம்புவோம் பாகம்மூன்றாய்
போதவே ஞாதிமேலாய் புத்திரன் வாழ்வானாகும்
மாதவர் துதிக்குமெங்கள் மங்கையே மேலுங்கேளே.

34. இனி ஜாதகனுடைய குடும்பச்சேதியைக் கூறுவோம். இவனுடைய ஜீவதசையைப் பன்னிரண்டு வருஷங்களாக மூன்று பாகங்கள் செய்வோம். ஒவ்வொரு பாகத்திற்கும் பலன் வேறு வேறாகும். அதைக் கூறுவோம். சொந்தக்காரர்கள் மேன்மையடைவார்கள். புத்திரன் போகத்

1. கால் நடைகள்

துடன் வாழ்வான். முனிவர்கள் துதிக்கும் தேவியே! இன்னமும் சொல்லுகிறேன். கேட்பாயாக.

35. தேவதா பத்திகொள்வன் சிறுத்தவர் தம்மைக்காப்பன்
ஆவுகள் விருத்தியுள்ளான் அன்னங்கள் போடஇச்சை
மேவலர் பூசைசெய்வன் வீணப வாதமில்லான்
*நாவுதல்[1] தப்பானுகும் நாயகி கேட்டிடாயே.

35. இவன் தெய்வபக்தி அதிகமாயுள்ளவன். ஏழைகளைக் காப்பாற்றுவான். பசுக்கூட்டங்களைப் போஷித்து விருத்திசெய்வான். பிறர்க்கு அன்னம் அளிக்கும் ஆற்றல் கொண்டுளான். பெரியாரைப் போற்றுவான். வீண்பழிபாவங்களுக்கு ஆளாகமாட்டான். விரதாதிகளைச் சரிவர அனுஷ்டிப்பான். தாயே! கேட்பாயாக.

36. செனித்திடு காலந்தன்னில் சேயதிசை யிருப்புதானும்
இனித்திடு மாண்டுமாறும் கூறுவோம் திங்கள்ரெண்டும்
கனமுடன் துணைவிவிருத்தி கனத்திடும் தானியங்கள்
இனமதில் சுபமுமுண்டு இருந்திடம் பேதமாகும்.

36. பிறந்த காலமுதல் ஜாதகனுக்கு ஜயப்பிரதமான செவ்வாய் தசை அடிப்பதனுல், ஆறு வருடகாலமும் அதன் பின் இரண்டு மாதமும் அதிக சந்தோஷத்துடனிருப்பான். பெண்டாட்டியும் சகல பாக்கியங்களையும் பெறுவாள். ஐசுவரியங்கள் மேன்மேலும் விருத்தியாகும். தானியங்கள் அதிகம் ஏற்படும். சொந்தக்காரர்கள் சுகமாக இருப்பார்கள். இருந்த இடம் விட்டுப் பெயர்ச்சி ஏற்படும்.

37. சாதகன் தனக்குரோகம் சார்ந்துபின் நிவர்த்தியாகும்
மேதினில் பூமிசேரும் விளங்கிடும் கன்றுகாலி
தீதுகள் தாய்தந்தைக்கே சேர்ந்திடும் ரோகமுண்டு
மாதுவே பின்பாகத்தில் வரைகிறோம் விபரமாக.

37 இந்த ஜாதகனுக்குச் சிறிதுகாலம் வியாதி ஏற்பட்டு நிவர்த்தியாகும். பூஸ்திதிகள் அதிகம் சேரும். கன்றுகாலிகள் விருத்தியாகி விளங்கிடும். பெற்ற தாய்தந்தையருக்கு இடைஞ்சல்கள் ஏற்படும். வியாதி பீடிக்கும். மாதே! இதைப்பற்றிப் பின் பாகத்தில் விவரமாக விவரிக்கின்றேன்.

இனி இரண்டாம் பாகம் கூறுவோம்.

---

1. நோன்பு நூற்றல்

*நாவுகள் தப்பானுகும்=பேச்சுக்கள் தவறமாட்டான் என்றும் கொள்ளலாம்.

ஜாதகம் 3.

1. பொன்தெருக் காலிலேற புதன்ரவி புல்லம்புக்கம்[1]
சந்திரன் முடவன்சாடி சேய்[2]புகர் வீணையாக
மந்தர கயிறு[3]மீனம் மாதையில் சிகியும்நிற்க
வந்தவன் ஜென்மம்மேடம் வரைகுவீர் பலனைத்தானே.

1. வியாழபகவான் விருச்சிகத்திலும், புதனும் ரவியும் ரிஷபத்திலும், சந்திரனும் சனியும் கும்ப ராசியிலும், செவ்வாயும் சுக்கிரனும் மிதுனத்திலும், இராகு மீனத்திலும், கேது கன்னியிலும் கொண்ட இந்த கிரக நிலையுள்ள மேஷ லக்கின ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுவீராக. (புல்லம்=ரிஷபம்; தெருக்கால்=நண்டுத் தெருக்கால், தேள், நட்டுவாக்களி.)

ராகு	லக்கினம்	புதன் ரவி	செவ்வாய் சுக்கிரன்
சந்திரன் சனி	இராசி		
	சக்கரம்		
	வியாழன்		கேது

2. வீதியும் கிழக்குமேற்கு விளங்கிடும் வடக்குவாடை
ஓதுவோம் ஒருபால்இல்லம் உத்திரம் வயல்களாகும்
நீதியாய் கிழக்கில்நந்தி நிலைத்திடும் அக்கினிதேவி
போதவே மாரிமாயோன் புக்கிடும் தென்மேல்திக்கில்.

2. இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்கு வாடையில் விளங்கும் என்று சொல்லுவோம். தெருவில் ஒருசாரிதான் வீடுகள். வடக்குப்பாகத்தில் வயல்கள். தர்மசாஸ்திரப்படி கிழக்கில் நந்திகேஸ்வரரும் அக்கினிதிக்கில் தேவியும், நீர்நிலையருகில் விஷ்ணுவாலயமும் தென்மேற்கு திக்கில் உண்டு.

3. இதுவலால் ஈசன்காளி இசைந்திடும் வடமேல்திக்கில்
நதிகரை சோலையுண்டு நாட்டுமிவ் வடையாளத்துள்
பதியது கூரையாகும் பகருவோம் சமவூர்தன்னில்
விதியினால் இந்தபாலன் விளம்புவா[4] னென்றுசொன்னோம்.

---

1. புக்க என்பதே போதும்
2. செவ்வாய்
3. மலைப்பாம்பு
4. விளங்குவான் என்றும் இருக்கலாம்

3. இதன் வடபாகத்தில் சிவனும் காளியும் கோயில் கொண்டுள்ளனர். வடமேல்திக்கில் நதியுண்டு. அதன் கரையில் சோலையுண்டு. இத்தகைய அடையாளங்கள் கொண்ட கிராமத்தில் ஒரு கூரை மேய்ந்த வீட்டில் ஜாதகன் பிறந்தான். இவ்வூர் சமவெளியில் உள்ளது. பிராரப்தவசத்தினால் இந்த ஜாதகன் பால்யத்திலேயே நல்வாக்குகளை யாரிடமும் கூறும் திறமை பூண்டவன். இதை இவனுக்கு விதியினால் ஏற்பட்டது என்று சொன்னேன்.

4. வந்தவன் செநந[1]யோகம் வளமுள துணைவர்யோகம்
முந்திய தாயின்யோகம் முயன்றிடும் தந்தையோகம்
பிந்திய களத்திரபுத்திரர் பேசுவோம் முன்பின்சென்மம்
சந்ததம் நவக்கோளாய்ந்து சாற்றுவோ மிந்நூல்தன்னில்.

4. இப்படி உதித்த ஜாதகனுக்கு ஜனனகாலத்திலேற்பட்ட யோக பாவமும், வளப்பங்கள் பொருந்திய சகோதரர்கள் யோகபாவமும், இறத்தலில் முந்திய தாயாரின் யோகமும், உழைப்புகளுள்ள தந்தையின் யோகமும், இதற்குப் பின்னால் இவன் புத்திரகளத்திர யோகமும் பற்றிப் பேசுவோம். அடுத்தடுத்து வரும் ஜன்மபலங்களை எப்போதும் நவக்கிரகங்களின் நிலையறிந்து இந்நூலின்கண்ணே எடுத்துக் கூறுவோம்.

5. சொல்லிய தந்தைக்கேதான் துணைவர்கள் காணுகும்
வல்லியே! தந்தைசேதி வரைகிறோம் மிகுசிகப்பன்
பல்லவர் நேயனுகும் பத்தினிக் கன்பனுகும்
அல்லல்கள் மட்டி(த்தி)லேதான் அணிகிடும் என்று
[சொன்னோம்].

5. இவனுடைய தந்தையுடன் கூடப்பிறந்தவர்கள் எவரும் காணோம். பெண்ணே! தந்தையின் விவரங்கள் கூறுவாம். மிக்க சிகப்பு நிறமுடையான். பல பேர்களுடன் நேசமாயிருப்பன். பெண்டாட்டியிடம் பிரியமுள்ளவன். மத்திய காலத்தில் சிற்சில சிரமங்களைக் கொண்டான் என்று சொன்னோம்.

6. தனமது இல்லானுகும் தாட்டியாய் செலவுசெய்வன்
கனமான புத்தியுள்ளான் கணக்குகள் தொழிலைச்செய்வன்
பிணியாகும் மத்தியத்தில் போசன சுகியனுகும்
சினமிலான் அடக்கமுள்ளான் சபைதனில் பேசானுகும்.

6. பணம் அதிகம் புழக்கம் இல்லாமற்போனாலும், செலவு விரிவாய் நடத்துவான். மிக்க கௌரவமான புத்தியை யுடையவன். கணக்குகள்

---

1. ஜனன = பிறந்த காலத்து, சென்ம, என்றும் கூறலாம்

எழுதும்படியான தொழிலில் அமர்வான். சிறிய காலத்திற்குப் பிறகு ஏற்படும் மத்தியகாலத்தில் சாப்பாட்டுச் சௌக்கியத்தையடைவான். கோப மில்லாதவன். அடக்கமுடையவன். பத்துப்பேரிருக்குமிடத்தில் அனுவசிய மாய்ப் பேசமாட்டான்.

7. சஞ்சல புத்தியுள்ளான் தன்மனம் கபடுமில்லான்
அஞ்சலென் றோரைக்காப்பன் அதிகமாம் கல்வியில்லான்
நெஞ்சுமே யிரக்கமுள்ளான் நேமியில் சல்லியமுள்ளான்
தஞ்சமாய்ப் பித்தசூடு தங்கிடு மிவனுக்கேதான்.

7. சஞ்சலப்படும் தன்மையுள்ளான். மனதில் கபடு இல்லாதவன். அண்டினவரைத் துன்பத்திலிருந்து நீக்குவான். நிரம்பப் படித்தவனல்லன். இரக்கபுத்தி யுள்ளவன். பூமிவாழ்வில் சிறிது கடன்கப்பி உள்ளான். இவனிடம் சதா பித்தசூடு (பித்த காங்கை) இருந்து இவனைப் பீடிக்கும்.

8. ஆதியில் சுகமுமுள்ளான் அல்பமாம் மத்தியத்தில்
தீதுகள் அதிகமுண்டு சிதறிடும் பூமிகொஞ்சம்
கோதிலா வந்தியத்தில் குலவிடும் சவுக்கியங்கள்
மாதவர் தன்னைக்காக்கும் மங்கையே மேலுங்கேளே.

8. ஆரம்பகாலத்தில் சுகத்தையடைவன். மத்திய காலத்தில் அவ்வளவில்லை. சிரமங்கள் அதிகமுண்டு. சிறிது பூஸ்திதிகளில் நஷ்ட மேற்படும். குறைவில்லாத அந்திய காலத்தில் அநேக சௌக்கியங்களைப் பெறுவான். தபசிகளை ரக்ஷிக்கும் தேவியே! மேலும் சொல்லுகிறேன். கேளுங்கள்.

9. இப்படி யிருக்கும்தந்தை இவனுக்கு இந்தசேயும்
மிக்கவே இரண்டாம்பாலன் மேவுவா னிவனேயம்மா
தக்கவே இவன்குணத்தைச் சாற்றுவோம் மால்நிறத்தான்
சிக்கென்ப பொருளும்சேர்ப்பன் தீரமா மனத்தனென்றும்.

9. இப்படிப்பட்ட ஜாதகனுடைய தந்தை இவ்வாறிருக்கும் நாளில் இரண்டாவது புத்திரன் ஏற்படுவான். ஏற்பாடாக அவன் குணத்தைச் சொல்லுவோம் திருமாலைப்போல் கருப்பு நிறமுடையவன். செட்டுங் கட்டுமாய்ப் பணத்தைச் சேர்ப்பான். திடமான புத்தியைக் கொண்டுளான் என்றேும்.

10. பலபல மனுக்கள்நேயன் பாரினில் பூசைசாலி
நலமுறும் கல்வியுள்ளான் நன்னுட்டில் வாசம்செய்வான்
விலைமாதர் விருப்பங்கொள்ளான் விளைபுலம் பின்னுல் [சேர்ப்பன்
தலமது புதிதாய்ச்செய்வன் சகோதரர் தன்னைக்காப்பன்.

10. பற்பல தருமங்களை அனுட்டிப்பான். பூலோகவாழ்வில் மிக்க மதியூகி. நன்மையை அளிக்கும் வித்தைகளைக் கற்பான். நல்ல தேசத்தில் (நாட்டுப்புறத்தில்) வசித்துவருவான். தேவடியாள் வீடுதேடிச் செல்லான். சொத்துக்களை மேன்மேலும் சேர்ப்பான். வசிக்கும் வீட்டைப் புதுப்பித்துக் கட்டுவான். சகோதரர்களுக்கு வேண்டிய ஒத்தாசையைச்செய்வான்.

11. தன்னுட இனத்தாருக்குத் தனிகராய் வாழ்வானுகும்
பொன்னெடு மணியும்சேர்ப்பன் புகழது மிகவேகொள்வன்
மன்னமு மன்பாயீவன்[1] வ(ா)ணிபங்கள் செய்வானுகும்
இன்னவன் கணக்கில்யூகை இயம்பினேம் வறுமையில்லான்.

11. தன்னைச் சேர்ந்த பந்து ஜனங்களின் நடுவே பெரிய பணக்காரனுக வாழ்வான். பொன், மணி இவற்றை அதிகமாய்ச் சேர்ப்பான். பிரமாதமான கீர்த்தியை அடைவான். பிரியத்துடன் அன்னதானம் செய்வான் (மன்னனும்+அன்பாய் ஈவான்) அரசனும் பிரியத்துடன் அவனுக்குச் சம்மானங்களைக் கொடுப்பான். பல வியாபாரங்களைச் செய்வான். இவனுடைய கணக்கெழுதும் சாமர்த்தியத்தைப்பற்றி முன்பேகூறினேமல்லவா!

12. அன்னிய தேசலாபம் ஆள்கார ருடையனுகும்
மன்னனு மொருவர்கீழ்பால் வாழ்குவன் சிலநாள்தானும்
தன்துணை வர்களைக்காப்பன் சகலரும் பற்றி[2]வாழ்வன்
பிந்திநாள் யோகமுள்ளான் புராதனம் விருத்திசெய்வன்.

12. பிற தேசங்களிலிருந்து லாபகரமான வரும்படியைப் பெறுவான். ஆள்கட்டு உடையவன். ஓரரசனிடம் சில காலம் வேலை பார்த்து வாழ்ந்து வருவான். தன்னைச் சேர்ந்த பந்து மித்திரர்களைக் காத்துவருவான். யாவரும் இவனைப் பின்பற்றி விரும்பும்படி வாழ்ந்து வருவான். பிற்றைய நாட்களில் (வயசு காலத்தில்) யோகமாக வாழ்வான். பூர்விக சொத்துக்களை மேன்மேலும் விருத்தி செய்வான்.

13. தந்தைநாள் பூமியல்பம் தனமது கடனுண்டாகும்
விந்தையா யிந்தபாலன் விலக்குவான் பொறுமையுள்ளான்
தந்திர வாதியாகும் தரளம்போல் தந்தமுள்ளான்
நிந்தையு மில்லானுகும் நேமியோர் வசியங்கொள்வன்.

13. பிதாவின் வாழ்நாளில் சொல்ப பூமி உண்டு. பண சிரமம் ஏற்பட்டுக் கடனுண்டாகும். யோகவானுன இந்தப் புத்திரன் அம்மாதிரியுள்ள

---

1. அன்னமும்+அன்பாலீவன். மன்னனும்+அன்பால்+ஈவான்
2. பன்னி=விரும்ப

கஷ்டங்களை விலக்கி விடுவான். பொறுமை யுள்ளவன். தந்திரமாகக் கட்சி பேச வல்லவன். முத்துப்போன்ற பற்களை யுடையவன். பிறர் இவனை யாதொரு காரணத்தை முன்னிட்டும் நிந்திக்கமாட்டார்கள். உலகினரை வசப்படுத்திக் கொள்ளுவான்.

14. கடன்கொளான் யிடுக்க[1]மில்லான் காரிழை பிரியனாகும்
உடன்படான் பிழைகளுக்கு உத்தமர் நேசமாவன்
விடவுரை பகரான்உள்ளம் வெகுளிபோல் எவர்க்கும் [தோற்றும்
திடமான குடும்பியாவன் தாய்தந்தை பிரியனாவன்.

14. கடன் வாங்க மாட்டான். சிரம மில்லாதவன். மனைவியிடம் பிரியமாயிருப்பான். தப்புத் தண்டாவிற்குப் போகமாட்டான். பெரியாரைத் துணைக் கொள்ளுவான். துன்பம் செய்யும் வார்த்தைகளைச் சொல்லான். யாவரும் இவன் மனதில் கல்மஷம் இல்லை என்று கருதுவார்கள். வலுத்த குடும்பியாவன். பெற்றோர்களுக்குப் பிரியமாய் நடப்பான்.

15. இவனுட துணைவர்தன்னை இயம்புவோம் மூவராகும்
அவனியில் ஆண்பால்மூன்று அரைகிறோம் தீர்க்கமாக
நவனியில் மற்றதெல்லாம் நசித்திடு மிவனுக்கேதான்
கவனமாய் முன்பின்சேதம் காதலி கேட்டிடாயே.

15. இவனுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுவோம். அவர்கள் மூன்று பேர்கள். உலகில் மூன்று சகோதரர்கள் திடமாக வாழ்வர். மற்றதெல்லாம் பிறந்து இறக்கும். ஒன்றன் பின் ஒன்றாய் சாகும். பிரியே! கேட்பாயாக.

16. இன்னவன் மணத்தின்காலம் இயம்புவோ மிருபானாலுள்
கன்னிகை மிதுனதிக்கில் கலந்திடு மென்றுசொன்னோம்
அன்னவள் குணத்தைக்கேளாய் அழகுளாள் இருநிறத்தாள்
தன்னிலே யோகசாலி தன்மனம் வெகுளியாவள்.

16. இந்த ஜாதகனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய இருபத்துநான்காம் பிராயத்தில் ஆனி மாசத்தில் ஒரு கன்னிகையை மணப்பான். அவளுடைய குணத்தைக் கேட்பாயாக. நல்ல அழகி. இருவிதமான நிறங்கள் கொண்ட மேனி. தானே மகத்தான யோகங்கள் கொண்டவள். அவளுடைய மனமோ களங்கமற்றது.

---

1. இடுக்கண்

17. சீலமும் பொறுமையுண்டு தீங்குக ளெண்ணுளாகும்
ஞாலமேல் கோபம்கொஞ்சம் நாயகன் மனம்போல்
[வாழ்வள்
ஆலம்போல் வார்த்தைகூருள் அறைந்தனம் வயதுதீர்க்கம்
வேலனைப் பயந்தமாதே வித்தகி கேட்டிடாயே.

17. குணசீல முடையவள். பொறுமையையே பூஷணமாகக் கொண்டவள். தீங்கென்பது அவள் மனதில் தீர்ப்பாய் இல்லை. உலகில் சிறிது கோபத்திற்கு இடம் கொடுப்பாள். புருஷன் மனம்போல் வாழ்வாள். மனதில் அம்பு பாய்ந்தால்போல் பேசமாட்டாள். தீர்காயுசு உடையவள் என்று சொன்னோம். முருகப் பெருமானைப் பெற்றெடுத்த பார்வதி! விசேடமான புத்தி யுடையவளே! கேட்பாயாக.

18. செயமுனி இதனைக்கேட்டு செப்புவார் முனிவனுக்கு
நயமுடன் மனைவிதீர்க்கம் நாட்டினீர் காரணம்சொல்
தயவுள்ளி ரண்டுஏழோன் சல்லிய ளுகிமூன்றில்
பயமிலா திருப்பதாகில் பகர்ந்தனம் தாரம்ஒன்றே.

18. இதைக் கேட்டு ஜயமுனி இந்தப் பிராமணனுக்குப் பிரியமுள்ள பார்யை தீர்க்காயுசுடன் இருப்பாள் என்று நிச்சயப்படுத்தினீரே! காரணம் சொல்லும். இந்த ஜாதகனுக்கு ஏழாமிடத்திற்கு உடைய சுக்கிரன் மூன்றுமிடத்தில் யாதொரு விக்கினமுமில்லாமல் ஜயஸ்தானத்திலிருப்பதனுல் தான் இவனுக்கு மனைவி ஒன்றே என்று சொன்னோம்.

19. மறித்தவர் சொல்லுகின்ருர் மங்கலன் ஏட்டோனுகி
உரமுடன் ஏழோனேடே உரைத்ததால் தாரம்ரெண்டு
நிரந்தரம் என்றுசொன்னேம் நிமலியும் கேட்கலுற்ருள்
சிறந்தவன் ஏழோனேடே சேயவன் கூடினுலும்.

19. இவ்வார்த்தையை மறுத்தவர் சொல்லுவதாவது. இலக்கினத்துக்கு எட்டாமிடத்திற்கு உடைய செவ்வாய் பலமாக ஏழாமிடத்ததிபதியான சுக்கிரனுடன் சேர்ந்திருப்பதனுலே இரண்டுதாரம் நிச்சயம் என்று சொன்னேம். பார்வதியும் கேட்கலுற்ருள். சுகஸ்தானுதிபதியாகிய ஏழாமிடத்திற்கு உரிய சுக்கிரன் செவ்வாயுடன் கூடினுலும்,

20. சுகம்துதி யத்தைபொன்னேன் துலங்கியே பார்த்தாலும்
புகர்புதன் வீட்டில்சேர பொருந்தாது மனைவிரெண்டு
கவுசிகர் சொல்லுகின்ருர் கதிர்புத னிரண்டில் நிற்க
வகையான மனைவிஒன்று மங்கிலியம் இரண்டுஎன்ருேம்.

20. இலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டைச்சுகாதிபதியாகிய வியாழ பகவான் அஷ்டமத்திலிருந்து பார்த்தாலும், சுக்கிரன் புதன் வீட்டில் சேர்ந்தாலும் மனைவி இரண்டு என்று சொல்லுவது பொருந்தாது என்று கௌசிகர் சொல்லுகின்றார். சூரியனும் புதனும் இரண்டாம் வீட்டில் இருப்பதனால் சரியாகச் சொல்லுமிடத்து வகையான பெண்டாட்டி ஒருத்தி தான். மாங்கலியம் இரண்டு என்றோம். (ருதுவாவதற்கு முன்னமே கலியாணம் செய்து ஒரு மனைவி இறந்திருக்கக்கூடும். மாங்கலியம் அதனால் இரண்டாகும்.)

21. மாதுவும் ஒன்றுஎன்றீர் மங்கிலியம் இரண்டுஎன்றீர்
ஓதுவீ ரந்தசங்கை உரைக்கிறோம் கேளுமம்மா
தீதாகு முதல்மாங்கல்யம் சோரர்கை புக்கபின்பு
மேதினில் வேறுமுத்திரை வித்தக னணிவானுமே.

21. பெண்டாட்டியும் ஒன்று என்று சொன்னீர். மாங்கலிய தாரணம் இரண்டு என்றும் சொன்னீர். இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யுங்கள். அதைச் சொல்லுகிறேன் கேளம்மா! முதல் மாங்கலியம் கெடுதலையடையும். ஏனெனில் அவள் சோர புருடர்கள்பின் செல்லுவாள். பிறகு கௌரவமுள்ள புருடன் வேறு கலியாணம் செய்துகொண்டு வாழ்வான்.

22. எந்தக் காலத்திலேதான் இக்குற்றம் நேரும்சொல்வாய்
சந்தத முப்பானிலில் சாமன்தன் திசையிலேதான்
முந்திய சிகிபொசிப்பில் மெய்திடு மந்தச்சங்கை
கந்தனைப் பெற்றமாதே கழறி(னே)னம் மொழி
குன்றாது(தே).

22. சாதகனுக்கு எந்தக்காலத்தில் இத்தகைய கெடுதல் ஏற்படும்? சொல்லுங்கள். இவனுக்கு முப்பதாவது வயது நேரிடும்போது புததசையிலேதான். இந்த தசையின் ஆரம்பத்தில் ஏற்படும் கேது புக்தியில் இவனுக்கு மனைவியிடம் அந்தச் சமுசயம் ஏற்படும். கந்தனைப் பெற்றருளிய பார்வதியே! சொன்னது தப்பாது.

23. மதலைகள் விருத்திதன்னை மொழிகுறோம் ஆண்பால்
[ரெண்டு
சதமுடன் பெண்பாலவ்வா(ர்)று சாற்றினோம் தீர்க்கமாக
விதியினு லிரண்டுசேதம் விளம்பினோ மிவனுக்கேதான்
நதிசடை யணிந்தோன்தேவி நாயகி புகன்றிட்டோமே.

23. இவனுடைய புத்திர சம்பத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். ஆண் குழந்தைகள் இரண்டு அம்மாதிரியே ஒழுங்காக இரண்டு பெண்

குழந்தைகள் உண்டு. தீர்க்கமாகச் சொன்னோம். விதிவசத்தால் இரண்டு குழந்தைகள் இறந்துபோவர். எல்லாம் இந்த ஜாதகனுக்கேதான். கங்கை வார்சடையான் தேவி! நாயகியே! சொன்னோ மல்லவா!

24. மாதுரு குணத்தையாங்கள் வறைகுரோம் மிகுசிகப்பள்
வேதனை யொருவர்க்கெண்ணாள் மெல்லிநன் னடக்கை [யுள்ளாள்
தீதிலா குணத்தாளாகும் சஞ்சல மனத்தளென்றோம்
கோதிலா பித்ததேகி கோதையே மேலுங்கேளே.

24. பெண்டாட்டியின் குண விசேஷங்களை இனிக் கூறுவோம். நல்ல சிகப்பு நிறமுள்ளவள். பிறருக்கு யாதொரு விதத்திலும் கெடுதல் நினைக்க மாட்டாள். மிருதுவான நல்ல மாதிரி. தீங்கென்பது அவளிடம் தீர்ப்பா யில்லை. மனதில் சஞ்சல முடையவள். குற்றமற்ற பித்த சரீரத்தைக் கொண்டவள். தேவி! மேலுங் கேட்பாயாக.

25. இவளிட துணைவர்தன்னை இயம்பவே ஆண்பால்காணோம்
அவனியில் பெண்பால்அவ்வா(ர்)று அறைந்தனம் தீதுமாக
நவனியில் தாய்குடும்பம் நசித்திடு மென்றுசொன்னோம்
தவமுடை யோரைக்காக்கும் தயாபரி மேலுங்கேளே.

25. இவளுடன் பிறந்தவர்களைச் சொல்லுவோ மென்றால், சகோதரர் களில்லை. பெண்பாலரும் அப்படியேதான் என்று சொன்னோம். அவ்வாறே தான் பூமியில் இவளுடைய தாய் வமிசம் நசித்துப்போகும் என்று சொன்னோம். தவசிரேஷ்டர்களைக் காக்கும் தயையுடையவளே! மேலும் கேட்பாயாக.

26. மாதுரு முன்சென்மத்தில் வரைகிறோம் தபசி[1]மேல்பால்
மேதினில் பேரூர்தன்னில் வித்தகி கோகுலத்தில்
தீதிலா உதித்தாளென்றோம் செல்வர்க ளுள்ளாளாகி
சூதுக ளில்லாவாழ்ந்து சுவாமிகள் பக்திகொண்டு.

26. இம்மாதுவின் போன ஜன்மத்தைக் கூறுகிறோம். மேற்கு சமுத்திரத்தின் பக்கலிலுள்ள பெரிய பட்டணத்தில் இந்த சாமர்த்தியசாலி இடைச்சியர் குலத்தில் குற்றமில்லாமல் உதித்தாள். பணக்காரர்களிடையில் பிறந்தாள். சூதுவாதில்லாமல் வாழ்ந்து வந்தாள். கடவுள் மேல் பக்தி பூண்டு,

---

1. பயசு = நீர், (தபசி)

27. ஏழைமேல் பக்திகொண்டு இன்பமாய் வருவோருக்கு
தாழ்விலா தாக,மனனம்[1] தந்துமே வாழுநாளில்
ஆழியில் வந்தழை[2]யே! அறைகிறோம் விசேஷநாளில்
சூழ்ந்தனர் பந்துயாவும் தோல்வியும் ஏதும்செய்யாள்.

27. ஏழைகள்மேல் பிரியங்கொண்டு அன்பாய் வருபவர்களுக்கு மேலான ஆகாரமளித்துவரும் நாளில் உண்டான பேர்கள் வந்து இவளைக் கொண்டாடிக் கூடினர். சமுத்திரத்தில் பிறந்த இலக்குமியே! சொல்லுகிறோம். இந்த விசேஷ காலத்தில் யாதொரு அபஜயமும் அவள் அடையவில்லையே.

28. இவளுட இனத்தாருக்கு இன்பமாய்ப் பொசிப்பளித்து
நவனியில் வேறுளோர்க்கு நாயகிவஞ் சனையும்செய்தாள்
கவனமாய்ச் சுற்றத்தார்கள் கழறுவார் மனவெறுப்பால்
பவமுள மறுசென்மத்தில் பாவையா யுதித்துமேலும்.

28. இவளுடைய சொந்தக்காரர்களுக்கெல்லாம் இன்பமாய் வேண்டுவனவற்றைக் கொடுப்பாள். உலகில் மற்றவர்களுக்கெல்லாம் நாயகி வஞ்சனை செய்துவந்தாள். இவ்விஷயத்தைக் கவனித்து வந்த இவளுடைய சுற்றத்தார்கள் இவ்வாறு இதை மனவெறுப்புக்கொண்டு எடுத்துரைப்பார்கள். பிராரப்த வசத்தினுல் இவள் மறுஜன்மத்திலும் பெண்ஜன்மமெடுத்தாள். பின்பு,

29. துணைவர்கள் தோஷமுண்டாய் செனித்தஇல் விருத்தியின்றி
கனமிலா குடும்பியாகி காதலி வாழ்வாயென்று
அணையவே பந்துசொல்ல அணுகிற்று அந்ததோஷம்
பிணையான ரோகத்தாலே பேதையும் மரணமாகி.

29. இவளுடன் பிறந்த சகோதரர்களுடைய துர் அதிஷ்டத்தால் பிறந்த வீடு விருத்திக்கு வராமல் கௌரவமில்லாத குடும்பியாகி வாழ்வாயென்று பந்துக்கள் சபிக்க அவளுக்கும் அந்த தோஷம் ஏற்பட்டுத் தீராத வியாதி வந்து பேதையும் ரோகத்தினுல் உயிர் துறந்தாள்.

30. வேதனுல் வரிப்பட்டு வித்தகி யுதித்தாளென்றேம்
ஓதுவோ முன்னூழ்சாபம் உரைந்தது மிச்சென்மத்தில்
மேதினி லிவள்பின்சென்மம் விளம்புவோம் அவளூர்தன்னில்
சூதிலா கங்கைவம்சம் தேவியு முதிப்பாளென்றேம்.

1. மனனம்=சிந்தித்தல். தாழ்விலாத அன்னம் தந்து என்று பாடமிருக்கும்.

2. வந்தனளே!

30. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவ்வித்தகி உதித்தாள் என்ருேம். முற்பிறப்பில் செய்த தீவினை இவளைப்பீடித்து இச்சன்மமும் இவளுக்கு முடிந்தது. பூமியில் இவளுடைய மறு பிறப்பைக் கூறுவோம். அதே ஊரில் குற்றமற்ற வேளாளர் குலத்தில் (கங்கை வம்சத்தில்) தேவி பிறந்தாள் என்ருேம்.

31. தந்தையின் முன்சென்மத்தை சாற்றுவோம் காஞ்சி
[மேல்பால்
முந்திய தீயின்வம்சம் உதித்துமே பெருமைபூண்டு
சந்தத மார்க்கந்தன்னில் தாகப்பந் தலுமமைத்து
வந்தவர் களைகள்தீர்த்து அறுமுகர்க் கடிமையாகி.

31. இவனுடைய தகப்பனுரின் பூர்வ ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் மேற்குப் பக்கத்தில் உயர்வான வன்னியர் குலத்தில் உதித்துப் பெருமை பெற்று சதா தர்மவழியில் நடந்து தண்ணீர்ப் பந்தல் அமைத்து வந்தவர்கள் தாக சாந்தி பெறும்படி செய்து முருகக் கடவுளின் பக்தனுகி,

32. பலவித செட்டுசெய்து பாலகன் வாழுநாளில்
குலவியே வந்தஊழைக் கூறுவோம் கேளுமம்மா
நலமுடன் ஏழையோர்க்கு நற்பொரு ளளித்துப்பின்று
பிலமான பூமியெல்லாம் [1]பரித்தனிவனே யென்ருேம்.

32. பலவிதமாகச் செட்டுங் கட்டுமாக இவன் வாழ்ந்து வருங்காலத்தில் இவனைத் தேடி வந்த ஊழ்வினையைக் கூறுவோம். கேளும் அம்மா! நன்மையாக ஏழைகட்கு நல்ல திரவியத்தைத் தருமம் செய்து கடல் சூழ்ந்த பூமி முழுவதும் காப்பாற்றி வந்தான் என்ருேம்.

33. ஏழைகள் மனவெறுப்பால் இயம்புவார் சாபத்தாலும்
தாழ்விலா மறுசென்மத்தில் தனியனு யுதித்துமேலும்
வாழ்கிற காலந்தன்னில் மத்திம வறுமைபூண்டு
ஆழியி ல[2]கத்தியோகம் அணுகிடு மென்றுசொல்லி.

33. இவனை மனவெறுப்புக் கொண்ட ஏழைகள் சாபமிடுவார்கள். அதனுல் குறைவில்லாத அடுத்த ஜன்மத்தில் பணக்காரனுயிருந்து மேன் மேலும் வாழ்கின்ற காலத்தில் கொஞ்சம் தரித்திரத்தை யடைந்து கடலில் (பூமியில்) அவசியம் யோகம் கிட்டிடு மென்று சொல்லி,

---

1. பாரித்தான். = அனுபவித்தான்
2. அகத்தியம் = அவசியம்

34. தன்னுட குலதெய்வத்தைச் சதாவுமே நினைத்துக்கொண்டு
இன்னவன் வாதரோக மெய்தியே மரணமாகி
உன்னித [1]கர்னவம் மெய்தன னிவனே[2]யம்மா!
சிந்தையாய் ஏழைசாபம் சேர்ந்திடும் இச்சென்மத்தில்.

34. தன்னுடைய குல தெய்வத்தை எப்பொழுதும் வழி பட்டு வந்தான். அப்போது இவன் வாதரோக மேற்பட்டு மரண மடைந்தான். மேலான தலைமை வாய்ந்தவன் இவனே யாவன். அம்மா! ஞாபகமாக ஏழைகள் இவனைப் பார்த்து இட்ட சாபம் இந்த ஜன்மத்தில் இவனைச் சேர்ந்திட்டது.

35. பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பானே கங்கைவம்சம்
மன்னரால் செட்டுசெய்து மாநிலம் அதிகமுண்டாய்
தன்னிலே வாழ்வானுகும் சங்கரி கேட்கலுற்ருள்
உன்னித சாதகர்க்கு உரைப்பர்கள் பூர்வந்தன்னை.

35. அடுத்த ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பிறந்தான் இவனே வேளாளர் குலத்தில். அரசனுல் சிறிது ஒத்தாசை செய்யப்பட்டு பூஸ்திதி அதிகம் ஏற்பட்டுச் சுகமே வாழ்ந்து வந்தான். சங்கரி தேவி இதைக் கேட்டாள். உயர்வான ஜாதகனுக்கு இவ்விதம் பூர்வ ஜன்ம விவரங்களை உரைப்பார்கள்.

36. சாதகன் பூர்வசென்மம் சாற்றுவோம் காஞ்சிகீழ்பால்
சூதிலா வேளாண்வம்சம் தோன்றின னிவனேயென்ருேம்
போதவே பூமியுண்டாய் புகழ்ச்சியாய்க் குடும்பியாகி
மேதினில் காலாளுள்ளாய்[3] வித்தகன் வாழ்ந்தானென்ருேம்.

36. ஜாதகனுடைய பூர்வஜன்மத்தைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்தின் கிழக்கே குற்றமற்ற வேளாளர் குலத்தில் இவன் தோன்றினுன். வேண்டியபூமி உண்டாகி புகழ்பெற்ற குடும்பியாகி பரிவாரங்களையுடையவனுகி இம் மேலோன் வாழ்ந்தானென்ருேம்.

37. அங்கர் ஆலயத்தில் அரசென விருட்சம்ஒன்று
தன்னிலே யிருக்குங்காலை தானவன் வேலைக்காக
இன்னவன் வெட்டிவிட்டான் இசைக்கிருேம் அதிலோர்
[சங்கை
உன்னத பிசாசுதானும் உறைந்தது மரத்திலேதான்.

---

1. கார்னவம் = தலைமை. (மலையாளத்தில் கார்னவன் என்பது வழக்கம்)
2. எய்தினன் + இவனே = எய்தினனிவனே
3. காலாள் + உள்ளாகி = பதாதிகளையுடைய

37. அந்தவூரின் கோவிலில் அரசமரம் ஒன்று இருந்தது. அதை இவன் தன்னுடைய காரியத்திற்காக வெட்டிவிட்டான். அதில் ஒரு பெரிய பிசாசு வசித்து வந்தது. அந்தப் பைசாசம்,

38. மரமது போனபின்பு மாமுனிக் கருப்பு[1]தானும்
உறையவே இடங்களின்றி உரைத்தது சாபந்தானும்
திறமையாய் மறுசென்மத்தில் செனித்தஇல் சேராமல்
[தான்
விரவியே வேறூர்தேசம் மேவியே வாழ்வாயென்று.

38. மரத்தை வெட்டினபின்பு அதிலிருந்த பிரம்மராக்ஷதன் தனக்கு வசிக்க இடமில்லாமல் இவனுக்குப் பலமான சாபத்தை அளித்தது. அடுத்த ஜன்மத்தில் நீயும் வசிக்க வீடில்லாமல் அலைந்து திரிந்து வேறுதேசம் போய் வாழக்கடவாய் என்றது.

39. வாழ்குவா யென்றுசொல்லி மறுவிடம் கருப்புசெல்ல
ஆழியில் அம்மரத்தை ஆலயங்க ளுக்குவாசல்
தாழ்விலாக் கதவுசெய்தான் சத்தானவ [2]ரலதுபேரில்
சூழ்மன முள்ளானாகி சுந்திரன் வாழ்ந்தானென்றோம்.

39. இப்படிச் சாபத்தைக்கொடுத்த பிசாசு வேறு ஓர் இடத்தை அடைந்தது. உலகில் ஜாதகன் அவ்வரசமரத்தைக் கோவில்களுக்கு வாயில் கதவுகள் பலமாக ஏற்படுத்த உபயோகித்தான். இதுவும் ஒரு தருமகாரியம் தான். பிறகு மனக்குழப்பத்துடன் இவ்வழகன் வாழ்ந்து வந்தானென்றோம்.

40. இதுவலால் இன்னமொன்று இயம்புவோம் பட்சிதன்னில்
நதியினில் மாதொருத்தி நழுவினு ளந்தக்காலம்
அதிபனும் அங்குசெல்ல மங்கையைக் கரையில்சேர்த்தான்
விதியினால் சீவித்தாளாம் விளம்புவா ளவள்தன்தாயார்.

40. அதனுடன் இன்னும் ஒரு சமாசாரம் கூறுவோம். திருக்கழுக் குன்றத்தில் ஒரு நதியினில் ஒரு ஸ்திரீ அந்தக்காலத்தில் வீழுந்துவிட்டாள். ஜாதகனும் அங்குச் செல்ல அம்மாதைக் கரையினில் கொண்டுசேர்த்தான். விதி வலிதாயிருந்தது. அம்மாதும் ஜீவித்தாள். இப்படிப்பட்ட விவரத்தை அவருடைய தாயார் கூறுவாள்.

---

1. பிரம்மராக்ஷதன்

2. வரல்+அது

41. என்மகள் தன்னைநீயும் இடறிலா காத்ததாலே
பின்வரும் சென்மந்தன்னில் பிரியமாய் மணமும்செய்து
அன்னவ ளுடனேவாழ்வாய் அறைந்தன ளவள்தன்தாயார்
இன்னவாறு முனிவர்சொல்ல ஈச்வரி கேட்கலுற்றாள்.

41. என் மகளை நீ துன்பத்திலிருந்து காப்பாற்றியதனால் அடுத்த ஜன்மத்தில் பிரியமாக அவளையே கல்யாணம்செய்து அவளுடன் சுகமாக வாழ்வாயாக என்று அவளுடைய தாயார் ஆசீர்வதித்துக் கூறினாள். இந்தப் பிரகாரம் சப்தமுனிவர்கள் எடுத்துக் சொல்ல ஈச்வரி பின்வருமாறு கேட்க லுற்றாள்.

42. மாதுரு மெந்தசாதி வரைகுவார்[1] முனியென்றாள்
தீதிலா கங்கைவம்சம் சேயள் அந்தமாது
ஓதுவே ணந்தமாதை உத்தமன் இச்சென்மத்தில்
கோதிலா மணமேகொள்வள் கோமகள் கேட்டிடாயே.

42. ஏ! முனியே! அம்மாது எந்த ஜாதி என்று பார்வதி கேட்க, அம்மாது குற்றமற்ற வேளாளர் குலத்தில் குழந்தையாய்ப் பிறந்தாள். நம் ஜாதகன் அவ்வுத்தமியை இந்த ஜன்மத்தில் குறைவில்லாத மணம் செய்து கொண்டான். இதைக் கேட்பாயாக.

43. அச்சென்மம் தன்னிலேதான் அவன்செய்த புண்ணியத்தால்
மிச்சமாய் நோய்களின்றி வித்தகன் மரணமாகி
இச்சையாய் மறையோனாலே இவனுமே வரியப்பட்டு
லச்சை யில்லாமலேதா னுயக னிக்குலத்தில்.

43. போன ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின்காரணமாக அதிக ரோகங்களில்லாமல் வாழ்ந்து மரணமடைந்தான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு நம் ஜாதகனாக அவதரித்தான். அவன் இவ்வன்னியர் குலத்திலுத்தான். இதுதான் அவனுடைய பூர்வஜன்மம் விவரம்.

44. உதித்தவ னிவனேயென்றோம் உரைக்கிறோ மிச்சென்மத்தில்
சதிசெயும் பிசாசுசாபம் தங்கிற்று செனித்தயில்லம்
பதியினில் வாழானாகும் பரதேசம் வாசமாகும்
நிதியது மிகவேசேர்ப்பன் நிமலியே கேட்டிடாயே.

44. அப்படிப்பிறந்தவன் இவன்தான் என்றோமல்லவா. இந்த ஜன்மத்தில் இடைஞ்சல் செய்யும் பிரம்ம ராக்ஷதனுடைய சாபம் ஏற்பட்டது. பிறந்த தன் வீட்டில் இவனுக்குப் பூமியில் வாழ்வில்லாமல் வேறு தேசத்தில் வசிக்கலானான். பணத்தை அதிகமாகச் சேகரிப்பான். தேவியே! கேட் பாயாக.

1. வரைகுவீர்

45. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பானுறில்
சந்ததம் மேடமாதம் சாற்றுவோம் கெண்டந்தானே
பிந்திய அன்னைக்கேதான் பேசுவோம் அதின்மேல்மூன்றும்
பந்தமா யானிமாதம் பகருவோம் கருமந்தானே.

45. இவனுடைய தந்தையின் மரணகாலம் இனிச் சொல்லுவோம். இவனுடைய முப்பத்தாறும் வயதில் மேஷமாசத்தில் கண்டம் ஏற்பட்டது. இதற்குப்பின் இவன் தாய்க்கு மூன்று வருடங்களுக்குப்பிறகு ஆனிமாசத்தில் இவன் தாயார் இறந்ததனால் இவனுக்குக் கருமத்திற்கு அதிகாரம் ஏற்பட்டது.

46. இன்னவன் மரணகாலம் இயம்புவோம் ஐம்பான்மூன்றில்
தன்னிலே கண்டமுண்டு சண்முகர் தன்னால்நீங்கி
பின்னையும் ஐம்பானுறில் பேசினேம் கன்னிமாதம்
உன்னத பருவந்தன்னில் உரைத்திட்டோம் உடலம்
[நீங்கும்.

46. இந்த ஜாதகனுடைய மரணகாலத்தைக் கூறுவோம். இவனது ஐம்பத்து மூன்றும் வருடத்தில் இவனுக்கு ஒரு கண்டம் ஏற்பட்டுச் சண்முகக் கடவுளின் அருளால் நீங்கும். இதற்குப் பிறகு இவனது ஐம்பத்தாறும் ஆண்டில் இவனுடைய உன்னத காலத்தில் கன்னி மாசத்தில் (புரட்டாசியில்) மாரகம் ஏற்படும்; சொன்னேம்.

47. மறுசென்மம் ஒத்தியூரில் மறைகுல முதிப்பானுகும்
திருமகள் வாசமுள்ளாய் செகமன்னர் பக்கல்தன்னில்
பெருமையா யரசுசெய்து பூமியில் வாழ்வானுகும்
அறுமுகன் தன்னைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

47. மறு ஜன்மத்தில் திருவொற்றியூரில் பிராமண குலத்திலுதிப்பானுகும். லட்சுமிகடாக்ஷம் ஏற்பட்டுப் பூலோக அரசர்கள் பக்கத்தில் பெருமையாக ராஜயோகத்துடன் பூமியில் வாழ்ந்து வருவான். ஆறுமுகக் கடவுளைப் பெற்று எடுத்த அம்பிகையே! கேட்பாயாக.

48. இன்னவன் பொதுயோகத்தை இயம்புவோம் சுகமு
[முள்ளான்
தன்னிலே பொருளுமுள்ளான் சல்லிய மில்லானுகும்
சொன்னசொல் தவருனுகும் சொந்தமா மாடிசெய்வன்
பன்னிரண் டாண்டின்மேலே பாலகன் தனக்குயோகம்.

48. இவனுடைய யோகபாவத்தைப் பொதுவாகச் சொல்லுவோம். சுகவாசி, பணக்காரன், கடன் ஒன்றும் இல்லாதவன். சொல்லிய சொல்

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY 68972

தவறமாட்டான். சொந்தமான மாடி யுள்ள வீட்டைக் கட்டிக் கொள்ளுவான். பன்னிரண்டு பிராயத்திற்குமேலேதான் இவனுக்கு யோகம் ஏற்படும்.

49. முப்பது ஆண்டின்மேலே மொழிகிறோம் செட்டுசெய்வன்
செப்புவோம் மரணமட்டும் பிறைபோலே யோகம்
[வாய்க்கும்
எப்போதும் கடவுள்பக்தி எய்திடும் வசியமுள்ளான்
கப்பிய பெரியோரிஷ்டம் கனத்திடு மேன்மேலோங்கும்.

49. முப்பது வயதிற்குமேல் செட்டுங்கட்டுமாயிருந்து திரவியம் சேர்ப்பான். சாகின்றவரையில் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். எப்பொழுதும் கடவுளிடத்தில் பக்தி பூண்டவனுகவே யிருப்பன். யாரையும் வசியப்படுத்தக் கூடியவன். பெரியாரைத் துணைக்கொள்வான். அவர்களிஷ்டப்படி நடப்பான். மேலும் மேலும் பலத்த யோகவானுவன்.

50. சொந்தவியா பாரம்செய்வான் தொல்புவி யதிகம்சேர்ப்பன்
பிந்திய யோகமுள்ளான் பூஷண மதிகம்கொள்வன்
சந்ததம் கிருஷிஓங்கும் சகலர்க்கு நல்லோனுவன்
கந்தனைப் பெற்றமாதே கழறினம் மொழிகுன்றுது.

50. சொந்தமாக வியாபாரம் செய்வான். பூர்விக சொத்துக்களை அதிகப்படுத்துவான். பிற்காலத்திலும் யோகமுள்ளவன். பூஷணுதிகளைப் பெறுவான். சதா காலமும் நில சாகுபடி அதிகரிக்கும் எல்லாருக்கும் நல்லவனுக இருப்பான். கந்தசாமியைப் பெற்ற லட்சுமி தேவியே! சொன்னது தப்பாது.

51. முனிவரிவ் விதமாய்க்கூற மொழிகுவா ரம்மன்தானும்
இனியிவர்[1] துணைவர்சேதி இயம்புவீர் முனியேயென்றுள்
தனயர்கள் சேதியெல்லாம் சாற்றுவோம் இரண்டிலேதான்
கனமுண்டு குடும்பசேதி கழறுவோம் கேளும்தாயே.

51. சப்தரிஷி இவ்வாறு சொல்ல, அம்பாள் பின்னும் கேட்பாள். இனி இவர் சகோதரர்களின் செய்தியைச் சொல்லுங்கள் என்றுள். தம்பிமார் செய்திகளைக் கூறுவோம் இரண்டாம் பாகத்தில். கௌரவமுள்ள குடும்ப க்ஷேம லாபத்தைக் கூறுகிறோம். கேளும், தாயே!

52. குடும்பமும் பிரிதலில்லை குலவிநாற் பாண்டின்மேல்
அடவுடன் கிரகம்வேறு உறைந்தனம் இதுவல்லாமல்
சடலங்க ளுதிக்குங்காலை இரணியன் திசையிலேதான்
திடமதா யீராறுண்டும் திங்களு மொன்றேயாகும்.

1. இனையவர் = இத்தன்மையுடையவரின்

52. குடும்பம் ஐக்கியகுடும்பம்தான். பிரகாசிக்கும் நாற்பதாவது பிராயத்திற்குப் பிறகு சோலை, நந்தவனம் இவைகள் கொண்ட வேறு பங்களாவில் வசித்தான். இதுவுமல்லாமல் ஜடவஸ்துக்கள் ஏற்படும் காலத்தில் மேற்குத் திசையில் பன்னிரண்டு வருஷமும் ஒரு மாசமுமாகும்.

53. பலனது அல்பமாகும் பகருவோம் துணைவர்விருத்தி
நலமில்லை துணைவர்சேதம் நாற்காலி[1] நஷ்டமாகும்
உலகுளோர் வசியமாகும் உற்றபந் துக்கள்நாசம்
பலபல பிணியும்காணும் பாக்கியம் சொற்பமென்றோம்.

53. அல்ப பலனைப் பெறுவான். சொல்லுவோம். சகோதர விருத்தியினால் நன்மை யில்லை. சகோதரர்கள் இறப்பர். நாற்கால் பிராணிகள் நஷ்டமாகும். உலகினர் வசியப்படுவார். சுற்றத்தார் மறிப்பார். பலபல ரோகங்கள் ஏற்படும். சொற்ப பாக்கியம் என்று சொன்னோம்.

54. தொழிலது விருத்தியென்றோம் சுகதுக்கம் கலந்துவாழும்
பழிவரு மந்தியத்தில் பகையுண்டு செலவனேகம்
வழிவிலா சஞ்சலங்கள் வந்திடும் [2]சிலதுசேதி
தயவுட னிரண்டிலேதான் சாற்றுவோம் கேளும்தாயே.

54. தொழில் விருத்தியாகும். சுகமும் துக்கமும் கலந்து ஏற்படும். மத்தியகாலத்தில் பழிபாவம் ஏற்படும். பகை ஏற்படும். செலவு அதிகமாகும். அழியாத கவலைகள் வந்து சேரும். சில செய்திகள் பின் வாழ்விலேதான் சொல்லுவோம்; தாயே! (இரண்டிலே தான்=இரண்டுங் கெட்டானகை; இரண்டாம் பாகத்தில் என்றும் சொல்லலாம்.)

55. இருபது நாலாண்டின்மேல் இசைக்கிறோம் யோகத்தானும்
பெருகிடும் தனதானியங்கள் பிரபல குடும்பமாகும்
திருமகள் வாசமுண்டு சென்றிடம் பெருமைகாணும்
வரைகிறோம் சல்லியம்நீங்கும் மங்கையே கேட்டிடாயே.

55. இவனுக்கு இருபத்துநான்காம் வயதிற்குமேல் ஏற்படும் யோகத்தைச் சொல்லுகிறோம். தன தானியங்கள் விருத்தியாகும். குடும்பம் பிரபலமாக விருத்தியாகும். லட்சுமியின் கடாக்ஷமுண்டு. சென்ற விடமெல்லாம் சிறப்பு ஏற்படும். கடன் நீங்கும் என்று எழுதுகிறோம். தாயே! கேட்பாயாக.

---

1. நாற்காலி = நாற்கான்மிருகம்
2. சில = செய்தி

ஜாதகம் 4

1. பொன்சனி புகர்மேரு புதன்பணி யரிதிலகாவாம்[1]
பின்சிகி மேடமாக பிறை(ய)தனில் கொச்சைசென்மம்
இன்னவாறு கிரகம்நின்றால் இப்பலன் புகல்வீரய்யா
முன்னமே பராசரர் சொல்வார் உதித்திடுபால்சென்மம்.

1. இந்த மேஷலக்கினத்திற்குப் பாக்கியஸ்தானத்தில் குரு, சனி, சுக்கிரன், செவ்வாய் இவை வீற்றிருக்க, புதன், இராகு, சூரியன் முதலியோர் சப்தமஸ்தானமாகிய துலாத்தில் சேர்ந்திருக்க, சந்திரன், கேது இவை இலக்கினத்திலிருக்க, இத்தகைய ஜாதகனுக்கு உள்ள பலன்களைச் சொல்லுவீராக. முதன் முதலில் பராசரர் சொல்லலுற்றார். இந்த ஜாதகன் புருஷனாக அவதரிப்பான் (*cf.* Stanza 13 & 22) (மேரு = Mount.)

	லக்கினம் சந்திரன் கேது		
	இராசி சக்கரம்		
செவ்வாய் சுக்கிரன் சனி குரு		புதன் ராகு சூரியன்	

2. வந்தவன ப?ப தென[2]வீதி வாசலு மேற்குபார்வை
முந்தின பெருகுண முயர்வான் அவனியுமோங்கும்
மன்னர்கள் வாசமாகும் மடிந்ததோர் வெடியுமுண்டு
இந்நல லடையாளத்தவன் இரங்குவோ னிந்தபாலன்.

2. இவன் இருக்குமிடம் கிழக்குவீதி, மேற்குப்பார்த்த வீடு. முன்னமேயே (ஆதியில்) பெருமையும் குணமுமுடையவன். பூஸ்திதி அதிகமாகும். இவனிருக்குமிடம் அரண்மனைக்குப் பக்கம். சில சமயம் சுடுகாட்டுப் புகையும் வரும். இந்த விலாச அடையாளங்களைக் கொண்ட இந்த பாலகன்,

---

1. துலாக்கோல் (துலாம்). துலாகோசம், துலாமாம், என்றிருத்தல் வேண்டும்.

2. பபதி = சந்திரன்

3. பாலகன் செநநயோகம் பருகிய[1] அன்னையோகம்
சாலவே தந்தையோகம் தன் துணை களத்திரபுத்திரர்
ஏலவே[2] முன்பின்சென்மம் இயம்புவோ மின்னூல்தன்னில்
கோலமாய்த் தந்தைவர்க்கம் குன்றிடு மிருநான்கென்றேம்.

3. இப்பாலகனுடைய ஜனனயோகம், பெற்றெடுத்த தாயின்யோகம், மேலான தந்தையின்யோகம், தன்னுடைய துணைவர், புத்திரகளத்திரங்கள் இவர்களுடைய முன்பின் ஜன்மம் இவைகளைப்பற்றிக் கூறுவோம். இந்த கிரந்தத்தில் தந்தையின் வமிசம் இவனுக்கு எட்டாம் வயதில் கெட்டுப்போகும்.

4. பின் துணை ஒருவன்தீர்க்கம் பேசுவோ மவன்குணத்தை
அன்னியர் நேசம்கொள்வன் அல்பமாம் கல்வியுண்டு
முன் துணை பகையுமெய்தும் மொழியுமுன் கோபியாகும்
பொன்பணி[3] செய்வானுகும் புகலுமுன் கோபியாவன்.

4. இவனுக்குத் தம்பி தீர்க்கமாயுண்டு. அவனுடைய குணநிசயங்களைக் கூறுவோம். பிறருடைய சிநேகத்தைப் பெறுவான். சிறிது கல்வி கற்பான். கூண்ணனுடன் பகைகொள்வான். முன்கோபி என்று சொல்லப்படுவான். ரொக்க லேவாதேவி செய்வான்.

5. தந்திர மொழியேகூர்வன் தன்சொல்லு மிரண்டுமுண்டு
வந்தவூர் பாரிஒன்றே மந்தருண் பலமுறுது
இந்து[4]வின் வதனம்போன்ற எழிலுள்ள கன்னியொன்று
அந்தவள் தீர்க்கசீவி அணுகாது மற்றதெல்லாம்.

5. தந்திரமாகப் பேசக்கூடியவன். முன்னுக்குப்பின் முரணாகவும் இரண்டருத்தம் கொள்ளும்படியாகவும் பேசுவான். கலியாணம் ஒன்றே. இவன் பேச்சுப் பலிக்காது. சந்திரவதனம் போன்ற காந்தி பொருந்திய கன்னிகை. அவள் தீர்காயுசுடையவள். மற்ற கெடுதல்கள் அணுகா.

6. மத்திய வயதேயாகும் வரைகிறேம் பின்பால்சேதி
வித்தையு மதிகம்கற்பன் வெண்மையா மனத்தனாகும்
புத்திசூட் சுமமேயாகும் பின்புத்தி முன்கோபத்தன்
அசத்தியி னிறத்தனுகும் அணுகிடு நாபிசூடு.

6. மத்திமமான வயது சொல்லுகிறேம். பின்னால் செய்தி விவரம் கூறுவாம். படிப்பும் அதிகமாகும். வெள்ளை மனத்தோன். சூட்சும புத்தி

1. பெற்றெடுத்த
2. எற்கவே
3. லேவாதேவி
4. சந்திரன்

யுடையவன். பின்புத்தியுள்ளவன். முன்கோபமுடையவன். சாதாரண நிறமுடையவன். மூலச்சூட்டினுல் வருந்துவான்.

7. நவனூலை யுணர்வானுகும் நற்காம கத்திரிவகை
தவசிக ளூறவுகொள்வன் சந்தேக மனத்தனுகும்
பவமனம் சிலர்க்குகல்வி பகருவன் பொறுமைசாலி
நவநீதம் பிரியமாகும் நடையது துருசுமுண்டு.

7. புதிய நூல்களை உணர்வான். நல்ல காரியங்களில் விருப்பங் கொள்வான். சன்னியாசிகளின் சிநேகத்தைக் கொள்ளுவான். சஞ்சல புத்தியுள்ளவன். ஞானபாகத்தைச் சிலருக்குப் போதிப்பான். பொறுமை பூண்டவன். வெண்ணெயில் விருப்பங்கொள்வான். வேகமாய் நடக்கும் சுவபாவமுடையவன்

8. வருங்கதி சொல்வானுகும் மன்னர்கள் உறவுகொள்வன்
குறைமன தாகவாழ்வன் குணமுடைகோ[1] விருத்தியில்லான்
அரிவையர் மோகனுவன் அலைதுரும் பதுபோல்நெஞ்சம்
முருகர்தன் பத்திகொள்வன் முதல்வியே கேட்டிடாயே.

8. வருங்கால கதியைச் சொல்வான். அரசர்களுடன் பிரியமாயிருப்பான். மனக்குறைவுடன் வாழ்வான் லட்சுமிகடாட்சமான பசுக்கூட்டங்களின் விருத்தியில்லாதவன். ஸ்திரீகளின் இச்சையில் ஈடுபடுவான். காற்றில் அலையும் துரும்புபோல் மனமுடையவன். முருகக்கடவுளின் பக்தி பூண்டவன். ஆதிபராசக்தியே ! கேட்பாயாக.

9. பஞ்சலோ கங்கள்வேலை பண்ணுவான் சோம்பல்கொஞ்சம்
நஞ்சுபோல் மனமும்கொஞ்சம் நல்லோர்க்கு நல்லோனுவன்
வஞ்சியர் குணத்தானுகும் வரைந்தஇக் குணத்தானுக்கு
கொஞ்சுவா ளுருஞ்ஜென்மம் கூறுவோ மிவன்குணத்தை.

9. பஞ்சலோகங்களின் தொழில் செய்வான். நகை (பகை)களைச் செய்வான். சிறிது சோம்பேறி. மனமோ நஞ்சுபோல் கெட்டது. சில நல்லவர்களுக்கு நல்லவனுவான். வஞ்சனை செய்யும் குணமுள்ளவன். இப்படிப்பட்ட குணமுடையானுக்கு ஆருவது ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம்.

10. வித்தையு மிரண்டுகற்பன் விவேகியாம் எவர்க்குநண்பன்
சித்தமே கருப்புமில்லான் சிறப்புள குடும்பமேற்பன்
சுத்தவான எதிரிக்கஞ்சான் தொகைவாகனத் தோன்பற்றி
நத்திஞேர்க் குதவிசெய்வன் நாயகி மார்கள்மோகன்.

---

1. கோ = பசு

10. இரண்டு வித்தைகளைக் கற்பான். நல்ல விவேகி. யாவர்க்கும் சிநேகிதன். மனதில் கெடுதி இல்லாதவன். சிறப்புப்பொருந்திய குடும்ப பலனை யடைவான். சுத்தமானவன். பகைஞருக்கஞ்சமாட்டான். பணக்காரர்கள் ஏறும் வண்டியில் ஏறிச் செல்லுவான். அண்டினவர்க்கு உதவி செய்வான். பெண்களிடத்தில் மோகங்கொள்வான்.

11. பலருக்கும் நல்லோனுவன் பாருகள் பின்னுல்சேர்ப்பன்
புலவன்போல் மொழிவானுகும் புண்ணிய மனத்தனுகும்
தலம்தீர்த்தம் செல்வானுகும் தந்தைக்கு மேலாய்வாழ்வன்
நிலையதைக் காப்பானுகும் நீக்குவான் அல்பர்தன்னை.

11. பலருக்கும் நல்லவனுவன். பூமிகள் பின்னுல் சேர்ப்பான். பண்டிதனைப்போல் பேசுவான். தருமசிந்தனை யுள்ளவன். புண்ணிய க்ஷேத்திரங்கள் தீர்த்தங்கள் இவைகளைத் தரிசிக்கப்போவான். தகப்பனுக்கு மேலாக வாழ்வான். தன் நிலைமையை (கௌரவத்தை)க் காப்பாற்றிக் கொள்ளுவான் கேவலமுள்ளவர்களை நெருங்கவொட்டான்.

12. விடமதை உரவு[1]கொள்வன் மேலவர் பத்திபூண்பன்
மடமயில் மார்கள்மோகன் அரசர்கள் பேட்டிபூண்பன்
குடயாள குலத்துக்கேதான் கூறுவான் உபதேசங்கள்
சடைமுனிஇவ் வாறுசொல்ல செயமுனி தடுத்துச்சொல்
[வார்.

12. பரஸ்திரீகமனம் செய்வான். பெரியோர்கள் புத்தி கொள்வான். அழகிய மடவார்களை நேசிப்பான். அரசர்களைப் பேட்டிகாண்பான். தன் குலத்திற்கேற்ற உபதேசமொழிகளைக் கூறுவான். சடைமுனி இவ்வாறு சொன்னதும், ஜயமுனி பின் வருமாறு தடுத்துக் கூறுவார்.

13. என்னகா ரணத்தினுலே இயம்பினீர் யோகம்தானும்
பொன்சனி புகர்சேயொன்பான் பொருந்தின பலத்தினுலே
சொன்னனே யோகம்தானும் சுதனுக்கு (ஐ)அந்தாண்டின்
[மேல்
சந்திரன் பிறைபோல்யோகம் சஞ்சலம் நிவர்த்தியாகும்.

13. என்ன காரணத்தைக்கொண்டு யோகபாவங்களை இவ்விதம் கூறினீர்? குரு, சனி, செவ்வாய், சுக்ரன் இவர்கள் ஒன்பதாம் வீட்டில் சேர்ந்திருப்பதனுலே இத்தகைய யோகவிசேஷத்தைக் கூறினேன். ஜாதகனுக்கு ஐந்துபிராயத்திற்குப்பிறகு பிறைச்சந்திரனைப்போல் யோகம் வளர்ந்துகொண்டே இருக்கும். கவலைக்கே இடமில்லை.

---

1. பிறர்மனையைத்தல்

14. இதுவின்றி மூவைந்தாண்டில் எய்திடும் நிதிநிட்சேபம்[1]
அதுஇல்லம் தன்னில்நேரும் அதற்குமேல் விசேஷயோகம்
பதியது[2] தீதாய்செய்யில் பகருவோம் பின்பால்சேதி
கதிபெற தவங்கள்செய்யும் காதலி கேட்டிடாயே.

14. இது வில்லாமல் இவனது பதினைந்தாம் பிராயத்தில் இவனுக்குப் புதையல் கிடைக்கும். அஃது அவன் வீட்டிலிருந்தே கிடைக்கும். அதற்குமேல் விசேஷமான யோகபாவம் சித்திக்கும். வீட்டில் தெய்வானுகூலத்தலால் கெடுதி ஏற்பட, பின் பாகத்தில் இவன் நல்லகதியை அடைய வேண்டுமென்று எண்ணித் தபசுகளைச் செய்வான். தாயே! இதைக் கேட்பாயாக.

15. தன்துணை ஆண்பால்ரெண்டு சத்தியு மொன்றுதீர்க்கம்
பின்னமா மற்றதெல்லாம் பின்பக்கம் சேதிசொல்வேன்
அன்னையின் குணத்தைக்கேளாய் அன்புள மனத்தளாகும்
முன்கோபி உடனேசாந்தம் மொழியது சுகமேயெய்தும்.

15. இவனுடன் பிறந்த சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருத்தி. இது நிச்சயம். மற்றவர்கள் எல்லாம் மறித்துப்போவார்கள். பின் பாகத்தில் இவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் யோகத்தைக் கூறுவேன்' அம்மாவின் குணத்தைக் கேட்பாயாக. அன்புகொண்ட மனசை யுடையவள். முதலில் கோபிப்பள். பின்பு சாந்தத்தை யடைபவள். சொல்லும்படியான சுகத்தையே பெறுவள். (சுகமான வார்த்தைகளைப் பேசுவாள்.)

16. வரன்மனம் போலவாழ்வள் வளவு[3]மே குடகுஎன்றோம்
அரிவையின் துணைஆண்மூன்று அம்பிகை மார்கள்ரெண்டு
குறைவறும் குடுபத்தானும் கோதையின் பூர்வம்கேளாய்
பிரிதியாம் தலத்திலேதான் பிறந்தனள் நெசிவுவம்சம்.

16. புருஷன் மனம்போல் வாழ்ந்து வருவாள். இவள் பிறந்த வீடு மேற்கே குடகுதேசம் என்றோம். இவளுடன் பிறந்தவர்கள் ஆண் மூன்று, சகோதரிகள் இரண்டுபேர்கள். இவருடைய பிறந்தவீட்டுக்குடும்பம் குற்றமற்றது. கேட்பாயாக! பிரியப்படும்படியான ஊரில் பிறந்தவள். நெசவு செய்யும் குடும்பத்தில் பிறந்தனள்.

---

1. புதையல்
2. கடவுள்
3. வீடு

17. மங்கைக்கு மதலையுண்டாம் அறுமுகன் பத்தியாயும்
எங்கள்போ லதிதிக்கன்ன மீந்துமே பலமில்லாமல்
சங்கையாய்க் காலனூடு சென்றுமே பிரமன்லக்கம்
நங்கையும் உதித்தாளென்றோம் நவிலுவோ மவள்பின்
[சென்மம்.

17. மங்கைக்குப் புத்திரன் உண்டாயிற்று. முருகக்கடவுளின் பக்தி மேலிட்டு அகதிகளுக்கு அன்னமிட்டுவரும் நாளில் உடம்பில் பலக்குறைவு ஏற்பட்டுப் பைசாசதோஷம் கொண்டு எமலோகம் சென்றதும் பிரம்மாவின் கணக்குப் பிரகாரம் இந்த நங்கை உதித்தாளென்றோம். அவளுடைய மறு ஜன்மத்தைக் கூறுவோமாக.

18. தென்திசை தில்லைதென்பால் சிறுஊரில் வைசியசேயாய்
பொன்பணி உடையளாகி புகழுடன் வாழ்வாளாகும்
தந்தையின் பூர்வம்சொல்வேன் தணல்[1]மலை நாட்டிலே
[தான்
துன்மதி வடுகர்[2] வர்க்கம் செனித்தன னென்றுசொல்வோம்.

18. தெற்கேயுள்ள சிதம்பர ஸ்தலத்திற்குத் தென்பாகத்திலுள்ள சிறிய கிராமத்தில் வைசியர்கள் குடும்பத்தில் குழந்தையாய் அவதரித்து அருமையான வேலைகளைச் செய்து கீர்த்தியுடன் வாழ்வாள். ஜாதகனுடைய தந்தையின் பூர்விகத்தைச் சொல்லுவேன். குளிர்ச்சி பொருந்திய மலை நாட்டிலே அவமதிப்புள்ள தெலுங்கர் வம்சத்தில் ஜனித்தான் என்று சொல்லுவோம். (வடுகர்=தெலுங்கு நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் குடியேறிய சாதியார்.)

19. பலவித செட்டுசெய்து பாரியு மதலையுண்டாய்
குலவுநாள் வினையைக்கேண்மோ குறைவோரை மோசம்
[செய்தான்
நிலையிலார்[3] சாபம்தானும் நேர்ந்தது இவனுக்கேதான்
தலமது அந்தம்[4] தாழ்ந்து தலவாசம் சென்றுபின்னோன்.

19. பலவிதமான செட்டு வியாபாரம் செய்து பெண்டாட்டி பிள்ளை உண்டாகி வசிக்கும் நாளில் ஏற்பட்ட வினைக்கட்டைக் கேட்பாயாக. தரித்திரர்களை மோசடி செய்தான். தோல்வி யுற்றவர்களின் சாபத்தால் இவனுக்கு ஏற்பட்டது என்ன வென்றால், பூமியில் வாழ்வு குன்றி கடைசி காலத்தில் தாழ்மையடைந்து க்ஷேத்திர வாசம் செய்யும் நாளில்,

1. கிழவிடம்
2. தெலுங்கர்
3. தோல்வியுற்றவர்
4. பூமியில் வாழ்வு

20. காலன்தன் னுடடைந்து கஞ்சனால் வரியப்பட்டு
சீலமாம் ஏரிலோர்[1]சேயாய் செனித்தன னென்றுசொல்வோம்
ஆலம்[2]போல் ஏழைசாபம் அணுகிடு மிச்சென்மத்தில்
ஞாலமேல் வறுமையேற்பன் நாயகி கேட்டிடாயே.

20. எமலோகமடைந்து பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு மேன்மையான உழுதுண்டு வாழ்வார்க்குப் பிள்ளையாய்ப் பிறந்து வளர்ந்தான் என்று சொன்னோம். பாம்பின் நஞ்சைப்போல (விஷம்போல்) ஏழைகளுடைய சாபம் இந்த ஜன்மத்தில் நெருங்கிற்று. உலகில் வறுமைத் துன்பத்திற்காளானன். தாயே! கேட்பாயாக.

21. பின்சென்மம் கொங்குநாட்டில்[3]பிறப்பனும் கங்கைசேயாய்
மன்னரால் சீவிப்பானும் மந்தன்தன் மணத்தைச்
[சொல்வேன்
கன்னிகை குடகில்நேரும் கலக்குநாள் ஈரொன்பாண்டில்
அன்னவள் தீர்க்கசீவி அத்திரி தடுத்துசொல்வார்.

21. அடுத்த ஜன்மம் கொங்கு தேசத்தில் (மலையாளத்தில்) பிறப்பான். வேளாளர் குலத்தில் உதிப்பான். அரசரால் ஜீவனம் செய்வான். மந்த சுவபாவமுடையவன். அவன் கலியாணத்தைச் சொல்லுவேன். பெண், குடகு நாட்டில் கிடைக்கும். அவளுடன் சேர்ந்திருப்பது இவனது பதினெட்டாம் பிராயத்தில். அவள் தீர்க்காயுசு கொண்டவள். இதனை அத்திரி மகரிஷி ஆட்சேபித்துக் கூறுவார். (மந்தன்=மைந்தன்.)

22. பாரிய மிரண்டேயாகும் பகருவீர் அந்தசங்கை
திரமாய் ராகுபானு சத்தம மதனில்தங்க
கூறினேம் தாரம்ரெண்டு கும்முனி[4] தடுத்துச்சொல்வார்
நீர், புகழ்,[5]காரி, பொன்னேன், நிகர்பாக்கி யத்தில்தங்க.

22. கலியாணம் இரண்டுதான். அதன் சந்தேகத்தை எடுத்துரைப்பீர். நிச்சயமாயும் தீர்க்கமாயும் இராகுவும் சூரியனும் சப்தமஸ்தானத்தில் இருக்க, தாரம் இரண்டு என்றே கூறினேம். இதை அகஸ்திய முனிவர் பின் வருமாறு தடுத்துக் கூறுவார். சுக்கிரன், சனி, செவ்வாய், குரு இவர்கள் சேர்ந்து பாக்கிய ஸ்தானத்திலிருப்பதனால்,

23. தாரமே ஒன்றுஎன்றோம் சத்தமம் ராகுதோஷம்
பாரிக்கு அன்னைரெண்டு பகருவோம் முனியேயாங்கள்
காரிழை தனக்குமுத்திரை கலப்பன மிரண்டுஎன்றோம்
ஆறஞ்சு இரண்டுஆண்டில் அழிவுண்டு கள்ளனாலே.

---

1. உழவர்
2. விஷம்
3. மலையாளம்
4. அகஸ்தியர்
5. செவ்வாய்

23. அப்படித் தங்குவதனுல் தாரம் ஒன்றுதான் என்று கூறினேம், சப்தமஸ்தானத்தில் ராகு இருப்பது தோஷம்தான். அதனுல் மனைவிக்கு இரண்டு தாய்கள் என்று, முனியே! சொல்லுவோம் நாங்கள். மனைவிக்கு இரண்டாவது புருஷன் (சோரபுருஷன்) முப்பத்திரண்டாம் வயதில் கலப்பன். அக்கள்ளனுலே அழிவு ஏற்படும்.

24. அதுவின்றி வேறுகாணுன் அம்பிகை ஒன்றேதீர்க்கம்
புதல்வர்கள் அறுவர்தோன்றும் போகிடும் ஒன்று
[என்றேம்
சதமுடன் ஆண்பால்மூன்றும் தையலர் இரண்டுளென்றேம்
இதுஐந்தும் தீர்க்கமெய்தும் ஈச்வரி கேட்டிடாயே.

24. அப்படியில்லாமல் இரண்டாவது கலியாண விஷயம் ஒன்றுமில்லை. பெண்டாட்டி ஒன்றுதான். இது நிச்சயம். ஆறு பிள்ளைகள் பிறக்கும். ஒன்று இறந்துவிடும் என்றேம். ஒழுங்காக ஆண் மூன்று, பெண் இரண்டு என்றேம். இவர்கள் ஐந்து பேர்களும் தீர்க்காயுசுடன் இருப்பர். தேவியே! கேட்பாயாக.

25. பாலகன் பூர்வம்சொல்வேன் பரங்குன்ற நாட்டிலே[1]தான்
சீலமாம் கங்கைசேயாய் செனித்துமே வறுமையின்றி
ஞாலத்தால் சீவித்தேதான் நலிந்தோர்க்கு அன்னமீந்து
காலன்தன் பதிக்குபுக்கி கஞ்சனுல் வரியப்பட்டு,

25. ஜாதகனுடைய பூர்விகத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். விசாலமான மலை நாட்டிலே வேளாளர் குலத்திலே ஜனித்து தரித்திர மில்லாமல் கிருஷி செய்து ஜீவித்து ஏழைகளுக்கு அன்னமிட்டு வாழ்ந்து எமலோகம் செல்ல, பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு,

26. உதிப்பனு மிந்தபாலன் உரைக்கிறேம் யோகச்சேதி
பதிசெய்வன் பூமிசேர்ப்பன் பஞ்சலோ கங்கள்வேலை
அதிசெய மாகச்செல்வன் ஐந்தாண்டின் முதலாயோகம்
நிதியது பெருக்கம்செய்வன் நிமலியே கேட்டிடாயே.

26. பிறந்தான் இந்த ஜாதகன். அவனுடைய யோக விசேஷத்தைக் கூறுகிறேம். வீடு கட்டுவான். பூமியைச் சேர்ப்பான். பஞ்சலோகங்களைக் கொண்டு பலவேலைகளைச் செய்வான். அபாரமான வேலைகளைச் செய்வான். ஐந்து வயதிற்குப் பிறகு யோககாலம். சொத்துப் பெருக்கம் ஏற்படும். தேவியே! கேட்பாயாக.

1. மலைநாடு

27. இருபது ஆண்டுதன்னில் ஏகுவன் தந்தையென்றோம்
திருகிலா அதின்மேல்மூன்றில் செல்லுவாள் அன்னைதானும்
அறுபது ஆண்டுதன்னில் ஆனிமா தத்திலேதான்
மறலியின் பதிக்குச்செல்வான் மந்தனும் என்றுசொல்
[வோம்.

27. ஜாதகனுடைய இருபதாவது பிராயத்தில் பிதா இறப்பன் என்றோம். அதற்குப் பிறகு மூன்று வருடங்களுக்கெல்லாம் தாயாரும் பரலோகம் சேர்வாள். இவனும் அறுபதாவது வயதில் ஆனி மாசத்தில் எமலோகம் செல்வான் என்று சொல்லுவோம்.

28. இப்படி வயதுதீர்க்கம் இரணியன் தனக்கீறுறில்
தப்பித மதியும்நிற்க சகடையால் வயதுஅல்பம்
அப்படி சொல்லொணாது அந்தணர்[1] நவத்தில்தங்க
ஒப்புடன் வயதுதீர்க்கம் உரைக்கிறோம் இவன்பின்சென்மம்.

28. இப்படி தீர்க்காயுசு என்றீர். கேது தன் வீட்டிற்குப் பன்னிரண்டாமிடத்திலிருந்து சந்திரனுடன் சேர்ந்து நிற்க அல்ப ஆயுசு என்று சொல்லுதல் கூடாது. பிராமணர்கள் ஒன்பதாம் வீட்டில் இருக்கும்போது ஒழுங்காக தீர்க்காயுசு. இவனுடைய மறு ஜன்மத்தை எடுத்துக் கூறுவோம்.

29. அங்கர் தன்னிலேதான் அருமறை குலமுதிப்பான்
இன்னவன் செனனகாலம் இட்டிஞள்[2] இரண்டாம்பாதம்
புந்திபான்[3] திசையிருப்பு பொருந்திடும் பதினாறுண்டும்
வந்திடும் திங்களாறும் வரைகிறோம் பலனைத்தானே.

29. அதே பட்டிணத்தில் பிராமண குலத்திலுதிப்பான். இவனுடைய ஜனன காலம் சிரமகாலம்தான். இரண்டாவது பாகமாகிய புதனுடைய தசையில் பொருந்தும். அதில் பதினாறு வருஷம், ஆறு மாதம் இவற்றின் பலனைக் கூறுகிறோம்.

30. அன்னைக்குப் பிணிஅநேகம் அதிகமாய் வறுமையுண்டு
இன்னவன் தனக்குரோகம் இடுக்கண்கள் சல்லியபாதை
தன்மன சஞ்சலங்கள் தாய்வாழி சூத[4]மெய்தும்
பின்பாகம் விபரமாகப் போசுவோம் இனியேயாங்கள்.

30. தாயை அநேக ரோகங்கள் பீடிக்கும். தரித்திரக் கொடுமை அதிகம் உண்டு. இவனுக்கும் ரோகம், சிரமம், கடன் தொந்தரை, மனச் சஞ்சலங்கள், தாயார் குடும்பத்தினரில் ஆசௌசம் முதலிய ஹிம்சைகள் ஏற்படும். இதற்குப் பின்னுள்ள விஷயங்களை இனி நாம் விவரமாய்க் கூறுவோம்.

---

1. சுக்கிரனும் குருவும் பிராமணர்கள்
2. துன்பகாலம்
3. புதன்
4. ஆசௌசம்

ஜாதகம் 5

1. திங்களும் சாடியாக செம்பொன்னும் காரிமீனம்
பங்கயன் வெள்ளிபுந்தி பற்றிடம் நந்தி[1]யாக
மங்கலன் கடகமாக மரிதியும் வீணையாக
இங்கிவை கிரகம்நின்று லக்கினம் மேடமாக.

1. சந்திரன் கும்பத்திலிருக்க, வியாழனும் சனியும் மீனத்திலிருக்க, சுக்கிரன், சூரியன், புதன் இவர்கள் ரிஷபத்திலும் சேர்ந்து நிற்கவும், செவ்வாய் கடக ராசியிலும், கேது மிதுனத்திலும், இராகு தனுசிலும் இருக்கும்படியான இந்த கிரக நிலைகொண்ட மேஷலக்ன ஜாதகம்.

குரு சனி	லக்கினம்	சூரியன் சுக்கிரன் புதன்	கேது
சந்திரன்	இராசி சக்கரம்		செவ்வாய்
ராகு			

2. பலனதை புகலுமென்று பார்வதி கேட்கும்போது
நலமுள வதிஷ்டரிஷிசொல்வார் நாயகன் செனனமாகும்
தலமது கீழ்பால்நோக்கம் தென்வட வீதியாகும்
[2]சலனமுடை வடபாலாகும் சாமுண்டி தென்பாலாகும்.

2. இந்த ஜாதகனுடைய பலனைச்சொல்லும் என்று பார்வதி கேட்டபோது, நன்மையாய் வசிஷ்டரிஷி சொல்லலுற்றார். ஜாதகன் ஜனிக்கும் வீடு கிழக்குப்பார்த்தது. தெற்கு வடக்கு வீதியிலுள்ளது. சிவலிங்கம் வடக்குப்பக்கத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சாமுண்டி தேவியின் கோவில் தெற்குப்பக்கமாகும்.

3. அருகினில் நதியுமுண்டு அணுகிய பேரூராகும்
திருமகள் வன்தியசேயாய் செனிப்பனும் என்றுசொல் [வோம்
பெறுஅன்னை தந்தையோகம் பேதையர் புத்திரயோகம்
உரைக்கிறேம் முன்பின்சென்மம் உத்தமி கேட்டிடாயே.

---

1. ரிஷபம்
2. சலனம் = சிவலிங்கம்

3. இவன் வீட்டின் பக்கத்தில் ஆறு ஓடுகின்றது. அதைச் சார்ந்த பெரியபட்டணத்தில் வசித்துவந்தான். இலட்மிகடாக்ஷத்தால் பிள்ளையாய்ப் பிறந்தானென்று சொல்லுவோம். பெற்றெடுத்த தாய் தந்தையர்கள் யோகம் பெண்டு பிள்ளைகள் யோகம், இவனுடைய முன் பின் ஜன்மம் இவைகளை விவரமாய்க் கூறுவோம். உத்தமி! கேட்பாயாக.

4. தந்தையின் துணைஆண்ரெண்டு சத்தியு மொருத்திஎன் [ஞேம்
அந்தஆண் கெருத்திருது[1] அந்தத்தோன்[2] தனக்குக்கன்னி
சந்ததம் ஒருத்தியென்றேம் சாற்றுவோம் பின்பால்சேதி
இந்தவன் தந்தைசேதி இயம்புவோ மிருநிறத்தான்[3].

4. தந்தையுடன் பிறந்த சகோதரர் இரண்டுபேர்கள். சகோதரி ஒருத்தி என்றேம். அந்த ஆடவர்களுக்குக் குழந்தையில்லாமல், இரண்டாவது (அதாவது கடைசியுள்ளவனுக்கு) ஒரே ஒரு பெண் குழந்தை என்றேம். இதைப்பற்றிப் பின்னால் பேசுவோம். இவனுடைய தந்தையின் விவரம் கூறுவோம். இரண்டு நிறத்தையுடையவன் (மாநிறம்).

5. பலவாணி பங்கள்செய்வன் பரஉப காரனுகும்
விலைமாதர் மோகம்கொள்ளான் வீண்பழி யேற்பானுகும்
தவமது செய்வானுகும் சல்லிய பாதைகாணுன்
புலவன்போல் வார்த்தைசொல்வன் புயபல முடையனுகும்.

5. பலவிதமான வியாபாரங்களைச் செய்வான். பரோபகாரி. வேசிகளுடைய சிநேகத்தைத் தேடமாட்டான். வீண் அபவாதங்களைப் பெறுவான். தெய்வவழிபாடுகள் செய்வான். கடன் தொந்தரையில் அகப்படான். படித்த மேதாவியைப்போல் பேசுவான். திடகாத்திரம் (புஜபல பராக்கிரமம்) உடையவன்.

6. சொல்லது சுருக்கமாகும் சுந்திர முடையனுகும்
இல்லையென் றுரைக்கமாட்டான் இதிகாச மறியானுகும்
அல்லலில் லாமல்வாழ்வான் அறுமுகன் பக்திகொள்வன்
வல்லிசொல் கடவானுகும் மங்கையே கேட்டிடாயே.

6. சுருக்கமாகப் பேசுந்திறமையுள்ளான். நல்ல கட்டழகன். வறியோர்க்கு இல்லை என்னுது வழங்குவான். இதிகாசபுராணங்களை அறிந்தவன். தொந்தரவில்லாமல் சுகமாய் வாழ்வான். முருகக்கடவுள்மேல்

1. பிள்ளையில்லாமல்
2. கடைசிப்பையன்
3. மாநிறம்

பக்திகொள்ளுவான். பெண்டாட்டியின் வார்த்தையை மீறி நடக்கமாட்டான். தாயே! கேட்பாயாக.

7. சொன்னவிக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அரிநிர்ம லாத்தேகி
தன்மனம் வர்மமுண்டு(மே) கல்வியீகை கொஞ்சம்
பின்னமி.ல்லாததேகன் பலசெட்டு செய்வானாகும்.

7. இப்படிப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு இந்தப்பாலகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கூறுகிறேன். நிர்மலமான சிவபக்தி பூண்டவன். மனம் திடமுள்ளவன். படிப்பு, தருமம் சிறிது உண்டு. வாட்ட சாட்டமான உடம்பை யுடையவன். பல வியாபாரங்களைச் செய்வான்.

8. கடன்கொள்வன் நிவர்த்திசெய்வன் காலிகள் விருத்தி [அல்பம்
உடன்படான் பிழைகளுக்கு உறுதியா மனமும்கொஞ்சம்
மடையரை உறவுகொள்ளான் வாக்குசொல் தவறானாகும்
உடன்துணை காணானாகும் உரைப்பீர்கள் அந்தசங்கை.

8. கடன்பட்டுக் கடனை அடைத்து நிவர்த்திசெய்து கொள்ளுவான். நாற்கால் மிருகங்கள் கொஞ்சம் விருத்தியாகும். குற்றங்கள் செய்ய மாட்டான். திடமான மனமுடையான். சிறிதும் மதியீனர்களைச் சிநேகம் கொள்ளான். ஆனால் சொன்னசொல் தவறமாட்டான். இவனுக்குச் சகோதரர் கிடையாது. அந்தச் சமுசயத்தைத் தீர்த்து உரைப்பீர்.

9. கேதுவும் மூன்றில்தங்க குசனுமே நாவில்நீசம்
ஆதலால் துணையும்காணான் ஆண்டுக்குள் தந்தைமாள்வன்
சாதகன் பூர்வம்தன்னில் தரித்திரம் உடையனாகும்
மாதாவால் சுகமுமேற்பன் மங்கையே கேட்டிடாயே.

9. இலக்கினத்திற்கு மூன்றில் கேதுவும், சுகஸ்தானமாகிய நாலாமிடத்தில் செவ்வாயும் நீசனாயிருப்பதனால் கூடப்பிறந்தவர்கள் இல்லை. பிறந்த ஒரு வருடத்திற்குள் பிதா இறந்துபடுவான். ஆதியில் ஜாதகன் தரித்திரன். தாயாரால் சுகத்தைப் பெறுவான். கேட்பாயாக.

10. ஈரொன்ப தொன்று ஆண்டில் இவனுக்கு பாரிவாய்க்கும்
நாரியும் உள்ளூர்கீழ்பால் நல்கிடும் குணத்தைச்சொல்வேன்
பாரிய புத்தியேற்பள் பதர்குண மில்லாளாகும்
சீரிடான வாததேகி சிந்தையும் நல்லதாகும்.

10. இவனுடைய பத்தொன்பதாம் வயதில் கலியாணம் ஆகும். பெண்டாட்டியும் இவனுடைய ஊருக்குக் கிழக்கே வசிப்பவள். அவளுடைய

குணத்தைச் சொல்லுவேன். பர்த்தாவின் புத்திமதியைக் கடைபிடியாகக் கொள்ளுவாள். அல்பகுணமில்லாதவள். இடைஞ்சலான வாததேகத்தை யுடையவள். நல்ல மனதை யுடையவள்.

11. மங்கைபாட் டாளியாகும் வருவோரை ஆதரிப்பள்
சங்கையென் றோரைச்சாராள் சர்ப்பம்போல் கோபம்
[கொஞ்சம்
நங்கைக்கு வயதுதீர்க்கம் நாதனுர் பத்திபூண்பள்
பங்கய முகத்தாளாகும் பர்த்தாவின் மனம்போல்வாழ்வள்.

11. இவள் நல்ல வேலைக்காரி. விருந்தினரை ஆதரிப்பாள். சமுசயமான குணமுடையவர்களைச் சேரமாட்டாள். கோபம் வந்தால் பாம்பு போல் சீரிவீழ்வாள். இவளுக்கு ஆயுசு தீர்க்காயுசு. கணவனின் பிரியத்திற்குப் பாத்திரமாவள். தாமரைப்பூப்போன்ற முகத்தையுடையவள். பர்த்தாவின் இஷ்டம்போல் நடப்பாள்.

12. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலமுருது
சித்தமாய் உதித்தாலுந்தான் தீங்காகு மென்றுசொன்
[ஞேம்
குற்றத்தைச் சொல்லுவோமென்ன குருசனி விரையம்புக்க
வெத்தியாய் தன்சிலராகும் மேவின பலத்தால்சொன்
[ஞேம்.

12. புத்திரபாக்கியத்தைக் கூறுவோமென்ருல் பலமில்லை. உண்மையாய் ஏற்பட்டாலும் கெடுதலாய் முடியும் என்று சொன்ஞேம். இஃது என்ன குற்றத்தினல் என்று சொல்லுவோம். குருவும் சனியும் பன்னிரண்டாம் வீட்டிலிருக்க, சில சிசுக்கள் பிறந்து வியோகமாகும். இதற்கு ஏற்பட்ட கிரகபலத்தினல் கூறிஞேம்.

13. புதன்புகர் பரிதிரெண்டில் புக்கின பலத்திஞலே
சுதஞலே கர்மம்நேரும் தென்முனி[1] புகலுகின்ருர்
துதியன்தன் முன்சென்மத்தில் மருவிற்று சிலதுதோஷம்
அதிஞலே புத்திரதோஷம் அவன்தந்தை வர்க்கம்நாஸ்தி[2].

13. புதன், சுக்கிரன், சூரியன் இவர்கள் மூவரும் சேர்ந்து குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீட்டிலிருப்பதனல் கர்மத்திற்குப் புத்திரன்

---

1. பொதிய மலையில் உள்ள அகஸ்தியர்

2. சந்ததி விருத்தி இல்லை

உண்டு என்று அகஸ்தியர் சொல்லுகின்றார். இரண்டுக்குடையவனாலே பூர்வஜன்மத்தில் சிறிது தோஷம் ஏற்பட்டது. அதனால் புத்திரதோஷம். அவன் தகப்பன் வமிசம் அழிந்தது. சந்ததி விருத்தி இல்லை.

14. என்னஊழ் செய்தானத்தை இயம்புவீர் முனியேநீதான்
முன்சென்மம் கொங்குநாட்டில் உதித்தனன் வன்னிய[1]
[சேயாய்
உன்னத குடும்பியாகி உத்தமன் வாழும்நாளில்
கன்றுக்குப் பால்விடாமல் கறந்தனன் அதுஓர்தோஷம்.

14. என்ன வினையை அவன் தந்தை செய்தானென்று சொல்லுங்கள், முனீசுரரே! போன ஜன்மத்தில் மலையாளத்தில் உதித்தான் வன்னியர் (வேளாளர்) குலத்தில். மேலான குடும்பவிருத்தியாகி இவ்வுத்தமன் வாழும் காலத்தில் கன்றுக்குப் பால்விடாமல் பசுவை ஒட்டக்கறந்தனன். அது ஒரு தோஷமாகும்.

15. பலர்செல்லும் மார்க்கத்துத்தான் பற்றிற்று அதுஓர்
[தோஷம்
புலவருக் கிடைஞ்சல்செய்தான் (பு)இகழிலாக் கவிகள்பாட
குலவித்து அந்தசாபம் கோத்திரம்[2] தன்னைக்குற்ற
தலைவனு யந்தியத்தில் தரித்திர மிகவேகொண்டு.

15. பலர் சொல்லும் மார்க்கத்திற்கு விரோதமாய் நடத்தான். அது ஒரு தோஷமாகும். படித்த புலவர்களுக்கு இடைஞ்சல் செய்தான். புகழில்லாத கவிகளை அவர்கள் அவனால் பாடினார்கள். அவர்கள் சாபம் அவனைப்பிடித்தது. கடவுட்குத் தகாத வெண்குஷ்டத்தையுடையவனாய்த் தரித்திர தசையைப்பெற்று,

16. காலன்தன் னுடைந்து கஞ்சனால் வரியப்பட்டு
சீலமில் லாதவைசிய குலமதி லுதிப்பானாகும்
ஆலம்போல் முன்னூழ்சாபம் அணுகிடும் சுதரும்தோஷம்
சாலவே தந்தைவர்க்கம் நாஸ்தியாம் துணையும்தோஷம்.

16. எமலோகத்தையடைந்து, பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டுச் சீலமில்லாத வைசியர்கள் குலத்திலுதிப்பான். விஷம்போல் போன ஜன்மஊழ்வினையின் சாபம் இவனை வந்தடையும். பிள்ளைகளுக்கும் தோஷ மேற்படும். பொருத்தமாகவே தகப்பன் குடும்பம் நாசத்தையடையும். துணைவர்களுக்கும் தோஷம் ஏற்படும்.

---

1. வேளாளர்
2. வெண்குஷ்டம்

17. இதுவின்றி மனைவியாலே எய்திற்று சிலதுதுன்பம்
அதுவினைப் புகலக்கேண்மோ அவளுட பூர்வம்கேளாய்
வதிபதி பூர்வம்சொல்வேன் மைசூரு நகரிலேதான்
நிதிமிக உடையானுக்கு நேர்ந்தனள் கர்ணசேயாய்.

17. இம்மட்டோ ? பெண்டாட்டியாலே சில துன்பங்கள் நேரிட்டன. அதைச் சொல்லுகிறேன், கேளம்மா. அவளுடைய பூர்வோத்தரத்தைக் கேட்பாயாக. அவளுடைய பிதா மைசூர்ப்பட்டிணத்தில் பெரிய பணக்காரன். அவனுக்குப் பெண்ணாய் பிறந்தாள். (கர்ணசேய் = கந்தருவப் பெண்.)

18. சுகமுள குடும்பியாகி சுந்தரி வாழுநாளில்
பகையதைப் புகலக்கேண்மோ பஞ்சைகள் மதலைக்காக
தகைமையாய் அன்னம்கேட்க சர்ப்பம்போல் கோபமுற்று
வகையுட னில்லையென்றாள் மருவிற்று அதுஓர்தோஷம்.

18. சுகமான குடும்பியாகி இந்த சுந்தரி வாழுங்காலத்தில் ஒரு கேடு நேர்ந்தது. சொல்லுகிறேன் ; கேள். ஏழைமக்கள் வருந்திப் பிச்சை கேட்க, சர்ப்பம்போல் கோபத்தால் சீறி, திமிர் எடுத்து இல்லை என்று சொன்னாள். வந்தடைந்தது மற்றொருதோஷம்.

19. கொல்லையின் முனியும்வாசம் குலதெய்வம் எனத்துதிப்பார்
வல்லியும் கெருவத்தாலே மாமுனி தனைத்தொழாமல்
புலகிடும் முனியும்சாபம் பூவையே தொழாமல்நின்றாள்
கொள்ளுவேன் சுதரைபாரும் கூறுவேன் பின்சென்மத்தில்.

19. கொல்லைப்புறத்தில் உள்ள பிரம்மராக்ஷசைக் குலதெய்வம் என்று துதிப்பார். இவளும் கர்வமடைந்து மாமுனியைத் தொழாமல் அவருடைய சாபத்திற்கு ஆளானாள். அடுத்த ஜன்மத்தில் உன் குழந்தைகளைக் கொன்று விடுவேன் என்று முனீசுரனும் சாபமிட்டது.

20. உன்னிடம் வாசமாவென் உதிக்காது சுதர்கள்தானும்
இன்னவாறு சொல்லியேதான் ஏகிற்று வேறிடத்தில்
துன்னதுகள் சேர்ந்ததென்றேம் தேவிக்கு அந்தியத்தில்
தன்சுதர் யாவும்மாண்டு சஞ்சல மனத்தாளாகி.

20. உன்னையே பிடித்துக்கொள்வேன்; பிசாசுபிடித்ததனால் பிள்ளைகள் பிறக்காது ; என்று இவ்வாறு சொல்லிவிட்டே வேறிடத்திற்கு அம்முனி சென்று விட்டதும், இவளுக்குத் துன்பங்கள் நேர்ந்தன. இவளுடைய கடைசிகாலத்தில் பிள்ளைகள் யாவரும் இறந்து மனக்கவலை மேலிட்டிருந்தாள்.

21. பித்தமாம் குணத்தாளாகி பேதையு மரணமாகி
வித்தகன் வரியப்பட்டு விளங்கினு ளிகலோகத்தில்
சத்திக்கு இரண்டுசாபம் சார்ந்ததால் சந்ததியும்தோஷம்
நித்திரை காலம்தன்னில் நேரிடும் முனியும்தானும்.

21. இதன்காரணமாகப் புத்திமயக்கம் ஏற்பட்டு இவளும் இறந்தாள். பிரம்மா மறுபடியும் சிருஷ்டிசெய்ததில் இப்பூலோகத்தில் ஜனிக்கலானுள். இப்பெண்ணுக்கு இரண்டுதோஷம் நேர்ந்ததால் சந்ததி இல்லை. சொப்பனத்தில் அம்முனி ஒருநாள் வந்து சொன்னதாவது.

22. சுதர்தோன்ற கிரிகையொன்று செப்புவீர் முனியேநீதான்
வதிபதி[1] செய்வானுக்கு வரைகிறோம் கிரிகைஒன்று
பதியினில் கருமசாந்தி பண்ணியும் சத்திபாசம்
சதியிலா பஞ்சகோணந் தனிலதை அமைத்துமேதான்.

22. பிள்ளை பிறக்க ஒரு சாந்திசெய்கிறோம். அஃது இன்னதென்று சொல்லுங்கள் முனீச்வரரே! கொலைசெய்வானுக்குச் சொல்லுவோம் சாந்தி ஒன்று. வீட்டில் ஒரு தருமசாந்திசெய்து சக்திதேவியை அதில் ஆவிர்பவிக்கச்செய்து பஞ்சகோணமுள்ள சக்கரத்தில் அதை அமைத்துமேதான்.

23. சத்தியின் பூசைசெய்து சகஸ்திர மந்திரம்செபித்து
வித்தகி அணிந்துகொண்டு வெள்ளியின் வாரநோன்பு
பத்தியாய் ஆறுதிங்கள் பாவையும் விரதம்கொள்ள
சுத்தின வினைகள்நீங்கி தோன்றிடும் சுதர்கள்தானே.

23. தேவியின் பூசைசெய்து ஸஹஸ்ர அர்ச்சனைசெய்து அந்த ரக்ஷா பந்தனத்தை அணிந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமை பக்தியாய் ஆறுமாத காலம் இவளும் நோன்பு இருந்தாள். இந்த விரதத்தின் பயனுக இவளைச் சுற்றிக்கொண்டிருந்த தீங்குகள் நீங்கின. பிள்ளைகளும் பிறந்தன.

24. சொற்படி செய்யாராகில் சுதர்களும் தோன்றுதாகும்
சொற்படி செய்வாராகில் தோன்றிடும் ஆண்பரல்ஒன்று
மைப்படி கன்னிஒன்று வரைகிறோம் தீர்க்கமாக
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றுது.

24. சொன்னபடி செய்யாவிட்டால் பிள்ளைகளும் தோன்றமாட்டார்கள். சொன்னபடி செய்ததால் ஆண்பிள்ளை ஒன்றும், அடுத்தபடி பெண் பிள்ளை ஒன்றும் நிச்சயமாய்த் தோன்றும். பாம்பையும் சடையையும் தரித்த பரமசிவனின் மனைவியான பார்வதிதேவியே! சொல்லிய வார்த்தை தப்பாது.

---

1. கொலை

25. மாரன்செய் வினைகளுக்கு வரைகிறோம் கிரிகைஒன்று
ஆறுமா முகத்தோன்வாழும் அன்னர் பேருக்கு
தீரமாய் ஏழுகாதத்தில் சிலுகிலா சென்றுமேதான்
பாரினில் அந்தநாளில் பரமர்அடி யாரான,

25. மன்மதன்செய்யும் கெடுதிகளுக்குப் பரிகாரம் கூறுகிறோம். ஒன்று சுப்பிரமணியசுவாமி இருக்கும் பிராஞ்சத்தில் பக்தர்களுக்கு அன்னம் போட்டால் இடைஞ்சலற்றுப்போம், நிச்சயம், சிடுக்குகள் விலகும். உலகி லுள்ள சிவனடியாருக்கு,

26. இருபத்தொன் பந்துக்கன்னம் இன்பமா யளித்துமேதான்
திருமக ளனைஞர்சென்று தென்திசை காளிகோஷ்டம்
அரிவைக்கு அபிஷேகித்து அதுமுதல் இரண்டுஆண்டும்
திருவிளக் கொன்(று)றென்றுவகத் தீவினை விலகுமென்
[றோம்.

26. இருபத்தொன்பது பேர்களுக்கு அன்னம் பிரியமுடன் அளித்தும் கன்னிகைகள் ஐவருடனும் தேவியின் ஆலயத்திற்குச் சென்று அபிஷேகம் செய்தும் அதுமுதல் இரண்டுவருடகாலம் வீட்டில் திருவிளக்கேற்றிப் பூஜை செய்து வந்தால் வினைக்கட்டுக்கள் விலகும் என்றோம்.

27. இதுவின்றி வேறுசொல்வேன் இல்லத்தில் பிசாசுவாசம்
அதுசாந்தி யதனால்நீங்கும் அரைகிறோம் இவனின்யோகம்
வதிபதி வந்துபின்பு வளர்ப்பிறை போலேயோகம்
அதற்குமுன் குடும்பலைச்சல் அலைமீது துரும்புபோலே.

27. இதுவில்லாமல் வேறொன்று சொல்லுவேன். வீட்டில் பிசாசுவசித் தலால் சாந்திசெய்தால் நீங்கும். சொல்லுகிறோம். இவனுடைய யோகத்தை ; கேள். ராஜயோகம் வளர்பிறைபோல் வளரும். அதற்குமுன் குடும்ப அலைச்சல். எப்படியென்றால் அலைமீதுபோட்ட துரும்புபோலே.

28. பாலனும் வாழ்வானுகும் பாவையால் புகழுமெய்தும்
சாலவே துயிரியங்கள் செட்டுகள் செய்தலுண்டு
பேலவம்[1] சுதனால்யோகம் பெய்திடும் முப்பாண்டின்மேல்
ஞாலமேல் புகழுமெய்தும் நல்காது தரித்திரம்தான்.

28. ஜாதகன் வாழ்வான். பார்யையினால் புகழ்பெறுவான். பொருந் தவே தருமங்களையும், வியாபாரங்களையும் செய்வான். சாமர்த்தியமுள்ள பிள்ளையினால் யோகம் ஏற்படும். முப்பதாவதுவயதிற்குப் பிறகு உலகினில் இன்பமும் புகழும் எய்துவான். தரித்திரம் அவனிடம் அணுகாது.

---

1. சுகுமாரம். (பேலன் = சமர்த்தன்.)

29. அன்னமும் இரவுருதான் அவன்பந்து மதிக்கவாழ்வான்
பொன்கட னில்லாவாழ்வன் பெருமையாய் வணியம் [செய்வன்
இன்னமும் விபரமாக இயம்புவோம் பின்பாதத்தில்
உன்னத வானைபெற்ற உத்தமி கேட்டிடாயே.

29. சாப்பாட்டுக்குக்கஷ்டமில்லை. சொந்தக்காரர்களும் மதிக்கவே வாழ்வான். ரொக்கக்கடன்களில்லாமல் வாழ்வான். கௌரவமாய் வியாபாரம் செய்வான். இன்னமும் விவரமாய்ச் சொல்லுவோம். பின்வாழ்வில் மேன்மை பெற்றவனுவன். உத்தமி! கேட்பாயாக.

30. மாதுரு குணத்தைச்சொல்வேன் மானிறம் பித்ததேகி
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உள்மனம் கபடுமில்லாள்
காதலி துணைவர்காணுள் கழறுவீர் அந்தநங்கை
தீதாக நாலில்சேயும் சேர்ந்ததால் சொன்னேம்யாங்கள்.

30. மாதாவின் குணவிசேஷத்தைக் கூறுவேன். மானிறம். பித்த சரீரம். சுகமான இனிய வார்த்தைகளைப் பேசுவாள். மனதில் கபடம் சிறிதும் இல்லாதவள். அவளுக்குச் சகோதரம் இல்லை. அதற்கென்ன காரணம். இலக்கினத்திலிருந்து நாலாவது வீட்டில் செவ்வாய் சேர்ந்த தனுல் நாங்கள் அவ்விதம் கூறினேம்.

31. அன்னையில் பூர்வம்சொல்வேன் அச்சிறு வர்க்கம்தன்னில்
வன்னிய குலமுதித்து வாழ்நாளில் வினையைச்சொல்வேன்
கன்னிகை வரனெடுசேர்ந்து கலந்தனள் பட்சிக்கவேதான்
அன்னவ ரடிபணிந்து அணுகினுள் கடைவீதிக்கு.

31. தாயின் பூர்வஸ்திதியைக் கூறுவோம். அந்தச் சிறிய வமிசத்தில் வேளாளர் கூட்டத்தில் வாழும் நாளில் ஏற்படும் வினையைக் கூறுவேன். தம்பதிகள் சேர்ந்து சாப்பிட்டதும் இருவரும் கடைவீதிக்குப் போனுர்கள்.

32. குங்கும மஞ்சள்சிப்பு கோதையும் வாங்கிக்கொண்டு
தங்கமுட் போதாகி சர்வமான பெர்க்குமளித்தாள்
அங்கவன் துணைவன்பார்த்து அம்மாதைக் காணுதாகி
சங்கையாய் மனத்தனுகி சாற்றுவான் சாபம்தானும்.

32. குங்குமம், மஞ்சள், சீப்பு இவன் மனைவி வாங்கினுள். யாவருக்கும் பிரியமாகக் கொடுத்து வழங்கினுள். கணவன் இவளைச் சிறிது நேரம் காணுமல் சமுசயமுற்று இவளுக்குச் சாபம் அளித்தான்.

33. யென்மது ஆகாமுன்னம் ஏகுவான் வரனுமேதான்
வனிதைபின் சென்மம்தன்னில் மத்தியில் விதவையாகி
கனமிலா குடும்பியாகி காசினி தன்னில்வாழ்வாய்
சினமுடன் சொல்லியவளை துரத்தினன் என்றுசொல்வோம்.

33 கொஞ்சகாலத்திற்கெல்லாம் வரனும் வரலானன். வனிதையே! அடுத்த ஜன்மத்தில் விதவையாகி கௌரவ மற்ற குடும்பியாக, காசி க்ஷேத்திரத்தில் போய் வசித்துவா என்று கோபத்துடன் சொல்லி யவளைத் துரத்தினன் என்று சொல்வோம்.

34. மாதுக்கு அந்தஆண்டில் மாரனும் மரித்துமேதான்
காதலி வருத்தமுற்றுக் காலன்தன் பதிக்குச்சென்று
வேதனல் வரியப்பட்டு விளங்கினள் என்றுசொல்வோம்
சூதாக வணியன்சாபம் சேர்ந்ததால் தொகைக்கேதான்.

34. மாதுவுக்கு அந்த வருடத்தில் புருடனும் மரித்தான். அவளும் வருத்தத்துடன் எமலோகம் சென்றாள். பிரம்மாவால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு விளங்கினள் என்று சொல்லுவோம். கெடுதலான வியாபாரியின் சாபம் இவளுக்கே சேர்ந்ததால்,

35. ஆதியில் வரனுமாள்வன் அவளுமே சிறையாய்வாழ்வள்
நீதியாய் ஈரெட்டாண்டில் நிமலியு மரிப்பாளாகும்
காதலி பின்சென்மங்கள் கடையூரில் பரக்குலத்தில்
நீதியா யுதிப்பாளாகும் நிமலியே கேட்டிடாயே.

35. ஆரம்பத்தில் புருஷன் இறப்பான். அவளும் சிறைவாசம் செய்வாள். தருமமாகப் பதினாறும் ஆண்டில் அவளும் இறப்பாள். காதலியின் பின் ஜன்மங்கள் திருக்கடையூரில் பறையர் குலத்தில் உண்டாம். பார்வதியே! நீ கேட்பாயாக.

36. தந்தையின் பூர்வம்சொல்வேன் தென்திசை தவளைதன்னில்
இருந்ததோர் குலமுதித்து இருவினை யில்லாதாகி
முந்தின பொருளும்பெற்று உலகுக்கு நல்லோனாகி
அந்தவன் வினையில்லாமல் அணுகினன் காலனூடு[1].

36. பிதாவின் பூர்விகம் சொல்லுவேன். தெற்குத் திக்கில் துல்யமாயிருந்த ஒரு குலத்திலுத்து நல்வினை தீவினை இல்லாதவனாகி, அழிந்த பொருளையும் அடைந்து உலகினருக்கு நல்லவனாகிச் சிரமமில்லாமல் காலகதியை அடைந்தான்.

---

1. எமலோகம்

37. சிரநான்கோன் வரியப்பட்டு செனித்தவ னென்றுசொல் [வோம்
இருநான்கு திங்கட்குள்ளே ஏகுவான் காலனூடும்
மறுசென்மம் தணிகைதன்னில் வருகுவான் ரெட்டிவம்சம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

37. பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இவன் ஜனனமானான். எட்டு வயதில் மரணமடைந்தான். மறு ஜன்மம் தணிகாசலத்தினில் ரெட்டி வமிசத்தில் பிறப்பான். கணபதியைப் பெற்றதாயே! கேட்பாயாக.

38. பாலகன் தனக்குகண்டம் பகருவோம் அறுபதாண்டில்
சாலவே கெண்டம்நேரும் சண்டனைக் காணுகும்
ஏலவே அறுபானெட்டில் இடபமா தத்திலேதான்
கோலமாய் யுலகுறும் கூறுவோ மிவன்பின்சென்மம்.

38. இவனுக்கு அறுபதாம் ஆண்டில் கண்டம் சொல்லுவோம். எமலோகம் செல்லான். ஆதலால் அறுபத்தெட்டாமாண்டில் வைகாசிமாசத்தில் உலகத்தைவிட்டு நீங்குவான். இனி இவன் பின்ஜன்மம் கூறுவோம்.

39. உத்திரம் வேலங்காட்டில் உதிப்பனும் வேளாளுக
பத்தினி யிவன்பின்னுலே பகருவோம் மாரகங்கள்
வித்தகி பின்சென்மம்கேள் விரிஞ்சியில் சைவசேயாய்
உத்தமி யுதிப்பாளாகும் உரைத்தது தப்பாதாகும்.

39. வடக்கே வேலங்காட்டில் (திருவாலங்காட்டில்) வேளாளனுக அவதரிப்பான். இவனுக்குப் பிறகு இவன் பத்தினியைப்பற்றிக் கூறுவோம். மாரகங்கள் ஏற்படும். இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கேட்பாயாக. விரிஞ்சி தேசத்தில் இவ்வுத்தமி சைவக்குழந்தையா யுதிப்பாள். சொன்னது பிழையில்லை.

40. செனித்திடு காலந்தன்னில் சதயநாள் மூன்றும்பாதம்
இனமுருகு தன்னில்சஷ்டி ஆண்டதின் மேல்திங்கள்
கனமுடன் ஏழதாகும் கழறினோம் பூர்வபாகம்
அணையவே தங்கள்சேயும் அம்பிகை யாளேகேளாய்.

40. ஜனித்தகாலத்தில் சதயநட்சத்திரம்மூன்றும்பாதம், ஷஷ்டி திதி. ஏழாவது மாதம் பூர்வபாகம் சொன்னோம். தங்கள் மகன் நெருங்கும்படியான அம்பிகையே! கேட்பாயாக.

ஜாதகம் 6.

1. சந்திரன் பொன்சேய்றாகு தாகதில்[1] சனியுமாதை
புந்தியு மிரவிகாடி[2] புகர்மானில்[3] கேதுகோலாம்
இந்தவாறு கிரகம்நின்று லக்கினம் கொச்சைதாவ
அந்தத்தோர் சேதியெல்லாம் அறிவிப்பீர் முனியேநீதான்.

1. சந்திரன், குரு, செவ்வாய், இராகு முதலியோர் தகுதியாக மேட லக்கினத்திலிருக்க சனியும், கன்னி சேர, புதனும் சூரியனும் கும்பத்தில் ஏற, சுக்கிரன் மகரராசியிலும், கேது துலாத்திலும் இருக்கும்படியான இந்த கிரக நிலை கொண்ட மேஷ லக்கின ஜாதகனுக்கு உண்டான பலனை எல்லாம் அறிவிப்பீர், முனிபுங்கவரே!

	லக்கினம் ராகு குரு சந்திரன் செவ்வாய்		
புதன் சூரியன்	இராசி சக்கரம்		
சுக்கிரன்			
		கேது	சனி

2. உத்தமி கேட்கும்போது உரைக்கிறார் பராசர்தானும்
வித்தக னண்பால்சென்மம் வந்தஇல் வடதென்வீதி
பத்திய கிழ்பால்வாசல் பாலகன் கணேசன்தெற்கில்
சத்தியு மீனதிக்கில் சங்கரன் கோஷ்டம்தானே.

2. தேவி இவ்வாறு வினவ, பராசர முனிவர்தானும் பின்வருமாறு கூறுவார். இந்த உத்தமன் ஆண் பிறப்பு. பிறந்த வீடு தெற்கு வடக்கு வீதியில் கிழக்குப் பார்த்த வாசலுள்ளது. கணபதி கோயிலும் தெற்கிலுண்டு. அம்மன் கோவில் கடற்கரைப் பக்கம். சிவன் கோவிலும்,

---

1. தகுதியாக இலக்கினத்தில்
2. காடி ; கும்பம்
3. மகரராசி

3. தென்திசை துருவமோடும் சிறப்பான செட்டுஓங்கும்
மன்னர்கள் வாசமாகும் மருவிய பேரூராகும்
பின்னதே பலமும்வாசம் இலகிய சோலையுண்டு
அன்னையின் இல்லம்தோன்றும் அம்பிகை யாளேகேளாய்.

3. தென் திசையிலுள்ளது. வடக்குப் பார்த்தது. சிறப்பான வியாபாரம் ஓங்கும் மன்னர்கள் வசிக்குமிடமாகும். பொருந்திய பெரிய பட்டணமாகும். மகத்தான கோட்டை வாசல். அழகிய சோலையுமுண்டு. இவன் அன்னையின் வீடு நேரிலுள்ளது. அம்பிகையே! கேட்பாயாக.

4. இன்னவள் சென்ன மிருப்பிட மதற்கு ஈரேழு கடிகை [தூரத்தில்
மன்னிய வாயவில தந்தையின் ஊராம் வடதெற்கு [வீதியேயாகும்
இன்னவூர் குடகு வாசலாம் உத்திரம் தேவிமா காளியு [வாசம்
பின்னமாம் குடியும் சிறுகுலமாகும் பெரிதான இல்ல [மென்றேம்.

4. இவள் ஜனன காலத்தில் இருப்பிடம்மேலே சொன்ன வீட்டிற்கு பதினான்கு நாழிகை தூரத்தில் பொருந்திய வடமேற்கில் உள்ளது தந்தையின் ஊர். தெற்கு வடக்கு வீதி யாகும். இந்த ஊர் மேற்கே யுள்ளது வடக்கே காளியம்மை கோவில். அது சிறிது பின்னப்பட்டது. குடியும் சிறிய குடும்பமாகும். பெரிய வீட்டுக்காரர் என்றேம்.

5. தந்தைதாய் யோகம்தானும் தன் துணைக ளத்திரபுத்திரர்
வந்தவன் முன்னுட்செய்கை வரைகிறேம் யோகச்சேதி
பிந்திய சென்மம்யாவும் பேசுவா மிந்நூல்தன்னில்
கந்தனை யீன்றமாதே கழறுவோம் கேட்டிடாயே.

5. பெற்றேர்கள் யோகத்தையும், சகோதரகளத்திர புத்திரர், இன்னும் இவனுடைய முன் ஜன்மச் செய்கை இவற்றையும் கூறுவாம். பிறகு இவனுக்கு ஏற்பட்ட ஜன்மபலன் யாவற்றையும் இந்நூலில் கூறுவோம். கந்தசாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

6. தாதையின் வர்க்கம்தன்னை சாற்றுவோம் ஆண்பால்ரெண்டு
சந்ததம் தீர்க்கமெய்தும் சலிப்புறு மிரண்டுமூன்று
அந்தவர் ஒன்றுய்வாழ்வார் அறைகிறேம் தந்தைசேதி
விந்தையாய்ப் பேசவல்லன் வாததே கத்தானுகும்.

6. தாயின் வமிசத்தைப் பற்றிக் கூறுவோம். இரண்டு ஆடவர் தீர்க்கமாய் எப்பொழுதும் உண்டு. இரண்டு மூன்று துக்கத்தைத் தரும். அவர்கள்

ஒருமிக்க வாழ்ந்து வருவார்கள் என்று சொன்னோம். தந்தை எப்படிப்பட்டவன். வேடிக்கையாகப் பேச வல்லவன். வாதசரீரமுள்ளவன்.

7. பயிர்த்தொழில் செய்வானுகும் பரஉப காரியாவன்
தயவுள மனத்தனுகும் தானிரு நிறத்தனுகும்
அயலால்பொன் னிச்சையில்லான் அண்டினோர்க் குதவி
[செய்வன்
பயமிலான் எதிரிக்கஞ்சான் பகவானின் பக்திகொள்வன்.

7. கிருஷித் தொழில் செய்வான். பரோபகாரமுடையவன். தயையுள்ள மனதை உடையவன். பொது நிற முள்ளவன். பிறருடைய பொருளுக் காசைப்படமாட்டான். அண்டினவர்க்கு உதவி செய்வான். பயமில்லாதவன். பகைவருக்கஞ்சமாட்டான். கடவுளுடைய பக்தியைக் கொள்வான்.

8. வித்தையும் புத்திமானும் விளைபுலம்[1] விருத்திசெய்வன்
உத்தம ஞகிவாழ்வன் ஒண்டொடி தனக்குஇஷ்டன்
சுத்தவான் அருகர்பத்தி தொடுத்ததை வெல்வானுகும்
சித்திர இல்லம்செய்வன் தீர[2]மில்லாத நெஞ்சம்.

8. படித்தவன். புத்திமான். விளைபொருள்களை விருத்தி செய்வான். பூஸ்திதியைப் பெருக்குவான். உத்தமஞக வாழ்ந்து வருவான். பெண்டாட்டியிடத்தில். பிரிய முடையவன். ஒழுங்கானவன். அருகக் கடவுளிடம் (சமணருடைய தெய்வம்) பக்தி பூண்டவன். எடுத்த காரியத்தை வெற்றிபெற நடத்துவான். அழகான வீடு கட்டுவான். தைரியமில்லாத மன முடையவன்.

9. அன்னையு மிரண்டுமாகும் அடிமையோர் குடிகளுண்டு
பொன்பொருள் கையிருப்பு பதருவழி விருத்திசெய்வன்
சொன்னசொல் பிசகிராது தோகையர் மனத்தனுகும்
தனகரம் பிருஷ்டரேகை சங்குசக் கரமுமுள்ளான்.

9. தாய்மார் இரண்டு பேர்கள், அடிமைச் சனங்களுண்டு. பொன், பொருள், கையிருப்பு இவைகள் கெட்டாமல் விருத்தி செய்வான். சொல்லும் வார்த்தையில் பிசகிருக்கமாட்டாது. ஸ்திரீலோலனுயிருப்பன். தனரேகையுடையவன். பிருஷ்டபாகத்தில் விசேஷ ரேகையுண்டு. சங்கு சக்கர முடையவன்.

---

1. விளைநிலம்

2. தைரியம்

10. கோலது ராசியாகும் குறித்தபூ ராடநாளாம்
வேளென[1] ஒப்பதாகும் விருந்தினர் பிரியனாகும்
காலத்தை அறிந்துரைப்பன் கருதிடான் [2]கட்டுவார்த்தை
ஞாலமேல் சல்லியங்கொள்ளான் நவின்றஇக் குணத்
[தானுக்கு.

10. துலா ராசியாகும். குறித்த பூராட நட்சத்திரம் கொண்ட நாளாகும். வள்ளல்களை ஒப்பான். விருந்தினருக்குப் பிரியமாக அமுது படைப்பான். கால ஸ்திதியைத் தெரிந்து கூற வல்லவன். பொய்யான வார்த்தைகளை லட்சியம் செய்யமாட்டான். உலகில் கடன் வாங்கமாட்டான். இந்த குணவானுக்கு,

11. உதிப்பனு மிந்தபாலன் உரைக்கிறே மிவன்குணத்தை
பொதுமாத ரிஷ்டம்கொள்ளான் புத்திமான் யூகைசாலி
நதிபல தீர்த்தம்தோய்வன் நற்புத்தி கல்விமானும்
அதிசய வார்த்தைசொல்வான் அடைந்தோரை ஆதரிப்பன்.

11. நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். இவனுடைய குணாதிசயங்களைக் கூறுகிறோம். வேசியருடன் உறவு கொள்ளான். புத்திமான். நல்ல மதியூகி. பல தீர்த்தாடனங்கள் செய்வான். நல்ல படிப்பாளி. அருமையான வார்த்தைகளைக் கூறுவான். அண்டினோரை ஆதரித்துக் காப்பான்.

12. அன்னைசொல் கடவோனாகும் ஆவுகள் விருத்திசெய்வன்
நன்னிய வசனமுள்ளான் நாவலர்க் கீதாய்யீவன்
அன்னிய ருறவுகொள்வன் அவன்இள மனத்தனாகும்
பொன்னது கொடுக்கல்வாங்கல் புதையல்கள் செய்வானுமே.

12. தாயார் சொல்லைத் தட்டமாட்டான். பசுக் கூட்டங்களை விருத்தி செய்வான். பொருத்தமான பேச்சைப் பேசுவான் படித்தவர்களுக்குத் தான தர்மங்களைச் செய்வான். பிறர் சிநேகத்தைப் பெறுவான். குழந்தைகளைப்போல் இளகிய மனதையுடயவன். ரொக்க லேவாதேவி செய்வான். பணத்தைப் புதைத்து வைப்பான்.

13. வாகன முடையனாகும் மாற்றலர் தனைசெயிப்பன்
யோகவான் தந்தைமேலாய் உத்தமன் வாழ்வானாகும்
ஆகம நுணுக்கம்தேர்வன் அருகர்தன் பத்திகொள்வன்
போகபாக் கியங்களுள்ளான் புவிமீதில் செட்டுசெய்வன்.

13. வாகன முடையவனாகும். எதிரிகளை ஜயிப்பான். யோகவான். தந்தைக்கு மேலாக இவ்வுத்தமன் வாழ்வானாகும். ஆகம சாஸ்திரங்களின்

1. வள்ளல்
2. பொய்

நுட்பங்களை யறிவான் அருகக் கடவுளிடம் பக்தி கொள்வான். போக போக்கியங்களை யுடையவன். உலகினில் வியாபாரங்களைச் செய்வான்.

14. இன்னவன் துணைவர்தன்னை இயம்பமுன் துணைகள்காணன்
பின் துணை விருத்தியென்றோம் பேசுவோ மாண்பால்ரெண்டு
கன்னிகை அவ்வாறாகும் காளைநே ரிளையோர்தோஷம்
மன்னிய நான்காம்சென்மம் மாதைபூ ரட்டைநாளாம்.

14. இவனுடைய சகோதரர்களைக் கூறுவோமென்றால் முன் சகோதர ரில்லை. தம்பிமார்கள் விருத்தியடைவார் என்றோம், ஆண் சகோதரர்கள் இரண்டு பேர். சகோதரிகளும் அவ்வாறாகும். இவனுக்கு நேர் தம்பிமார் தோஷமடைவர். நான்காம் ஜன்மம் கன்னி மாதம் பூரட்டாதி நாளில்.

15. தந்திர வார்த்தைமிக்கோன் தன்பந்துக் கிணக்கம்கூறான்
இந்திர சாலம்சொல்வான் எதிரியை ரசிக்கச்செய்வன்
தன்தன முடையனாகும் சிறுதீனி அதிகம்கொள்வன்
சிந்தையு மர்மனாகும் சேயிழை மார்கள்மோகன்.

85. தந்திரமாகப் பேசுவதில் சாமார்த்தியசாலி. பந்துக்களுக்கு ஹிதத்தைக் கூறமாட்டான். இந்திரஜாலம் கூறுவான். எதிராளிகளைச் சந்தோஷப்படுத்தக் கூடியவன். தன்னுடைய சுயார்ச்சித சொத்தை யுடையவன். அடிக்கடி கொஞ்சம் கொஞ்சம் தீனி தின்பான். மனதில் கபட முடையவன். பெண்களைக் காதலித்து மோகிப்பான்.

16. பலவித வணிகம்செய்வன் பணத்தின்மே லிச்சையுள்ளான்
கலகமா மனத்தனாகும் கட்டுவார்த் தைகளும்சொல்வன்
பலமுள குடும்பியாவன் பூமியில் வறுமைகாணன்
குலவிடும் பித்தசூடு கோமளி ஒன்றேயாகும்.

16. பலவித வியாபாரம் செய்வான். பண ஆசை பெற்றவன். மனக் கலக்க முடையவன். பொய் வார்த்தைகளைக் கொண்டு கதைகள் கட்டிப் பேசுவான். பலமான குடும்பத்தை யுடையவன். உலகில் தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான். பித்தசூட்டு வியாதிக்கு உட்படுவான். மனைவி ஒன்றே யாகும்.

17. வடதிசை அணுகுமென்றோம் மைந்தர்கள் ஆண்பா [லொன்று
அடவுடன் பெண்பாலவ்வாறு அணுகிடு மிவனுக்கேதான்
உடன்கூடி வாழ்வானாகும் உத்தம னிளையோன்சேதி
விடமசென்மம் அவிட்டநாளில் மேவுவான் மாஞ்சிவப்பன்.

17. வடதிக்கிலிருந்து பெண் எடுப்பான். குழந்தைகளாவன: ஆண் ஒன்றும், அதுபோல பெண் ஒன்றும் இவனுக்குப் பிறப்பார்கள். எல்லோருட

னும் ஒத்து வாழ்வான். குமரனே உத்தமன். விஷமஞ் செய்வான். அவனுக்கு நட்சத்திரம் அவிட்டம். மாநிறமுள்ளவன்.

18. பலபேர்கள் மதிக்கவாழ்வான் பரஉப காரியாவன்
நிலமது அதிகம்சேர்ப்பான் நிருபர்கள் இஷ்டம்கொள்வான்
நலமுள புகழுமேற்பன் நற்சுகி போசனத்தான்
கலகமும் கூறுநெஞ்சம் கஞ்சமாம் ரேகையுள்ளான்.

28. இவன் பலபேர்கள் புகழும்படி வாழ்வானாகும். பரோபகார மனமுள்ளவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். எழுத்தாளர்களுடைய பிரியத்தைச் சம்பாதிப்பான். நல்ல கியாதியையும் பெறுவான். நல்ல சுகமான ஆகாரங்களைச் சாப்பிடுவான். மனக்கலக்கத்தை யுடையவன். (கலகத்தை ஒழிக்கும் ஆற்றலுடையவன்.) கையில் பத்மரேகை யுடையவன்.

19. அனைவர்க்கு மேலாய்வாழ்வான் தொல்புவி புகழுமேற்பன்
துணைவனோ.டொத்துவாழ்வன் சுந்தரி ஒன்றேயாகும்
கனமுள ஆண்பால்ரெண்டு கன்னிகை ஒன்றேதீர்க்கம்
வினையதை எண்ணுநெஞ்சம் விளம்புவாம் மேலுங்கேளே.

19. எல்லோரைக் காட்டிலும் மேன்மையாக வாழ்வான். பூலோகத்தில் புகழ் பெறுவான். சகோதரனுடன் ஒற்றுமையாய் வாழ்வான். மனைவி ஒன்றுதான். ஆண் குழந்தைகள் இவனுக்கு இரண்டு பேர்கள். பெண் ஒன்று; நிச்சயம். கர்மாக்களை எண்ணுத மன முடையவன். மேலும் சொல்லுகிறேன், கேளம்மா!

20. பிறந்தசேய் மணத்தின்காலம் பேசுவோம் பதினே
[ழாண்டில்
உறைந்திடும் தென்கீழ்தன்னில் உத்தமி அன்னைவர்க்கம்
பெருமையும் புகழுமுள்ளாள் புண்ணிய மனத்தளாகும்
நிறையவே குடும்பியாவள் நீங்காத செல்வமுள்ளாள்.

20. இவனுக்குப் பிறந்த பெண்ணின் விவாகம் கூறுவாம். தென்கிழக்குப் பக்கத்தில் தாயாரின் வர்க்கத்தில் பதினேழாவது பிராயத்தில் கலியாணம் ஆகும். பெருமையும் புகழும் பெறுவாள். தர்மசிந்தனை யுள்ளவள். அதிகமாய்க் குழந்தைகளைப் பெறுவாள். அழியாத செல்வ முடையவளாவள்.

21. மத்தியில் மரணமாகி மறுமனை[1] நேருமென்றேம்
வித்தகர் பராசர்சொல்ல விருத்தரும் கேட்கலுற்றர்
பத்தினி இரண்டுஎன்று பகர்ந்தினிர் விவரம்சொல்வாய்
குத்தமா யேழில்கேது குறித்தயேழ் பத்தில்நிற்க.

---

1. மனைவி

21. மத்திய காலத்தில் மரணமாகி ஜாதகனுக்கு வேறு மனைவி ஏற்படும் என்றோம் என்று மேலான புத்திசாலியான பராசரர் எடுத்துச் சொல்ல, வயதான மற்றவரும் கேட்கலானார். இரண்டு பெண்டாட்டி என்றீரே. அதன் விவரம் சொல்லுங்கள். சப்தமத்தில் கேது இருப்பது குற்றம். மேலும் சப்தமஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் பத்தாம் வீட்டில் இருக்கிறான்.

22. சரம்[1]தி லிருப்பதாலே சாற்றினோம் தாரம்ரெண்டு
வருமனை கர்ப்பத்தாலே மரணமாய் ரெண்டாமாது
உரைந்திடு முப்பான்ரெண்டில் உத்தமி வடக்கில்நேரும்
பெறுஞ்சுதர் ஆண்பால்ரெண்டு பேதையு மவ்வாருகும்.

22. அவனும் சர ராசியிலிருப்பதனால் தாரம் இரண்டு என்று கூறினோம். வந்த மனைவி கர்ப்பமேற்பட்டு மரண மடைவாள். ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் பிராயத்தில் இரண்டாம் மனைவி ஏற்படும். இவ்வுத்தமி வடக்கிலிருந்து வந்து சேர்வாள். இவளுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண் குழந்தைகளுமுண்டு.

23. அன்னைமாஞ் சிவப்பாளாகும் ஆளனுக் கினியளாகும்
நன்னிய வசனமுள்ளாள் நற்புத்தி யோகசாலி
அன்னியர்க் குதவிசெய்வள் அறமதி லிச்சையுள்ளாள்
பொன்பணி யிச்சையுண்டு புகலுமுன் கோபம்கொஞ்சம்.

23. தாயும் மாநிறம். புருஷனுக்குப் பிரியமாயிருப்பாள். பொருத்தமான பேச்சைப் பேசுவாள். நல்ல புத்தியுடையவள். யோகசாலி. பிறர்க்குதவி செய்வாள். தர்மம் செய்வதில் இஷ்டமுள்ளவள். தங்க நகைகளில் ஆசையுண்டு. கொஞ்சம் முன்கோபமுடையவள் என்று சொல்லப்படுவாள்.

24. தன்துணை ஆண்பாலொன்று தையலர் நான்குதீர்க்கம்
தென்கிழ்பால் இல்லமாகும் தேவியின் பூர்வம்சொல்வேன்
பன்னக மணிந்தோன்வாழும் பாண்டியின் தென்பால் [சிற்றூர்
முன்குல மதனிலுதித்து உயர்வான குடும்பியாகி.

24. இவளுடைய உடன் பிறந்தான் ஒருவன். சகோதரி நான்கு பேர்கள். இது நிச்சயம். தென் கிழக்குப் பக்கத்தில் இவள் வீடு. இவளுடைய பூர்வோத்தரத்தைக் இனிக் கூறுவேன். பாம்பை ஆபரணமாக வுடைய பரமசிவன் வாழும் மதுரைக்குத் தெற்கே சிறிய ஊரில் உதித்தாள். உயர்வான குடும்பி ஆனாள்.

---

1. சரராசி

25. பவ்மது யில்லாதாகி பரந்தனள் காலன்பக்கம்
அவனியில் பிரமன்வர்க்கம் அருகர்தன் குலமுதித்தாள்
நவனியில் வறுமைகாணுள் நாயகி பின்சென்மத்தை
தவசியே சொல்லுகின்றேன் *தக்கோல [1]மருகில்பேரூர்,

25. கடவுளின் கிருபை இல்லாததனுல் எமலோகம் சீக்கிரமே சென்ருள். பிறகு பூலோகத்தில் பிராமண குலத்திலுதித்தாள். சமண மதத்தைக் கைக் கொண்டாள். உலகினில் தரித்திரத்தை அனுபவிக்கவில்லை. இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேன். தமசியே! தக்கோலம் என்ற க்ஷேத்திரத்தின் பக்கத்திலுள்ள பேரூரில்,

26. பிறப்பளாம் பிரம்மசேயாய் பலமுள குடும்பியாகி
அறமதி லிச்சையுண்டாய் அவளுமே வாழ்வாளாகும்
திருமகள் பூர்வம்சொல்வேன் தேயுவின் அருகில்உத்திரம்
குரவர்தன் குலமுதித்து கோவலர் பக்கம்சேர்ந்து,

26. பிறப்பாள். இப்பிராம்மணப் பெண்ணிற்கு அநேகம் குழந்தைகள். தரும காரியங்களைச் செய்வதில் இஷ்ட முடையவள். இந்த லட்சுமியின் பூர்விகம் சொல்லுவேன். அக்கினி திக்கின் வடக்கில் குறவர்கள் குலத்திலுதித்து அரசர்கள் இருக்கும் இடம் வந்து,

27. அதிகார முடையனுகி அழகிய மனைவிமைந்தர்
வதிவனு வாழும்நாளில் வரைகிரோ மூழிதானும்
மதிமுக மாதுதானும் வரனின்றி தாயில்லத்தில்
சதியில வாழுநாளில் தானவன்[2] அவள்மேல்மோகம்,

27. நல்ல அழகன் ஒருவன் இவள் மேல் மோகம் கொண்டான். அதிகாரமுடைய புருஷன், தன் மனைவி மக்களுடன் வாழும் நாளில் ஊழ்வினை இவளைப் பீடித்தது. சந்திரபிம்பம் போன்ற இம்மாது புருஷனை விட்டுத் தன் பிறந்த வீட்டில் மனதில் கபடமில்லாமல் வாழுங்காலத்தில் ஒரு போக்கிரி அவள் மேல் மோகம் கொண்டு,

28. பொன்பணி தாகதந்து போகங்க ளனுபவித்தான்
தன்பந்து அதையறிந்து தையலை விலகும்போது
இன்னவன் காக்கலுற்ருன் இருந்துபின் சிலநாள்சென்று
உன்னத[3] கருவுதங்க உத்தமன் கேள்விப்பட்டு,

---

* தக்கோலம் = ஒரு பிரபல சைவ க்ஷேத்திரம். இது தேவாரத்தில் திருவூறல் எனப்படும். இங்கே நந்திவாயில் சதா சலம் வந்து கொண்டிருக்கிறது.

1. திருவூறல் என்ற க்ஷேத்திரம்
2. போக்கிரி
3. உன் அத்தன்

28. அதிகமாகப் பணங் காசுகளைக் கொடுத்து அவளுடன் போக போக்கியங்களை அனுபவித்தான். சொந்தக்காரர்கள் அதனை அறிந்து இவளை அந்த உபாதையை விட்டு விலக்கும்போது, இவன் அவளைத் திருட்டுத் தனமாகப் பாதுகாத்து வந்தான். இப்படி சில காலம் சென்ற பின்பு கர்ப்பம் ஏற்பட்டது. அந்த விவரம் உத்தமன் கேள்விப் பட்டு,

29. வினைசெய்தான் கருவுதன்னை வித்தகி மரணமானாள்
பிணை[1]யாக இன்னமொன்று பேசுவோம் தாயேயாங்கள்
கனமிலா ஏழையோர்கள் காவலன் தன்பால்சென்று
மணம்சுதர் தனக்குச்செய்ய மாங்கிலியம் தருவாயென்ன,

29. கருவை அழிக்க உபாயங்கள் செய்தான். இவ்வித்தகி (சாமர்த்தியசாலி) மரண மடைந்தாள். இதற்கு உத்திரவாதமாக மற்றொன்று கூறுவோம். தாயே! நாங்கள் பரம ஏழைகள். புருஷனிடம் சென்று கலியாணம் செய்து குழந்தைகளை அனுக்கிரகிக்க மாங்கலியம் தருவாயென்று,

30. ஆசைவார்த் தைகளைச்சொல்லி அந்திய காலம்தன்னில்
கூசாமல் இல்லையென்றான் கூறுவார் ஏழையோர்கள்
நேசம்போல் வார்த்தைசொல்லி நேராமல் கைவிரித்தாய்
வாசமா மனைவிமாண்டு மறுமனை வாய்க்குமன்றி,

30. ஆசை வார்த்தைகளைச் சொல்லிக் கடைசியில் மனம் கூசாமல் இல்லை என்றால் ஏழைகள் எப்படி காம பாதை அடையுமோ அஃதேபோல் சொன்ன வார்த்தைப்படி நேராமல் கையை விரித்ததால் மனைவி வெட்கப்பட்டு மரணமடைய வேறு பெண்டாட்டி வாய்க்குமல்லாமல்,

31. மறுசென்மம் தோன்றியேதான் மனைவிக ளிருவராகும்
வருங்கர்ப்பத் தாலேமாண்டு மறுமுனை நேருமென்று
உரைத்துப்பின் சென்றாரென்றோம் உறைந்தது அந்த [தோஷம்
இருமனை யாகியேதான் ஏகினள் காலன்பக்கம்.

31. அடுத்த ஜன்மத்தில் இவர்களும் உதித்து இரண்டு மனைவியர்களாவர். ஏற்படும் கர்பத்தினால் மரணமடைய வேறு கலியாணம் ஏற்படும் என்று கூறிப் பிறகு சென்றார் என்றோம். அந்த தோஷம் இவனைப் பிடித்தது. இரண்டாவது மனைவி வந்தபிறகுதான் இவளும் எமலோகம் சென்றாள்.

32. கஞ்சனால் வரியப்பட்டு காளையு மிச்சென்மத்தில்
மிஞ்சிய சின[2]குலத்தில் மேவின னென்றுசொல்வாம்
பஞ்சைகள் சாபமொன்று பற்றிய கருவின்தோஷம்
அஞ்சாமல் நேருமென்றோம் அணுகிடும் பாரிரெண்டு.

---

1. உத்தரவாதம்
2. சைனர்

32. பிறகு பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டு ஜாதகனும் இந்த ஜன்மத்தில் பெரிய ஜைனர்குலத்தில் உதித்தான் என்று சொல்லுவோம். ஏழைகளுடைய சாபமேற்பட்டு சர்ப்பதோஷம் தப்பாமல் ஏற்படுமென்றோம். அதனால் பெண்டாட்டி இரண்டு என்றோம்.

33. வந்தவன் பொதுயோகத்தை வரைகிறோம் கேதாரயோகம்
சந்ததம் வேசி[1]யாகும் சங்குசக் கரயோகங்கள்
இந்தவாறு யோகம்சொல்வோம் இயம்புவோம் பலனை [யாங்கள்
முந்தின குடும்பியாவன் உயர்வோர்கள் பக்திபூண்பன்.

33. இவனுடைய பொதுவான யோகவிசேஷத்தைக் கூறுவோம். அதுதான் கேதாரயோகம். (ஏழு கிரகங்கள் இடையீடின்றி நான்கு ராசிகளில் நிற்கவரும் யோகம்.) எப்பொழுதும் வியாபாரம் செய்வான். சங்குசக்கர யோகங்கள் கூடும். இதன் பலனை நாங்கள் கூறுவோம். பழைய குடும்பியாவன். பெரியோர்களிடத்தில் பக்தி கொள்வான்.

34. பலஊரில் பூமிசேர்ப்பன் பாக்கிய முடையனவன்
குலம்தலமது வேறுசெய்வன் தனமது இருப்புகொள்வன்
பலமுளோர் வசியம்கொள்வன் புகழுளான் பகைநாசம்தான்
குலம்விடு மூன்றுஇல்லம் குலத்துக்கு மேலாய்வாழ்வன்.

34. பல ஊர்களில் நிலபலங்களை வாங்குவான். பாக்கியமுள்ளவன். குடித்தனத்தை வேறு வீட்டிற்கு மாற்றுவான். பணத்தைச் சேர்த்து வைப்பான். பலவான்களை வசியப்படுத்திக்கொள்வான். கீர்த்தியுள்ளான். பகைவர்களை நாசம் செய்வான். மூன்று வீடுகளுக்கதிபதி ஆவன் குலத்தவர்களில் மேலாக வாழ்ந்து வருவான்.

35. பொருளது பூமிதன்னால் பொருந்திடும் பதினேழாண்டில்
பிறைதசை சனிபுத்தி வருங்காலம் நேருமென்றோம்
திருமகன் குடும்பச்சேதி செல்லுவார் இருபா(ன்)னில்
திருபாக மாகச்சொல்வோம் செல்விதி[2] மேலுங்கேளே.

35. பூஸ்திதிகளால் பொருள் சேரும். இவனது பதினேழாம் வயதில் சந்திரதசை சனிபுக்தி வரும்காலம் என்று சொல்வோம். இந்த லட்சுமி கடாக்ஷம் பொருந்தியவனுடைய குடும்பசமாசாரத்தைச் சொல்லுவார். இருபத்துநான்காம் பிராயத்தை மூன்று பாகங்களாகப் பிரித்துக் கூறுவோம். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

---

1. வியாபாரி
2. சேல்விழி!

36. எண்ணஞ்சு ஆறுஆண்டில் இவன் துணை வேருய்செல்வர்
வண்ணமாய் பாகமூன்று மருவிடும் என்றுசொல்வோம்
திண்ணமாய் கடையோன்தானும் சிறப்புற்று வாழ் [வானுகும்
அண்ணலைப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

36. இவனது நாற்பத்தாருரும் ஆண்டில் இவன் சகோதரர் வேருகச் செல்லுவார்கள். சரியாக மூன்று பாகமாய்ச் சொத்துக்கள் பிரியும் என்று சொல்லுவோம். நிச்சயமாய்க் கடைசியிலிருப்பவனும் சிறப்பாக வாழ்ந்து வருவான். பகவானைப் பூசைசெய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

37. தந்தையின் பூர்வம்சொல்வேன் தென்கயி லாயம்[1]தன்னில்
வந்தனன் வைசியசேயாய் வளமுள செட்டுசெய்து
நொந்தபோர்க் குதவிசெய்து நேமியில் தலங்கள்சென்று
விந்தையாய் மார்க்கம்தன்னில் விடாய்தாகப் பந்தல் [வைத்தும்,

37. தந்தையின் பூர்விகத்தைச் சொல்லுவேன். திருக்காளத்தி ஸ்தலத்தில் வைசியபுத்திரனுய்ப் பிறந்தான். விருத்தியான வியாபாரம் செய்து சிரமப்பட்டவர்களுக்கு ஒத்தாசை செய்து, பூமியில் உள்ள சிவஸ்தலங்களுக்கெல்லாம் போய்த் தரிசித்து வேடிக்கையாக எல்லா ரஸ்தாக்களிலும் தாகம் தீர்க்கத் தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்தி,

38. காலன்தன் பதிக்குப்புக்கு கஞ்சனுல் வரியப்பட்டு
சீலமாங் குலத்திலேதான் செனித்தவ னிவனேயென்ருேம்
ஞாலமேல் வறுமைகாணுன் நசித்தோர்க் குதவிசெய்வன்
பால்பாக்கிய முடையனுகும் பத்தினி கேட்டிடாயே.

38. எமலோகம் சென்றதும், பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு மேலான குலத்திலேதான் ஜனித்தானிவன் என்ருேம். பூமியில் வசிக்கும் நாளில் தரித்திரத்தை அநுபவியான். வறுமைப்பிணி பூண்டவர்களுக்கு உதவி செய்வான். பசுக்களை அடைந்து பால்பாக்கியம் பெறுவான். அம்பிகையே! கேட்பாயாக.

39. பின்சென்மம் வடமேல்திக்கில் பெருமட மயிக்குலத்தில்
அன்னவ னுதிப்பானுகும் அருகர்தன் பூசைபூண்டு
துன்னிய தேவனுக தோன்றுவா னிவனேயென்ருேம்
உன்னத தவங்கள்செய்ய உத்தமி கேட்டிடாயே.

39. மறுஜன்மம்: வடமேல்திக்கில் பெரியவீடு. இக்குலத்தில் அவன் பிறப்பான். அருகக்கடவுளை வழிபட்டுப் பெரிய தெய்விகபுருஷனுய் இவன் அவதரிப்பான். கடவுளைக் குறித்துத் தவங்கள் செய்வான். உத்தமி! கேட்பாயாக.

---

1. திருக்காளத்தி

40. முப்பது ஆண்டுதன்னில் மூலமா தத்திலே[1] தான்
செப்புவோம் தந்தைகெண்டம்..................
அப்போது பணி[2]யின்சக்கரம் ஆரல்[3] தன் புத்தியாகும்
இப்படி பராசர்சொல்ல இயம்புவார் அத்திரிதானே.

40. முப்பதாவது வயதில் சித்திரை மாதத்தில்தான் சொல்லுவோம் தந்தையின் கண்டம். அப்போது அவனுக்கு இராகுதசை செவ்வாய்புக்தி நடக்கும். இவ்விதம் பராசரர் சொல்ல, அத்திரி மகரிஷி சொல்லலுற்ருர்.

41. இருபது ஆண்டுதன்னில் இயம்புவோம் தந்தைகண்டம்
பாரினில் அஞ்சோன்லாய(லாபம்) பற்றின திசையில்
[சொல்வோம்
சூரியன் பருதியோடு கூடியே யிருப்பதாலே
மாரகம் நேராதென்ருேம் அதுமாரஞ்சு ஆண்டில்நேரும்.

41. இருபதாவதுவயதிலேயே தந்தையின் கண்டம் என்று சொல்லலாம். ஐந்துக்குடையவன் லாபஸ்தானத்திலிருப்பதனுல் அவனுடைய தசையில் அதைச் சொல்வோம். புதன் சூரியனேடு சேர்ந்திருப்பதாலே மாரகம் நேராதென்ருேம். அஃது இவனுடைய முப்பதாம் ஆண்டில்தான் நேரிடும்.

42. அன்னையு முப்பானெட்டில் ஐப்பசி மாதந்தன்னில்
உன்னத பதவிசேர்வள் உதித்தவன் அறுபானேழில்
மன்னிய மேடமாதம் வரைகிருேம் கெண்டம்தானும்
பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனும் பிரம்மசேயாய்.

42. இந்த ஜாதகனுடைய தாயாரும் இவனுடைய முப்பத்தெட்டாவது பிராயத்தில் ஐப்பசிமாசத்தில் உன்னதமான பதவியை (சுவர்க்கத்தை) அடைவள். இவனே இவனுடைய அறுபத்தேழாம்வயதில் பொருந்திய சித்திரை மாதத்தில் கெண்டமேற்பட்டு இறப்பான். மறுஜன்மம் காஞ்சீபுரத்தில் பிராமணக்குழந்தையாய்ப் பிறப்பான்.

43. புரந்திடு காலம்தன்னில் புகர்திசை ஆண்டுஐந்தும்
உரைந்திடு மெய்திஞேர்திங்கள் உரைக்கிருேம் பலனை
[யாங்கள்
வருந்துணை விருத்திசேதம் மானிலம் பலிதமாகும்
தரையது சேருமென்ருேம் சாற்றுவோம் விவரம்ரெண்டில்.

43. பிறந்தகாலத்தில் சுக்கிரதசை. இது ஐந்து வயது ஒரு மாதம் வரை நடக்கும். இதன் பலனை நாங்கள் உரைக்கிருேம். ஏற்படும் சகோதர விருத்தி உண்டாகும். சிலர் சேதமாவர். பரந்தபூமியில் கிருஷித்தொழில் பலனை யளிக்கும். பூமிச் சேர்க்கை ஏற்படும். இரண்டாவது பாகத்தில் இதன் விவரம் கூறுவோம்.

---

1. சித்திரை
2. இராகு
3. செவ்வாய்

ஜாதகம் 7

1. ஆடுசென்மம் இரண்டில் குசன்காரியெட்டில்
அருக்கன்புதன் புகர்மூன்றில் பணிப்பு[1] அஞ்சில்
நீடுகுரு பனிரெண்டில், மதியும் கேதுநின்றிட
லாபமுற, பூரட்டை பூர்வம்
தேடியே உதித்தவர்க்கு பலன் எவ்வாறு செப்புவீர்
தவமுனியே! விபரமாக
நாடிடுமேலுன் சென்மம் சமவூராகும்
நதிசடையி லணிந்தவனும் உத்திரத்தில்.

1. இலக்கினம் மேஷம். இரண்டாம் வீட்டில் செவ்வாய், சனி விருச்சிக ராசியிலும், சூரியன், புதன், சுக்கிரன் இவர்கள் மிதுனத்திலும், இராகு சிம்மத்திலும், வியாழ பகவான் மீனத்திலும், சந்திரன், கேது, இலாபஸ்தானமான கும்பராசியிலும் இருக்கும்படியான கிரகநிலை கொண்ட இந்த ஜாதகனுக்குப் பலன்களை எப்படி விவரமாகச் சொல்லுவீர், தவமுனியே! இந்த ஜாதகன் உதித்த ஊர் சமவூராகும் (சம வெளியில்).

குரு	லக்கினம்	செவ்வாய்	சூரியன் புதன் சுக்கிரன்
சந்திரன் கேது	இராசி சக்கரம்		
			ராகு
	சனி		

வடக்கே கங்கைவார்சடையினனான சிவன் கோவில்.

2. தென்வடக்கு வாசியதாம் இந்திரவாடை
சக்காத்தோன் வடமேல்பால் தங்குமென்றோம்
அன்னவனும் கங்கைகுல னுதிப்பானாகும்
அறைகிறோம் தந்தைக்குத் துணைஆண்ஒன்று
பிந்திபா கம்தனிலே புகல்வோம்சேதி
பிதுர்பலத்தைக் கூறுகிறோம் நல்லோனாவன்
சிந்தைநலம் சாந்தவான் பூமிவிருத்தி
செனமதிக்க வாழ்ந்திடுவன் சீலம்கொஞ்சம்.

2. தெற்கு வடக்குவீதி. கிழக்குவாடையில் வடமேற்கில் விஷ்ணுவாலயம். ஜாதகன் வேளாளர் குலத்திலுதிப்பானாகும். தந்தையுடன் பிறந்

---

1. இராகு

தவர் ஆண் ஒன்று. பிற்பாதியில் விவரமுள்ள செய்திசொல்லுவோம். இப்போது பிதாவின் பலனைக் கூறுவோம். நல்லவனுவன். நல்லமனமுடையவன். சாந்தகுணமுடையவன். பூமியைவிருத்திசெய்வான். ஜனங்கள் கௌரவிக்கும்படி வாழ்ந்திடுவன். சிறிது தரும சீலன்.

3. கொஞ்சுகிளி வார்த்தையுள்ள குணவானுவன்
குண்டை[1]கோ விருத்தியுண்டு கொடூரம்காட்டான்
வஞ்சியர்கள் பலவாக மணங்கள்கொள்வன்
மனமிரக்க முடையவனும் பலர்சகாயன்
வெஞ்சினங்கள் வெளிக்காட்டான் அறத்திலிச்சை
விளைபுலங்கள் சேர்த்திடுவன் தஞ்சமென்றோர்க்
குதவிடுவன் தனவானுகும் தங்கிடுமே
நல்வினை சாற்றக் கேண்மோ.

3. கிளிகொஞ்சுவதுபோல் இனிமையானவார்த்தைகளைப் பேசுவான். நல்ல குணவான். எருதுகளை விருத்திசெய்வான். அநேகம் பசுக்களை உடையவன். கோபத்தைக் காட்டமாட்டான். பல ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொள்ளுவான். இரக்கபுத்தியுடையவன். பலருக்கு உபகாரம் செய்வான். கொடிய கோபதாபங்களை வெளிக்காட்டான். தருமம் செய்வதில் விருப்பமுள்ளவன். விளைநிலங்களை வாங்கிச் சேர்த்துக்கொள்ளுவான். அண்டினவரைக் காப்பான். நல்ல தனவான். நல்ல புண்ணியங்கள் இவனைச் சேரும். சொல்லுவதைக் கேட்பாயாக.

4. சொன்னயிக் குணத்தானுக்குமே பாரிமூன்று
தோன்றிடுமே 'யென்றோம்
இன்னவன் கடைமாதுக்கு
தோன்றும் எய்திடும் இரக்கையன்[2] புகல்வேன்
மன்னர்களுறவு மாடுகள் விருத்தி
மானிலம் சேர்த்திடுவானும்
அந்நகர் கிராம அதிகாரம் சின்னுள்
அவனுமே செய்திடுவானும்.

4. இந்தக் குணவானுக்கு மூன்று பார்யைகள் ஏற்படுவார்கள். இவனுடைய கடைசிப்பெண்டாட்டிக்குப் பிள்ளை பிறக்கும். கடவுளுடைய பிரசாதம் ஏற்படும் என்று சொல்லுவேன். அரசர்களுடைய சிநேகம் உண்டாகும். மாடுகன்றுகள் விருத்தியாகும். பரந்த பூமியைப் பெறுவான். இவனிருக்கும் ஊருக்குச் சிலநாள் கிராம அதிகாரியாயிருப்பான். அந்த வேலையை அவன் பார்த்து வருவான்.

---

1. எருது
2. இரக்கை = விபூதி

5\. அறமதி லிச்சை அற்புதவார்த்தை
அழகிய மானிற முடையான்
பெறுமவர்[1]நேசம் பிறர்மொழிதள்ளான்
பேச்சதைக் காத்திடுவானுகும்
நெறியதை சிலது தவறுதலைச் செய்வன்
நினைத்த காரியங்களை முடிப்பன்
மருமமில்லாதான் மாமிகளிரண்டு
மருவிடுமம்பாலோர் தன்பத்தி.

5\. தருமஞ்செய்ய விரும்புவான். அற்புதமாய்ப் பேசவல்லோன். அழகிய மானிறமுடையவன். பெரியோரைத் துணைக்கொள்ளுவான். பிறர் சொன்னவார்த்தைகளை அலட்சியம் செய்யமாட்டான். சொன்னசொல்லைக் காப்பாற்றும் திறமுடையவன். சிறிது ஒழுங்கான முறையைவிட்டு நீங்குவான். எண்ணிய கருமங்களைச் செய்துமுடிப்பான். மனதில் கபடில்லாதவன். மாமியார் இரண்டு பேர்கள். பெற்றபிள்ளைகளின்பேரில் வாஞ்சை ஏற்படக் கூடியவன்.

6\. பத்தியென்றோருக் கன்னமுமீவன்
பலசகாயங்களும் செய்வன்
வித்தையுமுடையன் விடவாக்குமுடையன்
மேவிடும் பித்தசூடென்றோம்
அத்திபோலொத்த தேகமுமுடையன்
ஆண்டி சேர்க்கையு முண்டாம்
சித்திரஇல்லம் செய்திடுவானும்
சிறுத்தோர்க் குதவியே செய்வன்.

6\. அண்டினபேர்களுக்கு அன்னங்கொடுத்துதவுவான். பல ஒத்தாசைகளையும் புரிவான். நல்ல அறிவாளி. படித்தவன். விஷம் தெரிக்கும்படிப் பேசவல்லான். சிறிது மயக்கமுடையவன். அத்திபோன்ற தேகத்தையுடையவன். சிவனடியார்களின் சகவாசமுடையவன். அழகான வீட்டைக் கட்டுவான். வறியோர்க்கு ஒத்தாசை செய்வான்.

7\. செய்திடும் துணைஆண் ஒன்றுமேயென்றோம்
செல்விமார் மூவரே தீர்க்கம்
பையவே ஒன்ருய் வாழ்ந்துமே பின்பால்
பாகமாம் செல்வனும் துணையும்
ஐயங்களுண்டு பின்பாகம் புகல்வேன்
அரைகிறோம் பாலகன் மணத்தை

1\. பெரியோர்

தையலும் வடபால் சேர்ந்திடு மென்றோம்
சனிதசை இருபது மூன்றுள்
மைவிழி குணத்தை மாந்தளிர்மேனி
மனதுக்கு இசைந்தவ ளென்றோம்.

7. இவனுக்கு ஒரே ஆண்குழந்தை பிறக்கும். புத்திரிகள் மூன்று. அது தீர்க்கமாய்ச்சொல்லலாம். கொஞ்சங்கொஞ்சமாக எல்லோரும் ஏககுடும்பமாய் வாழ்திருந்து பிறகு பிள்ளைக்கும் இவனுக்கும் பாகபத்திரம் ஏற்படும். இவர்களுக்குள் சமுசயமுண்டு. இதைப் பிற்பாடு புகல்வேன். இனிச்சொல்லுகிறோம் பையனுடைய கல்யாணத்தை. வடக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள். அதுவும் இவனுடைய சனிதசையில். அப்போது இவனுக்கு இருபத்து மூன்றும் பிராயம். மையலுடைய குணமுடையவள். மாந்தளிர்போன்ற மேனி. மனதிற்குப் பிடித்தவள் என்றோம்.

8. பலருக்கும் நல்லோள் பைங்கிளிவார்த்தை
பாம்புபோல் கோபமும் கொஞ்சம்
நிலையிலார்தமக்கு நேருவாள் தாகம்
தீர்த்தோர்போல் குணமென உடையாள்
குலம்மதிப்பாக வாழ்ந்திடு வாளாம்
தோகையும் தீர்க்கமாம் வயது
நலமதை யெவர்க்கும் செய்திடுவாளாம்
நாயகி கேட்டிடு வாயே.

8. பலருக்கும் நல்லவள். கிளிபோல் கொஞ்சும்படியான இனிய வார்த்தைகளைப் பேசுவாள். கோபம் வந்தால் பாம்புபோல் சிறிது சீறி விழுவாள். தாகமுள்ளவர்களுக்குத் தாகம் தீர்ப்பதுபோல் நிலையில்லாதவர்களுக்கு ஒத்தாசைசெய்யும் குணமுடையவள். குல மரியாதைதப்பாமல் வாழ்ந்து வருவாள். அவளுக்கும் தீர்க்காயுசுதான். யாவர்க்கும் நன்மையே செய்திடுவாள். தாயே! கேட்பாயாக.

9. சுதர்களும் ஆண்பால் தோன்றிடுமே
திதாம் செல்விமார் மூவரே தீர்க்கம்
ஏதுவிதம் சுதராளுண் தோஷமேயென்றீர்
ராகுவும் அஞ்சினில் தங்க
தசமத்தோன் எட்டில் சார்ந்ததால் புகன்றோம்
சாதகன் முன்ஜென்மத் தோஷம்
அதுவினை புகல்வீர் அவன்பூர்வம் சொல்வேன்
அப்புவின் தலத்தினி லேதான்.

9. இவளுடைய புத்திரபாக்கியத்தைப் பற்றிப் பேசுவோம். ஆண் குழந்தை பிறந்திடும். அது சேதமாகும். புத்திரிகள் மூன்று. இது நிச்சயமாயிருக்கும். எக்காரணத்தை முன்னிட்டும் குழந்தைகள் ஆறு. ஆண்குழந்தை தோஷத்தை யடையுமென்றீர். ராகு ஐந்தாம் வீட்டிலிருக்க, பத்துக்குடைய சனி எட்டாமிடத்திலிருப்பதால் இவ்வாறு சொன்னோம். இது ஜாதகனுடைய போனஜன்மத்தில் ஏற்பட்ட தோஷம். அதன் காரியத்தைச் சொல்லுவீர். அவனுடைய பூர்விகத்தைச் சொல்லுகிறேன். நீர்நிலைகளுடைய ஊரில்,

10. அக்கினி குலத்தில் அவனுமே தோன்றி
ஆண்மையைக் குடும்ப மேயாகி
தக்கவே வாழ்நாளினில் வினையும் சாற்றுவோம்
தவம்புரிவோர்க்கு
மிக்கவே இடைஞ்சல் செய்தனன் என்றோம்
மெல்லியாம் ஏழையாம் மாது
துக்கமாய் அன்னம்குரவு தாய் தன்பால்
சேர்ந்துமே பணிகளும் செய்து.

10. வன்னியர் குலத்தில் அவன் தோன்றினான். தைரியமுள்ள குடும்பியாய்த் தகுதியாக வாழும் நாட்களில் ஒரு கர்மா ஏற்பட்டது. அதைச் சொல்லுவோம். தபசிகளுக்கு அதிகமான இடைஞ்சல்களைச் செய்தான் என்றோம். தரித்திரம் பிடித்தது. பெண்டாட்டி தன் தாயார் வீட்டுக்குச் சென்றாள். அங்குப் பணிவிடைகள் செய்து வந்தாள். மிக்க துக்கத்துடனிருந்தாள்.

11. இருக்கும் நாள்தன்னில் சிலதுநாள் சென்று
ஏகினள் சிலது பொன்கவர்ந்து
மறுதினம் பார்த்து மாதுவைத்தேடி
மங்கையும் நேரிடாதாலே
குறைமனமாகக் கூறுவான் சொல்வேன்
கோதை முன்பின் கடன்தானோ ?
பொருளது கவர்ந்தாய் கணபதி நீதான்
பேதைக்குக் கூலியும் தருவாய்.

11. இப்படி இருக்கும் நாளில் சிலகாலம் சென்றபின் பணத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டாள். மறுநாள் இவளைத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. மனக்குறைவுடன் சொல்லுவான். அதைச் சொல்லுகிறேன். இவள் முன்காலத்தில் நமக்குக் கடன் கொடுத்திருந்தாளோ. அதனால் இப்பொழுது திருடிச்சென்றாளோ! பணத்தைத் திருடினதால் விநாயகக்கடவுள்தான் இவளுக்குத் தக்க கூலி கொடுக்க வேண்டும், என்றான்

12. இன்னமும் பலவாறு சொல்லியேதானே
இரைத்தனன் என்றுமே சொல்வோம்
கன்னிக்கு அந்தச்சாபமும் நேர்ந்து
காளையும் அந்தியம் தன்னில்
தன்வினை நீக்கும் சேதுவும் சென்று
தென்பதி நாடுமே சென்று
பொன்னவன் வரிய வந்தவ னென்றோம்
பொருளது கவர்ந்ததோர் மாது.

12. இப்படியெல்லாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கூறினபிறகு, பாரியைக்கு அந்தச் சாபம் பீடித்தது. புருஷனும் அந்தியகாலத்தில் தன் பாவங்களைப் போக்கும்பொருட்டு ராமேச்வரம் போய்ச் சேதுஸ்னனம் செய்தான். எமலோகம் சென்றாள், பணம் திருடிச்சென்ற ஸ்திரீ.

13. மறுபாரியாக வருகுவ ளென்றோம்
மாரனுக் காரேழ் என்றான்
உரைகுவாள் சுதர்ஆண் ஒன்றென
மொழிந்தோம் உத்தமிமார்களு மிரண்டு
திருகிலா தீர்க்கம் மாதுவின் குணத்தைச்
செப்புவீர் முனிவரே என்ன
பொய்சொலாள் சேர்ப்பின் சாந்தமுடையள்
பேதையும் வடதிசை என்றோம்.

13. திரும்பவும் அடுத்த பாரியை வருவாளென்றோம். இவனுக்கு நாற்பத்திரண்டு பிராயமாகும் அப்பொழுது. ஆண் குழந்தை ஒன்று என்று மொழிந்தோமல்லவா. புண்ணிய குமாரிகள் இரண்டு பேர்கள். இடைஞ்சலில்லாத தீர்க்காயுசு. இவளுடைய குணத்தை எடுத்துரைப்பீர்! முனிவரே! என்று கேட்க, பொய் பேசாள். பூமியில் சாந்தமுடையவள். அவளும் வடபக்கத்திலிருந்து வருவாள் என்றோம்.

14. தரித்திரமில்லாள் அன்புடையவளாம்
சத்தியும் தீர்க்கமாம் வயது
பெருத்த புத்திகளும் பிழைகுணமில்லாள்
பால்பாக்கியம் விருத்தியே யுடையாள்
உரைத்தசொல் காப்பள் பலருக்கும் நல்லோள்
உவமையாய் வார்த்தையு முடையாள்
சிறுத்தோர்க்கு தாகம் செய்நன்றி மறவாள்
சிலசேதி பின்பாகம் புகல்வேன்.

14. தரித்திர மில்லாதவள். அன்புடையவள். நல்சக்தி வாய்ந்தவள். வயதிற்கு ஏற்ற புத்திகளும், பிசகு இல்லாத குணவிசேஷமும், விருத்தியடையும்படியான பால்பாக்கியமும் உடையவள். சொல்லிய வார்த்தையைக் காப்பாற்றும் திறமுடையாள். பல ஜனங்களுக்கும் மிக்க நல்லவள். வறியவர்களுக்கு அன்ன ஆகாரங்களும் தந்து பிறர்செய்த நன்றியை மறக்க மாட்டாதவள்.

சில செய்திகளைப் பின்னால் வரும் பாகத்தில் கூறுவேன்.

15. பாலகன் யோகம் பகருவேன் தாயே
பரந்து விருத்தியே செய்வன்
சீல்வான் தருமசிந்தையு முடையன்
செய்ந்நன்றி மறவாதவ னாகும்
ஞாலமேல் வறுமை யில்லாதவனென்றோம்
நாதனார் பத்தியும் பூண்பன்
காலனைக் காணுவயதுமட்டுலகில்
கடனிலான் பெருமையாய் வாழ்வன்.

15. இந்த ஜாதகனுடைய யோகவிசேடங்களைக் கூறுவேன், தாயே,! பரந்த பூஸ்திதிகளை விருத்திக்குக் கொண்டுவருவான். நல்ல குணசீலன். தருமசிந்தனை யுடையவன். செய்ந்நன்றி மறவாதவனாகும். உலகினில் தரித்திரமே யடையாதவன். கடவுள்மேல் பக்தி கொள்வான். சாகும் வரையில் பூமியில் கடன் கப்பி இல்லாதவன். கௌரவமாயும் பெருமையுடனும் வாழ்ந்து வருவான்.

16. மாதுரு குணத்தை வரைகிறோம் இனிமேல்
வார்த்தையும் நல்லதாம் பொறுமை
சூதிலாள் அன்னம் அன்புடனீவள்
சோர்வோர்க்குத் தாகமே யீவள்
பாதகமில லாள் பண்போர் போல்குணத்தாள்
பதறிலாள் துணை ஆண்பால் ஒன்று
காதலி மார்கள் இரண்டெனப் புகல்வோம்
கனக்காது பிறந்து என்றோம்.

16. மாதாவின் குணத்தை இனிமேல் கூறுவோம். நல்ல வார்த்தைகளைப் பேசுவாள். பொறுமையுடையவள். சூதுவாதில்லாதவள். அன்புடன் யாவர்க்கும் அன்னமளிப்பாள். களைப்பாய் வருவார்க்குத் தாகசாந்தி செய்விப்பாள். யாவருக்கும் சாதகமாயிருப்பாள். பாதகம் செய்யமாட்டாள். செப்பனிடுவோர்போல் நல்ல குணமுடையவள். அவசரப்படமாட்டாள. இவள் உடன்பிறந்தவன் ஒருவனே. சகோதரிகள் இரண்டென்று சொல்லுவோம். இவளால் பிறருக்குச் சிரமமிருக்காது என்றோம்.

17. முன்செனமம் புகல்வோம் முக்கூடல் கீழ்பால்
முதியூரில் கருணீகர்[1] குலத்தில்
அன்னவனுதித்து ஆண்மையாய்க் குடும்பமாகி
மாகியே சுதர்களு முண்டாய்
பின்னோர்க்குத் தாகம் விரதங்கள் பூண்டு
பிழையது யின்றியே மாது
தன்வரன் முன்னே மரணமே யாகி
தலைநான்கோன் வரியவே வந்தாள்.

17. இவளுடைய முன் ஜன்மத்தைக் கூறுவோம். முக்கூடலுக்குக் கிழக்கே முதியூரில் கருணிகர் குலத்தில் உதித்தாள். (முக்கூடல் = மூன்று நதிகள் கூடும் புண்ணியத்துறை. திருநெல்வேலி ஜில்லாவில் சித்திரா நதியும் உப்போடையும் தாமிரபரணியுடன் கூடும் இடத்துள்ளதொரு விஷ்ணுஸ்தலம்.) மேலான குடும்பியாகிப் புத்திர பாக்கியத்தைப் பெற்றுக் கீழ்மையாயுள்ளோர்க்கு அன்னபானாதிகளைக் கொடுத்து, நல்ல விரதங்களைப் பூண்டு யாதொரு குற்றங்குறையுமில்லாமல் இம்மாது தன் புருடனுக்கு முந்தியே மரணமடைவாள். பிறகு பிரம்மாவின் ஸ்ருஷ்டியால் மறுபடியும் உற்பவித்தாள்.

18. மறுசென்மம் கடையூர் மானகர்தன்னில்
வருகுவாள் சவுராஷ்ட்ர வம்சம்
பொருளது பெருக்க மாகியே வாழ்வள்
பிதாவின் தன் பூருவம் புகல்வேன்
முருகர்வாழ் மயிலம் மேற்றிசை தன்னில்
உதித்தனன் முதல்குல மதனில்
வறுமைக ளின்றி வாழ்ந்திடு நாளில்
மருவின வினையதைப் புகல்வேன்.

18. இவள் மறு ஜன்மத்தில் திருக்கடையூர் என்ற விசேஷ ஸ்தலத்தில் பிறப்பாள். சௌராஷ்டிர வமிசத்தில் உதித்துப் பணக்காரியாகவே வாழ்வாள். இவளுடைய பிதாவின் பூர்வோத்தரங்களைக் கூறுவேன். அவன் முருகக்கடவுள் வாழும் மயிலம் என்ற ஊருக்கு மேற்கே உதித்தான். (மயிலம் = தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம்.) முதன்மையான குலத்தினில் உதித்தான். சிரமமில்லாமல் வாழ்ந்து வருங் காலத்தில் ஒரு சிரமம் இவனை அடைந்தது. அதைக் கூறுவேன்.

---

1. கிராமக்கணக்கன்

19. விலைமாதர் தன்னை அனுசரித்தவனும்
மெல்லிபால் பணிகளும் பெற்று
யிலையென்று சொல்ல மாதுவும் கூட்டி
இயம்பின சாபத்தைக் கேளாய்
நிலையென்று பார்த்தேன் மோசங்கள் செய்தாய்
நேரும் பின் சென்மங்கள் தன்னில்
தலைவிமார் அநந்தம் சார்ந்திடும்
பாரி தங்கைமா ரின்றியே வாழ்வாய்.

19. விலைமாதர்களைச் சேர்ந்து பல ஸ்திரீகளைப் புணர்ந்து அவர்களுக்குக் கூலிகொடாமல் இல்லை யென்று கையை விரிக்க, அவர்கள் கூடி உரைத்த சாபத்தைக் கேளாய்! நிலையாயிருப்பீர் என்று பார்த்தோம். மோசடி செய்தீர். இனி வரும் ஜன்மங்களில் பெண்டாட்டி பலரைப் புணர்வீர். பார்யை தங்கைமாரின்றியே வாழ்வீர்.

20. இன்னமும் சிலது சொல்லியே தானை
யிரைத்தனள் வேசியும் தானும்
துன்மைகள் சேர்ந்து மறுசென்மம் வறுமை
தொடர்ந்துமே சிறையதாய் மாண்டு
பொன்னவன் வரிய வந்தவ னென்றேம்
பொருந்திடும் வேசியின் சாபம்
தன்மனை மூவர் சேர்ந்திடும் தாயே
சந்ததி முன்னிருவ ருக்கும்.

20. இப்படிப் பல படியாகத் தேவடியாள் சொல்லிக் காலைப்பிடித்தாள். இவனுக்குத் துன்பம் தொடர்ந்து வர்து, மறு ஜன்மத்தில் தரித்திரம் பீடித்துச் சிறையில் வசித்து இறந்தான். பிரம்மா திரும்பவும் சிருஷ்டி செய்ய வர்தான். தேவடியாள் சாபம் இவனைச் சார்ந்தது. தாயே! மூன்று மனைவிகளை இவன் அடைந்தும் முன்னுள்ள இரண்டு பேர்களுக்குச் சந்ததி யில்லை.

21. நீதென்று சொல்வோம் எண்ணான்கு இரண்டு
ஆண்டினில் செல்லுவான் தாயே
மேதினில் பின்சென்மம் ஆழி[1] மாநகரில்
விளம்புவா ணிக்குல மதனில்

---

1. சீர்காழி

மாதுரு தனக்கு ஓர்பதிளுலு ஆண்டினில்
மரித்திடு வாளாம்
பாதகன் தனக்கு அறுபது இரண்டில்
சாடி[1]மாதத்தில் கெண்டம்.

21. இவனுடைய முப்பத்திரண்டாம் பிராயத்தில் சொல்லுவேன். தாயே! கேட்பாயாக. பூலோகத்தில் மறு ஜன்மத்தில் சீகாழியில் பிறப்பான். இப்படி வசித்து வரும்போது இவன் பெண்டாட்டி அவளுடைய பதிநான்காம் (நாற்பதாம்) பிராயத்தில் மரித்திடுவாள். இந்தப் பாதகனுடைய அறுபத்திரண்டாம் வயதில் கும்ப (மாசி) மாதத்தில் கெண்டம் ஏற்படும்.

22. மறுசென்மம் வேலங்காட்டினில் இன்னேன்
வருகுவன் வேதத்தோன் குலத்தில்
அரசரால் தொழிலும் பெறறுமே வாழ்வன்
அறைந்தனம் மொழிகள் குன்ருது
குருதசை செனன காலத்தில் இருப்பர்
கூறுவோம் பதின்மூன்று ஆண்டும்
மறுவிடும் திங்கள் பதினென்று மாகும்
வரைந்தனம் பூருவ பாகம்.

22. மறு ஜன்மத்தில் வேலங்காட்டினில் இவன் பிராமணகுலத்தினில் உதிப்பான். ராஜசேவகனுய்த் தொழில் பெற்று வாழ்வான். சொன்னேம் இம்மாதிரி. சொன்னசொல் தவருது. ஜனனகாலத்தில் குருதசை ஆரம்பம். அதில் பதின்மூன்று வருஷமும், மாசம் பதினென்றும் ஆகும். இது தான் இவன் பூர்வபாகத்தில் கூறப்பட்டது.

---

1. மாசி

ஜாதகம் 8

1. மதிபுதன் பானுவீணை மங்கலன் மகரமாக,
விதிகன்னி கேதுக்கோலாம் வெள்ளியும் கடகமாக
ததியர்[1] குருவும்கோச்சை சென்மமு மேடமாக
இதுவிதம் கோளாநின்றல் இயம்புவர் பலனைத்தானே.

1. சந்திரன், புதன், சூரியன், மிதுனத்திலும், செவ்வாய் மகரத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், சுக்கிரன் கடகத்திலும் அடியார்க்குக் குருவாயுள்ள வியாழ பகவான் மேஷத்திலும் என்றபடி இன்னவாறு கிரக நிலையைக் கொண்ட மேஷலக்ன ஜாதகத்திற்குப் பலனைச் சொல்லுவர்.

	லக்கினம் குரு ராகு		சந்திரன் புதன் சூரியன்
	இராசி சக்கரம்		சுக்கிரன்
செவ்வாய்			
		கேது	சனி

2. சங்கரி கேட்கும்போது சடைமுனி புகலுகின்றார்
இங்கிவை ஆண்பால்சென்மம் இல்லமும் கிழ்பால்நோக்கம்
சிங்கவா கனத்தானீசன் தென்பக்கல் நதியுமுண்டு
நங்கையா மாரிதென்கிழ் நல்கிய அடையாளத்துள்.

2. பார்வதி இவ்வாறு வினவ, சடாமகுடம் தரித்த முனி சிரேஷ்டர் சொல்லுகின்றார். இந்த ஜாதகன் ஆண்மகன். வீடும் கிழக்குப்பார்த்தது. பரமசிவனுடைய கோவிலுக்கு எதிரில் உள்ளது. தெற்கே நதியோடுகிறது. தென்கிழக்கே துர்கையின் கோவில். இந்த அடையாளங்கள் கொண்ட இடத்தில்,

3. பாலக னிரண்டாம்சென்மம் பகருவோம் தீயின்வம்சம்
சாலவே தந்தைஅன்னை சகோதரர் மனைவிபுத்திரர்
ஏலவே இவர்கள்யோகம் இயம்புவோம் முன்பின்சென்மம்
ஆலத்தை யுண்டோன்தேவி அறிவிப்போம் பிதாகுணத்தை.

---

1. அடியார்

3. இந்த ஜாதகனுடைய இரண்டாம் ஜன்மம் கூறுவோம். வன்னியர் குலத்தில் உதித்தான். பொருந்தவே தாய் தந்தையர்கள், சகோதரன், மனைவி, புத்திரர், முறையே இவர்களுடைய யோக விசேஷத்தையும், முன் பின் ஜன்மத்தையும் கூறுவோம். ஆலகாலவிஷத்தையுண்ட பரமசிவனை யடைந்த பார்வதி! சொல்லுகிறோம்.

4. இருசிகப் புடையனாகும் ஈகைவான் பொறுமைசாலி
வருவோரை ஆதரிப்பன் வளவு[1]மே செய்வானாகும்
இரைதலை கோஷ்டம்செய்வன் குவலயம் நல்லோனவன்
தரையதை விருத்திசெய்வான் சதுஷ்பாதம்[2] விருத்தி
[யுண்டு.

4. பொது நிறமுள்ளவன். தருமஞ் செய்வோன். பொறுமை யுடையவன். விருந்தினரை ஆதரித்துக்காப்பான். வீடு கட்டுவான். இரண்டு பக்கமும் கோபுரம் கட்டுவான். உலகில் நல்லவனவன். பூஸ்திதியை விருத்தி பண்ணுவான். பசுக்கூட்டம் விருத்தியாகும்.

5. தந்தையி னில்லம்விட்டுச் சார்வான்அவ் வூர்உத்திரம்
விந்தையா யில்லம்செய்வன், ராகங்கள்[3] கூறுனாகும்,
நிந்தைகள் ஏற்கானாகும், நீத்தோர்க் குதகமீவன்
பந்துக்கள் மதிக்கவாழ்வன் பாரபட் சங்கள்பேசான்.

5. இவனுடைய பிதாவின் வீட்டை விட்டு அவ்வூருக்கு வடக்கே போய்ச்சேர்வன். அழகாக வீடு கட்டுவான். ஆசைப்பட்டு எதையும் விரும்பான். பிறர் கூறும் நிந்தையான வார்த்தைகளைப் பொறுக்கமாட்டான். இறந்தவர்களுக்குத் தர்ப்பணம் செய்து எள்ளும் தண்ணீரும் விட்டுச் சடங்கு செய்வான். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். பக்ஷபாதகமாய்ப் பேசமாட்டான்.

6. உண்டியும் வறுமைகாணான் உயர்வான குடும்பமேற்பான்
வண்டிவா கனமுமேற்பான் மாத்தாரை[4] உறவுகொள்வான்
குண்டுணி கூறுனாகும் குஞ்சர மொத்ததேகன்
பண்டுநாள் பூமிதன்னைப் பாலகன் விருத்திசெய்வன்.

6. சாப்பாட்டிற்கு இவனுக்கு யாதொரு குறையுமில்லை. மேலான குடும்பத்தை வகிப்பான். வண்டிகளில் கௌரவமாக ஏறிச் சவாரி செய்வான். விரோதிகளைச் சிநேகம் செய்வான். கோள்குண்டினிகள் கூற

1. வீடு
2. பசுக்கூட்டம்
3. ஆசைகள்
4. விரோதிகளை

மாட்டான். யானையைப் போன்ற தேகத்தை யுடையவன். பூர்வீக சொத்துக்களை விருத்திக்குக் கொண்டுவருவான்.

7. தந்தையின் துணைஆண்ஒன்று சத்திமார் மூவராகும்
பிந்திய தூணைவேருகப் பேசுவோம் ஒன்ருய்வாழ்வன்
அந்தவன் சுதனுமொன்று அழகிய கன்னிஒன்று
இந்தவாறு தீர்க்கமாகும் இயம்பின ஆண்பாலுக்கு.

7. தந்தையுடன் பிறந்த சகோதரர் ஒருவர். சகோதரிகள் மூன்று பேர்களாகும். பின்னுல் சகோதரத்தைப்பற்றிப் பேசுவோம். எல்லோருடனும் சேர்ந்து வாழ்வான். ஜாதகனுக்குப் பிள்ளை ஒன்று. அழகான பெண் ஒருத்தி. இது நிச்சயம், சொன்ன ஆண் மகனுக்கு.

8. மேகரோ கங்கள்காணும் விருத்தியும் குறவுண்டாகும்
பாகமாய் சாந்திசெய்யில் பாலர்கள் விருத்தியுண்டு
ஆகவே பலன்கள்யாவும் அறிவிப்போம் பின்பாகத்தில்
போகவா ரிதியைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

8. மேகநீர் சம்பந்தமான வியாதிகள் ஏற்படும். குடும்பவிருத்தியும் அதிகமில்லை. சரியான பக்குவமாகச் சாந்திகள் செய்தால் குழந்தைகள் ஏற்படும். ஆதலால் பலன்களை யெல்லாம் பின்பாகத்தில் கூறுவோம். போகத்திற்கே சமுத்திரம் என்று சொல்லப்பட்ட முருகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியசாலியான பார்வதியே! கேட்பாயாக.

9. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் புலியூர் [தன்னில்
முந்தின குலமுதித்து உயர்வான குடும்பியாகி
வந்தவர்க் கன்னமீந்து மறலியின் பதிக்குச்சென்று
ஈந்ததோர் குலமுதித்தான் யிலேவரி மறித்துச்சொல்வான்.

9. இவனுடைய தந்தையின் போன ஜன்மத்தைக் கூறுவோம். புலியூரில் பிராமண குலத்தில் உதித்து மேலான குடும்பியாகி வந்த விருந்தினர்களுக்கெல்லாம் அமுதளித்து எமலோகம் சென்று பிரம்மாவினுல் அளித்த மற்ருெரு குலத்தில் உதித்தான். உலோபமின்றி அதன் விவரத்தைக் கூறுவாம்.

10. மறைகுல முதித்தோனிங்கு வன்னிய குலமுதிக்கும்
குறையதைப் புகலுமென்ன குமரன்முன் சென்மந்தன்னில்
மறைகளை விரும்பாளுகி வந்ததால் உதித்தானென்றேம்
உரைத்தஇக் குணத்தானுக்கு உதிப்பஞு மிந்தபாலன்.

10. பிராமண குலத்திலுதித்தான். இப்பொழுது வன்னியர் குலமுதித்தான். இதன் காரணம் என்ன? குற்றங்குறைகளைக் கூறும் என்று கேட்க; இவன் முன்ஜன்மத்தில் வேதங்களில் மனதைச் செலுத்தாமல் வாழ்ந்து வந்ததனால் இவ்வாறு கீழ்ச்சாதியில் பிறந்தான் என்றோம். இத்தகைய குணங்களைக் கூறின இந்த ஜாதகனுக்கு இந்த ஆண் மகன் உதித்தான்.

11. பாலகன் குணத்தைச்சொல்வேன் பசலைபோல் தேகனாகும்
சீலவான் யூகைசாலி சிந்தையும் நல்லதாகும்
காலத்தை அறிந்துரைப்பன் கணக்கினில் வல்லனாகும்
ஞாலங்கள் விருத்திசெய்வன் நல்லோர்க்கு நல்லோனாகும்.

11. இந்தப்பையனுடைய குணாதிசயங்களைக் கூறுவேன். பசலையிலையின் நிறம் பொருந்திய சரீரத்தையுடையவன். சீலம் பொருந்தியவன். மதியூக முடையவன். மனதில் நல்லெண்ணமுடையவன். காலஸ்திதியை நிர்ணயம் பண்ணிக் கூறவல்லான். கணிதசாஸ்திரத்தில் வல்லவனாவன். பூஸ்திதியை அதிகமாக்குவான். நல்லவர்களுக்கு நல்லவனாக நடப்பவன்.

12. கல்விமான் கடவுள்பக்தி கனத்தவர் நேசம்கொள்வன்
தொல்லையெப் போதும்காணான் துறவிகட் கன்னமீவன்
வல்லியர் மோகனாவன் மாடுகள் பணை[1]யோர்விருத்தி
எல்லை[2]மேல் பிரியனாகும் இடர்செய்யான் யாவருக்கும்.

12. நன்றாய்ப்படித்தவன். கடவுளிடத்தில் பக்திபூண்டவன். கௌரவமுள்ளவர்களுடன் நேசம் கொள்ளுவான். தொந்தரை என்பதே கிடையாது. சன்னியாசிகளுக்கு அன்னபானாதிகளைக் கொடுப்பான். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொள்ளுவான். மாடுகள், பண்ணையாட்கள், ஏர்உழவர்கள் விருத்தியாகும். சூரியபகவானிடம் அன்புபூண்டவன். யாவருக்கும் துன்பம் விளைவிக்கமாட்டான்.

13. தந்தைக்குச் சமமாய்வாழ்வன் சல்லிய பாதையேற்கான்
முந்துமால் பக்திகொள்வன் முனியதை வெளிக்காட்டா
[தான்
மந்தமாம் வார்த்தைசொல்வன் மறித்துரை அதிகங்கூறான்
தந்தியின் கோஷ்டம்செய்வன் சத்தியம் தவறானாகும்.

13. இவன் தன்னுடைய தகப்பனுக்குச் சமமாக வாழ்ந்து வருவான். கடன் தொந்தரைக்கு ஆளாகமாட்டான். விஷ்ணுவிடத்தில் பக்தி செலுத்துவான். கோபத்தை வெளிக்காட்டாதவன். மிருதுவான சாந்த வார்த்தை

---

1. பண்ணையாட்கள்
2. சூரியன்

களைக் கூறுவான். ஆட்சேபித்து எதையும் கூறமாட்டான். வீணை வாசித்து அனுபவிப்பான். சத்தியசீலனுயிருப்பான்.

14. தானிய செட்டுசெய்வன் தருமத்தி லிச்சையுண்டு
ஈனரைச் சேராணுதும் இளைத்தோரை ஆதரிப்பன்
ஊனமில் லாததேகி உறன்முறைக் கிணக்கம்சொல்லான்
கோனிடம் பெருமைஏற்பன் பூவையே கேட்டிடாயே.

14. தானியங்களைச் சேர்த்து வைப்பான். தருமசிந்தனையுள்ளவன், கீழ்ச்சாதி மக்களைச் சேரமாட்டானும். வறியோர்க்கு உதவுவான். சரீர பாதையே கிடையாது. தேகத்தில் யாதொரு ஊனமுமில்லாதவன். சொந்தக் காரர்களுக்கு இணங்கிப் பேசமாட்டான். அரசாங்கத்தில் கௌரவத்தை ஏற்பான். பார்வதியே! கேட்பாயாக.

15. சாதகன் தனக்குயோகம் செப்பின காரணம்சொல்
மாதவன் சென்மம்தங்க வெள்ளியும் நாலிலேற
பூமகன் பத்திலாக பின்சிகி ஏழிலாக
நீதியாய் நாலுகேந்திரம் நின்றிட மக்கிரகத்தாலே.

15. இந்த ஜாதகனுக்கு இவ்வளவு யோகபாவம் சொன்ன காரணம் சொல்லுங்கள். குருபகவான் லக்கினத்திலும், சுக்கிரன் நாலாம் வீட்டிலுமிருக்க, செவ்வாய் பத்தாம் வீடாகிய மகரராசியில் உச்சஸ்தானமேற, கேது சப்தமஸ்தானத்திலிருக்க நியாயமாய் லக்கினத்திலிருந்து கிரகங்கள், 1, 4, 7, 10 என்ற கேந்திரங்களிலிருப்பதனுலே,

16. பருவத யோகமொன்று பாரிசாத யோகமொன்று
இருவித யோகத்தாலே இப்பாலன் சுகமாய்வாழ்வன்
தரையாலும் செட்டுவாலும் தரணியில் கீர்த்தியேற்பன்
பொருளது பெருக்கம்செய்வன் புண்ணிய சாலிகேளாய்.

16. பருவதயோகம் ஒன்று, பாரிஜாதயோகம் ஒன்று. இந்த இருவித யோகபாவங்களாலே இந்த ஜாதகன் சுகமே வாழ்வான். பூமி பாக்கியத்தாலும், வியாபாரங்களாலும் உலகினில் கீர்த்தியடைவான். பணத்தை அதிகமாய்ச் சேர்ப்பான். ஹே! புண்ணியசாலியே! கேட்பாயாக.

17. தன்துணை முன்பெண்ஒன்று சாற்றுவோம் தீர்க்கமாக
அன்னவள் குணத்தைச்சொல்வேன் அரிமனை ஏற்பதாகும்
மன்னவன் மனதுக்கேற்றாள் வறுமையில் லாமல்வாழ்வள்
முன்கோபம் கொஞ்சமுண்டு மொழியதைக் காப்பா
[ளாகும்.

17. இவனுக்கு முன் பிறந்த சகோதரி ஒருத்தியுண்டு என்று தீர்க்கமாய்ச் சொல்லுவோம். அவளுடைய குணாதிசயங்களைக் கூறுவேன். பூமி,

வீடு ஏற்பாள். புருஷனுடைய மனதிற்கு ஏற்றவள். தரித்திரமில்லாமல் வாழ்வாள். சிறிது முன்கோபமுடையவள். சொன்னசொல் தவறமாட்டாள். பேசின பேச்சைக் காப்பாற்றுவாள்.

18. வரனுமே உள்ளூராகும் மைந்தர்கள் ஆண்பால்மூன்று
அரிவையும் அவ்வாறுதீர்க்கம் அழகான குடும்பியாவள்
குறையென்றோர்க் குதவுவாளாம் குணமது நல்லதாகும்
பெறும்தந்தை யுதவியுண்டு பூவையும் தீர்க்கசீவி.

18. மாப்பிள்ளையும் உள்ளூர்தான். பிள்ளைகளைப்பற்றிக் கூறுவோம். ஆண்குழந்தைகள் மூன்று. மூன்று பெண்பாலர்கள். அழகுபெற்ற குடும்பியாவள். இல்லையென்போர்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுவாள். அவளுடைய குணம் மிக்க நல்லதாகும். அவளுடைய தந்தையின் ஒத்தாசையும் அவளுக்குண்டு. அவளும் தீர்க்காயுசு பெற்றவள்.

19. பாலன்பின் துணையாண்மூன்று சத்தியும் ஒருத்திதீர்க்கம்
சாலவே தந்தைக்கேதான் தன்துணை ஆண்பால்நான்கு
வேல்விழி பெண்பாலொன்று விருத்தியாம் பின்பால்
[சொல்வேன்
நீலியாம் அன்னைசேதி நிகழ்த்துவோம் தாயேயாங்கள்.

19. இந்த ஜாதகனுக்குச் சகோதரர்கள் மூன்று பேர்கள். சகோதரி ஒருத்தி எனத் தீர்க்கமாய்ச் சொல்லலாம். இவன் தந்தைக்கு முறையே நான்கு சகோதரர்கள். வேல்போன்ற விழியுடைய சகோதரி ஒருத்தி. இவர்களுடைய வம்ச விருத்தியைப்பற்றிப் பின்னால் சொல்லுவேன். அன்னை பெரிய நீலி. அவளைப்பற்றிய விவரம் கூறுவோம், தாயே!

20. பொறுமையும் வறுமைகாணாள் புண்ணிய மனத்தளாகும்
திருகுசொல் லாதாளாகும் சனஉப காரியாகும்
அரிமனை யேற்பதாகும் அடிசலுக் கினியளாகும்
வரன்மனம் ஏற்றமர்ந்து வளமுள குடும்பியாவள்.

20. பொறுமையுள்ளவள். தரித்திரத்தை அனுபவிக்கமாட்டாள். தருமசிந்தனையுள்ளவள். போக்கிரித்தனமான பேத்துமாத்தல்கள் கிடையா. பொதுஜனத்திற்கு உபகாரம் செய்வாள். அரிய வீட்டையுடையவள். சமையல்களை இனிமையுடன் செய்வாள். புருஷன் மனத்திற்கேற்ற பெண்டாட்டி. சகல சம்பத்துக்களுள்ள குடும்பியாவாள்.

21. சகலர்க்கு நல்லோளாவள் தன்மனம் கபடுமில்லாள்
பகையென்று மனதில்வையாள் பாரபட் சங்கள்பேசாள்
உரிமையாய்ப் பேசுவாளாம் உயர்வோர்க்கு அன்னமீவள்
மிகுதவம் புரியுமாதே வித்தகி தீர்க்கசீவி.

21. யாவருக்கும் மிக்க நல்லவள். மனதில் சிறிதும் கபடில்லாதவள். பகையோரைத் திட்டமாட்டாள். பாரபட்சமான அபிப்பிராயங்களைப் பேசமாட்டாள். எது யுதக்மோ அதைப் பேசுவாள். மேலானவர்களுக்கு அன்னமளிப்பாள். மிக்க தவம் செய்யும் பார்வதியே! இம்மாது தீர்காயுசுள்ளவள்.

22. இல்லமும் தென்கீழாகும் இவள் துணை ஆண்பாலொன்று
வல்லியும்அவ் வாறுதீர்க்கம் வரைகிறோம் ஆண்பால்சேதி
சொல்லுவான் இல்லம்விட்டு சிலருக்கு இல்லம்செய்வன்
நல்லதோர் நகரம்சென்று நல்கிடும் இல்லந்தானும்.

22. இவள் வீடு தென்கீழ்பாகத்திலுள்ளது. இவள் சகோதரர் ஒருவர். சகோதரியும் அப்படியே ஒருத்தி. சகோதரனுடைய செய்தி கூறுகிறோம். வீட்டை விட்டுப் போவான். சில பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பான். நல்ல ஒரு பட்டணம்போய் அங்கே தனக்கு ஒரு வீட்டை வாங்குவான்.

23. பலருக்கும் நல்லோனுவன் பாக்கியம் விருத்திசெய்வன்
சொலுமொழி காப்பானுகும் சுந்தர முடையனுகும்
திலாசம்[1]போல் பந்துகட்குக் தேறின புத்தியுண்டு
நலமுடன் கூலிவேலை நல்லோர்க ளுறவுகொள்வன்.

23. பலபேர்களுக்கும் நல்லவனுவன். சௌபாக்கியங்களை விருத்தி செய்வான். சொல்லும் வார்த்தைப்படி செய்கையில் நடந்துகாட்ட வல்லன். பார்வைக்கு நல்ல கட்டழகன். எள்ளுக்குள் எண்ணெய் எப்படி பரவி நிற்குமோ, அஃதேபோல் பந்துக்களிடம் ஒட்டிக்கொண்டிருப்பான். நன்மையாகக் கூலிவேலை செய்வான். நல்லோர்களிடம் சிநேகமாயிருப்பான்.

24. பாரியும் ஒன்றேயாகும் பாலர்கள் முதலில்நஷ்டம்
வீறுமே[2] அதின்பின்னுக வேல்விழி பெண்பால்ரெண்டு
மாரன்போல் ஆண்பால்ரெண்டு வரைகிறோம் தீர்க்கமாக
காரியன் சமர்த்தனுகும் காதலன் வயதுதீர்க்கம்.

24. பெண்டாட்டி ஒன்றேயாகும்: முதலில் பிறக்கும் குழந்தைகள் நஷ்டமாகும். அதன் பின்பு விளங்குமே பெண் குழந்தைகள் இரண்டு. மன்மதனைப்போல் இரண்டு ஆண் குழந்தைகள். இதைத் தீர்க்கமாய்ச் சொல்லுவோம். காரியங்களை முடிப்பதில் சாமர்த்தியசாலி. இவனுடைய வயது தீர்க்காயுசு என்னலாம்.

---

1. எள்ளெண்ணெய்
2. விளங்குமே

25. மாதுரு பூர்வம்சொல்வேன் மால்மலை தன்னிலேதான்
சூதிலா கோகுலத்தில் ஜெனித்துமே வறுமையின்றி
பாதக மனங்களின்றி பசித்தோர்க்குத் தாகமீந்து
வேதனை யில்லாதாகி மேவினள் காலனூடு.

25. இவனுடைய தாயாரின் பூர்விகம் சொல்லுவேன். மால்மலை என்ற இடத்தில் உயர்ந்த கோகுலத்தில் ஜனித்துத் தரித்திரமின்றி, கெட்ட புத்திகளில்லாமல், பசித்தவர்களுக்கு அன்னபானாதிகள் அளித்துச் சிரமப் படாமல் வாழ்ந்திருந்த காலத்தில் எமலோகம் சென்றாள்.

(மால்மலை = திருவேங்கடமலை, திருப்பதி; திருமாலிருஞ்சோலைமலை [அழகர் கோவில்] என்றும் சொல்லலாம்.)

26. தலைநான்கோன் வரியப்பட்டு சனித்தவ ளென்றுசொல் [வோம்
நிலைமையாய்ப் பின்சென்மங்கேள் நேபாள நகரிலேதான்
குலவுவாள் பிரம்மசேயாய்க் குறுமுனி தடுத்துசொல்வார்
தலைவிக்கு இச்சென்மத்தில் சார்ந்தபுண் ணியங்களென்ன.

26. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தாள் என்று சொல்லுவோம். வழியே இவளது பின் ஜன்மம் கேட்பாயாக நேபாள தேசத்தில் ஒரு பட்டணத்தில் பிறப்பாள். அதுவும் பிராமணக்குழந்தையாய் ஜனிப்பாள். இதைக்கேட்ட அகஸ்தியர் தடுத்துச் சொல்வார். இந்தத் தலைவிக்கு இந்த ஜன்மத்தில் ஏற்பட்ட புண்ணிய பாவங்களென்ன ?

27. மாரன்தன் மனம்போல்வாழ்ந்தும் வருவோரை ஆதரித்தும்
கூறுமொழி தவறாதாலும் கோபத்தை வெளிக்காட்டாமல்
வேறொரு நடக்கையின்றி விரதங்கள் பூண்பதாலும்
சேருவாள் மறைக்குலத்தில் சேல்விழி கேட்டிடாயே.

27. புருஷனுடைய மனம்போல் வாழ்ந்தும், விருந்தினரைப் போஷித்தும், வாக்குத்தவறாமல் நடந்தும், கோபத்தை வெளிக்காட்டாமலும், வேறு வித்தியாசமான நடத்தை இல்லாமல் விரதங்களைச் செய்தும் பிராமண குலத்தில் உதிக்கும்படியான மகாபாக்கியத்தைப் பெற்றாள். அழகிய விழிகளையுடைய பார்வதி ! கேட்பாயாக.

28. நாலாண்டில் தந்தைஅன்னை நழுவுவார் காலனூடு
சாலவே இருபதாண்டில் தந்தையின் தந்தைகெண்டம்
ஏலவே நாற்பதாண்டில் ஏகுவான் தந்தைதானும்
கோலமா யிவள்பின்சென்மம் கூறுவோம் தாயேகேளாய்.

28. நாலாவது வயதில் தாய் தகப்பன் இருவரும் எமலோகம் செல்லுவார்கள். பொருந்தவே இருபதாவது வயதில் தகப்பனின் தகப்பனுடைய (பாட்டனுடைய) கண்டம் ஏற்படும். ஏற்கவே நாற்பதாம் பிராயத்தில்

தந்தையும் இறப்பான். அழகாக இவளுடைய மறு ஜன்மத்தைக் கூறு வோம். தாயே! கேட்பாயாக!

29. உத்திரம் பெரியபாளையத்து உதிப்பனும் பிரம்மசேயாய்
சித்தனிச் சென்மத்தில் செய்தபுண் ணியங்களென்ன
பத்திமாரி கோஷ்டம் பாரனைந்தோ னும்கோஷ்டம்
அத்தியின் கோஷ்டம்செய்தும் ஆபத்தைச் சிலர்க்குக்
[காத்தும்.

29. வடக்கே பெரியபாளையத்தில் பிராமணக்குழந்தையாய்ப் பிறப் பான். சித்தமாய் இவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய காரியங்கள் யாவை? துர்க்கையின் கோயிலும், கணபதியின் கோயிலும், சிவன் கோயி லும் கட்டிச் சிலருக்கு ஆபத்துக்களை விலக்கியும்,

30. சோலைகள் துரவுசெய்தும் சுதனுமே வாழ்வதாலே
சீலமாம் குலமுதித்துச் சிவபூசை செய்வானாகும்
ஏலவே நாற்பான்ஒன்றில் ஏகுவாள் அன்னைதானும்
ஆலத்தை யுண்டோன்தேவி அறைந்தது தப்பாதாகும்.

30. தோட்டந்துரவுகள் ஏற்படுத்தியும் இவ்வாண்மகன் வாழ்ந்து வந்ததனால், மேலான குலத்திலுதித்துச் சிவபூசை செய்யலானான் ஏற்கவே இவனது நாற்பத்தொன்றும் வயதில் தாய் இறப்பாள். ஆலகாலவிஷத்தை உண்ட பரமசிவனின் தேவியாகிய பார்வதியே! சொல்லிய குறிப்புக்கள் தப்பாதவையாகும். உண்மைகள்தான்.

31. தந்தையின் குடும்பம்வேறு சார்ந்திடும் பாகமஞ்சாய்
பிந்தியும் (அன்பா)ஐம்பானேழில் பின்துணை பிரிதலாகும்
அந்தவர் சேதியாவும் அறிவிப்போம் பின்பாகத்தில்
கந்தனை யீன்றமாதே கழறினோம் மொழிகுன்றாது.

31. தந்தையின் குடும்பம் வேறாகி அவருக்கு வந்த சொத்து ஐந்தில் ஒன்றும். பின்பு ஐம்பத்தேழாகும் பிராயத்தில் இவன் தம்பி இறப்பான். அவர்களுடைய செய்தி விவரங்களைப் பின்பாகத்தில் விவரமாய்க் கூறு வோம். கந்தஸ்வாமியை ஈன்றெடுத்த பார்வதியே! சொன்னோம். சொன்ன சொல் பிசகாது.

32. சாதகன் மணத்தின்காலம் பத்தொன் பாண்டில்
காதலி வடகீழ்நேரும் கழறுவோம் அவள்குணத்தை
சீதள குணத்தாளாகும் தீங்கதை ஒருவர்க்கெண்ணாள்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உலகுக்கு நல்லோளாவள்.

32. ஜாதகனுடைய கலியாணகாலம் பத்தொன்பதாவது பிராயத்தில் ஏற்படும். மனைவி வடகிழக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணாதி சயங்களைக் கூறுவோம். குளிர்ந்த தன்மையுடையவள். யாவர்க்கும்

தீங்குசெய்ய மனதிலும் எண்ணங்கொள்ளாள். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள். உலகினர்க்கு நல்லவளாவள்.

33. ஈகையும் கொஞ்சமுண்டு இடர்செய்யாள் முன்கோபத்தாள்
சாதிப்பாள் சிலதுசங்கை சத்தியும் தீர்க்கசீவி
மாதவர் மறித்துச்சொல்வார் மழைக்கோளு[1] நாலிலாக
கேதுவும் ஏழில்தங்க கோதைமாரி ருவரென்றேம்.

33. தானதர்மம் சிறிது உண்டு. தீங்கு இழைக்கமாட்டாள். முன் கோபமுடையவள். சில தோஷங்களை நிவிர்த்தி செய்வாள். அவளும் தீர்க்காயுசுள்ளவள். மகாமுனி இக்குறிப்பை ஆட்சேபித்துக் கூறுவார். மழைக்கிரகமாகிய சுக்கிரன் லக்கினத்திற்கு நாலிலும், கேது ஏழாமிடத்திலும் நிற்க, பெண்டாட்டி இருவர் என்று சொல்லலாம்.

34. இருமனை அணுகாதாகும் எப்படி சொல்லுமென்ன
குருவுமே ஏழைப்பார்க்க சூரியன்[2] ஆட்சியாக
வருமனை ஒன்றேதீர்க்கம் மனைவியு மிவன்முன்னாலே
உரைகுவாள் காலனுடு உரைப்பீர்கள் காலம்தன்னை.

34. இரண்டு மனைவி ஏற்படாததாகும். எப்படிச் சொன்னீர் என்று கேட்கலுற்றார். வியாழபகவான் ஏழாம் வீட்டைப்பார்க்கவும், புதன் தன் வீட்டில் ஆட்சி பெற்றிருக்கவும் வரும் மனைவி ஒன்று என்றே தீர்க்கமாய்ச் சொல்லலாம். அந்த மனைவியும் சுமங்கிலியாக இவனுக்கு முன்பே எமலோகம் போவாள். சொல்லுங்கள் காலத்தை!

35. அறுபது ஆண்டுதன்னில் அம்மனை கெண்டமெய்தும்
திருமகன் முன்சென்மத்தைச் செப்புவோம் காஞ்சிதன்னில்
தரிதொழில் சேணியவம்சம் செனிதுத்மே செட்டுசெய்து
முருகர்க்குப் பத்தியாயும் மேலோர்க்குப் பத்திபூண்டு,

35. இவனது அறுபதாவது வயதில் மனைவி கண்டத்தையடைவாள். இவனுடைய பூர்வஜன்மத்தைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்தில் நெசவுத் தொழில் செய்யும் சேணிய வமிசத்தில் ஜனித்து வியாபாரங்கள் செய்து முருகக்கடவுளிடம் பக்தியாய், பெரியவர்களிடம் மரியாதையாய்,

36. மறலியின் பதிக்குச்[3]சென்று மால்மகன் வரியப்பட்டு
வருகுவான் இந்தபாலன் வளமுள குடும்பமேற்பன்
பெரிதான தலங்கள்செல்வன் பூமியு மூவூர்சேர்ப்பன்
அறம்செய்வன் மூன்றுஇல்லம் அணுகிடும் என்று
[சொல்வோம்.

1. சுக்கிரன்
2. புதன்
3. எமலோகம்

36. இருந்து எமலோகம் சென்று, பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இந்த ஜாதகன் உதிப்பான். வளப்பம்பொருந்திய குடும்பத்தை யடைவன். பெரிய ஸ்தலங்களைப்போய் தரிசிப்பான். மூன்று கிராமங்களை வாங்குவான். தருமம் புரிவான். மூன்று வீடுகள் இவனுக்கு வந்து சேரும் என்று சொல்லுவோம்.

37. அறுபது ஒன்பதாண்டில் ஆதிரை மாதம்[1] தன்னில்
நிறைபக்கம் ஏகாதசி நிமலன்தன் உடலமேகும்
வரும்சென்மம் துவாரகைதன்னில் மறைகுல முதிப் [பானுகும்
பிருகுமே மறித்துச்சொல்வார் புதல்வன்செய் புண்ணியம் [என்ன.

37. அறுபத்தொன்பதாம் ஆண்டில் மார்கழி மாதத்தில் சொர்க்க ஏகாதசியன்று இவனுடைய வாழ்நாள் முடியும். மறுஜன்மத்தில் துவாரகை தன்னில் பிராமணகுலத்தில் பிறப்பான். பிருகுமகரிஷி இதைத்தடுத்துக் கூறுவார். இப்புதல்வன் பிராமணனாய்ப் பிறக்கச் செய்த புண்ணிய காரியங்கள் யாவை ?

38. திருப்பணி செய்தலாலும் தந்தைசெய் புண்ணியத்தால்
மறையவர்க் குதவிசெய்தும் வளமுள தலங்கள்சென்றும்
சிறியோரா பத்தைக்காத்தும் தீரனும் வாழ்வதாலே
உரைகுவான் மறைகுலத்தில் உத்தமி கேட்டிடாயே.

38. கோவில்பூஜை முதலிய காரியங்கள் செய்ததனாலும், தகப்பன் செய்த பூஜாபலத்தினாலும், பிராமணர்களுக்கு ஒத்தாசைசெய்ததாலும், வளப்பம் பொருந்திய சிவஸ்தலங்களை தரிசித்ததாலும், சிரமப்பட்டவர்களை ஆபத்தினின்றும் காப்பாற்றியதாலும், இந்த மகாபுருஷன் வாழ்ந்து வந்ததாலே வேதப்பிராமணர்கள் இருக்கும் பிராமணகுலத்தில் பிறப்பான். இதைப் பார்வதி தேவியே! கேட்பாயாக.

39. புரந்திடு காலந்தன்னில் புனர்பூசம் மூன்றும்பாதம்
குருதிசை ஆண்டுஐந்தும் குலவிடும் திங்களேழும்
வரைந்தனம் பூர்வபாகம் வரைகுறோம் பின்புபாகம்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

39. சுகமாக இப்படி வசித்து வரும்நாளில் புனர்ப்பூசம் மூன்றும் பாதம் கழிந்ததால், குருதசை வருடம் ஐந்து மாதம் ஏழும் ஆரம்பித்து முடியும். இதுதான் பூர்வபாகத்தில் சொல்லவேண்டியது. மறைகளால் கூறப்படும் ஆநந்தக்கூத்தாடும் அம்பிகையே! கேட்பாயாக.

---

1. மார்கழி

ஜாதகம் 9

1. (மதி)குசன் மானதாக[1] மறை[2]தனு கேதுசியம்[3]
விதிக்குங்கோ ளும்சாடி வெய்யவன் புகரும்கொச்சை
புதன்நந்தி தகரும்சென்மம் புகலுவீர் பயனையென்று
அதிபதி கேட்கும்போது அத்திரி புகலுகின்றார்.

1. சந்திரனும் செவ்வாயும் மகரத்தில் நிற்க, தேவகுருவான வியாழ பகவான் தனுஸ்ராசியிலும், கேது சிம்மத்திலும், ராகுவும் சனியும் கும்பத்திலும், சூரியனும் சுக்கிரனும் மேடத்திலும், புதன் ரிஷபத்திலும், இப்படிப்பட்ட கிரக நிலைகொண்ட மேஷ லக்கின ஜாதகத்திற்குப் பலனைச் சொல்லுங்கள் என்று தலைவர் கேட்கும் போது அத்திரிமகரிஷி பின் வருமாறு சொல்லலுற்றார்.

	லக்கினம் சூரியன் சுக்கிரன்	புதன்	
ராகு சனி	இராசி சக்கரம்		
சந்திரன் செவ்வாய்			கேது
குரு			

2. வந்தசே யானும்சென்மம் வடவாசல் கீழ்மேல்வீதி
நந்தியும்[4] தென்மேல்தங்கும் சடைகாரி மாயோன்மாரி
சந்ததம் தென்மேல்தங்கும் சங்கரன் வடகீழாகும்
விந்தையாய் காளிஉத்திரம் விளம்புவோம் சமவூர் தன்னில்.

2. இந்த ஜாதகன் ஜனித்தவீடு கீழ்மேல் வீதியில் வடக்குப்பக்கம் வாசல் கொண்டது. தென்மேற்கில் சிவன்கோயிலும், கருநிறமுடைய திருமாலின்கோயில் எப்பொழுதும் சங்கரனுக்கு வடகிழக்கிலும், அபூர்வமான அம்மன்கோயில் வடக்கிலும் என்று சொல்லுவோம். இது சமவெளிப் பிரதேசத்தில் உண்டு.

3. உதிப்பனும் பிரம்மசேயாய் உரைக்கிறோம் அன்னைதந்தை
பதிமனை துணைவர்புத்திரர் பாலகன் முன்பின்சென்மம்
இதுபலன் பின்னூல்தன்னில் இயம்புவோம் விபரமாக
அத்தியைத் தரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

---

1. மகரமாக
2. குரு
3. சிங்கம்
4. சுவன்

3. ஜாதகன் பிராமணக்குழந்தையாய் ஜனிப்பான். அவன் தாயைப் பற்றிக் கூறுவோம். மனைவி, புத்திரர், சகோதரர், இவனுடைய முன் பின் ஜன்மம் இவைகளின் விவரங்களை அடுத்த புஸ்தகத்தில் கூறுவோம். அ(க?)த்திப் பூமாலையை அணிந்த அம்பிகையே! கேட்பாயாக.

4. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சரசமாய் வார்த்தை [சொல்வன்
தன்மனம் கபடுமுண்டு தங்கிடும் நாபிசூடு
தந்தநோய் கிருஷிசெய்வன் சமர்த்துளான் யூகைசாலி
தந்தையி னூலதிவிருத்தி சந்தேக மனத்தனுமே.

4. இவனுடைய தகப்பனாரின் குணாதிசயங்களைக் கூறுவோம். சல்லாபமான வார்த்தைகளைப் பேசுபவன். மனதில் கபடமுடையவன். மூலச்சூடு கொண்டவன். பல்வலியுண்டு. வயல்களைப் பண்படுத்துவான். சாமர்த்தியசாலி. நல்ல மதியூகி. வேதாந்த விசாரம் செய்வான். சந்தேக புத்தியுள்ளவன்.

5. பிறர்பொருள் இச்சையையான் பேதையர் மோகனுவன்
அரிபத்தி கொள்வானுகும் ஆண்மையும் சீலனுவன்
மருமத்தை வெளிக்காட்டாதான் மலர்கரம் ருத்திரரேகை
குறையென்றோர்க் குதவிசெய்வன் குணமது இரண்டு [முண்டு.

5 பிறருடைய சொத்துக்கு ஆசைப்படமாட்டான், ஸ்திரீலோலனுவன். விஷ்ணுவிடத்தில் பக்தியைச் செலுத்துவான், நல்ல தைரியசாலி. சீலமுள்ளவன். தன்னுடைய இரகசியங்களை வெளிக்காட்டமாட்டான். கையில் தாமரை(பத்மம்)ரேகை, ருத்திரரேகை. இல்லையென்றோர்க்கு ஒத்தாசை செய்வான். நல்லது, பொல்லாதது இரண்டும் இவனிடமுண்டு.

6. மாந்தளிர் மேனியாவன் மாற்றுனை லகுவில்வெல்வன்
கூர்ந்துமே வார்த்தைசொல்வன் கூறிய குணத்தானுக்கு
நேர்ந்திடும் துணைஆண்ஒன்று நிமலியு மவ்வாறுகும்
சாந்தமாய்ப் பின்பாகத்தில் சாற்றுவோ மவர்கள்சேதி.

6. மாந்தளிர்போன்ற சரீரகாந்தியையுடையவன். எதிரிகளைச் சுலபமாக ஜயிப்பான். யோசித்தே வார்த்தைகளைப் பேசவல்லான். கூர்மையான புத்தியையுடைய இவனுக்கு ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் உண்டு. சாவகாசமாய்ப் பின்பாகத்தில் அவர்களைப்பற்றிய விவரங்களைக் கூறுவோம்.

7. இந்நெறி யுடையானுக்கு இவனுமே யுதிப்பானாகும்
அன்னவன் துணை ஆண்ஒன்று அம்பிகை இரண்டுதீர்க்கம்
பின்னமா மற்றதெல்லாம் பேசுவோம் முன்னோன்சேதி
உன்னத வார்த்தைசொல்வன் உறுதியில் லாதநெஞ்சம்.

7. இந்தத் தர்மநெறியையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுக்குச் சகோதரன் ஒருவன், சகோதரிகள் இருவராவர். இது நிச்சயம். பாக்கிப்பிரசவங்கள் பின்னப்படும். மூத்தவனுடைய விஷயங்களைப் பற்றிப்பேசுவோம். மேலான வார்த்தைகளைப் பேசவல்லான். நெஞ்சு திடமுடையவனாகும்.

8. பயிர்த்தொழில் செய்வானாகும் பரஉப காரியாவன்
நயமுள வார்த்தைசொல்வன் நாதனார் பத்திபூண்பன்
கயவரைச் சேரானாகும் காதலி ஒன்றேயாகும்
தயவுடன் உத்திரமாகும் சங்கரி கேட்டிடாயே.

8. கிருஷித்தொழில் செய்வான். பரோபகாரம் செய்வான். இனிய சொற்களைக் கூறுவான். கடவுள்மேல் பக்தி பூண்டவன். கீழ்நோக்குள்ளவர்களுடன் சிநேகம் கொள்ளான். மனைவி இவனுக்கு ஒருத்திதான். அதுவும் வடக்குத்திக்கிலிருந்து வருவாள். சங்கரி! கேட்பாயாக.

9. புத்திர ராண்பால்ரெண்டு பெண்ணது அவ்வாறுதீர்க்கம்
வித்தகன் ஒன்றாய்வாழ்வன் மேதினில் வறுமைகாணான்
சத்திமார் துணைமுன்சேதி சாற்றுவோம் பொறுமைசாலி
வித்தகி போனபின்பு விளம்புவோம் வரன்யோகன்தான்.

9. இவனுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். பெண் பிள்ளைகளும் அவ்வாறே. இவன் எல்லாருடனும் சேர்ந்து வாழ்வான். பூலோகவாழ்வில் தரித்திரம் அனுபவியான். பிள்ளைகளின் விசேஷங்களைக் கூறுவோம். அவள் நல்ல பொறுமையுள்ளவள். பெண்டாட்டி போனபின்பு இவனுடைய யோகபாவத்தை எடுத்துக் கூறுவோம்.

10. வடதிசை வரனுநேரும் மத்தியில் விதவையாவள்
அடவுடன் சுதராண்ஒன்று அணுகிடும் தீர்க்கமாக
மடமயில் உள்ளூர்வந்து வாழ்குவள் சுகமுமுள்ளாள்
திடமான குடும்பியாவள் செப்புவோம் விபரம்ரெண்டில்.

10. வடக்குதிக்கில் வரன் ஏற்படும். மத்திய வயதில் வைதவ்யத்தையடைவாள். அடங்கின பிள்ளை ஒருவன். அது கட்டாயம் ஏற்படும். இம்மாது தன்னூருக்கு வந்து வாழ்வாள். சுகஜீவனம் செய்வாள். திடமுள்ள குடும்பியாவள். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்தில் கூறுவோம்.

11. பின் துணை சேதிசொல்வோன் புகலுமுன் கோபியாவள்
தன்வரன் மனம்போல்வாழ்வள் சத்திக்குப் பின்பால்
[யோகம்
பொன்பணி யதிகமேற்பள் பொய்யது வழுத்தாநெஞ்சம்
தன்வரன் அருகில்உத்திரம் தன்சுதர் ஆண்பால்ரெண்டு.

11. இவளுடைய தங்கையைப்பற்றிச் சொல்லுவேன். முன்கோபமுள்ளவள் என்று சொல்லப்படுவாள். புருஷனுடைய மனம் (இஷ்டம்) போல வாழ்ந்து வருவாள். இவளுக்குப் பிற்காலத்தில் நல்ல யோகமுண்டு. அநேகம் பொன்னாபரணங்களைத் தரிப்பாள். பொய்யென்பது மனதில் கூட ஏற்படாது. தன் புருஷன் கேட்டதற்கு உடனே பதில் அளிப்பாள். இவளுக்கு இரண்டு புத்திரர்கள் உண்டு.

12. கன்னிகை மூன்றுளென்றோம் கழறுவோம் வயதுதீர்க்கம்
அன்னவன் சுகமாய்வாழ்வள் அறைகிறோ மிவன்குணத்தை
தன்சொல்லே மேன்மையாகச் சாதிப்பான் இருநிறத்தான்
பின்னமில் லாததேகன் பிறர்பொருள் இச்சைவையான்.

12. பெண் குழந்தைகள் மூன்றாகும். அவர்களுக்குத் தீர்க்கமான ஆயுசுமுண்டு. இவளுடைய புருஷன் சுகமாக வாழ்வான். அவனுடைய குணத்தைக் கூறுகிறோம். தான்சொன்ன சொல்லையே மேலானது என்று சாதிப்பான். பொது நிறமான சரீரத்தையுடையவன். இவன் உடம்பு பின்னம் இல்லாதது. பிறர் சொத்துக்கு ஆசைப்படமாட்டான்.

13. தனத்தின்மே லாசையுள்ளான் சாந்தவான் தந்திர
[வார்த்தை
சினமுண்டு வெளிக்காட்டாதான் தீரமா மனத்தனாகும்
கனமுள குடும்பியாவன் கல்வியில் பெருமையேற்பன்
துணைவரை ஆதரிப்பான் சோம்பிடான் காரியத்தில்.

13. பணம் சம்பாதிப்பதில் மிகுந்த ஆசையுள்ளவன். சாந்தஸ்வரூபி. தந்திரமாகப் பேசக்கூடியவன். கோபியாயிருந்தாலும் தன் கோபத்தை வெளிக்காட்டமாட்டான். திடமான மனதையுடையவன். கௌரவமான குடும்பத்தைப் பெற்றவன். கல்விப்பெருமையைப் பெரிதாக மதித்து ஏற்றுக்கொள்ளுவான். சகோதரர்களை ஆதரிப்பான். சோம்பலுள்ளவனில்லை. காரியங்களை ஊக்கத்துடன் செய்வான்.

14. சிந்தையும் நல்லதாகும் சிலேடையாய் வார்த்தைகூறுவன்
வந்தவர்க் கன்னமீவன் மருவரைவஞ் சித்தேவெல்வன்
தந்தைநாள் பூமிதன்னைத் தானவன் விருத்திசெய்வன்
பிந்தியும் பூமிசேர்ப்பன் புகழது ஏற்பானாகும்.

14. நல்ல மனமுடையவன். பல அர்த்தங்கள் பெறும்படியான வார்த்தைகளைக் கூறுவான். வந்த விருந்தினர்க்கு அன்னமளிப்பான். எதிராளிகளை வஞ்சனையால் வெல்லுவான். தன்னுடைய பிதிரார்ச்சித பூமி சொத்துக்களை இவன் விருத்திக்குக் கொண்டு வருவான். மேன்மேலும் பூஸ்திதிகளை வாங்குவான். நல்ல கீர்த்திமானவன்.

15. கல்வியும் போதிப்பானும் களராசர் பேட்டிகொள்வன்
நல்லவர் பலர்களாலே நாட்டினில் புகழுமேற்பன்
தல்வியின் தந்தைக்[1]கிஷ்டன் தமையனை ஆதரிப்பன்
புல்லிய புத்தியில்லான் புராதனம் விருத்திசெய்வான்.

15. வித்தியாதானம் செய்வான் (பிறர்க்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பான்). பூலோக அரசர்களைப்போய்ப் பேட்டிகாண்பான். பல பெரியோர்கள் இவனை ஊரில் கொண்டாடின மணியமாயிருப்பார்கள். மாமனுருக்குப் பிரியமுடையவனுவன். தமையனுரை ஆதரிப்பான். கெட்ட புத்தி என்பதே கிடையாது. பூர்விக சொத்தை விருத்தி செய்வான்.

16. மூவெழு ஆண்டுதன்னில் மேவிடும் உத்திரபாரி
பாவையின் குணத்தைச்சொல்வேன் பரஉப காரியாவள்
நாவது தவருளாகும் நாயகிக் கன்னைரெண்டு
மேவிய யிளையாளுக்கு விளம்புவோம் இந்தப்பாவை.

16. இவனது இருபத்தொன்றும் வயதில் முதல் பாரியை ஏற்படுவாள். அவளுடைய குணாதிசயங்களைச் சொல்லுவேன். பரோபகார சிந்தையுள்ளவள். சொல்லும் வார்த்தை தவறிடாள். இவளுக்கு இரண்டு தாய்மார்கள். இளையவளுக்கு இவள் பெண்ணாய்ப் பிறந்தவள்.

17. அடிசலுக் கினியளாகும் அபயத்தைக் காப்பாளாகும்
கடினமா யுரைப்பாளாகும் கணவனுக் கினியளாகும்
துடையிடை மாதுஒன்று தோன்றிடு மிவளுக்கேதான்
மடையரை யுறவுகொள்ளாள் மானிற முடையாளாமே.

17. சமையல் செய்வதில் நல்ல சாமர்த்தியசாலி. அண்டினவரைக் காக்கும் தன்மை யுடையவள். பேச்சில் கண்டிப்புடையவள். புருஷனுக்கு இனிதாக நடப்பாள். மெல்லிய இடையையுடைய ஒரு பெண் இவள் வயிற்றில் ஜனிப்பாள். அசடுகளுடன் உறவாடமாட்டாள். மானிறமுடையவளாவள்.

18. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலத்தைக்காணும்
சித்தமா யுதித்தாலுந்தான் தீங்காகு மிவளுக்கேதான்
அத்திரியிவ் வாறுசொல்ல அறைகுவார் பிருகுதானும்
வித்தகன் தனக்குபுத்திரர் விளங்காத காரணம்சொல்.

---

1. மாமனுர்.

18. புத்திர சம்பத்தைக் கூறுவோமென்றால் ஜாதகத்தில் பலத்தைக் காணேம். நிச்சயமாய் ஏற்பட்டாலும் இவனுக்கு இடைஞ்சலாய் முடியும் என்று அத்திரி பகவான் இவ்விதம் சொல்ல, அதற்குப் பதில் பிருகு மகரிஷி சொல்லலுற்ருர். இந்த ஜாதகனுக்குப் பிள்ளைகள் பிறந்து விளங்காத தற்குக் காரணம் சொல்லவும்.

19. (அஞ்சி)ஐந்தினில் கேதுதங்க ஆரனும் சாரி[1]பார்க்க
துஞ்சிடும்[2] மதலையென்றேம் செயமுனி கூறுகின்ருர்
தஞ்சமாய்ப் பொன்னேன்பார்க்க சனித்திடும் குழவிதானும்
மிஞ்சிய சென்மம்தன்னில் மேவிற்று வினைகள்தானே.

19. இலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டில் கேது நிற்க, செவ்வாயும் கேந்திரமாகிய தன் மேஷ வீட்டைப் பார்த்தும், எட்டாம் பார்வையினுல் ஐந்தாம் வீட்டிலிருக்கும் கேதுவைப் பார்ப்பதனுலும் பிறக்கும் குழந்தை இறந்துவிடும். இதைக் கேட்டு ஜைமினி முனிவர் கூறுவதாவது. ஆனல் வியாழ பகவான் இலக்கினத்துக்குப் பஞ்சமஸ்தானத்தைப் பார்ப்பதனுல் குழந்தை பிறக்கும். இனி வரும் ஜன்மங்களிலும் வினைக்கட்டுகள் ஏற்படும்.

20. முன்வினை சொல்லுமென்ன விளம்புவார் அத்திரிதானும்
அன்னவன் பூர்வம் தன்னில்..........தற்குமேற்கில்
சின்னஊர் தன்னிலேதான் செனித்தனன் இக்குலத்தில்
தன்மனை மதலையுண்டாய் தானவன் வாழுநாளில்.

20. பண்டைக் காலத்தில் ஏற்பட்ட வினைகளைச் சொல்லும் என்று கேட்க, அத்திரி மகரிஷி பதில் சொல்லுவார். பூர்வ காலத்தில் அவன் மேற்கேயுள்ள ஒரு சிறிய ஊரில் பிறந்தான். அப்போது குழந்தை புண்டாகித் தன் மனைவியுடன் வாழும் நாளில்,

21. வினையதைப் புகலக்கேண்மோ விதவையாம் மனைவிதங்கை
விதிபதி போகம்துய்த்து வருநாளில் கருவுதங்கி
சதிசெய்தான் பண்டிதத்தால் தங்கின கருவுநீங்கி
இதுபோலே மூன்றுசெய்தான் எய்திற்று அந்ததோஷம்.

21. ஏற்பட்ட கஷ்டத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். தன் மனைவியினுடைய தங்கை ஒரு விதவை. அவளுடன் சுகியாயிருந்து கர்ப்பம் ஏற்பட்டபோது வைத்தியர்களைக் கொண்டு வயிற்றில் ஏற்பட்ட குழந்தையைக் கரைத்தான். இதைப்போலவே மூன்று தடவைகள் செய்ததினுல் அந்தப் புத்திரதோஷம் ஏற்பட்டது.

---

1. கேந்திரம்
2. இறக்கும்

22. வேறது துன்பங்காணுன் வித்தகன் நதிபதத்தில்[1]
நாரியும் ரண்......மாகி நற்சுதர் பகையுமாகி
மாணும் காலன்பக்கல் மருவியே பிரமன்லக்னம்
பாரினில் வந்தானென்றேம் பரவிற்று முன்னூழ்தோஷம்.

22. வேறு எந்த பாபத்தையும் செய்யாதவன். இவனுடைய மனைவி சமுத்திரத்தில் மரணமடைய, நல்ல புத்திரர்களுடன் பகையேற்பட்டு இவனும் உயிர் துறக்க, பிறகு கணக்குப் பிரகாரம் பிரம்மா இவனைத் திரும்பவும் சிருஷ்டி செய்ய, பூலோகத்தில் வந்து பிறந்தான். முன்னை வினை தன்னைச் செய்தவனை வந்தடைந்தது.

23. சுதருத்குத் தோஷமெய்தும் சொல்லுவோ மதற்குச்சாந்தி
வதிபனும் மனைவியே திருவள்ளூறு தனக்குச்சென்று
கதிதரு மாலுக்கேதான் கஞ்சமா மலர்கள் தன்னுல்
சதியிலா சகஸ்திரநாமம்சொல்லி தாளுக்கு அர்ச்சித்தேத்தி,

23. புத்திர தோஷம் ஏற்படும். அதற்குத் தக்க சாந்தி சொல்லுவோம். புருஷனும் பெண்டாட்டியும் திருவள்ளூர் சென்று வீரராகவப் பெருமாளுக்கு நல்ல புஷ்பங்களைக் கொண்டு குற்றமில்லாமல் ஸஹஸ்ர நாமங்களையும் சொல்லி பகவானுடைய பாதத்தில் அருச்சனை செய்து தோத்திரம் செய்து,

24. தன்குல மூவேழ்பேர்க்குத் தனிகையு மன்பாயீந்து
தன்னக ரடைந்துபின்னேன் தான்மா......லுக்கபிஷேகிக்க
முன்வினை நிவர்த்தியாகி உதித்தசேய் தீர்க்கமாகும்
இன்னவாறு செய்யானுகில் யிலகாது நசிக்குமென்றேம்.

24. தன் குலத்திலுள்ள இருபத்தொரு தலைமுறையாளர்க்கு அன்னம் பிரியமுடன் அளித்துத் தன்னூர் சென்று அங்குள்ள விஷ்ணுவுக்குமபிஷேகம் செய்விக்க, பழய தோஷத்தினுல் ஏற்பட்ட பாபம் தீர, இதன்பின் ஏற்பட்ட குழந்தை தீர்க்காயுசுடனிருக்கும். இப்படிப்பட்ட பரிகாரம் செய்யானுகில் பிள்ளை பிறந்தாலும் தரிக்காது. இறந்தேபோம் என்றேம்.

25. சொற்படி செய்வானுகில் தோன்றிடும் சுதராண்ஒன்று
மைப்படி பெண்பால்ரெண்டு என்றுவரை கிறேம்தீர்க்க [மாக
செப்புவோ மன்னைசேதி சிவந்திடு மேனியாவள்
தப்பித குணமில்லாதாள் சாந்தவாள் அடக்கமுண்டு.

1. சமுத்திரத்தில்

25. சொன்னபடி செய்வாளுகில் ஓர் ஆண் குழந்தை பிறக்கும். அடுத்தபடி பெண் குழந்தைகள் இரண்டு என்று தீர்க்கமாய்ச் சொல்லு வோம். இந்த ஜாதகனின் தாயாருடைய விருத்தாந்தத்தைக் கூறுவோம். சிவப்பான சரீர முடையவள். பிழையற்ற குணமுடையவள். சாந்த சுபாவ முடையவள். அடக்கமாயிருப்பாள்.

26. வரன்மனம் போலேவாழ்வாள் அவள்துணை ஆண்பால்
[மூன்று
திருமக ளொப்பதாக செல்விமார் இரண்டுளன்றும்
உரைத்திட்ட துணைஆண்மூன்றில் ஒருவனும் வேறோர்பக்தி
மருவுவன் மத்தியன்தான் வார்த்தைகள் பிசகிச்சொல்வன்.

26. புருடன் மனம்போல் வாழ்வாள். அவளுடைய சகோதரர்கள் மூன்றுபேர்கள். லட்சுமி தேவியைப்போன்ற செல்வப் பெண்கள் (சகோ தரிகள்) இரண்டு பேர்கள் உண்டு. சொன்ன சகோதரர்கள் மூவரில் ஒரு வர் வேறொரு வீட்டிற்குப் போவார். நடுவிலிருப்பவன் தாறுமாருகப் பேசுவான்.

27. பித்தத்தால் பிதற்றலுண்டு புகழிலான் குணமில்லாதான்
சுத்தமு மில்லாளுகும் சுயஞானம் காணுகும்
அத்திரி புகலுகின்றூர் அதுதீர சாந்திசொல்வாய்
குற்ற(த்த)ங்கள் குற்ற(த்த)மேயாம் கூறுவோம் விபரம்
[ரெண்டில்.

27. புத்தி மயக்கத்திளுல் பைத்தியம் பிடித்தவன்போல் பிதற்று வான். கீர்த்தியில்லாதவன். நற்குணமில்லாதவன். சுத்தமில்லாதவன். சுயமாகப் புத்திக்கூர்மை யில்லாதவன். அத்திரி இதைக் கேட்டுப் பின்வரு மாறு சொல்லலுற்றூர். அது தீருவதற்குச் சாந்தி சொல்லுங்கள். குற்றங் கள் எப்பொழுதும் குற்றந்தான். இதன் விவரம் இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

28. மற்றவர் சுகமாய்வாழ்வார் வழக்குளோர் செலவுமுள்ளாள்
வித்தகி பூர்வம்சொல்வேன் விரிஞ்சிக்கு மேல்பாலாக
சிற்றூரில் வைசியசேயாய் செனித்துமே வறுமையின்றி
சுத்தமா னவர்க்குஅன்னம் தோகையு மளித்துமேதான்.

28. மற்றவர்கள் சுகமாய் வாழ்வார்கள். வழக்குகள் காரணமாய்ச் செலவு செய்வாள். இந்த வித்தகியின் பூர்வோத்தரம் கூறுவேன். விரிஞ்சி புறத்திற்கு மேற்கேயுள்ள சிறிய கிராமத்தில் வைசிய குலத்தில் பிறந்து

தரித்திரமின்றி மேலானவர்களுக்கு அன்னமும் வஸ்திரமும் அளித்து வந்தாள்.

29. பலவித தீர்த்தம்தோய்ந்து பரஉப காரியாயும்
குலவியே வாழ்ந்துபின்னுள் கர்த்தன்தன் பதிக்குச்சென்று
தலைவன்கோள் வரியப்பட்டு சனித்தவ ளிவளேயென்றோம்
நலமுள தென்கிழ்தன்னில் நல்கிடும் வரனுமேதான்.

29. பலவிதமான தீர்த்தாடனங்கள் செய்து, பரோபகாரியாயும், இருந்து வாழ்ந்து எமலோகம் சென்றாள். பிறகு பிரம்மா சிருஷ்டித்தவள் இவளே யென்று ஜனன காலத்தைப்பற்றிச் சொல்லும்போது சொன்னோம். நல்ல தென் கிழக்கில் இவளுடைய புருடன் தோன்றுவான்.

30 மறுசென்மம் காளத்திதன்னில் மாதுவு மிக்குலத்தில்
வருகுவாள் சுகமுண்டாகி மால்பத்தி அதிகம்பூண்டு
உரைகுவாள் தேவராக உரைத்தது தப்பாதாகும்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

30. மறு ஜன்மத்தில் திருக்காளத்தியில் இம்மாதும் இக்குலத்தில் ஜனிப்பாள். சுகமாக இருந்து விஷ்ணுவிடத்தில் அதிக பக்தி பூண்டு வாழ்ந்து வருவாள். பெரியோர் சொல் வீண்போகாதல்லவா! அருமறையின் அந்தியில் திருநடனம் செய்யும் அம்பிகையே! கேட்பாயாக!

31. தந்தையின் பூர்வம்சொல்வேன் விட்டரு தீசவாழும்[1]
முந்திய ஊரிலேதான் உதித்தனன் சைவசேயாய்
வந்தவர்க் கன்னமீந்து மார்க்கத்தில் தாகப்பந்தல்
நொந்தபேர்க் குதவிசெய்து நோயில் பவமில்லாமல்.

31. தந்தையின் பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுவேன். திருவிட்டானத்தில் வாழும் ஈசர் ஊரிலேதான் இவன் பிறந்தான் சைவர் குலத்தில். வந்த விருந்தினர்க்கு அன்னம் கொடுத்து நெடுகவே தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து, வறியோர்க்கு உதவி செய்து நோய்வாய்ப்பட்டு அதில் குணமடையாமல்,

32. காலனு டடைந்துஇன்றோன் கஞ்சனுல் வரியப்பட்டு
சீலமாம் பிரம்மசேயாய் செனித்தவ னிவனேயென்றோம்
ஏலவே பின்சென்மங்கள் இயம்புவோம் காஞ்சிதன்னில்
கோலமா யிக்குலத்தில் உதிப்பானு மென்றுசொல்வோம்.

32. எமலோகம் சென்றதும், இவனைத் திரும்பவும் பிரம்மா சிருஷ்டி செய்தான். மேன்மை தங்கிய பிராமணக் குழந்தையாய்ப் பிறந்தவன்

1. திருவிட்டானம்

இவனே என்றோமல்லவா ! பொருத்தமாகவே இவனுடைய இனிவரும் ஜன் மங்களைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் மேலான இவ்வமிசத்தில் உதிப்பா னென்று சொல்லுவோம்.

33. இருபது ஆண்டிலேதான் ஏகுவான் மகரமாதம்
அரவுதன் திசையிலேதான் அவர்சுய பு(கு)த்தியென்றோம்
திருமக என்னைக்கேதான் செப்புவோம் முப்பான்ரெண்டில்
அரிமாதம்[1] கெண்டம்நேரும் அம்மொழி தப்பாதாகும்.

33. இவனுடைய இருபதாவது ஆண்டில் ஒரு தை மாதத்தில் பாம்பின் (ராகுவின்) தசையிலேதான் ஸ்வபுக்தி நடக்க ஆரம்பிக்கும். இவனுடைய மனைவியின் தாய்க்கு இவனது முப்பத்திரண்டாம் பிராயத்தில் ஆவணி மாதத்தில் கண்டம் ஏற்படும். அம்பிகையே ! சொன்னது பிசகாது.

34. அறுபது ஆறுஆண்டில் அழகிய மகரமாதம்
திருமக னுடலம்வாடும் செப்புவோ மிவன்பின்சென்மம்
பெருமையாய் துவாரை[2]தன்னில் பிறப்பன மிக்குலத்தில்
கரிமுகன் தன்னைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

34. இவனுடைய அறுபத்தாறாவது வயதில் அழகான தைமாசத்தில் இந்த ஜாதகனுடைய உயிர் உடலைவிட்டுப் பிரியும். இவனுடைய மறுஜன்மத்தைக் கூறுவோம். பெருமையாய் துவாரகையில் பிராமணகுலத்தில் பிறப்பான். விநாயகக்கடவுளைப் பெற்ற பார்வதியே ! கேட்பாயாக.

35. வந்தவன் பொதுயோகத்தை வரைகிறோம் பத்மயோகம்
முந்துமங் களயோகங்கள் மேவிடுமே லோனைக்கேண்மோ
தந்தைநாள் பூமிகொஞ்சம் தானதி பூமிசேர்ப்பன்
விந்தையாய் கல்வியாலே வித்தகன் சீவிப்பானும்.

35. இப்படி ஜனித்தவனுடைய ஸாதுவான யோகபாவத்தைக் கூறுவோம். பத்மயோகம், முந்தின மங்களயோகங்கள் மேவிடும். இவ்வுத்தமனைப்பற்றிக் கேளுங்கள். இவனுடைய பிதாவின்காலத்தில் பூஸ்திதி கொஞ்சம். இவன் அதிக நிலங்களைச் சேர்ப்பான். வேடிக்கையாகப் படிப்பின் விசேஷமகிமையினால் இவ்வித்தகன் ஜீவனம் செய்வானும்.

36. அரசர்பூ சிதமுமாவன் அதிகாரம் சிலநாள்செய்வன்
வருங்காலம் சொல்லுமென்ன ஐயைந்து ஆண்டுமேமாய்
உரைந்திடு மொழிகுன்றாது உரைக்குறோம் விபரம் [ரெண்டில்
பிறையது போலேசெல்வம் பெருகிடும் ஞாதியாலும்.

1. ஆவணி
2. துவாரகை

36. அரசனால் பூஜ்யதையாய்ப் போற்றப்படுவான். சில நாள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தை வகிப்பான். ஜோதிஷம் சொல்லுவான். இவனது இருபத்தைந்தாம் வயதிற்குமேல் சொல்லும் வார்த்தை தப்பாது. சொல்லுவோம் இதன் விவரம் இரண்டாம் பாகத்தில். வளர்பிறையைப்போல் செல்வங்கள் பெருகிடும். சொந்தக்காரர்களாலும்,

37. பந்துவால் நினைத்ததோங்கும் பாரினில் வறுமைகாணுன்
விந்தையாய் வார்த்தைகூறுவன் வீண்வம்பு புகல்வானுகும்
சிந்தையும் தீரனுவன் சிறப்பான குடும்பியாவன்
தீந்தனம் பின்னுல்சேர்ப்பன் சதுஷ்பாதம் விருத்தி
[யுள்ளான்.

37. பந்துக்களாலும் எண்ணியது விருத்தியாகும். உலகினில் சிரமம் என்பதைப் பாரான். வேடிக்கையாய் வார்த்தைகள் பேசுவான். வீணே வம்புகள் பேசுவானும். மனதில் திடமுடையவன், சீரும் சிறப்பும் பெற்ற குடும்பியாவன். தன்னுடைய ஸ்வயார்ஜிதம் சேர்ப்பான். நாற்கால் பிராணிகள் விருத்தியாகும்.

38. தோத்திரப் பிரியனுகும் தொடுத்ததை விருத்திசெய்வன்
பாத்திர மறியவல்லன் பகைத்தோரை நாசம்செய்வன்
நீத்தார்க ளுறவுகொள்ளான் நிமலியர் மோகனுவன்
பொத்திரே[1] மூவாயிரம் பொன்பூமியும் பணிகள்தானே.

38. பிறர் தோத்திரம்செய்ய திருப்தியடைவான். எடுத்த காரியத்தை விருத்திசெய்வான். ஆசாமிகளை ஆராய்ந்து அறியவல்லான். பகைத்தவர்களை நாசம் செய்வான். பகிஷ்காரம் செய்தவர்களை நேசிக்கமாட்டான். ஸ்திரீ லோலனுவான். வாழையும் சோளமும் விருத்திசெய்வான். செல்வத்தையும் பூஸ்திதியையும் விருத்தி செய்வான்.

39. இன்னமும் விபரமாக இயம்புவோம் ரெண்டிலேதான்
சொன்னகாலம் அலரியின் திசையிருப்பு அன்னவன்
மன்னிய ஆண்டுஒன்றும் மருவிடும் திங்கள்பத்தும்
இன்வன் தகடுரேும் எய்திடும் தந்தைக்கவ்வாறு.

39. இரண்டாம் பாகத்தில் இன்னும் விவரமாகக் கூறுவோம். ஜனன காலம் சூரியதசையில் இருப்பு ஒரு வருடம். அதற்குப் பிறகு வரும்

1. வாழை.

சந்திரதசை பத்துவருடமும், அதற்குப்பின் இவன் இடர்வு எய்திடுவான், தந்தைக்கு அப்படியே.

40. அன்னையின் வர்க்கம்சூதம் அதிகமாய்ச் செலவுநேரும்
தன் தந்தை வர்க்கம்அவ்வாறு சஞ்சல மனமுமெய்தும்
பிந்திய பாகம்தன்னில் பேசுவோம் விபரமாக
இந்திர னிறைஞ்சுமாதே இயம்பின மொழிகுன்றாது.
(மேலமாயிலை கூலடிச்சர்).

40. அன்னையின் வர்க்கத்தில் ஆசௌசம் ஏற்படும். அதிகமான செலவுகள் ஏற்படும். தன்பிதாவின் வமிசம் அப்படியே. சஞ்சலமான மனதைப் பெற்று வரும் பிந்தியபாகத்தில் விவரமாகப் பேசுவோம். தேவேந்திரன் வணங்கும் மாதரசியே! சொன்னது சரியாய் நடக்கும்.

ஜாதகம் 10

1. பொன்புதன் பானுகாரி புக்கிடம் மேருவாக
துன்புகர் சேயுமானில் சிகிமேடம் மதியும்நந்தி,
மன்னிய சென்மம்கொச்சை, வரைகுவீர் பலனையென்று,
அன்னையும் கேட்கும்போது அரைகுவார் வசிஷ்டர்தானே.

1. வியாழன், புதன், சூரியன், சனி இவர்கள் எல்லோரும் தனுசுராசியிலிருக்க, துன்பம் தரும் சுக்கிரனும் செவ்வாயும் மகரராசியிலிருக்க, கேது மேஷத்திலும், சந்திரன் இரிஷபத்திலும் தங்கும் படியான இவ்வித கிரகநிலையைப் பெற்ற மேஷ லக்கின ஜாதகனுக்குண்டான பலனைச் சொல்லுங்கள் என்று தேவி கேட்கும் போது வசிஷ்டமாமுனி பின்வருமாறு சொல்லலுற்றார். (Refer stanza 14.)

	லக்கினம் கேது	சந்திரன்	
	இராசி சக்கரம்		
சுக்கிரன் செவ்வாய்			
குரு புதன் சூரியன் சனி		இராகு	

2. இந்தசேயானும்சென்மம் யில்லமும் கீழ்மேல்வீதி
தென்வாடை காளிவாய்வு[1], தீயாஞ்சான் தென்பாலாகும்
இன்னஊர் கர்ணசேயாய் சேஷ்டனுய்ச் செனிப்பனுகும்
உன்னத மார்க்கமுண்டு உயர்நதி அருகில்தோன்றும்.

2. இந்த ஜாதகனுடைய வீடு கீழ்மேல்வீதியின் தெற்குவாடையில் உள்ளது. அம்மன்கோவில் அக்கினிதிக்கில் உள்ளது. அதன் தெற்கே சிவன்கோவிலுள்ளது. இந்த ஊரில் கிராமத்துக்கணக்குப்பிள்ளையின் மூத்த குமாரனுய் இந்த ஜாதகன் ஜனிப்பானுவன். மேலான வழியுண்டு. விசேட நதி அதன் சமீபத்தில் உண்டு.

3. அன்னையின் தந்தையோகம் அவள்துணை களத்திரயோகம்
வந்தவன் முன்பின்சென்மம் வரைகுறே மின்னூல்தன்னில்
தந்தையின் துணைஆண்ஒன்று சத்திமார் மூவராகும்
நொந்திடு மற்றதெல்லாம் நுவலுவோம் ஆண்பால்சேதி.

---

1. வாழ்வு

3. தாய், தகப்பனுர் யோகமும், அவன்சகோதரம், களத்திர யோகம், ஜாதகனின் முன்பின் ஜன்மபலன் இவற்றை இந்தப்புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். தந்தையுடன் பிறந்தவர் ஒருவர். சகோதரிகள் மூன்றுபேர்கள். மற்ற உடன்பிறப்பெல்லாம் நசித்துப்போம். ஆடவனின் செய்தியை விவரமாய்க் கூறுவாம்.

4. இருவித கல்வியுண்டு ராசபூ சிதமுமாவான்
மருவரை வஞ்சித்தேவெல்வம்[1] வரசர்பால் தொழிலு [மேற்பன்
நெறியதைக் காப்பானுகும் நீத்தோர்போல் வார்த்தை [சொல்வன்
போரைசொல்லன் தனத்திலிச்சை பிதுரில்லம் வாழானுகும்.

4. இரண்டுவித வித்தைகளைக் கற்பான். அரசனுல் பூசிக்கப்படுவான். எதிர்த்தவர்களை வஞ்சித்தே வெல்லுவான். அரசனிடம் உத்தியோகம் பெறுவான். தர்மத்தைக் காப்பாற்றுவான். தபசிகளை (முற்றும் துறந்தவர்களை)ப் போல் உயர்வான மொழிகளைக் கூறுவான். அருமையான பதில் கொடுப்பான். பணத்திலிச்சையுடையவன். பிதாவினுடைய வீட்டில் வாழமாட்டான்.

5. ஈகையும் கொஞ்சமுண்டு எதிர்பொரு ளாசையுண்டு
நாகரி கங்களுண்டு நல்லோர்க்கு நல்லோனுவன்
ஆகமம் மிச்சையில்லான் அணுகிடும் பாரியொன்று
போகபாக் கியங்களேற்பன் புகழது உடையனுமே.

5. சிறிது தருமசிந்தனையுமுண்டு. எதிர்த்தோரின் பொருளைக் கைப்பற்றும் ஆசையுடையவன். நாகரிகவழக்கங்களை அனுசரிப்பான். நல்லவர்களுக்கு நல்லவனுக நடப்பான். சாஸ்திர விசாரம்செய்யான். கலியாணமாகி பார்யைவருவாள். போகபோக்கியங்களை யநுபவிப்பான். கீர்த்தியையும் அடைவான்.

6. சுதர்களு மாண்பால்ரெண்டு தோகையும் மூன்றுஎன்றேம்
பதராகும் இரண்டுதானும் பகையின்றி வாழ்வானுகும்
நிதிபூமி சேர்ப்பானுகும் நீள்நிலம் வறுமைகாணுன்
பதியது செய்வானுகும் பார்வதி கேட்டிடாயே.

6. இவனுக்கு இரண்டுபிள்ளைகளும், மூன்றுபெண்களும் பிறக்கும். இரண்டு குழந்தைகள் விசிறியாய்ப்போம். சத்துருக்களில்லாமல் வாழ்வானுகும். பணம், நிலபலன்களைச் சேர்ப்பான். உலகினில் தரித்திரத்தை அனுபவியான். வசிக்க வீடுகட்டுவான். பார்வதி ! கேட்பாயாக.

1. வெல்லுவான்

7. தாதைக்குத் தாரம்ரெண்டில் தரித்திடும் இளையாளின்று
நீதியாய் மைந்தன்தானும் நிகழ்த்துவோ மிவனின்தந்தை
ஓதுவே னவன்குணத்தை உளைச்சலாம்[1] சிவந்தமேனி
தீதிலான் எதிரிக்கஞ்சான் சீலனும் யூகைசாலி.

7. தகப்பனுருக்கு இரண்டு மனைவிகளில் இளையாளாக வசிப்பாள். ஒழுங்காய்ப் பிள்ளைபிறக்கும். அவனுடைய தந்தையின் குணவிசேஷத்தைக் கூறுவோம். சிவந்த சரீர நிறத்தையுடையவன். கெடுதி யாதும் இல்லாதவன். எதிரிகளைக்கண்டு பயப்படமாட்டான். சீலங்களை யுடையவன். கூர்மையான யுத்தி புத்திகளையுடையவன்.

8. கணக்கினுல் சீவிப்பானும் கடவுளர் பக்திகொஞ்சம்
பிணக்குகள் சிலர்க்குச்செய்வன் பிதுராஸ்தி விருத்தி
[யுள்ளான்
இணக்கமும் தந்திரவார்த்தை எழில்சுகி போசனத்தன்
வணக்கமும் கல்விமேன்மை அறுமுகன் பத்திபூண்டன்.

8. கணக்குகளைப் பார்த்து வேலைசெய்து ஜீவிதம் செய்வானும். கடவுளிடத்தில் சிறிது பக்தியைச் செலுத்துவான். சிலர்க்குச் சில இடைஞ்சல்களைச் செய்வான். பிதாவின் பூஸ்திதியை விருத்திசெய்வான். இணக்கமாகவும் தந்திரமாகவும் பேசவல்லான். மேலான போசனத்தை அருந்தி சுகிப்பான். அடக்கமுடையான். கல்வி மேன்மைபெற்றவன். முருகக் கடவுளிடம் பக்திகொண்டவன்.

9. தந்தமும் தரளமொக்கும் சாதிப்பான் சிலதுசங்கை
வந்திடு மாமிரெண்டு வர்க்கத்தைக் காப்பானுகும்
விந்தையாய்ப் பேசவல்லன் மேவுவான் தலவாசங்கள்
முந்துமால் ரேகையுண்டு முனிவுண்டு உடனேதாழ்வு.

9. முத்துப்போன்ற பற்களையுடையவன். சில சங்காதோஷங்களை நிவிர்த்திசெய்யும் ஆற்றலுடையவன். இவனுக்கு மாமியார் இரண்டு பேர்கள். சுற்றத்தினரை ஆதரித்துக்காப்பான் வேடிக்கையாய்ப் பேசவல்லவன். ஸ்தலங்களுக்கு யாத்திரைகள் செய்து கடவுளைத் தரிசித்துவருவான். திருமாலின் ரேகையையுடையவன். கோபமுடையவன். ஆனல் உடனே சாந்தமாவான்.

10. இந்நெறி யுடையானுக்கு இவனுமே செனிப்பானுகும்
அன்னவன் குணத்தைக்கேண்மோ அழகுளான் சிவந்தமேனி
தன்சொல்லு மடக்கமுண்டு தைரியன் அதிகயூகி
பொன்பணி யிச்சையுள்ளான் பெரிதான தலங்கள்செல்வன்.

---

1. உரைக்கலாம்.

10. இப்படிப்பட்ட குணமுடையானுக்கு நம் ஜாதகன் ஜனிப்பனுகும். அவனுடைய குணங்களை உரைத்திடுவேன், கேள். அழகுடையவன். சிவந்த நிறமுடையவன். அடக்க ஒடுக்கத்துடன் பேசுவான். தைரியசாலி, அதிக புத்திக்கூர்மையுள்ளவன். பொன்னுபரணங்களில் ஆசை கொண்டவன். மேலான ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்வான்.

11. கல்வியு மிரண்டுகற்பன் க்ஷைராசர் போட்டிகொள்வன்
இல்லறம் இரண்டுசெய்வன் எதிரியை நாசம்கொள்வன்
அல்லலென் றோரைக்காப்பன் அறம்திருப்பணியுஞ்
[செய்வன்
வல்லியர் மோகனுவன் அதிகாரமுடையனுமே.

11. இரண்டுவிதமான கல்விகளைக்கற்பான். கௌரவமான அரசர்களை பேட்டிகாண்பான். இல்லற வாழ்க்கையை இரண்டாக நடத்துவான். எதிரிகளை நாசம் செய்திடுவான். சிரமப்படுவோர்களை ரக்ஷிப்பான். தருமத்தையும் கோவில் காரியங்களையும் செய்வான். ஸ்திரீலோலனுயிருப்பான். அதிகாரத்தை வகித்து நடத்துவான்.

12. சொல்லிடு வசனமெல்லாம் சுத்தமாம் சொகுசூனுண்பான்
எல்லைகள் விருத்திசெய்வன் ஏவலாள் பணேயேருள்ளான்
தல்லிசொல் தடுக்கானுகும் சான்றோர்க்கு அன்னமீவன்
புகருவார் பராசர்தானும் புகன்றினிர் யோகம்எவ்வாறு.

12. இவன் சொல்லக்கூடிய வார்த்தைகளெல்லாம் ஒழுங்காயமையும். சொகுசுடன் சாப்பிடுவான். நிலபலங்களை விருத்திக்குக்கொண்டு வருவான். வேண்டிய பண்ணை ஆட்களையும் வேலைக்காரர்களையும் உடையவன். பார்யை சொல்லைத் தட்டிச் சொல்லான். உயர்ந்தோருக்கு அன்னம் அளிப்பான். எவ்வாறு இவ்வித யோகங்களை எடுத்துச் சொன்னீர் என்று பராசரர் கூறலாயினர்.

13. செப்புவீர் முனியேநீதான் சனிகுரு சேர்ந்ததொன்று
ஒப்புடன் மதிசேயுச்சம் ஓராறு முகத்தோனுனில்[1]
மெய்ப்புடன் உதித்தபாலன் வேந்தனும் பரிவண்டியுண்டு
தப்பித மணுகாதாகும் சடைமுனி தடுத்துச்சொல்வர்.

13. முனீசுவரரே! நீர்தான் சொல்லுங்கள். சனியும் குருவும் ஒன்ருய்ச் சேர்ந்து இருப்பது ஒன்று. அதற்கு ஒற்றுமையாகச் சந்திரன், செவ்வாய் உச்சம் மற்ருென்று. ஜாதகனே கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவன். (ஆறுமுகத்தோன் தினம். சஷ்டி திதி என்றும் சொல்லலாம்.)

---

1. கார்த்திகை நட்சத்திரத்தில்

நல்ல ராஜயோகம். குதிரை பூட்டிய வண்டியுடையோன். கெடுதி அவனை அணுகாதாகும். ஜடைமுனிவர் இதனைத் தடுத்துக் கூறுவார்.

14. இருமூன்று சகடையாகி இருப்பதால் யோகம்எவ்வாறு
குருவுமே தனுசுவாக கௌரி விடையதாக
உரையந்து சகடைதானும் உத்தமன் வயதுதீர்க்கம்
பெருமையாய்க் குடும்பமேற்பன் புகழுளான் செயமே
[செய்வன்.

14. ஜாதகனுக்கு, சந்திரனும், புதனும் 6, 8, சகடையிலிருப்பதால் யோகம் எப்படி ஏற்படும்? தவிர, வியாழபகவானும் தனுசு ராசியில் நிற்பதால் சொல்லலாம் என்று கௌரிதேவியாகிய பார்வதி விடையளிக்க, குடும்பஸ்தானத்தில் சந்திரனிருப்பதால் இவ்வுத்தமனுக்குத் தீர்க்காயுசு. பெருமையுடன் குடும்பத்தை நடத்துவான். கீர்த்திமான். செய்யும் காரியங்களில் ஜயமுண்டாகும்.

15. தன் துணை எழுவர்தோன்றும் தங்கிடும் ஆண்பால்ரெண்டு
கன்னிகை மூவராகும் கனக்காது மற்றதெல்லாம்
பின்பாகம் விபரமாகப் பேசுவோம் அந்தசங்கை
சன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

15. இவனுடன் பிறந்தவர்கள் எழு பேர்கள் இருப்பார்கள். சகோதரர்கள் இரண்டு பேர்கள். சகோதரிகள் மூவராகும். பாக்கிப் பேர்கள் தரித்திருக்கமாட்டார்கள். பின் பாகத்தில் இவர்களைப்பற்றிப் பேசுவோம். அந்த சந்தேகத்தைப் பற்றிய விவரத்தைக் கேட்பாயாக. ஆவேசம் கொண்ட முருகனைப்பெற்ற பார்வதியே!

16. ஈரெட்டு ஆண்டுதன்னில் இவனுக்குப் பாரிவாய்க்கும்
நாரியும் தந்தைவர்க்கம் நாட்டுவோம் குணத்தைக்கேளாய்
சீறிடான் பொறுமைசாலி திரமில் லாதநெஞ்சம்
மாறிடான் தன்வார்த்தைக்கு வயதுமே தீர்க்கமெய்தும்.

16. இவனுக்குப் பதினாறும் பிராயத்தில் கலியாணம் ஆகும். அவளும் தந்தையின் வமிசத்திலிருந்து ஏற்படுவாள். அவனுடைய குணாதிசயங்களைக் கேட்பாயாக. கோபிக்கமாட்டான் பொறுமையுள்ளவன். பயந்த சுவ பாவம். சொன்ன வார்த்தையை மாற்றமாட்டான். வயதும் தீர்க்காயுசாகும்.

17. செயமுனி தடுத்துசொல்வார் சத்தமம் ராகுநின்று
வியமாக ஏழோன்பத்தில் மிகுசரத்தி லேநிற்க
பயமுண்டு முதல்மனைக்குப் பருகிடும் இரண்டாம்பாரி
தயவுடன் எந்தக்காலம் சார்ந்திடும் இருமனைதான்.

17. இந்த விவரத்தை ஜயமுனி ஆட்சேபித்துக் கூறுவார். சப்த மத்தில் இராகு இருந்து, ஏழுக்குடையவன் பெருமையாக சராராசியாகிய பத்தாம் வீட்டிலிருக்க, முதல் மனைவிக்குப் பயமுண்டு. இரண்டாம் மனைவி ஏற்படுவாள். இரண்டாவது மனைவி எந்தக் காலத்தில் ஏற்படுவாள் என்று தயையுடன் சொல்லுவீர்.

18. முப்பது ஆண்டுதன்னில் முதல்மனை கர்ப்பத்தாலே
தப்பாது காலனுடு சேருவாள் அந்தஆண்டில்
மைப்படி மனைவிவாய்க்கும் மாதுரு கிளையிலேதான்
செப்புவேன் புத்திரபாகம் செனித்திடும் ஆறுதானே.

18. ஜாதகனது முப்பதாவது வயதில் முதல் மனைவி கர்ப்பத்தொந்தரவினால் எமலோகம் சேர்வாள். இது நிச்சயம். அந்த வருஷமே விதிப்படி மனைவி திரும்பவும் ஏற்படும் இவள் தன் தாயின் வம்சத்திலிருந்து ஜாதகனுக்கு வாய்ப்பாள். புத்திர பாக்கியத்தைக் கூறுகிறேன். ஆறு குழந்தைகள் பிறந்திடும்.

19. அதுகள்ஆண் பால்ரெண்டு அணுகிய கன்னிமூன்று
இதுஐந்தும் தீர்க்கமெய்தும் இயம்பினீர் முதல்மனைக்கு
புதல்வர்க ளுண்டோசொல்வாய் பிறந்திடு மிரண்டுதானே
எதமாகும் அவ்விரண்டும் அவ்விதி நடப்பதென்ன.

19. அவற்றில் ஆண்குழந்தைகள் இரண்டு. அதனுடன் பெண் குழந்தைகள் மூன்று. இவை ஐந்தும் தீர்க்கமாயிருக்கும். சரி, முதல் மனைவிக்குப் புதல்வர்களுண்டோ! சொல்லுங்கள். இரண்டு குழந்தைகள் பிறக்கும். அவைகள் கேட்டை அடையும். அப்படிப் பிறந்து இறப்பதன் காரணம் யாது?

20. முன்சென்மம் விதியினாலே மேவிற்று அந்ததோஷம்
என்னஊழ் செய்தானத்தை இயம்புவீர் முனியேநீதான்
தென்திசை யிலங்கைத்தீவில் செனித்தனன் வைசியசேயாய்
கன்னிகை விதவைபோகம் கலந்துமே கருவுதங்கி,

20. இது போன ஜன்மத்தின் கர்மபலனாகும். அதன் காரணமாய்த் தோஷம் ஏற்பட்டது. அவன் செய்த பாபகாரியம் என்ன? அதைத்தான் சொல்லுங்கள். முனிவரே! தென்திசையிலுள்ள இலங்கைத்தீவில் வைசியர் குலத்தில் அவன் குழந்தையாய்ப் பிறந்தான். விதவையான ஸ்திரீயுடன் போகம் செய்து கருவு ஏற்பட்டு,

21. பண்டிதம் அதற்குச்செய்ய பாவையும் மரணமானாள்
துண்டமாய் மறையோர்சாபம் நேர்ந்தது வேறுகாணான்
அண்டர்போல் ராமர்பூசை அணுகிய சேதுக்கேகி
சண்டன்தன் பதிக்குச்சென்றான் தலைநான்கோன் வரியப் [பட்டு.

21. வைத்தியம் செய்ததின் காரணமாக பாலையும் மரணமடைந்தாள். இதனால் பிராமணர்களுடைய சாபம் ஏற்பட்டது. வேறொன்றுமில்லை. தேவர்கள் பூஜைசெய்யும் இராமேச்வர ஸ்தலத்திற்குச் சென்று சேது ஸ்னானம் செய்து, ராமர் பூஜையும் நடத்திப் பாபவிமோசனம் அடைந்து தன் வீட்டிற்குச் சென்றான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

22. பிறப்பனு மிந்தபாலன் பேசின முன்னூழ்தோஷம்
தரிபடும் முதல்மனைதான் சார்ந்திடும் இரண்டாம்அறை
குவிர் அதற்குச்சாந்தி அறையவே மாட்டோம்யாங்கள்
கருவதை யழித்ததோஷம் கண்டிதம் நீங்காதாமே.

22. இந்த ஜாதகன் பிறந்தான். பழைய வினையின் தோஷம் இரண்டாவது மனைவியைச் சார்ந்தது. அதற்குச் சாந்தி என்னவென்று சொல்லுங்கள். அதற்குப் பரிகாரம் நாங்கள் சொல்லமாட்டோம். ஏற்பட்ட கர்ப்பத்தை அழித்த தோஷம் என்றைக்கும் விட்டு நீங்காது.

23. வந்தது வந்தேதீரும் மாதுரு குணத்தைக்கேண்மோ
செந்திரு மகள்போலொப்பம் தீரன்தன் மனதுக்கேத்தோள்
நொந்தவர்க் குதவிசெய்வள் நிமலிநன் னடக்கைநன்மை
தன்துணை ஆண்பாலொன்று சாற்றுவோம் கீழ்பால்இல்லம்

23. இது விஷயத்தில் வந்தது வந்தே தீரும். விதியைத் தடுக்க யாரால் ஆகும்? மாதாவின் குணங்களைக் கேளுங்கள். லட்சுமிதேவியைப் போலிருப்பாள். தீர புருஷனுக்கு உகந்த மனைவி. கஷ்டப்படுபவர்களைக் கஷ்டத்தினின்று நீக்கும் இயல்பினள். இவளுடைய நன்மை இவளுடைய நடத்தையிலேயிருந்தே விளங்கும். இவளுடன் பிறந்த சகோதரன் ஒருவன் என்று சொல்லுவோம். கிழக்குப் பார்த்த வீடு.

24. முன்சென்மம் கடையூர்தன்னில் உதித்தனள்கோ வைசிய [வர்க்கம்
அன்னமும் அதிதிக்கீந்து அச்சென்மம் பவமில்லாமல்
துன்னிய காலனூடு சேர்ந்துமே பிரமன்லக்கம்
அன்னம்போல் இக்குலத்தில் அணுகினள் என்று [சொல்வோம்.

24. இவளுடைய பூர்விக ஜன்மத்தில் திருக்கடையூரில் உயர்ந்த வைசியர் குலத்தில் உதித்தனள். விருந்தினர்க்கு அன்னம் அளிப்பாள். அந்த ஜன்மத்தில் பவவினைகளில்லாமல் மேலான எமலோகம் சேர்ந்தாள். பிறகு பிரமனுடைய சிருஷ்டியினால் இந்தக் குலத்தில் அன்னநடையுள்ள இவள் உதித்தாள் என்று சொல்லுவோம்.

25. மறுசென்மம் விரிஞ்சிதன்னில் மறைகுல முதிப்பாளாகும்
அரிவைக்கு இச்சென்மத்தில் அடைந்தபுண் ணியங்க
[ளென்ன
வரன்மனம் போலேவாழ்ந்து மாதுவும் விரதமேற்றும்
அறமதி லிச்சையுண்டாய் அணுகுவாள் பிரம்மசேயாய்.

25. அடுத்த ஜன்மத்தில் விரிஞ்சிபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தாள். அவள் இந்த ஜன்மத்தில் அடைந்த புண்ணிய பலன்கள் என்ன? புருஷனுடைய குறிப்பறிந்து வாழ்ந்து பல விரதங்களை அனுஷ்டித்துத் தரும காரியங்களில் பிரேமை எற்பட்டவளாயிருந்ததனால் பிராமணக் குழந்தையாய்ப் பிறந்தாள்.

26. தந்தையின் பூர்வம்சொல்வேன் தக்கோல மருகில்கீழ்பால்
பிந்திய ஊரிலேதான் பிறந்தனன் ரெட்டிவம்சம்
வந்தவர்க் கன்னமீந்தும் வளமுள குடும்பியாகி
முந்தின தலங்கள்சென்று மேவினன் காலனூடு.

26. இந்த ஜாதகனின் தந்தையின் பூர்விகத்தைப்பற்றிக் கூறுவோம். தக்கோலம் என்ற ஊருக்கு சமீபத்தில் கிழக்குப் பக்கத்திலுள்ள ஊரிலே தான் பிறந்தான். ரெட்டிகளின் வமிசத்தில் பிறந்தான். வந்த விருந்தினர்க்கு அன்னம் கொடுத்து வளப்பம்பொருந்திய குடும்பத்தை உடையவனாகி பழைமையான சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கடைசியில் எமலோகம் சென்றான்.

27. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனித்தனன் கர்ணசேயாய்
மரணமட் டுலகிலேதான் மன்னரால் உய்வானாகும்
அறுஅஞ்சு இரண்டுஆண்டில் அந்தகன் பக்கல்சேர்வன்
மறுசென்மம் தில்லைதன்னில் மறைகுல முதிப்பானாகும்.

27. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுக் கணக்குப் பிள்ளையின் மகனாய்ப் பிறந்தான். சாகும் வரையில் உலகினில் அரசாங்கத்தில் உத்தியோகம் செய்து வாழ்வான். தனது முப்பத்திரண்டாம் வயதில் (அல்லது அறுபதாம் பிராயத்தில்) எமலோகம் சேர்வான். அடுத்த ஜன்மம் சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்திலுதிப்பான்.

28. இந்ததோர் சென்மந்தன்னில் இடுக்கண்கள் சிலர்க்குச்
[செய்தும்
வந்ததால் மறைக்குலத்தில் வருகும்கா ரணங்களென்ன
நிந்தைகள் சிலர்க்குச்செய்தும் நேமியில் தலங்கள்சென்றும்
முந்தினோர்க் குதவிசெய்தும் முதல்விக்குத் தொண்டுபூண்டு,

28. இந்த ஒரு ஜன்மத்தில் சிலர்க்கு இவன் இடைஞ்சல்களைச் செய்வான். அப்படிச் செய்பவன் பிராமண குலத்தில் வந்து சேர்ந்த காரணங்கள் யாவை? சிலர்க்குத் தூஷணைகள் செய்தபோதிலும், பூமியில் உள்ள க்ஷேத்திரங்களைப்போய்ப் பார்த்துக் கடவுளைத் தரிசித்து, பெரியோர்க்கு ஒத்தாசை செய்தும் தேவியின்பால் பக்தி செலுத்திக் கொண்டும்,

29. வருவதால் மறைக்குலத்தில் வருகுவா ரென்றும்சொல்வோ
மருமமாய் நாற்பதாண்டில் மடிவராம் அன்னைதானும்
அருபது மூன்றுஆண்டில் அணுகிய மீனமாதம்
திருமக னுடலம்ஏகும் செப்புவோ மிவன்பின்சென்மம்.

29. வந்ததனால் மறைக்குலத்தில் வந்துதித்தான் என்று சொல்லுவோம். யாவர்க்கும் தெரியாமல் இரகசியமாய்த் தன்னுடைய நாற்பதாவது வயதில் இறப்பான். அன்னையும் அறுபத்துமூன்றும் ஆண்டில் பங்குனி மாதத்தில் கடவுளுடைய பாதத்தைச் சேர்வாள். இதன் பின் ஜன்மம் கூறுவோம்.

30. உத்திரம் காசிதன்னில் உதிப்பானும் பிரம்மசேயாய்
முத்தின குடும்பியாகி முதல்வனும் வாழ்வானுகும்
சித்தசன்[1] செனனகாலம் கிருத்திகை நாளில்நாலாம்
பத்துவாம் பாதந்தன்னில் பானுவில் திங்கள்ரெண்டு.

30. வடக்கே காசிக்ஷேத்திரத்தில் ஜாதகன் பிராமணக்குழந்தையாய்ப் பிறப்பான். பெரிய குடும்பியாகி இப்பெரிய புருஷன் வாழ்ந்து வருவான். இந்த மன்மதாகாரமானவனுடைய ஜனனகாலம் கிருத்திகை நட்சத்திரத்தில் நாலாம் பாதத்தில், சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்கும் அமாவாசை தினமாகும்.

31. இருப்பதைப் புகன்றோம்தாயே இதற்குமேல் மதியின்காலம்
செருக்குகள்[2] அதிகமுண்டு செயநிலம் சேருமென்றோம்
வருத்தங்க ளணுகாதாகும் வந்திடும் துணைபின்னென்றோம்
திருத்தமாய் விபரம்ரெண்டில் செப்புவோம் தாயேயாங்கள்.

31. இவ்விதமிருப்பதைக் கூறினோம் தாயே! இதற்குமேல் சந்திர தசை. மயக்கங்கள் அநேகமுண்டு. நல்ல செழிப்பான நிலபலங்கள் சேரும் என்றோம். யாதொரு வருத்தங்களையுமடைய மாட்டான். இவனுக்குத் தம்பி உண்டு என்றோம். அதன் விவரங்களைத் திருத்தமாய் இதன் இரண்டாம் பாகத்தில் கூறுவோம் நாங்கள் தாயே!

---

1. மன்மதன்
2. மயக்கங்கள்

ஜாதகம் 11

1. மதியும்சாடி பணிமீனம் மன்னன்[1] நந்திபுகர் கோலாம்
புதன்சேய் பானுகாரி சிகிபெண்ணில் மேடம் உயிராக
இதுவேகிரகம் தானின்றுல் இயம்பும்முனியே பலன்தன்னை
வதிஷ்டருரைப்பார் ஆண்செனனம் வளவுகீழ்மேல்
[வீதியதே.

1. சந்திரன் கும்பத்திலும், இராகு மீனத்திலும், வியாழன் ரிஷபத்திலும், சுக்கிரன் துலாத்திலும், புதன், செவ்வாய், சூரியன், சனி, கேது இவர்களெல்லாம் சேர்ந்து கன்னியிலும் வீற்றிருக்க, இந்த கிரக நிலையைக் கொண்ட மேஷலக்கின ஜாதகனுக்குப் பலனைச் சொல்ல வேண்டும் முனிவரே என்று வேண்ட, வசிஷ்டர் பின் வமாறு சொல்லலுற்றார். ஜாதகன் ஆண்பால்; கிழக்கு மேற்கு வீதியில் ஒரு வளைவில்

ராகு	லக்கினம்	வியாழன்	
சந்திரன்	இராசி சக்கரம்		
		சுக்கிரன்	புதன் செவ்வாய் சூரியன் சனி கேது

2. அதுவே தென்பால்வாசலது அரன்கோஷ்டமு மேல்பாலில்
பொதுவா மடங்கள் தானுண்டு பிரிதி[2] வாதும் அங்கரும்
இதுவே கங்கைகுலமாகும் எய்துமிரண்டாம் செனனமுமே
வதிபன்குடும்பச் சேதிதனை அறிவிப்போமே பின்னூலில்.

2. தெற்குப்பக்கம் வாசல் கொண்ட வீட்டில் பிறப்பான். அதற்கு மேற்கே சிவன்கோவில். சமூக மடங்களுமுண்டு. அந்த ஊர் யாவரும் விரும்பத்தக்கது. இவனது இரண்டாம் ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் உதிப்பான். இவனுடைய குடும்பத்தினரின் விவரங்களை இந்நூலின் பின் பாகத்தில் தெரிவிப்போமாக.

---

1. வியாழன்
2. பிரீதி

3. தந்தைதுணை ஆண்ஒன்றுகுமே சண்டன்[1]பதிக்கு மத்தி
[யத்தில்
விந்தையாகத் தான்செல்வன் விளங்காததற்குச் சுதர்களுமே
சொந்ததுணை பெண்ணிரண்டாகும் சோரும் மற்றதவை
[யெல்லாம்
பிந்திபாகம் விபரமதாய்ப் புகல்வோம்தாயே பெருமுனியும்.

3. தந்தையின் சகோதரர் ஒருவர் உண்டு. மத்தியப்பிராயத்தில் அவன் எமலோகம் செல்லுவான். இதுவும் ஆச்சரியம்தான். அவனுடைய பிள்ளைகளும் விளங்கமாட்டார்கள் இவனுடன் பிறந்த சகோதரிகள் இரண்டு பேர்கள். மற்ற உடன்பிறப்பெல்லாம் தோன்றி மறையும். இதன் விவரங்களைப் பின்பாகத்தில் சொல்லுவோம். தாயே! என்றார் வசிஷ்டரும்.

4. முனியே தந்தை குணம் கேளாய்
மொழியும் சுகமாய் உயர்குடும்பி
இனமே மெச்ச வாழ்ந்திடுவன்
எழிலாய் பூமி பலஊரில்
சினமே உண்டு உடன் சாந்தம்
சிவந்த மேனி தாயிரண்டு
கனிவாய் பின்தாய் தனக்கு ஈவன்
கலப்பா னென்றேம் காரிழையே.

4. முனீச்வரரே! தந்தையின் குணத்தைக் கூறுங்கள். சுகமான வார்த்தைகளைப் பேசுவான். உயர்வான குடும்பத்தையுடையவன். சுற்றத் தார்கள் மெச்சும்படி வாழ்வான். அருமையான பூஸ்திதிகள் பல இடங் களில் இவனுக்கு ஏற்படும். கோபமுடையவன். உடனே சாந்தமடைவன். சிவந்த சரீர நிறமுடையவன். தாயார் இருவர். இளைய தாயாருக்கு இவன் பிறப்பான்.

5. ஏகும் தந்தை நிதியெல்லாம் எதிரிஞாதி தான் பகையால்
ஆகமமுணர்ந்தோர் நேசமுறும் அரிராசியில் உத்திரமுறும்
பாகமாகத் தானுதிப்பான் பகவான் பத்தி கொண்டிடுவன்
தோகைமார்கள் மோகமுறும் தொடுத்ததைையே வென்
[றிடுவன்.

5. ஏற்படும் தன் தந்தையின் சொத்துக்களெல்லாம், பகைமை பூண்ட சொந்தக்காரர்களால் எதிர்க்கப்படும். சாஸ்திரஞானம் பெற்றவர் களுடைய சிநேகம் ஏற்படும். சிம்மராசியில் உத்தரக்காலில் ஜாதகன் ஜனிப்பான். கடவுளிடத்தில் மிக்க பக்தி பூண்டிடுவன். ஸ்திரீகளிடத்தில் காமம் ஏற்பட்டவனுயிருப்பான். எடுத்த காரியத்தில் ஜயம் பெறுவான்.

---

1. இயமன்

6. இடுவன் ஏழை தனக்கன்னம் எழிலாய் கீதமிஷ்டமுறும்
தடமே விட்டு வேறுஇடம்சேரும் பலவாய் தனச்சேதம்
திடமாம் கல்வி யூகையுளன் செய்வன்பின்பால் செட்டுகளும்
கடனே கொள்வன் நிவர்த்திசெய்வன் கந்தன் பத்தி
[கொள்ளுவனும்.

6. ஏழைகளுக்கன்னம் போடுவான். பெருமையான சங்கீதத்தில் இஷ்டப்படுவான். இடம் விட்டு இடம் மாறுவான். பலவிதத்தில் பண நஷ்ட மேற்படும். சரியான கல்வி யறிவுடையவன். நல்ல மதியூகி. பின்பாகத்தில் வியாபாரங்களைச் செய்வான். கடனுக்கும் ஆளாவன். அதை யும் நிவிர்த்தி செய்வான். முருகக்கடவுளிடம் பக்தி செலுத்துவானுவன்.

7. ஏதுகா ரணத்தினுலே இவன்தந்தை ஆஸ்திஏகும்
ஓதுவார் முனியேநீதான் உரகனும்[1] விரையம்புக்க
தீதாக பானுகாரி சஷ்டமம் அதனில்தங்க
போதனம் யாவும்போகும் பூவைபால் நேருமென்றோம்.

7. என்ன காரணத்தினுலே இவனுடைய தந்தையின் சொத்து இவன் கையை விட்டுப் போம். முனிவரே! சொல்லுங்கள். இராகுவும் பன்னிரண் டாமிடமாகிய விரயஸ்தானத்திலிருக்க, இடைஞ்சலான ஷஷ்டாஷ்டமமான வீட்டில் சூரியனும் சனியும் சேர்ந்திருக்க, போகவேண்டிய சொத்துக்கள் யாவும் போம். அது ஸ்திரீகளைப் போய்ச்சேரும் என்றோம்.

8. சொன்னஇக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அவன்யூகி கல்வி
[மேன்மை
தன்னுடல் மெலிவுநீட்டுச் சரசமாய் வார்த்தைசொல்வன்
மன்னரால் சிவங்கள் மருவிடும் பாலனுக்கு.

8. இப்படிப்பட்ட விவரங்கள் கொண்ட குணவானுக்கு இந்த ஜாதகன் தோன்றுவான். அவனுடைய குணங்களை விவரிப்பேன். நல்ல மதியூகி. கல்வி மேன்மை பூண்டவன். தன்னுடல் வரவர மெலிவடையும். சரச மான வார்த்தைகளைச் சொல்லுவான். அரசனுல் லட்சுமிகடாக்ஷங்கள் இவனுக்கு ஏற்படும்.

9. தந்தையின் ஞாதியோர்க்குத் தானவன் உருமம்செய்வன்
நிந்தைகள் அதனுல்நேரும் நினைத்தது முடிக்காவல்லன்
சுந்தர முடையனுகும் சுயங்களும் பாடவல்லான்
இந்திர போகமேற்பன் எதிரிகள் நசிக்கவைப்பன்.

---

1. இராகுவும்

9. தந்தையின் ஞாதிகளைப்பற்றிக் காய்ந்து பேசுவான். அதனால் பலர் இவனை நிந்திப்பார்கள். நினைத்த காரியத்தை முடிக்கவல்லவன். நல்ல அழகுடையவன். சுயமாகப் பதங்கள் பாட வல்லவன். தேவேந்திர போகத்தை அனுபவிப்பான். எதிரிகளை மேலோங்கவிடாமல் செய்வன்.

10. தன்துணைமுன் ஆண்ஒன்று தங்கிடும் பின்பெண்ரெண்டு
இன்னவாறு தீர்க்கமெய்தும் இயம்புவோம் ஆண்பால்சேதி
உன்னத தேகியாவன் உளைச்சலாம்[1] சிவந்தமேனி
மன்னர்கள் உறவுகொள்வன் மானிலம் விருத்திசெய்வன்.

10. தன் சகோதரன் மூத்தவன் ஒருவனிருப்பான். தங்கைமார் இருவர் தீர்க்கமாயிருப்பார்கள். சகோதரனுடைய செய்தியைக் கூறுவோம். மேலான சரீரவாகு உடையவன். கவலை கொண்டவன். சிவந்த நிறமுடையவன். மன்னரின் சிநேகத்தைப் பெறுவான். பூஸ்திதியை விருத்தி செய்வான்.

11. அன்னிய வித்தைமேன்மை அதிகாரத் தோழிலேசெய்வன்
பொன்பணி அதிகம்சேர்ப்பன் பெரியோர்க ளுறவுகொள்வன்
கன்னிகை மார்கள்மோகன் காதலி ஒன்றேதீர்க்கம்
தன்சுதர் ஆண்பால்ரெண்டும் தையலர் அவ்வாறுதீர்க்கம்.

11. அன்னியர்களின் வித்தியா விநோதங்களைப் பெற்று மேலான அதிகாரம் செலுத்தும் உத்தியோகம் செய்வான். பொன்னாபரணங்களை அதிகமாக அடைவான். பெரியாரைத் துணைக்கொள்ளுவான். கன்னிப் பருவமுள்ள ஸ்திரீகளிடத்தில் மோகம் கொள்ளுவான். பெண்டாட்டி ஒன்றேயென்று தீர்க்கமாய்ச் சொல்லலாம். ஆண் குழந்தைகள் இரண்டும், பெண்கள் இரண்டும் இவனுக்கு ஏற்படுவார்கள்.

12. அறுமுக னருளுமோங்கும் ஆண்மையாய்த் தொழிலு [மேற்பன்
பெரும்புத்தி அறத்திலிச்சை பெரியோரால் ஞானம்கேள்வி
மருமநா லறிவனாகும் மஹாதலம் செல்வானாகும்
நெறியதைக் காப்பானாகும் நிருபனும் வயதுதீர்க்கம்.

12. முருகக்கடவுளுடைய அருள் மேன்மேலும் விருத்தியாகும். வீரியத்துடன் தொழில்களைச் செய்வான். மேலான புத்தி பூண்டவன். தருமஞ்செய்ய விரும்புவான். பெரிய சாஸ்திர பண்டிதர்களுடன் வேதாந்த விசாரம் செய்வான். நான்குவித இரகசியங்களையும் அறிவானாகும்.

---

1. மனக்கவலை

மஹாஸ்தலங்களைப்போய்த் தரிசிப்பான். தருமநெறியைக் காப்பாற்றுவான். நல்ல எழுத்தாளன். வயதும் தீர்க்கமாயுள்ளவன்.

13. துன்துணை சேதிதன்னைப் பேசுவோம் பின்பாகத்தில்
இன்னவன் மணத்தின்காலம் இயம்புவோம் பத்தொன் [பாண்டில்
கன்னிகை மேல்பால்நேரும் கனமுள தந்தைவர்க்கம்
அன்னவள் குணத்தைச்சொல்வேன் அரிமனை[1] யொப்ப [தாகும்.

13. பின் சகோதரத்தின் சமாசாரம் என்ன? அதைச் சொல்லுவோம். பின் பாகத்தில் இவனுடைய கலியாண காலத்தைப்பற்றிப் பேசுவோம். இவனுடைய பத்தொன்பதாம் வயதில் கலியாணம் நேரிடும். பெண் மேற்கு திக்கிலிருந்து வரும். அவளும் பெருமை வாய்ந்த தகப்பன் வமிசத்திலிருந்து வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுவேன். இந்திராணியை ஒப்பாள்.

14. கல்விமான் கடவுள்பத்தி கனத்தபுத் திகளுமேற்பன்
நல்லவ ளாகிவாழ்வள் நற்சீவி சிவந் தமேனி
தல்லிபோல் குணத்தாளாகும் சான்றோர்க்கு அன்னமீவள்
வல்லிக்கு வயதுதீர்க்கம் மறித்து பராசரர்சொல்வார்.

14. நல்ல படிப்பாளி. கடவுளிடத்தில் பிரேமை பூண்டவள். பெருமை வாய்ந்தவர்களின் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளுவாள். நல்லவளாகி வாழ்வாள். நல்ல ஜீவனம் செய்வாள். சிவந்தமேனியையுடையவள். தாயைப்போன்ற குணத்தையுடையவள். உயர்ந்தோரை அன்னமிட்டு உபசரிப்பாள். இவளுக்கு ஆயுசு தீர்க்கமாயுள்ளது. இதனை ஆட்சேபித்துப் பராசரர் பின் வருமாறு கூறுவார்.

15. மாதுவு மிரண்டுஎன்று அறிவிப்போம் பாலனுககு
ஓதுவார் அந்தசங்கை ஓரேழோன் சரத்திலேற
காதலி யிரண்டுஎன்றோம் கவுசிகர் தடுத்துச்சொல்வார்
நீதியாய் குருவும்ரெண்டில் நிலவுமே லாபம்தங்க.

15. ஜாதகனுக்கு இரண்டு பெண்டாட்டிகள் என்று தெரிவிப்போம் என்ற சமுசயத்தை எடுத்துச் சொல்லுவார். ஏழுக்குடையவன் சராராசியில் தங்க, காதலிகள் இரண்டு பேர்கள் என்று சொன்னோம். இதனைக் கௌசிகர் தடுத்துச் சொல்லலுற்றார். நியாயமாய் வியாழ பகவான் இரண்டாமிடத்திலிருக்க இலாபஸ்தானத்தில் இலாபாதிபதி இருப்பதனால் இலாபமே ஏற்படும்.

---

1. இந்திராணி

16. இரண்டேழோன் கேந்திரமாட்சி இருப்பதால் தாரம் [ஒன்றே
மருவும்வே றபிமானப்பெண் மங்கையும் வடுக[1]மாது
வருகும்கா லங்கள்சொல்வாய் ஆறஞ்சு இரண்டுஆண்டில்
புரிவையும்[2] வடமேல்நேரும் அம்பிகை யாளேகேளாய்.

16. இரண்டு, ஏழு இந்த வீடுகளுக்கு உடையவனை சுக்கிரன் கேந்திர ஸ்தானத்தில் ஆட்சிபெற்றிருப்பதனுல் தாரம் ஒன்றென்றே சொல்லவேண்டும். வேறுவிதமான அபிமான ஸ்திரீ ஏற்படுவாள். அம்மங்கையும் தெலுங்கப் பெண்ணுவள். இனிவரும் காலபலன்களைச் சொல்லுவாய். முப்பத்திரண்டாம் வயதில் தொழிலும் வடமேற்குப் பாகத்தில் ஏற்படும். அம்பிகையே! கேட்பாயாக.

17. புத்திர ராண்பாலொன்று பெண்ணது மூன்றுதீர்க்கம்
அத்திரி புகலுகின்ருர் அபிமான மாதுக்கேதான்
சித்தமாய்ப் புதல்வருண்டோ செப்புவீர் அந்தச்சங்கை
சுத்தமாய்ப் புதல்வர்காணுள் சேல்விழி கேட்டிடாயே.

17. இவனுக்குப் புத்திரன் ஒருவன் உண்டு. பெண்கள் மூன்று தீர்க்கமாக ஏற்படும். அத்திரி பின்பு சொல்லலுற்ருர். அபிமான ஸ்திரீக்கு நிச்சயமாய்ப் புத்திரர்கள் உண்டோ. சொல்லுங்கள் என்று கேட்க அவளுக்கு நிச்சயமாய்க் குழந்தை பிறக்காது. அழகுடைய கண்ணைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

18. அன்னையும் சிவந்தமேனி அவசர மனத்தாளாகும்
தன்னுடல் மெலிவுநீட்சி தாயது இரண்டுஎன்ருேம்
கன்னிகை துர்யோகத்தாள் கணவனுக் கினியாளாகும்
முன்கோபம் கொஞ்சமுண்டு உயர்விலதாய குடும்பம்.

18. தாயாரும் சிவப்பு நிறமுள்ளவள். பரபரப்புள்ள சிந்தனை யுடையவள். தன் சரீரம் வரவர மெலிவடையும். தாயார் இரண்டுபேர்கள் என்ருேமல்லவா. இளைய தாயார் அதிர்ஷ்டகட்டை. கணவனிடம் பிரியமாயிருப்பாள். கொஞ்சம் முன்கோப முள்ளவள். மேன்மையில்லாத குடும்பியாவள்.

19. இல்லமும் வடகீழாகும் இவள்துணை ஆண்பால்ரெண்டு
வல்லியு மொருத்தியாகும் வாண்துணை ஒருவனுக்கு
செல்லுவான் வெளிதேசத்தில் செகராசர் பேட்டிகொண்டு
நல்லவ ஞகிவாழ்வன் நயப்புறு வார்த்தையேற்பன்.

---

1. வடுகர்=தெலுங்கு நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் குடியேறிய ஜாதியார்.

2. புரிவு=தொழில்

19 இவர்கள் வீடு வடகிழக்குப் பார்த்ததாகும். இவளுக்குச் சகோதரர் இரண்டுபேர்கள். சகோதரியும் ஒருத்தியாகும். ஒரு சகோதரன் வெளிப் பிரதேசம்போய் பூலோக அரசர்கள் பேட்டி கொள்வான். நல்ல வளுகி வாழ்வான். நயமான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுவான்.

20. துருவசக்[1] கரம்பால்தன்னில் தோன்றியே சீவிப்பானும்
அரிவையும் ஒன்றேதீர்க்கம் அவன்சுதர் கன்னியொன்று
மருவிடும் தீர்க்கமாக மைந்தராண் அந்தம்ஒன்று
பெருகிடும் தீர்க்கமாகப் புண்ணிய வதியேகேளாய்.

20. துருவ சக்கரத்தினருகிலுள்ள ஒரு பிராஞ்சத்தில் தோன்றி ஜீவிப்பான். பெண்டாட்டியும் ஒருத்தி தான். இது தீர்க்கம். அவன் புத்திரபாக்கியம் எவ்வாறெனில் அந்திய காலத்தில் பெண் ஒன்றும், ஆரம்பத்தில் ஆண் ஒன்றும் ஏற்பட்டு, குடும்பம் பிரமாதமாக விருத்தியாகும். புண்ணியவதியே! கேட்பாயாக.

21. மற்றொரு துணைவன்சேதி மணமுண்டாய் மதலையின்றி
செத்திடு வானும்தாயே செப்புவோம பின்பால்சேதி
பெற்றதாய் பூர்வம்தன்னைப் பேசுவோம் மதுரைநாட்டில்
குற்றமாய் கர்ணசேயாய் குலவியே வறுமையின்றி.

21. மற்றொரு சகோதரனின் செய்தியைக் கூறுவாம். கலியாணம் ஆனதும் குழந்தை யில்லாமல் இறந்துபோவான். தாயே! இதன்பின் பெற்ற தாயாரின் பூர்விகத்தைப் பேசுவோம். மதுரை நாட்டில் கவுணீகர் குலத்தில் குழந்தையாய்ப் பிறந்து வளர்ந்து வருவாள். தரித்திரமே இல்லாமல்,

22. சுதர்களு மதிகமுண்டாய் தோகைக்குப் பலமில்லாமல்
சதியான காலனுடு தன்வரன் முன்னேசென்று
விதியவன் வரியப்பட்டு விளங்கினு ளிந்தமாது
அதிதியே முப்பான்ரெண்டு ஆண்டினில் அன்னையேகும்.

22. குழந்தை குட்டிகள் அதிகமாய் ஏற்பட்டு இவளுக்குச் சரீரத்தில் தெம்பு இல்லாமல் எமலோகம் செல்லுவாள். கணவனுக்கு முன்பே சுமங்கலியாய்ச் சாவாள். பிரம்ம தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு இந்த மாது விளங்கலானள். அவளும் தன்னுடைய முப்பத்திரண்டாம் பிராயத்தில் சாவாள்.

---

1. துருவத்திற்கு இருபத்துமூன்றரைப் பாகையளவினிற்பது.

23. மறுசென்மம் அவ்வூர்தன்னில் வருகுவாள் சைவசேயாய்
பெருமையாய்க் குடும்பியாகி புதல்வர்க ளதிகமுண்டாய்
திருமகள் விலாசம்[1]பெற்று சேல்விழி வாழ்வாளாகும்
அருமறை முடிவிலாடும் அம்பிகை புகன்றிட்டோமே.

23. அடுத்த ஜன்மத்தில் அதே ஊரில் சைவக் குழந்தையாய்ப் பிறப்பாள். பெருமை பொருந்திய குடும்பியாகி அதிகக் குழந்தை குட்டிகள் ஏற்பட்டு லட்சுமி கடாட்சம் பெற்று இந்த சுந்தரி வாழ்வாள். வேதங்களின் அந்திய காலத்தில் திருநடனம் செய்யும் சாமுண்டீசுவரியே! சொன்னோமே இவ்வாறு.

24. தந்தைமுன் சென்மம்சொல்வேன் தடமலை கொங்கு [நாட்டில்
விந்தையாய் சௌராஷ்டிரவர்க்கம் மேவியே வறுமை [யோனாய்
வந்திடு மனைவிமைந்தர் வளமுள செட்டுசெய்து
அந்தவன் வாழுநாளில் அணுகின வினையைக்கேண்மோ.

24. தந்தையின் முந்திய ஜன்ம பலனைக் கூறுவேன். மலைகளுள்ள கொங்குநாடாகிய மலையாளத்தில் வேடிக்கையாக சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்து தரித்திரனாயிருப்பான். மனைவி மக்களைப் பெற்று வளப்பம் பொருந்திய வியாபாரங்களைச் செய்து வாழ்ந்துவரும் நாளில் அவனுக்கேற்பட்ட வினைக்கட்டு யாதென்று கேட்பாயாக.

25. ஏழைக்குப் பொருளையீந்து இயல்[2]யெல்லாம் தன்னகர் [கொண்டான்
தாழ்வுளோர் வருத்தமுற்றுச் சாற்றுவர் சாபம்தானும்
ஆழியில் துரும்பைப்போலே அலையவே விட்டாயாவி
சூழும்பின் சென்மம்தன்னில் துணைஆண்பால் தோஷ [மாயும்

25. ஏழை மக்களுக்குக் கடன் கொடுத்து அவர்களுடைய நிலபலன்களை யெல்லாம் தன்னூருக்குக் கொண்டு சேர்த்தான். ஏழை ஜனங்கள் மனம் நொந்து சாபத்தைக் கொடுத்தார்கள். அலைகடலில் அகப்பட்ட துரும்பைப்போல எங்களைத் தவிக்கும்படி செய்தாய். உனக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளைப் பரி கொடுத்து,

1. இலட்சுமி கடாக்ஷம்

2. இயற்கைச் சொத்து

26. செனித்தஇல் லடையாதாயும் தந்தையின் தனமும்போக்கி
இனம்ஞாதி[1] பகையுமாகி இடருகள் அனந்தமாயும்
கனமான விரோதமாயும் காசினிதன்னில் வாழ்வாய்
பிணையாகச் சொல்லியேதான் புழுதியை[2] விட்டானென்
[றோம்.

26. அவர்கள் பிறந்த வீட்டை யடையாமல் தகப்பனின் தனமும் பாழாகி உற்றார் உறவினருடைய பகைமையுமேற்பட்டு, பல இடைஞ்சல்களுமேற்பட்டு, மகத்தான கெடுதியும் நீங்காமல், பூமியில் நீ வாழ்வாய் என்று சபித்ததின் பலனாக நிலபலன்களை இழந்தான்.

27. மாரனுக் கந்தசாபம் மருவிற்று என்றுசொல்வோம்
தீரமா யந்தியத்தில் செல்வங்கள் குறைவுண்டாகி
ஆறுமா முகத்தோன்பக்தி அணுகியே உடலம்நீங்கி
பாரினி லுதித்தானென்றோம் பற்றிடும் ஏழைசாபம்.

27. ஜாதகனுக்கு அந்தச் சாபம் நேர்ந்தது என்று சொல்லுவோம். நிச்சயமாக, அந்தியக் காலத்தில் செல்வங்கள் குறைவை அடைந்து ஆறுமுகத் தோனாகிய முருகக் கடவுளின் பக்தி ஏற்பட்டு உடலும் விட்டு ஆவி நீங்கிற்று. பின்பு பூலோகத்தில் உதித்ததும் ஏழைகள் சாபம் பலித்தது.

28. தந்தையின் தனமும்தோஷம் தாயாதி மாரால்நேரும்
தன்துணை ஆண்பால்நஷ்டம் சலிப்பான மனமுமாகும்
தன்னில்லம் விட்டுநீங்கும் சண்முக னடியாராலும்
பின்னமாய்ப் பலவிரோதம் பேசுவோம் தாயேகேளும்.

28. தந்தையின் தனமும் தோஷப்பட்டது. இது சொந்தக்காரர்களால் ஏற்பட்டது. தன்னுடைய சகோதரனும் இறப்பான். மனக் கலக்கம் ஏற்படும். தன் வீட்டைவிட்டு நீங்குவான். முருகபிரானின் பக்தர்களால் பின்னப்படும். பல விரோதங்கள் ஏற்படும். சொல்லுகிறோம், தாயே! கேட்பாயாக.

29. எதுமுதல் எதுமட்டுக்கும் இடருகள் நேரும்சொல்வாய்
வதிபன்தன் செனனம்தொட்டு ஆறுரண்டு ஒன்றுண்டுக்கும்
சதியாகும் சத்துருவாலே தனமது செலவுமுண்டு
அதற்குமேல் விரோதியாவும் அந்தகன் பக்கல்சேர்வர்.

29. எதுமுதல் எதுவரைக்கும் இடைஞ்சல்கள் இவனுக்கு நேரிடும். சொல்லுவாய். இவனுடைய ஜனனகாலம் தொட்டுப் பதிமூன்று வருஷம்

---

1. உற்றார், உறவினர்
2. நிலத்தை

சத்துருக்களால் இடைஞ்சலுண்டு. சொத்துக்கள் செலவாகும். அதற்கு மேல் விரோதிகள் யாவரும் எமலோகம் சேருவார்கள்.

30. மனமது தீர்க்கமாகும் மானிலம் செட்டுமோங்கல்
தினலாபம் பின்பால்சொல்வேன் செனித்தவன் முப்பான் [மூன்றில்
கனமுள தந்தைகெண்டம் கழறுவோ மிவன்பின்சென்மம்
வினைதீர்க்கும் கோகர்ணத்தில் விளங்குவான் பிரம்ம [சேயாய்.

30. மனம் திடமடையும். பூலோக வியாபாரங்கள் விருத்தியாகும். இவனுடைய தினசரி பாபத்தைப்பற்றிப் பின்னால் சொல்லுவேன். ஜனித்தவன் தன்னுடைய முப்பத்துமூன்றும் பிராயத்தில் கௌரவமாயிருந்த தந்தைக்குக் கண்டம் ஏற்படும். இவனுடைய பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுவோம். வினைக் கட்டுகள் தொலைந்துபோகும். கோகர்ண க்ஷேத்திரத்தில் பிராமணக் குழந்தையாய் விளங்குவான்.

31. சாதகன் பூர்வம்சொல்வேன் சட்டராதிராசர் நாட்டில்
சூதிலா யிக்குலத்தில் செனித்துமே வறுமையின்றி
மாதவர் பத்தியாயும் மஹாதலம் சேதுசென்று
வேதனை யில்லாதாகி மேவினன் காலனூடு.

31. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவேன். செவ்விதான பழைய அரசர் நாட்டில் குற்றமற்ற இந்தக் குலத்தில் ஜனித்துங்கூட, ஜனித்ததுமுதல் வறுமையின்றி, தபசிகளிடம் பிரேமை பூண்டு, மஹாஸ்தலமாகிய சேது (இராமேச்வரம்) சென்று வேதனைகள் இல்லாமல் எமலோகம் சேர்ந்தான்.

32. மறையவன் வரியப்பட்டு வந்தவ னிவனேயென்றோம்
உரைக்கிறோ மிவனின்யோகம் உலகுளோர் மதிக்கவாழ்வன்
அரசரால் தொழிலுமேற்பன் அறுநான்கு ஆண்டுதன்னில்
மருவிடும் ராசயோகம் ஐம்பது எட்டாண்டுக்கும்.

32. திரும்பவும் பிரம்ம தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவன் இவனே யென்றோமல்லவா! இவனுடைய யோகபாவத்தைக் கூறுகிறோம். உலகத்திலுள்ளோர் மதிக்கும்படி வாழ்வான். இராஜாங்கத்தில் உத்தியோகம் பெறுவன். இருபத்துநான்காம் வயதில் ராஜயோகம் சம்பவிக்கும். இஃது இவனுடைய ஐம்பத்தெட்டாம் வயது பரியந்தம் இருக்கும்.

33. தரணியை விருத்திசெய்வன் தன்பந்து மதிக்கவாழ்வான்
பரிவண்டி யுடையனுகும் பாக்கியம் அதிகம்சேர்ப்பன்
இருஇல்லம் செய்வானுகும் இவன்தேடு ஆஸ்தியாவும்
அறுரெண்டா யிரம்பொன்என்றேம் அம்பிகை யாளே
[கேளாய்.

33. பூமிகளை விருத்திக்குக் கொண்டு வருவான். தன்னுடைய பந்துக்கள் மதிக்கும்படி வாழ்வான். குதிரைகள் பூட்டிய வாகனங்களை யுடையவன். சொத்துக்களை அதிகம் சேர்ப்பான். இரண்டு வீடுகளைக் கட்டுவான். இவன் சம்பாதிக்கும் ஆஸ்திகள் யாவும் பன்னிரண்டாயிரம் பவுன் பொறும் என்றேம் அம்பிகையே! கேட்பாயாக.

34. அறுபது ஏழுஆண்டில் அணுகின கன்னிமாதம்
திருமக னுடலம்ஏகும் செப்புவோ மிவன்பின்சென்மம்
மருமமாய் மலைநாடன்னில் வருகுவான் பிரம்மசேயாய்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

34. இவனது அறுபத்தேழாவது வயதில் புரட்டாசி மாசத்தில் இவன் தன் பூலோக வாழ்வை நீப்பான். இவனுடைய மறு ஜன்மத்தைக் கூறுவோம். இரகசியமாய் மலைநாட்டில் பிராமண குழந்தையாய் அவதரிப்பான். விக்நேசுவரனைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

35. அன்னவன் செனனகாலம் அவிட்டநாள் மூன்றும்பாதம்
மன்னுசேய் ஆண்டுரெண்டும் மாதமும் பதினென்றுகும்
முன்பாகம் விபரம்சொன்னேம் மொழிகுறேம் பின்பால்
[சேஷ
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

35. அவனுடைய ஜனனகாலம் அவிட்ட நட்சத்திரம் மூன்றும் பாதம், செவ்வாய் தசையில் வருடம் இரண்டும் மாதம் பதினென்றும் செல்லவேண்டி இருக்கும். முன்பாகத்தைப்பற்றிய விவரம் கூறினேம். பின் பாகத்தில் பாக்கி விவரம் கூறுவோம். உத்தமனுன கரிமுகத்தோனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

ஜாதகம் 12

1. பிறைநந்தி பானுகன்னி புதன்புகர் பணிசெய்கோலாம்
குருசனி மேருவாக கேதுவும் மேடமாக
வருவது சென்மமாடு வரைகுவீர் பலனையென்று
அரன்மனை யாளும்கேட்க அத்திரி புகலுகின்றார்.

1. சந்திரன் இரிஷபத்திலும், சூரியன் கன்னியிலும், புதன், சுக்கிரன், இராகு, செவ்வாய் இவர்கள் எல்லோரும் துலாத்திலும் சேர்ந்திருக்க, குருவும், சனியும் தனுசில் சேர, கேதுவும் மேஷத்திலிருக்க, இந்த கிரக நிலை விவரங் கொண்ட மேஷலக்கின ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுவீராக என்று பரமேசுவரனைப் பர்த்தாவாக யடைந்த பார்வதி கேட்க, அத்திரி மகரிஷி கூறுகின்றார்.

	லக்கினம் கேது	சந்திரன்	
	இராசி சக்கரம்		
குரு சனி		புதன் சுக்கிரன் ராகு செவ்வாய்	சூரியன்

2. இந்தசே யானும்சென்மம் இல்லமும் கீழ்பால்நோக்கம்
தென்வட வீதியாகும் சிவன்கோஷ்டம் வடகீழாமே
அந்தரி காளிமாரி அணுகிடும் தென்பால்தன்னில்
சந்ததம் சிறுஊர்தன்னில் சென்மமாம் கர்ணசேயாய்.

2. இந்த ஜாதகனுடைய பிறந்த வீடு தெற்கு வடக்கு வீதியில் கிழக்குப் பார்த்தது. வடக்கிழக்கில் சிவன் கோவில். அம்மன் கோவில் தெற்குப் பக்கத்தில். எப்பொழுதும் இந்த கிராமத்தில் கணக்கர் வமிசத்தில் உதிப்பான்.

3. பாலகன் மூன்றும்சென்மம் பகருவோம் யோகச்சேதி
சாலவே அன்னைதந்தை தன்துணை களத்திரபுத்திரர்
ஏலவே முன்பின்சென்மம் இயம்புவோ மின்னூல்தன்னில்
ஆலத்தை யுண்டோன்தேவி அறைகுறு மின்னூல்
[தன்னில்.

3. இவனுடைய மூன்றாவது ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். அதன் யோகம் பின்வருமாறு. பொருத்தமாகவே இந்தப் புஸ்தகத்தில் தகப்பன்,

தாய், சகோதரர், களத்திரபுத்திரர் இவர்களைப்பற்றியும் பொருத்தமாக இவனுடைய முன்பின் ஜன்மத்தின் விவரங்களையும் சொல்லுவோம். ஆலகால விஷத்தை உண்ட பரமசிவனின் தேவியாகிய பார்வதி தேவியே! சொல்லுகிறோம்; விவரமாக இந்நூலில்.

4. இருநான்கு துணைவராக இயம்புவோம் தந்தைக்கேதான்
அறுதுணை சேதமெய்தும் ஆண்துணை இருவர்தீர்க்கம்
பிறவாமுன் வேறுய்ச்செல்வர் பேசுவோம் தந்தைசேதி
மறுவரை வஞ்சித்தேவெல்வன் மால்நிறம் சமதிரேகம்.

4. இவனுடைய தகப்பனுருடன் எட்டுப் பேர் கூடப்பிறந்தவர்கள். அதில் ஆறு பேர்கள் சேதமாவர். இரண்டு சகோதரர்கள் மாத்திரம் தீர்காயுசுடனிருப்பார்கள். அவரவர்கள் வேறு வேருக வசிப்பார்கள். தந்தையின் விவரத்தைக் கூறுவோம். பகைவர்களை வஞ்சனையால் ஜயிப்பான். மானிறம் கொண்ட சமமான தேகம் கொண்டவன்.

5. யூகைமான் கல்விமானும் உண்மையை வெளிக்காட்டாதான்
நாகரிகங் களுண்டு நல்லோர்க்கு நல்லனுவன்
தோகைய ரிஷ்டம்கொள்வன் தேள்ராசி மூலனுளில்
பாகமா யுதிப்பானுகும் பாருகள் அதிகம்சேர்ப்பன்.

5. நல்ல மதியூகி. விசேஷ படிப்புள்ளவன். உண்மையைப் பிறருக்கு வெளிக்காட்டமாட்டான். நல்ல நாகரிகமான பழக்கவழக்கங்களைக் கொண்டவன். நல்லவர்களுக்கு நல்லவனுவன். ஸ்திரீலோலனுயிருப்பான். விருச்சிக மாசத்தில் மூல நட்சத்திரத்தில் மேன்மையாய் அவதரிப்பான். பூமிகள் அதிகம் சேர்ப்பான்.

6 உண்டியும் சுகமாய்கொள்வன் உலகுக்கு நல்லோனுவன்
பண்டுநாள் பூமிதன்னை பாலகன் விருத்திசெய்வன்
துண்டமாய்க்[1] கூறுனுகும் சொல்லதைக் காப்பானுகும்
வண்டிவா கனமுமேற்பன் அறுமுகன் பக்திகொள்வன்.

6. சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான். உலகினருக்கு நல்லவனுவன். பழைய பூஸ்திதிகளை இவன் விருத்தி செய்வான். கண்டித்துப் பேசமாட்டான். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான். வண்டிகள், வாகனங்களை உடையவனுயிருப்பான். முருகக்கடவுளின் பக்தி கொண்டவனுவன்.

---

1. கண்டித்து

7. சாரன்க ளுடையனுக்கும் தானிய விருத்திசெய்வன்
ஏருகள் பணைகளுண்டு எடுத்தகாரி யமுடிப்பான்
மாறிடான் பெரியோர்வார்த்தை மலர்க்கரம் விஷ்ணுரேகை
கிராமாதி கணக்குப்போல கிளைத்திடும் வறுமைகாணுன்.

7. நட்பாளர்களை மிக்க உடையவன். தானியங்களைக் கண்டு முதல் செய்து விருத்திக்குக் கொண்டு வருவான். உழவு பண்ணையாட்களனேகம் உள்ளவன். கருமங்களை எண்ணித் துணிவான். மூத்தோர் சொல் வார்த்தையை அமிர்தமாகக் கொள்ளுவான். கையில் தாமரைரேகை, விஷ்ணுசக்கரம் முதலியன உடையவன். கிராமத்துக்கணக்குகள் வளர்ந்து வருவதுபோல வறுமையென்பதைச் சிறிதும் வளரவிட மாட்டான்.

8. துணைவர்க்கு மேலாய்வாழ்வான் சோம்பிடான் காரியத்தில்
சினமுண்டு உடனேதாழ்வு சிறப்பான குடும்பியாவன்
வினை[1]மனம் கொஞ்சமுண்டு வேந்தர்க்கு இவன்சொல் [மேன்மை
அணையவே தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

8. சொந்தக்காரர்களுக்குள் மேன்மையாக வாழ்வான். சோம்பலில்லாதவன். காரியத்தில் கண்ணுயிருப்பான். கோபமுள்ளவன். உடனே தாழ்வடைந்து விடுவான். சீரும் சிறப்பும் பொருந்திய குடும்பத்தைப் பெற்று வாழ்வான். வஞ்சனைகளில் சிறிது பிரியப்படுவான். அரசர்கள் இவன் வார்த்தையை மதிப்பார்கள். பரமபதத்தை விரும்புவோர்கள் உன்னைக் குறித்துத் தவம் செய்யும் பராசக்தியே! கேட்பாயாக.

9. சொன்னயிக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அரிமக[2] னொப்ப [தாகும்
பன்னியே பேசவல்லன் பலகலை யுணர்வானுகும்
மன்னர்க ளுறவுகொள்வன் வாக்குசொல் மேன்மையாகும்.

9. இப்படிப்பட்ட குணுதிசயங்களைக் கொண்ட இவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பானுகும். அவனுடைய குணங்களை விவரிக்கின்றேன். வாயுவின் புத்திரனுன வீமசேனனைப்போன்ற பலமுள்ளவன். அடக்கமாகப் பேசும் திறம் வாய்ந்தவன். பல கலைஞானங்களைப் பெற்றவன். அரசர்களுடைய நட்பைப் பெறுவான். இவன் வாக்கும் சொல்லும் எவரிடத்திலும் மேன்மையாய் விளங்கும்.

1. வஞ்சகம்
2. வாயுவின் புத்திரனுன வீமனைப்போல

10. நல்லவன் நல்லவர்க்கு வண்டர்க்கு மிண்டனுவன்[1]
அல்லல்எப் போதும்பாண்பன் அடைந்தோரை ஆதரிப்பன்
மல்லுக்குச் செல்லானுகும் மாடுகள் விருத்தியுண்டாம்
வல்லியர் மோகனுவன் மஞ்சணே[2] வார்த்தையேற்பன்.

10. நல்லவர்களுக்கு நன்மையுடன் நடந்து கொள்ளுவான். பொல்லாதவர்களுக்குச் சத்துருவாயிருந்து எதிர்ப்பான். எப்போதும் இடைஞ்சல்களுக்கு ஆளாவன். அண்டினபேரைக் காப்பாற்றுவான். சண்டைக்குப் போகமாட்டான். மாடுகளை விருத்தி செய்வான். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொண்டவனுவன். தலையணை மந்திரோபதேசத்திற்கு ஈடுபடுவான்.

11. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் கமலரேகை
பொன்பணி சேர்ப்பனுகும் பெரிதான குடும்பம்செய்வன்
தன்சொல்லே மேன்மையாகச் சாதிப்பான் ஈகையாளன்
பன்னுவான் ஞானநூலைப் பதரினில்[3] செல்லானுகும்.

11. இவனுடைய சிவந்த உள்ளங்கையில் பத்மரேகை இருக்கும். பொன்னுபரணங்களை அதிகம் செய்து சேர்ப்பான். பெரிய குடும்பத்தை நடத்துவான். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பது போல, தன் வார்த்தைதான் உயர்ந்தது என்று சாதனை செய்வான். தருமசிந்தனையுள்ளவன். ஞானசாஸ்திரங்களைப் படிப்பான். கீழ்நோக்கான புத்தியை அடைந்தவனல்லன்.

12. ரோமங்க ளதிகமில்லான் நுவலுப தேசம்கொள்வன்
தீமையை யொருவர்க்கெண்ணுன் தேவதா தொண்டுமேற்பன்
மாமிக ளிரண்டேயாகும் மஹாதலம் செல்வானுகும்
காமனை[4] விருப்பங்கொள்வன் காதலி கேட்டிடாயே.

12. தலைமயிர் அதிகமில்லாதவன். சொல்லும் உபதேச மொழிகளைக் கேட்டு அவற்றின்படி நடப்பான். யாவர்க்கும் தீங்கு செய்ய நினைக்க மாட்டான். கடவுள் வழிபாடுகளில் இஷ்டங்கொள்ளுவான். மாமியார் இரண்டு பேர்களாவார்கள். (பிதாவின் சகோதரிகள் இரண்டு பேர்கள்தான்.) மஹாஸ்தலங்களுக்குப்போய்த் தரிசனம் செய்வான். மன்மத லீலைகளில் விருப்பங்கொள்ளுவான். தாயே! கேட்பாயாக.

---

1. திண்ணியன்
2. மஞ்சம் + அணே = மஞ்சணே (வஞ்சனை என்றும் கொள்ளலாம்)
3. அற்பத்தில்
4. மன்மத லீலைகளில்

13. தன்துணை முன்பெண்ஒன்று சாற்றுவோம் தீர்க்கமாக
அன்னவன் சேதிசொல்வேன் அழகுளாள் மால்சிவப்பள்
உன்னத விரதமேற்பள் உவமையாய் வார்த்தைகூர்வள்
தன்வரன் மனதுக்கேற்றுள் சலித்தோர்க்கு உதவிசெய்வள்.

13. இவனுடன் கூடப்பிறந்த அக்காள் ஒருத்தி என்று சொல்லுவோம். அவள் தீர்காயுசுள்ளவள். அவளுடைய விருத்தாந்தத்தைக் கூறுவோம். நல்ல அழகி. மாநிறம் கொண்டவள். உயர்வான விரதாதிகளைச் செய்வாள். பல உபமானங்களைக் கலந்து ருசிகரமாகப் பேசுந்திறமை பூண்டவள். தன் புருஷனுடைய குறிப்பறிந்து நடப்பாள். ஏழ்மைப் பட்டவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்வாள்.

14. வரனுமே வடபால்நேரும் மைந்தர்கள் ஆண்பால்ரெண்டு
அரிவைமார் அவ்வாறுதீர்க்கம் ஆண்மையாய்க் குடும்ப
[மேற்பள்
திருகிலா குணத்தாளாகும் தந்தையால் சுகமுமேற்பள்
நரை[1]மல ரிஷ்டம்கொள்வள் நாயகி தீர்க்கசீவி.

14. புருஷனும் வடதிக்கிலிருந்து வருவான். குழந்தைகளோ, ஆண் இரண்டு, பெண் இரண்டு என்று தீர்க்கமாய்ச் சொல்லலாம். தைரியமாய்க் குடும்ப நிர்வாகத்தை ஏற்பாள். சூதுவாதில்லாத மேலான குணத்தை யுடையவள். தகப்பனாரின் ஒத்தாசை ஏற்பட்டுச் சுகமாயிருப்பாள். வெள்ளைப்புட்பங்களில் விருப்பம் கொள்ளுவாள். இவள் தீர்க்காயுசுள்ளவள்.

15. பாலன்பின் கன்னிஒன்று பகருவோம் ஆண்பாலவ்வாறு
சாலவே தீர்க்கமெய்தும் சாதகன் மணத்தைச் சொல்வேன்
ஏலவே யீரெட்டாண்டில் எய்திடும் வடபால்பாரி
நீலியின் குணத்தைச்சொல்வேன் நீத்தோர்[2]போல்
[வார்த்தையேற்பள்.

15. ஜாதகனுக்குத் தங்கை ஒருத்தி உண்டென்று சொல்லுவோம். சகோதரர்களும் அப்படியே. பொருத்தமாக தீர்க்காயுசுள்ளவர்கள். இனி ஜாதகனுடைய கலியாணத்தைப்பற்றிக் கூறுவேன். பதினாறு வயதில் ஏற்பாடாக நடக்கும். தன்னூருக்கு வடக்கிலிருந்து மனைவி தோன்றுவாள். அவளுடைய குணங்களை வருணிப்பேன். துறவிகளைப்போல் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுவாள்.

---

1. வெள்ளை
2. துறவிகள்

16. அன்னம்போல் வடிவுமொக்கும் அன்புள மனத்தளாகும்
அன்ன மு மன்பாயிவள் அடாவடி[1] தன்னில்செல்லாள்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடிசலுக் கினியாளாகும்
அன்னவள் யோகசாலி அரிமனே[2] ஒப்பதாகும்.

16. அன்னம் போன்ற சாயல் கொண்டவள். மனதில் அன்பு பூண்டவள். அன்புடன் ஆதுலர்க்கு அன்னம் கொடுப்பாள். அடாவடிகளில் தலையிடாள். பிறர்மேல் குற்றங்குறைகள் கூறமாட்டாள். சமையல் வேலையை வெகு நன்றாய்ச் செய்வாள். அவள் ஒரு யோகசாலி என்னலாம். இந்திராணியைப் போலிருப்பாள்.

17. மங்கைக்கு வயதுதீர்க்கம் வசிஷ்டரும் தடுத்துச்சொல்வார்
இங்கிவன் தனக்குத்தாரம் இரண்டென மொழியலாகும்
சங்கையை விபரம்சொல்வாய் சத்தமத் தானம்தன்னில்
மங்கலன் பணியும்நிற்க வரைந்தனம் தாரம்ரெண்டு.

17. இம்மங்கைக்கு தீர்க்காயுசு. இதனை வசிஷ்டர் தடுத்துச் சொல்லுவார். இவனுக்கு இரண்டு பெண்டாட்டிகளென்று சொல்லலாம். இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்வாய். சப்தமஸ்தானந்தன்னில் செவ்வாயும், இராகுவும் இருக்க இவனுக்கு இரண்டு தாரங்கள் என்று சொன்னோம்.

18. பிருகுமே புகலுகின்றார் புகலொணு தாரம்ரெண்டு
தெரிவிப்பாய் அந்தசங்கை தனத்துளோ னேழோனுட்சி
குறை[3]மதி யிரண்டிலுச்சம் குருவுமே பூர்வத்தில்தங்க[4]
ஒருதாரம் தீர்க்கமென்றோம் ஒதொணு மறுமனைதான்.

18. இந்தக் கேள்விக்கு பிருகுமகரிஷி பதில் பின் வருமாறு கூறலுற்றார். இவனுக்குத் தாரம் இரண்டு என்று சொல்லுவதற்கேயில்லை. அப்படிச் சந்தேகம் ஏற்பட்டால் தனஸ்தானத்திற்கு அதிபதியாகிய சுக்கிரன் இலக்கினத்திற்கு ஏழாவது வீட்டிலிருந்து ஆட்சி பெற்றிருப்பதனுல். கிருஷ்ணபட்சத்துச் சந்திரன் இரண்டாமிடத்தில் உச்சம் பெற்றுநிற்க. குருவும் திருகோணஸ்தானத்திலிருப்பதனுல் இவனுக்கு ஒரே தாரம்தான், மறுமனைவி உண்டு என்று சொல்லுவதற்கிடமே யில்லை.

---

1. தீச்செயல்
2. இந்திராணி
3. கிருஷ்ணபட்சத்து
4. தன் வீட்டிற்குப் பனிரண்டாம் வீட்டிலிருக்க (பூர்வகம்-தனுசு)

19. இதற்குநே ரிடையாய் சாதக சுரிதியதி லேழாம் பாவத்தில் [பாரு
அதில்சொல்லும் விபரம்இரண்டேழோனுட்சி ஆறிலும் [கேந்திரகோணம்
சதிருடனிருக்கத் தாரமு மொனறே சாற்றினேம் விபர [மாய்க் காண்பாய்
இதுவின்றி வாக்கில் பரலுமே ஒன்று இருப்பதால் [ஒன்றென மொழிந்தோம்.

19. இதற்கு நேரிடையாக ஜாதகச்ருதியில் ஏழாம் பாவத்தைப் பார். அதில் பின்வரும் விபரம் காணலாம். இரண்டு, ஏழுக்குடையோன் ஆட்சி பெற்றும், ஆரும் வீட்டிற்குடைய புதன் கேந்திரகோணத்தில் நட்பாளருடன் பெருமை பெற்றும் இருக்க, தாரம் ஒன்று என்றே சொன்னேம். இதை விவரமாய்க் காண்பாயாக. இதுவுமல்லாமல் வாக்குஸ்தானத்தில் சந்திரன் பரல் பெற்றிருப்பதனுல் தாரம் ஒன்றென மொழிந்தோம்.

20. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலத்தைக்காணேம்
சித்தமா யுதித்தாலுந்தான் தீங்காகு மென்றுசொல்வோம்
குத்தத்தைச் சொல்லுமென்ன குழவியின் தானத்தோனும்
பத்தினி யிடம்ஆருக பங்குமே ரவியைப்பார்க்க.

20. ஜாதகனுடைய புத்திர பாக்கியத்தைச் சொல்லுவோமென்றல் யாதொரு பலத்தையும் காணேம். அப்படியே புத்திரன் ஏற்பட்டால் தீங் காகும் என்றே சொல்லலாம். குற்றம் யாதென்று சொல்லவும் என்று கேட்கத் புத்திரஸ்தானுதிபதியும் ,பத்தினியிடமிருக்கவும், ரவி ஆருமிடத்தி லிருப்பதையும் பார்க்க.

21. சொல்லினேம் சுதர்கள்தோஷம் செயமுனி புகலுகின்ருர்
நல்லதோர் குருவுமஞ்சை நயப்புடன் பார்த்ததாலே
வல்லவன் தனக்குக்கர்மம் மைந்தரால் நேருமென்ருேம்
அல்லவாயமும் யில்லாடை[1] யணுகிடு மென்றுசொல் [வோம்.

21. புத்திரதோஷத்தைப்பற்றிக் கூறினேம். அதற்கு ஜயமுனி சொல்லுவதாவது: நல்ல வியாழபகவான் இலக்கினத்திலிருந்து ஐந்தாமிடத் தைப் பார்வைசெய்ய இந்த ஜாதகனுக்குக் கர்மத்திற்குப் புத்திரன் உண்டு என்ருேம். இன்மையைக் காட்டும் சொல் இல்லாளைச் சேரும் என்று சொல்லுவோம்.

---

1. பிள்ளையில்லாதவளை

22. காரணம் யாதுஎன்ன காவலன் முன்சென்மத்தில்
பாரிய வினைகள்செய்தான் பற்றிற்று அந்ததோஷம்
தீரன்செய் வினைகளென்ன செப்புவீர் அந்தசங்கை
மாரன்தன் பூர்வம்சொல்வேன் மாயூரம் அருகில்தென்பால்,

22. இதற்குக் காரணம் என்ன? இந்த ஜாதகன் போன ஜன்மத்தில் பெரிய கெட்டகாரியங்களை (பாவங்களை)ச் செய்தான். அந்த தோஷம் இப்போது ஏற்பட்டது. அவன் அப்படிச் செய்த வினைகள் யாவை சொல்லுங்கள் என்று கேட்க, அந்த சமுசயம் இவனுடைய பூர்வஜன்மத்தில் ஏற்பட்டது. மாயவரத்திற்குச் சமீபத்தில் தென்பாகத்தில்,

23. பிறந்தனன் வைசியசேயாய் பூவையு மதலையுண்டாய்
பெரிதான செட்டுசெய்து பூமியில் வாழுநாளில்
மருவின வினையைக்கேண்மோ ஓர்மாதுமேல் நிந்தை [வார்த்தை
திருகாக இவனும்சொல்ல தேவியும் திகிலடைந்து,

23. வைசிய குடும்பத்தில் பிறந்தான். இவன் பார்யைக்குக் கர்ப்பம் ஏற்பட்டது. குழந்தை பிறந்தது. பெரிய வியாபாரங்களைச் செய்து பூமியில் வாழ்ந்து வரும் காலத்தில் வந்து சேர்ந்த வினைக்கட்டுக்களைக் கேளுங்கள். ஒரு ஸ்திரீபேரில் அவதூறான வார்த்தையை இடைஞ்சலாக இவனும் சொல்ல, அம்மாதும் திடுக்கிட்டுப் பயந்து,

24. செப்புவாள் சாபம்தானும் செனிக்கும்பின் சென்மந்தன் [னில்
தப்பிதம் துணைமுன்பின்னும் சந்ததி முதலிதோஷம்
மைப்படி மாதுசொல்ல மருவிற்று அந்ததோஷம்
மெய்யுடன் சிலதுதோஷம் மேவிற்று என்றுசொல்வோம்.

24. அவனைப் பார்த்துக் கடுமையான சாபம் இட்டாள். ஏற்படும் மறுஜன்மத்தில் செய்த பிழை இவனைப் பின்பற்றும்; சகோதரம் புத்திரர்கள் இவர்களை முறையே சார்ந்திருக்கும் என்று அம்மாது சொல்ல, அந்த தோஷம் இவனைப் பிடித்தது. உண்மையாகச் சில இடைஞ்சல்கள் ஏற்பட்டன என்று சொல்லுவோம்.

25. அந்திய காலம்தன்னில் அரனடிக்[1] கன்னமீந்து
பிந்திஞோர்க் குதவிசெய்து புகழான தலங்கள்சென்று
மைந்தனு மரணமாகி மால்மகன் வரியப்பட்டு
இந்தவோர் குலமுதிப்பான் எய்திடும் மாதுசாபம்.

---

1. சிவனடியார்களுக்கு

25. இவனுடைய அந்திய காலத்தில் சிவனடியார்களுக்கு அன்ன தானம் செய்து ஏழைமக்களுக்கு உதவிசெய்து மேன்மைபெற்ற ஸ்தலங்களைத் தரிசித்து இவனும் உயிர் துறந்தான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இந்த ஒப்பற்ற குலத்தில் உதிப்பான். அப்போது அம்மாதின் சாபம் இவனை ஏற்கும்.

26. சுதர்களும் தோஷமெய்தும் துணைவர்கள் முன்பின்சேரும்
இதுநிற்க இவனின்யோகம் இயம்புவோம் முனியேகேளும்
புதிதாக சித்திரஇல்லம் பொருந்திடு மென்றுசொல்வோம்
அதுகாலம் புகலுமென்ன ஆருண்டில் செய்வானாகும்.

26. புத்திர தோஷம் ஏற்படும். சகோதரர்களும் முன்பின் ஆவர். இது நிற்க, முனிவரே! கேளுங்கள். இவனுடைய யோகபாவத்தைக் கூறுவோம். அழகான புதிய வீட்டைக் கட்டுவான் என்று சொல்லுவோம். அஃது எந்தக்காலத்தில் ஏற்படும் என்று கேட்க, ஆறு வருடத்தில் செய்வானாகும்.

27. தந்தைபோல் தொழிலுமேற்பன் தரணிகள் விருத்தி [செய்வன்
பந்தினர் மதிக்கவாழ்வன் பலமன்னர் மெச்சஉய்வன்
எய்திடும்[1] பெருமையேற்பன் ஏவலா ளதிகம்சேர்ப்பன்
கந்தன்தன் அருளுமோங்கும் கனத்ததோர் குடும்பியாவன்.

27. தகப்பனாரைப்போலவே தொழில்கள் செய்வான். பூமிகளை வாங்கி விருத்திக்குக் கொண்டு வருவான். பந்துமித்திரர்கள் மதிக்கும்படி வாழ்வான். பல அரசர்கள் மெச்சும்படி வாழ்வான். ஏற்படக்கூடிய பெருமையை ஏற்றுக்கொள்ளுவான். பரிவாரங்களை விருத்தியாக்குவான். கந்தப்பெருமாளின் அருளும் அதிகமாகும். கௌரவமுள்ள குடும்பத்தைப் பெறுவான்.

28. என்னகா ரணத்தினாலே இயம்பினீர் யோகம்தானும்
தன்மகன் மாதிஒன்றாய்ச் சார்ந்துமே நலத்தில்நிற்க
அன்னைகா ரகனுமுச்சம் ஆகிய பலத்தினாலே
சொன்னேனே அளகேசன்போலே சுதனுமே வாழ்வ [னாகும்.

28. இவ்வளவு போகங்களும் இவனுக்கு யாது காரணம் பற்றிச் சொன்னீர்? தர்மகர்மாதிகள் ஒன்றுசேர்ந்து நல்ல இடத்தில் வீற்றிருக்க, மாதிருகாரகனும் உச்சமாய்நிற்க, இந்தபலத்தினாலே சொன்னேன். இந்திரனைப்போலவே இவன் மகனும் வாழ்வான்.

---

1. எந்திடும்

29. இன்னவன் செனனம்தொட்டு இவனுட மரணம்மட்டும்
பொன்பணி குறவுருதான் பூமியில் சல்லியம்காணுன்
மன்னரால் தொழிலுமேற்பன் அவன்ஞாதி தனக்குமேலாம்
தன்னிலே வாழ்வானுகும் செயமுனி கூறுகின்றார்.

29. இவன் ஜெனனகாலம் முதல் சாகும்பரியந்தம், பொன், ஆபரணங்களுக்குக் குறைவில்லாமலும், உலகினில் கடன் கப்பி இல்லாமலும், இராஜாங்கத்தில் தொழிலையும் வகித்து, அவனுடைய சுற்றத்தார்களுக்கு மேலானவனுய் ஒப்பற்றவனுய் வாழ்வானுகும். இதைக்கேட்ட ஜயமுனிவர் பின்வருமாறு கூறலுற்ருர்.

30. எத்தனை சுதர்கள்விருத்தி இயம்புவீர் முனியேநீதான்
சத்தமம் தோன்றுமென்றேம் தங்காது சிலதுஎன்றேம்
சுத்தமா யாண்பாலொன்று தோகையர் மூவராகும்
இத்தகை தீர்க்கமென்றேம் இயம்பின மொழிகுன்ருது.

30. குழந்தைகள் எத்தனைபேர்கள் என்று சொல்லுவீர் முனிவரே, நீங்கள். சப்தமஸ்தானத்தைப் பார்த்தால் சந்ததிகள் தோன்றி சிலதங்கா, என்றேம். சுத்தமாக ஆண்குழந்தை யொன்று, பெண்குழந்தைகள் மூன்று. இவை தீர்க்கமென்று சொல்லுவோம். சொன்னசொல் தவருது.

31. அன்னையின் குணத்தைச்சொல்வேன் அழகுண்டு [பொறுமைசாலி
தன்னுடல் பித்ததேகி சலித்தோர்க் குதவிசெய்வள்
கன்னிகை யோகசாலி கணவனுக் கினியளாகும்
முன்கோபம் கொஞ்சமுண்டு மொழியதைக் காப்பாளாகும்.

31. தாயாரின்குணங்களை வருணிப்பேன். நல்ல அழகி. பொறுமையுள்ளவள். பித்தசம்பந்தமான சரீரத்தையுடையவள். ஏழைகளுக்கு உதவி செய்வாள். இவள் போகமுள்ளவள். புருஷனுக்குப் பிரியமாக நடப்பவள் கொஞ்சம் முன்கோபி. சொன்னசொற்படி நடப்பாள்.

32. தோகைபோல் நிறத்தாளாகும் துறவோர்க்கு அன்னமீவள்
பாகமாய்ப் பேசுவாளாம் பாவையும் சீலியவாள்
தாகமென்றோர்க் கீவள் தப்பிதகுணமில்லாதாள்
போகவா ரிதியைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

32. மயில்போன்ற சாயலையுடையவள். சன்னியாசிகளுக்கு அன்னம் போடுவாள். பக்குவமாய்ப் பேசவல்லாள். அவளும் தக்கசீலமுடையவள். தாகத்திற்குத் தண்ணீர்கொடுப்பாள். கெடுதலில்லாத குணமுடையவள். போகத்திற்கே சமுத்திரம்போன்ற முருகனைப்பெற்ற புண்ணியசாலியான பார்வதியே ! கேட்பாயாக.

33. இல்லமும் வடபாலாகும் இவள் துணை ஆண்பால்ரெண்டு
சொல்லுவோம் தீர்க்கமாகச் சோர்வுறும் மற்றதெல்லாம்
வல்லியின் பூர்வம்சொல்வேன் வளமுள பழனிநாட்டில்
புலகிஞள் கங்கைசேயாய் புகழான குடும்பம்தன்னில்.

33. வீடும் வடக்குப்பக்கத்திலுள்ளது. இவளுடைய சகோதரர்கள் இருவர் என்று சொல்லுவோம். மற்ற கூடப்பிறந்தவர்கள் மரிப்பர் இவளுடைய பூர்விகத்தைப்பற்றிச் சொல்லுவேன். வளப்பம்பொருந்திய பழனிநாட்டினில் வேளாளர்குலத்தில் புகழுடைய குடும்பத்திலுதித்தாள்.

34. அறனதி லிச்சையுண்டாம் அம்மையும் வாழ்ந்துமேதான்
மறலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டு
பெருமையா யிக்குலத்தில் பிறந்தனள் என்றுசொல்வோம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

34. தருமம்செய்வதில் விருப்பங்கொண்ட அவள் வாழ்நாள்முடிந்து எமலோகம் சென்ருள். பிரம்மாவிஞல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டுப் பெருமையுள்ள இக்குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுவோம். யானை முகத்தேவனைப் பெற்றெடுத்த பார்வதிதேவியே! கேட்பாயாக.

35. தந்தையின் பூர்வம்தன்னைச் சாற்றிட கொங்குநாட்டில்
வந்தனன் கங்கைசேயாய் அறுமுகன் பத்திகொண்டு
முந்திஞேர் தொண்டுபூண்டு மார்க்கத்தில் தாகப்பந்தல்
நிந்தைகள் இல்லாதாகி நேமியில் சீவித்தேதான்.

35. தந்தையின் பூர்வோத்தரத்தைச் சொன்ஞல் மலையாளநாட்டில் வேளாளர்குலத்தில் பிறந்தான். ஆறுமுகக் கடவுள்பேரில் பக்திபூண்டு, முதியோர்களுக்குத் தொண்டுசெய்து, சாலைவழிகளில் தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்தி, பிறர் அபவாதங்கள் இல்லாமல் பூமியில் வசித்துவந்தான்.

36. முன்பவ மில்லாதாகி யொதிங்கிஞன் காலஞடு
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தனன் என்றுசொல்லோம்
பின்சென்மம் தணிகைதன்னில் பிறப்பனும் சத்திரிய
[சேயாய்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

36. பவவினைகள் ஏற்படாமல் துல்யமான எமலோகம் சென்ருன். பிரம்மாவிஞல் சிருஷ்டிக்கப்பட்டு மறு ஜன்மத்தில் திருத்தணிகையில் க்ஷத்திரியகுலத்தில் தோன்றிஞன். உத்தமனைப் பெற்றெடுத்த உத்தமியே! கேட்பாயாக.

37. பிருகுமே புகலுகின்றார் பொருளது இச்சையாயும்
தரையது வயிரத்தாலேதான் கைக்கொண்டது ஓர்தோஷம்
குறையது சிலர்க்குச்செய்தோன் குறித்தினீர் சத்திரிய
[சேயாய்
உரைகுவிர் அந்தசங்கை உத்தம னிச்சென்மத்தில்,

37. பிருகுமகரிஷி பின்வருமாறு சொல்லலுற்றார். ஆசைப்பட்டுப் பொருளையும், பகையினால் துவேஷம்பூண்டு பூஸ்திதியைக் கைக்கொண்டதும் ஒருதோஷம் ஏற்பட்டது. க்ஷத்திரியருள் இவன் சிலருக்கு இடைஞ்சல்களைச் செய்தான் என்று சொன்னீர். அந்தச்சமுசயத்தின் விவரத்தை உரைத்திடுவீர். இந்த ஜன்மத்தில் இவ்வுத்தமன்,

38. அறுமுகன் பத்தியாயும் ஆபத்தைச் சிலர்க்குக்காத்தும்
பெரிதான தலங்கள்சென்றும் புராந்தகன் தொண்டு
[பூண்டும்
வருவதால் சத்திரிசேயாய் மருவுவானென்றுசொல்வோம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

38. ஆறுமுகக்கடவுளிடத்தில் பக்திபூண்டும், சிலர்க்கு ஆபத்தில் உதவி செய்தும், பெருமைவாய்ந்த க்ஷேத்திரங்களுக்குப்போய் ஸ்வாமி தரிசனம் செய்தும், பகவானுக்கு வந்தனை வழிபாடுகள் செய்தும் வந்ததனால் க்ஷத்திரியனாக வந்தான் என்று சொல்லுவோம். யானைமுகத்தேவனைப் பெற்றெடுத்த காதலியாகிய பார்வதிதேவியே! கேட்பாயாக.

39. எண்ணான்கு ஆண்டிலேதான் இயம்புவோம் தந்தைகண்டம்
திண்ணமாய் நாற்பதாண்டில் செல்லுவா ளன்னைதானும்
வண்ணமாய்ச் சாதகர்க்கு அறுபது ஏழுஆண்டில்
அண்ணலும் நடனம்செய்யும் அம்மாதம் கெண்ட
[மென்றோம்.

39. இவனது முப்பத்திரண்டாம் பிராயத்தில் தந்தையின் கண்டம் ஏற்படும். நிச்சயமாய் இவனது நாற்பதாவது வயதில் இவனுடைய தாய் இறப்பாள். ஜாதகனுக்கு அறுபத்தேழாம் பிராயத்தில் (பகவான் நடனம் செய்யும்) ஆனிமாதத்தில் கெண்டமேற்படும் என்றோம்.

40. பின்சென்மம் தில்லைதன்னில் பிறப்பனும் பிரம்மசேயாய்
அன்னைபின் சென்மம்சொல்வோம் அழகர்வாழ் பாண்டி
[தன்னில்
முன்குலந் தனிலுதித்து மேன்மையாய்க் குடும்பியாவன்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

40. இவன் மறுஜன்மத்தில் பிராமணகுலத்தில் பிறப்பான். தாயின் மறுஜன்மத்தைக் கூறுவோம். கள்ளழகர்வாழும் பாண்டிநாட்டிலே பிராமண குலத்தில் பிறந்து மேம்பட்ட குடும்பியாவாள். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

41. உதித்திடு காலந்தன்னில் ரோகிணி இரண்டாம்பாதம்
மதிதசை ஏழுஆண்டு வரைந்தனம் பாலனுக்கு
புதிதாக இல்லம்செய்தல் பூமியும் பெருக்கமாகும்
வதிபன்பின் துணைவிருத்தி வரைந்தனம் பூர்வமாகும்.

41. ஜாதகன் பிறந்தகாலத்தில் ரோகிணி நட்சத்திரம் இரண்டாம் பாதம் ஆகும். அதற்கேற்ற சந்திரதசையில் இவனுக்கு கர்ப்பச்செல்லுப் போகச் செல்லவேண்டியது ஏழு வருஷம். புதிதாக வீடுகட்டுதல், பூஸ்திதியை விருத்திசெய்தல், இவைகளின்விருத்தி. இவனுடைய தம்பிகளின் அபிவிருத்தியைப்பற்றிப் பூர்வபாகத்தில் எடுத்துரைத்தோம்.

42. திசைஅந்தரம் தந்தைஅன்னை செல்லுவாள் என்று [சொல்வோம்
வசையது காணுகும் மாடுகள் ஏர்விருத்தி
பசையான குடும்பமெய்தும் பந்துவில் ஆரம்காணும்
அசைவிலா தவங்கள் செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

" சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னோம்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய் "

42. சந்திரதசையின் கடைசியில் தகப்பன்தாய் இவர்களின் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். பிறருடைய அவதூறு இவனை அணுகாது. மாடுகள், ஏர்கள் இவற்றின்விருத்தி ஏற்படும். சொத்துக்களின் புஷ்டியுள்ள குடும்பம் ஏற்படும். பந்துக்களுக்கு ஒரு மணிஆரம்போல் இருப்பான். அழிவில்லாத தபசுகளைச் செய்வான். அம்பிகையே! கேட்பாயாக.

இந்த ஜாதகபலன்களைச் சப்தரிஷிகள் சுத்தமாக (அப்பழுக்கில்லாமல்) சொன்னார்கள். குற்றங்குறைகளை, வித்தகியாகிய பார்வதிதேவி பொறுப்பாளாக.

ஜாதகம் 13

1. பிறைகுரு சாடியாக பூமகன் மேடமாக
கரியவன் மீனமாக கலிகன்னி பணியுமானில்
அருணனும் புதனும்சீயம் ஆடது சென்மமாக
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்கலுற்றாள்.

1. சந்திரனும் வியாழனும் கும்பத்தில் தங்க, செவ்வாய் மேஷ இராசியிலும், சனி மீனத்திலும், சுக்கிரன் கன்னியிலும், இராகு மகரத்திலும், அருணனும் புதனும் சிம்மராசியிலும் நிற்க, இப்படிப் பட்ட கிரகநிலை கொண்ட மேஷலக்கின ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுவீர் என்று பார்வதிதேவி கேட்கலானாள்.

சனி	லக்கினம் செவ்வாய்		
சந்திரன் குரு	இராசி சக்கரம்		கேது
இராகு			சூரியன் புதன்
			சுக்கிரன்

2. தென்முனி புகலுகின்றார் செனித்திடு மாண்பால்சென்மம்
தந்தையி னில்லம்சொல்வேன் சனிபார்வை [1]வடதென்வீதி
தந்தியும் மாரிமேற்கில் சங்கரன் கோஷ்டம்கீழ்பால்
விந்தையாய் வடகீழ்காளி மேவிடும் சிறுஊராகும்.

2. அகஸ்தியர் பின்வருமாறு உரைக்கலானார். இந்த ஜாதகனின் தகப்பனுடைய வீட்டின் விவரம் கூறுவேன். ஈசான்யமூலையில் தெற்கு வடக்கு வீதியில் பிள்ளையார்கோவிலும், அம்மன்கோவில் மேற்கிலும், சிவன்கோவில் கிழக்கிலும், வடகிழக்கில் காளிகோவிலும் இருக்கும் சிறு கிராமத்தில் ஜாதகன் பிறந்தான்.

3. இத்தகைய அடையாளத்துள் இலகிய மூன்றாம்சென்மம்
முத்தின குலமேயாகும் மொழிகுவோம் இந்தபாலன்
பெற்றதாய் தந்தையோகம் பேதையர் புத்திரயோகம்
சுத்தமாய் முன்பின்சென்மம் செப்புவோ மிந்நூல்தன்னில்.

---

1. ஈசானியம்

3. இந்த அடையாளங்கள் கொண்ட இந்த ஜாதகனுடைய மூன்றும் ஜன்மத்தில் பிராமணகுலத்தில் இந்த பாலகன் ஜனித்தான். இவனுடைய பெற்ற தாய் தந்தையர் யோகம், மனைவி மக்களின் யோகம், பிசகில்லாமல் முன் பின் ஜன்மங்களைப் பற்றிய விவரங்களை இந்தப் புத்தகத்தில் கூறுவோம்.

4. தந்தையின் துணைஆணைந்து சாற்றுவோ மிரண்டுவிருத்தி
நொந்திடும் மூன்றுளன்றோம் நுகர்ந்தஆண் வேறுய்ச்செல்வர்
அந்தவர் பாகமூன்றுய் அறிவிப்போ முனியேயாங்கள்
பிந்திய பாகம்தன்னில் பேசுவோ மவர்கள்சேதி.

4. தந்தையின் சகோதரர்கள் ஐந்து பேர்கள். அதில் இரண்டு பேர்கள் விருத்திக்கு வருவார்கள். மூன்று பேர்கள் நசித்துப் போவார்கள். சொன்ன அவ்விருவரும் வேறாகப் போய்விடுவார்கள். அவர்களைப்பற்றி மூன்றும் பாகத்தில் அறிவிப்போம். முனிவரே! பின்னுலுள்ள பாகங்களில் அவர்களைப்பற்றிய செய்திகள் கூறுவோம்.

5. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சரசமாய் வார்த்தை [கூறுவன்
தன்மனம் கபடுமில்லான் சந்தேக மனத்தனுகும்
தந்தமும் தரளமொக்கும் தரணியில் செலவுமுண்டு
தந்தைசொல் கடவானுகும் சமர்த்தாக வார்த்தைசொல்வன்.

5. தந்தையின் குணதிசயங்களைப் பற்றிக் கூறுவேன். சரசமாகப் பேசுந்தன்மையுடையவன். மனதினில் சூதுவாதில்லாதவன். சந்தேக புத்தியுள்ளவன். முத்துப்போன்ற பற்களையுடையவன். பூலோகவாழ்க்கையில் பெருத்த செலவாளி. பிதாவின் வாக்கைப் பரிபாலனம் செய்வான். சாமர்த்தியமாகப் பேசக்கூடியவன்.

6. புரோகிதத் தொழிலேசெய்வன் புண்ணிய மனத்தனுகும்
தராதர மறிவானுகும் சாந்தமும் கோபமுண்டு
விரைவினில் நடக்கவல்லன் வீண்வம்பில் செல்வானுகும்
குறையென்றோர்க் குதவிசெய்வன் குணமது இரண்டு [முண்டு.

6. புரோகிதம் செய்தலையே தொழிலாகக்கொண்டவன். தருமசீலனுவன். மனிதர்களுடைய ஏற்றத்தாழ்வுகளை அறியும் இயல்பினன். கோபித்துச் சாந்தமடைவான். வேகமாக நடப்பான். (சுருசுருப்பாயிருப்பான்.) வீண்வம்புகளும் பேசுவான். இல்லையென்றோர்க்கு உதவிசெய்வான். நல்லது கெடுதல் என்ற இரண்டுவித குணங்களையுடையவன்.

7. கல்விக ளிரண்டுமுண்டு காலிகள் விருத்திஅல்பம்
இல்லையென் றுரைக்கமாட்டான் இவனுமாஞ் சிவப்ப [னாகும்
தொல்லையும் சுகமுமுண்டு சீலனும் பொறுமைசாலி
வல்லியர் மோகனுவன் வருவோரை ஆதரிப்பன்.

7. இரண்டுவித கல்விகளைக் கற்பான். கன்று காலிகள் அவ்வளவு விருத்தி ஏற்படாது. எவருக்கும் இல்லை என்று சொல்லமாட்டான். மாநிறம் உள்ளவன். சிரமமும் சுகமும் இரண்டையும் அனுபவிப்பான். குணசீலன். பொறுமையுள்ளவன். ஸ்திரீலோலனுவன். விருந்தினரை ஆதரிப்பான்.

8. மங்கள வார்த்தைகூறுவன் மனைவியின் இஷ்டம்கொள்வன்
சிங்கம் சொகட[1]முண்டு செய்ந்நன்றி மறவானுகும்
பங்கய ரேகையுண்டு பஞ்சைமே லிரக்கமாவன்
எங்கள்போல் அதிதிநேயன் ஈச்வரி கேட்டிடாயே.

8. மங்களகரமான வார்த்தைகளைச் சொல்லுவான். மனைவியின் பிரியத்தைச் சம்பாதிப்பான். மந்திரவாதி. செய்ந்நன்றி மறவாதவன். கையில் பத்மரேகையுடையவன். ஏழைகளின்மேல் இரக்கங்கொள்ளுவான். அதிதிகளின் சிநேகிதன். ஈச்வரி! இதைக் கேட்பாயாக.

9. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே யுதிப்பானுகும்
அன்னவன் குணத்தனுகும் அவனிரு நிறத்தனுகும்[2]
தன்சொல்லு மடக்கமுண்டு சல்லியபாதை பூர்வம்
பின்னமில் லாததேகி போசன சுகியனுவன்.

9. இப்படிப்பட்ட குணுதிசயங்களை யுடையவனுக்குப் புத்திரன் பிறப்பான். அவனும் நல்லகுணவான். பொதுநிறமுடையவன். அடக்கமான வார்த்தைகளைப் பேசுவான். ஆரம்பத்தில் கடனாளியாவன். உடம்பில் மச்சம் மருவில்லாதவன். சுகமாய்ச் சாப்பிடுவான்.

10. முகமதில் வடிவுமுண்டு மூலகூ டுடையனுகும்
பகையென்று மனதில்லையான் பாக்கியம் பின்னுல் [சேர்ப்பன்
அக[3]மது வேறுசெய்வன் அணுகிடும் நாபிசூடு
உகமையாய்[4] வார்த்தைசொல்வன் உலகுக்கு நல்லோனுவன்.

1. மந்திரம் ஜபித்தல்
2. மாநிறம், பொதுநிறம்
3. வீடு
4. உபமானங்களைக் கொண்டு

10. நல்ல அழகான முகத்தைக் கொண்டவன். மூலத்தில் உஷ்ண வியாதியுடையவன். பிறர்மேல் பகைகொள்ளான். பிற்காலத்தில் பாக்கியங்களைச் சேகரிப்பான். வேறு வீடு கட்டுவான். மூலச்சூட்டு வியாதி வரும். உபமானங்களை உபயோகித்துப் பேசுவான். உலகினருக்கு நல்லவனுவன்.

11. கரமதில் விஷ்ணுரேகை கருதிடான் கட்டு[1]வார்த்தை
மறைகளை அதிகம்கொள்ளான் வந்தவர்க் கன்னமீவன்
தரையதை விருத்திசெய்வன் தன்துணை சொல்தட்டாதான்
நரை[2]மலர் பிரியனுகும் நற்றந்தை தொழிலேசெய்வன்.

11. கையில் விஷ்ணுசக்கர ரேகை யுடையவன். போக்கிரித்தனமாய்ப் பேசமாட்டான். வேதங்களை மிகவும் அனுசரிக்கமாட்டான். விருந்தினருக்கு அன்னம் ஈவன். பூஸ்திதிகளை விருத்திக்குக்கொண்டுவருவன். தன் சகோதரர் வார்த்தையைத் தட்டமாட்டான். வெண்மைநிறமுள்ள மலர்களில் பிரியமுடையவன். நல்ல தகப்பனுரின் தொழிலேயே செய்வான்.

12. தலவாசம் செய்வானுகும் தனமது பெருக்கம்பின்னுல்
விலைமாதர்[3] மோகம்கொள்ளான் விகடங்கள் பேசானுகும்
அறுமுகன் பத்திபூண்பன் ஆள்கார ருடையனுகும்
போரை[4]சொல்லான் மாதிரிஷ்டன் புகழ்ந்தோரை
[ஆதரிப்பன்.

12. கடவுளின் திவ்யக்ஷேத்திரங்களைப் போய்த் தரிசிப்பான். பிற்காலத்தில் தனத்தைச் சேகரிப்பான். தேவடியாள் மோகம்கொள்ளுவான். வேடிக்கையாகப் பேச்சுக்கள் பேசமாட்டான். முருகக்கடவுளின்மேல் பக்தி செலுத்துவான். வேலைக்காரர்களை யுடையவன். கோள் சொல்லமாட்டான். ஸ்திரீலோலன். தற்புகழ்ச்சியை ஏற்பான். தோத்திரம் செய்பவரை ஆதரிப்பான்.

13. தன்துணை ஆண்பாலொன்று சத்திய மவ்வாருகும்
கன்னிகை மட்டில்சேதம் காளையும் விருத்தியென்றேம்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் மாஞ்
[சிவப்பன்
தன்னுடல் சமமதாகும் சற்றுமுற் கோபியாவன்.

13. தனக்கு ஒரு சகோதரன். சகோதரியும் ஒன்றேயாகும். பெண் இறப்பாள். ஆண்விருத்தியடைவான். அவனுடைய குணங்களைக் கூறுகின்

1. பழி
2. வெள்ளை
3. தேவடியாள்
4. பொய், கோள்

றேன். அழகுடையவன். மாநிறத்தான். பூசினுல்போன்ற சரீரமுடையவன். சிறிது முன்கோபமுடையவன்.

14. மனமது வெகுளியாகும் மறித்துரை அதிகம்கூறுன்
இனமது மெச்சவாழ்வன் இடர்செய்யான் யாவருக்கும்
தினம்சீலன் ஈகையாளன் சிறுத்தவர்க் குதவிசெய்வன்
சினமதை வெளிக்காட்டாதான் தீரமில் லாதநெஞ்சம்.

14. வெகுளியான சுவபாவம். யாரையும் எதிர்த்துப்பேசமாட்டான். சொந்தக்காரர்கள் மெச்சும்சும்படி வாழ்வான். யாவர்க்கும் இடைஞ்சல் செய்யமாட்டான். குணசீலன். தர்மிஷ்டன். ஏழைகளுக்கு உதவிசெய்வான். கோபத்தை வெளிக்காட்டமாட்டான். பயந்த சுபாவமுள்ளவன்.

15. பஞ்சாங்கத் தொழிலேசெய்வன் பாரியு மொன்றேயாகும்
செஞ்சொலி னூக்கம்தேர்வன் சேயர்கள் ஆண்பால்ரெண்டு
வஞ்சிமார் அவ்வாறுதீர்க்கம் வரைந்தனம் பாலனுக்கு
வெஞ்சமர் தன்னில்செல்லான் விவேகியாம் சமயோகத்தன்.

15. பஞ்சாங்கத்தொழிலே செய்வான். பார்யை ஒன்றேதான். அவளுக்கும் பிரியமாயிருப்பான். இனியவை கூறுவான். இரண்டு ஆண்குழந்தைகள், இரண்டு பெண்குழந்தைகள் இவனுக்கு உண்டு. கொடிய சச்சரவுகளில் தலையிடான். விவேகி. சமமான யோகத்தை யுடையவன்.

16. காதலி ரிடபகோணம் கழறுவோம் தீர்க்கசீவி
மேதினில் நல்லோனுவன் வீண்விரை யங்கள்செய்யான்
தீதுகள் ஒருவர்க்கெண்ணுன் செனஉப காரியவன்
மாதவர் பத்திபூண்பன் மானிலம் விரையம்செய்யான்.

16. காதலி ரிஷிபகோணத்தவள், தீர்க்காயுசுள்ளவள் என்று சொல்லுவோம். உலகினில் நல்லவனுவன் வீணுகப் பணத்தை விரயஞ்செய்யமாட்டான். யாவர்க்கும் தீங்கு எண்ணமாட்டான். பொதுஜன உபகாரி. தபசிகளிடத்தில் பக்திகொண்டவன். நிலத்தை விரயம் செய்யமாட்டான்.

17. வயதுமே தீர்க்கமெய்தும் மாரனே டொத்துவாழ்வன்
கயவரை மனதிலெண்ணுன் கால்கரம் சுலபப்பாதை
பயமிலான் எதிரிக்கஞ்சான் பரிந்துப சாரம்செய்வன்
அயலார்பொன் னிச்சையுண்டு அம்பிகை யாளேகேளாய்.

17. வயதோ தீர்காயுசு பெறுவான். மன்மதனைப்போல் வாழ்வான். அல்பகுணமுள்ளவர்களை மனதிலும் நினைக்கமாட்டான். கால் கைகளை சுலபமாய் உபயோகிப்பான். பயமில்லாதவன். எதிரிக்குப் பயப்படமாட்டான்.

யாவர்க்கும் விருப்பங்கொண்டு உபசாரம் செய்வான். பிறருடைய பணத்தி லாசையுண்டு. அம்பிகையே! கேட்பாயாக.

18. பாலகன் மணத்தின்காலம் பகருவோ மிருபானேழில்
நீலியும் கீழ்பால்தன்னில் நேருவாள் குணத்தைச்சொல் [வேன்
சீலியாம் விரதமேற்பள் செனஉப காரியாகும்
காலத்தை அறிந்துவாழ்வள் கணவனுக் கினியளாகும்.

18. ஜாதகனுடைய கலியாணகாலத்தைக் கூறுவோம். இருபத் தேழாம் பிராயத்தில் காதலி கிழக்குப்பக்கத்திலிருந்து நேருவாள். அவளு டைய குணங்களைச் சொல்லுவேன். சீலமுள்ளவள். விரதங்களை அனுஷ் டிப்பாள். பொதுஜன உபகாரி. காலத்திற்கேற்றபடி வாழ்ந்து வருவாள். கணவனிடம் பிரியமாய்நடப்பாள்.

19. அன்னம்போல் சாயலொக்கும் அடாவடி தன்னில்செல் [லாள்
அன்னமும் அன்பாயீவள் அழகுளாள் யோகசாலி
அன்னியர் குற்றம்சொல்லாள் அதிதிகட் கன்னமீவள்
பின்னமில் லாததேகி பேதைக்கு வயதுதீர்க்கம்.

19. அன்னம் போன்ற சாயலை யுடையவள். அடாவடிக் காரியங் களைச் செய்யமாட்டாள். அழகுள்ளவள். நல்ல யோகசாலி. பிறருடைய குற்றங் குறைகளைக் கூறமாட்டாள். விருந்தாளிகளை மிகவும் உபசாரம் செய்வாள். உடம்பு வாக்காயுள்ளவள். இவளுக்கு ஆயுள் தீர்க்கமா யுள்ளது.

20. அத்திரி தடுத்துச்சொல்வர் அவனுக்குத் தாரம்ரெண்டு
சித்தமாய் நடக்குமென்றோம் செப்புவீர் அந்தசங்கை
சத்தமத் தோனுநீச்சம் சஷ்டமம் தனிலிருக்க
வித்தகன் சனியும்பார்க்க விளம்பினோம் தாரம்ரெண்டு.

20. இதனைக் கேட்ட அத்திரி மகரிஷி தடுத்துக் கூறுவார். அவ னுக்கு இரண்டு கலியாணங்கள் திட்டமாய் ஏற்படும் என்றோம். அதன் விவரத்தைக் கூறுவீர். ஏழுக்குடையவன் நீசம்பெற்று, சஷ்டாஷ்டமத் திருப்பதனாலும், அவனைச் சனி பகவான் பார்ப்பதனாலும் தாரம் இரண்டு என்றே கூறினோம்.

21. பிருகுமே தடுத்துச்சொல்வார் பேசொணு தாரம்ரெண்டு
ஒருமனை என்றுசொல்வோம் உரைப்பீர்கள் அந்தசங்கை
குருசேயும் யேழைபார்த்தும் சூரியன் பானுமைந்தில்
இருப்பதால் தாரம்ஒன்றே இயம்புவோம் முனியேயானும்.

21. இதற்குப் பிருகு மகரிஷி தடுத்துச் சொல்லுவார். இரண்டு தாரம் என்று சொல்லுதற்கில்லையே; ஒரே மனைவிதான் என்று சொல்லுவோம். இந்தச் சந்தேகத்தை விவரமாய்க் கூறுங்கள் என்று வினவ, இலக்கினத்திற்கு ஏழாமிடத்தை குருவும் செவ்வாயும் பார்ப்பதனாலும், சூரியனும் புதனும் பஞ்சமஸ்தானத்திலிருப்பதனாலும் தாரம் என்று ஒன்றே நிச்சயப்படுத்துவோம். முனிவரே! கேளுங்கள்

22. புத்திர விருத்திதன்னை புகலுவோம் ஆண்பாலொன்று
வித்தகி மார்கள்ரெண்டு விளம்புவோம் தீர்க்கமாக
குத்தமாம் முதலுனான்கும் கூறின மொழிகுன்றாது
அத்தியைப் பெற்றமாதே அரைகிறோம் இவனின்பூர்வம்.

22. இனிப் புத்திர பாக்கியத்தைப் பற்றிக் கூறுவோம் ஆண் குழந்தை யொன்று. பெண் குழந்தைகள் இரண்டு. இவை தீர்க்கமாயிருக்கும். முதலில் பிறப்பதும், நான்காவதாக ஜனிப்பதும் குற்றத்தை யடையும். சொன்ன சொல் தவறாது. உத்தமனைப் பெற்ற பார்வதியே! இனி இவனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுகிறோம்.

23. இன்னவ னிருந்தசென்மம் மொழிகிறோம் பாண்டிநாட்டில்
அன்னவன் கங்கைசேயாய் அணுகியே கிருஷிசெய்து
தன்மனை மதலையுண்டாய் தனமது பெருக்கமாகி
முன்னோர்க்குத் தொண்டுபூண்டு முயர்வான சேதுசென்
[றும்,

23. இனி இவனிருந்த பூர்வஜன்மத்தைக் கூறுவோம். பாண்டிய தேசத்தில் அவன் வேளாளர் குலத்தில் பிறந்து அருமையான கிருஷித் தொழிலைச் செய்து, பெண்டாட்டி பிள்ளை ஏற்பட்டு, சொத்துக்கள் விருத்தியாகி, பெரியோர்க்குத் தொண்டுகள் செய்து உயர்வான சேது ஸ்னானம் செய்து,

24. மாரனு மரணமாகி மாயவன் வரியப்பட்டு
சீலமா மிக்குலத்தில் செனிப்பனு மென்றுசொன்னோம்
கூறுவோ மிவனின்யோகம் குவலயம் விருத்திசெய்வன்
காரியச் சமர்த்தனாகும் காதலி கேட்டிடாயே.

24. இவனும் காலாந்தரமடைந்து, பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு, சீலமாய் இந்தக் குலத்தில் ஜனிப்பானென்று சொன்னோம். இவனுடைய யோகபாவங்களைப்பற்றி இனிக் கூறுவோம். பூஸ்திதிகளை விருத்தி செய்வான். காரியத்தில் கெட்டிக்காரன். பார்வதியே! கேட்பாயாக.

25. இன்னவன் ஜெனனம்தொட்டு இருபது ஆறுண்டுக்கும்
தன்மன சஞ்சலங்கள் சல்லிய பாதையுண்டு
பொன்பொருள் சிலவேயுண்டு பொருந்தாது கன்றுசாலி
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

25. இவன் பிறந்தநாள்தொட்டு இருபது பிராயம் வரைக்கும் மனச் சஞ்சலங்கள், கடன் இம்சைகள் இவைகளால் துன்புறுவான். பணம் காசு கொஞ்சம் ஏற்படும். நாற்கால் மிருகங்கள் சேரா. உத்தமனைப் பெற்றெடுத்த உத்தமியே! கேட்பாயாக.

26. அதற்குமேல் மரணமட்டும் அம்புலி போலயோகம்
நிதியது பெருகுமென்றும் நிமலியும் வந்தபின்பு
ததிநெய்பால் குறைவுறுதான் சஞ்சலம் நிவர்த்தியாகும்
பதியினில் திருவுமோங்கும் பார்வதி கேட்டிடாயே.

26. அதிலிருந்து மரணபரியந்தம் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து கொண்டே வரும் சொத்துக்கள் விருத்தியாகும். பெண்டாட்டி வந்த பிறகு தயிர், நெய், பால் குறைவில்லாமலிருக்கும். சஞ்சல நிவிர்த்தி ஏற்படும். வீட்டில் இலட்சுமி கடாட்சம் ஏற்படும். பார்வதி! கேட்பாயாக.

27. மாதுரு குணத்தைச்சொல்வேன் மாஞ்சிவப் புடையளாகும்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உள்மனம் கபடுமில்லாள்
பாதக மனமில்லாதாள் பஞ்சைமே லிரக்கமாவள்
சூதிலாள் பொறுமைசாலி சுகதுக்க முடையாளாமே.

27. பெண்டாட்டியின் குணங்களைச் சொல்லுவேன். மாநிற முடையவள். பிரியமான வார்த்தைகளைப் பேசுவாள். மனதில் சிறிதும் கபடமில்லாதவள். கெடுதி இல்லாதவள். ஏழைகளிடத்தில் இரக்க புத்தி யுள்ளவள். சூதுவாதில்லாதவள். பொறுமையுடையவள். சுகதுக்கங்களைக் கலந்து அனுபவிப்பாள்.

28. பித்தமாம் அல்பரோகம் பொருந்திடு மென்றுசொல்வோம்
வித்தகி விரதமேற்பாள் வீண்வம்பு புகலாளாகும்
சுற்றத்தார் மதிக்கவாழ்வாள் சொல்லது சுகமேயாகும்
நத்தினோர்க் குதவிசெய்வள் நாயகி கேட்டிடாயே.

28. பித்தத்தினால் சிறிது ரோகம் பீடித்தவள். இவள் விரதங்களை அனுஷ்டிப்பவள். வீண் வம்புகள் பேசமாட்டாள். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வாள். பேச்சு சுகமானவையாய் ஏற்படும். சிரமப் படுபவர்களுக்கு ஒத்தாசை செய்வாள். பார்வதி தேவியே! கேட்பாயாக.

29. தன்துணை ஆண்பால்ரெண்டு சத்திமார் மூவராகும்
பின்னமாம் மற்றதெல்லாம் பேதையில்[1] வடகீழாகும்
அன்னவள் பூர்வம்சொல்வேன் அருணைக்கு மேல்பாலாக
சின்னஊர் தன்னிலேதான் செனித்தனள் ரெட்டிவம்சம்.

29. தன்னுடன் பிறந்தவர்கள் சகோதரர் இரண்டு, சகோதரிகள் மூன்று. மற்றப் பேர்கள் பின்னப்படுவார்கள். இவளுடைய வீடு வடக் கிழக்கிலுள்ளது. அவளுடைய பூர்வஜன்மத்தைப் பற்றிக் கூறுவேன். அருணாசலத்திற்கு மேல்பக்கத்தில் சிறிய கிராமத்தில் தான் ரெட்டியார் வமிசத்தில் ஜனித்தாள்.

30. சுகமுள குடும்பியாகி தோகையும் வாழுநாளில்
பகையதைப் புகலக்கேண்மோ பஞ்சையா ஏழைமாது
அகமதில் பணிகள்செய்வேன் அன்னமும் தருவாயென்ன
தகமையாய்த் தாரேனென்ன சத்தியும் வாழும்நாளில்,

30. சுகமான குடும்பியாகி அவள் வாழ்ந்து வரும் நாளில், இவளுக்கு ஏற்பட்ட பகைமையைச் சொல்லவும் வேண்டுமோ. ஒரு ஏழை ஸ்திரீ இவளுடைய வீட்டில் வேலை செய்வதாக வந்தாள். பணிவிடைகள் செய் வேன், அன்னமளித்தால் போதும் என்று கேட்க, அப்படியே ஆகட்டு மென்று தேவியும் சொல்ல, இருவரும் வீட்டில் வசித்துவரும் நாளில்,

31. சிலதுநாள் சென்றபின்பு தேவிமேல் நிந்தைசொல்லி
விலகினாள் மாதைதானும் வித்தகி மனதுவாடி
கலகத்தைச் சொன்னபாவி கழறும்பின் சென்மம்தன்னில்
நிலையாது சுதர்பெண்ணுந்தான் நீங்குவான் வரனுமட்டில்.

31. சில காலமானதும் தேவிபேரில் அவதூறுகள் சொல்லி நிந்தித்து வேலையை விட்டு விலகினாள். தேவி மனம் நொந்து இப்படிக் கலகம் செய்த பாவி மறுஜன்மத்தில் நிலையில்லாத வாழ்விலிருந்து, பிள்ளை, பெண்ணில்லாமல், புருஷனும் நீங்குவான் என்று சொன்னாள்.

32. சஞ்சல மனத்தாளாகி தரணியில் வாழ்வாயென்று
வஞ்சியும்[2] சொல்லிச்சென்றாள் மறுவிற்று அந்ததோஷம்
தஞ்சமா யந்தியத்தில் தன்சுதர் பகையுமாகி
மிஞ்சிய சேதுசென்று வேதியர் தொண்டுபூண்டு,

32. சஞ்சல முள்ள மனதை யுடையவளாகி பூமியில் வாழ்வா யென்று வேலைக்காரியும் சபித்துச் சென்றாள். அந்த தோஷம் தேவியைப்

1. இல்லம்
2. வேலைக்காரி

பற்றிற்று, அந்திய காலத்தில் பிள்ளைகள் விரோதமேற்பட்டுக் கடைசியில் சேதுஸ்னனம் செய்து பிராமணர்களுக்குத் தொண்டுகள் செய்து,

33. காலன்தன் னுடனடைந்து கஞ்சனுல் வரியப்பட்டு
சீலமா மறைக்குலத்தில் செனித்தவ ளென்றுசொல்வோம்
ஆலம்போல் முன்னூத்தோஷம் அணுகிடு மிச்சென் [மத்தில்
பாரில்பெண் பால்தோஷம் பத்தான மத்தி லவிப்பவன்.

33. எமலோகம் சென்று பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப் பட்டு, சீலமான பிராமணக் குலத்தில் பிறந்தாள் என்று சொன்னேம். பண்டை வினை விஷம்போல் இவளை அணுகிற்று இந்த ஜன்மத்தில், குழந்தைகளில் பெண் பிள்ளைகளின் தோஷம். பர்த்தா மனக்கசப்புட னிருப்பான்.

34. முன்சென்மம் ரெட்டிவம்சம் உதித்தவ ளிச்சென்மத்தில்
முன்குல முதிப்பதென்ன மொழிகுவீர் முனியேநீதான்
அன்னவள் முன்சென்மத்தில் அச்சேது பதிக்குச்சென்றும்
முன்னேர்க்குத் தொண்டுபூண்டும் முதல்வியும் வாழ்வ [தாலே.

34. போன ஜன்மத்தில் ரெட்டி வமிசத்திலுதித்தவள் இந்த ஜன்மத் தில் மேலான பிராமண குலத்திலுதிப்பதென்ன காரணம். முனியே! சொல் லுவீர் என்று கேட்க. அவள் போன ஜன்மத்தில் இராமேசுவரத்துற்குப் போய்ச் சேதுபதியைத் தரிசித்து பிராமணர்களுக்குத் தொண்டுகள் பூண்டு வாழ்ந்ததாலே,

35. மறைகுல முதித்தாளென்றேம் விலகாதோ முன்செய் [பாவம்
அரிவையும் மனதுவாடி அறைந்தசா பங்கள்நீங்கா
உறைகிறேம் இவள்பின்சென்மம் உத்திரம் வேங்கடத்தில்
வருகுவா ளிக்குலத்தில் மங்கையே கேட்டிடாயே.

35. மறையோர் குலத்திலுதித்தாள். அதனுல் முன் செய்த பாவங் கள் தொலேந்தனவா! தேவியும் மனம்வாடிச் சொல்ல சாபங்கள் பலித்தன, இவளுடைய அடுத்த ஜன்மத்தில் வடக்கே திருவேங்கடத்தில் (திருப்பதியில்) இந்தக் குலத்தில் ஜனித்தாள். பார்வதியே! கேட்பாயாக.

36. தந்தையின் பூர்வம்சொல்வேன் தாம்பர பரணிதன்னில்
பிந்திய குலமுதித்துப் பேதையும் மதலையுண்டாய்
முந்திய செட்டுச்செய்தும் உலகினில் நல்லோளாகி
வந்தவர்க்கு மீந்தும் மாநிலம் நல்லோனுயும்,

36. தகப்பனாரின் பூர்வ ஜன்மத்தைப் புகல்வேன். தாம்பிரபரணி தீரத்தருகில் கீழான வம்சத்தில் பிறந்து குழந்தைகளை யடைந்து வியாபாரங்களைச் செய்தும் உலகத்தினருக்கு நல்லவனாகி விருந்தினருக்கு உபசரித்து நல்லவன் என்று பெயரெடுத்து,

37. வினையது இல்லாதாயும் மேவினன் காலனோடு
கனமுள பிரம்மலக்கம் கலந்தன னிக்குலத்தில்
சினமிலா யிவன்பின்சென்மம் தில்லையில் இக்குலத்தில்
அனையவே செனிப்பானாகும் அம்பிகை யாளேகேளாய்.

37. இவன் யாதொரு பாபச்செயலையும் செய்யாமல் எமலோகம் சென்றான். பிரம்மாவின் கணக்குப்படி இந்தக் குலத்தில் வந்துதித்தான். கோபமில்லாத இவன் மறுஜன்மத்தில் சிதம்பரத்தில் இந்தக் குலத்தில் பொருந்தவே ஜனிப்பானாகும். அம்பிகையே! கேட்பாயாக.

38. இந்ததோர் சென்மம்தன்னில் இவன்சில கொடுமைசெய்
[தான்
மந்திரம் சிலர்க்குபாதி மறைதலால் புகல்வதாலும்
முந்தின நேமம்தன்னை முயலாத தோஷத்தாலே
இந்தவொர் குலம்எவ்வாறு ஒப்பதும்கா ரணங்கள் சொல்
[வாய்.

38. இந்த ஒரு ஜன்மத்தில் இவன் சில கொடுமைகள் செய்யலானான். மந்திர சாஸ்திரம் பயின்று சில நியம நிஷ்டைகளை அனுசரிக்காததனால் மந்திர பலம் இவனை விட்டு நீங்கி தோஷத்தைக் கொடுத்தது. இப்படிப் பட்ட ஒரு ஜன்மம் இவனுக்கு எவ்வாறு ஒக்கும்? காரணங்கள் சொல்லுவாய், என்று கேட்க,

39. கடவுளர் தொண்டுபூண்டும் கடந்தோர்க்கு அன்னமீந்தும்
திடமிலா ஏழையோர்க்குச் சிலதுஆ பத்தைக்காத்தும்
அடவுடன் வாழ்வதாலே அணுகுவான் என்றுசொல்வோம்
தடவரை மகளேயாங்கள் சாற்றின மொழிகுன்றாது.

39. கடவுளுக்கு வழிபாடுகள் செய்தும், இறந்தவர்களுக்குச் சிராத்தச் சடங்குகளைச் செய்தும், பலவீனமுள்ள எழைகளுக்கு ஏற்பட்ட சில ஆபத்துக்களை நீக்கியும், இவ்வாறு நீதியுடன் அடவாக வாழ்வதாலே இந்தக் குலத்தில் வந்தணுகுவான் என்று சொல்லுவோம். இமவான் புத்திரியே! நாங்கள் சொன்ன மொழிகள் பிழையாகா.

40. ஈரெட்டு ஆண்டுக்குள்ளே எமபதம் தந்தைசேர்வன்
கூறுவோ முப்பான்மூன்றில் கோதையா மன்னைகண்டம்
மாரனுக் கருபாஞென்பான் மாசிமா தத்திலேதான்
சேருவாள் காலனுடு தேவியே கேட்டிடாயே.

40. இவனுடைய பதினாறும் பிராயத்திற்குள் இவன் தந்தை எமலோகம் சேர்வான். இவனுடைய முப்பத்துமூன்றும் பிராயத்தில் இவன் தாய்க்குக் கண்டம். இவளுடைய புருஷனுக்கு அப்போது அறுபத்தொன்பது வயதாகும். மாசி மாதத்தில் எமலோகம் சேருவாள். தேவியே! கேட்பாயாக.

41. மறுசென்மம் தணிகைதன்னில் மாரனு மிக்குலத்தில்
உரைகுவா ளென்றுசொல்லுவோம் உயர்வான குடும்பியாகி
திருமகள் செனனகாலம் செக்குநாள்[1] மூன்றும்பாதம்
அரவுதன் திசையேழாண்டும் அணுகிய திங்களாறும்.

41. அடுத்த ஜன்மத்தில் திருத்தணிகையில் அவன் இக்குலத்தில் பிறக்க, அவனுடன் இவள் வசித்து வருவாள். மேலான குடும்பியாவாள். இவளுடைய ஜனனகாலம் சதய நட்சத்திரம் மூன்றும் பாதம், இராகுவின் தசையில் பாக்கி இருப்பு வருஷம் ஏழு, மாசம் ஆறு ஆகும்.

42. பலன்தனைப் புகலக்கேண்மோ பாலகன் பிணியால்வாடும்
நலமிலா தந்தைதாய்க்கு நாட்டுனுட் சிலசெப்புண்டு
நிலமறு பலிதநஷ்டம் நிகழ்த்திஞேம் பூர்வபாகம்
மலையிறை மகளேயாங்கள் வழுத்தின மொழிகுன்றுது.

42. அதன் பலனைச் சொல்லுகிறேன். இவன் ரோகத்தால் பீடித்த நன்மையில்லாத தாய் தந்தையருக்குப் பிறந்து உலகில் சிரமத்தையடைந்து, பூமி விளையாமல் நஷ்டமடைவான். இது பூர்வ பாகத்தில் சொன்னேம். இமவான் புத்திரியே! நாங்கள் சொன்ன சொல் தவறாது.

---

1. சதயம்

ஜாதகம் 14

1. சந்திரன் புகரும்பொன்னும் சேடியில்[1] இரவி செட்டி[2]
புந்தியும் சேயும்தேனில் புக்கிட முடவன்வண்டி[3]
விந்தையாய்ப் பணியும்சீயம் விளங்கிட கொண்டல்சென்மம்
வந்திடப் பிறந்தபாலன் வரைகுவீர் பலனைத்தானே.

1. சந்திரனும், சுக்கிரனும், வியாழனும் கன்னியாராசியில் நிற்க, இரவியும், வைசியனான புதனும், செவ்வாயும், விருச்சிக ராசியில் தங்கிட, சனி பகவான் கடக ராசியிலும், வேடிக்கையாய் இராகு சிம்மத்திலும், கேது கும்பத்திலும், விளங்கும்படியான இந்த மேஷ லக்கின ஜாதகனுக்கு உற்ற பலன்களைச் சொல்லுவீராக.

	லக்கினம்		
கேது	இராசி சக்கரம்		சனி
			ராகு
	சூரியன் புதன் செவ்வாய்		சந்திரன் சுக்கிரன் குரு

2. இந்தசேய் பிறந்தவீதி இயம்புவோம் வடக்குத்தெற்கு
அந்தபால் கிழக்குவாசல் அதற்கெதி ரில்லமில்லை
சுந்தரி யம்மன்தெற்கில் சூழ்ந்திடு நதியும்காணும்
நந்தியு மீசன்கோஷ்டம் நசித்திடு மென்றுசொன்னோம்.

2. இந்த ஜாதகன் பிறந்த வீதி தெற்கு வடக்காயுள்ளது. வீடும் கிழக்குப் பார்த்த வாசல் கொண்டது. அதற்கு எதிரே வீடுகள் கிடையா. தெற்கே சுந்தரி அம்மன் கோயில். அதைச் சுற்றி நதி யோடும். சிவன் கோயிலும் அங்குண்டு. அது கேடு ஏற்பட்டிருக்கும்.

3. இந்திரன் திசையில்[4] மாரி யெய்திடும் அருகில்மாயோன்
நொந்திடும் அதன்கீழ்ஈசன் நுவலுவோம் துருவன்கீழ்பால்
தந்தியும் காளிதென்கீழ் சமலூரில் தந்தையில்லம்
சுந்தர நவக்கோளாலே சொல்லிய பலனைக்கேளே.

---

1. கன்னியாராசி
2. வைசியன் (புதன்)
3. கடகம்
4. கிழக்கு

3. கிழக்கே அம்மன் கோவிலிருக்கும். அதன் பக்கத்தில் விஷ்ணுவாலயம். அதன் கிழக்கே ஈசுவரன் கோவில். வடகிழக்கே விநாயகர் கோவிலும்; தென்கிழக்கே காளிகோவிலும் இப்படி அடையாளங்கள் கொண்ட சமவூரில் இவனுடைய தகப்பனுடைய வீடு. அழகான நவக்கிரகங்களைக் கொண்டு சொல்லும் பலன்களைக் கேட்பாயாக.

4. தந்தையின் துணைவர்தன்னைச் சாற்றவே பலத்தைக் [காணும்
வந்திடும் துணைவரெல்லாம் வகையுடன் நசிக்குமென்றும்
பிந்தியும் தந்தைசேதி பேசுவோம் குருசிகப்பன்
தன்தன மதிகமில்லான் தானவன் ஈகைகொஞ்சம்.

4. தகப்பனின் சகோதரர்களைக் கூறுவோ மென்றால் யாதொரு பிடிப்புமில்லை. ஏற்படும் சகோதரங்களெல்லாம் முறையே நசித்துப்போம் என்றும். பின்னால் தந்தையின் விவரங்களைப் பற்றிப் பேசுவோம்; நல்ல சிவப்பு நிறமுள்ளவன். சொந்தப் பணம் அவ்வளவாக இல்லாதவன். அதனால் தருமம் கொஞ்சமாய்ச் செய்வான்.

5. ரோமங்கள் நீட்சியில்லான் நுவலுப தேசமில்லான்
பூமியும் விருத்திசெய்வன் புண்ணிய மிச்சையில்லான்
தாமத குணத்தனும் சந்தேக மனத்தனும்
தீமையு மொருவர்க்கெண்ணான் சிரமுக வடிவுகாணான்.

5. தலைமயிர் குட்டையாயுள்ளவன். சொல்லும்படியான உபதேச மொழிகள் இல்லாதவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். புண்ணியத்தில் பிரியமில்லாதவன். தாமதகுணமுடையவன். மனதில் சந்தேகமுடையவன். யாவர்க்கும் தீங்கு செய்ய எண்ணமாட்டான். முகத்தில் அழகில்லாதவன்.

6. பந்துவு மெச்சவாழ்வான் பலருக் குதவிசெய்வான்
கந்தனு மம்மன்தெய்வம் கல்வியும் கொஞ்சமுள்ளான்
சிந்தையும் சஞ்சலத்தன் தீரமில் லாதானும்
முந்திய கோபம்கொஞ்சம் முதல்வியே கேட்டிடாயே.

6. சொந்தக்காரர்கள் பெருமையாய் நினைக்கும்படி வாழ்வான். பல பேர்களுக்கு ஒத்தாசை செய்வான். முருகனையும் அம்பிகையையும் வழிபடுவான். சிறிது படிப்புமுடையவன். மனமும் சஞ்சல முடையவன். தைரிய மில்லாதவன். முன் கோபம் சிறிதுடையவன். இலட்சுமியே! கேட்பாயாக.

7. நாபிசூ டுடையனுகும் நாயகன் வாததேகி
நேமியில் புளிப்பிலிச்சை நிகர்பித்த தேகியாவன்
ஆவல்க ளதிகமுள்ளாள் அவன்நடை துருசுமாவன்
பாவையர் மோகனுவான் பார்வதி கேட்டிடாயே.

7. மூலச்சூட்டினுல் உபத்திரவப்படுவான். இவன் வாத சரீரங்கொண்டவன். பித்தசோகை பிடித்தவன். அதிக ஆசைகள் கொண்டவன். வேகமாய் நடக்கும் இயல்பினன். ஸ்திரீகளிடத்தில் போகம்கொள்ள இச்சிப்பவன். பார்வதியே! கேட்பாயாக.

8. மனமது கபடுகொஞ்சம் மனைவிமே லாசையுள்ளான்
தனமது செலவுசெய்யான் தன்கரம் விஷ்ணுரேகை
கனமுள குடும்பியாவன் கண்டிடும் வாதரோகம்
சினமுண்டு சுளுவில்நீங்கும் தேவியே கேட்டிடாயே.

8. மனதில் சிறிது கபடங்கொண்டவன். பெண்டாட்டியினிடத்தில் பிரியங்கொண்டவன். பணத்தை வீண்செலவு செய்யமாட்டான். தன் கையில் விஷ்ணுசக்கரம் என்ற ரேகையை யுடையவன். கௌரவமுள்ள குடும்பியாவன். வாதரோக பீடிதனுயிருப்பான். கோபப்படுவான். சீக்கிரம் சாந்தமடைவான். தேவியே! கேட்பாயாக.

9. இக்குண முடையானுக்கு இவ்னுமே யுதிப்பானுகும்
மிக்கவே துணைவர்தன்னை விளம்புவோ மாண்பாலொன்று
தக்கவே பெண்பால்ரெண்டு சாற்றினே மிவனுக்கேதான்
நக்கனைப்[1] பூசைசெய்யும் நாயகி கேட்டிடாயே.

9. இக்குணமுடைய தந்தைக்கு நம் ஜாதகன் உதிப்பான். மிக்கவே சகோதரர்களைக் கூறுவோம். ஆண் சகோதரர் ஒருவர். சகோதரிகள் இருவர் இவனுக்குண்டு. சிவனைப் பூஜைசெய்யும் நாயகியே! கேட்பாயாக.

10. துணைவன்தன் மூத்தோன்சேதி சொல்லுவோ மிரு
[நிறத்தான்
மனைவியான் வார்த்தைசொல்வான் பேசுவோம் சம
[தேகத்தன்
அனையவே பித்ததேகி அரிபோல கோபம்கொஞ்சம்
வினையிலன் கபடுகொஞ்சம் வித்தையு மல்பம்சொன்னேம்.

10. மூத்த சகோதரனைப்பற்றிச் சேதி சொல்லுவோம். பொது நிறமுள்ளவன். குடும்ப சம்மந்தமான பேச்சைப்பேசுவான். சமமான தேகத்தை யுடையவன். பித்ததேகமுடையவன். ருத்திரனைப்போல் கோபம் கொண்ட

1. சிவன்

வன். சிறிது வேலையில்லாதவன், கொஞ்சம் கபடான மனங்கொண்டவன். படிப்பும் சொல்பம் என்று சொன்னோம்.

11. நடையது துருசுமுள்ளான் நளினமாய் வார்த்தைசொல்வன்
அடைமொழி யதிகம்கூறுன் யாரையு முறவுகொள்வன்
மடமனை யிஷ்டம்கொள்வன் மருவலான் அறத்திலிச்சை
தொடைதனில் வடிவுமுள்ளான் துணைவரை ஆதரிப்பன்.

11. சுறுசுறுப்பாய் நடப்பான். இனிமையான வார்த்தை சொல்லுவான். பழமொழிகளை அதிகம் கூறமாட்டான். விசேஷப்பொருள்மொழிகளைக் கூறமாட்டான். யாரிடமும் நேசம் பாராட்டுவான். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான். தருமஞ்செய்ய விரும்பாதவன். நல்ல அழகன். சகோதரனை ஆதரிப்பான்.

12. இருவித சொல்லுமுள்ளான் இவன்கரம் கோதுமைரேகை
உரைகுறே மொறப்பிலிச்சை உன்மனம் தெய்வபக்தி
பெரும்பொரு ளிச்சையுள்ளான் பூஷண மதிகமில்லான்
விரைவாதம் ரோகமுண்டு மெல்லியே மேலுங்கேளே.

12. இரண்டுவிதமாய் அருத்தம்தரும் சொற்களைப் பேசுவான். கைதனில் கோதுமை தானியம் போன்ற ரேகையை யுடையவன். உரைப்பான பதார்த்தங்களில் பிரியமுள்ளவன். மனதாற தெய்வபக்தி பூண்டவன். அதிகமான பொருளைத் தேட விருப்பங்கொள்ளான். பூஷணங்கள் அதிகமில்லாதவன். விரைவாத வியாதினல் அவஸ்தைப்படுவான். பார்வதியே! மேலும் சொல்லுகிறேன், கேள். (தானிய ரேகை=நெல் முதலிய தானிய சம்பத்துக்களைக் குறிக்கும் கைவரை.)

13. யோகமே சமமாமென்றேம் உரைக்கிறேம் மனைவிஒன்று
பாகமாய்ப் புத்திரபாகம் பகருவோம் ஆண்பால்ரெண்டு
வாகையாய்ப்[1] பெண்பால்மூன்று வயதுமே தீர்க்கமாகும்
போகவா ரிதியைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

13. சமமான யோகத்தை யுடையவன். இவனுக்குப் பெண்டாட்டி ஒருத்திதான். பக்குவமாய்ப் புத்திபாவத்தைப்பற்றிப் பேசுவோம். ஆண் குழந்தைகள் இரண்டு. பெண்பாலர் மூன்று. வயதோ தீர்க்கமாகும். சகல போக போக்கியங்களையும் பெற்ற புண்ணியதேவியே! கேட்பாயாக.

14. சோதரி ஒருத்திதானும் சுகமுடன் வாழ்வள்மூத்தோள்
நீதியா யிளையோள்தானும் நேத்திர மூனமாகம்
போதவே சுகம்குறைச்சல் புகலுவோம் அவர்கள்சேதி
சோதித்துப் பின்பால்சொல்வோம் சுந்தரி கேட்டிடாயே.

1. ஒழுங்காக

14. ஒரு சகோதரி சுகமாகவாழ்வாள். இரண்டு சகோதரிகளும் இரண்டு நேத்திரங்கள் போலாவர். மூத்தவள் நீதியாயிருப்பாள். இளைய வளுக்கு நேத்திரம் ஊனமாகும். ஆதலால் சுகம் குறைச்சல் என்று சொல்லு வோம். அவர்களைப்பற்றிய விவரங்களைச் சோதனைசெய்து பிற்பாடு சொல்லு வோம். சுந்தரி ! கேட்பாயாக.

15. சாதகன் நிறம்குணத்தைச் சாற்றுவோ மிகுசிகப்பன்
போதவே கல்விகற்பன் புகலுவான் கட்டுவார்த்தை
தீதான சொல்லுமுள்ளான் செய்நிலம்[1] விருத்திசெய்வன்
கோதிலா மூர்க்கமுண்டு குத்திரம்[2] பேசுவானும்.

15. ஜாதகனுடைய நிறம், குணம் இவற்றைக் கூறுவோம். மிகுந்த சிவப்புநிறம் கொண்டவன். போதுமான கல்வியைக் கற்பான். சூது வாதுடன் வார்த்தைகளைப் பேசுவான். கெட்டசொற்களைச் சொல்லுவான். சிவப்பான நிலத்தைப் பண்படுத்துவான். மூர்கமாய்ச் சண்டைசெய்து எதிர்ப் பேச்சுக்களைப் பேசுவான்.

16. வாக்கது பலிதமுண்டு அவன்சிறு தீனிகொள்வன்
போக்கிரிக் கிஷ்டனுகும் பந்துவும் மெச்சவாழ்வன்
நாக்குகள் சுத்தமுள்ளான் நற்கரி பதார்த்தமிஷ்டன்
சாக்கமு மதிகமுள்ளான் சுந்தரி மேலுங்கேளே.

16. சொன்னவார்த்தை பலிதமாகும். அடிக்கடி சிறு ஆகாரங்களைப் புசிப்பான். போக்கிரிப்பயல்களுக்கு இஷ்டமாய் நடப்பான். பந்துக்கள் மெச்சும்படிப் பேசுவான். உண்மையான பேச்சுகளைப் பேசுவான். நல்ல காய்கறிகளைச் சாப்பிடுவதில் இஷ்டமுள்ளவன். கூட்டமும் அதிகமுள்ளவன். சுந்தரி ! மேலுங் கேட்பாயாக.

17. செங்கையில் கமலரேகை சேயிழை விருப்பங்கொள்வன்
பொங்கிய குடும்பியாவன் பூமியோர்க் குதவிசெய்வான்
எங்களுக் கன்பனுவன் ஈகையும் கொஞ்சமுள்ளான்
சங்கையா மனத்தனுகும் சத்தியே மேலுங்கேளே.

17. சிவப்பான கையில் பத்மரேகை கொண்டவன். பெண்டாட்டி யினிடத்தில் பிரியம் கொண்டவன். விருத்தியாகும் குடும்பத்தைக் கொண் டவன். கிருஷிசெய்பவர்களுக்கு ஒத்தாசை செய்வான். எங்களுக்கும் அன்பானவன். தருமமும் சிறிது செய்வான். சந்தேகமுள்ள புத்தியுடை யவன். சக்திதேவியே ! கேட்பாயாக. (பதும ரேகை = அதிட்டத்தைக் குறிக்கும் கை யிரேகை.)

---

1. நஞ்சை
2. குரூரம்

18. அன்னைசொல் கடவானுகும் அன்புறும் தெய்வபக்தி
நன்னிய வசனமுள்ளான் நாவலர்க் கிரங்கியீவன்
அன்னியர் வாழஎண்ணுன் அச்சியம் கொஞ்சம்சொல்வேன்
கன்னியர் மோகனுவான் காதலி கேட்டிடாயே.

18. தாயின்சொல்லைத் தட்டமாட்டான். தெய்வத்தினிடத்தில் பக்தி செலுத்துவதில் அன்புள்ளவன். நன்மைதரும் வசனங்களைப் பேசுவான். படித்தவர்களுக்கு இரக்கமுற்றுத் தருமம் செய்வான். பிறர்வாழச் சம்மதிக்க மாட்டான். அருவசியங்களைப் பேசுவான். கன்னியர்மேல் ஆசைகொள்வான். தேவியே! கேட்பாயாக.

19. முன்னவ னிருந்தசென்மம் மொழிகிறேம் சோழநாட்டில்
மன்னிய ஆழிதன்னில் வடுகர்தன் குலமுதித்து
இங்கிலத் தெவர்க்குமெச்ச இவனுமே வணிபம்செய்து
பொன்னொடு பணிதிபாத்திரம் புத்திரர் மனைவியுண்டாய்,

19. போன ஜன்மத்தில் அவனிருந்ததைப்பற்றிக் கூறுவோம். சோழ நாட்டின் கடற்கரையில் தெலுங்கர் குலத்திலுதித்து, இக்கடலால் சூழப் பட்ட பூமியில் எவரும் மெச்சும்படி இவனே வாணிபஞ்செய்து, பொன் பொருள், சொத்து, புத்திரர், மனைவி இவர்களெல்லாம் ஏற்பட்டு,

20. இருக்கிற காலம்தன்னில் இவன்செய்யும் கொடுமைகேளாய்
பொருத்தமில் லாமல்கோவு பூமியி லுலாவிநிற்கும்
வருத்தங்கள் மிகவேசெய்து வடிதண்டா[1] போட்டுவிட்டான்
பெருத்ததோர் கோவின்சாபம் புக்கிற்று இதுவல்லாமல்,

20. இருக்கிறகாலத்தில், இவன் செய்யும் கொடுமையைக் கேட்பாயாக. பொருத்தமில்லாமல் பூமியில் சஞ்சரித்து இடைஞ்சல் செய்துவிட்டான். பெரிய ஓர் அரசனின் சாபம் ஏற்பட்டது. (பூமியில் உலாவிவந்த பசுமாட்டைக் கம்பினுல் அடித்து வருத்தப்படுத்தினுன். பசுமாட்டின் சாபமும் இவனைப் பீடித்தது என்றும் பொருள் கூறலாம்.) இதுவுமல்லாமல்,

21. ஆலய பூசைசெய்து அர்ச்சனை செய்தபுஷ்பம்
சாலவே மிதித்தானம்மா தங்கிற்று அதுவோர்தோஷம்
ஏலவே அந்தியத்தில் இலகிற்று வாய்வுபீடை
காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனுல் வரியப்பட்டு,

21. ஆலயங்களில் கடவுளுக்கு அர்ச்சனை செய்த புஷ்பங்களை வேண்டு மென்றே காலால் மிதித்தானம்மா. அந்த தோஷம் வேறு இவனைச்சார்ந்தது. ஏற்கனவே இருந்த வாயுபீடை அந்தியகாலத்தில் அதிகரித்தது. கடைசியில் எமலோகம் சென்றுன். பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு,

1. தொந்தரை

22. வந்தவ னிவனேயென்றோம் வரைகிறோ மிச்சென்மத்தில்
முந்திய கோவின்தோஷம் முயன்றது விபரம்சொல்வேன்
இந்தவாறு மன்னன்காலில் இலகிடும் வாய்வுபீடை
எந்தக்கா லத்திலேதான் ஏகிடும் அந்தபாதை.

22. வந்துதித்தவன் இவனே என்றோம். இந்த ஜன்மத்தில் முன் ஜன்மத்து தோஷம் பலித்தது. அதன் விவரம் சொல்வேன். காலில் ஏற்பட்ட வாயுவின்பீடை அதிகரித்தது. எப்பொழுதுதான் அந்த உபாதை தொலையுமோ, தெரியவில்லை. எப்பொழுது வந்ததோ?

23. இருபத்து நாலாண்டின்மேல் எய்திடும் வாய்வுபீடை
கருங்கோளின்[1] தசைபின்பாகம் கழறுவோம் ரோகம்
[தானும்
வரும்பிணி அதற்குச்சாந்தி வரைகிறோம் கேளுந்தாயே
திருமகன் [2]பட்சிக்கேகி தினம்ஒரு கிரிகைசுற்றி,

23. இருபத்துநான்காம் பிராயத்திற்குப் பிறகு வாயு பீடை ஏற்பட்டது. இராகுதசையின் பின்பாகம். அப்போது ரோகம் பீடித்தது. இந்த வியாதிக்குச் சாந்திசொல்லுகிறோம். தாயே! கேளும். திருக்கழுக்குன்றம் போய் தினசரி கிரிபிரதட்சணம் செய்து,

24. வேதங்கள் புரியுமீச வித்தகர்க் கர்ச்சித்தேத்தி
தீதிலா விரதம்நின்று சேயின்[3]வாரம் விரதம்கொண்டால்
சூதான வாய்வுபீடை தொலைந்திடும் சுகமேயுண்டு
மாதவர் பூசைசெய்யும் மங்கையே மேலுங்கேளே.

24. வேதங்களை ஓதும் பிராமணர்களுக்கு (வேதபுரீசுவரரை) வந்தனை வழிபாடுகள் செய்து விரதம் இருந்து செவ்வாய்க்கிழமை உபவாசமிருந்தால் சூதான வாயுபீடை தொலைந்திடும். சுகமும் ஏற்படும். தபோதனர்கள் பூசைசெய்யும் தேவியே! மேலும் கேட்பாயாக.

25. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் ஒருபானெட்டில்
மேதினி உள்ளூர்உத்திரம் வித்தகி மாதுர்வர்க்கம்
கோதிலா வருவாளாகும் கூறுவோம் மாஞ்சிவப்பள்
சூதுகள் கொஞ்சமுள்ளாள் துருசான நடையுமாவள்.

25. ஜாதகனுடைய கலியாணகாலத்தைக் கூறுவோம். பதினெட்டாம் பிராயத்தில் உள்ளூருக்கு வடக்கே வித்தகி வருவாள். அவளும் இவனுடைய

1. ராகு
2. செங்கற்பட்டுக்கருகிலுள்ள திருக்கழுக்குன்றம் என்னும் மஹா க்ஷேத்திரம்
3. செவ்வாய்

தாயார்வருக்கம். இடைஞ்சலில்லாமல் வருவாள். மாநிறமானவள். சூது வாது கொண்டவள். சுறுசுறுப்பா யுள்ளவள்.

26. சமதேகம் அடக்கமுள்ளாள் சரசமாய் வார்த்தைசொல்வாள்
அவனியில் அழகுமுள்ளாள் அதிர்ஷ்டமு முடையளாகும்
இவளுக்கு வயதுதீர்க்கம் என்றுமே பராசர்சொல்ல
பவமுள புயண்டர்தானும் பகருவார் அதிலோர்சங்கை.

26. சமமான தேகமுடையவள். அடக்கமுடையவள். சரசமான வார்த்தைகளைப் பேசுவாள். பூமியில் அழகி என்று சொல்லப்படுவாள். அதிர்ஷ்டமுடையவள். இவளுக்கு வயது தீர்க்கமாயுள்ளது. என்றிவ்வாறு பராசார் எடுத்துச்சொல்ல, பவவினைகொண்டதேவர் அதில் ஒரு சந்தேகத்தைக் கேட்பாராக.

27. தனத்துளோன் சுகத்தோனீச்சம் சத்தமத் தோன்சரத்தில்
கனமுட னிருப்பதாலே களத்திர மிரண்டுஎன்றோம்
அனையவே குருவுமேழில் அன்புடன் பார்த்ததாலே
சினமிலா தாரம்ஒன்றே செப்புவோ மிவனுக்கேதான்.

27. தனஸ்தானாதிபதியும் (சுக்கிரனும்) சுகஸ்தானாதிபதியும் (சந்திரனும்) நீசம்பெற்றும், சப்தமஸ்தானாதிபதி சாராசியிலும் இருப்பதனாலே களத்திரம் இரண்டு என்று சொன்னோம். பொருந்தவே குருவும் ஏழாம் பார்வையினால் தனஸ்தானத்தைப் பார்த்ததனால் தடையில்லாமல் இவனுக்குத் தாரம் ஒன்றென்றே சொல்லலாம்.

28. சுதர்களு மாண்பால்ரெண்டு தோகையு நான்கதாகும்
முதலிலே மதலைபீடை மொழிந்திட்டோம் இவனுக்கேதான்
சதமான தந்தைபூர்வம் சாற்றுவோம் திருப்பாச்சூரில்[1]
நிதிமிக உடையோனுக்கு நிமலனு மகவாய்தோன்றி,

28. குழந்தைகளோ, ஆண் இரண்டு, பெண்கள் நான்கு. ஆரம்பத்திலேயே இவனுக்குண்டான புத்திரதோஷத்தைக் கூறிவிட்டோம். இவனுடைய தகப்பனின் பூர்வோத்தரத்தைக் கூறுவோம். திருப்பாச்சூரில் பெரிய பணக்காரனுக்கு இவன் புத்திரனாய்ப் பிறந்தான்.

29. இக்குலம் தன்னிலேதான் இவனுமே உதித்தானென்றோம்
மைக்கண்ணி வேசிமோகம் வைத்துப்பின் தனமழித்து
பொக்கிஷம் யாவும்நீங்கி பூமியில் நிந்தையாகி
சிக்கலில் பட்டாப்போலே சிந்தையும் கலங்கிவாடி,

---

1. திருப்பாசூர் = திருவொற்றியூருக்கு மேற்கேயும் திருவெண்பாக்கத்திற்குத் தெற்கேயுமுள்ள சிவஸ்தலம்

29. இதே குலத்திலேதான் இவனும் உதித்திட்டானென்று கூறி ேனும். மைதிட்டிய கண்ணழகை கொண்டே தேவடியாள்பேரில் மோகங் கொண்டு பணத்தை அழித்து, சகலசொத்துக்களும் போய் பூமியில் பலர் பல விதமான நிந்தனைகளைக்கூற சிக்கலில் அகப்பட்டு, கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கி,

30. பந்துவும் பகையதாகி பலபல தலங்கள்சென்று
சந்ததம் போரூர்சென்று சண்முகர்க் கடிமையாகி
முந்தவே பணியும்செய்து முதல்வது மரணமாகி
வந்தவ னிவனின்தந்தை மங்கையே கேட்டிடாயே.

30. சொந்தக்காரர்களும் இவன்பேரில் பகைமை பூண்டு, பல பல க்ஷேத்திரங்களை அடைந்து அடிக்கடி திருப்போரூர் சென்று முருகக்கடவு ளுக்கு அடிமையாகித் தொண்டுசெய்து கர்மபந்தங்களால் இவன் மரணமடைய, திரும்பவும் வந்துதித்தவன் இவனுடைய தந்தையாவன். மங்கையே! கேட் பாயாக.

31. பின்சென்மம் ஆலங்காட்டில் பிறப்பனும் இக்குலத்தில்
அன்னவன் பூமியுண்டாய் அவன்பந்து மேலாய்வாழ்வன்
தன்னிலே கிராமசெட்டு தானவன் வாழ்வானுகும்
அன்னையே யாங்கள்சொல்லும் அருள்மொழி குன்று
[தென்றேப்.

31. மறு ஜன்மத்தில் திருவாலங்காட்டில் இக்குலத்தில் பிறந்து பூஸ்திதிகளைப்பெற்றுத் தன் சொந்தக்காரர்களைக்காட்டிலும் மேன்மைபெற்று வாழலானன். கிராமவியாபாரங்கள் செய்து அவன் வாழ்ந்துவந்தான். அம்மையே! நாங்கள் சொல்லும் அருள்மொழிகள் என்றைக்குங் தப்பாமல் பலிக்கும்.

32. அன்னையும் செவந்தமேனி அன்புள மனத்தளாகும்
சொர்ணமும் பணியும்கொஞ்சம் சுகமுளாள் நல்லோளாவள்
மன்னிய கணவன்சொல்லை மறித்திடு வாளாமென்றேம்
பின்னையும் வாதரோகி பிடரிடுப் பிணிலேபாதை.

32. தாயும் சிவப்புநிறமுள்ள சரீரத்தைக்கொண்டவள். மனதில் அன்பு பூண்டவள், தங்கமும், ஆபரணமும், கொஞ்சம் சுகமும் கொண்டவள், நல்லவள். கணவன் சொல்லைத் தட்டுவாளாம் என்று சொன்னேம். பின்பு இவள் வாதரோகமுடையவள். தோள், இடுப்பு இவைகளில் கீல்வாயுவின் பிடிப்பு, அதனல் உபாதை.

33. அன்னையின் துணை ஆண்மூன்று அழகிய கன்னியைந்து
முன்னிய மூன்றுநஷ்டம் மொழிந்திட்டோ மிதிலும்சேதம்
தன்னிலே ஆண்பால்சொன்னோம் தானவர் வேறுய்ச்செல்வர்
பின்னையும் வர்க்கம்தன்னில் பேசுவோம் தாரம்ரெண்டு.

33. தாயுடன் கூடப்பிறந்தவர்களுள் ஆண் சகோதரம் மூன்றுபேர். அழகிய கன்னிமார் ஐந்து. முதல் மூன்றுபேர் நஷ்டமாகும். இதிலும் சேதம் என்று சொன்னோம். சிலர் இதற்கு மாறுகக் கூறுவார். பின்னையும் இந்தக் குடும்பத்தில் இரண்டு தாரம் என்று சொல்லுவோம்.

34. மாதுரு பூர்வம்தன்னை வரைகிறோம் வாழைநாட்டில்[1]
போதவே அருகில்உத்திரம் புக்கினுள் வைசியவம்சம்
மேதினில் சுகமாய்வாழ்ந்து மெல்லிக்கு மதலையின்றி
பூதல தீர்த்தம்தோய புக்கினில் தெக்ஷணத்தில்.

34. மாதாவின் பூர்வோத்தரத்தைக் கூறுவோம். மருதநிலத்தின் அருகில் வடதிக்கில் உதித்தான். வைசியர் வமிசத்தில் பிறந்தான். உலகினில் சுகமாய் வாழ்ந்து வரும்நாளில் மனைவிக்குக் குழந்தையில்லாமல், தக்ஷிண தேசத்தில் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டான்.

35. வரனுடன் தலங்கள்சென்று மகாநதி சேதுபுக்கு
உரனுடன் பேதியாலே உத்தமி மரணமாகி
பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தவ ளிவளேயென்றோம்
அறமதி லிச்சையில்லாள் அம்பிகை யாளேகேளாய்.

35. புருடனுடன் ஸ்தலங்களையும் மகாநதிகளையும் தரிசித்து, சேது ஸ்னானம் செய்து வரும்போது கடுமையாய்ப் பேதி ஏற்பட்டு உத்தமி இறந்து விட்டாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவள் இவளே என்றோம். தருமத்தில் விருப்பமில்லாதவள். அம்பிகையே! கேட்பாயாக.

36. மறுசென்மம் மதுரைதன்னில் மங்கையும் செக்கான்வம்சம்
உரமுட னுதிப்பாளாகும் ஓங்கிடும் செல்வமேலாய்
திருமகள் வாசம்பூண்டு செல்வியும் வாழ்வாளாகும்
அறந்தனை வளர்க்கும்மாதே அம்மையே புகன்றிட்டோமே.

36. அடுத்த ஜன்மத்தில் மங்கையும் வாணியன் வமிசத்தில் தீர்க்கமாய் உதித்தாள். செல்வங்கள் மேன்மேலும் ஓங்கின. லட்சுமி கடாட்சம் ஏற்பட்டது. திருச்செல்வியும் சம்பத்துக்களுடன் வாழ்ந்து வந்தாள். தரும தேவதையே! அம்மையே! யாங்கள் இவ்வாறு கூறுகின்றோம்.

---

1. மருதநிலத்தில்

37. இருபது ஆருண்டில்தான் இன்பமாய் மகரமாதம்
திறமுடன் தந்தைகெண்டம் செப்புவோ மந்தக்காலம்
கரும்பாம்பு[1] தசையிலேதான் காலுனன்[2] புத்திதன்னில்
வருமென் றுரைத்தோம்யாங்கள் மங்கையே கேட்டி
[டாயே.

37. இருபத்தாறும்வயதில் இன்பமாய்த் தை மாசத்தில் திடமாய்த் தந்தையின் கண்டம் என்று காலம் குறித்துச் சொல்வோம். இராகு தசையில் சனி புக்தியில் இக்கண்டம் ஏற்படும் என்று சொன்னோம் மங்கையே! கேட்பாயாக.

38. பின்னையு மன்னைக்கேதான் பேசுவோம் முப்பதாண்டில்
கன்னியின் மாதம்தன்னில் கருங்கோளு தசையிலேதான்
மன்னியின் சிகிபொசிப்பில் வந்திடும் கருமம்தானும்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

38. பிறகு தாயைப் பற்றிப் பேசுவோம். முப்பதாவது வயதில் புரட்டாசி மாசத்தில் இராகு தசையிலேயே பொருந்திய கேதுவின் புக்தியில் மாதுர்கர்மம் வந்திடும். உத்தமனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

39. உதித்தவன் மரணகாலம் ஓதுவோ மைம்பானுலில்
சதமுடன் மேடமாதம் சதுரத்தசி வளர்பக்கத்தில்[3]
அதிகமாய்ச் சுரத்தினுலும் அவன்காலில் குற்றத்தாலும்
விதியது முடியுமென்ரேம் வித்தகி கேட்டிடாயே.

39. ஜாதகனுடைய மரண காலத்தைக் சொல்வோம். இவனது ஐம்பத்துநான்காம் வயதில் சித்திரை மாதத்தில் சுக்கில பட்ச சதுர்தசியில் அதிகமான காய்ச்சலினுலும் அவன் காலில் குஷ்ட நோயாலும் விதிவசத் தால் ஆயுள் முடிந்தது என்றோம். வித்தகியே! கேட்பாயாக.

40. இனிசென்மம் சொல்வேன்கேளாய் இயல்பட்சி தன்னிலே
[தான்
தனியனுய் வடுகனுக்குத் தானவன் மகவாய்த்தோன்றி
இனமது மெச்சவாழ்வன் ராசரால் சீவிப்பானும்
கனமத வானைப்பெற்ற காரிழை புகன்றிட்டோமே.

---

1. இராகு
2. சனி
3. பட்சத்தில்

40. இனிவரும் ஜன்மத்தைச் சொல்லுவேன். கேட்பாயாக. திருக்கழுக்குன்றத்தில் பணக்காரனான தெலுங்கனுக்கு இவன் பிள்ளையாய்ப் பிறந்தான். சொந்தக்காரர்கள் புகழும்படி வாழ்ந்தான். அரசனிடம் வேலை செய்து ஜீவித்தான். விக்னேசுவரனைப் பெற்றெடுத்த பார்வதியே! சொன்னோம்.

41. ஐம்பது இரண்டுஆண்டில் அவன்மனை தனக்குமேதான்
துன்பமா யரிட்டம்சொல்வோம் சுந்திரன் குடும்பச்சேதி
பின்னையு முப்பதாண்டில் பிரிந்திடும் வேறதாகும்
தன்னிலே பாகம்ரெண்டாய் சாற்றினே மிவனுக்கேதான்.

41. இவனது ஐம்பத்திரண்டாமாண்டில் அவனது மனைவிக்குத் துன்பமாய் அரிஷ்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். பின்பு முப்பத்தாவது வயதில் குடும்பம் பிரிந்து வேறாகும். தானாகவே இரண்டுபாகமும் இவனுக்கே தான் வந்து சேரும் என்று சொன்னோம்.

42. நிலமதை விருத்திசெய்வான் நேமிபால் சகடு[1]முள்ளான்
குலமதற் கிசையானாகும் கூறுவோம் சல்லியமில்லான்
தலமது தீர்த்தம்தோய்வன் சகலபாக் கியமும்சேர்ப்பன்
பலபல செட்டுசெய்வன் பலருக்கு நல்லோனாவன்.

42. நிலங்களை விருத்திக்குக் கொண்டு வருவான். பூமியில் வாகனம் உள்ளவன். குலாசாரத்தைக் கைக்கொள்வான். கடன் உபாதை யில்லாதவன். க்ஷேத்திரங்களைப் போய்த் தரிசிப்பான். தீர்த்தாடனம் செய்வான். சகல பாக்கியங்களையும் சேர்ப்பான். பற்பல வியாபாரங்களைச் செய்வான். பல பேர்களுக்கு நல்லவனாவன்.

43. தந்தையின் புகழ்க்குமேலாய் தனமொடு கீர்த்தியேற்பன்
வந்திடும் பணிதருவும் வளம்பெரு நந்தியாவும்
சிந்தையும் களிக்களய்து செய்வதை யறிந்துசெய்வான்
தன்னினத் தவரும்மெச்ச தானவன் வாழ்வானாமே.

43. தகப்பனின் கீர்த்திக்கு மேலாய் தனம், கீர்த்தி இவைகள் ஏற்பான். வந்திடும் பூஷணாதிகளும், வளப்பங்களும் மனதைச் சந்தோஷப் படுத்தும். செய்வனவற்றை அறிந்தே செய்வான், தன் சொந்தக்காரர்கள் மெச்சும்படி அவன் வாழ்வானாகும்.

44. பாலகன் ஜெனிக்கும்காலம் பரிதிபின் தசையிலேதான்
கோலமா யாண்டுரெண்டு குறித்தனம் நாட்கள்பத்தும்
பாலகன் தனக்குரோகம் பருகிபின் நிவர்த்தியாகும்
ஏலவே காலிபீடை எய்திடும் தந்தைநோயாம்.

---

1. வாகனம்

44. இவனுடைய ஜனனகாலம் சூரியதசை. இதன் இருப்பு வருஷம் இரண்டு, நாட்கள் பத்து. இவனுக்கு வியாதி ஏற்பட்டுப் பிறகு நிவிர்த்தி யாகும். ஏற்கனவே காலில் வாயுபீடை எய்திடும். இதுவும் இவனுடைய தந்தைக்கு ஏற்பட்ட நோயாகும்.

45. மாதுரு வர்க்கம்சூதம் வந்திடும் நெருப்புபாதை
போதவே துணைவருக்குப் பொருந்திடும் ரோகம்தானும்
ஞாலமே யிரண்டிலேதான் நாட்டுவோம் விபரமாக
வேலனைப் பெற்றமாதே விளம்பின மொழிகுன்றுது.

45. மாதாவின் குடும்பத்தில் ஆசௌசம் வந்திடும். சகோதரர்களுக்கு அக்கினியினால் பீடை ஏற்படும். வியாதியும் சேர்ந்திடும். இனி இரண்டாம் பாகத்தில் விவரமாய்ச் சொல்லுவோம். வேலனைப் பெற்ற பார்வதியே! சொன்ன வார்த்தை தப்பாது.

ஜாதகம் 15

1\. மதிசனி கேதுமேடம் மன்னனுங் நந்தியாக
புதன்குசன் மானதாக புரவியோன் சாடிபுக்க
நதிகோளு மேருவாக ராகுவும் கோலதாக
இதுவிதம் கோளும்நின்று லக்கினம் மேடமாக.

1\. சந்திரன், சனி, கேது, இவர்கள் சேர்ந்து மேஷத்தில் தங்க, குருவும் ரிஷபத்திலிருக்க, சூரியன் கும்பத்திலும், புதனும் செவ்வாயும் மகரத்திலுமிருக்க, ராகுவும் துலாம் ஏற, சுக்கிரன் மகரத்திலிருக்க இவ்வித கிரகநிலை கொண்ட மேஷ லக்ன ஜாதகனுக்கு.

	லக்கினம் சந்திரன் சனி கேது	குரு	
சூரியன்	இராசி சக்கரம்		
புதன் செவ்வாய்			
சுக்கிரன்		ராகு	

(மேரு=Mount as in Leo's Horoscopy.)

2\. பலன்தனைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும்போது
குலகுரு வசிஷ்டர்சொல்வார் குறித்தது ஆண்பால்சென்மம்
தலமது கீழ்மேல்வீதி தென்வாசல் பேருராகும்
பலர்செல்லு மார்க்கம்மேற்கில் பாஞ்சாலி தென்பாலாகும்.

2\. பலன்களைச் சொல்லும் என்று பார்வதி கேட்கும்போது, குலகுருவாகிய வசிஷ்டர் பின்வருமாறு சொல்லலுற்றார். குறிப்பிட்டது ஆண்பால் ஜன்மம். பெரிய ஊரில் கிழக்கு மேற்கு வாசல் கொண்ட தெற்குப்பார்த்த வீட்டில் வசிப்பான். இதன் வழியே பலர் போய்க்கொண்டிருப்பார்கள். துரோபதை அம்மன் கோவில் தெற்குப் பக்கத்திலுள்ளது.

3\. வடதிசை மாரிகாளி மதிபிறை அணிந்தோன் தங்கும்
விடமதை சயனம்கொண்ட வித்தகர் தென்மேலாகும்
அடவுடன் பிரம்மசேயா யருளுவா னிந்தபாலன்
தடவரை மகளேயாங்கள் சாற்றுவோம் குடும்பச்சேதி.

3\. வட திசையில் காளி கோயிலும், பிறை சூடிய சிவன் கோயிலும், தென் மேற்கில் சர்ப்பாசனத்தானாகிய விஷ்ணு கோயிலும் உள. இந்த

ஜாதகன் மதிப்பான பிராம்மணப் பையனாய் ஜனிப்பான். ஸ்ரீதேவியே! இவனுடைய குடும்பச் செய்தியை நாங்கள் கூறுகிறோம்.

4. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சிவந்தமெய் யூகை [சாலி
முந்துமால் பத்திகொள்வன் உயர்வான புத்தியேற்பன்
நிந்தைகள் ஏற்கானுமே நேமியின் சீலனுவன்
சுந்தர முடையனுகும் சோம்பிடான் காரியத்தில்.

4. தந்தையின் குணங்களைச் சொல்லுவேன். சிவப்பான உடம்புடையோன். நல்ல மதியூகி. ஆரம்பத்தில் விஷ்ணுவினிடம் பக்தி கொள்ளுவான். மேலான புத்தியை யுடையவன். பிறருடைய வசைமொழிகளை ஏற்றுக் கொள்ளமாட்டான். பூமியில் சீல மிக்கன். அழகுடையவன். காரியத்தில் சோம்பலாயிருக்க மாட்டான்.

5. தரணியால் உயர்வானுகும் சந்தேக மனத்தனுகும்
அரிவையர் வந்தபின்பு அம்புலி போலேயோகம்
கரமதில் பிரம்மரேகை கழறுவோம் வறுமைகாணுன்
உறன்முறை மதிக்கவாழ்வான் உண்டியும் சுகமாய்க் [கொள்வன்.

5. பூஸ்திதியினுல் மேம்பாடடைவான். சமுசயமுள்ள புத்தியை யுடையவன். மனைவியர் வந்த பிறகு பிறைச் சந்திரனைப்போல் யோகம் வளரும். கையில் பிரம்மரேகையை உடையவன். தரித்திரத்தை அனுபவியான். உறன்முறையோர்கள் மதிக்கும்படி வாழ்வான். சுகமாய்ப் போஜனம் செய்வான்.

6. தன்துணை தோஷமெய்தும் தனியனுய் வாழ்வானுகும்
என்னகா ரணத்திலே இவனுக்குத் துணைவர்தோஷம்
ஒன்பதில் புகரும்தங்க உதையனும் லாபமேற
இந்தநொல் கிரகத்தாலே இலகாது துணைவர்தானே.

6. தன் சகோதரம் தோஷமடையும். இவன் பணக்காரனுக வாழ்வான். என்ன காரணம் பற்றி இவனுடைய துணைவருக்குத் தோஷம் ஏற்பட்டது. ஒன்பதாமிடத்தில் சுக்கிரனும், லாபஸ்தானத்தில் சூரியனும் தங்கி யிருப்பதனுல் கெடுதல். துணை வருக்குத் தோஷ மேற்படும்.

7. இதுவின்றி பூர்வம்தன்னில் எய்திற்று வினைஅநேகம்
அதுவிப ரங்கள்சொல்வாய் அவனுட பூர்வம்கேளாய்
கதிதரும் மதுரைநாட்டில் கலந்தனன் சைவசேயாய்
பதியின் திருவுமுண்டாய் பாரினுல் சீவித்தேதான்,

7. இதுவுமல்லாமல் ஆதியில் பல வினைகள் இவனை அடைந்தன. அதன் விவரம் கூறுவாயாக. அவனுடைய பூர்வோத்தரத்தைக் கேட்பாயாக. மோட்சத்தை யளிக்கும் மதுரை மாநகரில் சைவக் குழந்தையா யிருக்கும்போது வீட்டில் லட்சுமி கடாட்சம் ஏற்பட்டு, பூமியைக் கிருஷி செய்துவரும் நாளில்,

8. சுகமுடன் வாழுநாளில் செய்ததோர் வினையைக்கேண்மோ
இகபரன் அடியார்தானும் இரவினில் அன்னம்கேட்க
முகவெறி கொண்டுஇன்னோன் முடிக்கிறான் அதிதிதன்னை
அகமது வருத்தமுற்று அதிதியும் சாபம்சொல்வான்.

8. இப்படிச் சுகமாய் வாழ்ந்துவரும் நாளில் செய்த பாவச் செயலை கேட்பாயாக. இம்மை மறுமைப் பலன்களை யளிக்கும் பரமசிவனுடைய அடியார்கள் இரவினில் அன்னதானம் கேட்க, கனகோபம் கொண்டு அதிதிகளைத் தொலையச் செய்தான். மனதில் வருத்தப்பட்டு அதிதியும் சாபமிட்டான்.

9. மறுசென்மம் தோன்றியேதான் வருந்துணை தோஷமெய்தி
உறுஞ்சுதா பெண்பாலின்றி உலகினில் வாழ்வாய்நீயும்
திருகுடன் சொல்லிச்சென்றார் சேர்ந்தது அந்ததோஷம்
அரிவைபெண் வேலைக்காரி அவள்பேரில் நிந்தைவார்த்தை,

9. அடுத்த ஜன்மத்தில் சகோதர தோஷமடைந்து, பிள்ளை, பெண்களில்லாமல் நீ உலகினில் வாழ்வாய் என்று கோபத்துடன் கூறிச் சென்றான். அந்த தோஷம் இவனை அடைந்தது மனைவியின் வேலைக்காரியைப் பார்த்து நிந்தைகள்,

10. உரைத்தன னிவனேயென்றேம் உரைக்கிறாள் ஏழைமாது
மறுசென்மம் துணைவரின்றி மைந்தரில் மூன்றுபங்கு
மறலியின் பதிக்குச்செல்லும் மாதுவுமிவ் வாறுசொல்ல
திருகாக அந்ததோஷம் சேர்ந்தது என்றுசொல்வோம்.

10. இவனே சொன்னான் என்றேம். ஏழைமாது பதில் சொல்லலானாள். அடுத்த பிறப்பில் சகோதரம் இல்லாமல், மைந்தர்கள் மூவர் எமலோகம் செல்வார்கள். மாது இப்படிச் சொல்ல, கெட்ட அந்தப் பீடை இவனைப் படுத்தியது.

11. மாரனு மந்தியத்தில் மலர்சோலை வைத்துமேலும்
வாரியின பைதானம்செய்து மால்பத்தி மிகவேகொண்டு
சீரிய காலனுடு சென்றுமே பிரமன்லக்கம்
பாரினில் இக்குலத்தில் பிறந்தன னென்றுசொல்வோம்.

11. இவனும் அந்திய காலத்தில் பூஞ்சோலைகளை ஏற்படுத்தி, தானங்கள் மிகச் செய்து, விஷ்ணு பக்தி மேலிட்டுச் சிறப்புடன் எமலோகம் சென்றான். பிரம்மா பூலோகத்தில் இக்குலத்தில் இவனைப் பிறக்கும்படி செய்தான்.

12. கன்னிகை சாபமபோலே கலந்திடும் துணைவர்தோஷம்
சொன்னஇக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
இன்னவன் நிறம்குணத்தை இயம்புவோம் தாயேயாங்கள்
பின்புத்தி யுடையோனாகும் குபேரனே வறுமைகாணான்.

12. அம்மாது சொன்ன சாபத்தின் காரணமாகச் சகோதர தோஷம் ஏற்பட்டது. அப்படிச் சொன்ன குணங்களை யுடைய இவனுக்கு இந்தப் புத்திரன் உதித்தான். இவனுடைய நிறம், குணம் இவற்றைப்பற்றிச் சொல்லுவோம். தாயே ! பின் புத்தி யுள்ளவன். குபேர சம்பத்துள்ளவன். தரித்திரமே கிடையாது.

13. மாந்தளிர் மேனியாவன் மனமது தளர்ச்சியுண்டு
சாந்தவான் வாததேகி தரணிபால் சீவிப்பானும்
சேர்ந்தவர் தன்னைக்காப்பன் செய்நன்றி மறவானாகும்
ஏந்திழைப் பிரியனாகும் இடர்செய்யான் யாவருக்கும்.

13. மாந்தளிர் போன்ற மேனியை யுடையவன். இரக்க புத்தி யுடையவன். சாந்த முடையவன். வாத சரீரம் கொண்டவன். பூமியைக் கிருஷி செய்து ஜீவனம் செய்வான். தன்னைச் சேர்ந்தவர்களை ஆதரிப்பான். பிறர் தனக்குச் செய்த நன்றியை மறக்க மாட்டான். பெண்டாட்டியினிடம் பிரிய முள்ளவனாக இருப்பான். எவருக்கும் இடைஞ்சல் செய்யமாட்டான்.

14. கல்வியும் சமமதாகும் கருதிடான் கட்டுவார்த்தை
புல்லிய புத்திகொஞ்சம் புகழது பினனுல்ஏற்பன்
நல்லவன் நல்லவர்க்கு வண்டர்க்கு மிண்டனாவன்
அல்லல்எப் போதும்காணான் அணுகிடும் மாமிரண்டு.

14. சமமான கல்வியறிவுள்ளவன். பொய் சொல்ல நினையான். கெட்ட புத்தி கொஞ்சமுள்ளவன். பின் காலத்தில் புகழுடையான். நல்லவன் நல்லவர்களுக்கு. போக்கிரிகளுக்குப் போக்கிரியாயிருப்பான். சிரமம் என்பதே இவனுக்குக் கிடையாது. இரண்டு மாமியார்கள் ஏற்படுவார்கள்.

15. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் விஷ்ணுரேகை
முன்னோன்சொல் கடவானாகும் உயர்தல வாசம்செல்வன்
பின்பூமி சேர்ப்பானாகும் பித்ததே கத்தானென்றோம்
அன்னமும் லகுவாயுண்பன் ஆசான்மேல் பிரியமில்லான்.

15. இவனது செங்கையில் விஷ்ணு ரேகை விளங்கும். பெரியவர்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தி நடப்பான். மேலான ஸ்தலங்களுக்குப்போய்த் தரிசிப்பான். வயது காலத்தில் பூஸ்திதிகளை விருத்தி செய்வான். பித்த சரீரமுள்ளவன். அருமையான சாப்பாடுகளை அருந்துவான். குருபக்தி மேலிட்டிருப்பவன்.

16. தன்துணை அறுவர்தோன்றும் தங்கிடும் ஆண்பால்ரெண்டு
பின்மட்டில் ஒன்றுஏகும் புத்திர னொருவனுண்டு
மன்னிய ஆண்பாலொன்று வரைகிறோம் தீர்க்கமாக
பின்பாகம் விபரமாகப் பேசுவோ மவன்தன்சேதி.

16. தன்னுடன் பிறந்தவர் ஆறு பேர்களாவர். ஆயுளுடன் தீர்க்கமாயிருப்பது ஆண் இரண்டு பேர். பிற்காலத்தில் ஒருவன்தா னிருப்பான். புத்திரனும் ஒருவன் உண்டு. பொருந்திய ஆண் ஒன்று. அது தீர்க்காயுளுடனிருக்கும். அவனைப் பற்றிய விவரங்களைப் பின்பாகத்தில் விவரமாய்ப் பேசுவோம்.

17. இன்னவன் மணத்தின்காலம் இயம்புவோம் பத்தொன் [பாண்டில்
கன்னிகை உள்ளூர்தெற்கில் கலப்பளாம் குணத்தைச் [சொல்வேன்
அன்னம்போல் சாயலொக்கும் ஆளன்தன் மனம்போல் [வாழ்வள்
பின்னமில் லாததேகி பேதைநன் னடைக்கநன்மை.

17. இவனுடைய கலியாண காலத்தைப் பற்றிப் பேசுவோம். இவனுடைய பத்தொன்பதாவது வயதில் தன் ஊருக்குத் தெற்கில் பெண் ஏற்பட்டுக் கலியாணம் ஆகும். அவள் குணங்களைக் கூறுவேன். அன்னம் போன்ற சாயல் உள்ளவள். புருஷன் குறிப்பறிந்து ஒழுகுவாள். உடம்பு வாட்ட சாட்டமாயிருப்பாள். நல்ல நடத்தை யுள்ளவள்.

18. மங்கள வார்த்தைக்கூர்வள் மறித்துரை கூருளாகும்
அங்கவள் சிவந்தமேனி அரிமனை ஒப்பதாகும்
நங்கைக்கு வயதுதீர்க்கம் நவிலுவார் பராசர்தானும்
இங்கிவன் தனக்குத்தாரம் இரண்டென மொழியலாகும்.

18. மங்களகரமான வார்த்தைகளைப் பேசுவாள். எதிர்த்துப் பேச மாட்டாள். அவள் சிவந்த சரீரத்தையுடையவள். பார்வதியைப் போலுள்ளவள். இவளுக்கு ஆயுள் தீர்க்கம். இப்போது பராசரர் பின்வருமாறு பேசுவார். ஜாதகனுக்கு இரண்டு பெண்டாட்டிகள் என்று சொல்லக்கூடும்.

19. எப்படிச் சொல்லுமென்ன ஏழினில் பணியும்நிற்க
ஒப்புடன் காரிபார்க்க உரைத்தனம் தாரம்ரெண்டு
அப்படிச் சொல்லொணுது அந்தண னிரண்டில்தங்க
செப்புவோ மொன்பான் தனுசினி லிருப்பதாலே,

19. எப்படிச் சொல்லலாம் என்று கேட்க, ஏழாமிடத்தில் இராகு நிற்க, அவனைச் சனியும் பார்க்க, இரண்டு தாரம் என்று உரைத்தோம். ஆனல் அப்படிச் சொல்லுவதற்கில்லை. வியாழபகவான் குடும்பஸ்தானத்தில் தங்க, ஒன்பதாம் வீட்டில் சுக்கிரன் இருப்பதனுலே,

20. தாரமு மொன்றேயாகும் சாற்றெனு வேறுமாது
கூறுவோம் சங்கையொன்று குழவிகள் தோன்றும்காலம்
நாரிக்குப் பிணிஅநேகம் நல்கிடும் நிவிர்த்தியாகும்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

20. தாரம் ஒன்றுதான். வேறு பெண்டாட்டி உண்டு என்று சொல்லுவதற்கில்லை. சந்தேகம் ஒன்று இங்கே கூறுவாம். குழந்தைகள் ஏற்படும் காலங்களில் பெண்டாட்டியை வியாதி அதிகம் பீடிக்கும். ஆனல் குணமாகும். ஆறுமுகக்கடவுளைப் பெற்றெடுத்த அம்பிகையே! கேட்பாயாக.

21. சுதர்களு மிருநான்காகத் தோன்றிடும் அதிலாண்மூன்று
மதிமுக பெண்பால்ரெண்டு வரைகிறும் தீர்க்கமாக
முதல்சுதர் தோஷமெய்தும் மொழியது தப்பாதாகும்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

21. எட்டுக் குழந்தைகள் தோன்றும். அதில் பிள்ளை மூன்று. சந்திர பிம்பம்போன்ற பெண் குழந்தைகள் இரண்டு. இவைகள் தீர்க்கம். முதலில் பிறக்கும் குழந்தைகள் தோஷமடையும். சொல்லுவது தப்பாது. அதிதிதேவியை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

22. அன்னையும் நற்குணத்தாள் அன்புள மனத்தாளாகும்
தன்மனம் கபடமில்லாள் தானிரு நிறத்தளாகும்
அன்னியர் குற்றம்சொல்லாள் ஆளன்தன் மனத்துக்கே [தான்
முன்கோபம் கொஞ்சமுண்டு மொழியது சுகமேபோலும்.

22. தாயும் நல்லவள். அன்பு கொண்ட மனதை யுடையவள். தன்னுடைய மனதில் கபடமில்லாதவள். பொது நிறமுடையவள். பிறர் மேல் குற்றங்குறைகள் கூறமாட்டாள். புருஷனுக்குப் பிரியமாயிருப்பாள். சிறிது முன்கோப முடையவள். சுகமான பேச்சுக்களைப் பேசுவாள்.

23. இல்லமும் வருடை[1]கோணம் இவள்துணை ஆண்பா
[லொன்று
வல்லியு மவ்வாறென்றேம் வரைகிறேம் மன்னைபூர்வம்
எல்லையி லுயர்வதான எழில்கொங்கு நாட்டிலேதான்
புல்கினுள் சைவசேயாய்ப் புத்திர ரதிகமுண்டாய்,

23. வீடும் எட்டுக்கால்பூச்சிபோல கோணவடிவம் கொண்டது. இவளுக்குச் சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தி. அன்னையின் பூர்வோத்தரத்தைப்பற்றிக் கூறுவோம். எல்லைப்புறத்தில் உயர்ந்திருக்கும் வளப்பம்பொருந்திய மலையாளதேசத்திலேதான் சைவவமிசத்தில் உதித்தாள். புத்திரர்கள் அநேகர் ஏற்பட்டு,

24. அறமதி விச்சையுண்டாய் அதிதிகட் கன்னமீந்து
சிறுமைக ளில்லாதாகிச் செங்கண்மால் பத்திகொண்டு
மறலியின் பதிக்குச்சென்று மறையவன் வரியப்பட்டு
பெருமையா யிக்குலத்தில் பிறந்தன ளென்றுசொன்னேம்.

24. தருமஞ்செய்வதில் விருப்பம்மேலிட்டு, விருந்தினருக்கு அன்ன மளித்து, சிரமமில்லாமல் விஷ்ணுவினிடத்தில் அதிகம் பக்தி பூண்டு எமலோகம் சென்று, திரும்பவும் பிரம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டு, பெருமையான இந்தக் குலத்தில் பிறந்தாள் என்று சொன்னேமல்லவா!

25. பின்சென்மம் வள்ளூர்தன்னில் பிறப்பளா மிக்குலத்தில்
பொன்பணி அதிகமுண்டாய்ப் புகழான குடும்பியாகி
அன்னவள் வாழ்வாளாகும் அறைந்தது தப்பாதாகும்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

25. மறுஜன்மம் திருவள்ளூரில் இதே குலத்தில் பிறப்பாள். காசு பணம் அதிகம் ஏற்பட்டுப் புகழ்பெற்ற குடும்பத்தை யடைந்து வாழ்ந்து வருவாள். சொன்னது தப்பாது. உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

26. உதித்தவன் பூர்வம்தன்னை உரைக்கிறே மினிமேலாக
விதியவன் பூசைசெய்யும் விமலன்வாழ் பட்சிதன்னில்
இதுகுலம் தனிலுதித்து இடரென்றோர்க் குதவிசெய்து
மதிமுக மனைவிமைந்தர் மாநிலம் கிருஷிசெய்து,

26. இவனுடைய பூர்வோத்திரங்களை இனிமேல் உரைப்போம். எமதர்மராஜன் பூஜைசெய்யும் திருக்கழுக்குன்றத்தில் இந்தக் குலத்திலுதித்து இடர்ப்பட்டபேர்க்கு ஒத்தாசைசெய்து சந்திரபிம்பம்போன்ற மனைவி, மைந்தர், பூமி, கிருஷி இவைகள் ஏற்பட்டு,

1. எண்காற்புள்

27. வினையது இல்லாதாகி மேவினன் காலனூடு
கனமுள பிரமன்லக்கம் காவல னுதிப்பானும்
சினமிலா இவனின்யோகம் செப்புவோ மினிமேலாக
துணைவனை ஆதரிப்பன் தொல்புவி விருத்திசெய்வன்.

27. பாவமே இல்லாமல் எமலோகம் சென்றான். பிரம்மாவின் சிருஷ்டியால் இவன் திரும்பவும் உதிப்பான். இவனுடைய மேலான யோக பாவத்தைப்பற்றி இனிக்கூறுவாம். சகோதரனை ஆதரிப்பவன். பண்டை பூஸ்திதியை விருத்தி செய்வான்.

28. தந்தைக்குத் தாழ்வுறுதான் சல்லியம் கொள்ளானும்
வந்தவர்க் கன்னமீவன் மங்கல வார்த்தைசொல்வன்
நொந்தவர்க் குதவிசெய்வன் நிமலன்தன் பத்திபூண்பன்
நிந்தைகள் ஏற்கானும் நிமலியே கேட்டிடாயே.

28. தகப்பனுக்கு மேலாக வாழ்வான். கடன்படான். விருந்தினரை உபசரித்து அன்னமளிப்பான். மங்களகரமான வார்த்தைகளைக் கூறுவான். சிரமப்பட்டவர்களுக்கு ஒத்தாசை செய்வான். கடவுளிடத்தில் பக்தி கொள்ளுவான். பிறர் இவன்மேல் அவதூறு சொல்லமாட்டார்கள். தாயே! கேட்பாயாக.

29. இல்லமும் வேறுநேரும் இருபது ஆறுண்டின்மேல்
வல்லிபால் சிலதுலாபம் வருமென்றோம் மனதுதீரம்
அல்லல்எப் போதும்நேரும் அணுகிடும் பித்தவாயு
வெல்லும்சொல் லுடையனாகும் வெஞ்சினம் வெளிக்
[காட்டாதான்.

29. வேறு வீடு ஏற்படும். இருபது வயதிற்குமேல் பெண்டாட்டியினால் சிறிது லாபம் கிடைக்கும். மனத்திடம் கொண்டவன். மனச்சஞ்சலம் எப்பொழுதும் ஏற்படும். பித்தவாயுவினால் கஷ்டப்படுவான். பேச்சில் ஜயமடைவான். கடுமையான கோபத்தைப் பிறருக்கு வெளிக்காட்டமாட்டான்.

30. இருபது ஒன்றுஆண்டில் இயம்புவோம் தந்தைகண்டம்
மறுசென்மம் விரிஞ்சிதன்னில் வருகுவான் இக்குலத்தில்
அரசரால் தொழிலும்பெற்று அதிகார முடையனாகும்
பெருவயி றோனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

30. இவனது இருபத்தொன்றாம் வயதில் தந்தைக்கு கண்டம் ஏற்படும். அடுத்த ஜன்மத்தில் விரிஞ்சிபுரத்தில் இந்தக் குலத்தில் உதிப்பான். அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று அதிகாரம் செலுத்துவான். கணபதியானைப்பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

31. அன்னைக்கு இருபானொன்பான் ஆண்டினில் கெண்ட
[மெய்தும்
இன்னவன் தனக்குச்சொல்வேன் எழுபது ஆண்டிலேதான்
கன்னியாம் மாதம்தன்னில் கழறுவோம் பாலன்கெண்டம்
தென்முனி மறித்துச்சொல்வார் சிகிதசை சொன்னகாலம்,

31. இவனது இருபத்தொன்பதாம் பிராயத்தில் இவன் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். இவனுக்கு மரணகாலம் எழுபதாம் பிராயத்தில்தான். அதுவும் புரட்டாசி மாசத்தில் ஏற்படும். இதனை மறுத்து அகஸ்தியர் கூறலுற்ருர். கேதுதசை ஜனனகாலத்தில் நடப்பதால்,

32. நடப்பதால் பாலனுக்கு நவிலுவோம் கெண்டம்தானும்
விடம்போலே சகடையொன்று மேவியே யிருப்பதாலே
திடமதா யீருருண்டில் செயக்குமே கெண்டமெய்தும்
சடைமுனி தடுத்துச்சொல்வார் தனத்தினில் பொன்ஞேன்
[தங்க,

32. இவனுக்குக் கண்டம் ஏற்படுவதைக் கூறுவோம். சகடயோகம் விஷம்போல் ஏறிக்கொண்டே வருவதால், திடமாய்ப் பன்னிரண்டாம் பிராயத்தில் பிள்ளைக்கும் கெண்டமேற்படும். இதை ஜடைமுனி தடுத்துச் சொல்லுவார். தனஸ்தானத்தில் வியாழபகவானிருக்க,

33. உதித்தவன் வயதுதீர்க்கம் உரைக்கிறே மிவன்பின்
[சென்மம்
சதியிலா சோழநாட்டில் செனிப்பனு மிக்குலத்தில்
அதிகார முடையனுகி அரசர்பூ சிதனுய்வாழ்வன்
நதிசடை யணிந்தோன்பாரி நவின்றது தப்பாதாமே.

33. ஜாதகன் தீர்காயுசுடையவன். இவனுடைய அடுத்த ஜன்மத்தைக் கூறுவோம். இணையற்ற சோழவளநாட்டிலே இக்குலத்தில் ஜனிப்பான். அதிகாரமுடையவனுயிருப்பான். அரசர்கள் போற்றும்படி வாழ்வான். கங்கையை அணிந்த பரமசிவனுடைய பார்யையாகிய பார்வதியே! சொன்னது தப்பாதம்மா.

34. அறுபது நாலுஆண்டில் அவன்பாரி கெண்டமெய்தும்
திருமகள் செனனகாலம் சிகிதசை ஆண்டுஐந்தும்
மருவிடும் திங்களொன்று வரைந்தனம் பாலனுக்குப்
பரவிடும் பிணிஅநேகம் பாலது குறைவுநேரும்.

34. இவனது அறுபத்துநான்காம் வயதில் இவனுடைய பெண்டாட்டிக்குக் கண்டம் ஏற்படும். இவளுடைய பிள்ளைக்கு ஜனனகாலத்தில் கேதுதசை

வருடம் ஐந்தும், மாதம் ஒன்றும் சேரும். இவனுக்கு அப்போது வியாதி வரும். பால் குறைவு ஏற்படும்.

35. பந்துவால் சூதமெய்தும் பசுவுகள் சேதமாகும்
மந்திரி தனக்குஒன்பான் மால்குச னிருப்பதாலே
அந்ததோர் பலன்எவ்வாறு அறிவிப்பீர் முனியேநீர்தான்
இந்திர போகமேற்பன் இவன்தந்தை மேலாய்வாழ்வன்.

35. பந்துக்களால் ஆசௌசம் ஏற்படும். பசுக்கள் சாகும். குருவுக்கு ஒன்பதாமிடத்தில் புதனும் செவ்வாயும் இருப்பதனாலே அப்படிப்பட்ட பலனை எப்படிச் சொல்லுவீர் முனியே! இந்திரபோகமேற்பான். இவன் தந்தைக்கு மேலாக வாழ்வான்.

36. கன்றுகா லிகளுமுண்டு காலாள்க ளுடையனாகும்
சென்றிடம் பெருமையுண்டு சிறப்பான குடும்பமெய்தும்
நன்றுளோர் நேசமெய்தும் நவின்றமை யைந்தின்மேலாய்
குன்றிடா பலன்கள்கூடும் கொம்பனே யாளேகேளாய்,
(சித்திரபானு மாசி 2உ அச்வனி)

36. கன்று காலிகள் உண்டு. பதாதிகளுடையவன். போனவிடமெல்லாம் சிறப்புண்டாகும். சீர்பெற்ற குடும்பத்தைப் பெறுவான். நல்லவர்களுடைய சிநேகம் ஏற்படும். சொன்னவை ஐந்து பங்குகளுக்குமேல் கூடும். விநயகனைப்பெற்ற பார்வதியே! கேளாய்.

(சித்திரபானு, மாசி 2உ, அச்வனி)

ஜாதகம் 16

1. சந்திரன் கேதுசாடி சனிவீணை புகருமீனம்
புந்திபானு நந்தியாக பூமகன் ராகுசீயம்
மந்திரி மாதைபுக்க மேடமும் சென்மமாக
இந்தவாறு கோளுநின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் கேதுவும் கும்பத்திலும், சனி மிதுனத்திலும், சுக்கிரன் மீனராசியிலும், சூரியன், புதன் இரிஷபத்திலும், செவ்வாயும் குருவும் சிம்மத்திலும், குரு கன்னியிலும் தங்கி நிற்கும்படியான இந்த கிரக நிலைகளைக் கொண்ட மேஷலக்ன ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுங்கள்.

சுக்கிரன்	லக்கினம்	சூரியன் புதன்	சனி
சந்திரன் கேது	இராசி சக்கரம்		
			ராகு செவ்வாய்
			குரு

2. பார்வதி கேட்கும்போது பராசரரும் புகலுகின்றார்
சீர்புக ழாணும்சென்மம் செப்புவோ மில்லந்தன்னை
கூறிய வடதென்வீதி குடகுதன் வாடையாகும்
மாரியும் காளிதென்கீழ் மருக்குகோஷ்ட முத்திரம்.

2. பார்வதிதேவி இவ்வாறு கேட்க, பராசரரும் சொல்லலுற்றார். மிகவும் சீரும் சிறப்பும்பெற்ற ஆண்மகன் இந்த ஜன்மமெடுப்பான். அவனுடைய பிறந்த வீட்டைப்பற்றி விவரம் கூறுவோமாக. அது வடக்குத் தெற்குவீதியில் மேற்கு வாடையிலிருக்கும். அம்மன்கோவில் தென் கிழக்கிலுள்ளது. வடக்கில் அனுமான்கோவில்.

3. மாலவ னீசன்கீழ்பால் மருவிடும் சோலையுண்டு
சாலவே ஆடுகொல்லும் சங்கலிக் கருப்பன்தெற்கில்
சீலமா நதியுமுண்டு சமனூரில் கங்கைசேயாய்ப்
பாலகன் வாசம்செய்வன் பார்வதி கேட்டிடாயே.

3. திருமாலும், பரமசிவனும் கீழ்பக்கத்தில் கோவில் கொண்டுள்ளார்கள். அதன் அருகே சோலையுண்டு. பொருத்தமாகவே ஆட்டுக்கடாவை

பலி கொடுக்கக்கூடிய சங்கலிக்கருப்பர் கோவில் தெற்கிலுள்ளது. மேன்மையான நதியின் பிரவாகமுமுண்டு. சமமான தரைகொண்ட ஊரில் வேளாளர் குழந்தையாய் ஜாதகன் வாசம் பண்ணுவான். பார்வதி! கேட்பாயாக.

4. இன்னவன் செனனயோகம் எழிலுறு தந்தையோகம்
மன்னிய அன்னையோகம் வரும்புத்திர களத்திரயோகம்
தன்னிலே முன்பின்சென்மம் சாற்றுவோ மின்னூல் [தன்னில்
அன்னையே யாங்கள்சொல்லும் அருள்மொழி குன்று [தென்றும்.

4. இன்னவனுடைய பிறந்த யோகமும், புகழ்பெற்ற இவன் தந்தையின் யோகமும், பொருந்திய தாயாரின் யோகமும் இனி இவனுக்கு ஏற்படும் புத்திரகளத்திரம் இவர்களுடைய யோகமும், இவனுடைய முன் பின் ஜன்மமும் இந்தப் புஸ்தகத்தில் விரிவாய்க் கூறுவோம். தாயே! யாங்கள் சொல்லும் அருள்மொழி சிறிதும் தப்பாது.

5. இவன்பிதா துணைவர்தன்னை இயம்பஆண் பலத்தைக் [காணோம்
அவனியில் கன்னிஒன்று அறைந்தனம் தீர்க்கமாக
நவனியில் பிதாசிகப்பன் நளினமாய் வார்த்தைசொல்வன்
சமதேகன் யூகைசாலி சாஸ்திர மறியவல்லன்.

5. இவனுடைய பிதாவின் சகோதரத்தைப்பற்றிப் பேசுவோமென்றால் ஆண் ஒருவரும் இல்லை. பூமியில் தங்கை ஒருத்தி தீர்க்கமாய் உண்டு என்று சொல்லலாம். இவனுடைய பிதா சிவப்பு நிறமுள்ளவன். பிரியமான வார்த்தைகளைச் சொல்லுவான். சமமான தேகத்தையுடையவன். புத்தியூகமுடையவன். சாஸ்திரங்களை அறியும் சக்தி கொண்டவன்.

6. அடக்கமு முடையனாகும் அண்டின பேரைக்காப்பன்
இடுக்கங்க ளெண்ணுசித்தன் ஈகைவான் கிருஷிசெய்வன்
நடக்கையும் நல்லதாகும் நாற்றிசைக் கீர்த்தியேற்பன்
மடமனை யிஷ்டம்கொள்வன் மருமமும் கொஞ்சமுள்ளான்.

6. அடக்கமாயிருப்பான். தன்னை வந்து அண்டினபேர்களைக் காப்பாற்றுவான். இடைஞ்சலான வழிகளில் மனதைச் செலுத்தமாட்டான். தர்மிஷ்டன். கிருஷித்தொழிலைச் செய்வான். நல்ல நடத்தையையுடையவன். நான்கு திக்குகளிலும் இவன் புகழைப் பலர் பேசுவார்கள். பெண்டாட்டியினிடத்தில் பிரியமாயிருப்பான். கொஞ்சம் ரகசியமாயிருப்பான்.

7. பதநடை சொகுசுமுள்ளான் பங்கய ரேகையுள்ளான்
நிதம்சுகி யோசிப்பானும் நிதானமாய் வார்த்தைகூறுவன்
ததிநெய்பா லிஷ்டம்கொள்வன் சகலருக் கினியனுவன்
சதமான பித்தசூடு தங்கிடும் என்றுசொன்னேம்.

7. பாதங்களைச் சொகுசாய் வைத்து நடப்பான். பத்மரேகையைக் கையிலுள்ளவன். நித்தியம் சுகத்தை யோசித்துக் கொண்டிருப்பான். நிதானமாய் வார்த்தை கூறுவான். தயிர், நெய், பால் இவற்றை இஷ்டப் பட்டபடி அடைவான். யாவருக்கும் நேசமாவான். பித்தசூட்டின் உபத்திரவம் கொண்டவன் என்று சொன்னேம்.

8. சித்திர விருத்திசெய்வன் தேகமும் வலுவுமுள்ளான்
சித்தசன்[1] தந்தைபக்தி செப்புவான் கோபம்கொஞ்சம்
சித்தமே காப்புமில்லான் தீரமு முடையனுகும்
சித்தினி சாதியாவன் சேல்விழி கேட்டிடாயே.

8. சித்திரக்கலையை விருத்தி செய்வான். வலுவான சரீரத்தை யுடையவன். பரமசிவனிடம் பக்தி பூண்டவன். கொஞ்சம் கோபமுள்ள வன். மனதில் கட்டுப்பாடில்லாதவன். தைரியமுமுடையவன். சித்தர் களின் குலத்தோன். சேல்விழிகொண்ட பார்வதி! கேட்பாயாக.

9. இக்குண முடையோனுக்கு இவனுமே சேஷ்டனுக
மிக்கவே யுதிப்பானுகும் விளம்புவோ மிவன்குணத்தைச்
சிக்கெனப் பொருளும்சேர்ப்பன் தீரமா மனத்தனுகும்
பக்குவ மானவார்த்தை புகலுவான் என்றுசொன்னேம்.

9. இக்குணங்களுடையவனுக்கு நம் ஜாதகன் மூத்தகுமாரனுக ஜனிப்பான். இவனுடைய குணங்களைச் சொல்லுவேன். செட்டுங்கட்டு மாய்ப் பணத்தைச் சேர்ப்பன். தைரியமுள்ள மனதையுடையவன். பக்குவ மான பேச்சைப் பேசுவான் என்று சொன்னேம்.

10. பூமியும் விருத்திசெய்வன் புண்ணிய மனத்தனுகும்
நேமியோர் தனக்குநேயன் நிதானமாய்ச் சொல்லுமுள்ளான்
தீமையை விரும்பானுகும் தெய்வமேல் பக்திபூண்பன்
தாமத குணத்தானுகும் சத்தியம் தப்பாதென்றேம்.

10. பூஸ்திதியை விருத்தி செய்வான். தர்மஞ்செய்ய விருப்பமுள்ள வன். உலகினருக்கு நேசமுள்ளவன். நிதானமான வார்த்தைகளைப் பேசுவான். தீங்குசெய்ய விரும்பான். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். தாமதமான குணத்தையுடையவன். சொன்னசொல் தப்பமாட்டான்.

---

1. சித்தசன் = மன்மதன்
சித்தசேனன் = முருகன்

11. மூலசூ டுடையனுகும் முன்கோபம் புளிப்பிலிச்சை
சீலவான் அன்னமீவன் சிவந்திடு மேனியாவன்
ஞாலமேல் ஒடிச்சல்தேகி நன்முக வடிவுகாணும்
ஆலம்போல் பகைவருக்கு அண்ணலும் கெருடனுவன்.

11. மூலச்சூடு உடையவன். முன்கோபமுள்ளவன். புளிப்பில் இச்சைகொண்டவன். குணசீலன். அன்னதானம் செய்வான். சிவப்பான சரீரமுடையவன். மெல்லிய தேகத்தை யுடையவன். முகத்தில் நல்ல களையுடையவன். பகைவருக்கு மனதில் திகிலை யுண்டுபண்ணுவான். அவர்கள், கருடனைக் கண்ட பாம்பு போலாவர்.

12. நினைத்தது முடிக்கவல்லான் நிருபர்க ளிஷ்டம்கொள்வன்
கனத்ததோர் புத்தியுள்ளான் காரிய சமர்த்தனுகும்
இனத்துக்கு மேலாய்வாழ்வன் ஈகைவான் சாந்தமுள்ளான்
வினையிலான் கல்வியுள்ளான் வெகுளிபோல் காட்டுவானும்.

12. எண்ணிய காரியத்தை முடிப்பான். எழுத்தாளர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். கௌரவமான புத்தியுள்ளவன். காரியங்களைச் செய்வதில் கெட்டிக்காரன். சொந்தக்காரர்களுள் மேன்மையாய் வாழ்வான். தருமிஷ்டன். சாந்தமுள்ளவன். பாபகாரியங்களைச் செய்யமாட்டான். நல்ல படிப்பாளி. கோபிப்பதுபோல் காட்டுவான்.

13. நல்லோர்க்கு நல்லோனுவன் நவிலுவான் சிலேடையாகப்
புல்லியர் நேசம்கொள்ளான் புதிதான வீடுசெய்வன்
சொல்லுமே நெறியுள்ளோனும் துன்மார்க்கம் கொஞ்ச
[முள்ளான்
அல்லலு மில்லானுகும் அநேகமாய்ச் செட்டுசெய்வன்.

13. நல்லவனுக்கு நல்லவனுவன். பல அர்த்தங்கள் கொள்ளும்படி பேசுவான். கயவர்களுடன் சேரமாட்டான். புதிதாக வீடுகட்டுவான். சொல்லும் தருமசாஸ்திரங்களை அனுஷ்டிப்பான். சிறிது கெட்ட நடத்தை யுள்ளவன். சிரமங்களே யில்லாதவன். அநேகமாய் வியாபாரம் செய்வான்.

14. கடன்கொளான் இடுக்கமில்லான் காதலி நேசமுள்ளான்
திடமான குடும்பியாவன் சென்றிடம் பெருமைபூண்பன்
அடமுடன் யூகைசாலி அநேகமா தரைச்சேர்வன்
படபட நடையுமாவன் பார்வதி கேட்டிடாயே.

14. கடன்படான். சிரமப்படான். பெண்டாட்டியிடம் பிரியம் கொண்டவன். திடமுள்ள குடும்பத்தைப் பெறுவான். போனவிடமெல்லாம் சிறப்படைவான். மேலான புத்திசாலி. அநேகம் ஸ்திரீகளைப் புணர்வான். படபட என்று நடப்பான். பார்வதி! கேட்பாயாக.

15. இன்னவன் துணைவர்தன்னை இயம்பவே அறுவராகும்
தன்னிலே ஆண்பால்காணுன் சதிருடன் பெண்பால்ஒன்று
அன்னவள் தீர்க்கமென்றேம் அதுவுமே அஞ்சாம்
[சென்மம்
உன்னத பராசர்சொல்ல உரைக்கிருர் அத்திரிதானும்.

15. இவனுடைய சகோதரர்கள் ஆறு பேர்கள். ஆண்பால் இல்லை. பெண்பால் ஒன்று தீர்க்கமாகும். அதுவும் ஐந்தாம் ஜன்மம். இதை மேலான பராசரர் சொல்ல, அத்திரி பதில் சொல்லலுற்ருர்.

16. ஏதுகாரணத்திலே இவனுக்குத் துணைவர்தோஷம்
ஓதுவீர் முனியேஎன்றுர் முடவனு மூன்றிலேற
தீதான அதற்குமுன்னில் சேய்கருங் கோளுங்கூட
மேதினில் துணைவர்தோஷம் விளம்பினே மிவனுக்கேதான்.

16. என்ன காரணத்தினுல் இவனுக்குச் சகோதரர் நஷ்டமாகின்றனர்? முனியே! சொல்லுங்கள் என்ருர். சனிபகவான் மூன்ருமிடத்திலிருக்க, சஷ்டாஷ்டமத்தில் செவ்வாயும் இராகுவும் தங்க, உலகினில் உடன் பிறந்தவரின் தோஷம் இவனுக்கு ஏற்படும் என்றேம்.

17. இதுவன்றி தாய்தந்தைக்கு இயம்பினேம் அவ்வாருக
அதுசேதி பின்புசொல்வேன் அறைகிறேம் மணத்தின்
[காலம்
சதமுட னீரொன்பானில் சாற்றினேம் சுபங்கள்தானும்
விதியினுல் மனைவிவாய்க்கும் விளம்பினேம் உள்ளூர்
[தன்னில்.

17. இதுவுமல்லாமல், தாய்தந்தையருக்கு அவ்வாருகச் சொன்னேம். அதன் விபரம் பின்னுல் சொல்வேன். கலியாணகாலத்தைக் கூறுவோம். ஒழுங்காகப் பதினெட்டாம் பிராயத்தில் சுபசோபனங்கள் ஏற்படும். விதிப் படி இவனுக்கு மனைவி ஏற்படுவாள். இவனுடைய சொந்த ஊரில்தானே.

18. தந்தையின் வர்க்கம்தன்னில் தானவள் வருவாளாகும்
அந்தவள் சேதிகேளாய் அழகுளாள் சிவந்தமேனி
நொந்திடும் பேரைக்காப்பள் நேமியி லதிர்ஷ்டசாலி
எந்தையே முகத்தில்குற்றம் இயம்பினே மிவளுக்கேதான்.

18. தகப்பனுரின் வமிசத்தில் இவள் ஏற்படுவாள். அவளுடைய விவரங்களைக் கேட்பாயாக. அழகுடையவள். சிவப்பான சரீரமுடைய வள். கஷ்டப்படுபவர்களை ஆதரிப்பாள். பூமியில் மிக்க அதிர்ஷ்டசாலி. இவளுக்கு முகத்தில் ஒரு மருவுண்டு. அதைச் சொன்னேம்.

19. வரனுக்கு நேயமுள்ளாள் மாதுநன் னடத்தையுள்ளாள்
திருமகள் வாசமுள்ளாள் தபசிகட் கன்புபூண்பள்
விரைவினில் கோபியாவள் வித்தகி வயதுதீர்க்கம்
அரனிட பாகம்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

19. புருஷனிடம் சிநேகமாயிருப்பாள். இவள் நடத்தை மிகவும் நல்லது. இலட்சுமிகடாக்ஷம் பொருந்தியவள். சன்னியாசிகளிடத்தில் அன்ப கொண்டவள். சீக்கிரம் கோபமடைவள். இவளுக்குத் தீர்க்கமான ஆயுள்காலம். பரமசிவனுடைய வாமபாகத்தைக்கொண்ட அம்பிகையே! கேட்பாயாக.

20. செயமுனி அதனைக்கேட்டு செப்புவார் பராசருக்கு
நயமுடன் தாரம்ஒன்று நாட்டினீர் காரணம்சொல்
தயவுடன் குடும்பத்தோனும் சந்திரர்க் கிரண்டில்நின்று
பயமிலா குருவும்பார்க்க பகர்ந்தனம் தாரம்ஒன்றே.

20. ஜயமுனி இதைக்கேட்டதும் பராசருக்குப் பின்வருமாறு பதில் அளிப்பார். நயமாகவே பெண்டாட்டி ஒன்று என்று ஸ்தாபித்தீர், என்ன காரணம் என்று சொல்லுங்கள். குடும்பஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் நின்று, அவனைக் குருவும் சப்தமப் பார்வையால் பார்த்தும் இருப்பதனால் தாரம் ஒன்றென்றே கூறினோம்.

21. அப்படிச் சொல்லொணாது ஆரலும்[1] புகரைப்பார்க்கச்
செப்பினேன் தாரம்ரெண்டு சேல்விழி சொல்லுகின்றாள்
மெய்ப்புடன் புந்திரெண்டில் மேவியே சுத்தத்தோன்லாபம்
ஒப்புட னிருப்பதாலும் உரைத்திட்டோம் தாரம்ஒன்றே.

21. அப்படிச் சொல்லுவது சரியல்ல. சனியும் சுக்கிரனைப் பத்தாம் பார்வையினால் பார்ப்பதனால் தாரம் இரண்டென்றே சொன்னேன். சேல் விழியாளாகிய பார்வதிதேவி கூறுகின்றாள். உண்மையாய்ப் புதன் இரண்டாமிடத்திலும், சுத்தத்தோன் (சந்திரன்) லாபஸ்தானத்திலு மிருப்பதனால் தாரம் ஒன்றென்றே கூறினோம்.

22. மனையவள் ஒன்றேயாகும் மங்கிலியம் இரண்டுஎன்றோம்
வினையான சேதி......................................யதாலே
கனமுட னொருமாதுக்குக் கட்டுவா னிருமாங்கலியம்
அனையவே விபரமாக அறைகுவோம் கேட்டிடாயே.

22. மனைவி ஒருத்தியேயாவள். மாங்கலியம் இரண்டு என்று சொன்னோம். இதற்குப் பாபச்செயல் என்னதென்று வினவ, கௌரவமுள்ள

---

1. சனி

ஒரு ஸ்திரீக்கு இரண்டு மங்கள சூத்திரங்களைக் கட்டுவான். அதன் விவரத்தைக் கூறுகிறோம். கேட்பாயாக.

23. முப்பது ஆண்டுதன்னில் மொழிந்திட்டோ மந்தசங்கை
செப்புவோம் விபரமாகச் சனிதசை அந்தக்காலம்
மெய்ப்புடன் புதன்பொசிப்பில் வித்தகன் கிரகம்தன்னில்
தப்பிதம் கள்ளராலே சார்ந்திடும் அந்தசங்கை.

23. இவனது முப்பதாம்பிராயத்தில் அத்தகைய சமுசயம் ஏற்படும். அதன் விவரத்தைக் கூறுவோம். சனிதசையின் கடைசியில் புதன் புக்தியில் இவனுடைய வீட்டில் திருட்டுப் பயல்களால் அந்த சமுசயமான சந்தேகம் வந்து சேரும்.

24. இதுவன்றி தாரம்ஒன்றே இயம்புவோம் புத்திரபாகம்
விதியினால் மதலைகாணுன் மேவினும் தோஷமாகும்
அதுகுற்றம் சொல்லுமென்ன ஆரலும் ராகுமஞ்சில்
சதமுட னிருப்பதாலே சாற்றுவோம் குழவியீனம்.

24. இதுவுமில்லாமல் தாரம் ஒன்றென்றே சொல்லுவோம். விதிப்படி புத்திரபாக்கியமில்லை. ஏற்பட்டாலும் தோஷம் அடையும். அஃது என்ன குற்றத்தினால் ஏற்படும் என்று சொல்லும் என்று கேட்க, சனி மூன்றிலும், குரு ஐந்திலும், பார்வையில் இருப்பதாலே புத்திரபாக்கியம் இல்லை என்று சொல்லுவோம்.

25. பத்தினுக் குடையோன்மூன்றில் பாலர்தா னத்தைப் [பார்க்க
வித்தகன் முன்னூழ்த்தோஷ மேவிற்று சுதர்களுக்குக்
குற்றத்தைச் சொல்லுமென்ன கூறுவார் பராசர்தானும்
அத்தியைப் பெற்றமாதே அருளுவோம் கேட்டிடாயே.

25. பத்துக்குடைய சனி மூன்றுமிடத்திலிருந்து புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் வீட்டைப் பார்ப்பதனால் ஜாதகனுடைய புத்திரர்களுக்குப் பண்டைவினை சேர்ந்தது. இதன் குற்றம் என்னவென்று கேட்க, பராசரர் சொல்லலுற்றார். முருகனைப்பெற்ற மாதே! எங்கள் அருள் மொழிகளைக் கேட்பாயாக.

26. சாதகன் முன்சென்மத்தைச் சாற்றுவோம் தணிகை [தெற்கில்
நீதியாய்ப் பேரூர்தன்னில் நிகர்அக்கினி குலத்திலேதான்
கோதிலா உதித்தானென்றோம் கூறுவோம் பாக்கியவானாய்
மேதினி அதிகமுண்டாய் வித்தகன் வாழுநாளில்,

26. ஜாதகனுடைய முன் ஜன்மத்தை விவரிப்போம். திருத்தணிகை க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் பெரிய பட்டணத்தில் வன்னியர் குலத்தில் உதித்தான் என்றோம். பாக்கியவானாயிருப்பான். பூமி அதிகமுண்டாகும். இவன் வாழ்ந்து வரும் நாளில்,

27. அந்நகர் நதியின்பக்கல் அணுகிய அரசின்கீழே
தந்தியும் [1]நாகம்நிற்கும் தானவர் வாசம்கொள்வள்
மந்திரம் ஓதும்வேத மறையவர் பூசைசெய்வார்
இந்ததோ ரிடத்திலேதான் இவனுமே யேதுசெய்தான்.

27. அந்த ஊரின் ஆற்றங்கரையிலுள்ள அரசமரத்தின் கீழே நாகப்பாம்பு நிற்கும். எல்லாருடனும் அதன் கீழே உட்காருவான். அதை மந்திரங்களைச் சொல்லும் வேதியர் பூசை செய்வர். இதேயிடத்திலே இவனும் என்ன செய்தான் தெரியுமா? உபகாரணம் செய்தான்.

28. விதவையம் மரத்தின்கீழே வித்தகன் போகம்துய்த்தான்
அதனாலே கருவுதங்கி யனேகமா யவிழமீய
சதியினால் கருவுநீங்கி சக்தியு மாண்டாளென்றோம்
மதிநுத லாள்தன்தோஷம் வந்திற்று இவனுக்கம்மா.

28. அம்மரத்தின் கீழே இவன் ஒரு விதவையான ஸ்திரீயுடன் போகமடைந்தான். அதனாலே கர்ப்பம் ஏற்பட்டு, மருந்து கொடுத்து அந்தக் கர்ப்பத்தை நீக்க, அம்மாதும் உயிர் துறந்தாள் என்றோம். அவளுடைய தோஷம் இவனை வந்தடைந்தது.

29. இதுவன்றி இன்னமொன்று இயம்புவோம் கேளும்தாயே
பதியினில் மகுடம்[2]கொண்டு பருகிற்று உரகம்தானும்
வதிபனும் கழியினாலே வாட்டினா னிவனேயென்றோம்
விதியினால் மறலிபக்கல் மேவிற்று அந்தநாகம்.

29 இதுவுமில்லாமல் இன்னமொன்று சொல்லுவோம். தாயே! கேளும். வீட்டில் பாம்பு படமெடுத்துக்கொண்டு காற்றைக் குடித்துக்கொண்டிருந்த போது இவன் அதனைக் கம்பாலடித்தான் என்றோம். விதியின் வசமாக அந்தப்பாம்பு உயிர் துறந்தது.

30. அதுஒரு தோஷமாச்சு ஆதலால் விதவைமாது
எதுசாதி சொல்லுமென்ன இவளுமே வடுகிஎன்றோம்
இருவித தோஷத்தாலே இவனுக்கு அந்தியத்தில்
மதலைகள் குற்றமுண்டாய் வருஞ்செல்வம் குறைச்சலாகி,

---

1. பாம்பு
2. படம்

30. அதுவும் ஒரு தோஷம். ஆதலால் விதவையானவள் எந்த ஜாதி என்று வினவ, அவளும் வடுக ஜாதியினள் என்று கூறினோம். இந்த இரண்டு தோஷங்களின் காரணமாக இவனுடைய அந்தியகாலத்தில் புத்திரதோஷம் ஏற்பட்டது. ஏற்படும் செல்வமும் குறைந்தது.

31. பலவித தலங்கள்சென்று பாலகன் சேதுபுக்கு
நலமுள தீர்த்தம்தோய்ந்து ராமலிங் கத்தைப்போற்றி
குலவிய அரங்கம்[1]சென்று குமரனும் பேதியாலே
நலமிலா மறவிபக்கல் நாயகன் சேர்ந்தானென்றோம்.

31. பலவிதமான ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று கடைசியில் சேதுஸ்னானம் செய்து ராமலிங்கத்தைப் பூசை வழிபாடுகள் செய்து, பின்பு திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) சென்று சேவிக்க, இவனும் பேதி அவஸ்தைக்கு உள்ளாகி, எமலோகம் சென்றான் (இறந்தான்) என்றோம்.

32. பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தவ னிவனேயென்றோம்
அருமறை முனிவர்கூற அம்பிகை கேட்கலுற்றாள்
திருமகள் முன்செனமத்தில் தீயின்தன் குலமுதித்துப்
பெருமையாய்க் கங்கைசேயாய்ப் பிறந்த காரணங்
[களென்ன.

32. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுத் திரும்பவும் பிறந்தவன் இந்த ஜாதகனேயாவன். இவ்விதம் மாமுனி சொல்ல, பார்வதிதேவி கேட்கலுற்றாள். ஜாதகன் போனஜன்மத்தில் வன்னியர்குலத்தில் பிறந்து, பெருமையுடைய வேளாளர் குலத்தில் பிறந்த காரணங்கள் யாவை என்று கேட்க,

33. முன்செனமம் கங்கைசேது முயன்றதா லிச்செனமத்தில்
அன்னவன் கங்கைசேயாய் அணுகினா னிவனேயென்றோம்
இந்ததோர் செனமம்தன்னில் இலகிடும் மதலைதோஷம்
அந்ததோர் குற்றம்தீர அறைகிறோம் சாந்திதானே.

33. போன ஜன்மத்தில் சேதுஸ்னானம் செய்து வந்ததனால் இந்த ஜன்மத்தில் அவனே வேளாளர் குலத்தில் பிறந்தான் என்றோம். இந்த ஜன்மத்தில் ஏற்பட்டது புத்திரதோஷம். அது நீங்குவதற்குண்டான சாந்தி (பரிகாரம்) இன்னதென்று சொல்லுவோம்.

34. பாலகன் மனைவியோடு பகருவோம் வள்ளூர்சென்று
சீலமாய்த் தசமாசந்தான் செழிப்புள்ள அமாவாசை
கோலமாய்ச் சென்றுமேதான் கோதண்ட பாணிபாதம்
ஏலவே அர்ச்சித்தேத்தி இவனுமே உள்ளூர்மீண்டு,

1. ஸ்ரீரங்கம்

34. இவன் தன் மனைவியுடன் திருவள்ளூர் சென்று மேன்மையான பத்தாவது மாசமான தை மாசத்தில் அமாவாசையன்று வீரராகவப்பெருமாளான கோதண்டபாணியின் பாதத்தில் அர்ச்சனைகள் செய்து போற்றித் திரும்பவும் தன்னூருக்கு வந்து,

35. மண்டலம் அரசுசுற்றி வந்திடு வானேயாகில்
மூண்டதோர் வினைகள்நீங்கி எய்திடும் மதலைதானும்
துடை[1]மென்று செய்யாறுகில் தோன்றாது மதலைஎன்றோம்
கண்டிதம் செய்வானாகில் கழறுவோம் புத்திரர்தானே.

35. ஒரு மண்டலகாலம் (42 நாள்கள்) அரசப்பிரதக்ஷிணம் செய்திடுவானேயானால் முன்னைவினைகள் நீங்கிப்போம். பிள்ளையும் பிறக்கும். அரசப்பிரதக்ஷிணம் செய்யாமற்போனால் பிள்ளை பிறக்காது என்றோம். அதனை அறிந்து ஒழுங்காக நடந்தானேயாகில் ஏற்படும் புத்திரபாக்கியத்தைக் கூறுவோம்.

36. ஆணது ஒன்றேதீர்க்கம் அம்பிகை யிரண்டுஆகும்
காணவே மூன்றுதீர்க்கம் கழறுவோம் மாதுர்சேதி
நாணிய மனத்தாளாகும் நாயகி செவந்தமேனி
கோணாத மனத்தளாகும் கோபமும் கொஞ்சமுள்ளாள்.

36. ஓர் ஆண் குழந்தை நிச்சயம். பெண்கள் இரண்டு உண்டு. இம்மூன்றும் தீர்க்கமாகும். இனி மாதாவின் செய்தி விவரங்களைக் கூறுவோம். சிறிது லச்சைப்படுவாள். சிவப்பு நிறம்கொண்டவள். ஒழுங்கான புத்தியுடையவள். சிறிது கோபமுடையவள்.

37. பந்துவுக் கினியளாகும் பகையிலாள் அன்னமீவள்
சொன்னசொல் தடுக்களாகும் சோம்பிப்பின் காரியத்தில்
அன்னவ ளதிர்ஷ்டசாலி ஆளனுக் கினியளாகும்
இன்னவள் துணைவர்தன்னை இயம்புவோம் கேளும்தாயே.

37. சொந்தக்காரர்கள் மெச்சும்படி நடப்பாள். யாவரிடத்தும் விரோதமில்லாதவள். அன்னதானம் செய்வாள். சொன்னசொல் தவறமாட்டாள். காரியம் செய்யும்போது, ஆரம்பத்தில் சுறுசுறுப்பும், பிறகு சோம்பலும் உள்ளவள். அவள் நல்ல அதிர்ஷ்டசாலி. புருஷனுக்குப் பிரியமாய் நடப்பாள். இவளுடைய உடன்பிறந்தோரைப்பற்றிப் பேசுவோம். தாயே! கேளும்.

---

1. அரசமரம்

38\. ஆணது ஒன்றேதீர்க்கம் அதுவன்றி வேறேயில்லை
காணவே யவன்தன்சேதி கழறுவோ மிருநிறத்தன்
பூணுவோன் யூகைசாலி பூமியில் கிருஷிசெய்வன்
நாணது[1] இரண்டுசெய்வன் கங்கையு முதலாள்நஷ்டம்.

38\. ஆண் சகோதரம் ஒன்றுதான். அது தீர்க்கம். அதைத் தவிர வேறில்லை பார்க்கும்போது. அவனுடைய விவரத்தைக் கூறுவோம். பொது நிறமுள்ளவன். ஆபரணாதிகளைப் பூணுவான். நல்ல மதியூகி. பூமியில் கிருஷித் தொழிலைச் செய்வான். இரண்டு மாங்கலியதாரணம் செய்வான். முதல் பெண்டாட்டி இறந்து விடுவாள்.

39\. மருமனை வருவாளாகும் வரைகிறோம் புத்திரபாகம்
பெருமையா யாண்பாலிரண்டு பெண்ணது அவ்வாறுகும்
திறமுட னுள்ளூர்கீழ்பால் செப்புவோ மாமனில்லம்
வரைகிறோம் மாதுர்பூர்வம் மங்கையே கேட்டிடாயே.

39\. இரண்டாவது பெண்டாட்டி ஏற்படுவாள். புத்திரபாவத்தைக் கூறுவோம். பெருமையாய் இரண்டு ஆணும், இரண்டு பெண்ணும் உண்டு. தன்னூருக்குக் கிழக்கே இவனுடைய மாமாவின் வீடு. இம்மாதின் பூர்வ ஜன்மத்தைப்பற்றிக் கூறுகிறோம். தாயே! கேட்பாயாக.

40\. முன்னவள் முன்சென்மத்தை இயம்புவோ மருணைநாட்டில்
வன்னிய மரபில்தோன்றி மைந்தரு முள்ளளாகி
பொன்னொடு பணிபெற்று புகழ்ச்சியாய் வாழ்ந்துபின்பு
தன்னிலே அண்ணலுக்குத் தானவள் பணிகள்செய்து,

40\. முதல் பெண்டாட்டியின் முந்திய ஜன்மத்தைக் கூறுவோம். திருவருணைப் பிரதேசத்தில் வன்னியகுலத்தில் பிறந்து பிள்ளைகளும் ஏற்பட்டுப் பொன்னுபரணங்களைப்பெற்று கீர்த்தியுடன் வாழ்ந்து பின்பு, கடவுள் வழிபாடுகளைச் செய்து,

41\. வருவோர்க்கு அன்னமீந்து வண்மையாய்த் தண்ணீர்ப்பந்தல்
பெருமையாய் வைத்துப்பின்பு பிறபல தலங்கள்சென்று
சிறுமையு மில்லாளாகிச் சென்றனள் மறலிபக்கல்
பிரமனால் வரியப்பட்டு உரைந்தவ ளிவளேயென்றோம்.

41\. விருந்தினருக்கு அன்னமளித்து வளப்பம்பொருந்திய தண்ணீர்ப் பந்தல்களைப் பெருமையுடன் ஏற்படுத்தி, பின்பு பற்பல க்ஷேத்திரங்களுக்குப் போய் மனத்தாங்கலில்லாமல் எமலோகம் சென்றாள். திரும்பவும் பிரம்மாவின் சிருஷ்டியினால் உதித்தவள் இவள்தான் என்றோம்.

---

1. மாங்கலியங்கோத்தசாடு

42. அக்கினி குலமுதித்து அவளுமே இச்சென்மத்தில்
இக்குல முதித்ததென்ன இயம்புவீர் முனியேஎன்றாள்
முக்கியமாய்த் தாகப்பந்தல் முயற்சியாய் வைத்தலாலும்
தக்கவே தலங்கள்சென்ற தவத்தினு லுதித்தாளென்றோம்.

42. வன்னியர் குலத்திலுதித்த அவளே இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் உதித்ததன்காரணமென்ன, சொல்லுங்கள். முனிவரே! என்று பார்வதி கேட்க, முக்கியமாய்த் தண்ணீர்ப்பந்தல் சிரத்தையாய் வைத்ததனுலும், பொருத்தமாகவே ஸ்தலயாத்திரைகள் சென்று தவங்கிடந்ததினுலும் உதித்தாள் என்று கூறுவோம்.

43. இவளுட பின்சென்மத்தில் இயம்புவோம் தணிகை [மேல்பால்
அவனியில் பேரூர்தன்னில் அவளுமே இக்குலத்தில்
பவமுள உதிப்பாளென்றோம் பாலர்பாக் கியமுண்டாகி
நவனியில் வாழ்வாளாகும் நாயகி கேட்டிடாயே.

43. இவளுடைய மறு ஜன்மத்தைக் கூறுவோம். திருத்தணிகையின் மேற்குப்பக்கத்தில் உள்ள பேரூரில் அவளே இக்குலத்தில் பவவினையின் வசமாய்ப் பிறப்பாள் என்றோம். புத்திரபாக்கியமுண்டாகிப் பூமியில் வாழ்ந்து வருவாள். நாயகியே! கேட்பாயாக.

44. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் தவளை[1] [உத்திரம்
எந்தையே கோகுலத்தில் இவனுமே உதித்தானென்றோம்
முந்திய பூமிகோவு மேஷங்க ளுள்ளானுகி
சந்ததம் வந்துமெச்ச சகலர்க்கு நல்லோனுகி,

44. தகப்பனின் முன் ஜன்மத்தைச் சொல்லுவோம். சுக்கிலபட்சம் உத்திரநட்சத்திரத்தில் கோகுலத்திலே இவனுமே பிறந்தானென்றோம். பழயபூமியும், ஆடுமாடுகளையுமுடையவனுகி எப்பொழுதும் யாவரும் மெச்சும் நல்லவனுகி,

45. வறுமைக ளில்லானுகி வாழ்கிற நாளிலேதான்
அரைகிறே மூழிதானும் ஆதியில் அவனுக்கேதான்
ஆவின்பால் தந்துவந்தான் தாழ்வாகச் சில(து)வேளை
தராமலே இல்லையென்றான் ஊழது வந்ததென்றோம்.

45. தரித்திரமே இல்லாமல் வாழ்கின்ற நாள்களில் இவனுக்கேற்பட்ட ஊழ்வினையைக் கூறுவோம். ஆதிகாலத்தில் சுவாமிக்குப் பால்

1. சுக்கிலபட்சம்

அபிஷேகம் செய்யப் பசுவின் பாலைத் தந்துகொண்டே வந்தான். கீழ்நோக்கான புத்தி ஏற்பட்டுச் சில நாள்கள் தராமலே பால் இல்லையென்று சொன்னான். அதிலிருந்து இவனுக்குச் சனி பிடித்தது.

46. பால்தராக் குற்றமென்ன பகருவீர் முனியேயென்றாள்
ஞாலமேல் துணைவர்தோஷம் நற்புத்திர ரதிகமில்லான்
கோலமாய்ப் பூமிகொஞ்சம் கூறினே மிதுவேயன்றி
சாலவே ஒன்றுமில்லை சத்தியே கேட்டிடாயே.

46. பால்தராத குற்றத்தை விவரமாய்ச் சொல்லவேண்டுமென்று பார்வதி முனிவரைக் கேட்க, பூலோக வாழ்வில் சகோதரதோஷமும், நல்ல புத்திரர்கள் பிறக்காததும், அழகிய பூஸ்திதி கொஞ்சம்தான் ஏற்படுமென்றும் கூறினோம். இதைத் தவிர ஒன்றுமேயில்லை. சக்திதேவியே! கேட்பாயாக.

47. இன்னவன் பின்சென்மத்தை இயம்புவோ மரங்கம்தன்னில்
தன்னவன் பிரம்மசேயாய்த் தானவ னுதிப்பானென்றோம்
அன்னவன் அரசர்முல அவனுமே சீவிப்பானும்
கன்னென மொழியையொக்கும் காதலி புகன்றிட்டோமே.

47. இவனுடைய மறுஜன்மத்தைக் கூறுவோம். ஸ்ரீரங்கம்தன்னில் அவன் பிராமணக்குழந்தையாயவதரிப்பான். அவன் அரசாங்கத்தில் உத்தியோகம் செய்து ஜீவிப்பான். கனிந்துருகும்படியான வாசுதேவி! சொன்னோம். இவனுக்கு இன்சொல் கூறும் மனைவியும் ஏற்பட்டாள்.

48. இவர்கள்தம் காலம்தன்னை இயம்புவோம் முப்பான் [மூன்றில்
அவனியில் கன்னி[1]மாதம் அந்தகன்[2] தசையிலேதான்
பவமுள சிகிபொசிப்பில் பகருவோம் கெண்டம்தானும்
தபசியை ஆதரிக்கும் தயாபரி மேலுங்கேளே.

48. இவர்கள்தம் காலத்தைக் கூறுவோம். முப்பத்துமூன்றும் பிராயத்தில் புரட்டாசி மாதத்தில் சனிதசையில் கேதுபுத்தியில் கண்டம் ஏற்படும். தபசிகளைக் காப்பாற்றும் தேவியே! மேலும் கேட்பாயாக.

49. மாதுரு மரணகாலம் வரைகிறோம் நாற்பதாண்டில்
மேதினி லானிமாதம் சவுரி[3]யின் தசையிலேதான்
கோதிலா ராகுபுத்தி கூடிய நாளிலேதான்
மேதினில் மரணமென்றோம் வித்தகி கேட்டிடாயே.

---

1. புரட்டாசி
2. சனி
3. சனி

49. மாதாவின் மரணகாலத்தைக் கூறுவோம். நாற்பதாவது வயதில் ஆனி மாசத்தில் சனிதசையில் இராகுபுத்தி கூடிய தினத்தில் உலகினில் மரணமடைவாள் என்றேம். வித்தகி! கேட்பாயாக.

50. சாதகன் மரணகாலம் சாற்றுவோம் அறுபானுலில்
மேதினில் கன்னிமாதம் வளர்பிறை தசமிதன்னில்
கோதிலா பித்தநோயால் கூறுவோம் மரணம்தானும்
சூதிலா பின்சென்மத்தைச் சொல்லுவோ மேலுங்கேளே.

50. ஜாதகனுடைய மரணகாலத்தைக் கூறுவோம். அறுபதாவது வயதில் புரட்டாசி மாசத்தில் சுக்லபட்சம் தசமிதிதியன்று பித்தரோகத்தினுல் மரணம் ஏற்படும். குற்றமற்ற மறுஜன்மத்தைச் சொல்லுவோம். மேலுங் கேட்பாயாக.

51. மறுசென்மம் காஞ்சிதன்னில் வைசிய குலமுதித்து
பெருமையாய்ச் செட்டுச்செய்து பிரபல கீர்த்தியுண்டாய்த்
திருமகள் வாசமுண்டாய்ச் செல்வனும் வாழ்வானுகும்
அறுமுகன் தன்னைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

51. அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்தில் வைசியகுலத்திலுதிப்பான். பெருமையுடன் வியாபாரம் செய்து பிரபலமான கீர்த்தியைப் பெற்று லட்சுமிகடாக்ஷம்பெற்றுத் தனிகனுய் வாழ்ந்து வருவான். ஆறுமுகனைப் பெற்றெடுத்த அம்பிகையே! கேட்பாயாக.

52. இன்னவன் யோகச்செய்கை இயம்புவோம் பூமிசேர்ப்பன்
அன்னவன் வறுமையில்லான் அவன்சுகி பொசிப்பானுகும்
தன்னிலே செட்டுச்செய்வன் தனமுளான் காலிவிருத்தி
உன்னித பந்துமேலாய் உத்தமன் வாழ்வானுமே.

52. இவனுடைய யோகபாவத்தைக் கூறுவோம். நிலத்தை விருத்தி செய்வான். தரித்திரஹிம்சை யில்லாதவன். சுகமாய்ச் சாப்பிடுவான். தனியே வியாபாரம் செய்வான். பணக்காரன். மாடுகளை விருத்தி செய்வான். உற்றார் உறவினரைக் காட்டிலும் மேன்மையாக இவ்வுத்தமன் வாழ்வானுகும்.

53. பலருக்கும் உதவிசெய்வன் பாவையும் வந்தபின்பு
நலமுள யோகம்வாய்க்கும் நாட்டினில் கீர்த்தியேற்பன்
பலபல விதங்கள்லாபம் பகருவோம் ஏர்ப்பெருக்கம்
தலமது புதிதாய்ச்செய்வன் சத்தியே கேட்டிடாயே.

53. பலபேர்களுக்கு ஒத்தாசை செய்வான். பெண்டாட்டி ஏற்பட்ட பின்பு நன்மைபொருந்திய யோகபாவங்கள் ஏற்படும். உலகில் கீர்த்தியைப்

பெறுவான். பற்பல விதங்களில் லாபமடைவான். ஏர்கள் விருத்தியாகும். புதிய வீடுவாசல் கட்டுவான். சக்திதேவியே! கேட்பாயாக.

54. எந்தக்கா லத்திலேதான் இவனுக்கு யோகம் வாய்க்கும்
சொந்தமாய் வீடுசெய்வன் சொல்லுவீர் முனியேயென்ன
முந்திய பதினேழாண்டின் மேலேதான் யோகம்வாய்க்கும்
சந்ததம் அதன்மேல்கீர்த்தி தானது பெருகுமென்றோம்.

54. எந்தக் காலத்திலேதான் இவனுக்கு யோகம் ஏற்படும். சொந்தமாக வீடுகட்டிக் கொள்ளுவான். சொல்லுங்கள், முனிவரே! என்று கேட்க, பதினேழாவது பிராயத்திற்குமேல் பிரமாதமான யோகம் ஏற்படும். அதற்கப்புறம் எப்பொழுதும் கீர்த்தி தானே பெருக்கமடையும்.

55. காவலன் செனிக்குங்காலம் கரும்பாம்பு தசையிருப்பு
மேவிய ஆண்டுபத்தும் விளங்கிடும் திங்களவ்வாறு
தாவிய துணைவர்விருத்தி சல்தியில் நஷ்டமென்றோம்
ஆவலா யில்லம்பாதி அணுகிடு மென்றுசொன்னோம்.

55. இவன் ஜன்மகாலத்தில் குருதசையின் பாக்கி, பத்து வருஷம், பத்து மாசம். சகோதர விருத்தி ஏற்படும். சீக்கிரம் நஷ்டமடையும் என்றோம். ஆசை மேலிட்ட இவனுக்கு அந்தப் பாதி சொத்தும் வந்து சேரும் என்று சொன்னோம்.

56. தாய்தந்தை ரோகம்வாய்த்துச் சலுதியில் நிவர்த்தியாகும்
மாமன்தன் மனைவிபீடை மருமனை வருகுமென்றோம்
தீமைகள் வந்துநீங்கும் சுலபமாய்ப் பூமிசேரும்
காமனை யெரித்தோன்தேவி கழறுவோம் பின்பாகத்தில்.

56. தாய் தந்தையருக்கு நோய் ஏற்பட்டுச் சீக்கிரம் நிவிர்த்தியாகும். மாமனுடைய மனைவிக்கு ஏற்பட்ட பீடை மருமகனுக்கும் வந்தெய்தும். கெடுதல்கள் ஏற்பட்டு நிவிர்த்தியாகும். சுலபமாய்ப் பூமி சேரும். மன்மதனை எரித்த பரமசிவனின் தேவியாகிய பார்வதியே! மற்ற விவரங்கள் பின் பாகத்தில் கூறுவோம்.

ஜாதகம் 17

1. திங்கள்மீனம் பணிசியம் சேயும்புகரும் தேளதனில்
பங்கும்புதன்பான் கோலதனில் பொன்னும் சிகியும்
[சாடிதனில்
பொங்குமேடம் தானுதிப்பப் புகல்வீர்பலனைப் பெரு
முனியே
நங்கைக்கரசே ஆண்சென்மம் நல்கும்அன்னை இல்லமுமே.

சந்திரன்	லக்கினம்		
குரு கேது	இராசி		
	சக்கரம்		இராகு
	செவ்வாய் சுக்கிரன்	புதன் சூரியன் சனி	

1. சந்திரன் மீனத்திலும், இராகு சிம்மத்திலும், செவ்வாயும் சுக்கிரனும் விருச்சிகத்திலும், சனியும் புதனும் சூரியனும் துலாத்திலும், குருவும் கேதுவும் கும்பத்திலும் தங்கி நிற்கும் மேஷலக்ன ஜாதகனுக்குப் பலன்களைச் சொல்லுவீர், முனிவரே! என்று பார்வதி கேட்க, இவன் ஆண்மகன், தாய் வீட்டின் விவரம் கூறுவோம். (14, 18, 38 பாசுரங்களையும் பார்க்க.)

2. மேவும்குடகு வாசலது வடதென்வீதி பேரூரா
மதுவும்வடகீழ் நதியாகும் தந்திமாரிமேல்பாலில்
காவுமுண்டு சேஷ்டனுமாய்க் கலப்பான்வீர சைவகுலம்
யாவும்பலன்கள் பின்னூலில் உரைப்போ மின்னூல்
[உத்தமியே.

2. தெற்கு வடக்கு வீதியில் மேற்கு வாசல்கொண்ட வீடு. அதுவும் பெரியபட்டணத்திலுள்ளது. வடகிழக்காய் நதி ஓடும். விநாயகர், அம்மன் இவர்கள் கோவில் மேற்குப்பக்கத்திலுள்ளது. தோட்டமுமுண்டு மூத்த குமாரனாய் வீரசைவகுலத்தில் உதிப்பான். இவனைப்பற்றிய எல்லாப் பலன்களையும் இந்நூலில் கூறுவோம். உத்தமியே!

3. உத்தமனத்தன் மாநிறத்தான் உயர்வார்செட்டுத் தான்
[செய்வான்
சித்தம்கரப்பு மில்லான் சிறுத்தோர்க்குதவி தான்செய்வன்
சுத்தமானவாரிது துதிசெய்வான் துணைஆண் இரண்டாகும்
சத்திமார்கள் செல்வமுண்டு செய்தியைப்பின்னால் தானு
[ரைப்போம்.

3. யுக்தமான மனமுடையவன். மானிறங்கொண்டவன். உயர்வான வியாபாரம் செய்வான். மனதில் கல்மஷமில்லாதவன். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான். சுத்தமுள்ள பெரியோரைப் போற்றுவான். இரண்டு சகோதரர்கள் உண்டு. சகோதரிகள் பாக்கியமுண்டு. இவர்களுடைய செய்தி விவரங்களைப் பின்னால் கூறுவோம்.

4. உரைப்போம் தூசு வாணிபமும்
உணர்வாய்ச் செய்வன் உறுதியிலான்
தரையும் சேர்ப்பன் சிவபூசை
தானும் செய்வன் வறுமையிலான்
பரைபளுகளும் பால் பாக்கியம்
பண்போர்க் கன்னம் தானீவன்
நெறியைக் காப்பன் நாபிவியன்
நினைத்த படியே தான்முடிப்பன்.

4. பட்டுச்சேலை வியாபாரத்தை விஷயம் தெரிந்துசெய்வான் என்று சொல்லுவோம். மனத்திடமில்லாதவன் பூஸ்திதியும் சேர்ப்பான். சிவனைப் பூஜை செய்வான். தரித்திரமில்லாதவன். தேவியை (பராசக்தியை)ப் பூஜை செய்வான். பால்பாக்கியம் கொண்டவன். குடியானவர்க்கன்னம் கொடுப்பான். தருமத்தைக் காப்பாற்றுவான். விஷ்ணு அருளியபடியே காரியங்களைச் செய்து முடிப்பான்.

5. பன்னிப் பகர்வன் கரம்தன்னில் பத்மரேகை பதிந்திடுமே
பின்னமிலாதான் தரளவிலை பேசும்கல்வி புகலுசொல்லான்
பொன்னுங்கடனே கொண்டிடுவன் பின்பால் நிவர்த்தி
[தான்செய்வன்
முன்கோபத்தன் உடன்சாந்தம் மேலியார்க்கிணக்கம்
[தான்செய்யான்.

5. இன்பமாகப் பேச வல்லவன். கையில் பத்மரேகை யுடையவன். தொந்தரவில்லாதவன். முத்துவியாபார விஷயங்களைச் சொல்லுவான். தங்கம் முதலிய வஸ்துக்களைக் கடனாக வாங்குவான். பிறகு கடனைக் கொடுத்துவிடுவான். முதலில் முன்கோபமுடையவன். உடனே சாந்தத்தை யடைவன். ஸ்திரீலோலனாயிருப்பான்.

6. இத்தரை[1] யுடையானுக்கு இவனுமே செனிப்பானாகும்
சித்தசன் குணத்தைச்சொல்வேன் சீலனு மாஞ்சிவப்பன்
புத்தியில் பெரியோனவன் பொய்யது வழுத்தானெஞ்சம்
கோபத்தை வெளிக்காட்டாதான் குணமது நல்லதாகும்.

---

1. இத்தனை

6. இவ்வளவு குணங்களையுடைய தந்தைக்கு இவனுமே பிள்ளையாய்ப் பிறப்பான். இவனுடைய குணாதிசயங்களைக் கூறுவேன். நல்ல சீலமுள்ளவன். சிவப்பு நிறமுள்ளவன். பெரிய புத்தியையுடையோன். பொய்சொல்லுவதைப் பொறுக்காத மனமுடையவன். தன்னுடைய கோபத்தைப் பிறருக்குத் தெரியும்படி செய்யான். நல்ல குணவானவன்.

7. கல்விமான் யூகைசாலி கரமதில் கோதுமைரேகை[1]
சல்லியம் கொள்ளானாகும் தரணியில் செட்டுச்செய்வன்
புல்லியர் நேசம்செய்யான் புராதனம் விருத்திசெய்வன்
எல்லைகள் திரியானாகும் இரக்கமா மனத்தனாமே.

7. படித்தவன். ஊகமுள்ள புத்திசாலி. கையில் தானிய ரேகையை (நெல்முதலிய தானியசமபத்துக்களைக் குறிக்கும் கைவரையை) யுடையவன். கடன் வாங்கமாட்டான். பூமியில் வியாபாரம் செய்வான். கீழ்மக்களுடைய சிநேகம் கொள்ளான். பூர்விகச்சொத்துக்களை விருத்திசெய்வான். கண்ட விடங்களில் அலைந்து திரியமாட்டான். இரக்கமுள்ள மனதையுடையவன்.

8. பலவித வணிபம்செய்வன் பால்தயிர் பிரியனாகும்
சொலுமொழி காப்பானாகும் சுந்தர முடையனென்றோம்
கலைத்தொழில் தன்னால்லாபம் கலந்திடும் பாலனுக்கு
மலையிறை யாகத்தோளை மறவாதான் என்றுசொல்வோம்.

8. பலவகையான வியாபாரம் செய்வான். பால், தயிர் இவைகளில் இஷ்டமுடையவன். சொல்லும்வார்த்தைப்படி நடப்பான். நல்ல அழகு வாய்ந்தவன் என்றோம். கலைத்தொழில்களால் லாபமடைவான். லட்சுமி தேவியை மறவாதான் என்று சொல்லுவோம்.

9. ரோமங்க ளதிகமில்லான் நுவலுப தேசங்கொள்வன்
சேமமாய்க் குடும்பியாவன் சேர்ந்திடம் பெருமையேற்பன்
தாமத குணத்தானாகும் தந்தைக்குத் தாழ்வுறாதான்
தீமையை மனதில்வையான் செலவுகள் செய்யானாகும்.

9. தலைமயிர் அதிகமில்லாதவன். நல்ல உபதேசமொழிகளை ஏற்பான். க்ஷேமத்தையுடைய குடும்பியாவன். போனவிடங்களில் பெருமையையடைவான். தாமதமான குணமுள்ளவன். தந்தைக்குத் தாழ்மைவரும்படி நடக்கமாட்டான். கெடுதியை மனதில் எண்ணமாட்டான். கண்டபடி பணத்தைச் செலவழிக்கமாட்டான்.

---

1. தானிய ரேகை

10. தன்துணை ஆண்பால்ரெண்டு தையலர் அவ்வாறுதீர்க்கம்
பின்துணை ஆகச்சொல்வோம் பேசுவோ மொருவன்சேதி
அன்னியர் மதிக்கவாழ்வன் அழகுளான் தொழிலும்
[செய்வன்
கன்னிகை ஒன்றேயாகும் காளைகள் காணுமே.

10. இவனுடைய சகோதரர் இரண்டுபேர்கள். சகோதரிகளும் இருவராவர். இவர்கள் இவனுடைய தங்கைகள். ஒருவனுடைய விவரங்களைக் கூறுவோம். பிறர் கௌரவிக்கும்படி வாழ்வான். நல்ல அழகுடையவன். தொழிலும் செய்வான். இவனுக்கு ஒரே ஒரு பெண்குழந்தை யுண்டு. ஆண் குழந்தைகள் இல்லை.

11. மத்தியில் மரணமெய்தும் வரைகிறேம் பின்பால்சேதி
வித்தகன் பின்னேன்சேதி விளம்புவோம் சிவந்தமெய்யன்
நத்திேனர்க் குதவிசெய்வன் நலனிலார்க்கு நல்லனுவன்
எத்திசை வாசம்செய்வன் இருவித கல்விகற்பன்.

11. மத்தியகாலத்தில் மரணமடைவான். மற்றவிவரங்களைப் பிறகு கூறுவோம். இவனுடைய இளையவனின் சமாசாரம் கூறுவோம். சிவப்பான சரீரத்தையுடையவன். அண்டினவர்களுக்கு ஒத்தாசைசெய்வான். கெட்டவர்களுக்கும் நல்லவனுவன். எல்லாவிடங்களிலும் வசிப்பான். இரண்டு விதமான வித்தைகளைக் கற்றுக்கொள்ளுவான்.

12. அரசரால் தொழிலுமேற்பன் அணுகாது மதத்தில்போமே
துருவசக் கரம்பாலதன்னில் தோன்றலும் உயர்வானுகும்
தரிதொழில் காணுகும் தனமது செலவுசெய்யான்
உரையுமுன் கோபியாவன் உண்மையை வெளிக்காட்டா
[தான்.

12. அரசாங்கத்தில் உத்தியோகம்பெறுவான். வராததைப்பற்றி எண்ணமாட்டான். துருவ நட்சத்திரத்தைப்போல் இவன் மேன்மையடைவான். தரிவேலை காணுன். பணத்தை வீண் செலவு செய்யான். முன்கோபி என்று சொல்லப்படுவான். உண்மையை வெளியில் பிறருக்குத் தெரிவிக்கமாட்டான்.

13. தந்திர மொழியேகூறுவன் தன்மனை ஒன்றேயாகும்
இந்திர போகமேற்பன் எதிரிக்கு அஞ்சானுகும்
வந்திடும் சுதராண்ஒன்று வல்லிமார் மூவராகும்
அந்தவன் வயதுதீர்க்கம் அத்திரி தடுத்துச் சொல்வார்.

13. தந்திரமான வார்த்தைகளைக் கூறுவான். ஒரே ஒரு மனைவிதான். தேவேந்திரபோகத்தைப் பெறுவான். சத்துருக்களைக் கண்டு பயப்படமாட்டான். ஓர் ஆண்குழந்தை, மூன்றுபெண்கள் பிறக்கும். அவனுடைய ஆயுள் தீர்க்கமாயுள்ளது. இதனை அத்திரிமகரிஷி தடுத்துக் கூறுவார்.

14. ஆறினுக் குடையோனேழில் அலரியும் கூடிநிற்க
காரியு மதனில்சேர காவலன் துணைஆண்தோஷம்
மாரியே சொல்லுகின்றார் மங்கலன் ஆட்சியாகி
தீரமாய் மூன்றைப்பார்க்கச் செப்பினோம் ஒருவன்தீர்க்கம்.

14. ஆறும்வீட்டிற்குடைய புதன், சூரியனுடன் சம்பந்தப்பட்டு ஏழாமிடத்திலிருக்க, சனியும் அங்கே சேர்ந்திருக்க, காவலனுடைய ஆண்சகோதரம் தோஷத்தையடையும். பார்வதியே! கேள். செவ்வாய் தன்வீட்டில் ஆட்சியாயிருக்க, தைரியமாய் இலக்கினத்திலிருந்து மூன்றாமிடத்தைப் பார்க்க, குழந்தை ஒருவன் என்று நிச்சயப்படுத்திச் சொன்னோம்.

15. உடன்கூடி வாழ்வானாகில் உடன்வள[1] மரணமாகும்
அடவுடன் வேறூர்வாசம் ஆகையால் தீர்க்கசீவி
தடமதாய் உதித்தோனுக்குத் தேவியின் காலம்சொல்வேன்
விடவிழி யிருபான்ரெண்டில் மேற்கினில் நேருமென்றோம்.

15. பிதாவுடனும் எல்லாருடனும் வாழ்ந்துவந்தால் உடன்பிறப்பு மரணமாகும். மரியாதையுடன் வேறு ஊரில்போய் வசிப்பான். ஆகையால் தீர்க்கமான ஆயுளுடையவன். இப்போது பிறந்த இவனுடைய தேவியின் விசேஷத்தைச் சொல்லுவேன். அவள் இருபத்திரண்டாம்வயதில் மேற்குத் திக்கில் உதிப்பாள்.

16. மால்நிறம் சமதிரேகம் மருமமில் லாதநெஞ்சம்
சீலவாள் அன்னமீவள் சனஉப காரியாகும்
பால்பாக்கிய முடையளாகும் பசித்தோர்க்கு அன்னமீவள்
பாலன்தன் மனம்போல்வாழ்வள் பாவைக்கு வயது
[தீர்க்கம்.

16. கருப்புநிறம். சமமானசரீரம். ரகசியமில்லாத மனசும், சீலமுமுள்ளவள். அன்னதானம்செய்வாள். ஸாதுஜனங்களுக்கு ஒத்தாசைசெய்வாள். பால்பாக்கியமுடையவள், பசித்தோர்க்கு உணவளிப்பாள். புருஷனுடைய மனம்போல் வாழ்வாள். இவளுக்குத் தீர்க்காயுசு.

---

1. உடன்பிறப்பு

17. செய்முனி யிதனைக்கேட்டுச் செப்புவார் சங்கையொன்று
செயமாகும் முதல்மனைதான் மேவிடு மிரண்டாமாது
பயமிலா சொன்னசங்கை பகருவீர் முனியேநீதான்
வியமதில்[1] மதியும்தங்க வெள்ளிசேய் எட்டிலேற,

17. செயமுனிவர் இதனைக்கேட்டு ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறார். ஜயமாகும் முதல்மனைவி. இரண்டாவது மனைவி ஏற்படும். பயமில்லாமல் தைரியமாய்ச் சொன்ன சந்தேகத்தை முனியே சொல்லுங்கள் என்று கேட்க, விரயஸ்தானத்தில் சந்திரனும், செவ்வாயும், சுக்கிரனும் அஷ்டமத்திலிருக்க,

18. பானுவும் புந்திகாரி பாரியாள் தான[2]மேற
கூறினோம் தாரம்ரெண்டு குறுமுனி தடுத்துச்சொல்வார்
காரியு முச்சமாகக் கனகனு[3] மேழைப்பார்க்கப்
பாரினுக் குடையோனாட்சி பளிங்கனும் சேர்ந்ததாலே,

18. சூரியனும், புதனும், சனியும் பெண்டாட்டியின் ஸ்தானமாகிய ஏழாமிடத்தில் தங்கியிருக்க தாரம் இரண்டு என்று சொன்னோம். இதனை அகஸ்தியர் தடுத்துச் சொல்லலுற்றார். சனிபகவான் உச்சவீட்டிலிருக்க, குருவும் ஏழாம்வீட்டைத் தனது ஒன்பதாம் பார்வையினால் பார்க்க, நிலத்திற் கதிபதியாகிய செவ்வாயும் ஆட்சிபெற்றுச் சுக்கிரனுடன் சம்பந்தப்பட்டிருப் பதனாலே,

19. மருமனை காணுகும் மாதுவு மொன்றேதீர்க்கம்
வருமனை தனக்குமுத்திரை வரைகுவான் இரண்டுமாக
உரைகுவிர் அந்தசங்கை ஒதுங்கிடுங் கள்ளராலே
ஆறேழு ஆண்டுதன்னில் அறைந்தனம் அந்தசங்கை.

19. இரண்டாம்தாரம் கிடையாது. பெண்டாட்டி ஒருத்திதான். இது தீர்க்கம். வரும்மனைவிக்குக் கலியாணம் செய்வான். இரண்டு மாங்கல்யதாரணம் எப்படி ? இந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்யவும். அது திருடர்களாலே நாற்பத்தி ரண்டாமாண்டில் ஏற்பட்டு ஒதுங்கிப்போம் என்று அப்போதே சொன்னோம்.

20. இதுவின்றி வேறுகாணான் இவனுக்கு முன்னால்மாய்வள்
அதுகாலம் சொல்லுமென்ன ஐம்பது ஒன்பதாண்டில்
உதயன்தன் தசைஅந்தரத்தில் உரைத்திட்டோம் பாரி
[கெண்டம்
நதிச்சடை முனியேநீங்கள் நவின்றது தப்பாதாமே.

---

1. விரயஸ்தானத்தில்
2. ஏழாமிடம்
3. வியாழன்

20. இதைத்தவிர் வேறில்லை. இவனுக்கு முன்பே மனைவி இறப்பாள். அஃது எந்தக்காலத்தில், சொல்லுங்கள், என்று கேட்க, ஐம்பத்தொன்பதாவது பிராயத்தில் சூரியனுடையதசையில் அவனுடைய அந்தரத்தில் பாரியையின்கண்டம் ஏற்படும் என்று சொன்னோம். சடாமுனியே! நீங்கள் சொன்னது பிசகாது.

21. சுதர்களு மிருநான்காகத் தோன்றிடும் சிலதுசேதம்
சதமுடன் ஆண்பாலொன்று தையலும் மூன்றுஎன்றோம்
இதுநான்கும் தீர்க்கமேயாம் இச்சுதன் யோகவானும்
வசிஷ்டரும் தடுத்துச்சொல்வார் மலைகயர்[1] அஞ்சில்தங்க,

21. எட்டுக் குழந்தைகள் பிறக்கும். சில சேதமடையும். ஆண் ஒன்று, பெண் மூன்று. இவர்கள் நான்குபேர்களும் தீர்க்கமுடையவர்கள். இந்தப் பிள்ளை நல்லயோகசாலி. இதனைவசிஷ்டர் தடுத்துச்சொல்வார். மலைப் பாம்பாகிய இராகு இலக்கினத்திற்கு ஐந்தாம்வீட்டில் தங்க.

22. அஞ்சவ னீச்சமாக அணுகாது சுதரானுந்தான்
துஞ்சிடு மென்றுசொல்வோம் சுரர்குரு தடுத்துச்சொல்வார்
கொஞ்சிய கருமத்தோனைக் குருவுமே பார்த்ததாலும்
நஞ்சையும்[2] கூடப்பார்க்க நாயகன் கருமத்திற்கு,

22. ஐந்தாம்வீட்டிற் குடையவனான சூரியன் நீசஸ்தானத்தையடைந்ததனால் ஆண்குழந்தைகள் பிறந்து இறக்கும் என்று சொல்லுவோம். தேவகுரு இதனைத் தடுத்துச் சொல்லுவார். கருமாதிபதியாகிய சனியை குரு பார்ப்பதனாலும், ராகுவையும் கூடப்பார்ப்பதனாலும் நாயகனுடைய கருமத்திற்கு;

23. மதலையாண் ஒன்றேதீர்க்கம் மதிக்கெட்டில் புதனும்தங்க
சுதராலே கருமம்நேரும் சூரிய னீச்சத்தாலே
முதலிலாண் காணுகும் மொய்குழலி மார்கள்காணும்
அதற்குப்பின் ஆண்பால்விருத்தி அறைந்தனம் பாலனுக்கு.

23. ஆண்பிள்ளை ஒன்று நிச்சயம். சந்திரனுக்கு எட்டாமிடத்தில் புதனும் தங்க பிள்ளையினால் கருமம் ஏற்படும். சூரியன் நீசமடைந்திருப்பதனாலே முதலில் ஆண்பிள்ளை பிறக்காது. பெண்கள் பிறக்கும். அதற்குப் பின் ஆண்பிள்ளைகள் பிறக்கும் என்று சொல்லுவோம்.

---

1. மலைப்பாம்பு (இராகு)
2. இராகு

24. பூருவ தோஷமொன்று புக்கிற்று என்றுசொல்வோம்
கூறுவீர் அந்தசங்கை குற்றால நாட்டிலேதான்
பாரிய தனவானுக்குப் பிறந்தனன் கங்கைசேயாய்க்
காரிழை மதலையுண்டாய் காலாள்க ளுடையனாகி,

24. பண்டைக்காலத்து தோஷம் ஒன்று வந்துசேர்ந்தது, என்று சொல்லுவோம். அந்தச்சந்தேகத்தை நிவிர்த்திசெய்வீராக. குற்றாலத்தில் பெரியதனவானுக்கு வேளாளர் குலத்தில் பிறந்தனன். பெண்டாட்டிக்குப் புத்திரபாக்கியம் ஏற்பட்டு வேலையாட்களும் உண்டாகி,

25. தரணியை விருத்திசெய்து தான்வாழ்நாள் வினையைக் [கேண்மோ
அரவுமே மகுடத்தாலே அணுகிற்று முற்றம்தன்னில்
விரைவினில் அரங்கம்[1]சென்று வாட்டினன் கழியினாலே
மறலியான் பதிக்குச்செல்ல மாரனும் தகனம்செய்து.

25. பூஸ்திதியை விருத்திசெய்து வாழ்ந்துவரும் நாளில் ஏற்பட்ட வினையைக் கேட்பாயாக. பாம்பு படமெடுத்துக்கொண்டு முற்றத்தினில் வந்தது. இவன் விரைவாக அந்தரங்கம் சென்று கழிகொண்டு பாம்பை அடித்தான். அஃது இறந்தது. இவன் அதை தகனம்செய்தான்.

26. பலவித தலங்கள்சென்று பண்போர்க் கன்னமீந்து
குலவினன் நகரம்தன்னில் கூடினோர் தம்மைமோசம்
தலைவனும் செய்தானென்றோம் சாற்றுவாம் நேசம்சாபம்
நிலைமையாய்ப் பின்சென்மம் நேர்ந்திடும் மனைவிதோஷம்.

26. பல க்ஷேத்திரங்கள் சென்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்து ஊருக்குத் திரும்பினான். பலரைச் சந்திவிக்கிரகம் செய்து மோசம்பண்ணினான். சிநேகர்களுடைய அடுத்துக்கெடுத்தலின் சாபம் மறுஜன்மத்தில் பலித்து மனைவிக்குத் தோஷம் ஏற்படும்.

27. கருமபுத் திரனுமின்றி காசினி தன்னில்வாழ்வாய்
குறைமன தாகச்சொன்னான் குலவிற்று அந்ததோஷம்
.................................வைத்துமே மரணமாகி
பிரமனால் வரியப்பட்டுப் பிறப்பனு மிந்தபாலன்.

27. கருமத்திற்குப் புத்திரனுமில்லாமல் காசினி (பூமி) யில் வாழ்வாய் என்று மனக்குறைவுடன் சொல்ல, அந்ததோஷம் நேர்ந்தது. பிறகு எம்லோகம் சென்றதும் பிரம்மசிருஷ்டியின் பலனாக இந்தபாலன் பிறப்பான்.

---

1. அந்தரங்கமாய்

28. இத்தகை பாலனுக்கு இச்சென்மம் தன்னிலேதான்
சத்துரு சாபமொன்று சார்ந்திடும் தோஷமென்றோம்
அத்திரி சொல்லுகின்றார் அணுகாது அந்ததோஷம்
சுத்தமாய்க் குருவும்லாபம் சுதர்தானம் பார்த்ததாலும்,

28. இத்தகைய பாலனுக்கு இந்த ஜன்மத்தில் சத்துருக்களின் சாபமும் நேர்ந்தது. இதைக் கேட்ட அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். அந்த தோஷம் ஏற்படாது. சுத்தமாய் வியாழபகவான் லாபத்திலிருக்க, சுக்கிரனுடைய வீட்டைப் பார்ப்பதாலும், ஏழாம் பார்வையினால் புத்திரஸ்தானத்தைப் பார்ப்பதாலும்,

29. முன்சென்மம் மார்க்கம்தன்னில் உதவினன் தாகம்தன்னை
தன்பலன் தோஷம்நீங்கும் சந்ததி பாரிதீர்க்கம்
அன்னமும் குறைவுறாதான் அவனிமேல் சல்லியம்காணான்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

29. போன ஜன்மத்தில் வழிநடுவே தண்ணீர்ப்பந்தல் வைத்ததன் பலனுகத் தோஷம் நீங்கும். பெண்டாட்டிபிள்ளைகள் தீர்க்கமாயிருப்பார்கள். சாப்பாட்டுக்கு யாதொரு குறைவுமில்லை. பூமியில் கடன்தொந்தரை இருக்காது. உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

30. மாதுமாஞ் சிவப்பள் வருவோரை ஆதரிப்பள்
சூதிலாள் பொறுமைசாலி துணைஆண்பா லிரண்டுதீர்க்கம்
காதலி ஒன்றேதீர்க்கம் கணவனுக் கினியளாகும்
மேதினி உள்ளூராகும் வீண்பழி யேற்காளாமே.

30. அந்த அம்மாளும் சிவப்பு நிறமுள்ளவள். விருந்தினரை ஆதரிப்பாள். சூதுவாதில்லாதவள். பொறுமையுள்ளவள். இரண்டு சகோதரர்கள் நிச்சயமாயுண்டு. சகோதரி ஒருத்திதான். புருஷனுக்கு இனிமையாய் நடப்பாள். அவளும் உள்ளூரிலுள்ளவள்தான். வீண் அபவாதங்களை ஏற்கமாட்டாள்.

31. முன்சென்மம் பழனிநாட்டில் மேவினள் குலாலவம்சம்[1]
தன்வரன் மதலையுண்டாய்ச் சான்றோர்கள் பத்தியாகி
அன்னமும் அடியார்க்கிந்து அச்சென்மம் வினையில்லாமல்
துன்னிய காலனுடு சேர்ந்தனள் இந்தமாது.

31. போனஜன்மத்தில் பழனி என்ற ஊரில் குயவர்வமிசத்தில் பிறந்தாள். கலியாணமாகி, குழந்தையும் உண்டாகி, புத்திமான்களான பெரியோர்களிடத்தில் பக்திபூண்டு, அடியார்க்கு அன்னமளித்து, அந்த ஜன்மத்தில் யாதொரு பாவமுமறியாமல் துல்லிய எமலோகம் சேர்ந்தாள் இவள்.

---

1. குயத்தி, குசக்குலப்பெண்

32. தலைநான்கோன் வரியப்பட்டுச் செனித்தனளென்று
[சொன்னோம்
குலவிய முப்பானுலுள் கொள்ளுவாள் காலனுட்டை
தலைவிபின் சென்மம்சொல்வேன் தாம்பர பரணிதன்னில்
குலவுவாள் பிரம்மசேயாய்க் கோமளி கேட்டிடாயே.

32. பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இவள் ஜனித்தாள். முப்பதாவது வயதிற்குள் உயிர்துறப்பாள். அவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிக் கூறுவேன். தாம்பிரபரணித்தீரத்தில் பிராமண குழந்தையாய்ப் பிறப்பாள். பார்வதி! கேட்பாயாக.

33. தந்தையின் பூர்வம்தன்னைத் தானெடுத் தியம்பக்கேளு
மந்தியத் திலேதான் பிறந்தனன் சௌராஷ்ட்ரவம்சம்
வந்தவர்க் கன்னமீந்து மானிலம் செட்டுசெய்து
நொந்தபேர்க் குதவிசெய்து நீங்கினுன் காலனுடு.

33. ஜாதகனுடைய தகப்பனின் பூர்வோத்தரங்களைச் சொல்லக் கேளும். ஆதியில் சௌராஷ்டிரவமிசத்தில் பிறந்தான். வந்த விருந்தினருக்கு அன்னமளித்து உலகினில் வியாபாரம்செய்து, கஷ்டப்படுகிறவர்களுக்கு ஒத்தாசைசெய்து எமலோகம் சென்றுன்.

34. பிரமனுல் வரியப்பட்டுப் பிறந்தனன் என்றுசொல்வோம்
மருமமாய் நாற்பதாண்டில் மடிவனே தந்தையென்றோம்
வருஞ்சென்மம் கோகர்ணத்தில் மறைகுல முதிப்பானுகும்
பராசரும் தடுத்துச்சொல்வார் பாலக னிச்சென்மத்தில்,

34. பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தான். நாற்பதாவது வயதில் இரகசியமாய் மடிவான். அடுத்த ஜன்மம் கோகர்ணத்தில் பிராமணகுலத்திலுதிப்பான். இதனைப் பாராசரும் தடுத்துச்சொல்லுவார். இவன் இந்த ஜன்மத்தில்,

35. சொல்வது தவறுதலாலும் துணைவரை மோசம்செய்தும்
புல்லிய புத்திகொஞ்சம் பொன்னுசை வைத்ததாலே
நல்லதோர் பிரம்மசேயாய் நாயகனு மிருக்குவண்ணம்
அல்லலென் றோரைக்காத்தும் அரன்பூசை புரிவதாலும்,

35. வாக்குத்தவறுதலாலும், சகோதரர்களை மோசம்செய்வதாலும் கீழ்நோக்கான புத்திகொஞ்சம் உண்டு. பண ஆசையினுலே, நல்லதோர் பிரம்மசேயாய் நாயகன் அவரித்தான். துன்பமுறுவோரைக் காப்பாற்றியும் சிவன் பூஜை செய்தும்,

36. தேவதா தலங்கள்சென்றும் தீரனும் வாழ்வதாலே
மேவுவான் பிரம்மசேயாய் விளம்புவோ முதித்தோனுக்குத்
தாவிய அறுபானெட்டில் தனுர்மாதம் கெண்டமென்றோம்
ஆவலாய்த் தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

36. கடவுள் எழுந்தருளியுள்ள மகாஸ்தலங்களுக்குச் சென்று இவன் வாழ்ந்துவந்ததாலே, பிராமணக்குழந்தையாய் உதித்தான். அவனுடைய அறுபத்தெட்டாம் வயதில் மார்கழிமாதத்தில் கண்டம் ஏற்படும் என்று சொன்னோம். ஆவலுடன் தவஞ்செய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

37. பின்சென்மம் அவ்வூர்தன்னில் பிறப்பனும் பவுத்திருகப்
பொன்பணி அதிகமுண்டாய்ப் புகழுடன் வாழ்வானுகும்
இன்னவன் யோகச்சேதி இயம்புவோ மினிமேலாக
வந்தநாள் முதலாமாக வளர்பிறை போலேயோகம்.

37. மறு ஜன்மத்தில் அதேவூரில் மகனுக்கு மகனுய்ப் பிறப்பான். பொன்சம்பாதிக்கும் தொழில் அதிகமேற்படும். கீர்த்தியுடன் வாழ்வானுகும். இவனுடைய யோகபாவங்களை இனிமேல் கூறுவோம். பிறந்தநாள் முதல் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஓங்கியே வளரும். (பவுத்தனுக— என்றிருப்பின் பௌத்தமதத்தைச் சேர்ந்தவன் என பொருள் கொள்ளலாம்.)

38. மரணமட் டுலகிலுய்வன் வறுமைகள் காணுனுகும்
தரைமகன் ஆட்சியாகச் சல்லியன் கூடிநிற்கக்
கரியவ னுச்சமாகக் கனகனும் லாபம்நிற்க
நிறையவே குடும்பியென்றோம் நிமலியே கேட்டிடாயே.

38. மரணகாலபரியந்தம் கஷ்டமில்லாமல் உலகினில் வாழ்வான். பூமிக்கு அதிபதியாகிய செவ்வாய் தன்வீட்டிலிருந்தும் சுக்கிரனுடன் கூடியும் இருப்பதனுலும், சனி உச்சம் பெற்றிருப்பதனுலும், குருவும் லாபத்திருப்பதனுலும் புஷ்டியான குடும்பியென்று சொல்லுவோம். பார்வதியே! கேட்பாயாக.

39. உதித்திடு காலம்தன்னில் உத்திரட்டாதி ரெண்டாம்
விதியவன் தசையிருப்பு விளம்புவோ மாண்டுஒன்பான்
சதியிலா திங்களொன்பான் சாற்றுவோம் பலனையாங்கள்
இதுபூர்வ பாகம்சொன்னேம் இயம்புவோம் பின்பால்
[சேதி.

39. ஜாதகன் பிறக்கும்போது உத்திரட்டாதி, இரண்டாம்பாதம். சனி தசையில் இருப்பு வருஷம் ஒன்பது, மாதம் ஒன்பது. இதன்பலனை நாங்கள் சொல்லுவோம். இதுவரை சொன்னது பூர்வபாகம். விவரத்தை இனிக் கூறுவோம்.

ஜாதகம் 18

1. மந்திரி சீயமாக மதிரவி புகருமேடம்
புந்திமீன் முடவன்மானில் பூமகன் தூக்கதாக
பந்தமாய் ராகுநீச்சம் பரப்பினில் கேதுதங்க(ம்)
முந்திய சென்மமேடம் மொழிகுவீர் பலனைத்தானே.

1. வியாழ பகவான் சிம்மத்திலும், சந்திரன் சுக்கிரன் சூரியன் மேஷ ராசியிலும், புதன் மீனத்திலும், சனி மகரத்திலும், செவ்வாய் துலாத்திலும், இராகு கேதுக்கள் நீசம் பெற்றிருக்கவும் இப்படிப்பட்ட மேஷ லக்கின ஜாதகனுக்குப் பலன்களைச் சொல்லுவீராக. (இராகு கேதுக்களின் நீச ஸ்தானங்களைப்பற்றி வட நூல்களில் வித்தியாசப்படுகின்றன. இந்த ஜாதகத்தின் 17ஆவது செய்யுளில் இந்தச் சந்தேகம் நிவிர்த்தி செய்யப்பட்டுள்ளதைப் பார்க்க.)

புதன்	லக்கினம் சந்திரன் சுக்கிரன் சூரியன்	ராகு	
	இராசி சக்கரம்		
சனி			குரு
	கேது	செவ்வாய்	

2. ஆணது சென்னமாகும் அத்திரி முனிவர்சொல்வார்
காணவே இல்லம்கீழ்மேல் கணக்கன்தன் வாடையாகும்
தோணெதி ரில்லமில்லை தக்ஷிணம் வயல்களோடை
வேணுகோ பாலன்கோஷ்டம் விளங்காது தென்மேல்
[திக்கில்.

2 இந்த ஜாதகன் ஆண் ஜன்மம் என்று அத்திரி மகரிஷி கூறுவார். அவனுடைய வீடு கீழ்மேல் தெருவில் வடகிழக்கே யுள்ளது. அதற்கு நேரே வீடில்லை. தெற்கே வயல்களும் வாய்க்கால்களுமுண்டு. தென்மேற்கு திக்கில் வேணுகானம் செய்யும் கிருஷ்ணன் கோவில்.

3. மாரியு மருகில்தங்கும் மேற்கினில் கணேசன்சந்தி
கூறுன்தன் கோஷ்டமுண்டு கூத்தனை யுதைத்தோன்காளி
வீரிய தடாகம்சோலை விளங்கிடு மருகிலேதான்
தேரிய வானைகீழ்பால் செப்பினோம் சமவூர்தன்னில்.

3. துர்க்கையின் கோவில் மேற்கிலுள்ளது. ஒரு சந்தில் விநாயகர் கோவில். அதனருகில் கிராமத்தலைவனின் வீடு. காலனைக் காலாலுதைத்த சிவனுடைய கோவிலும் அதன் அருகில் விசேஷமான தடாகமும் சோலையும் உண்டு. இந்த அடையாளங்கள் கொண்ட சமமான பிரதேசத்தில் ஜாதகன் வசித்தான் என்று சொன்னோம்.

4. பலசாதி அவ்வூர்வாசம் பகருவோம் கங்கைவம்சம்
நலமுள தந்தைமாதர் நற்றுணை களத்திரபுத்திரர்
குலவிய முன்பின்சென்மம் கூறுவோ மின்னூல்தன்னில்
மலையிறை மகளாய்வந்த மங்கையே மேலுங்கேளே.

4. பல ஜாதிப்பேர்கள் அவ்வூரில் வசித்தனர். ஜாதகன் வேளாளர் வமிசத்தில் நல்ல தாய் தந்தையருக்குப் பிறந்தான். அவனுடைய மனைவி, புத்திரர், இன்னும் இவனுடைய முன்பின் ஜன்மம் இவற்றைக் கூறுவோம் இதே புஸ்தகத்தில். மலைராஜனுன இமவான்புத்திரியான பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தைக்கேளாய் சமதேகன் இருநிறத்தன்
நொந்திடு பேரைக்காப்பன் நுவலுப தேசமுள்ளான்
சந்ததம் உயரமில்லான் தயவுள குணத்தனுகும்
சிந்தையு மர்மவானும் சீலனும் பத்திபூண்பன்.

5. இவனுடைய தகப்பனின் குணதிசயங்களைக் கேட்பாயாக. சமமான தேகத்தை யுடையவன். பொதுநிற முள்ளவன். கஷ்டப்படுகிற பேர்களை இரக்ஷிப்பான். சொல்லும் உபதேசம் பெற்றவன். எப்பொழுதும் ஒரே மாதிரி. தயை தாட்சண்ய முள்ளவன். மனதில் கபடமுள்ளவன். குணசீலன். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன்.

6. அண்டினோர்க் குதவிசெய்வன் அரன்பணி விருப்பம் [கொள்வன்
எண்டிசைக் கீர்த்திகொள்வன் இனங்களு மெச்சவாழ்வான்
பண்டிபண் டாரமுள்ளான் பங்கய ரேகையுள்ளான்
தண்டமிழ்க் கல்வியுள்ளான் கனசத்தியம் தப்பானுமே.

6. அண்டினோரைக் காப்பாற்றுவான். சிவபூஜை செய்வதில் விருப்ப முள்ளவன். எட்டுத் திக்குகளிலும் புகழ் பெற்றவன். சொந்தக்காரர் மெச்சும்படி வாழ்வானும். கல்வித்திறமும் ஆள்கட்டுகளும் முடையவன். தாமரை ரேகையைக் கையில் உடையவன். அகிழய தமிழ் ஞான முள்ளவன். கௌரவம், சத்தியம் இவைகளைப் பாதுகாப்பான்.

7. பூமியும் பரிபாலிப்பன் புண்ணிய மனத்தனுகும்
சேமமாம் குடும்பமுள்ளான் திருமகள் வாசமுள்ளான்
காமனே விருப்பங்கொள்ளான் கனத்ததோர் பெருமை
[யுள்ளான்
தீமையை விரும்பானுகும் தேகமும் பித்தமாவன்.

7. நிலத்தைக் கிருஷி செய்வான். மனதில் தருமம் செய்ய விரும்புவான். க்ஷேமமுடைய குடும்பத்தை உடையவன். லட்சுமி கடாக்ஷ முடையவன். மேன்மையான மனைவி பேரில் விருப்ப முள்ளவன். மதிப்பும் பெருமையும் உள்ளவன். கெட்ட காரியங்களில் இஷ்டப்படான். பித்த சரீர முள்ளவன்.

8. மூலநோ யுடையனுவன் முனிவர்க ளிஷ்டமாவன்
ஞாலமேல் பெருமையுள்ளான் நன்னடை மிருதுவாகும்
சாலவே துணைவர்தன்னைச் சாற்றவே ஆண்பால்காணும்
வேல்விழி இருமூன்ருகும் விரயங்கள் சிலதுவாகும்.

8. மூல உபத்திரவம் முடையவன். தபசிகளை ஆதரித்து நேசிப்பான். பூமியில் கீர்த்தி பெற்றவன். மிருதுவாகவும் நன்ருகவும் நடப்பான். இவனுடைய சகோதரர்களைச் சாற்றுவோம். ஆண் சகோதரர் இல்லை. சகோதரிகள் ஆறு பேர்கள். சில வீணுகும்.

9. இக்குண முடையோனுக்கு இவனுமே உதிப்பனுகும்
மிக்கவே யவன்குணத்தை விளம்புவோம் மாநிறத்தான்
தக்கவே கல்வியுள்ளான் தைரியன் யூகைசாலி
திக்கெலாம் புகழுவாழ்வன் தியாகியாம் நாலாம்சென்மம்,

9. இப்படிப்பட்ட குணதிசயங்களை யுடைய தந்தைக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய மேலான குணங்களைக் கூறுவாம். மாநிறங் கொண்டவன். பொருத்தமான படிப்புள்ளவன். தைரியசாலி. நல்ல மதியூகி. சென்ற விடமெல்லாம் (எல்லாவிடங்களிலும்) புகழும்படி வாழ்வான். நல்ல தியாகி. இவனுடைய நான்காவது ஜன்மத்தில்,

10. தந்தையி னுஸ்திதன்னைத் தானவன் விருத்திசெய்வன்
வந்தவர்க் கன்னமீவன் வாக்குகள் தப்பானுகும்
சந்ததம் பித்ததேகி தவசிக ளுறவுகொள்வான்
கந்தன்மேல் பக்தியுள்ளான் கனத்திடும் குடும்பத்தானே.

10. பிதாவின் சொத்துக்களை இவன் விருத்தி செய்வான். விருந்தினர்க்கு அன்னமளிப்பான். சொன்ன வார்த்தைப்படி நடப்பான். எப்பொழுதும் பித்த தேக முள்ளவன். சன்னியாசிகளுடன் நேசமாயிருப்பான். முருகக் கடவுளிடத்தில் பக்தி யுள்ளவன். பெரிய குடும்பத்தையுடையவன்.

11\. வண்டிவா கனமுமுள்ளான் மர்மமில் லாதநெஞ்சன்
கொண்டைகோ விருத்தியுள்ளான் குலத்துளோர் மெச்ச
[வாழ்வன்
அண்டினோர் தம்மைக்காப்பன் ஆள்கார ருடையனாகும்
உண்டிய உணவின்மீது உறப்பொடு புளிப்பிலிச்சை.

11\. வண்டி, வாகனம் இவைகளை யுடையவன். நெஞ்சில் கபடமில்லாதவன். எருதுகளை விருத்தி செய்வான். தன் குலத்திலுள்ளார் மெச்சும்படி வாழ்வான் அண்டினவர்களை ஆதரிப்பான். வேலையாட்களை யுடையவன். சாப்பாட்டு வகைகளில் உறைப்பும் புளிப்பும் உள்ள உண்டிகளில் இச்சை கொள்வான்.

12\. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் கமலரேகை
தன்னிலே சுழிப்புமுண்டு சத்தியம் தப்பானாகும்
கன்னென வார்த்தைகூறுவான் காளைக ளதிகமில்லான்
அன்னிய ரிஷ்டம்கொள்வன் அணுகிடும் நாபிநோயும்.

12\. இவனுடைய சிவந்தகையில் பத்மரேகை யுண்டு. அதனிலேயே சுழியும் உண்டு. சத்தியம் தப்பமாட்டான். கடுமையான வார்த்தைகளைக் கூறுவான். கன்று காலிகள் அதிகமில்லாதவன். பிறருடைய பிரியத்தைப் சம்பாதிப்பான். மூலச்சூடு ஏற்படும்.

13\. அவனுட துணைவர்தன்னை அரைகிறோ மைந்தேயாகும்
நவனியில் ஆண்பால்காணோம் நாட்டுவோம் கண்ணி
[ரெண்டு
பவமுள விருத்தியாகும் பருகாது மற்றதெல்லாம்
தவமுடை யோரைக்காக்கும் தயாபரி மேலுங்கேளே.

13\. அவனுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுவோம். அவர்கள் ஐந்து பேர்கள். பூமியில் ஆண் சகோதரரில்லை. இரண்டு சகோதரிகள் உண்டு என்று நிச்சயப்படுத்துவோம். ஆசாபாசங்கள் அதிகமாகும். மற்றவை வளரா. தபசிகளைக் காப்பாற்றும் தயாநிதியாகிய பார்வதியே! மேலும் கேட்பாயாக.

14\. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோ மொருபானேழில்
மேதினில் உள்ளூர்கீழ்பால் விளங்கிய மாதைக்கொள்வன்
போதவே யவள்குணத்தைப் போற்றுவோம் சிவந்தமேனி
தீதிலா குணத்தாளாகும் தீங்கதை மனதிலெண்ணாள்.

14\. ஜாதகனுடைய கலியாணத்தைக் கூறுவோம். இவனது பதினேழாவது பிராயத்தில் தன்னூருக்குக் கிழக்கே விளங்கிவரும் பெண்ணைக் கலியாணம் செய்வான். பொருத்தமாகவே அவளுடைய குணங்களைக்

கூறுவோம். சிவப்பான சரீரம். தீங்கில்லாத குணமுடையவள். மனதில் கூட சிறிதும் கெடுதலை எண்ணமாட்டாள்.

15. வரனுக்கு நேயமாவள் மங்கைகற் புடையாளாகும்
திறமையாய் வார்த்தைகூர்வள் சிறுத்தவர் தம்மைக்
[காப்பள்
அறனெறி பத்திபூண்பள் ஆசார முடையாளாமே
திருமக ளொப்பதாகும் செல்வியு மதிர்ஷ்டசாலி.

15. புருஷனுக்குப் பிரியமானவள். இவள் நல்ல கற்புக்கரசி யென்னலாம். சாமார்த்தியமாய்ப் பேசுவாள். ஏழைகளை ஆதரிப்பாள். தர்ம சாஸ்திரங்களில் விருப்ப முள்ளவள். ஆசார முடையவள். லட்சுமி தேவியைப் போன்றவள். இந்தச் செல்வி நல்ல பாக்கியசாலியாவள்.

16. புத்திர விருத்திதன்னைப் புகலுவோ மாண்பால்காணும்
பத்தினி யிரண்டுமாகும் பருகிடும் தீர்க்கமாக
அத்திரி சொல்லும்போது அம்மனும் கேட்கலுற்றாள்
வித்தகன் தனக்குஆண்பால் விளங்காது என்றுசொன்னீர்.

16. புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோம். பிள்ளைக் குழந்தை யில்லை. இரண்டு பெண்டாட்டிகள் ஏற்பட்டு தீர்க்கமாய் விருத்தியாகும். அத்திரி மகரிஷி இவ்விதம் கூறும்போது பார்வதி பின் வருமாறு வினவினாள். ஜாதகனுக்கு ஆண் பிள்ளை பிறக்காததற்கு யாது காரணம் சொன்னீர் ?

17. என்னகா ரணங்களத்தை இயம்புவீ ரென்றுசொல்ல
மன்னிய குடும்பராகு மங்கலன் பார்த்துமேதான்
துன்னுபுத் திரதானத்தோன் சூரிய னாகிநிற்க
சொன்னேனே இதனால்ஆண்பால் துலங்காது என்று
[சொன்னோம்.

17. அதற்குண்டான காரணங்களைச் சொல்லவும் என்று கேட்க, குடும்பஸ்தானத்தில் இராகு நிற்க, அவனைச் செவ்வாய் எட்டாம் பார்வையால் பார்க்க, துல்லியமான புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்துக்குரியவன் சூரியனாகி நிற்க ஆண் பிள்ளை பிறக்காது என்று சொன்னோம்.

18. அஞ்சினில் மறையோனிற்க அஞ்சவ னுச்சமாக
மிஞ்சிய அஞ்சோனோடே வெள்ளியு நிலவுகூட
தஞ்சமாய் ஆண்பாலொன்று சனித்திடும் தீர்க்கமாக
வஞ்சியே தசமந்தன்னில் மைந்தனு[1] மிருப்பதாலே,

1. சனி (சூரியனுடைய புத்திரன்)

18. ஐந்தாம் வீட்டில் குரு இருக்க, ஐந்தாமிடத்திற்குரிய சூரியனும் உச்சஸ்தானமாகிய மேஷத்திலிருக்க, அவனுடன் சுக்கிரனும் சேர்ந்து தங்க, நிச்சயமாய் ஓர் ஆண் குழந்தை எற்படும். அது தீர்க்கம். எனெனில் பத்தாம் வீட்டில் சனி பகவானுமிருப்பதாலே,

19. முன்சென்ம வினையினாலே மொழிந்திட்டோம் மதலை
[தோஷம்
என்னஊழ் தன்னைநீங்கள் இயம்புவீ ரென்றுகேட்க
இன்னவன் முன்சென்மத்தை இயம்புவோ மருணைகீழ்பால்
உன்னித சிற்றூர்தன்னில் உத்தமன் ரெட்டிவம்சம்,

19. போன ஜன்ம கர்ம பலத்தினால் புத்திரதோஷம் என்று கூறினோம். இதற்கு எற்பட்ட எந்த ஊழ்வினையை நீங்கள் காரணமாகக் காட்டுவீர் என்று கேட்க, இவனுடைய பூர்வ ஜன்மத்தின் விவரம் கூறுவோம். திருவருணைக்குக் கிழக்கே உள்ள சிறிய கிராமத்தில் இவன் ரெட்டியார் வமிசத்தில்,

20. செனித்துமே பெருமைபூண்டு செல்வங்கள் மிகவே
[யுண்டாய்
கனமுள தனங்கள்பெற்றுக் காளைகள் மனைவியுண்டாய்ச்
சினமிலா[1] வாழ்ந்துபின்பு தென்திசைத் தலங்கள்சென்று
கனமுள சேதுக்கேகிக் கனத்ததோர் தீர்த்தம்தோய்ந்து,

20. உற்பத்தியாகி, பெருமை யடைந்து, சொத்துக்களை அதிகமாய்ப் பெற்று, மேலான செல்வச்சிறப்படைந்து, மனைவி புத்திரர்கள் இவர்கள் எற்பட்டு, சிரமமில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்து, பிறகு, தெற்கு திசையிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்து, மேன்மை வாய்ந்த ராமேசுவரம் சென்று, உத்தமமான சேதுஸ்நானம் செய்து,

21. ராமலிங் கத்தைப்போற்றி நலமுட னர்ச்சித்தேத்திச்
சேமமாய் உள்ளூர்மீண்டு சேயனும் வாழுநாளில்
பிராமணன் ஒருவன்தானும் பொருளது இவன்பால்வைத்து
நேமமாய்க் காசிக்கேகி நிருபனு மரணமானான்.

21. ராமலிங்கத்தைத் துதித்து, வழிபாடுகள் செய்து, அர்ச்சனை அபிஷேகம் செய்து, க்ஷேமமாய்த் தன்னூருக்குத் திரும்பி வந்து, வாழ்ந்து வரும் நாளில், ஒரு பிராமணன் இவனிடம் சொத்துக்களை ஒப்புவித்து, நேமத்துடன் காசியாத்திரை போய் அவனும் மரணத்தை யடைந்தான்.

---

1. சந்தோஷமாய்

22. அவன்மனை இவன்பால்சென்று அப்பொருள் கேட்கும்
[போது
இவனதை யீயானாகி இயம்புவாள் மறையோன்மாது
அவமறு சென்மம்தோன்றிப் பாலர்கள் தோஷமுண்டாய்
நவனியில் வாழ்வாயென்று நங்கையும் சொல்லியேதான்,

22. அன்னவன் மனைவி இவனிடம் வந்து அந்தப் பொருள்களைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கும்போது, இவன் அவற்றைக் கொடுக்க மறுத்தான். உடனே அந்த பிராமண ஸ்திரீ பின்வருமாறு சபித்தாள். அடுத்த ஜன்மத்தில் புத்திர தோஷங்களை யடைந்து பூமியில் வாழ்வாய் என்று சபித்து அம்மாது,

23. சஞ்சல மனத்தளாகித் தன்னில்லம் செல்லலுற்றாள்
வஞ்சியின் சாபத்தாலும் வந்ததுஇச் சென்மத்தில்
துஞ்சிடு மாண்பாலுந்தான் துலங்கிட சாந்திசொல்வேன்
தஞ்சமாய் மனைவியோடு தணிகைக்கு ஏழுகார்த்தி,

23. மனவருத்தத்துடன் தன் வீடு சேர்ந்தாள். இம்மாதின் சாபத்தினால் இந்த ஜன்மத்தில் புத்திர தோஷம் இவனுக்கு ஏற்பட்டது. ஆண்பிள்ளை பிறந்து இறந்தது. அப்படி புத்திர பாக்கியம் விளங்கிடச் சாந்தி (பரிகாரம்) சொல்லுவேன். பக்தி சிரத்தையாய்த் திருத்தணிகைக்கு மனைவியுடன் ஏழு கார்த்திகைகள்,

24. இடைவிடா சென்றுமேதான் இன்பமா யர்ச்சித்தேத்தி
அடவுட னோராண்டுந்தான் அவன்சஷ்டி விரதம்கொண்
[டால்
உடனேதான் மதலைதோன்றும் உதிக்கினும் தீர்க்கமாகும்
தடவரை மகளாய்வந்த சத்தியே மேலுங்கேளே.

24. தொடர்ந்து சென்று பிரியமாயும் பக்தியாயும் அர்ச்சனை அபிஷேகம் செய்து, போற்றியும், சிரத்தையாக ஒரு வருஷம் சஷ்டி திதியன்று விரதமிருந்தால்தான் உடனே குழந்தை பிறக்கும் அக்குழந்தை தீர்க்காயுசுடனிருக்கும். மலையவான் புத்திரியாய் வந்துதித்த பார்வதிதேவியே! மேலும் கேட்பாயாக.

25. சொற்படி செய்யானாகில் துலங்காது மதலைதானும்
சொற்படி செய்வானாகில் தோன்றிடு மாண்பாலொன்று
மைப்படி பெண்பால்ரெண்டு வரைகிறே மிவனுக்கேதான்
மெய்ப்புடன் இவன்முன்சென்மம் விளங்கிய ரெட்டியாகி,

25. சொன்ன பிரகாரம் செய்யாவிடில் குழந்தை பிறந்து இருக்காது. சொன்னபடி சாந்தி செய்வானாகில் ஆண் பிள்ளை ஒன்று பிறக்கும். அதற்குப் பிறகு இரண்டு பெண் குழந்தைகளும் இவனுக்கே தோன்றும் என்று சொல்லுவோம். உண்மையாய் இவன் போன ஜன்மத்தில் பெருமையாய் ரெட்டி வமிசத்திலிருந்தவன்,

26. கங்கைதன் குலமுதித்த காரணம் சொல்லுமென்ன
பொங்கமாய் முனிவர்சொல்வார் புனிதனு முன்சென்மத்தில்
சங்கையில் லாமல்சேது ஸ்நானங்கள் செய்தபுண்யம்
இங்கிவ னுதித்தானென்றோம் ஈசுவரி கேளுமம்மா,

26. இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் உதித்ததன் காரணம் என்ன? சொல்லுங்கள் என்று கேட்க, பொருத்தமாய் முனிவர் கூறலுற்றார். இவ்வுத்தமன் போன ஜன்மத்தில் சந்தேகமில்லாமல் சேதுஸ்நானங்கள் செய்த புண்ணியத்தின் பலனாக இப்படிப் பிறந்தான் என்றோம். ஈச்வரி! கேட்பாயாக.

27. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் பரங்குன்றத் [தில்
வந்தசெங் குந்தவம்ச மரபினி லுதித்துமேலும்
சந்ததம் தனங்கள்பெற்றுச் சண்முகர்க் கடிமையாகிப்
பந்தமா யறங்கள்செய்து பஞ்சைகட் கன்னமீந்து,

27. தந்தையின் பூர்வ ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருப்பரங்குன்றத்தில் செங்குந்தவர் குலத்திலுதித்து எப்பொழுதும் பணம் காசுகள் சம்பாதித்து, அறுமுகக் கடவுளுக்கு அடிமை பூண்டு, தரும காரியங்களைச் செய்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்து,

28. சோலைகள் துரவுசெய்து சுகமுடன் வாழ்ந்துபின்பு
பாலனு மரணமாகிப் பங்கயத் தோனாலேதான்
சீலமாய் வரியப்பட்டுச் செனித்தவ னிவனேயென்றோம்
வேலனைப் பயின்றமாதே விளம்புவோ மிவன்பின்சென்மம்.

28. தோட்டம் துரவுகள் ஏற்படுத்தி, சுகமாய் வாழ்ந்து வரும் காலத்தில், பின்பு இவன் மரணமடைந்து பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவன் இவனே என்று சொன்னோம். முருகவேளைப் பெற்றெடுத்த மாதாவே! இவனுடைய மறு ஜன்மத்தைப்பற்றி விவரிப்போம்.

29. உத்திரம் காசிதன்னில் உதிப்பனும் பிரம்மசேயாய்
அத்திரி முனிவர்சொல்ல அம்பிகை கேட்கலுற்றாள்
சித்தசன் இச்சென்மத்தில் செய்தபுண் ணியங்களென்ன
வித்தகி கேட்கும்போது விளம்புவார் முனிவர்தானே.

29. வடக்கே காசி க்ஷேத்திரத்தில் பிராமணக் குழந்தையாய் ஜனிப்பான். இவ்வாறு அத்திரி மகரிஷி சொல்ல, அம்பிகை பின்வருமாறு கேட்கலானாள். இவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய காரியங்கள் யாவை ? என்று அவள் கேட்க, முனிவர் பின்வருமாறு கூறலுற்றார்.

30. தானவ னிச்சென்மத்தில் சகலர்க்கு நல்லோனாகி
மானமாய் உதவிசெய்தும் மான்மழு தரித்தோனால்
ஞானமும் அன்புகொண்டு கோஷ்டத்தில் தீபம்வைத்த
ஆனதோர் பலத்தினாலே அருமறை குலமுதிப்பன்.

30. ஜாதகன் இந்த ஜன்மத்தில் யாவர்க்கும் நல்லவனாகி, கௌரவமாய் ஒத்தாசை செய்தும், மான் மழு இவைகளைக் கையில் தரித்த பரமசிவனிடம் பக்தியும் ஞானமும் கொண்டு, கோவிலில் விளக்குகள் ஏற்றி வைத்து வந்த புண்ணிய வசத்தினாலே அருமையான பிராமண குலத்திலுதித்தான்.

31. இன்னவன் வம்சந்தோறும் ஏகனா யுதிப்ப
அன்னையே சொல்லுகின்றேன் அவனுட முன்சென்மத்தில்
உன்னித புலவன்வாக்கால் உரைந்தது அந்ததோஷம்
இன்னமும் செனனந்தோறும் இலகிடும் ஒருவனென்றோம்.

31. இவன் வமிசங்கள்தோறும் ஒரே பிள்ளையாய் உதிப்பான். அன்னையே ! சொல்லுகிறேன். அவனுடைய முன் ஜன்மத்தில் மேலான பிராமண சாபத்தால் அந்த தோஷம் ஏற்பட்டது. மேன்மேலும் ஜன்மங்கள் தோறும் ஒருவனாகவே பிறப்பான்.

32. மாதுரு குணத்தையாங்கள் வரைகிறோம் ஈகைகொஞ்சம்
மேதினில் சமதேகத்தாள் விளங்குமுன் கோபம்கொஞ்சம்
மாதவர் தமைதுதிப்பாள் வரனுக்கு நேயமுள்ளாள்
கோதிலா கபடுகொஞ்சம் கூறுவோம் வாய்வுரோகி.

32. மாதாவின் குணங்களை வருணிப்போம். சிறிது தான தர்ம முள்ளவள். சமமான தேகத்தை யுடையவள். சிறிது முன் கோப முடையவள். தபசிகளை ஏற்றித் துதிப்பாள். புருஷனிடம் பிரியமாயிருப்பாள். கொஞ்சம் கபடம் மனதில் உண்டு. வாயுவினால் உபத்திரவப்படுவாள்.

33. பெருதன முடையாளாகும் பித்தமாம் தேகமுள்ளாள்
உறன்முறை மெச்சவாழ்வாள் உத்தமி அதிர்ஷ்டசாலி
திறமுடன் துணைவர்தன்னைச் செப்புவோ மிருமூன்றாகும்
அறைகிறோம் சிலதுங்ஷ்டம் அவர்பல னிரண்டில்சொல்
[வேன்.

33. பெரிய பணக்காரி. பித்த சரீரமுடையவள். உற்ருர் உறவினர் மெச்சும்படி வாழ்வாள். இவ்வுத்தமி நல்ல அதிர்ஷ்ட முடையவள். இவளுடன் பிறந்தவர்கள் ஆறு பேர்கள். அதில் சிலபேர் நஷ்டமாவர். அவர்களுடைய பலாபலன்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

34. அவளுட முன்செென்மத்தை அறைகிரேு மருணைநாட்டில்
நவமதில் கர்ணவம்சம் நாயகியு முதித்துமேலும்
தவநிலை யோர்க்குஅன்னம் தானவ ளளித்துவந்தும்
சிவனுக்கு ஊழியங்கள் செய்துமே பெருமைபூண்டு.

34. அவளுடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருவருணைக்குப் பக்கத்தில் கணக்கர் வமிசத்தில் இவள் உதித்தாள். தபசிகளுக்கு அன்னதானம் செய்தும், சிவபெருமானுக்கு வழிபாடுகள் செய்தும் பெருமையாயிருக்கும் நாளில்,

35. மதலையு மில்லாதாகி வரனுடன சேதுபுக்கி
திறமையாய்த் தீர்த்தம்தோய்ந்து சிலசில தலங்கள்சென்று
சதமுட னுள்ளூர்மீண்டு சந்ததி யில்லாதாகி
நிதமன சஞ்சலத்தால் நிமலியு மரணமாகி,

35. குழந்தை யில்லாமல், புருஷனுடன் சேதுஸ்னனம் செய்யப் போய், அப்படியே ஸ்னனம் செய்தும், சிற்சில சிவஸ்தலங்கள் சென்று கடவுளைத் தரிசித்தும் ஒழுங்காகத் தன்னூருக்குத் திரும்பி வந்து சந்ததி யில்லாமல் தினம் மனச்சஞ்சலத்துடனிருந்து இவள் மரணமடைய,

36. இக்குலந் தன்னில்லேதான் இவளுமே உதித்தாளென்ருேம்
மிக்கவே இவள்பின்செென்மம் மேவிய காஞ்சிதன்னில்
தொக்கவே யிக்குலத்தில் சுந்தரி உதித்தாளென்ருேம்
திக்கெலாம் புகழ்வாழ்வாள் தேவியே மேலுங்கேளே.

36. இதே குலத்தில்தான் இவளுமே உதித்தாள் என்ருேம். இவளுடைய மறு ஜன்மம் காஞ்சீபுரத்தில் பொருந்திய இக்குலத்திலே இச்சுந்தரி உதித்தாளென்ருேம். எங்கு பார்க்கிலும் புகழ் பெற்றிருப்பாள். தேவியே! மேலும் கேட்பாயாக.

37. பிதாவின்தன் மரணகாலம் பேசுவோ மிருபாறுறில்
வதிபுகர் தசையிலேதான் மன்சிகி பொசிப்பில்கெண்டம்
விதமுனி சொல்லும்போது மெல்லியும் கேட்கலுற்ருள்
பொதுவித ரோகத்தாலே இவன்பிதா உய்வானென்றீர்.

37. பிதாவினுடைய மரண காலத்தைப்பற்றிப் பேசுவோம். இருபத்தாரும் வயதில் மேலான சுக்கிர தசையிலே கேது புத்தியில் கண்டம் ஏற்

படும். இவ்விதம் முனிவர் சொல்லும்போது பார்வதியும் கேட்கலுற்ருள். பொதுவான ரோகத்தாலே இவன் பிதா இறப்பான் என்று சொன்னீரே.

38. பித்தமாம் ரோகத்தாலே பிரிந்திடும் உடலம்தானும்
வித்தகி மாதுர்காலம் விளம்புவோ முப்பானேழில்
சுத்தநன் னிலவுதன்னில்[1] சனிபொசிப் பதனிலேதான்
பத்திணி பித்தவாயுவால் பகருவோம் மாரகந்தான்.

38. பித்த ரோகத்தினுல் உடல் உலகை விட்டு நீங்கும். இவனுடைய மாதாவின் மரணகாலம் கூறுவோம். முப்பத்தேழாவது வயதில் நல்ல சந்திர தசை சனி புக்தியில் இப்பத்தினி பித்தவாயுவினுல் மாரகத்தை யடைவாள்.

39. இன்னவன் மரணகாலம் இயம்புவோ மறுபானைந்தில்
கன்னியு மாதம்தன்னில் கனமுள்ள அமாவாசை
கன்னலில் சூலேரோகம் கண்டுமே மரணமாவான்
உன்னித மறுசென்மத்தை உரைக்கிருேம் கேளுமம்மா.

39. ஜாதகனுடைய மரண காலத்தை இயம்புவோம். இவன்து அறுபத்தைந்தாம் வயதில் புரட்டாசி மாசத்தில் கனத்த நாளாகிய அமாவாசை தினத்தன்று உஷ்ணமான சூலே நோய் கண்டு மரணமாவான். மேலான அடுத்த ஜன்மத்தை உரைக்கிருேம். கேளும், தாயே!

40. தில்லையில் பிரம்மசேயாய்ச் செனித்துமே பூமியுண்டாய்
எலலையில் கீர்த்திபூண்டு இகபர னன்புகொண்டு
வல்லியே வாழ்வானுகும் மறித்துமே சொல்லுகின்ருள்
நல்லதோர் சாதகற்கு நாற்பத்தைந் தாண்டில்,

40. சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராம்மணக் குழந்தையாய்ப் பிறந்து, பூஸ்திதி யுண்டாகி, எங்குப்பார்க்கினும் புகழ் பெற்று இம்மை மறுமைப் பயனளிக்கும் கடவுளிடத்தில் பக்தி கொண்டு பொருத்தமாக வாழ்ந்து வருவான். இதனை மறுத்து தேவி சொல்லுகின்ருள். நல்ல ஜாதகனுக்கு நாற்பத்தைந்தாம் வயதில்,

41. மாரகம் நேருமென்ருேம் மங்கலன் தசையிலே
கூறுவோ மதற்குமேதான் குறுமுனி புகலுகின்ருர்
காரியும் குசனைப்பார்க்கக் கதிர்மதிக் கேழுாய்நிற்க
தேறிடும் பிணியும்வந்து மாங்கருங் கோளில்கெண்டம்.

41. மாரகம் நேரிடும் என்று சொன்னேம். செவ்வாயின் தசையில் அதுவுமே நேரிடும். அகஸ்தியர் சொல்லலுற்ருர். சனியும் தன் பத்தாம்

1. சந்திரதசையில்

பார்வையினால் செவ்வாயைப் பார்ப்பதனால், சந்திரன், சூரியன் இவர் களுக்கு ஏழாம் வீட்டில் செவ்வாய் தங்க, வியாதி ஏற்பட்டு இராகு தசை யில் கண்டம் ஏற்படும்.

42. இவன்பின்னால் மனைவிகெண்டம் இசைந்திட்டோ மிது [வல்லாமல்
நவனியில் யோகத்தை நாட்டுவோ மிவனுக்கேதான்
அவனியில் செனனம்தொட்டும் ஆயுளின் வரைக்குமேதான்
பவமுள யோகமுண்டு பாக்கிய வானுமென்றோம்.

42. இவனுக்குப் பிறகு மனைவியின் கண்டம் ஏற்படும் என்று சொன் னோம். இதுவுமல்லாமல் உலகினில் இவனுக் கேற்பட்ட யோகபாவத்தைக் கூறுவோம். பிறந்தது முதல் ஆயுள் முடியும் வரைக்கும் மேல் யோகம் ஓங்கிடும். பாக்கியவானுவான்.

43. பூமியும் பரிபாலிப்பான் பூஷணம் சேர்ப்பானுகும்
நேமியோர்க் குதவிசெய்வான் நிதானமாய் வார்த்தை [கூறுவன்
தீமைக ளணுகாதென்றோம் செகமதில் கீர்த்தியேற்பன்
வாமனன் தங்கையாளே வரைகுறோம் மேலுங்கேளே.

43. பூமியைக் கிருஷி செய்து பரிபாலிப்பான். ஆபரணுதிகளை அதிகம் சேர்ப்பான். உலகினருக்கு உதவி செய்வான். நிதானமான வார்த்தை களைக் கூற வல்லவன். தீங்கு இவனை அணுகாது. பூலோகத்தில் கீர்த்தி யைப் பெறுவான். வாமனுவதாரம் செய்த விஷ்ணுவின் ஸகோதரியான பார்வதியே! சொல்லுகிறோம். மேலும் கேட்பாயாக.

44. உதித்தசேய்ச் செனனகாலம் உயர்கேது திசையிருப்பு
மதித்திட ஆண்டுமாறும் வருந்திங்க ளொன்றேயாகும்
விதியினால் தேகபாதை விளைபுலம் பாக்கியம்சேரும்
அதிவித பெருமையுண்டு அவன் துணை விருத்தியாகும்.

44. பிறந்த குழந்தையின் ஜனன காலத்தில் உயர்ந்த கேது தசையில் இருப்பு சுமார் ஆறு வருஷம், மாதம் ஒன்று எனலாம். விதிவசத்தால் சரீர உபாதை ஏற்படும். நிலங்கள் நல்ல பலன்களைக் கொடுக்கும். அநேக விதப் பெருமைகள் உண்டு. அவனுடன் பிறந்தவர்கள் விருத்திக்கு வருவார்கள்.

45. சுயபந்து சூதமுண்டு துணைவியும் தோஷமாகும்
வியமுண்டு காலிபீடை மெல்லியாள் ரோகம்வாய்க்கும்
பயமன தாகநேரும் பகருவோம் விபரம்ரெண்டில்
கயமுகன் தன்னைப்பெற்ற காதலி மேலுங்கேளே.

45. சொந்தக்காரர்களின் ஆசௌசம் உண்டு. மனைவிக்கு (சகோதரிக்கு) தோஷம் ஏற்படும். கன்று காலிகள் பீடை ஏற்பட்டு விரயமாகும். பத்தினிக்கு வியாதி ஏற்படும். மனதில் பீதி ஏற்பட்டதனால் உண்டானது. இதன் விவரத்தைப்பற்றி இரண்டாம் பாகத்தில் கூறுவோம். கஜமுகனை விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே! மேலும் கேட்பாயாக.

46. வெள்ளிதசை இருபதாண்டும் விளம்புவோம் விசேஷ
[யோகம்
தெள்ளிய மனைவிவாய்க்கும் சுதர்களும் விருத்தியென்றோம்
கள்ளமே யில்லையம்மா கனதன மேன்மேலோங்கும்
உள்ளி துணைகட்கு உருஞ்சுப முண்டாமென்னே.

46. சுக்கிர தசை இருபது வருடமும் விசேஷமான யோகம் ஏற்படும் என்று சொல்லுவோம். அருமையான பத்தினி வாய்ப்பாள். பிள்ளைகளும் ஏற்படுவார்கள். (புத்திர பாக்கியம் அதிகம்.) பொய் ஒன்றுமே யில்லை. மேலான செல்வங்கள் விருத்தியாகும். உற்றார் உறவினருக்கு மிகுந்த சௌக்கிய முண்டாகும்.

47. மாதுரு குடும்பசூதம் வந்திடு மென்றுசொன்னோம்
மேதினில் தெய்வபக்தி விரைந்திருப் பணியும்நேரும்
மாதவர் உபதேசங்கள் வந்திடும் தீர்த்தநேரும்
மேதினில் தலங்கள்செல்வன் மெல்லியே மேலுங்கேளே.

47. மாதாவின் சம்பந்தமான ஆசௌசம் வந்திடும் என்று சொன்னோமல்லவா! உலகினில் தெய்வ பக்தி ஏற்பட்டுக் கடவுள் வழிபாடுகள் ஏற்படும். தபசிகளுடைய உபதேச மொழிகள் ஏற்படும். தீர்த்த யாத்திரைகள் ஏற்படும். உலகிலுள்ள சிவ ஸ்தலங்களைப் போய்த் தரிசிப்பான். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

48. தந்தைக்குத் தோஷமுண்டாம் சன்மானம் நேருமென்றோம்
சிந்தையும் தெய்வபக்தி திருப்பாட லதிகம்கேட்பன்
எந்திடம் பெருமையுண்டாம் இடறுகள் வந்துநீங்கும்
கந்தனைப் பெற்றமாதே கழறுவோ மிரண்டிலேதான்.

48. தந்தைக்குத் தோஷங்கள் நேரிடும். பிறரால் வெகுமானம் அளிக்கப்படும். மனதில் கடவுளிடம் உள்ள பக்தி ஏற்பட்டுக் கொண்டே யிருக்கும். கடவுள் சம்பந்தமான தோத்திரபாடங்களைக் கேட்பான். எங்குப் பார்க்கினும் பெருமை வந்து சேரும். சிரமங்கள் ஏற்பட்டு நீங்கிவிடும். முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே! மற்ற விவரங்கள் இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

ஜாதகம் 19

1. மதிரவி புகரும்புல்லம்[1] மன்னனும்[2] சீயமாக
புதன்குசன் தகரில்[3]புக்க பெண்ணினில் கருங்கோள்தங்க
முதுமகன்[4] வீணையாக மீனத்தில் சிகியும்தங்க
இதுவித கோளும்நின்று இலக்கினம் கொச்சை[5]தாவ.

1. சந்திரனும் சூரியனும் சுக்கிரனும் இடபத்திலும், வியாழன் சிம்மத்திலும், புதனும் செவ்வாயும் மேஷத்திலுமிருக்க, கன்னியா ராசியில் இராகுவும், மீனத்தில் கேதுவும், சனி பகவான் மிதுனத்திலும் தங்கியிருக்கும்படியான கிரக நிலை கொண்ட இந்த மேஷலக்கன ஜாதகனுக்குரிய பலன்களைச் சொல்லுவீர்.

கேது	லக்கினம் புதன் செய்வாய்	சந்திரன் சூரியன் சுக்கிரன்	சனி
	இராசி சக்கரம்		
			குரு
			இராகு

2. சொல்லுவீர் பலனையென்று சுந்தரி கேட்கும்போது
அல்லலைத் தவிர்க்குகின்ற அகஸ்தியர் கூறுகின்றார்
இல்லறம் கிழ்மேல்வீதி எமன்வாடை உத்திரமாயோன்
எல்லைமா காளிதந்தி இருந்திடும் தென்கீழ்தன்னில்,

2. என்று பார்வதி கேட்கும்போது, துன்பங்களைத் தீர்க்கும அகஸ்திய மகரிஷி சொல்லலுற்றார். இந்த ஜாதகனுடைய வீடு கிழக்கு மேற்கு வீதியில் இயமன் வாடையில் வடக்கில் விஷ்ணு கோவிலும் எல்லை அம்மனும், விநயகர் தென் கிழக்கிலும்,

---

1. ரிஷபம்
2. குருவும்
3. மேஷம்
4. சனி
5. மேஷம்

3. வடகிழ்பால் மாரியீசன் வரம்பெற்ற சூழி[1]யுண்டு
திடமிலா அருகர்வாய்வு தேவியு முனியும்[2]தெற்கில்
இடத்துக்குத் தெற்கிலீசன் இடிபடும் நதியுமுண்டு
துடந்ததோர் துருவம்[3] கீழ்பால் தோன்றிடும் சமவூர்
[தன்னில்,

3. வட கிழக்கில் அம்மன், சிவன் இவர்கள் கோவிலுமுண்டு. இது வரம் பெற்ற கோவில். அருகக் கடவுள் வாயுதிக்கிலும், தேவியும், புத்தரும் தெற்கிலும் கோவில் கொண்டுளார். இவ்விடத்திற்குத் தெற்கில் இடிந்த ஈசன் கோவில். அங்கிருந்து நதிக்கு ஒரு சந்து உண்டு. இத்தகைய விவரங்கள் கொண்ட சமவூரில்,

4. பிறப்பனும் கர்ணவம்சம் பேசுவோ மிவனின்யோகம்
சிறப்புள தந்தையோகம் தேவியும் களத்திரயோகம்
உரைக்கிறோம் துணைவர்யோகம் உதித்திடும் புத்திரயோகம்
விரவுடன் முன்பின்சென்மம் விளம்புவோ மின்னூல்
[தன்னில்.

4. ஜாதகன் கணக்கர் வமிசத்தில் பிறப்பான். இவனுடைய யோக விசேஷங்களைக் கூறுவோம். சிறப்புற்ற இவன் தந்தையின் யோகமும், தாய் மனைவி இவர்களுடைய யோகபாவமும், சகோதரர் ஏற்படும் புத்திர யோகமும், ஏற்பட்ட முன்பின் சென்மம் இவைகளையும் இந்தப் புஸ்தகத்தில் உரைப்போம்.

5. தந்தைகுணம் கூறுகின்றோம் எதிரிக்கஞ்சான்
தன்தேக மிருசிகப்பன் ஓடிச்சலுள்ளான்
தந்தையின்தன் ஆஸ்திதனை அடையானாகும்
சகலருக்கும் இவன்சொல்லே தாழ்வுறாது
தந்தன[4]மு முடையவனும் யூகையுள்ளான்
சர்ச்சனர்க ளூறவுகொள்வன் எவர்க்குநேயன்
தந்தமது தேய்வுடையன் தாம்பூலமிஷ்டன்
தரணிமன்னர் நேயமுள்ளான் தானும்சீலன்.

5. தகப்பனுடைய குணங்களைக் கூறுவோம். பகைவர்களைக் கண்டு பயப்படுவான். மாநிறங் கொண்ட சிவந்த தேகத்தை யுடையவன். ஓடிய ஓடிய இருப்பான். பூர்விக பிதிரார்ச்சிதத்தை அடைய மாட்டான்.

1. ஸ்தலம்
2. புத்தர்
3. ஒடுக்கமான பாதை.
4. தந்திரம்

யாரும் இவன் வார்த்தையை மேலாகக் கொள்ளுவார்கள். தந்திர முடைய வன். நல்ல மதியூகி. ஒழுங்காயிருப்பவர்களுடன் சிநேகம் செய்வான். யாவர்க்கும் நேசனுவன். தேய்ந்த பற்களுள்ளான். தாம்பூலம் தரிப்பதில் மிக்க விருப்ப முள்ளவன். பூலோக அரசரின் சிநேகத்தையுடையவன். இவனும் நல்ல குண சீலன்.

6. உவமையுள கதைகள்சொல்வன் பூமிசேர்ப்பன்
ஊர்க்கணக்குச் செய்திடுவன் சிலநாள்தானும்
தவமுடையான் பொருளிலிச்சை ததிநெய்நேயன்
தன்தெய்வம் சத்தியென்றேம் சாந்தமுள்ளான்
பவபித்த மூலகூடுடைய ஞருள்படியான்
ஏர்பெருக்கம் பந்துநேயன்
இவன்கரத்தில் தனரேகை வளர்ச்சியுண்டு
ஈகையினில் இடுக்கம்கொஞ்சம் என்பர்மேலோர்.

6. உபமான உபமேயங்களையுடைய கதைகளைச் சொல்லுவான். பூஸ்திதிகளைச் சேர்ப்பான். ஊர்க்கணக்குகளை எழுதுவான். சில நாட்கள் தானும் தபசு செய்வான். பொருளின்மேல் ஆசை யுள்ளவன். தயிர் நெய் இவைகளை அருந்துவதில் விருப்பம் கொண்டவன். தன்னுடைய குல தெய்வத்தின் சக்தி என்று சொல்லுவோம். சாந்தமுள்ளவன். பூர்விக பித்த மூல கூடுடையவன். கடவுள் பாதத்தில் மனதைச் செலுத்துவான். ஏர்கள் விருத்தியாகும். பந்துக்களால் போற்றப்படுவான்.

7. பதரிலான் நயவுரைப்பன் பாலர்க ளாசையுள்ளான்
விதியுளான் கதிதரும் கடவுள்பத்தி கழறுவோம் துணை
[வர்தன்னை
சதமுட னேழுவித்தி சத்தியு மொருத்திதீர்க்கம்
மதிசடை யணிந்தோன்தேவி மைந்தனும் நாலாம்செனமம்.

7. அல்பகுணமில்லாதவன். நயமாய்ப் பேசக்கூடியவன். குழந்தை களிடத்தில் பிரிய முள்ளவன். விதிவசத்தை நம்புகிறவன். மோட்ச சாதனத்தை அளிக்கும் கடவுளிடத்தில் பக்தி யுடையவன். சகோதரர்கள் ஏழு பேர்கள். சகோதரியும் ஒருத்தி நிச்சயம். சடா மகுடத்தில் பிறைச் சந்திரனை யுடைய பரமசிவனுடைய தேவியாகிய பார்வதியே! இவனுடைய பிரகிருத ஜன்மமும் நான்காவதாகும்.

8. பிறப்பனே என்றுசொன்னேம் பேசுவோ மவன்குணத்தைச்
சிறப்பான கல்விரெண்டு தேகமு மிருநிறத்தன்
தரைமிகத் தேடவல்லன் சற்சன ருறவுகொள்வன்
அரசர்பா லணிகியேதான் அவனுமே சீவிப்பானும்.

8. நான்காவது ஜன்மமெடுத்த இவனது குணங்களை விவரிப்போம். இரண்டுவித கல்வித்துறையில் பயிலுவான். பொது நிறமுள்ள தேகத்தை யுடையவன். பூமி சொத்துக்களை அதிகமாகத் தேடக் கூடியவன். குண வான்களுடைய சிநேகத்தைப் பெறுவான். அரசாங்கத்தில் உத்தியோகம் செய்து ஜீவிப்பான்.

9. பலவித லாபமுள்ளான் பஞ்சைமே லிரக்கமுள்ளான்
நலமுள பணிகள்சேர்ப்பன் நற்பரி சகடுமுள்ளான்
பலபல தேசம்செல்வன் பாரினில் புகழுமேற்பன்
கலகத்தில் மனம்வையாதான் காரியச் சமத்தனென்றேம்.

9. பல விதங்களில் இலாப மடைவன். ஏழைகளின்பேரில் இரக்க முள்ளவன். நல்ல ஆபரணாதிகளைச் சேர்ப்பான். நல்ல குதிரை, வண்டி இவைகளை யுடையவன். பற்பல தேசங்களுக்குச் செல்லுவான். உலகில் கீர்த்திமானவன். கலகஞ் செய்ய இஷ்டப்படான். பெரிய காரியவாதி. தன் காரியத்தைச் சாதிப்பதில் சாமர்த்திய முள்ளவன்.

10. சித்திர வீடுகொள்வன் தெளிவுளோ ரிஷ்டம்கொள்வன்
சுத்தமும் சிகிபொசிப்பும் சிந்தையு முடையனவன்
எத்தின காரியத்தை இடரிலா செயமேசெய்வன்
வித்தையால் கீர்த்தியேற்பன் மேதினில் டம்பனவன்.

10. அழகான வீட்டை யுடையவன். ஒழுங்கான பேர்களுடைய பிரியத்தைச் சம்பாதிப்பான். சுத்தமும், நல்லெண்ணமும், மனத்தூய்மையு முடையவன். எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதில் ஜயமடைவான். வித்தியா விநோதங்களில் மேன்மை யுடையவன். உலகில் டம்பாச்சாரி யாய்த் திரிவான்.

11. துணைவியை ஆதரிப்பன் சொல்லுமுன் கோபம்கொஞ்சம்
பிணையான புத்தியில்லான் பெரும்பொருள் ஞானம்கற்பன்
கனமுள குடும்பியாவன் கரமதில் சங்குசக்கரம்
தனமதைச் சேர்ப்பானென்றேம் சாற்றுவோம் துணைவர் [தன்னை.

11. பெண்டாட்டியை (சகோதரியை)க் காப்பாற்றுவான். கொஞ்சம் முன்கோபமுடையவன். பேத்துமாத்தலான புத்தியைக்கொண்டவனல்லன். வேதாந்தவிசாரம் செய்து தத்துவஞானத்தை யடைவான். பெரிய குடும்பத் தலைவனவன். கையில் சங்கரேகை, சக்கரரேகை யுள்ளவன். பணத்தைச் சேகரிப்பான் என்றேம். இனி, கூடப்பிறந்தவர்களுடைய செய்தி விவரம் கூறுவோம்.

(சக்கரரேகை = சக்கராகாரமான ஓரிரேகை. சங்கு சக்கரம் = சங்கு சக்கர வடிவான ரேகை. சங்கரேகை = ஒருவனது அதிர்ஷ்டத்தைக் குறிப்பதாகக் கருதப்படுவதும் சங்கின் வடிவாய்க் கையிலமர்ந்ததுமான ரேகை.)

12. பின்வரும் துணைவரில்லான் பேசுநேர் மூத்தோர்ஒன்று
அன்னவள் தீர்க்கமென்றேம் அவள்குண மறையக் [கேளாய்
கன்னென மொழியேசொல்வள் கல்வியு முடையளாகும்
உன்னத தேகமுள்ளாள் உண்மையா மனத்தளாகும்.

12. தம்பிகளில்லாதவன். இவனுக்கு நேர்மூத்தவள் ஒருத்தியுண்டு. அவள் திர்காயுசுடையவள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். கடுமையான வார்த்தைகளைக் கூறுவாள். கல்வி கேள்விகளில் வல்லவள். மேலான சரீர அழகுடையவள். சத்திய சீலமுடையவள். உண்மையான எண்ணங்களை உடையவள்.

13. வந்தவர்க் கன்னமீவள் வரனுக்கு நேயமுள்ளாள்
தந்தையி னூர்ச்சிதத்தில் தானவள் வாசமாகும்
முந்தியே வரன்தன்இல்ல மெய்துவாள் என்றுசொன்னேம்
பிந்தியும் தாயில்லத்தில் பேணுவா ளிவளேயென்றேம்.

13. வந்தவிருந்தினருக்கு அன்னமளிப்பாள். புருஷனிடம் பிரியமுள்ளவள். பிதிரார்ச்சிதத்தில் செலவுசெய்துகொண்டு வசிப்பாள். முன்பே புருஷன் வீட்டிற்கு வந்திடுவாள் என்று சொன்னேமல்லவா. பிற்காலத்தில் தாயின் வீட்டில்வந்து வாழ்வாளிவளே யென்றேம்.

14. அவளுக்குப் புத்திரபாகம் அறைகிறேம் ஆண்பாலிரண்டு
நவனியில் பெண்பால்மூன்று கூறுவோம் தீர்க்கமாகப்
பவமுள வரன்முன்னுகப் பாவையு மரணமாவள்
இவளுடைய பூர்வம்தன்னில் இயம்புவோம் கேளும்தாயே.

14. அவளுடைய புத்திரபாவத்தைக் கூறுவோம். ஆண்குழந்தைகள் இருவர். பெண்குழந்தைகள் மூவர். இவை தீர்க்கம். புருஷனுக்கு முன்பே சுமங்கலியாக இவள் இறப்பாள். இவளுடைய பூர்வோத்தரங்களைக் கூறுகிறேம். தாயே! கேளும்.

15. தக்கோலம் தன்னிலேதான் செங்குந்த மரபில்தோன்றி
மிக்கவே சுகங்களுண்டாய் வரன்சுத ருள்ளாளாகித்
தக்கவே பணிகளுண்டாய்ச் சகலர்க்கு நல்லோளாகி
ஒக்கவே முருகர்பக்தி உள்ளத்தி லிருத்தியேதான்,

15. தக்கோலம் என்ற இடத்தில் செங்குந்தமரபினில் உதித்து மேலான சுகங்களை அனுபவித்து, புருஷன் பிள்ளைகள் ஏற்பட்டு, தகுந்த ஆபரணாதிகளை யடைந்து, யாவர்க்கும் நல்லவளாகி, ஒத்திருக்கும்படியான முருகப்பெருமானிடத்தில் மனமார்ந்த பக்தியைச் செலுத்தியேதான்,

16. சாலைமார்க் கத்திலேதான் தாகப்பந் தலுமமைத்துச்
சீலமாய் வருவோருக்குத் தேவியும் தாகமீந்து
ஞாலமேல் மார்புநோயால்[1] நாயகி மரணமாகி
மால்மகன் வரியப்பட்டு வந்தவ ளிவளேயென்றோம்.

16. பாதைகள் ரஸ்தாக்கள் இவைநடுவே தண்ணீர்ப்பந்தல்கள் வைத்து, பெரியோருக்கு இவள் அன்னபானாதிகளைக் கொடுத்துவந்தாள். மார்புநோயினால் இவள் மரணமடைய, திருமால்மகனான பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தவள் இவள்தான் என்றோம்.

17. பின்சென்மம் அருணைநாட்டில் பிறப்பளே பிரம்மசேயாய்
அன்னையும் கேட்கலுற்றாள் அவளிந்த சென்மந்தன்னில்
என்னபுண் ணியங்கள்செய்தாள் இயம்புவீர் என்றுகேட்க
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

17. அடுத்த ஜன்மத்தில் திருவண்ணாமலையின் பக்கலில் பிராமண வமிசத்தில் பிறப்பாள். தேவியும் பின்வருமாறு வினவினாள். அவளிந்த ஜன்மத்தில் என்ன புண்ணியகாரியங்கள் செய்தாள், சொல்லுங்கள், என்று கேட்க, உத்தமனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

18. பொறுமையும் பெருமையுண்டாய்ப் புண்ணிய மனத்த
[ளாயும்
வருவோர்க்குத் தாகம்அன்னம் மனக்களிப் புடனேயீந்தும்
வரன்மனம் போலேவாழ்ந்து வருவதால் மறையோர்வம்சம்
விரைவினி லுதிப்பாளென்றோம் மேதினில் சுகமுள்ளாகி.

18. பொறுமையும் பெருமையு முடையவளாயும், தருமம்செய்ய விருப்பமுள்ளவளாயும், வருபவர்களுக்கு அன்னபானாதிகளைத் திருப்தியாக அளித்தும், புருஷன் குறிப்பறிந்து வாழ்ந்துவந்ததாலும் பிராமண வமிசத்தில் விரைவாக உதித்தாள் என்றோம். உலகில் சுகத்தை அனுபவித்தாள்.

19. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் ஒருபானெட்டில்
மேதினில் தெற்குதிக்கில் வித்தகி மாதுர்வர்க்கம்
கோதிலா வருவாளாகும் கூறுவோ மவள்குணத்தைத்
தீதிலா குணத்தாளாகும் செல்விநன் னடக்கையுள்ளாள்.

---

1. Heart failure (மார்பு அடைத்து)

19. ஜாதகனுடைய கல்யாணகாலத்தைக் கூறுவோம். பதினெட்டாவது வயதில் தெற்குதிசையில் இவனுடைய மாதாவின் வமிசத்தில் குற்றமில்லாத மனைவி வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். குற்றமில்லாத குணமுள்ளவள். இச்செல்வி நல்நடத்தையை யுடையவள்.

20. புத்திமான் அடக்கமுண்டு புருடனுக் கினியளாகும்
பத்திமான் பணிகள்சேர்ப்பள் பந்துபூ சிதமுள்ளாள்
வித்தகி யோகசாலி இளமன துடையளென்றோம்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தனம் மொழிகுன்றாது.

20. நல்ல புத்திசாலி. அடக்கமுடையவள். புருஷனுக்கு இனிமையாய் நடப்பாள். பக்தியுள்ளவள். ஆபரணங்களைச் சேர்ப்பாள். சொந்தக்காரர்களால் பூஜ்ஜியதையாக எண்ணப்படுவாள். இவள் நல்ல யோகசாலி. இளகும் மனதை யுடையவள். கடவுளைச் சேர்ந்த மாதே! சொன்னோம். சொன்னசொல் தப்பாது.

21. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் ஆபண்ணாலிரண்டு
சித்தமாய்ப் பெண்பாலவ்வாறு செப்புவோம் தீர்க்கமாக
சுத்தமா யிரண்டுசேதம் செப்புவோ மிவனுக்கேதான்
வெற்றிவே லவனைப்பெற்ற வித்தகி மேலுங்கேளே.

21. புத்திரபாக்கியத்தைக் கூறுவோம். ஆண்குழந்தைகள் இரண்டு. பெண்குழந்தைகளும் இரண்டு. இதைத் தீர்க்கமாய்ச் சொல்லலாம். இரண்டு குழந்தைகள் இவனுக்கே பிறந்து சேதமடையும். வெற்றிவேலாயுதக் கடவுளைப்பெற்ற பார்வதியே! மேலும் கேட்பாயாக.

22. மாதுரு குணத்தையாங்கள் வரைகிறோம் வாததேகி
மேதினி விருசிகப்பன் வித்தகி பொறுமைசாலி
சூதுக ளெண்ணாளாகும் சொல்லுமுன் கோபம்கொஞ்சம்
தீதுக ளில்லாளாகும் சுந்தரி அதிர்ஷ்டசாலி.

22. மாதாவின் குணத்தைக் கூறுவோம். வாதசரீர முடையவள். பொதுநிறங் கொண்டவள். பொறுமை யுடையவள். சூதுகளை நினைக்க மாட்டாள். முன்கோபம் சிறிதுண்டு. கெடுதல்களில்லாதவள். இச்சுந்தரி அதிர்ஷ்டசாலியாவள்

23. அன்னங்கள் போடவல்லாள் அவள்பல யீனமுள்ளாள்
பின்னமில் லாததேகி பிரியமாய்ப் பேசவல்லாள்
முன்னவள் குடும்பியாவள் இடருன புத்தியில்லாள்
அன்னவள் துணைவர்தன்னை அறைகுறோம் கேளும்தாயே.

23. அன்னபானுதிகள் அளிக்க வல்லவள். மிக்க பலஹீனமாயிருப்பாள். பின்னமில்லாத தேகத்தை யுடையவள். பிரியமாய்ப் பேசக்கூடியவள். முதலில் குடும்பி ஆவாள். கெடுதலான புத்தி யில்லாதவள். அவளுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிறோம். தாயே! கேளும்.

24. துணைவர்க ளிருநான்காகும் சொல்லுவோ மாண்பால்மூன்று
கடமுடன்[1] பெண்பாலொன்று கழறுவோம் தீர்க்கமாகப்
பிணையாகு மற்றதெல்லாம் பிறந்தஇல் தெற்கேயாகும்
அணையவே அரசன்பூர்வம் அறைகுறோம் கேளும்தாயே.

24. கூடப்பிறந்தவர்கள் எட்டுப்பேர்கள். ஆண்பால் மூவர். மஞ்சள் பூசிய பெண் ஒருத்தி. இவர்கள்தான் தீர்க்கம். மற்றவை சேதமாகும். பிறந்த வீடு தெற்கு திக்கிலுள்ளது. அரசனுடைய பூர்வோத்தரத்தைக் கூறுகிறோம். கேளும், தாயே!

25. கச்சிக்கு[2] மேற்கிலேதான் கனமிலா சிற்றூர்தன்னில்
இச்சையாய் வன்னியவம்சம் இவளுமே உதித்தாளென் [றோம்
துச்சமாய்க் குணங்களின்றிச் சுதர்களும் வரனுமுண்டாய்
அச்சமில் லாமல்வாழ்ந்தாள் யாவர்க்கு நல்லோளாகி,

25. காஞ்சீபுரத்திற்கு மேற்கேயுள்ள சிறிய ஊரில் வன்னியர்குலத்தில் இவளுமே உதித்தாள் என்றோம். கேவலமான குணங்களின்றி, புருஷனும் பிள்ளைகளும் ஏற்பட்டு, பயமில்லாமல் வாழ்ந்துவந்தாள். எல்லாருக்கும் நல்லவளாகி,

26. தென்திசைத் தலங்கள்யாவும் சென்றுமே தீர்த்தம் [தோய்ந்து
அன்புடன் சேதுபுக்கி அரிலிங்க மர்ச்சித்தேத்திப்
பின்பவள் உள்ளூர்சென்று பின்சில நாளிருந்து
துன்மையாய் மறலிபக்கம் தோன்றினு ளிவளேயென்றோம்.

26. தெற்குதிக்கிலுள்ள ஸ்தலங்கள் எல்லாம் போய்த்தரிசித்து, தீர்த்தாடனங்கள் செய்து, அன்புடன் ராமேசுவரம் சென்று, ராமலிங்கத்தை அர்ச்சித்துப்போற்றி, பிறகு அவள் தன் ஊர்சென்று, பின்பு சிலகாலம் வாழ்ந்து, தூய்மையாய் எமலோகம் சென்றாள்.

---

1. மஞ்சள்பூசிய
2. காஞ்சீபுரத்திற்கு

27. கஞ்சனல் வரியப்பட்டுக் காதலி சிற்றூர்தன்னில்
மிஞ்சிய கர்ணவம்சம் வித்தகி யுதித்தாளென்றேம்
வஞ்சியு முத்திரத்தில் வரனிடம் சேர்ந்தபின்பு
மிஞ்சியே யோகமுண்டாம் விளைபுல மதிகமாகும்.

27. பிரம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டு, காதலி சிறிய ஊரில் மேலான கணக்கர் வம்சத்தில் இவள் உதித்தாள். அவளும் உத்திரநட்சத்திரத்தில் கலியாணம் ஆனபின்பு மேலான யோகவிசேஷத்தை யடையவாள். விளையும் நிலம் அதிகமாகும்.

28. சுகமுடன் வாழ்வாளாகும் சொல்லுவோ மவள்பின் [சென்மம்
தகமையாய் வேலாங்காட்டில் சத்திரிய குலமுதித்து
வகையான வரனுண்டாகி அரசர்பால் சீவிப்பானும்
செகமதில் பெருமைபூண்டு செல்வதி வாழ்வாளாகும்.

28. சுகமாக வாழ்வாள். சொல்லுவோம் அவளுடைய அடுத்தஜன்மத்தைப்பற்றிய விவரம். பொருத்தமாய்த் திருவாலங்காட்டில் க்ஷத்திரியகுலத்திலுதித்து, ஏற்பாடான புருஷனும் அமைந்து, அரசர்களை அண்டி ஜீவிப்பான். உலகினில் கௌரவமடைந்து செல்வமுடைய இவள் வாழ்ந்துவந்தாள்.

29. இவன்பிதா பூர்வந்தன்னை இயம்புவோம் பட்சிமேல்பால்
அவனியில் பேரூர்தன்னில் அவன்கங்கை குலமுதித்துப்
பவமுள பூமியுண்டாய்ப் பத்தினி மதலையுண்டாய்
நவனியில் சுகமாய்வாழ்ந்து நக்கனை[1] பூசைசெய்து,

29. இவனுடைய பிதாவின் பூர்வோத்தரங்களை உரைப்போம். திருக்கழுக்குன்றத்திற்கு மேற்கே உள்ள பேரூரில் வேளாளர் குலத்திலுதித்து, பூர்விக பூஸ்திதி ஏற்பட்டு, பெண்டாட்டி பிள்ளை ஏற்பட்டு, சுகமாய்வாழ்ந்து, சிவபூஜை செய்து,

30. அவ்வூரில் கணேசன்கோஷ்டம் அவன்திருப் பணியும்செய்து
ஒவ்விய சேதுதீர்த்தம் உரைந்துபின் மரணமெய்தி
நவ்விய பிரமனலே நாயகன் வரியப்பட்டுப்
பவ்வமாய்க் கர்ணசேயாய்ப் பாரினில் வந்தானென்றேம்.

30. அவ்வூர் விநாயகர்கோவிலில் திருப்பணிகள்செய்து, பிறகு சேதுஸ்நானம்செய்து, பின்பு மரணமடைந்தான். பிரம்மா பிரியப்பட்டு இவனைச் சிருஷ்டிக்க, பவ்வியமான கணக்கர் வமிசத்தில் புத்திரனுய்ப் பூமியில் அவதரித்தான்.

1. சிவனை

31. வந்தவ னிச்சென்மத்தில் வளமுள குடும்பியாகித்
தந்தையி னுஸ்தியின்றித் தான்சுய பூமிபெற்றுச்
சந்ததம் தனங்களுண்டாய்த் தானவன் வாழ்வானுகும்
இந்தவாறு முனிவர்கூற ஈச்வரி கேட்கலுற்ருள்.

31. அப்படி உதித்தவன் இந்த ஜன்மத்தில் வளப்பம்பொருந்திய குடும்பியாகி, பிதிரார்ஜிதத்தோடு தன் சுயபூஸ்திதியையும் பெற்று, எப்பொழுதும் தனசம்பத்துக்களைப்பெற்று வாழ்வானுகும். இப்படி முனிவர் சொல்ல, ஈசுவரி கேட்கலுற்ருள்.

32. தந்தையி னுஸ்திகாணுன் சாற்றினீர் முனியேநீதான்
முந்திய முன்சென்மந்தன்னில் மூழிலா வந்தானென்றீர்
அந்ததோர் சேதிசொல்வாய் அவனுமுன் சென்மந்தன்னில்
கந்தன்தன் மூத்தோன்கோஷ்டம் காளேயும் செய்துவைத்து,

32. தந்தையின் சொத்தைக் காணமாட்டான் என்று சொன்னீரே! முனிவரே! முதலில், முன்ஜன்மத்தில் ஒன்றுமில்லாமல் உதித்தானென்றீர். அந்த ஒரு சேதியைச் சொல்லுவீர் என்ருள். அவனும் போன ஜன்மத்தில் பிள்ளேயார் (கந்தனுக்குமூத்தோன்) கோவில்கட்டி, முருகனின் கோவிலும் செய்துவைத்து,

33. இவன்பின்னுல் பூசைதீபம் பாடது செய்யாததாலும்
தவசியே தந்தையாஸ்தி தானவர்க் கில்லேயென்ருேம்
நவனியில் துணேவர்சேதம் நாயகன் தனியனுவன்
இவனுட பின்சென்மத்தை இயம்புவோம் கேளும்தாயே.

33. இவனுக்குப் பின்பு பூஜை, தீபம், வழிபாடு முதலியன செய்யாததனுலும், தபசியே! தந்தையின் சொத்தை அவன் அடையவில்லே என்ருேம். பூமியில் சகோதரர் நஷ்டம் ஏற்படும். இவன் பணக்காரனுவன். இவனுடைய மறுஜன்மத்தைச் சொல்லுகிருேம். தாயே! கேளும்.

34. வடக்கில்கோ கர்ணம்தன்னில் மறைகுல முதித்துமேலும்
அடவுட னரன்தன்பூசை அவனுமே செய்வானுகும்
மடக்கொடி கேட்கலுற்ருள் மந்தனு மிச்சென்மத்தில்
திடமுள புண்ணியமென்ன செய்தனன் மறையோனுக.

34. வடக்கே கோகர்ணக்ஷேத்திரத்தில் பிராமணகுலத்திலுதித்து மேலும் ஒழுங்காகச் சிவபூஜைசெய்து வருவான். உடனே பார்வதி கேட்பாள். இவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியகாரியங்கள் யாவை? எதனுல் மறையோனுக அவதரித்தான்?

35\. சொல்லுவேன் கேளுமம்மா சுதனுமே யிச்சென்மத்தில்
புல்லிய புத்தியின்றிப் புராந்தகன் பூசைபூண்டு
அல்லல்கள் ஒருவர்க்கெண்ணுன் அடர்நிந்தை சொல்லாத [தாலும்
நல்லவன் பொறுமையுண்டாய் நாட்டினி லிருப்பதாலே,

35\. சொல்லுவேன். கேளம்மா! இவன் இந்த ஜன்மத்தில் கெட்ட புத்தியில்லாமல், பரமசிவனைப் பூஜைசெய்தும், பிறருக்குத் தீங்கிழையாமலும், அடாத பழிவார்த்தைகளைச் சொல்லாததனுலும் இவன் மிக்க நல்லவனுய் இருப்பதனுலே,

36\. பிறப்பனே மறையோனுகப் பேசினேம் சாதகர்க்குத்
திறமையாய்ப் பூர்வம்தன்னைச் செப்புவோம் வாழைநாட்டில்
தரைமக னுக[1]த்தோன்றிச் சற்சன ருறவுகொண்டு
குரவர்பால் செட்டுச்செய்து குழவிகள் மனைவியுண்டாய்,

36\. பிராமணனுய்ப் பிறப்பான் என்று பேசினேம். ஜாதகனுக்குத் திறமையுடன் பூர்வஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். வாழை மரங்கள் பயிர்செய்யப்படும் நாட்டில் மனிதனுகப் பிறந்து உயர்ந்தோர் சிநேகம்பூண்டு அரசாங்கத்தில் வியாபாரம்செய்து, பெண்டாட்டி பிள்ளை முதலியோர் ஏற்பட்டு,

37\. பூமியு மேர்ப்பெருக்கம் புகழுண்டாய்ப் பலருமெச்ச
நேமியில் நல்லோனுகி நிமலனைப் பூசைசெய்து
தீமையாங் குணங்களின்றிச் செல்வனும் வாழ்ந்துபின்பு
தாமத மறலிபக்கல் சார்ந்தன னிவனேயம்மா.

37\. பூஸ்திதியும் ஏர்களும் பெருகி, புகழ் ஏற்பட்டு, யாவரும் மெச்சும்படி பூமியில் நல்லவனுகி, கடவுளைப் பூஜைசெய்து, கெட்டகுணங்களில்லாமல் இச்செல்வன் வாழ்ந்துவந்தான். பிறகு எமலோகம் சேர்ந்தானிவனே அம்மா!

38\. பிரமனுல் வரியப்பட்டுப் பிறந்தவனிவனே யென்றேம்
அறைகிறே மிச்சென்மத்தில் அரசர்பா லணுகியேதான்
குறைவிலாச் செல்வம்பெற்றுக் குலத்துளோர் தனக்கு [மேலாய்ப்
பிறைய்து போலயோகம் பேசுவோம் இவனுக்கேதான்.

38\. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவன் இவன்தான். இந்த ஜன்மத்தில் அரசரிடம் சென்று குறைவற்ற செல்வத்தைப் பெற்று,

1\. மனிதன்

தன் குலத்திலுள்ளவர்களுக்கு மேலாக, பிறைச்சந்திரனைப்போல் மேன் மேலும் யோகவானுவான். அதைக் கூறுவோம்.

39. இருபது ஆண்டுமேலாய் இயம்புவோம் ராசயோகம்
நிறையவே அதிகாரங்கள் நிகழ்த்துவான் பூமிசேர்ப்பான்
திருமகள் வாசமுள்ளான் சென்றிடம் பெருமைபூண்பன்
பெருகிடும் பணிகள்பாக்கியம் பிரபல மாகவாழ்வன்.

39. இருபதாவது வயதிற்குமேல் ராஜயோகம் ஏற்படும் என்று சொல்லுவோம். அதிகமான அதிகாரமும் செல்வாக்குமுடையவன். பூஸ்திதியை விருத்திசெய்வான். இலட்சுமி கடாக்ஷமுடையவன். போன விடந்தோறும் பெருமையை யடைவான். பாக்கியமும் பூஷணங்களும் விருத்தியாகிப் பிரபலமாக வாழ்ந்துவருவான்.

40. பகையவ ரில்லானுகும் பருகினும் செயமேயுண்டு
அகமது சித்திரம்செய்வன் அனேகரும் வணங்கவாழ்வன்
குகபர னன்புபூண்டு ஏருகள் ஆள்பெருக்கம்
தலைமையாய்ச் சோலைசெய்வன் சங்கரி மேலுங்கேளே.

40. பகைவர் என்பவர் இவனுக்கில்லை. எதிலும் ஜயக்கொடியை நாட்டுவான். மனதில் கவனம் சித்திரிப்பான். பலர் இவனடி வணங்கும்படி வாழ்வான். முருகக்கடவுளிடம் பக்திபூண்டு, ஏர்கள், பண்ணையாட்கள் இவர்களுடைய விருத்தியை யடைவான். அருமையான சோலைகளை ஏற்படுத்துவான். சங்கரி! மேலும் கேட்பாயாக.

41. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பான்மூன்றில்
சந்தத மேடமாதம் சாற்றினேம் கெண்பத்தானும்
மந்திரி தசையிலேதான் மாலவன் பொசிக்குநாளில்
விந்தையாய் மரணமெய்தும் வித்தகி கேட்டிடாயே.

41. தந்தையின் மரணகாலத்தைக் கூறுவோம். ஜாதகனுடைய முப்பத்துமூன்றும் பிராயத்தில் சித்திரை மாதத்தில் எண்பது வயதுள்ள பிதா வியாழதசையில் புதன்புக்தி நடக்கும்போது வேடிக்கையாய் மரணமடைவான். பார்வதியே! கேட்பாயாக.

42. அன்னையு முப்பான்ரெண்டில் ஆவணி மாதம்தன்னில்
தன்னிலே வாய்வுநோயால் சாற்றினேம் கெண்டம்தானும்
பின்னையும் துணைவிகட்குப் பேசுவோம் நாற்பானெட்டில்
உன்னத மரணமாகும் உத்தமி கேட்டிடாயே.

42. இவன் தாயும் இவனது முப்பத்திரண்டாம் பிராயத்தில் ஆவணி மாதத்தில் வாயு உபத்திரவத்தினுல் கண்டம் ஏற்பட்டு இறப்பாள்.

பின்பு இவன் மனைவியின் மரணத்தைப்பற்றிப் பேசுவோம். இவனது நாற்பத்தெட்டாவது பிராயத்தில் மேலான மரணத்தை அடைவாள். உத்தமி! இதைக் கேட்பாயாக.

43. சாதகன் மரணகாலம் சாற்றுவோம் அறுபானாறில்
தீதிலா தனுசுமாதம் திருவாதிரை நாளிலேதான்
கோதிலா சுரத்தினாலே குறித்தனம் உடலம்வாடும்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

43. ஜாதகனுடைய மரணகாலத்தைப்பற்றிக் கூறுவோம். இவனது அறுபத்தாறும் வயதில் குற்றமற்ற மார்கழித்திங்களில், மேலான திருவாதிரை நட்சத்திரத்தில் குற்றமற்ற சுரத்தினால் இவன் உடல் உலகைவிட்டு நீங்கும். பேரானந்தத்தை அளிக்கும் முருகக்கடவுளைப்பெற்ற புண்ணிய சாலியாகிய பார்வதியே! கேட்பாயாக.

44. மறுசென்மம் கலிங்குநாட்டில் மன்னர்கள் குலமுதித்துப்
பெருமையும் புகழுமுண்டாகிப் பிரபல குடும்பியாகிக்
கரிபரி யுடையனாகிக் காவலன் வாழ்வானாகும்
அறுமுகன் தன்னைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

44. இவனது அடுத்த ஜன்மம் கலிங்கதேசத்தில், இராஜவமிசத்தில் ஏற்படும். அவன் பிறந்து பெருமையையும் புகழையும் பெற்று, பிரபலமான குடும்பத்திற்குத் தலைவனாகி, யானை, குதிரை இவைகளையுடையவனாய் வாழ்ந்து வருவான். ஆறுமுகக்கடவுளைப் பெற்றெடுத்த அம்பிகையே! கேட்பாயாக.

45. பிறந்தசேய்ச் செனனகாலம் மறைதசை தனிலிருப்புச்
சிறந்திடு ஆண்டுரெண்டும் செப்புவோம் பலனையாங்கள்
பிறந்தவன் தனக்குரோகம் புக்கியே நிவர்த்தியாகும்
திறமான பூமிசேரும் செனமது வசியமாகும்.

45. இவன் பிறந்த காலத்தில் குருதசையில் இருப்பு இரண்டு வருடம் தான். அதன் பலனை யாங்கள் கூறுவோம். ஜாதகனுக்கு ரோகம் ஏற்பட்டு நிவிர்த்தியாகும். நல்ல மேன்மைபொருந்திய நிலபலன்களை அடைவான். பொதுஜனங்களை வசியப்படுத்துவான்.

46. காலிகள் சேதமாகும் களவினால் தானியசேதம்
வேல்விழி மாதுர்வர்க்கம் விளம்பினோம் சூதகங்கள்
ஆலம்போல் பகைவருண்டு அவர்களும் சீரணிபர்[1]
கோலமாய்ப் பின்பாகத்தில் குறிக்கிறோம் விபரமாக.

1. மூத்தோர்கள்

46. பசுக்கூட்டங்கள் சேதமடையும். திருடர்களால் தானியம் சேதமாகும். அன்னைவழிசுத்தாரால் ஆசௌசம் எற்படும். கொடிய பகைவர்கள் இவனுக்குண்டு. அவர்களும் வயதான முதியோர்கள். இதன் விவரம் அழகாக பின்பாகத்தில் கூறுவோம்.

47. மொத்தமா யாஸ்திதன்னை மொழிகுவீர் முனியேயென்றாள்
சுத்தமாய்ச் சொல்லுகின்றேன் சொர்ணமும் பணிகள்
[பூண்டு
சித்திர வீடுயாவும் செப்புவோம் பதினாயிரம்பொன்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தனம் மொழிகுன்றாது.

47. இவனுடைய ஆஸ்திகள் மொத்தத்தில் எவ்வளவு இருக்குமென்று, முனிவரே! சொல்லுங்கள், என்று பார்வதி கேட்க, ஒழுங்காகச் சொன்னால் தங்கமும், ஆபரணாதிகளும் பூண்பான். அழகான வீடுண்டு. மற்றவையெல்லாம் சுமார் பதினாயிரம் பொன் பெறும். பகவானை அடைந்த லட்சுமியே! சொன்னோம் இவ்வாறு. இது தப்பாது.

ஜாதகம் 20

1. பொன்குசன் மீனமாக புதன்ரவி மேடமாகச்
சந்திரன் துலையிலாகச் சனிதேளில் புகரும்வீணை
மந்தர கயறுசியம் மற்றசெம் பாம்புசாடி
இந்தவாறு கிரகம்நின்று இலக்கினம் மேடமாக.

1. வியாழனும் செவ்வாயும் மீனத்திலும், புதனும் சூரியனும் மேடத்திலும், சந்திரன் துலாத்திலும், சனி விருச்சிகத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், ராகு சிம்மத்திலும், கேது கும்பத்திலும் இருக்கும்படியான கிரகநிலையைக்கொண்ட மேஷலக்ன ஜாதகத்திற்கு,

குரு செவ்வாய்	லக்கினம் புதன் சூரியன்		சுக்கிரன்
கேது	இராசி		
	சக்கரம்		ராகு
	சனி	சந்திரன்	

2. பலன்தனைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும்போது
நலமுள பராசர்சொல்வார் நாட்டுவா மாண்பால்சென்மம்
குலவிய தந்தையில்லம் கூறுவோம் வடதென்வீதி
தலவாசல் கிழக்குபார்வை தானெதி ரில்லமில்லை.

2. பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது, நன்மையாய்ப் பராசரமகரிஷி சொல்லலுற்றார். ஜாதகன் ஆண்பால் ஜன்மம். பிறந்து வசித்த தகப்பன்வீடு எங்குள்ளது என்று கூறுவோம். தெற்கு வடக்கு வீதியில் கிழக்கு வாசல் பார்த்த வீடு. எதிரில் வேறு வீடுகள் இல்லை.

3. குணக்கினில் ஈசன்மாயோன் கூறுவோம் துருவம்ஓடும்
பிணக்கான அருகர்உத்திரம் பூதவா கனத்தான்மாரி
இணக்கமாய்த் தென்கீழ்வாசம் ஈச்வரி தெற்கில்தங்கும்
கனக்கவே நதியுமுண்டு கழறுவோ மேலுங்கேளே.

3. கிழக்கே விஷ்ணு ஆலயம். அதன் பக்கலில் ஒரு சந்து. அதன் அருகில் வடபக்கத்தில் அருகக்கடவுள் கோவில் கொண்டுளார். தென் கிழக்கே விக்னேசுவரர் கோவிலும், தெற்கில் அம்மன்கோவிலும் உண்டு.

பெரியநதி அங்கே பாய்கின்றது. மேலும் சொல்லுவோம். பார்வதி! கேட்பாயாக.

4. இன்னமும் சோலையுண்டு எழில்பல தேவர்வாசம்
அன்னையால் பாடல்பெற்ற அழகிய சமவூர்தன்னில்
உன்னத தந்தையில்லம் உரைக்கிறோ மவ்வூர்தன்னில்
மன்னிய தாய்தனில்லம் வரைகிறோம் வடகீழ்தன்னில்.

4. இதைத் தவிர சோலையும் உண்டு. மேலானகடவுளர்வாசஸ்தானம். பெருமைமிக்க தந்தையின் இருப்பிடம். தேவியால் பாடல்பெற்ற அழகிய சமவூர் ஸ்தலமாகும். அவ்வூரில் ஜாதகனின் தாயார்வீட்டைப்பற்றி விவரிப்போம். அது வடகிழக்கே உள்ளது.

5. இவ்வித அடையாளத்துள் இளவலும் செனனமாறுன்
பவ்வமா யிவனின்யோகம் பருகிய அன்னையோகம்
ஒவ்விய தந்தையோகம் உரைக்கிறோம் மனைவியோகம்
நவ்விய முன்பின்சென்மம் நாட்டுவோ மின்னூல்தன்னில்.

5. இவ்வடையாளங்கள் கொண்ட இடத்தில் இந்த ஜாதகன் ஜனித்தான். இவனுடைய கர்மயோகமும், பெற்றெடுத்த தாயின்யோகமும், மனைவி யோகமும் பொருந்திய முன்பின் ஜன்மங்களைப்பற்றியும் இந்த நூலில் விவரிப்போம்.

6. தந்தையின் வர்க்கம்தன்னைச் சாற்றுவோம் பதினொன்றுகும்
நொந்திடும் சிலதுஎன்றோம் நிகழ்த்துவோம் தந்தைசேதி
பந்தமா யிருநிறத்தான் பாரெலாம் திரிவானுகும்
சந்ததம் கபடமில்லான் சகலர்க்கு நல்லோனுவன்.

6. தந்தையின் குடும்பத்தைப்பற்றிக் கூறுவோம். அது பதினோறு பேர்கள் கொண்டது. சில சேதமாகும் என்றோம். தந்தையின் செய்தியைக் கூறுவோம். மாநிறமுள்ளவன். உலகெங்கும் சுற்றித் திரிவான். எப்பொழுதும் மனதில் கபடமில்லாதவன். யாவர்க்கும் நல்லவனுவன்.

7. பொருளதைத் தேடுவானும் பின்பதைச் செலவுசெய்வன்
குறையான மனத்தனுகும் குலமதில் குற்றமுள்ளான்
வருந்துணை யவளாலேதான் வந்திடு நிந்தைதானும்
திருகது சொல்லானுகும் சுகிபொசிப் புடையனென்றோம்.

7. பணத்தைச் சம்பாதிப்பான். பிற்பாதியைச் செலவு செய்வான். மனத்தாங்கலுடையவன். குற்றமுள்ள வமிசத்திலுள்ளவன். தன் சகோதரியினுல் அவதூறு ஏற்படும். பேத்துமாத்தல் செய்யான்; சொல்லவும் மாட்டான். சுசிருசியாயிருப்பான். சுகமாக வாழ்வான் என்றோம்.

8. சேத்திரம் சிலதுபேர்க்குச் செய்குவான் பொறுமை
[யுள்ளான்
ஏத்தவர்க் குதவிசெய்வன் இதரதே சங்கள்செல்வன்
பாத்திர மறியவல்லன் பகைவரை வசியம்கொள்வன்
சூத்திர மறியவல்லன் துணைவர்பால் சேரானென்றேம்.

8. சிலபேருக்கு வீடுகட்டிக் கொடுப்பான். பொறுமை யுடையவன். தருதியாயுள்ளவர்க்கு ஒத்தாசை செய்வான். வேறு தேசங்களுக்குச் செல்வான். மனிதர்களுடைய தாராதரமறிவான். பகைவரைத் தன்வசப் படுத்துவான். சாஸ்திரதத்துவங்களை (இரகசியமான நுட்பங்களை) நன்கு அறிவான். உடன்பிறந்தவருடன் சேரமாட்டான் என்றேம்.

9. இக்குண முடையோனுக்கு இவனுமே சேஷ்டனாக
மிக்கவே யுதிப்பானாகும் விளம்புவோ மிவன்குணத்தைச்
சிக்கெனப் பொருளும்சேர்ப்பன் தீரமா நெஞ்சுமுள்ளான்
நக்கன்மேல் பக்திகொள்ளான் நவிலுவான் பொய்கள்
[தானும்.

9. இப்படிப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு நம் ஜாதகன் மூத்த குமாரனாக மேன்மையாய் அவதரிப்பான். இவனுடைய குணங்களை விவரிப்போம். செட்டுங்கட்டுமாய்ப் பணத்தைச் சேர்ப்பான். தைரியமுள்ள மனதை யுடையவனவன். பரமசிவன்மேல் பக்தி கொள்ளான். பொய் பேசுவான்.

10. தந்தைதாய் விரோதமாவன் தன்கரம் சுழியுமுள்ளான்
நொந்திடு மனத்தனாகும் நேமியில் நிந்தையுள்ளான்
சந்தத மூர்க்கமுள்ளான் தன்பந்து பகையுமாவன்
சிந்தையு மர்மமுள்ளான் தேவியா ல்வமானத்தான்.

10. தாய் தந்தையருடைய விரோதம் கொள்ளுவான். தன்கையில் ஒரு சுழி (சக்கரம்) உடையவன். மனக்கிலேசமுடையவன். இவனைப்பற்றி உலகினில் பல அவதூறான வார்த்தைகள் பேசுவார்கள். எப்பொழுதும் முரட்டுத்தனமுள்ளவன். பந்துக்களின் பகைமையைச் சம்பாதிப்பான். மனதில் கபடமுடையவன். பெண்டாட்டியினால் அவமானமடைவான்.

11. பயிர்த்தொழில் செய்வானாகும் பாருகள் விருத்திசெய்வன்
நயமிலா வார்த்தைசொல்வன் நாட்டினில் சல்லியமில்லான்
அயலார்பொ னிச்சையில்லான் அவன்சொல் லிரண்டு
[முள்ளான்
கயவர்போல் கீர்த்தியேற்பன் காதலி மேலுங்கேளே.

11. நிலங்களைக் கிருஷிசெய்வான். பூமிகளைச் சேர்த்து விருத்திக்குக் கொண்டுவருவான். கடுமையான வார்த்தைகளைச் சொல்லுவான். ஊரில் கடன் வாங்கமாட்டான். பிறருடைய சொத்துக்கு ஆசைப்படமாட்டான். இரண்டு விதமான பொருள்படும்படி வார்த்தைகளைப் பேசுவான். போக்கிரிகள்போல் பெருமையைப் பெறுவான். தாயே! மேலும் கேட்பாயாக.

12. இன்னவன் துணைவர்தன்னை இசைக்கிறோம் மூத்தோர் [காணோம்
தன்னிலே யிளையோருண்டு சல்தியில் நஷ்டமென்றோம்
அன்னவன் தனியாய்வாழ்வன் அறைகிறோம் மணத்தின் [காலம்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

12. இவனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். இவனுக்குப் பெரியவர்கள் இல்லை. தம்பி, தங்கை உண்டு. சீக்கிரம் சேதமாகும். அவன் தனியே ஏகபுத்திரனாய் வாழ்வான் என்று சொல்லுவோம். அவனுடைய கலியாணகாலத்தைப்பற்றிக் கூறுவோம். உத்தமனைப் பெற்றெடுத்த உத்தமியே! கேட்பாயாக.

13. இருபத்து இரண்டுஆண்டில் இவனுக்குப் பாரிவாய்க்கும்
வருமனை யவள்தன்சேதி வரைகிறோம் சிவந்தமேனி
திருமக ளொப்பதாகும் செல்வியும் சமதேகத்தாள்
பெருவிழி நற்குணத்தாள் பூமியில் நிந்தையுள்ளாள்.

13. இவனது இருபத்திரண்டாம் வயதில் பெண்டாட்டி வருவாள். வரும் மனையாட்டியைப்பற்றிய விவரம் கூறுவோம். சிவப்பு நிறமுடையவள். லட்சுமியைப் போலிருப்பாள். சமமான தேகத்தையுடையவள். பெரிய கண்களை யுடையுவள். நல்ல குணமுடையவள். உலகில் பலர் நிந்தை மொழிகளைக் கூறுவாள்.

14. நடையது நல்லதாகும் நாயகி கோபமுள்ளாள்
விடவுரை பகர்வாளாகும் வீட்டுக்குப் பகையாவள்
....
அடைமொழி அதிகம்சொல்வள் அம்பிகை யாளேகேளாய்.

14. நல்ல நடத்தையை யுடையவள். கோபமுள்ளவள். கொடிய வார்த்தைகளைப் பேசுவாள். வீட்டில் எல்லோரும் விரோதமாயிருப்பார்கள். பழஞ்சொற்களையும், விசேடணப்பொருள்மொழிகளையும் கூறுவாள். அம்பிகையே! கேட்பாயாக.

15. அவளுட் துணைவர்தன்னை அரைகிறோம் ஆண்பால்ரெண்டு
நவனியில் பெண்பாலொன்று நாட்டுவோம் திர்க்கமாக
இவர்களு முள்ளூர்உத்திரம் இருப்பளாம் என்றுசொன்
[னோம்
பவமுள புத்திரபாகம் பகருவோம் கேளும்தாயே.

15. அவளுடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவாம். சகோதரர் இரண்டு பேர்கள். சகோதரி ஒருத்திதான் என்று நிச்சயமாய்ச் சொல்லு வோம். இவர்களும் அதே ஊரில் வடக்குப்பாகத்தில் இருப்பார்கள் என்று சொன்னோம். புண்ணியமான புத்திரபாவத்தைக் கூறுவோம். தாயே! கேளும்.

16. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலத்தைக்காணோம்
சித்தமா யுதித்தாலுந்தான் தீங்காகு மென்றுசொன்னோம்
வித்தகர் பராசர்சொல்ல விருத்தரும் கூறுகின்றார்
சித்தமாய்ப் புதல்வர்தோஷம் செப்புவீர் முனியேநீதான்,

16. புத்திரபாக்கியத்தைச் சொல்லுவோ மென்றால், பலத்தைக் காணோம். அப்படியே ஏற்பட்டாலும் தீங்காய் முடியும் என்று சொன் னோம், என்று வித்தகர் பராசரமுனிவர் சொல்ல மற்றவயோதிகர் கூறலுற்றார் நிச்சயமாய்ப் புத்திரதோஷம்தான் என்று எப்படிச் சொன்னீர் என்று கேட்க,

17. அஞ்சினில் ராகுநிற்க அலரிமந் தனுமேபார்க்கத்
துஞ்சிடு மதலையென்றோம் சூரிய னுச்சமாகித்
தஞ்சமாய்ச் சென்மம்தன்னில் தங்கிட மதியும்பார்க்க
மிஞ்சிய மதலைதோன்றும் வித்தகி கேட்டிடாயே.

17. ஐந்தாமிடத்தில் இராகு தங்க, சூரியன் சனி பரஸ்பரம் பார்ப்ப தாலும், குழந்தை பிறந்தால் இறந்து விடும் என்றோம். சூரியனும் உச்சம் பெற்று இலக்கினத்தில் பலத்துடனிருப்பதாலும், அவனைச் சந்திரனும் கேந்திரஸ்தானத்திலிருந்து பார்ப்பதாலும் வியோக மேற்பட்டாலும் குழந்தைகள் மிஞ்சி இருக்கும். தாயே! கேட்பாயாக.

18. நவத்தினுக் குடையோன் விரையத்திலிருக்க
நற்புகர் நவத்தையே பார்க்க
இவனுக்கு முதலில் சுதர்களும்தோன்றி
ஏகிடு மெம்பதிக் கேதான்
பவமுள முன்னூழ் செய்திடுகுற்றம்
பாலர்கள் தோஷமே யாகும்
அவனியி லிவனும் செய்திடுதோஷம்
அரைகுவாய் விபரமாய் முனியே.

18. இலக்கினத்திலிருந்து ஒன்பதாம் வீட்டிற்குடைய குரு விரய ஸ்தானத்திலிருக்க, சுக்கிரன் ஒன்பதாமிடத்தையே பார்க்க, இவனுக்கு முதலில் குழந்தைகள் ஏற்பட்டு இறக்கும். பண்டைவினையின் தோஷத்தினால் புத்திரதோஷம் ஏற்படும். இவன் உலகத்தில் செய்யும் பாபமும் தோஷமாய் அமையும். அதன் விவரம் கூறுவீர்! முனியே!

19. முன்னவ னிருந்தசென்மம் மொழிகிறோம் [1]திருக்கச்சூரில்
அன்னவன் வைசியவம்சம் அவனுமே யுதித்துமேலும்
பொன்பணி அதிகமுண்டாய்ப் பூமியில் செட்டுச்செய்து
இன்னவன் வாழுநாளில் இயம்புவோம் கேளும்தாயே.

19. இவனுடைய பழைய ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். திருக்கச்சூரில் வைசியவம்சத்தில் உதித்தான். பிறகு, பொன், பூஷணம் இவைகள் அதிகமாய் ஏற்பட்டுப் பூமியில் வியாபாரம் செய்து வாழ்ந்து வரும் நாளில் சொல்லுகிறோம். கேளும், தாயே!

20. மறையவன் சிலதுபொன்னை வைசியன் பக்கல்தந்து
பெருநதி காசிக்கேகிப் பேதியால் மரணமானான்
வரன்மாண்ட சேதிதன்னை மனைவியும் கேட்டுமேதான்
திருமகள் துக்கங்கொண்டு சஞ்சல மனத்தளாகி,

20. ஒரு பிராமணன் சில பொன்களை இந்த வைசியனிடம் கொடுத்து, காசிக்குப்போய், கங்காஸ்னானம் செய்யப் போனவிடத்தில், பேதி ஏற்பட்டு மரணமடைந்தான். புருஷன் இறந்த செய்தியை அவன் பெண்டாட்டி கேட்டு, துக்கப்பட்டு, சஞ்சலமுள்ள மனத்தாளாகி,

21. வணிகன்பால் சென்றுமேதான் வரன்சேதி அவனுக்கோதிப்
பிறகுதன் பொருளைக்கேட்கப் புகலுவான் செட்டிதானே
தனமது சிலநாள்சென்று தருகிறே னென்றுசொல்லி
மனமது களிப்புண்டாகி வாக்கினால் வழியைவிட்டான்.

21. இந்த வணிகனிடம் போய்த் தன் புருஷன் இறந்த சங்கதியை அவனிடம் கூறி, பிறகு தன் சொத்தைக் கொடுக்கும்படி கேட்க, செட்டி அந்தப் பணத்தைக் கொஞ்சகாலங் கழித்துத் தருகிறேன் என்று வாய்ச் சமர்த்தாய்ச் சொல்லி, அவளைத் திருப்திசெய்து அனுப்பினான்.

22. பின்சில நாளிருந்து பேதையும் பொருளைக்கேட்க
அன்னவ னீயானாகி அசத்தியம் செய்யலுற்றான்
கன்னிகை வருத்தமுற்றுக் கழறுவாள் சாபம்தானும்
பின்வரு சென்மம்தன்னில் புத்திர தோஷமாயும்.

---

1. திருக்கச்சூராலக் கோயில்—இது தொண்டை நாட்டிலுள்ள ஒரு சிவஸ்தலம். சுந்தரமூர்த்திக்குத் திருவமுது அளித்த ஸ்தலம்.

22. சில நாட்கள் கழித்து அவள் திரும்பவும் சொத்தைக் கொடுக்கும்படி கேட்க, அவன் திருப்பித்தராமல் பொய்சொல்லி விட்டான். அம்மாது வருத்தப்பட்டு இவனைப் பார்த்துச் சாபம் கொடுத்தாள். இதனால் பின்வரும் ஜன்மத்தில் புத்திரதோஷம் ஏற்பட்டது.

23. துணைவர்க ளில்லாதாயும் சுயபந்து பகையுமாயும்
கனதந்தை தாய்விரோதம் கன்னிபா லவமானங்கள்
பிணையாக வாழ்வான் பேசினு ளந்தமாது
அணையவே அந்ததோஷம் அணுகிற்று இவனுக்கேதான்.

23. சகோதர சகோதரிகளில்லாமல் சொந்தக்காரர்களுடைய பகைமையும், கௌரவமுள்ள தாய் தந்தையர்கள் விரோதமும், பெண்டாட்டியினால் பல அவமானங்களும் ஏற்பட்டுக் கஷ்டத்துடன் வாழ்ந்து வரலானான். இவையெல்லாம் அந்த மாது சொன்ன சாபம். அதனால் அந்ததோஷம் இவனை அணுகிற்று.

24. மற்றொரு நாளிலேதான் மகுடமாய் வந்தநாகம்
வித்தக னதனைக்கண்டு வாட்டினான் கழியினாலே
செற்றன நாகம்தானும் சேர்ந்தது அந்ததோஷம்
உத்தமன் தனக்குமேதான் ஓங்கியே வணிபம்தானும்,

24. இன்னொருநாளில் படமெடுத்துவந்த நாகப்பாம்பை இவன் கம்பால் அடித்துக் கொன்றுவிட்டான். அந்த தோஷம் இவனைச் சார்ந்தது. பெருத்த இவனுடைய வியாபாரம்,

25. நாட்டுநாள் குறைவுநேர்ந்து நாட்டினில் சல்லியமுண்டாய்க்
காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனால் வரியப்பட்டு
ஞாலமேல் கங்கைசேயாய் நல்கினு னிவனேயென்றோம்
ஆலத்தை யுண்டோன்தேவி அருமறை மாதுசாபம்,

25. நாளுக்குநாள் குறைந்து உலகில் இவனுக்குக்கடன் அதிகமாய் ஏற்பட்டு எமலோகம் சென்றான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, பூலோகத்தில் வேளாளர்குலத்தில் உதித்தான் இவனே என்றோம். ஆலகால விஷத்தையுண்ட பரமசிவனுடைய தேவியே! அந்தப் பிராமணத்தி இட்ட சாபம்,

26. இச்சென்மம் தன்னிலேதான் இலகிடு மிவனுக்கேதான்
லச்சைகள் மிகவேயுண்டு நற்றந்தை தாய்விரோதம்
கச்சணி மாதுவாலே கனநிந்தை அதிகமாகும்
மிச்சமாம் புதல்வர்தோஷம் வித்தகி கேட்டிடாயே.

26. இந்த ஜன்மத்திலேதான் அச்சாபம் இவனுக்கே பலித்தது. இதனால் வெட்கக்கேடுகள் எற்பட்டன. நல்ல தந்தைதாய் விரோதம், பெண்டாட்டியினால் மிகுந்த கௌரவக்குறைவு இவை எற்பட்டன. இவை நீங்கலாகப் புத்திரதோஷமும் எற்பட்டது. தாயே! கேட்பாயாக.

27. சுதர்களின் தோஷம்நீங்கச் சொல்லுவோம் கிரிகையொன்று
மதிநுதல் மனைவியோடு ஆலங்காட் டதற்குச்சென்று
நதிகளில் ஸ்நானம்செய்து நாயகர்க் கர்ச்சித்தேத்தி
நிதியினால் உரகன்ஒன்று நிமலனும் செய்துமேதான்,

27. புத்திரதோஷம் நீங்குவதற்கான பரிகாரத்தைச் சொல்லும் என்று கேட்க, பெண்டாட்டியுடன் திருவாலங்காட்டிற்குச் சென்று நதிகளில் ஸ்னானம்செய்து பகவானுக்கு அர்ச்சனை அபிஷேகம்செய்து, சாஸ்திர விதிப்படி பொன்னால் நாகம் ஒன்று செய்து,

28. அங்குள மறையோருக்கு ஆதியம் தன்னைச்சேர்த்துப்
பொங்கமா யவர்க்குஈந்து பூருவ தோஷம்தன்னைச்
சங்கையை அவர்க்குஓதி தானத்தைப் பொறுத்தேனென்ன
மங்கையும் தானுமாக அவனுட் உள்ளூர்சென்று,

28. அங்குள்ள பிராமணர்க்கு, அதைப் பூஜைசெய்து தானம் செய்தால் பூர்வகாலத்திலேற்பட்ட தோஷம் நீங்கும் என்று பரிகாரம் சொல்ல, அவ்வார்த்தையை எற்றுக்கொண்டு மங்கையும் தானுமாக தங்களுக்கேற்பட்ட ஊழ்வினையை அவர்களுக்கெடுத்துரைத்து, அதற்குப் பரிகாரமாக அதைப் பெறும்படி சொல்லி, பிறகு உள்ளூருக்குச் சென்று,

29. மாதமோ ராதிவாரம் மன்னனும் விரதம்கொள்ள
மேதினில் மதலைதோன்றும் விருத்தியாம் பகையுமில்லை
மாதுரு தந்தைதானும் மனமது ஒன்றுய்வாழ்வர்
தீதென்று செய்யாறுகில் சேயிழை சாபம்வாய்க்கும்.

29. மாதந்தோறும் ஞாயிற்றுக்கிழமை இவன் விரதம் இருந்தால் புத்திரனும் எற்படும்; விருத்தியுமாகும். யாதொரு விரோதமுமில்லை. தாய் தந்தையர்கள் ஒருமனப்பட்டு வாழ்வார். இந்தப் பரிகாரத்தை அலட்சியம் செய்தானுகில் அம்மாதின் சாபம் பலிக்கும்.

30. சொற்படி செய்வானுகில் தோன்றிடும் ஆண்பாலொன்று
மெய்ப்புடன் பெண்பால்ரெண்டு விளம்பினேும் தீர்க்க [மாகும்
ஒப்புடன் மாதுர்சேதி உரைக்கிறேு மிருநிறத்தாள்
தப்பித மில்லாளாகும் சஞ்சல மனத்தளாமே.

30. சொன்னபடி செய்தானுகில் ஆண்குழந்தை பிறக்கும். அதனுடன் இரண்டு பெண்குழந்தையும் எற்படும். இதைத் தீர்க்கமாய்ச் சொல்லுவோம்.

இவனுடைய பெண்டாட்டியின் விவரம் கூறுகிறோம். பொதுநிறமுள்ளவள். தப்பிதமில்லாதவள். மனதில் சஞ்சலமுள்ளவள்.

31. சிலநாள்கள் சிறையாய்வாழ்வள் செல்வியு மடக்கமுள்ளாள்
கலகமாம் புத்தியுள்ளாள் காவலன் மனம்போல்வாழ்வள்
குலவிடும் சுலப்ப[1]ரோகம் கூறுவோ மிவளுக்கேதான்
மலையிறை மகளேயாங்கள் வரைகிறோம் துணைவர்தானே.

31. சிலநாட்கள் சிறையிலிருப்பதுபோலிருப்பாள். இவளும் அடக்கமுடையவள். கலகம்செய்யும் எண்ணமுடையவள். புருஷனுடைய இஷ்டம்போல் வாழ்வாள். சொல்பரோகம் இவளுக்கு ஏற்படும். மலையவான் புத்திரியே! இவளுடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம்.

32. ஆணது ஒன்றேயாகும் அதுவன்றி வேறேயில்லை
காணவே மத்தியத்தில் காவலன் மரணமாகும்
பூணுவோம் புத்திரன்ஒன்று புக்கிடும் வாயுபீடை
தோணவே குடும்பமேழை செல்லுவாள் தாயில்லத்தில்.

32. ஒரே ஒரு சகோதரன். அதுவில்லாமல் வேறு இல்லை. மத்திய காலத்தில் புருஷன் மரணமடைவான். புத்திரன் ஒன்று ஏற்படும். வாயு உபத்திரம் ஏற்பட்டு இவள் தன்தாய்வீட்டிற்குச் செல்லுவாள்.

33. என்னகா ரணத்தினாலே ஏகுவாள் தாயில்லத்தில்
தன்சுதன் மனைவியாலே சாற்றுவா ரென்றுசொன்னோம்
அன்னையின் பூர்வம்தன்னை அறைகிறோ மினிமேலாகக்
கன்னென மொழியினாளே காதலி புகன்றிட்டோமே.

33. என்ன காரணத்தைக் கொண்டு இவள் தன்தாய்வீட்டிற்குச் செல்லுவாள். தன்பிள்ளையின் மனைவியினாலே என்று சொல்லுவார்கள். இனிமேல் தாயின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். கடுமையான வார்த்தைகளைப் பேசுவாள். காதலி! சொன்னோம்.

34. இவளுட முன்சென்மத்தை இயம்புவோம் காஞ்சிகீழ்பால்
அவனியில் பேரூர்தன்னில் அந்தணர் குலமுதித்துப்
பவமுள மதலையுண்டாய் யாவையும் வாழுநாளில்
நவனியில் வந்தஊழை நாட்டுவோம் கேளும்தாயே.

34. இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். காஞ்சிபுரத்திற்குக் கிழக்கே பெரிய ஊரில் பிராமணகுலத்திலுதித்து, புத்திரபாக்யம் ஏற்பட்டு எல்லாரும் வாழ்ந்துவருங்காலத்தில் ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைச் சொல்லுகிறோம்! தாயே! கேளும்.

---

1. சொல்ப

35. மைத்துனன்தன் புதல்வருக்கும் இவள்சுதருக்கும்
வயத்துக்கு அன்னமிட அதில்வஞ்சனையும் செய்தாள்
பத்திமான் அதிதிவந்து அன்னம்கேட்கப்
பதர்வார்த்தை சொல்லியேதான் இல்லையென்றாள்
வித்தகிக் கிருதோஷம் சேர்ந்த தென்றோம்
மேதினியில் பேதியால் மரணமாகிக்
குத்தமுள்ள பிரமனால் வரியப்பட்டுக்
கோதையுமே யிக்குலத்தி லுதித்தாளென்றோம்.

35. மைத்துனன் பிள்ளைகளுக்கும் இவளுடைய பிள்ளைகளுக்கும் வயிற்றுக்குச் சாப்பாடு போடும்போது அதில் வஞ்சனை செய்தாள். பக்திமானொருவன் அதிதியாய் வந்து அன்னம் கேட்க கேவலமான வார்த்தைகளைச் சொல்லி இல்லை என்று மறுத்தாள். இவளுக்கு இந்த இரண்டு தோஷங்களும் சேர்ந்தன. உலகினில் பேதியினால் மரணமடைந்தாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இவளுமே இந்தக் குலத்திலுதிக்கலானாள் என்றோம்.

36. இருவர்தன் சாபத்தாலே இலகிய தோஷமென்ன
உரைகிறோம் கேளும்தாயே உதித்தபுத் திரன்விரோதம்
சிறுமைகள் மத்திலேதான் சிறையாக வாழ்வாளாகும்
பெறுந்தந்தை யில்லம்சீரணம் பேதையும் சஞ்சலத்தாள்.

36. இருவருடைய சாபத்தினால் ஏற்பட்ட தோஷ மென்ன என்று கேட்க, தாயே! கேளும். உரைக்கிறோம். ஏற்பட்ட புத்திரனும் விரோதம். மத்தியகாலத்தில் சிறுமைகள். சிறைப்பட்டவள்போல் வாழ்வாளாகும். பெற்றதந்தையின் வமிசம் நசித்துப்போம். இவளும் சஞ்சலமடைந்தாள்.

37. மறுசென்மம் காஞ்சிதன்னில் மாதுவு மிக்குலத்தில்
உரைகுவா ளென்றுசொன்னோம் உரைக்கிறோம் தந்தை
[பூர்வம்
பெருநதி காஞ்சிதன்னில் பிறந்தனன் தீயின்வம்சம்
வருஞ்சுதர் மனைவியுண்டாய் வளமுள குடும்பியாகி,

37. அடுத்த ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் இவளும் இக்குலத்தில் உதிப்பாள் என்று சொன்னோமல்லவா! தந்தைபூர்வத்தை உரைக்கிறோம். இப்பெரியோன் காஞ்சியில் பிறந்தனன், வன்னிகுலத்திலுதித்தான். பெண்டாட்டி பிள்ளை ஏற்பட்டுச் சகலவளப்பங்களும் பொருந்திய குடும்பியாகி,

38. கம்பர்க்கு மலரெடுத்துக் கனத்ததோர் சரம்தொடுத்து
உம்பர்க்கு அளித்துவந்தான் ஊழ்வினை யில்லாதாகி
வம்பான மறலிபக்கல் வந்துபின் மறையோனாலே
தென்புடன் வரியப்பட்டுச் செனித்தனன் கங்கைசேயாய்.

38. கொல்லையில் பூஜைக்குப் புட்பம் எடுத்து பெரியமாலைகள்கட்டி தேவர்க்கு அளித்துவந்தான். ஊழ்வினையில்லாமல் எமலோகம் சேர்ந்தான். பின்பு பிரம்மசிருஷ்டியால் வேளாளர்குலத்தில் ஜனித்தான்.

39. பின்சென்மம் அருணைநாட்டில் பிறப்பனே பிரம்மசேயாய்
அன்னையும் கேட்கலுற்றாள் அவன்மூத்த சென்மம்தன்னில்
என்னபுண் ணியங்கள்செய்தான் இயம்புவீர் முனியே [நீதான்
தன்னிலே சொல்லுகின்றேன் சங்கரி கேட்டிடாயே.

39. மறுஜன்மத்தில் திருவண்ணாமலையில் பிராம்மணக்குழந்தையாய்ப் பிறப்பான். அம்பிகையும் வினவலுற்றாள். அவன் போனஜன்மத்தில் என்ன புண்ணியங்களைச் செய்தான். முனிவரே! நீங்கள்தான் சொல்லுங்கள்; என்று கேட்க, சங்கரி! கேட்பாயாக. நானே சொல்லுவேன்.

40. ஆலயம் கட்டிவைத்தும் அநேகஇல் லங்கள்செய்தும்
ஞாலமேல் தெய்வபக்தி நாயகன் கொண்டதாலும்
சாலவே அடியார்பேரில் தானவன் பக்திகொண்டும்
கோலமாய் வருவதாலே குறித்தனம் மறையோனாக.

40. கோவில்கட்டியும், அநேகம் வீடுகள்கட்டியும், பூமியில் தெய்வ பக்தி கொண்டதனாலும், இவன் சிவனடியார்களிடம் பிரியம் கொண்டும் ஒழுங்காக வாழ்ந்து வந்ததனாலும் பிராமணனாகக் குறிக்கப்பட்டான்.

41. தந்தையின் மரணகாலம் சாற்றுவோ முப்பானாறில்
எந்தையே கன்னிமாதம் இயம்பினோம் கருமம்தானும்
பிந்திய அன்னைக்கேதான் பேசுவோ முப்பானேழில்
எந்தையே மகரமாதம் இயம்பினோம் கெண்டம்தானே.

41. தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுவோம். முப்பத்தாறும் வயதில் புரட்டாசி மாதத்தில் தந்தையின் கருமம் ஏற்படும். பிறகு தாயாருடைய விஷயம்பேசுவோம். முப்பத்தேழாம் வயதில் தைமாசத்தில் இவன் தாய்க்குக் கண்டம் ஏற்படும்.

42. சாதகன் மரணகாலம் சாற்றுவோ மறுபானுறில்
மேதினில் ரிடபமாதம் வளர்பிறை துதிகைதன்னில்
கோதிலா சுரத்தினாலே கூறுவோ முடலம்தானும்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

42. ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுவோம். அறுபத்தாறும்வயதில் வைகாசி மாசத்தில் சுக்கிலபட்சத் துதியையில் சுரத்தினால் இவன் உடல் உலகத்தைவிட்டு மறையும். முருகனைப்பெற்ற புண்ணியசாலியே! கேட்பாயாக.

43. மறுசென்மம் அவ்வூர்தன்னில் மைந்தனும் செக்கான் [வம்சம்
திறமையா யுதிப்பானாகும் செப்புவோ மிவனின்யோகம்
அறைகிறோம் செனனம்தொட்டு மூவேழு ஆண்டுமட்டும்
குறையுண்டு குடும்பம்தன்னில் குறித்தனம் சல்லியமுண்டு.

43. அடுத்த ஜன்மத்தில் அதே ஊரில் இவன் வாணியன்வம்சத்தில் உதிப்பான். இவனுடைய யோகபாவத்தைக் கூறுவோம். பிறந்ததுமுதல் இருபத்தோறு வயதுமட்டும் குடும்பத்தில் தட்டுமுட்டுக்கள் ஏற்படும். கடன்பாதை யுண்டு.

44. ஒன்பது ஆண்டுதன்னில் செரங்கின்மேல் தந்தைசெல்வன்
துன்பங்கள் மிகவேபட்டுக் சுலப்பமாம் பொருள்படைத்துத்
தன்பதி சேர்வானாகும் சல்லியம் நீங்குமென்றோம்
அன்னவன் இருபானெட்டு மேலேதான் விரோதமுற்று,

44. இவனுடைய ஒன்பதாவதுவயதில் சிரங்கின் உபாதையால் தந்தை இறப்பான். அதிகத் துன்பங்களை அனுபவித்துச் சிறிது திரவியம் சம்பாதித்துத் தன்வீடு சேர்வான். கடன் நீங்குமென்றோம். இருபத்தெட்டாம் வயதில் விரோத மேற்பட்டு,

45. வேருகச் செல்வானாகும் வித்தகன் பலனைக்கேளாய்த்
திரமாய்த் தந்தைஆஸ்தி செலவுகள் செய்யானாகும்
கூறிய புத்திரர்க்குக் குணமுடன் யோகம்சொன்னோம்
பாரியு மிவன்பின்னாலே பகருவோம் கெண்டம்தானே.

45. வேருகப் போவான். இவனுடைய பலனைக் கேட்பாயாக. பிதிரார்ஜித சொத்துக்களைச் செலவுசெய்யமாட்டான். சொன்ன புத்திரர்களுடைய யோகபாவங்களைக் கூறினோம். பெண்டாட்டியும் இவனுக்குப் பிறகு கண்டம் அடைவாள்.

46. இன்னவன் ஜெனிக்குங்காலை இரணியன் தசை[1]யிருப்புச்
சொன்னனே ஆண்டுஏழும் சேர்ந்திடு மாதமாறும்
பன்று ளிருபானைந்தும் பகருவோம் துணைவர்விருத்தி
தன்துணை சேதமாகும் சல்லிய மிகவேயுண்டு.

46. இவன் பிறக்கும்போது வியாழபகவானுடைய தசையில் இருப்பு ஏழுவருஷம், மாசம் ஆறு, நாள் இருபத்தைந்து. தன்னுடன் பிறந்தவர்கள் சேதமாகும். கடன்தொந்திரை அதிகமாகும்.

47. நிந்தையு மதிகமாகும் நினைத்தகா ரியமுமாகா
தன்மன சஞ்சலங்கள் தன்பந்து பகையுமாகும்
அன்னைக்கு நலிகளுண்டு அரைகிறேம் விபரம்ரெண்டில்
இந்திர னிறைஞ்சுமாதே இவனுட பலனிதாமே.

47. பழிவார்த்தைகள் அதிகமாகும். நினைத்தபடி காரியங்கள் முடிய மாட்டா, மனம் சலித்துக்கொண்டேயிருக்கும். பந்துக்களுடைய பகைமை ஏற்படும். தாய்க்கும் தொந்தரையுண்டு. இவற்றின் விவரங்களை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். இந்திரன் வணங்கும் தேவியே! இந்த ஜாதகனது பலன் இதுதான்.

---

1. குருதசை

ஜாதகம் 21

1. ஆடுசென்மம் குசன்ராகு கடகமாக
அலரிபுத னுமதிதுலேயில் வெள்ளிகன்னி
நாடுசனி [1]தேள்கேது மகரமாக
நற்குருவு மீனத்தில் நவகோளிவ்வாறு
கூடிநிற்கி லாண்செனனம் வைசியசாதி
கூறுவோ மிவனில்லம் கீழ்மேல்வீதி
பீடுபெறு முத்திரமாம் வாசலாகும்
பெருவயிற்றோன்[2] மேற்கில்நிற்பால் மாரிதென்மேல்.

1. செவ்வாயும் இராகுவும் கடகத்தில் நிற்க, சூரியனும் புதனும், சந்திரனும் துலாத்தில் தங்க, சுக்கிரன் கன்னியிலும், சனி விருச்சிக ராசியிலும், கேது மகரத்திலும், நல்ல தேவ குரு மீன ராசியிலும் தங்க, இப்படிப்பட்ட கிரக நிலை கொண்ட மேஷலக்கின ஜாதகன் ஆண்மகன். வைசியசாதியில் உதிப்பான். இவன் வீட்டைப் பற்றி விவரம் கூறுவோம். கீழ்மேல்வீதியில் பீடை பெற்ற வடக்குப்பார்த்த வாசலுடையது. விநாயகர்கோவில் மேற்கிலுண்டு. தென்மேற்கில் அம்மன் கோவில்.

குரு	லக்கினம்		
	இராசி சக்கரம்		செவ்வாய் ராகு
கேது			
	சனி	சூரியன் புதன் சந்திரன்	சுக்கிரன்

2. வடமேல்பால் காளிவாசம் வரநதி சூழியுண்டு
குடக்கினில் சந்துமுண்டு கூறுவோம் சிற்றூர்தன்னில்
திடமதாய்க் குடும்பம்தன்னில் செனித்திடு பாலன்யோகம்
அடல்[3]தந்தை துணேவர்அன்னே அறைகுவோம் பலன்கள்
[தானே.

---

1. சனியின் இடம்
2. விநாயகர்
3. வீரம் பொருந்திய

2. வடமேற்கில் காளியம்மன் கோவில். சுற்றிலும் நதி யோடுகின்றது. மேற்கினில் ஒரு சந்து உண்டு. இப்படிப்பட்ட சிறிய ஊரில் பெரிய குடும்பத்தில் ஜனித்திடுவான் இப்பாலகன். இவனுடைய யோகத்தையும், வீரம் பொருந்திய தந்தை, அவர் சகோதரர், இவன் தாய் இவர்களின் யோக விசேஷங்களையும் கூறுவோம். பலன்களையும் சொல்லுவோம்.

3. தந்தையின் குணத்தையாங்கள் சாற்றுவோம் மால் [நிறத்தன்
சிந்தையில் கபடுமில்லான் செனங்களுக் குதவிசெய்வன்
வந்தவர் தன்னைக்காப்பன் வாயுதே கமமுள்ளான்
சந்ததி விருத்தியுள்ளான் தனதானிய மதிகமுள்ளான்.

3. தந்தையின் குணங்களைக் கூறுவோம். கருப்பு நிறமுள்ளவன். மனதில் கபடில்லாதவன். ஜனங்களுக்கு ஒத்தாசை செய்வன். வந்த விருந்தினரை ஆதரிப்பான். வாயு உபத்திரவமுள்ள தேகத்தை யுடையவன். புத்திரபாக்கியமுள்ளவன். தனதானியம் அதிகமுள்ளவன்.

4. தானங்கள் தருமம்செய்வன் தடாகமும் சோலைவைப்பன்
ஈனமாங் குணங்களில்லான் யூகைவான்.................
மானமாய்ச் சீவிப்பானும் மாலின்பேல் பக்தியுள்ளான்
தேனென மொழியுமுள்ளான் சகடுவா கனமுமுள்ளான்.

4. தானதருமங்கள் செய்வான். குளமும், கோவிலும் ஏற்படுத்துவான். கீழ்த்தரமான குணங்களில்லாதவன். நல்ல மதியூகி கௌரவமாய்ச் சீவனம் செய்வான். விஷ்ணுபக்தி பூண்டவன். இனிமையுள்ள மொழிகளைப் பேசுவான். வண்டிவாகனமுள்ளவன்.

5. பூமியு மதிகம்சேர்ப்பன் புண்ணிய மனத்தனுகும்
நேமியோர்க் குதவிசெய்வன் நிதானமாய் வார்த்தை [கூறுவன்
சேமமாம் குடும்பமுள்ளான் திருமகள் விலாசமுள்ளான்
மாமிக ளிரண்டுமுள்ளான் வரைகிறே மேலுங்கேளே.

5. பூஸ்திதியும் அதிகம் சேர்ப்பான். தருமம் செய்வதில் விருப்பங் கொண்டவன். பூமியில் உள்ளவர்களுக்கு உதவிசெய்வான். நிதானமான வார்த்தைகளைக் கூறுவான். க்ஷேமமுள்ள குடும்பத்தை யுடையவன். லட்சுமிகடாக்ஷமுடையவன். இரண்டு மாமி இவனுக்கு உண்டு. மேலும் கூறுவோம். கேளுங்கள்.

6. வருவோர்க்கு அன்னமீவன் வண்டிவா கனமுமுள்ளான்
பெருநிதி அதிகஞ்சேர்ப்பன் பூமியில் செக்கு[1]முள்ளான்
நிறையஆண் டுமையுமுள்ளான் நீங்காத செல்வமுள்ளான்
அறைகிறேம் மந்தியத்தில் அவன்தேக பிணியுமுள்ளான்.

6. வந்த விருந்தினருக்கு அன்னபானாதிகளைக் கொடுப்பான். வண்டியும் வாகனமும் உடையவன். பெரிய பணத்தொகையைச் சேர்ப்பன். பூமியில் காசுக்கடையுடையவன். அதிக ஆண்மையுள்ளான். எப்பவும் வளர்ந்து கொண்டேயிருக்கும் செல்வமுடையவன். மத்தியகாலத்தில் அவனுடைய சரீரத்தில் வியாதி ஏற்படும்.

7. காரக தேகமுள்ளான் கடுஞ்சின மில்லானாகும்
கோரின காரியத்தைக் குணமுடன் முடிக்கவல்லன்
பாரினி லெவர்க்கும்நண்பன் பகருவோம் துணைவர்தன்னைக்
கூறஆண் மூன்றுதிர்க்கம் கோதைய ரிருவராகும்.

7. கருநிறதேகமுடையவன். கடுமையான கோபமில்லாதவன். நினைத்த காரியத்தை ஒழுங்காக முடிக்கவல்லவன். உலகில் யாவருக்கும் சிநேகமுள்ளவன். கூடப்பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம். ஆண் மூன்று பேர்கள் நிச்சயம். சகோதரி இருவராகும்.

8. பிந்தியும் பெண்ணின்சேதம் பேசுவோ மிவன்முன் [சென்மம்
பந்தமாய்ச் சோழநாட்டில் பார்த்திபர்[2] வம்சம்தன்னில்
சந்ததி மனைவியோடு தனமது அதிகம்பெற்று
மந்தனு மரசர்பக்கல் வண்மைசீ விக்குநாளில்,

8. பின்பு சகோதரியும் சேதமாவள். இவனுடைய முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். கட்டுப்பாடுடன் சோழதேசத்தில் அரசர் வமிசத்தில் பிறந்து மனைவி மக்களோடு சொத்து அதிகம் அடைந்து இவன் அரசர் பக்கத்தில் வண்மையுடன் சீவிக்கும் நாளிலே,

9. அகதிகட் கன்னமீந்து ஆலய பக்திமானாய்ப்
பெருமவ ருறவுகொண்டு பிசகிலா வாழுநாளில்
உரிமையாய் ஊழிதானும் உரைக்கிறேம் கேளுமம்மா
அறுமுக னாலயத்தில் அன்புடன் சாற்றுகின்ற,

9. விருந்தினர்க்கு அன்னதானம் செய்து, கோவிலில் வழிபாடுகள் செய்ய பக்திமேலிட்டு, பெரியாரைத் துணைக்கொண்டு, யாதொரு பிழையு

1. காசுக்கடை
2. அரசர்

மில்லாமல் வாழ்ந்து வரும்நாளில், உரிமையுடன் ஊழ்வினை இவனைச் சார்ந்தது. அதன் விவரத்தை உரைக்கிறோம். கேளுமம்மா. முருகக் கடவுளுடைய கோவிலில் பிரியத்துடன் சாற்றுகின்ற (அணியும்),

10. மாலையை இவனும்வாங்கி மனையாளுக் கீந்துமேலும்
கோலமா யவளணிந்தாள் கூறுவோ மதுவல்லாமல்
ஞாலமேல் விரதகாலம் நங்கையைப் போகம்துய்த்தான்
சாலவே யிரண்டுதோஷம் சார்ந்தது இவனுக்கம்மா.

10. புஷ்பமாலையை இவன் பெற்று, பெண்டாட்டிக்குக் கொடுத்து, மேலும் அழகாக அவளும் அதை அணிந்து கொண்டாள். இதுவுமல்லாமல் உலகினர் எல்லாரும் ஒரு விரதத்தை அனுஷ்டிக்கும் நாளில் மனைவியுடன் போகம்துய்த்தான். ஆகவே இரண்டு தோஷங்கள் இவனை அடைந்தன.

11. மற்றொரு நாளிலேதான் மங்கையைப் போகம்துய்த்து
வித்தகன் ஆலயத்தில் மேவினன் பாலன்தானும்
பத்திய தோஷம்தானும் பருகிற்று இவனுக்கம்மா
சித்தசன் மரணமாகி செனித்தவ னிவனேயம்மா.

11. வேறு ஒரு நாளில் பெண்டாட்டியுடன் போகம் துய்த்து இவன் கோவிலுக்குள் சென்றான். தோஷம் இவனைப் பற்றியது. அவனும் மரணமானான். பின்பு ஜனித்தவன் இவன்தானம்மா.

12. இப்படி யெழுவர்சொல்ல ஈச்வரி கேட்கலுற்றாள்
செப்பமாய் முன்சென்மத்தில் செய்தஊ ழதனாலேதான்
இப்பிறப் பினிலேயாது இலங்கிற்று இவனுக்கேதான்
மெய்ப்புடன் சொல்லுமென்ன விளம்புவார் ரிஷிகள்
[தானே.

12. இப்படி சப்தரிஷிகள் சொல்ல, ஈச்வரி பின்வருமாறு வினவினாள். செம்மையாய் முன் ஜன்மத்தில் செய்த ஊழ்வினையினால் (பிராரப்தத்தினால்) இந்த ஜன்மத்தில் இவனுக்கு என்ன ஏற்பட்டது ? உள்ளவாறு சொல்லுங்கள் என்று கேட்க, இருடிகளும் பதில் சொல்லலுற்றார்கள்.

13. அறுமுகன் முடித்தபூவை அரிவையர்க் கீந்ததோஷம்
மரணகா லத்திலேதான் மங்கைமுன் னுய்வாளம்மா
விரதகா லத்தில்போகம் வேண்டின ஊழிகேளாய்த்
திறமையாய் ரோகம்தானும் சேர்ந்திடு மந்தியத்தில்.

13. முருகக் கடவுளுக்கு முடித்த பூவைப் பெண்டாடிக்குக் கொடுத்த தோஷம் சாகும்போது பெண்டாட்டி முன்னிறப்பாள். விரத காலத்தில்

போகம் விரும்பியதால் ஊழ்வினை செய்ததைக் கேட்பாயாக. பலமான வியாதி இவனை அந்திய காலத்தில் வந்து சேர்ந்திடும்.

14. முன்சென்மம் செய்தபுண்ணியம் முயன்றது இச்சென்மத் [தில்
பன்னிய குடும்பம்பெற்றுப் பாரினில் கீர்த்தியுண்டாய்
அன்னியர் மெச்சவாழ்வான் ஆலயம் சென்றதோஷம்
மன்னவ னிக்குலத்தில் வந்தவ னிவனேயம்மா.

14. போன ஜன்மத்தில் செய்த புண்ணியம் இந்த ஜன்மத்தில் தலையெடுத்தது. பொருத்தமான குடும்பம் பெற்று, பூமியில் கீர்த்தி ஏற, பிறர் மெச்சும்படி வாழ்வான். ஆலயம் சென்ற தோஷத்தினால் மன்னவன் இக்குலத்தில் வந்து அவதரித்தான். அவனேதான் இவன்.

15. இப்படி யிருக்குதந்தை இவனுக்கு உதித்தபாலன்
செப்புவோம் பலனைத்தானே தீரகன் மனத்தனாகும்
ஒப்புடன் இருநிறத்தன் உத்தமர்க் கினியனாவன்
தம்பிதம் ஒருவர்க்கெண்ணான் தாட்சண்யன் கனவானாமே.

15. இப்படிப்பட்ட தந்தைக்கு ஜாதகன் பாலகனாய் அவதரித்தான். அவனுடைய பலன்களைக் கூறுவோம். தைரிய முள்ள நல்ல மனதைக் கொண்டவன். பொது நிற முள்ளவன். பெரியோருக்கு இனியவனாவன். பிறருக்குப் பிழைசெய்ய எண்ணமாட்டான். தாட்சிண்ய முள்ளவன். தக்க கனவானாவன்.

16. சொன்னசொல் தவறான்மேலும் சுத்தகன் மனத்தனாகும்
கன்னியு மொருத்தியாகும் கனத்ததோர் மார்புமுள்ளான்
பின்னமு மில்லாத்தேகன் பெருநிதி யதிகமுள்ளான்
அன்னமே பூமிவிருத்தி ஆள்கார னுடையனாமே.

16. சொன்ன சொல் தவறி நடக்கமாட்டான். மேலும் துல்யமான நல்ல மனதை யுடையவன். மனைவியும் ஒருத்தியாவள். கனத்த பாந்த மார்பை யுடையவன். அழகான சரீர முள்ளவன். பெரிய ஐசுவரியத்தை யுடையவன். அன்னமே! பூமி விருத்தி செய்வான். ஆள்காரர்களையு முடையவன்.

17. வாயுவும் கொஞ்சமுள்ளான் மர்மமு முடையனாவன்
தீயரை மனதிலெண்ணான் திருமகள் விலாசமுள்ளான்
நேயர்க ளதிகமுள்ளான் நிலத்தினில் செட்டுசெய்வன்
ஆயன்தன் அடிமையுள்ளான் அக்கினி வடிவுமுள்ளான்.

17. வாயுவின் உபாதை அறிந்துள்ளவன். இரகசியங்களை யுடையவன். கெட்டவர்களை மனதில் எண்ணவும் மாட்டான். லட்சுமி கடாட்சமுள்ளவன். அநேக சிநேகிதர்களை யுடையவன். பூமியில் வியாபாரம் செய்வான். பகவானுடைய அடிமையாயிருப்பான். கருப்பு நிற முள்ளவனுவன்.

18. விழியது சாயலுள்ளான் விளம்புவான் கட்டுவார்த்தை
பழியதுக் கிடமேசெய்யான் பந்துவும் மெச்சவாழ்வன்
நயமுள வார்த்தைசொல்வோன் நாட்டுவோம் பித்ததேகி
அயலார்பொ னிச்சையில்லான் அவன்யூகி கல்விமானும்.

18. கண்மயங்கிச் சாயல் செய்வான். பொய் வார்த்தைகளைச் சொல்லுவான். பழிப்பான வார்த்தைக்கு இடங்கொடுக்கமாட்டான். பந்துக்கள் மெச்சும்படி வாழ்வான். பிரியமான வார்த்தைகளைச் சொல்லுவான். பித்தமான தேகத்தை யுடையவன். பிறர் சொத்துக்கு ஆசைப்படமாட்டான். படித்தவன். நல்ல மதியூகி.

19. இன்னவன் துணைவர்தன்னை இயம்புவோம் எழுவராகும்
கன்னியும் நால்வர்தீர்க்கம் கனத்ததோ ராண்பால்நஷ்டம்
மன்னவன் தனைபாதிக்கே வருந்துணை யில்லையம்மா
அன்னமே யாங்கள்சொல்லும் அடைமொழி குன்றிடாது.

19. இவனுடைய சகோதரங்களைப்பற்றிச் சொல்லுவோம். ஏழு பேர்கள் உடன் பிறந்தவர்கள். நான்கு சகோதரிகள் தீர்க்கம். சகோதரர்களே இல்லை. இவன் தனியே துணைவரில்லாமலிருப்பான். அன்னமே! நாங்கள் சொல்லும் பலன்கள் பொய்யாகா.

20. சாதகன் துணைவர்தன்னைச் சாற்றுவோ மிருநான்காகும்
போதவே கன்னிநாலு போற்றுவோம் ஆண்பாலொன்று
நீதியாய்த் தீர்க்கமாகும் நிலைக்காது மற்றதெல்லாம்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

20. ஜாதகனுடைய புத்திரர்களைப் பற்றிச் சொல்லுவோம். எட்டுப் பேர்கள் ஆவர். பெண்கள் நான்கு, பிள்ளை ஒருவன். இவர்கள் நியாயமாய்த் தீர்க்கமாவர். மற்றவர்கள் நிலைக்கமாட்டார்கள். யானைக் கன்றைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

21. இப்படி புயண்டர்கூற இயல்பரா சர்சொல்வார்
எப்படிப் புதல்வனென்று இயம்பினீர் ஐந்தாம்வீட்டோன்
மெய்ப்புடன் நீச்சனாகி விரயத்தில் பொன்னோடிற்க
ஒப்புடன் சனியுமைந்தை உண்மையாய்ப் பார்த்ததாலே.

21. இப்படி புஜங்க மகரிஷி கூற, பராசரர் சொல்லலுற்றார். எப்படி ஆண் பிள்ளை ஒருவன் என்று கூறினீர். இலக்கினத்திற்கு ஐந்தாமிடத்திற்குரிய சூரியன் உண்மையில் நீசனாகி, குருவும் லக்கினத்திற்கு விரயஸ்தானத்திலிருக்க, சனி பகவானும் தன்னுடைய பத்தாம் பார்வையினால் லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தைப் பார்க்கவே,

22. மதலைஆண் ஒருவனென்று வழுத்தின காரியத்தை
இதமுடன் சொல்வீரென்று இன்பமாய்ப் பராசர்கேட்கத்
துதிசெய்து புசண்டர்சொல்வார் சூரிய னுடனேயிந்து[1]
புதன்கூடி குசனால்பார்க்கப் போற்றினேன் புத்திரன்ஒன்றே.

22. ஆண் மகன் ஒருவன் என்று சொன்ன காரணத்தை நியாயமாய்ச் சொல்லுவீரென்று இன்பமாய் பராசரர் வினவ, புசண்ட மகரிஷி சொல்லலுற்றார். சூரியனுடன், சந்திரனும், புதனும் சேர்ந்திருப்பதை நான்காம் பார்வையினால் செவ்வாய் பார்ப்பதனால் புத்திரன் ஒன்று என்று சொன்னோம்.

23. அந்தபுத் திரனுந்தானும் ஆறேழு செனனமாகும்
பந்தமாய் முன்னூழி பாலகன் தன்னைப்பற்றி
வந்ததோர் தோஷத்தாலே மதலையும் துணைவன்தோஷம்
அந்ததோர் சாபந்தன்னை அறைகுவீ ரென்றுகேட்டார்.

23. அந்தப் புத்திரனும் நாற்பத்திரண்டாம் பிராயத்தில் உதிப்பான். பண்டை வினையின் பயனாக ஏற்பட்ட புத்திரதோஷத்தினாலே புத்திரனையும் சகோதரத்தையும் பாதிக்கும் என்றார். அப்படிப்பட்ட ஊழ்வினையினால் ஏற்பட்ட சாபம் என்னவென்று எடுத்துரைப்பீர் என்று கேட்டார் பராசரர்.

24. முன்னிவ னிருந்தசென்மம் மொழிகிறோம் வேலங்காட்டில்
வன்னிய மரபில்தோன்றி மனைவிமக் களுமுண்டாகித்
தன்னிலே யதிகம்பூமி தானவன் பெற்றுமேதான்
அன்னவன் வாழுநாளில் அறைகிறோ மூழிதானே.

24. முன் ஜன்மத்தில் இவனிருந்த விவரத்தைக் கூறுவோம். திருவேலங்காட்டில் வன்னியர் குலத்தில் பிறந்து, மனைவி மக்களும் உண்டாகி, தானாகவே பூஸ்திதியைச் சேர்த்துச் சுகமாய் வாழ்ந்து வரும் காலத்தில் ஓர் ஊழ்வினை இவனைச் சார்ந்தது. அதனைக் கூறுகின்றோம்.

---

1. சந்திரன்

25. பயிரிடு மிடத்திலேதான் பருத்ததோர் மேடுண்டாகி
வயலுக்குக் குற்றமென்று வேவுகர் தனையழைத்து
நயமுடன் கூலிதாரேன் நல்குவாய் மண்ணையென்று
தயவுடன் சொன்னைப்போ தரித்திரக் கூலிக்காரர்,

25. கிருஷி செய்யும் நிலத்தினில் பெரிய மேடு ஒன்று உண்டாயிருந்தது. அஃது இருப்பது வயலுக்குக் குற்றமாகும் என்று நினைத்து வேலைக்காரர்களை விட்டு அம்மேட்டைச் சமப்படுத்தலானான். அப்போது ஏழைக் கூலியாட்கள் வெட்டி எடுக்கும் இந்த மண்ணை ஒரு நயமான விலைக்குக் கொடுங்கள் என்று இவனை வேண்டி,

26. இவன்சொல்லை நம்பியேதான் எடுத்திட்டார் மேட்டை [எல்லாம்
கவனமாய்க் கேளுமம்மா காவலன் கூலிதன்னைச்
சுகமுடன் சரியில்லாமல் சுந்தரன் குறைத்துத்தந்தான்
நவமதில்[1] கூலிக்காரர் நல்கினர் சாபந்தானே.

26. இவன் வார்த்தையையும் நம்பி மேட்டை வெட்டி எடுத்தார்கள். இனிச் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். அவர்களுருண்டான கூலியை இவன் ஒழுங்காகக் கொடுக்காமல் குறைவாகக் கொடுத்தான். வயலிலேயே கூலிக்காரர் இவனுக்குச் சாபங் கொடுத்தனர்.

27. சுமைகூலி கொடாதபாவி சிதைந்திடும் புத்திரர்தானும்
அமையாது துணைவன்தானும் அலைகுவாய் பூமிதன்னில்
இமையவே சாபந்தந்து ஏழையும் மனவெறுப்பால்
உவமையாய் உள்ளூர்சென்றார் உத்தமி கேட்டிடாயே.

27. சுமை கூலி கொடாத பாவி. உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் இறந்து விடுவார்கள். கூடப்பிறந்த சகோதரனும் உயிருடனிருக்க மாட்டான். உலகத்தில் திண்டாடி மண்டை கலங்குவாய் என்று இப்படி ஏழைகள் மனவெறுப்புக்கொண்டு சாபம் கொடுத்துவிட்டு மௌனமாய்த் தன்னூருக்குத் திரும்பிச் சென்றனர். உத்தமியே! கேட்பாயாக,

28. பின்சில நாட்கள்சென்று புத்திர மனைவியற்றுத்
தன்னமே தனியனாகிச் சாதகன் தட்சிணத்தில்
அன்னமே சேதுக்கேகி அவனுமே தீர்த்தம்தோய்ந்து
மன்னவன் அரங்கம்வந்து மால்பாதம் போற்றியேதான்.

28. சில காலம் சென்றபின், புத்திரரும் மனைவியுமில்லாமல் தன்னந்தனியே யிருந்து ஜாதகன் தெற்கு திக்கிலுள்ள ராமேசுவரம் சென்று சேது

1. பூமியில்

ஸ்னானம் செய்து ஸ்ரீரங்கம் வந்து அரங்கநாதப் பெருமானைத் துதித்து வழிபாடுகள் செய்து,

29. மறுபடி உள்ளூர்மீண்டு வள்ளூரில் மரணமாகி
உரிமையா யிச்சென்மத்தில் உதித்தவ னிவனேயம்மா
திருவணி வணிகர்வம்சம் செனித்துமே இச்சென்மத்தில்
அருமையாய்ச் சூலுகொண்ட அரவெனும் நாகந்தன்னை,

29. திரும்பவும் தன்னூர் வந்து, திருவள்ளூரில் மரணமடைந்தான். ஒழுங்காக இந்த ஜன்மத்தில் உதித்தவன் இவனேதான். இலட்சுமி கடாட்சம் பொருந்திய வணிகர் வமிசத்தில் ஜனித்த இவன் அருமையாய் கர்பந்தரித்த நாகப்பாம்பை,

30. நாகத்தைக் கொன்றதோஷம் நல்குறேம் சாந்திதானும்
பாகமாய் நதியின்பக்கல் பற்றிய அரசுவைத்து
நாகமும் செய்துவைத்தால் நல்கிடும் தோஷம்தானும்
ஆகவே பின்னால்புத்திரன் அறைகிறோ மொருவன்தீர்க்கம்.

30. கொன்று விட்டான். அதன் தோஷம் நீங்குவதற்கு உண்டான பரிகாரத்தைச் சொல்லுவோம். ஆற்றங்கரையின் பக்கத்தில் அரசமரம் வைத்து நாகமும் சிலையடித்து வைத்துப் பிரதிஷ்டை செய்தால் தோஷம் நிவிர்த்தியாகும். ஆதலால் இதற்குப் பிறகு ஒரு புத்திரன் நிச்சயமாய் பிறக்கும் என்று சொல்லுவோம்.

31. இப்படிச் செய்யாறைகில் இலகாது[1] புத்திரர்தானும்
செப்பமாய்ச் சாதகர்க்குச் செல்விகள் தீர்க்கமாகும்
ஒப்புடன் மனையாள்தன்னை உரைக்கிறோ மொருபா [னேழுள்
மைப்படி கண்ணுள்தானும் வடகீழ்பா லிருந்துசேர்வாள்.

31. இப்படிப்பட்ட பரிகாரத்தைச் செய்யாவிட்டால் புத்திரன் ஏற்படாது. செம்மையாய் ஜாதகனுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகள் தீர்க்கம். பொருத்தமாகவே மனைவியைப்பற்றி விவரம் கூறுவோம். இவனது பதினேழாவது பிராயத்தில் மைதீட்டிய கண்களையுடைய பார்யை வடகிழக்குப் பக்கத்திலிருந்து வந்து சேருவாள்.

32. அவளுட குணத்தையாங்கள் அறைகிறோ மொடிச்சல்தேகி
நவமிதில் [2]உபயமில்லாள் நாயகன் பக்தியில்லாள்
இவளுமே கற்புமுள்ளாள் இனிமையாய்ச் சொல்லு [முள்ளாள்
அவனியில் வலுவுமுள்ளாள் அதிர்ஷ்டவாள் யூகைசாலி.

1. ஏற்படாது
2. உபகாரம்

32. அவளுடைய குணாதிசயங்களை நாங்கள் வருணிக்கின்றோம். ஒடிசலான சரீர முடையவள். உலகத்தில் யாதொரு உபகாரமுமில்லாத வள். புருஷனிடத்தில் பிரியமில்லாதவள். நல்ல கற்புடையவள். இனிமை யாய் வார்த்தைகள் பேசுவாள். உலகினில் வல்லமை பூண்டவள். அதிர்ஷ்டமுடையவள். நல்ல மதியூகி.

33. தெய்வங்கள் பக்தியுள்ளாள் சிறுமுன் கோபம்கொஞ்சம்
அபயமென் றடைந்தோருக்கு அன்னங்கள் போடவல் [லாள்
தையலும் கபடுமில்லாள் சந்ததி [1]விரக்தியுள்ளாள்
ஒய்யவே தாய்குடும்பம் உரைக்கிறோம் பின்பாகத்தில்.

33. தெய்வங்களிடத்தில் பக்தி யுள்ளவள். சிறிது முன்கோப முள்ள வள். அண்டினோரைக் காப்பாற்றி அன்னபானாதிகளைக் கொடுப்பாள். மனதில் கபடமில்லாதவள். சந்ததியற்றவள் (சந்ததிகளிடம் வெறுப்புக் கொண்டவள்). இவளுடைய தாயின் குடும்ப விவரத்தைப்பற்றிப் பின் பாகத்தில் கூறுவோம்.

34. அத்திரி முதலாயான அறுமுனி இவ்வாறுகூற
பத்தியாய் முனிவர்தானும் பகருவார் பாக்கியத்தோன்
சித்தமாய் வியத்திலேற சேரிரண் டாமிடத்தோன்
உத்தம னில்லாதாகி ஓயூரில் நீசமென்று,

34. அத்திரி முதலான ஆறுபேர்கள் (ரிஷிகள்) இவ்வாறு சொல்ல, பக்தியுடன் முனிவர் சொல்லலுற்றார். பாக்கியசாலியான வியாழன் இலக் கினத்திலிருந்து விரயத்திலிருக்க, இரண்டாமிடத்திற்குரிய சுக்கிரனும் தளர்ச்சி அடைந்து நீசத்திலிருப்பதனாலே,

35. இருப்பதா லிவன்தந்தைக்கு இணையிலா யோகம்சொன்னீர்
குறிப்பதை யறிந்துநீரும் கூறுவா யென்றுகேட்க
உரைக்கிறேன் தந்தைக்கேதான் உண்மையா யாதிகாலம்
வரைப்பெரும் காஞ்சிகிழ்பால் மகாநதி ஓரந்தன்னில்,

35. இவன் தந்தைக்கு இணையற்ற யோகபாவங்களைச் சொன்னீர். அதன் குறிப்பை அறிந்த நீங்கள் விவரமாய்ச் சொல்லுங்கள் என்று வினவ, தந்தைக்குண்டானவற்றைச் சொல்லுகிறேன். உண்மையாய் ஆதிகாலம் தொட்டுப் பெரும் காஞ்சீபுரத்தின் கிழக்கே மகாநதி பக்கத்தில்,

---

1. வெறுப்பு

36. அதிகதுன் பங்கள்பட்டு அலைச்சலு மிகவேயுண்டாய்ப்
பதியதி தரித்திரவானாய்ப் பாலனும் அதைவிட்டேகி
விதியினால் தக்ஷிணத்தில் மேவினு னிவனேயம்மா
வதிபனும் வந்தபின்பு வளர்ந்தது செல்வந்தானும்.

36. அதிகத் துன்பத்தை யடைந்து அலைந்து திரிந்து ஊரில் வறுமைப் பிணி பூண்டு ஊரை விட்டுப்போய் விதிவசத்தினால் தெற்கு தேசம் வந்து சேர்ந்தான் அம்மா. அங்கிருந்தது முதல் செல்வம் விருத்தியாயிற்று.

37. வந்தபின் செல்வமென்று வழுத்தினீர் முனியேநீதான்
சிந்தையா யுரைப்பீரென்ன செல்வனும் முன்சென்மத்தில்
பந்தமாய்ச் சேதுஸ்நானம் பண்ணின பலத்தினால்தான்
வந்தது செல்வமென்று வழுத்தினார் ரிஷிகளம்மா.

37. இடம் விட்டுப்பெயர்ந்ததனால் செல்வ விருத்தி எற்பட்டது என்று சொன்னீரே! முனிவரே! எதை உத்தேசித்து இவ்விதம் கூறினீர்? போன ஜன்மத்தில் இவன் சேதுஸ்னானம் பண்ணிய புண்ணியபலத்தினாலே தான் எற்பட்டது செல்வம் என்று ரிஷிகள் சொன்னார்கள்.

38. தந்தையின் பின்சென்மத்தைச் சாற்றுவோம் காசிதன்னில்
எந்தையே பிரம்மசேயாய் இவனுமே உதிப்பானம்மா
வந்தவ னிச்சென்மத்தில் வணிகர்தன் குலமுதித்துப்
பந்தமாய்ப் பிரம்மசேயாய்ப் பகருங்கா ரணங்களைச்
[சொல்வீர்.

38. தகப்பனின் பின் ஜன்மத்தைப்பற்றி விவரிப்போம். காசி க்ஷேத்திரத்தில் இவன் பிராம்மணக் குழந்தையாய் உதிப்பானென். அவனே இந்த ஜன்மத்தில் வணிகர்தம் குலத்திலுதித்தான். எந்த கர்மபந்தத்தைக் கொண்டு பிராம்மணக் குழந்தையாய் உற்பவித்தான். அதற்குரிய காரணங்களைச் சொல்லுங்கள்.

39. சொல்லுவேன் கேளுமம்மா சுதன்தந்தை இச்சென்மத்தில்
நல்லவ னென்றுநாடி நற்குளந் தண்ணீர்ப்பந்தல்
வல்லவன் செய்ததனால் வணிகர்தன் குலத்தைநீங்கி
மெல்லியே பிரம்மசேயாய் மேதினில் உதிப்பானம்மா.

39. சொல்லுகிறேன், கேளம்மா! ஜாதகனின் தகப்பன் இந்த ஜன்மத்தில் நல்லவன் என்று பலர் சொல்லி நெருங்கும்படி, குளம், தண்ணீர்ப் பந்தல் இவைகளை எற்படுத்தியதால் வணிகர்குலத்தைவிட்டுப் பிராம்மணனாய் உலகில் அவதரித்தான்.

40. மாதுரு மரணகாலம் வழுத்துவோ மிருபானேழில்
மேதினில் தந்தைகாலம் விளம்புவோ மதன்மேல்மூன்றில்
நீதியா யிவளின்காலம் நிகழ்த்துவோ மைம்பானொன்றில்
வேதனை யில்லாதாகி வித்தகன் மரணமாவான்.

40. மாதாவின் மரண காலத்தைச் சொல்லுகிறோம். இருபத்தேழாவது வயதில் தந்தைக்கு மாரகம் ஏற்படும் என்று சொல்வோம். அதற்குப் பிறகு மூன்று வருஷங்கள் கழிந்ததும் நியாயமாய் இவளுடைய மரணம் ஏற்படும். ஜாதகனும் தன்னுடைய ஐம்பத்தொன்றாம் பிராயத்தில் சிரமமில்லாமல் மரணத்தை யடைவான்.

41. மகரமே மாதம்தன்னில் வளர்பிறை தசமிநாளில்
அகமதில் மார்புநோயால் அவனுமே மரணமாகி
உகமையாய் மறுசென்மத்தை உரைக்கிறோம் தில்லைதன் [னில்
செகமதில் கீர்த்திபெற்று க்ஷத்திரிய வம்சம்தன்னில்,

51. தை மாசத்தில் சுக்கில பட்சத்தில் தசமிதிதியில் மார்புநோய் ஏற்பட்டு மரணமடைவான். அடுத்த ஜன்மத்தின் விவரம் உரைப்போம். சிதம்பர ஸ்தலத்தில் உலகில் புகழடைந்த க்ஷத்திரிய வமிசத்தில்,

42. சார(பால)கன்[1] பிறப்பானம்மா பாரினில் கீர்த்தியேற்பன்
சீலமா யிவனின்பாலன் செப்புவோம் குணத்தையாங்கள்
ஞாலமேல் கீர்த்திவானாய் நவதானிய மதிகமுண்டாய்
வேலனும் ஆர்ச்சிரத்தை விருத்தியே செய்வானம்மா.

42. குதிரைக்காரனுடைய பிள்ளையாய்ப் பிறப்பான். உலகினில் புகழடைவான். பெருமையாய் இவனுடைய பாலகனின் விவரங்களை யாங்கள் கூறுவோம். உலகில் கீர்த்திமானாய் நவதானியங்களை நிறையப் பெற்று முருகனுடைய வரப்பிரசாதத்தைப்பெற்று இவன் சொத்துக்களை விருத்தி செய்வான். அம்மா! கேள்.

---

1. சாரகன் = குதிரைப்பாகன்.

ஜாதகம் 22

1. சென்மமு மேடமாக சிகண்டியு மதிலேதங்கச்
சந்திரன் மூன்றிலாகச் சேய்புதன் ராகுஅஞ்சில்
மந்தனு தசமமாக மார்த்தாண்ட[1]னாறிலேறச்
சுந்திர புகருமேழில் சிகியுமே லாபம்தங்க.

1. இது மேஷலக்ன ஜாதகம். குரு லக்கினத்தில் தங்க, சந்திரன் இலக்கினத்திற்கு மூன்றாம் வீட்டிலிருக்க, செய்வாய் புதன் ராகு இவர்கள் சேர்ந்து சிம்ம ராசியிலிருக்க, சனி பத்தாம் வீட்டிலிருக்க, சூரியன் கன்னியில் தங்க, சுக்கிரன் துலாத்திலும், கேது கும்பத்திலும் தங்கும்படியான ஜாதகத்திற்கு, (சிகண்டி = ஆசாரியன்—குரு)

	லக்கினம் குரு		சந்திரன்
கேது	இராசி		
சனி	சக்கரம்		செவ்வாய் புதன் ராகு
		சுக்கிரன்	சூரியன்

2. பலனதைப் புகலுமென்று பார்வதி கேட்கும்போது
நலமுள பராசர்சொல்வார் நாயகன் செனனமாகும்
தலமது கீழ்மேல்வீதி தென்வாடை சிறுஊராகும்
நலமிலா ஈசன்வாயு நற்றணல் காளிமாரி,

2. பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்க, பராசரர் நன்மையுடன் சொல்லலுற்றார். ஜாதகம் ஜனனமாகும் வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் உள்ளது. அது சிறிய கிராமமாகும். ஈசுவரனுடைய கோவில் வாயுதிக்கிலும், காளியம்மை கோயில் அக்கினிதிக்கிலும்,

3. மாயவன் அருகில்தங்கும் மாரனு மிரண்டாம்சென்மம்
நேயமா யுதிப்பானாகும் நிகர்தந்தை தாயின்யோகம்
ஆயவே துணைவர்யோகம் அவனுட முன்பின்சென்மம்
சேயன்தன் குடும்பச்சேதி செப்புவோ மின்னூல்தன்னில்.

---

1. சூரியன்

3. விஷ்ணுவாலயம் அதன் அருகில் இருக்கும். ஜாதகன் இரண்டாம் ஜன்ம மெடுத்துள்ளான். கியாயமாய் உதிப்பான். பொருத்தமான தாய் தந்தையர் யோகமும், சகோதரர் யோகமும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மங்களும், அவனுடைய குடும்பச் செய்தியும் இந்த நூலில் விவரமாய்க் கூறுவோம்.

4. தந்தையின் துணைஆண்மூன்று சத்திமா ரிருவராகும்
அந்தஆண் ஒன்ருய்வாழ்வர் அவர்பலன் பின்பால்சொல் [வோம்
இந்தவன் தந்தைசேதி இயம்புவ னிருநிறத்தான்
நந்தியா விருத்தியுள்ளான் நயம்படக் கூறுவானும்.

4. தந்தையின் சகோதரர்கள் மூன்றுபேர்கள், சகோதரிகள் இரண்டு பேர்கள். சகோதரர்கள் எல்லாரும் ஒன்றுகூடி வாழ்வார்கள். அவர்களுடைய பலனைப் பின்னால் விவரிப்போம். ஜாதகனுடைய தந்தையைப் பற்றிக் கூறுவோம். பொது நிறமுள்ளவன். எருதுகளையும் பசுக்களையும் விருத்தி செய்வான் (அவைகளைப் பாதுகாத்தலையே தொழிலாயுள்ளவன்). இனிமையான வார்த்தையைக் கூறுவான்.

5. பயிர்த்தொழில் புரிவானுகும் பரஉப காரனுவான்
அயலார்பொ னிச்சையில்லான் அணுகிடு மாமிரண்டு
பயமிலான் எதிரிக்கஞ்சான் பஞ்சைமே லிரக்கனுவன்
கயவரை உறவுகொள்ளான் கட்டுரை பகரானுமே.

5. கிரிஷித் தொழில் செய்வான். பிறருக்கு உபகாரம் செய்வான் பிறர் பொருளுக்கு ஆசைப்படமாட்டான். இரண்டு மாமியார்களுண்டு. பயமில்லாதவன். பகையோரைப்பார்த்து பயப்படமாட்டான். ஏழைகளிடத்தில் இரக்கங் கொள்ளுவான். காலிப்பயல்களோடு நேசம் கொள்ளுவான். பொய் வார்த்தை சொல்லானுகும்.

6. வறுமையெப் போதும்காணுன் பெருமைக ளுடையானுகும்
உறைந்திடும் பித்தசூடு உள்மனம் கபடுகொஞ்சம்
தரையதை விருத்திசெய்வன் தந்தநோ யுடையனுகும்
மருவிடும் வாயுகொஞ்சம் மங்கையே கேட்டிடாயே.

6. தரித்திரமே இல்லாதவன். பெருமைகளை யுடையவனுகும். பித்த சூடு ஏற்படும். மனதில் கபடம் சிறிது உள்ளவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். பல்வலி யுடையவனுகும். வாயு உபத்திரவம் கொஞ்சம் ஏற்படும். மங்கையே! கேட்டிடாயே.

7. இந்நெறி யுடையானுக்கு இவனுமே யுதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் சிவந்த [மேனி
கன்னத வார்த்தைகாணான் யூகைவா னுணுக்கம்தேர்வன்
பின்னமில் லாததேகி பேச்சது காணாகும்.

7. இத்தகைய குணங்களை உடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணாதிசயங்களைக் கூறுவேன். அழகுடையவன். சிவப்பான நிறமுள்ள சரீரத்தை யுடையவன். கடுமையான வார்த்தைகளைச் சொல்லமாட்டான். நல்ல மதியூகி. எதிலும் நுட்பத்தை ஆராய்வான். யாதொரு பின்னமும் இல்லாத சரீரத்தை யுடையவன். வம் படிக்கமாட்டான்.

8. பயிர்த்தொழில் புரிவானாகும் பால்பாக்கியம் விருத்தியுண்டு
பயமிலா னெதிரிக்கஞ்சான் பரவுப காரம்செய்வான்
வியமாகு மதாய்ப்பாலுந்தான் விடம்போலே கோபமுண்டு
கயவரைச் சேரானாகும் காரியச் சமர்த்தனாகும்.

8. நிலத்தைப் பண்படுத்துவான். அதிகம் பால் பாக்கிய முள்ளவன். பயமில்லாதவன். சத்துருக்களைக் கண்டு பயப்படாதவன். பிறருக்கு உபகாரம் செய்வான். பாலைப் பிறருக்குக் கொடுப்பான். கோபம் வந்தால் விஷம்போல் அதிகரிக்கும். கீழ்நோக்கான புத்தியுள்ளவர்களைச் சேரமாட்டான். காரியத்தை முடிப்பதில் சாமர்த்தியமுள்ளவன்.

9. இன்னவன் துணைவர்தன்னை இயம்பமுன் கன்னிஒன்று
அன்னவள் தீர்க்கசீவி அவள்குணம் ரதிபோலொப்பாம்
சொன்னசொல் சுகமேயாகும் சோம்பிடாள் காரியத்தில்
அன்னிய ரிடத்தில்வாசம் ஆன்கள் பலிதமுண்டு.

9. இவனுடைய சகோதரம்தன்னைக் கூறுவோம். முதலில் ஒரு சகோதரி. அவள் தீர்க்காயுள் உள்ளவள். அவள் ரதி போலிருப்பாள். சுகமாய்ச் சம்பாஷிப்பாள். காரியம் செய்வதில் சோம்பல் கிடையாது. பிறரிடத்தில் வசிக்கவேண்டிவரும். பசுக்கள் விருத்தியாகும்.

10. கல்விமான் கடவுள்பக்தி கனத்ததோர் சீவியாமே
நல்லவ ளாகிவாழ்வாள் நற்பணி அதிகம்சேர்ப்பாள்
புல்லிய புத்தியில்லாள் பிதுர்தாயால் சுகமில்லாதாள்
அல்லலெப் போதுமில்லாள் அணுகிடும் தென்கீழ்மாரன்.

10. படித்தவள். கடவுளிடத்தில் பக்தி கொண்டவள். தீர்க்காயுசுள்ளவள். நல்லவளாக வாழ்ந்துவருவாள். நல்ல பூஷணங்களைச் சேர்ப்

பாள். அல்ப புத்தியில்லாதவள். தாய் தந்தையரால் சுகமில்லாதவள். சிரமம் என்பதே எப்பொழுதும் கிடையாது. தென் கிழக்கே இவளுடைய மணவாளன் ஏற்படுவான்.

11. சுதர்களு மாண்பால்ரெண்டு தோகையு மூவராகும்
இதுஐந்தும் தீர்க்கமாகும் இந்திரன் போலேவாழ்வாள்
வதிபன்பின் துணைகள்காணுன் விவரிப்பீர் அந்தசங்கை
உதயனு மாறில்தங்க உடுபதி[1] மூன்றிலேற,

11. ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தைகள் மூவரும் ஏற்படும். இந்த ஐந்து பேர்களும் நிச்சயம். இந்திரபோகத்துடன் வாழ்வாள். புருஷனுக்குத் தம்பிகள் இல்லை. அந்த சமுசயத்தைத் தீர்ப்பீர். சூரியன் ஆறும் இடத்திலும், சந்திரன் மூன்றுமிடத்திலும் தங்க,

12. விதியவன் நாலைப்பார்க்க விளங்காது துணையின்னுந்தான்
மதிமுக மாதாவுந்தன் மாரியால் மரிப்பாளாகும்
எதுகாலம் சொல்லுமென்ன இரண்டாவ தாண்டில்மாள் [வள்
வதிபதி குணம்எவ்வாறு வருவிப்பீர் முனியேநீதான்.

12. சனி பகவான் லக்கினத்திலிருந்து நாலாமிடத்தைப் பார்க்க சகோதரம் விளங்காது. தவிர, சந்திர பிம்பம்போன்ற முகத்தையுடைய மாதாவும் வைசூரியில் உயிர் துறப்பாள். எந்தக் காலத்தில் இப்படி ஏற்படும். சொல்லுங்கள், என்று கேட்க, ஜாதகனுடைய இரண்டாவது பிராயத்திலிறப்பாள். ஜாதகனுடைய குணங்களை எவ்வாறு வருணிப்பீர்! முனிவரே! நீர்தான்.

13. தோகைபோல் சாயலொக்கும் சொல்லது சுருக்கமாகும்
தாகமென் றோர்க்குஈவள் தன்வரன் மனம்போல்வாழ்வள்
நாகரி கங்களுண்டு நல்லோர்க்கு நல்லளாவள்
பாகமாய்ப் பேசுவாளாம் பதர்குண மில்லாளாமே.

13. மயில் தோகை போன்ற சாயலுடையவள். சுருங்கச் சொல்லுவாள். இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுவாள். புருஷன் இஷ்டம் போல் வாழ்வாள். நாகரிகமாக வாழ்வாள். நல்லவர்களுக்கு நல்லவளாவள். பக்குவமாய்ப் பேசுவாள். அல்பமான குணம் இல்லாதவள்.

14. இல்லமும் உள்ளூராகும் இவள்துணை ஆண்பால்மூன்று
வல்லியு மொருத்தியாகும் மறுவூரில் துணைவர்வாசம்
செல்லுவார் கீழ்பால்தன்னில் செப்புவோ மிவளின்பூர்வம்
அல்லலைத் தவிர்க்குமெங்கள் ஆத்தும தாயேகேளாய்.

1. சந்திரன்

14. அவளுடைய வீடும் உள்ளூரிலேதான். இவளுடைய சகோதரர்கள் மூன்று பேர்கள், சகோதரியும் ஒருத்தியாகும். வேறு ஊரில் சகோதரர்கள் வாசம் செய்து கிழக்கே செல்லுவார்கள். இவர்களுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவாம். துன்பங்களைப் போக்கும் தயாநிதியே! கேட்பாயாக.

15. விரிஞ்சிமா நகரிலேதான் விளங்கினுள் கர்ணசேயாய்ப்
பெருமையாய்க் குடும்பியாகிப் பெரியோர்க்குத் தொண்டு
[பூண்டு
இருவினை யில்லாதாகி ஏகினள் காலனுடு
பிரமனுல் வரியப்பட்டுப் பிறந்தவ ளென்றுசொல்வோம்.

15. விரிஞ்சிமா நகரத்தில் கணக்கர் வமிசத்தில் பிறந்து விளங்கலானுள். பெருமைபெற்ற குடும்பத்தையடைந்து, பெரியோர்களுக்குத் தொண்டு வேலைகள் புரிந்து இம்மையிலும் மறுமையிலும் புண்ணியவதியாயிருந்து எமலோகம் சென்றுள். திரும்பவும் பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவள் இவள்தானென்று சொல்லுவோம்.

16. மறுசென்மம் சிறுபாகத்தில் வருகுவாள் கங்கைசேயாய்ப்
பெருமையும் புகழுண்டாகிப் பூவையும் வாழ்வாளாமே
உரைகிறேம் தந்தைபூர்வம் உயர்வான அருணைநாட்டில்
தரிதொழில் செய்குலத்தில் செனித்தனன் என்று
[சொல்வோம்.

16. அடுத்த ஜன்மத்தில் சிறுபாக்கம் என்ற ஊரில் வேளாளர் குலத்தில் வந்துதிப்பாள். பெருமையும், கீர்த்தியும் அடைந்து இவள் வாழ்ந்து வருவாளாகும். ஜாதகனுடைய தகப்பனுரின் பூர்வோத்தரங்களைப் பற்றிக் கூறுவோம். மேன்மைபெற்ற திருவண்ணுமலையில் நெசவுத் தொழில் செய்யும் குலத்தில் உதித்தனன் என்று சொல்லுவோம்.

17. காசுகள் செட்டுசெய்து தோழியு மதலையுண்டாய்க்
காசுக ளதிகம்பெற்றுக் காவலன் வாழும்நாளில்
நேசம்தன் மனைவிபோகம் நேர்ந்துமே வருகும்காலைப்
பாசமாய் வரனும்கண்டு பாவையை விலக்கும்போது,

17. திரவியங்களைக் கொண்டு வியாபாரம் செய்து, வாழ்க்கைத் துணைவியும் குழந்தையுமுண்டாகி காசுகள் அதிகம் அடைந்து வாழ்ந்து வரும்நாளில் பிரியமான மனைவியுடன் சுகபோகங்களை அனுபவிக்கும் காலத்தில், பெண்டாட்டி பேரில் சமுசயங்கொண்டு அவளை வேண்டாம் என்று புறக்கணித்துத் தள்ளும்போது,

18. மங்கையும் திகிலடைந்து மாரன்பால் சொல்லும்போது
சங்கையா மனத்தனுகித் தையலே என்னசெய்வேன்
புங்கவன் எழுத்தவ்வாறு பிரிதலாம் காலமாச்சு
நங்கையே என்னசெய்வேன் என்நாயகி பொல்லாள்மாதே.

18. மனைவியும் திகிலடைந்து திரும்பவும் புருஷனிடம் செல்லும் போது சந்தேக புத்தியுடையவனுகி, அம்மையே! என்ன செய்வேன். பகவானுடைய ஏற்பாடு நாம் பிரியவேண்டும் என்று இருப்பதனுலேயும், அதற்கேற்ற காலமும் ஏற்பட்டதே யென்றும், இனி நான் என்ன செய்வேன். நீயோ பொல்லாதவள் என்றுன்.

19. இன்னவாறு சொல்லும்போது இடிவீழ் மரம்போலாகி
உன்னுட மதியால்கெட்டேன் உலகினில் வசையுமென்ன
என்னைநீ காப்பாயென்ன என்னிடம் வேண்டாமென்னக்
கன்னிகை திகிலடைந்து கங்கையில் மாண்டாளென்றேம்.

19. இப்படி இவன் சொல்லும்போது இடிவிழுந்தமரம்போலாகி, உன்னுடைய புத்தியைக் கேட்டு நான் கெட்டேன். உலகினர் வசைமொழி களைக் கூறுவார்கள். அப்படி இருக்கும்போது என்னை நீ காப்பாயாக என்று கேட்க, நீ என்னிடம் இனி இருக்கவேண்டாமென்று மறுக்க, அவளும் திகிலடைந்து கங்கையில் விழுந்து இறந்தாள்.

20. அந்தவோர் தோஷம்தானும் அணுகிடு மிச்சென்மத்தில்
முந்திய மனைவிமாண்டு மேவிடு மறுமனைதான்
பிந்திய சென்மம்சொல்வேன் பிருதிவி[1] தலத்திலேதான்
விந்தையாய் வைசியசேயாய் மேவுவா னென்றுசொன்
[னேம்.

20. இந்த ஜன்மத்தில் அந்த தோஷம் இவனை வந்தடைந்தது. முதல் மனைவி மாண்டு மறுமனைவி வந்து சேர்ந்தாள். அடுத்த ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். பூலோகத்தில் வேடிக்கையாய் வைசியக் குழந்தையாய் உதிப்பான் என்று சொன்னேம்.

21. மைந்தனின் மணத்தின்காலம் வரைகுறேம் இருபா
[னெட்டில்
பந்தணி மாதுதானும் படருவாள் கீழ்பால்தன்னில்
அந்தவள் குணத்தைச்சொல்வேன் அரிமனை யொப்பதாகும்
சிந்தையும் நல்லதாகும் சிறப்பான குடும்பமேற்பள்.

1. பூலோகத்தில்

21. இவனுடைய கலியாணத்தைப் பற்றிக் கூறுவோம். இருபத்தெட்டாவது வயதில் அழகிய மாது கிழக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுவேன். பராசக்தியைப் போன்றவள். நல்ல சிந்தனையுமுடையவள். மேலான குடும்பத்தை வகிப்பாள்.

22. மங்கையும் யோகசாலி வருவோரை ஆதரிப்பள்
துங்கமா மனத்தளாகும் சொல்லுவேன் கோபம்கொஞ்சம்
பங்கய முகத்தாளாகும் பத்தாவின் மனதுக்கேதான்
சங்கையாம் குணத்தாளாகும் சத்தியும் தீர்க்கசீவி.

22. அவளும் நல்ல யோகசாலி. விருந்தினரை ஆதரிப்பாள். துல்லியமான மனமுடையவள். சிறிது முன்கோபமுள்ளவள் என்று சொல்லுவார்கள். தாமரைப் பூப்போன்ற முகவிலாசமுள்ளவள். பர்த்தா மனதில் மாத்திரம் இவளைப்பற்றிச் சிறிது சங்கை ஏற்படும்படியான குணத்தை யுடையவள். அவளும் தீர்க்காயுசுடையவள்.

23. மதலைகள் தோன்றாதாகும் மருவினும் திதேயாகும்
எதுவித குற்றத்தாலே இயம்பினீர் அந்தசங்கை
புதல்வர்தா னத்தில்ராகு பூவகன் புதனும்தங்க
அதுபலன் புத்திரதோஷம் அம்பிகை யாளேகேளாய்.

23. குழந்தைகள் பிறவா. பிறந்தாலும் இருக்கா. எந்தக் காரணத்தினால் அப்படிச் சொன்னீர்? யாது குற்றம்பற்றி? புத்திர ஸ்தானமாகிய இலக்கினத்திலிருந்து ஐந்தாம் வீட்டில் ராகுவும், செவ்வாயும், புதனும் தங்கி நிற்க, அதனால்தான் புத்திரதோஷம் என்றோம். அம்பிகையே! கேட்பாயாக.

24. முன்சென்ம வினையினாலே மேவிற்று சிலதுதோஷம்
தன்மனை யிரண்டுநேரும் கூறுவீர் காலம்தன்னை
மன்னிய நாலாமாண்டில் மறுமாதம் நேருமென்றோம்
கன்னிக்குச் சுதராண்ஒன்று காதலிஅவ் வாறுதீர்க்கம்.

24. பண்டைக் காலத்தில் ஏற்பட்ட முன் ஜன்ம கர்மபந்தத்தாலே வேறு சில தோஷம் வந்து சேர்ந்தது. பெண்டாட்டி இரண்டு ஏற்படும். அப்படி நேருவது எக்காலத்தில், அதனைக் கூறுங்கள். ஒருத்தி இறந்து, அதன் பிறகு நான்கு வருடங்கள் கழிந்து அடுத்த மாதத்தில் நேரிடும் என்றோம். இவனுக்கு ஆண் பிள்ளை ஒன்று, பெண் ஒன்று நிச்சயம் ஏற்படும்.

25. என்னஊழ் செய்தானத்தை இயம்புவீர் முனியேநீதான்
அன்னவன் முன்சென்மத்தில் அரங்கமா நகரம்தன்னில்
துன்மதி விஸ்வசேயாய்ச் செனித்தன னென்றுசொல்வோம்
....

25. இப்படி யெல்லாம் நேரிட என்ன வினையைச் செய்தானோ. அதனைக் கூறுவீர், முனியே! நீங்கள்தான். அவன் பூர்வ ஜன்மத்தில் ஸ்ரீரங்கத்தில் கெட்டபுத்தியுள்ள தட்டானாக ஜனித்தான் (இப்போதுகூட தட்டான்களை விச்வபிராமணர்கள் என்று அழைப்பாருமுளர்).

26. கங்கையின் குலத்திலேதான் கற்புடை மாதுபேரில்
சங்கையாய் வார்த்தைச்சொல்லச் சத்தியும் மனதுவெக்கிப்
பங்கமாய் வார்த்தைஎன்மேல் பகர்ந்திட்ட பாவிக்கேதான்
புங்கவா மறுசென்மத்தில் பேச்சறு[1] இல்லாதாயும்,

26. வேளாளர் குலத்திலே உள்ள கற்புடைய ஸ்திரீயின் பேரில் மோகங்கொண்டு போக்கிரித்தனமாய்ப் பேச, அவளும் மனம் வெட்க மடைந்து என்னைப்பார்த்துக் கேவலமாய் வார்த்தைகள் சொன்ன பாவிக்கு நாணு புணர சம்மதிப்பது என்று சபிக்க, அடுத்த ஜன்மத்தில் தீர்மானமான பேச்சில்லாத ஊமையாய்,

27. அன்னையால் சுகமுமின்றி அண்ணன்தம் பிகளுமின்றி
இன்னவன் வாழ்வானென்று இறைத்தனள் தெருமண்வாரி
கன்னிகற் புடையாள்சாபம் கலந்தது அதுவுமின்றி
அன்னியர் ஆவும்கன்றும் அவன்கொல்லைக் கிருஷிமேய,

27. தாயாரால் சுகமில்லாமல், அண்ணன் தம்பிகளில்லாமலும் இவன் வாழ்வானென்று கோபமுடன் கூறினள். தெருவிலுள்ள மண்ணையும் வாரி இறைத்தாள். அவள் கற்புடையவளல்லவா! சாபம் பலித்தது. அதுவுமில்லாமல் அன்னியர்களுடைய பசுவும் கன்றும் அவனுடைய பயிர்க் கொல்லையில் மேய்ந்துகொண்டிருக்கும்போது,

28. வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டான் மருவிற்று அதுவுமின்றித்
தாய்மாரி பூசைக்காகச் சுத்தங்கள் சிலர்கள்வேண்ட
தீயமாம் குணத்தனுகிச் செம்பொன்று அவரால்பெற்று
....

28. அவற்றிற்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டான். அந்தப் பாவமும் இவனைப் பற்றியது. அதுவுமில்லாமல் மாரி அம்மன் பூஜைக்காகச் சில

1. தீர்மானம்

சங்கதிகள் ஒழுங்குபடுத்தச் சிலர் இவனே வேண்ட, கெட்ட புத்தியுள்ள இவன் அவர்களிடம் பணத்தை வாங்கி மோசடி செய்ய எண்ணிய,

29. மனிசெய்ய மோசம்செய்தான் மருவிற்று அதுஓர்தோஷம்
தனிவிலா குடும்பமந்தப் பிச்சுவால் மரணமாகி
அணையவே யிக்குலத்தில் அணையுவா னென்றுசொன்னேம்
கணிகையர் சாபம்ஒன்று கனமுள கோவின்தோஷம்.

29. அதனால் ஒரு தோஷம் இவனைப் பிடித்தது. இப்படிப்பட்ட குடும்பமே இந்தப் போக்கிரியால் அழிந்துபோய், பிறகு இந்தக் குலத்தில் வந்துதித்தான் என்று சொன்னேம். கணிகையர் சாபம் ஒன்று. அதனுடன் பசுமாட்டின் சாபமும் ஒன்று

30. மாரியின் தோஷமொன்று மருவிடு மிச்சென்மத்தில்
வீருது துணைஆணுந்தான் மேதினில் உன்னதமாவன்
காரிழை அன்னைஆதியில் காலன்தன் பதிக்குச்செல்வாள்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

30. மாரி அம்மன் தோஷம் ஒன்று. எல்லாம் சேர்ந்து இந்த ஜன்மத்தில் அவனைச் சார்ந்தன. ஆண் சகோதரனும் பகையாகி, உலகினில் மேலானவன். மாமியார் எமலோகம் செல்லுவாள். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற அம்பிகையே! கேட்பாயாக.

31. பிருகுமே புகலுகின்றார் புதல்வனு மூமையென்றீர்
திறமையாய் வார்த்தைசொல்லச் செப்புவீர் கிரிகை
[யொன்று
பெருமலை வேங்கடத்தில் புதல்வனும் இனமும்சென்று
திருமாலுக் கர்ச்சித்தேத்தித் தேறின மறையோருக்கு,

31. பிருகுமகரிஷி சொல்லலுற்றார். பிள்ளையும் ஊமை என்றீர். அவன் திறமையுடன் வார்த்தைகள் பேச பரிகாரம் சொல்லுங்கள் என்று கேட்க, திருப்பதியில் விளங்கும் ஏழுமலையானிடம் பிள்ளையும் மற்றவர்களும் சேர்ந்து சென்று, திருமாலுக்கு அர்ச்சனை அபிஷேகங்கள் முதலான வழிபாடுகள் செய்து துதித்துப்போற்றி, முதிர்ந்த பிராமணர்,

32. ஐயைந்து பேருக்கன்னம் ஆதிபம் விடமும்கெந்தம்
செய்துமே உள்ளூர்சென்று செமதக்கினி கோஷ்டத்திற்குத்
துய்யமா மணியும்செய்து தினமும் ஒருதீபம்வைக்க
ஐயங்கள் நிவர்த்தியாகி அற்புத வார்த்தைநேரும்.

32. இருபத்தைந்து பேர்களுக்கு அன்னம், பானம், சந்தணம் இவைகளைக் கொடுத்து உபசரித்துத் தன்னூருக்குத் திரும்பி ஜமதக்னியின் கோவிலுக்கு நல்ல மணியொன்று கட்டி, தினசரி தீபமும் ஏற்றி வைக்க சந்தேகங்கள் நிவிர்த்தியாகி அற்புதமான வார்த்தைகள் பேசுவான்.

33. சொற்படி செய்யாணுகில் சொல்லது காணுதாகும்
சொற்படி செய்வாணுகில் துலக்கமாய் வார்த்தைநேரும்
ஒப்புடன் இருபானேழில் உயர்தந்தைக் கெண்டமென்ருேம்
அப்பணி சடையோன்தேவி யருளிய மொழிகுன்ருது.

33. சொன்னபடி செய்யாமற்போனுல் பேச்சு அவனுக்கு ஏற்படாது. ஊமையாய்த்தானிருக்க வேண்டும். சொன்னபடி பரிகாரம் செய்வானுகில் ஸ்பஷ்டமான வார்த்தைகளைப் பேசுவான். இவனது இருபத்தேழாம் பிராயத்தில் தந்தையின் கண்டம் என்ருேம். கங்கைவார்சடையான் தேவியே! நாங்கள் அருளிய வார்த்தை தப்பாது.

34. பாலகன் மரணகாலம் பகருவோம் அறுபான்ரெண்டில்
சாலவே மகரமாதம் சதுர்த்தசி வளர்பக்கத்தில்
காலன்தன் னூட்டைச்சேர்வன் கழறுவோ மிவன்பின் [சென்மம்
ஏலவே பவுத்திரனுக இரங்குவான் என்றுசொன்னேம்.

34. இவனுடைய மரணகாலத்தைச் சொல்லுவோம். அறுபத்திரண்டாம் பிராயத்தில் மேலான தைமாசத்தில் சுக்கிலபட்சம் சதுர்த்தசியில் எமலோகம் செல்லுவான். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். பொருத்தமாகவே பவுத்திரனுய் அவதரிப்பான் என்று சொன்னேம்.

35. அத்திரி மறுத்துச்சொல்வார் அவன்வயது தீர்க்கமென்றீர்
குற்றங்கள் நாலாண்டுக்குள் கூறுவோம் மாரகங்கள்
எத்தனை பிணிகள்வந்தும் இரவிமுன் பனிபோல்நீங்கும்
சுத்தமாய் வயதுதீர்க்கம் சுரர்குரு சென்மம்தங்க,

35. இதனை அத்திரிமகரிஷி ஆட்சேபித்துக் கூறுவார். அவன் வயசு தீர்க்கம் என்று சொன்னீரே. நாலு வருடங்களுக்குள் குற்றங்கள் ஏற்பட்டு மாரகங்கள் ஏற்படும். எத்தனை வியாதிகள் வந்தபோதிலும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். சுத்தமான தீர்க்காயுசு. தேவகுருவான வியாழபகவான் இலக்கினத்தில் தங்கி நிற்க,

36. பிருகுமே புகலுகின்றார் பேசினீர் மறுதாயொன்று
வருங்காலம் சொல்லுமென்ன மதுவுநா லாமாண்டுள்
அறைகுவா ளென்றுசொன்னோம் உதித்திடும் சுதராண் [ஒன்று
அரிவையும் அவ்வாறாகும் அம்பிகை யாளேகேளாய்.

36. பிருகுமகரிஷி கூறுவார். மற்றுமொரு தாயார் ஏற்படுவாள் என்று சொன்னீர். அஃது எந்தக் காலத்தில் வரும் சொல்லுங்கள். அதுவும் நாலாம் பிராயத்தில் வருவாள் என்று சொன்னோம். அவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண்ணும் பிறக்கும். அம்பிகையே! கேட்பாயாக.

37. அன்னவன் செனிக்குங்காலே ஆதிரை கடைபாதத்தில்
துணைராகு தசைஓராண்டு திங்களும் ஆறுதக்கும்
தன்னுடன் இருபானும் சாற்றினோம் பூர்வபாகம்
கன்னலின்[1] மொழியேயொக்கும் காதலி கேட்டிடாயே.

37. அன்னவன் ஜனிக்கும் காலம் திருவாதிரை நாலாம்பாதம். இராகு தசையில் வருடம் ஒன்று, மாதம் ஆறு, நாள் இருபது. பூர்வபாகத்தைக் கூறினோம். இனிமையான மொழிபோன்ற லட்சுமியே! கேட்பாயாக.

38. அத்திரி மறுத்துச்சொல்வார் அவனுட குடும்பச்சேதி
சுத்தமாய்ச் சொல்லுமென்ன செனித்தசேய் [நாலாமாண்டில்
பற்றின இல்லம்விட்டுப் பிறப்பனும் உள்ளூர்கீழ்பால்
வெற்றியாம் வேறுஇல்லம் மேவிடும் என்றுசொல்வோம்.

38. இதனை அத்திரிமகரிஷி ஆட்சேபித்துக் கூறுவார். அவனுடைய குடும்பச் செய்தியை ஒழுங்காகக் கூறுமென்று வேண்ட, பிறந்த குழந்தை நாலாவது பிராயத்தில் பிறந்த வீட்டைவிட்டு வேறு வீட்டில் தன்னூருக்குக் கிழக்குப் பாகத்தில் உதிப்பான் என்று சொல்லுவோம்.

39. உதிக்காமுன் தந்தைமுன்னோன் உறங்குவான் மதலையின்றி
அதன்பின்னோன் மதலையின்றி அணுகியே சிறையாய் [வாழ்வன்
சதியாக ஒருவன்தானும் சம்மானமே செல்வானாகும்
விதியது முடியுமென்றோம் விமலியே கேட்டிடாயே.

39. பிறப்பதற்குமுன், தந்தையின் அண்ணன் பிள்ளையில்லாமல் இறப்பான். அதற்குப் பிறகு தம்பியும் பிள்ளையில்லாமல் சிறையில் இருப்பது போலிருப்பான். பெண்டாட்டியும் தானும் உலகவாழ்வை முடித்துக்

1. கரும்பு

கொண்டு இறப்பார்கள். இதுதான் அவர்களுக்கேற்பட்ட விதியின் கொடுமை. பார்வதியே! கேட்பாயாக.

40. பிறந்தசேய் அந்தாண்டுக்கும் பலபல விடையமாகும்
வரனுக்குச் செலவனேகம் மானிலம் சல்லியபாதைக்
குறைமனம் விரோதமுண்டு குடியது அதன்மேல்சித்திரம்
தரையது சேர்தலுண்டு சல்லிய மில்லாறுகும்.

40. பிறந்த பிள்ளைக்கு ஐந்தாவது வயதுவரை பாலாரிஷ்டம். தகப்பனுக்குச் செலவு அதிகம் ஏற்படும். பூலோகத்தில் கடன் தொந்திரை, மனக்குறை, விரோதம் இவைகள் ஏற்படும். குடும்பம் அதற்குமேல் ஒழுங்காயிருக்கும். பூமியைச் சேர்ப்பான். கடனில்லாமலிருப்பான்.

41. தந்தையின் மரணமட்டும் தாமரை குடும்பமொன்றுய்
விந்தையாய் ஓங்குமென்றேம் விகடங்கள் அதின்மேலாகப்
பந்தமாம்...............பகருவோம் பின்பால்சேதி
....

41. தந்தையின் மரணகால பரியந்தம் தத்தளிக்கும் குடும்பம் ஒன்றுகி ஆச்சரியமாய் மேன்மேலும் விருத்தியடையும் என்றேம். வேடிக்கைகள் அதற்குமேல் தான். பல கட்டுப்பாடுகளுண்டு. அந்த விவரங்களைப் பிறகு விவரிப்போம்.

ஜாதகம் 23

1. பிறைதேளில் கேதுமானில் பூமகன் பரிதிவீணை
கரியவன் ராகுபுந்தி கடகத்தில் புகரும்சீயம்
குருவுமே கோலதாகக் கொண்டலும் ஜெனனமாக
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்கலுற்றாள்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், கேது மகரத்திலும், செவ்வாய் சூரியன் மிதுனத்திலும், சனி ராகு புதன் கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், குரு துலாத்திலும் இந்த கிரகநிலை கொண்ட மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள் என்று தேவி கேட்கலானாள். (கொண்டல் = மேஷம்.)

	லக்கினம்		செவ்வாய் சூரியன்
	இராசி சக்கரம்		சனி ராகு புதன்
கேது			சுக்கிரன்
	சந்திரன்	குரு	

2. இந்தசே யாணும்ஜென்மம் இல்லமும் கீழ்மேல்வீதி
தென்வாடை தென்கீழ்தன்னில் சிறப்பிலா யீசன்கோஷ்டம்
அந்தரி அருகில்தங்கும் யானையின் கோஷ்டம்தென்பால்
நொந்திடு மாலின்கோஷ்டம் நுவலுவோம் சிற்றூராகும்.

2. இந்தக் குழந்தை ஆண்மகன். பிறந்த வீடு கிழக்குமேற்கு வீதி, தெற்கு வாடையில் தென்கிழக்கே உற்சவங்கள் சரிவர நடக்காத ஈசுவரன் கோவில். அதன் அருகில் விக்னேசுவரர் கோவில். அதற்குத் தெற்கே இடிந்து கிடக்கும் விஷ்ணுவாலயம். இஃது ஒரு சிறிய கிராமம்.

3. இத்தகை அடையாளத்துள் இலகிய சிற்றூராகும்
வித்தகன் வடுகர்வர்க்கம் விளம்புவோம் தாயேயாங்கள்
பெற்றதாய் தந்தையோகம் பேதையர் புத்திரயோகம்
சுத்தமாய் முன்பின்ஜென்மம் செப்புவோ மின்னூல்
[தன்னில்.

3. இந்த அடையாளங்களைக் கொண்ட இந்த சிற்றூரில் இவ்வித்தகன் தெலுங்கு ஜாதியில் பிறந்தான். தாயே! இவனுடைய யோகம், தாய்

தந்தையர் யோகம், பெண்டாட்டி, பிள்ளைகள் யோகம், ஒழுங்கான பூர்வஜன்மம், அடுத்த ஜன்மம் இவைகளை இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம்.

4. தந்தைகுணம் கூறுகின்றேம் மாஞ்சிவப்பன்
சரசமாய் வார்த்தையுள்ள அதிகமாகத்
தந்தமது தேயன்கொஞ்சம் வறுமைகாணுன்
கன்னிந்தை யுடையவனும் தயிரியத்தன்
தன்பதிசூதுக் கிணக்கம்சொல்லான் அஞ்சாநெஞ்சன்
தரணியிஞல் சீவிப்பன் சாராருள்ளான்
தந்தையில்லம் விட்டவனும் நீங்கிவெளியூர்சின்னுள்
சாருவான் விஷமமுளன் சமர்த்தாய்வார்த்தை.

4. தந்தையின் குணநிசயங்களைக் கூறுவோம். மாநிறமுள்ளவன். சரசமான பேச்சுக்களைப் பேசுவான். அதிகமாக பற்கள் தேய்ந்திருக்கும். சிறிதும் தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான். கடுமையான பழிச்சொல்லை யுடையவன். தைரியசாலி. தன்னைச் சேர்ந்தவர்களின் சூதுகளுக்கு இணக்கமான வார்த்தைகளைச் சொல்லான். பயமில்லாத மனதையுடையவன். பூமியைச் சாகுபடி செய்து ஜீவனம் செய்வான். பரிவாரங்களையும் சேவகர்களையும் உடையவன். தகப்பன் விட்டைவிட்டு அவனும் நீங்கிச் சிலநாள் வெளியூரில் போயிருப்பான். கெட்ட சுவாபவமுள்ளவன். சாமர்த்தியமாய்ப் பேசுவான்.

5. இருசொல்லன் வழக்கிடுவன் வீணுகத்தான்
இதிகாசம் தானறியான் ஈகைகொஞ்சம்
பொருளிச்சை வருத்தம்சாய்[1] தேடுவானும்
புயபலத்தன் நடைகடியன் பெற்றேர்நேயன்
அரிவைதுணை இரண்டாகும் துணைஆண்காணுன்
அறமொழியும் அடக்கமொழி அறிவோர்நேயன்
துறவிஇஷ்டன் வறுமையிலான் சீலம்கொஞ்சம்
சேயிழைசொல் கடவாதான் தேவியேகேள்.

5. இரண்டு அர்த்தங்கள் படும்படி சொல்லுவான். சண்டை செய்வான். வீண் உடம்புடையவன் இதிகாசம் அறியமாட்டான். சிறிது தருமம் செய்வான். பொருளாசையுள்ளவன். அதனுல் வருத்தப்படுவான். புகழ் தேடுவான். புஜபலமுள்ளவன். சுறுசுறுப்பாய் நடப்பான். தாய் தந்தையருக்கு இஷ்டமானவன். இவனுடைய உடன்பிறந்தார் இரண்டு சகோதரிகள். சகோதரர்கள் இல்லை. தர்மசாஸ்திரங்களையும் அடக்கமுடிய

1. புகழ்

அறிவுளார் மொழியையும் கேட்க பிரியப்படுபவன். சன்னியாசிகளின் நேசன். தரித்திரமில்லாதவன். சிறிது சீலம் (ஆசாரம்) உள்ளவன். பெண்டாட்டியின் சொல்லைத் தட்டமாட்டான். தேவியே! கேட்பாயாக.

6. சொன்னஇந்த குணத்தானுக் கிந்தபாலன்
தோன்றுவா னிவன்குணத்தைச் செப்பக்கேண்மோ
பின்னமிலான் சொல்லடக்கம் பொருத்தவார்த்தை
பொய்புகலான் சமகல்வி பூமிவிருத்தி
உன்னதாமா யில்செய்வன் உவமைவார்த்தை
உயர்புத்தி உற்ரோர்கள் மதிக்கஉய்வன்
உறுதியிலான் பொன்சேர்ப்பன் தரித்திரமிலான்
[பெரியோர்நேயன்
புகழேற்பன் கோவிருத்தி பொருந்துமென்றேும்.

6. இப்படிப்பட்ட குணதிசயங்களையுடைய தந்தைக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறந்தான். அவன் குணங்களைக் கூறக் கேளுங்கள். சரீரத்தில் யாதொரு பின்னமும் இல்லாதவன். சொல்லடக்கமுள்ளவன். பொருத்தமான வார்த்தையைப் பேசவல்லான். பொய்யே பேசமாட்டான். சமமான கல்வி கேள்விகளை யுடையவன். பூமியை விருத்தி செய்வான். மேலான (மிகவும் உயரமான) விட்டைக் கட்டுவான். உபமான உபமேயங்களுடன் பேசுவான். நிச்சயபுத்தியில்லாதவன். பணத்தைச் சேர்ப்பான். தரித்திரமில்லாதவன். பெரியவர்களுடைய நண்பன். கீர்த்தியைப் பெறுவான். பசுமாடுகளை விருத்தி செய்வான். இவை இவனுக்குப் பொருந்தும்.

7. கரமதனில் மால்ரேகை உருத்திரரேகை
கஞ்சநிறம் உணவுசுகம் சூடாம்தேகம்
நெறிதவருன் துணைகாணுன் காரணம்சொல்
நிலமகனும் சூரியனும் மூன்றில்தங்க
மருவாது துணையென்றேும் இருபானென்றில்
மனைவிவரும் கீழ்பாலில் குணத்தைச்சொல்வேன்
குறையென்ரோர்க் குதவிடுவள் பொறுமைசாலி
குலமெச்ச வாழ்ந்திடுவள் சீலியாகும்.

7. கையில் விஷ்ணுரேகையையும் உருத்திரரேகையையும் உடையவன். கருப்பு நிறமுள்ளவன். சாப்பாட்டுச் சுகமுடையவன். தேகத்தில் உஷ்ணம் பீடித்திருக்கும். தருமநெறி தவறமாட்டான். சகோதரரில்லை. இதற்குக் காரணம் என்ன? செவ்வாயும், சூரியனும் இலக்கினத்திற்கு மூன்றும் வீட்டில் தங்கியிருப்பதனல் சகோதரன் ஏற்படாது. தனக்கு இருபத்தொன்றும் பிராயத்தில் கலியாணம் செய்து கொள்ளுவான்.

அவளும் தன்னூருக்குக் கிழக்கிலிருந்து வருவாள். அன்னவள் குணத்தைச் சொல்லுகிறேன். இல்லையென்போருக்கு உதவி செய்வாள். பொறுமை யுடையவள். தன் குலத்தோர் மெச்சும்படி வாழ்ந்திடுவாள். சீலமுடைய வளாயிருப்பாள்.

8. சங்கையென்றோர் தனைச்சேராள் இளைத்தோர்க்கன்னம்
தானீவள் புத்திமான் சரசவார்த்தை
துங்க[1] மனம் வரன் மனம்போல் செல்லுவாளாம்
சுந்தரிக்குச் சஷ்டிசுதர் செப்பலாகும்
அங்கதனில் ஆண்ரெண்டு கன்னிமூன்று
ஐந்துமே தீர்க்கமுற்றும் அறிவித்தோம்யாம்
இங்கிவன்தன் முன்சென்மம் செப்பக்கேளாய்
இடர்தீர்க்கு மாமெலிபால் யீன்றோர்வம்சம்.

8. சந்தேகமுள்ள இடங்களில் சிநேகம் செய்யமாட்டாள். பசி என்ப வருக்கு அன்னம் கொடுத்துதவுவாள். நல்ல புத்தியை யுடையவள். சரச மான வார்த்தையைப் பேசுவாள். பரிசுத்தமான மனதை யுடையவள். புருஷன் இஷ்டப்படி நடப்பாள். இச்சுந்தரிக்கு ஆறு குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லலாம். அதில் ஆண் குழந்தைகள் இரண்டு, பெண் குழந்தை கள் மூன்று. இவற்றுள் ஐந்து தீர்க்காயுசுடனிருப்பார்கள். இதனை நாங் கள் விளக்கமாகக் கூறினோம். இவனுடைய பூர்வஜன்ம விவரத்தைச் சொல்லுவோம். கேட்பாயாக. துன்பத்தைத் தீர்க்கும் பெரிய பாட்டி யின் வமிசத்தில்,

9. உதித்துமே செட்டுசெய்து வாழுநாளில்
உறைந்தவினை தான்புகல்வோம் ஒருபெண்போில்
விதவிதமாய் வார்த்தைகளுரைத்து விலக்கலுற்றான்
மெல்லியுமே திகிலடைந்து புகலும்சாபம்
சதியான வார்த்தைசொல்லி விலக்குகின்ற
சண்டாள பாவிக்கு மறுசென்மத்தில்
உதவாது துணைவர்தனியாய் வாழ்வாய்
உறவினரால் பலவழக்கு அதனால்சேதம்.

9. உதித்து வியாபாரம் செய்து வாழ்ந்து வரும் நாளில் ஏற்பட்ட ஊழ்வினை இன்னதென்று சொல்லுவோம். ஒரு பெண்ணைப் பார்த்து பல விதமான இச்சகவார்த்தைகளைக் கூறிப் பிறகு வேண்டாமென்று விலக்கி விட்டான். அவளும் நம்பிமோசம் போய் விட்டோமேயென்று மனதில் திகிலடைந்து சாபம் இட்டாள். சிநேகமான வார்த்தைகளைச் சொல்லிக்

---

1. பரிசுத்தமான

கடைசியில் வேண்டாமென்று விலக்கின சண்டாளபாவிக்கு அடுத்த ஜன்மத்தில் உடன்பிறந்த சகோதரர்கூட உதவாமல் தன்னந்தனியே வாழ்வான். உறன்முறையோர்களால் பல சண்டை சச்சரவுகள் உண்டாகும். அதனால் பல படியான நஷ்டம் ஏற்படும்.

10. சேதமுண்டாய் வெற்றியிலா வாழ்வாயென்ன
சேர்ந்ததுவே அச்சாபம் தீரனுக்குக்
காதலனும் அந்தியத்தில் சுதருமின்றிக்
கனபகையும் துணைவரினால் கலந்துமேதான்
பாதகனும் காலன்பதி பரவியேதான்
பிரமனுமே வரியவந்தான் காதலன்தானும்
ஓதுவேன் முன்சாபம் சேர்ந்ததாலே
ஒண்டியாய் வாழ்ந்திடுவன் துணைகளின்றி.

10. அப்படியெல்லாம் நஷ்டமடைந்து வெற்றியில்லாதபடி (வெட்டியாய்) வாழ்வாயென்று சபிக்க, அந்தச் சாபம் இவனைச் சேர்ந்தது. இவனும் கடைசி காலத்தில் பிள்ளைகளில்லாமல், சகோதரர்களோடு கடுமையான பகைமையும் ஏற்பட்டு எமலோகம் போய்ச் சேர்ந்தான். பிரம்மாவின் சிருஷ்டியினால் இவனுக்கு முன்பு ஏற்பட்ட சாபம் பலித்தது. ஒண்டியாய் (கூட ஒருவருமில்லாமல்) சகோதரரின்றி வாழ்வான்.

11. தரணியால் துர்வழக்குச் செய்துமேதான்
தனவிரயம் முன்துன்பம் பின்புவெற்றி
திருதியத்தில் வெற்றியாய் வாழ்வானாகும்
செப்புவீர் காலமதைச் சிறுவனுக்குக்
கரியவன் தன்தசையில் சனிபால்கழறுவோம்யாம்
காதலன்தன் யோகமதைக் கழறுவோம்தாயே
திருமாளிகை செய்திடுவன் மூவெட்டின்மேல்
செய்நிலங்கள் விருத்திசெய்வன் செனசகாயன்.

11. பூமி விஷயமாய் வீண்வழக்குச் செய்து பணநஷ்டம் அடைந்தான். இது முதலில் ஏற்பட்ட துன்பம். பிறகு நன்மையடைந்து மூன்றும் தடவை வெற்றியாய் வாழ்வான். அது ஜாதகனுடைய எந்தக் காலத்தில் என்று சொல்லுங்கள். அது ஜாதகனுடைய சனிதசையில் சனிபுக்தியில் சொல்லுவோம். இனி இவனுடைய யோகபாவத்தைச் சொல்லுவோம். தாயே! பெரிய திருமாளிகையைக் கட்டுவான். இருபத்துநான்கு வயதிற்கு மேலாக நஞ்சை நிலங்களை விருத்தி செய்வான். பொதுஜனங்களுக்குச் சகாயம் செய்யக்கூடியவன்.

12. அரக்கொடி யுடையவன்போல் தரணிசேர்ப்பன்
அவனிதனில் சல்லியமிலான் ஆள்கள்சேர்க்கை
மருமமுளன் சனிதசை பின்பாகந்தன்னில்
மதிபிறைபோல் குடும்பவிருத்தி வாக்குமென்மை
உறன்முறையார் மதிக்கஉய்வன் பணியோர்விருத்தி
ஓங்கிடுமே தனதானியம் உயர்வாம்புத்தி
திருமகனுக் கெவ்விதங்கள் யோகம்சொன்னீர்
செம்பொன்னு மேழிலுற சிகியும்பத்தில்,

12. பாம்புக்கொடியையுடைய துரியோதனன்போல் பூமியைச் சேர்ப்பன். பூலோகத்தில் கடன் என்பதே கிடையாது. பரிவாரங்களை அடைவான். கபடமுள்ளவன். சனிதசையின் பிற்பாதியில் வளர்பிறைச் சந்திரனைப்போல குடும்ப அபிவிருத்தி ஏற்படும். சொல்லுக்கு மதிப்புண்டு. உறன்முறையோர்கள் நன்கு மதிக்கும்படி வாழ்வான். பண்ணை ஆட்களும் ஏர்களும் விருத்தியாகும். தன தான்யங்கள் ஓங்கும். நல்ல புத்தி விலாசம் ஏற்படும். இந்த ஜாதகனுக்கு இவ்விதமான யோகபாவங்களைக் கூறினீரே. குருபகவான் ஏழாம் வீட்டிலும், கேது பத்தாம் வீட்டிலும் தங்கி இருக்க,

13. கரியவனும் ராகுபுந்தி நாலில்தங்க
கழறிடுனும் மால்யோகம் வாசியோகம்
அரிபத்தி தலம்செல்வன் அடைந்தோர்க்கன்பன்
அரசிரிஷ்டம் பூர்வபொருள் அணுகுமென்றேம்
இருஊரில் பூமியுண்டாம் சனிபூர்வத்தில்
ஏகுஅயலூர் பூமிஎன்று சொல்வோம்
அருணன் தூதுவன்[1] தசையும் பெருமைஓங்கும்
அணுகாது வறுமையென்றேம் அதன்மேல்துன்பம்.

13. சனி, ராகு, புதன் இவர்கள் நாலாம் வீடாகிய கடகத்தில் சேர்ந்திருக்க, திருமாலின் யோகம், வாசியோகம் (குதிரைகளின்சேர்க்கை) விஷ்ணுபக்தி மேலிட்டு, க்ஷேத்திரங்கள் சென்று தரிசனம் செய்வான். அண்டினவரைக் காப்பாற்றுவான். ராஜாக்களின் பிரியத்தை சம்பாதிப்பான். பூர்வ சொத்துக்கள் வந்து சேரும். இரண்டு ஊர்களில் பூமிகள் ஏற்படும். சனிதசை ஆரம்பத்தில் வெளியூர் நிலம் இவனை வந்தடையும். புதன் தசையிலும் பெருமை வளரும். தரித்திரமே ஏற்படாது. அதற்குமேல் துன்பம் நேரும்.

---

1. புதன்

14. துன்மையிலா அன்னைகுணம் செப்புவோம்யாம்
சொல்சுருக்கம் மால்நிறத்தாள் வாததேகி
அன்னியர் குற்றம்புகலாள் சந்தேகத்தாள்
அணுகிடுமே வாயுகொஞ்சம் அரி[1]கோபத்தாள்
தன்தேகம் பலவினம் வறுமைகாணுள்
தன்துணைஆண் மூன்றுருவம் கன்னிஒன்று
அன்னையில்லம் தென்கிழக்காம் குடும்பலைச்சல்
அலைமீது துரும்புபோல் அவர்வாழ்வார்கள்.

14. கெடுதலில்லாத அன்னையின் குணங்களைக் கூறுவோம். சுருங்கச் சொல்லுவாள். கருப்பு நிறமுள்ளவள். வாத பீடையுள்ள தேகமுடையவள். பிறர்மேல் குற்றம் சாட்டமாட்டாள். சந்தேக புத்தியுடையவள். வாயுவின் உபத்திரவம் கொஞ்சமுள்ளவள். கடுமையான கோபமுடையவள். பலக்குறைவுள்ள தேகத்தையுடையவள். தரித்திரத்தை அனுபவியாள். மூன்று சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. தாயார் வீடு தென் கிழக்கே யுள்ளது. குடும்ப விஷயமாய் அலைச்சல் அலைமீது செல்லும் துரும்புபோல அவர்கள் அல்லாடித் தள்ளாடி வாழ்வார்கள்.

15. இருந்தஇல்லம் தனைவிட்டு வெளியூர்தன்னில்
ஏகுவார் தனித்தனியாய் இடுக்கமாக
வருவிப்போம் அவர்சேதி பின்பாகத்தில்
மாதுருதன் பூர்வத்தை வருவிப்போம்யாம்
விரிஞ்சிநகர் தென்பாலில் சிற்றூர்தன்னில்
விளங்கினுள் மருத்துவதன் குலத்திலேதான்
பெரிதான குடும்பியதாய் வாழுநாளில்
பின்வந்தோன் சுதர்கள்தன்பால் வளரும்காலே,

15. இருந்த வீட்டைவிட்டு வெளியூரில் போயிருப்பார்கள். தனித் தனியே சிரமங்களை அடுக்கடுக்காய் வருவிப்போம். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பின் பாகத்தில் கூறுவோம். மாதாவின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். விரிஞ்சி நகரத்தின் தென்பாகத்தில் சிறிய ஊரில் பிறந்தாள். வைத்தியகுலத்திலே பிறந்து பெரிய குடும்பியாகி வாழ்ந்து வரும் நாளில் இவளுடைய தம்பிகள் இவளிடம் வளர்ந்து வரும் காலத்தில்,

16. பாலருக்குச் சிலவிஷயவஞ் சனையும்செய்தாள்
பெற்றதாய் அதையறிந்து புகலும்சாபம்
வேல்விழிக்குச் சுதரற்று மறுசென்மத்தில்
விளங்காது சுதரென்று மெல்லிசொல்லி

1. கடுமையான

ஆலம்போல் அருசாபம் நேர்ந்ததென்றேம்
அச்சென்மம் சுதரற்று மனதுவாடி
நீலியுமே கணேசனுக்கு நிதமும்தீபம்
நேர்த்தியதாய் வைத்துப்பின் மரணமாகி.

16. அச்சிறியவர்களுக்குச் சில விஷய வஞ்சனைகள் செய்தாள். இவளைப் பெற்ற தாயார் அதை அறிந்து சாபமிட்டாள். இவள் குழந்தை யில்லாமல் அடுத்த ஜன்மத்தில் இருப்பாள். பிறந்தாலும் இருக்கக்கூடாது என்று சொன்னாள். ஆலகால விஷம்போல அருமையான கொடியசாபம் இவளுக்கு நேர்ந்தது. அந்த ஜன்மம் குழந்தையில்லாமல் மனம்வாடி அம்மாது கணபதிக்குத் தினந்தோறும் நேர்த்தியாய்த் தீபமேற்றி வைத்துச் சிலநாள் கழித்துக் காலாந்தரமானாள்.

17. வந்தவளாம் இம்மாது முன்னூழ்ச்சாபம்
மருவிடுமே சுதர்தோஷம் பாவைக்கேதான்
இந்தசுதன் எவ்விதமாய்த் தீர்க்கமெய்தும்
இயம்புவீர் தவமுனியே இவள்முன்சென்மம்
தந்தியின் கோஷ்டத்தில் தீபபுண்ணியம்
சாதகனும் தீர்க்கமெய்தும் சாற்றினேமே
பிந்திசென்மம் வள்ளூரில் உடையார்வம்சம்
பிறப்பளாம் சுகமுண்டாய்ப் பேதைவாழ்வள்.

17. பிறகு வந்து ஜனித்தவள் இம்மாதுதான். இவளுக்குப் பண்டை ஊழ்வினையின் காரணமாகச் சாபம் நேர்ந்தது. புத்திரதோஷம் ஏற்பட்டது. இப்படிப்பட்டவளுக்குக் குழந்தை தீர்க்காயுசுடன் பிறக்க வழி இல்லையோ என்று முனிவரைக் கேட்க, இவள் முன் ஜன்மத்தில் பிள்ளையார் கோவிலில் விளக்கேற்றி வைத்த புண்ணியவசத்தினால் நம் ஜாதகன் தீர்க்காயுசுட னிருந்தான். மறு ஜன்மத்தில் திருவள்ளூரில் உடையார்வமிசத்தில் பிறப் பாளாம். சுகமாக வாழ்ந்து வருவாள்.

18. தந்தையின் தன்முன்சென்மம் சாற்றக்கேண்மோ
சலகண்டி யீசன்வாழ் நாட்டிலேதான்
நிந்தைபெறு முத்திரிய குலமுதித்து
நிதரமுள குடும்பியதாய் மனைவிமைந்தர்
அந்தவனும் வாழ்நாளில் வினையைச் சொல்வேன்
அவன்துணைக்குப் பாகமதை மோசம்செய்தான்
பிந்தினேன் வருத்தமுற்றுப் புகலும்சாபம்
பாகமதைச் சரியீயா பாவிக்கேதான்.

18. தகப்பனாரின் முன் ஜன்ம விவரங்கள் கூறுவோம். கேளுங்கள். பகவானிருக்கும் ஊரில் வசைமொழியைப் பெறக்கூடிய குருக்கள் வமிசத்தில் உதித்து, பெரிய குடும்பியாய், மனைவி மக்களுடன் அவன் வாழ்ந்து வரும் காலத்தில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அவ்வினையைச் சொல்லுவேன். அவன் சகோதரனுக்கு ஏற்பட்ட சொத்தின் பாகத்தைக் கொடாமல் மோசம் செய்தான். தம்பியும் மனவருத்தத்துடன் இவனுக்குச் சாபம் கொடுத்தான். ஏனெனில் சரி பாகத்தைக் கொடுக்காத பாவியாய் விட்டானல்லவா!

19. மறுசென்மம் துணைஆண்பா லில்லாதாகி
மானிலத்தால் சிலபகையும் மருவுமென்று
உரைத்துமே தூள்தூத்த அந்தச்சாபம்
உறைத்ததுவே யிச்சென்மம் துணைஆண்தோஷம்
திருகுவரும் தரணியிஞல் செலவுமுண்டு
செப்புவோம் பின்சென்மம் திருவலத்தில்
பெருமையாய்ச் சத்திரியகுலம் பிறந்துஇன்னோன்
பெரிதான செட்டுசெய்வன் புனிதன்தானே.

19. அடுத்த ஜன்மத்தில் கூடப்பிறந்த சகோதரனில்லாமல், உலகினில் சிற்சில எதிர்ப்புக்கள் ஏற்பட்டு, பழைய சாபம் இவனுடைய வாழ்வின் சந்தோஷத்தைத் தூள்தூளாகச் சிதையும்படி செய்தது. முதலில் உடன் பிறப்பில்லை. அஃதாவது சகோதரதோஷம் ஏற்பட்டது. பூமியில் வாழும்நாளில் திருகுகள் ஏற்பட்டன. அனுவசியச் செலவுகளும் ஏற்பட்டன. மறு ஜன்மத்தில் திருவலம் என்ற ஊரில் பெருமைமிக்க க்ஷத்திரியகுலத்தில் இவன் உதித்து, பெரிய வியாபாரங்களைச் செய்து, மேலோனன புனித குணத்துடனிருந்தான்.

20. தானவர்க்குக் கருமம்செய்யும் காலம்சொல்வேன்
சாதகர்க்கு முப்பத்து மூன்றுஆண்டில்
ஊனமிலா தந்தைக்கு உடலம்ஏகும்
உயர்புந்தி தசையில்குரு புத்திகாலம்
மானனைய அன்னைக்கு முப்பான்ரெண்டில்
மார்கழியின் மாதமதில் பித்தவாயுவால்
ஈனரையே தண்டிக்கும் காலனேடு
ஏகுவா ளென்றுரைத்தோம் இடராய்த்தானே.

20. இவன் தன் தந்தைக்குக் கருமம் செய்யும் நாளைக் குறிப்போம். ஜாதகனுக்கு முப்பத்துமூன்றும் பிராயத்தில் யாதொரு இடைஞ்சலுமில்லாமல் தந்தை உயிர் துறப்பான். இதுவும் ஜாதகனுடைய மேலான புததசையில் குருபுக்தி நடக்கும் காலமாகும். மான்போன்ற சாயையுடைய தாய்க்கு ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் ஒரு மார்கழி மாதத்தில், பித்த

வாயுவினால் பாவிகளைத் தண்டனைக்குட்படுத்தும் எமலோகத்திற்குப் போவாள் என்று கூறினோமல்லவா! இவளும் துன்பப்பட்டேதான் இறந்தாள்.

21. சாதகர்க்கு அறுபத்தொன் பாண்டுதன்னில்
தென்மாதம் பருவத்தில் செப்புவோம்யாம்
ஓதுவேன் பின்சென்மம் உடுக்கைதன்னில்
உயர்வேத குலமுதிப்பான் பராசர்சொல்வார்
மாதவர்தன் குலமுதிக்கும் காரணம்சொல்
மாரன்மனம் தேவபத்தி வாக்கைக்காத்தும்
தீதில்லா தலவாசம்சென்ற புண்ணியம்
செனிப்பனும் என்றுரைத்தோம் தேவியேகேள்.

21. ஜாதகனுக்கு அறுபத்தொன்பதாவது வயதில் அழகிய வசந்த காலத்தில் மாரகம் ஏற்படும் என்று நாங்கள் சொல்லுவோம். மறு ஜன்மத்தைப்பற்றிக் கூறுங்கால், உடுக்கையென்ற ஊரில் மேலான மறையோர் வமிசத்தில் பிறப்பான். இதைக்கேட்ட பராசரர் சொல்லலுற்றார். மாதவ சிரேஷ்டர்கள் பிறந்த பிராமணகுலத்தில் இவன் பிறந்த காரணம் கூறுங்கள். இவன் மனம் தெய்வபக்தியிலேயே ஈடுபட்டுத் தன் வாக்கியங்களைத் தவறாது காப்பாற்றியும், குற்றமற்ற க்ஷேத்திர வாசம்செய்து புண்ணிய காரியங்களைச் செய்தும் வந்ததன் காரணமாக இங்ஙனம் உயர்குலத்தில் ஜனித்தான் என்று கூறினோம். தேவியே! கேட்பாயாக.

22. தேவிக்கு இவன்பின்னால் மரணமெய்தும்
சேயனுமே உதிக்கும்கால் விசாகநாளாம்
மேவலர்க்கெண் திசையிடுங்கள் [1]அந்துயென்றோம்
விளங்கிடுமே நாலைந்து நாள்களாகும்
தாவியே சனிதசையும் நடக்குமென்றோம்
சமபலனும் அந்தத்தில் விரோதமாகும்
[2]தூதுவன்தன் தசைசெல்வம் பகைவரிஷ்டம்
சேயாகும் நினைவோங்கும் செப்பினோமே.

22. இவன் மனைவி இவனுக்குப் பிறகு உயிர் துறப்பாள். இவன் மகன் உதிக்கும் நட்சத்திரம் விசாகமாகும். அவனுடைய தசாபுக்திகளைக் கணக்கிடுங்கள், அந்தம் வரைக்கும் என்றோம். பிறக்கும்போது நாலைந்து நாட்களுக்குக் குருமகாதசை விளங்கிடும். இதற்கப்புறம் நடக்கும் சனிமகா தசை சமபலனைக் காட்டும். கடைசியில் இடைஞ்சலைத் தரும். புதனுடைய தன் தசையில் செல்வம், பகைமை, அரிஷ்டம் இவை ஏற்படும். சொன்னோமல்லவா!

---

1. கடைசி வரையில்
2. புதன்

ஜாதகம் 24

1\. பிறைவீணை ஞானிவண்டி[1] பொன்அரி சேயுநந்தி
பரிதியும் புந்திராகு பற்றிடம் மானதாகக்
கரியவன் தேளதாகக் [2]கவிசாடி மேடம்சென்மம்
உரைகுவீர் பலனையென்று உமையவள் கேட்கலுற்றாள்.

1\. சந்திரன் மிதுனத்திலும், வியாழன் கடகத்திலும், சிவந்த மேனியையுடைய செவ்வாய் ரிஷபத்திலும், சூரியன் புதன் இராகு இவர்கள் சேர்ந்து மகரத்திலும், சனி விருச்சிகத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், தங்கும்படியான கிரக நிலைகளைக் கொண்ட மேஷ லக்கின ஜாதகத்திற்கு உரிய பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி சப்தரிஷிகளைப் பார்த்துக் கேட்டாள்.

	லக்கினம்	செவ்வாய்	சந்திரன்
சுக்கிரன்	இராசி சக்கரம்		குரு கேது
சூரியன் புதன் ராகு			
	சனி		

2\. அத்திரி புகலுகின்றார் ஆணது செனனமாகும்
வித்தகன் உதித்தஇல்லம் விளம்புவோம் வடதென்வீதி
சத்தியே கீழ்பால்வாசல் சாமுண்டி அருகில்தங்கும்
இத்தகை யடையாளத்துள் எய்துவா னிவனேஎன்றோம்.

2\. அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஆண்மகனது ஜன்மலக்னப் பத்திரிகையாகும். இவன் பிறந்த வீட்டின் அடையாளம் கூறுவோம். தெற்குவடக்கு வீதியில் கிழக்குப் பார்த்த வாசலுடையது. சாமுண்டீசுவரி கோவில் பக்கத்திலுள்ளது. இந்த அடையாளம் கொண்டுள்ள வீட்டில் இந்த ஜாதகன் வசிப்பான் என்றோம்.

3\. தந்தைதுணை ஆண்ஒன்று பெண்பால்ரெண்டு
சாற்றுகிறோம் தீர்க்கமதாய் ஆண்பால்சேதி
முந்தியதோர் குடும்பியதாய் அரசர்பேட்டி
மொழிதவறுன் யூகையுள்ள முனிவுகாட்டான்

1\. கடகம்

2\. சுக்கிரன்

இந்திரபோ கங்களுண்டு சகடுமுண்டு
இனம்சொல் பிறர்நகரி லெழுவானும்
தந்தபிணி யுடையவனும் வறுமைகாணன்
சனஉதவி சகலசென வசியம்கொள்வன்.

3. இவனுடைய தகப்பனுடன் பிறந்தவன் ஒரு சகோதரன், இரண்டு சகோதரிகள். இதைத் தீர்க்கமாய்ச் சொல்லலாம். அன்னவனின் செய்தியைக் கேட்பாயாக. பழைய குடும்பத்தைச் சேர்ந்தவன். ராஜாக்களைப் பேட்டி காண்பான். சொன்னசொல் தவறமாட்டான். நல்ல மதியூகி. கோபத்தை வெளிக்காட்டமாட்டான். தேவேந்திரனுடைய யோகங்களை அனுபவிப்பான். வண்டி வாகனமுமுண்டு. சுற்றத்தார் மெச்சும்படி பிறர் நகரத்தில் வாழ்வான். பல் வியாதியுடையவன். தரித்திரத்தைப் பார்க்கமாட்டான். பொதுஜனங்களுக்கு ஒத்தாசை செய்வான். சகலமானவர்களையும் வசியப்படுத்துவான்.

4. கொள்ளவிற்க வல்லவனும் கோதைமோகன்
குறைதீர்ப்பன் குலத்தோரை ஆதரிப்பன்
தள்ளுவான் மூர்க்கரையே தயாளமுண்டு
சந்தேக மனமுடையன் செலவேசெய்வன்
நள்ளிருட்குத் தீபம்போல் நாட்டுவானும்
நற்சுதர்கள் ஆண்நான்கு கன்னிரண்டு
விள்ளவே தானுரைத்தோம் வாததேகி
விருந்தோரை ஆதரிப்பன் விமலன்தானே.

4. கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் சமர்த்தனவன். பெண்டாட்டியினிடத்தில் பிரியமுள்ளவன். பிறருடைய குறைகளைத் தீர்ப்பான். சொந்தக்காரர்களைக் காப்பாற்றுவான். மூர்க்கர்களுடன் சேரமாட்டான். தயாளகுணமுள்ளவன். மனதில் சந்தேக புத்தியுடையவன். நல்ல செலவு செய்வான். நல்ல இருட்டில் ஏற்றிவைத்த தீபத்தைப்போலத் தன் பெருமையைப் பலர் அறிய நாட்டுவான். நல்ல பிள்ளைகள் பிறக்கும். ஆண் நான்கு, பெண் இரண்டு. தெளிவாகவே விவரங்களைக் கூறினோம். வாத சம்பந்தமான தேகத்தையுடையவன். விருந்தினரை உபசரிப்பான். மேலோன் இவனேயாகும்.

5. தானதர்மம் பணிசெய்வன் தரணிஆள்வன்
தாய்வழியில் துன்பமுண்டு சாற்றக்கேண்மோ
மான்விழிமார் சேதியின்பால் வருவிப்போம்யாம்
மைந்தனும் தந்தைகுணம் விளம்பக்கேளாய்

ஈனமிலான் சிலதுநாள் வணிபம்செய்வன்
இடருண்டு சிலதுநாள் அரசர்தன்னுல்
ஊனமுறும் சோலைபுவி யுடையனுகும்
ஒங்காது அதிற்பலன்கள் உவமைசொல்வன்.

5. தானதர்மங்களைச் செய்வான். பூமியில் அதிகாரம் செலுத்துவான். தாயார் குடும்பத்தில் துன்பங்கள் ஏற்படும். சொல்லுகிறேன், கேளுங்கள். தாயாரின் விவரங்கள் கூறும் காலத்தில் தெரிவித்துக் கொள்ளுவோம். மைந்தனும் தந்தையின் குணத்தைக் கொண்டவன். இதைக் கூறுவோம், கேட்பாயாக. அல்பகுண மில்லாதவன். சிலகாலம் வாணிபம் செய்வான். துன்பங்களை அனுபவிப்பான். சிலநாட்கள் அரசர்களால் குறைபாடுள்ள சோலை, பூமி இவைகளைப் பெறுவான். அதில் அதிக சௌகரியமில்லை. உபமான உபமேயங்(திருஷ்டாந்தங்)களுடன் சம்பாஷிப்பான்.

6. வன்மனத்தன் மாஞ்சிவப்பன் மருமம்கொஞ்சம்
வளமான குடும்பமுன்னுல் வறுமைபின்னுல்
பின்துணையால் சீவிப்பன் சஞ்சலத்தன்
பெறுமாதா இரண்டென்று பேசுவோம்யாம்
முன்மாதா ஒன்றுண்டு நிந்தையுண்டு
மேதினியின் சிலேடையதாய் மொழிவாரம்மா
பன்னியுரைப் பலர்நேசம் பகையால்பொன்னும்
பரந்துவிடும் வாயுபிணி படருமென்றேும்.

6. கடுமையான மனத்தை யுடையவன். மாநிறமுள்ளவன். மனதில் சிறிது கபடமுள்ளவன். முதலில் வளப்பம்பொருந்திய குடும்பத்தைப் பெற்றிருப்பான். பிற்காலத்தில் வறுமையின் கொடுமை யுடையவன். தன்னுடைய தம்பியின் ஒத்தாசையினுல் சீவனம் செய்வான். சஞ்சல மனத்தையுடையவன். இரண்டு தாய்மார்கள் உண்டு என்று சொல்லுவோம் நாங்கள். முந்தின தாயார் ஒருத்தி உண்டு. அதனுல் அவதூறுகள் ஏற்படும். உலகினில் பலர் பலவிதமாக அர்த்தங்கொள்ளும்படியான வார்த்தைகளைப் பேசினமணியமாயிருப்பார்கள். பன்னிப்பன்னிப் பேசும் திறமையுள்ளவன். சத்துருக்களால் பணநஷ்டம் ஏற்படும். வாயு உபத்திரவம் சரீரத்தில் ஏற்படும் என்றேும்.

7. இயன்றே தந்தை குணமுரைத்தோம்
இவன்தன் சேதிஇயம்பக் கேள்
குன்று மனத்தன் தீரமுளன்
குறியும் முகத்தில் தான்தோன்றும்

சென்ற விடத்தில் பெருமையுள்ள
சிறிய தந்தை தன்னுலே
அன்றே வாழ்வன் அதிககல்வி
அரச ரிஷ்டம் அன்புடையன்.

7. இயன்ற தந்தையின் குணங்களைக் கூறினோம். இவனுடைய செய்தியின் விவரங்களைக் கூறுகிறோம். கேளுங்கள். குறைவில்லாத, அஃதாவது தாராளமான மனதை யுடையவன். தைரியசாலி. அகத்திலுள்ளதை மனக்குறிப்பினுல் அறியலாகும். சென்ற விடமெல்லாம் சிறப்பு. சிற்றப்பனுடைய ஒத்தாசையினுல் வாழ்ந்து வருவான். பெரிய படிப்பாளி. அரசர்களின் இஷ்டமும் அன்புமுடையவன்.

8. அன்புகூர்வன் யாவரின்மேல் அன்னையிரண்டு ஆகிடுமே
முன்னுல் வறுமைசுகம் குறைச்சல்விரயம் தந்தைஆஸ்தி
[யெலாம்
பொன்னும் பணிகள்பின்னுல் புரப்பன் தந்தைபூர்வம்
[போல்
சென்னேன் உஷ்ணதேகியும் சிறுத்தோர்க் குதவிசெய்
[யேனே.

8. எல்லாரிடத்திலும் அன்புடனிருப்பான். இரண்டு தாய்மார் ஏற்படுவர். முதலில் வறுமைப்பிணிகளை அனுபவித்துக் குறைவான சுகத்தை அனுபவிப்பான். தந்தையின் சொத்துக்கள் எல்லாம் விணுகும். பிற்காலத்தில் பணமும் பூஷணங்களும் ஏற்படும். தந்தை முன்னிருந்ததுபோல் அதிகாரம் செலுத்துவான். உஷ்ணபீடையுள்ள சரீரத்தை யுடையவன். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான்.

9. துணைமுன்தோஷம் ஆண்ஒன்று செனிக்கும் பின்னுல்
[குணங்கேளாய்ப்
பிணையே யெண்ணுன் மனக்கபடன் பெரியோருவு
[தந்திரமொழி
சினமுமுடையன் சமகல்வி தீனமனத்தன் எவர்க்கஞ்சான்
தனயன் சொல்லைத் தடுத்திடுவான் சமயோகத்தான் சாற்றி
[னேம்யாம்.

9. தனக்கு முன் பிறந்த சகோதரர்கள் தோஷமடைவார்கள். பின்னுல் தம்பி ஒருவன் ஏற்படுவான். அவன் குணங்களைக் கூறுவேன். கேட்பாயாக. கெடுதியே மனதில் எண்ணமாட்டான். கபடமுள்ள மனதை யுடையவன். பெரியாரைத் துணைக் கொள்ளுவான். தந்திரமாய்ப் பேச வல்லான். கோபமுடையவன். சமமான படிப்புடையவன். தரித்திர

புத்தி யுள்ளவன். யாவருக்கும் பயப்படமாட்டான். பிள்ளையின் பேச்சைத் தடுத்திடுவான். சமமான யோக பாவங்களை யுடையவன் என்று சொல்லுவோம்.

10. கத்திரி யோகம்காவலன் கழறினோம் பாரியுமிரண்டு
புத்திர ரிரண்டு பெண்ணதுமூன்று பொருந்திடும் பாலனுக்
[கென்றோம்
அத்திரி புகல அம்பிகைகேள்வி அரைந்தினீர் பாரியுமிரண்டு
குத்தங்க ளுண்டோதீர்க்கமோ புகல்வீர் கூறுவோம் முன்
[மனைதானும்,

10. இவனுடைய யோகம் கத்தரி யோகமாகும், பெண்டாட்டி இருவர் என்று சொல்லுவோம். புத்திரர்களுமிருவர். பெண்கள் மூன்று பேர்கள் ஏற்படுவர். இவ்வாறு அத்திரி மகரிஷி சொல்ல, அம்பிகை வினவலானாள். மனைவிமார் இருவர் என்று சொன்னீர்களே. குற்றங்கள் ஏதேனுமுண்டோ ? இருவரும் தீர்க்கம்தானோ ? சொல்லுங்கள். சொல்லுகின்றோம், கேளும். முதல் மனைவிதானும்,

11. முதல்மனை கர்ப்பத்தாலே மேவுவாள் காலனுடு
புதல்வர் காணாதாகும் பின்மனைதனக்கு.........
.........சொன்னோம் யாங்கள்.........வார்த்தை
அதுநிற்க கன்னிஒன்று அறைந்தனம் துணையதாக.

11. கர்ப்ப மேற்பட்டுப் பிரசவத்தினால் மரணமடைவாள். புத்திரனில்லை. இரண்டாம் மனைவிக்குப் புத்திரன் உண்டு என்று நாங்கள் சொல்லுவோம். அதனுடன் பெண் ஒருத்தியும் உண்டு என்று சொன்னோம்.

12. மாரன்தன் மணத்தின்காலம் வரைகிறோ மீரெட்டாண்டில்
நாரியு மன்னைவர்க்கம் நவின்றனம் பாலனுக்குத்
திரமாய் நான்குமன்றல்[1] செப்புவ மதேகாலம்
கூறுவோம் பாரிசேதி குணமுளாள் நீட்சியாவள்.

12. இவனு(ஜாதகனு)டைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். இவனது பதினெட்டாம் பிராயத்தில் பெண்டாட்டி ஏற்படுவாள். அவளும் இவனுடைய தாயின் குடும்பத்தைச் சேர்ந்தவள். இவனுக்கு நிச்சயமாய் நான்கு கலியாணம் ஆகும் காலம் என்று சொல்லலாம். மனைவியின் செய்தி விவரங்களைக் கூறுவோம். குணமுள்ளவள். ஆயுள் விருத்தியுள்ளவள்.

---

1. கலியாணம்

13. பகைதனை மனதிலெண்ணுள் பரிந்துபசாரம் சொல்வள்
உவமையாய் வார்த்தைசொல்வள் உறுதியில் லாதநெஞ்சம்
ஜகமதில் நல்லோளாவள் திருமக ளொப்பதாகும்
நகைபணி அதிகம்சேர்ப்பாள் நன்னடை யோகசாலி.

13. விரோத புத்தியே கிடையாது. விருப்பத்துடன் உபசாரம் சொல்லுவாள். திருஷ்டாந்தங்களுடன் சம்பாஷிப்பாள். மனதில் திடமில்லாதவள். உலகிற்கு நல்லவளாவள். லட்சுமியை யொப்பாள். (நகை) பூஷணங்களை அதிகமாகச் சேர்ப்பாள். நல்ல நடைத்தை யுள்ளவள். நல்ல யோக விசேஷமுடையவள்.

14. பாரியும் வந்தபின்பு பகருவோம் யோகம்தானும்
வேறொரு தேசம்தன்னில் மேவுவான் அரசர்தன்னுல்
கூறுவோம் சீவனங்கள் குழவியு மாண்பாலொன்று
காரிழை அவ்வாறுதீர்க்கம் கழறின மொழிகுன்றாது.

14. இந்தப் பெண்டாட்டி வந்த பின்பு எற்படும் யோகபாவங்களைக் கூறுவோம். இவன் அன்னிய தேசம் ஒன்றுக்குப் போவான். அரசாங்கத்தில் உத்தியோகம் செய்து ஜீவனம் செய்வான். ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் நிச்சயம். சொன்னசொல் தவறாது.

15. மாதுரு குணம்எவ்வாறு வருவிப்பீர் முனியேநீதான்
ஓதுவார் சுகமாய்வார்த்தை உரைக்குமுன் கோபியாவள்
காதலி சமயோகத்தாள் கடவுளிடம் பக்திகொஞ்சம்
மேதினில் மூர்க்கம்கொஞ்சம் விருந்தோர்மேல் பிரியமாகும்.

15. மாதாவின் குணத்தை எவ்வாறு வருணிப்பீர் முனியே! நீர் தான். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள். சொல்லுவதற்கு முன்பே கோபப்படுவாள். சமமான யோகமுடையவள். கடவுளிடம் சிறிது பக்தி கொள்ளுவாள். முரட்டுத்தனமும் கொஞ்சமுண்டு. விருந்தினரிடம் பிரியமாயிருப்பாள்.

16. தன்துணை ஆண்பால்மூன்று தையலர் ஒருவராகும்
அன்னவர் குடும்பலேச்சல் அக்குல நிந்தையுண்டு
பின்னமில் லாததேகி பிழையின்றி வாழ்வாளாகும்
அன்னவர் பூர்வம்சொல்வேன் அரிராமர் பூசைசெய்யும்,

16. இவளுடன் பிறந்த சகோதரர் மூன்று. சகோதரி ஒருத்தி. அவர்கள் குடும்பம் ஒரு நிலையிலிருக்காது. அந்தக் குலத்திற்கே அவதூறான வார்த்தைகள் உண்டு. உடம்பு வாட்ட சாட்டமாயிருப்பாள். பிசகு இல்லாமல் வாழ்க்கையை நடத்துவாள். அவர்களுடைய பூர்வ விவரம் சொல்லுவேன். விஷ்ணுவின் ராமாவதாரம் பூஜை செய்யும்,

17. சேதுவில் வைசியசேயாய்ச் செனித்துமே புகழுமுண்டாய்
மேதினில் நல்லோளாகி வீண்பழி யில்லாதாகிப்
பாவையும் வாழுநாளில் பகருவோம் ஊழிதானும்
போதக வாணகோஷ்டம் பொருத்தினள் தீபம்ஒன்று.

17. ராமேசுவரத்தில் வைசிய குலத்திலுதித்துப் புகழ் பெற்று உலகிற்கு நல்லவளாகி, வீண்பழி இல்லாமல் வாழ்ந்து வரும் நாளில், ஓர் ஊழ்வினை ஏற்பட்ட விவரத்தைக் கூறுவோம். விக்னேசுவரர் கோவிலுக்கு விளக்குப் போட்டாள். அது ஒன்று,

18. முத்தெண்ணெய் உபயோகித்தாள் முதல்வியும் சிலது [நாட்கள்
குற்றம்வேறு காணளாகிக் கூத்தன்தன் பதிக்குச்சென்று
வித்தவ ரெழுதப்பட்டு விளங்கினள் இலங்கைத்தீவில்
அத்திரியிவ் வாறுசொல்ல அம்பிகை கேட்கலுற்றாள்.

18. இவளும் சில நாட்களுக்கு ஆமணக்கெண்ணெயைத் தீபம் ஏற்ற உபயோகித்து வந்தாள். வேறு குற்றம் யாதும் செய்யாமல் எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டு இலங்கைத் தீவில் பிறக்கலானாள். அத்திரிமகரிஷி இப்படிச்சொல்ல, அம்பிகை பின்வருமாறு வினவலானாள்.

19. முன்சென்மம் வினையில்லாமல் உதித்தவ ளிச்சென்மத்தில்
அன்னவள் சமயோகந்தான் அணுகிடும் காரணங்கள் [எவ்வாறு
தந்தியின் கோஷ்டம்தன்னில் தீபம்முத் தெண்ணெய்பாவம்
சந்ததம் சமயோகத்தான் சாற்றின மொழிகுன்றாது,

19. போன ஜன்மத்தில் பாபங்களைச் செய்யாமல் உதித்த இவள் இந்த ஜன்மத்தில் சாதாரணமான யோகபாவங்களை அனுபவிக்கக் காரணங்கள் யாவை ? விக்னேசுவரர் கோவிலுக்கு ஆமணக்கெண்ணெயைக் கொண்டு தீபம் போட்டதில் பாவம் என்று சொல்லுவோம். எப்பொழுதும் அவளுக்குச் சமமான யோகம்தான். சொன்னசொல் தவறாது.

20. பின்சென்மம் அன்றுடன்னில் பிறப்பளாம் சைவசேயாய்ப்
பொன்பணி யுடையாளாகிப் பூமியில் வாழ்வாளாகும்
தந்தையின் பூர்வம்சொல்வேன் சலகண்டி ஈசர்வாழும்
அந்ததோர் நகரம்தன்னில் அணுகினன் [1]சேடர்வம்சம்.

1. அடிமைக்காரர்

20. முன் சொன்ன காலத்தில் பின் ஜன்மம் எற்படும். சைவக் குழந்தையாய்ப் பிறப்பாள். பொன் ஆபரணங்களுடன் உலகினில் சுகமாய் வாழ்ந்து வருவாளாகும். தந்தையின் பூர்வம் தெரிவிப்பேன். ஜலகண்டீசர் வாழும் நகரத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே ஓர் அடிமைக்காரர் வமிசம்,

21. தனமது பெருக்கமுண்டாய்த் தரணியில் நெசவுசெய்து
இனமது மதிப்புக்கொண்டு ஏகினன் காலனூடு
கனமதில் பிரம்மலக்கம் காசினிலே வரியப்பட்டுச்
சினமிலாச் [1]சிங்களநாட்டில் செனித்தவ னென்றுசொன்
[னோம்.

21. பணம் காசு அதிகமாய் எற்பட்டு, தாணியில் நெசவுத் தொழில் புரிந்து, சொந்தக்காரர்கள் மதிக்கும்படி இருந்து எமலோகம் சேர்ந்தான். கௌரவமிக்க பிரம்மாவின் சிருஷ்டியால் பூமியில் எற்பட்டுச் சந்தோஷமான சிங்கள தேசத்தில் (இலங்கைத் தீவில்) ஜனித்தவன் இவன் என்று சொன்னோம்.

22. முன்வயதி னிலேயோகம் மேவிபின் வயதிலேதான்
அன்னவன் வறுமைகொண்ட அச்சேதி சொல்லுமென்னத்
தன்மமாம்[2] குணங்களன்றித் தானவன் வாழாததாலும்
கன்னிகை மனேவியாலும் கழறினோம் சமயோகந்தான்.

22. ஆரம்பப் பிராயங்களிலே யோகம் எற்பட்டுப் பின் காலத்தில் தான் அவன் வறுமையை அடைந்தான். அச்செய்தியைச் சொல்லுங்கள் என்று கேட்க, தர்மமான குணங்களில்லாமல் அவன் வாழாததனுலும் இளம் பிராயமான மனேவியினுலும் சமமான யோகந்தான் என்று கூறினோம்.

23. எடுத்தகா ரியங்களாகா இடருண்டு சஞ்சலங்கள்
மடிவுள காலம்மட்டும் வருந்துணை தன்னால்உய்வன்
திடமுடன் பதினேழாண்டில் செலமாதம் தந்தைகண்டம்
அடுத்ததோர் சென்மம்சொல்வேன் அரனும்மால் பாகம்
[வைத்த,

23. எடுத்த கருமங்கள் ஆகாமல் கஷ்டப்பட்டுச் சஞ்சல மடைந்து சாகும்வரையில் தன் தம்பியின் ஒத்தாசையை எதிர்பார்த்த வண்ணமாயிருப்பான். திடமாய் இவனது பதனேழாம் பிராயத்தில் சிலமாதங்கள் சென்றதும் தந்தையின் கண்டம் எற்படும். அடுத்த ஜன்மத்தைப்பற்றிச்

1. இலங்கை
2. தருமமான

சொல்லுவேன். அரியும் அரனும் சேர்ந்து ஹரிஹர புத்திரனாய் அவதரித்த,

24. கிரிதனில் போகர்வர்க்கம் கிளம்புவான் தந்தையென்றோம்
திருமக னிச்சென்மத்தில் செய்தபுண் ணியங்களென்ன
அறுமுகன் பக்திபூண்டும் அடைந்தோரை ஆதரித்தும்
பெருமையாய்த் தலங்கள்சென்ற புண்ணிய பலத்தினாலே,

24. கிரிதனில் (மலையில்) போகர் என்ற சித்தரின் வமிசத்தில் இவன் தந்தை உதிப்பான் என்று சொன்னோமல்லவா. இவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய காரியங்களென்ன என்று வினவ, முருகக் கடவுளிடம் பக்தி பூண்டும் அண்டினோரை ஆதரித்தும், பெருமையுடன் சிவ ஸ்தலங்களைப் போய்த் தரிசித்தும் வந்த புண்ணிய பலத்தின் காரணமாய்,

25. உதிப்பனு மென்றுசொல்வோம் உரைக்கிறோ மன்னைக்கே [தான்
விதியது இருபான்ரெண்டில் மேடமா தத்திலேதான்
சதியான காலனோடு செல்லுவா ளென்றுசொன்னோம்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

25. இப்படி அவதரிப்பான் என்று சொல்லுவோம். அன்னைக்குச் சொல்லுவதாவது. விதியினால் இருபத்திரண்டாம் வயதில் மேட மாதத்தில் சதியான எமலோகம் செல்லுவாளென்று சொல்லுவோம். அதிதிகளை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

26. சாதகன் பூர்வம்சொல்வேன் தாம்பர பரணிதன்னில்
நீதியாய்க் கோவைசியசேயாய் நேர்ந்துமே வணிபம்செய்து
போதன முடையனாகிப் பாரியு மதலையுண்டாய்
மாதவ ரிஷ்டம்கொண்டு அறுமுகன் பக்திகொண்டு,

26. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களைக் கேட்பாயாக. தாம்பிர பரணி தீரத்தில் நியாயமான உயர்ந்த வைசிய குலத்தினில் பிறந்து வாணிபம் செய்து தனத்தைப் போதுமான வரை சம்பாதித்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, தபசிகளுடைய இஷ்டத்தைச் சம்பாதித்தும் ஆறுமுகக் கடவுளிடம் பக்தி பூண்டு,

27. அரனடி கொண்டுபூண்டு அணுகினான் இலங்கைத்தீவில்
முருகன்தன் மலைக்குச்சென்று முயலுனாள் பேதியாலே
மறலியின் பதிக்குப்புக்கி மறையவன் வரியப்பட்டு
அருமையாய்த் தவத்தினாலே அணுகினா னிவனேஎன்றோம்.

27. சிவ பக்தி மேலிட்டு இலங்கைத் தீவிற்குச் சென்று முருகக் கடவுளிருக்கும் மலைக்குச் சென்று, வழிபாடு செய்து வரும் நாளில், பேதி நோய் வாய்ப்பட்டு எமலோகம் சென்றான். திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு அருமையான தவத்தின் பயனாக ஜனித்தான் இவனே என்றோம்.

28. வந்தவன் பொதுயோகத்தை வரைகிறோ மூவைந்தின்மேல்
சந்திரன் பிறைபோல்யோகம் தங்கிடும் பாலனுக்குத்
தந்தையால் சுகமில்லாதான் தனமது பெருக்கம்செய்வான்
பிந்திய தந்தையாலே பெருமையும் புகழுமேற்பன்.

28. அவனுடைய பொதுப்படையான யோகபாவங்களைக் கூறுவோம். பதினைந்தாம் பிராயத்திற்குமேல் பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஓங்கி வளரும். தகப்பனால் யாதொரு சௌக்கியமுமில்லை. பணத்தைச் சம்பாதித்துச் சேர்ப்பான். சிற்றப்பனால் பெருமையையும் புகழையும் அடைவான்.

29. வித்தையு மிரண்டுகற்பன் விவேகியாம் பொறுமைசாலி
உத்தம னாகிவாழ்வன் உயர்வான குடும்பியாவன்
சுத்தவான் அதிகாரத்தன் சோம்பிடான் காரியத்தில்
வெற்றியே யடைவானாகும் விரும்பின மொழிகுன்றாது.

29. இரண்டு விதமான கல்வியைக் கற்பான். நல்ல விவேகி. பொறுமை யுடையவன். மேலானவனாக வாழ்வான். மேன்மையான குடும்பியாவன். சுத்தன். அதிகாரம் நடத்துவான். சோம்ப லில்லாதவன். எடுத்த காரியத்தில் ஜயத்தையே பெறுவான். விரும்பிக்கூறும் மொழிகளில் யாதும் குறைவு இல்லை.

30. நந்திஆ வுடையனாகும் நற்பரி சகடுமுண்டு
கந்தன்தன் அருளினாலே கனராச யோகம்வாய்க்கும்
எந்தையே முப்பாண்டின்மேல் இந்திர யோகமேற்பன்
பந்தினர் மதிக்கஉய்வன் பார்வதி கேட்டிடாயே.

30. எருது பசுக்களை யுடையவன். நல்ல குதிரை பூட்டிய வண்டியு முண்டு. முருகக் கடவுளின் கிருபையினால் மகிமை தங்கிய இராஜ யோகத்தை அனுபவிப்பான். முப்பது வருஷங்களுக்குப் பிறகு இந்திராதியர் யோகபாவங்களைப் பெறுவான். சுற்றத்தார் மதிக்கும்படி வாழ்வான். பார்வதி தேவியே! கேட்பாயாக.

31. சித்திர இல்லம்செய்வன் தேசமேல் சிலநாள்வாசம்
பத்தினி தன்னால்யோகம் பணிதிபொன் பூமியாவும்
வித்தகன் தேடும்செம்பொன் விளம்புமா வியாபாரம்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தது தப்பாதாமே.

31. அழகான வீட்டைக் கட்டுவான். பல தேச சஞ்சாரம் செய்வான். பெண்டாட்டியினால் அதிர்ஷ்ட முண்டு. பணம், ஆபரணம், பொன், பூமி இவை யெல்லாவற்றையும் இவன் தேடிக் கொள்ளுவான். பொன் வியாபாரம் செய்வான் (Banker). பரமசிவனைப் புருஷனாக அடைந்த பார்வதியே! சொன்ன விவரம் தப்பாது.

32. ஐம்பது இரண்டு ஆண்டில் ஆனிமா தத்திலேதான்
இன்னவ னுடலமாயும் இயம்புவோம் பின்சென்மத்தை
அன்னிய மிலாயதேசத்தில் அருளுவான் போகவர்க்கம்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

32. இவனுடைய ஐம்பத்திரண்டாம் பிராயத்தில் ஆனி மாசத்திலே தான் இவன் உடலம் உலகை விட்டு நீங்கும் என்று சொல்லுவோம். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். அன்னிய மில்லாத தேசத்தில் யோகமான குடும்பத்தில் அவதரிப்பான். உத்தமனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

33. பிறந்திடு காலம் மாந்தலை நான்காம்
பாதத்தில் சேய்தசை யிருப்புச்
சிறந்திடு ஆண்டு ஒன்றுடன் திங்கள்
செப்புவாம் ஒன்றுமே யாகும்
உறைந்திடும் பிறைகள் செலவனேகங்கள்
உற்ற தாய்தந்தைக்கு நோயாம்
மருவிபின் நிவர்த்தி காலியும்சேதம்
வடிவையும் கேகுறும் கலகம்.

33. பிறந்த காலத்தில் சித்திரை நட்சத்திரத்தில் நான்காம் பாதம் செவ்வாய் தசையில் கர்ப்பச் செல்லுப்போக பாக்கி இருப்பு வருஷம் ஒன்று, மாதமும் ஒன்றாகும். காலங்கள் கிரமமாய் நடந்தன. அநேகம் செலவுகள் ஏற்பட்டன. பெற்ற தாய் தகப்பனுக்கு வியாதி ஏற்பட்டுப் பின்னால் குணம் ஏற்படும். கன்று காலிகள் சேதமடையும். பெண்டாட்டியும் வருவாள். கலகமும் ஏற்படும்.

34. அரவுதன் தசையில் பாதியில் துன்பம்
அணுகிடும் துணைகளும் என்றேம்
ஒருவர் வரவெதிர் பார்க்கும் சஞ்சலபுத்தி
மாநிலம் பலன் குறைவாகும்

உறன்முறை சுபமும் சூதகம் நேரும்
ஒண்டொடி வர்க்கத்தில் முடிவு
திருடரக் கினியால் பாதையும் நேரும்
செப்பின மொழி குன்றுது.

34. இராகுவின் தசை பாதி நடக்கும்போது துன்பம் ஏற்படும். அதன் பின்வரும் இம்சைகளும் உண்டு. ஒருவருடைய வரவை எதிர்பார்க்கும் காலம். சஞ்சல புத்தி உண்டு. கிருஷி செய்த நிலங்கள் பலனைக் குறைவாய் அளிக்கும் உறவினரின் சௌக்கியம் ஆசௌசமும் ஏற்படும். பெண்டாட்டியின் வர்க்கம் நசித்துப்போம். திருடர்களாலும், அக்கினியினுலும் உபாதை ஏற்படும். சொன்னசொல் தவருது.

35. நாகம் தன்தசையில் நற்கல்வி நேரும்
நற்றந்தை சேதமாம் பின்பு
போகபாக் கியங்கள் பொருந்திடு மேன்மை
புத்தி கூர்மையு முண்டாகும்
கோதை வந்தணுகும் வேட்டல்கள் சூழ்தல்
தொடுத்தது பலிதமா மென்ன
ஆகம விதிபோல் தவமது புரியும்
அம்பிகை பூர்வமா மென்ன.

35. பாம்பின் (இராகுவின்) தசையில் நல்ல கல்வி விருத்தி ஏற்படும். நற்குணமுடைய தகப்பன் இறப்பான். பிறகு போக பாக்கியங்கள் சேர்ந்திடும். மேன்மை ஓங்கிடும். புத்திக் கூர்மையும் உண்டாகும். பூமாலைகளைப் பலர் போடுவார்கள். சுபசோபனங்கள் ஏற்படும். எடுத்த காரியம் கைகூடும். சாஸ்திரத்தில் விதித்தபடி தவங்கள் புரிவான். அம்பிகையே! இதுதான் பூர்வபாக பலன்கள்.

ஜாதகம் 25

1. ஆடுசென்ம மிரண்டில் குசன் ஐந்தில் பொன்னோன்
அலரிபுதன் சனியெட்டில் புகரோன்பானில்
நீடுகருங் [1]கோள்பத்தில் மதியுமூன்றில்
நிகர்சிகியும் கடகமதில் நிற்பானாகில்
நாடியே பலன்களெல்லாம் சொல்வீரென்று
நாயகியும் கேட்டதற்கு நவிலுவார்கள்
தேடுமிது பெண்ஜெனனம் பிறந்த இல்லம்
செப்புவோம் கீழ்மேற்கு வீதியாமே.

1. இது மேஷலக்கின ஜாதகம். இலக்கினத்திற்கு இரண்டில் செவ்வாயும், ஐந்தில் வியாழனும், விருச்சிகத்தில் சூரியன் புதன் சனி இவர்களும் தங்க, சுக்கிரன் ஒன்பதாமிடமாகிய தனுசில் தங்க, ராகு மகரத்திலும், சந்திரன் மிதுனத்திலும், கேது கடகத்திலும் நிற்கும்படியான இந்த ஜாதகத்திற்குப் பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்டதற்கு, சப்த ரிஷிகளும் சொல்லலுற்றார்கள்.

	லக்கினம்	செய்வாய்	சந்திரன்
	இராசி		கேது
ராகு	சக்கரம்		குரு
சுக்கிரன்	சூரியன் புதன் சனி		

இது ஒரு பெண்ணின் ஜாதகம். அவள் பிறந்த வீட்டைப்பற்றிய விவரம் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில்,

2. வாடையும் வடக்கதாகும் வருங்கூரை வீடதாகும்
நாடளந் தோனும்ஈசன் நவில்கோஷ்டம் தென்மேல்திக்கில்
மாடனும்[2] சந்திகீழ்பால் மாரியும் தென்கீழ்தங்கும்
தேடிய காளிஉத்திரம் செப்புவோம் தும்பிமேற்கில்,

2. வடக்கு வாடையில் வெறுங்கூரைவீடாகும். பூலோகத்தை ஓரடியால் அளந்த திருமாலின் கோவிலும், ஈச்வரனின் கோவிலும் தென் மேற்கு திக்கிலுள்ளது. மாடன் என்ற ஒரு சிறு தெய்வத்தின் கோவில்

---

1. கருங்கோள் (இராகு)
2. ஒரு சிறு தெய்வம்

சந்தின் கீழ்ப்பக்கத்திலும், அம்மன் கோவில் தென் கிழக்கிலும், காளி கோவில் வடக்கிலும், விநாயகர் கோவில் மேற்கிலும்,

3. இவ்வித அடையாளத்துள் இலகிய சிற்றூர்தன்னில்
நவ்விய சைவசேயாய் நாயகி உதிப்பாளம்மா
பவ்வமாய்ப் பலன்கள்யாவும் பகருவோம் இந்நூல்தன்னில்
திவ்விய மாதேயாங்கள் சொலுமொழி குன்றிடாது.

3. இப்படிப்பட்ட அடையாளங்கள் கொண்ட சிறிய கிராமத்தில் அழகிய சைவக் குழந்தையாய் நம் நாயகி உதிப்பாளம்மா. பவவினைக்கேற்ற பலன்களையெல்லாம் இந்த புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். தேவியே! நாங்கள் சொல்லும் பலன்களுக்குக் குறைவில்லை.

4. தந்தையின் குணத்தை யாங்கள்
சாற்றுவோ மிருசிகப்பன்
நண்ணிய ஓடிச்சல் தேகி
நலமுடன் சமர்த்தனாகும்
விந்தையாய்க் கிருஷி யுள்ளான்
விசாலமாய் நேத்திர முள்ளான்
நொந்திடு பேரைக் காப்பன்
நுவலுப தேசமுள்ளான்.

4. இவளுடைய தந்தையின் குணத்தை நாங்கள் கூறுவோம். பொது நிறங் கொண்டவன். மெல்லிய தேகமுடையவன். நல்லவன். சாமர்த்தியசாலி. விசித்திரமான கிருஷிகளை யுடையவன். விசாலமான நேத்திரங்களை யுடையவன். சிரமப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்வான். நல்ல உபதேச மொழிகளைப் பெறுவான்.

5. கதைகள்மேல் பிரியமுள்ளான் கணக்கினில் யூகையுள்ளான்
இதமுள வசனம்கூர்வன் ஈகைவான் பொறுமையுள்ளான்
சதமென காரியத்தைச் சாதிக்க வல்லானாகும்
நதிபாவ தீர்த்தம்தோய்வன் நாட்டுமுன் கோபம்கொஞ்சம்.

5. புராண காவ்யங்களின் கதாபாகங்களைக் கேட்பதில் பிரியப்படுவான். கணக்குகளைக் கவனிப்பதில் நல்ல மதியூகி. இனிய வசனங்களைக் கூறுவான். தர்மிஷ்டன். பொறுமை யுடையவன். எடுத்த காரியங்களைச் சரிவர நடத்த வல்லான். நதிகள், இன்னும், தெய்விக தீர்த்தங்களில் ஸ்னானம் செய்வான். சிறிது முன்கோபத்தைக் காட்டுவான்.

6. சொன்னசொல் தவருனுகும் துறவிகள் நேசம்கொள்வன்
வந்தவர்க் கன்னமீவன் மர்மமும் கொஞ்சமுள்ளான்
அன்னியர் மெச்சவாழ்வன் ஆள்கார ருடையனுவன்
தன்னமே தனியனுவன் தாட்சணியன் கனவானுமே.

6. சொன்ன பேச்சுத் தவறமாட்டான். சன்னியாசிகளை நேசிப்பான். விருந்தினரை அன்னபானுதிகள் கொடுத்து உபசரிப்பான். மனதில் சிறிது கபடமுடையவன். பிறர் தன்னை மெச்சும்படி வாழ்ந்து வருவான். வேலையாட்களை அதிகமாயுடையவன். தான் சம்பாதித்தே பணக்காரனுவன். தயை தாட்சிணிய முள்ளவன். பிரபுவாக இருப்பான்.

7. அண்டின பேரைக்காப்பன் ஆள்கார ருடையனுகும்
குண்டுணி கலகம்செய்யான் குத்திர[1] வசனம்கூருன்
தண்டமிழ்க் கல்விகொஞ்சம் சதாவலைச் சுடையனுவன்
தொண்டர்தன் பத்தியுள்ளான் சொல்லுவோ மேலுங்
[கேளே.

7. அண்டி வந்தவர்களைக் காப்பாற்றுவான். பரிவார ஜனங்களையுடையவன். கோள், குண்டுணி கூறிக் கலகம் செய்யமாட்டான். குரூரமான வஞ்சகச் சொற்களைச் சொல்லமாட்டான். இனிமையான தமிழ்க் கல்வி கொஞ்சம் கற்பான். சதா கவலைச்சுழலி விருப்பான். சிவனடியார்களிடம் பக்தி யுள்ளவன். இன்னும் சொல்லுவோம். கேட்பாயாக.

8. இன்னவன் துணைவர்தன்னை இயம்புவோ மாண்பால்
[காணும்
கன்னியும் நான்கதாகும் கனக்காது இதின்மேல்தோன்றில்
அன்னையே இவன்முன்சென்மம் அறைகிருேம் வேலங்
[காட்டில்
வன்னிய மரபில்தோன்றி மனைவிமைந் தருமுண்டாகி,

8. இவனுடைய சகோதரர்களைப்பற்றிய விவரம் கூறுவோம். சகோதரனில்லை. சகோதரிகள் நான்கு பேர்கள். இதற்குமேல் குடும்பபாரமில்லை. தாயே! இவனுடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். திருவாலங்காட்டில் வன்னியர் குலத்தில் தோன்றிப் பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு,

9. யோகமு மதிகம்பெற்று உத்தமன் வாழுநாளில்
பாகமா யன்னியமாதைப் பாலகன் போகம்துய்க்கப்
போகத்தால் கருவும்தங்கிப் பலவித மருந்துமீயத்
தேகமு மெலிந்துவாடிச் சென்றனள் எமபதிக்கு.

---

1. குரூரம்

9. அதிகமான யோகபாவங்களைப் பெற்று இந்த உத்தமன் வாழ்ந்து வருங்காலத்தில், பிரியமாய் வேறு ஒரு ஸ்திரீயை மோகித்துப் போகங்களை அனுபவித்து அதன் காரணமாகக் கருவும் ஏற்பட்டது. பலவிதமான மருந்துகளைக் கொடுத்து அந்தக் கர்ப்பத்தைக் கரைக்கப்பார்த்ததில் அவள் உடம்பு மெலிந்து வாடிக் கடைசியில் எமலோகம் சென்றாள்.

10. அந்தவோர் தோஷம்தானும் அணுகிற்று அச்சென்மத்தில்
மைந்தனு நோய்கள்கொண்டு மரணமே யாகிப்பின்பு
வந்தவ னிவனேயம்மா வரைகிறோ மிச்சென்மத்தில்
நொந்திடும் புத்திரராண்பால் நுவலுவோம் கேளுமம்மா.

10. அந்த ஒரு தோஷம் இவனை வந்தடைந்தது, அந்த ஜன்மத்தில். இவனும் வியாதிகளின் இம்சையினால் மரணமானான். பிறகு ஜனித்தவன் இவனேதான், அம்மா! இந்த ஜன்மத்தில் புத்திரன் பிறந்து இறப்பான், சொல்லுகிறோம். மேலும் கேளம்மா.

11. இக்குண முடையோனுக்கு இவளுமே உதித்தாளம்மா
தொக்கவே இவள்குணத்தைச் சொல்லுவோம் கோபியாவள்
தக்கவே புத்தியுள்ளாள் சாந்தமும் பெருமையுள்ளாள்
முக்கிய மதிர்ஷ்டமுள்ளாள் மொழிகுவோ மேலுங்கேளே.

11. இப்படிப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகியும் பிறந்தாள், அம்மா. இவளுடைய குணங்களைப் பொருத்தமாகவே கூறுவோம். கோபமுடையவள், சரியான புத்தியை யுடையவள். சாந்த ஸ்வரூபி. பெருமையுமுடையவள். முக்கியமான அதிஷ்டமுடையவள். மேலும் சொல்லுகிறோம், கேளுங்கள்.

12. இவளுட துணைவர்தன்னை இசைகுவோ மாண்பாலொன்று
நவமிதில் கன்னிஒன்று நாட்டுவோம் தீர்க்கமாகக்
கவனமாய் மூன்றுநஷ்டம் காதலி நாலாஞ்சென்மம்
அவள்பிதா ஊழியாலே ஆண்துணை சேதம்சொன்னேன்.

12 இவளுடைய சகோதரபாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஒரு சகோதரன். மூன்று சகோதரிகள். இவர்கள் தீர்க்காயுசுள்ளவர்கள். கவனித்தால் மூன்று நஷ்டமடைந்து இவள் நாலாஞ் ஜன்மத்திலவதரித்தாள். அவள் பிதா செய்த ஊழ்வினையினால் ஆண் சகோதரர்கள் சேதம் என்று சொன்னோம்.

13. இப்படி முனிவர்கூற ஈசுவரி கேட்கலுற்றாள்
செப்புவாய் முன்னூழி தீரவே கிரிகைஒன்று
ஒப்புடன் கேளுமம்மா உயர்நவக் கிரிகைசாந்தி
அப்பனும் செய்வானாகில் ஆண்துணை விருத்திஆகும்.

13. இப்படி முனிவர்கள் எடுத்துரைக்க, ஈச்வரி வினவலானாள். முன் செய்த ஊழ்வினை தீர்வதற்கான ஒரு பரிகாரத்தைப் பொருத்தமாகச் சொல்லுங்கள். கேளம்மா. உயர்ந்த நவக்கிரகசாந்தியைத் தகப்பனும் செய்வானாகில் ஆண் சகோதரன் ஏற்படுவான்.

14. சாந்தியும் செய்யானாகில் தங்காது துணைவன்தானும்
பந்தமாய் மாதுர்யோகம் பகருவீ ரென்றுகேட்க
ஏந்தலே கேளும்தாயே இவளும்முன் கோபியாவள்
சாந்தமு முடையளாவள் சரீரத்தில் பித்தரோகி.

14. அப்படிச் சாந்தி செய்யாவிட்டால் ஆண் சந்ததி ஏற்படாது என்றதும், இவளுடைய மாதாவின் யோகத்தைக் கூறுங்கள் என்று கேட்க, தாயே! கேட்பாயாக. இவளும் முன்கோப முடையவள். பித்தமான சரீரத்தை யுடையவள்.

15. சிவந்திடு மேனியாவள் செப்புநன் னடைக்கையுள்ளாள்
நவமதில் பொய்கள்சொல்லாள் நளினமயாய் வார்த்தைக் [கூறுள்
அவளுட துணைவர்தன்னை அரைகிறோ மாண்பால்ரெண்டு
கவனமாய்ப் பெண்பாலொன்று காட்டினோம் தீர்க்கமாக.

15. சிவந்த தேகத்தையுடையவள். நல்ல நடத்தையை யுடையவள். உலகினில் பொய் சொல்ல மாட்டாள். இனிமையாக வார்த்தைகள் சொல்லுவாள். அவளுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுகிறோம். இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் தீர்க்கமாய்ச் சொல்லலாம்.

16. சாதகி மணத்தின்காலம் சாற்றுவோ மொருபானொன்றில்
நீதியாய்த் தென்மேல்திக்கில் நிகர்பிதுர் வர்க்கம்தன்னில்
தீதிலா வரன்பால்செல்வள் தேவிக்குப் புத்திரபாகம்
போதவே ஆண்பால்ரெண்டு புகல்கன்னி யவ்வாறுமே.

16. ஜாதகியின் கலியாண காலத்தைப் பற்றிக் கூறுவோம். இவளுடைய பதினொன்றும் பிராயத்தில் நியாயமாய்த் தென்மேற்குத் திக்கில் தந்தையின் வமிசத்தில் குற்றமற்ற புருஷனை அடைவாள். இவளுக்குப் புத்திரபாவமெப்படி? ஆனகுடிக்கு ஆண் இரண்டு, பெண் இரண்டு பிறக்கும்.

17. தந்தையின் மரணகாலம் சாற்றுவோ மிருபானெட்டில்
பந்தணையு மன்னைகாலம் பேசுவோ முப்பானொன்பான்
எந்தையே யிவளின்கால மியம்புவோ மைம்பானாறில்
சந்ததம் மகரமாதம் சாதகி மரணமாகும்.

17. இவளுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுவோம். அஃது இவளுடைய இருபத்தெட்டாம் வயதில் ஏற்படும். தாயின் மரண காலம் முப்பத்தொன்பதாம் பிராயத்தில் ஏற்படும். ஜாதகியின் அந்திய காலத்தைக் கூறுவோம். இவளுடைய ஐம்பத்தொன்ரும் பிராயத்தில் மரணமடைவாள். அதுவும் தை மாசத்தில் ஏற்படும்.

18. பிந்தியே வரனின்கெண்டம் பேசுவோ மிவளுக்கம்மா
தந்தையின் மாதுர்கெண்டம் சாற்றுவோ மைந்தாண்டில் [தான்
பந்தமாய் மாதுர்மாதா பகருவோம் பத்தாண்டில்தான்
தந்திமா முகனைப்பெற்ற தையலே கேட்டிடாயே.

18. புருஷன் இவளுக்குப் பிறகு மரணமடைவான். இவளுக்கு ஐந்தாம் வயதில் தந்தையின் மாதாவின் கண்டம். மாதாவின் தாயாருக்கு இவளுடைய பத்தாவது வயதில் கண்டம் ஏற்படும். யானை முகத்தோனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

19. தந்தையின் பின்சென்மத்தைச் சாற்றுவோம் காஞ்சிதென் [பால்
வந்ததோர் வைசியசேயாய் வளமுள குடும்பந்தன்னில்
எந்தையே செனிப்பானம்மா இவன்சென்மம் புண்ணிய [னென்ரும்
தந்திமா முகனைப்பெற்ற தயாபரி மேலுங்கேளே.

19. தகப்பனின் மறுஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். காஞ்சீபுரத் திற்குத் தெற்கே வைசியகுலத்திலுதிப்பான். அது வளப்பம்பொருந்திய குடும்பமாகும். இவன் நல்ல புண்ணியவான். விஞயகக்கடவுளை யீன்ற தயாபரியே! கேட்பாயாக.

20. புண்ணிய செனனமென்று புகன்றினிர் முனிவரேகேள்
என்னகா ரணத்திஞலே இயம்பினீர் சொல்லுமென்னப்
பொன்னவ னஞ்சில்நிற்கப் புகரோன்பான் தன்னில்நிற்க
அன்னமே யதஞல்நாங்கள் அறைகின்ரும் செனனம் [நன்றே.

20. முனிவர்களே! இந்த ஜாதகி புண்ணிய ஜன்மமுடையவள் என்று கூறினீர்கள். என்ன காரணத்தைக் கொண்டு சொன்னீர்கள்? வியாழ பகவான் இலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டிலிருக்க, சுக்கிரன் இலக்கினத் திற்கு ஒன்பதாம் வீட்டில் தங்க, அதஞல் நாங்கள் அவ்விதம் கூறுகின் ரும், அன்னமே.

ஜாதகம் 26

1. பொன்வண்டு புகருமீனம் புதன்ரவி வருடையாக[1]
மைந்தனும் கோலதாக மதிசிகி அரியில்புக்கச்
செந்தியும் கயறுகும்பம் சென்மமு மேடமாக
இந்தவாறு நவக்கோள்நின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. வியாழன் கடகத்திலும், சுக்கிரன் மீனத்திலும், புதனும் சூரியனும் மேஷத்திலும் தங்க, சனிபகவான் துலாத்திலும், சந்திரன் கேது இவர்கள் சிம்மத்திலுமிருக்க, செவ்வாயும் இராகுவும் கும்பத்திலிருக்க, இப்படிப்பட்ட கிரகநிலையைக் கொண்ட மேஷலக்கின ஜாதகனுக்கு உண்டான பலனைச் சொல்லுங்கள்.

சுக்கிரன்	லக்கினம் புதன் சூரியன்		
செவ்வாய் ராகு	இராசி	சக்கரம்	குரு
			சந்திரன் கேது
		சனி	

2. உமையவள் கேட்கும்போது உரைக்கிறார் பராசர்தானும்
அமைந்திடு மாண்பால்சென்மம் அரைகிறோம் கீழ்மேல்வீதி
எமன்பார்வை[2] யில்லமாகும் இந்திரன் [3]திசையில்கன்னி
பவமுள மேற்கில்தந்தி பகருவோ மருகில்சூழி[4].

2. இவ்விதம் பார்வதிதேவி கேட்கும்போது பராசரர் சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஆண்பால் ஜன்மம். கிழக்குமேற்கு வீதியில் தெற்குப் பார்த்த வீடு. கிழக்குப்பக்கத்தில் அம்மன்கோவில். மேற்கே விக்னேசுவரர் கோவில். அதன் அருகில் நதி சுழித்துக்கொண்டு ஓடும்.

---

1. மேஷம்
2. தெற்குப்பார்த்த
3. கிழக்கு
4. ஆறு

3. இதுவலால் பேரூர்தன்னில் இலகிடும் பலதேவாசம்
பதியது மாதுர்இல்லம் பாலகன் செனிப்பானம்மா
சதிருள மாதுர்தந்தை சகோதரர் களத்திரபுத்திரன்
விதியினால் முன்பின்சென்மம் விளம்புவோ மின்னூல் [தன்னில்.

3. இந்த அடையாளங்கள் கொண்ட பெரிய ஊரில் இப்பாலகன் வசிப்பான். இடமோ மாதாவின் வீடு. அங்குதான் இவன் ஜனனமாவன். சகல பாக்கியங்களும் கொண்ட மாதா, தந்தை, சகோதரர், புத்திரகளத்திரம் இவர்களுடைய யோகபாவங்களையும், இந்த ஜாதகனுடைய முன்பின் ஜன்மங்களைப்பற்றியும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம்.

4. தந்தையின் குணத்தையாங்கள் சாற்றுவோ மிருசிகப்பன்
பந்தமா யொடிச்சல்தேகி பாரினில் யூகையுள்ளான்
வந்தவர்க் கன்னமீவன் வள்ளல்மேல் பக்திமானும்
சந்ததம் தியாகியாவன் சன்மார்க்கன் பொறுமையுள்ளான்.

4. தந்தையின் குணங்களைப்பற்றிய விவரங்கள் கூறுவோம். பொது நிறமுடையவன். ஒடிய ஒடிய இருப்பான். அவனது தேகம் மெலிந்தது. உலகவிஷயம் நன்கு தெரிந்தவன். வந்த விருந்தினரை அன்னபானாதிகள் கொடுத்து உபசரிப்பான். முருகக்கடவுளிடம் பக்தி பூண்டவன். பிறருக்கு உபகாரம் செய்தமணியமாயிருப்பான். சன்மார்க்கத்தை அனுசரிப்பான். பொறுமையுடையவன்.

5. அடக்கமு மொடுக்கமுள்ளான் அண்டின பேரைக்காப்பன்
இடுக்கண்க ளெண்ணுச்சித்தன் இவன்பித்த தேகவானும்
நடக்கையும் நல்லதாகும் நன்முக வடிவுமுள்ளான்
திடுக்கென உரைக்கமாட்டான் தீயமாங் குணங்களில்லான்.

5. அடக்கமும் ஒடுக்கமும் உள்ளவன். அண்டினவர்களை ஆதரிப்பான். மனதில் பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டான். பித்த சரீரமுடையவன். நல்ல நடத்தையுள்ளவன். நல்ல முகத்தோற்றமுள்ளவன். பயப்படும்படி வார்த்தைகள் சொல்லமாட்டான். கெடுதலான குணங்களில்லாதவன்.

6. பூமியும் கொஞ்சமுள்ளான் புண்ணிய மனத்தனாகும்
மாமிக ளிரண்டதாகும் மனதினில் கபடமில்லான்
தாமத குணத்தானாகும் சகலர்க்கு நண்பனாகும்
நேமியோர் மெச்சவாழ்வன் நிமலியே மேலுங்கேளே.

6. சிறிது நிலபலங்களையுடையவன். தர்மசிந்தனை யுடையவன். இரண்டு மாமியாருண்டு. மனதில் கபடமில்லாதவன். தாமசமான குணத்தை

யுடையவன். எல்லாருடனும் சிநேகமாயிருப்பான். பூமியிலுள்ளோர் மெச்சும்படி வாழ்வான். பார்வதியே! கேட்பாயாக.

7. இக்குண முடையோனுக்கு இவனுக்குத் தாரம்ரெண்டில்
ஒக்கவ னிளையாளுக்கு உதித்தவ னிவனேயம்மா
தொக்கவே யிவன்குணத்தைச் சொல்லுவோ மிருசிகப்பன்
மிக்கவே கல்வியுள்ளான் மேதினில் யூகைசாலி.

7. இப்படிப்பட்ட குணங்களையுடையவனுக்கு தாரம் இரண்டு. இளையாளுக்குப் பிறந்தவன்தான் இந்த ஜாதகன். பொருத்தமாகவே இவனுடைய குணங்களை எடுத்துரைப்போம். பொது நிறமுள்ளவன். மெத்தப் படித்தவன். உலக அனுபவபுத்தியுள்ளவன்.

8. ரோமங்கள் நீட்சியுள்ளான் நுவலுப தேசமுள்ளான்
காமனை யொத்ததேகன் கணக்கினில் சமர்த்தனாகும்
பூமியு மதிகம்சேர்ப்பன் புரவலர் மெச்சவாழ்வன்
சேமமாம் குடும்பமுள்ளான் திருமகள் விலாசமுள்ளான்.

8. தலைமயிர் நீண்டதாயிருக்கும். உபதேச வார்த்தைகளையுடையவன். மன்மதாகாரமான சரீரமுடையவன். கணக்கினில் சாமர்த்தியமுள்ளவன். பூஸ்திதிகளை விருத்தி செய்வான். அரசர்கள் மகிழும்படி வாழ்வான். க்ஷேமமான குடும்பத்தையுடையவன் லட்சுமீகடாட்சமுள்ளவன்.

9. அண்டின பேரைக்காப்பன் ஆசார முடையனவன்
குண்டைகோ விருத்தியுள்ளான் கூறுவான் கட்டுவார்த்தை
தண்டமிழ் பாடவல்லான் சகமரவி நேத்திரமுள்ளான்
கண்டவர் வணங்கவாழ்வன் காரிய சமர்த்தனென்றேம்.

9. தன்னை அண்டினவர்களை இரக்ஷிப்பான். ஆசாரமுடையவன். எருதுகளை விருத்தியாக்குவான். கபடமான வார்த்தைகளைக் கூறுவான். இனிய தமிழ்ப்பாட்டுக்களைப் பாடவல்லவன். சாந்தமுள்ள நேத்திரங்களை யுடையவன். பலர் இவனைக் கண்டமாத்திரத்தில் வணங்குவர். காரியங்களைச் சாமர்த்தியமாய் முடிப்பான்.

10. தானிய விருத்தியுள்ளான் தரியலர் வெற்றிகொள்வன்
மானமாய்ச் சீவிப்பானும் வணிபங்கள் செய்வானாகும்
தேன்மொழி மாதர்தம்மைச் சேருவ னனந்தமாகக்
கோனெனை வாழ்வானென்றும் கூறின மொழிகுன்றாது.

10. தானியங்களை விருத்தி செய்வான். ஸ்திரீகள் இவனைக்கண்டு மோகிப்பார்கள். மானமாய் ஜீவனம் செய்வான். வியாபாரங்களைச் செய்வான். இனிமையாகப் பேசும் மாதர்களுடன் புணர்வான். ராஜயோகத்தில் வாழ்வான். சொன்னசொல் தவறாது.

11. இன்னவன் துணைவர்தன்னை இசைக்கிறோம் மூத்தோர்
[காணோம்
மன்னிலே இளையோருண்டு சாற்றுவோம் விபரமாக
அன்னமே ஆண்பால்ரெண்டு அறைகிறோம் பெண்பால்
[ரெண்டு
பின்னமில் லாமல்தீர்க்கம் பேசுவோ மிவனுக்கேதான்.

11. இவனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். இவனுக்கு மூத்தவன் இல்லை. இளையவர்கள் உண்டு. அதன் விவரம் கூறுவோம். ஆண் இருவர். அதுபோல தங்கைகளும் இரண்டு பேர்கள். இவர்களுக்குத் தீர்க்கமாய் ஆயுசுண்டு.

12. இவனுட [1]மன்றல்காலம் இயம்புறே மொருபானுறில்
அவனிபால் உள்ளூர்தெற்கில் அம்மான்தன் வர்க்கம்
[தன்னில்
கனமுட னுதித்தமாதைக் காளையும் மணமேகொள்வன்
சிவனிட பாகத்தாளே செல்வியே மேலுங்கேளே.

12. இவனுடைய கலியாணகாலம் பற்றிக் கூறுவோம். பதினாறும் வயதில் தன்னூருக்குத் தெற்கில் தன்னுடைய தாய்மாமனுடைய கூட்டத்தில் மதிப்பாகப் பிறந்த மாதைக் கலியாணம் செய்து கொள்ளுவான். பரம சிவனுடைய வாமபாகத்திலிருப்பவளே! மேலுங் கேட்பாயாக.

13. களத்திரம் நிறம்சிகப்பாம் கற்புளாள் பொறுமையுள்
[ளாள்
தளர்ச்சியாய் வந்தோர்தன்னைத் தானவ ளாதரிப்பாள்
வளத்தியாம் குடும்பம்தானும் மறுமொழி யதிகம்கூறாள்
பிணக்கமு[2] முடையளாவள் (இவள்)புண்ணிய சாலி
[என்றோம்.

13. பெண்டாட்டி நல்ல சிவப்பு நிறமுள்ளவள். கற்புடையவள். பொறுமை யுடையவள். பசியென்று வந்தவர்களுக்கு அன்னபானாதிகளைக் கொடுத்து ஆதரிப்பாள். பெரிய குடும்பத்திலுதித்தவள். பதில் அதிகமாய்ப் பேசமாட்டாள். ஊடல் அதிகமுள்ளவள். இவள் புண்ணியசாலி என்றோம்.

---

1. கலியாணம்
2. ஊடல்

14. புத்திர விருத்திதன்னைப் புகலுவோ மாண்பாலொன்று
சத்தியு மிரண்டுமாகும் தானது மூன்றும்தீர்க்கம்
வித்தகி புத்திரன்சேஷ்டன் வீறுது நஷ்டமாகும்[1]
அத்திமா முகனைப்பெற்ற அம்மையே மேலுங்கேளே.

14. புத்திரபாவத்தைக் கூறுவோம். ஆண் குழந்தை ஒன்று. பெண்கள் இரண்டு. இம்மூன்றும் தீர்க்கமாகும். ஆதியில் கர்ப்பம் ஏற்பட்டு சேஷ்ட புத்திரன் செத்துப் போவான். யானை முகத்தோனைப்பெற்ற அம்பிகையே! மேலுங் கேட்பாயாக.

15. மாதுரு குணத்தையாங்கள் வரைகிறோ மிருநிறத்தள்
மேதினில் சமதேகத்தள் வித்தகி கர்ப்பமுள்ளாள்
பாதக மொருவர்க்கெண்ணாள் பாலர்மேல் பிரியமுள்ளாள்
சூதுக ளில்லாளாகும் சுலபரோ யுடையளாமே.

15. மாதாவின் குணத்தை யாங்கள் விவரிக்கின்றோம். பொதுநிற முடையவள். சமமான தேகத்தையுடையவள். புத்திர பாக்கியமுடையவள். யாவர்க்கும் இடைஞ்சல் செய்யமாட்டாள். குழந்தைமேல் பிரியமுள்ளவள். சூதுவாது இல்லாதவள். கொஞ்சம் வியாதியுடையவள்.

16. அன்னங்கள் போடவல்லாள் அவளுமுன் கோபியாவள்
பன்னிய மூர்க்கம்கொஞ்சம் பந்துவும் மெச்சவாழ்வள்
இன்னவள் துணைவர்தன்னை இயம்புவோ மாண்பா
[லொன்று
கன்னிகை அவ்வாறுகும் காதலி குலத்தில்குற்றம்.

16. ஆதுலர்க்கன்னம் இடுவாள். முன்கோபியாயிருப்பாள். கொஞ்சம் வீம்பும் முரட்டுத்தனமும் உண்டு. பந்து ஜனங்கள் மெச்ச வாழ்வள். இவளுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தியே. அவளுடைய குலத்திற்கே ஒரு கேடுண்டு.

17. இப்படி முனிவர்கூற ஈச்வரி கேட்கலுற்றாள்
செப்புவாய் தந்தைக்கேதான் சேர்ந்ததோர் துணைவர்தன்னை
ஒப்புடன் சொல்வீரென்ன உரைக்கிறார் முனிவர்தானும்
மைப்படி ஸ்ரீகளில்லை வருமாண்பா லொருவனென்றோம்.

17. இவ்விதம் முனிவர்கூற, ஈச்வரி கேட்கலுற்றாள். தந்தைக்கு ஏற்பட்ட துணைவர் தன்னைப்பற்றி விவரம் கூறுங்கள். முனிவரும் கூறலுற்றார். சகோதரியே இல்லை. சகோதரன் ஒருவன்தான் என்றோம்.

---

1. Stillborn child

18. துணைவன்தன் சேதிதன்னைச் சொல்லுவோம் விபரமாக
அணையவே புத்திரதோஷம் அணுகிடு மிவனுக்கம்மா
இணையிலாத் தந்தைக்கேதான் இசைகுவீர் முன்சென்
[மத்தைத்
தணிகனுக் காளானுய்க்கர் சார்ந்திடும் சமவூர்தன்னில்,

18. சகோதரனுடைய விவரங்களைக் கூறுவோம். பொருந்துமே புத்திரதோஷம் இவனுக்கேதான். ஒப்பற்ற தந்தையின் முன் ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். திருத்தணிகைக்குப் பக்கத்திலுள்ள சமமான ஊரிலே,

19. வன்னிய மரபில்தோன்றி மனைவிமைந் தருமுண்டாகித்
தன்னிலே பூமியுண்டாய்த் தான்வாழு காலம்தன்னில்
பொன்னவன் தனக்குஊழி இசைந்தகா ரணத்தைச்
[சொல்வேன்
கன்னெனன மொழியையொக்கும் காதலி மேலுங்கேளே.

19. வன்னியர் குலத்தில் தோன்றி மனைவி மக்களுடனிருந்து தானு கவே சம்பாதித்துப் பூமிகளும் உண்டாகி வாழ்ந்து வரும் காலத்தில், குருவுக்கு ஏற்பட்ட ஊழ்வினையின் காரணத்தைச் சொல்லுவோம். இனிமையாயும் கனிவாயும் பேசக்கூடிய காதலியே! மேலுங் கேட்பாயாக.

20. பஞ்சையாய் ஸ்ரீயும்ஓர்நாள் பாக்கியன் வீட்டிலேதான்
கெஞ்சியே அன்னம்கேட்கக் கிளிமொழி வார்த்தைசொல்லி
வஞ்சிக்குச் சாதம்ஈந்து மறுகவே வேண்டுமென்று
மிஞ்சியே கைபிடித்தான் மெல்லியு மேதுசெய்தாள்.

20. ஏழைவேஷம் போட்டுக்கொண்ட ஸ்ரீதேவி ஒருநாள் இந்த பாக்கியவான் வீட்டிலே போய், 'தேஹி' என்று அன்னபிட்சை கேட்க, அழகாய்ப்பேசி வஞ்சகமனத்துடன் சாதம் கொடுத்து அவளிடம் இச்சைப் பட்டுத் தன்னிடம் வரும்படி வேண்டி, அதிக்கிரமித்து அவள் கையைப் பிடித்திழுத்தான். அவளும் பின் வருமாறு சபித்தாள்.

21. ஏழையாம் என்னைநீயும் இன்பங்கள் துய்க்கவேண்டித்
தாழ்வான வார்த்தைசொன்னாய்ச் சதிருட னுந்தனுக்கு
வாழ்மனை யிரண்டுமாகி வந்திடும் செனனந்தோறும்
ஆழிசூழ் முதல்மாதாலே அல்பமாம் சுகமேயில்லை,

21. ஏழையாகிய என்னை நீயும் போகங்கள் அனுபவிக்கலாம் என்று ஆசைப்பட்டு இளப்பமான வார்த்தைகளைப் பேசினாய். எப்பொழுதும் உனக்கு ஜன்மங்கள் தோறும் இரண்டு மனைவிகள் ஏற்பட்டாலும் மாதர் களாலே அல்பசுகமும் ஏற்படாது.

22. என்றுமே சாபம்தந்து ஏழையும் நீங்கலுற்ருள்
அன்றுமே அச்சென்மத்தில் அவன்மனை யாளும்மாண்டு
குன்றிய மனத்தனுகிக் கூற்றன்தன் பதிக்குச்சென்று
வந்தவ னிவனேயென்ருேம் வரைகிருே மிவன்பின்
[சென்மம்.

22. இவ்வாறு சாபம் கொடுத்து விட்டு ஏழைமாது நீங்கினுள். அந்த ஜன்மத்தில் அன்றைக்கே அவன் மனைவியும் மாண்டு மனம் நொந்து, எமலோகம் சென்று பிறகு ஜனித்தவன் இவனே என்ருேம். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம்.

23. வேதங்கள் புரியுமீசர் வித்தகர் ஊரிலேதான்
நீதியாய் க்ஷத்திரியவம்சம் நேர்ந்துமே அரசர்மூலம்
கோதிலா சீவிப்பானும் கூறுவோம் சாதகர்க்கு
நீதியாய் முன்சென்மத்தை நிகழ்த்துவோம் கேளுமம்மா.

23. வேதபுரீசுரர் வேதியனுயவதரித்து வேதங்களை ஏற்படுத்திய வேதபுரத்தில் நியாயமாய் க்ஷத்திரிய வமிசத்தில் அவதரித்தான் இவன், அரசர்கள் மூலம் குற்றமில்லாத ஜீவனம் செய்வான். ஜாதகனுடைய போன ஜன்மத்தை ஒழுங்காகக் கூறுவோம். கேளும், அம்மா!

24. இன்னவன் முன்சென்மத்தை இசைக்குவோம் போரூர்
[தன்னில்
நன்னிய சூத்திரனுகி நற்சைவ னுகிமேலும்
அந்நகர் தன்னிலேதான் அறுமுக னுலயத்தில்
மன்னவன் தீபம்வைத்து வந்தவ னிவனேயம்மா.

24. இவனுடைய முன் ஜன்மத்தைக் கூறுவோம். திருப்போரூர் என்னும் ஸ்தலத்தில் சூத்திரசைவனுய்ப் பிறந்தான். அவ்வூரிலேதான் அறுமுகக்கடவுளின் கோவிலில் இராஜாவின் விளக்கை ஏற்றி வந்து கொண்டிருந்தவன் இவன்தானம்மா.

25. இன்னமும் ஊழியங்கள் இவனுமே அனந்தம்செய்து
மன்னவன் மரணமாகி மறைதலைக் கஞ்சன்தன்னுல்
முன்னமே வரையப்பட்டு உதித்தவ னிவனேயம்மா
அன்னமே யாங்கள்சொல்லும் அடைமொழி குன்றிடாது.

25. இன்னும் எத்தனையோ ஊழியங்கள் இவனே எப்பவும் செய்தான். அன்னவனும் மரணமானுன். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுத் திரும்பவும் இவன் ஜனித்தான். அன்னமே! நாங்கள் சொல்லும் பலன்களில் யாதொரு குறையுமில்லை.

26. முனிவரிவ் வாருய்க்கூற மொழிகுவா ளம்மன் தானும்
அனையவே சாதகர்க்கு அவன்தந்தை தாய்கள்காலம்
கனிவுடன் சொல்லுமென்னக் கனமுனி கூறுகின்றார்
இனமதாய் முப்பான்ரெண்டில் இவன்தந்தை காலமாகும்.

26. முனிவர் இவ்விதம் சொல்ல, தேவி பதில் சொல்லலுற்றாள். பொருத்தமாகவே ஜாதகனுக்குத் தாய் தந்தையர் காலாந்தரத்தைப்பற்றிக் கூறுங்கள், என்று சொல்ல, முனிவரும் கூறலுற்றார். இவனுடைய முப்பத்திரண்டாம் வயதில் இவனுடைய தந்தை மாணமாவான்.

27. மாதுரு மரணகாலம் வரைகிறோம் நாற்பாறுறில்
மேதினில் இவனின்காலம் விளம்புவோ மறுபானேழில்
கோதிலா கூளிமாதம் குணமுட னமாவாசை
வேதனைச் சுரத்தினாலே வித்தக னுடலம்நீங்கும்.

27. மாதாவின் மரணத்தைக் கூறுகிறோம். நாற்பத்தாறும் வயதில் அவள் மரணமடைவாள். ஜாதகனும் தன்னுடைய அறுபத்தேழாம் பிராயத்தில், பங்குனி மாதம் அமாவாசை தினத்தன்று வேதனையைத் தாக்கூடிய சுரத்தினால் மரணமடைவான்.

28. மறுசென்மம் தணிகைதன்னில் வளமுள சைவனாகி
அரசரால் பெருமைபூண்டு அவளதி காரம்பெற்றுப்
பெருமையாய் வாழ்வாளென்றோம் பேசுவோம் குடும்பச்
[செய்கை
அறுமுகன் தன்னைப்பெற்ற அம்மையே மேலுங்கேளே.

28. அடுத்த ஜன்மம் திருத்தணிகையில் வளப்பம்பொருந்திய சைவனாகி, அரசரால் பெருமையடைந்து அதிகாரம்பெற்றுப் பெருமையுடன் வாழ்வான் என்றோம். அவனுடைய குடும்பச் செய்தியைப்பற்றிப் பேசுவோம். அறுமுகக்கடவுளைப்பெற்ற அம்பிகையே! மேலும் கேட்பாயாக.

29. பொன்புகர் இரவியுச்சம் பொருந்தியே இருப்பதாலே
துன்பமு மடையானாகும் சொல்பிசகாதானென்றோம்
இன்பமாய்த் தனங்கள்சேர்ப்பன் எத்திசை கீர்த்தி
[கொள்வன்
அம்புவி அதிகம்சேர்ப்பன் ஆள்கார ரனேகமுள்ளான்.

29. குரு, சுக்கிரன், சூரியன் இவர்கள் மூவரும் பொருத்தமாய் உச்சத்திலிருப்பதாலே, துன்பமுமுடையவனாகும். சொன்னசொல் தவறமாட்டான். பிரியமாய்ப் பணங்கள் சேர்ப்பன். எந்தத்திக்கினும் கீர்த்தியடைவான். பூஸ்திதிகளை விருத்தி செய்வான். அநேக பரிவார ஜனங்களையுடையவன்.

30. சித்திர வீடுசெய்வன் சிறப்பான குடும்பமாவன்
புத்திமான் அன்னமீவன் பூஷணம் சேர்ப்பானுகும்
பத்தினி நேயனென்றும் பந்துவை யாதரிப்பன்
தத்திய நெய்பாலிஷ்டன் சதாசிறு தீனிகொள்வன்.

30. அழகான வீடு கட்டுவன். கீர்த்திபெற்ற குடும்பியாவன். நல்ல புத்தி யுடையவன். அன்னதானம் செய்வான். பூஷணங்களைச் சேர்ப்பான். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான். சொந்தக்காரர்களை ஆதரிப்பான். தயிர், நெல், பால் இவைகளில் இஷ்டமுள்ளவன் சிறிய தீனிகள் தின்ப தில் பிரியப்படுவான்.

31. மைந்தனு[1] முச்சமாக வந்ததால் இவனுக்கேதான்
சொந்தமாய்த் துரவுசோலைச் சுந்திரன் செட்டுசெய்வன்
பந்தமாய்ப் பலவூருக்கும் பாலகன் வாக்குச்செல்லும்
முந்திய வயதுதீர்க்கம் மொழிகிறோம் மேலுங்கேளே.

31. சனியும் உச்சமாக இருப்பதனுல் இவனுக்கே சொந்தத்தில் தோட்டம் துரவுகள் ஏற்படும். அநேக வியாபாரங்களைச் செய்வான். காரியமாய்ப் பலவூருக்குப் போவான். அங்கு இவன் வார்த்தைக்கு மதிப்புண்டு. தீர்க்காயுசுடையவன். இன்னும் மேலே சொல்லுவோம், கேட்பாயாக.

32. சாதகன் செனனந்தொட்டுச் சாற்றிய மூவாண்டுக்குள்
வேதனை யதிகமுண்டு மெலலியாள் தனக்குரோகம்
தீதிலா செலவனேகம் செய்தொழில் விருத்தியாகும்
கோதிலா மனசுவேதனை கொண்டிடு மென்றுசொன்னோம்.

32. ஜாதகன் ஜனனகாலம் தொட்டுச் சொல்லிய மூன்று வயதிற்குள் அதிக வேதனையை அடைவான். பெண்டாட்டிக்கு ரோகபீடை. கெடுத லில்லாத செலவுகளனேகம். செய்யும் தொழில்கள் அபிவிருத்தி யடையும். மனோவேதனையும் ஏற்படுமென்று சொல்லுவோம்.

33. அதற்குமேல் மூவாண்டுக்கும் அல்பமாம் பூமிவாய்க்கும்
நிதநிதம் சுலப்பவாபம் நேர்சகோ தரரும்விருத்தி
பதியினில் திருவும்சேரும் பந்துவில் சுபமேகாணும்
மதிநிகர் பந்துவுக்கு மன்னுபூ டணமுநேரும்.

33. அதற்குமேல் மூன்று வருடங்களுக்குப் பலன் அல்பமாகும். பூஸ்திதி ஏற்படும். தினசரி சொல்ப லாபமேற்படும். தன் உடன்பிறந்த சகோதரர்களும் விருத்தியாவர். உலகினில் ஐசுவரியம் பொங்கும். சொந்தக்

1. சனி

காரர்கள் சுகமாயிருப்பார்கள். பெண்டாட்டிக்கு வேண்டிய பூஷணாதிகள் ஏற்படும்.

34. ஆறுண்டின் மேலாயாக அநேகமாய்ப் பொருளும்வாய்க்கும்
சீராக நினைத்ததெல்லாம் செய்நில மதிகம்சேரும்
பாரினில் திருவும்சேரும் பந்துவும் மெச்சவாழ்வன்
கோரின காரியத்தைக் குணமுடன் முடிப்பானென்றோம்.

34. இந்த ஆறுவருடங்களுக்குப் பிறகு அநேகமாய் எப்பொருளும் வாய்க்கும். நினைத்த காரியங்கள் சீராக முடியும். நஞ்சைநிலம் அதிகரிக்கும். உலகத்தினில் பணம் சேரும். பந்துக்கள் மெச்சும்படி வாழ்வான். விரும்பிய காரியத்தை இடைஞ்சலில்லாமல் செய்து முடிப்பான் என்றோம்.

35. குடும்பத்தில் சுகமேயுண்டு குறைவிலா அன்னம்நேரும்
உடன்பிறந் தார்கள்நோயாம் உரைந்துபின் நிவர்த்தியாகி
இடும்பக ளொன்றுமில்லை இணையிலாச் செல்வமோங்கும்
தடவரை தனிலேவாழும் தயாபரி மேலுங்கேளே.

35. குடும்பத்தில் சுகமுண்டு. சாப்பாட்டுக்கு யாதொரு குறைவுமில்லை. உடன்பிறந்தவர்கள் நோய்வாய்ப்படுவார்கள். பிறகு நிவிர்த்தியாகும். கெடுதல்கள் ஒன்றுமில்லை. ஒப்பற்ற செல்வம் ஓங்கிடும். இமயமலையில் வாழும் தயாபரியே! மேலும் கேட்பாயாக.

ஜாதகம் 27

1. பொன்புத னிரவிகன்னி புகர்சீயம் சிகியும்வண்டி
மைந்தனு மதியும்தேளில் மங்கலன் துலேயில்புக்கப்
பந்தமாய் ராகுமானில் பகர்சென்மம் மேடமாக
இந்தவாறு கிரகம்நின்ருல் இயம்புவீர் பலனேத்தானே.

1. குரு புதன் சூரியன் கன்னியிலும், சுக்கிரன் சிம்மத்திலும், கேது கடகத்திலும், சனியும் சந்திரனும் விருச்சிகத்திலும், செவ்வாய் துலாத்திலும், இராகு மகரத்திலும் தங்க, இப்படிப்பட்ட கிரகநிலேயைக் கொண்ட மேஷ லக்கின ஜாதகத்திற்குப் பலன்களேச் சொல்லுங்கள்.

	லக்கினம்		
	இராசி சக்கரம்		கேது
ராகு			சுக்கிரன்
	சனி சந்திரன்	செவ்வாய்	குரு புதன் சூரியன்

2. அம்மையும் கேட்கும்போது அத்திரி முனிவர்சொல்வார்
செம்மையாம் ஆண்பால்சென்மம் செப்புவோம் வடதென் [வீதி
நன்மையாய் மேற்குப்பார்வை நற்சந்து அருகில்தங்கும்
வண்மையாய் ஈசன்மேற்கில் வருஞ்சோலே அருகில்தங்கும்.

2. அம்பிகை இவ்விதம் வினவ, அத்திரிமகரிஷியும் பின்வருமாறு சொல்லலுற்ருர். இந்த ஜாதகம் ஆண்பால் ஜன்மம். வடக்குத்தெற்கு வீதியில் மேற்குப்பார்த்த வீடு. அதனருகில் ஒரு சந்து உள்ளது. வண்மையுள்ள ஈசுவரன் கோவில் மேற்கே உள்ளது. பக்கத்தில் நந்தவனம்.

3. தென்திசை தும்பியம்மன் திரமான கோஷ்டமுண்டு
இன்னமும் சிலதுகோவில் எழில்மடம் குளமுமாகும்
நன்மையாய் நதியுமுண்டு நாட்டுவோம் தென்கீழ்தன்னில்
பன்னிய சோலேயுண்டு பாலகன் கணேசன்தங்கும்.

3. தெற்குதிசையில் அம்மன் கோவிலும் திடமாய் உண்டு. இன்னும் சில கோவில்களும் அழகிய மடங்களும் குளமுமுண்டு. அது நல்ல நதிதீரம். தென்கிழக்கில் அருமையான சோலேயும் பாலகணபதி கோவிலும் உண்டு.

4. இதுவலால் பலதேவாசம் இலகிய பேரூர்தன்னில்
சதியிலா இந்தபாலன் தான்உதிப் பானுமம்மா
மதிநிகர் மாதுர்தந்தை வருதுணை களத்திரபுத்திரர்
பதியோகம் முன்பின்சென்மம் பகருவோ மின்னூல்
[தன்னில்.

4. இப்படிக் காற்றோட்டமான அழகிய பேருரில் இந்தப் பாலகன் உதிப்பான் அம்மா. சந்திரனைப்போன்ற மாதா, தந்தை, துணைவர், புத்திர களத்திரர், வீடு இவற்றின் யோகபாவங்களும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மமும் விவரமாய்க் கூறுவோம், இந்தப் புஸ்தகத்தில்.

5. தந்தையின் வர்க்கம்தன்னை சாற்றுவோ மிருநான்காகும்
பந்தமாய்த் தோஷமுண்டு பாரினில் ஒருவன்தீர்க்கம்
நொந்திடும் மற்றதெல்லாம் நுவலுவோம் தந்தைசேதி
சந்ததம் மால்நிறத்தன் தன்தேகம் ஒடிச்சலுள்ளான்.

5. தந்தையின் குடும்பத்தைப்பற்றிப் பேசுவோம். இவர்கள் மொத்தம் எட்டுப் பேர்கள். சிலர் தோஷமடைவர். உலகினில் ஒருவன் மாத்திரம் தீர்க்காயுளுடனிருப்பன். மற்றவர்கள் இறந்தொழிவார்கள். தந்தையின் செய்தியை விவரிப்போம். கருநிறமுடையவன். ஒடிச்சலான தேகத்தை யுடையவன்.

6. ரோமங்கள் நீட்சியுள்ளான் நுண்ணிய புத்தியுள்ளான்
திமையு மெண்ணுநெஞ்சன் செனங்கள்மேல் பிரியமுள்
[ளான்
தாமத குணத்தானுகும் சகலர்க்கு நண்பனுகும்
பூமியு மில்லானுகும் புகலுவோம் மேலுங்கேளே.

6. தலைமயிர் நீண்டிருக்கும். நுட்பமான புத்தியையுடையவன். மனதில் கெடுதி நினைக்கமாட்டான். ஜனங்களிடத்தில் பிரியமுள்ளவனு யிருப்பான். தாமதமான குணத்தையுடையவன். எல்லாருக்கும் சிநேகித னுயிருப்பான். நிலபலங்கள் கிடையா. சொல்லுகிறேன், மேலும் கேட்பாயாக.

7. ஆசார முடையனுவன் அவன்தன மில்லானுகும்
நேசர்க ளதிகமுள்ளான் நிதானமாய் வார்த்தைகூறுவன்
தாசுபோல் மனத்தனுவன் சோம்பலும் கொஞ்சமுள்ளான்
ஆசைக ளதிகமுள்ளான் அவன்சொல்லு நெறியுள்
[ளோனும்.

7. ஆசாரமுடையவன். தன்னுடைய தனம் என்பது இவனிடம் கிடையாது. சிநேகிதர்கள் அநேகர் உள்ளனர். நிதானமாக வார்த்தைகள் பேசுவான். துல்லியமான மனதை யுடையவன். சிறிது சோம்பல் உள்ள வன். அதிக ஆசைகளுடையவன். பேசுவதை நியாயமாய்ப் பேசுவான்.

8. துடுக்கென உரைக்கமாட்டான் சுந்தரி நேசமுள்ளான்
நடக்கையும் நல்லதாகும் நற்றெய்வ பக்தியுள்ளான்
அடக்கமு முடையனுவன் அவன்யூகி கல்விகொஞ்சம்
இடுப்பினில் ரோகமுள்ளான் ஈகைவான் பொறுமைசாலி.

8. துடுக்கு வார்த்தைகள் பேசமாட்டான். பெண்டாட்டியிடம் பிரிய மாயிருப்பான். நல்ல நடத்தை யுள்ளவன். நல்ல தெய்வபக்தியு முடைய வன். அடக்க முடையவன். நல்ல மதியூகி. கல்வி கொஞ்சம் உடையவன். இடுப்பில் வியாதியுள்ளவன். தர்மிஷ்டன். பொறுமை யுடையவன்.

9. இப்படி யிருக்குந்தந்தை இவனுக்கு உதித்தபாலன்
செப்புவோம் நாலாம்ஜென்மம் செவந்தநன் மேனியாவன்
மெய்ப்புடன் ஒடிச்சல்தேகி வித்தையு முடையனுவன்
தப்பித வழியில்செல்லான் தாட்சணியன் கனவானுமே.

9. இப்படிப்பட்ட தந்தைக்கு இவன் மைந்தனாகப் பிறந்தான். இஃது இவனுடைய நான்காவது ஜன்மம். சிவப்பு நிறமுடையவன். ஒடிச்சலான தேகமுடையவன். நல்ல படிப்புள்ளவன். தப்பிதமான வழிகளில் செல்லமாட்டான். தாட்சிணியமுடையவன். நல்ல பிரபு ஆவன்.

10. சித்திர வீடுசெய்வன் தெய்வங்கள் பக்தியுள்ளான்
எத்திசை புகழுவாழ்வன் இவன்யூகி பொறுமையுள்ளான்
நித்தியம் சுகப்பொசிப்பன் நிமலனைப் பூசைசெய்வன்
குத்திர வசனம்பேசான் கூறுவோம் மேலுங்கேளே.

10. அழகான வீடு கட்டுவான். தெய்வங்களிடத்தில் பக்தி பூண்ட வன். எத்திசையும் இவன் புகழ் பரவும். மதியூக முடையவன். பொறு மையு முடையவன். தினசரி நல்ல போஜனத்தைச் சாப்பிடுவான். பரம சிவனைப் பூசை செய்வான். குத்தும்படியான பேச்சுக்கள் பேசமாட்டான். மேலும் கூறுவோம், கேட்பாயாக

11. தனதானிய விருத்தியுள்ளான் சகலர்க்கு நண்பனுவன்
இனங்களால் பெருமையுள்ளான் இவனுமுன் கோபியாவன்
கனமுளோர் நேசம்கொள்வன் காரியச் சமர்த்தனுகும்
சினமுளான் பின்புசாந்தன் செய்நிலம் சேர்ப்பானுகும்.

11. தனதானிய விருத்தியுள்ளவன். சகலர்க்கும் நண்பனுவன். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். சிறிது முன்கோபமுடையவன். கௌரவமுள்ளவர்களை நேசிப்பான். காரியத்தை முடிப்பதில் கெட்டிக்காரன். கோபமுண்டு. பிறகு சாந்தமடைவான். நன்செய் நிலத்தை விருத்தி செய்வான்.

12. சாதகன் துணைவர்தன்னைச் சாற்றவே மூத்தோர்காணும்
மேதினில் இளையோருண்டு விருத்தியைச் சொல்வேனம்மா
தீதிலா ஆண்பாலொன்று செல்வியு மவ்வாறுகும்
மாதவர் சொல்லும்போது மங்கையும் கேட்கலுற்றாள்.

12. இவனுடன் பிறந்தவர்களைக் கூறுவோம். இவனுக்கு மூத்தவர்களில்லை. இளையவர்களுண்டு. அதன் விவரம் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தி. இங்ஙனம் சப்தரிஷிகள் கூறும்போது பார்வதி வினவலானாள்.

13. துணைவர்கள் தோஷமென்று சொல்லினீர் முனிவரேநீர்
அணையவே அந்தசேதி அறிவிப்பீர் விபரமாகக்
கனமுடன் உமையாள்கேட்கக் கழறுவார் முனிவர்தானும்
கனமுடன் தந்தைஊழால் கழறுவேன் தோஷம்தானே.

13. கூடப்பிறந்தவர்கள் தோஷமடைவார்கள் என்று சொன்னீர்களே! முனிவர்காள்! அதன் விவரத்தைத் தெரிவியுங்கள் என்று உமையவள் வினவ, முனிவர்கள் சொல்லலுற்றார்கள். தந்தையின் ஊழ்வினையினால் தோஷம் ஏற்பட்டது என்றோம்.

14. முன்சென்மம் தந்தைஊழை மொழிகுவோம் தோகைதன்னில்
இன்னவன் ரெட்டியாகி இவன்பூமி கிருஷியானும்
தன்னிலே தனங்கள்பெற்றுத் தன்மனை மதலையோடு
மன்னவன் வாழுநாளில் வரைகிறோம் ஊழைத்தானே.

14. முன்ஜன்மத்தில் தந்தையின் ஊழ்வினையைப்பற்றிக் கூறுவோம். ரெட்டி வமிசத்தில் பிறந்து இவன் கிருஷித்தொழிலாலே தானாகவே தனங்களைப் பெற்று மனைவிமக்களுடன் வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையை விவரிப்போம்.

15. அங்ஙகர் முருகனுக்கு அநேகமாய்ப் பணிகள்செய்து
மன்னும்பூஞ் செடியும்வைத்து வருவோர்க்கு அன்னமீந்து
பன்னிய வாழுநாளில் பகர்கிளி வளர்ந்தான்வீட்டில்
உன்னுமார்ச் சாலம்தன்னால் உயிரது நீங்கிற்றன்றே.

15. அவ்வூர் முருகக்கடவுளுக்கு அநேக வழிபாடுகள் செய்து, நந்த வனமும் வைத்து, வந்தவர்க்கெல்லாம் அன்னமிட்டு வாழ்ந்து வரும் நாளில், இனிமையாய்ப் பேசும் கிளிப்பிள்ளையைத் தன் வீட்டில் வளர்த்து வந்தான். அதை ஒரு பூனை கொன்றுவிட்டது.

16. அந்ததோர் கிளியின்தோஷம் அணுகிற்று அச்சென்மத்தில்
மைந்தரும் தோஷமாகி வந்திற்று இவனுக்கேதான்
இந்ததோர் சென்மம்தன்னில் இலகாது புத்திரதோஷம்
கந்தனுக் கடிமைபூண்டு காலையும் வந்ததாலே,

16. அந்தக் கிளியின் தோஷம் அந்த ஜன்மத்தில் இவனைப் பற்றியது. பிறக்கிற குழந்தைகள் இறந்து கொண்டே வந்தன. இந்த ஜன்மத்திலும் புத்திரதோஷம் நீங்காது. கந்தப்பெருமானுக்கு அடிமை பூண்டு வந்ததனால்,

17. செங்குந்த மரபிலேதான் செல்வனும் வந்தானம்மா
இங்கித முனிவர்கூற ஈச்வரி கேட்கலுற்றாள்
தங்கின ஊழிதன்னால் தன்பலன் சொல்வீரென்ன
மங்கையும் கேட்கும்போது வரைகிறார் முனிவர்தானும்.

17. செங்குந்தர் வமிசத்தில் இவனும் வந்து பிறந்தான். இப்படி முனிவர் எடுத்துச்சொல்ல, ஈச்வரி வினவலானாள். ஏற்பட்ட ஊழ்வினை யினால் உண்டான பலனைச் சொல்லுங்கள் என்று கேட்க, முனிவரும் சொல்ல லுற்றார்.

18. இந்ததோர் சென்மந்தன்னில் எத்தனை மதலைதோன்றில்
நொந்திடும் புதல்வர்தானும் நீங்கவே சாந்திசொல்வீர்
எந்தையே முருகனுக்கு ஏழுகார்த்தி கைஏகி
சந்ததம் அர்ச்சித்தேத்தித் தத்தைபோல் ரசிதம்தன்னால்,

18. இந்த ஜன்மத்தில் எத்தனை பிள்ளைகள் பிறந்தாலும் இறந்து விடுவார்கள். இது நீங்கச் சாந்தி (பரிகாரம்) சொல்லுங்கள். எம்பெருமானு கிய முருகக்கடவுளை ஏழு கார்த்திகைகள் போய்த் தரிசித்து எப்பொழுதும் அர்ச்சனை அபிஷேகம் செய்து போற்றித் துதித்து,

19. செய்துமே கந்தபுஷ்பம் தாம்பூலம் இதனைச்சேர்த்து
ஐயமில் லாமலேதான் அருமறை யவருக்கீந்து
பையவே முன்னூழி பிராமணர் தனக்குஓதி
வையமேல் உள்ளோர்மீண்டு மாதமோர் கார்த்திகைக்கு,

19. பிராமணர்களுக்குச் சந்தனம், புஷ்பம், வெற்றிலை பாக்கு இவை களைச் சேர்த்துச் சந்தேகமில்லாமல் கொடுத்து வந்தால் கொஞ்சம் கொஞ்ச

மாகப் பண்டைவினை பிராமண வாக்கினால் தொலையும். அப்படிச்செய்து தன் ஊருக்கு வந்து மாதம் ஒருமுறை கார்த்திகையன்று,

20. அருத்தியோர்[1] தனக்குஅன்னம் அன்புட னீவானாகில்
செகமதில் புத்திரர்தானும் செனிக்கினும் தீர்க்கமாகும்
பகையொன்று செய்யானாகில் பருகாது மதலைதானும்
தகமையா யிவன்பின்சென்மம் சாற்றுவோம் கேளும்மாதே.

20. இரந்து கேட்போர்களுக்கு அன்னம் அன்புடன் அளிப்பானாகில் உலகினில் புத்திரர்களும் ஜனிப்பார்கள். தீர்க்காயுளுடனிருப்பார்கள். இப்படிச் செய்யத்தவறினால் பிள்ளை பிறக்காது. தகைமையுடன் இவனுடைய பின் ஜன்மத்தைப் பகருவோம், கேளும், மாதே!

21. சோழநாட் டதனிலேதான் சீர்காழி யருகில்பேரூர்
சூழவே யிக்குலத்தில் சுந்திரன் பிறப்பானம்மா
ஆழிசூழ் சாதகர்க்கு அறைகிறோம் துணைவர்சேதி
வேழமா முகனைப்பெற்ற விமலியே மேலுங்கேளே.

21. சோழவள நாட்டிலே, சீகாழியருகிலுள்ள பேரூரில் இக்குலத்தில் சுந்திரன் பிறப்பானம்மா. இவனுடைய துணைவர் செய்தியைக் கூறுவோம். யானைமுகத்தோனைப்பெற்ற பார்வதியே! கேட்பாய், மேலும்.

22. இன்னவன் துணைவன்முன்னோன் இசைக்கிறோம் நஷ்ட [மாகும்
தன்னிலே இளையோருண்டு சாற்றுவோம் ஆண்பா [லொன்று
கன்னிகை யொன்றுமாகும் கனமுட னிரண்டுதீர்க்கம்
அன்னமே யாங்கள்சொல்லும் அடைமொழி குன்றிடாது.

22. இவனுக்கு முன் பிறந்தோன் இறந்துபடுவான். இளையவர்களுண்டு. அவர்களைப்பற்றிய விவரம் கூறுவோம். ஆண்பால் ஒருவன். சகோதரியும் ஒருத்திதான். இந்த இரண்டு பேர்களும் தீர்க்கமாயிருப்பார்கள். அம்மையே! நாங்கள் சொல்லும் பலன்கள் குறைவுபடா.

23. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் ஒருபான்மூன்றில்
மேதினில் உள்ளூர்தன்னில் வித்தகி மாதுர்வம்சம்
நீதியா யுதித்தமாதை நிமலனு மணமேகொள்வன்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

---

1. இரந்து கேட்போர்

23. ஜாதகனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பதிமூன்றும் வயதில் தன்னுடைய ஊரிலேயே தாயார் வர்க்கத்தில் நியாய மாய் உதித்த பெண்மணியை இவனும் கலியாணம் செய்துகொள்ளுவான். முருகக்கடவுளைப்பெற்ற புண்ணியசாலியே! கேட்பாயாக.

24. இன்னவன் தனக்குப்புத்(தி)ர ரியம்புவோ மாண்பால் [ரெண்டு
கன்னியு மவ்வாருகும் கனத்திடும் நான்குதீர்க்கம்
பின்னமாம் நான்குதானும் இலகாது மதலையென்றோம்
சொன்னசொல் குன்றிடாது சுந்தரி மேலுங்கேளே.

24. இவனுடைய புத்திரபாக்கியத்தைப்பற்றிக் கூறுவோம். பிள்ளை கள் இருவர். பெண்களும் இருவர். நான்கு பேர்கள் தீர்க்கம். இதைத் தவிர, நான்கு குழந்தைகள் பின்னமாகும். குழந்தை தக்காது என்று சொன்னோம். சொன்னசொல் குறைபடாது. சுந்தரியே! மேலுங் கேட் பாயாக.

25. மாதுரு குணத்தையாங்கள் வரைகிறோம் சிவந்தமேனி
நீதியாய்ச் சமதேகத்தள் நேர்க்கற்பு முடையளாவள்
தீதிலா குணத்தாளாவள் சீக்கிர நடையுமுள்ளாள்
சூதுக ளெண்ணுநெஞ்சம் சுந்தர வடிவுமுள்ளாள்.

25. மாதாவின் குணத்தை நாங்கள் இனிக்கூறுவோம். சிவப்பு நிறமுள்ளவள். சமமான தேகத்தையுடையவள். நல்ல கற்புக்கரசி. தீதில்லாத குணமுடையவள். சுறுசுறுப்புள்ளவளாயிருப்பாள். மனதில் சூதுவாது இடையாது. நல்ல அழகான வடிவமுடையவள்.

26. முன்கோபம் கொஞ்சமுள்ளாள் முகம்சிரம் வடிவுமுள் [ளாள்
அன்னங்கள் போடவல்லாள் ஆளனுக் கினியளாகும்
உன்னித வார்த்தைகூர்வள் உறும்பித்த தேகியாவள்
இன்னவள் துணைவர்தன்னை இயம்புவோம் கேளுமம்மா.

26. சிறிது முன்கோபமுடையவள். வசீகரமான வடிவமுள்ள முகலட்சணமுடையவள். அன்னதானம் செய்வாள். புருஷனுக்கு இனிமை யாக நடப்பாள். மேலான வார்த்தைகளைக் கூறுவாள். பித்தத்தொந்திரை யுள்ள தேகத்தையுடையவள். இவளுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறு வோம். கேளம்மா!

27. மாதுரு துணைவர்தன்னை வகுக்கிறே மாண்பால்ரெண்டு
மேதினில் கன்னிரெண்டு விருத்தியாம் நான்கும்தீர்க்கம்
தீதிலா மூன்றுநஷ்டம் செப்புவோ மிவளுக்கம்மா
நீதியாய்ச் சாதகர்க்கு நிகழ்த்துவோம் முன்சென்மத்தை.

27. மாதாவின் கூடப்பிறந்தவர்கள், ஆண் இருவர், பெண் இருவர். இவர்கள் நால்வரும் தீர்க்கமாய் விருத்திக்கு வருவார்கள். இவளுக்கு ஏற்கனவே மூன்று குழந்தைகள் நஷ்டமாகும். ஒழுங்காக ஜாதகனுடைய முன்ஜன்மத்தைக் கூறுவோம்.

28. இன்னவன் முன்சென்மத்தை இயம்புவோம் சோழ [நாட்டில்
அன்னவன் சைவசேயாய் அவனுமே பிறந்துமேலும்
பொன்னொடு பணிதிபெற்றுப் புத்திரர் மனைவியுண்டாய்
மன்னுசம்[1] பேச்வரருக்கு அவனுமே பணிகள்செய்து,

28. இவனுடைய முன்ஜன்ம விவரம் கூறுவோமென்றால், சோழ நாட்டிலே சைவக்குழந்தையாய்ப் பிறந்து பொன் பூஷணங்கள் இவைகளைப் பெற்று, மனைவி மக்கள் உண்டாகி, ஜம்புகேசுவரருக்கு வேண்டிய வழிபாடுகள் செய்து,

29. அகதிகட் கன்னமீந்து அவனுமே வாழ்ந்துபின்பு
பெரியவ ருறவுகொண்டு பிரபல சேதுக்கேகி
அருமையாய் ராமலிங்கம் அர்ச்சித்து உள்ளூர்மீண்டு
சிறுமையு மில்லாதாகிச் சென்றன னிவனேயம்மா.

29. ஏழைகளுக்கு அன்னமளித்து அவனுமே வாழ்ந்து பிறகு, பெரியாரைத் துணைக்கொண்டு பிரபலமான ராமேசுவரம் சென்று அருமையாய் இராமலிங்கத்திற்கு அருச்சித்துத் தன்னூருக்குத் திரும்பி யாதொரு இடைஞ்சலுமில்லாமல் இறந்தானம்மா.

30. கஞ்சனால் வரியப்பட்டுக் காளையு மிச்சென்மத்தில்
மிஞ்சிய இக்குலத்தில் வித்தக னுதித்தானென்றோம்
தஞ்சமா யிவன்பின்சென்மம் சாற்றுவோம் போரூர் [தன்னில்
வஞ்சியே பிரம்மசேயாய் வடிவேலன் தனக்குஊழி,

30. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் இந்த ஜன்மத்தில் மேலான இக்குலத்தில் உதித்தான் என்றோம். இவனுடைய மறுஜன்மத்தைக் கூறுவோம். திருப்போரூரில் பிராம்மணக் குழந்தையாய்ப் பிறந்து முருகனுக்கு வழிபாடுகள் செய்து,

---

1. சம்புகேசுவரர் = திருச்சி சமீபத்திலுள்ள திருவானைக்காவலிலே கோயில் கொண்டிருக்கும் சுவாமியின் திருநாமம்.

31. அர்ச்சித்துப் பெருமைபூண்டு அவனுமே வாழ்வானென் [றோம்
மிச்சமாய்த் தந்தைகாலம் விளம்புவோம் முப்பதாண்டில்
உச்சித மாதுருக்கு உரைக்கிறோ மதன்மேலெட்டும்
அச்சுதன் தங்கையாளே அம்மையே மேலுங்கேளே.

31. அர்ச்சனைகள் செய்து, பெருமைபெற்று வாழ்ந்து வருவானென்றோம். தந்தையின் எஞ்சிய காலத்தை விளம்புவோம். முப்பதாவது வயதில் தந்தைக்கு மரணம் ஏற்படும். அதற்குமேல் எட்டு வருடங்கள் கழித்து மேலான தாய்க்கு மரணம் ஏற்படும். விஷ்ணுவின் தங்கையாகிய பார்வதியே! மேலும் கேட்பாயாக.

32. தந்தையின் துணைவனுக்குச் சாற்றுவோம் பலத்தையாங்கள்
விந்தையாம் புத்திரருண்டாம் விளங்கிடும் புத்திரர்தானும்
சந்தத முறவுகொள்வன் தனமது பின்னுலுள்ளான்
எந்தையே இவன்யோகத்தை இயம்புவோம் மேலுங்கேளே.

32. தகப்பனாரின் சகோதரனுக்கு உண்டான பலாபலன்களைக் கூறுவோம். ஆச்சரியமான புத்திரர்கள் உண்டாவர். பிறக்கும் குழந்தைகள் விருத்திக்கு வரும். எப்பவும் இவனுடன் மற்றவர்கள் சொந்தம் கொண்டாடுவார்கள். பின்னால் தனம் ஏற்படும். இவனுடைய யோகத்தைப்பற்றி இன்னும் கூறுவேன், கேள்.

33. சாதகன் செனனந்தொட்டுச் சாற்றிய யீராண்டுக்குள்
வேதனை யதிகமுண்டாம் விரையங்கள் மிகவேநேரும்
நீதியாய்த் தேகநஷ்டம் நேர்ந்திடு மிவனுக்கேதான்
கோதிலா யிதற்குச்சாந்தி கூறுவோம் மேலுங்கேளே.

33. ஜாதகன் பிறந்தநாள் முதல் இரண்டு வருஷங்களுக்குள் வேதனைகள் அதிகம் ஏற்படும். அதிகப் பணவிரயம் ஏற்படும். அதன் காரணமாய் உடம்பின் வலுவு குறையும். எல்லாம் இவனுக்கே நேர்ந்திடும். இந்தத் தோஷத்திற்குச் சாந்தி கூறுவோம், கேட்பாயாக.

34. தணிகையின் மலைக்குஏகி சண்முகர்க் கர்ச்சித்தேத்திக்
கனிவுள அகதிகட்குக் கனமுள அன்னமீந்தால்
இனியுடன் நோய்கள்தீரும் இன்பமாம் சுகமேயாகும்
அணையவே இதற்குமேலே அரைகிறோம் பலனையாங்கள்.

34. திருத்தணிகையின் மலைமேலேறிச் சண்முகநாதனுக்கு அர்ச்சனை செய்து துதித்து ஏழைகட்குச் சரியானபடி அன்னதானம் செய்தால் உடல்நோய்கள் தீரும். இன்பமான சுகமும் ஏற்படும். அதனை ஒட்டியே இதற்குமேலே ஏற்படும் பலன்களை நாங்கள் கூறுவோம்.

ஜாதகம் 28

1. பொன்னரி சனியும்வீணை புதன்குசன் தகரதாக
மன்ரவி புகரும்நந்தி மைந்தனும் வீணையாகச்
சந்திரன் தேளதாகச் சர்ப்பம்பெண் சிகியும்மீனம்
வந்தவன் சென்மம்மேடம் வருவதால் பலன்சொல்வீரே.

1. வியாழனும் சனியும் மிதுனத்திலும், புதனும் செவ்வாயும் மேடத்திலும், சூரியனும் சுக்கிரனும் இடபத்திலும், சந்திரன் விருச்சிகத்திலும், இராகு கன்னியிலும், கேது மீனத்திலும் தங்க, இப்படிப்பட்ட கிரகநிலை கொண்ட மேஷலக்கின ஜாதகத்திற்குண்டான பலன்களைச் சொல்லுங்கள்.

கேது	லக்கினம் புதன் செவ்வாய்	சூரியன் சுக்கிரன்	குரு சனி
	இராசி சக்கரம்		
	சந்திரன்		ராகு

2. பார்வதி கேட்கும்போது பகருவார் விசுவாமித்திரன்
சீர்புகழ் ஆண்பால்சென்மம் செப்புவோம் இவன்தன் [இல்லம்
கூறுவோம் கீழ்மேல்வீதி குறித்தனம் தெற்குப்பார்வை
வீரிய மேற்கிலேதான் மேன்மையாய் ரதங்கள்நிற்கும்.

2. இவ்விதம் பார்வதிதேவி கேட்கும்போது, விசுவாமித்திரர் சொல்லலுற்றார். இந்த ஜாதகன் சீரும்சிறப்பும் பொருந்திய ஆண்ஜன்மம். இவனுடைய வீட்டைப்பற்றிய விவரம் கூறுவோம். கிழக்குமேற்கு வீதியில் உள்ளது. தெற்குப்பார்த்தது. மேற்கே மேன்மைதங்கிய இரதங்களும் வாகனங்களும் நிற்கும்.

3. அருகினில் அனுமான்கோஷ்டம் அரைகுறோம் முசல்மான் [கோரி[1]
பெருகிய மடங்களுண்டு பிரபல செட்டுஓங்கும்
திறமையாய் அக்கினிதன்னில் செல்வியாய்க் கன்னிநிற்கும்
பெருகிய நதியொன்றுண்டு பேசுவோம் ஓடைதானே.

---

1. மசூதி

3. சமீபத்தில் அனுமான் கோவிலும், துலுக்கர்களுடைய கோரியும், பெரிய மடங்களும் உண்டு. பிரபலமான வியாபாரங்கள் தழைத் தோங்கும். அக்கினி திக்கில் அம்மன் கோவிலுள்ளது. பிரவாகத்துடன் செல்லும் நதி ஒன்று பக்கத்தில் செல்லும். ஓடை என்றும் அதைச் சொல்ல லாம்.

4. வடக்கினில் சோலைசூழ் வடகீழ்பால் கோரியுண்டு
அடவுடன் பலதெய்வங்கள் அனேகசோலைகளு(மு)ண்டு
திடமதாய் அரசர்வாசம் செப்புவோம் பேரூர்தன்னில்
கடவுடன் கிருபையாலே காளையும் வாசம்செய்வன்.

4. வடக்கே சோலையும் வாவியும், வடகிழக்கில் துலுக்கன் மசூதியும் உண்டு. அடவாகப் பல மதஸ்தர்களுடைய தெய்வப்பிரதிஷ்டைகளும், அநேக தோட்டம் துரவுகளும் உண்டு. அரசர் வசிக்கும்படியான இந்தப் பேரூரில் கடவுளின் கிருபையாலே நம் ஜாதகனும் வசித்து வரலாயினன்.

5. தந்தைதாய்த் துணைவர்யோகம் தன்மனை யாளும்யோகம்
பந்தமாய்ப் புத்திரயோகம் பகருவோம் முன்பின் ஜன்மம்
சந்ததம் ஊழிதானும் சாற்றுவோம் இன்னூல்தன்னில்
கந்தனைப் பெற்றமாதே கழிறின மொழிகுன்றாது.

5. இவனுடைய தாய் தந்தையர், சகோதரர்கள், மனைவி மக்கள் இவர்களுடைய யோகபாவங்களையும், இவர்களுடைய முன்பின் ஜன்மங் களையும், ஏற்பட்ட ஊழ்வினைகளைப்பற்றியும் இந்தப் புஸ்தகத்தில் விவர மாய்க் கூறுவோம். கந்தஸ்வாமியைப்பெற்ற பார்வதிதேவியே! சொன்ன சொல் தவறாது.

6. இவன்பிதா துணைவர்தன்னை இசைக்குறோம் ஆண்பால் [காணேம்
அவனியில் கன்னிமூன்று அறைகுறோம் தீர்க்கமாக
நவனியில் பிதாகுணத்தை நாட்டுவோம் இருநிறத்தான்
தவமுடை யோர்க்குஅன்பன் தாட்சிண்யன் வாததேகி.

6. இவனுடைய தந்தையின் சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். ஆண் சகோதரர் இல்லை. உலகினில் மூன்று தங்கைகள் உண்டு என்று சொல்லுவோம். இது தீர்க்கம். உலகவாழ்வில் இந்த ஜாதகனுடைய பிதா எவ்விதம் வாழ்ந்து வந்தான் என்று கூறுவோம். பொதுநிறமுள்ளவன். தபசிகளிடம் பிரியமுள்ளவன். தாட்சிண்ணியமுள்ளவன். வாதசரீர முள்ளவன்.

7. புத்திமான் பொருமையுள்ளான் புண்ணிய மனத்தனுகும்
பக்திமான் செட்டுசெய்வன் பந்துவுக் கினியனுவன்
நித்தியம் சுகிபுசிப்பன் நிதானமாய் வார்த்தைகூர்வன்
சித்தமும் காப்புமில்லான் தேவிமேல் இஷ்டமுள்ளான்.

7. நல்ல புத்திமான். பொறுமை யுள்ளவன். தர்மசிந்தனை யுடையவன். கடவுளிடத்தில் பக்திபூண்டு வியாபாரம்செய்வான். சொந்தக்காரர்கள் பிரியப்படும்படி இருப்பான். நித்தியம் சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான், நிதானமாய் வார்த்தைகள் சொல்லுவான். மனஅடக்க மில்லாதவன். பெண்டாட்டியிடத்தில் பிரியமாயிருப்பான்.

8. கல்விமான் பெரியோர்நேசன் கண்முகம் வசீகரத்தான்
இல்லையென் றுரைக்கமாட்டான் யாரையும் வரவு
[கொள்வன்
தொல்லையு முடையனுவன் சுகமுளான் (சு)சீலனுவன்
புல்லரை அணுகானென்றும் பெரிதான வடிவும்
[உள்ளான்.

8. நல்ல படிப்பாளி. பெரியாரைத் துணைக்கொள்ளுவான். கண்பார்வையினுலும், முகவழகினுலும் பிறரை வசியப்படுத்தக்கூடியவன். யாசிப்போருக்கு இல்லையென்று சொல்லமாட்டான். யாரையும் உபசரித்து வரவேற்பன். சிரமங்களும் உடையவன். இருப்பினும், சுகமுள்ளவன். சுகசீவனம் செய்வான். கயவர்களை நெருங்கமாட்டான். பெரியசரீரத்தை யுடையவனுயிருப்பான்.

9. பித்தங்கள்[1] அதிகமுள்ளான் பேசுவோர் மூலமுண்டு
குத்தங்க ளெண்ணுநெஞ்சம் கோபமும் பொருமையுண்டு
வெத்திவேல் அன்புகூர்வன் வீண்வார்த்தை அதிகம்
[பேசான்
சித்தினி ஜாதியாவன் செப்புவோம் இவனுக்கேதான்.

9. பித்த சரீரமுள்ளவன். மயக்கங்கள் அதிகமாக உள்ளவன். பேசுபவர்களிடம் எதிர்த்துக் குற்றங்குறைகள் எண்ணுத மனத்தினன். கோபமும் பொருமையு முடையவன். வெற்றிவேலுடைய முருகக்கடவுளிடம் மிக்க பத்தியுள்ளவன். அனுவசியமாக அதிகவார்த்தைகளைப் பேசமாட்டான். வேதாந்த தத்துவங்களைச் சித்தமாய் அறிபவர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவன் இவனேயாகும்.

1. மயக்கங்கள்

10. நடையது சொகுசுமுள்ளான் நன்முக வடிவும்முள்ளான்
அடைமொழி கூருகும் அருமையாய்ப் பொருளும் [சேர்ப்பன்
திடமுடன் தீர்த்தம்தோய்வன் சேயிழை தன்னுல்யோகம்
படபட நடையுமுள்ளான் பார்வதி மேலுங்கேளே.

10. சொகுசாக நடப்பான். நல்ல முகவடிவத்தை யுடையவன், திருஷ்டாந்த வார்த்தைகளைக் கூறமாட்டான். அருமையாகப் பொருள்களைச் சேர்ப்பான். நிச்சயபுத்தியுடன் தீர்த்தாடனங்கள் செய்வான். பெண்டாட்டியினுல் யோகமுடையவன். படபட என்று நடக்கும் இயல்பினன். மேலும் கேள், பார்வதியே!

11. இப்படி யிருக்கும்தந்தை இவனுக்கு உதித்தபாலன்
செப்புவோம் பலன்கள்யாவும் வீரமில் லாதநெஞ்சம்
ஒப்புடன் இருநிறத்தான் யூகைவான் பொறுமையுள்ளான்
தப்பித மெண்ணுநெஞ்சன் தனமுளான் கல்விகொஞ்சம்.

11. இப்படிப்பட்ட குணுதிசயங்களையுடைய தகப்பனுக்கு நம்ஜாதகன் பாலகனுய் அவதரித்தான். அவனுடைய பலாபலன்களையெல்லாம் சொல்லுவோம். பயந்த சுவபாவமும் பொதுநிறமுமுள்ளவன்: நல்ல மதியூகி. பொறுமை யுடையவன். மனதில் கெடுதலை நினைக்கமாட்டான். பணக்காரன். சிறிது கல்வி கேள்விகளுமுடையவன்.

12. பால்தயிர் இஷ்டமுள்ளான் பந்துவும் மெச்சவாழ்வன்
வேல்விழி மனையாள்பட்சன் விரும்புவான் சுகப்பொசிப்புச்
சீலமா சாரமுள்ளான் சிறுத்தவர்க் குதவிசெய்வன்
கோலமாய்ப் பூமிசேர்ப்பன் கோதையே இன்னும்கேளே.

12. பால், தயிர், இவற்றின்மேல் பிரியமுள்ளவன். பந்துக்கள் மெச்சும்படி வாழ்வான். வேல்போன்ற நேத்திரங்களையுடைய மனைவியிடத்தில் விருப்பமுள்ளவன். சுகபோஜனத்தை விரும்புவான். குணசீலன். ஆசாரமுள்ளவன். ஏழைகளைக் காப்பாற்றுவான். ஒழுங்காக அழகிய பூஸ்திதிகளைச் சேர்ப்பான். பார்வதியே! இன்னும் கேட்பாயாக.

13. வண்டிவா கனமுமுள்ளான் வணிபங்கள் அதிகம்செய்வன்
குண்டைகோ விருத்தியுள்ளான் கூறுவான் மிருதுவார்த்தை
அண்டினோர் தம்மைக்காப்பன் அநேகரும் வணங்க [வாழ்வன்
எண்டிசைக் கீர்த்திஏற்பன் யீகைவான் தரளதந்தம்.

13. வண்டியும் வாகனமும் உள்ளவன். வியாபாரங்களை அதிகம்செய்வான். எருதுகளை விருத்திசெய்வான். மிருதுவானவார்த்தைகளைச் சொல்லுவான். அண்டினவர்களை ஆதரிப்பான். யாவரும் இவனை வணங்கும்படி வாழ்வான். எட்டுத்திக்கிலும் புகழ்பெற்றவன். தர்மிஷ்டன். முத்துப்போன்ற பற்களை யுடையவன்.

14. தலையினில் வடிவுமுள்ளான் சன்மார்க்கன் ரோமம்நீட்சி
பலமுளான் அகதிநேயன் பாரினில் தானியம்சேர்ப்பன்
நலமான கர்மம்செய்வன் நல்லபூ ஷணமும்சேர்ப்பன்
பலவித பூகையுள்ளான் பார்வதி மேலும்கேளே.

14. அழகான சிரசையுடையவன். சன்மார்க்கத்தை அனுஷ்டிப்பான். தலைமயிர் நீளமாக வுள்ளவன். தேகபல முடையவன். 'தேஹி' என்றவர்களைக் காப்பாற்றுவான். உலகினில் தனதானியங்களைச் சேர்ப்பான். நல்ல கர்மாக்களைச் செய்வான். நல்ல பூஷணதிகளைச் சேர்ப்பான். பலவிதமான சாமர்த்தியங்களை யுடையவன். பார்வதி ! மேலும் கேட்பாயாக.

15. உண்ணிய உணவின்மீது உறைப்பொடு புளிப்பிலிச்சை
கெண்ணிய மாகவாழ்வன் கிம்சுக ரோகமுள்ளான்
புண்ணிய மனத்தனுகும் புத்திர யோகமுள்ளான்
விண்ணவர் பூசைசெய்வன் மெல்லியே மேலுங்கேளே.

15. சாப்பிடும் உணவுகளில் உறைப்போடு புளிப்புமுள்ள பதார்த்தங்களில் இஷ்டமுள்ளவன். கௌரவமாக வாழ்வான். ஸ்திரீசுகத்தினுல் ஏற்படும் வியாதி யுள்ளவன். தர்மசிந்தனை யுள்ளவன். புத்திரபாக்கிய முள்ளவன். தேவதைகளைப் பூஜைசெய்வான். தாயே ! மேலும் கேட்பாயாக.

16. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் கமலரேகை
அன்னமே சுழியுமுள்ளான் அவன்தேக சூடுமுள்ளான்
பன்னியே உரைக்கவல்லான் பாவையர் மோகவானும்
சொன்னசொல் தப்பானுகும் சுந்தரி தன்னுல்யோகம்.

16. இவனது செங்கையினில் பத்மரேகை உண்டு. தானிய சக்கரமும் உடையவன். உஷ்ணத்தினுல் பீடிக்கப்பட்ட சரீரத்தையு முடையவன். அன்பான வார்த்தைகளைப் பக்குவமாய்ச் சொல்லவல்லான். ஸ்திரீகள் இவனைக்கண்டு மோகிப்பார்கள். சொன்னவாக்குப்படி நடப்பான். பெண்டாட்டியினுல் யோகமுண்டு.

17. இவனுட துணைவர்தன்னை இசைகுரேும் எழுவராகும்
அவனியில் ஆண்பால்ரெண்டு அரைகுரேும் பெண்பால்
[அவ்வாறு
நவமது மணத்தின்காலம் நாட்டுவோம் ஒருபாண்எட்டில்
கவனமாய் உள்ளூர்தன்னில் காதலி மாதுர்வர்க்கம்.

17. இவனுடன் பிறந்தவர்கள் எழு பேர்களாவர். சகோதரர்கள் இரண்டும், சகோதரிகள் இரண்டும் தீர்க்கம். இவனது கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பதினெட்டாம் பிராயத்தில் தன்னூரிலே தாயார்வர்க்கத்திலிருந்து பெண் வருவாள்.

18. மனைவியும் வருவாளென்றோம் அவள்குணம் சிவந்தமேனி
இணையிலாச் செல்வமுள்ளாள் இன்பமாய் வார்த்தைகூர்வள்
அணையவே கற்புமுள்ளாள் ஆளனுக் கினியளாவள்
கனமுடன் வாழ்வாளாகும் காதலி மேலும்கேளே.

18. அம்மனைவியின் குணங்களைச் சொல்லுவோம். சிவந்தமேனியை யுடையவள். ஒப்பில்லாத செல்வங்களை யுடையவள். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். நல்ல கற்புடையவள். புருஷனுக்கினியவளாயிருப்பாள். கௌரவமாய் வாழ்ந்து வருவாள். தாயே! மேலும் கேட்பாயாக.

19. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் ஆண்பால்ரெண்டு
சித்தமாய்ப் பெண்பாலிரண்டு தீர்க்கமாம் நான்குந்தானும்
பத்தியாய் மூன்றும்நஷ்டம் பகருவோம் இவனுக்கேதான்
அத்திமா முகனைப்பெற்ற அம்மையே மேலுங்கேளே.

19. இவனுடைய புத்திரபாக்கியத்தைப்பற்றிக் கூறுவோம். ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகளும் அப்படியே ஆகும். இந்நான்கு குழந்தைகளும் தீர்க்கமாகும். ஒன்றன்பின் ஒன்றாய் மூன்று குழந்தைகள் நஷ்டம் என்று சொல்லுவோம். யானை முகத்தோனைப்பெற்ற தாயே! மேலும் கேட்பாயாக.

20. தந்தையின் முன்ஜன்மத்தைச் சாற்றுவோம் பாண்டி
[நாட்டில்
எந்தையே பரங்குன்றத்தில் (இவன்)வன்னிய குலமுதித்துச்
சொந்தமாய்ப் பூமிபெற்றுச் சுந்தரி மனைவியோடு
பந்தமாய்ச் செட்டுசெய்து பாலகன் வாழ்ந்தானென்றோம்.

20. இவன் தந்தையின் முன்ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். பாண்டிய நாட்டில் திருப்பரங்குன்ற க்ஷேத்திரத்தில் இவன் வன்னியர் குலத்திலுதித்தான். சொந்தமாய் நிலபலங்களைடைந்து அழகிய மனையாட்டியுடன் வியாபாரங்கள் செய்து பொருள்தேடி வாழ்ந்து வந்தானென்றோம்.

21. அங்கர் தன்னிலேதான் அருமுகன் ஆலயத்தில்
பன்னிய தீபம்வைத்துப் பாரினில் ரதமும்செய்து
தன்னிலே வருவோருக்குத் தாகப்பந் தலுமமைத்து
உன்னித அகதிகட்கு உத்தமன் அன்னமீந்து,

21. அந்த ஊரிலே ஆறுமுகக்கடவுளின் ஆலயத்தில் அருமையாய்த் தீபமேற்றி வந்தும், முருகனுக்கு ஒரு ரதம்செய்து வைத்தும், தனியே வரும் பாதசாரிகளுக்குத் தண்ணீர்ப்பந்தல் அமைத்தும், மேலான அகதிகளுக்கு அன்னபானுதிகள் தந்து உபசரித்தும்,

22. சேதுவைத் தீர்த்தம்தோய்ந்து ஸ்ரீராமன் பூசைசெய்யும்
ஆவியாய்ப் பரமனுக்கு அர்ச்சித்துத் தானமீந்து
நீதியாய் உள்ளூர்மீண்டு நிருபனும் சிலநாள்சென்று
வேதனை யில்லாதாகி வித்தகன் மரணமானுன்.

22. ராமேசுவரம் சென்று சேதுஸ்னானம் செய்து ராமனுதருக்கு அர்ச்சனை அபிஷேகங்கள் செய்தும், உயிர்போன்று ஆத்துமஸ்வரூபியாகிய எம்பெருமானுக்கு அருச்சனைசெய்தும் தானதருமங்கள் செய்தும் ஒழுங்காகத் தன்னூருக்குத் திரும்பி, சிலநாள் சென்றதும், வேதனைகள் இல்லாமல் இவன் மரணமடைந்தான்.

23. கஞ்சனுல் வரியப்பட்டுக் காளையும் இச்சென்மத்தில்
மிஞ்சிய காந்தகோத்திரம்[1] மீதினில் உதித்தானென்ருேம்
தஞ்சமாய் இவன்பின்சென்மம் சாற்றுவோம் அவ்வூர்
[தன்னில்
வஞ்சியே சைவசேயாய் வமிசத்தில் உதிப்பானென்ருேம்.

23. திரும்பவும் பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவன் இந்த ஜன்மத்தில் மேலான வன்னியர் குலத்தி லுதித்தான். இவனுடைய மறு ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். அவ்வூரில் சைவக்குழந்தையாய் அவதரிப் பானென்ருேம்.

24. பிற்சென்மம் தன்னிலேதான் பிஞ்சகன் தனைப்பூசித்து
லச்சையில் லாமல்வாழ்ந்து நாதர்பால் செல்வானம்மா
அச்சுதன் தங்கையாளே அறைகிருேம் சாதகர்க்கு
உச்சித முன்சென்மத்தில் உறும்தில்லை மேல்பாலாக,

24 அடுத்த ஜன்மத்தில் இவன் பரமசிவனைப் பூசித்துச் சிரமமில்லாமல் தலை நிமிர்ந்து வாழ்ந்து கடவுளிடம் போய்ச்சேர்ந்தான். விஷ்ணுவின் சகோதரியே! ஜாதகர்க்கு முன்ஜன்மத்தில் நேர்ந்த ஒன்றைக் கூறுவாம். மேலான சிதம்பர க்ஷேத்திரத்தின் மேல்பாகத்தில்,

25. வன்னிய மரபில்தோன்றி மனைவிமைந் தரும்உண்டாகிப்
பன்னிய பயிரினுலே பாலகன் பெருமைபூண்டு
அன்னியர் மெச்சவாழ்ந்து அநேகமாய்த் தனங்கள்பெற்றுப்
பின்னமில் லாமல்வாழ்ந்து பெரியோர்கள் உறவுகொண்டு.

1. வன்னியர்குலம்

25. வன்னிய குலத்திலுதித்து, மனைவி மக்கள் ஏற்பட்டு, பூமியைக் கிருஷிசெய்து, இவன் பெருமையுடன் பிறர் மெச்சும்படி வாழ்ந்தான். எத்தனையோ தனத்தையடைந்து, யாதொரு குறைவுமில்லாமல் வாழ்ந்து, பெரியோர்களைத் துணைக்கொண்டு,

26. தென்தேசம் தலங்கள்யாவும் தீர்த்தங்கள் தோய்ந்துமே [தான்
அன்புடன் உள்ளூர்மீண்டு அவனுமே மரணமாகி
இன்பமாய்க் காஞ்சிதன்னில் இவனுமே உதிப்பானம்மா
துன்மையில் லாமல்வாழ்வன் சுந்தரி மேலுங்கேளே.

26. தென்தேசத்து ஸ்தலங்களைப்போய்த் தரிசித்து, தீர்த்தாடனங்கள் செய்து, கடைசியில் தன்னூருக்குத் திரும்பி, சில காலத்திற்கெல்லாம் மரணமடைந்தான். பிரியமாய்க் காஞ்சீபுரத்தில் இவனே திரும்பவும் உதிக்கலானான். துன்பங்களில்லாமல் வாழ்வான். சுந்தரி! மேலும் கேட்பாயாக.

27. இவனுட பிறசென்மத்தை இயம்புவோம் போரூர்தன்னில்
அவனியில் வைசியசேயாய் அவனுமே உதித்துமேலும்
நவமதில் அதிகம்செட்டு நடத்தியே வாழ்வானுகும்
தவமுடை யோரைக்காக்கும் தயாபரி மேலுங்கேளே.

27. இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். திருப்போரூரில் வைசிய குடும்பத்தில் அவனே உதித்துப் பூமியில் அதிக வியாபாரங்களைச் செய்து வாழ்வானுகும். தபசிகளைக் காப்பாற்றும் தயாபரியே! மேலும் கேட்பாயாக.

28. முனிவர்இவ் வாறுய்க்கூற மொழிகுவார் புயண்டர்தானும்
இனிமையாய் மாதுர்சேதி இயம்புவீர் என்றுகேட்கக்
கனிஉள முனிவர்சொல்வார் காதலி சிவந்தமேனி
வனிதையும் பொறுமையுள்ளாள் மர்மமும் உடையளாமே.

28. முனிவர் இவ்வாறு கூற, புயண்டர் பின்வருமாறு வினவலானார். இனிமையான மாதாவின் செய்தி விவரங்களைக் கூறுங்கள், என்று கேட்க மனம் கனியும்படி முனிவர் சொல்லலுற்றார். அவள் சிவப்பான சரீரமுள்ளவள். பொறுமையுள்ளவள். சிறிது ரகசியமுமுள்ளவள்.

29. முன்கோபம் கொஞ்சமுள்ளாள் முனிவிலாள் அன்னமீவள்
தன்பந்து மெச்சவாழ்வள் சாதிப்பாள் சிலதுசங்கை
அன்னம்போல் நடையுமுள்ளாள் ஆளனுக் கினியளாவள்
பின்னமில் லாததேகம் பேசுவோம் இவளுக்கேதான்.

29. முன்கோபம் கொஞ்சமுள்ளவள். கோபிக்கமாட்டாள். அன்னம் போடுவாள். சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வாள். சில சந்தேகங் களைத் தீர்ப்பாள். அன்னம்போன்ற நடை யுடையவள். புருஷனிடம் பிரியமாயிருப்பாள். யாதொரு பின்னமுமில்லாத சரீரத்தை யுடையவள். இக்குணங்கள் இவளுக்கே ஏற்பட்டவை.

30. இவளுட துணைவர்தன்னை இசைக்குறேம் ஆண்பால்ரெண்டு
நவமதில் பெண்பால்ரெண்டு நாட்டுவோம் தீர்க்கமாக
அவனியில் இவள்முன்சென்மம் அறைகுறேம் பட்சிதன்னில்
சிவமதம் கங்கைவம்சம் செனித்தவ ளிவளேளன்றேம்.

30. இவளுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரர்கள் இருவர். சகோதரிகளும் இரண்டு பேர்கள். இவள் விஷயத்தில் இதைத் தீர்க்கமாய்ச் சொல்லலாம். பூலோகத்தில் இவளுடைய முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். திருக்கழுக்குன்றத்தில் சிவமதத்தைப் பின்பற்றும் வேளாளர்குலத்தில் ஜனித்தவள் இவள்தானென்றேம்.

31. மைந்தரும் இல்லாளாகி வரனுடன் போரூர்சென்றுச்
சொந்தமாய்த் தாகப்பந்தல் சுந்தரி வைத்துமேதான்
வந்தவர்க் கன்னமீந்து வடிவேலர்க் கருச்சித்தேத்தி
முந்திய தீபம்தானும் முருகன்முன் வைத்தாளென்றேம்.

31. புத்திரபாக்கியம் இல்லாமல் புருஷனுடன் திருப்போரூர் சென்று, சொந்தத்தில் தண்ணீர்ப்பந்தல்களை இந்த சுந்தரி ஏற்படுத்தி, வந்தவர் களுக்கு அன்னபானதிகள் கொடுத்து, வடிவேல் முருகனுடைய திவ்ய பாதங்களில் அருச்சனைகளும் துதியும் செய்து, இதற்கு முன்னால் முருகக் கடவுளுக்குத் தீபம்போட்டு வந்தாள் இவளென்று சொன்னேம்.

32. இவ்வித ஊழியங்கள் இவளுமே செய்துபின்பு
திவ்விய முருகன்தன்னால் செனித்தது மதலைதானும்
ஒவ்விய சிலநாள்சென்று உத்தமி மரணமானாள்
பவ்வமாய்ப் பிரமன்தன்னால் பாரினில் வரியப்பட்டு,

32. இவ்வித காரியங்களை இவளுமே செய்து பின்பு திவ்ய முருகக் கடவுளின் திருவருளால் பிள்ளையைப் பெற்றாள். இப்படிச் சிலநாள் கழிந்ததும் இவ்வுத்தமி மரணமடைந்தாள். பக்குவமாய்ப் பவவினையின் காரணமாகப் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பூலோகத்தில்,

33. வந்தவ ளிவளேயென்றேம் வரைகுறேம் இவள்பின் [சென்மம்
சந்ததம் தணிகைதன்னில் க்ஷத்திரிய குலமுதித்து
முந்திய செல்வம்பெற்று முயற்சியாய் வாழ்ந்துபின்புச்
சொந்தமாய் முருகன்பாதம் தொலவியும் பூஜைசெய்வாள்.

33. ஜனித்தவள் இவளே யென்ருேம். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருத்தணிகைதன்னில் க்ஷத்திரிய குலத்திலுதித்து, பூர்விகசொத்துக்களைப் பெற்று, பிரயாசைப்பட்டு வாழ்ந்து பின்பு சொந்தமாய் முருகன்கோவில் ஸ்தாபித்து அவன் பொன்னடியைப்போற்றி வழிபாடுகள் செய்வாள்.

34. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பான்நாலில்
வந்ததோர் தனுசுமாதம் வகுக்குருேம் கருமம்தானும
பிந்திய அன்னைகாலம் பேசுவோம் நாற்பான்ஒன்றில்
சந்ததம் கூனிமாதம் தாய்க்குமே கர்மம்செய்வன்.

34. இவனது தந்தையின் மரணகாலத்தைப்பற்றிக் கூறுவோம். ஜாதகனுடைய முப்பத்துநான்காம் பிராயத்தில் வந்த மார்கழி மாதத்தில் பிதிரு கருமம் ஏற்படும் என்று சொல்லுவோம். இதன் பின் தாயின் மாரகம் சொல்லுவோம். இவனது நாற்பத்தொன்ரும் வயதில் பங்குனி மாதத்தில் இவன் தன் தாயாருக்குக் கருமம் செய்வான்.

35. சாதகன் மரணகாலம் சாற்றுவேன் அறுபான்ஆறில்
நீதியாய்த் தேளின்மாதம் நிகர்சஷ்டி பூர்வபக்கம்
வேதனை மார்புநோயால் வித்தகன் உடலம்வாடும்
சோதித்து நூலைஆய்ந்து சொன்மொழி குன்றிடாது,

35. ஜாதகனுடைய மரணகாலத்தைப்பற்றிக் கூறுவோம். அறுபத்தாரும் ப்ராயத்தில் ஒழுங்காய்க் கார்த்திகை மாதத்தில் சரியான பூர்வபட்சம் சஷ்டியில் மார்பு வலியினல் வேதனை ஏற்பட்டு உயிர் துறப்பான். நவக்கிரகங்களைச் சோதனை செய்து இந்நூலை ஆராய்ந்து சொல்லிய சொல்லுக்கு யாதொரு குறைவும் ஏற்படாது.

36. கரும்பாம்பு ஆறில்நிற்கக் காரியு மூன்றில்நிற்க
வரும்பலன் சொல்வீரென்ன வரைகுருர் முனிவர்தானும்
திரமையாய்ப் பகையேவெல்வன் சென்றிடம் பெருமை
[பூண்பன்
வரவரச் செல்வம்ஓங்கும் மங்கையே மேலுங்கேளே.

36 இராகு லக்கினத்திற்கு ஆரும் வீட்டில் தங்க, சனிபகவான் மூன்ருமிடத்தில் நிற்க, ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று வினவ, முனிவரும் சொல்லலுற்ருர். சாமர்த்தியத்துடன் பகைவரை வெல்லுவான். சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெறுவான். மேன்மேலும் செல்வங்கள் ஓங்கிடும். தாயே! மேலும் கேட்பாயாக.

37. எவ்வித ரோகம்வந்து விலகினும் விலகிப்போகும்
பவ்வமாய் மாதுர்வாலே பருகிடும் செல்வம்தானும்
ஒவ்விய விரோதிநாசம் யோசனை பலவும்செய்வன்
நவ்விய புத்திமந்தம் நாட்டுவோம் மேலும்கேளே.

37. எப்படிப்பட்ட வியாதி வந்தாலும் பீடைகள் விலகிவிடும். மாதாவின் அதிர்ஷ்டத்தினால் செல்வம் விருத்தியாகும். இருந்த விரோதியும் நாசமடைவான். பற்பல யோசனைகளைச் செய்வான். கொஞ்சம் மந்தமான புத்தியுடையவன். பார்வதியே! இன்னமும் கேட்பாயாக.

38. இன்னவள் செனனகாலம் இசைகுறோம் புதனிலேதான்
தன்னிலே இருப்புஆண்டு சாற்றுவேன் ஒன்றுமாகும்
உன்னித மாதம்நான்கு ஒருபதி னெட்டுநாளும்
பன்னிய பலனைநாங்கள் பகுருவோம் கேளுமம்மா.

38. இவனுடைய ஜனனகாலத்தைப்பற்றிக் கூறுவோம். ஆதியில் புததசையில் இருப்பு வருடம் ஒன்று, மாதம் நான்கு, நாள் பதினெட்டாகும். அதற்குண்டான பலன்களைக் கூறுகிறோம், கேளம்மா.

39. சாதகன் தனக்குரோகம் சார்ந்திடும் இதுவல்லாமல்
நீதியாய்த் தந்தைக்கேதான் நேர்ந்திடும் அலைச்சல்கொஞ்சம்
தீதான சொல்பரோகம் செப்புவோம் பலன்விசேஷம்
கோதிலா சிகிதசைக்குப் பகருவோம் பலன்கள்தானே.

39. இவனுக்கு ரோகம் ஏற்படும். இதுவல்லாமல் ஒழுங்காக இவன் தந்தைக்குக் கொஞ்சம் அலைச்சல் ஏற்படும். கெட்ட வியாதி கொஞ்சம் ஏற்படும். இன்னமும் விசேஷமான பலன்களைக் கூறுவோம். குற்றமில்லாத கேதுதசைக்கு உண்டான பலன்களைக் கூறுவோம்.

40. செட்டுகள் அல்பமாகும் செலவுகள் மிச்சமாகும்
இஷ்டர்கள் பகையதாகும் இவன்தந்தை மாதுர்தோஷம்
நஷ்டமாம் துணைவிதானும் நன்மனச் சஞ்சலங்கள்
திட்டமாம் கூலிவேலை செய்குவ னென்றுசொல்லே.

40. வியாபாரங்கள் அவ்வளவு பலன் தரா. செலவுகள் அதிகமாகும். சொந்தக்காரர்கள் விரோதமாவார்கள். தாய் தந்தையருக்குத் தோஷம் ஏற்படும். மனைவியும் மரணமடைவாள். நல்ல மனதிற்குச் சஞ்சலங்கள் ஏற்படும். நிச்சயமாய்க் கூலிவேலை செய்வானென்று சொல்வோம்.

41. கல்வியும் கொஞ்சம்உண்டாம் காளைகள் விருத்தியாகும்
புலகிடும் யோகம்தானும் போகிடும் களவுகொஞ்சம்
நல்லவர் விரோதமாவர் நற்பந்து சுபமேஉண்டாம்
அல்லலைத் தவிர்க்கும்மாதே அரைகுறோம் மேலுங்கேளே.

41. சிறிது படிப்பும் ஏற்படும். காளை மாடுகள் விருத்தியாகும். யோகம் ஏற்படும். கொஞ்சம் சொத்துக் களவு போய்விடும். நல்லவர்களுடைய பகைமை ஏற்படும். நல்ல பந்து ஜனங்கள் சுபத்தை யடைவார்கள். தொல்லைகளைத் தொலைக்கும் பார்வதியே! சொல்லுகிறோம். மேலும் கேட்பாயாக.

42. புகர்தசை இருபான்ஆண்டும் புகலுவோம் சுபமுமுண்டாம்
தகமையாய் மனைவிவாய்க்கும் தனம்பூமி துரவுசோலை
வகையான தொழிலும்வாய்க்கும் மைந்தரும் உண்டுகண்
[டாய்ப்
பகையிலான் துணைவர்விருத்தி பந்துவும் மெச்சவாழ்வன்.

42, சுக்கிரதசை இருபது வருஷமும் சுகமுண்டாகும் என்று சொல்லுவோம். தகுந்தாற்போல பெண்டாட்டி வருவாள். தனம், பூமி, தோட்டம், துரவுகள், சௌகர்யமான தொழில் இவை ஏற்படும். புத்திர பாக்கியமும் ஏற்படும். விரோதிகளே யில்லை. சகோதரர் விருத்திக்கு வருவார்கள். பந்துக்கள் மெச்சும்படி வாழ்வான்.

43. பாக்கியம் அதிகம்நேரும் பெருகிடும் வணிபம்தானும்
யோக்கிய னுகவாழ்வன் உத்தமர் வசியனுகும்
காக்கின்ற காளிக்கேதான் கனதிருப் பணியும்செய்வான்
மூர்க்கரும் வசியமாகும் மொழிகுறோம் மேலுங்கேளே.

43 அதிகமாய்ப் பாக்கியங்கள் ஏற்படும். வியாபாரம் விருத்தியடையும். யோக்கியன் என்று பலர் மெச்சும்படி வாழ்வான். உத்தமர்களுடைய பிரியத்திற்குப் பாத்திரனுவன். இவனைப் பாதுகாத்துவரும் காளியம்மைக்கு மேலான திருப்பணிகள் செய்வான். முரட்டுத்தனமாயுள்ளவர்களும் இவன் வசப்படுவார்சள். இன்னும் சொல்லுகிறோம், கேள்.

44. கௌசிகர்இவ் வாறுசொல்ல கழறுவார் பராசர்தானும்
பவமுள புகரினேடு பரினுவும் கூடிநிற்க
நவமுள பலனைநீங்கள் நாட்டுவீர் என்றுகேட்கத்
தவமுனி சொல்லுகின்ருர் தயாபரி மேலுங்கேளே.

44. கௌசிகமுனிவர் இவ்விதம் சொல்ல, பராசரர் பின்வருமாறு வினவலுற்ருர். மேலான சுக்கிரனுடன் சூரியனும் சேர்ந்து நிற்க, இது

சம்பந்தமான நூதன பலன்கள் இருந்தால் சொல்லுங்கள், என்று கேட்க, தவமுனியும் சொல்லலுற்றார். தாயே! மேலுங் கேட்பாயாக.

45. தந்தைக்கு அலைச்சல்உண்டு தனமது விரயம்காணும்
பந்தமாய் வழக்குநேரும் பலபல விரோதம்உண்டு
சந்ததம் சூடுகாணும் தாய்க்குமே சொல்பரோகம்
வந்திடு மென்றுசொன்னோம் மங்கையே மேலுங்கேளே.

45. தகப்பனுருக்கு அலைச்சல் உண்டு. பணம் வீணாகச் செலவாகும். கட்டுப்பாட்டுடன் வழக்குகள் ஏற்படும். பற்பல விரோதங்கள் நேரிடும். அடிக்கடி சுரம் ஏற்படும். தாயாருக்கும் கொஞ்சம் வியாதிப்படுத்தும். இவைகளெல்லாம் நேரிடும் என்று சொன்னோம். மங்கையே! மேலுங்கேளே.

46. மாதுரு வர்க்கம்தன்னில் வரைகுறும் சூதகங்கள்
மேதினில் சாதகர்க்கு மிக்கதோர் தலையில்ரோகம்
கோதிலா ரோமரோகம் கொண்டிடு மிவனுக்கேதான்
மாதவா யிரண்டாம்பாகம் வரைகுறும் விபரமாக.

46. மாதாவின் குடும்பவழியில் ஆசௌசங்கள் ஏற்படும். ஜாதகனுக்குத் தலையில் கடுமையான ரோகமுண்டு. ரோமங்கள் சம்பந்தமான ரோகம் ஏற்படும். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் விவரமாக எடுத்துரைப்போம்.

47. போஜன சமயமாகப் புகருமே யிருப்பதாலே
தாசிதா சாளுமுண்டாம் சகடுவா கனமும்வாய்க்கும்
பாசமாய்ப் பணிகள்வாய்க்கும் பத்தினி தெய்வத்துக்குப்
பூசைகள் புரிவான்மேலும் புண்ணிய இச்சையுண்டாம்.

47. குடும்பஸ்தானத்தில் குடும்பாதிபதியாகிய சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரம் பெற்றிருப்பதனுலே, தாசி தாசர்களுமுண்டாவர். வண்டிகள் வாகனங்கள் வாய்க்கும். பிரியமான வேலைகள் ஏற்படும். பத்தினிக் கடவுளுக்குப் பூஜைகள் செய்வான். மேன்மேலும் புண்ணிய காரியங்களில் இச்சையுண்டாகும்.

48. அன்னங்கள் விரயமாகும் ஆவுகள் வந்துசேரும்
உன்னித தீர்த்தம்நேரும் உபதேசம் மிகவேஉண்டாம்
பன்னிய தானியங்கள் பாலர்கள் உண்டுமேலும்
பின்வந்தோர் துணைவருக்குப் பேசுவோம் சுபங்கள்தானே.

48. வந்த விருந்தினர்களுக்குச் சாப்பாடு போட்ட மணியமாயிருக்கும். பசுக்கள் விருத்தியடையும் மேலான தீர்த்தாடனங்கள் நேரும். பற்பல பெரியோர்களுடைய உபதேச மொழிகளைப் பெறுவான். பிரியப்பட்ட

தானியங்கள் விருத்தியாகும். புத்திர பாக்கியங்கள் ஏற்படும். இவனுடன் பிறந்த இளைஞர்களுக்குச் சுபங்கள் ஏற்படும் என்று பேசுவோம்.

49. பானு தசையில் பசுநஷ்டம் தந்தைகண்டம்
தேன்மொழியாள் வர்க்கத்தில் சேதமாம்—ஈனர்களால்
தனம்விரயம் காணுந்தன் தேகம் சூடுண்டாம்
அனைவருமே விரோதப் பகையாம்.

49. அடுத்து வரும் சூரிய தசையில் பசுக்கள் நஷ்டமடையும். தகப்பனுருக்குக் கண்டம் ஏற்படும். பெண்டாட்டியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சேதமடைவார்கள். அல்ப மனிதர்களால் பண நஷ்டம் ஏற்படும். தேகத்தில் ஜுரம் காணும். யாவரும் விரோதங்கொண்டு பகைமை காட்டுவார்கள்.

50. கண்ணோய் சுரம்திரிச்சல் களவுண்டு காரிழையாய்ப்
புண்ணோய் மனக்கலக்கம் பொருந்துமே—மண்ணிலுல்
கோள்கலகம் நேர்ந்துபின்பு கூடிவரும் யாவத்தும்
வாள்விழியாள் ஸ்ரீபீடை வாய்க்கும்.

50. கண்ணில் வியாதி, சுரத்தினுல் பீடை, திருட்டுப்போதல், இவைகள் உண்டு. பெண்டாட்டியின் தொந்தரவுண்டு. இதனுடன் மனக்கலக்கம் வந்து சேரும். சில விஷயங்களால் கோள், கலகம் நேரும். பிறகு நன்மையாய் முடியும். எல்லாம் பெண்டாட்டியின் துன்பவசத்தினுல் நேரிடும்.

51. முனிவர்இவ் விதமாய்க்கூற மொழிகுவார் பராசர்தானும்
கனிவுடன் இரவியோடு கனபுகர் கூடிநிற்க
அனையவே பலனைநீரும் அரைகுவீர் என்றுகேட்க
சினமிலாப் பராசருக்குச் செப்புவார் முனிவர்தானும்.

51. தவமுனிவர் இவ்விதம்கூற, பராசரர் பின்வருமாறு சொல்லலுற்றூர். சூரியனுடன் சுக்கிரனும் கூடிநிற்க, இன்னும் மற்றப் பலன்களைச் சொல்லுங்கள் என்று கேட்க, முனிவரும் பதில் கூறலானுர்.

52. ரவிதசை முன்பாகத்தில் இடறுகள் அதிகமுண்டு
திறமையாய்ப் பின்பாகத்தில் செப்புவோம் சுபபலன்கள்
பெருமையாய்ப் பூமிலாபம் புண்ணிய தீர்த்தம்நேரும்
அருமையாய்த் தந்தைக்கேதான் அறைகுறேம் கெண்டம்
[தானே.

52. சூரியதசை முன்பாதியில் இடையூறுகள் அநேகம் ஏற்படும். பிற்பாதியில் சுபமான பலன்கள் நேரும் என்று சொல்லுவோம். பெருமை

யடைவான். பூமிலாப மடைவான். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்வான். அருமையான தர்தைக்குக் கண்டம் ஏற்படும்.

53. பகைவரும் உறவுகொள்வார் பசுவுகள் விருத்தியாகும்
சுகமாகும் மாதுருவும்தான் துணைவர்க்குப் புத்திரவிருத்தி
அகமது புதிதாய்நேரும் அனேகரும் வசியமாகும்
தகமையாய் ஆட்கள்விருத்தி தனமது விசேஷமுண்டாம்.

53. விரோதிகளும் நேசமாவர். பசுக்கூட்டங்கள் விருத்தியாகும். மாதா சௌகர்யமாயிருப்பாள். சகோதரர்களுக்குப் புத்திர விருத்தி ஏற்படும். வீடு புதிதாய்க் கட்டலாகும். பலரும் வசியமாவார்கள். மேன்மையாய் ஆட்கள் விருத்தி ஏற்படும். விசேஷமான தனம் ஏற்படும்.

54. மதிதசைப் பலனையாங்கள் வரைகுறேம் புத்திரவிருத்தி
நிதியினுல் பூமிசேரும் நினைத்தகா ரியங்களாகும்
பதியினில் திருவும்சேரும் பகைவெல்லும் தொழிலாள் [லாபம்
சதமுடன் சகடுவாய்க்கும் தனதானிய மிகவேஉண்டாம்.

54. அதற்குப் பிறகு அடுத்த சந்திரதசையின் பலனை நாங்கள் கூறுவோம். புத்திர பாக்கியம் ஏற்படும். பண விருத்தியின் காரணமாக நில பலங்கள் சேரும். நினைத்த காரியங்கள் கைகூடும். வீட்டில் லட்சுமி கடாக்ஷம் ஏற்படும். பகைவரை வெல்லுவான். தொழிலாளர்களால் லாபமேற்படும். ஒழுங்காக வண்டி வாகனங்கள் ஏற்படும். தனதானியங்கள் விருத்தியாகும்.

55. தன்மனை [1]மெத்தையாகும் தலங்களும் தீர்த்தம்தோய்வன்
அன்புள்ள மாதுர்கெண்டம் அவன்துணைவர் களும்வேறும்
என்திடம் பெருமைகாணும் இவன்மனை யாளுக்கேதான்
பந்தமாய்க் கர்ப்பநோயால் பகையுண்டு நீங்குந்தானே.

55. தன்வீடு மாடிவீடாகும். திவ்ய ஸ்தலங்களைப்போய்த் தரிசிப்பான். நல்ல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்வான். அன்புடைய மாதாவுக்குக் கண்டம் நேரிடும். சகோதரர்கள் பிரிந்து போவார்கள். திடமான பெருமை வாய்க்கும். இவன் மனைவிக்குக் கர்ப்பசம்பந்தமான வியாதி ஏற்பட்டு இடைஞ்சல் நேரிடும். பிறகு நிவிர்த்தியாகும்.

56. வாகன பயமும்நேரும் வரும்பகை பூமியாலும்
பாகமாய்ச் செட்டுவாலே பாரினில் நஷ்டம்எய்தும்
தோகையர் கண்கள்நோயாம் சுகமில்லை புத்திரர்கஷ்டம்
வேகமாய் அலைச்சல்உண்டு மெல்லியே மேலுங்கேளே.

1. மாடி

56. வாகனங்களில் செல்லும்போது இடைஞ்சல் ஏற்படும். நில சம்பந்தமான பகைமை ஏற்படும். செய்யும் வியாபாரத்தில் நஷ்டமேற்படும். ஸ்திரீகளுக்குக் கண்ணோயுண்டு. சுகமிருக்காது. புத்திரர்கள் இறந்துபடுவார்கள். அடிக்கடி அலைச்சல் திரிச்சலுண்டு. மேன்மையுடைய பார்வதியே! கேட்பாயாக.

57. துன்பங்கள் நடக்கும்போது சொல்லுவேன் சாந்திஒன்று
அன்புள்ள குலதெய்வத்துக் கருச்சித்துத் தீபம்வைக்க
இன்பங்கள் மிகவேஉண்டாம் இதுவலால் இன்னம்
[சொல்வேன்
செம்மைவேல் உடையோனுக்குத் தினம்தீபம் அருசித்தா
[லும்,

57. இப்பேர்ப்பட்ட துன்பங்கள் நேரிடும்போது சாந்தி (பரிகாரம்) ஒன்று கூறுவோம். அன்பான குலதெய்வத்திற்கு அருச்சனை அபிஷேகம் செய்து, விளக்கேற்றி வைத்து வழிபாடுகள் செய்தால் இன்பங்கள் மிகுதியாக ஏற்படும். இது நீங்கலாக, இன்னமும் சொல்லுவோம். செம்மையாய் வெற்றிவேல் முருகனுக்குத் தினசரி தீபமேற்றி அருச்சனைகள் செய்திட்டாலும்,

58. வரும்துன்பம் யாவும்நீங்கும் வரைகுறேும் இதன்மேலாகத்
தருகுசன் திசையிலேதான் சகலபாக் கியமுஞ்சேரும்
பெருகிடும் கீர்த்திதானும் புண்ணிய மதிகமாகும்
வரவர செல்வம்ஓங்கும் மங்கையே மேலுங்கேளே.

58. ஏற்படும் துன்பங்களெல்லாம் நீங்கும் என்று சொல்லுவோம். இதற்குமேலாய் வரும் செவ்வாய் தசையில்தான் சகல பாக்கியங்களும் சேரும். புகழ் பெருகும். புண்ணியம் மேலோங்கும். வரவர செல்வ விருத்தி ஏற்படும் தாயே! மேலுங்கேட்பாயாக.

59. செய்தொழில் செட்டுஓங்கும் தீரமாம் மனங்கள்உண்டாம்
ஐயமில் லாமலேதான் ஆள்காரர் பூமியோங்கும்
கையில்வேல் உடையோருக்குக் கனத்ததோர் பணிகள்
[செய்வன்
உய்யவே மனைவிகட்கு உயர்ந்தபூ ஷணமுஞ்சேர்ப்பன்.

59. செய்யும் தொழிலும், வியாபாரமும் விருத்திக்கு வரும். திடமான தைரிய எண்ணங்கள் உதிக்கும். சந்தேகமில்லாமலே ஆள்காரர் விருத்தியாவர். நிலங்களும் விருத்தியாகும். வேல் முருகனுக்கு மதிப்பான திருப்பணிகள் செய்வான். மனைவிக்கு உயர்ந்த பூஷணங்கள் வாங்கிச்சேர்ப்பான்.

60. கரும்பாம்பு தசைக்காலத்தில் கனத்திடும் செல்வமெல்லாம்
பெருமையும் புகழுமுண்டு புரவலர் நேசம்கொள்வார்
அருமறை யவர்கள்தன்னால் அனேககா ரியமும்ஆகும்
பெரும்படை யாவும்வெல்லும் புண்ணிய மதிகநேரும்.

60 அடுத்த இராகு தசையில் செல்வங்களெல்லாம் தழைத்தோங்கும். பெருமையும் புகழும் ஏற்படும். அரசர்களுடைய பிரியத்தையும் சம்பாதிப்பான். வேதமோதும் வேதியர்களால் அநேக தெய்விக காரியங்களை முடித்துக் கொள்ளுவான். எதிர்ப்புக்களையெல்லாம் ஜயிப்பான். புண்ணிய காரியங்களை மேன்மேலும் செய்வான்.

61. சத்துரு வணங்கவாழ்வான் சகலரும் உறவேயாகும்
பத்திகள் அதிகம்நேரும் பாக்கியம் மிகவேஉண்டாம்
நித்திய இராகமாகும் நிருபனும் பித்தநோயால்
வித்தக னுடலம்வாடும் மெல்லியே மேலுங்கேளே.

61. சத்துருக்கள் வணங்கும்படி வாழ்ந்து வருவான். யாவரும் சினேகராவர். பக்தி மார்க்கங்கள் அதிகமாகும். அநேக பாக்கியங்களை அடைவான். சதா சந்தோஷத்திலே மூழ்கி இருப்பான். ஜாதகனும் பித்த சம்பந்தமான வியாதியின் காரணமாக உயிர் துறப்பான். மெல்லியவளே! மேலும் கேட்பாயாக.

(மற்ற சங்கதி விபரமாக இரண்டாம் பாகத்தில் தெரியலாம்.)

ஜாதகம் 29

1. மதிகோலில் காரிதேளில் மால்குசன் புகருமேரு
உதயனும் ராகுமானில் உயர்ஞானி[1] அலவன்[2] புக்க
நிதிகுரு கன்னியாக நிகழ்த்துவோம் சென்மம்கொச்சை
யிதுவித கோளும்நின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரன் துலாத்திலும் சனி விருச்சிகத்திலும், புதன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் தனுசிலும், சூரியனும் ராகுவும் மகரத்திலும், கேது கடகத்திலும், குரு கன்னியிலும் தங்கும்படியான இந்த கிரக நிலை கொண்ட மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுவீர்.

	லக்கினம்		
	இராசி சக்கரம்		கேது
சூரியன் ராகு			
புதன் செவ்வாய் சுக்கிரன்	சனி	சந்திரன்	குரு

2. மங்கையும் கேட்கும்போது மாமுனி புகலுகின்றார்
இங்கிவை ஆண்பால்சென்மம் யிவன்தந்தை யில்லம் [சொல்வேன்
செங்கதிர் வீதியாகும் தெருவாசல் வடபால்நோக்கம்
சங்கரன் கிழமேல்தங்கும் அளகேசன் நகரமொப்பாம்.

2. இப்படி பார்வதிதேவி கேட்கும்போது முனிபுங்கவர் சொல்லலுற்றார். இஃது ஆண்பால் ஜன்மம். இவனுடைய தகப்பனின் வீட்டின் விவரம் கூறுவோம். கிழக்குமேற்கு வீதியாகும். வடக்குப்பார்த்த வீடு. கீழ்மேலில் சங்கரன் கோவில். அளகாபுரிபோன்ற பட்டணம்.

3. பலசாலி அவ்வூர்வாசம் பருத்ததோர் செட்டுஓங்கும்
பலதேவர் வாசமாகும் பாராளு மன்னர்வாசம்
குலவிய அடையாளத்துள் குழவியும் சேஷ்டனாகும்
குலமது கௌரிவர்க்கம் கூறுவோம் தாயேயாங்கள்.

---

1. கேது
2. கடகம்

3. பலிஷ்டர்கள் வசிக்கும் ஊராகும். பலமான வியாபாரங்கள் நடந்து விருத்தியாகும். பல தெய்வங்கள் வசிக்கும் காற்றேட்டமான ஊர். உலகில் ராஜ்ஜியபாரம் வகிக்கும் மன்னர்கள் வசிக்கும் ஊர். இப்படிப்பட்ட இடத்தில் நம் ஜாதகன் ஜேஷ்டனுயவதரிப்பான். கௌரிவர்க்கத்தில் உதிப்பான் என்றும் கூறுவோம்

4. இன்னவன் செனனயோகம் எழில்பெறும் தந்தையோகம்
மன்னிய அன்னையோகம் வரும்துணை களத்திரபுத்திரர்
முன்பின்சென் மங்கள்யாவும் உரைக்குறேம் இந்நூல்
[தன்னில்
உன்னத தவங்கள்செய்யும் உத்தமி கேட்டிடாயே.

4. இவனுடைய யோகபாவங்கள், புகழ்பெற்ற தந்தையின் யோகம், பொருந்திய தாயின் யோகம், ஏற்படும் மனைவி மக்கள் யோகம், இவனுடைய முன்பின் ஜன்மபலன்கள் இவைகள் எல்லாவற்றையும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். மேலான தவங்களைச் செய்யும் உத்தமியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணையாண்ஒன்று சக்தியுமவ் வாறுதீர்க்கம்
முந்திடு மற்றதெல்லாம் நுகர்ந்தஆண் இளையானுகும்
அந்தவன் சேதிசொல்வேன் அரசனுல் தொழிலுமேற்பன்
தந்திர மொழியுமுண்டு தனமது சேர்ப்பானுகும்.

5. தந்தையுடன் பிறந்த சகோதரன் ஒருவன் உண்டு. சகோதரியும் ஒருத்திதான். மற்றவர்கள் எல்லாரும் இவனுக்கு முன் பிறந்தவர்கள். பிரகிருதம் பேசப்படும் ஜாதகன் இளையவனுவன். அவனுடைய செய்தி விவரங்களைச் சொல்லுவோம் அரசாங்கத்தில் தொழில் செய்வான். தந்திரமாகப் பேசக்கூடியவன். பணத்தைச் சேர்த்துவிடுவான்.

6. சிலகாலம் வெளியூர்வாசம் சேவகத் தொழிலும்செய்வன்
பலர்களை வசியம்கொள்வன் பத்தினி ஒன்றேயாகும்
கலகத்தைக் கூறுநெஞ்சம் கரமதில் விஷ்ணுரேகை
விலைமாதர் மோகம்கொள்வான் விகடவார்த் தைகளும்
[கூர்வன்.

6. சிலகாலம் வெளியூர் சென்று சேவகத்தொழில் செய்வான். பல பேர்களைத் தன் வசப்படுத்துவான். பெண்டாட்டி ஒருத்திதான். மனதில் கலகசிந்தனை கொண்டவன். கையில் விஷ்ணுரேகையை யுடையவன். தேவடியாள்பேரில் மோகம் கொள்ளுவான். வேடிக்கையான வார்த்தைகளைச் சொல்லுவான்.

7. சுதர்களும் ஆண்பால்மூன்று தோகையர் இருவர்தீர்க்கம்
வதிபனும் வறுமைகாணு வயதுமே தீர்க்கமெய்தும்
விதியது செலவுசெய்யான் நிர்ணிப்பான் கட்டுவார்த்தை
அதிதிபோல் வெளிமயக்கன் அம்பிகை யாளேகேளாய்.

7. ஆண் குழந்தைகள் மூன்று பேர். பெண் குழந்தைகளில் இரண்டு பேர்கள் தீர்க்கம். ஜாதகன் தரித்திரத்தை அனுபவியான். தீர்க்காயுசு கொண்டவன். கங்குகரையில்லாமல் செலவு செய்வான். பொய்வார்த்தைகளைக் கண்டுபிடிப்பான். அதிதியைப்போல் வெளிக்கு ஆர்ப்பாட்டமுடையவன். அம்பிகையே! கேட்பாயாக.

8. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சரசமாய் வார்த்தை [கூர்வன்
தன்மனம் கபடுமில்லான் சான்றோர்கள் பக்திபூண்பன்
தந்தமும் தரளமொக்கும் சமர்த்ததாக வார்த்தைசொல்வன்
தன்பந்து மெச்சவாழ்வன் தனம்சேர்ப்பன் செலவு [செய்வன்.

8. இவனுடைய தகப்பனாரின் குணங்களை விவரிப்போம். சரசமாய்ச் சம்பாஷிப்பான். மனதில் கபடமில்லாதவன். புத்திசாலிகளுடன் சிநேகம் செய்வான். முத்துப்போன்ற பற்களை யுடையவன். சாமர்த்தியமாய்ப் பேசவல்லான். தன்னுடைய பந்துஜனங்கள் மெச்சும்படி வாழ்வான். பணத்தையும் சேர்ப்பான். செலவுகளும் செய்வான்.

9. உண்டியும் சுகமாய்க்கொள்வன் உவமையாய் வார்த்தை [கூர்வன்
அண்டினோர் தம்மைக்காப்பன் அதிசய வார்த்தைகூர்வன்
வண்டிவா கனமுமேற்பன் மாற்றலர் களைசெயிப்பன்
துண்டமாய்க் கூறுனுகும் தொடுத்ததை வெல்வானுகும்.

9. சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான். திருஷ்டாந்தங்களுடன் வார்த்தைகள் சொல்லுவான். அண்டினபேரை ஆதரிப்பான். ரகசியமாய்ப் பேசுவான். ஆச்சரியப்படும்படி பேசுவான். வண்டிகளும் வாகனங்களும் உடையவன். பகைவர்களை ஜயிப்பான். கண்டிப்பாய் எட்டிக்குப்போட்டி என்று பேசமாட்டான். எடுத்த காரியத்தைச் சாதிப்பான்.

10. அரசர்பூ சிதமுமேற்பன் அதிகாரத் தொழிலுமேற்பன்
நரைமலர் இஷ்டம்கொள்வன் லண்டர்க்கு மிண்டனுவன்
கரமதில் சங்குசக்(க)ரம் கலந்திடும் கோதுமைரேகை
அரசனுல் தொழிலுமேற்பன் ஆயுசு உள்ளமட்டும்.

10. அரசர்களால் கௌரவிக்கப்படுவான். அதிகாரமுள்ள உத்தியோகத்தை வகிப்பான். வெள்ளை மலர்களில் பிரியமுடையவன். எதிர்ப்பவர்களை எதிர்த்து வாதம் செய்வான். கையில் சங்கத்தையும் சக்கரத்தையும் உடையவன். அதனுடன் தானியரேகையு முடையோனுவன். ஆயுள் முடிய அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவான்.

11. மாந்தனை நாளேயாகும் மான்ராசி உதிப்பானுகும்
கூர்ந்துமே வார்த்தைகூர்வன் கோதையர் மோகனுவன்
காந்தம்போல் புத்திஏற்பன் கார்நிறம் நீட்சியாவன்
ஊனமில் லாததேகி உத்தமி கேட்டிடாயே.

11. சனிவாரத்தில், மகாராசியில் உதிப்பவனுகும். யோசித்து ஆழ்ந்த கருத்துக்கொண்ட வார்த்தைகளைக் கூறுவான். ஸ்திரீகள்மேல் மோகம் கொள்ளுவான். சொல்வதற்கு முன்னுல் சமாசாரங்களை மனதில் பதிய வைத்துக்கொள்ளுவான். காந்தம் இரும்பை இழுப்பதுபோல் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளுவான். கருநிறமுள்ளவன். தீர்க்காயுசுள்ளவன். உயரமாயிருப்பான். வாட்டசாட்டமான உடம்புள்ளவன். உத்தமி! இதைக் கேட்பாயாக.

12. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே உதிப்பானுகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் கல்வி
[மேன்மை
அன்னையின் வர்க்கம்தன்னில் அணுகியே சிலநாள்வாசம்
அன்னையாள் சுகமிலாதாள் ஆதியில் அனம்குறைச்சல்.

12. இப்படிப்பட்ட குணங்களை உடையவனுக்கு ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணுதிசயங்களை விவரிப்போம். நல்ல வசீகரமான அழகு பொருந்தியவன். நல்ல படிப்பாளி. தாயாருடைய சொந்தக்காரர்கள் வீட்டில்போய்ச் சிலகாலம் வசிப்பான். தாயார் சரீர சௌக்கியமில்லாதவள். ஆரம்பத்தில் சாப்பாட்டுக்குக் கஷ்டம்தான்.

13. அன்னிய பாஷைமேன்மை அரசனுல் தொழிலும்வாய்க்கும்
மன்னர்பூ சிதனுமாவன் வருவோரை ஆதரிப்பன்
பொன்னது சேர்ப்பானுகும் புகழது ஏற்பானுகும்
பண்ணுவான் ஞான நூலைப் பங்கய ரேகையுண்டு.

13 அன்னியர்களுடைய பாஷையில் தேர்ச்சிபெற்று அரசாங்கத்தில் உத்தியோகமும் கிடைக்கும். மன்னர்களால் கௌரவிக்கப்படுவான். விருந்தினரை ஆதரிப்பான். (பொன்) செல்வத்தைச் சேர்ப்பான். கீர்த்தியையும் அடைவான். வேதாந்தவிசாரம் செய்வான். கையில் பத்மரேகையுடையவன்.

14. தந்தைநாள் பூமியில்லான் தரணிகள் இவனேசேர்ப்பன்
பந்தினர் மதிக்கவாழ்வன் பஞ்சணை மெத்தையுண்டு
செந்திரு விலாசமுண்டு சிலகாலம் வெளியூர்வாசம்
முந்துமால் பத்திகொள்வன் மூலகூ டுடையனுகும்.

14. தகப்பனுர்காலத்தில் பூமி என்பதே கிடையாது. பூஸ்திதிகள் இவனே சம்பாதித்துச் சேர்ப்பான். பந்துஜனங்கள் மதிக்கும்படி வாழ்வான். பஞ்சுமெத்தையில் சயனிப்பான். இலட்சுமீகடாட்சமுமுண்டு. சிலகாலம் அன்னிய நாட்டில்போய் வசித்து வருவான். திருமாலிடத்தில் பக்தி பூண்டவன். மூலச்சூட்டினுல் வருந்துவான்.

15. பரிவண்டி உடையனுகும் பால்பாக்கியம் விருத்திசெய்வன்
குறையென்ருேர்க் குதவுவானும் கொடுமையை வெளிக் [காட்டாதான்
இருஇல்லம் செய்வானுகும் யிவன்தந்தை மேலாய்வாழ்வன்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

15. குதிரைபூட்டிய வண்டியை உடையவன். பால் பாக்கியத்தை அதிகரிப்பான். இல்லையென்ருேர்க்கு ஒத்தாசை செய்வான். மனதிலிருக்கும் கொடுமையைப் பிறர் அறியும்படி செய்யமாட்டான். வசிக்க, சொந்தத்தில் வீடு கட்டுவான். தந்தையைக் காட்டிலும் மேலாக வாழ்வான். விக்கினேசுவரரைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

16. தன்துணை தோஷமெய்தும் சாற்றுவீர் அந்தசங்கை
புன்மையாய்க் கேதுநாலில் தோன்றின பலத்தினுலே
அன்னையும் ஆண்டுள்மாள்வள் அவன்தங்கை உடனே [சேர்வள்
பின்மாதா வாகநேரும் பேசுவீர் அன்னைசேதி.

16. தன்னுடைய துணைவன் தோஷமடைவான். அந்தச் சங்கையின் காரணம் என்ன? சொல்லுங்கள். மாதுர்ஸ்தானத்தில் அஃதாவது இலக்கினத்திற்கு நாலாமிடத்தில் கேது சிறுமையுடன் இருப்பதனுல், அதன் காரணமாகத் தாயாரும் அல்பாயுளில் இறப்பாள். அவன் தங்கையும் அந்த வழிக்கு உடனே சொல்லுவாள். பின்பு ஏற்படும் மாதாவின் செய்தியைக் கூறுங்கள்.

17. அன்னையும் சிவந்தமேனி அழகுளாள் கல்விமானும்
அன்னமும் அன்பாயீவள் ஆளன்தன் மனதுக்கொத்தோள்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடிசிலுக் கினியளாகும்
அன்னியர் மதிக்கவாழ்வள் அணுகிடும் பித்தகூடு.

17. அவள் சிவப்பு நிறமுடையவள். அழகுடையவள். படித்தவள். விருந்தினருக்குப் பிரியமாய்ச் சாப்பாடு போடுவாள். புருஷனிடம் குறிப் பறிந்து நடப்பாள். பிறரைப்பற்றிக் குற்றமாய்ப் பேசமாட்டாள். சமையல் செய்வதில் கெட்டிக்காரி. பிறர் மதிக்கும்படி வாழ்வாள். பித்தகுட்டினால் வருந்துவாள்.

18. தன் துணை ஆண்பால்காணுள் சக்திமார் இருவர்தீர்க்கம்
அன்னையில் வடகீழாகும் அறைகுறோம் யிவள்முன் [சென்மம்
தென்திசை பெண்ணைஓரம் செனித்தனள் சைவசேயாய்ப்
பொன்பணி உடையளாகிப் பெரிதான குடும்பம்பெற்று,

18. உடன்பிறந்தவர்களில் ஆண்பால் இல்லை. இரண்டு சகோதரிகள் தீர்க்கமாயுண்டு. அவளுடைய தாயாரின் வீடு வடகிழக்கே யுள்ளது. இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். தெற்குத்திக்கில் பெண்ணையாற்றின் ஓரத்தில் சைவக்குழந்தையாய் ஜனித்தாள். பொன், பூஷணங்கள் இவைகளையுடையவளாகிப் பெரிய குடும்பத்தைப்பெற்று,

19. வாழ்நாளில் வினையைக்கேண்மோ மைத்துனன் மனைவி [பேரில்
தாழ்வான வார்த்தைசொன்னாள் சக்தியும் மனவெறுப் [பால்
பாழான வார்த்தையென்மேல் பகர்ந்திட்ட பாவிக்கேதான்
ஆழியில் அன்னம்குரைச்சல் அணுகாது துணைவர்தானும்.

19. வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பீராக. மைத்துனனுடைய மனைவியின்மேல் இளப்பமான வார்த்தைகளைப் பேசினாள். அவளும் மனம் வெறுப்புக்கொண்டு, என்னைப் பார்த்துப் பாழான வார்த்தைகளைச் சொன்ன பாவிக்கேதான் உலகில் போஜனம் அற்பமாகும். உடன்பிறந்தவர் இருக்கமாட்டார்கள்.

20. மற்றொரு சென்மம்தன்னில் வாண் துணைக் காணாளாகிக்
குற்றமாய்ச் சுதர்பெண்ணின்றிக் குலமதில் நிந்தையாவும்
வித்தகிஇவ் வாறுசொல்ல மேவிற்று அந்தசாபம்
பத்தினிக் கந்தம்தன்னில் பருத்ததோர் வாய்ப்புண்கண்டு,

20. அவ்விதமே அடுத்த ஜன்மத்தில் ஆண் சகோதரரில்லாமல், தன்னுடைய குடும்ப அபிவிருத்திக்குப் பெண் குழந்தையுமில்லாமல் பிறர் நிந்திப்பார்கள் என்று அம்மாது சபிக்க, அச்சாபம் இவளை வந்தடைந்தது. அந்தச் சாபத்தின் காரணமாய் இப்பத்தினிக்குக் கடைசி காலத்தில் வாயில் புண் தோன்றி,

21. மரலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டு
அரிவையும் உதித்தாளென்றோம் அணுகிற்று மாதுர்சாபம்
வரும்துணை ஆண்பால்தோஷம் மாதுரு பிணியுமாகும்
இருநான்கு திங்கள்தன்னில் ஏகுவாள் காலநாடு.

21. எமலோகம் சென்று, திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, இவளும் உதிக்கலானாள். அப்போது அம்மாதுவின் சாபம் இவளைச் சார்ந்தது. ஏற்பட்ட சகோதரனுடைய தோஷத்தால், மாதாவுக்குப் பிணியும் ஏற்பட்டது. அதன் காரணமாய் அவள் எட்டுமாதத்திற்குள் எமலோகம் செல்லுவாள்.

22. மருசென்மம் கலிங்கநாட்டில் மறைகுலம் உதிப்பாளாகும்
திருமகள் விலாசம்பெற்றுச் சேல்விழி வாழ்வாளாகும்
உரைகுறோம் தந்தைபூர்வம் உயர்பாண்டி நாட்டிலேதான்
திருவில்லா க்ஷத்ரியசேயாய்ச் செனித்துமே செட்டுச்செய்து,

22. அடுத்த ஜன்மம் கலிங்கதேசத்தில் பிராமணகுலத்தில் உதிப்பாள். லட்சுமீகடாக்ஷம் பெற்று இந்த அழகி வாழ்வாள். தந்தையின் பூர்வோத்தரங்களை உரைக்கிறோம். மேன்மைமிக்க பாண்டியநாட்டிலே குற்றமற்ற க்ஷத்திரியவமிசத்தில் உதித்து, வியாபாரம் செய்து,

23. பெரிதான குடும்பியாகிப் பேதையும் மதலையுண்டாய்த்
திருமகன் வாழும்நாளில் செய்ததோர் வினையைக்கேண்மோ
வறுமைகள் கொண்டஏழை மைந்தர்க்கு மணங்கள்
[வேண்டித்
தருகுவாய் முத்திரைஎன்று சாற்றிடத் தாரேனென்றான்.

23. பெரிய குடும்பியாகி, பெண்டாட்டியும் பிள்ளையும் உண்டாயிருக்கும் காலத்தில், இவன் செய்த ஒரு வினையைக் கேளுங்கள். வறுமைப் பிணியால் வாடும் ஓர் ஏழை தன் குழந்தைகளின் கலியாணத்தின் காரணமாய் ஒரு முத்திரையிட்ட பத்திரம் கொடுத்து உதவிகேட்க, தருவதாக பதிலளித்தான்.

24. மற்றது சேகரித்தும் அடுத்தநாள் முத்திரைகேட்கக்
குற்றமாய் வார்த்தைசொல்லிக் குலவாது முத்திரையென்ன
வித்தகர் மனவெறுப்பால் விளம்புவார் சாபம்தானும்
பத்தினி யிரண்டுமாகும் பிறக்கும்பெண் சென்மந்தன்னில்,

24. பணத்தைச் சேகரித்து அடுத்தநாள் இவன் முத்திரையிட்டுத் தாவேண்டும் என்று யாசிக்க, குற்றமான வார்த்தைகளைச்சொல்லிப் பிரியமாய்ப் பேசாமல் முத்திரையில்லை என்று மறுக்க, ஏழை வித்தகர் மனவெறுப்புக்கொண்டு சாபம் கொடுத்தார். அது பின்வருமாறு :—உனக்கு பத்தினிகள் இருவர் ஏற்படுவர். ஏற்படும் பெண்ணானவள்,

25. இருமனை அணுகுமென்றும் ஏகுவாய் வெளியூர்தன்னில்
திருகிலா ஏழைசொல்லச் சேர்ந்தது அந்தச்சாபம்
மரலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டுப்
பெருமையாய் இக்குலத்தில் பிறந்தவ னிவனேயென்றோம்.

25. இரண்டு வீட்டில் புகுவாள் என்றும், நீயும் அன்னியதேசம் செல்லுவாய் என்று குற்றமற்ற ஏழையாயிருப்பவர் சொல்ல, அம்மாதிரியே அவர் சாபம் பலித்தது. எமலோகம் சென்று பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டுப் பெருமையுடன் இவன் இக்குலத்தில் பிறந்தான் என்று சொன்னோம்.

26. முன்சென்மம் ஏழைசாபம் மேவிடு மிச்சென்மத்தில்
தன்மனை யிரண்டுமாகும் தரணியில் வறுமைகாணுன்
பின்சென்மம் கொங்குநாட்டில் பிறப்பனும் க்ஷத்திரிய [சேயாய்க்
கன்னென மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

26. போன ஜன்மத்தில் ஏற்பட்ட ஏழையின் சாபம் இந்த ஜன்மத்தில் மேவியது. பெண்டாட்டிகள் இருவர் ஏற்பட்டனர். உலகினில் தரித்திர மனுபவியான். அடுத்த ஜன்மம் மலையாளத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான். இனியமொழி பேசும் பார்வதியே! கேட்பாயாக.

27. அத்திரி தடுத்துச்சொல்வார் அவனுமிச் சென்மந்தன்னில்
சுத்தமும் இல்லாதாகித் துன்பங்கள் சிலர்க்குச்செய்தும்
வித்தகன் பொருள்மேலிச்சை வீண்பழி சிலர்க்குச்செய்தும்
சத்தியம் தவ[றில்லாதும்](ருதலாலும்) செனிக்கும்கா
ரணங்களெ(ன்னே)வ்வாறு

27. இதனை அத்திரிமகரிஷி தடுத்துச் சொல்லுவார். அவன் இந்த ஜன்மத்தில் சுத்தமில்லாததனால் சிலருக்குத் துன்பங்கள் செய்தும், பொருள் மேலிச்சை கொண்டு சிலர்மேல் வீண் பழிகள் சொல்லியும், சத்தியம் தவருததாலும் இவ்வாறு ஜனித்ததன் காரணங்கள் யாவை?

28. பலவித வேலைசெய்தும் பகவானின் பக்திகொஞ்சம்
தலவாசம் சென்றதாலும் சலித்தோர்க்கு அன்னமீந்தும்
சிலர்க்குஆபத்தைக்காத்தும் செல்வனும் வாழ்வதாலே
குலவுவான் க்ஷத்ரியசேயாய்க் கொம்பனை யாளேகேளாய்.

28. பலவித வேலை செய்தும், கடவுளினிடத்தில் சிறிது பக்தி பூண்டும், க்ஷேத்திரங்கள் சென்று கடவுளைத் தரிசித்தும், பசியாயிருப் போர்க்கு அன்னமளித்தும், சிலருக்கு ஆபத்துக்காலத்தில் ஒத்தாசை செய்தும், இப்படியெல்லாம் வாழ்ந்து வரும்காரணத்தால், க்ஷத்திரிய குமாரனைப் பிறப்பான். பார்வதியே! கேட்பாயாக.

29. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் யீரொண்பாண்டில்
காதலி வடகீழ்நேரும் கழறுவோம் அவள்குணத்தைச்
சூதிலாள் ரதியொப்பாளாம் துர்வழக் கதனில்செல்லாள்
மாதவர்க் கன்னமீவள் மாரன்தன் மனதுக்கேத்தோள்.

29. ஜாதகனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பதினெட்டாவது பிராயத்தில் வடகிழக்கே இவனுக்குக் கலியாணம் ஏற்படும். அவளுடைய குணங்களைக் கூறுவோம். சூதுவாதில்லாதவள். ரதியைப் போல் அழகுடையவள். கெட்ட வம்புச்சண்டைகளுக்குப் போகமாட்டாள். தபசிகளுக்கு அன்னமீவள். புருஷன் மனம் கோணாதபடி நடப்பாள்.

30. தோகைபோல் சாயலொக்கும் தேவதா பக்திபூண்பள்
பாகமாய்ப் பேசவல்லள் பலகலை யுணர்வாளாகும்
ஆகமம் உணர்ந்தோருக்கு அன்னமும் அன்பாயீவள்
நாகரி கங்களுண்டு நாயகி வயதுதீர்க்கம்.

30. மயில்போன்ற சாயலையுடையவள். தெய்வத்தினிடத்தில் பக்தி பூண்டவள். பக்குவமாய் வார்த்தைகளைப் பேசும் சாமர்த்தியமுடையவள். பலவிதமான கலைஞானங்களை யுடையவள். சாஸ்திரம் படித்தறிந்தவர்களுக்கு அன்புடன் அன்னம் கொடுத்துதவுவாள். நாகரிகமாய் நடப்பாள். இவள் தீர்க்காயுசுள்ளவள்.

31. சுதர்களும் இருநான்காகத் தோன்றிடும் பாலனுக்குச்
சதமுடன் ஆண்பால்மூன்று சக்திமார் அவ்வார்தீர்க்கம்
அதமாகும் இரண்டுஎன்றேம் ஐந்தெட்டு மென்று [சொல்வோம்
நதிசடை யணிந்தோன்தேவி நவின்றது தப்பாதாகும்.

31. எட்டுக் குழந்தைகள் பிறக்கும். ஆண் குழந்தைகள் மூன்று. பெண்களும் மூன்று. இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். ஐந்து, எட்டு இந்த பிராயங்களில் இரண்டு குழந்தைகள் மரணமடையும். கங்கையைத் தலையில் அணிந்துள்ள பரமசிவனின் பார்யையாகிய பார்வதியே! நாங்கள் கூறுவது சத்தியம்.

32. முன்னவ னிருந்தசென்மம் மொழிகுறேம் [1]புலியூர்தன்னில்
வன்னிய குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாகிப்
பொன்னொடு பணிதிபெற்றுப் புகழ்ச்சியாய் வாழுநாளில்
பின்னமாய் வந்தவுழைப் பேசுவோம் தாயேகேளும்.

---

1. புலியூர்=சிதம்பரம். வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலால் இதற்கு இப்பெயருண்டாயிற்று.

32. இவன் போனஜன்மத்தில் இருந்ததைப்பற்றிக் கூறுவோம். சிதம்பரத்தில் வன்னியர் குலத்திலுதித்து, மனைவிமக்கள் உண்டாகி, பொன் பூஷணங்கள்பெற்று, கீர்த்திபெற்று வாழும்நாளில், இடைஞ்சலாய் ஏற்பட்ட ஊழ்வினையை எடுத்துரைப்போம். தாயே! கேளுங்கள்.

33. மறையவர் இருவர்தானும் வளைவினில்[1] விரோதமுற்று
அரசர்பால் புகலும்போது அவர்களில் ஒருவர்தன்பால்
திருகாகக் கட்டுவார்த்தை செப்பினான் சொல்லினாலே
குறைநேர ஒருவனுக்குக் கூறுவான் சாபம்தானும்.

33. இரண்டு பிராமணர்கள் வணங்குவதில் விரோதமுற்று, அரசனிடம் முறையிடுங்கால், அவர்களில் ஒருவர் சாமர்த்தியமாய்ப் பொய்வார்த்தை சொன்னார். சொன்னதனால் மற்றவருக்குக் குறைவு ஏற்பட, பின்வரும் சாபம் கூறலானார்.

34. காணாத வார்த்தைஎன்மேல் கண்டிதம் சொன்னபாபி
தோணும்பின் சென்மந்தன்னில் துணைகளு மில்லாதாகி
நாணியே ஒருவர்பக்கல் நற்றாயின் சுகமுமின்றிக்
காணவே வாழ்வாயென்று கழறியே தெருதூள்விட்டான்[2].

34. காணாத வார்த்தைகளை என்மேல் அனாவசியமாய்ப் பொய் சொல்லிச் சுமத்திய பாவிக்கு, அடுத்த ஜன்மத்தில் சகோதரரில்லாமல் வெட்கப்பட்டு ஒரு பக்கத்தில் ஒதுங்கவும், நல்ல தாயாருக்குத் தேகசௌக்கியம் இல்லாமலும் இளப்பமாய் வாழ்வாயென்று சொல்லி, தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தான்.

35. அந்தணர் சாபம்தானும் அணுகிடு மிச்சென்மத்தில்
தந்துணை காணாகும் தாயுமே ஆதி(யி)ல்மாள்வள்
பிந்திய அன்னைபக்கல் புக்கியே வாழ்வானாகும்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்றாது.

35. பிராமணனுடைய சாபம் இந்த ஜன்மத்தில் வந்து சேர்ந்தது. தன்னுடன் ஒரு சகோதரனும் காணவில்லை. தாயும் வியாதியினால் அல்பாயுளுடன் இறப்பாள். இளையதாயார் வீட்டில்போய் வாழ்ந்து வருவான். கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! சொன்ன வார்த்தைக்குப் பங்கம் வராது.

---

1. வணக்கம்
2. மண்ணை வாரி எறிந்தான்

36. பாலகன் யோகச்சேதி பகருவோம் இனிமேலாகச்
சீலவான் அரசர்மூலம் ஜீவனம் பெறுவானுகும்
ஞாலமேர் இருபதாண்டில் நல்கிடும் ராசயோகம்
ஏலவே அன்பாநாலில் ஆண்டுமட் டுய்வானென்றேம்.

36. இவனுடைய யோகபாவங்களைப்பற்றி இனிமேல் கூறுவோம். சீலமுடையவன். அரசர்மூலம் ஜீவனம் செய்வான். இருபதாவது வயதிற்கு மேல் ராஜயோகமேற்படும். அஃது ஐம்பத்துநான்கு வயது வரை நடக்கும்.

37. அதற்குமேல் மரணம்மட்டும் அரசனுல் உய்வானுகும்
தரணியை விருத்திசெய்வன் சகலசம் பத்துமுள்ளான்
திருமகன் வீடுபூமி செம்பொன்னே ழாயிரம்பொன்
குரைவிலா சேர்ப்பானுகும் கோதையே கேட்டிடாயே.

37. அதற்குமேல் மரணம் அடையும் வரை அரசனுடைய பிரியத்திஞல் ஜீவனம் செய்வான். பூஸ்திதியை விருத்தி செய்வான். சகல சம்பத்துக்களையு முடையவன். இவனுடைய வீடு, நிலம், பொருள், பொன் எல்லாம் சேர்ந்து ஏழாயிரம் பொன்னுக்குக் குறைவில்லாமல் சேர்ப்பான். பார்வதியே ! கேட்பாயாக.

38. நாற்பது நாலுஆண்டில் நவிலுவோம் தந்தைகெண்டம்
ஏற்கவே எழுபதாண்டில் இடபமா தத்திலேதான்
கூப்பிடு வானும்காலன் குறித்தசா தகனையேதான்
தீர்ப்பாக இவன்பின்சென்மம் செப்புவோம் இனிமேலாக.

38. இவனுடைய நாற்பத்துநான்காம் வயதில் தந்தையின் கண்டம் ஏற்படும். எழுபதாவது வயதில் வைகாசி மாசத்தில் எமன் ஜாதகனை அழைப்பான். இது நிச்சயம். பின்பு, இவனுடைய மறு ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம், இனி மேலாக.

39. உத்தரம் கோகர்ணத்தில் உதிப்பனும் க்ஷத்ரியசேயாய்
வித்தகன் செனனகாலம் விளம்புசேய்த் திசையிருப்பு
சுத்தமாய் ஆண்டிரெண்டு திங்களு மானதாகும்
பத்தின நாள்மூவைந்தும் பகர்ந்தனம் பூர்வபாகம்.

39. வடக்கே கோகர்ண க்ஷேத்திரத்தில் க்ஷத்திரியக்குழந்தையாய் இவன் மறுபடியும் ஜனனமாவன். அக்காலத்தில் இவனுக்குச் செவ்வாய் தசையில் இருப்பு வருடம் இரண்டு, மாதம் பத்து, நாள் பதினைந்து. இது வரை விவரமாய்க் கூறியது பூர்வபாகமாகும்.

ஜாதகம் 30

1. சந்திரன் சிகியும்கூடி சார்ந்திடத் தேளின்ராசி
மந்தனும் சிலையில்பற்ற[1] மால்புகர்[2] அரியைத்தாவ
அந்தணர் இரவிசேயும் அமர்ந்திட அலவறில்லில்[3]
சுந்தர கருங்கோல்புல்லம்[4] சுகித்திட [5]வருடைதோன்றில்.

1. சந்திரனும் கேதுவும் சேர்ந்து விருச்சிகராசியில் தங்க, சனி தனுசில் நிற்க, புதனும் சுக்கிரனும் சிம்மராசியில் அமர, குரு சூரியன் செவ்வாய் இவர்கள் சேர்ந்து சிம்மத்தில் தங்க, இராகு ரிஷபத்திலிருக்கும்படியான இப்படிப்பட்ட கிரக நிலை கொண்ட மேஷலக்ன ஜாதகத்திற்குப் பலன் உரைப்போம்.

	லக்கினம்	ராகு	
	இராசி சக்கரம்		குரு சூரியன் செவ்வாய்
			புதன் சுக்கிரன்
சனி	சந்திரன் கேது		

2. இத்தகை நவகோள்நின்று இருணிலம் உதித்தசேயும்
பெத்திடும் ஆண்பாலாகும் பேசுவோம் பலன்களெல்லாம்
ஒத்திடும் கீழ்மேல்வீதி உதிக்குமில் புத்திரனோக்கம்
அத்திமா முகனையீன்ற அம்மையே புகன்றிட்டோமே.

2. இப்படிப்பட்ட நவகிரகங்கள் கொண்ட ஜாதகன் ஆண்பாலாவன். அவனுடைய பலன்களையெல்லாம் சொல்லுவோம். கிழக்குமேற்கு வீதியில் உதிப்பான் இப்புத்திரன். விநாயகக்கடவுளை யீன்ற பார்வதியே! சொன்னோமே.

---

1. தனுர்ராசி
2. சிம்மம்
3. கற்கடகம்
4. இடபம்
5. மேடம்

3. இல்லத்தில் மீனதிக்கில் இலகிடும் அரனின்கோஷ்டம்
சொல்லுவோம் கணேசன்மேல்பால் துலங்கிடும் பலதே
[சூலும்
நல்லவா பேரூர்தென்பால் நலமுள நம்சேய்சேர்ந்தோன்
வல்லியே வேறொருவன்தங்கம் வளமுள கோஷ்டம்
[சொல்லே.

3. வீட்டின் மீனதிக்கில் (வடகிழக்கே) சிவன்கோவில். மேற்கே கணேசன் கோவிலும் மற்ற தேவர்களுடைய கோவிலும் உண்டு. இந்தப் பேரூரின் தெற்கே நமது ஜாதகன் இருந்தான். அம்பிகையுடைய கோவிலும் முருகனுடைய கோவிலும் தங்கத்தினால் விளங்கும்.

4. இவ்வித அடயாளத்துள் இலகிய சிற்றூர்தன்னில்
திவ்விய இந்தபாலன் செனிப்பனே மறையோன்சேயாய்
ஒவ்விய இவன்தன்யோகம் உரைத்திடும் பலன்களெல்லாம்
நவ்விய நவக்கோள்ஆய்ந்து நாட்டுவோம் இன்னூல்
[தன்னில்.

4. இப்படிப்பட்ட அடையாளங்கள்கொண்டு விளங்கிய சிறிய ஊரில், இந்த அழகுள்ள பாலகன் பிராமணக் குழந்தையாய் ஜனிப்பான். அழகிய இவனுடைய யோகபாவங்களைக் கூறும் பலன்களையெல்லாம் அருமையான நவக்கிரகங்களை ஆராய்ந்து நிலைநிறுத்துவோம், இந்தப் புஸ்தகத்தில்.

5. தந்தையின் வர்க்கம்ஆண்பால் சாற்றுவோம் நால்வராகப்
பிந்தியும் கன்னிஒன்று பேசுவோம் இதற்குமேலாய்
எந்தையே செனித்தபோதும் இலகிடா தென்றுசெப்புக்
கொந்தலர்க் குழலினாளே கூறிய மொழிகுன்றாது.

5. தந்தையுடன் பிறந்தவர் நால்வர் என்று கூறுவோம். பின்பு ஒரு தங்கையும் உண்டு. இதற்குப் பிறகு, நம் ஜாதகன் ஜனித்தகாலத்திலும் அப்படிக்கில்லை என்று செப்புவோம். மாலையணிந்த கூந்தலையுடைய பார்வதியே! சொன்ன வார்த்தையில் யாதொரு குறைவுமில்லை.

6. சாதகன் துணைகள்ஆண்பால் சாற்றுவோம் ஒருவனாகும்
போதவே கன்னிநான்கு புகன்றிடா யிதற்குமேலாய்க்
காதலி குழலினாளே கழறிய பாலன்தீர்க்கும்
சேதமாம் செனித்தபோதும் சிறந்திடா தென்றுசெப்பு.

6. ஜாதகனுடன் பிறந்த சகோதரன் ஒருவனே, சகோதரிகள் நால்வர். இதற்குப் பிறகு இவனுடைய ஆயுள் தீர்க்கம் என்று சொல்லலாம். மற்றவர்கள் ஜனிக்குங்காலத்திலே சேதமாவர். சிறந்து விளங்காரென்று சொல்லுவோம்.

7. இன்னவன் நிறமாலொப்பன் எழிலொரு சமமேதேகம்
சொன்னதோர் நீட்சிஇல்லான் சுகமுறும் பித்ததேகி
நன்னய தமி(ழு)[ழைக்]கற்பன் நலமிலா அன்னியபாஷை
அன்னையே கணக்கில்வல்லன் அமிர்தம்போல் வார்த்தை
[கூர்வன்.

7. இவன் கருநிறம் விளங்கும்படியான சமமான தேகமுள்ளவன். அவ்வளவு உயரமானவன் என்று சொல்லுவதற்கில்லை. சுகத்தை அனுபவிக்கும் பித்த சரீரமுடையவன். அருமையான தமிழ்மொழியைக் கற்பான். அன்னிய பாஷையில் அவ்வளவு நன்மையில்லை. தாயே! கணக்கில் வல்லவன். அமிர்தம்போன்ற இனியமொழிகளைக் கூறுவான்.

8. பொய்யுரை பகரான்மிஞ்சிப் புத்திநல் லறிவுமுள்ளான்
செய்யவே வாய்ச்சாலன்தான் சொல்லுமுன் கோபியாவன்
மொய்க்குழல் மிகுந்தமோகன் மூர்க்கரின் இணக்கமில்லான்
நையவே வார்த்தைசொல்லான் நாயகி யுரைத்திடாயே.

8. பொய்மொழி பேசமாட்டான். அதிகமான புத்தியும் நல்ல அறிவுமுடையவன். காரியத்திலே வாய்ச்சமர்த்தன். முன்கோபமுடையவன் என்று சொல்லப்படுவான் வண்டுகளை யொக்கும் கூந்தலையுடைய பெண்டாட்டியினிடத்தில் பிரியமாயிருப்பான். மூர்க்கரிடத்தில் நல்ல வார்த்தை சொல்லமாட்டான். தாழ்வான வார்த்தைகளைச் சொல்லான். நாயகியே! சொல்வாயாக.

9. நன்னய விவேகனாகும் நலம்மிகு சமர்த்தனுவன்
தன்மனக் கபடுகொஞ்சம் காரியம் கொள்ளவல்லன்
உன்மையாம் எதிரிக்கஞ்சான் புகலுவோம் நல்லோனுகி
இன்புறு அகதிகட்கு எழிலுடன் அன்னமீவன்.

9. நன்மையாயும் நயமாயுமுள்ள விவேகமுள்ளவன். நன்மையை மேன்மேலும் அடையும் சாமர்த்தியசாலி. மனதில் சிறிது கபடமுள்ளவன். காரியத்தை ஜயிக்கும் வல்லமை யுடையவன் சயவனுன பகைஞருக்கஞ்ச மாட்டான். நல்லவனுகி அகதிகளுக்கு அன்புடன் அன்னபானுதிகளை யளிப்பான் என்று சொல்லுவோம்.

10. அரசர்கள் நேயமுள்ளான் அடுத்திடும் பேரைக்காப்பன்
குறவுருச் செல்வனுகும் கூறினேம் செங்கைதன்னில்
திரமுள அரியின்ரேகை சேர்ந்திடு மென்றுசொன்னேம்
பிரபல முடனே இன்னேன் பலமுடன் வாழ்வானுமே.

10. ராஜாக்களின் சிநேகமுடையவன். அண்டினவரை ஆதரிப்பான். குறையாத செல்வத்தை யுடையவனுகும். செங்கைதனில் விஷ்ணுவின்

ரேகையை யுடையவன் என்று சிறப்பித்துக் கூறுவோம். பிரபலமாக இவன் சகல சௌபாக்கியத்துடன் வாழ்ந்து வருவானாகும்.

11. நித்திரை சுகமுமுள்ளான் நிமிஷத்தில் கோபம்ஆர்வன்
வெத்தியாய்த் தொடுவழக்கு விளங்கிட செயிப்பானம்மா
பத்தியாய்ப் பிறர்சொல்கேட்பன் பரியாச வசனனாகும்
நத்திடும் பேரைக்காப்பன் நக்கன்மேல் பிரீதிஉண்டே.

11. படுக்கை சுகமுடையவன். நிமிஷத்தில் கோபத்தை மன்னித்துக் கொள்ளுவான். எடுத்த வழக்குகளில் மேன்மை பெறும்படியான வெற்றியைப் பெறுவான். பிரியமாய்ப் பிறருடைய சொல்லைக் கேட்பான். பரிகாசமாய்ப் பேசவல்லான். சிநேகமாயிருப்பவர்களைக் காப்பாற்றுவான். பகவானிடம் பக்தி பூண்டவன்.

12. ஏற்றமாம் சொகுசனாகும் எவர்களும் நல்லோனென்பர்
நாற்றிசைக் கீர்த்திஏற்பன் நாடிய பேரைக்காப்பன்
பாற்றிபன் சங்கீதங்கள் பலவித இச்சையுள்ளான்
தோத்திரப் பிரியனவன் சோர்விலான் என்றுகூறே.

12. மேலான சொகுசுக்காரன். யாவரும் இவனை நல்லவன் என்று சொல்லுவார்கள். நான்கு திக்குகளிலும் புகழைப் பெறுவான். அண்டினவர்களைக் காப்பாற்றுவான். மேன்மைதங்கிய சங்கீதங்கள் பலவற்றில் இச்சையுடையவன். பிறர் தோத்திரஞ்செய்தால் சந்தோஷத்தை யடைவான். இவனுக்குச் சோம்பல் என்பதே கிடையாது.

13. அந்தமாம் தெய்வபக்தி அனுதினம் கருத்தில்கொள்வன்
வந்திடாக் கடினவார்த்தை வளமுள உரைப்பனாகும்
சுந்திரக் குழவிவிருத்தி தோகையே கொள்வோனாகும்
விந்தையாய் எவர்க்குமஞ்சான் விளங்கிடும் மனத்தனாமே.

13. சதா கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். அனுதினமும் கடவுளையே தியானம் செய்வான். கடினமான வார்த்தைகளைக் கூறமாட்டான். வளப்பம்பொருந்திய—அர்த்தபுஷ்டியுள்ள பேச்சுக்களையே பேசுவான். அழகான குழந்தைகள் பிறக்கும். பெண்களும் பிறக்கும். யாரிடமும் தைரியமாயிருப்பான். விளங்கும்படியான மனப்பான்மை யுடையவன்.

14. அன்னிய பிரபுநேயன் அலங்கார முடையோனாகும்
சொன்னதோர் வார்த்தைதப்பாம் துலங்கிடும் அடிமை
[யாள்கள்
நன்னய வெகுபேர்நேயன் அமர்ந்திடும் தர்மசிந்தை
இன்னவை முடையான்முன்னம் இருந்திடும் செனமம்
[சொல்வேன்.

14. அன்னிய தேசத்துப்பிரபுக்களுக்கு இஷ்டமானவன். அலங்கரித்துக் கொள்ளும் தன்மையுடையவன். எதிர்த்துப் பேசுவது தப்பாகும். அடிமை ஆட்களை யுடையவன். நன்மையாகவும் நயமாகவும் அநேகம் பேர்களைச் சிநேகம் சொள்ளுவான். தர்மஞ்செய்ய விரும்புவான். இவ்வளவு நல்ல குணங்களையும் நன்மைகளையு முடையவனுடைய முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம்.

15. சொல்லுவோம் இவன்முன்னால் இருந்தசென்மம்
தோகைகேள் திருப்பதியின் உத்திரநோக்கில்
சொல்லுவோம் சமவூரில் இந்தபாலன்
துலங்கிநிற்கும் வேதியரின் மரபில்தோன்றி
நல்லவாம் அப்பதியில் சனனமாகி
நான்மறையை அறியாமல் அதுவாருக
செல்லாமல் குலத்தின்முறைமை குன்றிச்
சீற்றமாம் புத்தியுடன் செட்டிதன்பால்;

15. கூறுவோம் இவனுடைய முன்ஜன்மத்தை. தாயே! கேட்பாயாக. திருப்பதிக்கு வடக்கே ஒரு சமவூர் உண்டு. அதில் இந்த பாலகன் பிராமணர் வமிசத்தில் உதித்தான். அது திவ்யக்ஷேத்திரம். வேதங்களை ஓதாமல் அவற்றின்படி ஒழுகாமல் பிரம்மகுலத்தின் முறைமையுமில்லாமல் கெட்ட புத்தியைக் கைக்கொண்டு ஒரு செட்டியினிடம்,

16. வந்தவனை நேசமதாய் வாணிபத்தில்
வகையறிந்து அயன் அறன்மால் பத்தியின்றிச்
சிந்தையிது சமலமாய்த் திறந்து முன்னோர்
செய்கையெல்லாம் தாம்மறந்து சிறப்புக்குன்றி
விந்தையதாய் இருந்ததனால் தோஷம்வந்து
வேதியரின் மரபதுவும் நழுவிப்பின்னும்
பந்தமுள்ள மதுவுமாங்கிஷம் அருந்தி
பாபமதற்குள்ளாகி பலனும்குன்றி,

16. அவனுடன் வியாபார விஷயங்களை அறிந்து பிரம்மா, விஷ்ணு இவர்களிடம் பக்தி இல்லாமல் சபலமான புத்தியுடன் திரிந்து முன்னோர்களின் பழக்க வழக்கங்களை யெல்லாம் மறந்து சீர்கேட்டு ஆச்சரியமான நடவடிக்கைகளுடன் இருந்ததனால் தோஷம் ஏற்பட்டு பிராமணியமும் போய்ப் பின்பு மது மாம்சாதிகளை அருந்திப் பஞ்சமாபாதகங்களுக்கு வசப்பட்டு யாதொரு நல்ல பலனுமில்லாமல்,

17. நந்திலா வேலாளுக நல்கியும் செனனமாகி
விந்தையாய்ப் பலமாய்ச் சாஸ்திரம் வீரியன் மிகவாய்த் [தேர்ந்து
சிந்தையில் தெய்வபக்தி செல்வனும் வெகுவாய்க்கொண்டு
அந்தணர் தமக்குப்பூசை அனுதினம் செய்துபின்னால்,

17. விருப்பமில்லாத வேற்படை தாங்கியவனுகிப் பிரம்மாவின் சிருஷ்டியால் ஜனித்தபோதிலும், ஆச்சரியப்படும்படியான சாஸ்திரங்களை இவ்வீரன் ஆராய்ந்து அதிகப்பயிற்சியடைந்து மனதில் தெய்வபக்தி மேலிட்டுச் செல்வங்களை வெகுவாய் அடைந்து பிராமணர்களுக்குப் பூசை தினசரி செய்து, பின்னால்,

18. காதலாய்த் தவங்கள்தோறும் கருதிய யாத்திரைசென்று
நீதியாய் ஞானநூலை நிலைமையாய்க் கருத்திலெண்ணிப்
போதமாய்க் குருவும்கற்ருேர் புகழுடன் ஆசிஏற்றுத்
தீதிலா வாழும்நாளில் தீங்கது உற்றவாறு.

18. பிரியமாக பல திவ்யக்ஷேத்திரங்களைப்போய்த் தரிசித்து விரிவான யாத்திரை செய்து, ஒழுங்காக ஞானநூற்களை நிச்சயபுத்தியுடன் மனதில் எண்ணி, பெரிய குருக்களையும் படித்தவர்களையும் அண்டி அவர்களுடைய ஆசியைப்பெற்றுக் குற்றமில்லாமல் வாழும் நாட்களில், தீங்கது ஏற்பட்டது. அஃது எவ்வாறெனில்,

19. சத்தியே இன்னேன் தானும் சதிருள்ள பக்கஇல்லில்
வெத்தியாய் இருக்குமங் கையிலங்கிய இவன்பால்வந்து
பத்தியாய் உன்னையானும் பண்புடன் போகம்துய்க்க
நத்தியே வந்தேன்உன்னை நவமுடன் இடம்கொடாயே.

19. இவன் பக்கத்து வீட்டிலுள்ள ஒரு ஸ்திரீ இவனிடம் வந்து மனதில் ஒன்று வெளியில் ஒன்று என்ற இருவிதமான எண்ணங்களைக் கொண்டு, மிக்க காதலுடன் உங்களை நான் அனுபவித்து போகம் துய்க்கப் பிரியமாய் இங்கு வந்தேன். நன்மையாய் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைக்க விரும்புகிறேன். இடம் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

20. என்றுமே கேட்கஇன்னேன் எழிலவள் தன்னைநோக்கி
நன்றிலா வார்த்தைசொன்னுய் நவிலிது தகாததென்ருள்
பன்றுள சாமிஎன்னை வகையுடன் சேர்வாய்என்று
வென்றியும் அவன்பால்வீழ்க வித்தகன் கோபங்கொண்டு,

20. என்று அவள் இவ்வாறு இவனை வேண்ட, அவன் அவளைப் பார்த்து "என்ன நன்மையில்லாத வார்த்தைகளைச் சொன்னாய்? சொல்லு வது தகாது என்றான். கடவுள்தான் என்னை உங்களிடம் வகையுடன் சேர்ந்திருக்கும்படி உத்திரவிட்டுள்ளார் என்று அவன் காலில் பணிந்து கேட்க, அவனும் தீ:ாக்கோபம் கொண்டு,

21. அன்னவள் தன்னையின்னோன் அரைந்திவன் காலால்
[தாக்கத்
துன்னிய கர்ப்பமாகித் தோகையும் இருந்ததாலே
கன்னியே அதுவும்மாய்ந்து கரைந்துமே வெளியில்வீழப்
பின்னையும் அந்தமாது பேசுவாள் சாபம்தானே.

21. அவளை இவன் அடித்துக் காலால் வலுவுடன் உதைத்துத் தள்ள, அவள் ஏற்கெனவே கர்ப்பமாகி இருந்ததனாலே உதைத்த அடியினால் கர்ப்பமும் கரைந்து வெளியே வந்து வீழ, அம்மாது பின்வருமாறு சாப மிட்டாள்.

22. பிறக்கும்பின் செனனம்தோறும் பேசிய மனைவியற்று
மறப்புடன் புத்திரதோஷம் மருவிய இனமில்லானாய்ப்
பறப்புடன் பலவாயெண்ணிப் பாரின்மேல் அலைவாய்என்று
இறப்பிலா மாதேயன்னோள் இயம்பினாள் அந்ததோஷம்,

22. இனி நீ எடுக்கும் ஜன்மங்கள்தோறும் பேசிய மனைவியில்லாமல் புத்திர சந்ததியில்லாமல் குடும்பமே நசித்துப்போய்ச் சிரமப்பட்டுப் பற்பல எண்ணங்களைக்கொண்டு உலகினில் அலைந்து திரிவாயென்று செத்தும் சாகாத அம்மாது சபித்தாள். அந்த தோஷம்,

23. பாலகன் தன்னைச்சூழ்ந்து பருகிய ஆயுள்போக்கிக்
கோலமாய்த் தஞ்சன்தன்னால் குணமுடன் வரியப்பட்டுச்
சீலமாய்ச் செனனமாகச் சிறந்துமே வந்தான்இன்னோன்
வேலனை யீன்றமாதே வித்தகி கேட்டிடாயே.

23. இவனை அண்டிற்று. ஆயுள் முடிந்து இறந்ததும் பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டுச் சீலமாய் இவ்வாறு ஜனித்து விளங்கினான். வேலாயுதக்கடவுளைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

24. அன்னையே வந்தஊழி அணுகியே யிருப்பதாலே
வன்னமாய் அதுவும்தீர வழுத்துவோம் பின்னால்சாந்தி
இன்னவன் மணத்தின்காலம் இயற்றுவோம் இனிமேலாக
மன்னியே இருபாண்டிரண்டுள் மகிழ்வுடன் மணமே
[கொள்வன்.

24. தாயே! பண்டை வினை இந்த ஜன்மத்தில் நேர்ந்திடுவதாலே அதன் வலிமை குறையப் பின்னால் அதற்குரிய பரிகாரத்தைச் சொல்லு வோம். இவனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். இவனுடைய இருபத்திரண்டாம் பிராயத்தில் கலியாணம் செய்து கொள்ளுவான்.

25. வல்லியே அம்மாதுக்கு வழுத்துவோம் புத்திரவிருத்தி
நல்லவாம் ஆண்பால்மூன்று நல்கிடும் கன்னிஅவ்வாறு
தொல்லையாம் இதற்குமேலாய்ச் செனிக்கினும் சுளுவில் [வீயும்
அல்லிரு ளகற்றுமாதே அருள்மொழி குன்றிடாது.

25. கலியாணம் செய்து கொண்டவளுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிக் கூறுவோம். மூன்று பிள்ளைகள், மூன்று பெண்கள் பிறக்கும். இதற்குமேல் ஜனித்தாலும் தொல்லையாகும். சீக்கிரம் மாயும். மனவிருளைப் போக்கும் தேவியே! நாங்கள் கூறும் அருள்மொழிகள் குறைவுபடா.

26. செப்பிய புத்திரபாகம் சீருடன் இலக்கவேண்டில்
தப்பிலா மனைவியோடே தரித்திடும் அருணைக்கேகி
ஒப்புடன் மண்டலம்தான் அறமுடன் அங்குநின்று
மைப்படிக் குழலினாலே வழுத்துவோம் மேலும்கேளே.

26. புத்திரபாவத்தைப்பற்றிக் கூறுவோ மென்றால் தன்னுடைய ஒப்பிலா மனைவியுடன் திருவருணைக்குச் சென்று விதிப்படி ஒரு மண்டல காலம் (42 நாட்கள்) அங்கேயே ஸ்தலவாசம் செய்து அதற்குப் பிறகு நடந்த விவரங்களைக் கூறுவோம். மேலும் கேட்பாயாக.

27. அன்னவர் பாதம்போற்றி அற்புதன் அபிஷேகித்துத்
துன்னிய வில்வத்தாலே துலக்கமாய் அர்ச்சித்தேத்தி
மன்னிய நாளும்தீபம் மருவிய இருபாண்எட்டு
வன்னமா முன்னால்ஊழி வள்ளலே தீர்க்கஉன்னி,

27. பகவானுடைய பாதங்களில் விழுந்து துதித்து அபிஷேகம் செய்து, மேலான வில்வதளங்களைக் கொண்டு விசேஷமான அர்ச்சனை களைச் செய்து, மற்றும் வழிபாடுகள் நடத்தி, தினந்தோறும் தீபமேற்றி இருபத்தெட்டாமாண்டில் ஏற்பட்ட ஊழ்வினையைப் போக்க நினைத்து,

28. அன்னவர் தன்னையின்னேன் அரும்கண்ணீர் சொரியப் [போற்றிப்
பின்னையும் அகதிகட்குப் பிணக்கிலா அன்னமீந்து
இன்னிய உள்ளூர்வந்து இயலுடன் சோமவாரம்
நன்றுள விரதம்தன்னைத் தலசிவன் அபயம்கொண்டு,

28. கடவுளைக் காதல் கொண்டு கசிந்து கண்ணீர் மல்கி தோத்திரப் பாக்களை ஓதி, திரும்பவும் அகதிகளுக்கு இடைஞ்சலில்லாமல் போஜனம் அளித்துத் திரும்பவும் தன்னூர் வந்து ஒழுங்காகப் பக்தி சிரத்தையுடன் சோமவாரம் என்ற மேன்மையான விரதத்தை மேற்கொண்டு பகவானிடம் அபயஹஸ்தம் சமர்ப்பித்து,

29. கொண்டுமே அனுஷ்டிசெய்தால் கோதையே முன்னூல்ஊழி
விண்டிடும் யாவும்நன்மை விளங்கிடா புத்திரதோஷம்
கண்டிடும் யோகவிருத்தி காளைக்குப் பலிதமுண்டு
வண்டணி குழலினாளே வழுத்திய மொழிகுன்றாது.

29. இப்படிக்கெல்லாம் அனுஷ்டித்து வந்ததால், தேவியே! முன்னாளில் ஏற்பட்ட பண்டை வினை சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புத்திர தோஷம் தொலையும். யோகபாவங்கள் விருத்தி யாகும். ஜாதகனுக்குப் பலவித நன்மைகள் உண்டு. வண்டுகள் மொய்க்கும் பூமாலையை அணிந்த பார்வதியே! சொன்ன சொல்லில் யாதும் குறைவு ஏற்படாது.

30. சொல்லிய விதிசெய்யானேல் எய்திடும் புத்திரதோஷம்
வல்லியே மனைவிக்கீனம் வந்திடும் உறமதாக
நல்லவாம் பொருளும்கிட்டா நாடிடா யோகமேன்மை
அல்லிருளகற்றுமாதே அருள்மொழி குன்றிடாது.

30. இப்படி விவரித்த பரிகாரத்தை விதிப்படி செய்து முடிக்காம லிருந்தானேயாகில், புத்திர தோஷம் நிச்சயமாய் ஏற்பட்டுவிடும். பெண்டாட்டிக்கு அரிஷ்டமேற்படும். வந்து சேரும் கனத்த ஐசுவரியங்கள் கிட்டா. யோக மேன்மைகளும் நெருங்கமாட்டா. மனதிலிருக்கும் அஞ்ஞானத்தைப் போக்கக் கூடிய பார்வதியே! அருள் வாக்கு என்றைக்கும் குறைவுபடாது.

31. இன்னவன் யோகச்செய்கை இயற்றுவோம் இனிமேலாக
மன்னிய செனனம்தொட்டு மருவிய யீரெண்பாண்டும்
உன்னிய பிதுர்க்குயோகம் உரைத்திடும் அறமதாகக்
கன்னலின் சுவையினாலே கருதுவோம் மேலும்கேளே.

31. இனிமேல் இவனுடைய யோகச் செய்தியை விவரிப்போம். ஜனித்த காலம் தொட்டுப் பதினெட்டு வருஷங்களும் தன்னுடைய பிதாவுக்கு யோகம் ஏற்படும். இது தருமம் என்ற பிரகாசச் சுடரை ஒத்தாசையாகக் கொண்டு யோசித்துக் கூறினோம். மேலும் கேட்பாயாக.

32. எந்தையே பலஹீனத்தால் இலகிய வேள்வியாலும்
பந்தமாம் இருஷியாலும் பருகிடும் சமயோகம்தான்
சிந்தயாம் தானியவிருத்திச் சிறந்திடு மென்றுசொல்லு
நந்துரும் பணிபாத்திரம் நல்கிடும் என்றுசொல்லே.

32. பலஹீனத்தினால் செய்யப்பட்ட கர்மாக்களினாலும், கிருஷித் தொழிலாலும் சமமான யோகத்தைப் பெறுவான். தானிய விருத்தியும் சிந்தனைக்கு இடம் கொடுத்த போதிலும் சிறப்புற்று விளங்கும் என்று சொல்லுவோம். வேலையும் கட்டளைகளும் குறைந்து ஏற்படும் என்று சொல்லலாம்.

33. உத்திடும் யாண்டின்மேலாய் உரமுள ஒருபத்தாண்டும்
சக்தியே தந்தைமூலம் தரித்திடும் சீவனங்கள்
நத்திடும் பலஹீனத்தால் நல்கிடும் பொருளும்கொஞ்சம்
அத்திமா முகனையீன்ற அம்மையே ஆண்டின்மேலாய்,

33. இதற்குமேல் ஒரு பத்து வருடங்கள் தந்தையின் மூலம் ஜீவனங்கள் ஏற்படும். பலஹீனத்தினால் திரவிய லாபமும் குறையும். கணபதியானைப் பெற்றெடுத்த தாயே! இந்தக் காலத்திற்கு பிறகு,

34. மன்னிய ஒருபத்தாண்டும் மருவிடும் சமயோகம்தான்
நன்னய அரசனாலே நவின்றிடும் தொழிலினாலே
வின்னில பொருள்கையேற்று விளங்கிய கீர்த்திமானாய்த்
துன்னியே வாழ்வானென்று சொல்லினோம் ரிஷிகளம்மா.

34. ஏற்படும் பத்து வருஷங்களும் சமமான யோக மேற்படும். நன்மை தரும் அரசனால் தொழில் ஏற்படும். பின்னமில்லாமல் ஐசுவரியம் கைதவமாய் விளங்கிடும். கீர்த்தியையும் பெறுவான். மேன்மையுடன் வாழ்வான் என்று சப்தரிஷிகளும் சொன்னார்கள்.

35. சாற்றிய ஆண்டின்மேலாய்ச் சாதகன் ஆயுள்மட்டும்
தீதிலாச் செல்வவானாய்ச் சிறந்திடும் பணிதிபாத்திரம்
கோதிலாப் பொருள்படைத்துக் கூடிடும் மனுக்கள்சூழ
ஏதவே வாழ்வாயென்று இயம்பினோம் ரிஷிகளம்மா.

35. சொல்லிய காலத்திற்குப் பிறகு ஜாதகனுடைய ஆயுட்காலம் முடிய குற்றமற்ற செல்வம் விருத்தியடைந்து வேலையாட்கள், கட்டளைகள் முதலியன சிறப்புற்றும் பொருட்செல்வம் மிகுந்து, பரிவாரங்கள் சூழப் பெற்று, ஏற்றமாகவே வாழ்வானென்று இருடிகள் இயம்பலானார்கள்.

36. சொல்லிய ஊழிதீர்ந்தால் சுகமுள இன்னோனுக்கு
வல்லியே நயத்தயோகம் வந்திடும் தீர்க்கமாகத்
தொல்லையாம் [1]பணிதிபாத்திரம்[2] துலங்கிடும் செல்வ
[மேன்மை
அல்லிரு ளகற்றுமாதே அருளிய மொழிகுன்றாது.

---

1. சம்பத்து
2. தகுதி, கட்டளை

36. சொல்லப்பட்ட ஊழ்வினை தீர்ந்ததனால் இன்னோனுக்குச் சுப மேற்படும். மேலான யோகபாவங்கள் ஏற்படும். இது நிச்சயம். சம்பத்துக்களும் துலங்கிடும். தகுதியாகக் கட்டளைகளை மேற்கொள்வோரும் துலங்கிடுவர். அஞ்ஞானத்தைப் போக்கும் பார்வதி தேவியே! எங்களுடைய அருள்வாக்குக் குன்றாது.

37. சதியுள அற்பயோகம் சக்தியே வந்தபோதும்
பதியிலா நிவிர்த்தியாகும் பகருவோம் தந்தைகாலம்
கதியதாய் முப்பான்ரெண்டுள் கிழற்றிய பிதுரும்மாள்வன்
மதினுத லாளேயாங்கள் வழுத்துவோம் அன்னைகாலம்.

37. அற்பமான யோக காலம் வந்துற்றபோதிலும் கடவுளருளால் சிரமங்கள் நீங்கும். தந்தையின் காலாந்தரத்தைப் பற்றிக் கூறுவோம். இவனுடைய முப்பத்திரண்டாம் வயதில் பிதா மரணத்தை யடைவான். சந்திரன் போன்ற நெற்றியை யுடையவளே! இவனுடைய அன்னையின் காலத்தைக் கூறுவோம்.

38. உன்னிய அதன்மேலாக உரமுள ஐந்தாண்டுள்ளே
மன்னிய கைலைசேர்வன் வழுத்துவோம் இவனின்கெண்டம்
வின்னமாம் சிறுகெண்டங்கள் வந்திடும் அதுவும்தீரும்
கன்னலின்[1] சுவையினாளே கருதுவோம் இவனின்காலம்.

38. இதற்குப் பிறகு ஐந்து வருடங்களுக்குள் தாய் கைலாசம் செல்லுவாள். ஜாதகனுடைய கடைசி காலத்தை நிர்ணயிப்போம். இடையிடையே சிற்சில கண்டங்கள் ஏற்பட்டு நிவிர்த்தியாகும். இனிய (கரும்பு போன்ற) சொற்களை யுடையவளே! இவனுடைய காலாந்தரத்தைப் பற்றிக் கருதுவோம்.

39. எந்தையே அறுபானேழில் இன்னவன் உடலம்வாடி
விந்தையாய்க் கைலைசேர்வன் விளம்புவோம் இவன்பின்
[சென்மம்
தொந்தமாம் காஞ்சிதன்னில் தோகைஇக் குலமதாகச்
சுந்தரன் செனனமாகிச் சொகுசுடன் வாழ்வான்சொல்லு.

39. இவனுடைய அறுபத்தேழாம் வயதில் உடல் மெலிந்து கைலாசத்தை யடைவன் என்று சொல்லுவோம். இவனுடைய அடுத்த ஜன்மம் தொடர்ந்து வரும். காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் இத்த சுந்தரன் ஜனனமாகி, சொகுசுடன் வாழ்வான் என்று சொல்லுவோம்.

---

1. கரும்பு

ஜாதகம் 31

1. பிறைபுகர் பானுபுந்தி பெண்ணினில்[1] பணியும்சீயம்
கரியவன் சேயும்கோலில் கனகனும் கேதுசாடி
வருடையும் சென்மமாகும் வரைகுவீர் பலனைஎன்று
அரன்மனை யாளும்கேட்க அத்திரி புகலுகின்றார்.

1. சந்திரன் சுக்கிரன் சூரியன் புதன் இவர்கள் கன்னியில் நிற்க, ராகு சிம்மத்தில் ஏற, சனியும் செவ்வாயும் துலாத்தில் தங்க, வியாழனும் கேதுவும் கும்பத்தில் சேர்ந்திருக்க, மேஷமும் ஜன்ம லக்கினமானால் இப்படிப்பட்ட ஜாதகத்தைக் கொண்டவனுக்குரிய பலன்களைச் சொல்லுவீரென்று பார்வதி தேவி கேட்க, அத்திரி மகரிஷி சொல்லலுற்றார்.

	லக்கினம்		
குரு கேது	இராசி		
	சக்கரம்		ராகு
		சனி செவ்வாய்	சந்திரன் சுக்கிரன் சூரியன் புதன்

2. இந்தசேய் ஆணும்சென்மம் இல்லமும் கிழ்மேல்வீதி
தென்வாசல் கணேசன்மேற்கில் சிவன்கோஷ்டம் [வடகீழாகும்
அந்தரி காளிகீழ்பால் அணுகிய சமவூர்தன்னில்
சந்ததம் அயன்குலத்தில் செனிப்பனும் இந்தசேயும்.

2. இவன் ஆண்மகனாய் ஜனித்தவன். இவன் வசிக்கும் வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பார்த்த வாசலுடையது. அங்கே மேற்கு திக்கில் பிள்ளையார் கோவிலுண்டு. வட கிழக்கே சிவன் கோவிலுண்டு. கிழக்கே காளி கோவில். அதுவும் சமவூர்தன்னிலுள்ளது. ஜாதகன் பிராமண வமிசத்தில் குழந்தையாய் அவதரிப்பான்.

3. பாலகன் யோகச்சேதி பத்தினி புத்திரயோகம்
சாலவே அன்னைதந்தைச் சகோதர யோகம்தானும்
ஏலவே முன்பின்சென்மம் இயம்புவோம் சாந்திதானும்
கோலமாய் நற்கோலாய்ந்து கூறுவோம் தாயேயாங்கள்.

---

1. கன்னி

3. இவனுடைய யோகச் செய்திகளின் விவரமும், மனைவி மக்கள் யோகமும், பொருத்தமாகவே தாய் தந்தையர்கள் சகோதரர்கள் யோகங்களும், ஏற்றமாகவே இவனுடைய முன்பின் ஜன்மங்களைப் பற்றியும் கூறுவோம். இவனுக்குத் தேவையான பரிகாரங்களையும் கூறுவோம். ஒழுங்காக நவக்கிரகங்களின் பலன்களை ஆராய்ந்து கூறுவோம் என்று பார்வதியிடம் சப்தரிஷிகள் கூறுவார்கள்.

4. தந்தையின் துணைகள்தோஷம் தனியனாய் வாழ்வானம்மா
எந்தகா ரணத்தினாலே இயம்பினீர் அந்தசங்கைப்
பிந்திய சிகியும்லாபம் புகரினின் பலத்தால்சொன்னோம்
சந்ததம் பிதாகுணத்தைச் சாற்றுவோம் தாயேகேளும்.

4. தந்தையின் சகோதரர்கள் தோஷமடைவார்கள். தனியாகவே வாழ்ந்து வருவான். எந்தக் காரணத்தைக் கொண்டு அப்படிச் சொன்னீர்? அந்த சங்கை ஏற்பட்ட விவரம் யாது? கேது லாபஸ்தானத்திலிருப்பதனால் சொன்னோம் (வட மொழி நூலார் கூறும் தத்துவம் இவ்விடத்தில் இந்த சந்தர்ப்பத்தில் சகோதர பலத்தைக் கூறுவதில் மிக்க ஆச்சரியப்படும்படி ஒத்திருக்கிறது. குருவும் கேதுவும சேர்ந்திருந்தாலும், கேந்திரத்திலிருந்தாலும், சஷ்டாஷ்டமத்திலிருந்தாலும், திருகோணத்திலிருந்தாலும் குழந்தைகள் அநேகம் பிறந்து வியோகமடைந்து சில மிச்சமாகும். பிரச்ன பாவம் பார்ப்பதிலும் பலமான சூத்திரம் இந்த சந்தர்ப்பத்திற்கு இதுதான். இதை வாசகர்கள் ஒரு ஜோதிடத் திறவுகோலாக வைத்துக்கொள்ளவும்.) தாயே! கேளுங்கள். பிதாவின் குணங்களை வருணிக்கிறோம்.

5. கல்விமான் யூகைசாலி கார்நிறம் சமதிரேகம்
நல்லனாய் வாழ்வானான் நாதனார் பக்திபூண்பன்
இல்லையென் றுரைக்கமாட்டான் யாரையும் வசியங்
[கொள்வன்
சொல்லது சுருக்கமாகும் துன்பங்கள் எவர்க்குமெண்ணான்.

5. நல்ல படிப்பாளி. மதியூக முடையவன். கரு நிறங் கொண்டவன். சமமான தேகத்தை யுடையவன். நல்லவனாகப் பலர் எண்ணுவார்கள். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். யாசிப்போருக்கு இல்லை என்று சொல்ல மாட்டான். யாரையும் தன்வசப்படுத்திக் கொள்ளுவான். சுருக்கமாகப் பேசுவான். யாவர்க்கும் துன்பங்கள் செய்ய நினைக்கமாட்டான்.

6. சித்திர வேலைசெய்வன் சேவலங் [1]கொடியோன்பத்தி
பத்தினிக் கிஷ்டனுவன் பாருகள்[2] அதிகம்சேர்க்கான்
புத்தியால் பெரியோனுவன் பொய்யது வழுத்தானுகும்
சத்தியம் கூறுனுகும் [3]க்ஷேத்திரம் சிலர்க்குச்செய்வன்.

6. சித்திரங்களை எழுதுவான். முருகக் கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். பெண்டாட்டியிடம் பிரியமுள்ளவனுக இருப்பான். அதிக நிலபலங்களைச் சேர்க்க மாட்டான். மேன்மையான புத்திவன்மையை யுடையவன். பொய்யைப் பேசாதிருப்பான். சத்தியமே பேசுவான். சிவக்ஷேத்திரங்களைப் போய்த் தரிசிப்பான். (சிலருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பான்.)

7. முன்னவன் இருந்தசென்மம் மொழிகுவேம் காரைக்காலில்
பொன்பணி வேலைசெய்வன் புகழான குலமுதித்துத்
தன்மனை மதலையுண்டாய்த் தான்வாழ்நாள் வினையைச்
[சொல்வேன்
முன்னோர்க்குப் பணியில்மோசமெய்தினன் இவனேயம்மா.

7. இவன் போன ஜன்மத்தில் காரைக்காலில் பொன்னுபரணங்கள் செய்யும் புகழ் பெற்ற விச்வகர்மாவின் (தட்டானின்) குலத்திலுதித்து, மனைவிக்குப் புத்திரனுண்டாகி வாழ்ந்து வரும் நாளில், ஒரு வினை ஏற்பட்டது. அதனை விவரிப்பேன். முதன்மை தங்கிய பிராமணர்களுக்கு நகை செய்வதில் இவன் மோசம் பண்ணினன்.

8. மறையவர் வருத்தமுற்று வரைந்தசா பத்தைக்கேண்மோ
குறைமன மாகச்செய்தாய்க் குலவும்பின் சென்மந்தன்னில்
வரும்துணை தோஷமாயும் வமிசமும் விருத்தியின்றித்
தரணியில் வாழ்வாயென்னச் சார்ந்தது அந்தசாபம்.

8. பிராமணன் வருத்தமடைந்து இவனுக்குச் சாபமிட்டான். இதைக் கேளுங்கள். கீழ்நோக்கான புத்தியுடன் பொருளைக் கொள்ளை யடித்துப் பணி செய்து கொடுத்தாய். அடுத்த ஜன்மத்தில் சகோதர தோஷம் ஏற்பட்டு உன் வமிசமும் விருத்தி அடையாமல் பூமியில் வாழ்வாய் என்று சொல்ல, அந்தச் சாபம் இவனைச் சார்ந்தது.

9. இதுவன்றிச் சிலர்க்குமோசம் எய்தினன் இவனே
[யென்றேம்
வதிபனும் அந்தியத்தில் வறுமைகள் உடையனுகிச்
சதியான காலனுடு சென்றுமே பிரமன்லக்கம்
இதுகுலம் தனிலுதித்தான் எய்திடு முன்னூழ்த்தோஷம்.

---

1. முருகக்கடவுள்
2. நிலபலங்கள்
3. இருக்குமிடம்

9. இது நீங்கலாக இன்னும் சிலருக்கு மோசம் செய்தான் இவனே யம்மா. இவனும் கடைசி காலத்தில் தரித்திரக் கொடுமைகள் அடைந்து எமலோகம் சென்றான். திரும்பவும் பிரம்ம சிருஷ்டியால் இந்தக் குலத்தி லுதித்தான். அப்போது பண்டை ஊழ்வினை இவனை வந்தடைந்தது.

10. ஆகையால் துணையுங்காணுன் அறைந்தஇக் குணத் [தானுக்குப்
பாகமாய் உதிப்பாறுகும் பகருவோம் இவன்குணத்தை
நாகரீகங்க ளுள்ளான் நயம்படக் கூறுவானும்
ஆகம நுணுக்கம்தேருன் அறிவோர்கள் நேயம்கொள்வன்.

10. அதன் காரணமாக உடன் பிறந்தவர்கள் இல்லை. தன்னந் தனியே உதித்து வாழ்வானுகும். இவன் குணங்களை எடுத்துரைம்போம். நாகரிகங்களை யுடையவன். நயமான இனிய மொழிகளைக் கூறுவான். தர்மசாஸ்திரங்களை அறிய வல்லவன். படித்த பண்டிதர்களுடைய சிநேகத்தைக் கொள்ளுவான்.

11. மால்நிறம் உயரமில்லான் வலப்புறம் சுழியுமுண்டு
சீலவான் பொறுமைசாலி சித்திர வேலைசெய்வன்
பால்தயிர் பிரியனுவன் பண்போர்க்கு அன்னமீவன்
காலத்தை அறிந்துரைப்பன் கண்முகம் வசியமுண்டு.

11. கரு நிறமுடையவன். உயர மில்லாதவன். வலப்பக்கத்தில் சுழியுமுண்டு. சீல முள்ளவன். பொறுமை யுள்ளவன். சித்திர வேலையில் கைதேர்ந்தவன். பால், தயிர் இவைகளில் இஷ்டமுள்ளவன். கூலி வேலை செய்யும் பாட்டாளிகளுக்கு அன்னமளிப்பான். கணித சாஸ்திரம் பயின்று காலநிர்ணயம் செய்வதில் வல்லவன். கண்ணினுலும் முகவெட்டி னுலும் பிறரை வசியப்படுத்து மியல்பினன்.

12. தந்தைமேல் பணிகள்செய்வன் தடம்செய்வன் தரணி [சேர்ப்பன்
எந்திடம் பெருமைபூண்பன் இடர்செய்யான் யாவருக்கும்
கந்தன்மேல் பக்திபூண்பன் கருதிடான் கட்டுவார்த்தை
அந்தரன் பறப்பான்போலே அவன்கனவு தன்னில்நேரும்.

12. தன் தந்தையைக் காட்டிலும் மேலான வேலைகள் செய்யும் திற முடையவன். பயிற்சியால் ஆற்றல் மிகுதி யுடையவன். பூஸ்திதியை அடைவான். சென்ற விடங்களிலெல்லாம் பெருமை பெறுவான். யாவர்க்கும் இடைஞ்சல் செய்யமாட்டான். கந்தஸ்வாமியினிடத்தில் பக்திபூண்டவன். பொய் வார்த்தை சொல்ல மனதிலும் நினைக்க மாட்டான். தேவர்கள் பலவிடங்களில் சஞ்சரிப்பதுபோலே அவனுடைய கனவுதன்னில் நேரிடும்.

13. தேவதா பணிகள்செய்வன் சிறுத்தோர்க்கு உதவிசெய்வன்
நாவதைக் காப்பாளுகும் நயப்புறு வார்த்தையுண்டு
பாவத்தில் மனதைவையான் பரவுப காரியாகும்
மேவுவான் தலவாசங்கள் வித்தகி கேட்டிடாயே.

13. கோவில் விக்கிரக வேலைகள் செய்வான். (தேவாலயங்களில் கடவுளுக்கு வழிபாடுகள் செய்வான்.) ஏழைகளுக்கு உதவி செய்வான். நாவடக்க முள்ளவன். நயப்புள்ள வார்த்தைகளைப் பேசுவான். பாவம் எண்ணாத மனதை யுடையவன். பரோபகாரி யாவன். க்ஷேத்திர வாசங்கள் செய்வான். தேவியே! கேட்பாயாக.

14. தன் துணை ஆண்பால்தோஷம் சத்தியு மூர்த்திதீர்க்கம்
கன்னிக்குத் தென்பால்மாரன் கழறுவோம் முன் [கோபத்தாள்
பன்னியே பேசுவாளாம் பாவைநன் நடக்கையுண்டு
கன்னென மொழியுமுண்டு கணவனுக் கினியளாகும்.

14. தன்னுடைய கூடப்பிறந்த ஆண் சகோதரர்கள் தோஷ மடைவார்கள். சக்தியும் தீர்க்காயுசுடையவள். கன்னியா குமாரிக்குத் தெற்கே உதித்த இவளைப் பற்றிக் கூறுவோம். முன்கோப முடையவள். பன்னிப் பன்னிப் பேசுவாள். நல்ல நடத்தை யுடையவள். கடுமையான மொழியும் பகர்வாள். புருஷனிடம் பிரியமுள்ளவளா யிருப்பாள்.

15. பதர்குண மில்லாளாகும் பரிந்துப சாரம்செய்வள்
சுதர்களும் ஆண்பாலுண்டு தோகையும் ஆவார்தீர்க்கம்
அதிபதி சுகமாய்வாழ்வன் மருவிடும் பித்தசூடு
துதிசெய்வோர்க் கன்னமீவன் தோகைபோல் சாய [லொக்கும்.

15. இளப்பமான குணங்க ளில்லாதவள். பிரியத்துடன் விருந்தினரை உபசரிப்பாள். ஆண் குழந்தைகளும் உண்டு. பெண் குழந்தைகளும் உண்டு. கணவன் சுகமாய் வாழ்வான். பித்த சூட்டினுல் வருந்துவான். தோத்திரமாய்ப் பேசுவோருக்கு அன்னம் கொடுப்பான். அவளும் மயில் போன்ற சாயலை யுடையவள்.

16. துணையாண்பால் தோஷம்எவ்வார் செப்புவீர் முனியே [நீதான்
பிணையாகப் புந்திஆறில் பொருந்தின பலத்தால் [சொன்னேம்
அணையவே பாரிதானும் அணுகும்கா லத்தைக்கேண்மோ
தனமுள முப்பதாண்டில் காதலி வடமேல்நேரும்.

16. ஆண் சகோதர தோஷம் ஏற்படும் என்று சொன்னீரே! எவ்வாறு என்று, முனிவரே! விரிவாக நீங்கள் கூறுங்கள். புதன் ஆறுமிடத்தில் இடைஞ்சலாக இருப்பதனால் சொன்னோம். பொருத்தமாகவே பெண்டாட்டியும் ஏற்படும் காலத்தைக் கேளுங்கள். பணம் காசுகள் ஏற்படும். முப்பதாவது பிராயத்தில் காதலி வடமேற்கிலிருந்து வருவாள்.

17. மங்கையின் குணத்தைச்சொல்வேன் மாநிறம் பித்ததேகி
எங்கள்போல் அதிதிக்கன்ன மீகுவாள் நற்குணத்தாள்
துங்கமா மனத்தாளாகும் துன்பங்கள் எவர்க்குமெண்ணாள்
பங்கய முகத்தாளாகும் பணிகளும் சேர்ப்பாளாகும்.

17. பெண்டாட்டியின் குணங்களைக் கூறுவோம். மாநிறமுள்ளவள். பித்த சம்பந்தமான தேகத்தை யுடையவள். ரிஷிகளைப்போல் ஆதுலர்க்கன்னமீவள். நல்லகுண முடையவள். துல்யமான மேன்மை பொருந்திய மனதை யுடையவள். யாவர்க்கும் துன்பம் செய்ய நினைக்கமாட்டாள். தாமரைப் பூப்போன்ற முகத்தை யுடையவள். பூஷணாதிகளையும் அதிகமடைவாள்.

18. அன்னம்போல் சாயலொக்கும் அடிசிலுக் கினியாளாகும்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடாபடி தன்னில்செல்லாள்
அன்னியர் மதிக்கவாழ்வள் ஆளன்தன் மனதுக்கேற்றோள்
அன்னவள் யோகசாலி அவளுக்கு வயதுதீர்க்கம்.

18. அன்னப்பக்ஷி போன்ற சாயலை யுடையவள். சமையல் செய்வதில் சாமர்த்திய முள்ளவள். பிறரைப் பற்றிக் குற்றமாகப் பேசமாட்டாள். அடாத காரியங்களைச் செய்ய மாட்டாள் பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். புருஷனிடம் குறிப்பறிந்து நடப்பாள். அவளும் நல்ல யோகசாலி. அவளுக்கும் தீர்கமான ஆயுசுண்டு.

19. செயமுனி இதனைக்கேட்டுச் செப்புவார் சங்கையொன்று
வியமாக ஏழோன்நீச்சம் விடமது[1] ஐந்தில்தங்கப்
பயமிலா சொன்னசங்கை பகருவீர் முனியேநீதான்
நயமுடன் சனிசேய்ஏழில் நற்குரு பார்த்ததாலே,

19. இதைக் கேட்ட ஜயமுனி ஒரு சந்தேகத்தைக் கேட்கலுற்றார். ஏழுக்குடையவனான சுக்கிரன் தன் வீடான துலாத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டில் நீசம் பெற்றிருப்பதனாலும், இராகு இலக்கினத்திலிருந்து ஐந்தாம் வீட்டிலிருப்பதனாலும் பயமில்லா சொன்ன சங்கையைச்

1. இராகு

சொல்லுவீர், முனியே ! நீர்தான் என்று கேட்க, நல்ல ஏழாம் வீட்டில் சனியும் செவ்வாயும் வீற்றிருக்க, அவர்களைத் தேவகுரு ஒன்பதாம் பார்வையினால் பார்ப்பதனாலே,

20. பாரியும் ஒன்றேயென்றோம் பாலர்கள் பலமுறுது
கூறுவீர் அந்தசங்கை கொடுவரவம் ஐந்தில்தங்கத்
தீரமாய் ஐந்தோன்ஆறில் சனிகுஜன் ஏழில்தங்கக் .
காரணத் தாலேபுத்திரர் காணாது என்றுசொல்வோம்.

20. பெண்டாட்டியும் ஒருத்தியென்றே சொல்லுவோம். குழந்தைகளுக்கு அவ்வளவு யோகமிராது என்று சொன்ன சங்கையைப்பற்றிக் கூறலுற்றார். கொடிய பாம்பு (இராகு) ஐந்தாம் வீட்டில் தங்க, அந்த வீட்டிற்கு உடையோன் ஆறாமிடத்தில் ஒதுங்க, சனியும் செவ்வாயும் ஏழாம் வீட்டிலிருக்க, என்னும் முதலான காரணங்களைக் கொண்டு புத்திர தோஷம் என்று சொல்வோம். (இதே கருத்தடங்கிய சுலோகம் வடமொழியில் 'ஸாராவளி'யில் இருப்பதை வாசகர்கள் காணலாம்.)

21. இதுவன்றிப் பூர்வம்தன்னில் இவன்சில கொடுமைசெய்தான்
அதனாலே சுதர்கள்தோஷம் அறிவிப்பீர் அந்தசங்கை
அதிபன்முன் சென்மம்தன்னில் மாயூரம் அருகில்மேற்கில்
நதிகுலம் தனில்உதித்து நாயகி மதலையுண்டாய்,

21. இதுவுமல்லாமல் ஆதியில், (போனஜன்மத்தில்) இவன் சில கொடிய காரியங்களைச் செய்தான். அதன் நிமித்தமாகப் புத்திர தோஷம் ஏற்பட்டது. அந்த சங்கையை அறிவிப்பீர் என்று கேட்க, முன் ஜன்மத்தில் இவன் மாயூரத்திற்கு அருகே மேற்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் வேளாளர் குலத்தில் உதித்து, பெண்டாட்டி கர்ப்பமாகி, பிள்ளை ஏற்பட்டு,

22. தரணியை விருத்திசெய்து தான்வாழ்நாள் வினையைக்
[கேண்மோ
அரிவையாம் விதவைபோகம் அணுகியே கருவழித்தான்
உரைந்தது அதுஓர்தோஷம் உத்தமன் இல்லம்தன்னில்
மருவிற்று நாகமொன்று மகுடத்தால் வெளியில்செல்ல,

22. பூஸ்திதியை விருத்தி செய்து, தான் வாழ்ந்து வரும் நாளில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதனைக் கேட்பாயாக. விதவையான ஒரு ஸ்திரீயுடன் சம்போகம் செய்து அவளுக்கு அதன் காரணமாய் ஏற்பட்ட கர்ப்பத்தை யழித்தான். உடனே அந்த தோஷம் இவனைச் சார்ந்தது. இவன் வீட்டில் ஒரு பாம்பு ஒரு நாள் வந்தது. படமெடுத்து அது வெளியே உலாவ,

23. அரங்கமே செய்தும்போகா தடித்தனன் கழியினாலே
மரலியின் பதிக்குச்செல்ல மருவிற்று அந்ததோஷம்
திருமகன் அந்தியத்தில் சேயர்கள் தோஷமாகி
முருகர்தன் பக்திகொண்டு மேவினன் காலனாடு.

23. இரகசியமாய் இவன் ஒளிந்திருந்து அப்பாம்பைத் தடி கொண்டடித்தான். அதன் காரணமாக அஃது உயிர் துறக்கலாயிற்று. அந்த தோஷமும் இவனை வந்தடைந்தது. இவனும அந்திய காலத்தில் புத்திர தோஷத்தை அனுபவித்து, முருகக் கடவுளிடத்தில் பக்தி ஏற்பட்டு, கடைசியில் எமலோகம் சென்றான்.

24. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனிப்பனும் இந்தபாலன்
மருவிடும் இரண்டுதோஷம் மைந்தர்கள் தோஷமெய்தும்
அரிவையின் பூர்வம்தன்னில் அணுகிற்று சிலதுதுன்பம்
வருவிப்பீர் அந்தசங்கை மாதுர்முன் ஜன்மம்கேளாய்.

24. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் உதிக்க லானான். அப்போது முன் சொன்ன இரண்டு தோஷங்களும் சார்ந்தன. புத்திர தோஷமும், அம்மாதின் தோஷமும் அணுகின. அதனால் சில துன்பங்களை அனுபவித்தான். அப்படி ஏற்பட்ட துன்பங்களில் ஒரு மாது சாபமும் முன் ஜன்மத்தில் ஏற்பட்டது. அதை விவரமாய்க் கூறுகிறோம். கேட்பாயாக.

25. கொங்குநா டதனிலேதான் குதித்தனள் வைசியசேயாய்த்
தீங்கிலாக் குடும்பியாகி மேவியும் வாழும்நாளில்
பாங்கியாம் ஏழைமாது பாலர்க்கு அன்னம்வேண்ட
சாங்கோப வார்த்தையின்றிச் சர்ப்பம்போல் கோபமுற்று,

25. இவன் மனைவி கொங்கு நாட்டில் (மலையாளத்தில்) வைசியக் குழந்தையாகிக் குற்றமற்ற குடும்பியுமாகி வாழ்ந்து வரும் காலத்தில், ஓர் ஏழை வேலைக்காரி தன்னுடைய குழந்தைகளின் பசியை ஆற்ற அன்னப் பிச்சை கேட்க, சாந்தமான வார்த்தைகளாலன்றிப் சர்ப்பம்போல் சீறிக் கோபமுற்று,

26. அன்னமு மில்லையென்ன அவர்மன சஞ்சலத்தால்
துன்மைகள் வார்த்தைசொல்லிச் சாதமும் யீயாப்பாவி
பின்வரும் சென்மம்தன்னில் புதல்வர்கள் காணாதாயும்
தன்னுடல் தணலாய்க்கெட்டுச் சலிப்புடன் வாழ்வாய்

[என்ன,

26. அன்னமும் இல்லை என்று சொல்லி விரட்ட, அம்மாது மனம் குழம்பிச் சஞ்சலமடைந்து, ஆதுலர்க்கு அன்னம் கொடுக்காத பாவி அடுத்த ஜன்மத்தில் புதல்வர்களைப் பார்க்கமாட்டாள். தணல் எரிந்து நீற்றுப்போவதுபோல் இவளுடைய உடலம் வாடி வதங்கிக் கஷ்டப்பட்டு வாழ்வாள் என்று,

27. சொல்லியே வேறுசாகை சென்றனள் ஏழைமாது
அணுகிற்று அந்தசாபம் புகலுவோம் வேறுஒன்று
கொல்லையில் வெகுநாளாகக் குடியாக முனியின்வாசம்
அல்லல்கள் தவிர்க்கும்தெய்வம் யாவரும் தோத்தரிப்பர்.

27. சாபமிட்டு, வேறு வீட்டிற்குச் சென்று பிச்சை கேட்கலானுள் அந்த ஏழைமாது. அவளுடைய சாபமும் இவளை நெருங்கிற்று. இது நீங்கலாக மற்றொன்று ஏற்பட்டதை விவரிப்போம். கொல்லைப்புறத்தில் வெகு நாளாகக் குடியிருந்து வசித்து வந்த முனி ஒன்றிருந்தது. துன்பங்களுற்றவர்கள் யாவரும் அதனைத் தெய்வமாக கருதி தோத்தரித்து வந்தனர்.

28. மங்கையும் கருவத்தாலே மாமுனி யைத்தொழாமல்
சங்கையாய் நின்றுளென்றும் சடைமுனி புகலும்சாபம்
எங்களைத் தொழாதபாவி யீன்றதோர் சுதரைக்கொல்வேன்
தங்கும்பின் சென்மந்தன்னில் சந்ததி உதிக்காவண்ணம்.

28. இவளும் கர்வத்தினலே அம்மாமுனியைத் தொழாமல் சந்தேகப் பட்டு நின்றாள். உடனே அம்முனி இவளைச் சபித்தது. என்னைத் தொழாமற் சென்ற பாவிக்குக் குழந்தை பிறக்குமாயின் அதனைக் கொல்லுவேன். அடுத்த ஜன்மத்திலும் சந்ததி ஏற்படாமல் செய்வேன்.

29. உன்பக்கல் வாசமாவேன் உரைத்துவேர் சாகைசெல்லத்
துன்மைகள் நேர்ந்ததென்றும் செல்விக்கு அந்தியத்தில்
தன்சுதர் யாவுமாண்டு சஞ்சல மனத்தளாகித்
தென்திசைத் தலங்கள்சென்று சென்றனள் காலநாடு.

29. உன்னிடம் வசித்து உன்னை ஆட்டி வைப்பேன், என்று சாபமிட்டு, வேறு ஜாகைக்குச் செல்ல, இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இவளுக்கு அந்திய காலத்தில் பிறந்த பிள்ளைகளெல்லாம் மாண்டு மனதில் சஞ்சலமேற்பட்டு, தட்சிண தேசத்திலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துக் கடைசியில் உயிர் துறந்தாள்

30. தலைனுன்கோன் வரியப்பட்டுச் செனிப்பளா மிந்தமாது
குலவிடும் இரெண்டுதோஷம் குழவிகள் காணுதாகும்
உலவிடு முனிதன்பக்கல் உத்தமி கேட்கலுற்றாள்
விலகிட கிரிகைஒன்று விளம்புவீர் முனியேநீதான்.

30. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இம்மாது ஜனிக்க லானாள். அப்போது இரண்டு தோஷங்களும் இவளைப் பீடித்தன குழந்தைகளே யில்லை. அம்முனியும் இவளைப் பிடித்துக்கொண்டது. இதைக் கேட்ட பார்வதி கேட்கலுற்றாள். இந்த தோஷம் நீங்க ஏதாவது பரிகாரம் இருந்தால் ஒன்று சொல்லுங்கள், முனிவரே! என்றாள்.

31. கருமசாந் திகளும்செய்து காதலி பீஜம்தன்னை
யிரணிய ரெக்கில்கீரி யெண்கோணம் தனிலமைத்து
மருமமாய்ச் சகஸ்திரம்சொல்லி மாதுவுக் கணிவாளாகில்
திருகுகள் நீங்கியேதான் செனித்திடும் சுதர்கள்தானே.

31. இதற்குண்டான கர்மசாந்திகளைச் செய்து பீஜாட்சரம் ஒன்று எட்டுக்கோணங்களினிடையே தங்கத்தகட்டில் அமைத்து ரகசியமாக சகஸ்ரநாமம் ஜபித்து அருச்சனை முதலான வழிபாடுகள் செய்து அந்த ரக்ஷாபந்தனத்தை இவள் அணிந்து கொள்ளுவாளாகில் சகல தீவினைகளும் போம் புத்திரர்களும் பிறப்பார்கள்.

32. மாரன்செய் வினைகளுக்கு வரைகுறோம் கிரியைஒன்று
நாரியும் தானுமாக நற்பட்சி மலைக்குச்சென்று
[1]ஆரலின் ஞளிலேதான் அக்கிரி வலமாய்வந்து
நீரணிக் கடவுளான[2] நிமலர்க்கு அர்ச்சித்தேத்தி,

32. குடும்ப சௌக்கியத்தில் ஏற்படும் வினைகளைப் போக்கப் பரிகாரம் ஒன்று சொல்லுவோம். புருடனுடன் தானும் நல்ல திருக்கழுக்குன்றத் திற்குச் சென்று, செவ்வாய்க்கிழமைதன்னில் கார்த்திகை நட்சத்திரத்தில் அக்கினி தீர்த்தத்தை வலமாகப் பிரதக்ஷிணம் செய்து கங்கைவார்சடையான் தன்னை அருச்சித்துத் துதித்து,

33. திருத்திய நாளும்சுத்தி தேறினோர்க் கன்னமீந்து
அரவுமே வெள்ளியாலே அணுகியே உள்ளூர்மாரி
திருவிளக் கொன்றுவைக்கத் தீவினை விலகுமென்றோம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

33. மூன்று நாட்கள் பிரதக்ஷிணம் செய்தபின், பெரியோர்களுக் கன்னமீந்து, வெள்ளியினால் ஒரு நாகம்செய்து பிரதிஷ்டை செய்தபின், உள்ளூர் திரும்பி, அம்மனுக்குத் தீபமேற்றி வைக்க, தீவினைகள் எல்லாம் விலகும். ஆனைமுகத்தோனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

---

1. கார்த்திகை நட்சத்திரம்
2. பரமசிவன்

34\. சொற்படி செய்யாளுகில் சுதர்தோன்ரு தோன்றில்தீதாம்
சொற்படி செய்வாளுகில் சுதர்களும் ஆண்பாலொன்று
மைப்படி பெண்பாலொன்று வரைகுறேும் தீர்க்கமாக
அப்பணி சடையோன்தேவி யருளிய மொழிகுன்ருது.

34\. சொன்னபடி செய்யாமற்போனல் பிள்ளை பிறக்காது. பிறந்தாலும் இருக்காது. சொன்னபிரகாரம் பரிகாரம் செய்தால் ஆண் குழந்தையொன்றும் பெண் குழந்தையொன்றும் பிறக்கும் என்று கூறுவோம். இது தீர்க்கமாகச் சொல்லுவோம். கங்கையைத் தலையில் அணிந்துள்ள பரமசிவனின் தேவியாகிய பார்வதியே! எங்களுடைய அருள்மொழி ஒரு நாளும் தப்பாது.

35\. அன்னையின் குணத்தைச்சொல்வேன் ஆளன்தன் [மன்துக்கேற்ருள்
தன்சொல்லு மடக்கமுண்டு செறியளா[1] மனத்தளாகும்
துன்மைகள் எவர்க்குமெண்ணுள் சொல்லுமுன் [கோபம்கொஞ்சம்
தன்துணை யாண்பால்தோஷம் சத்திமார் மூவராகும்.

35\. தாயின் குணத்தைச் சொல்வோம். புருஷனுடைய மனதிற்கேற்றவள். அடக்கமான வார்த்தைகளைக் கூறுவாள். திடமான மனதையுடையவள். பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டாள். சிறிது முன்கோபமுடையவள் என்று பிறர் சொல்லுவார்கள். தனக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் தோஷமடையும். மூன்று பெண் குழந்தைகள் உண்டு.

36\. விரதமே பூண்பாளாகும் வீண்வம்பில் செல்லாளாகும்
அறவோர்போல் வார்த்தையுண்டு அணுகிடும் பித்தவாயு
உரைகுறேும் இவளின்பூர்வம் உரையூரு நகரிலேதான்
மருவிளுள் வேளாண்வம்சம் வளமுள குடும்பம்தன்னில்.

36\. விரதங்களைக் கைக்கொண்டு நடப்பாள். வீண் வார்த்தை பேச (வம்படிக்க)மாட்டாள். படித்த புத்திமான்களைப்போல் பேசுவாள். பித்தவாயுவினல் தொந்தரையடைவாள். இவளுடைய பூர்வோத்தரங்களைப் பற்றிக் கூறுவோம். உறையூர் என்ற நகரத்தில் வேளாளர் வமிசத்தில் வளப்பம்பொருந்திய குடும்பத்தில் வந்து பிறந்தாள்.

37\. முன்வினை யில்லாதாகி மொதுங்கிளுள் கால்நாடு
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தவ ளென்றுசொல்வோம்
பின்சென்மம் வேலங்காட்டில் பிறப்பளாம் க்ஷத்ரியசேயாய்
உன்னத வாழ்வைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

1\. திடமான

37. முன்வினைக் (புண்ணிய பாவங்கள் மிச்சமில்லாமல்) கட்டுகளில்லாமல் எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு மறு ஜன்மத்தில் திருவேலன்காட்டினில், க்ஷத்திரிய குடும்பத்தில் ஜனிப்பாள். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

38. ஆரஞ்சு மூன்றுஆண்டில் அணுகிடும் தந்தைகெண்டம்
கூறுவோம் இவன்பின்சென்மம் குற்றால நாட்டிலேதான்
சேருவான் இக்குலத்தில் செல்வங்கள் பெருக்கமுண்டாய்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

38. இவனது முப்பத்துமூன்றும் பிராயத்தில் தந்தையின் கண்டம் ஏற்படும். இவனுடைய பின்ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். குற்றால நாட்டினில்தான் இக்குலத்திலுதிப்பான். செல்வங்கள் அதிகம் ஏற்பட்டு வாழ்வான். ஆறுமுகனைப்பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

39. நாற்பது இரண்டுஆண்டில் நல்கிடும் அன்னைகெண்டம்
ஏற்கவே பாலனுக்கு எழுபது மூன்றுஆண்டில்
ஆற்கவே கன்னிமாதம் அஷ்டமி குறைபக்கத்தில்
தீற்பாக மாரகங்கள் செப்புவோம் தாயேகேளும்.

39. இவனது நாற்பத்திரண்டாம் வயதில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். இவனுக்கோ எழுபத்துமூன்றுமாண்டில் புரட்டாசி மாதத்தில், கிருஷ்ணபட்சம் அஷ்டமியில் நிச்சயமாய் மரணம் ஏற்படும் என்று சொல்வோம். தாயே! கேட்பாயாக.

40. பின்சென்மம் தணிகைதன்னில் பிறப்பனும் க்ஷத்ரிய [சேயாய்
உன்னத செட்டுச்செய்து உத்தமன் வாழ்வானும்
மன்னன்பின் மனைவிகெண்டம் வரைகுவோம் முனியே [கேளு
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

40. அடுத்த ஜன்மம் திருத்தணிகையில் க்ஷத்திரியக் குழந்தையாய்ப் பிறப்பான். மேலான வியாபாரங்கள் செய்து உத்தமனாக வாழ்வானும். இவனுக்குப்பின் மனைவியின் கண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

41. வந்தவன் யோகச்சேதி வரைகுவோம் முனியேகேளும்
விந்தையாய் இல்லம்செய்வன் மேதினி இருவூர்சேர்ப்பன்
எந்தகா லத்திலில்லம் எய்திடும் விபரம்சொல்வாய்
இந்தவன் நாற்பாண்மூன்றில் எய்திடும் யில்லம்தானே.

41. இவனுடைய யோகபாவங்களை எடுத்துச் சொல்லுகிறோம். முனிவரே! கேளும். ஆச்சரியமான வீடு கட்டுவான். இரண்டு கிராமங்களை அடைவான். இவனுக்கு எந்தக் காலத்தில் வீடு வாசல் ஏற்படும் என்று விவரமாய்ச் சொல்லுங்கள், என்று கேட்க, இவனுடைய நாற்பத்துமூன்றும் பிராயத்தில் வீடு கட்டுவான்.

42. பலருக்கும் நல்லோனுவன் பசித்தபேர்க் குதவிசெய்வன்
நிலயதைக் காப்பானுகும் நினைத்தகா ரியமுடிப்பன்
பலமுள தொழிலும்மேன்மை பெரிதான தலங்கள் [செல்வன்
கலகத்தைக் கூறுனுகும் கனதனம் சேர்ப்பானுகும்.

42. பலருக்கும் நல்லவனுவன். பசித்தோர்க்கு அன்னம் கொடுப்பான். தன் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளுவான். எண்ணிய கருமங்களை முடிப்பான். பலத்த காரியங்கள் செய்வதில் மேன்மையடைவான். மாபெரும் ஸ்தலங்களைப்போய்த் தரிசிப்பான். கலகங்களை வெளிக்காட்ட மாட்டான். பெரிய தனங்களைச் சேகரிப்பானுகும்.

43. உதித்திடு காலம்தன்னில் உத்திரம் கடைபாதத்தில்
கதிர்திசை ஆண்டுஒன்று கலந்திடும் திங்கள்மூன்று
இதுமுதல் பாகம்சொன்னேம் இயம்புவோம் பின்பால்சேதி
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

43. இவன் பிறந்த காலத்தில் உத்திரநட்சத்திரம் நாலாம்பாதம், சூரியனுடைய தசையில் இருப்பு வருடம் ஒன்று, மாதம் மூன்று. இவ்விதம் முதல் பாகத்தின் விவரம் கூறினேம். இனி மற்றச் செய்திகள் பின்வரும் பாகத்தில் கூறுவோம். அதிதியை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

ஜாதகம் 32

1. ஆடுசென்ம மதில்புகரும் இரவிதங்க
அதற்கிரண்டில் புதன்குசனும் ராகுமூன்றில்
நீடுசனி கடகமதி அரியிலேற
நிகர்க்குருவும் சிகியும் தனுசுதனில்நிற்கில்
கூடியிந்த நவக்கோள்கள் இருப்பாராகில்
குவலயத்தில் இதுசெனனம் ஆணேயாகும்
பீடுபெரும் காஞ்சிக்குக் கீழ்பாலாகும்
பெருமாளின் மலைக்குஅது மேற்கேயாகும்.

1. சுக்கிரனும் சூரியனும் மேஷத்தில் தங்க, புதனும் செவ்வாயும் ரிஷபத்தில் தங்க, மிதுனத்தில் குருவும், கடகராசியில் சனியும், சிம்மத்தில் சந்திரனும், குருவும் கேதுவும் தனுர்ராசியிலும் தங்க, இப்படிப்பட்ட கிரகநிலையுள்ள இந்த மேஷலக்ன ஜாதகன் ஆண் ஜன்மமாய்ப் பூலோகத்தில் அவதரிப்பான். பெருமை பொருந்திய காஞ்சீபுரத்திற்குக் கிழக்கே பெருமாளின் மலைக்கு (திருப்பதிக்கு) மேற்கே ஓர் ஊரில் ஜனிப்பான்.

	லக்கினம் சுக்கிரன் சூரியன்	புதன் செவ்வாய்	ராகு
	இராசி சக்கரம்		சனி
			சந்திரன்
கேது குரு			

2. ஆகுமே பாலைந்தி தெற்கில்நிற்கும்
ஆர்த்தாளாம் ரேணுகையும் வடக்குநிற்பாள்
சேகரமா மிதுமத்தில் பேரூராகும்
செப்புவேன் கீழ்மேலும் வீதியாகும்
போகமத வானையவன் மேற்கேநிற்பான்
புகலுவேன் தெற்கினிலே ஓடைகோயில்
வாகையுடன் மாதுருதன் வீட்டில்வந்தோன்
வமிசமோ.........குலம் வந்தான்பாரே.

2. தெற்கில் தேவி பாலைரூபமாய்க் குடி கொண்டுள்ளாள். ரேணுகா தேவி வடக்கில் இருப்பாள். இதன் மத்தியிலுள்ள ஒரு பேரூரில் கிழக்கு

மேல்வீதியில் பகவான் மேற்கே எழுந்தருளியுள்ளார் ஓர் ஓடையும் கோவிலும் தெற்கேயுள்ளது. சிறப்புற்ற தன்தாயின் இந்த ஜாதகன் வீட்டில் உதிப்பான். இவன் வமிசமோ வேளாளர் குலம்.

3. புகலிவன் செனனயோகம் புளிதனும் தந்தையோகம்
வகையுள அன்னையோகம் வகுத்திடு மிவன்முன்சென்மம்
புகையிலாப் பலன்கள்யாவும் போதவே எடுத்துரைப்போம்
தகைமைசேர் குடும்பச்செய்கை சாற்றுவோம் கேளுமாதே.

3. இவனுடைய ஜன்மபத்திரிகைப்படியுள்ள யோகமும், மேலான தந்தைதாய் இவர்களின் யோகமும், இவனுடைய முன்பின் ஜன்ம விவரங்களும், மற்ற எல்லாப் பலன்களுமாகிய இவற்றைப் போதுமான அளவு எடுத்துரைப்போம். தகைமையுள்ள குடும்பச் செய்திகளையும் எடுத்துக் கூறுவோம். கேளும், தாயே!

4. தந்தையின் சகோதரங்கள் சாற்றஆண் பலத்தைக்காணோம்
பிந்திய பெண்பால்இரண்டு பேசுவோம் தீர்க்கமாக
எந்தையே இதன்மேல்தானும் இலகிடா ததிர்ஷ்டமாகும்
கந்தனைப் பெற்றமாதே கழறுவேன் கேளுமம்மா.

4. தகப்பனாரின் சகோதரபாவத்தைக் கூறுவோமென்றால், ஆண் சகோதரன் ஏற்பட ஜாதகத்தில் பலம் இல்லை. இவருக்குத் தங்கைகள் இருவர். அவர்கள் தீர்க்கமாயுண்டு. இதற்குமேல் அதிக அதிர்ஷ்டமில்லை. கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! சொல்லுவோம் மேலும், கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தையாங்கள் சாற்றுவோம் பலபேர்க்கன்பன்
சிந்தையும் கணக்குமுள்ளான் சேர்ந்தவர் தமைக்காண்பன்
வந்தவர்க் கன்னமீவன் வண்டிவா கனமுமுள்ளான்
பந்தமாய்ப் பூமிதன்னில் பலவித வணிபம்செய்வன்.

5. தந்தையின் குணங்களை விவரிப்போம். பலபேர்களுடைய சிநேகிதன். மனத்தில் மிகுந்த ஆலோசனை யுடையவன். சுற்றத்தார் முதலியவர்களைக் கவனித்துக் கொள்வான். தேடிவந்த ஏழைகளுக்கு உணவுதந்து உதவுவான். வண்டி முதலான பலவித பிரயாண சாதனங்களை யுடையவன். கூட்டுறவுமுறையில் பூமியில் பலவிதமான வியாபாரங்களைச் செய்வான்.

6. நித்திரை அதிகமில்லான் நிஷ்டூர வார்த்தைகூறுன்
எத்திசை யோர்க்குமன்பன் ஈகையான் மர்மமுள்ளான்
பத்தியும் முடையனுவன் பாலர்மேல் பிரியமில்லான்
சக்தியை அதிகம்சேர்ப்பன் தான்சுகி போசனத்தான்.

6. அதிகமாகத் தூங்கமாட்டான். நிஷ்டூரமான வார்த்தைகளைப் பேச மாட்டான். எந்தவிடங்களிலிருப்போருக்கும் பிரியமுள்ளவனு யிருப்பான். தர்மிஷ்டன். ரகசியமா யிருப்பான். கடவுளிடத்தில் பக்தி கொண்டவன். சிறியோரிடம் பிரியமில்லாதவன். பெண்டாட்டியிடம் அதிகம் பிரிய முள்ளவன். சுகமாகச் சாப்பிடுவான்.

7. ரோமங்கள் நீட்சியில்லான் நுவலுப தேசமில்லான்
ஈனமாய்த் தொழிலைச்செய்வன் இவன்பித்த ரோகியாவன்
மானமது டையனுவன் வரவுக்குச் செலவனேகம்
தானமும் தருமம்செய்வன் தான்வலு(வி)மில்லானுகும்.

7. தலைமயிர் அதிக நீளமில்லாதவன். உபதேசங்களைப் பெருதவன். இளப்பமான காரியங்களைச் செய்வான். பித்தரோக முள்ளவனுவன். மானத்தைக் காப்பாற்றுவான். வரவிற்குமேல் செலவு செய்வான். தான தருமங்களைச் செய்வான். அதிக சரீர பலமில்லாதவனுவன்.

8. பரவசம் சுகமும்கொஞ்சம் பற்றுவன் சமர்த்தனுகும்
உறன்முறை நேசம்மேலே உட்கருத் தில்லானுகும்
திறமுள் தரளதந்தம் செப்பும்வி ரகமேதேகம்
தரம்தர மாகவாழ்வன் தாட்சிண்ய குணவானுமே.

8. சுகமும் பிறரை வசியப்படுத்தும் சக்தியும் கொஞ்சம் பெற்றவன். சாமர்த்திய முள்ளவன். உறவின்முறையோர்களுடைய சிநேகமுள்ளவன். அதிகமான ஆழ்ந்த கருத்துக்களை யுடையவனல்லன். பலமான முத்துப் போன்ற பற்களையுடையவன். விரகதாபத்தைக்கொண்ட தேகத்தையுடையவன். விதவிதமான வாழ்க்கையை நடத்துவான். தாட்சிணிய குணமுடையவன்.

9. அற்பர்கள் சிநேகமில்லான் அதிகாரி நேசம்செய்வன்
சொற்பனம் காணும்போதும் சித்தாதி போலேசெய்வன்
அற்பமாம் போகியாவன் அண்டின பேரைக்காப்பன்
சிற்பமாம் கல்விகொஞ்சம் தெலுங்குமே அற்பமாகும்.

9. கயவர்களுடன் சிநேகங் கொள்ளமாட்டான். அதிகாரிகளுடன் நேசமாயிருப்பான். சொற்பனத்திலும் சித்தர்களைப்போல் நடந்துகொள்ளுவான். அற்பசுகத்தை யடைவான். அண்டினபேர்களைக் காப்பான். சிற்பக்கலையில் சிறிது அபிவிருத்தியுள்ளான். இவனுக்குக் கொஞ்சம் தெலுங்குபாஷா ஞானமுமுண்டு.

10. பதநடை சொகுசுமுள்ளான் பத்தினிப் பிரியமில்லான்
இதமுறு சங்கீதத்தில் இச்சையன் மானமுள்ளான்
மதிநிகர் தாய்தந்தைக்கே மன்னவன் பகையதாகும்
நிதியிலான் பின்னுல்செல்வம் நிகழ்த்துவோம் இவனுக்
[கம்மா.

10. நடையுடைபாவனைகளில் சொகுசாக நடப்பான். பத்தினியினிடம் பிரியமில்லாதவன். இனிமைதரும் சங்கீதத்தில் இச்சையுள்ளவன். மானமுள்ளவன். தாய்தந்தையருக்குப் பகைவனுயிருப்பான். பணமில்லாதவன். பின்னுல் இவனுக்கே செல்வம் செழித்தோங்கும்.

11. இப்படி யிருக்கும்தந்தை இவனுட முன்சென்மத்தைச்
செப்பமாய்ச் சொல்லக்கேளாய்த் தென்திசை தோகையூரில்
மெப்புடன் ரெட்டியாகி வேளாண்மைத் தொழிலு
[முண்டாய்க்
கைப்பொருள் உள்ளானுகிக் கனதன .யோகம்பெற்று,

11. இப்படிப்பட்ட தந்தையினுடைய முன் ஜன்மத்தை ஒழுங்காய்ச் சொல்லக் கேளாய். தென்திசையிலுள்ள திருத்தோகையூரில் உண்மையான ரெட்டியாகி வேளாண்மை செய்து, கைப்பொருளும் ஏற்பட்டு, மதிப்பான ஐசுவரியயோகமும் ஏற்பட்டு,

12. ஆள்காரர் அதிகமுண்டு அதிகாரம் பெற்றேயின்னும்
நீள்புவி விசேஷமுண்டு நிகரிலாச் செட்டுச்செய்து
நாளுக்கு நாளாய்யோகம் நன்மைந்தர் மனேவியோடு
வாழ்கின்ற நாளிலேதான் வருமூழி சொல்லக்கேளாய்.

12. வேலேயாட்கள் அதிகம் ஏற்பட்டவன். அதிகாரம்பெற்ற இவன், இன்னும் விசேஷமான பூஸ்திதிகளே யுடையவன். ஒப்பில்லாத வியாபாரம் செய்து, நாளுக்குநாள் யோகம் விருத்தியாகி, நல்ல மனேவி மக்களுடன் வாழ்ந்து வரும் நாட்களில், பண்டை ஊழ்வினே ஒன்று வந்து சேர்ந்தது. அதைச் சொல்லக் கேட்பாயாக.

13. வருவோர்க்கு அன்னம்வஸ்திரம் வான்பொருள் அளித்து
[மேலும்
பெருமையாய்ச் சோலேவைத்துப் பிசகிலா திருக்கும்போது
உருமையாய் அகதிஓர்நாள் உயர்மது புசித்துத்தானும்
மருவிய மனேயாள்தன்னே வாட்டினுன் கழியினுலே.

13. வந்து அண்டினபேர்களுக்கெல்லாம் அன்னவஸ்திரமும், மகத் தான பொருட்செல்வமுமளித்து, மேலும் பெருமையுடன் சோலைகளை ஏற்படுத்தி, யாதொரு பிழையும் செய்யாமலிருக்கும்போது, அச்சத்துடன் ஒரு அகதி ஒருநாள் மதுபானம் பண்ணிவிட்டுத் தன் மனைவியைக் கம்பா லடித்து வாட்டினான்.

14. அடியது பொருக்காமல்தான் அவள்மனம் துடிக்கும்போது
கொடியனை இவன்மிரட்டிக் கொண்டுதான் சிறையி [லிட்டான்
மிடியனும் மனம்கலங்கி விளம்பினான் சாபமொன்று
கடினமாய் இவன்பின்சென்மம் கௌரிதன் குலமுதித்து,

14. அந்த அடி பொறுக்காமல் அவள் மனம் துடித்து வருந்துவதைப் பார்த்து இவன் இக்கொடிய அகதியைக் கோபித்து மிரட்டிச் சிறையிலடைத் தான். அந்த ஏழையாயிருப்போனும் மனக்கலக்கத்துடன் பின்வருமாறு சாபம் கொடுக்கலானான். இவன் அடுத்த ஜன்மத்தில் கௌரிகுலத்தி லுதித்து,

15. என்னைப்போல் மதுபுஜித்து எவர்களும் நகைக்கச்சென்மம்
மன்னவர் எடுப்பாயென்று வழுத்தினான் அகதிதானும்
அன்னையே அவனிவன்தான் ஆகையால் இச்சென்மத்தில்
கன்னியர் காமத்தாலும் கள்ளினால் அவமானத்தன்.

15. என்னைப்போல் மதுபானம்பண்ணி, எவரும் பரிகாசம் பண்ணும் படி ஜன்மமெடுப்பான் என்று கூறினான். அப்படி ஜன்மமெடுத்தவன் தான் இவன். அம்மையே! ஆதலால் இந்த ஜன்மத்தில் இவன் கன்னிப் பெண்கள்பேரில் காமாதுரனாயிருந்தும் சுராபானம் பண்ணியும் அவமான மடைந்தான்.

16. இப்படி அறுவர்கூற இயல்பர ராசர்சொல்வார்
ஒப்புடன் தந்தைஸ்தானம் உயர்குரு இருப்பதாலே
எப்படி யவமானங்கள் இவனுக்குக் கிடைக்குமென்றீர்
செப்பமாய்க் குருவினோடு சிகிகூடி யிருப்பதாலே.

16. இவ்விதம் ஆறுரிஷிகள்கூற பராசரர் வினவலாயினர். ஒழுங் காகப் பித்ருஸ்தானத்தில் தேவகுரு இருப்பதனால் எப்படி இவனுக்கு அவமானங்கள் ஏற்படும் என்றீர்கள்? ஒழுங்காகக் குருவினோடு கேதுவும் கூடியிருப்பதனாலே,

17. கொஞ்சமேனும் நிந்தையது சொல்லுவார்கள்
குணமுடனே முன்செனமம் செய்தபுண்ணியம்
வஞ்சியே யிவன்சுகித்து வாழ்வானம்மா
வள்ளலுமே பின்செனமம் வேங்கிடத்தில்
தஞ்சமாய் க்ஷத்திரிய ருகியேதான்
சகலபாக் கியம்பெற்றுச் சமஸ்தானத்தில்
அஞ்சலென்று வருவோர்க்கு அன்னமீய
அக்கணக்குப் பார்ப்பானும் அம்மையேகேள்.

17. சிறிதாயினும் நிந்தை ஏற்படும் என்று சொல்லுவார்கள். குணமாகவே இவன் போனஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனுகச் சுகித்து வாழ்வானம்மா. இக்கொடையாளனும் அடுத்த ஜன்மத்தில் திருவேங்கடத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து சகல பாக்கியங்களும்பெற்று, சமஸ்தானத்தில் அபயம் என்று வருபவர்களுக்கு அன்னங்கொடுக்கும் சத்திரத்தின் கணக்குகளைப் பார்ப்பானுகும். அம்மையே! கேட்பாயாக.

18. இன்னவன் செனனம் இருப்பிடமதற்கு யீரெழு கடிகை [தூரத்தில்
கன்னியின் மூலைதன்னிலே பேரூர்காவலன் தந்தையின் [ஊராம்
நன்னிய வடதென் வீதியுமாகும் நவின்றிடும் சூரியவாஸ்து
சொன்னனே தெற்கில் மூத்தவ ரிருப்பான் சுகசிவகோஷ்டம்.

18. இவன் ஜனித்த இடம் கன்னியாகுமரியின் மூலையிலேயே பதினுன்கு நாழிகை (மைல்) தூரத்திலுள்ள பேரூரின் காவலனுடைய தந்தையின் ஊராகும். வடக்குத்தெற்கு வீதியாகும். சூரியன் வாஸ்துபுருஷனுயிருக்குமிடம். தெற்கில் பிரம்மாவின் கோவில். மீனத்தில் சிவனுடைய கோவில் சுகமாகவுள்ளது.

19. மீனத்தில் மாயோன் கோஷ்டமு மிருக்கும்
மேற்கினில் சோலை சாலைகளும்
ஆனதோர் உத்திரம் நதிக்கரை சூழி
அந்தஅடை யாளத்துள் வாசம்
ஈனமில் லாததந்தை வீடதுவும்
இந்த அடையாளத்து ளிருக்கும்
தேனெனு மொழியாய் இவன்குணம்
தன்னைச் செப்பவும் கேட்டிடுவாயே.

19. மேற்கே மகாவிஷ்ணுவின் கோவில். சோலைகளும் சாலைகளும் (தோட்டம் துரவுகளுள்ள) நதிக்கரையுள்ள வடக்குப் பக்கத்து ஊர். இந்த

அடையாளங்கள் கொண்ட இடத்தில் வசித்து வந்தான். குற்றமற்ற தந்தையின் வீடும் இந்த அடையாளங்களைக் கொண்டது. இவனுடைய குணங்களை விவரிப்போம், கேட்பாயாக.

20. அந்தணர் தெய்வபக்தி ஆசாரம் சுசீலனுகும்
நிந்தையு மில்லான்நல்லன் நிகர்தந்தம் வரிசையுள்ளான்
விந்தைமால் நிறம்சிகப்பன் வீர்க்கரம் மச்சரேகை
சந்ததி உடையோன்மூத்தோன் சகோதரம் யில்லையம்மா.

20. பிராமணர் தெய்வம் இவர்களிடத்தில் பக்தியும், சீலமான நல்ல ஆசாரமும் உள்ளவன். பிறர் நிந்திக்கமாட்டார்கள். நல்லவன். ஒழுங்கான பல்வரிசைகளை யுடையவன். மாநிறம் கொண்டவன். வீரக்கைகளில் மச்சரேகை யுள்ளவன். குழந்தைகளுடையவன். இவனே மூத்தவன். சகோதரரில்லை யம்மா!

21. மங்கையர் மோகவானும் மனமது தளர்ச்சியுள்ளான்
தங்கையர் தம்பியுள்ளான் தந்தைதாய்த் தீர்க்கமுள்ளான்
பொங்கிய பூமியாலும் புகழ்ச்சியால் செட்டுவாலும்
இங்கிதப் பொருளும்சேர்ப்பன் இவன்தந்தை விரோதி
[யாகும்.

21. ஸ்திரீலோலன். தளரும்படியான மனதை யுடையவன். தங்கை தம்பிகள் இவர்களை யுடையவன். தாய்தந்தையர்களைத் தீர்க்கமாக உடையவன். விருத்தியாகும் பூஸ்திதியாலும் வியாபாரப்புகழ்ச்சியினாலும் ஒழுங்காகப் பொருட்செல்வத்தைச் சேர்ப்பான். இவன் தந்தை இவனுக்கு விரோதியாவன்.

22. பதநடை சொகுசுமுள்ளான் பாரியர் பட்சமுள்ளான்
இதமுறு வார்த்தைசொல்வன் இவன்பித்த தேகனுவன்
சதமுல ஒடிசல்தேகன் சத்தியன் எவர்க்கும்நல்லன்
அதனமாம் பொசிப்பேயில்லான் ஐயன்மேல் பத்தியாவன்.

22. சொகுசாக நடப்பான். பெண்டாட்டியினிடம் பிரியமுள்ளவனு யிருப்பான். பிரியமான வார்த்தைகளைக் கூறுவான். பித்த சம்பந்த மானதும் ஒடிசலானதுமான தேகத்தை யுடையவன். சத்தியசந்தன். யாவர்க்கும் நல்லவன். வலுவான சாப்பாடு புசிக்கமாட்டான். கடவுள் மேல் பக்தி பூண்டவன்.

23. காலிகள் விருத்தியுண்டு கனத்ததோர் பூமிசேர்ப்பன்
சீலனும் வித்தையுள்ளான் சிறப்புளான் கோபியாவன்
பாலர்கள் அதிகமில்லான் பண்புவாய்ச் சாலனுகும்
நீலம்போல் விழியினுளே நிகழ்த்துவோம் கேளுமாதே.

23. நாற்கால் மிருகங்களின் விருத்தியுள்ளவன். அதிகமான பூமிகளைச் சேர்ப்பான். சீலமுள்ளவன். நல்ல படிப்பாளி. சிறப்புள்ளவன். கோபமுடையவன். குழந்தைகள் அதிகமில்லாதவன். பக்குவமாய்ப் பேசும் வாய்ச்சமர்த்தன். நீலோற்பலம் போன்ற விழிகளையுடையவளே ! சொல்லுவோம், கேட்பாயாக.

24. இந்நெறி உடையோனுக்கு இயற்றுவோம் மணத்தின்காலம்
நன்நய ஜெருபாவெணட்டுள் நயப்புடன் உள்ளூர் தன்னில்
கன்னிகை வருவாளந்தக் கன்னிக்குப் புத்திரவிருத்தி
சொன்னனே ஆண்பாலொன்று சுந்தரி மூனறும்தீர்க்கம்.

24. இப்படிப்பட்ட ஒழுங்கு தவறாதவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய பதினெட்டாம் பிராயத்தில் உள்ளூரிலிருந்தே கன்னிகை வருவாள். அவளுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பெண்கள் மூன்றும் பிறக்கும்.

25. இதற்குமேல் உதித்தால்புத்திரர் இலகிடா தரிஷ்டமாகும்
அதற்குமேல் முப்பானெட்டில் அவனுட தந்தைமாய்வன்
மதிவத னத்தாளுக்கு வகுக்குறேன் ஒருபானைந்தில்
சதிருள சாதகர்க்குச் சாற்றுவேன் அறுபானைந்தில்.

25. இதற்குமேல் புத்திரர் ஏற்பட்டால் துரதிர்ஷ்டத்தால் இருக்காது. அதற்குமேல் முப்பத்தெட்டாம் வயதில் இவனுடைய தந்தை மரணமடைவான். அதற்குப்பிறகு பதினைந்து வருடங்களுக்குமேல் தாய்க்குக் கண்டம் ஏற்படும். சகல பாக்கியங்களுமுடைய இந்த ஜாதகனுக்கு அறுபத்தைந்தாம் வயதில் மரணம் ஏற்படும்.

26. பங்குனி மாதம்தன்னில் பஞ்சமி பூர்வபக்கம்
நஞ்சுமேல் [1] துயில்வோன்பாதம் நாயகன் அடைவான் [பின்பு
தஞ்சமா நகர்க்குமேல்பால் சாற்றிய சிற்றூர்தன்னில்
கஞ்சனல் வரியப்பட்டுக் காராள [2] குலத்திலேதான்.

26. அதுவும் பங்குனி மாதத்தில், பூர்வபட்சம் பஞ்சமியில், வைகுண்டநாதனின் பாதத்தை ஜாதகன் அடைவான். பிறகு தஞ்சைமாநகருக்கு மேற்கேயுள்ள ஒரு சிறிய ஊரில் பிரம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டு வேளாளர் குலத்திலே,

---

1. திருமால்
2. சூத்திரர், ஸ்ரீவைசியர், வேளாளர்

27. உதிப்பனே யிவன்பின்சென்மம் உயர்பூமி அதிகமுண்டு
பதிதனில் லட்சுமிவாசம் பந்துவும் மெச்சவாழ்வன்
அதிபதி யாகவாழ்வன் அறம்தன்னை வளர்க்கும்மாதே
நிதிபெறு கணிதமாய்ந்து நிகழ்த்தினோம் ரிஷிகளம்மா.

27. உதிப்பானே இவன் மறு ஜன்மத்தில். உயர்ந்த பூஸ்திதி அதிகமுண்டு. வீட்டில் இலட்சுமி வாசம்பண்ணுவாள். சொந்தக்காரர்கள் மெச்சும்படி, அதிபதிஸ்தானத்திலிருந்து வாழ்வான். தருமத்தை வளர்க்கும் தேவியே! சம்பத்துவிருத்தியைக் கூறும் கணிதசாஸ்திரங்களை ஆராய்ந்து இவ்வாறு சொன்னோம்.

28. இப்படி அறுவர்கூற இயல்முனி உரைக்கலுற்றார்
செப்பமாய் அறுபத்தைந்து சொன்னீரே யிதற்குள் [கெண்டம்
மைப்புடன் உண்டோவென்ன விளம்புவார் அறுவர்தானும்
மைப்படி கண்ணினாளே வகுக்குறோம் கேளுமம்மா.

28. இவ்விதம் ஆறுரிஷிகள்கூற, மற்றொருமுனி உரைக்கலுற்றார். ஒழுங்காய் அறுபத்தைந்து என்று சொன்னீரே! இதற்குள் கண்டம் ஏதாவது உண்டோ என்று வினவ, ஆறுரிஷிகளும் பின்வருமாறு கூறலுற்றார். மைதீட்டிய கண்ணையுடையவளே! கேட்பாயாக.

29. லக்கினத்தில் புகரும்நிற்க நவில்குரு ஒன்பதேற
மிக்கசா தகர்க்கேயிந்த வியாதிகள் வந்தபோதும்
தொக்கவே நீங்குமென்று சொல்லினார் ரிஷிகள்தானும்
திக்கென யோகம்தன்னைச் சேதியைச் சொல்லக்கேளாய்.

29. மேஷலக்கினத்தில் சுக்கிரனும், ஒன்பதாமிடத்தில் வியாழனும் இருக்க, இருவரும் பார்வையிலிருப்பதனால் ஜாதகனுக்கு வியாதிகள் வந்தபோதிலும் நிவர்த்தியாகும் என்று ரிஷிகள் கூறினார்கள். திடமொன்று ஜாதகனுடைய யோகபாவங்களைச் சொல்லலுற்றார்கள். கேட்பாயாக.

30. தனித்ததோர் வருடம்தொட்டுச் செப்புவேன் கேளுமம்மா
குணித்திடு வீரஞ்சுக்குள் குறைவதும் பொருளில்லாமல்
வனிதையே இதற்குமேலே மரணமற் றுலகிலேதான்
கனிவுள பொருளும்சேரும் காரிழை கேட்டிடாயே.

30. ஜனித்த வருடம்தொட்டு ஏற்படும் யோகபாவங்களைக் கூறுவோம், கேளம்மா. முதல் பத்து வருடங்களுக்குள் பொருளில்லாத குறையும், இதற்குப் பிறகு மரணபரியந்தம் மேன்மேலும் பொருள் விருத்தியும் ஏற்படும். காரிழையே! கேட்பாயாக.

31. இவ்வாறு முனிவர்கூற ஈசுவரி மனதில்சங்கை
வந்தது சொல்லுவேன்கேள் வளர்தந்தை யோகச்செய்கை
முந்திய கூறுமின்ன மொழிகுவோம் அம்மாநாங்கள்
சந்ததி பிறந்தபின்பு சாற்றுவோம் ஏழாண்டுக்குள்.

31. இப்படி முனிவர்கள் சொல்ல, ஈசுவரியின் மனதில் ஒரு சங்கை தோன்றிற்று. வளர்த்த தந்தையின் யோகச்செய்கைகளை முந்தியே சொல்லும் என்று கேட்க, அம்மா! நாங்கள் மொழிகிறோம். சந்ததி ஏற்பட்ட பிறகு சொல்லுவோம், ஏழு வருஷத்திற்குள்.

32. பலவித தொழிலும்நஷ்டம் பகையுண்டு ரணமுமுண்டு
இலகிலா சபலபுத்தி யிடுக்கண்கள் அனேகமுண்டு
நலமிலா தேகநோயும் நாட்டுவோம் இவன்தந்தைக்கே
குலவிய இதற்குமேலே கூறுவோம் நாலாண்டுக்குள்.

32. பலவிதத் தொழிலும் நஷ்டமாகும். பகைவருமுண்டு. கடனுமுண்டு. சபலபுத்தியும், அதனால் இடுக்கண்களும் (துன்பங்களும்) அநேகம் ஏற்படும். சுகமில்லாத தேகவியாதியும் இவன் தந்தைக்கே ஏற்படும் என்று சொல்லுவோம். இதற்குமேல் நாலு வருடங்களுக்கெல்லாம்,

33. மதுதொழி லாலேலாபம் வந்திடு மிவனுக்கம்மா
சதிருள பொருளும்சேரும் தனத்தினால் பூமியோங்கும்
அதிபதி யாகவாழ்வன் அனேகரும் சினேகமுண்டு
துதிபெரு குடும்பம்தன்னில் தோற்றுவோம் சூதகம்தான்.

33. மது (சாராயம்) செய்து விற்பனை செய்வதில் லாபம் பெறுவான். இவனுக்குச் சகல சௌபாக்கியங்களையும் தரும் பொருளும்சேரும். தனத்தினால் பூஸ்திதி அதிகரிக்கும். பலர்க்கு அதிபதியாக வாழ்வான். அநேகர் இவனுக்கு நேசமாவர். இவனுடைய குடும்பத்தில் ஆசௌசமும் ஏற்படும்

(மற்றசங்கதி இரண்டாம் பாகத்தில் தெரியலாம்.)

ஜாதகம் 33

1. பொன்னவன் இரவிமைந்தன் புகருமே யுச்சமாக
மன்னிய கயர்சேய்கும்பம் மால்மதி மீனமாகத்
தன்னிலே சிகியும்சிம்மம் தரித்திடு மேடம்சென்மம்
நன்னிய நவக்கோளிவ்வார் நவின்றதால் பலன்சொல்வீரே.

1. வியாழனும் சூரியனும் சனியும் சுக்கிரனும் தங்கள் தங்கள் உச்சஸ்தானமேற, இராகுவும் செவ்வாயும் கும்பத்தில் தங்க, சந்திரனும் புதனும் மீனத்தில் இருக்க, கேது தனித்து சிம்மத்தில் தங்க, இந்த மேஷலக்ன ஜாதகத்திற்கு நவக்கிரகங்கள் இவ்வாறு நின்றதனால் உண்டான பலனைச் சொல்லுங்கள் என்று (Refer to stanzas 35 and 36).

புதன் சந்திரன் சுக்கிரன்	லக்கினம் சூரியன்		
ராகு செவ்வாய்	இராசி	சக்கரம்	குரு
			கேது
		சனி	

2. பார்வதி கேட்கும்போது பராசரும் சொல்லுகின்றார்
சீர்புகழ் ஆண்பால்சென்மம் செப்புவோம் பிறந்தஇல்லம்
பாரிய ஊரேயாகும் பகருவோம் வடதென்வீதி
கூறுவோம் மேற்குவாசல் குணமுடன் மாமனில்லம்.

2. பார்வதி கேட்கும்போது, பராசரும் சொல்லலுற்றார். புகழ் பெற்ற ஆண்பால் ஜனனம். பிறந்த விட்டின் விவரம் கூறுவோம். பெரிய ஊரில், வடக்குத்தெற்கு வீதியில், மேற்குப்பார்த்த மாமன் வீடாகும்.

3. உத்திரம் ஈசன்காளி உயர்தென்மேல் தும்பிநிற்கும்
வித்தகி மாரிதானும் விளங்கிடு மிதுனதிக்கில்
சித்தமாய் மேற்கிலேதான் சிறப்பிலா கோஷ்டமுண்டு
பத்தியஇவ் வடையாளத்துள் பாலகன் செனிப்பானம்மா.

3. வடக்கே பரமசிவன் கோவிலும், அம்மன் கோவிலும் உண்டு. தென்மேற்கில் விநாயகர் கோவில் உண்டு. வடகிழக்கே காளி கோவில். மேற்கே இடிந்த கோவிலுண்டு. இவ்வித அடையாளங்கள் கொண்ட வீட்டில் இப்பாலகன் ஜனிப்பானம்மா.

4. செனித்ததோர் இல்லத்துக்குச் செப்புவேன் தந்தையில்லம்
வனிதையே மீனதிக்கில் வந்திடும் கடிகைஒன்றுள்
இனிமையாய்ச் சிற்றூர்தன்னி லிசைகுவோம் வடதென்வீதி
தனியனுய்ச் சந்திப்பானே தானவன் தெற்கில்நிற்பன்,

4. இவன் ஜனனமான வீட்டிற்கு இவன் தந்தை இல்லம் எங்குள்ளது என்பதைச் சொல்லுவேன். அது மீனதிக்கில் ஒரு நாழி (மைல்) தூரத்திலுள்ள சிறிய ஊரில் உள்ளது. வடக்குத்தெற்கு வீதி. பணக்காரனுயிருப்பான். சிவன் தெற்குதிக்கிலும்,

5. காளியும் அதன்கீழ்தங்கும் கனத்திடும் உத்திரதிக்கில்
மாரியும் தும்பியப்பன் மாரனை எரித்தோன்வாசம்
கூறுபாஞ் சாலிகுண்டம் கொண்டஇவ் வடையாளத்துள்
தேறிய கங்கைவமிசம் சேயவன் வருவானம்மா.

5. காளி அதன் கிழக்கே நிற்கும். வடக்கே காளியும், விநாயகரும், மன்மதனை எரித்தோனும் வசிப்பர். பாஞ்சாலிகுண்டம் என்ற தெப்பக் குளமும் கொண்ட இந்த அடையாளங்களைக் கொண்ட இடத்தில் வேளாளர் வமிசத்தில் ஜாதகன் வந்துதிப்பானம்மா.

6. இன்னவன் செனனயோகம் எழில்பெரும் தந்தையோகம்
மன்னிய அன்னையோகம் வரும்புத்திர களத்திரயோகம்
தன்னிலே முன்பின்சென்மம் சாற்றுவோம் மாமன்யோகம்
அன்னமே யாங்கள்சொல்லும் அடைமொழி குன்றிடாது.

6. இவனுடைய ஜனனகாலயோகமும், தாய்தந்தையர் யோகங்களும், மனைவிமக்கள் யோகங்களும், இவனுடைய முன்பின் ஜன்மபலன்களும், மாமன்யோகமும் சொல்லுவோம். அன்னமே! யாங்கள் கூறும் அருள் வாக்கிற்குக் குறைவு யாதொன்றுமில்லை.

7. தாதைக்குத் தாரம்ரெண்டில் தரித்திடும் கடைமாதீன்ற
நீதியாய் மூன்றும்சென்மம் நிகழ்த்துவோ மிவனின்தந்தை
கோதிலா அவன்குணத்தைக் கூறுவோம் சிவந்தமேனி
மேதினில் ஒடிசல்தேகி வித்தகன் யூகைசாலி.

7. தந்தைக்கு ஏற்பட்ட இரண்டு பெண்டாட்டிகளில், கடைசியாய் வந்தவளுக்குப் பிறந்த மூன்றும் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். இவனுடைய தந்தையின் குணத்தைக் கூறுவோம். சிவப்பான நிறமுடையோன். ஒடிசலான தேகத்தையுடையவன். கெட்டிக்காரன். மதியூகி.

8. பொறுமையு முடையனுகும் புண்ணிய மனத்தனுகும்
சிறுமையென் றடைந்தோர்தம்மைச் செல்வனு
[மாதரிப்பான்
நிறையவே செல்வமுள்ளான் நீள்நில மதிகம்சேர்ப்பன்
அறைகுருேம் பித்ததேகி அலேச்சலும் உடையனுமே.

8. பொறுமை யுடையவன். தர்மசிந்தனே யுள்ளவன். எழையாய் வந்தவர்களுக்கு ஒத்தாசை செய்வான். அதிகமாகச் செல்வவிருத்தியுடையவன். அகண்ட பூமியை அதிகம் சேர்ப்பான். பித்த சம்பந்தமான சரீர முடையவன். அலேச்சலும் திரிச்சலும் உடையவன்.

9. அன்னங்கள் போடவல்லான் ஆசார முடையனுவன்
கன்னென மொழியுமுள்ளான் காதலி ஒருத்தியாகும்
பின்னமில் லாததேகம் பிதுராஸ்தி விருத்திசெய்வன்
நன்னிய குடும்பமுள்ளான் நாதனுர் பூசைசெய்வன்.

9. பிறருக்குச் சாப்பாடுபோட வல்லவன். ஆசார முடையவன். கனிந்த சொற்களேக் கூறுவான். பெண்டாட்டி ஒருத்திதான். வாட்டசாட்டமாயுள்ள தேகமுள்ளவன். பிதாவின் ஆஸ்தியை விருத்தி செய்வான். அருமையான குடும்பத்தை யுடையவன். கடவுளேப் பூஜைசெய்து வழிபடுவான்.

10. அடக்கமும் ஒடுக்கமுள்ளான் அண்டின பேரைக்காப்பன்
துடுக்கென வார்த்தைகூருன் சோம்பிடான் காரியத்தில்
நடக்கையும் நல்லதாகும் நாடெல்லாம் கீர்த்திகொள்வன்
இடக்குகள் பேசானுகும் இவன்சம யோகவானும்.

10. அடக்க ஒடுக்க முள்ளவன். அண்டினவரைக் காப்பான். துடுக்கான வார்த்தைகளேச் சொல்லமாட்டான். காரியம் செய்யும்போது சோம்பித்திரியமாட்டான். நல்ல நடத்தையையு முடையவன். தேசமெங்கும் புகழ்பெற்றவன். இடக்காய்ப் பேசமாட்டான். சமமான யோகத்தை யுடையவன்.

11. இன்னவர் துணேவர்தன்னே இயம்புவோம் ஆண்
[பாலொன்று
கன்னியும் ஒருத்தியாகும் கனக்காது விருத்திராது
மன்னவன் ஆண்பாலும்தான் வரனுக்கு இளேயோனுகும்
நன்னிய குணத்தோனுக்கு நாயகன் செனிப்பானம்மா.

11. இவனுடைய சகோதரரைப்பற்றிப் பேசுவோம். சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தியே. இதற்குமேல் கனத்த குடும்பமில்லே.

பிறந்தாலும் விருத்திக்கு வராது. சகோதரனும் இவனுக்கு இளையவனுவன். இந்த குணவானுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய் பிறப்பான்.

12. சாதகர் நிறம்குணத்தைச் சாற்றுவோம் சிவந்தமேனி
நீதியாய் சமதேகத்தன் நிகழ்பித்த உஷ்ணதேகி
மேதினில் கல்வியுள்ளான் விசேஷமாய்த் தனமும்சேர்ப்பன்
ஆதியாய் நிரைந்தசெல்வம் அணுகிடு மிவனுக்கம்மா.

12. ஜாதகனுடைய நிறமும் குணமும் கூறுவோம். சிவந்த நிறமுள்ள சரீர முடையவன். ஒழுங்கான சமமான தேகத்தை யுடையவன். பித்தமான உஷ்ணபீடை யுடையவன். உலகினில் கல்விமான் எனப்படுவான். விசேஷமான தனங்களைச் சேர்ப்பான். ஆதிகாலத்தில் (பூர்விகமாக) நிறைந்துள்ள சொத்து இவனுக்கே வந்து சேரும், அம்மா!

13. தானங்கள் தருமம்செய்வன் சற்சன ருறவுகொள்வன்
ஈனரை உறவுகொள்ளான் எதிரியை நாசம்செய்வன்
மானமாய்ச் சீவிப்பானும் வாக்குகள் தப்பானுகும்
கோனென அதிகாரங்கள் கொள்ளுவ னிவனேயம்மா.

13. தான தருமங்கள் செய்வான். ஸஜ்ஜனங்களை நேசம் கொள்ளுவான். அல்ப ஜனங்களைச் சிநேகம் கொள்ளமாட்டான். எதிர்த்தோரை ஒழித்துக் கட்டுவான். கௌரவமாய் ஜீவிப்பான். சொன்ன வார்த்தையை நிலை நாட்டுவான். இராஜாக்களைப்போல் அதிகாரங்கள் செலுத்தும் செல்வாக்குடையவனுவன் இவன்தான், அம்மா.

14. தாதையி னுஸ்திதன்னைச் சாதகன் விருத்திசெய்வான்
தாதையின் கீர்த்திபோலச் சாதகன் கீர்த்திகொள்வன்
மேதினில் அச்வமுள்ளான் வண்டிவா கனமுமுள்ளான்
மாதவர் துதிப்பானுகும் வாக்குகள் தப்பாதென்றேம்.

14. தந்தையின் சொத்துக்களை நம் ஜாதகன் விருத்திக்குக் கொண்டு வருவான். தந்தையைப் போலவே மிக்க கீர்த்தியைப் பெறுவான். குதிரைகளை யுடையவன். வண்டி வாகன முள்ளவன். தபசிகளை வணங்கி வழிபாடு செய்வான். சொன்ன வாக்குப்படி நடப்பான்.

15. குடும்பத்தை விருத்திசெய்வன் கோவுகள் அதிகம் [சேர்ப்பன்
இடும்புகள்[1] செய்வானுகு மீசைவான் கோபவானும்
அடைமொழி அதிகம்கூர்வன் ஆள்கார ருடையனுகும்
படபட நடையுமுள்ளான் பத்தினி நேயனுகும்.

---

1. துன்பங்கள்

15. குடும்பத்தை விருத்திக்குக் கொண்டு வருவான். பசுக் கூட்டங்களைச் சேர்ப்பான். இடுக்கண்கள் செய்வான். தர்மிஷ்டன். கோபமுள்ளவன். திருஷ்டாந்தங்களுடன் சம்பாஷிப்பான். பரிவார ஜனங்களையுடையவன். படபட வென்ற நடையுள்ளவன். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான்.

16. பலவித செட்டுசெய்வன் பந்துவும் மெச்சவாழ்வன்
இலகிய திருவும்சேரும் இவன்பொரு ளுதவிசெய்வன்
குலவிய துணைவர்தன்னைக் கூறுவோம் முன்னோன்சேதம்
தலைமையாய் இரண்டாம்சென்மம் சாதக னென்று
[சொன்னோம்.

16. பலவித வியாபாரங்களைச் செய்வான். சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். விளங்கும்படியான இலட்சுமீகடாட்சம் வந்து சேரும். பிறருக்குப் பணம் காசுகள் கொடுத்து ஒத்தாசை செய்வான். ஏற்பட்ட சகோதரத்தைப்பற்றிப் பேசுவோம். மூத்தவன் இறந்துபடுவான். இரண்டாவதாக உதித்தவன் நம் ஜாதகன் என்று முன்னமே சொன்னோமல்லவா!

17. சாதகன் துணைவராண்பால் சாற்றுவோம் ஒருவனுகும்
மேதினில் பன்னிரெண்டு விளங்கிடு மூவர்தீர்க்கம்
தீதாகும் இதன்மேல்தோன்றில் செப்புவோம் மாதுர்
[வர்க்கம்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

17. ஜாதகனுடன் பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனுவன். உலகினில் உதித்த பன்னிருவரில் மூவர்தான் தீர்க்கமாயிருப்பவர்கள். இதன்மேல் பிறந்தவர்கள் சேதமாவர். இதற்குமேல் மாதுர்வர்க்கத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். பகவானைப் பதியாய் அடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

18. அன்னையின் துணைவர்தன்னை அறைகுறேம் ஆண்
[பாலொன்று
கன்னியும் நான்கதாகும் கழறினேம் தீர்க்கமாக
மன்னிய தாய்குணத்தை வரைகுறேம் இருசிவப்பாம்
நன்னிய ஒடிச்சலுள்ளாள் நன்முக வடிவுமுள்ளாள்.

18. தாயுடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரிகள் நால்வர் என்று சொன்னோம். இது தீர்க்கம். பொருந்திய தாயின் குணங்களை எடுத்துரைப்போம். பொது நிறமுள்ளவள். ஒடிச்சலான சரீரத்தை யுடையவள். நல்ல அழகான முகத்தை யுடையவள்.

19. அடக்கமு முடையளாகும் ஆளனுக் கினியளாகும்
துடுக்கென வார்த்தைகூருள் சொல்பிச காதாளாகும்
நடக்கையும் நல்லதாகும் நாடெலாம் மெச்சவாழ்வள்
இடக்குகள் பேசாளாகும் இவளுமே அதிர்ஷ்டமுள்ளாள்.

19. அடக்க முடையவள். புருஷனுக்கு இனிமையாய் நடந்து கொள்ளுவாள். துடுக்கான வார்த்தைகளைக் கூறமாட்டாள். சொன்ன சொல் தவறமாட்டாள். நல்ல நடத்தையு முள்ளவள். நாட்டாரெல்லாரும் புகழும்படி வாழ்வாள். துன்பமான வார்த்தைகளைப் பேசமாட்டாள். இவளும் நல்ல அதிர்ஷ்டசாலியாவள்.

20. புத்திமான் பொறுமையுள்ளாள் பூஷணப் பிரியமு
[முள்ளாள்
நித்தியம் சுசீலமாவள் நிகர்பித்த ரோகியாவள்
புத்திரர் ஆசையுள்ளாள் புண்ணிய மனத்தளாகும்
அத்திமா மகனைப்பெற்ற அம்மையே மேலுங்கேளே.

20. நல்ல புத்தி சாலி. பொறுமை யுடையவள். ஆபரணங்கள் அணிவதில் பிரிய முள்ளவள். நெறிமுறையைத் தினசரி அனுஷ்டிப்பாள். நல்ல சீல முடையவள். பித்த சம்பந்தமான வியாதி யுள்ளவள். புத்திரர் மேல் ஆசை கொண்டவள். தர்ம சிந்தனை யுடையவள். விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே ! மேலும் கேட்பாயாக.

21. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் வேலங்
[காட்டில்
அந்தவன் பிரம்மசேயாய் அவனுமே உதித்துப்பின்னும்
மந்நிய பூமியுண்டாய் வளமுள மாதர்மைந்தர்
தந்நிலே செல்வம்பெற்றுத் தானவன் வாழ்ந்தானம்மா.

21. தந்தையின் முன் ஜன்மத்தைப் பற்றிய விவரங்கள் கூறுவோம். திருவேலங்காட்டில் பிராமணக் குழந்தையாய் உதித்து, பின்பு அன்னியர் களது பூஸ்திதிகள் தனக்கு ஏற்பட்டு, மனைவி மக்கள், சொத்து சுதந்திரங்கள் ஏற்பட்டு இவன் வாழ்ந்து வரலாயினன்.

22. அரசர்பால் அணுகியேதான் அவனும்சீ வித்துப்பின்பு
குறைவிலாச் செல்வம்பெற்றுக் குன்மரோ கத்தினாலே
மறையவன் மரணமாகி வந்தவன் இவனின்தந்தை
அறுமுகன் தன்னைப்பெற்ற அம்மையே மேலுங்கேளே,

22. அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று ஜீவனம் செய்வான். பின்பு குறைவற்ற செல்வத்தை யடைந்து, வயிற்றுவலியினாலே இப்பிராமணன் மரண மடைந்து, பிறகு ஜனித்தவன் இவனின் தந்தை

யாவன். ஆறுமுகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே! மேலும் கேட்பாயாக.

23. இப்படி முனிவர்கூற ஈச்வரி கேட்கலுற்ருள்
எப்படி யிவன்முன்சென்மம் இயல்பிரம்ம குலமுதித்து
ஒப்புடன் இச்சென்மத்தில் உயர்கங்கை வமிசம்தன்னில்
மைப்புடன் வந்தசேதி விளம்புவீர் என்றுகேட்டாள்.

23. இவ்விதம் முனிவர் புகல, ஈசுவரி பின்வருமாறு வினவலானாள். போன ஜன்மத்தில் உயர்ந்த பிரம்ம குலத்தில் பிறந்த இவன், ஒப்புடன் இந்த ஜன்மத்தில் மேலான வேளாளர் குலத்தில் அடுத்து வந்த விவரத்தின் காரணம் சொல்லுவீர் என்று கேட்டாள்.

24. திருவென உமையாள்கேட்கச் செப்புவார் பராசர்தானும்
பெருமையாய் முன்சென்மத்தில் பிராமண குலமுதித்து
அருமறை யோதாஞகி அந்தியக் காலம்தன்னில்
கருமியாய்க் குன்மநோயால் காளையும் மரணமாகி,

24. இலட்சுமீ தேவி இவ்விதப் பிரச்னை கூற, பராசர முனிவர் பின் வருமாறு பதிலளிக்கலானார். பெருமையுடன் போன ஜன்மத்தில் பிராமண குலத்திலுதித்தும், அரிய மறைகளை யோதாததால் அந்திய காலத்தில் குன்ம நோ(வயிற்று வலி)யின் கொடுமையால் ஜாதகனும் மரணமடைந்து,

25. கஞ்சனால் வரியப்பட்டுக் காளையுமிச் சென்மத்தில்
மிஞ்சவே கங்கைசேயாய் விளங்கினன் இவனேயம்மா
வஞ்சியே யிவன்பின்சென்மம் வகுக்குறோம் காஞ்சிதன்னில்
தஞ்சமாய் இக்குலத்தில் தானவன் செனிப்பானென்றோம்.

25. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவனும் இந்த ஜன்மத்தில் மேலான வேளாளர் குலத்திலுதித்து விளங்கலானான். இவனுடைய பின் ஜன்மத்தின் விவரத்தை எடுத்துரைப்போம். காஞ்சிபுரத்தில் இவன் இந்தக் குலத்தில் ஜனித்தான் என்றோம்.

26. செனித்துமே வணிபம்செய்து செல்வங்க ளதிகமுண்டாய்
வனிதையர் மதலையோடு மாமன்னர் மெச்சவாழ்வன்
இனிமையாய்ச் சாதகன்தா னிசைகுறோம் முன்சென்மத்தை
அனையவே சோழநாட்டில் ஆழியின் அருகில்சிற்றூர்,

26. பிறந்ததும், வியாபாரங்கள் செய்து, அதிக செல்வ விருத்தி ஏற்பட்டு, பெண்டாட்டி பிள்ளைகளோடு பெரிய அரசர்கள் மெச்சும்படி இனிமையாய் வாழ்ந்து வந்தான். இனி இவனுடைய போன ஜன்மத்தைப்

பற்றிக் கூறுவோம். சோழவள நாட்டிலே சமுத்திரக்கரையின் அருகிலுள்ள சிறிய ஊரில்,

27. வன்னிய மரபில்தோன்றி வளமுள பூமிபெற்றுத்
தன்னினத் துக்குமேலாய்த் தனமது மிகவேஉண்டாய்
மன்னிய மனைவிகொண்டு மைந்தரும் மில்லாளுகி
நன்னிய சேதுக்கேதான் நடந்தனன் இவனேயம்மா.

27. வன்னியர் குலத்திலுதித்து, வளப்பம் பொருந்திய பூஸ்திதியை அடைந்து, தன் பந்துக்களைக் காட்டிலும் பொருட் செல்வத்தை அதிகமாய்ப் பெற்று, பெண்டாட்டியுடன் வாழும் நாளில், பிள்ளைகள் இல்லாமல் மேலும் சேதுஸ்னனம் செய்ய யாத்திரை செய்யப் புறப்பட்டான்.

28. தீர்த்தங்கள் தோய்ந்துமேதான் ஸ்ரீராமன் பூசைசெய்யும்
[1]கூத்தனை உதைத்தோன்பாதம் குணமுட னர்ச்சித்தேத்தி
ஏற்றவர்க் கன்னமீந்து இவனுமுத் திரமேசென்று
நாற்றிசை ஆலயத்தை நடந்தனன் இவனேயம்மா.

28. தீர்த்தாடனங்கள் செய்து, ராமசுவாமிக்குப் பூஜைகள்செய்து, பரமசிவனின் பாதத்தில் ஒழுங்காகவும் பக்தி சிரத்தையுடனும் அர்ச்சனை செய்து துதித்து, பெரியோர்களுக்கு அன்ன தானம் செய்து, வடக்குத திக்கில் சென்று, கோவிலைப் பிரதக்ஷிணம் செய்தான். (இராமேசுவரத்தில், ஸ்ரீராமர், சீதா தேவியினல் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தைப் பூஜை செய்யுமிடம். யாத்திரிகர்கள் இராமர்கோவிலிலும், சிவபூஜை செய்யும் சன்னிதியிலும் அர்ச்சனை வழிபாடுகள் செய்வார்கள். அரியும் சிவனும் ஒன்று என்ற ஐதிஹ்யத்தைக் கடைப்பிடித்தவர்களுக்கு பிரம்மஹத்தி தோஷங்கள் நிவிர்த்தியாகி, புத்திரப்பேறு என்னும் பெரும் பேற்றை அளிக்கும் சிவஸ்தலம் இதுதான். இக்கருத்தை இச்செய்யுள் செவ்வனே விளக்கும்.)

29. ஆலயம் அனேகம்சென்று அனுதியை[2] அர்ச்சித்தேத்திச்
சீலமாய் உள்ளூர்மீண்டு தினந்தோறும் வருவோர்க்கன்னம்
கோலமாய் அளித்துவந்து குணமுடன் வாழும்நாளில்
ஞாலமேல் புத்திரபாக்கியம் நல்கிற்று இவனுக்கம்மா.

29. பல ஸ்தலங்கள் சென்று கடவுளுக்கு அருச்சனை அபிஷேகங்கள் முதலான வழிபாடுகளைச் செய்து, தோத்தரித்து மேன்மையுடன் தன்னூருக்கு வந்து தினசரி வரும் விருந்தினருக்குப் பக்தியுடன் அன்ன

1. பரமசிவன்
2. கடவுளை

மளித்து இப்படி மேன்மை பெற்று வாழ்ந்து வரும் காலத்தில், இவனுக்குப் புத்திர பாக்கியம் ஏற்பட்டது.

30. அனுயாச[1] மரணமாகி அவனுமே இச்சென்மத்தில்
கனமுள சைவசேயாய்க் காவலன் பிறந்தானம்மா
தனிமையாய் முனிவர்கூறச் சாற்றுவார் புசண்டர்தானும்
வனிபனும் முன்சென்மத்தில் வன்னிய மரபில்தோன்றி,

30. கடைசியில் அனுயாசமாக மரணத்தை யடைந்தான். (யாதொரு சிரமமுமில்லாமல் உயிர் துறந்தான்.) அவனே இந்த ஜன்மத்தில் கௌரவ முள்ள சைவக் குழந்தையாய் அவதரித்தான். இப்படி முனிவர் சொல்ல, புசண்ட மகரிஷி பின்வருமாறு கூறலுற்றார். இவன் போன ஜன்மத்தில் வன்னியர் குலத்திலுதித்து,

31. இக்குலம் தனிலுதிப்ப தெவ்விதம் என்றுகேட்கத்
தொக்கவே முனிவர்சொல்வார் சுதனுமே முன்சென்மத்தில்
மிக்கவே சேதுக்கேதான் மேவிய புண்ணியத்தால்
நக்கன்தன் சடையில்சூடும் நங்கைதன்[2] குலமுதித்தான்.

31. இப்போது இக்குலத்தில் பிறந்த வரலாறு எப்படி? என்று காரணங்கள் கேட்க, முனிவர் பதில் சொல்லலானார். ஜாதகன் போன ஜன்மத்தில் மேன்மையான சேது யாத்திரை செய்த புண்ணியத்தின் காரணமாக, கங்கை (வேளாளர்) குலத்தில் உதித்தான்.

32. இவனுட பின்சென்மத்தை எடுத்துநாம் உரைக்கக்கேளாய்
அவனியில் போரூர்தன்னில் அவன்க்ஷத்ரிய குலமுதித்து
நவமதில் அரசர்பக்கல் நாயகன் பெருமைபூண்டு
கனமுடன் தனங்கள்பெற்றுக் காவலன் வாழ்வா
[னென்றோம்.

32. இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். கேட்பாயாக. பூமியில் திருப்போரூர் என்ற ஊரில் க்ஷத்திரிய குலத்தி லுதித்து, அரசர்களால் கௌரவிக்கப்பட்டு, மேன்மையான தனத்தை யடைந்து ஜாதகன் வாழ்ந்து வருவானென்றோம்.

33. இன்னவன் மணத்தின்காலம் இசைக்குறே மிருபதாண்டில்
அன்னவன் வடமேல்திக்கில் அடுத்ததோர் ஊரிலேதான்
கன்னிகை வருவாளம்மா காதலி அதிர்ஷ்டமுள்ளாள்
மன்னவன் றனக்குப்புத்திரர் வரைகுறேம் கேளுமம்மா.

---

1. வருத்தமில்லாமல்
2. கங்கை

33. இவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய இருபதாவது வயதில் வட மேற்கில் உள்ள பக்கத்து ஊரிலிருந்து பெண்டாட்டி வருவாள். அவள் நல்ல அதிர்ஷ்ட சாலி. அவர்களுடைய புத்திர பாக்கியத்தைப்பற்றிப் பேசுவோம், கேளுமம்மா!

34. சாதகன் தனக்குப்புத்திரர் சாற்றுவோம் ஆண்பாலொன்று
மேதினில் கன்னியவ்வார் விளங்கினும் தீர்க்கமாகத்
தீதாகும் முதலில்மூன்று செனிக்கினும் நஷ்டமாகும்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

34. ஜாதகனுக்குப் புத்திர பாக்கியம் எப்படி என்று கூறுவோம். ஆண் குழந்தை ஒன்று. பெண் குழந்தையும் ஒன்று. இவர்கள் தீர்க்கம். முதலில் மூன்று குழந்தைகள் பிறந்து நஷ்டமாகும். பரமசிவனை யடைந்த புண்ணிய சாலியே! கேட்பாயாக.

35. இப்படிப் பராசர்சொல்ல இயல்கும்ப [1]முனிவர்கேட்பார்
எப்படி ஏகபுத்திரன் இவனுக்குச் சொன்னீரையா
ஒன்புடன் அஞ்சோன்பத்தோன் உச்சனுய்க் கேந்திரமேறச்
செப்புவாய்ப் பலனைத்தானும் திடுக்கென உரைக்கலுற்றார்.

35. இப்படிப் பாராசரர் சொல்ல, அகஸ்தியர் பின்வருமாறு கேட்டார். இவனுக்கு ஒரே பிள்ளை பிறக்கும் என்று சொன்னீரே! காரணம் என்ன? இலக்கினத்திற்கு ஒன்பதாமிடத்திற்குரிய வியாழ பகவானும், ஐந்தாம் வீட்டிற்குரிய சூரியனும், பத்தாமிடத்தோனுன சனியும் உச்சஸ்தானங்களி லிருந்து பரஸ்பரம் கேந்திராதிபத்தியம் பெற்றிருப்பதனுலே பலன் என்ன என்று திடுக்கிடும்படி கேட்டார்.

36. அகத்தியர் கேட்கும்போது அறைகுவார் பராசர்தானும்
தகமையாய் அஞ்சில்கேது சார்ந்திட குசனும்பார்க்க
வகையுள தோஷம்தானும் வரைந்திட்டோ மிவனுக்கையா
பகையான தோஷம்தன்னைப் பகருவீர் என்றுகேட்டார்.

36. அகஸ்தியர் இப்படிக் கேட்க, பாராசரரும் பதில் சொல்லலுற்றார். தகுதியாக ஐந்தாம் வீட்டில் கேது தங்க, அவனைக் கும்பத்திலிருக்கும் செவ்வாயும் பார்க்க, வகையுள்ள தோஷம் ஏற்படும் என்று சொன்னோம். அப்படிப்பட்ட பகைமையான தோஷம் எப்படிப்பட்டது? அதன் விவரம் கூறுங்கள் என்று அகஸ்தியர் கேட்டார்.

---

1. அகஸ்தியர்

37. முற்சென்ம தோஷமில்லை முயலுவோம் இச்சென்மத்தில்
பச்சைமால் படுக்கையாயும் பரமன்தன் பூணலாயும்
நச்சரவ(ம்)[த்தைக்] கொல்வான் நல்கிடும் தோஷம்தானும்
விச்சமாய்த் தோஷம்தீர விளம்புவோம் கிரிகைதானே.

37. முன் ஜன்மத்தில் யாதொரு தோஷமும் ஏற்படவில்லை. இந்த ஜன்மத்தைப்பற்றி ஊன்றிப்பார்ப்போம். சேஷ சயனத்தில் வீற்றிருக்கும் திருமாலும், சரீரம் முழுவதும் பாம்பைப் பூஷணமாக அணியும் பரமசிவனும் விரும்பும் விஷப்பாம்பைக் கொன்றான். அதனால் தோஷம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட தோஷம் தீர்வதற்கான பரிகாரத்தை விதிப்படி கூறுவோம்.

38. அவ்வூரின் நதியின்பக்கல் அரசன்தன் விருக்ஷம்வைத்து
நவ்விய நாகம்செய்து நாட்டினால் தோஷம்நீங்கிச்
செவ்வையாய்ப் புத்திரருண்டாம் சேயனும் செய்யாரானால்
பவ்வமாய்ப் புத்திரர்காணான் பாலர்கள் [1]அரித்தமாகும்.

38. அவ்வூரில் உள்ள ஆற்றின் கரையில் பிரதிஷ்டை செய்து, அதன் அடியில் நல்ல நாகர் ஒன்று கல்லில் செதுக்கி வைத்தால் தோஷம் நீங்கும். செம்மையான புத்திர பாக்கியம் ஏற்படும். இந்தப் பரிகாரம் செய்யாமற் போனால் ஒழுங்காய்ப் புத்திரன் ஏற்படான். பிறந்தாலும் தோஷமாகும்.

39. இவ்விதம் செய்வானாகில் இலகிய ஆண்பாலொன்று
நவ்விய பெண்பாலொன்று நாட்டினில் விருத்தியாகும்
ஒவ்விய தந்தையாகும் உரைக்குறேம் நாற்பாண்மூன்றில்
திவ்விய அன்னைகாலம் செப்புவோம் அதன்மேல்நான்கும்.

39. சொன்னபடி செய்வானாகில் அழகிய ஆண் குழந்தை யொன்றும், பொருத்தமான பெண் குழந்தை ஒன்றும் பிறந்து விருத்தியாகும். இவனுடைய தந்தையின் காலம் நாற்பத்துமூன்றாம் வயதில் முடிவடையும். லட்சுமி போன்ற தாயின் மரண காலம் அதற்குப் பிறகு நான்கு வருடங்கள் கழிந்ததும் ஏற்படும் என்று சொல்லுவோம்.

40. இன்னவன் மரணகாலம் இசைக்குறேம் அறுபாண்மூன்றில்
தன்னிலே கூனிமாதம் சதயனாள் தன்னிலேதான்
அன்னவன் உடலம்வாடி அரன்பதம் அடைகுவானாம்
சொன்னசொல் குளறிடாது சுந்தரி கேட்டிடாயே.

40. இவனுடைய மரண காலம் பற்றிக் கூறுவோம். இவனுக்கு அறுபத்துமூன்றாம் பிராயத்தில், பங்குனி மாதத்தில், சதய நட்சத்திரம் கூடிய நாளில், அவன் உடல் வாடி, சிவலோகம் அடைவான். சொன்ன சொல் தப்பாது. சுந்தரியே! கேட்பாயாக.

---

1. அரிஷ்டம்

41. உதித்தவன் செனனம்தொட்டு உலகினில் மரணம்மட்டும்
அதிபதி யாகவாழ்வன் அநேககீர்த் திகளுமேற்பன்
பதியினில் [1]திரிபுமுண்டாய்ப் பந்துபூ சிதனும்மேலும்
மதிபோலே யோகம்வாய்க்கும் மங்கையே மேலுங்கேளே.

41. ஜாதகன் பிறந்த நாள் தொட்டு மரண பரியந்தம் அதிபதியாக (யாவர்க்கும் மேலோனாக) வாழ்வான். அநேகவிதமான புகழ்ச்சிகளைப் பெறுவான். வீட்டில் வேறுபாடுகள் (குழப்பங்கள்) உண்டாகி, பிறகு பந்துக்களால் பூசிக்கப்படுவான். பிறைச்சந்திரனைப்போல் மேன்மேலும் யோகங்கள் ஏற்படும். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

42. பூமியு மதிகம்சேர்ப்பன் புரவலர்[2] நேசம்கொள்வன்
நேமியில் கிராமசெட்டு நீதியாய் நடத்தவல்லான்
தீமைக ளணுகிடாது செனங்களும் மெச்சவாழ்வன்
சோமனை[3] யணிந்தோன்பூசை சுந்தரன் செய்வா
[னென்றேம்.

42. பூஸ்திதிகளை அதிகமாய் விருத்தி செய்வான். அரசர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். உலகினில் கிராம வியாபாரங்களை ஒழுங்காக நடத்தக் கூடியவன். கெடுதல்கள் நேரிடா. பொது ஜனங்கள் மெச்சும்படி வாழ்வான். பரம சிவனைப் பூஜை செய்து வருவான் என்றேம்.

(மற்றசங்கதி பின்பாகத்தில் விபரமாய்த் தெரியலாம்.)

---

1. குடும்பக்கலகம்
2. அரசர்
3. சந்திரன்

ஜாதகம் 34

1. தகரது சென்மமாகச் சனிவீணை சிகியும்கும்பம்
புகருமே உச்சமாகப் புந்திமான் கயறும்சிம்மம்
வகையுள மதியும்வில்லு[1] மங்களன்[2] தேளதாகப்
[3]பகையிலாப் பொன்னேன்சென்மம் பகருவீர்
[பலனைத்தானே.

1. சூரியன் ஜன்மத்திலும், சனி மிதுனத்திலும், கேது கும்பத்திலும், சுக்கிரன் தன்னுடைய உச்ச ஸ்தானமாகிய மீனத்திலும், இராகு சிம்மத்திலும், வகையான சந்திரன் தனுசிலும், செவ்வாய் விருச்சிகத்திலும், எவரிடத்திலும் பகைமை கொள்ளாத வியாழ பகவான் சிம்மத்திலும் தங்கும்படியான இந்த மேஷலக்கின ஜாதகனுக்குப் பலன்களைக் கூறுவீராக. (இந்த ஜாதகத்தின் கிரக நிலைகளை ஊர்ச்சிதப் படுத்த 13, 14, 15-ஆம் செய்யுள்களும் தக்க அத்தாட்சி யாகும்.

சுக்கிரன்	லக்கினம் சூரியன் வியாழன்		சனி
கேது	இராசி		
புதன்	சக்கரம்		ராகு
சந்திரன்	செவ்வாய்		

2. அம்மனும் கேட்கும்போது அத்திரி முனிவர்சொல்வார்
செம்மையாய் ஆண்பால்சென்மம் சிவமதம் பிரம்மசாதி
நன்மையாய் இவன்தன்வீடு நாட்டுவோம் வடதென்வீதி
பன்மையாய் மேற்குப்பார்வைப் பரமன்தன் கோஷ்டம்
[உத்திரம்.

2. பார்வதி தேவியும் இவ்வாறு கேட்க, அத்திரி முனிவர் பின்வருமாறு கூறலுற்றார். இந்த ஜாதகன் செம்மையான ஆண் மகன். சைவ மதத்தை அனுஷ்டிக்கும் பிராமண ஜாதியில் பிறந்தோன். நன்மையான

---

1. தனுர் ராசி
2. செவ்வாய்
3. எந்தக் கிரகத்திற்கும் பகைமையில்லாத

இவனுடைய வீட்டைப்பற்றிக் கூறுவோம். வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப் பார்த்த வீடு. வடக்கில் பரமசிவனின் கோவில்.

3. இதுவலால் மீனதிக்கி லிருப்பனே கணேசன்கோவில்
திருமாலின் மேற்கில்தங்கும் தியபாஞ் (சாலி)மாரிதுர்க்கை
நதிகங்கை அதன்மேல்தங்கும் நன்காளி வடமேலாகும்
விதியினுல் பேரூர்தன்னில் விளங்குமிவ் வடையாளத்துள்.

3. இதுவுமல்லாமல், வட கிழக்கே கணபதியான் கோவிலும், மேற்கே திருமாலின் கோவிலும், பாஞ்சாலியம்மன் (துர்க்காதேவி) கோவில் கங்கைக் கரையிலும் வட மேற்கே காளி கோவிலும் உண்டு. இவ்வித அடையாளங்கள் கொண்டுள்ள பேரூரில் விதிவசத்தால் பிறந்து,

4. வாசமே செய்வானம்மா மாதுரு தந்தையோகம்
பாசமாம் துணைவர்யோகம் பாரியு மைந்தர்கள்யோகம்
நேசமாய் முன்பின்சென்மம் நிகழ்த்துவோ மின்னூல்
[தன்னில்
தூசுபோல் மனத்தளான சுந்தரி மேலும்கேளே.

4. வசித்து வந்தான். இவனுடைய தாய் தந்தையர் யோக பாவங்களையும், உடன் பிறந்தவர்களுடைய யோகத்தையும், மனைவி மக்களுடைய யோகத்தையும், பொருத்தமான இவனுடைய முன்பின் ஜன்மங்களையும் பற்றி விவரமாய் இந்தப் புஸ்தகத்தில் விவரிப்போம். துல்யமான மனத்தையுடைய பார்வதி தேவியே! மேன்மேலும் கேட்பாயாக.

5. தந்தையின் வர்க்கம்தன்னைச் சாற்றவே பலத்தைக்காணும்
முந்தவே அவன்குணத்தை மொழிகுறேம் யிருநிறத்தான்
பந்தமாய் வாயுதேகன் பாரினில் யூகைசாலி
சந்ததம் தியாகியாவன் சகலபாக் கியங்களுள்ளான்.

5. தந்தையின் குடும்பத்தைப்பற்றிப் பேசுவோ மென்றால் யாதொரு பலத்தையும் காணும். முதலில் அவனுடைய குணங்களை விவரிப்போம். பொது நிற முள்ளவன். வாயுப் பிடிப்புள்ள தேகத்தைக் கொண்டவன். உலகத்தினர் மெச்சும்படியான மதியூகி. எப்பொழுதும் பிறருக்காகத் தியாகம் செய்யும் இயல்பினன். சகலவித பாக்கியங்களு முடையவன்.

6. பித்தகு டுடையனுவன் பிரபல கீர்த்தியாவன்
சித்தினி[1] சாதியாவன் சித்திர வீடுசெய்வான்
நித்தியம் சுகப்புசிப்பன் நீள்நில மதிகம்சேர்ப்பான்
பத்திமான் மாதர்நேயன் புகழுமே உடையானுமே.

1. அருகன்

6. பித்த சூட்டினல் உபாதி யடைவான். பிரபலமான புகழ் பெற்றவன். அருக வமிசத்தைச் சேர்ந்தவன். அழகான வீடு கட்டுவான். தினசரி சுகமான போஜனத்தை அருந்துவான். பரந்த பூமிகளைச் சேர்ப்பான். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். ஸ்திரீகளிடத்தில் மோகம் கொண்டவன். மிக்க கீர்த்தியு முடையவன்.

7. இப்படி யிருக்குந்தந்தை இவனுக்கு உதித்தபாலன்
செப்புவோம் பலன்கள்யாவும் தீரநன் மனத்தனுகும்
ஒப்புட னிருநிறத்தான் உயர்ந்ததோர் கல்வியுள்ளான்
தப்பித மொருவர்க்கெண்ணுன் தாட்சிணியன்
[கனவானுமே.

7. இப்படிப்பட்ட குணுதிசயங்களை யுடைய தந்தைக்கு நம் ஜாதகன் மகனுய்ப் பிறந்தான். இவனுடைய பலாபலன்களை யெல்லாம் சொல்லு வோம். தைரிய முள்ள மனதை யுடையவன். பொது நிறமுள்ளவன். மேலான கல்விச் செல்வத்தை யுடையவன். எவர்கும் கெடுதி நினைக்க மாட்டான். தாட்சிணிய புத்தி யுள்ளவன். கனவான் என்று சொல்லலாம்.

8. வாதரோ யுடையனுவன் மருமமும் கொஞ்சமுள்ளான்
சீதள குணத்தனுகும் சேயர்க ளில்லானுகும்
மேதினில் கீர்த்திகொள்வன் விரோதியை வசியம்செய்வன்
மாதவர் தனைத்துதிப்பன் மங்கையர் மோகவானும்.

8. வாத பீடை யுடையவன். மனதில் சிறிது கபட முள்ளவன். குளிர்ந்த தன்மை யுடையவனுவன். குழந்தைகள் இல்லாதவன். உலகத்தில் புகழைப் பெறுவான். பகைவர்களைத் தன்வசப் படுத்துவான். தபசிகளை வந்தனை செய்வான். மங்கையர்களைக் கண்டு மோகங் கொள்ளுவான்.

9. பூமியும் பரிபாலிப்பன் புண்ணிய மனத்தனுகும்
தாமத குணத்தானுகும் தனங்களு மில்லானுகும்
சேமமாம் குடும்பமுள்ளான் தினம்சுகி பொசிப்பானுகும்
தீமையாம் சொல்லுமில்லான் சென்றிடம் பெருமை
[பூண்பன்.

9. பூஸ்திதியை வைத்துப் பரிபாலிப்பான். தர்ம சிந்தனை யுடைய வன். தாமசமான குணத்தை யுடையவன். பணம் இல்லாதவன் க்ஷேமமாயுள்ள குடும்பத்தை யுடையவன். தினந்தோறும் சுகமான போஜனத்தை உண்பான். தீங்கான வார்த்தைகளைச் சொல்ல மாட்டான். சென்றவிடமெல்லாம் சிறப்படைவான்.

10. மறைகளை யதிகம்கற்பன் மந்திர மோதவல்லான்
அறைகுறேும் சலிப்புமுள்ளான் அவன்பித்த தேகியாவன்
நிறையவே வார்த்தைசொல்வன் நிகர்பத்ம ரேகை
[யுள்ளான்
வரைகுறேும் துணைவர்தன்னை மங்கையே மேலும்கேளே.

10. வேதங்களை அதிகமாகப் படிப்பான். மந்திரம் ஜபிக்கும் வல்லமை பூண்டவன். சலிப்பும் உடையவன். பித்த பீடை கொண்ட தேகத்தை யுடையவன். அதிகமாகவே வார்த்தைகள் சொல்லுவான். கையில் தாமரை ரேகையை யுடையவன். அவனுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுவோம். தாயே! மேலும் கேட்பாயாக.

11. இன்னவன் துணைவர்தன்னை இயம்புவோம் இருநான்காகும்
தன்னிலே சிலதுநஷ்டம் சக்தியும் ஒருத்திதீர்க்கம்
மன்னிய ஆண்பால்ரெண்டு அவர்களும் தீர்க்கமாகும்
சொன்னசொல் குன்றிடாது சுந்தரி மேலும்கேளே.

11. இவனுடன் கூடப்பிறந்தவர்கள் எட்டுப் பேர்கள். அவர்களில் சிலர் நஷ்ட மாவர். சகோதரி ஒருத்தி நிச்சயம். சகோதரர்கள் இரண்டு பேர் நிச்சயம். சொன்ன சொல்லுக்குக் குறைவு வராது. சுந்தரி! இன்னும் கேட்பாயாக.

12. துணைவர்க ளாண்பாலுக்குச் சுத்தமா யுதயம்காணேும்
இணையிலாப் பெண்பாலுண்டு இப்படி முனிவர்கூறக்
கனிமொழி உமையாள்கேட்பாள் காளைகள் தனக்குப்
[புத்திரர்
அணையவே யில்லையென்றீர் அதுபலன் சொல்லுமென்றுர்.

12. சகோதரர்களுக்குப் புத்திர பாக்கியம் காணேம். பெண் குழந்தைகள் உண்டு. இப்படி முனிவர் சொல்ல, கனிந்த மொழிகளைக் கூறும் பார்வதி வினவலானுள். சகோதரர்களுக்குப் புத்திரர் சுத்தமாக இல்லை என்றீரே. எதனுல் அப்படிச் சொன்னீர்?

13. சொல்லுவேன் கேளுமம்மா துணைவர்கள் தானத்துக்குப்
புல்லிய அஞ்சோன்தானும் புகராகி விரயமாக
இல்லையென் றுரைத்தோம்யாங்கள் ஈசுவரி கேட்கலுற்றுர்
நல்லதோர் குருவும்ஐந்தை நயப்புடன் பார்த்ததாலே,

13. சொல்லுகிறேன், கேளம்மா. சகோதர ஸ்தானத்தில் கேவலம் இராகு ஐந்தாம் வீட்டில் தங்க, சுக்கிரனும் இலக்கினத்திற்கு விரய ஸ்தானத்திலிருக்க, புத்திரன் இல்லை என்று சொன்னேம். உடனே

ஈசுவரி கேட்கலுற்றாள். தேவகுருவாகிய வியாழ பகவான் ஐந்தாமிடத்தைப் பார்ப்பதனாலே,

14. எப்படிப் புதல்வரில்லை என்றுமே அம்மன்கேட்கச்
செப்புவார் முனிவர்தானும் சனியுமே புகரைப்பார்க்க
மெய்ப்புட னுதித்தாலுந் தான்வீறுது நஷ்டமாகும்
தப்பிதம் முன்னூழி சார்ந்ததால் வமிசம்நாஸ்தி.

14. எப்படிப் புதல்வர் இல்லை யென்று சொல்லலாம், என்று அம்பிகை கேட்க, முனிவர் பின்வருமாறு கூறலுற்றார். சனி பகவான் தன்னுடைய பத்தாம் பார்வையினால் சுக்கிரனைப் பார்ப்பதாலும், இலக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் மறைந்திருப்பதனாலும் புத்திரன் ஏற்பட்டாலும் நஷ்டமாவன். இது நீங்கலாகப் பண்டைக் காலத்தில் செய்த ஊழ்வினையின் பயனாக ஒரு தவறும் ஏற்பட்டது. அதனால் அந்த வமிசமும் நசித்துப் போய்விட்டது.

15. இவனுட புதல்வர்தன்னை இயம்புவோ மாண்பால்காணோம்
நவமதில் பெண்பாலும்தான் நாட்டுவோம் தீர்க்கமாகத்
தவமுடை யோர்கள்கூற தயாபரி கேட்கலுற்றாள்
அவனியில் புத்திரசங்கை அறிவிப்பீர் என்றுகேட்டாள்.

15. இவனுடைய புத்திர பாக்கியத்தைப்பற்றிக் கூறுவோம். ஆண் பிள்ளைகள் இல்லை. பெண் பிள்ளைகள்தான் தீர்க்கமாக உண்டு என்று நிச்சயப்படுத்துவோம். இவ்விதம் முனிவர்கள் கூற, அம்பிகை மேலும் கேட்கலுற்றாள். உலகினில் புத்திர சங்கையைப் பற்றித் தெரிவிப்பீர் என்று கேட்டாள்.

16. அஞ்சினில் பாம்புநிற்க அர்க்கனைச் சனியும்பார்க்கத்
துஞ்சிடும் மதலையென்றோம் சொல்லுவோம் முன்னூழி
தஞ்சமாய் வந்ததாலே சந்ததி ஆண்பால்காணான்
மிஞ்சியே உதித்தாலும்தான் வீறுது [1]அரித்தமாகும்.

16. ஐந்தாமிடத்தில் இராகு நிற்க, அவனை சனியும் சூரியனும் பார்க்க, குழந்தைகள் பிறந்து இறக்கும் என்று சொல்லுவோம். பண்டைக் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையும் வந்து சேர்ந்ததனாலே ஆண் சந்ததியைக் காணமாட்டான். அப்படி தட்டுக்கிட்டு ஏற்பட்டாலும், குழந்தை இருக்காது. நஷ்ட மாகும்.

1. அரிஷ்டம்

17. இன்னவன் முன்சென்மத்தை யியம்புவோ மருணைகீழ்பால்
மன்னவர் குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாகி
உன்னிய செட்டுச்செய்து உயர்தன மதிகம்பெற்றுத்
தன்னிலே வாழும்நாளில் சாற்றுவோம் ஊழிதானே.

17. இவனுடைய முன் ஜன்ம விவரங்களைக் கூறுவோம். திருவருணைக்குக் கிழக்கே அரசர்களுடைய வமிசத்திலுதித்து, மனைவி மக்கள் ஏற்பட்டு, மேலான வியாபாரங்களைச் செய்து, செம்மையான பொருள்களை அதிகம் சம்பாதித்து, வாழ்ந்து வரும் நாளிலே, ஓர் ஊழ்வினை வந்தடைந்தது.

18. தன்னுட கிரகம்தன்னில் சர்ப்பமும் ஒருநாள்நேர
அன்னவன் அதனைக்கண்டு அடித்துமே விட்டானப்போ
உன்னித உரகன்தோஷம் உரைந்ததா லிச்சென்மத்தில்
இன்னவன் தன்னைப்பற்றி யிருப்பதால் குடும்பம்நாஸ்தி.

18. தன்னுடைய கிருகத்தில் ஒரு நாள் பாம்புவர, இவன் அதைக் கண்டு அடித்தான். கோபங்கொண்ட பாம்பும் இவனைக் கண்டு சபித்தது. அதன் காரணமாய்த் தோஷம் ஏற்பட்டது. இந்த ஜன்மத்தில் இவன் என்னை அடித்ததனுல் இவனுடைய குடும்பம் நசித்துப்போம்.

19. இதுவலால் பின்னம்வேறே யிசைகுறேம் தோஷம்தானும்
புதன்ரவி கூடியேதான் பூமகன் பார்த்ததாலே
சதியான சத்துருதோஷம் சார்ந்ததால் புத்திரரில்லை
விதிக்கிறேம் அதனையாங்கள் மெல்லியே மேலும்கேளே.

19. இதுவல்லாமல் வேறு விஷயத்தினுலும் பின்னம் ஏற்பட்டது. அந்த தோஷத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். புதனும் ரவியும் கூடியேயிருந்து அவர்களைச் செவ்வாய் பார்ப்பதனுல் தோஷம் ஏற்பட்டது. புத்திர பாக்கியம் இல்லை. அஃது அப்படித்தான் என்று நாங்கள் விதிக்கிறேம். தாயே! மேலும் கேட்பாயாக.

20. முன்சென்மம் தன்னிலேதான் முயற்சியாய்ச் செட்டுசெய்து
மன்னனும் வாழுநாளில் வணிகனும் இவன்பால்சென்று
உன்னித பொருள்கள்வாங்கி உத்தமன் செட்டுசெய்து
தன்னிலே வாழும்நாளில் தனத்தினுல் பகையும்நேர்ந்து.

20. போன ஜன்மத்திலே தான் பிரயாசப்பட்டு வியாபாரம் செய்து வாழ்ந்து வரும் காலத்தில், ஒரு வியாபாரி இவனிடம்போய் மேலான தொகைகளைப் பெற்று வியாபாரம் செய்து வந்தான். அப்படி இருக்கும் போது பணத்தினுல் இருவருக்கும் பகைமை ஏற்பட்டது.

21. இருவரும் விரோதமுற்று ஏழைதன் பூமியெல்லாம்
வரவர இவன்கைக்கொண்டான் வணிகனும் மன
[வெறுப்பால்
பெருகிய பின்சென்மத்தில் புத்திரர் இல்லாகுகிக்
குறைவரும் என்றுசொல்லிக் கூறினுன் ஏழைதானும்.

21. இந்த விரோதத்தின் காரணமாக இவன் அந்த ஏழையினுடைய நிலங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றிக் கொண்டான். வியாபாரியும் மனவெறுப்புக் கொண்டான். அடுத்த ஜன்மத்தில் உனக்குப் புத்திர பாக்கிய மில்லாமல் கஷ்டப்படுவாய் (குறைவு ஏற்படும்) என்று சபிக்கலாயினுன்.

22. இதுவலால் பிரம்மசாப மிவன்குடும் பத்தைப்பற்றி
விதியினுல் வந்ததாலே வீருது[1] குடும்பம்தானும்
அதுதீர சாந்தியொன்று அறைகுவீர் என்றுகேட்க
ஏதுசாந்தி செய்தாலும்தான் இலகாது மதலையென்ருர்.

22. இதுவுமல்லாமல் பிரம்ம சாபம் அவனுடைய குடும்பத்தினரைப் பற்றியது. இது விதிவசத்தினுல் வந்ததனுலே குடும்பம் முன்னுக்கு வாராது. அது தீருவதற்குண்டான பரிகாரத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, என்ன சாந்தி செய்தபோதிலும் புத்திரபாக்கியம் ஏற்படாது என்ருர்.

23. இப்படி முனிவர்கூற இயம்புவார் பராசர்தானும்
செப்பமாய்ச் சாதகர்க்குச் சீருன கர்மம்தானும்
ஒப்புடன் எவர்கள்செய்வார் உரையீர்கள் என்றுகேட்க
மைப்புடன் முனிவர்சொல்வார் விளங்குவான் தெள(ஹி)த்தி
[ரன்தான்[2].

23. இவ்விதம் முனிவர் சொல்ல, பராசரர் கூறலுற்ருர். செம்மையாய் ஜாதகனுக்கு யாவர்தான் சிறப்பான கருமத்தைச் ஒழுங்காய்ச் செய்வார்? இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யவும் என்று கேட்க, முனிவரும் ஏற்றதுபோல் பதில் சொல்லுவார். விளங்கிவரும் தெளகித்திரனுல் ஏற்படும்.

24. உத்திரம் திக்கிலேதான் உதித்திடும் தெள(ஹி)த்திரன்
[தன்னுல்
சித்தமாம் கர்மம்செய்வன் சேர்ந்திடும் இவன்தன் ஆஸ்தி
அத்திரி முனிவர்சொல்ல அறைகுவாள் அம்மன்தானும்
சித்தமா யிவன்பின்சென்மம் செப்புவா யென்றுகேட்டாள்.

---

1. விளங்காது
2. பௌத்திரன், மகன்மகன்

24. வட திக்கிலே தௌகித்திரன் உதிப்பான். அவன் சித்தமாய்க் கருமம் செய்வான். அவனுக்கு இவனுடைய சொத்துக்கள் போய்ச்சேரும் என்று அத்திரி முனிவர் சொல்ல, அம்பிகை மேலும் வினவலானாள். யதோக்தமாக இவனுடைய மறு ஜன்மத்தின் விவரம் கூறுவீர் என்று கேட்டாள்.

25. இன்னவன் பின்சென்மத்தை இசைக்குறோம் காசிதன்னில்
பன்னியே யிக்குலத்தில் பாலகன் பிறந்துமேலும்
உன்னிதப் பொருளனேகம் உத்தமன் பெற்றுமேலும்
பின்னமில் லாமல்வாழ்வன் பேசுவோம் மேலும்கேளே.

25. இவனுடைய மறு ஜன்மத்தைக் கூறுவோம். காசி க்ஷேத்திரத்தில் இவன் இக்குலத்தில் உதிப்பானாகும். மேலான ஐசுவரிய சம்பத்துக்களை இவ்வுத்தமன் அடைந்து, யாதொரு குறைவுமில்லாமல் வாழ்வான். மேலும் சொல்லுகிறோம், கேளுங்கள்.

26. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் நவமதாண்டுள்
பிந்திய அன்னைகாலம் பேசுவோம் ஈரொண்பாண்டில்
இன்னவன் காலம்தன்னை யியம்புவோம் அறுபாண்நாலில்
தன்தனுர் மாதம்தன்னில் சப்தமி பூர்வபக்கம்,

26. இவன் தந்தையின் மரண காலத்தைப்பற்றிக் கூறுவோம். இஃது இவனுடைய ஒன்பதாவது வயதில் ஏற்படும். தாயின் மரண காலம் இவனுடைய பதினெட்டாம் வயதில் ஏற்படும். இவனுடைய மரண காலம் இவனுடைய அறுபத்துநான்காம் பிராயத்தில், மார்கழி மாதத்தில், பூர்வபட்சம் சப்தமி திதியில்,

27. வாதரோ கத்தினாலே மன்னவன் மரணமாகிக்
கோதிலா இவன்பின்னாலே கூறுவோம் மனைவிக்கேதான்
மேதினில் பலன்கள்யாவும் விளம்புவோம் விபரமாகப்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

27. வாத ரோகத்தினால் மரணமாவன். இவனுக்குப் பிறகு குற்ற மற்ற இவன் மனைவிக்குக் கண்டம் ஏற்படும். உலகினில் ஏற்படும் எல்லாப் பலன்களையும் விவரமாகக் கூறுவோம். பரமசிவனை யடைந்த புண்ணிய வதியே! கேட்பாயாக.

28. சாதகன் செனனம்தொட்டுச் சாற்றிய ஆயுள்மட்டும்
ஆதியாய் நிறைந்தசெல்வம் அணுகிடு மிவனுக்கேதான்
மேதினில் கீர்த்தியுண்டு விளைபுலம் தன்னால்யோகம்
பாதியாய் வடிவெடுத்த பத்தினி[1] மேலும்கேளே.

---

1. பாதியில் வடிவெடுத்தவன் = அர்த்தநாரீசுரன் = பாதி உடம்பு பெண்ணாக இருக்குஞ் சிவன். உமாபரமேசுவரன்.

28. ஜாதகனுடைய ஜனனகாலம் தொட்டு மரணகால பரியந்தம் ஆதி காலத்திலிருந்து விருத்தியான செல்வம் இவனுக்கேதான் வந்து சேரும். உலகினில் பெரும் புகழ் பெறுவான். சிலபலங்களால் யோகம் ஏற்படும். பரமசிவனுடைய வாமபாகத்தில் அமர்ந்த பார்வதியே! மேலும் கேட்பாயாக.

29. புகர்தசை முதலாமாகப் புகலுவோம். அரவுகாலம்
வகையுள தசையுமட்டும் வளர்ந்திடும் சல்லியபாதைத்
தகைமையா யிதற்குமேலே சல்லிய நிவிர்த்தியாகும்
வகையுடன் வாழ்வானென்றோம் மங்கையே மேலும் [கேளே.

29. ஜாதகனுக்குச் சுக்கிர தசை முதலாக குரு தசை வரையிலுள்ள காலம் முடிய கடன் உபாதை வளர்ந்து கொண்டே வரும். ஒழுங்காக இதற்குமேலே கடன்கள் நிவிருத்தி யாகும். அப்புறம் சரியாக வாழ்வான் என்றோம். தாயே! மேலும் கேட்பாயாக.

30. எவ்வித கு(ரு)ணநிவர்த்தி இயம்புவாய் முனியேயென்றார்
திவ்விய பூமிகொஞ்சம் சேர்ந்ததால் நிவிர்த்தியாகும்
பவ்வமாய்ப் பொன்னேன்காலம் பலபலலாப நேரும்
நவ்விய விசேஷபூமி நாயகன் கொள்வானென்றோம்.

30. எப்படிக் கடன் உபாதைகள் நிவிருத்தியாகும்? விவரம் கூறுங்கள் என்று முனிவரைக் கேட்க, லட்சுமீகடாக்ஷம் பொருந்திய பூமி கொஞ்சம் இவனிடம் வந்து சேர்ந்ததன் பயனைக் கடன் நிவிருத்தியாகும். ஒழுங்காக வியாழ பகவானுடைய தசையில் கொஞ்சம் லாபம் ஏற்படும். நல்ல விசேஷமுள்ள பூஸ்திதியை ஜாதகன் கொள்ளுவான் என்றோம்.

31. அத்திரி முனிவர்கூற அறைகுவாள் அம்மன்தானும்
பத்தினி சேதிதன்னைப் பகருவீர் என்றுகேட்கச்
சித்தமாய் முனிவர்சொல்வார் செல்வதி பார்நிறத்தாள்
உத்திர திக்கிலேதான் உதித்தவள் வருவாளென்றோம்.

31. இவ்விதம் அத்திரி மகரிஷி கூறியதும், அம்பிகை கேட்கலானாள். இவனுடைய பெண்டாட்டியைப் பற்றிய விவரம் கூறுவீர் என்று கேட்க, முனிவரும் சித்தமாய்ச் சொல்லலானார். செல்வி பொது நிறமுடையவள். வடக்கே பிறந்தவள். அங்கிருந்து இவனிடம் வந்தாள் என்றோம்.

32. ஊகையும் கொஞ்சமுள்ளாள் உத்தம குணத்தளாகும்
பாகமாய்ப் பேசமாட்டாள் பருத்ததோர் வடிவுமுள்ளாள்
ஆகவே யிருபாண்மூன்றுள் அவளையே மணமேகொள்வன்
தோகையின் துணைவர்தன்னைச் சொல்லுவோம்
[பின்பாகத்தில்.

32. சிறிது மதியூக முடையவள். மேலான குண முடையவள். பக்குவமாய்ப் பேசமாட்டாள். பருமனான பெரிய சரீரத்தை யுடையவள். ஆதலால் இருபத்துமூன்றும் வயதில் அவளையே இவன் மணந்து கொள்ளுவான். இவளுடைய சகோதரரைப்பற்றிப் பின் பாகத்தில் கூறுவோம்.

33. பொன்னவன் திசையிலேதான் பூடண மதிகமுண்டு
பின்னிய ரிணங்கள்காணுன் மாநிலம் சேர்ப்பானாகும்
நன்னிய சித்திரவீடு நாயகன் கட்டுவானும்
சொன்னசொல் குன்றிடாது சுந்தரி மேலும்கேளே.

33. வியாழ பகவானுடைய தசையிலேதான் பூஷணங்கள் அதிகமாய் ஏற்படும். பின்பு கடன் பாதை இருக்காது. பரந்த பூமியைச் சேகரிப்பான். நலமான சித்திர வீட்டை இவன் கட்டுவான். சொன்ன பலன்கள் குறைவுபடா. சுந்தரி! மேலும் கேட்பாயாக.

ஜாதகம் 35

1. மதிகுசன் ராகுநண்டில்[1] மறைபுகர் புதன்பரன்[2]மேடம்
விதிதேளில் [3]ஞானிமானில் மேடமும் சென்மமாக
இதுவிதக் கோளுநின்றால் இயம்புவீர் பலனையென்று
அதிபதி கேட்கும்போது வஸிஷ்டரும் கூறுகின்றார்.

1. சந்திரன் செவ்வாய் இராகு கடகத்திலும், சுக்கிரன் புதன் சூரியன் குரு மேஷத்திலும், சனிபகவான் விருச்சிகத்திலும், கேது மகரத்திலும், வீற்றிருக்கும்படியான இந்த மேஷலக்ன ஜாதகத்திற்குப் பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்க, வஸிஷ்டமகரிஷியும் சொல்லலுற்றார். (மறை= தேவகுரு)

	லக்கினம் சுக்கிரன் புதன் சூரியன் குரு		
	இராசி		சந்திரன் செவ்வாய் ராகு
கேது	சக்கரம்		
	சனி		

2. இந்தசேய் ஆணும்சென்மம் இல்லமும் கீழ்பால்நோக்கம்
முந்திய நகரமாகும் உயர்வான செட்டுஓங்கும்
தந்தியும் வாசமாகும் செகராசர் கொடியுமுண்டு
சொந்தமோர் இல்லமல்ல செப்புவோம் தாயேகேளும்.

2. இஃது ஆண்ஜன்மத்தானின் ஜாதகம். இவன் வீடு கிழக்குப் பார்த்தது. பழையகாலத்து நகரத்திலுள்ளது. மேலான வியாபாரங்கள் செழித்தோங்கும். யானையும் வசிக்கும். உலகஅரசர் கொடிகட்டிப் பறக்கும். சொந்தமான வீடு இல்லை என்று சொல்லுவோம். தாயே! கேட்பாயாக.

---

1. கடகம்
2. சூரியன்
3. கேது

3. [1]மயன்குலம் உதிப்பானுகும் மாதுரு தந்தையோகம்
நயமுடன் களத்திரயோகம் நாயகன் முன்பின்ஜென்மம்
வியமிலாத் துணைவர்யோகம் வித்தகன் குடும்பச்சேதி
பயமிலாப் புகழ்வோம்யாங்கள் பார்வதி கேட்டிடாயே.

3. தச்சனுடைய குலத்திலுதிப்பானுகும். இவனுடைய தாய் தந்தையர் யோகமும், புத்திரகளத்திர யோகமும், இவனுடைய முன்பின் ஜன்மங்களைப்பற்றிய விவரமும், இடைஞ்சலில்லாத சகோதரர்களின் யோகமும், இன்னும் மற்ற குடும்பச்செய்திகளும் அச்சமின்றி நாங்கள் உரைத்திடுவோம். பார்வதி! கேட்பாயாக.

4. தந்தையின் துணைவர்தன்னைச் சாற்றுவோமாண்பால் [ரெண்டு
வந்திடும் கன்னிஅவ்வார் வரைகுரும் மத்தில்தீதாம்
இந்தவன் தந்தைசேதி இயம்புவோம் இனிமேலாகச்
சுந்திர முடையனுகும் சுகமுள வார்த்தைகூர்வன்.

4. இவன் தந்தையின் துணைவர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரர்கள் இருவர். சகோதரிகளும் இருவராவர். பாக்கிப்பேர் சேதமாவர். இவனுடைய தந்தையின் செய்தி விவரங்களை இனிமேலாகக் கூறுவோம். அழகுடையவன். சுகமான வார்த்தைகளைப் பேசுவான்.

5. மாந்தளிர் மேனியாகும் மருமமில் லாதானுகும்
சேர்ந்தவர் தம்மைக்காப்பன் சீலம்போல் வெளிமயக்கன்
சாந்தவான் சுகிபுசிப்பன் சண்முகன் பத்திபூண்பன்
காந்தம்போல் புத்தியுண்டு கர்வத்தை வெளிக்காட்டாதான்.

5. மாந்தளிர்போன்ற மேனியை யுடையவன். ரகசியமில்லாதவனுகும். தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவான். சீலமான வெளிமயக்கமுள்ளவன். சாந்தகுண முடையவன். சுகியாக புசிப்பான். சண்முகக்கடவுளிடம் பக்தி பூண்டவன். இரும்பைக் காந்தம் இழுத்துக் கொள்ளுவதுபோல எந்தச் சங்கதியையும் கிரகித்துக் கொள்ளும் புத்திக்கூர்மை யுள்ளவன். வெளிப் பார்வைக்குக் கர்வமில்லாதவனைப் போலிருப்பான்.

6. இரணிய வேலைசெய்வன் ஈகைவான செலவுமுள்ளான்
மருவூரில் வாசமாகும் வனவாசம் செய்வானுகும்
நரைமலர் இஷ்டம்கொள்வன் நவின்றிடான் கட்டுவார்த்தை
பெருமையும் புகழுமத்தில் பிலமிலா அந்தம்தன்னில்,

6. பொன் வேலை செய்வான். தர்மிஷ்டன். பணச்செலவுமுள்ளவன். வேறு ஊரில் வசிப்பான். வனவாச மிருப்பான். வெள்ளைப்

1. தேவதச்சன்

பூக்களில் இஷ்டம் கொள்ளுவான். பொய் வார்த்தைகளைக் கூறமாட்டான். மத்தியில் பெருமையும் புகழும் உடையவன். பலமில்லாத அர்திய காலத்தில்,

7. தனியனு மென்றுசொல்வோம் சாற்றுவீ ரந்தசங்கை
கனமுள லாபோனெட்டில் கலந்ததால் துணைவர்தோஷம்
வினையது பூர்வம்தன்னில் மேவிற்று சிலதுதோஷம்
சினமிலாப் பூர்வம்தன்னைச் செப்புவீர் முனியேநீதான்.

7. தனியாக விருப்பவன் என்று சொல்லலாம். எந்தக் காரணத்தினுல் அந்த மாதிரி சங்கை ஏற்பட்டது, சொல்லுங்கள். லாபாதிபதியான சனி பகவான் எட்டாமிடத்தில் போய் நின்றதனுல், சகோதரதோஷம் ஏற்படும். பண்டைக்காலத்தில் ஏற்பட்ட வினையின் பலனுல் ஏற்பட்டது. அஃதென்ன வென்று சொல்லுங்கள், முனிவரே! என்று கேட்க,

8. முன்னவ னிருந்தசென்மம் மொழிகுவோம் புலியூர்தன்னில்
வன்னிய குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாகித்
தன்னினத் தவரும்மெச்ச தரணியில் சீவித்தேதான்
அன்னவன் வாழும்நாளில் அணுகின வினையைக்கேண்மோ

8. முன்பு அவனிருந்த ஜன்மத்தின் விவரங்களைக் கூறுவோம். சிதம்பரம் (புலியூர்) ஸ்தலத்தில் வன்னியர் குலத்திலுதித்து, மனைவி மைந்தர்கள் உண்டாகி, தன்னைச் சேர்ந்தவர்கள் மெச்சும்படி பூலோகத்தில் வாழ்ந்து வந்தான். அப்படி இருக்கும்போது அவனைச் சேர்ந்த வினையைப் பற்றிக் கூறுவோம், கேட்பாயாக.

9. தன் துணை பாகம்தன்னைத் தராமலே மோசம்செய்தான்
பின்னவன் வருத்தமுற்றுப் புகன்றிட்ட சாபம்கேண்மோ
என்னிட பாகம்தன்னை இன்பமாய் ஈயாப்பாவி
உன்(சன) செல்வம்குறைவு நேர்ந்து உலகினில் வசையுமாகி,

9. தன் சகோதரனுடைய சொத்தின் பாகத்தை அவனிடம் கொடுக்காமலே மோசம் செய்தான். தம்பி இதைக்கண்டு வருத்தமுற்றுச் சாபம் கொடுத்தான். அதனைக் கேட்பாயாக. என்னுடைய பாகத்தைக் கொடுக்காத பாவி, உன்னைச் சேர்ந்தவர்கள் நசித்துப்போய், செல்வமும் குறைந்து, உலகத்தின் அவதூறுகளைப் பெற்று,

10. மற்றொரு சென்மம்தன்னில் வரும்துணை இல்லாதாயும்
பற்றுது இல்லம்தானும் பத்தினி இரண்டுமாயும்
வித்தகன் அந்தம்தன்னில் வனவாச மாகவாழ்வாய்
இத்தகை சொல்லியேதா னிறைத்தனன் தெருதூள்தானும்.

10. அடுத்த ஜன்மத்தில் சகோதரரில்லாமல், வீடுவாசலும் இல்லாமல். இரண்டு பெண்டாட்டிகளையடைந்து, கடைசி காலத்தில் வனவாசம் செய்து வாழ்வாய் என்று இவ்விதம் சொல்லி, தெரு மண்ணை வாரி இறைத்தான்.

11. அந்திய காலம்தன்னில் அவன்செல்வம் குறைவுநேர்ந்து
சிந்தையும் கலக்கமாகிச் சேதுவின் பதிக்குச்சென்று
முந்திேனோர் தொண்டுபூண்டு மேவினன் காலநாடு
விந்தையாய்ப் பிரமன்லக்கம் மேகவா கனத்தோன்[1]வமிசம்.

11. இவனுடைய அந்தியகாலத்தில் செல்வக்குறைவு ஏற்பட்டது. மனக்கலக்கமடைந்து ராமேசுவரம் சென்று, முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து, பிறகு எமலோகம் சென்றான். திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு சைவவமிசத்தில் பிறந்து,

12. பிறந்தவ னென்றுசொல்வோம் புக்கிடும் துணைவன்சாபம்
இருமனை அணுகுமென்றோம் இல்லமும் காணுகும்
திருகாகும் துணைவரென்றோம் செயமுனி தடுத்துச்
[சொல்வார்
குறைவான குலமுன்சென்மம் குதித்தவ னிச்சென்மத்தில்.

12. வந்தவன் இவனேதான். உடனே இவனுடைய சகோதரனுடைய சாபம் இவனைத் தொடர்ந்தது. இரண்டு மனைவிகள் ஏற்படும் என்றோம். வீடுவாசலும் காணுகும். துணைவரால் இடைஞ்சல் ஏற்பட்டது என்றோமல்லவா! இதனை ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுவார். குறைவுகளுடன் முன் ஜன்மம் இருந்தது. இந்த ஜன்மத்தில்,

13. பஞ்சால[2] குலமெவ்வாறு பிறந்தகா ரணங்கள்சொல்வாய்
மிஞ்சின சேதுக்கேதான் மேவின புண்ணியத்தான்
தஞ்சமா யுதித்தானென்றோம் சேதுவின் பலத்திலே
துஞ்சாதோ சாபம்தானும் துணைசாபம் விலகாதென்றோம்.

13. வன்னியர் குலத்தில் எவ்வாறு பிறந்தான்? அதன் காரணத்தைச் சொல்லுங்கள். மேலான சேது யாத்திரை செய்ததன் பலனுகப் புண்ணியம் ஏற்பட்டது. சேது ஸ்னானபலத்தினால் இக்குலத்தில் தஞ்சமாய் உதித்தான். அதனால் சாபம் தொலையாதோ! சகோதரனிட்ட சாபம் விலகாது என்றோம்.

14. சொன்னஇக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளா
[னிருசிகப்பன்
பொன்தொழில் புரிவாகும் பூவையர் மோகனுவன்
மன்னன்போல் சிலநாள்உய்வன் மாதுரு சுகமில்லாதான்.

---

1. இந்திரன், சிவன்
2. வன்னியர் குலம்

14. இப்படிப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பாலகனு யுதிப்பான். அவனுடைய குணாதிசயங்களைச் சொல்லுங்கள். அழகுடையவன். பொது நிறத்தான். பொன்தொழில் செய்வானுகும். ஸ்திரீகளிடம் மோகங் கொள்ளுவான். அரசனைப்போல் சிலநாள் வாழ்வான். மாதாவினுல் சுகமில்லாதவன்.

15. பலகலை உணர்வானுகும் பரஉப காரனுகும்
சொலுமொழி காப்பானுகும் தோகைவா கனத்தோன்
[பத்தி
திலர்தம்போல் பந்துக்கட்குச் செய்நன்றி மறவானுகும்
சிலசில பொருளும்சேர்ப்பன் செலவுகள் செய்வானுகும்.

15. பல கலைகளை யறியவல்லான். பரோபகாரியாவான். சொன்ன வார்த்தையைப் பாதுகாப்பான். மயில்வாகனனிடம் பக்தி பூண்டவன். எள்ளுக்குள் எண்ணெய் பரவி நிற்பதுபோல், பந்துக்களிடம் கட்டுப்பாடுடைய வன். செய்ந்நன்றி மறக்கமாட்டான். சிறிது சிறிது பொருளும் சேர்ப் பான். செலவுகளும் செய்வான்.

16. மனைவியால் பெருமையேற்பன் மாத்தானை லகுவில்
[வெல்வன்
சினமுண்டு வெளிக்காட்டாதான் செனமதை வசியம்
[கொள்வன்
துணைவர்கள் தோஷமெய்தும் தோகையர் ஒன்றேதீர்க்கம்
கனமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

16. பெண்டாட்டியினுல் பெருமை யடைவான். எதிரிகளை எளிதில் வெல்லுவான். கோபமுண்டு ஆனல் அதை வெளிக்காட்டமாட்டான். ஜனங்களை வசியப்படுத்தும் இயல்பினன். சகோதரர்கள் தோஷமடை வார்கள். சகோதரிகளில் ஒருத்தி தீர்க்கம் எனலாம். விநயகரைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

17. பெண்துணை சேதிதன்னைப் பேசுவோம் தாயேகேளும்
குன்னிய மனத்தளாகும் கொழுநனும் உண்டாய்மாள்வன்
உண்மையாம் குணத்தளாகும் சந்ததி காணுதாகும்
கெண்ணிய குடும்பமேற்பள் கேவலம் அணுகாநெஞ்சம்.

17. சகோதரியின் செய்தியைப்பற்றி விவரமாய்ப் பேசுவோம். தாயே! கேளும். குறுகிய மனத்தளாகும். புருஷனும், பிள்ளையுண்டான காலத்தில் மாள்வன். சத்தியகுண முள்ளவள். புத்திரபாக்கியமில்லை. கௌரவ மான குடும்பபாரத்தை ஏற்பாள். கேவலமான விஷயங்களில் மனதைச் செலுத்தமாட்டாள்.

18. வயதுமே தீர்க்கமெய்தும் மாமுனிதடுத்துச் சொல்வார்
வியமுடன் துணையாண்தோஷம் விளம்புவீர் அந்தசங்கை
நயமுடன் சேயும்நீச்சம் நற்சனி அஞ்சைப்பார்க்கப்
பயமிலா சொன்னோம்யாங்கள் பார்வதி கேட்டிடாயே.

18. தீர்க்காயுளுடையவள். இதனை மாமுனிவர் தடுத்துச் சொல்லுவார். சகோதரன் தோஷம் என்றீரே! அந்தச் சங்கையை விளக்கமாய் எடுத்துச் சொல்லுங்கள். நயமுள்ள செவ்வாய் நீசஸ்தானத்திலிருப்பதாலும், நல்ல சனிபகவான் லக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டைப் பார்ப்பதாலும், அச்சமில்லாமல் இதை உரைத்தோம் நாங்கள். பார்வதி! கேட்பாயாக.

19. அன்னையின் குணத்தைச்சொல்வேன் அழகுளாள் [பொறுமைசாலி
அன்னமும் அன்பாயீவள் ஆளன்தன் மனதுக்கேற்றாள்
அன்னியர் மதிக்கவாழ்வள் அடாபிடி கூறாளாகும்
அன்னம்போல் வடிவுமொக்கும் அடிசலுக் கினியளாகும்.

19. தாயின் குணங்களைச் சொல்லுவோம். அழகுள்ளவள். பொறுமையுடையவள். அன்னமும் அன்பாயளிப்பாள். புருஷனுடைய மனமறிந்து பிரியமாய் நடப்பாள். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். அடாபிடியாய்ப் பேசமாட்டாள். அன்னம்போன்ற வடிவுடையவள். சமையலில் கெட்டிக்காரி.

20. தன்துணை காணாளாகும் சக்தியும் ஒன்றுஎன்றோம்
கன்னியும் மத்திலேகும் கழறுவீர் அந்தசங்கை
துன்மையாய் ஆறோன்தானும் சென்மத்தில் இருப்பதாலே
திண்ணமாம் தனியாய்வாழ்வள் பூருவவினை யாம்என்றோம்

20. கூடப்பிறந்தவரில்லை. சகோதரியும் ஒருத்தி என்றோம். அக் கன்னிகையும் மத்தியகாலத்தில் ஏற்படும். அந்தச் சங்கையை விவரிப்பீர். பொல்லாத ஆறுக்குடையவனான புதன் இலக்கினத்தில் இருப்பதனால் நிச்சயமாய்த் தன்னந்தனியே வாழ்வாள். இது பண்டைவினையின் பயனே காண்.

21. என்னஊழ் செய்தாளத்தை இயம்புவீர் முனியேநீதான்
தென்திசை சேரநாட்டில் செனித்தனள் கங்கைசேயாய்ப்
பொன்னொடு பணிதிபெற்றுப் புத்திரர் உள்ளாளாகி
அன்னவள் வாழும்நாளில் அணுகின வினையைக்கேண்மோ

21. எந்த ஊழ்வினையைச் செய்தாள்? அதைச் சொல்லுங்கள் முனிவரே! நீர்தான். தெற்கேயுள்ள சேரதேசத்திலே வேளாளர் குலத்தில் ஜனித்தாள். பொன், பூஷணம் இவைகளைப்பெற்று, புத்திரர்களும் உண்டாகி வாழ்ந்துவரும் காலத்தில், ஒரு வினை வந்து சேர்ந்தது. அதனைக் கேட்பாயாக.

22. மைத்துனன் மனைவிபேரில் வரைந்தனள் சிலேடை [வார்த்தை
உத்தோர்கள் மாதைநீக்க உடையவள் மனம்கலங்கி
வித்தகி சாபம்சொல்வாள் வீண்பழி சொன்னபாவி
பற்ருது துணைவர்தானும் பிறக்கும்பின் சென்மந்தன்னில்,

22. மைத்துனனுடைய மனைவிமேல் கேவலமான வார்த்தைகளைப் பேச, அதன் காரணமாக உற்ருர்கள் அம்மாதை நீக்க, அவளும் மனக்கலக்க முற்றுச் சாபமிட்டாள். என்மேல் வீண்பழி சொன்ன பாவிக்கு அடுத்த ஜன்மத்தில் உடன் பிறப்பில்லாமல்,

23. துணைவரு மில்லாதாயும் சுதர்க்குமே விருத்தியின்றி
வினைமன மாகவாழ்வாய் விளம்பியே தெருத்தூள்விட்டாள்
சினமுடன் அந்தச்சாபம் சேர்ந்தது பாவைக்கேதான்
கனமிலாக் குடும்பமந்தம் காலன்தன் பதிக்குப்புக்கி,

23. குழந்தைகளின் விருத்தியில்லாமல் மனசஞ்சலத்துடன் வாழ்வாள் என்று சொல்லித் தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தாள். கோபத்துடன் சொன்ன அந்தச் சாபம் இவளுக்கே நேர்ந்தது. அதிகம் பேர்கள் இல்லாத குடும்பத்திலிருந்து எமலோகம் சென்று,

24. வந்தவ ளென்றுசொல்வோம் மருவிடும் மாதுசாபம்
தந்துணை காணுளாகும் சந்ததி சுதர்க்குத்தோஷம்
அந்தாண்டுள் மரணமாவ ளறைகுரே மிவள்பின்சென்மம்
கந்தன்வாழ் தணிகைதன்னில் கலப்பளாம் பிரம்மசேயாய்.

24. திரும்பவும் பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு வந்தவள் இவளே தான் என்று சொல்லுவோம். அப்போது அம்மாது சொன்ன சாபம் இவளைச் சார்ந்தது. தன்னுடன் பிறந்தோரில்லை. புத்திரதோஷம் ஏற்பட்டது. அந்த வருடமானதும் மரணமடைந்தாள். இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். முருகக்கடவுள் வாழும் திருத்தணிகையில் பிராம்மணப் பெண்ணுய்ப் பிறப்பாள்.

25. மறுமாதா தோன்றுமென்றோம் வரைகுறோ மவர்க்குப் [புத்திரர்
பெருமையாய் ஆண்பால்ரெண்டு பேதையு மவ்வாறாகும்
உரைகுறோ மாண்பால்சேதி உறுதியில் லாதநெஞ்சம்
இரணியத் தொழிலும்செய்வ னேகுவான் முன்துணை(வி) [பக்கல்.

25. வேறு ஒரு மாதா தோன்றும் என்று சொன்னோம். அவர்க்குண்டான புத்திரர்களைப்பற்றிக் கூறுவோம். பெருமைமிக்க ஆண் குழந்தைகள் இருவர். பெண்களும் அப்படியேயாகும். பிள்ளைகள் செய்தியை உரைப்போம். நிச்சயபுத்தி கிடையாது. பொன் தொழிலும் செய்வான். முதல் பெண்டாட்டியிடம் போய்ச் சேர்வான்.

26. சுகமுடன் வாழ்வானாகும் துருசான கோபமேற்பன்
[1]இகபரன் பத்திபூண்பன் ஈகையு முடையனாகும்
அகமது அந்தம்சேர்ப்பன் ஆண்மையாய்க் குடும்பமேற்பன்
உகமையாய்ப் பேசுவானும் உறுதியில் லாதநெஞ்சம்.

26. சுகமாக வாழ்வான். திடீரென்று கோபங்கொள்ளுவான். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். தர்மங்களையும் செய்ய விரும்புவான். அந்திய காலத்தில் வீடு கட்டுவான். தைரியமாய்க் குடும்பத்தை நிர்வகிப்பான். திருஷ்டாந்தங்களுடன் சம்பாஷிப்பான். திடமில்லாத மனதையுடையவன்.

27. பாரியு மொன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்ரெண்டு
நாரியும் மூன்றுயென்றோம் நாயகன் வயதுதீர்க்கம்
சீரி(ல்)லா வாழ்வானாகும் செப்புவோன் பின்னோன்சேதி
ஆறுமா முகத்தோன்பத்தி அடாபிடி கொஞ்சமுண்டு.

27. பெண்டாட்டியும் ஒருத்திதான். ஆண் குழந்தைகள் இரண்டு பேர்கள். பெண்கள் மூன்று பேர்கள். புருஷன் தீர்க்காயுசுள்ளவன். சீரும் சிறப்புமாய் வாழ்வான். அவன் தம்பியைப்பற்றிய செய்தியைக் கூறுவோம். ஆறுமுகக்கடவுளிடத்தில் பக்தி கொள்ளுவான். அடாபிடிகள் கொஞ்சமுண்டு.

28. தந்திர மொழியுமுண்டு தன்னிடம் வாசமாகும்
சிந்தையு மிரண்டுமாகும் செகமதிப் புடையவாழ்வன்
பந்தணி மாதுஒன்று பாலர்கள் ஆண்பாலொன்று
விந்தையாய்க் கன்னிரெண்டு மேவிடும் தீர்க்கமாக.

---

1. கடவுள்

28. தந்திரமான வார்த்தைகளைக் கூறுவான். தன்னுடைய சொந்த கிருகத்தில் வசிப்பான். இரண்டுவித எண்ணங்களையு முடையவன். உலகினர் மதிக்கும்படி வாழ்வான். அழகிய கூந்தலையுடைய மாது ஒருத்தி. ஆண் குழந்தை ஒன்று. வேடிக்கையான கன்னிகைகள் இருவர். இவர்கள் தீர்க்காயுசுட னிருப்பார்கள்.

29. மாநிறம் சமதேகம்(தான்) மாரனும் பின்பால்வேறு
ஊனமில் லாததேகி உயர்வான புத்தியேற்பன்
தானெனு மனத்தனும் சர்ப்பம்போல் கோபமுண்டு
ஊனமில் லாததேகி உரைத்தனம் தீர்க்கமாக.

29. மாநிறங்கொண்டவன். சமமான தேகத்தையுடையவன். பின் பாகம் வேறாயிருக்கும். பின்னமில்லாத தேகம். மேலான புத்திமதிகளை யேற்றுக்கொள்ளுவான். தான் என்ற அகம்பாவம் பிடித்தவன். கோபம் வந்தால் சர்ப்பம்போல் சீறுவான். இப்படிப்பட்டவன் தீர்க்கமாய் நல்ல தேகத்துடனிருப்பான்.

30. எந்தக்கா லத்திலேதான் இயம்புவீர் மணத்தின்காலம்
புந்தியின் தசையிலேதான் புறவியோன் [1]மகன்பொசிப்பில்
அந்தவர் சுபங்கள்நேரும் அறிவிப்போம் பின்பால்சேதி
பிந்திய பாகம்சொல்வோம் பிறைநுதல் மாதர்சேதி.

30. இவனுடைய கலியாணகாலம் எந்தக்காலத்தில் ஏற்படும் என்று சொல்லுவீர்? புதனுடைய தசையிலே சனிபுக்தியில் அவனுக்குச் சுப சோபனம் நேரிடும். மற்றச்செய்தி விவரங்களைப் பிறகு சொல்லுவோம். அடுத்த பாகத்தில், பிறைபோன்ற நெற்றியையுடைய மாதாவின் செய்தியை யும் கூறுவோம்.

31. பாலகன் மணத்தின்காலம் பகருவோம் பத்தொன் [பாண்டுள்
சீலியும் தென்மேல்நேரும் செப்புவோ மவள்குணத்தைக்
காலத்தை அறிந்துரைப்பள் கணவனுக் கினியளாகும்
மால்மனை[2] ஒப்பதாகும் வருவோரை யாதரிப்பள்.

31. இவனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பத்தொன்பதாவது வயதில் பெண்டாட்டி தென்மேற்கிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். கணிதமுறைப்படி காலநிர்ணயங்கள் செய்வாள். புருஷனுக் கினியளாவாள். இலட்சுமீதேவியைப்போன்றவள். வந்த விருந்தினரை உபசரிப்பாள்.

---

1 சனி (சூரியனுடைய புத்திரன்)
2. இலக்குமி

32. மாந்தளிர் மேனியாகும் மங்களச் சொல்லுமுண்டு
கூர்ந்துமே வார்த்தைசொல்வள் கோபமும் கொஞ்சமுண்டு
காந்தம்போல் புத்தியேற்பள் கழுத்தினில் ரோகமுன்னால்
தேர்ந்தோர்க்கு அன்னமீவள் தேகமே உளைச்சலுண்டு.

32. மாந்தளிர்போன்ற நைப்புடைய மேனியை யுடையவள். மங்கள கரமான வார்த்தையைப் பேசுவாள். யோசித்தே வார்த்தைகளைப் பேசுவாள். சிறிது கோபமு முடையவள். எதையும் சீக்கிரம் கிரகிக்கும் படியான புத்தியை யுடையவள். கழுத்துப்பக்கத்தில் வியாதி யுடையவள். அந்த நாளில் அறிஞர்களுக்கு உணவு அளிப்பாள். தேகமும் உளைச்ச லடையும்.

33. சிலதுநாள் வரன்இல்வாழ்வள் செல்லுவாள் தன்நிலத்தில்
குலவாது துணைவரென்றோரும் குழவிகள் தோஷமெய்தும்
பலமதைச் சொல்லுமென்னப் பார்மகன் நீசனுயும்
மலைப்பாம்பு சேர்ந்ததாலே மைந்தர்கள் தோஷமெய்தும்.

33. சிலகாலம் புருஷனுடன் வாழ்வாள். தன்னூருக்கும் போவாள். சகோதரரில்லை. குழந்தைகளும் தோஷமடையும். இஃது எதனால் என்று வினவ, செவ்வாய் நீசனுயிருப்பதனாலும், அவனுடன் இராகுவும் சேர்ந்த தனாலும் புத்திரதோஷ மேற்படும்.

34. இதுவின்றிப் பூர்வம்தன்னில் இவள்சில கொடுமை
[செய்தாள்
அதனாலே சுதர்கள்தோஷ மறிவிப்பீர் அந்தச்சங்கை
புதுவைபால் கர்ணசேயாய்ப் பிறந்துமே சுகமுள்ளோளாய்
அதிபதி வாழுநாளில் மருவின வினையைக்கேண்மோ.

34. இதுவுமல்லாமல் பண்டைக்காலத்தில் இவள் சில கொடுமைகள் செய்தாள். அதன் காரணமாகப் புத்திரதோஷம் ஏற்பட்டது. அந்தச் சங்கையை விவரமாய்ச் சொல்லுங்கள். புதுச்சேரியில் கணக்கர் வமிசத்தில் பிறந்து, சுகங்களை அனுபவித்து வாழ்ந்து வரும் நாளில், வந்தடைந்த ஊழ் வினையைக் கேட்பாயாக.

35. பஞ்சையாய் ஏழைமாது பாலர்க்கு அன்னம்வேண்டிக்
கெஞ்சினாள் மாதுபக்கல் கிளிமொழி வார்த்தையின்றி
மிஞ்சிய வார்த்தைசொல்லி விரட்டினாள் ஏழைதன்னை
வஞ்சியும் மனவெறுப்பால் வரைந்தசா பத்தைக்
[கேண்மோ.

35. பரம ஏழையான ஒரு ஸ்திரீ, தன் குழந்தைகளுக்கு அன்னம் வேண்டுமென்று கெஞ்சினாள். இவள் இனிமையாய்ப் பேசாமல் கடுமையான

வார்த்தைகளைச் சொல்லி அந்த ஏழையை விரட்டி விட்டாள். அவளும் மன வெறுப்புக்கொண்டு சாபங்கொடுத்தாள். அதைக் கேட்பாயாக.

36. பாலர்சோ றீயாப்பாவி பருகாது சுதர்கள்தானும்
சாலவே பின்சென்மத்தில் சந்ததி காணுளாகும்
ஏலவே சொல்லியேதான் ஏகினுள் வேறுஇல்லம்
ஆலம்போல் அந்தச்சாபம் அணுகிற்று பாவைக்கேதான்.

36. குழந்தைகளுக்குச் சோறு கொடாத பாவிக்குக் குழந்தைகளே பிறக்காது. அதற்கு ஏற்றாற்போல மறு ஜன்மத்தில் குழந்தைகளே இல்லை. அம்மாது சபித்துவிட்டு வேறு வீட்டிற்குப் போனாள். ஆலகால விஷம் போல இவளை வந்தடைந்தது அக்கொடிய சாபம்.

37. தன்னிட [1]கொள்கைதன்னில் தங்கிற்று கருப்பன்சாமி
முன்னோர்கள் ஸ்தோத்தரிப்பாள் முதல்குல தெய்வமென்று
கன்னிகை தொழாமல்நின்றாள் கரும்முனி புகலும்சாபம்
என்னையே தொடாதபாவி யீன்றதோர் சுதரைக்
[கொல்வேன்.

37. தானிருந்தவீட்டின் கொல்லையில் ஒரு கருப்பன்சாமி தங்கிற்று. முன்னோர்கள் காலத்திலிருந்து வழிபட்டு வரும் சாமி அது. அந்த முதல் குலதெய்வத்தை இவள் தொழாதிருந்தாள். கருப்பன்சாமி இவளைப்பார்த்துப் பின்வரும் சாபத்தை அளித்தது. என்னை வழிபட்டுத் தொழாமலிருந்த பாவிக்குக் குழந்தைகள் பிறந்தால் அவர்களைக் கொல்லுவேன்.

38. மற்றொரு சென்மந்தன்னில் மருவாது சுதர்கள்தானும்
குற்றமா யுன்பால்யானும் குடியாக வாழ்வேனென்று
சுத்தமாய் முனியும்சொல்லித் தூர்ந்தது[2] வேருசாகை
பத்திற்று அந்தச்சாபம் பாலர்கள் அந்தஆண்டு[3].

38. அடுத்த ஜன்மத்தில் பிள்ளைகள் ஏற்படவில்லை. குற்றத்தின் காரணமாக முனிவரும் அதை உயிருடன் இருக்கும்படி செய்யவில்லை. அம்முனி அவளைப்பிடித்துக்கொண்டு அவளுடன் வாழ்ந்துவந்தது. சாபங் கொடுத்த முனியும் வேறு சாகைக்குச் சென்றது. அந்தச் சாபத்தினால் பாலர் மாண்டனர்.

---

1. கொல்லை என்றும் வைத்துக் கொள்ளலாம்
2. சென்றது
3. அநந்தம்மாண்டனர்

39. சஞ்சல மனத்தளாகிச் சண்டன்தன் பதிக்குபுக்கிக்
கஞ்சத்தி லுதித்தோன்லக்கம் காரூர்தி[1] குலமுதிப்பாள்
நஞ்சுபோல் முனியின்சாபம் நல்கிடும் ஏழைசாபம்
கொஞ்சிய துணையும்காணுள் குழவியும் தோஷமெய்தும்.

39. இப்படி வாழ்நாள்முழுதும் மனச்சஞ்சலப்பட்டு எமலோகம் சென்ருள். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு வண்ணுனுடைய குலத்தி லுதித்து வாழும்போது, விஷம்போன்ற முனியின்சாபம் நல்கிற்று. ஏழை மாதின் சாபங் காரணமாகச் சகோதரரும் காணுள். புத்திரதோஷமும் ஏற்பட்டது.

40. சாதகன் பூர்வம்சொல்வோம் தாம்பிர பரணிதன்னில்
ஓதுவார்[2] குலமுதித்து உயர்வான செட்டுச்செய்து
காதலி மதலேயுண்டாய்க் கனதன முடையனுகி
மேதினில் வாழுநாளில் மேவின விணையைக்கேண்மோ.

40. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களேச் சொல்லுவோம். தாம்பிர பரணிதீரத்தில் ஓதுவார்கள் குலத்திலுதித்து, உயர்ந்த வியாபாரங்களேச் செய்து, பெண்டாட்டி பிள்ளேகள் உண்டாகி, பெரிய பணக்காரனுகி பூலோகத்தில் வாழ்ந்து வரும்நாளில், ஒருவித ஊழ்வினே வந்தடைந்தது. அதைக் கேளுங்கள்.

41. தன்னுட இனத்தோர்தானும் சண்டைகள் மிகவேகொண்டு
மன்னர்பால் செல்லும்போது மைந்தனும் ஒருவன்தன்பால்
துன்மையாய்க் கட்டுவார்த்தை சொல்லவும் சொல்லினுலே
பின்னங்கள் மற்ருேனுக்குப் புக்கிற்று வருத்தமுற்று,

41. தன்னுடைய சொந்தக்காரர்களுடன் அதிகமாகச் சண்டைகள் செய்தும், அரசனிடம் செல்லும்போது வேறு ஒருவனேப் பார்த்துக் கெட்ட பொய்களேப் பேசினுன். பேசின வார்த்தைகள் காரணமாக அந்த ஆசாமிக்கு இடைஞ்சல்கள் அநேகம் ஏற்பட்டன. அவன் அதனுல் வருத்தப்பட்டு,

42. பொய்மொழி சொன்னபாவி பொருந்தாது செல்வம்தானும்
தையலும் மகவுமற்றுச் சாரும்பின் சென்மந்தன்னில்
நையவே மனத்தனுகும் நற்றந்தை ஆஸ்தியின்றிக்
கைமுதல் யாவுமின்றிக் காளேக ளில்லாதாயும்,

42. ஏ! பாவிப்பயலே! பொருந்தாத பொய்வார்த்தைகளேச் சொன்னுயே! அடுத்துவரும் ஜன்மத்தில் செல்வம், பெண்டாட்டி, பிள்ளே ஏற்பட்

1. காருவன் = வண்ணுன், காருவாகன், விளேஞன்
2. திருப்பாட்டுப்பாடுவோன்

டாலும், மனக்கலக்கங்கள் ஏற்பட்டு, நல்ல தந்தையின் பிதிரார்ஜித ஆஸ்தி யில்லாமல் கைப்பணமும் ஒன்றுமில்லாமல் பிள்ளைகளும் பிறக்காமல்,

43. இன்னமும் பலவார்சொல்லி யிறைத்தனள் தெருத்தூள் [தானும்
துன்மைகள் சேர்ந்ததென்றேம் செல்வங்கள் அந்தம்நீங்கித்
தன்சுதர் மனைவிமாண்டு சண்டன்தன் பதிக்குப்புக்கிப்
பொன்னவன் வரியப்பட்டுப் பிறப்பனும் இந்தபாலன்.

43. இம்மாதிரி இன்னும் பல சாபமொழிகளைக் கூறி தெருவிலிருக்கும் மண்ணை வாரி இறைத்தான். இதன்காரணமாகப் பலதுன்பங்கள் ஏற்பட்டன. செல்வங்களும் அடியோடு ஒழிந்தன. பெண்டாட்டி பிள்ளை இறந்து பட்டு எமலோகம் சென்றார்கள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறப்பனும் இந்தப் பாலகன் (நம் ஜாதகன்).

44. ஆகையா லினத்தோன்சாப மணுகிடு மிச்சென்மத்தில்
ஏகிடும் தந்தைஆஸ்தி புதல்வர்கள் தோஷமெய்தும்
ஏகுவான் வேறூர்தன்னி லீன்றதாய் சுகமுமின்றிப்
பாகமாய் வாழ்வாளாகும் பார்வதி கேட்டிடாயே.

44. ஆதலால் சொந்தக்காரனுடைய சாபமும் இந்த ஜன்மத்தில் அவனைச் சேர்ந்தது. தந்தையினுடைய ஆஸ்தி வந்துசேரும். புத்திர தோஷம் ஏற்படும். வேறு ஊருக்குச் செல்வான். இவனை ஈன்ற தாய் சுகமில்லாமல் ஒருமாதிரி வாழ்ந்துவருவாள். பார்வதியே! கேட்பாயாக.

45. சுதர்தோன்ற [1]திரிகைஉண்டு செப்புவீர் முனியேநீதான்
வதிபன்செய் வினைகளுக்கு வரைகுறேம் கிரியையொன்று
விதியவன் பூசைசெய்யும் வேதத்தோன்[2] மலைக்குச்சென்று
பதியுடன் சேயின்வாரம் பஞ்சனுள் கிரியைசுற்றி,

45. புத்திரன் ஏற்படுவதற்குண்டான ஒரு குலாலசக்கரம் உண்டு. அதை, முனியே! சொல்லுங்கள். ஜாதகன் செய்த வினைகளைப் போக்க ஒரு

---

1. எந்திரம் ; குலாலசக்கிரம்

2. பரமசிவன் (பெண்பால்=வேதநாயகி'. வேதநாயகன், வேதியர் நாயகன் என்று தேவாரம் கூறும்.

(வேதநாதேசுவரர் = திருவோத்தூரிலே கோயில்கொண்டிருக்கும் சுவாமியின் பெயர். சிலர் வேதத்தோன் மலை என்ற சொற்றெடருக்குத் திருச்சிராப்பள்ளியிலுள்ள மாதிர்பூதேசுவரர் கோவில் கொண்டிருக்கும் மலை என்பர். (The Rock fort of Trichinopoly) பிள்ளையில்லாதவர்கள் தாயுமானஸ்வாமியை இன்றைக்கும் பிரார்த்தித்து வருவதுவழக்கம்.)

பரிகாரம் உண்டு. பிரம்மா பூஜைசெய்யும் வேதத்தோன் மலைக்குப்போய், பெண்டாட்டியுடன் செவ்வாய்க்கிழமைதோறும் ஐந்து தடவைகள் (கிழமைகள்) கிரிபிரதக்ஷிணம் செய்தால்,

46. கடைநாளில் கஞ்சத்தாலே[1] கடவுளர்க் கருச்சித்தேத்தி
அடவுடன் மூவேழ்பேர்க்கு அன்னமும் அன்பாயீந்து
[2]விடம்கெந்தம் பொருளுமீந்து வித்தகன் உள்ளூர்சென்று
அடவுடன் சேயின்வார மாண்டுமே விரதம்கொள்ள,

46. கடைசிநாளில் ஸ்வாமிக்குத் தாமரைமலர்கொண்டு அருச்சித்துத் தொழுது, அடவாக (ஒழுங்காக) இருபத்தோறு பேர்களுக்கு அன்னபானதிகள் அன்புடன் அளித்து, தாகவிடாயும் தீர்த்து, சந்தனம் தாம்பூலம் அளித்து, தக்க தக்ஷிணைப்பொருளும் தந்து உபசரித்துப் பிறகு, இவன் தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்பிவந்து, அடவாகச் செவ்வாய்க்கிழமை தோறும் ஒரு வருடகாலம் விரதம் இருப்பானாகில்,

47. முன்வினை விலகியேதா னுதித்திடும் சுதர்கள்தானும்
மன்னன்போ லொருவனுண்டு மாதுசெய் வினைக்குச்
[சொல்வேன்
கன்மசாந் திகளும்செய்து காதலி பீஜம்தன்னைப்
பொன்ரேக்கில் வருவியேதான் பூவையு மணிந்துகொண்டு,

47. பண்டைவினை இவனை விட்டு விலகும். புத்திரர்களும் பிறப்பர். அரசன்போல் ஒரு புதல்வன் உண்டு. இவன் பெண்டாட்டி இது சம்பந்தமாகச் செய்யும் கர்மாக்களைப்பற்றிக் கூறுவோம். காதலியும் யுக்தமான கர்மசாந்திகளைச் செய்து, பீஜாக்ஷரத்தைத் தங்கத்தகட்டில் எழுதி, அக்குலிசத்தைத் தானணிந்து கொண்டு,

48. அறுமுகன் ஆலயத்தில் அதிதிகள் ஐந்துபேர்க்குத்
திருகிலா அன்னமீய செய்வினை நிவிர்த்தியாகும்
பெரும்சுதர் ஆண்பாலொன்று பிறந்திடும் வயதுதீர்க்கம்
குறையென்று செய்யானாகில் குழவிகள் தோன்று
[தென்றேம்.

48. முருகக்கடவுளின் ஆலயத்தில் அதிதிகள் ஐந்துபேர்களுக்குக் குற்றமில்லாத விருந்தளித்தால், பண்டைவினை பறந்துபோகும். பெருமை பொருந்திய ஆண்குழந்தையொன்று பிறக்கும். அதற்கு வயசு தீர்க்கமாகும்.

---

1. தாமரைப்பூ, துளசி
2. தாகநீர்

இந்தப் பரிகாரங்களில் குறைவு ஏற்பட்டால் குழந்தைகள் தோன்ற என்றோம்.

49. கருமசாந் திகள்செய்வார் கழறுவீர் முனியேநீதான்
மருமமாய் அந்தரம்காண்டம் வரைந்தனம் விபரம்
[காண்பாய்த்
திருமகன் யோகச்சேதி செப்புவோம் இனிமேலாக
அருநான்கு இரண்டாண்டுக்கும் அரசன்போல்
[வாழ்வானாகும்.

49. கருமசாந்திகள் செய்பவர்கள் எப்படிச் செய்யவேண்டு மென்று சொல்லுங்கள், முனிவரே! இந்த இரகசியமான விஷயத்தைப் பின்னால் ஒரு காண்டத்தில் எழுதியுள்ளோம். விவரம் கண்டுகொள்ளுவாய். உண்டாகும் மகனுடைய யோகபாவங்களை இனிமேல் விவரிப்போம். இருபத்தாறு வயது பரியந்தம் அவன் அரசனைப்போல் வாழ்வான்.

50. நினைத்தகா ரியங்களோங்கும் நிருபர்க ளிஷ்டமெய்தும்
கனதன மேன்மேலோங்கும் கருதினஆண்டுமேலாய்
வினைமனம் தரணிசேதம் வரவுக்குச் செலவனேகம்
துணிவிலா மனமுமெய்தும் சஞ்சல மனமுமெய்தும்.

50. நினைத்த காரியங்கள் மேன்மை யடையும். எழுத்தாளர்களுடைய பிரியத்தைப் பெறுவான். கௌரவமான சொத்துக்கள் மேலும் ஏற்படும். சொன்ன வயதிற்குமேல் காரியங்கள் மனப்பான்மை பூமி இவற்றின் சேதமும், வரவுக்குமேல் செலவும், மனத்தாங்கல்களும், சஞ்சலங்களும் ஏற்படும்.

51. எண்ணைஞ்சு ஆண்டுகொண்டு இளம்பிறை போலேயோகம்
திண்ணமாய் நடக்குமென்றோம் தனதான்யம் பெருகு
[மென்றோம்
வண்ணமாய்த் தொழிலுமோங்கும் மனமது தீனமாகும்
கண்ணிய மாகவாழ்வன் கோதையே கேட்டிடாயே.

51. இவனுடைய நாற்பதாம் வயதிற்குமேல் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகங்கள் விருத்தியாகும். இது திண்ணமாய் நடக்குமென்றோம். தனதானியங்கள் பெருகும் என்றோம். ஒழுங்காகத் தொழிலில் அபிவிருத்தி ஏற்பட்டு மேன்மையடையும். மனவடக்க மேற்படும். கௌரவமாக வாழ்ந்துவருவான். பார்வதியே! கேட்பாயாக.

52. ஆருறு ஆண்டுதன்னி லனுகிடும் தந்தைகெண்டம்
சூரியன் தசையிலேதான் குருபுக்தி காலமாகும்
வேறொரு சென்மம்சொல்வேன் வேங்கட மலையிலேதான்
சேருவா னிக்குலத்தில் செல்வமாய் வாழ்வானாகும்.

52. இவனுடைய முப்பத்தாறும் பிராயத்தில் இவன்தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அதுவும் சூரியதசையின் குருபுக்தியில் ஏற்படும். மற்றொரு ஜன்மத்தில் திருவேங்கடமலையாகிய திருப்பதியிலேதான் இக்குலத்தில் வந்துதிப்பான். சீரும் சிறப்புமாய்ச் செல்வவந்தனாய் வாழ்வான்.

53. அருபது மூன்றுஆண்டில் ஆடிமா தத்திலேதான்
குறைபக்கம் ஷஷ்டிதன்னில் குழவியி னுடலமேகும்
வரும்சென்மம் காளாத்திதன்னில் வருகுவான் சத்திரிய
[சேயாய்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

53. இவனுடைய மரணகாலம் கூறுவோம். இவனது அறுபத்து மூன்றும் பிராயத்தில், ஆடிமாதத்தில், கிருஷ்ணபட்சம், சஷ்டியன்று இவன் மரணமடைவான். அடுத்த ஜன்மத்தில் திருக்காளத்தியில் க்ஷத்திரியக் குழந்தையாய் அவதரிப்பான். விக்னேசுவரரைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

54. பாரியின் இவன்பின்னாலே பகருவோம் மாரகங்கள்
மாரனும் செனனகாலம் மன்னவன் திசையிருப்புக்
கூறுவோ மாண்டுரெண்டும் கூடிடும் திங்களைந்தும்
தீரமாய்ப் பூர்வபாகம் செப்பினோம் தாயேயாங்கள்.

54. பெண்டாட்டியுடையவும் இன்னும் மற்றோருடையவும் மரணங்கள் இவனுக்குப் பிறகு ஏற்படும். இவனுடைய ஜனனகாலத்தில் குருதசையில் இருப்பு வருஷம் இரண்டு, மாதம் ஐந்து. இவ்விதம் பூர்வபாகப் பலன்களைத் திறமையுடன் எடுத்துரைத்தோம், நாங்கள், தாயே!

ஜாதகம் 36

1. பிறைவீணை ரவிசேய்நண்டு புதன்புகர் ராகுசீயம்
கரியவன் மானதாகக் கனகனும்[1] மேடம்புக்க
வருவது சென்மம்மேடம் வரைகுவீர் பலனையென்று
[2]அரன்மனை யாளும்கேட்க அத்திரி புகலுகின்றார்.

1. சந்திரன் மிதுனத்திலும், சூரியன் செவ்வாய் கடகத்திலும், புதன் சுக்கிரன் இராகு இவர்கள் ஒருங்கே சிம்மத்திலும், சனி மகரத்திலும், குரு மேடத்திலும் தங்க இந்த மேஷலக்ன ஜாதகத்திற்குண்டான பலன்களைச் சொல்லுங்கள், என்று பரமசிவனுடைய மனைவியான பார்வதிதேவி கேட்க, அத்திரி மகரிஷி சொல்லலுற்றார்.

	லக்கினம் குரு		சந்திரன்
கேது	இராசி		சூரியன் செவ்வாய்
சனி	சக்கரம்		புதன் சுக்கிரன் ராகு

2. இந்தசேய் ஆணும்சென்மம் இல்லமும் கீழ்பால்வாசல்
தென்வட வீதியாகும் சிறுவூராம் தந்திஉத்திரம்
அந்தகி அருகில்தங்கு மணுகிடு நதியுமுண்டு
வந்தவன் மூன்றும்சென்மம் வடுகர்தன் குலமேயாகும்.

2. இவன் ஆண்மகனாக ஜனனமாவன். இவனுடைய வீடும் தெற்கு வடக்கு வீதியில் கிழக்குநோக்கிய வாயிற்படியை யுடையது. அஃது ஒரு சிறிய கிராமம். வடக்கே விநாயகருடைய கோவில். அதன் பக்கத்தில் பார்வதியின் கோவில் உள்ளது. அருகே நதியும் உண்டு. ஜாதகனுக்கு இது மூன்றும் ஜன்மம். தெலுங்கர் குடும்பத்தி லுதிப்பான்.

---

1. குரு
2. பார்வதி

3. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சாந்தவான் சமமாம் [கல்வி
தந்தையின் ஆஸ்தியேகும் சரசமாய் வார்த்தைசொல்வன்
தந்தமும் தரளமொக்கும் தரணியைச் சேர்ப்பானும்
தன்பந்தை [பந்துவை] யாதரிப்பன் சாராள்கள்[1] [உடையனும்.

3. இவனுடைய தகப்பனாரின் குணங்களைக் கூறுவோம். சாந்த குண முள்ளவன். சமமான கல்வியைப் பெற்றவன். பிதுர்ஆஸ்தியை அடைவான். சரசமான வார்த்தைகளைக்கொண்டு சம்பாஷிப்பான். முத்துப்போன்ற பற்களை யுடையவன். பூஸ்திதியை விருத்திசெய்வான். தன்னுடைய பந்துக்களை யாதரிப்பான். பரிஜனங்களை யுடையவனுவன்.

4. மாந்தளிர் மேனியாகும் மதுதொழில் புரிவானும்
சேர்ந்தவர் தம்மைக்காப்பன் சீக்கிர கோபம்கொஞ்சம்
ஏந்திழை மார்கள்மோகன் இடர்செய்யான் யாவருக்கும்
தேர்ந்தோர்போல் வார்த்தைசொல்வன் சீலம்போல் [வெளிமயக்கன்.

4. மாந்தளிர்போன்ற மேனியை யுடையவன். மதுக்களை விற்பான். (மது வியாபாரத்தைச் செய்வான்.) தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவான். சிறிது முன்கோப முடையவன். ஸ்திரீகளைக்கண்டு மோகிப்பான். யாவர்க்கும் தீங்கு செய்ய மாட்டான். பெரிய அறிஞர்களைப்போல் பேச வல்லவன். பெரிய குணசீலனைப்போல் வெளிமயக்கங் கொண்டவன்.

5. கரமதில் கமலரேகை காலிகள் விருத்தியுண்டு
பொரைசொலான் இளமனத்தன் புதுஇல்லம் பின்னல் [செய்வன்
பிரமரே கையுமுண்டு போசன சுகியனும்
அருமுகன் தனைத்துதிப்பன் அடக்கமாம் வார்த்தையுண்டு.

5. கையில் பத்மரேகையை யுடையவன். நாற்கால்மிருகங்களை விருத்தி செய்வன். பொய்வார்த்தைகளைச் சொல்லான். இரக்கபுத்தி யுடையவன். பிற்காலத்தில் புதிய வீடு கட்டுவான். கையில் பிரம்மரேகையையு முடையவன். போஜனசௌக்கியத்தை யுடையவன். அறுமுகக்கடவுளைப் துதிப்பான். அடக்கமான வார்த்தைகளைப் பேசுவான்.

6. அன்னையும் ரெண்டுமாகும் அவன்துணை ஆண்பாலொன்று
பின்னமாம் பூர்வம்தன்னில் பிதாவுமே தனியாய்வாழ்வன்
என்னகா ரணத்தினுலே இவன்துணை தோஷம்சொன்னீர்
துன்மையாய்க் கேதுகும்பம் தொடர்ந்ததால் துணைவர் [தோஷம்.

1. வேலையாட்கள்

6. தாயார் இருவர் ஆவர். அவனுக்குச் சகோதரன் ஒருவன் உண்டு. முதலில் பிறந்தவன் வியோகமடைவான். பிதாவும் தன்னந்தனியே வாழ்வான். எந்தக் காரணத்திலை இவன் துணைவருக்குத் தோஷம் ஏற்பட்டது ? சொல்லுங்கள். கெடுதலான கேது கும்பராசியில் தங்கியிருப்பதனுல் துணைவர்தோஷ மேற்பட்டது.

7. இதுவன்றிப் பூர்வம்தன்னில் இவன்சில கொடுமை [செய்தான்
அதனாலே துணைவர்தோஷம் அறிவிப்பீர் அந்தசங்கை
அதிபன்தன் பூர்வம்சொல்வேன் மதுரைமா நகரிலேதான்
சதிசெய்யும் வைசியசேயாய்ச் செனித்துமே செட்டுச்செய்து,

7. இதுவுமல்லாமல், பூர்வத்தில் இவன் சில கொடுமைகள் செய்தான். அதன் காரணமாகச் சகோதரதோஷம் ஏற்பட்டது. அந்த சங்கையை விவரமாய்ச் சொல்லுங்கள், என்று வினவ, இவனுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுகிறேன், கேள். மதுரைமாநகரிலே வஞ்சிக்கும் வைசியர்குலத்தில் பிறந்து, வியாபாரங்கள் செய்து,

8. பாரியும் மதலையுண்டாய்ப் பாலகன் வாழுநாளில்
கூறுவோம் வினையையாங்கள் கோதைமேல் நிந்தை [வார்த்தை
மாரனும் சொல்லும்போது மங்கையும் திகிலடைந்து
கூறுவாள் சாபம்தானும் குறிக்கும்பின் சென்மந்தன்னில்,

8. பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு இவன்வாழ்ந்துவரும் நாளில், ஒரு வினை ஏற்பட்டது. அதைக் கூறுவோம். பெண்டாட்டியின்மேல் நிந்தனை மொழிகளைப் புருஷன் சொல்லும்போது, மங்கையும் திடுக்கிட்டுப் பயந்து சாபம் கொடுக்கலானாள். அடுத்த ஜன்மத்தில்,

9. துணைவர்கள் இல்லாதாயும் தந்தையார்ச் சிதமுமின்றி
இணையாக வாழ்வாயென்று புகன்றுமே தெருத்தூள் [விட்டாள்
வினையது நேர்ந்ததென்றேம் விளம்புவோம் வேறுஒன்று
கனமிலா ஏழையோர்க்குக் கணக்கினில் மோசம்செய்தான்.

9. சகோதரர்கள் இல்லாமல், பிதிரார்ச்சிதமுமின்றி, கஷ்டத்துடன் வாழ்வா யென்று கோபத்துடன் சொல்லி, தெருவிலிருக்கும் மண்ணை வாரி இறைத்தாள். அவ்வினை இவனை வந்தடைந்தது. இது நீங்கலாக வேறொன்று கூறுவோம் வறுமைமிக்க ஏழைகளுக்குக் கணக்குகளில் மோசம் செய்தான்.

10. ஏழையோர் சாபம்தானும் எய்திற்று என்றுசொல்வோம்
தாழ்வான குடும்பம்அந்தம் சஞ்சல மனத்தனுகிப்
பாழான காலநாடு பரவியே பரமன்லக்கம்
ஆழியி லுதித்தானென்றேம் அணுகிடு மாதுசாபம்.

10. ஏழைகளுடைய சாபமும் இவனைச் சார்ந்தது என்று சொல்லுவோம். தாழ்வான குடும்பத்தைப் பெற்றுக் கடைசியில் சஞ்சலமான மனத்துடன் பாழான எமலோகம் சென்றான். பிரம்மாவின் கணக்குப்படி சிருஷ்டிக்கப்பட்டுப் பூமியிலுதித்தான் என்றேம். அம்மாதின் சாபம் இவனை நெருங்கி அடைந்தது.

11. தந்துணை காணுகும் தந்தையார்ச் சிதமும்போகும்
இந்தவார் குணத்தானுக்கு இப்பாலன் உதிப்பானுகும்
அந்தவன் குணத்தைச்சொல்வேன் அரிமகன் ஒப்பதாகும்
முந்தின கோபமேற்பன் மூலசூ டுடையனுகும்.

11. தன்னுடன் பிறந்தவர்களில்லை. பிதிரார்ச்சித சொத்தும் இல்லை. இப்படிப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு, இந்த ஜாதகன் பாலனுக உதிப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவேன். பீமசேனனைப் போன்றவன். முதலில் கோபங்கொள்ளுவான். மூலச்சூட்டின் உபாதையை யுடையவன்.

12. உண்டியும் சுகமாய்க்கொள்வன் உறைப்பொடு புளிப்
[பிலிச்சை
குண்டைகோ விருத்தியுண்டு குலமதிப் புடையவாழ்வன்
வண்டிவா கனமுமேற்பன் அடிமையேற் குடிபெருக்கம்
துண்டமாய்க் கூறுனுகும் தொழுவழக் கதனில்செல்லான்.

12. சாப்பாட்டைச் சுகமாய்ப் புசிப்பான். உறைப்பும் புளிப்புமாயிருக்கும் உணவி லிச்சைகொண்டவன். காளைமாடுகளை விருத்திசெய்வான். குலமதிப்புடன் வாழ்வான். வண்டி வாகனங்களையு முடையவன். பரிஜனங்களையுடைய பெருங்குடிப் பெருக்கத்தை யுடையவன். கண்டித்துப் பேச மாட்டான். நிலசம்பந்தமான வியாச்சியங்களில் தலையிடமாட்டான்.

13. சொல்லிடு வசனமேலாம் சுத்த[மு]ம் சொகுசனுவன்
வெல்லுவான் எதிரிதன்னை வேந்தன்போல் வாழ்வானுகும்
சல்லியம் கொள்ளானுகும் தனமது பெருக்கம்செய்வன்
இல்லையென் றுரைக்கமாட்டான் யாரையு முறவு
[கொள்வன்.

13. இவனது பேச்சை எல்லோரும் மேன்மையாய் மதிப்பார்கள். சுத்தமுள்ளவன். சொகுசா யிருப்பான். எதிரியை ஜயிப்பான். அரசனைப்

போல் வாழ்ந்து வருவான். கடன் வாங்கமாட்டான். பணத்தை விருத்தி செய்வான். யாசிப்பவருக்கு இல்லையென்று சொல்லமாட்டான். யாவரையும் நேசம் கொள்ளுவான்.

14. தந்தைக்கு மேலாய்வாழ்வன் தரணிகள் சேர்ப்பானுகும்
சொந்தமாய் இல்லம்செய்வன் சோம்பிடான் காரியத்தில்
வந்தவர்க் கன்னமீவன் மதுதொழில் தன்னுல்லாபம்
எந்திடம் பெருமையேற்பன் ஈசுவரி கேட்டிடாயே.

14. தந்தையைக்காட்டிலும் மேன்மையாய் வாழ்வான். பூஸ்திதியை விருத்திக்குக் கொண்டுவருவான். சொந்தமாக வீடு கட்டுவான். காரியத்தில் சோம்பல் கொள்ளமாட்டான். வந்த விருந்தினருக்கு அன்னபானுதிகளைக் கொடுத்து உபசரிப்பான். மதுவிற்பனைத்தொழில் செய்து லாபம் பெறுவான். சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெறுவான். ஈசுவரி! கேட்பாயாக.

15. பிருகுமே புகலுகின்ருர் புகன்றினீர் யோகம்எவ்வார்
வருமறு சொல்லுமென்ன மால்புகர் பணியுமஞ்சில்
பரிதியின் சேயும்நாலில் பங்குமே தசமுமாகத்
திருகுமே சென்மம்தங்கப் புகன்றனன் யோகம்தானே.

15. இதைக் கேட்ட பிருகுமகரிஷி புகலுகின்ருர். யோகம் வரும் என்று சொன்னீரே! எவ்வாறு வரும்? அதன் விவரம் கூறுங்கள், என்று வினவ, புதனும் சுக்கிரனும் இராகுவும் லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் போய்ச் சேர்ந்து நிற்க, சூரியனும் செவ்வாயும் நாலில் தங்க, சனியும் பத்தாமிடத்தில் நிற்க, குருவுமே லக்கினத்திலிருக்க, யோகத்தைச் சொன்னேன்.

16. அளகேசர் யோகமென்றும் அரியோகம் பத்மயோகம்
தளபதி யாகவாழ்வன் தரணியால் தனமும்நேரும்
விளைநிலம் அதிகம்சேர்ப்பன் விசித்திர இல்லம்செய்வன்
களபங்கள் பிரியனுகும் கழறுவார் பராசர்தானும்.

16. இந்திர(குபேர)னுடைய யோகமென்றும், திருமாலின் யோகமென்றும், பத்ம யோகமென்றும் சொல்லலாம். பூமிக்கு அதிபதியாக வாழ்வான். பூமியில் தனப்பிராப்தியும் ஏற்படும். விளையும் நிலங்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளுவான் விசித்ரமான வீடு கட்டுவான். கலபங் (யானை)களில் பிரியமுடையவன். இதைக் கேட்ட பராசரர் சொல்லலுற்ருர்.

17. தனமது எந்தக்காலம் சார்ந்திடும் விபரம்சொல்வாய்க்
கனமுள பணியின்காலம் கனகன்தன் புத்திதன்னில்
வனிதனுக் காருமாண்டில் மருவிடும் நிதிநிட்சேபம்
வினையிலா தரத்தின்மாதே விளம்பின மொழிகுன்ருது.

17. எந்தக் காலத்தில் தனப்பிராப்தி ஏற்படும் என்று அதன் விவரம் கூறுங்கள். மேலான இராகு தசையில், குருவின் புக்தியில், இவனுடைய ஆறுமாண்டில் நிதிகள் நிச்சயமாய்ச் சேரும். வினையில்லாத பார்வதியே! சொன்னசொல் தவறாது.

18. இல்லமும் அதன்மேல்செய்வன் இனபந்து மதிக்கஉய்வன்
அல்லல்கள் அதன்மேல்காணுன் அம்புலி போலேயோகம்
சொல்லுவோம் பாலனுக்குச் சோலைகள் துரவுசெய்வன்
எல்லோர்க்கும் இவன்சொல்மேன்மை யீசுவரி
[கேட்டிடாயே.

18. வீடும் அதற்குமேல் கட்டுவான். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான் அதற்கப்புறம் தொந்தரைகள் ஏற்படா. பிறைச்சந்திரனைப் போல் யோகம் வளர்ந்துகொண்டே வரும். தோட்டம் துரவுகளை ஏற்படுத்து வான். எல்லாரும் இவன்பேச்சை மதிப்பார்கள். ஈசுவரி! கேட்பாயாக.

19. இன்னவன் துணைவர்தன்னை இயம்புவோம் தாயேகேளும்
முன்துணை கன்னிரெண்டு விளம்புவோம் தீர்க்கமாகப்
பின்துணை ஆண்பாலொன்று பேசுவோம் தீர்க்கமாகக்
கன்னிகை அவ்வார்தீர்க்கம் கினக்காது இரண்டுஎன்றோம்.

19. இவனுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுவோம். தாயே! கேளும். மூத்தசகோதரிகள் இரண்டு பேர்கள் இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். தம்பி ஒருவன் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். சகோதரியும் தீர்க்கமாக ஒருத்திதான். இரண்டுபேர்கள் இருந்தால் தங்கார்கள்.

20. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் ஈரொன்பாண்டில்
காதலி அன்னைவர்க்கம் கலப்பளாம் குணத்தைச்சொல்
[வேன்
பாதக மனமில்லாதாள் பணிந்தோரை யாதரிப்பள்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உள்மனம் கபடுமில்லாள்.

20. ஜாதகனுடைய கலியாணகாலத்தைப் பற்றிப் பேசுவோம். இவனுடைய பதினெட்டாம் பிராயத்தில், தன்னுடைய தாய்வர்க்கத்தில் பெண்டாட்டி ஏற்படுவாள். அவளுடைய குணங்களைச் சொல்வோம். மனதில் பஞ்சமாபாதகங்களை எண்ணவும் மாட்டாள். ஏழைக்கு உதவி செய்வாள். சுகமாகச் சம்பாஷிப்பாள். மனதில் கபடமில்லாதவள்.

21. பால்பாக்கிய முடையளாகும் பந்துவை யாதரிப்பள்
சீலியாம் இருசிகப்பள் சிறப்பான குடும்பமேற்பள்
காலத்தை அறிந்துவாழ்வள் கணவனுக்கினியளாவள்
வேல்விழி மாதுதீர்க்க வயதுமே யென்றுசொல்வோம்.

21. பால்பாக்கிய முடையவள். சொந்தக்காரரை ஆதரிப்பாள். சீல முடையவள். பொதுநிற முடையவள். மேன்மையான குடும்பத்தை வகிப்பாள். காலத்திற்குத் தகுந்தபடி வாழ்வாள். புருஷனிடம் பிரியமுள்ளவளாயிருப்பாள். வேல்போன்ற விழியையுடைய இவள் தீர்க்காயுசுள்ளவள் என்று சொல்வோம்.

22. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலமுருது
சித்தமாய் உதித்தாலும்தான் தீங்காகு மென்றுசொல்வோம்
குத்தத்தைச் சொல்லுமென்ன குழவியின் தானம்தன்னில்
வித்தகர் ராகுவெள்ளி மேவின பலத்தால்சொன்னோம்.

22. புத்திரபாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோ மென்றால், அதிக பலமில்லை. அப்படியே சித்தமாய் ஏற்பட்டாலும் தீர்க்காய் முடியும் என்று சொல்லுவோம். இதில் உள்ள குற்றத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, புத்திரஸ்தானத்தில், புதன் இராகு சுக்கிரன் இவர்கள் சேர்ந்து இருக்கும் பலத்தினால் இவ்வாறு கூறினோம்.

23. முன்னவ னிருந்தசென்மம் மொழிகிறோம் தாயேகேளும்
கன்னியாக் குமாரிதன்னில் கலந்தனன் கங்கைசேயாய்த்
தன்மனை மதலையுண்டாய்த் தரணியால் சீவித்தேதான்
அன்னவன் வாழுநாளில் அணுகின வினையைக்கேண்மோ.

23. அவனுடைய முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகிறோம். தாயே! கேளும். கன்னியாகுமரியில், வேளாளர் குலத்திலுதித்தான். மனைவிமக்கள் ஏற்பட்டு, பூமியைக் கிருஷிசெய்து, சீவித்துவந்தான். அப்படி வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பாயாக.

24. இல்லத்தில் வெகுநாளாக இருந்தது நாகமொன்று
அல்லலாய் மருடத்தாலே அதுமுத்தம் தங்கும்போது
வல்லவன் அரங்கம்செய்து வாட்டினன் கழியினலே
புல்கிற்று காலனடு புக்கிற்று அந்ததோஷம்.

24. அவன்வீட்டில் வெகுகாலமாக ஒரு வாழும் நாகப்பாம்பு இருந்தது. சரீரசிரமத்தினால் அது முற்றத்திற்கு வந்து படமெடுத்துத் தங்கும்போது இவன் ரகசியமாயிருந்து கொம்பால் அதை அடித்தான். அது செத்து எமனுலகம் சென்றது. அந்த தோஷம் இவனை வந்தடைந்தது.

25. இதுவன்றி வேறுசொல்வேன் இகபரன் ஆலயத்தில்
அதிபதி விதவைபோகம் மருவியே கருவுதங்க
அத(ன)ம்செய்தான் பண்டிதத்தா லனுகிற்று அதுஓர்
[தோஷம்
சுதர்களும் அந்தமாண்டு சஞ்சல மனத்தனுகி,

25. இது நீங்கலாக, வேறு ஒன்று சொல்லுவேன். இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் பகவானின் கோவிலில், ஜாதகன், விதவையோடு போகம் செய்தான். அவளும் கர்ப்பமானுள். வைத்தியர்களைக் கொண்டு அந்த கர்ப்பத்தைக் கரைத்தான். அந்த தோஷமும் இவனை வந்தடைந்தது. பிள்ளைகளும் கடைசிகாலத்தில் இறந்து மனச்சஞ்சல முடையவனுகி,

26. மரலியின் பதிக்குப்புக்கி மறையவன் வரியப்பட்டு
உரைகுவா னிவனேயென்றோம் உரகன்தன் சாபமொன்று
அரிவையின் கருவின்சாபம் அணுகிடு மிச்சென்மத்தில்
பெரும்சுதர் தோஷமெய்தும் புகலுவோம் கிரியைஒன்று.

26. எமலோகம் சென்றான். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவனே மறுபடியும் வந்துதித்தான். பாம்பின் சாபமும், பெண் பிள்ளையின் சாபமும் இந்த ஜன்மத்தில் இவனை வந்தடைந்தன. பிறக்கும் பிள்ளைகள் தோஷமடைவார்கள். அதற்குப் பரிகாரம் ஒன்று சொல்லுவோம்.

27. அன்னகர் நதியின்பக்கல் அரசின்கீழ் சிலையில்நாகம்
இன்னவன் செய்யதோஷம் இலகிடு மிதுவுமன்றித்
தன்மனை யோடுஇன்னோன் தணிகைக்கு ஏழுகார்த்தி
பின்னமில் லாதுசென்று பெம்மானை அர்ச்சித்தேத்தி,

27. அவ்வூரின் பக்கத்தில் ஒரு நதி. அங்கே ஓர் அரச மரம். அதன் கீழ் ஒரு நாக உருவத்தைச் சிலை யடித்துப் பிரதிஷ்டை செய்தால், இவனுடைய தோஷம் நிவிர்த்தியாகும். இதுவுமல்லாமல் தன் மனைவியுடன் இவன் திருத்தணிகைக்கு ஏழு கார்த்திகை பின்னமில்லாமற் சென்று, பகவானை அருச்சித்துத் துதித்து,

28. அந்தநாள் மூவேழ்பேர்க்கு அன்னமும் அன்பாயீய
முந்தின வினையும்நீங்கி உதித்திடும் சுதராண்ஒன்று
விந்தையாய்க் கன்னிரெண்டு மேவிடும் தீர்க்கமாகக்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்றாது.

28. அக்காலங்களில் இருபத்தோரு பேர்களுக்கு அன்னதானம் பிரியத்துடன் வழங்கினுல் பண்டை வினை பறந்து போகும். ஆண் பிள்ளை ஒன்று பிறக்கும். அதற்குப் பிறகு பெண் குழந்தைகள் இரண்டு பிறக்கும். இவை தீர்க்கம். கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! கூறிய வார்த்தைகளுக்குக் குறைவு வாராது.

29. மாதுரு குணத்தைச்சொல்வேன் மாந்தளிர் மேனியாகும்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உயர்வான புத்தியேற்பள்
சாதிப்பாள் சிலதுசங்கை சந்தேக மனத்தளாகும்
சீதள குணத்தளாகும் திருமக ளொப்பதாகும்.

29. மாதாவின் குணத்தைச் சொல்லுவோம். மாந்தளிர்போன்ற மேனியை யுடையவள். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள். மேலான புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளுவாள். சில சங்கைகளை எடுத்து நிர்ணயப் படுத்துவாள். மனதில் சந்தேக புத்தியை யுடையவள். குளிர்ந்த தன்மையை யுடையவள். இலட்சுமீதேவியைப் போலிருப்பாள்.

30. அன்னம்போல் சாயலொக்கும் ஆளன்தன் மனதுக் [கேத்தோள்
அன்னமும் அன்பாயீவள் அடாபிடி தன்னில்செல்லாள்
அன்னவள் யோகசாலி அடிசலுக் கினியாளாகும்
அன்னவள் துணையாண்ரெண்டு அம்பிகை மார்களவ்வார்.

30. அன்னம் போன்ற சாயலை யுடையவள். புருஷன் மனம் கோணமல் நடப்பாள். விருந்தினரை, அன்போடு அன்னங் கொடுத்து ஆதரிப்பாள். அடாபிடிகளில் தலையிட மாட்டாள். அவள் நல்ல யோக சாலிதான். சமையல் நன்றாய்ச் செய்வாள். அவளுக்கு இரண்டு சகோதரனும், இரண்டு சகோதரிகளும் உண்டு.

31. மற்றது சேதமெய்தும் வரைகுறேும் இவள்தன்பூர்வம்
குற்றால நாட்டிலேதா(ன் கு) [னு]தித்தனள் வன்னிய [சேயாய்
முற்றின குடும்பியாகி உலகுக்கு நல்லோளாகி
வித்தகி சுகமாய்வாழ்ந்து மேவினள் காலனுடு.

31. மற்றவர்கள் சேதமடைவார்கள். அவளுடைய பூர்வோத்தரங் களைக் கூறுவாம். வன்னியர் குலத்தில், குற்றால நாட்டில் உதித்தாள். பெரிய குடும்பியாகி, உலகினர்க்கு நல்லவளாகி, வித்தகி சிலநாள் வாழ்ந்த பிறகு, எமலோகம் சென்றாள்.

32. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனித்தன ளென்று [சொல்வோம்
வறுமையெப் போதும்காணுள் வரைகுறே மிவள்பின் [சென்மம்
அருணையில் சைவசேயாய் அருளுவா ளென்றுசொல்வோம்
பொருளது பெருக்கமாகிப் புண்ணிய வதியும்வாழ்வாள்.

32. பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தனள் என்று சொல்லுவோம். தரித்திரத்தை எப்போதும் அனுபவியாள். இவளுடைய

பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுகிறோம். திருவருணையில் சைவக் குழந்தையாய் உதிப்பாள் என்று சொல்லுவோம். பணம் காசுகள் அதிகமாகி இப் புண்ணியவதி வாழ்ந்து வருவாள்.

33. முப்பது ஒன்பதாண்டில் விளம்புவோம் அன்னைகெண்டம்
செப்புவோம் முப்பான்மூன்றில் திருமகன் தந்தை
[கெண்டம்
ஒப்புடன் இவள்பின்சென்மம் உரைக்குறோம் காளத்தி
[தன்னில்
மைப்புடன் க்ஷத்ரியசேயாய் விளங்குவா னென்று
[சொல்வோம்.

33. ஜாதகனுடைய முப்பத்தொன்பதாம் பிராயத்தில் அவனுடைய தாயின் மரணம் ஏற்படும். அவனுடைய முப்பத்துமூன்றும் வயதில் அவன் தந்தைக்கு மரணம் ஏற்படும். இவனுடைய பின் ஜன்மத்தை உரைக்கின்றோம். திருக்காளத்தியில் க்ஷத்திரிய குலத்தில் ஒழுங்காய்ப் பிறந்து விளங்குவாள்.

34. இந்ததோர் சென்மந்தன்னில் இவள்செய்த புண்ணிய
[மென்ன
முந்தவே கூறுமென்ன மொழியதைக் காத்ததாலும்
பந்துவை யாதரித்தும் பலசகா யங்கள்செய்தும்
நொந்தபேர்க் குதவிசெய்தும் நிருபனும் வாழ்வதாலே,

34. இந்த ஜன்மத்தில் இவன் செய்த புண்ணிய காரியங்கள் என்ன? முதலில் கூறுங்கள், என்று வினவ, தன் வார்த்தையைக் காப்பாற்றியும், பந்து ஜனங்களை ஆதரித்து, அவர்க்குப் பல ஒத்தாசைகளைச் செய்தும், ஏழைகளுக்கு ஆதரவு காட்டியும் வந்ததனால் ஜாதகனின் ஒழுங்கான வாழ்க்கையின் காரணமாக,

35. பிறப்பனும் க்ஷத்ரியசேயாய்ப் புதல்வனுக் கறுபானாறில்
சிறந்ததை மாதம்தன்னில் தேய்பிறைத் தசமிதன்னில்
உரைகுவான் காலனுடு உத்தமன் (பின்)சென்மம்கேளும்
திருகணு மலையிலேதான் செனிப்பனும் சைவசேயாய்.

35. க்ஷத்திரியக் குழந்தையாய்ப் பிறப்பானும், இவனுடைய வியோக காலத்தைப்பற்றிக் கூறுவோம். இவனது அறுபத்தாறும் பிராயத்தில், மேலான தை மாதத்தில், கிருஷ்ண பட்ச தசமியில் எமலோகம் செல்லுவான். இவ்வுத்தமனுடைய பின் ஜன்மத்தைக் கூறுவாம். திருவண்ணாமலையில் சைவ குலத்தில் பிறப்பான்.

36. இன்னவன் யோகச்செய்தி இயம்புவோம் இனிமேலாகத்
தன்பந்து மதிக்கவாழ்வன் சல்லியம் கொள்ளானுகும்
பொன்பணி சேர்ப்பானுகும் பூமியை இருஊர்சேர்ப்பன்
உன்னத செட்டுச்செய்வன் உயர்வான கல்வியேற்பன்.

36. இனிமேல் இவனுடைய யோகச் செய்தியைக் கூறுவோம். தன் பந்துக்கள் மதிக்கும்படி வாழ்வான். கடன் வாங்கமாட்டான். பொன் பூஷணம் இவைகளைச் சேர்ப்பானுகும். இரண்டு கிராமங்களில் பூஸ்திதியை விருத்தி செய்வான். மேலான வியாபாரம் செய்வான். மேன்மையுள்ள கல்வியைக் கற்பான்.

37. அந்தஆண்டு முதலாமாக அம்புலி போலேயோகம்
தந்தனம் சேர்ப்பானுகும் சதுஷ்பாதம் அதிகம்விருத்தி
இந்திர போகமேற்பன் இருஇல்ல முடையனுகும்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்றுது.

37. அந்தக் காலம் முதலாக, பிறைச் சந்திரனைப்போல் யோகம் வளரும், சுயார்ச்சிதத்தை விருத்திக்குக் கொண்டு வருவான். மாட்டுக் கூட்டங்களை அதிகமாக்குவான். இந்திர போகத்தை அனுபவிப்பான். இரண்டு வீடுகளுக்குச் சொந்தக்காரனுவான். கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! நாங்கள் கூறிய சொல்லுக்குக் குறைவு வராது.

38. மாரனும் செனிக்கும்காலே மாந்தனை மூன்றும்பாதம்
ஆறலின் திசையிருப்பு ஆண்டுமே இரண்டுஎன்றும்
தீரமாய்த் திங்கள்ரெண்டும் செப்பினேம் பூர்வபாகம்
பாரினில் தவங்கள்செய்யும் பார்வதி கேட்டிடாயே.

38. இவனுடைய ஜனனகாலத்தில் சித்திரா நட்சத்திரம் மூன்றும் பாதம். செவ்வாய் தசையின் இருப்பு வருஷம் இரண்டு, மாசம் இரண்டு. இங்ஙனம் பூர்வ பாகத்தைக் கூறினேம். உலகினில் தவம் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 37

1. கலைதனு கருங்கோள்சேயும் கலையினில்[1] பொன்னோன்சாடி
புலவனும்[2] பரிதிமேடம் புகர்நந்தி காரிமீனம்
குலவிய கேதுநந்து[3] கொண்டலும் சென்மமாகப்
பலன்தன்னைப் புகலுமென்று பார்வதி கேட்கலுற்றாள்.

1. இராகுவும் செவ்வாயும் மகரத்திலும், குரு கும்பத்திலும், புதனும் சூரியனும் மேஷத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும், சனி மீனத்திலும், கேது கடகத்திலும் சந்திரன் தனுசிலும் நிற்க இவ்வித கிரக நிலை கொண்ட மேஷலக்கின ஜாதகத்திற்குப் பலன்களைச் சொல்லுங்கள் என்று சப்தரிஷிகளைப் பார்வதி கேட்கலானாள். (கொண்டல்= மேஷம்.)

சனி	லக்கினம் புதன் சூரியன்	சுக்கிரன்	
குரு	இராசி சக்கரம்		கேது
ராகு செவ்வாய்			
சந்திரன்			

2. குருமுனி புகலுகின்றார் குறித்திடும் பெண்பால் சென்மம்
வருமில்லம் வடதென்வீதி வாசலும் குடகுநோக்கம்
[4]நரிவாக னத்தான்மீனம் நன்மாரி மேல்பாலாகும்
குருகிய ஊரேயாகும் குலமது கர்ணனென்றோம்.

2. அகஸ்தியர் பின்வருமாறு சொல்லலுற்றார். இந்த ஜாதகம் பெண் ஜன்மம். பிறக்கும் வீடு வடக்குத் தெற்கு வீதி. கிழக்குப் பார்த்த வாசல். மீன திசையில் அருகர் கோவில். மாரியம்மன் கோவில் மேற்கிலுள்ளது. அது சிறிய ஊராகும். கணக்கர் குலத்தில் ஜனித்தாள்.

3. இல்லமும் தனியதாகு மியம்பின அடையாளத்துள்
வல்லியு முதிப்பாளாகும் வரைகுறோ மிவளின்யோகம்
தல்லியின் தந்தையோகம் தன்வரன் புத்திரயோகம்
அல்லலில் லாமல்சொல்வோம் அம்பிகை யாளேகேளாய்.

---

1. சுறாமீன், மகரராசி
2. புதனும்
3. நண்டு, கடகம்
4. அருகன்

3. தனித்த வீடாகும். இவ்விதமான அடையாளங்களைக் கொண்ட விடத்தில் நம் ஜாதகியும் உதிப்பாளாகும் இவளுடைய யோகபாவமும், தாய் தந்தையர் யோகமும், புருஷன் புத்திரன் இவர்கள் யோகமும் தொந்தரவில்லாமல் விவரிப்போம். அம்பிகையே! கேட்பாயாக.

4. தந்தையின் துணையாமென்று சாற்றுவோம் தீர்க்கமாக
அந்தவன் சேதிபின்பா லறிவிப்போம் தாயேயாங்கள்
பந்தணி மாதுகாணுன் பகருவோம் தந்தைசேதி
முந்துமால் பத்தியுண்டு மொழியது சுகமேயாகும்.

4. இவளுடைய தகப்பனுடன் பிறந்த சகோதரன் ஒருவன். அதை தீர்க்கமாகச் சொல்லுவேன். அவனுடைய செய்தி விவரங்களைப் பின்னால் கூறுவோம், நாங்கள், தாயே! பந்துவாகிய அழகிய மாதாவைக் காணுள். தந்தையின் விவரங்களை எடுத்துரைப்போம். திருமாலிடத்தில் பக்தி கொண்டவன். சுகமான வார்த்தைகளைப் பேசுவான்.

5. பூமிகள் சேர்ப்பானுகும் புவிராசர் பேட்டிக்கொள்வன்
நாவது இரண்டுமுண்டு நற்கிராம கணக்குவேலை
தாவினோர் தம்மைக்காப்பன் தைரிய மில்லாநெஞ்சம்
மேவுவான் தலைவாசங்கள் வீண்பழி யேற்பானுகும்.

5. பூஸ்திதியை விருத்தி செய்வான். உலகில் அரசர்களைப் பேட்டி காண்பான். இரண்டு விதமாகவும் பேசுவான். நல்ல கிராமத்துக் கணக்கு வேலை செய்வான். அண்டின பேரைக் காப்பான். மனதில் தைரிய மில்லாதவன். ஸ்தலங்களைப்போய்த் தரிசிப்பான். வீண் பழியை ஏற்க மாட்டான்.

6. செலவுக ளதிகமுண்டு ஜனபந்தை யாதரிப்பன்
நலமுளோர் நேசம்கொள்வன் நற்கரம் மாலின்ரேகை
விலைமாதர் மோகம்கொள்ளான் விருந்தினர் பிரியனுகும்
சொலுமிந்த குணத்தானுக்குத் தோகையு முதிப்பாளாகும்.

6. அதிகச் செலவு செய்வான். பந்து ஜனங்களை ஆதரிப்பான். நல்லவர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். தன்னுடைய செங்கை தன்னில் விஷ்ணுரேகை உள்ளவன். தேவடியாள்களைக் கண்டு மோகிக்க மாட்டான். விருந்தினர்களிடம் பிரியமுள்ளவனு யிருப்பான். இப்படிப் பட்ட குணவானுக்கு நம் ஜாதகியும் புத்திரியாய்ப் பிறப்பாளாகும்.

7. மங்கையின் குணத்தைச்சொல்வேன் மாநிறம் வாததேகி
சங்கையில் லாதநெஞ்சம் சந்தோஷ வார்த்தைகூர்வள்
எங்கள்போல் அதிதிக்கன்ன மிடுவாளாம் பொறுமைசாலி
பங்கய முகத்தளாகும் பணிந்தோரை யாதரிப்பள்.

7. இம்மங்கையின் குணாதிசயங்களைக் கூறுவோம். மானிற முள்ளவள். சந்தேகமில்லாத புத்தியை யுடையவள். சந்தோஷமேற்படும் படியான வார்த்தைகளைக் கூறுவாள். மகரிஷிகளைப்போல் வந்த அதிதிகளுக்கெல்லாம் அன்னம் போடுவாள். பொறுமை யுடையவள். பங்கஜம் போன்ற முகவிலாசத்தை யுடையவள். அண்டினவரை ஆதரிப்பாள்.

8. பரவச முடையாளாகும் பர்த்தாவின் மனதுக்கேத்தோள்
நரைமலர் இஷ்டம்கொள்வள் நல்கிடும் பித்தம்கொஞ்சம்
உரைந்திடும் தந்தைரோகம் உவமையாய்ப் பேசுவாளாம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

8. பரவச முடையவள். பர்த்தாவின் மனங்கோணாமல் நடப்பாள். வெள்ளைப் பூக்களில் பிரியமுடையவள். கொஞ்சம் பித்தமுடையவள். இவளுடைய தந்தைக்கு ரோகம் ஏற்படும். திருஷ்டாந்தங்களுடன் சம்பாஷிப்பாள். விநாயகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

9. தன்துணை ஆண்பால்ரெண்டு சேத்திமார் இருவர்தீர்க்கம்
முன்பின்னால் ஆண்பாலாகும் மூத்தவன் சேதிசொல்வேன்
தன்சொலு மடக்கமுண்டு சங்கீதப் பிரியனாவன்
உன்னத நடனவித்தை உரைப்பனா மென்றுசொல்வோம்.

9. தன்னுடன் பிறந்த சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவ ராவர். இவர்கள் தீர்க்கம். தனக்கு முன்னும் பின்னும் சகோதரனுண்டு. மூத்தவனைப் பற்றிய விவரம் கூறுவேன். அடக்கமான வார்த்தைகளைப் பேசுவான். சங்கீதத்தில் பிரிய முடையவன். மேலான நாட்டியக்கலையை எடுத்துரைப்பான் என்று சொல்லுவோம்.

10. மால்பத்தி பூண்பனாகும் மன்னனால் கணக்குவேலை
சாலவே சிலநாள்செய்வன் தலைப்படும் காவலேற்பன்
ஞாலத்தை விரயம்செய்வன் நன்மனை ஒன்றேதீர்க்கம்
இவர்க(ள் ஆ)[ளுக் கா]ண்பாலொன்று பகருவோம்
[தீர்க்கமாக.

10. திருமாலிடத்தில் பக்தி பூண்பன். அரசனால் அளிக்கப்பட்ட கணக்கு வேலையைச் சிறப்பாகச் சிலநாள் பார்த்து வருவான். தலைமை வகிக்கும் வேலையைப் பார்ப்பான். பூமியை விரயம் செய்வான். நல்ல மனைவியுண்டு. அவளே தீர்க்கம். இவர்களுக்கு ஒரே புத்திரன் தீர்க்கமா யுண்டு.

11. சுகதுக்கம் கலந்துவாழ்வன் துணைவரை யாதரிப்பன்
அகமதை நாஸ்திசெய்வன் அறிவோர்கள் நேசம்கொள்வன்
சகமது நிந்தையேற்பன் சேயிழைப் பிரியனாகும்
மிகுதவம் புரியுமெங்கள் வித்தகி கேட்டிடாயே.

11. சுகதுக்கங்கள் இவனது வாழ்க்கையில் கலந்து ஏற்படும். உடன் பிறந்தவர்களை ஆதரிப்பன். வீட்டைப் பாழ்பண்ணுவான். அறிவாளிகளுடன் சிநேகம் கொள்ளுவான். உலகினில் நிந்தை வார்த்தைகளைப் பெறுவான். பெண்டாட்டியிடம் பிரியமுள்ளவனாயிருப்பான். மிகுதியான தபோமகிமை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

12. மற்றவர் சேதிதன்னை வரைகுவோம் பின்பாகத்தில்
வித்தகி மணத்தின்காலம் விளம்புவோம் ஈரஞ்சாண்டுள்
கொற்றவன் தென்மேல்திக்கில் கூடுவான் அன்னை [பின்னோன்
சுத்தவான் சீலனாவன் சொல்லது சுருக்கமாகும்.

12. மற்றவர்களுடைய செய்திகளைப் பின்பாகத்தில் எடுத்துக் கூறுவோம். இவளுடைய கலியாண காலத்தைப்பற்றி உரைப்போம். இவளுடைய பத்தாவது பிராயத்திற்குள் புருஷன் தென்மேற்குத் திக்கிலிருந்து வருவான். அவனும் தாய் மாமன். சுத்த முடையவன். சீலமுள்ளவன். சுருக்கச் சொல்லுவான்.

13. தந்தையின் இல்லம்வாழான் சதயமும் மிதுனராசி
வந்தவ னென்றுசொல்வோம் மருநகர் வாசமாவன்
முந்திய கணக்கில்யூகி மொழிகுவான் சிலர்க்குக்கல்வி
பந்தணி வர்க்கத்தாரால் பாரது ஏகுமென்றோம்.

13. தந்தையின் வீட்டில் வசிக்கமாட்டான். சதய நட்சத்திரத்தோனும் மிதுன ராசிக்காரனும் சேருவதெப்படி என்று கூறுவோம். மற்றோர் ஊரில் வசிப்பான் பழங் கணக்குகளில் புத்திமான். சிலர்க்கு வித்தியாதானம் செய்வான். பந்து ஜனங்கள் போற்றும்படி வாழ்வான். பூஸ்திதி சேரும் என்றோம்.

14. கத்திரி யோகமென்றோம் கன்னிகை மனதுக்கேத்தோள்
வித்தகன் தீர்க்கசீவி விளம்புவோம் புத்திரபாகம்
சத்திகள் காணுதாகும் செனிக்கினும் தீதேயாகும்
குத்தத்தைச் சொல்லுமென்னக் கோதையும் பூர்வம் [தன்னில்,

14. கத்திரி யோகமுடையவன். பெண்டாட்டியின் மனதிற்கு ஏற்றவன். இவன் தீர்க்காயுசுள்ளவன். இவனுடைய புத்திர பாக்கியத்தை

எடுத்துக் கூறுவோம். பெண் குழந்தைகள் இல்லை. ஏற்பட்டாலும் நாசமடையும். இது யாது குற்றம் பற்றி என்று எடுத்துரைப்பீர் என்று வினவ, இவளும் போன ஜன்மத்தில்,

15. சிலசில கொடுமைசெய்தாள் சேர்ந்தது அந்ததோஷம்
தலைவிசெய் வினைகளென்ன சாற்றுவீர் முனிவரேநீர்
உலகினில் உயர்வதான உயர்காஞ்சி தன்னிலேதான்
நலமுலசௌ ராஷ்டிரவமிசம் நல்கியே மதலைஉண்டாய்,

15. சிற்சில கொடுமைகளைச் செய்தாள். அதனால் அந்த தோஷம் இவளைச் சார்ந்தது. தலைவி செய்த வினைகள் யாவை? சொல்லுங்கள், என்று கேட்க, முனிவரும் சொல்லலுற்றார். உலகத்திற்கே சிறப்பளிக்கும் மேன்மை மிக்க காஞ்சீபுரத்திலே, நன்மை பொருந்திய சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்து புத்திரன் ஏற்பட்டு,

16. மாதுவும் வாழுநாளில் மருவின வினையைக்கேண்மோ
காதலி கொல்லைதன்னில் கருப்பண்ண சாமிதங்கும்
தீதுகள் விலக்கும்தெய்வம் தொழுகுவாள் [முன்னோரெல்லாம்
பாதகி தொழாமல்நின்றாள் பகிற்று முனியின்சாபம்.

16. இம்மாது வாழ்ந்து வரும்நாளில், ஓர் ஊழ்வினை இவளை வந்தடைந்தது. அதுவிவரம் சொல்லுகிறோம், கேளும். இவளுடைய வீட்டுக் கொல்லையில் கருப்பண்ணசாமி தங்கும். அது தீதுகளை விலக்கும் பிரத்தியக்ஷ தெய்வம். இவளுடைய முன்னோர்கள் அதைத் தொழுதுவந்தார்கள். இப் பாதகி தொழாது நின்றாள். அம்முனியின் சாபம் இவளை வந்தடைந்தது.

17. எந்தனைத் தொழாதபாவி இச்சென்ம சுதரைக்கொல்வேன்
பின்வரும் சென்மம்தன்னில் புதல்வர்கள் உதித்காவண்ணம்
உன்பக்கல் வாசமாவேன் உறைந்திடும் மயக்கமாக
இன்னவார் சொல்லியேதான் ஏகிற்று வேறிடத்தில்.

17. என்னைத் தொழாது வழிபாடுகள் செய்யாத பாவியின் இந்த ஜன்மத்தில் ஏற்படும் குழந்தைகளைக் கொல்லுவேன். இனி வரும் ஜன்மங்களிலும் புத்திரர்கள் ஏற்படாவண்ணம் செய்ய, அவள்பக்கமே தொடர்ந்து வசிப்பேன். அவளும் பிசாசுபிடித்து மயங்கிநிற்கலானாள். இப்படி சபித்து விட்டு அம்முனி அக்கொல்லையை விட்டு வேறிடத்திற்குச் சென்றது.

18. பஞ்சையாய் ஏழைமாது பாலர்க்கு அன்னம்வேண்டிக்
கெஞ்சினாள் மாதுபக்கல் கோதையும் கருவம்கொண்டு
மிஞ்சின வார்த்தைசொல்லி விரட்டினாள் ஏழைதன்னைப்
பஞ்சையும் வருத்தமுற்றுப் பகர்ந்தசா பத்தைக்கேண்மோ.

18. இது நீங்கலாக, பசித்தொந்தரை மேலிட்ட ஓர் ஏழை ஸ்திரீ தன்னுடைய குழந்தைகளுக்கு அன்னம்வேண்டுமென்று கெஞ்சினள். இவள் கருவம்கொண்டு அதிகமானவார்த்தைகள் சொல்லி அந்த ஏழையை விரட்டி யடித்தாள். அம்மாது மனம்வருந்திச் சாபமிட்டாள். அதைச் சொல்லு கிறேன், கேள்.

19. பாலர்சோ றீயாப்பாவி பருகாது சுதர்கள்தானும்
சாலவே பின்சென்மத்தில் தங்காது சுதர்கள்தானும்
ஆலம்போல் சொல்லிச்சென்றாள் அணுகிற்று அந்தசாபம்
ஏலவே அந்தியத்தில் இவள்சுதர் யாவும்நீங்கி,

19. குழந்தைகளுக்குச் சோறீயாத பாவிக்குப் புத்திரர்கள் ஏற்படா. பொருந்தவே அடுத்த ஜன்மத்தில் குழந்தைகள் தங்கா. இப்படி விஷம் போல் 'வார்த்தைகளைச் சொல்லிச் சென்றாள். அந்தச் சாபமும் இவளை வந்து சேர்ந்தது. ஏற்கவே அந்திய காலத்தில் இவள்பிள்ளைகள் எல்லாம் வியோகமாகி,

20. மனமது சஞ்சலத்தால் மரலியின் பதிக்குச்சென்று
கனமுள கர்ணசேயாய்க் கலப்பளா மென்றுசொல்வோம்
சினமான முனியின்சாபம் திகைத்ததோர் மாதுசாபம்
வினையாக மூடுமென்றோம் வித்தகி தனக்குமேலாம்.

20. மனச்சஞ்சலத்தினால் எமலோகம்சென்று, கௌரவமிக்க கணக்கர் வமிசத்தில் வந்துதிப்பாள் என்று சொல்லுவோம். கோபித்த முனியின் சாபமும், திகைத்துநின்ற ஏழைமாதின் சாபமும் இவளை வினையாக வந்த டைந்தன. வித்தகிக்கு மூடு சூளையாயிருந்தன.

21. ஆகையால் சுதர்கள்தோஷம் அம்முனி வாசமாகும்
போகிட கிரியைஒன்று புகலுவீர் முனியேநீதான்
பாகமாம் கருமசாந்தி மங்கைக்குச் செய்துமேதான்
ஆகம சக்திமூலம் அறுகோணம் தன்னில்கீறி,

21. இதனால் புத்திரதோஷம் ஒன்றும் ஏற்பட்டது. அம்முனியும் இவளிடம் வாசம் செய்யலாயிற்று. இந்த வினை தொலைய ஒருபரிகாரம் சொல்லுங்கள், முனிவரே! என்று கேட்க, பக்குவமாக இம்மங்கைக்குக் கரும சாந்தி செய்ய வேண்டும். ஆகமசாஸ்திர முறைப்படி ஆறுகோணமுள்ள சக்கரம் வரைந்து,

22. சகத்திரம்[1] செய்துமேதான் தையலும் அணிந்துகொண்டு
பகையிலாச் சுக்கிரவாரம் பாவைஓ ராண்டுகொள்ள
நிகுமுனி சாபம்நீங்கி விளங்கிடும் சுதர்கள்தோன்றும்
சகமதில் செய்யானாகில் செனிக்காது சுதர்கள் தானே.

1. அருச்சனை

22. சகச்ரார்ச்சனை செய்து, அக்குலிசத்தை இவளும் அணிந்து கொண்டு, ஒரு வருஷம், புண்ணியதினமான வெள்ளிக்கிழமையன்று விரதம் இருந்தால் கருப்பண்ணசாமியின் சாபம்நீங்கி, புத்திரப்பேறு ஏற்படும். உலகினில் செல்வவானவன். விரதப்படி செய்தால் புத்திரர் ஏற்படும். இல்லையேல் ஜனிக்கான் புத்திரன்.

23. சொற்படி செய்வாகில் தோன்றிடும் ஆண்பாலொன்று
மைப்படி பெண்பாலொன்று வரைந்தனம் தீர்க்கமாகச்
செப்புவேன் அன்னைசேதி சிலுகிலா[1] குணத்தாளாகும்
தப்பித மனமில்லாதாள் சகலர்க்கு நல்லோளாவள்.

23. சொன்னபடி பரிகாரம்செய்தால், ஆண்குழந்தை ஒன்று தோன்றிடும். அதன்பின் பெண்குழந்தை பிறந்து தீர்க்கமாயிருக்கும். இவளுடைய தாயைப்பற்றிய விவரம் கூறுவோம். வெடுவெடு என்ற குணமில்லாதவள். தப்பிதமில்லாத மனதை யுடையவள். யாவர்க்கும் நல்லவளாவள்.

24. தோகைபோல் சாயலொக்கும் துணைவர்க ளாண்பால்
[மூன்று
பாகமாய்த் தீர்க்கமென்றோம் பெண்துணை காணுதாகும்
தோகையின் பூர்வம்கேளாய்ச் சாமியின் மலையிலேதான்
ஆகம[2] குலத்திலேதான் அணுகினாள் இந்தமாது.

24. மயில்போன்ற சாயலை யுடையவள். உடன்பிறந்த சகோதரர்கள் மூன்றுபேர். பக்குவமாய்த் தீர்க்காயுசுள்ளவர்கள். சகோதரி யில்லை. இவளுடைய பூர்வோத்தரங்களைக் கேட்பாயாக. சுவாமிமலை என்ற க்ஷேத்திரத்தில் (சுப்பிரமணி ஸ்வாமியின் ஏழு படைவீடுகளில் ஒன்றாகிய திருவேரகமென்றமலை, கும்பகோணத்திற் கருகே யுள்ளது.) சாஸ்திரிகளின் குலத்திலேதான் இம்மாது உதித்தாள்.

25. சுதருண்டாய் வறுமையின்றித் தோகையும் வாழ்ந்துமே
[தான்
பகையான காலனாடு பகர்ந்துமே பிரமன்லக்கம்
தகைமையால் உதித்தாளென்றோம் செயமுனி தடுத்துச்
[சொல்வார்
முதல்குல முதித்தாளென்றீர் மேவுமிச் சென்மந்தன்னில்.

25. புத்திருண்டாய், வறுமைகளில்லாமல் இவளும்வாழ்ந்து வரும் நாளில், பகைமைபொருந்திய எமலோகம் சென்றாள். பின்பு பிரம்மாவினால்

1. அலட்டுதல் இல்லாத
2. தருமசாஸ்திரம்

சிருஷ்டிக்கப்பட்டுக் கௌரமாய்ப் பிறக்கலானாள். இதைக் கேட்ட ஜயமுனி தடுத்துச்சொல்லுவார். பிராமணகுலத்தில் இவள் உதித்தாளென்றீர். அடுத்த இந்த ஜன்மத்தில்,

26. இந்ததோர் குலத்திலெவ்வார் இறங்கின காரணம்சொல்
முந்திய ஜென்மந்தன்னில் விரதங்கள் மு[உ]டனேசெய்து
அந்தவன் வாழ்வதாலே அணுகினாள் இக்குலத்தில்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்றாது.

26 இக்குலத்தில் எவ்வாறு பிறப்பாள்? காரணம் சொல்லுங்கள். முந்திய ஜன்மத்தில் விரதங்களைச் செய்துமுடித்து, அவள் வாழ்ந்துவந்ததனால் இக்குலத்தில் வந்து பிறக்கலானாள். கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதிதேவியே! சொன்னசொல் தவறாது.

27. இருபது எட்டுஆண்டில் ஏகுவாள் காலனூடு
மருஜென்மம் வள்ளூர்தன்னில் மறைகுல முதிப்பாளாகும்
உரைகுறோம் தந்தைபூர்வம் உயர்வான அருணைதன்னில்
திருகுசெய் உத்தரியசேயாய்ச் செனித்துமே
[சுகமுள்ளோனாய்,

27. இவள் இருபத்தெட்டாம் வயதில் எமலோகம் சேருவாள். அடுத்த ஜன்மத்தில் திருவள்ளூரில் பிராமணகுலத்தில் உதிப்பாளாகும். தந்தையின் பூர்வத்தைக் கூறுவோம். மேலான திருவண்ணாமலையில், வஞ்சனை செய்யும் மந்திரவாதிகள் குலத்தில் உதித்து சுகமுள்ளவனாய்,

28. தேவதா பக்திகொண்டு சிறுத்தோர்க்கு அன்னமீந்து
மேவினான் காலனூடு வித்தகன் வரியப்பட்டு
ஆவலாய் உதித்தானென்றோம் அவனியில் வறுமைகாணான்
தாவினோர் தம்மைக்காக்கும் தயாபரி கேட்டிடாயே.

28. தேவதைகளிடத்தில் பக்திபூண்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்து எமலோகம் சென்றான். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஆசையுடன் உதித்தான் என்றோம். பூலோகவாழ்வில் வறுமைகாணான். அண்டினவர்களைக் காப்பாற்றும் தயாபரியே! கேட்பாயாக.

29. முப்பது மூன்றுஆண்டுள் விளம்புவோம் தந்தைகெண்டம்
செப்புவோ மிவன்பின்ஜென்மம் சீர்காழி தன்னிலேதான்
ஒப்புடன் கங்கைசேயாய் உதிப்பனும் என்றுசொல்வோம்
அப்பணி உடையோன்தேவி அருளின மொழிகுன்றாது.

29. இவனது முப்பத்துமூன்றாம் வயதில் தந்தையின் கெண்டம் ஏற்படும். இவன் பின் ஜன்மத்தை எடுத்துரைப்போம். சீர்காழிதன்னிலே

தான் வேளாளர்குலத்தில் உதிப்பான் என்று சொல்லுவோம். அழகிய திருப்பணிகளையுடைய பார்வதி தேவியே! சொன்ன அருள்மொழிகளுக்குக் குறைவு வராது.

30. நாற்பது ஐந்துஆண்டில் நங்கையின் வரனும்கெண்டம்
ஏற்கவே அன்பானெட்டில் ரிடபமா தத்திலேதான்
தீற்பாகச் சாதகிக்குச் செப்புவோம் மாரகங்கள்
ஏற்கவே யிவள்பின்சென்ம மியம்புவோம் தாயேகேளும்.

30. நாற்பத்தைந்தாம் வயதில் இவளுடைய புருஷனுக்குக் கெண்டம் ஏற்படும். ஐம்பத்தெட்டாம் வயதில் வைகாசி மாதத்தில் நிச்சயமாக ஜாதகிக்கு மரணம் எற்படும். பொருத்தமாகவே இவளுடைய மறுஜன்மத்தை இயம்புவோம், தாயே! கேளும்.

31. சிறுபாக்கம் கீழ்பாலாகச் சிறுவூரில் கங்கைசேயாய்
வருகுவாள் வறுமையின்றி மங்கையும் வாழ்வாளாகும்
திருமகள் செனனகாலம் சுக்கிரன் தசையேயாகும்
அருமையாய்ப் பூர்வம்சொன்னே மம்பிகை யாளேகேளாய்.

31. சிறுபாக்கத்திற்குக் கிழக்கே,சிறிய கிராமத்தில்,வேளாளர்குழந்தையாய் அவதரிப்பாள். இம்மங்கையும் வறுமைத்துன்பமில்லாமல் வாழ்வாளாகும். இவளுடைய ஜனனகாலம் சுக்கிரதசையாகும். அருமையாகவே இவளுடைய பூர்வத்தைப்பற்றி விவரமாகச் சொன்னோம். அம்பிகையே! கேட்பாயாக.

32. சுகமது எந்தக்காலம் செப்புவீர் முனியேநீதான்
பகையிலா முப்பான்டின்மேல் பிறைபோலே யோகம்
[வாய்க்கும்
தகைமையாய் விபரமாகச் சாற்றுவோம் பின்பாகத்தில்
சிரமதில் தவங்கள்செய்யும் செல்வதி கேட்டிடாயே.

32. அவள் சுகமாயிருப்பது எந்தக்காலம் என்று முனிவரே சொல்லுங்கள். பகைமையில்லாத முப்பதாவது வயதிற்குமேல் பிறைச்சந்திரனைப் போல் யோகம் வாய்க்கும் எனப் பொருத்தமாக, விவரமாகக் கூறுவோம். இதன் பின்பாகத்தில் மலையில் தபங்கள் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 38

1. தகரது உயிருமாகச் சந்திரன் சேயும்தங்கப்
பகைராகு ரெண்டிலாகப் பஞ்சமம் காரிதங்கச்
சிகியெட்டில் புகரும்பத்துச் செம்பொன்னும் புதனும்
[லாபம்
மிகுபரி யோன்வியத்தில் விளம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் செவ்வாயும் இலக்கினத்தில் தங்க, பகைமையுள்ள ராகு இரண்டாமிடமாகிய விருஷபத்தில் தங்க, சனி ஐந்தாமிடமாகிய சிம்மத்திலிருக்க, கேது எட்டாமிடமாகிய விருச்சிகத்திலிருக்க, பத்தாமிடமாகிய மகரத்தில் சுக்கிரனும், குருவும் புதனும் கும்பத்திலிருக்க, சூரியன், பன்னிரண்டாமிடமாகிய மீனத்திலிருக்க இந்த ஜாதகத்தின் பலனைச்சொல்லுங்கள் என்று பார்வதி கேட்க,

சூரியன்	லக்கினம் சந்திரன் செவ்வாய்	ராகு	
குரு புதன்	இராசி		
சுக்கிரன்	சக்கரம்		சனி
	கேது		

2. குருமுனி புகலுகின்றார் குறித்தது ஆண்பால்சென்மம்
வருமில்லம் வடதென்வீதி வாசலும் கீழ்பால்நோக்க
அரம்கோஷ்டம் காளிதென்பால் ஆதிமால் மாரிஉத்திரம்
சிறுவூராய்ப் பிரம்மசேயாய்ச் செனிப்பது மெட்டாம்
[சென்மம்

2. அகஸ்திய முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண்பால் ஜன்மம். உதிக்கும்வீடு வடக்குத்தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வாசலுள்ளது. சிவன்கோவிலும் அம்மன்கோவிலும் தெற்கே யுள்ளன திருமாலின் ஆலயம் வடக்கே யுள்ளது. அஃது ஒரு சிறிய கிராமம். அங்கே பிராமணக்குழந்தையாய் இவன் ஜனனமாவன். இஃது இவனுடைய எட்டாவது ஜன்மம்.

3. இன்னவன் செனனயோகம் எழில்பெரும் தந்தையோகம்
அன்னையின் துணைவர்யோகம் அவன்மனை புத்திரயோகம்
முன்பின்சென் மங்கள்யாவு முரைக்குறே மின்னூல்
[தன்னில்
கன்னென மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

3. இவனுடைய ஜன்மபத்திரிகையின் யோகபாவங்களும், பெருமை மிகுந்த தாய்தந்தையர் யோகமும், சகோதரர் யோகமும், பெண்டாட்டி பிள்ளைகளின் யோகமும், முன்பின் ஜன்மங்களுமாகிய இவைகளை யெல்லாம் விபரமாக இந்தப்புஸ்தகத்தில் கூறுவோம். கனிவுடைய சொற்களையுடைய பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைஆண்ஒன்று சக்திமார் இருவராகும்
அந்தஆண் சேதிசொல்வேன் அலைச்சலாம் குடும்பம்தானும்
விந்தைகள் மனைவியாலே நேரிடும் வறுமைகொஞ்சம்
தந்நியி னிறத்தனாகும் தங்கிடும் காலகங்கள்.

4. தந்தையின் சகோதரர் ஒருவர். சகோதரிகள் இருவராவர். அந்த சகோதரனைப்பற்றிச் சொல்லுவோம். குடும்ப அலைச்சல் அதிகமுள்ளவன். மனைவியினால் அதிசயங்கள் நேரிடும். சிறிது பணக்கஷ்டமும் கருநிறமுமுடையவன். காலத்திற்குரிய செய்கைகள் தங்கிடும்.

5. சிறைபாக வாழ்வானாகும் தேவியும் வெளியில்செல்வாள்
பெறும்சுதர் பெண்ணும்குற்றம் புத்திரன் ஆண்பாலொன்று
உரை[க்]குறோம் மத்தி[அதனி]ல்சேதம் உறுதிஇல்
[லாதானாகும்
குறையாக வாழ்வானாகும் கோதையே கேட்டிடாயே.

5. சிறையிலிருப்பவனைப்போல் வாழ்வானாகும். பெண்டாட்டியும் வெளியில் நடமாட்டத்திலிருப்பாள். பிறக்கும் பெண்குழந்தையும் குற்றமாகும். ஆண்குழந்தை ஒன்றுண்டு என்று சொல்கிறோம். அதுவும் சேதமாகும். அதன்காரணமாக இவன் மனவுறுதி இல்லாமல் வாழ்வான். குறைவுடன் வாழ்ந்துவருவான். பார்வதியே! கேட்பாயாக.

6. பெண்துணை ஒருத்திதானும் புகழ்ச்சியாய் வாழ்வாளாகும்
குன்னிய மனமாயொன்று குவலயம் இனிமேலாகத்
திண்ணமாய்த் தந்தைசேதி செப்புவோம் இனிமேலாகத்
தன்மையாம் குணத்தனாகும் சந்தமும் குறைவுறுதான்.

6. சகோதரி ஒருத்தி யுண்டு. அவள் கீர்த்தியுடன் வாழ்வாளாகும். மனம் குன்றிப்போய் உலகினில் வாழ்ந்துவருவாள். திடமுடன் தந்தையின் செய்தியை விவரமாய்க் கூறுவோம் இனிமேலாக. நல்ல தன்மை யுடையவன். குணவான். எப்பொழுதும் குறைவில்லாதவன்.

7. மால் கல்விமானும் வடிவினில் குள்ளனவன்
தேன்மொழி கூறுவானும் செகராசர் பேட்டிகொள்வன்
ஊனமில் லாததேகி உறுதியில் லாதநெஞ்சம்
ஈனமில் லாதானாகும் எதிரிகள் இல்லானென்றோம்.

7. மாட்சிமை பொருந்திய கல்வியை யுடையவன். குள்ளமான வடிவ முள்ளவன். இனிமையான வார்த்தைகளைப் பேசுவான். உலக அரசர் களுடன் பேட்டிகொள்வான். பின்னமில்லாத தேகத்தை யுடையவன். மனதில் நிச்சயபுத்தி யில்லாதவன். கீழ்நோக்கங்க ளில்லாதவன். இவனுக்குப் பகைவர்களே யில்லை.

8. கிராமாதி காரம்செய்வன் கெடுதிகள் ஒருவர்க்கெண்ணன்
தராதர மறிவானாகும் சகலர்க்கும் நல்லோனவன்
அரிபூசை புரிவானாகும் அவனியை விருத்திசெய்வன்
பொரைசொலான் நடையும்நன்மை புசபல னுடையனாமே.

8. இவன் ஒரு கிராமஅதிகாரி. எவருக்கும் கெடுதல்செய்ய நினைக்க மாட்டான். தராதர மறிந்தவன். எல்லாருக்கும் நல்லவனவன். விஷ்ணு வைப் பூசிப்பான். பூஸ்திதியை விருத்திசெய்வான். பொய் சொல்லமாட்டான். நல்ல நடத்தை யுடையவன். புஜபலபராக்கிரம முடையவன்.

9. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே தோன்றுவானும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் சிவந்த [மேனி
முன்கோபி மூலகூடு மொழியதைக் காப்பானாகும்
அன்னியர் மெச்சவாழ்வன் அடாபடி கூறுவானமே.

9. இத்தகைய குணங்களை யுடைவனுக்கு நம் ஜாதகன் புத்திரனா யவதரிப்பான். அவனுடைய குணங்களை விவரிக்கிறோம். அழகுள்ளவன். சிவப்புநிற முடையவன். முன்கோப முடையவன். மூலச்சூட்டின் உபாதை யுள்ளவன். சொன்னவார்த்தைப்படி நடப்பான். பிறர்மெச்சும்படி வாழ் வான். அடாபடியான வார்த்தைகளைக் கூறுவானாகும்.

10. தந்தைக்குத் தாழ்வுறுதான் தரணியை விருத்திசெய்வன்
சிந்தையும் நல்லதாகும் சீக்கிர நடையுமாவன்
விந்தையாய்ப் பேசுவானும் வித்தையு முடையனவன்
நந்திஆ விருத்தியுண்டு நலிந்தோரை ஆதரிப்பன்.

10. தந்தையின் வாழ்க்கைக்குத் தாழ்வில்லாமல் வாழ்வான். நிலபலங் களை விருத்திசெய்வான். நல்ல எண்ணங்களை யுடையவன். சுறுசுறுப்பான நடையுடைபாவனைகளை யுடையவன். வேடிக்கையாகப் பேசுவான். நல்ல படிப்பாளி. எருதுகளையும் பசுக்களையும் விருத்திசெய்வான். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்து ஆதரிப்பான்.

11. அரசுமே செய்வானாகும் அஞ்சிடான் எதிரிக்கேதான்
தரையதை விருத்திசெய்வன் சாராள்கள் உடையனாகும்
மருவிடும் ஞாதிஆஸ்தி மனைவியாள் பொருளும்சேரும்
இருஊரில் பூமிசேரல் எய்திடும் பித்தகூடு.

11. இராஜபோகமாய் அதிகாரஞ் செலுத்தி வாழ்வான். பகைவரைக் கண்டு அஞ்சமாட்டான். பூஸ்திதியை விருத்திசெய்வான். பரிஜனங்களை யுடையவன். சொந்தக்காரருடைய ஆஸ்திகள் இவனைவந்து சேரும். பெண் டாட்டியின் சொத்தும் சேரும். இரண்டு கிராமங்களில் பூமிகளைச் சேர்ப்பான். பித்தரூடு உடையவனாகும்.

12. யோகம்எவ் விதமாய்ச்சொன்னீர் உரைப்பீர்க ளந்தசங்கை
நாகமும் நந்தியாக நற்புதன் குருவும்லாபம்
ஏகனாய்ச் சனியுமஞ்சில் இருப்பதால் பேதியோகம்
யோகவான் தருமகர்ம யோகமும் பொருந்துமென்றோம்.

12. இவ்வளவு யோகங்கள் இவனுக்கு ஏற்படும் என்று எப்படிச் சொன்னீர்? அந்த சந்தேகத்தைத் தெரியப்படுத்தவும். ராகு இரண்டா மிடமாகிய ரிஷபத்திலிருப்பதாலும், புதனும் குருவும் லாபஸ்தானத்திருப்ப தாலும், சனி ஐந்தாமிடத்தில் தனித்திருப்பதாலும் பேதியோகம் ஏற்படும் நல்ல போகவான். தருமகருமயோகமும் பொருந்தும் என்றோம்.

13. அதின்பலன் அரசுசெய்வன் அளகேசன் ஒப்பாய்வாழ்வன்
பதியது சித்திரம்செய்வன் பதர்குணம் இல்லானாகும்
இதுபலன் இருபதாண்டு மேலேதான் யோகம்வாய்க்கும்
அதிபன்தன் மரணமட்டும் வளர்பிறை போலேயோகம்.

13. அதன்பலனாக ராஜ்ய ஆளுகை செய்வான். குபேரனைப்போல் வாழ்வான். வீட்டை அழகுசெய்வான். தாழ்வான சிந்தனையே கிடையாது. இம்மாதிரியான யோகபலன் இருபதாம் வயதிற்கப்புறம் வாய்க்கும். மரண காலம் வரையிலும் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் மேன்மேல் ஓங்கும்.

14. தன்துணை யாவும்தீது சக்திமார் இருவர்தீர்க்கம்
கன்னியில் ஒருத்திதானும் கணவனு மின்றிவாழ்வள்
என்னகா ரணங்கள்சொல்வாய் இவன்பூர்வம் பாண்டி
[தன்னில்
பின்குலம் தன்உதித்துப் பூவையும் வாழும்நாளில்,

14. தன்னுடன் பிறந்த சகோதரம் இல்லை. சகோதரிகள் இருவர் நிச்சயம். அவர்களில் ஒருத்தி தனியே கணவனில்லாமல் வாழ்வாள். இதற்கு என்ன காரணம்? சொல்லுங்கள். இவள் பூர்வத்தில் பாண்டிநாட்டில் கீழ்ச் சாதியில் பிறந்து வாழ்ந்துவரும் நாளில்,

15. திருவிழாக் காலம்தன்னில் தேவியும் அவிடம்சென்று
உரைமஞ்சள் சிகப்புச்சீப்பு ஒண்டொடி வாங்கிக்கொண்டு
பொருளது ஈயாசென்றாள் புகலுவான் வணிபன்சாபம்
மருமமாய்ச் சென்றபாவி மாரனும் மரிப்பானாகும்.

15. திருவிழாக் காலம் வந்தது. இவளும் அங்குச்சென்று உரைக்கும் மஞ்சளும், சிவப்புநிறமான சீப்பும் வாங்கிக்கொண்டு பொருள்கொடுக்காமல் வந்துவிட்டாள். வியாபாரியின் சாபம் நேரிட்டது. வாயைமூடிக்கொண்டு பொருள்கொடாமல் சென்றபாவிக்குப் புருஷனும் மரிப்பானும்.

16. மற்றொரு சென்மம்தன்னில் மணமுண்டாய் மதலையின்றி
வித்தகன் மரணமாகி விரிதலை மொட்டையாகும்
குற்றமாய் வாழ்வதென்ன குலவிற்று அந்தச்சாபம்
பர்த்தாவு மரணமாகிப் பாவையும் சஞ்சலத்தால்,

16. அடுத்த ஜன்மத்தில் இவளுக்குக் கலியாணமாயிற்று. குழந்தை பிறக்கவில்லை. புருஷனும் மரணமானான். இவள் விதந்துவானாள். இந்தக் குற்றத்துடன் வாழவேண்டுமென்ற அந்தச் சாபமும் பலித்தது. பர்த்தா இறந்ததும் இவளும் மனச்சஞ்சலமடைந்து,

17. மரலியின் பதிக்குச்சென்று மறையவன் வரியப்பட்டு
அரிவையும் உதித்தாளென்றே மனுகிடும் வணிபன்சாபம்
வரனுண்டாய்ச் சுகமுமின்றி மரிப்பனும் விதவையாவள்
குரைமன மாகவாழ்வள் கோதையே கேட்டிடாயே.

17. எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப் பட்டு இவளும் உதிக்கலானாள். வியாபாரியின் சாபம் அணுகிற்று. புருஷன் ஏற்பட்டு, தேக அசௌக்கியத்தினால் மரிப்பான். விதவையாவள். மனக் குறையுடன் வாழ்வாள். பார்வதியே! கேட்பாயாக.

18. அத்திரி மறுத்துச்சொல்வார் ஆண்துணை தோஷம்எவ்வார்
குத்தமாய்ச் சனியுமஞ்சில் குண்டையில்[1] பணியும்தங்க
வித்தகன் தனியாய்வாழ்வன் விளம்புவோம் மணத்தின்
[காலம்
சுத்தமாய்ப் பதினேழாண்டில் தோகையும் தென்பால்
[தன்னில்.

18. இதனை அத்திரி மகரிஷி மறுத்துச் சொல்லுவார். ஆண் துணை வன் தோஷம் எம்படி ஏற்படும்? குற்றமாய்ச் சனியும் ஐந்தாமிடத்தில் தங்க, பாம்பும் ரிஷபராசியில் தங்க, புருஷன் தனியாக வாழ்வான். அவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். சித்தமாய்ப் பதினேழாம் பிராயத்தில் தென்பாகத்திலிருந்து பெண்டாட்டியும் வருவாள்.

---

1. இரிஷபராசியில்

19. சக்தியும் நேருமென்றேம் சாற்றுவோம் அவள்குணத்தை
உத்தம குணத்தாளாகும் உயர்வான புத்திஏற்பள்
நத்திஞேர்க் குதவிசெய்வள் நயம்படக் கூறுவாளாம்
புத்தியில் பெரியோளாவள் புண்ணிய மனத்தாளாகும்.

19. அப்படி நேரும் மனைவியின் குணங்களைக் கூறுவோம். மேலான குணத்தை யுடையவள். உயர்ந்த புத்திமதிகளை ஏற்பாள். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வாள். நயமான வார்த்தைகளைப் பேசுவாள். மேலான புத்திக்கூர்மையை யுடையவள். தருமசிந்தனை யுடையவள்.

20. மங்கையும் தீர்க்கசீவி மாரன்தன் மனதுக்கேத்தோள்
எங்கள்போல் அதிதிக்கன்னம் ஈகுவாள் பித்ததேகி
அங்கவள் யோகசாலி அயல்குற்றம் புகலாளாகும்
பொங்கின குடும்பமேற்பள் பூவையாள் யோகம்வாய்க்கும்.

20. இவளும் தீர்க்காயுசுள்ளவள். புருஷனுடைய மனப்படி நடப்பாள். அதிதிகளை உபசரித்து அன்னம் போடுவாள். பித்தமான சரீரத்தை யுடையவள். அவள் ஒரு யோகசாலி. பிறர் குற்றம் எடுத்துப் பேசமாட்டாள். பொங்கி வளரும் குடும்பத்தை வகிப்பாள். லட்சுமீகடாக்ஷம் ஏற்படும்.

21. செயமுனி கூறுகின்றார் தேவிமார் இருவராகும்
பயமிலாச் சொன்னசங்கைப் பகருவீர் விபரமாக
வியமதில் பண்டிதங்கள் வெள்ளியும் தசத்திலேற
நயமுடன் சொன்னேம்யாங்கள் நாரதர் மருத்துச்சொல்
[வார்.

21. இதைக் கேட்ட செய்முனி கூறலுற்றார். தேவிமார் இருவராவர். இப்படிப் பயமில்லாமல் சொன்ன சங்கையை விவரிப்பீர் என்று கேட்க, விரயஸ்தானத்தில் சூரியன் தங்க, சுக்கிரனும் பத்தாமிடமான மகரராசியில் ஏற, நாங்கள் நயமுடன் சொன்னேம். உடனே நாரதர் இதை மறுத்துச் சொன்னார்.

22. சனிகுரு மதிசேய்ஏழை சார்ந்துமே பார்த்ததாலே
வனிதையு மொன்றேதீர்க்கம் மங்கையும் இவன்முன்னுலே
கனமுடன் மரிப்பதாகும்...
வினையாகும் காலம்தன்னை விளம்புவீர் முனியேநீதான்.

22. சனி குரு சந்திரன் செவ்வாய் முதலானவர்கள் லக்கினத்திலிருந்து ஏழாமிடத்தைப் பார்ப்பதனாலே பெண்டாட்டியு மொருத்தியேதான். இதைத் தீர்க்கமாய்ச் சொல்லுவோம். இவளும் புருஷனுக்கு முன்னாலேயே மரிப்பாளாகும். இடஞ்சலாகும் காலத்தைக் கூறுங்கள், முனிவரே! நீங்கள்.

23. அன்பது நாலுஆண்டில் அவன்மனை கெண்டமெய்தும்
மன்னவன் தசைக்காலத்தில் அவன்சுய புத்திதன்னில்
சொன்னதோர் மனைவிஏகும் செப்பின மொழிகுன்றாது
கன்னனன் மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

23. இவனுடைய ஐம்பத்துநான்காம் பிராயத்தில் மனைவியின் மரணம் ஏற்படும். குருதசை நடக்கும்போது அவனுடைய சுயபுத்தியில் சொன்னபடி மனைவி ஏகுவாள். சொன்னசொல் தவறாது. கனிவான மொழியைச் சொல்லும் பார்வதியே! கேட்பாயாக.

24. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையு மவ்வார்தீர்க்கம்
இதுநிற்க உதித்தோன்பூர்வம் இயம்புவோம் இனிமேலாக
அதிதிவாழ் அருணைதன்னில் அணுகினான் சைவசேயாய்
நிதியது பெருக்கமாகி நிமலனும் வாழ்ந்துமேதான்.

24. ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகளும் அப்படியே. இது தீர்க்கம். இது நிற்க, இனிமேலாக ஜாதகனுமைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். அதிதிவாழும் திருவருணைதன்னில் சைவக்குழந்தையாய்ப் பிறந்து, சொத்துக்களைப் பெருக்கி, சந்தோஷத்துடனும் சம்பத்துடனும் வாழும் நாளில்,

25. அறமதில் இச்சையுண்டாய் அரன்தொண்டு புரிந்துமேதான்
வருமார்க்கம் தாகம்வைத்து மரலியின் பதிக்குபுக்கிப்
பிரமனால் வரியப்பட்டுப் பிறப்பன மிந்தபாலன்
இருபது ஆண்டுமேலாய் இளம்பிறை போலயோகம்.

25. தருமம் செய்வதில் இச்சையுண்டாகி, சிவனுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து, சாலையோரங்களில் தண்ணீர்ப்பந்தல் வைத்து, எமலோகம் சென்றான். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இவன் பிறப்பான். இவனுக்கு இருபதாவது வயதிற்குமேல் இளம்பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஓங்கும்.

26. தனம்பூமி விருத்தியுண்டு சல்லியம் நிவிர்த்தியாகும்
இனமதிப் புடையவாழ்வன் ஏவலாள் அதிகம்நேரல்
கனராசர் பேட்டிகொள்ளல் கெதித்ததோர் புகழுமெய்தும்
துணைவர்தன் ஆஸ்திகொஞ்சம் சேர்ந்திடு மென்று
[சொல்வோம்.

26. தனமும் பூஸ்திதியும் விருத்தியாகும். கடன்கள் நிவிர்த்தியாகும் சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். ஏவல்காரர்கள் அதிகம். அரசர் பேட்டிகொள்வான். மதிக்கும்படியானதொரு கீர்த்தி யுடையவன். உடன் பிறந்தார் சொத்து கொஞ்சம் சேர்ந்திடும் என்போம்.

27. தந்தையின் துணைவர்ஆஸ்தி சார்ந்திடும் மனைவியாலும்
முந்திய பொருளும்நேரும் உயர்வான குடும்பியாவன்
அந்தவூர் அரசுசெய்வன் அறைந்தன மொழிகுன்றாது
கந்தனை ஈன்றமாதே கழறுவோம் அன்னைசேதி.

27 தகப்பனுடைய துணைவரின் ஆஸ்தி சேர்ந்திடும். மனைவியினாலும் பண்டைச்சொத்துக்களும் சேரும். மதிப்பான குடும்பத்தை வகிப்பான். அந்த ஊரில் அரசனைப்போல் வாழ்வான். சொன்ன வார்த்தைகள் குறைவுபடா. கந்தனைப்பெற்ற மாதே! இவனுடைய தாயின் செய்தி விவரம் கூறுவோம்.

28. மாதுரு சிவந்தமேனி மனமது கபடுமுள்ளான்
சூதிலாள் உளைச்சல்தேகி சொல்லது சுருக்கமாகும்
பாதக மனமில்லாதான் பர்த்தாவுக் கினியளாகும்
வேதனை பித்தசூடு வெஞ்சினம் வெளிக்காட்டாதாள்.

28 இவன் மாதா சிவந்த நிறமுள்ளவள். மனதில் கபடமுள்ளவள். சூதுவா தில்லாதவள். தேக உளைச்ச லுடையவள். சுருங்கச் சொல்லுவாள். பஞ்சபாதகங்களில் மனம் செலுத்தமாட்டாள். புருஷனுக்கு இனியவளாவள். பித்தசூட்டின் உபத்திரவ முடையவள். கோபத்தை வெளிக்காட்ட மாட்டாள்.

29. இல்லமும் கீழ்பாலாகும் இவள்துணை ஆண்பால்நஷ்டம்
வல்லியும் ஒருத்திதீர்க்கம் வரைகுறேும் இவனின்பூர்வம்
எல்லையில் உயர்வதான எழில்கொங்கு நாட்டிலேதான்
புல்கினள் வைசியசேயாய்ப் பூவையும் வாழுநாளில்,

29. இவளுடைய வீடும் கிழக்குச்சாரியில் உள்ளது. இவளுடைய சகோதரன் நஷ்டமாவன். சகோதரி ஒருத்தி தீர்க்கமாவள். இவளுடைய பூர்வோத்தரத்தை எடுத்துச் சொல்லுவோம். மேலான மலைப்பிரதேசமான மலையாள ராச்சிய எல்லையில் வைசியகுலத்தில் பிறந்து இவள் வாழ்ந்து வரும் நாளில்,

30. மைத்துனன் குழவிக்கேதான் வஞ்சனை மாதுசெய்தாள்
பத்திற்று அதுஓர்தோஷம் பஞ்சையை மோசம்செய்வாள்
குத்தமாய் ஏழைசாபம் கூடிற்றுப் பாவைக்கேதான்
வித்தகி அந்தியத்தில் வாயுவால் மரணமாகி,

30. தன்னுடைய மைத்துனனுடைய குழந்தைக்கேதான் வஞ்சனை செய்தாள். அப்படி ஒரு தோஷம் இவளைச் சார்ந்தது. ஏழைக்கு அபசாரம் செய்தாள். குற்றமான ஏழையின் சாபம் கூடிற்று. கடைசி காலத்தில் இவள் வாயு உபத்திரவத்தினாலே மரணமடைந்து,

31. வேதனால் வரியப்பட்டு விளங்கினாள் என்றுசொல்வோம்
தீதாக ஏழைசாபம் செனித்தசேய் முதலில்நஷ்டம்
மேதினில் துணையாண்நஷ்டம் விசனமே குடியாய்த்தங்கும்
மாதவர் மறுத்துசொல்வார் வைசிய குலமுன்சென்மம்,

31. பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு விளங்கினாள் என்று சொல்லுவோம். கெட்ட சாபத்தை அந்த ஏழை கொடுத்ததன் பயனாக, பிறந்த குழந்தை முதலில் நஷ்டமடைந்தது. ஆண் சகோதரனும் நஷ்டம். இவளிடம் வியசனமே குடிகொண்டிருந்தது. முனிவர் இந்த இடத்தில் மறுத்துச் சொல்லுவார். முன் ஜன்மத்தில் வைசிய குலத்திலுதித்து,

32. மறைகுல முதிக்கும்வண்ணம் வறிவிப்பீர் அந்தசங்கை
அரிவைமுன் சென்மந்தன்னில் அரனடி யார்க்குஅந்தில்
பெரும்பசிக் கன்னமீந்தாள் புக்கிற்று அதுவுமன்றித்
திருமாலின் தொண்டுபூண்டு சிலர்க்குஆ பத்தைக்காத்தாள்.

32. வேதியர் குலத்திலுதிக்கும் விதத்தை வருணிப்பீர். அந்த சந்தேகத்தைத் தெளிவுபடுத்தும். இவள் போனஜன்மத்தில் சிவனடியார்களுக்குப் பெரும் பசிப்பிணி போகும்படி அன்னங் கொடுத்துதவினாள். அந்தப் புண்ணியம் ஒன்று. அது நீங்கலாக, மகாவிஷ்ணுவின் பூசைகளைச் செய்து சிலருடைய ஆபத்துக்களைப் போக்கிக் காப்பாற்றினாள்.

33. ஆகையா லுதித்தாளென்றோ மறிவிப்போம் பின்
[சென்மத்தைப்
பாகமாய்க் காஞ்சிதன்னில் பிறப்பளா மிக்குலத்தில்
போகபாக் கியங்களுண்டாய்ப் பூவையும் வாழ்வதாகும்
தோகைவா கனனைப்பெற்ற சுந்தரி கேட்டிடாயே.

33. ஆகையினால் அப்படி உதிக்கலானாள் என்றோம் அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். பக்குவமாய் இக்குலத்தில் காஞ்சிபுரத்தில் பிறப்பாள். போகபோக்கியங்களை யடைந்து வாழ்ந்து வருவாள். மயில் வாகனனைப் பெற்ற பார்வதியே! கேட்டிடாயே.

34. தந்தையின் பூர்வம்சொல்வேன் தாம்பிர பரணிதன்னில
வந்தனன் வேளாளாக மனைவிமைந் தருமுண்டாகி
முந்தினோர் தொண்டுபூண்டு மூஷிகன்[1] கோஷ்டம்செய்து
அந்தவன் வினையில்லாமல் அணுகினான் காலனாடு.

34. தந்தையினுடைய பூர்வோத்தரத்தைச் சொல்வேன். தாம்பிரபரணி தீரத்தில், வேளாளர் குலத்தில் பிறந்து, மனைவி மைந்தர்களுமுண்டாகிப் பெரியோர்களுக்குத் தொண்டுகள் செய்து, பிள்ளையார் கோவிலைக் கட்டி, எவ்வித வினையின் தொந்தரவுமில்லாமல் எமலோகம் சேர்ந்தான்.

---

1. வினாயகர்

35. தலைவன்கோன் வரியப்பட்டுச் செனித்தவனென்று [சொல்வோம்
குலவிய பின்சென்மத்தைக் கூறுவோம் கொங்குநாட்டில்
பலமுள தனவானுக்குப் பிறப்பனும் க்ஷத்ரியசேயாய்
மலையிறை மகளேயாங்கள் வழுத்தின மொழிகுன்றாது.

35. திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தவன் இவனேதான் என்று சொல்லுவோம். இதற்குப் பிறகு ஏற்பட்ட ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். மலையாளத்தில் பெரிய பணக்காரனுக்குப் பிள்ளையாய்ப் பிறப்பான். அக்குலமும் க்ஷத்திரிய குலமாகும். மலையவான் மகளே! நாங்கள் கூறிய மொழிக்குக் குறைவு ஏற்படாது.

36. இருபது ஒன்பதாண்டில் இயம்புவோம் தந்தைகெண்டம்
உரைகுறோம் முப்பானொன்றில் உத்தமி அன்னைகெண்டம்
உரைகுறோம் ஆறுஆண்டில் ஐப்பசி மாதம்தன்னில்
நிரைபக்கம் ஏகாதேசி நிமலன்தன் உடலமேகும்.

36. இவனுடைய இருபத்தொன்பதாம் வருஷத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். முப்பத்தொன்றும் பிராயத்தில், உத்தமியாகிய தாயின் கண்டம். இவனும், அறுபத்தாறும் பிராயத்தில் ஐப்பசி மாதத்தில், சுக்கிலபட்சத்தில், ஏகாதசியன்று உடலம்வாடி மரணமடைவான்.

37. பின்சென்மம் வான்மியூரில் பிறப்பனும் சைவசேயாய்ப்
பொன்னொடு பணிதிபெற்றுப் புவிராசர் பேட்டிகொண்டு
இன்னவன் வாழ்வானாகும் இயம்பின மொழிகுன்றாது
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

37. அடுத்த ஜன்மத்தில் சைவக்குழந்தையாய், வால்மியூரில் பிறப்பனும். பொன், பூஷணங்கள் இவைகளைப் பெற்று, பூலோகத்து அரசர் பேட்டியைப் பெற்று, இவன் வாழ்ந்து வருவானாகும். சொன்னசொல் தவறாது. உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

38. பாலகன் செனிக்கும்காலை பரணியின் ரெண்டாம்பாதம்
சாலவே புகர்யிருப்புச் சாற்றுவோம் பனிரண்டாண்டும்
ஏலவே திங்களெட்டும் இயம்பினோம் பூர்வபாகம்
ஆலத்தை உண்டோன்தேவி அறிவிப்போம் பின்பால்சேதி.

38. இப்பாலகன் ஜனனகாலத்தில், பரணி நட்சத்திரம், இரண்டாம் பாதம். அதற்குப் பொருத்தமாகச் சுக்கிரதசையில் இருப்பு வருஷம் பன்னிரண்டு, மாதம் எட்டு இவ்வாறு விவரங்களைப் பூர்வபாகத்தில் கூறினோம். ஆலகாலத்தையுண்ட பரமசிவனின் தேவியே! மற்றவைகளைப் பின்பாகத்தில் அறிவிக்கிறோம்.

ஜாதகம் 39

1. திங்கள்சேய் தனுசுமாகச் சனிமானில் குருவும்சாடி
பங்கயன்[1] கோலதாகப் பணிபுதன் கன்னியாகச்
சுங்கனும்[2] சீயமாகச் சிகிமீனம் மேடம்சென்மம்
இங்கிவை கிரகம்நின்றால் இயம்புவீர் பலனையென்று.

1. சந்திரன் செவ்வாய் இவர்கள் தனுசிலும், சனி மகரத்திலும், குரு கும்பத்திலும், சூரியன் துலாத்திலும், இராகுவும் புதனும் கன்னியிலும், சுக்கிரன் சிம்மத்திலும், கேது மீனத்திலும் தங்கும்படியான இந்த கிரக நிலைகளைக் கொண்ட மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள் என்று,

கேது	லக்கினம்		
குரு	இராசி	சக்கரம்	
சனி			சுக்கிரன்
சந்திரன் செவ்வாய்		சூரியன்	ராகு புதன்

2. காதலி கேட்கும்போது கௌசிகர் கூறுகின்றார்
மேதினில் ஆண்பால்சென்மம் வந்தஇல் கீழ்மேல்வீதி
போதவே தென்பால்வாசல் புலிவாக னத்தான்ஈசன்
மாதவன் கணேசன்கீழ்பால் மருவிடும் சமலூர்தன்னில்.

2. பார்வதி கேட்கும்போது, கௌசிகர் கூறுகின்றார். இந்த ஜாதகன் ஆண்பால் ஜன்மம். இவன் பிறந்த வீடு, கிழக்கு மேற்கு வீதியில், தெற்குப் பார்த்த வாசலுடையது. கிழக்கே புலிவாகனத்தோன், ஈசுவரன், மாதவன், கணேசன் முதலியோரின் கோவில்கள் கொண்ட சமலூரில்,

3. உதிப்பனும் [3]குலாலவம்ச முறைக்குறோ மிரண்டாம் [சென்மம்
அதிபன்தன் இல்லம்கீழ்பால் மருவிடும் கடிகைஐந்து
இதுஅடை யாளம்வீடு இயம்புவோம் குடும்பச்செய்தி
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

---

1. சூரியன்
2. சுக்கிரன்
3. குயவன்

3. குயவன் குலத்தில் பிறப்பனும். அவனுடைய இரண்டாம் ஜன்மம் கூறுவோம். ஜாதகனுடைய வீடு கிழக்கே ஐந்து நாழிகை (மைல்) தூரத்திலுள்ளது. இதுதான் இவன் வீட்டின் அடையாளம். இனி இவனுடைய குடும்பச் சேதியைக் கூறுவோம். அதிதியை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

4. தந்தையும் துணைவர்காணுன் தனியனாய் வாழ்வானாகும்
எந்தக் காரணத்தினால் இயம்பினீர் அந்தசங்கை
சந்திரன் சேயுமுமாண்பான் தபனனும்[1] நீச்சமாக
அந்ததோர் பலத்தினாலே அவன்தனி யாகவாழ்வன்.

4. தந்தைக்குத் துணைவர் இல்லை. தன்னந்தனியே வாழ்ந்து வருவான். இந்தச் சந்தேகத்தை எந்தக் காரணங் கொண்டு சொன்னீர்? என்று வினவ, சந்திரனும், செவ்வாயும் இலக்கினத்திலிருந்து ஒன்பதாம் வீட்டிலிருப்பதனாலும், சூரியனும் நீசஸ்தானத்தையடைந்ததாலும் இந்த கிரக பலங்களைக் கொண்டு அவன் தனியாக வாழ்வான் என்று சொன்னோம்.

5. அவனது குணத்தைச்சொல்வேன் யாவர்க்கும் நல்லோனாகும்
பவமன மில்லானாகும் பாரபட் சங்கள்பேசான்
தவசிகட் கன்னமீவன் தரணிகள் அதிகம்சேர்ப்பன்
நவனியில் பொய்கள்சொல்லான் நளினமயாய் வார்த்தை கூர்வன்.

5. இவனுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவோம். எல்லோருக்கும் நல்லவனாவன். பவவினைகளில் மனதைச் செலுத்த மனமில்லாதவனாவன். பாரபட்சமாகப் பேசமாட்டான். தபோதனர்களுக்கு அன்னம் போடுவான். பூஸ்திதியை அதிகமாகச் சேர்ப்பான். உலகினில் பொய் பேசமாட்டான். இனிமையான வார்த்தைகளைக் கூறுவான்.

6. குலதொழில் அல்பமாகும் இடமது நல்லதாகும்
விலைமாதர் மோகம்கொள்ளான் வெஞ்சினம் வெளிக் காட்டாதான்
நிலையதை விரிப்பானாகும் நீலம்போல் நிறத்தனாகும்
பலரையும் நேசம்கொள்வன் பஞ்சைபால் திரிவானாகும்.

6. குலத் தொழில் அற்பமாகும். இருக்குமிடம் நல்லதாகும். தேவடியாள்களிடம் மோகம் கொள்ளான். கடுஞ்சினத்தை வெளிக்காட்டான். தன்னிலைமையை விருத்தி செய்வான். பச்சை(நீல) நிறமுடையவன். எவரையும் சிநேகம் கொள்ளுவான். ஏழையைப்போல் அலைந்து திரிவான்.

---

1. சூரியன்

7. கடன்படான் இடுக்கமில்லான் காரிய சமர்த்தனுகும்
உடன்படான் பிழைகளுக்கு உறுதியில் லாதநெஞ்சம்
படைதனில் செல்லானுகும் பசித்தோர்க்கு உதவிசெய்வன்
நடையது நல்லதாகும் நாதனுர் பத்திபூண்பன்.

7. கடன் வாங்கமாட்டான். தொந்தர வில்லாதவன். காரியங்கள் செய்வதில் சாமர்த்திய முள்ளவன். பிசகான காரியங்களில் தலையிட மாட்டான். மனதில் திடமில்லாதவன். கூட்டங்களில் சம்பந்தப்பட மாட்டான். பசித்தவர்களுடைய துன்பத்தைப் போக்குவான். நல்ல நடத்தையை யுடையவன். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன்.

8. இன்னவன் முன்செென்மத்தை இயம்புவோம் தில்லை [தன்னில்
வன்னிய குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாகி
அன்னவன் வாழுநாளில் அணுகிய வினையைக்கேண்மோ
முன்னேர்க்கு மோசம்செய்தான் மொழியது பிரட்டலாக.

8. இவனுடைய போன ஜன்மத்தைப்பற்றிய விவரங்கள் கூறிவோம். சிதம்பர க்ஷேத்திரத்தில், வன்னியர் குலத்திலுதித்து, மனைவி மைந்தர்கள் ஏற்பட்டு வாழ்ந்து வரும் காலத்தில், வந்து சேர்ந்த வாழ்வினையைக் கேட்பாயாக. பெரியவர்களுக்கு, பிதற்றமான வார்த்தைகளைச் சொல்லி பேத்துமாத்தால் செய்து மோசம் செய்தான்.

9. மறையவர் வருத்தமுற்று வரைந்தசா பத்தைக்கேண்மோ
நெறியிலா வார்த்தைசொன்னய் நேரும்பின் செென்மந் [தன்னில்
மருவாது துணைவர்தானும் வளைவுமே ஒடுக்கமாகும்
உரைத்தனர் வேதத்தோர்கள் உறைந்தது அந்தசாபம்.

9. பிராமணர்கள், இதைக் கேட்டு வருத்தப்பட்டுச் சாபமிட்டார்கள், அதைக் கேட்பாயாக. தர்மமில்லாத வார்த்தையைச் சொன்னய். இனிவரும் ஜன்மத்தில் சகோதரர் உனக்கு இருக்கமாட்டார்கள். நிலத்தின் விளைவும் குறையும் என்று வேதவித்துக்களான பிராமணர்கள் கூறினர்கள். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது.

10. துணைவனை மோசம்செய்தான் செப்புவார் சாபம்தானும்
பிணைசெய்த பாவியேநீ பிறக்கும்பின் செென்மந்தன்னில்
துணைவரும் இல்லாதாகித் தொல்புவி தன்னில்வாழ்வாய்
சினமுடன் சொல்லலுற்றுன் சேர்ந்தது அந்தசாபம்.

10. சகோதரனுக்கு மோசம் செய்தான். அவனும் சாபம் கொடுக்கலானுன். பிசகு செய்த பாவியாகிய உனக்கு ஏற்படும் அடுத்த ஜன்மத்தில்

சகோதரனில்லாமல் உலகினில் வாழ்வாய்று ளேன்காபத்துடன் சபித்தான். அந்தச் சாபமும் இவனைச் சேர்ந்தது.

11. ஆகையால் இச்சென்மத்தில் அண்ணன்தம் பிகளுமின்றிப்
பாகமாய்த் துணைபெண்ணின்றி பாரினில் வாழ்வானுகும்
ஏகனும் என்றுசொல்வோம் இயம்பின குணத்தானுக்கு
நாகரி கங்களான நாயகன் உதிப்பானுகும்.

11. ஆதலால் இந்த ஜன்மத்தில் இவனுக்கு அண்ணன் தம்பிகளில்லாமல், வாழ்க்கைத் துணைவியுமில்லாமல் உலகத்தினில் தன்னந்தனியே வாழ்வான். 'ஏகன்' என்று எல்லாரும் சொல்லுவார்கள். இவ்வித குணங்களையுடைய பிதாவிற்கு நம் ஜாதகன் புத்திரனுய்ப் பிறப்பான். நாகரிக மேன்மை யுடையவனுவன்.

12. உதித்தசேய்க் குணத்தைச்சொல்வே னுரைவதில் [சிலேடைஉண்டு
பதியது செய்வானுகும் பாருகள் விருத்திசெய்வன்
விதியவன் போலேசிருட்டி விநோதங்கள் செய்வானுகும்
சதியிலா மனத்தனுகும் சாஸ்திர விதியில்தேர்வன்.

12. இப்படி அவதரித்த இவனுடைய குணுதிசயங்களை எடுத்துரைப்பேன். திருஷ்டாந்தங்களுடன் சம்பாஷிப்பான். வீடு கட்டுவான். பூமி விருத்தி உண்டு. பிரம்மாவைப்போல் புதிது புதிதாக சிருஷ்டி விநோதங்கள் செய்வான். சூதுவாதில்லாத மனதை யுடையவன். சாஸ்திர விதிகளில் தேர்ச்சி பெற்றவன்.

13. சொல்லிடு வசனமெல்லாம் சுத்தமாம் சொகுசனுவன்
வெல்லுவான் எதிரிதன்னை வீண்பழி யேற்கானுகும்
நல்லவர் பலர்களாலே நாட்டினில் புகழுமேற்பன்
தல்லியும் தந்தைக்கிஷ்டன் சரசமாய் வார்த்தையுண்டு.

13. சொல்லும் வார்த்தைகளெல்லாம் சுத்தமாயிருக்கும். சொகுசுக்காரன். எதிரிகளை ஜயிப்பான். வீண்பழிபாவங்களை ஏற்கமாட்டான். நல்லவர்கள் பலர் இவனைப் புகழ்ச்சிக்குரியவனுக்குவார்கள் தாய் தந்தையர்க்குப் பிரியமானவன். சரசமான வார்த்தைகளைப் பேசுவான்.

14. மந்திரம் வைத்தியங்கள் மருமனுல் அறிவானுகும்
தந்தைநாள் பூமிவிருத்தி சாராள்கள் சேர்தலுண்டு
நந்திஆ விருத்திஉண்டு நாரதர் மருத்துச்சொல்வார்
எந்தக் காரணத்தினுலே இவனுக்கு யோகம்சொன்னீர்.

14. மணி மந்திரம் ஔஷதம் இவைகளில் தேர்ச்சிப் பெற்றவன். மர்மமான சாஸ்திரங்களை அறிந்தவன். பிதிரார்ச்சிதத்தை விருத்திக்குக் கொண்டு வருவான். அதிக பரிஜனங்களை யுடையவன். பசுக்களையும் எருதுகளையும் விருத்தி செய்வான். இதனைக் கேட்ட நாரதர் மறுத்துக் கூறுவார். எந்தக் காரணத்தைக் கொண்டு இவனுக்கு யோகங்கள் சொன்னீர் ?

15. பத்தினிக் குடையோனாட்சி பண்ணித்தன்[1] உச்சமாகச்
சுத்தமாய்க் குருவுலாபம் தோகையில் ராகுதங்க
இத்தகை பலத்தினாலே இயம்பினோம் யோகம்தானும்
மெத்தனக் குடும்பியாவன் மேலோர்க்குத் தொண்டு
[பூண்பன்.

15. பத்தாமிடத்திற்குரிய சனி பகவான் ஆட்சி பெற்று ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பதனாலும், புதன் உச்சஸ்தானத்திலிருப்பதனாலும், சுத்தமாய்க் குருவும் லாபஸ்தானத்திலிருப்பதனாலும், கன்னியில் இராகு நிற்பதாலும் இத்தகைய யோகம் ஏற்படும் என்று சொன்னோம். மேன்மையுள்ள குடும்பத்தை யுடையவனாவன். உயர்ந்தவர்களுக்குத் தொண்டு செய்வான்.

16. சத்துரு உறவுகொள்ளான் தனமது கையிருப்புச்
சுத்தவான் முருகன்பக்தி துன்பமெப் போதும்காணான்
[2]அத்திபோல் நடையுமாவன் அரவுபோல் கோபமேற்பன்
உத்தமன் என்றபேரை உலகமேல் எடுப்பானென்றோம்.

16. சத்துருக்களிடம் உறவு கொண்டாடுவான். கைவசமுள்ள தனப் பெருக்குடையோன். சுத்த முடையவன். முருகக் கடவுளிடம் பக்தி யுடையவன். துன்பத்தை எப்பொழுதும் அனுபவிக்கமாட்டான். மத்த கஜம்போல் நடப்பான். கோபம் வந்தால் சர்ப்பம்போல் சீறுவான். உலகத்தில் உத்தமன் என்று சொல்லும்படியான பெயரை நிலை நாட்டுவான்.

17. தன்துணை முன்னால்நஷ்டம் செனிக்கும்பின் சின்னாட்
[சென்று
கன்னிகை ஒருத்திதீர்க்கம் கூறு......ஆணுண்டான்
என்னகா ரணத்தினாலே இவன்துணை தோஷம்சொன்னீர்
கன்னியில் புதனும்ராகும் கலந்ததால் சொன்னோம்யாங்கள்.

17. தன்னுடைய மூத்த சகோதரன் இறப்பான். சிலநாள் கழித்துப் பிறப்பாள் ஒரு தங்கை. அவள் தீர்க்கம் என்று சொல்லாம்............... என்ன காரணத்தினால் இவன் சகோதர தோஷம் சொன்னீர் ? கன்னியா ராசியில் புதனும் இராகுவும் சேர்ந்து இருப்பதனால் நாங்கள் சொன்னோம்.

---

1. பண்டிதன், புதன்
2. யானை

18. மன்னவன் மணத்தின்கால மறைகுறேம் பதினுறுண்டுள்
கன்னிகை மேல்பால்மேலும் கழறுவோ மவள்குணத்தைப்
பின்னமில் லாதாளாகும் பிறர்குற்றம் புகலாளாகும்
அன்னியர் மதிக்கவாழ்வா ளாளன்தன் மனதுக்
[கேத்தோள்.

18. ஜாதகனுடைய கலியாண காலத்தை எடுத்துக் கூறுவோம். இவனுடைய பதினுறுவது பிராயத்தில் மேற்குத் திக்கிலிருந்து கன்னிகை வருவாள். அவளுடைய குணங்களை விவரிப்போம். சரீரத்தில் யாதொரு பின்னமும் இல்லாதவளாவள். பிறருடைய குற்றங்களை எடுத்துப் பேச மாட்டாள். பிறர் மதிக்கும்படி வாழ்வாள். புருஷனுடைய மனதிற்குத் திருப்தியாய் வாழ்வாள்.

19. ஆள்பாக்கியம்...குறிப்பாளாகும் பசித்தோர்க்குத் தாக
[மீவள்
சீலமும் கொஞ்சமுண்டு தேறின புத்தியேற்பள்
காலத்தை அறிந்துரைப்பள் கண்முகம் வசியமுண்டு
ஆலத்தை உண்டோன்தேவி அவளுமே தீர்க்கசீவி.

19. ஆட்களுடைய பாக்கியங்களைத் தாரதரமறிந்து குறிப்பாளாகும். பசித்தோர்க்கு அன்ன பானுதிகளை அளிப்பாள். சீலமும் கொஞ்சமுடையவள். மேலான புத்திமதிகளை ஏற்பாள். கால நிர்ணயத்தை அறிந்து சொல்லும் இயல்பினள். முகத்திலுைம் கண்ணினுலும் பிறர் மயக்கமடையும்படி செய்வாள். ஆலகால விஷத்தை உண்ட நீலகண்டனின் மனைவியாகிய பார்வதியே! அவளும் தீர்க்காயுசுடையவள்.

20. புத்திர தோஷமெய்தும் பிறக்கினும் தீதேயாகும்
எத்தகைப் பலத்தினுலே இயம்புவீர் அந்தசங்கை
பத்தினில் காரிதங்கப் பார்க்கவன்[1] அஞ்சிலாகச்
சுத்தமாய்ப் புதல்வர்தோஷம் செப்பினேம் பாலனுக்கே.

20. புத்திர தோஷ மேற்படும். பிறந்தாலும் வியோகமடையும். எந்த கிரகபலத்தைக் கொண்டு அந்தச் சந்தேகத்தைச் சொன்னீர்? பத்தாமிடத்தில் சனியும் ஐந்தாமிடத்தில் சுக்கிரனும் தங்க, நிச்சயமாய்ப் புத்திர தோஷம் இவனுக்கு ஏற்படும் என்று சொன்னேம்.

21. இதுவின்றிப் பூர்வம்தன்னி லிவன்சில கொடுமைசெய்தான்
அதனுலே புத்திரதோஷம் அறிவித்தீர் அந்தசங்கை
அதிபன்தன் பூர்வம்சொல்வேன் மாயூரம் தனனிலேதான்
நதிகுளம் வேளாளுக நாயகன் உதித்துமேலும்.

---

1. சுக்கிரன்

21. இதுவுமல்லாமல் பூர்வ காலத்தில் இவன் சில கொடிய காரியங்களைச் செய்தான். அதனாலே புத்திர தோஷம் அறிவிக்கலாம். அந்தச் சமுசயம் அதனால் ஏற்பட்டது. இவனுடைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். மாயவரத்திலே நதி குளம் வேளாளனாக இவன் அவதரித்தான்.

22. பாரியு மதலைஉண்டாய்ப் பாரது விருத்திசெய்து
தீரனும் வாழும்நாளில் செய்ததோர் வினையைச்சொல்வேன்
காரிழை நேசன்பெண்டைக் காமத்தால் வினவும்போது
நேரிழை இசையாளாகி நுகர்ந்ததோர் வார்த்தை
[கேண்மோ.

22. பெண்டாட்டியும் பிள்ளையும் ஏற்பட்டு, பூஸ்திதிகள் அதிகரித்து, இந்த தீரன் வாழ்ந்து வரும் நாளிலே, செய்த ஒரு வினையை விவரிப்போம். இவன் நண்பனுடைய மனைவிமேல் மோகங்கொண்டு, காமாதுரனாய்ச் சம்பாஷிக்கும்போது, அவள் அதற்கு உடன்படாமல் இவனைப்பார்த்துச் சொன்ன வார்த்தையைக் கேட்பாயாக.

23. நேசன்தன் மனைவிபோகம் நினைக்கொணா நினைப்பாயாகில்
நாசமாய்ச் சுதர்கள்தோனும் நல்கும்பின் சென்மந்தன்னில்
ஓசையாய்த் துணையாணின்றி வரும்புத் திரனுமின்றி
காசினில் வாழ்வாயென்ன காமத்தின் ஆசையாலே.

23. உன்னுடைய நண்பனுடைய மனைவியிடம் மோகங்கொள்ள இடமில்லை. நினைக்கக் கூடாத காரியத்தை நீ செய்ததனால் உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் நாசமாகும். அடுத்த ஜன்மத்தில் ஒத்த சகோதரனில்லாமல், புத்திரனும் பிறக்காமல், உலகினில் வாழ்வாயென்றாள். காமத்தின் தொந்தரவால் ஆசை வார்த்தைகள் சொல்லி,

24. பலவந்த போகம்செய்தான் பாவைகற் புடையமாது
சலமதால் மாண்டாளென்றேும் சார்ந்தது அந்ததோஷம்
தலைவனும் அந்தியத்தில் தரித்திரம் மிகவேகொண்டு
மலையில்வாழ் முருகன்பக்தி மனதிலே எண்ணியேதான்,

24. பலவந்தமாக அவளைப் புணர்ந்தான். அந்தக் கற்புடைய ஸ்திரீ ஜலத்தில் வீழ்ந்து உயிரை நீத்தாள். இந்தப் பாதகம் இவனைச் சார்ந்தது. இவனும் கடைசி காலத்தில் அதிகமாய்த் தரித்திரத்தை யனுபவித்து, மலை மேவும் குமரேசனைப் பக்தியால் மனதில் பஜனம் பண்ணி,

25. காலன்தன் நாடடைந்து கஞ்சனால் வரியப்பட்டுச்
சாலவே உதிப்பானாகும் சார்ந்திடும் மாதுசாபம்
பாலர்கள் தோஷமெய்தும் பகருவீர் அதற்குச்சாந்தி
நீலியும் தானுமாக நிமலிவாழ் காஞ்சிதன்னில்,

25. எமலோகமடைந்தான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுத் திரும்பவும் உலகினில் உதித்தான். அப்போது அந்த மாதின் சாபம் பற்றியது. குழந்தைகள் பிறந்து இறந்தன. அதற்குண்டான பரிகாரம் என்ன என்று சொல்லுங்கள், என்று வினவ, இவனும் பெண்டாட்டியும் சேர்ந்து காஞ்சீபுரம் சென்று,

26. கச்சியில் குமரகோஷ்டம் கந்தனை அர்ச்சித்தேத்திக்
கச்சணி மறைமாதுக்குக் கறதமும் சீலையீந்து
துச்சன குணமில்லாத தபசிகள் தசம்பேருக்குப்
பட்சமாய் அன்னமீந்து பாலகன் உள்ளூர்சேர்ந்து,

26. அங்குள்ள குமரனின் கோவிலுக்குப்போய், முருகக்கடவுளை அருச்சித்து ஏத்தித் தொழுது, பிராமண ஸ்திரீகளுக்குப் புடைவை ரவிக்கைத் துண்டு வாங்கிக்கொடுத்து. கெட்ட சகவாச மில்லாத பத்து பிராம்மணர்களுக்குப் பிரியத்துடன் அன்னமளித்து, பிறகு தன்னூருக்குத் திரும்பி,

27. சஷ்டியின் விரதம்கொள்ள சந்ததி விருத்தியாகும்
துட்டமாய்ச் செய்யானாகில் சுதர்தோன்று தோன்றில்தீதாம்
குட்டாக ஆண் இரண்டு கோதையும் அவ்வார்தீர்க்கம்
மட்டில்லாத் தவங்கள்செய்யும் மங்கையே கேட்டிடாயே.

27. சஷ்டி விரதமெடுத்து அனுஷ்டித்து வந்தால், சந்ததி விருத்தியாகும். இந்தப் பரிகாரத்தைச் செய்யானாகில் பிள்ளை பிறக்காது. பிறந்தாலும் இருக்காது. ஒழுங்காக ஆண் குழந்தை இரண்டும், பெண் குழந்தைகள் இரண்டும் தீர்க்கமாய் ஏற்படும். எவ்விதக் கணக்கிலும் அடங்காத தவங்கள் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

28. இன்னவன் யோகச்சேதி இயம்புவோம் இனிமேலாகத்
தன்பந்து மேலாய்வாழ்வன் தரணிகள் விருத்திஉண்டு
உன்னத இல்லம்செய்வன் ஓரஞ்சு ஆண்டுமேலாய்
அன்னியர் மதிக்கவாழ்வன் யாவர்க்கும் உதவிசெய்வன்.

28. இவனுடைய யோகபாவங்களை இனிமேலாகக் கூறுவோம். தன் சொந்தக்காரர்களுக்கு மேலாக வாழ்வான். பூஸ்திதிகள் விருத்தியாகும். மேலான வீடு கட்டுவான். ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வான். யாவருக்கும் ஒத்தாசை செய்வான்.

29. பிறந்தநாள் முதலாவாகப் பிறைபோல் யோகமெய்தும்
வறுமையில் லாமல்வாழ்வன் வருமூன்று ஆண்டுமேலாய்ப்
பெருமையும் புகழும்பூமி போகம்பெருக்கமுண்டாம்
குறையிலா வாழ்வானாகும் கோமளி கேட்டிடாயே.

29. பிறந்த காலம் தொட்டுப் பிறைச் சந்திரனைப்போல யோகத்தில் ஓங்கி யிருப்பான். தரித்திரமில்லாமல் வாழ்வான். வரும் மூன்று வருஷங்களுக்குமேல் பெருமையும், புகழும், பூமியும், போகங்களும் பெருகிடும். குறைவில்லாமல் வாழ்வானுகும். பார்வதியே ! கேட்பாயாக.

30. அன்னையின் குணத்தைச்சொல்வே னழகுளாள் [மாநிறத்தாள்
அன்னமும் அன்பாயீவள் அரவுபோல் கோபம்கொஞ்சம்
அன்னியர்க் கிணக்கம்சொல்லாள் ஆபத்தைச் சிலர்க்குக் [காப்பாள்
அன்னைபோல் ஆதரிப்பா ளாளன்தன் மனதுக்கேத்தோள்
அன்னவள் யோகசாலி அணுகிடும் பித்தவாயு.

30. தாயின் குணங்களை எடுத்துரைப்போம். அழகுள்ளவள். மாநிற முள்ளவள். அன்புடன் அன்னமளிப்பாள். கோபம் வந்தால் பாம்புபோல் சீறுவாள். பிறருக்கு இணக்கமான வார்த்தைகளைச் சொல்லு வாள். சிலரை ஆபத்தினின்றும் காப்பாற்றுவாள். தாயைப்போல ஆதரவு செய்வாள். புருஷனுடைய மனதுக் கேற்றவள். அவளும் யோகசாலி. பித்த வாயுவினால் தொந்தரவு ஏற்படும்.

31. இல்லமும் மேல்பாலாகும் இவள் துணை ஆண்பால்மூன்று
சொல்லுவோம் தீர்க்கமாகச் சொன்னதில் ஒருவன்தானும்
செல்லுவான் இதரநாடு தனம்சேர்த்து உள்ளூர்செல்வன்
தல்லியே பின்பாகத்தில் சாற்றுவோம் அவர்கள்சேதி.

31. இவளுடைய வீடும் மேற்குப் பக்கத்திலுள்ளது. இவளுடன் பிறந்த சகோதரர் மூவராவர். இதைத் தீர்க்கமாய்ச் சொல்லலாம். அவர்களில் ஒருவன் வேறு தேசம் செல்லுவான். பணம் சம்பாதித்துக் கொண்டு உள்ளூருக்குத் திரும்புவான். தாயே! மற்றவர்களுடைய செய்தி விவரங்களைப் பின் பாகத்தில் எடுத்துரைப்போம்.

32. அன்னையின் பூர்வம்சொல்வேன் அருணைக்குக் கீழ்பாலாகச்
சின்னவூர் தன்னிலேதான் செனித்தனள் செட்டிவமிசம்
உன்னத குடும்பியாகி உயர்ந்தோர்க்குத் தாகம்தீர்த்து
முன்வினை இல்லாதாகி யொதுங்கினுள் காலனூடு.

32. தாயின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். திருவண்ணா மலைக்குக் கிழக்குப் பக்கத்தில், சிறிய கிராமத்தில், செட்டி வமிசத்தில் ஜனித்தாள். மேலான குடும்பியாகி, உயர்வான குணவான்களுக்குத் தாக

சாந்தி செய்து, பண்டை வினையின் தொந்தரவில்லாமல் எமலோகம் சென்றாள்.

33. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனித்தவள் இந்தமாது
வறுமைஎப் போதும்காணுள் வரைகுறே மிவள்பின்
[சென்மம்
திருவள்ளூர் தன்னிலேதான் செனிப்பளாம் சைவச்
[சேயாய்ப்
பெருவயி றோனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

33. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவள் இந்த மாதுதான். தரித்திரத்தை எப்பொழுதும் அனுபவியாள். இவளுடைய பின் ஜன்மத்தைப் பற்றிக் கூறுவாம். திருவள்ளூரில் சைவக் குழந்தையாய் ஜனிப்பாள். பிள்ளையாரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

34. பரிதியின் திசையிலேதான் பகருவோம் தந்தைக்கெண்டம்
மரலியும் அணுகாறுமே மதிதசை தன்னில்நேரும்
இருபது ஐந்துஆண்டில் இயம்புவோம் தந்தைகெண்டம்
மறுசென்மம் தணிகைதன்னில் மறைக்குல முதிப்பானாகும்.

34. சூரிய தசையிலேதான் தந்தையின் கண்டம் கூறுவோம். அப்பொழுது அவனுக்குச் சாவு இல்லை; சந்திரதசையிலேதான் நேரிடும். இருபத்தைந்தாவது வயது ஆனதும் தந்தையின் கண்டம் ஏற்படும். அடுத்த ஜன்மம் திருத்தணிகைதன்னில் பிராமண குலத்திலுதிப்பானாகும்.

35. இந்தஓோர் சென்மம்தன்னி லிவன்செய்த புண்ணியமென்ன
வந்தவர்க் கன்னமீந்தும் மனமது கபடுநீங்கிச்
சிந்தையும் நல்லதாகிச் செனஉப காரியாயும்
அந்தவும் வாழ்வதாலே அருமறைக் குலமுதிப்பான்.

35. இந்த ஜன்மத்தில் இவன் செய்த புண்ணியமென்ன என்று வினவ, வந்தவர்க்கு அன்னமளித்து, மனதில் கபடமில்லாமல் மனமும் நல்லமாதிரியாக மாறி, பரோபகாரியாகி, கடைசி வரையில் வாழ்ந்ததனால், பிராமண குலத்தி லுதிப்பான்.

36. முப்பது நாலுஆண்டில் விளம்புவோம் தந்தைகெண்டம்
செப்புவேன் பாலனுக்குச் சஷ்டிமேல்[1] ஆறுஆண்டில்
ஒப்புடன் தனுசுமாதம் உடலமே ஏகுமென்றோம்
தப்பித மத்தில்நேரச் சங்கரி கேட்டிடாயே.

1. அறுபதிற்குமேல்

36. இவனுடைய முப்பத்துநாலாவது பிராயத்தில், இவன் தந்தைக்கு கெண்டம் எற்படும். இவனுக்கு அறுபத்தாறும் ஆண்டில், மார்கழி மாதத்தில் காலாந்தம் எற்படும். மத்தியில் தப்பிதம் எற்படாது. சங்கரியே! கேட்டிடாயே.

37. பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனும் சேணியனாகப்
பொன்பொரு ளுடையனாகிப் புகழாக வாழ்வான்மாதே
அன்னவன் செனனகாலம் [1]அசுரர்மந் திரியிருப்புச்
சொன்னனே பத்துஆண்டும் திங்களும் நான்கதாகும்.

37. அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்தில் சேணியனாகப் பிறப்பானாகும். பொன்னும் பொருளும் பெற்றுப் புகழுடன் வாழ்வானாகும். அன்னவனுடைய ஜனனகாலம், அசுர குருவாகிய சுக்கிரனுடைய தசையில் இருப்பு பத்து வருஷம், நாலு மாசம்.

---

1. சுக்கிரன்

ஜாதகம் 40

1. சந்திரன் சனியும்மேரு செம்பொன்னு ராகுதேளில்
புந்திசேய் மேடமாகத் துறவியோன் கேதுகுண்டை[1]
விந்தையாய்ப் புகருவீணை மேடமும் சென்மமாக
அந்ததோர் பலன்களெவ்வா றறிவிப்பீர் முனியேநீதான்.

1. சந்திரனும் சனியும் தனுசியிலும், குருவும் இராகுவும் விருச்சிகத்திலும், புதனும் செவ்வாயும் மேஷத்திலும், சூரியனும் கேதுவும் ரிஷபத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், இவ்வித கிரகநிலைகளைக் கொண்ட மேஷ லக்ன ஜாதகனுக்கு உண்டான பலன்களைக் கூறுங்கள் என்று முனிவர்களைப் பார்த்துப் பார்வதிதேவி கேட்கலானாள்.

	லக்கினம் புதன் செவ்வாய்	சூரியன் கேது	சுக்கிரன்
	இராசி சக்கரம்		
சந்திரன் சனி	குரு ராகு		

2. தென்முனி புகலுகின்றார் செனித்திடு மாண்பால்சென்மம்
வன்டையில் கீழ்மேல்வீதி வாசலும் [2]யமனின்பார்வை
அந்தரி மாரிமேற்கில் அரிவாக னத்தாள்தென்மேல்
சுந்தர ஈமத்தானும் தோன்றிடு மருகிலேதான்.

2. அகஸ்தியர் சொல்லலுற்றார். ஜனித்தவன் ஆண்பால் ஜன்மம். இவனுடைய வீடு கிழக்குமேற்கு வீதியில் தெற்குப்பார்த்த வீடு. மாரியம்மன் கோவில் மேற்கிலுள்ளது. விஷ்ணுவின் கோவில் தென்மேற்கிலுள்ளது. பக்கத்தில் சுந்தரரூபமுடைய பரமசிவனுடைய கோவிலும் உண்டு.

3. இத்தகை அடையாளத்து ளிலகிய சிறுவூர்தன்னில்
வித்தகன் வைசியசேயாய் விளங்குவான் மூன்றும்சென்மம்
பெத்ததாய் தந்தையோகம் பேதையர்க்குப் புத்திரயோகம்
சுத்தமாய் முன்பின்சென்மம் செப்புவோ மின்னூல்
[தன்னில்.

---

1. ரிஷபம்
2. தெற்கு

3. இத்தகைய அடையாளங்கொண்ட சிறு ஊரில் இவன் வைசிய குலத்தில் பிறப்பான். இஃது இவனுடைய மூன்றும் ஜன்மம். இவனுடைய பெற்ற தாய் தந்தை யோகம், பெண்டாட்டி பிள்ளை யோகம், முன்பின் ஜன்ம வரலாறு இவற்றை எல்லாம் இந்த நூலில் விவரமாய்க் கூறுவோம்.

4. தந்தையின் துணைவர்ஐந்தில் ஆணொன்று தீர்க்கமெய்தும்
அந்தவன் வேறாய்ச்செல்வன் அவன்சேதி பின்பால்
[சொல்வேன்
எந்தையே தந்தைசேதி இயம்புவோம் சிவந்தமேனி
நிந்தைகள் அன்னையாலே நேர்ந்திடும் கனத்தில்தோஷம்.

4. தந்தையின் துணைவர் ஐந்து பேர்கள். அவர்களில் ஆண் ஒருவன் தீர்க்கம். அவனும் வேறாகச் செல்வான். அவனுடைய விவரங்களைப் பிறகு சொல்லுவோம். தந்தையின் செய்திகளைக் கூறுவோம். சிவந்த நிறமுடையவன். தாயினால் அவதூறுகளும் கௌரவக்குறைவும் ஏற்படும். அதனால் தோஷமுண்டு.

5. பலவணி பங்கள்செய்வன் பஞ்சைமேல் இரக்கனவன்
நிலமதைக் காப்பானும் நினைத்தது முடிக்கவல்லன்
விலைமாதர் மோகங்கொள்ளான் வீண்வம்பு புகலானும்
உலகினில் நல்லோனவன் உவமையாய் வார்த்தைகூர்வன்.

5. பலவிதமான வியாபாரங்கள் செய்வான். ஏழைகளிடத்தில் இரக்கபுத்தி யுள்ளவன். பூமியைக் காப்பாற்றுவான். எண்ணிய காரியங்களை முடிப்பான். தேவடியாள்களின்மேல் மோகங்கொள்ளான். வீண்வம்பு பேசமாட்டான். உலகத்தில் நல்லவன் என்ற பெயர் பெறுவான். உவமான உபமேயங்களுடன் சம்பாஷிக்க வல்லவன்.

6. மராமாட்டும் தொழிலும்செய்வன் வண்டிவா கனமு
[மேற்பன்
கரைமன முடையனுமே காதலி பட்சமுண்டு
முருகர்தன் பத்திகொள்வன் முண்டக[1] ரேகையுண்டு
பொருள்சேர்ப்பன் செலவுசெய்வன் புண்ணிய
[மனத்தனுமே.

6. மராமத்து வேலை (தச்சுவேலை)கள் செய்வான். வண்டி, வாகனம் இவைகளை யுடையவன். மனதில் அழுக்குடையவன். பெண்டாட்டியிடத்தில் பிரியமுள்ளவனுயிருப்பான். முருகக்கடவுளிடத்தில் பக்தி கொள்வான்.

1. தாமரை

பத்மரேகையைக் கையி லுடையவன். பணம் சேர்ப்பான்; செலவு செய்வான். தருமசிந்தனை யுடையவன்.

7. கடன்கொள்வன் நிவிர்த்திசெய்வன் கருதிடான் கட்டு
[வார்த்தை
உடன்படான் பிழைகளுக்கு உபாயங்கள் அதற்குச்
[செய்வன்
அடைமொழி அதிகம்கூருன் அவசர மனத்தனுகும்
தடவரை மகளேயாங்கள் சாற்றின மொழிகுன்ருது.

7. கடன் வாங்குவான். நிவிர்த்தி செய்வன். பொய் வார்த்தையை மனதிலும் நினைக்கமாட்டான். பிசகான காரியங்களில் தலையிடான். அவைகளுக்கு உபாயங்கள் சொல்லிக்கொடுப்பான். அடைமொழிகள் அதிகம் கூறமாட்டான். அவசரமான சிந்தனை யுள்ளவன். மலையவான் புத்திரியே! நாங்கள் சொன்ன வாக்குத் தவருது.

8. முன்னிவன் இருந்தசென்மம் மொழிகுவோம் தாயேகேளும்
பெண்ணையின் ஓரம்தன்னில் பூம்பனைப் பட்டிதன்னில்
வன்னிய குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாய்
முன்னமே குடும்பியாகி முதல்வனும் வாழுநாளில்,

8. முன்பு இவனிருந்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். தாயே! கேளும். பெண்ணையாற்றின் ஓரத்தில் பூம்பனைப்பட்டியில் வன்னியர் குலமுதித்து, மனைவி மக்கள் உண்டாகி, முதன்மையான குடும்பியாகி, வாழ்ந்து வரும் காலத்தில்,

9. வந்தவூ ழதனைக்கேண்மோ வரனின்றி மாதுதானும்
அன்னையின் இல்லம்வாழ அவள்பேரில் நிந்தைவார்த்தை
சொன்னர் சிலர்கள்என்ருேம் தோழனும் அதனைக்கேட்டுக்
கன்னியை விலக்கலுற்ருன் காதலி திகிலடைந்து,

9. ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பாயாக. புருஷனை விட்டு மாது தனியே தன் தாயின் வீட்டில் வாழ, அவள் பேரில் அவதூருன வார்த்தைகளைச் சிலர் சொன்னர்கள். புருஷனும் அதைக் கேட்டுப் பெண்டாட்டியைத் தள்ளிவைக்கலானன். இதனல் காதலி திகிலடைந்து,

10, ஓரவஞ் சனைகள்சொல்லி ஒதுக்கின பாவியேநீ
மாறிடும் பின்சென்மத்தில் வம்மிச தோஷமாயும்
பாரினில் துணைபெண்ணின்றிப் பலர்களும் வசைகள்
[சொல்லத்
தீரமாய் வாழ்வாயென்று செப்பித்தெரு தூள்கள்விட்டாள்.

10. ஓர வஞ்சனைகள் சொல்லி, அதன் காரணமாய் என்னை ஒதுக்கின பாவியே! நீ அடுத்த ஜன்மத்தில் வமிசம் அற்றுப்போவாய். உலகில் வாழ்க்கைத்துணைவியில்லாமல் பலபேர்களும் வசைமொழிகளைக் கூற, கேவலமாய் வாழ்வாய் என்று சொல்லித் தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தாள்.

11. மங்கையின் சாபம்தானும் மருவிற்று பாலனுக்குச்
சங்கையாய்க் காலநாடு சேர்ந்துமே பிரமன்லக்கம்
இங்கிவன் உதித்தானுகும் எய்திடு முன்னூழ்த்தோஷம்
தங்கிடும் துணைபெண்தோஷம் தன்குலக் குற்றமாகும்.

11. இவளுடைய சாபம் இவனைச் சேர்ந்தது. மனதில் சந்தேகத்துடன் காலநாடு சேர்ந்தான். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டி செய்யப்பட்டு இங்கு இவன் உதிக்கலானான். முன்கால வினை இவனை வந்தடைந்தது. மனைவி தோஷம் ஏற்பட்டது. இது குலத்தில் ஏற்பட்ட குற்றமாகும்.

12. அன்னையு மூன்றுமெய்தும் அறைந்தஇக் குணத்தானுக்கு
இன்னவன் உதிப்பானுகும் இவன்குணம் கூறக்கேண்மோ
துன்னுமால் நிறத்தனுகும் சோம்பிடான் காரியத்தில்
பின்னமில் லாததேகி பிறர்குற்றம் புகலானுகும்.

12. அன்னையும் மூன்றுகும். சொன்ன இக்குணங்களையுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். இவனுடைய குணங்களைக் கூறுவோம் கருநிறமுடையவன். காரியத்தில் சோம்பல் என்பதே இடையாது. தேகத்தில் யாதொரு குறைவுமில்லை. பிறருடைய குற்றங் குறைகளை எடுத்துக் கூறமாட்டான்.

13. கல்வியு முடையனுகும் கனத்தவர் நேசம்கொள்வன்
நல்லவன் நல்லவர்க்கு ல்ண்டர்க்கு இண்டனுவன்
சொல்லது தந்திரமாகும் சோம்பிடான் காரியத்தில்
மல்லில்முன் செல்லானுகும் வாக்கது காப்பானுமே.

13. கல்விச்செல்வமுடையவன். கனவான்களுடைய சிநேகத்தைப் பெறுவான். நல்லவர்க்கு நல்லவனுவன். போக்கிரிக்குப் போக்கிரியாயிருப்பான். தந்திரமாகப் பேசுவான். காரியத்தில் சோம்பலாயிருக்கமாட்டான். சண்டைக்கு முன்னல் செல்லமாட்டான். சொன்ன பேச்சைக் காப்பாற்றுவான்.

14. முன்கோப முடையனுதும் உயர்வான குடும்பியாவன்
அன்னையின் வர்க்கம்நாஸ்தி அடைந்தோரை ஆதரிப்பன்
பொன்பணி சேர்ப்பானுகும் புகழது ஏற்பானென்றும்
மன்னர்கள் உறவுகொள்வன் மாநிலம் விருத்திசெய்வன்.

14. முன்கோபமுடையவன். மேலான குடும்பத்தைச் சேர்ந்தவன். தாயின் குடும்பத்தினர் ஒருவரும் இல்லை. அண்டினபேரை ஆதரிப்பான். பொன்பூஷணங்களைச் செய்வான். கீர்த்தியைப் பெறுவான். அரசர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். நிலபலங்களை விருத்தி செய்வான்.

15. வண்டிவா கனமுமுண்டு மரமாட்டும் தொழிலும்செய்வன்
தண்டமிழ் நுணுக்கம்தேர்வன் சான்றோர்க்கு அன்னமீவன்
குண்டைகோ விருத்திஉண்டு குலத்துக்குத் திலகமாகும்
பண்டிபண் டாரம்சேர்ப்பன் பசித்தோர்க்கு அன்னமீவன்.

15. வண்டியும் வாகனமுமுடையவன். மரங்களைச் சேர்க்கும் தொழிலைச் செய்வான். குளிர்ந்த தமிழ் நூல்களின் தத்துவத்தை ஆராய்வான். பெரியோர்களுக்கு அன்னமிடுவான். காளைமாடுகளை விருத்திக்குக் கொண்டு வருவான். குலத்திற்கே திலகம்போல் விளங்குவான். பொக்கிஷங்கள் சேர்ப்பான். பசித்தோர்க்கு அன்னம் அளிப்பான்.

16. தன்துணை முன்பெண்ணொன்று தங்கிடு மாண்பாலவ்வார்
அன்னவர் தீர்க்கமெய்தும் அக்கன்னி சேதிகேளாய்ப்
பன்னியே பேசுவாளாம் பண்போருக் கன்னமீவள்
பொன்பணி அதிகம்சேர்ப்பள் புகன்றோர்க்கு உதவி
[செய்வள்.

16. இவனுக்குத் தமக்கை ஒருத்தி. சகோதரனும் ஒருவன். அவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். தங்கையின் செய்தியைக் கேட்பாயாக. பன்னிப் பன்னிப் பேசுவாள். வேலை செய்வோருக்கு அன்னமீவள். பொன் பூஷணங்களை அதிகம் சேர்ப்பாள். இல்லை என்றோர்க்கு ஒத்தாசை செய்வாள்.

17. பால்பாக்கிய முடையதாகும் பகருமுன் கோபியாவள்
சீலமும் அறத்திலிச்சை செய்நன்றி மறவாளாகும்
நீலிக்கு வரனுமேற்கில் நேர்ந்திடும் தீர்க்கசீவி
சாலவே சுதராண்டிரண்டு சக்தியும் அவ்வார்தீர்க்கம்.

17. பால்பாக்கிய முடையவள். முன்கோப முடையவள் என்று சொல்லுவார்கள். சீலமுள்ளவள். தருமம் செய்ய விரும்புவாள். செய்த நன்றி மறக்கமாட்டாள். இவளுக்குப் புருஷன் வடக்கிலிருந்து வருவான். தீர்க்காயுசுடையவன். பொருத்தமாகவே இரண்டு ஆண் பிள்ளைகளுண்டு. பெண்களும் அவ்வாறாகும்.

18. முன்துணை ஆண்பால்சேதி மொழிகுவோம் தாயேகேளும்
கன்னென மொழியேசொல்வன் கார்நிறம் சமதிரேகம்
தன்மனம் கபடுமில்லான் சமகல்வி பொறுமைசாலி
பின்துணை சொல்தட்டாதான் பேதையர் மோகனுவன்.

18. இவனுடைய தமயனைப்பற்றிய விவரங்கள் கூறுவோம். தாயே! கேட்பாயாக. இனிமையான வார்த்தைகளைப் பேசுவான். கருநிற முள்ளவன். சமமான தேகத்தை யுடையவன். மனதில் கபடமில்லாதவன். சமமான கல்வியை யுடையவன். பொறுமை யுடையவன். தம்பியின் சொல்லைத் தட்டமாட்டான். ஸ்திரீ லோலனுயிருப்பான்.

19. வறுமைகள் அடையானுகும் வருவோரை யாதரிப்பன்
திருமகள் வாசமெய்தும் செயம்செய்வ னெடுத்தவேலை
தரையது சேர்ப்பானுகும் தைரியம் குறைவதாகும்
வரும்கன்னி ஒன்றேயாகும் வடதிசை யென்றேசொல்
[வோம்.

19. தரித்திரம் என்பதே தீர்ப்பாயில்லை. வந்த விருந்தினரை உபசரிப்பான். இவனிடம் லட்சுமீ வாசம் செய்வாள். எடுத்த காரியத்தில் ஜயம் பெறுவான். பூஸ்திதியை விருத்தி செய்வான். தைரியம் அவ்வளவு இல்லை. பெண்டாட்டி ஒருத்திதான். அவளும் வடதிசையிலிருந்து வருவாள் என்று சொல்லுவோம்.

20. சுதர்களும் ஆண்பாலொன்று தோகையும் மூன்றுஎன்றோம்
இதுநான்கும் தீர்க்கமெய்தும் இலகாது மற்றதெல்லாம்
அதிபனும் தீர்க்கசீவி வரைகுறோம் இவன்பின்சேதம்
அதற்குப்பின் கன்னிஒன்று அதுவுமே தீர்க்கமெய்தும்.

20. ஆண் குழந்தை ஒன்று. பெண் குழந்தைகள் மூன்று. இவை நான்கும் தீர்க்கம் என்று சொல்லுவோம். மற்றவர்களெல்லாம் நிற்கார். புருஷனும் தீர்க்க ஜீவியாயிருப்பான். இவனுடைய பின் சகோதரம் சேதம். இதற்குப்பின் கன்னிகை ஒருத்தி. அவளும் தீர்க்கம் எய்துவாள்.

21. மற்றது தீர்க்கமெய்தும் மைந்தன்தன் மணத்தைக்
[கேண்மோ
பத்தொன்ப தாண்டுதன்னில் பாவையும் வடமேல்நேரும்
வித்தகி குணத்தைச்சொல்வேன் விரதங்கள் பூண்பாளாகும்
குத்தமில் லாதாளென்றோம் குணமது நல்லதாகும்.

21. மற்றதும் தீர்க்கம்தான். இவனுடைய கலியாணத்தைக் கேளுங்கள். பத்தொன்பதாவது பிராயத்தில் பெண்டாட்டி வடமேற்கிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுவேன். விரதங்களைப் பூண்பாளாகும். குற்ற மற்றவள். நல்லகுண முடையவள்.

22. அன்னம்போல் சாயலொக்கும் அதிதிகட் கன்னமீவள்
அன்னியர் மதிக்கவாழ்வ ளாளன்தன் மனம்போல்வாழ்வள்
அன்னமும் அன்பாயீவள் அடிசலுக் கினியளாகும்
பின்னமில் லாததேகி பேதைக்கு வயதுதீர்க்கம்.

22. அன்னம்போல் சாயலுடையவள். 'தேஹி' என்போருக்கு அன்னம் கொடுப்பாள். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். புருடனின் குறிப்பறிந்து நடப்பாள். பிரியத்துடன் அன்னம் கொடுப்பாள். சமையலில் கெட்டிக்காரி. தேகத்தில் யாதொரு பின்னமும் இல்லாதவள். இவளுக்கு தீர்க்காயுசுண்டு.

23. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் எழுவர்தோன்றும்
சுத்தமாய் ஆண்பால்ரெண்டு தோகையு மூவராகும்
இத்தகை தீர்க்கமெய்தும் இலகாது மற்றதெல்லாம்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தது தப்பாதம்மா.

23. புத்திரவிருத்தியைப்பற்றிப் பேசுவோம். எழு பேர்கள் பிறப்பார்கள். ஆண் குழந்தைகள் இருவர். பெண்களும் மூன்று பேர்களாவர். இவர்கள்தான் தீர்க்கம். மற்றவர்களெல்லாம் தங்கார். பகவானை யடைந்த பார்வதி தேவியே! சொன்னசொல் தவறுதம்மா.

24. அன்னையும் மாநிறத்தாள் அன்புள மனத்தளாகும்
சொன்னசொல் சுகமேயெய்தும் துணையது காணுளாகும்
முன்னோர்க்கு அன்னமீவள் முதலவன் மனம்போல்
[வாழ்வள்
பின்னமில் லாததேகி பூவையும் யோகசாலி.

24. தாயும் மாநிறமுள்ளவள். அன்புள்ள மனதை யுடையவளாகும். சொன்னசொல் சுகமாக அமையும். சகோதரமே காணுளாகும். பிராமணர்களுக்கு அன்னதானம் செய்வாள். புருஷனே பொல்லாத மனமுடையவன். பின்னமில்லாத தேகமுடையவள். இவளும் நல்ல யோகசாலி.

25. மாதுரு முன்சென்மத்தை வரைகுவோம் தாயேகேளும்
ஓதுரு தலத்திலேதான் உதித்தனள் கங்கைசேயாய்க்
காதலன் மதலையுண்டாய்க் கனத்ததோர் குடும்பியாகி
மேதினில் வாழும்நாளில் விளம்புவோம் ஊழிதானே.

25. மாதாவின் முன் ஜன்மத்தைக் கூறுவோம், தாயே! கேளும். சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற ஒரு தலத்திலே வேளாளர் குலத்தில் உதித்தனள். இவளுக்குக் குழந்தைகள் பிறந்து, பெருத்த குடும்பியாகி, உலகினில் வாழ்ந்து வரும்நாளில், ஒரு பண்டைவினை நேரிட்டது. அதை விவரிப்போம்.

26. இறப்பினில் கூடுகட்டி இருக்கிற பட்சிதன்னைக்
குறிப்பாக அதனைக்கண்டு கூடதைக் கலைத்தாளென்றோம்
மருவிற்று அந்ததோஷம் வரைகுறோம் வேறுஒன்று
வரன்தங்கை [1]மாதுபேரில் வரிவித்தாள் சிலேடை
[வார்த்தை.

26. வீட்டின் சார்ப்பினில் கூடுகட்டி யிருக்கும் பட்சியைக் குறிப்பாகக் கண்டு, அதன் கூட்டத்தைக் கலைத்தாள். அதனால் தோஷம் நேரிட்டது. இதைத் தவிர, வேறொன்று கூறுவோம். நாத்தனாரிடம் (புருஷனுடைய தங்கைபேரில்) பல அர்த்தங்கள் பெறும்படியான வீண் (அல்லாத) வார்த்தைகளை வரிவித்தாள் (உண்டு பண்ணினாள்).

27. கன்னிகை வருத்தமுற்றுக் கழறுவாள் சாபம்தானும்
பின்வரும் சென்மந்தன்னில் பிறந்தஇல் நாஸ்தியாயும்
தன்துணை காணுதாயும் தந்தையும் வேறேநாடு
அன்னையும் வேறுமாகி அலைகுவாள் என்றுசொல்லி,

27. அக்கன்னிகை வருத்தமடைந்து சாபம் கொடுக்கலானாள். இனி வரும் ஜன்மங்களில் பிறந்த இல்லம் நாசமடைந்து அடியோடு தொலையும். சகோதரனும் இல்லாதவளாய், தந்தை தாய் விரோதமாகி, அனாதையாய் அலைகுவாய் என்று சபித்து,

28. தெருத்தூள்கள் தூற்றிச்சென்றாள் சேர்ந்தது அந்த
[தோஷம்
அரிவைக்கு அச்சென்மத்தில் அணுகிற்று வாயுரோகம்
மரலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டு
உரைந்தனள் இக்குலத்தில் உதித்தஇல் பாழதாகும்.

28. தெருவிலிருக்கும் மண்ணைவாரி இறைத்துச் சென்றாள். அந்த தோஷமும் இவளைச் சார்ந்தது. இவளுக்கு அந்த ஜன்மத்தில் வாயுரோகம் ஏற்பட்டது. பிறகு மரணமடைந்தாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் உதித்தாள். பிறந்த வீடு பாழடைந்தது.

29. தனியளாய் வாழ்வாளாகும் சாற்றுவோம் இவள்பின்
[சென்மம்
இனிமையாய்க் காளாத்திதன்னில் எய்துவாள்
[சைவசேயாய்த்
தனமுள முப்பதாண்டில் காலன்தன் பதிக்குச்செல்வள்
வினையிலாத் தவங்கள்செய்யும் வித்தகி கேட்டிடாயே.

---

1. நாத்தி (நாத்தனார்)

29. தன்னந்தனியாய் வாழ்வாளாகும். இவளுடைய அடுத்த ஜன்மத்தை விவரிப்போம். இனிமையாகத் திருக்காளத்தியில் சைவக் குழந்தையாய் அவதரித்தாள். தனமுள்ள முப்பதாவது பிராயத்தில் காலன்தன் பதிக்குச் செல்வாள். பவவினைகளைப் போக்கும் தயாபரியே! கேட்பாயாக.

30. இருபது ஒன்பதாண்டில் இவன்தந்தை கெண்டமெய்தும்
வரும்சென்மம் தில்லைதன்னில் மறைகுலம் உதிப்பானாகும்
திருமகன் இச்சென்மத்தில் செட்டுகள் செய்வதாலும்
பொருளது இச்சையாலும் பொய்யுடன் வாழ்வதாலே,

30. ஜாதகனுடைய இருபத்தொன்பதாவது வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அடுத்த ஜன்மத்தில் சிதம்பரத்தில்; பிராமண குலத்தில் உதிப்பானாகும். அவன் இந்த ஜன்மத்தில் வியாபாரம் செய்வதனாலும் பணத்தாசையுடனும் பொய்யுடனும் வாழ்ந்து வந்ததனாலும்,

31. எப்படி உதிப்பான்சொல்வாய் இயம்புவோம் தாயேகேளும்
அப்பணி சடையோன்பத்தி அம்பிகை ஆலயத்தில்
எப்போதும் தீபம்வைத்து மிடரென்றோர்க் குதவி [செய்தும்
தப்பித மனமில்லாமல் தரணியில் வாழ்வதாலும்,

31. எப்படி உதிப்பான்? சொல்லுங்கள். சொல்லுகிறோம், தாயே! கேளுங்கள். கங்கைவார்சடையானை பரமசிவன்மேல் பக்திகொண்டு அம்பிகையின் கோவிலில் எப்பொழுதும் தீபம்வைத்து, சிரமப்பட்டோருக்கு உதவிசெய்தும், மனதில் யாதொரு தப்பெண்ணமு மில்லாமல் பூமியில் வாழ்வதனாலும்,

32. சொல்லதைக் காத்ததாலும் செனிப்பனும் பிரம்மசேயாய்
வல்லபன் பூர்வம்சொல்வேன் மதுரைமா நகரிலேதான்
அல்லலாய் வடுகர்வர்க்கம் அணுகியே பெருமைஉண்டாய்த்
தல்லிபோல் சிலரைக்காத்தும் தன்மனை மதலையுண்டாய்,

32. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதனாலும், பிராமணக் குழந்தையாய் ஜனிப்பானும். அவனுடைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். மதுரைமாநகரிலே சிரமமான தெலுங்கர் குடும்பத்தில் பிறந்து, பெருமை பெற்று, தாயைப்போல் சிலரைக் காப்பாற்றியதனால் பெண்டாட்டி பிள்ளை யுண்டாகி,

33. முன்வினை இல்லாதாகி மேவினன் காலனூடு
பொன்னவன் வரியப்பட்டுப் பிறப்பனு மிக்குலத்தில்
இன்னவன் யோகச்சேதி இயம்புவோம் தாயேகேளும்
அன்னியர் மதிக்கவாழ்வன் அவனியில் சல்லியம்காணான்.

33. பண்டைப் பாபங்களில்லாமல் எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தான். இவனுடைய யோகச் செய்திகளைக் கூறுவோம். தாயே! கேளும். பிறர் தன்னை மதிக்க வாழ்வான். உலகினில் கடன் வாங்கமாட்டான்.

34. இருநான்கு ஆண்டுமேலாய் எய்திடும் நிதிநிட்சேபம்
பொருளது பெருக்கமாகும் புதிதானஇல்லம் செய்வன்
தரையது விசேஷம்சேர்ப்பன் சகலருக் குதவிசெய்வன்
நெறிகாப்பன் கடவுள்பக்தி நிமலியே கேட்டிடாயே.

34. எட்டு வயதிற்குமேல் சொத்து விருத்தியாகும். பொருள் அதிகமாகும். புதிதான வீடு கட்டுவான். பூஸ்திதியை விசேஷமாய்ச் சேர்ப்பான். சகலருக்கும் உதவி செய்வான். தருமநெறி தவறான். கடவுளிடம் பக்தி பூண்டவன். பார்வதியே! கேட்பாயாக.

35. அறுபது ஆறுஆண்டில் ஆடிமா தத்திலேதான்
திருமகன் உடலமேகும் செயமுனி தடுத்துச்சொல்வார்
அறுஆண்டில் சிலதுகெண்டம் அணுகிடும் பாலனுக்கு
வரும்கேது தசையேயாகும் விலகிடில் தீர்க்கசீவி.

35. அறுபத்தாறாவது பிராயத்தில், ஆடி மாசத்தில், இவன் பகவானுடைய பாதத்திற்குச் செல்வான். இதனை ஜயமுனி தடுத்துச் சொல்லுவார். ஆறு வயதில், சில கண்டம் அணுகிடும் அவனுக்கு வரும் கேதுதசையாகும். அந்த கண்டம் தப்பினால் இவனுக்குத் தீர்க்காயுசு.

36. பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனும் சைவசேயாய்
மன்னனால் உய்வானாகும் வரைந்தது தப்பாதாகும்
தந்தையின் அன்னைக்கேதான் சாற்றுவோ [மொன்பதாண்டுள்
சொன்னனே கெண்டமென்றோம் துறவியே கேட்டிடாயே.

36. அடுத்த ஜன்மம் காஞ்சிபுரத்தில் சைவக்குழந்தையாய்ப் பிறப்பான். அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவான். சொன்னது தப்பாதாகும். தகப்பனாரின் தாய்க்கு இவனுடைய ஒன்பதாமாண்டில் கண்டம் ஏற்படும். முனிவரே! கேளுங்கள்.

37. செனித்திடும் காலம்தன்னில் செம்பாம்பு திசையிருப்புக்
குனித்திடு ஆண்டுஆறும் கூறுவோம் திங்களைந்தும்
வினைவரும் சாதகர்க்கு மேதினி(யி)ல் சல்லியமுண்டு
பிணையாகும் காளிதானும் பின்துணை சேதமெய்தும்.

37. இவனுடைய ஜனனகாலத்தில் கேதுதசை இருப்பு வருஷம் ஆறு, மாதம் ஐந்து. ஜாதகனுக்குப் பாபகர்மாக்களால் வினைக்கட்டுகள் ஏற்படும். உலகினில் கடன் உண்டு. பெண்டாட்டியும் விரோதமாவள். பின் சகோதரம் சேதமடையும்.

38. மனமது சஞ்சலங்கள் வரவுக்குச் செலவநேகம்
சினமில பூமிசேரல் தேவதா தொண்டுபூணல்
கனமுளோர் நேசம்பின்பு கலந்திடும் விரோதமென்றோம்
அனையவே தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

38. மனதில் சஞ்சலங்கள் ஏற்படும். வரவிற்குமேல் செலவு அதிகம். பூஸ்திதி சேரும். தேவதைகளுக்குத் தொண்டுசெய்தலும், பெரிய மதிப் புள்ளவர்களின் சிநேகமும், பிறகு சிறிது விரோதமும் ஏற்படும் என்போம். எக்காலமும் சிவனைக்குறித்துத் தவஞ்செய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

ஜாதகம் 41

1. [1]கலைசாடி கேதுமேரு கனகனும் சீயமாகப்
புலவனும் பானுநந்தி பூமகன் மேடமாகச்
சலக்கோளு காரிராகு சபைமகள் [2]தன்னில்மேவத்
தலமது மேடதாகச் சாற்றுவீர் பலனைத்தானே.

1. சந்திரன் கும்பத்திலும், கேது தனுசிலும், குரு சிம்மத்திலும், புதனும் சூரியனும் ரிஷபத்திலும், செவ்வாய் மேடத்திலும், சுக்கிரன் இராகு சனி இவர்கள் சேர்ந்து மிதுனத்திலும் தங்க, இப்படிப்பட்ட கிரக நிலைகள் கொண்ட மேஷலக்கின ஜாதகத்தை யுடையோனுக்குப் பலன்களைச் சொல்லுங்கள்.

	லக்கினம் செவ்வாய்	புதன் சூரியன்	ராகு சனி சுக்கிரன்
சந்திரன்	இராசி		
	சக்கரம்		குரு
கேது			

2. சுந்தரி கேட்கும்போது செயமுனி புகலுகின்றார்
இந்தசே யாண்சென்மம் இல்லமும் கீழ்மேல்வீதி
தென்வாசல் கணேசன்மேற்கில் சிரமேற்றோன் காளி
[உத்திரம்
முந்துமால் வடமேலாகும் முக்கண்ணன் உத்திரமாமே.

2. இவ்விதம் பார்வதி கேட்கும்போது ஜயமுனி கூறலுற்றார். இவன் ஆண் ஜன்மம். இவன் வீடு கிழக்கு மேற்கு வீதி. தெற்குப் பார்த்த வாசல். மேற்கே பிள்ளையார் கோவில். வடக்கே காளி கோவில். விஷ்ணு கோவில் வடமேற்கிலுள்ளது. மூன்று கண்களையுடைய சிவன் கோவில் வடக்கிலுள்ளது.

---

1. சந்திரன்
2. மிதுனத்தில்

3. இத்தகை பாடிசூழ்ந்த இலகிய சிற்றூர்தன்னில்
வித்தகன் அந்தரம்சென்மம் விளங்குவான் வைசியசேயாய்ப்
பெத்ததாய் தந்தையோகம் பேதையர் புத்திரயோகம்
வித்தகன் முன்பின்சென்மம் விளம்புவோ மின்னூல்
[தன்னில்.

3. இத்தகைய மாடியினால் சூழப்பட்ட சிறிய கிராமத்தில் ஜாதகன் வைசியக் குழந்தையாய் விளங்குவான். இவனுடைய தாய் தந்தையர் யோகமும், பெண்டாட்டி பிள்ளைகள் யோகமும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மமும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய் எடுத்துரைப்போம்.

4. தந்தையின் துணைவர்தன்னைச் சாற்றுவோ மாண்பா
[லொன்று
வந்திடும் கன்னிரெண்டு வரைந்தனம் வேருண்செல்வன்
அந்தவன் இருநிறத்தான் அவன்கணக் கினிலேயூகி
கந்தன்மேல் பக்திபூண்பன் கபடில்லான் கல்விமானும்.

4. தந்தையின் உடன்பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரிகள் இருவர். வேறு ஆண் செல்வனும் உண்டு என்று சொல்லலாம். அவன் பொது நிறமுள்ளவன். கணக்குப் பார்ப்பதில் மிக்க கெட்டிக்காரன். சுப்பிரமணிய சுவாமிமேல் பக்தி பூண்டவன். கபடமில்லாதவன். படித்தவன்.

5. வரும்சேதி சொல்வானாகும் மனைவியால் அவமானத்தன்
உரைந்திடும் பாரிரெண்டு ஓடிடான் இல்லம்விட்டுத்
தரையது அந்தம்கொஞ்சம் சேர்ப்பனும் சமனென்று
உரைக்கிறோம் தீர்க்கமாக உயர்விலாச் செட்டுச்செய்வான்.

5. நாளை வரும் செய்திகளை ஜோஸ்யம் பார்த்துச் சொல்லுவான். மனைவியினால் அவமான மடைவான். பெண்டாட்டி இரண்டு ஏற்படும். ஆனால் வீட்டைவிட்டு ஓடிவிட மாட்டான். கடைசி காலத்தில் சிறிது பூமி யுடையோன். பிள்ளை ஒருவனுண்டு. அது தீர்க்கம். மேன்மையில்லாத வியாபாரம் செய்வான்.

6. பின்பாகம் விபரமாகப் பேசுவோம் அவன்தன்சேதி
தன்தந்தை சேதிசொல்வேன் தானிரு நிறத்தனாகும்
வந்தஇல் தன்னைவிட்டு மருவுவான் அருகில்தென்பால்
சந்ததம் செட்டுச்செய்வன் தரணியும் சேர்ப்பானாகும்.

6. அவனுடைய செய்தி விவரங்களைப் பின்பாகத்தில் விவரமாய்ப் பேசுவோம். அவனுடைய தந்தையின் செய்திகளைச் சொல்லுவோம். பொது நிறமுள்ளவன். பிறந்த வீட்டை விட்டுத் தென்பக்கம் செல்லுவான். எப்போதும் வியாபாரம் செய்வான். பூமியையும் சேர்ப்பானாகும்.

7. பலசகா யங்களுண்டு பணிந்தோரை ஆதரிப்பன்
தலமது புதிதாய்ச்செய்வன் தன்துணை தன்னால்நிந்தை
குலவிடும் வறுமைகாணான் குறிப்பினில் சீலமுண்டு
விலைமாதர் மோகம்கொள்ளான் விருந்தினர் பிரியம்
[கொள்வன்.

7. இவனுக்குப் பலவிதமான சகாயங்களுண்டு. அண்டினவரை ஆதரிப்பான். புதிய வீடு கட்டுவான். சகோதரனால் அவதூறு ஏற்படும். தரித்திரத்தை அனுபவிக்க மாட்டான். காரியங்களில் சீல முடையவன். தேவடியாள்களின் பேரில் மோகம் கொள்ள மாட்டான். விருந்தினர்கள் இவனைப் பிரியமாக மதிப்பார்கள்.

8. உண்டியும் லகுவாயுண்பன் உள்மனம் கபடுகொஞ்சம்
கண்டித முரையானாகும் கணக்கினில் அதிகயூகி
பண்டுநாள் பூமிகாண்பான் பிதுர்ஊரில் வாழானாகும்
[1]முண்டக ரேகையுண்டு முனியுண்டு மொழியும்தந்திரம்.

8. அருமையான போஜனத்தைப் புசிப்பான். மனதில் கொஞ்சம் கபட முடையவன். கண்டிப்பான பேச்சுக்களைப் பேசமாட்டான். கணக்கு விஷயத்தில் மிக்க மதியூகி. பண்டைய காலத்து நிலத்தை யடைவான். பிதாவின் ஊரில் வாழ்வானவன். தாமரை ரேகையை யுடையவன். கோப முள்ளவன். தந்திரமாகப் பேசுவான்.

9. சொன்னஇக் குணத்தானுக்குச் சுந்தரன் உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் யானையின் நிறத்
[தானாமே
தன்னுடல் மெலிவுநீட்சி சாந்தவான் கல்விமானாம்
பன்னியே பேசவல்லான் பஞ்சைகட் கன்னமீவன்.

9. இவ்விதம் விவரிக்கப்பட்ட இக்குணவானுக்கு நம் ஜாதகன் பிள்ளை யாய்ப் பிறப்பான். அவனுடைய குணங்களை எடுத்துக் கூறுவோம். கருநிற முடையவன். மெல்லிய உடம்புடையவன். உயரமானவனாயிருப்பான். சாந்த முடையவன். கல்விமானாம். பன்னிப் பன்னி பேசுவான். ஏழைகளுக்கு அன்னதானம் செய்வான்.

10. ஈகையும் கொஞ்சமுண்டு இன்பச்சொல் அடக்கவானாம்
நாகரி கங்களுள்ளான் நயப்புடன் வணிபம்செய்வன்
ஆகமம் அறியானாகும் அல்பமாம் கல்விமானாம்
போகபாக் கியங்கள்பின்னால் பெறுவனா மென்று
[சொல்வோம்.

---

1. தாமரை

10. தருமமும் கொஞ்சமுண்டு. இன்பமாய்ப் பேசுவான். அடக்க முடையவன். நாகரிக முடையவன். சாமர்த்தியமாய் வியாபாரம் செய்வான். ஆகமசாஸ்திரம் தெரிந்தவன். சிறிது கல்விச் செல்வ முடையவன். பிற்காலத்தில் போக பாக்கியங்களை யுடையவன் என்று சொல்லுவோம்.

11. தந்தையால் சுகமும்காணுன் தாய்துணை[1] தன்பாலுய்வன்
தந்தையின் ஆஸ்திதன்னைத் தானவன் விருத்திசெய்வன்
தந்தையி னில்லம்வாழ்வன் சதுஷ்பாதம் விருத்தி
[யில்லான்
தந்திமால் முருகன்பத்தி தானவன் கொள்வானென்றோம்.

11. தந்தையினுல் சுகமுடையவனல்லன். தாய் மாமனிடம் போய் வசிப்பான். பிதிரார்ச்சித சொத்தை அவன் விருத்தி செய்வான். தகப்பனுடைய வீட்டில் வசிப்பவன். பசுக் கூட்டங்களை விருத்தி செய்ய மாட்டான். பிள்ளையார் முருகக்கடவுள் இவர்களிடம் பக்தி கொள்ளுவானென்றோம்.

12. ஆதியில் ஒருவர்பாலில் அடைந்துமே சீவிப்பானும்
நீதிமான் பொய்கள்சொல்லான் நேர்ந்திடும் பித்தசூடு
காதியாம்[2] பின்னுலேற்பன் கனத்தசெட் டுகளும்செய்வன்
சூதுகள் சிலர்க்குச்செய்வன் தொல்புவி வறுமைகாணுன்.

12. ஆதியில் ஒருவரிடம் தஞ்சம் புகுந்து ஜீவனம் செய்து வருவான். நல்ல நீதிகளை அறிந்தவன். பொய் சொல்ல மாட்டான். பித்த சூட்டினுல் அவஸ்தைப் படுவான். பிற்காலத்தில் அதற்கு மருந்து சாப்பிடுவான், பலமான வியாபாரங்களையும் செய்வான். சிலருக்குச் சூதுகள் செய்வான். பரந்த உலகினில் தரித்திரத்தை அனுபவிக்க மாட்டான்.

13. இன்னவன் கரத்திலேதான் இலகிடும் விஷ்ணுரேகை
பொன்கடன் கொள்ளானுகும் பொருந்தாது துணைவர்
[முன்னுல்
கன்னிகை பின்னுலொன்று கழறுவோம் தீர்க்கமாக
அன்னவள் குணத்தைச்சொல்வேன் அரிமனை ஒப்பதாகும்.

13. இவனுடைய கையில் விஷ்ணு சக்கர ரேகை விளங்கிடும். பொன்னைக் கடனுகக் கொள்ள மாட்டான். ஆதியில் இவனுக்குச் சகோதரமில்லை. பிற்காலத்தில் தங்கை ஒருத்தி ஏற்படுவாள். அவள் தீர்க்கமென்று சொல்லுவோம். அவளுடைய குணங்களைச் சொல்லுவோம். லட்சுமியை ஒப்பாள்.

---

1. மாமன்
2. மருந்து

14. நன்னடை மிருதுவார்த்தை நல்கிடும் நாபிசூடு
தன்வரன் தென்பால்நேரும் தரணியில் வறுமைகாணுள்
அன்னியர் மதிக்கஉய்வள் அல்பரை உறவுகொள்ளாள்
பின்னமில் லாததேகி பலஹீன முடையாளாமே.

14. நல்ல நடத்தையை யுடையவள். மிருதுவான வார்த்தைகளைப் பேசுவாள். நாபியில் மூலச்சூடுடையவள் அவளுக்குக் தெற்கு திக்கிலிருந்து புருஷன் ஏற்படுவான். பூமியில் தரித்திரத்தை அனுபவிக்க மாட்டாள். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். அல்பமான குணத்தை யுடையவர்களை நேசம் கொள்ளமாட்டாள். பின்னமில்லாத சரீரத்தை யுடைவள். பலஹீன முடையவளாகும்.

15. சுதர்களு மறுவர்தோன்றும் சோர்வுறும் ஒன்றுஎன்றேம்
சதமுடன் ஆண்பால்மூன்று தையலர் இருவராமே
இதுஐந்தும் தீர்க்கமென்றேம் இவளுக்கு வயதுதீர்க்கம்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

15. இவளுக்கு ஆறு குழந்தைகள் பிறக்கும். ஒன்று மரித்துப்போம். ஆண் குழந்தைகள் மூன்றும், பெண்கள் இருவரும் தீர்க்கமாய் வாழ்வார்கள். இவளுக்கும் தீர்க்காயுசுதான். அதிதிகளை ஆதரிக்கும் அம்பிகையாளே! கேட்பாயாக.

16. முன்துணை தோஷமென்றேம் மொழிகுவீர் அந்தசங்கை
மந்தனும் புகருமூன்றில் மருவின பலத்தினுலே
தன்துணை முன்னுல்தோஷம் சாற்றினேம் பாலருக்கு
அன்னையே யாங்கள்சொல்லு மருள்மொழி குன்று [தென்றேம்.

16. முன்னுல் பிறந்த சகோதரம் தோஷமடையுமென்று சொன்னேம். அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யுங்கள் இலக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் சனியும் சுக்கிரனும் சேர்ந்து நிற்கும் பலத்தினுலே தன்னுடைய தமயனுக்குத் தோஷம் ஏற்படும். அதே காரணம்தான் குழந்தைகளுடைய பாலாரிஷ்டத்திற்கும். தாயே! நாங்கள் சொல்லும் அருள் வாக்குக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாது.

17. இருபது ஒன்றுஆண்டில் இவனுக்குப் பாரிவாய்க்கும்
வரும்கன்னி தென்பால்நேரும் வரைகுறே மவள் [குணத்தைப்
பெருமையாய்க் குணத்தாளாகும் பிறர்குற்றம் புகலாளாகும்
திருமகள் ஒப்பதாகும் சிவந்தமை யூகைசாலி.

17. இருபத்தொன்றும் வயதில் நம் ஜாதகனுக்குப் பெண்டாட்டி வாய்ப்பாள். அவள் தெற்குத் திக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களை எடுத்துக் கூறுவோம். பெருமையான குணத்தை யுடையவள். பிறரைப் பற்றிய தோஷங்களை எடுத்துக் கூறமாட்டாள். இலட்சுமீ தேவியைப் போன்ற தோற்றமுடையவள். சிவந்த நிறமுடையவள். நல்ல மதியூகி.

18. அடிசிலுக் கினியளாகும் யாவர்க்கும் நல்லோளாவள்
நடைநன்மை யோகசாலி நாயகன் மனதுக்கேத்தோள்
விடஉரைப் பகராளாகும் விரதங்கள் பூண்பாளாகும்
தடபுடல் செய்கையுண்டு சங்கையா மனத்தளாமே.

18. சமையல் செய்வதில் கெட்டிக்காரி. யாவர்க்கும் நல்லவளாவள். நல்ல நடத்தை யுள்ளவள். யோகசாலி (அதிர்ஷ்ட முடையவள்). புருஷனுடைய மனதிற் குகந்தவள். கொடிய வார்த்தைகளைப் பேசமாட்டாள். விரதங்களை அனுஷ்டிப்பாள். தடபுடலாகக் காரியங்களைச் செய்வாள். சஞ்சல புத்தி யுடையவள்.

19. கன்னிக்கு வயதுதீர்க்கம் கழறுவோம் புத்திரபாகம்
மன்மதன் போலேஆண்பால் மருவிடு மிரெண்டேயாக
[1]அனலம்போல் பெண்பால்மூன்று அறைந்தனன் [தீர்க்கமாகப்
பின்னமா மூன்றுஎன்றேும் பேதையே கேட்டிடாயே.

19. இவளுக்குத் தீர்க்காயுசுண்டு. புத்திர பாவத்தை எடுத்துரைப்போம். மன்மதனைப்போல இரண்டு ஆண் குழந்தைகள் உண்டு. தீச்சுடர் போன்ற மூன்று பெண் குழந்தைகளுமுண்டு. இவர்கள் தீர்க்கம். மூன்று சிசுக்கள் பின்னத்தை யடையும். பார்வதியே! கேட்பாயாக.

20. சாதகன் பூர்வம்தன்னைச் சாற்றுவோம் இனிமேலாக
ஓதுறு தலத்திலேதான் உதித்தனன் செங்குந்தனுக்
காதலி மதலைஉண்டாய்க் காவலன் வாழும்நாளில்
மேதினில் வந்தவூழை விளம்புவோம் தாயேகேளும்.

20. இனி ஜாதகனுடைய பூர்வோத்தரங்களை எடுத்துரைப்போம். ஓதரு (மேன்மையான) ஸ்தலத்தினில் செங்குந்த மரபினில் உதித்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, வாழ்ந்து வரும் காலத்தில், உலகினில் வந்த ஊழ்வினையை எடுத்துக் கூறுவோம். தாயே! கேளும்.

---

1. தீச்சுடர்

21. அன்னிய மாதுக்கேதான் அரும்பொருள் தாரேனென்று
மன்மதன் ஊடல்பூண்டு மருமமாய் வந்தானென்றோம்
கன்னிகை மனதுவெட்கிக் கழறுவாள் சாபம்தானும்
பின்வரும் சென்மம்தன்னில் பிதுர்சுகம் காணாதாகி,

21. அன்னிய ஸ்திரீ ஒருத்திக்கு அதிகப் பணம் காசு தருவதாகச் சொல்லி காம வேதனையினால் ஊடல் செய்து, இரகசியமாயிருந்து வந்தான். கன்னிகையும் மனம் வெட்கி, துக்கித்து, சாபம் அளிக்கலானாள். இனிவரும் சென்மங்களில் பிதாவினால் ஏற்படக் கூடிய சுகங்களும் இல்லாமல்,

22. அண்ணன்தம் பிகளுமின்றி ஆதியில் குடும்பலைச்சல்
குண்ணிய மனத்தனாகிக் குலமதில் குற்றமாயும்
இன்னமும் பலவார்சொன்னாள் எய்திற்று அந்ததோஷம்
திண்ணமாய் அந்தியத்தில் சலமூல வியாதியாலே,

22. அண்ணன் தம்பிகளும் இல்லாமல், ஆதியில் குடும்ப சம்பந்தமான அலைச்சல் திரிச்சலால் மனம் குன்றிப்போய், குடும்பத்தில் குற்ற மடைந்து கஷ்டமடைவாய் என்றும், இதைப்போல் இன்னமும் பலவிதமான கெடுதல் களையும் சொன்னாள். அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது. நிச்சயமாய் அந்திய காலத்தில் மூல உபத்திரவம் ஏற்பட்டு,

23. மரலியின் பதிக்குப்புக்கி மால்மகன் வரியப்பட்டுக்
குலவுவான் செக்கான்வமிசம் கோதையின் சாபம்போலே
நல்கிடும் பாலனுக்கு நவிலுவோம் இவனின்யோகம்
பலவித செட்டுச்செய்வன் பாருகள் விருத்திசெய்வன்.

23. எமலோகம் சென்று, பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப் பட்டு, செக்கான் குடும்பத்தில் பிறப்பான். அம்மாதின் சாபத்திற்கேற்ப இவனுக்குண்டான யோகபாவத்தைக் கூறுவோம். பலவிதமான வியா பாரங்கள் செய்வன். பூஸ்திதியை விருத்தி செய்வான்.

24. சல்லிய முன்னுலுள்ளான் தந்தையால் நேருமென்றோம்
நல்காது இவனின்காலம் நற்பொருள் தானியம்சேர்ப்பன்
அல்லல்கள் அடையானாகும் அவன்பாரி வந்தபின்பு
எல்லையில் புகழுமேற்பன் யாரையும் வசியம்கொள்வன்.

24. ஆரம்பத்தில் கடன்படுவான். இது தந்தையின் காரணமாக நேரிடும் என்றோம். இவன் காலத்தில் கடன் ஏற்படாது. நல்ல பொருள்கள் தானியங்கள் இவைகளைச் சேர்ப்பன். துன்பங்கள் இவனைச் சேரமாட்டா. பெண்டாட்டி வந்த பின்பு எங்கு பார்க்கினும் புகழ் பெறுவான். எவரையும் தன்வசப்படுத்துவான்.

25. பந்துவை ஆதரிப்பன் பால்பாக்கிய னுடையனுகும்
வந்தவர்க் கன்னமீவன் மாற்றலர் வசியம்கொள்வன்
முந்தின தலங்கள்செல்வன் உயர்வான குடும்பமேற்பன்
எந்ததோர் பலத்தினுலே இவனுக்கு யோகம்சொன்னீர்.

25. சொந்தக்காரர்களை ஆதரிப்பான். பால் பாக்கியங்களை யுடையவன். விருந்தினருக்கு அன்னபானுதிகள் கொடுத்து உபசரிப்பான். எதிரிகளை வசப்படுத்துவான். க்ஷேத்திராடனம் செய்வன். மேலான குடும்பத்தைப் வகிப்பான். எந்தக் கிரகத்தின் பலத்தைக் கொண்டு இவனுடைய யோகபாவங்களைக் கூறினீர்? என்று வினவ,

26. பொன்னவன் அஞ்சில்தங்கப் பூமகன் ஆட்சியாகச்
சந்திரன் லாபம்நிற்கச் சாமனும் இரெண்டிலேற
முந்தும்கே தாரயோகம் முசலயோகம் கேசரியோகம்
மன்னிய மூன்றுயோகம் வரைந்தனம் என்றுசொல்வோம்.

26. குரு ஐந்தாமிடத்தில் தங்குவதாலும், செவ்வாய் மேஷத்தில் தன் வீட்டில் ஆட்சி பெற்றிருப்பதாலும், சந்திரனும் லாபஸ்தானத்தில் நிற்பதாலும், சூரியன் குடும்ப ஸ்தானத்திலிருப்பதாலும், இவனுக்கு ஏற்படும் யோகங்கள் முறையே, கேதாரயோகம், முசலயோகம், கேசரியோகம் என்ற மூன்றும் பொருந்தும் என்று கூறுவோம்.

(கேசரியோகம்=உதயத்திற்கு நாலில் ஏழில் சந்திரன் நிற்பது, வியாழனும் சந்திரனும் கூடி நிற்பது.

கேதாரயோகம்=ஏழு கிரகங்கள் இடையீடின்றி நான்கு ராசிகளில் நிற்க, வரும் யோகம்.

முசலி=சந்திரன். இங்கே குருவுடன் கேந்திர பார்வையிலிருப்பதனுல் முசலயோகம்.)

27. அன்னையும் இருநிறத்தாள் அன்புள மனத்தளாகும்
தன்னுடல் வாயுவுண்டு சந்தேக மனத்தளாகும்
அன்னியர் குற்றம்சொல்லாள் அதிகவார்த் தைகளுமில்லாள்
முன்கோப முடையாளாகும் மேவிடும் சல்பவாயு.

27. இவன் தாய் பொது நிற முடையவள். அன்பு கொண்ட மனதை யுடையவள். வாயு உபத்திரவம் உள்ளவள். சந்தேக புத்தியை யுடையவள். பிறர்மேல் குற்றம் கூறமாட்டாள். அனுவசியமாய்ப் பேச மாட்டாள். முன்கோப முடையவள். சொல்ப வாயு உபத்திரவம் மேவிடும்.

28. தன் துணை தசமேயாகும் தங்காது சிலதுதானும்
கன்னிமார் மூவராகும் காளையு மொன்றேயாகும்
தென்திசை இல்லமாகும் செப்புவோம் ஆண்பால்சேதி
தன்நகர் விட்டுஉத்திரம் சார்வனும் இவள்தன்பக்கல்.

28. கூடப் பிறந்தவர்கள் பத்துப் பேர்கள். மூன்று தங்கைகள். சகோதரன் ஒருவனே யாவன். தெற்குப் பார்த்த வீடு. சகோதரனின் செய்திகளைக் கூறுவோம். தன் ஊரை விட்டு இவளுக்குப் பக்கத்திலுள்ள வடக்குப் பாகத்திலுள்ள ஊருக்குப் போய்ச் சேருவான்.

29. அன்னியர் உதவியாலே அவன்பல செட்டுச்செய்வன்
தன்சொலும் அடக்கமுண்டு சான்றோர்போல் வார்த்தை
[யுண்டு
பின்னமில் லாததேகி பொய்யது வழுத்தாநெஞ்சம்
பொன்பொருள் சேர்ப்பானாகும் பூமியில் நல்லோனவன்.

29. பிறருடைய ஒத்தாசையினால் அவன் பல வியாபாரங்களைச் செய்வான். அடக்க ஒடுக்கமாய்ப் பேசுவான். புத்திசாலிகளைப்போல் பேசுவான். தேகத்தில் பின்ன மில்லாதவன். மனதினாலும் பொய்மை கூற நினைக்க மாட்டான். பொன்னும் பொருளும் அதிகமாய்ச் சேர்ப்பான். உலகினில் நல்லவன் என்று பெயர் பெறுவான்.

30. பாரியும் ஒன்றேயாகும் பாலர்கள் விருத்திசேதம்
கூறுவோம் முனியின்சாபம் குழவிகள் சேதமெய்தும்
தீரமாய்க் கருமசாந்தி செய்திடும்விருத்தி தீர்க்கம்
மாரன்தன் உதவியாலே மைந்தனும் உய்வானாகும்.

30. பெண்டாட்டியும் ஒருத்திதான். புத்திர பாக்கியத்தில் சேதம் ஏற்படும். முனியின் சாபத்தினாலே குழந்தைகள் சேதமடையும். தைரியமாய்க் கரும சாந்திகள் செய்தால், புத்திர விருத்தி ஏற்படும். இது தீர்க்கம். இவனுடைய ஒத்தாசையினாலே (சிவனுடைய கிருபையினால்) புத்திரனும் ஜீவிப்பானாகும்.

31. சிலதுநாள் வெளியூர்தன்னில் சீவித்துத் தன்னூர்சேர்வன்
பலவித செட்டுஓங்கும் பகருவோம் பின்பால்சேதி
தலைவியின் பூர்வம்சொல்வேன் சடலமா நதியின்பக்கல்
குலவினள் வன்னியசேயாய்க் கோதையே கேட்டிடாயே.

31. சிலநாள் வெளியூர் சென்று ஜீவித்துத் தன்னூர் சேர்வான். பலவித வியாபாரங்கள் விருத்தியாகும். மற்ற விவரங்களைப் பின்பால் சொல்லுவோம். பெண்டாட்டியின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம்.

சடலமாநதி என்ற நதியின் பக்கத்தில் உள்ள சிற்றூரில் வன்னியர் குலத்தில் உதித்தாள். பார்வதியே! கேட்பாயாக.

32. மாரனும் மதலையுண்டாய் வாழ்நாளில் வினையைக் [கேண்மோ
காரிழை கணவனோடு கனத்திரு விழாக்குச்சென்று
ஆறுமா முகனைப்போற்றி அணுகினள் கடைவீதிக்கு
நாரியும் சிகப்புமஞ்சள் நாயகி வாங்கிக்கொண்டு,

32. புருஷன் ஏற்பட்டுப் புத்திரனும் உண்டாகி வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பாயாக. இவள் தன் புருஷனுடன் பெரிய திருவிழாவிற்குச் சென்று, முருகக்கடவுளைப் போற்ற, கடை வீதிக்குச் சென்றாள். அங்கே அவள் மஞ்சள் குங்குமம் வாங்கிக் கொண்டு,

33. தனமது ஈயாதாகிச் சர்வமான் போலேசென்றாள்
வணிகனும் பின்பால்பார்த்து மாதுவைக் காணாதாகி
வினைமன மாகச்சொல்வான் மஞ்சள்கள் ஆகாமுன்னம்
அவள்வரன் உடனேமாள்வ னணுகும்பின் சென்மந் [தன்னில்,

33. அதற்குண்டான காசை வியாபாரியிடம் கொடுக்காமல் ஒன்றும் தெரியாததுபோல், எல்லோரையும்போல், மௌனமாய் நடந்தாள். வியாபாரி பார்த்தான். இவளையும் காணாமலிருந்தான். மனவருத்தப்பட்டுப் பின்வருமாறு கூறினான். இப்பொழுது வாங்கின மஞ்சளை அவள் உபயோகித்துத் தன்வசம் மஞ்சள் இல்லாமல் போவதற்குள் அவளுடைய புருஷன் மாய்வான் (இறந்துபடுவான்). அடுத்த ஜன்மத்தில்,

34. மைந்தரும் முதலில்சேதம் மத்தியில் வரனுமாள்வன்
நொந்திடு மனத்தளாகி நேமியில் வாழ்வாய்நீயும்
இந்தவார் சொல்லியேதான் இறைத்தனன் மண்ணைவாரி
அந்ததோர் தோஷம்தானும் அணுகிற்று பாவைக்கேதான்.

34. பிள்ளைகள் முதலில் சேதமாவார்கள். மத்திய காலத்தில் புருஷனும் மாய்வான். மனவருத்தத்துடன் பூமியில் வாழ்வாய் நீயும் என்று பல வார்த்தைகளைச் சொல்லியே தெருவில் உள்ள மண்ணை வாரி இறைத்தான். இவளுக்கு அந்த தோஷம் வந்து சேர்ந்தது.

35. மாதுவுக் கந்தஆண்டில் மாரனு மரணமாகி
வேதனை மனத்தளாகி விதைவையாய்ச் சிலநாள்சென்று
தீதான காலனுடு சென்றுமே பிரமன்பக்கம்
காதலி வந்தாளென்றோம் கழறுவோம் இச்சென்மத்தில்.

35. இவளுக்கு அதே வருஷத்தில் புருஷனும் இறந்து மன வேதனையை அடைந்து வைதவ்யம் அடைந்து சிலநாள் வசித்து விட்டு எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தாள். இந்த ஜன்மத்தில் அவள் செய்தி கூறுவோம்.

36. வரனுமே மத்தில்மாழ்வன் மருவாது பூர்வஇல்லம்
குறையான மனத்தளாகிக் குழவியும் முதலில்பீடை
அரிவைக்கு நேருமென்றோ மறைகுறோ மிவள்பின்சென்மம்
முருகர்வாழ் போரூர்தன்னில் உதிப்பளாம் இக்குலத்தில்.

36. புருஷனும் சில காலம் வாழ்வான். பழைய வீடு இவளைச் சேராது. மனக்குறைவுடனிருக்கும்போது புத்திர தோஷம் முதலில் ஏற்படும் என்றோம். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். முருகக் கடவுள் வாழும் திருப்போரூரில் இக்குலத்தில் உதிக்கலானாள்.

37. தந்தையின் பூர்வம்சொல்வேன் தாம்பிர பரணிதன்னில்
இந்தவோர் குலமுதித்து எழில்பல செட்டுச்செய்து
வந்தவர்க் குதவிசெய்து அடைந்தனன் காலனூடு
முந்திறோன் வரியப்பட்டு உதிப்பனும் என்றுசொல்வோம்.

37. தந்தையின் பூர்வோத்தரங்களைப்பற்றிக் கூறுவோம். தாம்பிர பரணி தீரத்தில் இந்தக் குலத்திலுதித்து விளங்கும்படியான பலவித வியாபாரங்களைச் செய்து வந்தவர்களுக்கொத்தாசை செய்து எமலோகம் சேர்ந்தான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உதிக்கலானான் என்று சொல்லுவோம்.

38. மறுசென்மம் காளததிதன்னில் வருகுவான் கங்கை [சேயாய்த்
தரையது விருத்திசெய்து தானவன் வாழ்வானாகும்
உரைகுறோம் நாலாண்டுக்குள் உரைகுவான் காலனூடு
அறுமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

38. அடுத்த ஜன்மம் திருக்காளத்தியில் வேளாளார் குலத்தி லுதிப்பான். நிலபலங்களை விருத்தி செய்து வாழ்ந்து வருவான். நான்கு வருஷங்களுக்குப் பிறகு மரண மடைவான். ஆனந்தத் தாண்டவம் ஆடும் அம்பிகையே ! கேட்பாயாக.

39. முப்பது ஏழுஆண்டில் விளம்புவோம் அன்னைகெண்டம்
ஒப்புடன் சாதகர்க்கு உரைக்குறோம் அறுபான்ரெண்டில்
மைப்புடன் கன்னிமாதம் விளம்புவோம் மாரகங்கள்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றுது.

39. இவனது முப்பத்தேழாவது வயதில் தாயாருக்குக் கண்டம் ஏற்படும். ஜாதகனுக்கு அறுபத்திரண்டாவது பிராயத்தில், புரட்டாசி மாசத்தில், மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். கங்கையைத் தலையிலணியும் பரமசிவனின் தேவியாகிய பார்வதியே ! நாங்கள் கூறிய அருள் மொழிக்குக் குறைவு ஏற்படாது.

40. பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனும் சௌராஷ்டிர [வமிசம்
உன்னத செட்டுச்செய்து உத்தமன் வாழ்வானுகும்
மன்னனும் செனனகாலம் மரவதன் திசையிருப்புச்
சொன்னனே பதினுலாண்டும் திங்களும் நான்கேஆகும்.

40. அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர வமிசத்தில் பிறப்பானும். மேலான வியாபாரம் செய்து இவ்வுத்தமன் வாழ்வானுகும். இவனுடைய ஜனனகாலத்தில் புதன் தசை இருப்பு வருஷம் பதினுன்கு, மாதம் நான்கு ஆகும்.

41. வந்தவன் பிணியும்நேரும் மருவிடும் தந்தைகெண்டம்
பந்தமாம் குடும்பமெய்தும் பாரது பலிதம்நஷ்டம்
பிந்தின பாகம்தன்னில் பேசுவோம் விபரமாக
இந்திரன் இரைஞ்சும்மாதே இதுபூர்வ பாகமாமே.

41. உதித்தவனுக்கு வியாதி வரும். தந்தைக்கு கண்டம் ஏற்படும். குடும்பத்தில் கடன் ஏற்படும். பூமி விளையாமல் நஷ்டமாகும். பிந்தின பாகத்தில் இதன் விவரத்தை விரிவாகப் பேசுவோம். இந்திரன் முதற் கொண்டுள்ள (தேவாதி தேவர்கள்) வணங்கும்படியான பார்வதியே ! இது வரையில் சொன்னது பூர்வ பாகமாகும்.

ஜாதகம் 42

1. மதிகேது கடகமாக மறைசீயம் காரிதேளில்
புதன்பானு மேருவாகப் புகர்ப்பணி மானதாகச்
சதியிலாச் சேயும்நந்தி சென்மமும் மேடமாக
இதுவித கோளும்நின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் கேதுவும் கடகத்திலும், குரு சிம்மத்திலும், சனி விருச்சிகத்திலும், புதனும் சூரியனும் தனுசிலும், சுக்கிரனும் இராகுவும் மகரத்திலும், செவ்வாய் ரிஷபத்திலும் தங்க, இவ்வித கிரகநிலைகள்கொண்ட இம் மேஷலக்ன ஜாதகனுக்கு உண்டான பலனைச் சொல்லுங்கள் என்று,

	லக்கினம்	செவ்வாய்	
	இராசி சக்கரம்		சந்திரன் கேது
சுக்கிரன் ராகு			குரு
புதன் சூரியன்	சனி		

2. மங்கையும் கேட்கும்போது மாமுனி புகலுகின்றார்
இங்கிவை ஆண்பால்சென்மம் இல்லமும் கீழ்மேல்வீதி
தங்கிடும் தெற்குவாசல் தலையற்றோன் கோஷ்டம்மேற்கு
அங்கரன் அரனின்கோஷ்டம் அணுகிடும் கீழ்பால்தன்னில்.

2. பார்வதி கேட்க, மாமுனிகள் சொல்லலுற்றார்கள். இஃது ஆண் ஜன்மம். இவனுடைய வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப்பார்த்த வீடு. மேற்கே பிரம்மாவின் கோவில். அதன்கிழக்கே சிவன் கோவில் உண்டு.

3. பஞ்சவர் [1]பாரிதென்பால் பத்திர காளிதங்கும்
வஞ்சியே சிறுவூராகும் வர்க்கமு கெங்கைசேயாய்த்
துஞ்சமாய்ப் பாகம்ரெண்டு சார்ந்திடும் இல்லம்தன்னில்
கொஞ்சுவான் மூன்றும்சென்மம் கோதையே கேட்டிடாயே.

---

1. திரௌபதி

3. தெற்கே திரௌபதி அம்மன் கோவில். அதில் பத்திரகாளியும் தங்கும். அஃது ஒரு சிற்றூராகும். ஜாதகன் இங்கே வேளாளர் குலத்திலுதித்தான். வீடு இரண்டு பாகமாயுள்ளது. இஃது இவனுடைய மூன்றாவது ஜன்மம். பார்வதியே! கேட்பாயாக.

4. தாதைக்குத் தாரம்ரெண்டில் தரித்திடு மிளையாள்ஜனம்
நீதியாய் மைந்தன்தானும் நிகழ்த்துவோம் இவனின்தந்தை
ஓதுவேன் துணைவர்தன்னை யுவந்திடு மாண்பால்ரெண்டு
தீதாக சோங்கின்மேலே சொல்லுவார் ஒருவன்தானும்,

4. இவன்தந்தைக்கு இரண்டு பெண்டாட்டிகள். இளையாளுடைய குழந்தைகள் இருப்பார்கள். அப்படி இவன் நியாயமாய் ஏற்பட்டவன். இவனுடைய தந்தையைப்பற்றிக் கூறுவோம். அவனுடைய சகோதரத்தைப் பற்றிச் சொல்லுவோம். சகோதரர் இரண்டுபேர்கள். இதைக் கேட்ட சோங்கினர் மேலே சொல்லுவார். அவர்களில் ஒருவன்,

5. சிலதுநாள் சென்றபின்பு செல்லுவான் காலனோடு
தலமதைப் பின்புகாணான் செனிக்குமுன் செல்வானாகும்
நிலமையாய் அவனின்முன்னோன் நிலையைவிட் டகலானாகும்
நலமுள காரியத்தை நாயகன் செய்வானாகும்.

5. சிலநாள் கழிந்தபின்பு எமலோகம் செல்லுவான். திரும்பவும் உலகத்தில் வரமாட்டான். இருக்கும்போது செல்வவானாக இருந்தான். அவனுடைய அண்ணன் தன் நிலைக்கு பங்கம்வராதபடி இருந்தான். நல்ல கருமாக்களைச் செய்து வரலாயினன்.

6. மணமுண்டாய் மதலைகாணான் மத்தியில் ஏகுவானும்
பிணையாக முன்தாயொன்று பேசினீர் அவர்க்குப்புத்திரர்
கனமுடன் சொல்லுமென்ன காளையும் ஒருவன்தீர்க்கம்
சினமிலா வேறாய்ச்செல்வன் சந்ததி உடையனாமே.

6. கலியாணமானதும் புத்திரபாக்கியம் இல்லை. மத்தியகாலத்தில் ஏற்படும். முன்னால் ஒரு தாயார் இறந்துபோனதாகச் சொன்னீரே. அவளுடைய புத்திரர்களைப்பற்றிச் சொல்லும், என்ன, ஒரு பையன் இருந்தான். அவனும் தீர்க்காயுசுடையவன். அவன் குடும்பத்தைவிட்டு வேறாகச் செல்லுவான். அவனுக்கு எவ்வித விரோதமுமில்லை, சந்ததி உடையவன்.

7. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சாந்தவான் [மாநிறத்தான்
கந்தன்மேல் பக்திபூண்பன் காதலி விதவைபோகம்
விந்தையாய்ச் செய்வானாகும் விகடவார்த் தைகளும்கூறுவான்
சந்ததம் கிருஷிசெய்வன் சமதேக முடையனாமே.

7. தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். சாந்தகுண முடையவன். மாநிறமுள்ளவன். முருகக்கடவுளிடத்தில் பக்திபூண்பான். விதவைகளைக் காதலித்து போகம் துய்ப்பான். எதையும் ஆச்சரியப்படும்படி செய்வான். வேடிக்கையான வார்த்தைகளைப் பேசமாட்டான். எப்பவும் கிருஷித் தொழிலைச் செய்வான். சமமான தேகத்தை யுடையவன்.

8. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் பிரம்மரேகை
அன்னிய ருறவுகொள்வன் ஆண்மையாய்க் குடும்பமேற்பன்
தன்சொல்லும் சாதிப்பானும் தங்கிடும் பித்தசூடு
கன்னென மொழியேசொல்வான் கலப்பனும் கொஞ்சம்
[பொய்யை.

8. இவனுடைய சிவந்த கையில் பிரம்மரேகை விளங்கிடும். பிறருடைய சிநேகத்தைக் கொள்ளுவான். தைரியமாய்க் குடும்பத்தை நடத்துவான். சொன்னசொல்லை நிலைநிறுத்துவான். பித்தசூடு உடையவன். கனிவான பேச்சுக்களைப் பேசுவான். சிறிது பொய்கலந்தே பேசுவான்.

9. தந்தைநாள் பூமிதன்னைத் தானவன் குறைவுசெய்யான்
நிந்தைகள் ஏற்பானுகும் நிமலியால் என்றுசொல்வோம்
நந்தியா விருத்திஅல்பம் நாட்டினில் சல்லியம்காணுன்
கந்தனை ஈன்றமாதே கழறின மொழிகுன்ருது.

9. பிதிரார்ச்சிதத்தைச் சிறிதும் குறைவுவராமல் காப்பாற்றுவான். பிறருடைய நிந்தனைகளை ஏற்றுக்கொள்ளுவான். இதுவும் பெண்டாட்டியால் ஏற்படும் என்போம். பசு, எருது இவைகளுடைய விருத்தி குறைவு. உலகினின் கடன்பாதை கிடையாது. கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! சொன்ன சொல்லுக்குக் குறைவு ஏற்படாது.

10. இக்குண முடையானுக்கு இவனுமே உதிப்பானுகும்
தக்கவே அவன்குணத்தைச் சாற்றுவோம் மால்நிறத்தான்
பக்குவ மாகவார்த்தை பகருவான் யூகைவானும்
சிக்கன மில்லானுகும் சிறுத்தவர்க் குதவிசெய்வன்.

10. இத்தகைய குணங்களையுடைய தந்தைக்கு, நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். தகுந்தபடி இவனுடைய குணத்தை எடுத்துச்சொல்லுவோம். கருநிற முடையவன். பக்குவமாக வார்த்தைகளைப் பேசுவான். சிக்கனமென்பதே கிடையாது. ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான்.

11\. வாதமே கத்தாளுகும் மாற்றவர் தனைசெயிப்பன்
காதியு[1] மதிகமேற்பன் கடந்தோர்கள் உறவுகொள்வன்
பூதலம் மூன்றுஊரில் பிறப்பனும் கல்விமேன்மை
சீதள குணத்தாளுகும் திருமகன் ஒப்பதாமே.

11\. வாதசரீர முள்ளவன். எதிரிகளை ஜயிப்பான். காதிகளை அதிகமாக ஏற்றுக்கொள்ளுவான். இடையூறுகளைக் கடந்து. நற்கதியடையக் காரணபூதமாயிருப்பவர்களை சிநேகம் கொள்ளுவான். பூலோகத்தில் மூன்று ஊர்களில் பிறப்பாளுகும். கல்விகேள்விகளில் மேம்பட்டவன். குளிர்ந்த தன்மை யுடையவன். பகவானை ஒத்தவளு யிருப்பாளுகும்.

12\. உண்டியும் வறுமைகாணுன் உயர்வான தலங்கள்செய்வன்
கண்டித முடையாளுகும் கரமதில் சங்குசக்கரம்
அண்டர்கள் பூசைபூண்பன் அண்டின பேரைக்காப்பன்
வண்டிவா கனமுமேற்பன் மாற்றுனை லகுவில்வெல்வன்.

12\. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லாதவன். மேலான சிவஸ்தலங்களைப் போய்த் தரிசிப்பான். கண்டிப்பான குணங்களை யுடையவன். கையில் சங்கு சக்கர முடையவன். அண்டினவர்களை ஆதரிப்பான். வண்டிவாகனங்களை யுடையவன். எதிரியை எளிதில் வெல்லுவான்.

13\. என்னகா ரணத்திளுலே இவனுக்கு யோகம்சொன்னீர்
பொன்னவன் அஞ்சில்தங்க புகர்ராகு பத்தில்தங்கச்
சந்திரன் ஆட்சியாகச் சன்மத்தோன் இரண்டிலேற
மன்னிய பலத்திளுலே வரைந்தனம் யோகமென்றேம்.

13\. என்ன காரணத்திளுலே இவனுக்கு யோகங்களைச் சொன்னீர்? குரு ஐந்தாமிடத்தில் தங்க, சுக்கிரனும் இராகுவும் பத்தாம்வீட்டில் சேர்ந்து நிற்க, சந்திரன் தன்னுடைய சொந்தவீட்டில் ஆட்சிபெற்றிருக்க, இலக்கிளுதிபதியாகிய செவ்வாய் இரண்டாமிடத்திலிருக்க. இவ்வாறுன கிரகபலன்களைக் கொண்டு யோகங்களைச் சிறப்பித்துக் கூறினேம்.

14\. பேரிகை யோகமென்று பேசுவோம் வீணையோகம்
கூறுவோம் இரண்டுயோகம் குவலயம் புகழுமேற்பன்
ஆறுமா முகத்தோளுலே அவனுமே உய்வாளுகும்
காரிய சமர்த்தனும் காதலி கேட்டிடாயே.

1\. காதிகள் = ஞானவரணீயம், தரிசனவரணீயம், மோகனீயம், அந்தராயம் என்ற முத்திக்குப் பாதகமாயுள்ள கர்மகிரியைகள்.

14. பேரானந்தத்தைத் தரக்கூடிய பேரிகையோகமும், வீணையோகமும் இவனைச் சாரும். இத்தகைய யோகங்களைப் பெற்றவனை உலகம் புகழும். முருகக்கடவுளின் கிருபையினாலே அவன் ஜீவித்துவருவான். காரியங்களைச் செய்வதில் சாமர்த்திய முள்ளவன். பார்வதியே! கேட்பாயாக.

15. தன்துணை ஆண்பால்காணான் தங்கிடும் கன்னிரெண்டு
அன்னவர் தீர்க்கசீவி அணுகாது இவன்பின்தோஷம்
இன்னவன் துணைஆண்தோஷ மெய்தும்கா ரணங்க [ளெவ்வார்
பொன்வீட்டில் புதனும்தங்க புவிமகன் பார்த்ததாலே,

15. தனக்குச் சகோதரரில்லை. சகோதரிகள் இரண்டுபேர்கள். அவர்களும் தீர்க்காயுசுள்ளவர்கள். இவனை எந்தத் தோஷமும் பின்பற்றாது. சகோதரன் தோஷமடைவான். அதற்கு என்ன காரணம்? வியாழனுடைய வீடாகிய தனுசில் புதன் தங்க, அவனைப் பூமிக்குடையோனான செவ்வாய் பார்த்ததனால்,

16. ஆண்துணை தோஷமெய்தும் அவன்தந்தைக் கவ்வாறாகும்
பூணுவோம் மாமனுக்கும் பொருந்தாது துணையானும் [தான்
நாணியே தனியாய்வாழ்வன் நவிலுவீர் அன்னைசேதி
காணவே கருத்தமேனி காதலி முன்கோபத்தாள்.

16. சகோதரதோஷம் ஏற்படும். அவன் தந்தைக்கும் அவ்வாறே ஆகும் மாமனுக்கும், துணைவரால் சகாயம் ஆகாது. ஆதலால் இவன் ஏகனாய் (த்தன்னந்தனியே) வாழ்வான். தாயின் விருத்தாந்தத்தைக் கூறுவோம். பார்ப்பதற்குக் கருநிறமுள்ளவளா யிருப்பாள். முன்கோப முடையவள்.

17. சிலவேளை வரனின்பேரில் சீறுவாள் செய்கையாலே
நலமுள குணத்தாளாகும் நற்புத்தி சுகமாய்வார்த்தை
குலவிடும் வாயுபாதை குணமது இரண்டுமுண்டு
நிலயதைக் காப்பாளாகும் நிமலியே மேலுங்கேளே.

17. சிலவேளை புருஷன்பேரில் கோபித்துச் சீறிவிழுவாள். தன் செய்கையினாலே நல்ல குண முடையவளென்று சொல்லுவோம். நல்ல புத்தி யுடையவள். சுகமான வார்த்தை பேசுவாள். வாயுஉபத்திரவம் வந்து சேரும். நல்லது, கெட்டது என்ற இருவித குணங்களையு முடையவள். தன்னுடைய நிலையைக் காப்பாற்றுவாள். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

18. இல்லமும் உள்ளூர்கீழ்பால் இவள்துணை ஆண்பாலொன்று
வல்லியும் அவ்வார்தீர்க்கம் வரைந்தனம் பாவைக்கேதான்
நில்லாது மற்றதெல்லாம் நிமலியின் பூர்வம்கேளாய்
அல்லலை[1] விலக்குகின்ற அருணைக்கு வடபாலாக.

18. இவளுடைய வீடும் உள்ளூருக்குக் கிழக்கே யுள்ளது. இவளுடைய சகோதரன் ஒருவன் உண்டு. தங்கையும் ஒருத்தியாவள். இவர்கள் தீர்க்க மான ஆயுளை உடையவர்கள். மற்றச் சகோதரம் நில்லாது. இவளுடைய பூர்வோத்தரங்களைக் கேட்பாயாக. பிறவித்துன்பத்தைப் போக்குகின்ற திருவண்ணாமலைக்கு வடக்கே,

19. பேரூரில் வன்னியசேயாய்ப் பிறந்துமே வரனுமைந்தர்
நாரியும் சுகமாய்வாழ்ந்து நலிந்தோரை யாதரித்தும்
காரிழை பவமில்லாமல் காலன்தன் பதிக்குப்புக்கி
ஆரியன் வரியப்பட்டு அணுகினாள் இக்குலத்தில்.

19. பேரூரில், வன்னியர்குலத்திலுத்து, இவனும், பெண்டாட்டிபிள்ளைகளும் சுகமாய் வாழ்ந்து ஏழைகளை ஆதரித்தும் பவவினைகளில்லாமல் காலனூடு புகுந்து திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் வந்து பிறந்தான்.

20. மாதுக்கு வறுமையின்றி வாழ்குவா ளென்றுசொல்வோம்
ஓதுவே ளிவள்பின்சென்ம முயர்பாண்டி நாட்டிலேதான்
போதன முடையானுக்குப் பிறப்பளாம் இக்குலத்தில்
ஆதியாய்த் தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

20. இவளுக்குத் தரித்திரமே இல்லாமல் வாழ்வாளென்று சொல்லுவோம். இவளுடைய மறுஜன்மத்தைக் கூறுவோம். மேன்மைதங்கிய பாண்டியநாட்டிலே மிக்க தனமுடையவனுக்கு இக்குலத்தில் மகளாய்ப் பிறப்பாள். ஆதியாய்த் தபசுசெய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

21. உதித்தவன் மணத்தின்கால முரைக்குறேம் [பதினெட்டாண்டில்
அதிபதி வடமேல்நேரும் மங்கையின் குணத்தைச் [சொல்வேன்
அதிசய வார்த்தைசொல்வ ளன்புள மனத்தளாகும்
ததிநெய்பால் குறைவுறு(தா)ள் சம்பத்து உடையளாமே.

---

1. பிறவித்துன்பம்

21. இவளுடைய மணத்தின் காலத்தை உரைக்கிறோம். பதினெட்டாவது வயதில் புருஷன் வடமேற்கிலிருந்து வருவான். இம்மங்கையின் குணங்களைக் கூறுவோம். அதிசயவார்த்தைகள் சொல்லுவாள். அன்பான மனசை யுடையவள். தயிர், நெய், பால் இவை குறைவில்லாமல் பெறுவாள். சம்பத்துக்களை யுடையவளாமே.

22. மாதுக்கு வயதுதீர்க்கம் மாமுனி தடுத்துச்சொல்வார்
காதலி இரண்டுநேரும் காதலன் தனக்குமேதான்
ஓதுவீர் அந்தச்சங்கை உலகனும் புகரும்பத்தில்
தீதாக இருப்பதாலே செப்பினோம் தாரம்ரெண்டு.

22. இம்மாதுவிற்குத் தீர்க்காயுசு. இதைக் கேட்ட மாமுனி தடுத்துச் சொல்லுவார். இவள் புருஷனுக்கு இரண்டு மனைவிகள் ஏற்படுவர். அந்தச் சந்தேகத்தைத் தீர்க்கவும். இராகுவும் சுக்கிரனும் பத்தாமிடத்திலிருப்பதால் தீங்காகும். அதனால்தான் தாரம் இரண்டு என்று சொன்னோம்.

23. அப்படிச் சொல்லொணாது அலரியைப் பொன்சேய்பார்க்கத்
தப்பித மணுகாதாகும் தாரமும் ஒன்றேயாகும்
மைப்புடன் அம்மாதுக்கு மேவிடும் அன்னைரெண்டு
செப்பின மொழிகுன்றாது தேவியும் ஒன்றேயென்றோம்.

23. அப்படிச் சொல்லுவது சரியன்று. சூரியனை வியாழன் ஐந்தாம் பார்வையினாலும், செவ்வாய் எட்டாம் பார்வையினாலும் பார்ப்பதால், தப்பிதம் ஏற்படாது. தாரம் ஒன்றேதான். அம்மாதுக்கு இரண்டு தாய்மார்கள் ஏற்படுவார்கள். சொன்னசொல் தவறாது. மனைவியும் ஒருத்தியேயென்றோம்.

24. சுதர்களும் ஐந்துதோன்றும் சோர்வுறும் ஒன்றுஎன்றோம்
சதமுடன் ஆண்பால்ரெண்டு தையலும் அவ்வார்தீர்க்கம்
புதல்வர்கள் இவன்மேலாகப் பொருந்திடும் யோகம்தானும்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

24. பிள்ளைகளும் ஐந்து பிறக்கும். ஒன்று மரித்துப்போம் என்றோம். ஒழுங்காய் ஆண்குழந்தைகள் இரண்டு. பெண்குழந்தைகளும் அப்படியே. இவர்கள் தீர்க்கம். பிள்ளைகள் இவனுக்குமேல் போகவான்களாக இருப்பார்கள். அதிதியை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

25. சாதகன் பூர்வம்தன்னைச் சாற்றுவோம் நேபாளத்தில்
தீதான வடுகர்வர்க்கம் செனித்துமே அரசர்மூலம்
காதலன் சீவித்தேதான் கனமான பொருளும்பெற்று
மேதினில் சமமான..........மேவினன் கொங்குநாட்டில்.

25. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். நேபாளதேசத்தில், தீதான தெலுங்கர் வமிசத்தில் ஜனித்து, அரசர்கள் மூலம் இவன் ஜீவனம்செய்வான். மகத்தான திரவியத்தைப் பெற்று உலகினில் சமதேசமான மலையாளதேசத்தில்,

26. மனைவியும் மதலையுண்டாய் அறமதில் இச்சையாகிக்
கனமுள குடும்பம்பெற்றுக் காலன்தன் பதிக்குச்சென்று
வினையிலா பிரமன்லக்கம் மேதினில் வரியப்பட்டுச்
சினமிலா இக்குலத்தில் செனிப்பனு மென்றுசொல்வோம்.

26. பெண்டாட்டிபிள்ளை ஏற்பட்டு, தர்மம்செய்வதில் இஷ்டப்பட்டு, மேலான குடும்பத்தைப் பெற்று, எமலோகம் சென்றான். பிரம்மாவின் சிருஷ்டியினால் பூலோகத்தில் குற்றமற்ற இக்குலத்தில் செனிப்பான் என்று சொல்லுவோம்.

27. தந்தையின் பூர்வம்தன்னைத் தானெடுத் தியம்பக்கேளும்
தென்திசை பழனியோரம் சிறுவூரில் இக்குலத்தில்
வந்துமே கிருஷிசெய்து மனைவிமைந் தருமுண்டாகி
அந்தவன் வாழுநாளில் அணுகின வினையைக்கேண்மோ.

27. இவன்தந்தையின் பூர்வோத்தரத்தைச் சொல்லுகிறோம். கேளும். தெற்குத்திக்கில் பழனிஸ்தலத்தினருகில் உள்ள ஒரு சிறு ஊரில் இக்குலத்திலுதித்து, கிருஷிசெய்து, மனைவிமக்கள் உண்டாகி, வாழ்ந்துவருங்காலத்தில் ஏற்பட்ட பண்டைவினையைக் கேட்பாயாக.

28. கன்னிகை ஒருத்திபேரில் கழறொண்ணு வார்த்தை [சொன்னான்
அன்னவள் திகிலடைந்து அறைகுவாள் சாபம்தானும்
பின்வரும் சென்மம்தன்னில் பெண்ஆணும் [துணைகளின்றித்
தன்னுமே தனியாய்வாழ்வாய் சக்தியால் நிந்தையேற்பாய்.

28. ஒரு கன்னிகா ஸ்திரீயைப் பார்த்துச் சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொன்னான். அவள் திடுக்கிட்டுச் சாபம்கொடுத்தாள். அடுத்துவரும் ஜன்மத்தில் ஆண்பெண் சகோதரமின்றித் தனிமையாய் வாழ்வாய். பெண்டாட்டியால் அவதூறுகளைப்பெறுவாய்.

29. இன்னமும் பலவார்சொன்னாள் எய்திற்று அந்ததோஷம்
மன்னனுக் கந்தியத்தில் வாய்ப்புண்ணால் மரணமாகிப்
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தன னென்று [சொல்வோம்
கன்னிகை சாபம்போலே கழறுவோம் துணைவர்தோஷம்.

29. அவ்வாறு தகாத வார்த்தைகளைச் சொன்னதனால் அந்தத்தோஷம் இவனைச் சார்ந்தது. இவனுடைய அந்திய காலத்தில் வாயில் புண் ஏற்பட்டு, அதன்காரணமாய் மரணமானான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தான் என்று சொல்லுவோம். கன்னிகை இட்ட சாபத்தின் பலனாகத் துணைவரின் தோஷம் ஏற்பட்டது.

30. மருசென்மம் பட்சிகீழ்பால் மாபலி நகரம்தன்னில்
வருகுவான் சைவசேயாய் வரைகுரேம் நிரியாணத்தை[1]
இருபது ஒன்பதாண்டில் ஏகுவான் தந்தைதானும்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

30. அடுத்த ஜன்மம் திருக்கழுக்குன்றத்திற்குக் கிழக்கே, மகாபலிபுரத்தில், சைவக்குழந்தையாய் ஜனிப்பான் என்று கூறுவோம். இவனுடைய இருபத்தொன்பதாவது பிராயத்தில் நிரியாணத்தை அடைவான் இவன் தந்தை. ஆனந்தநடமாடும் அம்பிகையே! கேட்பாயாக.

31. ஆறுறு இரண்டுஆண்டில் அன்னைக்குக் கெண்டமெய்தும்
திரமாய்ச் சாதகர்க்குச் செப்புவோம் எழுபானொன்றில்
நாரிகேள் கூனிமாதம் நாயகன் உடலமேகும்
பாரினில் தவங்கள்செய்யும் பார்வதி கேட்டிடாயே.

31. இவனுடைய முப்பத்தெட்டாவது வயதில் தாய்க்குக் கண்டம் ஏற்படும். எழுபத்தொன்றும் வயதில் பங்குனி மாதத்தில், ஜாதகன் உயிர் துறப்பான். உலகினில் தவஞ்செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

32. பின்சென்மம் மலைநாடன்னில் பிறப்பனும் சௌராஷ்டிர [வர்க்கம்
பொன்பொருளுடையனாகிப் புகழுடன் வாழ்வானாகும்
அன்னவன் யோகச்சேதி அறைகுரேம் வருமைகாணான்
தந்தைக்கு மேலாய்வாழ்வன் தரணியை விருத்திசெய்வன்.

32. அடுத்த ஜன்மத்தில் மலைநாட்டினில் சௌராஷ்டிர வமிசத்தில் பிறப்பானாகும். பொன், பொருள் இவைகளைப் பெற்று, கீர்த்தியுடன் வாழ்வானாகும். அவனுடைய யோகங்களைக் கூறுவோம். தரித்திரமில்லாமலிருப்பான். தகப்பனுக்கு மேலாக வாழ்வான். பூஸ்திதியை விருத்திசெய்வான்.

---

1. மரணத்தை

33. சல்லிய பாதையில்லாச் சகராசர் பேட்டிகொள்வன்
நல்லவன் நல்லவர்க்கு நாற்காலி சகடுமுண்டு
எல்லையாய் உய்வானாகும் இவனுஸ்தி மொத்தம்யாவும்
சொல்லுவேன் நாலாயிரம்பொன் சுதனுட னடைவானாகும்.

33. கடன்தொந்தரவு இல்லாதவன். உலகிலுள்ள அரசர்களுடைய பேட்டியைப் பெறுவான். நல்லவர்களுக்கு நல்லவனாவன். குதிரைவண்டி களுண்டு. எல்லாவிடங்களிலும் தெரியப்பட்டவனாய் வாழ்வான். இவனுடைய ஆஸ்தி எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால், நாலாயிரம் பொன் என்று சொல்லுவோம். இதை இவன் மகன் அடைவானாகும்.

34. பிறந்திடு காலம்தன்னில் புதன்தசை முன்வந்தாண்டும்
சிறந்திடும் திங்கள்ரெண்டும் செப்புவோம் பலனையாங்கள்
வரும்துணை சேதமெய்தும் மாரனும் பிணியால்வாடும்
குறைந்திடும் காலிதானும் கூறுவோம் அன்னைநோயாம்.

34. பிறக்கும்போது புதன்தசை இருப்பு வருஷம் ஒன்று, மாதம் இரண்டு. இவற்றின் பலன்களை நாங்கள் சொல்லுவோம். உடன் பிறந்தவர் நாசமாவார்கள். ஜாதகனும் வியாதியினால் வாடுவான் (கஷ்டப்படுவான்). பசுக்கூட்டங்கள் குறையும். தாயும் நோய்வாய்ப்படுவாள்.

35. செலவுகள் அதிகமுண்டு செனபந்து சூதம்காணும்
தலவிமுன் துணைசுபங்கள் தரணிபின் சேர்தலுண்டு
நலந்திருப் பணியும்செய்தல் நற்றல வாசம்செய்தல்
நிலைமையாய்க் கல்விநேரல் நுகர்ந்தனம் பூர்வபாகம்.

35. செலவுகள் அதிகம் உண்டு. பந்துக்களுடைய ஆசௌசம் ஏற்படும். பெண்டாட்டியின் அண்ணன்மார்கள் சுபத்தைப் பெறுவார்கள். பிற்காலத்தில் பூமியின் சேர்க்கையும் உண்டு. நல்ல தெய்வவழிபாடுகள் செய்தல், நல்ல க்ஷேத்திராடனங்கள் செய்தல், ஸ்திதிக்கேற்ற கல்விச் செல்வத்தைப் பெறுதல், இன்னும் இவைபோன்ற மற்றவைகளைப் பூர்வபாகத்தில் கூறினோம்.

சத்தம முனிவர் சுத்தமாய்ச் சொன்னோம்
குத்தங்கள் யாவும் வித்தகி பொறுப்பாய்.

ஜாதகம் 43

1. ஆலோன்[1] புகரும் கடகமுற-ஆறல்[2] சீயம் பணிதேளில்
மாலும் பானு வீணையுற மந்தன் மேடம் குருஞானி[3]
சால நந்தி தான்புக்க ஜென்மம் வருடை தானகக்
கால பலத்தைத் தான் புகல்வீர் கழறுவார் பராசர் ஆண்
[செனனம்.

1. சந்திரனும் சுக்கிரனும் கடக ராசியில் ஏற, செவ்வாய் சிம்மத்திலும், இராகு விருச்சிகத்திலும், புதனும் சூரியனும் மிதுனத்திலும், சனி மேடத்திலும், குருவும் கேதுவும் ரிஷபத்திலும் தங்க, இப்படிப்பட்ட கிரக நிலை கொண்ட மேஷ லக்கின ஜாதகனுக்குண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று கேட்க, பராசரர் கூறலுற்றார். இஃது ஆண் மகனது ஜாதகம். (Refer stanza 22.)

	லக்கினம் சனி	குரு கேது	புதன் சூரியன்
	இராசி சக்கரம்		சந்திரன் சுக்கிரன்
			செவ்வாய்
	ராகு		

2. இல்லம் வடதென் வீதியது இந்திர னேக்கம் வாசலுமே
வல்லி காளி கீழ்பாலில் மதியை அணிந்தோன் தென்
[கீழ்பால்
கொல்லும் துர்க்கை முனிதெற்கில் கூத்தன் உதைத்தோன்
[குடிவடக்கு
அல்ல வாகும் சிறுவூராம் அணுகும் இந்தப் பாலனுமே.

2. இவனுடைய வீடு வடக்குத் தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வாசலுடையது. காளி கோவில் கிழக்கே யுள்ளது. பரமசிவனுடைய கோவில் தென் கிழக்கே யுள்ளது. கொடுமையான துர்க்காதேவி, முனீசுரன் இவர்களது கோவில் தெற்கிலும் உள்ளது. சைவக் குடிகள் வடக்கிலுள்ளனர். இந்தச் சிறுவூரில் இந்த ஜாதகன் பிறந்தான்.

---

1. ஆலோன் = சந்திரன்
2. ஆரல் = செவ்வாய்
3. கேது

3. பாலன் யோகம் துணை யோகம் பாரி மதலை தான்யோகம்
சால அன்னை தான் யோகம் தந்தை யோகம் முன்செனனம்
கோல மாகப் பின்செனனம் கூறு மின்னூல் கோமளியே
வேலன் தந்தை துணை இரண்டு மேவும் ஆண்பால்
[தீர்க்கமுமாம்.

3. இப்பாலகனுடைய யோகமும், சகோதரர்கள் பெண்டாட்டி பிள்ளைகள் இவர்களுடைய யோகமும், தாய் தந்தையர் யோகமும், முன்பின் ஜன்மமும் விவரமாக இந்தப் புஸ்தகத்தில் கூறப்படும். இவனுடைய தந்தையுடன் பிறந்தவர் இரண்டு பேர்கள். சகோதரன் தீர்க்கம்.

4. அறுமே மற்ற துணை யென்றோம் அவர்கள் வேறூர்
[தாசமுறும்
திருகில் லாமல் தான்வாழ்வர் செப்பும் பின்பால் சேதிதனைப்
பெருமை யாகத் தந்தைகுணம் பேசும் கல்வி யூகையுளன்
நெறியைக் காப்பன் சிவந்தமையன் நேரும் வாத
[தேகியுமாம்.

4. மற்றச் சகோதரம் வீணாகும். அவர்கள் வேறு ஊரில், எவ்வித இடைஞ்சலுமில்லாமல் வாழ்ந்து வருவார்கள். இவர்களுடைய செய்திகளைப் பின் பாகத்தில் கூறுவோம். பெருமையான தந்தையின் குணங்களைக் கூறுவோம். அவன் கல்விமான். புத்திக் கூர்மை யுள்ளவன். சாஸ்திர முறைப்படி நடப்பான். சிவப்பு நிற முடையவன். வாத ரோகமுள்ள சரீர முடையவன்.

5. ஆமே பஞ்ச லோகத்தொழில்
அணுகும் வறுமை காணுதான்
தீமை எவர்க்கும் எண்ணுதான்
தந்தை பிணியும் தானணுகும்
காமன் தனையே விருப்பமுள்ளன்
கடந்தோர்க் கன்னம் தானீவன்
நேமம் தவருன் இல்செய்வன்
நினைத்த படியே தான்முடிப்பன்.

5. பஞ்சலோகங்களைக் கொண்டு தொழில் செய்வான். வறுமைத் துன்பத்தையே காணுதவன். எவருக்கும் தீங்கு நினைக்க மாட்டான். எற்பட்ட சிரமத்தைத் தவிர வேறு கிடையாது. காம விஷயங்களில் விருப்பமுள்ளவன். வந்த அதிதிகளுக்கன்னமீவன். தருமநெறி தவற மாட்டான். வீடு கட்டுவான். நினைத்தபடியே காரியங்களைச் செய்து முடிப்பான்.

6. முடிப்பான் சிலது திருப்பணியும்
மூலச் சூடு தானுடையன்
கொடுப்போர் தம்மை விலக்காதான்
குணமும் சீலன் சுகிபுசிப்பன்
விடைவா கனத்தோன் பணிசெய்வன்
மேவும் கலவரங் களுமே
அடுத்தோர் தம்மைக் காக்கும்
குணமறி வோர்நேயன் அம்பிகையே.

6. திருப்பணிகள் சிலவற்றைச் செய்து முடிப்பான். மூலச் சூடுடையவன். தானம் கொடுப்போர்களைத் தடுக்க மாட்டான். குணசீலன். சுகமான ஆகாரங்களைப் புசிப்பான். இருஷப வாகனத்தை யுடையவனான பரமசிவனுக்குப் பணிகள் செய்வான். கலவரங்களும் ஏற்படும். அண்டினோரைக் காப்பாற்றுபவர்களின் சிநேகிதன். அம்பிகையே!

7. சொன்ன இக்குணத்தானுக் கிந்தபாலன்
தோன்றுவான் இவன்குணத்தைச் செப்பக்கேண்மோ
உன்னதமாய் வார்த்தையுள்ள கல்வியுண்டு
ரோமங்கள் அதிகமில்லான் உறுதியில்லான்
அன்னியர்கள் மதிக்கஉய்வன் யூகைசாலி
அடாபிடி தன்னில்செல்லான் யாவர்க்குநேயன்
பின்னமிலான் பிறர்குற்றம் புகலானுகும்
பூவையர்கள் மோகமுளன் புண்ணியத்தன்.

7. இவ்விதம் விவரிக்கப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்தப் பாலகன் பிள்ளையாய்ப் பிறந்தான். இவனுடைய குணாதிசயங்களை விவரமாய்க் கூறுவோம், கேளுங்கள். மேலான கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றவன். தலையில் மயிர் அதிகமில்லாதவன். மனவுறுதி யில்லாதவன். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வான். புத்திசாலி. அடாபிடிகளில் தலையிடான். யாவர்க்கும் சிநேகிதன். சரீரத்தில் யாதொரு பின்னமும் இல்லாதவன். பிறருடைய குற்றங் குறைகளை எடுத்துக் கூறமாட்டான். ஸ்திரீகளைக் கண்டு மோகிப்பான். புண்ணியசாலி.

8. அந்தமுள்ள நிலம்சேர்ப்பன் அடிமைஏற்பன்
அருமையாய்ப் பணிகள்செய்து உயர்வானுகும்
குற்றமதை வெளிக்காட்டான் இரணியத்தால்
கூடிடுமே லாபமுறும் மாஞ்சிவைப்பன்

சுத்தமுள்ள தரித்திரங்கள் காணுகும்
தீர்த்தயாத் திரைசெல்வன் தீரநெஞ்சம்
வித்தகன் துணைஆண்பால் இரண்டுஎன்றேும்
மெல்லியரும் அவ்வாறுய் விளம்பலாகும்.

8. அருமையான நிலம் சேர்ப்பன். அடிமையாட்களை யுடையவன். அருமையான காரியங்களைச் செய்து மேன்மை யடைவான். தன்னிடமிருக்கும் குற்றங்களை வெளிக்காட்ட மாட்டான். பொன், பொருள் இவை கூடிவரும். லாபத்தை யடைவான். மாநிற முள்ளவன். தரித்திரத்தைக் காண மாட்டான். தீர்த்தயாத்திரை செய்வான். தைரியமுள்ள மனத்தை யுடையவன். இவனுடைய சகோதரர் இருவர் என்றேம். சகோதரியும் அவ்வாறுவர் என்று கூறுவோம்.

9. ஆகுமே மணமதுவே முன்ஆணுக்கு
அதுநிற்க மத்தியத்தில் பாலரின்றி
ஏகுவான் காலன்பதி இருபான்மூன்றில்
இதுநிற்கக் கன்னியவ்வார் ஏகுவளாம்
பாகமாய் மற்றெருபெண் மணங்களாகிப்
பர்த்தாவும் மரித்தவளாம் பாரில்வாழ்வள்
போகமின்றிச் சுதரின்றிச் சிறையா மென்றேம்
பூவைக்கு அவ்விதியும் பிறந்ததென்ன.

9. முதலில் ஆண் சகோதரனுக்குக் கலியாணம் ஆகும். அது நிற்க, மத்திய காலத்தில் குழந்தை யில்லாமல் எமலோகம் செல்லுவான். அவனுடைய இருபத்துமூன்றும் பிராயத்தில். இது நிற்க. சகோதரியும் அவ்வாறு ஏகுவாளாம். மற்றெருத்தி பக்குவமாய்க் கலியாணமாகி, பர்த்தாவை இழந்து விதவையாகப் பூவுலகில் வாழ்வாள். யோகமின்றியும், புத்திரனின்றியும், சிறையில் வசிப்பதுபோலிருப்பாள். இந்த ஸ்திரீக்கு இப்படி எல்லாம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று வினவ,

10. என்னவெனில் பூர்வவினை யென்றுசொல்வோம்
இயம்புவீர் அவள்பூர்வம் இனிதாகத்தான்
அன்னவளும் வான்பழனி நாட்டிலேதான்
அருமறையின் குலம்தோன்றி வரனுமுண்டாய்
உன்னதமாய்ப் பழனிதன்னில் விசேஷநாளில்
உரைந்தனள் காலவாறேடு இந்தமாது
சென்னியா ருடையவனை அடிபணிந்து
சென்றனள்காண் கடைவீதி தேவிதானே.

10. என்ன வென்றால், பண்டை வினை என்றே சொல்லுவோம். அவளுடைய பூர்வோத்தரங்களை இனிதாகக் கூறுங்கள். அவள் உயர்ந்த பழனிப் பிரதேசத்தில், பிராம்மண குலத்தில் பிறந்து, கலியாணமாகி, உன்னதமான பழனியில் ஒரு விசேஷ நாளில் புருஷனுடன் இவள் சென்றாள். அப்போது அம்மாது கங்கைவார்சடையான்தன்னை வணங்கித் துதித்துக் கடைவீதி வழியே சென்றனள்.

11. குங்குமம் மஞ்சள்சிப்புக் கோதையும் வாங்கிக்கொண்டு
தங்கமும் ஈயாசென்றாள் சர்வமான் போலேயம்மா
இங்கிவன் வணிபன்பார்த்து இம்மாதைக் காணாதாகிச்
சங்கையாய் மனத்தனுகிச் சாற்றுவான் சாபம்தானும்.

11. குங்குமம், மஞ்சள், சீப்பு இவைகளை கடையில் அம்மாது வாங்கிக் கொண்டு பொருள் கொடாமல் எல்லாரையும்போல ஜனங்கள் மத்தியில் சென்று மறைந்தாள். வியாபாரியும் அவளைக் காணாமல் மனவருத்தத்துடன் சாபம் கொடுக்கலானான்.

12. குங்குமம் ஆகாமுன்னம் கொழுநனும் மரணமாகி
மங்கையின் சென்மந்தன்னில் மாரனு மரணமாகி
நங்கையும் தவசிபோல நாட்டினில் வாழ்வாயென்று
அங்கவன் வித்தால்மண்ணை அள்ளியே தூத்தலுற்றான்.

12. இந்தக் குங்குமம் செலவு ஆவதற்குள் புருஷனும் மரிப்பான். மங்கையின் பின் ஜன்மத்தில் புருஷனும் மரணமாகி, நங்கையும் சன்னியாசியைப்போல, தேசத்தில் வாழ்வாளென்று சொல்லி, தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தான்.

13. மாதுக்கு அந்தசாபம் மருவிற்று என்றுசொல்வோம்
காதலிக் கந்தஆண்டில் கணவனும் மரணமாகிப்
பேதையும் சஞ்சலத்தால் பெரிதான தலங்கள்சென்று
பாதக காலனோடு பரவியே பிரமன்லக்கம்.

13. இவளுக்கு அந்தச் சாபம் சார்ந்தது என்று சொல்வோம். அந்த வருஷத்தில் இவளுடைய புருஷனும் மரணமானான். இவளும் மனச் சஞ்சலத்துடன் பெரிய தலங்கள் சென்று, எமலோகம் சென்றாள். திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

14. வந்தவ ளென்றுசொல்வோம் வணிபன்தன் சாபம்தானும்
விந்தையாய்ச் சேர்ந்ததாலே மெல்லியும் விதவையாவள்
அந்ததோர் தோஷம்தீர அறைகுவீர் சாந்திதானும்
எந்தசாந் திகளும்செய்யில் இலகாது மஞ்சள்சாபம்.

14. வந்தவளிவனென்று சொல்லுவோம். வியாபாரியின் சாபமும் ஆச்சரியமாய் வந்தடையவே, இவளும் விதவையானுள். அந்த ஒரு தோஷம் தீருவதற்குச் சாந்தி (பரிகாரம்) சொல்லுங்கள் என்று வினவ, இந்தப் பாபத்திற்கு எந்த சாந்தி செய்யினும் பிரயோஜனமில்லை. மஞ்சள் சாபம் பலித்தே தீரும்.

15. மற்றொரு துணையான்சேதி வரைகுறோம் தாயேகேளும்
சுத்தமாய்ச் சொல்காணுதான் செப்புவீர் அந்தசங்கைச்
வித்தகன் பூர்வம்தன்னில் மேவிற்று அந்ததோஷம்
பத்தின வினையைநீங்கள் பகருவீர் முனியேநீர்தான்.

15. மற்றொரு சகோதரனுடைய செய்தியைக் கூறுகிறோம். தாயே! கேளும். சுத்தமான பேச்சுப் பேச முடியாது. அந்தச் சங்கையை விவரியுங்கள், என்று கேட்க, இவனுடைய பூர்வத்தில் ஒரு தோஷம் மருவிற்று. அவ்வினை எவ்வாறு இவனை அடைந்தது. முனிவரே! சொல்லுங்கள்.

16. முன்சென்மம் மலையிநாடன்னி லுதித்தனன் சைவசேயாய்ப்
பொன்பல உடையனுகிப் புகழ்ச்சியாய் வாழும்நாளில்
கன்னிகற் புடையாள்தேவி கழறினன் கட்டுவார்த்தை
அன்னவள் மனதுவாடி அறைகுவாள் சாபம்தானும்.

16. போன ஜன்மத்தில் மலையாள நாட்டில் சைவக் குழந்தையாய் உதித்தான். பொருள் அதிகமாகப் படைத்து புகழுடன் வாழ்ந்து வரும் நாளில், கற்புடைய மங்கையைப் பார்த்துப் போக்கிரித்தனமாக வார்த்தையைப் பேசினன். அவளும் மனவருத்தத்துடன் சாபம் கொடுக்கலானுள்.

17. நிந்தைகள் சொன்னபாவி நேரும்பின் சென்மம்தன்னில்
விந்தையாய் வார்த்தையின்றி மேதினி தன்னில்வாழ்வாய்ச்
சிந்தையும் கலக்கமாகித் தெருத்தூளைத் தூற்றிச்சென்றாள்
[1]அந்தர வாசிதானும் அதுததாஸ்து[2] என்றுபோனார்.

17. என்னை அவதூறுகப் பேசினபாவிக்கு, அடுத்த ஜன்மத்தில் பேச்சு வார்த்தையில்லாமல் வாயடைத்துப்போய் உலகினில் வாழ்வான். புத்தியும் மாருட்டமடையவேண்டும் என்று, தெருவிலிருக்கும் புழுதிமண்ணை வாரி இறைத்தாள். ஊளவுளும் இவள்சாபம் பலிக்கும் என்று சொல்லிப்போனார்.

18. பாலகன் அந்நியத்தில் பற்களில் பிணியுமாகிக்
காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனுல் வரியப்பட்டு
ஞாலமேல் உதிப்பானுகும் நாயகி கற்பின்சாபம்
ஆலம்போ லணுகுமென்றே மிவன்வார்த்தை காணுகும்.

1. கடவுள்
2. அப்படியே ஆகுக.

18. இவன் அந்தியகாலத்தில் பற்களில் பிணிகள் ஏற்பட்டு எமலோகம் சென்முன். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு உலகினில் அவதரிப்பான். கற்புடைய நாயகியின் சாபம் ஆலகாலவிஷம்போல் இவனை வந்து சேர்ந்தது. அவனும் ஊமையாக இருந்தான். பேச்சுவார்த்தைகளைக் காணுன்.

19. கன்னிகை சாபம்தீரக் கழறுவீர் சாந்திதானும்
என்னசாந் திகள்செய்தாலும் இலகாது கற்பின்சாபம்
சொன்னது போலநேரும் சுதனுக்கு என்றுசொல்வோம்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

19. இக்கன்னிகையின் சாபம் தீருவதற்குண்டான சாந்தியைக் கூறுங்கள். கற்புடைய மங்கையின் சாபத்திற்கு எவ்விதச் சாந்தியும் பலிக்காது. சொன்னபடியே நடக்கும் புத்திரனுக்கும் என்று சொல்லுவோம். உத்தமனைப்பெற்ற உத்தமியே ! கேட்பாயாக.

20. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் மூவெட்டாண்டில்
காதலி தென்பால்நேரும் கழறுவோம் அவள்குணத்தை
நீதிவாள் அடக்கமாவள் நிறம்சீவி நடையும்நன்மை
வேதனை ஒருவர்க்கெண்ணுள் விரதங்கள் பூண்பாளாகும்.

20. ஜாதகனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய இருபத்துநான்காம் பிராயத்தில் பெண்டாட்டி தெற்கிலிருந்து வருவாள். சொல்லுவோம் அவள் குணத்தை. நியாயமாய் நடப்பவள். அடக்கமுடையவள். சிவப்பு நிறமுடையவள். சிரஞ்சீவியாயிருப்பாள். நல்ல நடத்தை யுடையவள். பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டாள். விரதங்களை அனுஷ்டிப்பாள்.

21. வருவோரை யாதரிப்பாள் மறுத்துரை அதிகம்கூறுள்
குறையென்றோர்க் குதவிசெய்வள் கொழுந்தன் தன் மனம்
[போல்வாழ்வள்
அறிவுளாள் சிவந்தமேனி அன்னம்போல் நடையுளாமே
குறைசொலாள் இளமனத்தாள் பூவைக்கு வயதுதீர்க்கம்.

21. வரும் விருந்தினரை ஆதரிப்பாள். அதிகமாய்ப் பதில் சொல்ல மாட்டாள். இல்லை என்போருக்கு ஒத்தாசை செய்வாள். புருஷன் மனம்போல் குறிப்பறிந்து நடப்பாள். புத்திசாலி. சிவந்தமேனியை யுடையவள். அன்னம் போன்ற நடையை யுடையவள். குற்றங்குறைகள் கூறமாட்டாள். இரக்கமுள்ள மனதை யுடையவள். இவளுக்கு வயது தீர்க்கம்.

22. எப்படி வயதுதீர்க்கம் ஏழினுக் குடையோன்தானும்
தப்பாத சரத்திலேறச் சாற்றினீர் தீர்க்கமெவ்வார்
அப்படி சொல்லொண்ணுது அந்தணர் குடும்பம்நிற்க
மைப்படி மாதுஒன்று மருவாது வேறுதாரம்.

22. எப்படி வயது தீர்க்கம் என்று சொன்னீர்? இலக்கினத்திலிருந்து ஏழாமிடத்திற்கு உடைய சுக்கிரன் சரராசியில் தங்க (கடகராசியிலிருக்க), தீர்க்காயுசு என்று எப்படிச் சொல்லுவீர்? அப்படிச் சொல்லுவதற்கில்லை. வியாழன் குடும்பஸ்தானத்திலிருக்க, ஒரே பெண்டாட்டிதான். வேறு தாரம் நேரிடாது.

23. சுதர்களும் இருநான்காகத் தோன்றுமே பாலனுக்குப்
பதராகும் சிலதுஎன்றேம் பஞ்சமம் குசனுலேதான்
சதமுடன் ஆண்பால்ரெண்டு தையலு மூவராகும்
இதுஐந்தும் தீர்க்கசீவி எய்தாது முதலில்ரண்டு.

23. இவனுக்கு எட்டுக் குழந்தைகள் பிறக்கும். சில மரித்துப்போம். இது பஞ்சமஸ்தானத்தைக் கொண்டு சொல்லுவோம். குசன் பஞ்சமத்தில் இருப்பதையும் பார்க்க. ஒழுங்காக ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகள் மூன்று பேர்கள். இவை ஐந்தும் தீர்க்கசீவிகள். முதல் இரண்டு குழந்தைகள் இருக்கா.

24. இருமூன்று சென்னம்தோஷ மெய்திடு மென்று [சொல்வோம்
திருமகன் பூர்வம்சொல்வோம் செந்திமா மலையிலேதான்
பெருமையாய்ச் சைவசேயாய்ப் பிறந்துமே வறுமையின்றி
அறிவையும் மதலையுண்டாய் அறமதில் இச்சைவைத்து,

24. இந்தப் புத்திரதோஷம் ஆறு ஜன்மங்களுக்கு ஏற்படும் என்று சொல்லுவோம். இவனுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவோம். செந்திமாமலையில் பெருமையுடன் சைவக்குழந்தையாய்ப் பிறந்து, வறுமைகளின்றி, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, தருமஞ்செய்வதை விரும்பி,

25. வினையது இல்லாதாகி மேவிடும் காலனுடு
கனமுள பிரமன்லக்கம்.காரூர்தி குலமேதோன்றும்
சினமிலா இவனின்யோகம் செப்புவோம் இனிமேலாக
வினைசெய்வான் யாவருக்கும் மேதினில் புகழுமேற்பன்.

25. பவவினைகளில்லாமலே எமலோகம் செல்லுவான். பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு வண்ணுன் குலத்திலுதித்தான். இவனுடைய யோகத்தை இனி மேலாகக் கூறுவோம். யாவர்க்கும் தொழில் செய்வான். உலகினில் புகழ் ஏற்பான்.

26. தந்தைமேல் வாழ்வானுகும் தரணிகள் சேர்ப்பானென்றேும்
தன்தனம் கொடுக்கல்வாங்கல் தரியவர்[1] வெற்றிகொள்வன்
தன்பந்துவுக் கிணக்கம்சொல்லான் தங்கிடும் பித்தகூடு
தன்பந்தை யாதரிப்பன் சாராள்கள் உடையனுமே.

26. தந்தைக்குமேல் யோகவானுயிருப்பான். பூமிகள் சேர்ப்பானுகும். தன் பணத்தைக் கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்வான். பகைவர்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுவான். சொந்தக்காரர்களுக்கு இணக்கமான வார்த்தைகளைச் சொல்லான். பித்தகூட்டிஞல் வேதனைப்படுவான். சொந்தக்காரர்களை ஆதரிப்பான். பரிஜனங்களை யுடையவன்.

27. பருவத யோகமொன்றும் பகருமா லிகாயோகங்கள்
இருவித யோகத்தாலே எப்போதும் வறுமைநேரா
திருப்பணி செய்வானுகும் சேர்ந்தவர் தம்மைக்காப்பன்
இரணிய வேலைதன்னுல் எய்திடும் லாபமென்றேும்.

27. பருவதயோக மென்றும், மாலிகாயோக மென்றும் இதைக் கூறு வார்கள். இந்த இரண்டு யோகங்களாலே தரித்திரமே இருக்காது. கடவுள் வழிபாடுகள் செய்வான். அண்டினேரைக் காப்பான். பொன் வேலைகள் செய்து லாபங்களைப் பெறுவான்.

28. இன்னமும் விபரமாக இயம்புவோம் பின்பாகத்தில்
அன்னையின் குணத்தைச்சொல்வேன் அழகுளாள் மாநு
[சிவப்பள்
தன்வரன் மனதுக்கேத்தோள் தயவாளி இளமனத்தாள்
முன்கோபம் உடனேசாந்த முயர்வான புத்தியேற்பள்.

28. இன்னமும், பின்பாகத்தில் விவரமாய்க் கூறுவோம். அன்னையின் குணங்களைக் கூறுவோம். அழகுடையவள். மாநிறமுள்ளவள். புருஷன் மனம் போனபடி நடப்பாள். தயை யுடையவள். இரக்கபுத்தி யுள்ளவள். முதலில் முன்கோப முள்ளவள். பிறகு சாந்தியடைவாள். மேலான புத்தி மதிகளை ஏற்றுக்கொள்ளுவாள்.

29. அன்னையும் வந்துபின்பு அணுகிடும் செல்வம்தானும்
தன்துணை ஆண்பால்ரெண்டு தங்காது மத்திலேகும்
கன்னிகை இருவர்தீர்க்கம் கலக்கமாய் வாழ்வாளாகும்
முன்சென்மம் பாண்டிதன்னி லுதித்தனள் வைசியசேயாய்.

1. விரோதிகள்

29. அன்னையும் வருவாள். பின்பு செல்வமும் கூட வந்து சேரும். அவளுடைய சகோதரர்கள் இருவர். மற்றப் பிறவிகள் தங்கா. தம்கைமார் இருவர் நிச்சயம். மனக்கலக்கத்துடன் வாழ்வாள். முன்ஜன்மம் பாண்டிய நாட்டில் வைசியக் குலத்திலுதித்தாள்.

30. சுகமுள குடும்பியாகிச் சுந்தரி வாழ்ந்துமேதான்
இகபரம் பக்திபூண்டு இடரென்றோர்க் குதவிசெய்து
பகையான காலனோடு பறந்தனள் வரன்முன்னாகச்
செகபதி வரியப்பட்டுச் செனித்தன ளென்றுசொல்வோம்.

30. சுகமான குடும்பத்துடன் இச்சுந்தரி வாழ்ந்து வரும் நாளில், பகவானிடத்தில் பக்திபூண்டு, கஷ்டப்படுகின்றோர்க்கு ஒத்தாசை செய்து, தன் புருஷனுக்கு முன்பே சுமங்கலியாக எமலோகம் சேர்ந்தாள். பிரம்மா வினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தனள் என்று சொல்லுவோம்.

31. மறுசென்மம் கொங்குநாட்டில் வருகுவாள் இக்குலத்தில்
நிறையவே குடும்பியாகி நிமலியும் வாழ்வாளாகும்
பெரும்தந்தை பூர்வம்சொல்வேன் பிழைதீர்க்கு மருணை
[தன்னில்
கருணிக குலமுதித்துக் கனராசர் பேட்டிகொண்டு,

31. அடுத்த ஜன்மம் மலையாளத்தில் இக்குலத்தில் வருவாள். பெரிய குடும்பியாகி இவளும் வாழ்ந்து வருவாள். பெருமை பொருந்திய தந்தையின் பூர்வோத்தரத்தைச் சொல்லுவோம். பிழை தீர்க்கும் திருவண்ணாமலையில் கணக்கர் குலத்திலுதித்து, கௌரவமாக ராஜாக்கள் பேட்டி கொண்டு,

32. அன்னகர்க் கணக்குவேலை அவனுமே செய்துவந்து
பொன்னிலா ஏழையோர்க்குப் பிழைகளும் செய்தா
[னென்றோம்
அன்னவர் மனதுவாடி அரைந்தசா பத்தைக்கேண்மோ
பின்சென்மம் சுதனால்பாதி போகிடும் தந்தநோயும்.

32. அவ்வூர் கணக்குவேலை பார்த்து வந்ததில், பணமில்லாத ஏழை களுக்குப் பிழைகள் செய்தான் என்றோம். அவர்களும் மனவருத்தமடைந்து சாபம் கொடுத்தார்கள். அதைக் கேளுங்கள். பின்ஜன்மத்தில் பாதி புத்திரனால் போகும். பல்நோயும் ஏற்படும்.

33. தன்துணை ஒக்காதாகித் தனியனாய் வாழ்வாய்நீயும்
இன்னமும் சிலதுசொன்னார் எய்திற்று அந்ததோஷம்
மன்னனும் அந்தியத்தில் வளமுள காசிசேது
சென்றுமே மரணமாகிச் செகபதி வரியப்பட்டு,

33. தன் சகோதரன் ஒத்துப்போகாததனுல் தனியே வாழ்வாய் நீயும். இன்னமும் இதுபோல் மற்றவையும் சொன்னுர்கள். அந்த தோஷம் இவனைச் சார்ந்தது. இவனும் அந்திய காலத்தில் வளப்பம்பொருந்திய காசி க்ஷேத்திரமடைந்து, கங்காஸ்னனம் செய்து, ராமேசுவரம் சென்று சேது ஸ்னனம் செய்து மரணமடைந்தான். பிறகு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப் பட்டு,

34. இந்ததோர் குலமுதித்தான் எய்திடும் ஏழைசாபம்
தன் துணை பிரிதலாகும் தந்தமும் குறைவுண்டாகும்
மைந்தரும் குற்றமெய்தும் மாமுனி தடுத்துச்சொல்வார்
முந்திய கர்ணசேயாய் உதித்தவ னிச்சென்மத்தில்.

34. இந்தக் குலத்திலுதித்தான். ஏழைகளுடைய சாபம் நேர்ந்தது. தன் சகோதரனைப் பரிகொடுப்பான். பற்களும் உதிர்ந்து கணக்கில் குறைவுபடும். புத்திரதோஷ மேற்படும். இதைக் கேட்டு மகாமுனி தடுத்துச் சொல்லுவார். கர்ணசேயாய் இந்த ஜன்மத்தில் உதித்தவன் இவனே.

35. இக்குலம் வருவதென்ன இயம்புவீர் முனியேநீதான்
முக்கியம் காசிசேது முயன்றதோர் பலத்தினுலே
தொக்கினு ரென்றுசொல்வோம் துன்பங்கள் விலகாதோ [சொல்
திக்கிலா ஏழைசாபம் சாணையின் வாள்போலொக்கும்.

35. இந்தக் குலத்தில் ஜனித்ததன் காரணமென்ன? சொல்லுவீர் முனியே! நீர்தான். முக்கியமாக, காசி, சேது முதலான க்ஷேத்திராடனம் செய்ததன் பலனுலே இக்குலத்தில் உதித்தான் என்று சொல்லுவோம். துன்பங்கள் இன்னமும் விலகாதோ, சொல்லுங்கள். திக்குத் திசையில்லாத ஏழைகளுடைய சாபம், சாணை தீட்டிய வாளை ஒக்கும்.

36. வரும்சென்மம் புலியூர்தன்னில் வருகுவான் இக்குலத்தில்
சிறுமைகள் இல்லாவாழ்வன் செப்புவோம் கருமகாலம்
அறுஅஞ்சு நாலுஆண்டில் அரைகுறேம் தந்தைகெண்டம்
மறுஆண்டில் அன்னைகெண்டம் வருத்தின மொழிகுன்ருது.

36. அடுத்த ஜன்மம் சிதம்பரத்தில் இக்குலத்தில் வருவான். சிறுமைகள் இல்லாமலே வாழ்வான். இவனுடைய கருமகாலத்தைக் கூறுவோம். இவனுடைய முப்பத்திநாலாம் வருடம் தந்தையின் கண்டம் ஏற்படும். அதற்கு அடுத்த வருஷம் அன்னையின் கண்டம் ஏற்படும். சொன்ன சொல் தவருது.

37. அறுபது ஏழுஆண்டில் ஆடிமா தத்திலேதான்
திருமகன் உடலமேகும் செப்புவோம் இவன்பின்சென்மம்
பெருமையாய்க் காளாத்திதன்னில் பிறப்பனும் க்ஷத்ரிய
[சேயாய்க்
கரிபரி யுடையனுகிக் காவலன் வாழ்வானுகும்.

37. ஜாதகனுடைய மரணம் அவனுடைய அறுபத்தேழாம் ஆண்டில், ஆடி மாதத்தில் ஏற்படும். இவனுடைய அடுத்த ஜன்மத்தில், பெருமையாய்த் திருக்காளத்திதன்னில் க்ஷத்திரிய குலத்தில் பிறப்பானும். கரிபரிகள் உடையவனுய்க் காவலன் வாழ்வானுகும்.

38. பாரியும் இவன்பின்னுலே பகருவோம் மாரகங்கள்
மாரனும் செனனகாலம் வரும்பூசம் மூன்றும்பாதம்
காரியின் திசையிருப்புக் கூறுவோம் ஆண்டுஎட்டும்
சேர்திங்கள் ஏழேயாகும் செப்பினேம் பூர்வபாகம்.

38. இவன் பெண்டாட்டியும் இவனுக்குப் பிறகு இறப்பாள். இவனுடைய ஜனனகாலத்தில் பூசநட்சத்திரம் மூன்றும் பாதம். சனி தசையில் இருப்பு வருடம் எட்டு, மாதம் ஏழாகும். இதுவரை பூர்வபாகம் சொன்னேம்.

சத்தம முனிவர் சுத்தமாய்ச் சொன்னேம்
குத்தங்கள் யாவும் வித்தகி பொறுப்பாள்.

ஜாதகம் 44

1. மதிபுதன் வீணையாக மறைகோலில் ஞானிகன்னி
விதியவன் மானதாக வெள்ளியும் மேடமாகத்
ததிகயர் மீனமாகத் தபனனும் நந்திபுக்க
இதுவிதக் கோளும்நின்று லக்கினம் கொச்சையாக.

1. சந்திரனும் புதனும் மிதுனத்திலும், குரு துலாத்திலும், கேது கன்னியிலும், சனி மகரத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், ராகு மீனத்திலும், சூரியன் ரிஷபத்திலும், செவ்வாய் பாக்கியஸ்தான (ஒன்பதாமிட)த்திலும் தங்கும்படியான கிரகநிலை கொண்ட இந்த மேஷ லக்கின ஜாதகத்திற்குண்டான, (16, 36, முதலிய செய்யுட்களையும் இதனுடன் ஒப்பிடுக.)

ராகு	லக்கினம் சுக்கிரன்	சூரியன்	சந்திரன் புதன்
	இராசி		
சனி	சக்கரம்		
செவ்வாய்		குரு	கேது

2. பலன்தன்னைச் சொல்லுமென்னப் பராசரும் புகலுகின்றார்
நலமுள ஆண்பால்ஜென்மம் நவிலுவோம் இல்லம்தானும்
குலவிய வடதென்வீதி குடகுதன் வாசலாகும்
அலைகடல் துயின்றோன்கோஷ்ட மணுகிடு மேற்கிலேதான்.

2. பலாபலன்களைச் சொல்லுமென்று பார்வதிதேவி கேட்க, பராசர முனிவரும் சொல்லலுற்றார். இது நன்மையுள்ள ஆண்பால் ஜன்மம். ஜாதகனுடைய வீட்டைப்பற்றிக் கூறுவோம். வடக்குத்தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வாசலாகும். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் விஷ்ணுவின் கோவில் மேற்கே யுள்ளது.

3. வடகீழ்பால் ஈசன்கோஷ்டம் மார்காளி உத்திரமாகும்
அடவுடன் அருகர்தென்கீழ் அதின்கீழ்பால் கன்னிவாசம்
திடமான ஊரேயாகும் சினகுலம் ஆறும்ஜென்மம்
உடன்துணை களத்திரபுத்திரர் உறும்தந்தை தாயின்
[யோகம்.

3. வடகிழக்கே ஜகதீசன் கோவில். வடக்கே மகாகாளி கோவில். ஒழுங்குபட அருகர் சன்னிதி தென்கிழக்கே யுண்டு. அதன் கிழக்கே லட்சுமீ நடை. அது பலமான ஊர்தான். ஜாதகன் சைனர் குலம். இஃது அவனுடைய ஆறும் ஜன்மம். இவனுடன் பிறந்தவர், களத்திரபுத்திர், தாய்தந்தையர் இவர்களுடைய யோசங்கள்,

4. சாதகன் யோகச்சேதி சாற்றுவோம் முன்பின்சென்மம்
ஓதுவோம் இன்னூல்தன்னில் உறும்தந்தை துணையாண்
[ரெண்டு
மேதினில் விருத்தியென்றேம் விளங்காது சுதர்ஒன்றுக்குப்
பாதிதன் வயதிலேதான் பறப்பனும் காலநாடு.

4. ஜாதகனுடைய யோகச்சேதி, அவனுடைய முன்பின் ஜன்மம் இவைகளை விவரமாக இந்தப் புஸ்தகத்தில் கூறுவோம். தந்தையின் துணைவரான இரு சகோதரர்கள் உலகினில் விருத்தியடைவார்கள் என்றேம். அவர்களுக்குக் குழந்தையே கிடையாது. ஒருவன் பாதி வயதிலேயே எமலோகம் போய்ச்சேருவான்.

5. மற்றொரு துணைவனுக்கு மைந்தராண் ஒன்றேதீர்க்கம்
சுத்தமாய்ப் பெண்பால்நான்கு தோன்றிடும் வேறாய்ச்
[செல்வன்
வித்தகன் தந்தைசெய்தி விளம்புவோம் மாஞ்சிவப்பன்
குத்தமில் லாதானுகும் புன்சிரிப் புடையனுமே.

5. மற்றொரு சகோதரனுக்கு ஆண் குழந்தை ஒன்று நிச்சயம். நான்கு பெண்கள் பிறக்கும். இவன் வேறாகச் செல்லுவான். ஜாதகனுடைய தந்தையின் செய்தி கூறுவோம். மாநிற முடையவன். குற்றமில்லாதவனுவன். புன்சிரிப் புடையனுவன்.

6. ஆதியில் வறுமைகொஞ்சம் அவன்தந்தை யாஸ்திஅவ்வார்
வாதமே கத்தானுகும் மனைவியும் வந்தபின்பு
சீதள பிறைபோல்யோகம் செய்நிலம் சேர்தலுண்டு
ஓதுவான் சுகமாய்வார்த்தை உள்மனம் கபடுமில்லான்.

6. ஆரம்பத்தில் வறுமைக்கொடுமை கொஞ்சம். அவன் தந்தையின் ஆஸ்தியும் கொஞ்சம். வாதசரீரமுடையவன். பெண்டாட்டி வந்தபிறகு வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஓங்கும். விளைநிலம் சேரும். சுகமான வார்த்தைகளைப் பேசுவான். மனதில் கபட மில்லாதவன்.

7. கிருஷிகள் செய்வானாகும் கௌரவக் குடும்பம்பின்னால்
தரையினில் சல்லியம்கொள்ளான் சாதமும் அன்பாயீவன்
குறையென்றோர்க் குதவிசெய்வன் கூறுமுன் கோபம்
[கொஞ்சம்
அருகர்தன் பத்திகொஞ்சம் அரிரேகை கரத்திலுள்ளான்.

7. கிருஷிகள் செய்வானாகும். பின்னால் கௌரவமுள்ள குடும்பத்தை வகிப்பான். உலகினில் கடன் வாங்கமாட்டான். அன்புடன் அன்னமளிப்பான். இல்லை என்போருக்கு ஒத்தாசை செய்வான். முன்கோபம் சிறிது உள்ளவன் என்று சொல்லுவார்கள். அருகக்கடவுளிடம் பக்தி பூண்டவன். கையில் விஷ்ணு ரேகையை யுடையவன்.

8. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் மாஞ்
[சிவப்பன்
தன்சொல்லு மடக்கமுண்டு தந்தமும் பெரிதாய்க்காட்டும்
முன்கோபம் பின்புசாந்தம் மூலகூ டுடையனாமே.

8. இத்தகைய குணங்களையுடைய தந்தைக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பானாகும். அவனுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவோம். அழகுடையவன். மாநிற முள்ளவன். நாவடக்கத்துடன் பேசக்கூடியவன். பெரிய பற்களை யுடையவன். முதலில் கோபப்பட்டுப் பின்பு சாந்தமடைவான். மூலச்சூட்டின் உபத்திரவ முடையவன்.

9. கல்வியும் சமமதாகும் கபடர்பால் சேரானாகும்
இல்லையென் றுரைக்கமாட்டா னிடர்செய்யான் யாவருக்கும்
அல்லலென் றோரைக்காப்பன் அருகர்தன் பக்திபூண்பன்
தல்லிமேல் பிரியனாகும் தந்தைக்குச் சமமாய்வாழ்வன்.

9. சமமான கல்வியை யுடையவன். கபடமுள்ளவர்களுடன் சேரமாட்டான். எவருக்கும் இல்லை என்று சொல்லமாட்டான். எவருக்கும் துன்பம் செய்யமாட்டான். சிரமப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்வான். அருகக்கடவுளிடம் பக்தி பூண்டவன். பெண்டாட்டியின்மேல் பிரியமுடையவனாகும். தகப்பனுக்குச் சமமான ஸ்திதியில் இருந்து வாழ்வான்.

10. உண்டியு மல்பமாகும் உணவுகள் அதிகம்கொள்வன்
குண்டுணி கூறானாகும் குலவிடும் சகடுதானும்
எண்டிசை தான்யச்செட்டு எய்திடும் அறத்திலிச்சை
கண்டித வார்த்தையில்லான் கரமதில் கமலரேகை.

10. கொஞ்சமாகச் சாப்பிடுவான். பலவிதமான ஆகாரங்களைப் புசிப்பான். கோள், குண்டினி சொல்லமாட்டான். வண்டி வாகனம் உடையவன். எட்டுத் திக்குகளிலும் தானியவியாபாரம் செய்வான். தருமம் செய்வதில் விருப்பமுடையவன். கண்டிப்பான வார்த்தைகளைச் சொல்ல மாட்டான். செங்கையில் தாமரைரேகை விளங்கும்.

11. இவனுட துணைவர்தன்னை இயம்புவோம் பின்னோர்காணுன்
நவனியில் முன்ஆண்மூன்று நாயகிஒன்று தீர்க்கம்
அவள்சேதி நற்குணத்தாள் அழகுளாள் சிவந்தமேனி
தவசிகட் கன்னமீவள் தன்வரன் அருகில்தெற்கில்,

11. இவனுடைய சகோதரத்தைப்பற்றிக் கூறுவோம். தம்பிமார் களில்லை. மூத்த தமயன்மார் மூன்றுபேர்கள். தமக்கை ஒருத்தி தீர்க்கம். அவளைப்பற்றிய செய்திகளைக் கூறுவோம். நல்ல குணத்தை யுடையவள். அழகுள்ளவள். சிறந்த சரீரத்தோற்றமுள்ளவள். தபசிகளுக்கு அன்ன பானுதிகளைக் கொடுப்பாள். தெற்குத்திக்கின் சமீபத்தில் புருஷன்,

12. நேரிடும் என்றுசொல்வோம் நிமலியும் வறுமைகாணுள்
பாரினில் விரதம்பூண்பள் பாலர்கள் ஆண்பால்மூன்று
நாரியும் ஒன்றேதீர்க்கம் நடைக்கையும் நல்லதாகும்
தீரமில் லாதநெஞ்சம் சீலியா மென்றுசொல்வோம்.

12. வாய்ப்பான், என்று சொல்லுவோம். இவளும் தரித்திரத்தை அனுபவிக்க மாட்டாள். உலகினில் விரதங்களை அனுஷ்டிப்பாள். மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் நிச்சயமாய் உண்டு. நல்ல நடத்தை யுடையவள். தைரியமில்லாத மனதை யுடையவள். சீலமுள்ளவள் என்று சொல்லுவோம்.

13. மற்றஆண் துணைகள்சேதி வரைகுவோம் பின்பாகத்தில்
வித்தகன் மணத்தின்காலம் விளம்புவோ மிருபானெட்டில்
சத்தியும் தென்பால்தன்னில் சகோதரி வர்க்கம்தன்னில்
பத்திய அருகிலேதான் பாவையும் வருவாளாமே.

13. மற்ற ஆண் துணைவர்களைப்பற்றிய விவரம் பின்பாகத்தில் எடுத்துரைப்போம். ஜாதகனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இவனுடைய இருபத்தெட்டாம் பிராயத்தில் தெற்குதிக்கிலிருந்து, தன் சகோதரி வமிசத்திலிருந்து பெண்டாட்டி வருவாள். நெருக்கமான பந்துக் கள் வழியில்தான் மனைவி ஏற்படுவாள்.

14. மாதுவின் குணத்தைச்சொல்வேன் மாஞ்சிவப் [புடையளாகும்
தீதிலாள் நற்குணத்தாள் தீங்கதை மனதில்லையாள்
காதலி யோகசாலி கணவனுக் கினியளாகும்
நீதியாய் விரதம்பூண்பள் நேர்ந்திடும் அன்னைரெண்டு.

14. இவனுடைய பெண்டாட்டியின் குணாதிசயங்களைக் கூறுவேன். மாநிறமுள்ளவள். கெடுதலில்லாதவள். நல்ல குணபூஷணி. மனதினாலும் கெடுதலை நினைக்கமாட்டாள். இவள் நல்ல யோகசாலி. புருஷனுக்குப் பிரியமாய் நடப்பாள். தருமநெறி தவறாமல் விரதங்களை அனுஷ்டிப்பாள். இரண்டு தாயார்கள் அமைந்திடுவார்கள்.

15. தன்துணை காணுளாகும் சலித்தோர்க்கு அன்னமீவள்
முன்தாய்க்கு உதித்தமாது மொழிவது சுகமேயாகும்
கன்னியாள் லாபமெய்தும் கடவுளர் பக்திபூண்பள்
அன்னவள் வயதுதீர்க்கம் அத்திரி சொல்லுகின்றார்.

15. உடன்பிறப்பில்லாதவள். ஏழைகளுக்கன்னமீவள். தாய்மார் மொழிவது சுகமேயாகும். நல்ல லாபத்தை அடைவாள். கடவுளுடைய பக்தி பூண்பாள். அவளுக்குத் தீர்க்காயுசு. இதைக் கேட்ட அத்திரி சொல்லலுற்றார்.

16. ஏழினுக் குடையோன்சென்மம் இருந்திடும் சரமேயாக
ஏழிடம் காரிபார்க்க எய்திடும் தாரம்ரெண்டு
ஏழிடம் பொன்னோன்நிற்க இரவியும் ரெண்டில்தங்க
ஏழுக்கு ஏழோன்தானும் இன்பமாய்ப் பாக்கியமேற,

16. ஏழாமிடத்திற்குரிய சுக்கிரன் லக்கினத்திலிருப்பதனாலும், சர ராசியிலிருப்பதனாலும், ஏழாமிடத்தைச் சனி பார்ப்பதனாலும் இரண்டு தாரங்கள் உண்டு. மேலும், ஏழாமிடத்தில் குரு இருப்பதாலும், குடும்ப ஸ்தானத்தில் சூரியனும் தங்குவதாலும், ஏழாமிடத்திற்கு ஏழோனாகிய செவ்வாய் பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தில் தங்குவதாலும்,

17. பாரியும் ஒன்றேயாகும் பகரொணு அந்தச்சங்கை
நாரிக்கு உத்திரைரெண்டு நல்கிடும் சங்கைசொல்லாய்த்
தீரமாய்க் கள்ளனாலே சிதறிடும் முதல்மாங்கலியம்
ஆறாறு ஆண்டுதன்னில் அவ்விதி நடக்குமென்றோம்.

17. பெண்டாட்டியும் ஒருத்திதானாகும். அந்தச் சங்கையைச் சொல்லுவதற்கில்லை. பெண்டாட்டிக்கு இரண்டு கலியாணம். இந்த சமுசயத்தைக் கூறுவோம். முதல் மாங்கலியம் கள்ளனால் வீணாகும். அதுவும் முப்பத்தாறாம் பிராயத்தில் அவ்விதியாலேற்பட்ட அவ்வினை ஏற்படும் என்றோம்.

18. அதுவன்றி தாரம்ஒன்றே அறைந்தனம் திர்க்கமாகப்
புதல்வர்கள் சேதிசொல்வேன் புறந்திடும் ஏழேயாக
அதுகளில் ஆண்பால்மூன்று அம்பிகை மார்கள்ரெண்டு
இதுவைந்தும் தீர்க்கமெய்தும் இயம்புவோம் விபரமாக.

18. அதுவில்லாமல் தாரம் ஒன்றே என்று கூறுவோம். நிச்சயமாகப் புதல்வர்களுடைய செய்தி சொல்வோம். ஏழே குழந்தைகள் பிறக்கும். அவற்றில் ஆண் குழந்தைகள் மூன்றும், பெண் குழந்தைகள் இரண்டும், ஆக ஐந்து பேர்களும் தீர்க்கம் என்று விவரமாய்ச் சொல்லுவோம்.

19. மாதுரு குணத்தைச்சொல்வேன் மர்மமில் லாதாளாகும்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உறுதியில் லாதநெஞ்சம்
மாதவர்க் கன்னமீவள் வந்தபின் வரன்தன்யோகம்
காதலி நடக்கைநன்மை கண்முக வசியமுண்டு.

19. மாதாவின் குணங்களைச் சொல்லுவேன். ரகசியமில்லாதவளாவள். சுகமான வார்த்தைகளைக் கூறுவாள். மனதில் நிச்சயபுத்தி யில்லாதவள். தபசிகளுக்கு அன்னங் கொடுப்பாள். கலியாணம் ஆன பிறகு அவளுடைய புருஷனுக்கு யோகம் வாய்க்கும். அவளுடைய நடத்தையும நல்லது. கண்களாலும் முகத்திலும் பிறரை வசியப்படுத்துவாள்.

20. அவளுட துணைஆண்மூன்று ஆதியில் ஏகுமென்றோம்
தவசியே பெண்பாலொன்று சாற்றுவோம் விருத்தியுண்டு
நவனியில் அவர்கள்ஆஸ்தி நல்கிடும் இவனுக்கேதான்
பவமுள இல்லமுள்ளூர் பால்பாக்கிய முடையளாமே.

20. அவளுடன் பிறந்த சகோதரர்கள் மூவர். அவர்கள் இவளுக்கு முன் பிறந்தவர்கள். தங்கை ஒருத்தி உண்டு என்று சொல்லுவோம். இவர்கள் விருத்தியடைவார்கள். உலகினில் அவர்களுக்கேற்பட்ட ஆஸ்தி இவளுக்கே வந்துசேரும். வீடு உள்ளூரிலேயே கிடைக்கும். பால் பாக்கிய முடையவளாகும்.

21. அருகர்தன் பக்திபூண்பள் யாவர்க்கும் நல்லோளாவள்
குறையின்றி வாழ்வாளாகும் கூறுவோ மிவள்முன்சென்மம்
திருவண்ணு மலைக்குமேற்கில் செனித்தனள் கங்கைசேயாய்
வரன்சுதர் உடையாளுகி வருமைக ளின்றிவாழ்ந்தாள்.

21. அருகக்கடவுளிடம் பக்தி பூண்டவள். யாவர்க்கும் நல்லவளாவள். குறைவின்றி இவள் வாழ்ந்து வருவாள். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். திருவண்ணுமலைக்கு மேற்கில், வேளாளர் குலத்தில் ஜனித்தாள். புருஷன், பிள்ளைகள் உடையவளாகி, தரித்திரமில்லாமல் வாழ்ந்து வரலாயினள்.

22. வினையதைப் புகலக்கேண்மோ வேதிய மாதுபேரில்
சினம்கொண்டு தூருசொன்னாள் செப்புவா ளந்தமாது
கனமான பழியைச்சொன்னாய்க் காதலி பின்சென்மத்தில்
துணையாண்பால் இல்லாதாகித் தாயில்லம் நாஸ்தியாயும்,

22. அப்பொழுது ஊழ்வினையொன்று ஏற்பட்டது. அதைக் கேட்பாயாக. ஒரு பிராமண ஸ்திரீயின்பேரில் கோபித்து, அவதூறுகளைக் கூறினார். அம்மாது சொன்னதாவது—கடுமையான பழி வார்த்தைகளைக் கூறினாய். உன்னுடைய மறு ஜன்மத்தில் உடன்பிறந்தவனில்லாமல் தாயார் வீட்டிலும் ஒன்றுமில்லாமல்,

23. முதல்சுதர் தோஷமாயும் மேதினில் வாழ்வாயென்று
அதிபதி சொல்லிச்சென்றார் வான்முனி ததாஸ்துஎன்றார்
அதுவின்றி வேறுகாணாள் அந்தியில் தலங்கள்சென்று
அதிதிகட் கன்னமீந்து அவளுமே மரணமாகி,

23. தலைமையாய்ப் பிறக்கும் பிள்ளை தோஷமடையும். இப்படி நீ உலகினில் வாழக்கடவாய் என்று சொல்லிச் சென்றாள். முனிவரும் அப்படியே ஆகட்டும் என்றார். அது தவிர, வேறு தோஷங்களைக் காணாள். கடைசி காலத்தில் ஸ்தலங்களுக்குப்போய், அதிதிகளுக்கு அன்னமளித்து, அவளும் மரணமடைந்து,

24. காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனால் வரியப்பட்டுச்
சீலமாம் குலத்திலேதான் செனித்தன ளென்றுசொல்வோம்
ஞாலமேல் வறுமைகாணாள் நமன்பதி முப்பானைந்தில்
சீலியும் செல்வாளாகும் செப்புவோம் இவன்பின்சென்மம்.

24. எமலோகம் சென்றாள். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு மேன்மையான குலத்திலே ஜனிக்கலானாள் என்று சொல்லுவோம். உலகினில் தரித்திரத்தை அனுபவியாள். முப்பத்தைந்தாம் பிராயத்தில் எமலோகம் செல்லுவாள். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம்.

25. அங்கர் தன்னிலேதான் அவர்சுதர் பௌத்திரியாக
இன்னவள் விழிப்பாளாகும் இயம்புவோம் தந்தைபூர்வம்
கன்னியாக் குமாரிஓரம் கனமிலாச் சிற்றூர்தன்னில்
முன்குலம் தனிலுதித்து உயர்வான குடும்பியாகி,

25. அதே ஊரில்தான் அவளுடைய பிள்ளைக்குப் பேத்தியாகப் பிறப்பாளாகும். இனி, ஜாதகனுடைய தந்தையின் பூர்வோத்தரங்களைப் பற்றிக் கூறுவோம். கன்னியாகுமரியின் பக்கத்திலுள்ள, ஒரு சிறிய ஊரில், பிறந்து, மேலான குடும்பத்தலைவனாக இருந்து,

26. வருவோர்க்கு அன்னமீந்து மார்க்கத்தில் தாகப்பந்தல்
அரிபத்தி மிகவேகொண்டு அந்தகன் பக்கல்சென்று
பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தனன் இவனேயென்றோம்
இருபத்தே ழாண்டுதன்னில் இயல்கும்ப மாதம்தன்னில்,

26. வரும் விருந்தினருக்கு அன்னதானம் செய்து, சாலைவழியில் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து, விஷ்ணுவினிடத்தில் அதிக பக்தி பூண்டு எமலோகம் சென்றான். திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவன் இவனே என்றோம். இவன் தன்னுடைய இருபத்தேழாவது பிராயத்தில், மாசி மாதத்தில்,

27. சேருவான் காலனூடு செப்புவோம் இவன்பின்சென்மம்
தீரமாய் வடமேல்தெற்கில் சிறப்பான மலைநாடன்னில்
நாரியே பெருமடத்தில் நல்குவா னிந்தபாலன்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

27. எமலோகம் சேருவான். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். வடமேல் பாகத்தில், தெற்கே சிறப்பான மலைநாட்டினில், பெரிய இடத்திலுதித்த ஸ்திரீக்குப் பிள்ளையாய்ப் பிறப்பான் இவன். ஆறுமுகனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

28. உதித்தவன் பூர்வம்சொல்வேன் உயர்சேது பதியிலேதான்
நிதிமிக உடையானுக்கு நேர்ந்தனன் வைசியசேயாய்ப்
பதியினில் திரிபுமுண்டாய்ப் பாலர்கள் மனைவியாகி
விதவித செட்டுச்செய்து விண்ணவர் பூசைபூண்டு,

28. இப்படி உதித்தவனுடைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். மேவான சேதுக்ஷேத்திரத்திலே அதிக சொத்துக்களையுடைய தனவானுக்கு, வைசியகுலத்தில் உதித்தான். வீட்டில் வேற்றுமையுண்டாகி, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, விதவிதமான வியாபாரங்கள் செய்து தேவர்களைப் பூசித்து,

29. ஆலய பத்திமானாய் அதிதிகட் கன்னமீந்து
ஏலவே பலமில்லாமல் ஏகினன் காலநாடு
சாலவே பிரமன்லக்கம் செனிப்பனும் இந்தபாலன்
கோலமாய் இவனின்யோகம் கூறுவோம் தாயேகேளும்.

29. ஆலயங்களில் பக்திகொண்டு, அதிதிகட்கு அன்னங்கொடுத்து, கடைசியில் பலக்குறைவு அடைந்து, எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறப்பான் இந்த பாலகன் ஒழுங்காக இவனுடைய யோகபாவங்களைக் கூறுவோம். தாயே! கேளும்.

30. ஜெனித்தநாள் முதலாமாகச் சாதகன் மரணம்மட்டும்
குனிக்கிறோம் பலனையாங்கள் குவலயம் சல்லியம் [கொள்ளான்
அன்னமும் குறைவில்லானும் அதீதங்கள் அறிவானுகும்
இனமது மெச்சவாழ்வன் எதிரிகள் நாசம்செய்வன்.

30. பிறந்ததிலிருந்து சாகும் பரியந்தம் உண்டான பலாபலன்களைக் குறிக்கிறோம். உலகினில் கடன் வாங்கமாட்டான். சாப்பாட்டுக்குக் குறைவில்லாதவன். மேலான விஷயங்களை அறிவானுகும். சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். எதிரிகளை நாசம் செய்வான்.

31. தானிய செட்டுச்செய்வன் தந்தைக்குத் தாழ்வுறுதான்
மானமாய்ச் சீவிப்பானும் வண்டிவா கனமுமுள்ளான்
தானமும் தருமமிச்சை சகலருக்கு நல்லோனுவன்
மானனை யார்க்குநேயன் மங்கையே மேலும்கேளே.

31. தானிய வியாபாரங்கள் செய்வான். தந்தைக்குச் சமமான ஸ்திதியிலிருப்பான். மானத்துடன் ஜீவனம் செய்வான். வண்டி வாகனமுமுள்ளவன். தானதருமங்களைச் செய்வதில் இஷ்டமுள்ளவன். யாவருக்கும் நல்லவனுவன். மான்போன்ற விழிகளையுடைய ஸ்திரீகளிடத்தில் நேசமாயிருப்பான். தாயே! மேலுங் கேட்பாயாக.

32. இருபது ஒன்பதாண்டில் இவன் துணை ஒருவன்வேருய்க்
குறைவறச் செய்வானுகும் கூறுவோம் தந்தைபாகம்
இருவித மாகநேரும் இவன்பாகம் நான்கதாக
அருளுவோம் முப்பான்நாலில் அம்பிகை யாளேகேளாய்.

32. இவனுடைய இருபத்தொன்பதாம் பிராயத்தில் இவன் சகோதரன் வேருய்ப் போவான். குறைவற்ற செல்வவானுகும் தந்தையின் பாகத்தைக் கூறுவோம். இரண்டு விதமாக நேரிடும். இவன் பாகம் நான்கில் ஒன்ருகும். அதுவும் இவனுடைய முப்பத்திநாலாவது பிராயத்தில் ஏற்படும். அம்பிகையே! கேட்பாயாக.

33. தந்தைமேல் பூமிசேர்ப்பன் தடாகங்கள் செய்வானுகும்
பந்தமாம் கூவல்தானும் பகருவீர் அந்தசங்கை
சந்ததம் நவத்தில்சேயும் சார்ந்(த)தால் இடிகரையுமாகும்
பந்துவு மதிக்கஉய்வன் பார்வதி கேட்டிடாயே.

33. தந்தையைப்போல பூஸ்திதியைச் சேர்ப்பான். குளங்களை வெட்டுவான். கிணறு, குளம் வெட்டும்போது இடைஞ்சல் ஏற்படும் அந்த சமுசயத்தைச் சொல்லுவீர். எப்பொழுதும் செவ்வாய் ஒன்பதாமிடத்தி

விருப்பதால் உடைந்த கரைகள் ஏற்படும். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். பார்வதி! கேட்பாயாக.

34. அறுபது ஒன்றுஆண்டில் ஆனிமா தத்திலேதான்
குறைபக்கம் ஏகாதேசி குழவியின் உடலமேகும்
மறுசென்மம் குடகுதன்னில் மறைகுலம் உதித்து
[இன்னோன்
அரசர்பூ சிதமுமெய்தும் அம்பிகை யாளேகேளாய்.

34. இவனுடைய அறுபத்தொன்றும் வயதில், ஆனி மாசத்தில், கிருஷ்ணபட்சம் ஏகாதசியில் இவன் உயிர் துறப்பான். அடுத்த ஜன்மம் குடகுநாட்டில் பிராமணகுலத்தில் உதித்து, அரசர்களால் பூஜிக்கப்படுவான். அம்பிகையே! கேட்பாயாக.

35. செயமுனி இதனைக்கேட்டுச் செப்புவார் பராசருக்கு
நயமுடன் ஐம்பதாண்டில் நாயகன் மரணமாவன்
தயவுட னந்தசங்கை சாற்றுவீர் முனியேநீதான்
வியமாக நாலோன்காரி வித்தகன் திசையேயாகி,

35. ஜயமுனி இதனைக் கேட்டு, பராசரரிடம் சொல்லுவார். நயமாக ஐம்பதாவது வயதில் இவன் மரணமடைவான். தயை செய்து அந்தச் சந்தேகத்தைச் சொல்லுங்கள், முனிவரே! நீங்கள்தான். விரயமான நாலாவது சனிதசையில்,

36. தசமத்தில் இருப்பதாலே சாற்றினோம் அந்தச்சங்கை
அசவில்லை அவர்திசைக்கு அருணன்தன் திசையிலேதான்
கசியுண்டு தீர்க்கமாகக் குசனுமே புதனைப்பார்க்கச்
சௌமியன் மாரகன் சாற்றின மொழிகுன்றாது.

36. அவனும் லக்கினத்திற்கிப் பத்தாம் வீட்டில் (கர்மஸ்தானத்தில்) இருப்பதனால் அந்தச் சங்கை ஏற்பட்டுச் சொன்னோம். அதை அசைப்பதற் கில்லை. சனிதசை சூரியபுக்தியில் மரணம் ஏற்படும். இது தீர்க்கமாக உண்டு. மேலும் செவ்வாயும் புதனைப் பார்ப்பதனால் சந்திரனுடைய புக்தி யின் ஆரம்பத்தில் மரணம் ஏற்படும். சொன்னசொல் தவறாது.

37. செனித்திடும் காலம்தன்னில் சேய்திசை திங்களொன்பான்
குனித்திடு நாள்கள்பத்தும் கூறுவோம் பலனையாங்கள்
வினைவரும் சாதகர்க்கு மிக்கநாற் காலிபீடை
தனமது சிலவேயுண்டு தன்பந்து சூதமெய்தும்.

37. இவன் பிறந்தபொழுது செவ்வாய்தசையில் இருப்பு மாசம் ஒன்பது, நாள் பத்து. இதன் பலனை நாங்கள் கூறுவோம். வினைகள் ஏற்படும். ஜாதகனுக்கு நாற்காலிகள் (பசுக்கள்) நஷ்டமடையும். பணச் செலவும் அதிகமாகும். தன் சொந்தக்காரர்களுடைய ஆசௌசம் ஏற்படும்.

38. தந்தைதாய்ப் பிணியுமாகும் சுகதுக்க மிகவேயுண்டு
முந்துணை பிணிகளாகும் ஒடுங்கிடும் காலிதானும்
பிந்திய பாகம்தன்னில் பேசுவோம் விபரமாக
இந்திர னிறைஞ்சுமாதே இயம்பினோம் முதல்பாவங்கள்.

38. தாய் தந்தையர்களுக்கு வியாதி ஏற்படும். சுகமும் துக்கமும் அதிகமாக ஏற்படும். முதலில் சகோதரர்களுக்கு வியாதி ஏற்படும். பசுக்கள் ஒடுங்கிடும். மற்ற விவரங்களை இனி வரும் பாகத்தில் பேசுவோம். இந்திரன் பணியும் பார்வதியே! இதுவரை முதல் பாவங்களைக் கூறினோம்.

ஜாதகம் 45

1. பிறைநந்தி சிங்கியும்நண்டில் பொன்கன்னி [1]பாரிதேளில்
பரிதியும் வெள்ளிபுந்தி பற்றிடம் மேடமாக
அரவுமே மானதாக ஆறலு மீனமாக
வருவது சென்மமாடு வருவதால் பலனும்சொல்வீர்.

1. சந்திரன் ரிஷபத்திலும், கேது கடகத்திலும், குரு கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், சூரியன் சுக்கிரன் புதன் இவர்கள் சேர்ந்து மேஷத்திலும், இராகு மகரத்திலும், செவ்வாய் மீனத்திலும் தங்க, இப்படிப்பட்ட மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் எடுத்துச் சொல்லுவீர்.

செவ்வாய்	லக்கினம் சூரியன் சுக்கிரன் புதன்	சந்திரன்	
	இராசி சக்கரம்		கேது
ராகு			
	சனி		குரு

2. பிருகுமே புகலுகின்றூர் பிறந்திடு ஆண்பால்சென்மம்
வருமில்லம் கீழ்பால்வாசல் வாடகை வீடேயாகும்
பிரிதி உதலமேயாகும் பெருவயி றப்பன்பெண்பால்
அரன்கோஷ்டம் கீழ்பாலாகும் அத்தியும் அரசர்வாசம்.

2. பிருகு மகரிஷி சொல்லலுற்றூர். இந்த ஜாதகம் ஆண்பால் ஜன்மம். இவன் ஜனிக்கும் வீடு கிழக்குப் பார்த்த வாசலுடையது. அதுவும் வாடகை வீடாகும். வடக்கே அம்மன் கோவில். தென்கிழக்கே விக்னேசுவரர் கோவில். அரனுடைய கோவில் கிழக்கே யுள்ளது. அத்தியும் அரசரும் வசிக்குமிடமாகும்.

3. பலசாதி அவ்வூர்வாசம் பாலகன் இரண்டாம்சென்மம்
குலவிடும் வடுகர்வர்க்கம் கூறுவோம் தந்தைஅன்னைத்
தலைவியின் புத்திரயோகம் சாதகன் முன்பின்சென்மம்
நிலையதை இன்னூல்தன்னில் நிகழ்த்துவோம் தாயேகேளும்.

---

1. பாரி = சனி

3. அவ்வூரில் பலஜாதி மனிதர்கள் வசிப்பார்கள். இது ஜாதகனுக்கு இரண்டாம் ஜன்மம். தெலுங்கர் குலத்தில் உதித்தான் என்று கூறுவோம். தாய் தந்தையர், மனைவி மக்கள், இவர்களுடைய யோகமும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மமும், இன்னும் மற்ற யோக ஸ்திதிகளையும்பற்றி இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். தாயே! கேட்பாயாக.

4. தந்தையின் துணையாண்ரெண்டு சாற்றுவோம் தீர்க்கமாக
அந்தவர் இளையாளாக அறைகுவோம் அவன்குணத்தை
முந்திஞேன் மால்நிறத்தன் மூலசூ டுடையனுகும்
சந்ததம் நெசவுசெய்வான் செனஉப காரியாகும்.

4 தந்தைக்குச் சகோதரர் இருவர். அவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். இளையவனுடைய குணத்தைப்பற்றிப் பிறகு கூறுவோம். மூத்தவன் கரு நிறங்கொண்டவன். மூலச்சூடுடையவன். எப்பொழுதும் நெசவு செய்வான். பரோபகாரி யாவான். (Refer stanza 8.)

5. ஊகவான் நுணுக்கம்தேர்வன் உடன்கூடி வாழ்வாணுகும்
தோகையும் ரெண்டுநேரும் சுதர்களும் ஆண்பால்மூன்று
பாகமாய்ப் பெண்பாலொன்று பருகிடும் தீர்க்கமாக
நாகரி கங்களுண்டு நாரதர் தடுத்துச்சொல்வார்.

5. நல்ல புத்திக் கூர்மை யுள்ளவன். தத்துவங்களை அறியக் கூடியவன். எல்லாருடனும் சேர்ந்து வாழ்வான். பெண்டாட்டிகள் இரண்டு பேர்கள். ஆண் பிள்ளைகள் மூன்று. பெண் குழந்தையும் பக்குவமாய் ஒன்று தீர்க்கமாக ஏற்படும். நாகரிகங்க ளுடையவன். இதைக் கேட்ட நாரதர் தடுத்துச் சொல்லுவார்.

6. எந்தமா துக்குப்புத்திரர் இயம்பினீர் விபரம்சொல்வாய்
முந்தின மாதுக்கேதான் ஆணுண்டு தீர்க்கமெய்தும்
பிந்தின மாதுக்கேதான் பேசின ஆண்பால்ரெண்டு
இந்திர வதனம்போன்ற இளங்கொடி ஒன்றுஎன்றேம்.

6. எந்தப் பெண்டாட்டிக்குப் புத்திரர்கள் உண்டு என்று சொன்னீர்? விவரமாய்த் தெரிவியும், என்று கேட்க, முதல் பெண்டாட்டிக்கேதான் புத்திரன் பிறப்பான். அது தீர்க்கமாகும். இரண்டாவது பெண்டாட்டிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் சந்திரவதனமுடைய பூங்கொடி போன்ற பெண்ணும் பிறப்பாள் என்றேம்.

7. இருமனை தீர்க்கமாமோ ஏகுமோ விபரம்சொல்வாய்
வருமுதல் மாதுதானும் மரிப்பளே பித்தநோயால்
திருகில்லா இரெண்டாம்மாது சேருவாள் தீர்க்கசீவி
பெருமையாய்க் குடும்பம்பின்னால் பாக்கிய வானும்தீர்க்கம்.

7. இரண்டு பெண்டாட்டிகளும் தீர்க்காயுசுடன் இருப்பார்களா? அல்லது இறந்து படுவார்களா? எப்படி? அதன் விவரம் சொல்லுங்கள். முதல் பெண்டாட்டி பித்த வியாதியினால் மரித்துப் போவாள். தொந்தர வில்லாத இரண்டாம் பெண்டாட்டி தீர்க்கசீவியாயிருப்பாள். பெருமையாகச் குடும்பம் சகல பாக்கியத்துடன் விளங்கும். இது நிச்சயம்.

8. அதற்குப்பின் வந்தோன்சேதி அறிவிலான் தந்திர
[வார்த்தைப்
பதர்செ(ா)ல்லான் காமியாவன் பரிந்துப சாரம்சொல்வன்
நிதியது செலவுசெய்வான் நினைத்தது முடிக்கவல்லன்
சதியிலா மனத்தனுகும் தாரமும் ஒன்றேதீர்க்கம்.

8. இவனுக்குப் பின்னால் வந்தவன் சமாசாரத்தைப் பிறர் அறியும்படி தெரிவிக்கமாட்டான். தந்திரமாகச் பேசக் கூடியவன். இளப்பமான வார்த்தைகளைச் சொல்ல மாட்டான். காமாதுரனுயிருப்பன். விருப்பத் துடன் உபசார வார்த்தைகள் கூறுவான். பணத்தை அதிகம் செலவு செய்வான். எடுத்த காரியத்தை முடிக்கும் சாமர்த்திய முடையவன். ஸ்திர புத்தி இல்லாதவன். பெண்டாட்டியும் ஒருத்திதான். இது தீர்க்கம்.

9. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையு மவ்வார்தீர்க்கம்
நிதியது பெருக்கம்செய்வன் நிமிஷத்தில் கோபியாவன்
அதிபனும் வயதுதீர்க்கம் மாரனோ டொத்துவாழ்ந்து
பதியது வேறுய்ச்செல்வன் பகருவோம் பின்பால்சேதி.

9. ஆண் குழந்தைகள் இரண்டு, பெண் குழந்தையும் அவ்வாறும். இது தீர்க்கம். பணத்தை விருத்தி செய்வான். வெகு சீக்கிரம் கோப மடைவான். இவனும் தீர்க்காயுசுள்ளவன். முதலில் குடும்பம் ஒன்றுயிருந்து பிறகு வேறு வீட்டிற்குக் குடிபோவான். மற்ற விவரங்களைப் பின்னால் கூறுவோம்.

10. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சாந்தவான் மால்
[நிறத்தான்
சிந்தையும் நல்லதாகும் சொல்லதைக் காப்பானுகும்
வந்தவர்க் கன்னமீவன் வஸ்திரப் பொருளும்செய்வன்
நிந்தைகள் ஏற்கானுகும் நினைத்தது முடிப்பானுகும்.

10. ஜாதகனுடைய தகப்பனாரின் குணங்களை எடுத்துச் சொல்லு வோம். சாந்த ஸ்வரூபி. கரு நிற முடையவன். நல்ல எண்ணங்களை யுடையவன். சொன்ன சொல்லைத் தட்டமாட்டான். வந்த விருந்தினருக்கு அன்ன பானாதிகள் கொடுப்பான். வஸ்திரங்களையும், பொருளையும் சேர்ப் பான். பிறர் தன்னை நிந்திக்கும்படி நடக்கமாட்டான். எண்ணிய காரியத்தை முடிப்பான்.

11. ஆதியில் வறுமையுண்டு அவன் தந்தை இல்லம்காணான்
பாதியின் வயதுமேலாய்ப் படைப்பனும் வேறுஇல்லம்
சூதிலா நாபிசூரன் தோழர்கள் அதிகம்சேர்ப்பன்
பரிதியு முடையனாகும் காலாட்கள் உடையானாமே.

11. ஆரம்ப காலத்தில் சிறிது வறுமை யுடையோன். தகப்பன் வீடு இவனுக்குக் கிடையாது. மத்திய காலத்தில், அதாவது பாதி ஆயுள் ஆன பிறகு சொந்த வீடு கட்டுவான். சூதுவாதில்லாதவன். சிநேகிதர்களை அதிகம் உடையவன். குதிரை (வண்டி வாகனம்) உடையவன். பரிஜனங்களையு முடையவன்.

12. வறுமைகள் பின்னால்காணான் வணிபங்கள் பலவாய்ச்
[செய்வன்
பெரியவர் உறவுகொள்வன் பலமிலார்க் குதவிசெய்வன்
கரிதனை ஆதரித்த கடவுளைத் தியானம்செய்வன்
கரமதில் விஷ்ணுரேகை காலிகள் விருத்திஅல்பம்.

12. பின் பாதிகாலத்தில் சிரமமே இருக்காது. பலவிதமான வியா பாரங்களைச் செய்வான். பெரியாரைத் துணைக் கொள்வான். ஏழை களுக்கு ஒத்தாசை செய்வான் 'வேழ முதலே என்றழைப்ப என் னென்றானை' (மகாவிஷ்ணுவை) தியானம் செய்வான். செங்கைதனில் விஷ்ணு ரேகையை யுடையவன். பசுக்கள் விருத்தியடையா.

13. அத்திரி தடுத்துச்சொல்வார் ஆதியில் வறுமையென்றீர்
குத்தமாய்த் தந்தைஇல்லம் கூடாது என்றுசொன்னீர்
வித்தகன் துணைபெண்காணான் விளம்புவீர் அந்தச்சங்கை
பத்தினில் ராகுநின்று பத்தவன் எட்டிலேற,

13. இதனைக் கேட்ட அத்திரி தடுத்துச் சொல்லுவார். ஆரம்பத்தில் வறுமைப்பிணி ஏற்படும் என்று சொன்னீரே. குற்றமான தகப்பன் வீடு இவனுக்குச் சேராது என்று சொன்னீரே. ஜாதகன் பெண் சகோதரி இல்லாதவன் என்ற சந்தேகத்தையும் எடுத்துச் சொல்லுவீர். பத்தா மிடத்தில் இராகு நின்று, பத்துக்குடையவனான சனி எட்டாமிடமாகிய விருச்சிகத்தில் ஏற,

14. பொன்னவன் நாலில்நிற்கப் புகன்றனன் அந்தசங்கை
முன்சென்மம் வினையும்கொஞ்சம் மேவிற்று என்று
[சொல்வோம்
என்னவூழ் செய்தானத்தை இயம்புவீர் முனியேநீதான்
அன்னவன் பூர்வம்கேளாய் [1]அழகர்வாழ் நாட்டிலேதான்,

14. கேது சுகஸ்தானத்திலிருப்பதனாலும், அந்த சந்தேகத்தைச் சொன்னோம். போன ஜன்மத்துக் கர்மவினை கொஞ்சம் மேவிற்று என்று சொல்லுவோம். என்ன ஊழ்வினையைச் செய்தான். அதைச் சொல்லுங்கள்? முனிவரே! நீங்கள், என்று சொல்ல, இவனுடைய பூர்வோத்தரத்தைக் கேட்பாயாக. அழகர் வாழும் நாட்டிலே,

15. கங்கையின் குலமுதித்துக் காதலி மதலையுண்டாய்ப்
பொங்கிய குடும்பமாகிப் பூமியும் பரிபாலித்து
இங்கவன் வாழுநாளில் எய்தின வினையைக்கேண்மோ
தங்கமும் ஏழைக்கீந்து தடமதைத் தன்கைக்கொண்டான்.

15. வேளாளர் குலத்திலுதித்து, பெண்டாட்டி பிள்ளை உண்டாகி, பெரிய குடும்பியாகி, பூமியையும் கிருஷி செய்து வாழ்ந்து வரும் காலத்தில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைச் சொல்லுகிறோம். கேளுங்கள். ஏழைகளுக்குக் கடன் கொடுத்து, அவர்களுடைய பூஸ்திதிகளைக் கைப்பற்றிக் கொண்டான்.

16. பஞ்சைகள் மனவெறுப்பால் பகருவார் சாபம்தானும்
கொஞ்சமாய்ப் பொருளைத்தந்து குடிஇல்லம் பறித்தபாவி
பஞ்சமாய்ப் பின்சென்மத்தில் தந்தையாஸ் திகளுமின்றித்
துஞ்சிடு முதலில்புத்திரர் துணைபெண்கள் இல்லாதாகி,

16. ஏழைகள் மனவெறுப்புற்று, சாபம் கொடுக்கலாயினர். கொஞ்சமாய்ப் பொருளைத் தந்து எங்களுடைய வீடு வாசல்களைக் கைப்பற்றிய படுபாவி! அடுத்த ஜன்மத்தில் வறுமை யுற்று, பிதிரார்ச்சித மில்லாமலும், புத்திர தோஷமடைந்தும் சகோதரர் சகோதரி இல்லாமலும்,

---

1. அழகர் மலை=சுப்பிரமணியர் தலம் ஆறிலொன்று. நூற்றெட்டுத் திருப்பதிகளிலொன்று. இதனையே வைஷ்ணவர்கள் திருமாலிருஞ்சோலை என்பர். பாண்டிநாட்டிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம் சுவாமி—மாவலங்காரர், தேவியார்—சௌந்தர்யவல்லி. நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் இவர்களால் பரவசமாகிப் பாடப்பட்டது. இதனை அழகர் கோவில் என்பார்கள். மதுரைக்குப் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

17. ஒருவரில் கூலிவேலை உணவுக்குச் செய்வாயென்று
வறுமையோர் சொல்லிச்சென்றார் மருவிற்று அந்தசாபம்
திருமகன் அந்தியத்தில் செல்வங்கள் குறைவுநேர்ந்தும்
மரலியின் பதிக்குச்சென்று மறையவன் வரையப்பட்டு,

17. ஒருவன் வீட்டில் எங்களைப்போல் கூலிக்கு வேலை செய்து பிழைப்பாய் என்று ஏழைகள் சொல்லிச் சென்றனர். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. இவன் அந்திய காலத்தில் செல்வக் குறைவுடையோனாகி, எமலோகம் சென்று பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

18. வந்தவ னிவனேயென்றோம் மருகிடும் ஏழைசாபம்
தந்தையின் ஆஸ்தியின்றித் தரித்திரம் பூர்வமென்றோம்
பந்தணி மனைவியாலே படருமே பிறைபோல்யோகம்
இந்திரன்[1] முகத்தினாலே இயம்பின மொழிகுன்றாது.

18. பிறந்தவன் இவனே என்றோம். ஏழைகளுடைய சாபம் வந்து சேர்ந்தது. தந்தையின் ஆஸ்தி இல்லாமல் ஆதியில் தரித்திரத்தை அனுபவித்து, கலியாணம் செய்த பெண்டாட்டியின் அதிர்ஷ்டத்தினாலே பிறைச் சந்திரனைப்போலே யோகம் வளர்ந்தோங்கியது. கடவுள் அருளால் கூறிய இம்மொழிகளுக்கு யாதொரு குறைவும் ஏற்படாது.

19. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் ஆனையின் நிறத் [தனாகும்
தன்னுடல் மெலிவுமுண்டு தங்கிடும் உஷ்ணசூடு
உன்னதக் கல்விகற்பன் உயர்வான புத்தியேற்பன்.

19. இவ்விதம் சொன்ன குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் புத்திரனாய் அவதரித்தான். அவனுடைய குணங்களை எடுத்துக் கூறுவோம். கரு நிற முடையவன். மெலிந்த தேகத்தை யுடையவன். உஷ்ண சூட்டினால் உபத்திர முடையவன். மேலான கல்வியைக் கற்பன். மேலான புத்திமதிகளை ஏற்பன்.

20. வித்தையும் இரண்டுஏற்பன் மேலோர்கள் பத்திபூண்பன்
சித்தினி சாதியாவன் தீரமில் லாதநெஞ்சம்
குத்தத்தை மனதில்வையான் பொறுமையை எவர்க்கும் [எண்ணான்
சுத்தவான் வறுமைகாணான் சுந்தர முடையனாமே.

---

1. கடவுள்

20. இரண்டு விதமான வித்தைகளைக் கற்பான். பெரியோர்களிடம் பக்தி சிரத்தையுடனிருப்பான். அறிவுடையோர் வமிசத்தைச் சேர்ந்தவன். தைரிய மில்லாத மனதை யுடையவன். மனதில் குற்றங்களை வைத்துக் கொள்ள மாட்டான். பிறர்மேல் பொறாமை கொள்ளான். சுத்தமுடையவன். தரித்திரத்தைக் காணமாட்டான். அழகுடைய ரூபவான்.

21. அரன்ரேகை கமலரேகை அவன்கரம் தன்னில்தங்கும்
உறன்முறை மதிக்கவாழ்வன் உணவுக்குக் குறைவுறுதான்
பெரியோர்கள் பத்திபூண்பன் பஞ்சைமே லிரக்கமாவன்
மருவரை வசித்துவெல்வன் வாக்கதைக் காப்பானாகும்.

21. சிவனுடைய ரேகை, தாமரை ரேகை இவைகள் அவன் கையில் உள்ளன. உறவினர் மெச்சும்படி வாழ்வான். சாப்பாட்டுக்குக் குறைவு இல்லாதவன். பெரியோர்களிடத்தில் பக்தி பூண்டவன். ஏழைகளிடத்தில் இரக்க புத்தி யுள்ளவன். எதிரிகளை வசியப்படுத்தி வெல்லுவான். சொன்ன சொல் தவறமாட்டான். வார்த்தையைக் காப்பாற்றுவான்.

22. பாலகன் தனக்குயோகம் பகர்ந்தகா ரணங்கள்சொல்வாய்
ஆலோனும்[1] பானுமுச்சம் அரவுமே தசமம்நிற்கச்
சாலவே நளயோகங்கள் சாமரை யோகமென்றேும்
மால்பத்தி உடையனாகும் வீடுமே மூன்றுசேர்ப்பன்.

22. ஜாதகனுடைய யோக பாவங்களைச் சொன்ன காரணங்களைச் சொல்லுங்கள். சூரியனும் சந்திரனும் உச்சஸ்தானத்திலிருப்பதனாலும், இராகு பத்தாமிடத்திலிருப்பதனாலும், பொருந்தவே நள யோகம், சாமரை யோகம் இவற்றையுமுடையவன். திருமாலிடம் பக்தி யுள்ளவன். வீடுகள் மூன்று சேர்ப்பான்.

23. பலவித வணிபத்தாலும் பாரினில் பாக்கியம்சேர்ப்பன்
தலவாசம் செய்வானாகும் செகராசர் பேட்டிகொள்வன்
புலவனும் ஈகையாளன் புண்ணிய மனத்தனாகும்
நலமுளோர் நேசத்தாலே நாயகன் புகழுமேற்பன்,

23. பலவிதமான வாணிபங்கள் செய்து உலகில் சொத்துக்களைச் சேர்ப்பான். க்ஷேத்திரங்களுக்குப்போய்க் கடவுளைத் தரிசிப்பான். உலகின் அரசர்கள் பேட்டி கொள்ளுவான். படித்த புலவனுவன். தர்மிஷ்டன். தர்ம சிந்தனை யுடையவன். நல்லவர்களுடைய சிநேகதத்தினாலே இவன் மிகுந்த கீர்த்தியை அடைவான்.

---

1. சந்திரன்

24. எந்தகா லத்திலில்லம் எய்திடும் விபரம்சொல்வாய்
வந்தவன் ஆருண்டுக்குள் வளைவுமே நேருமென்றோம்
பிந்தியும் பதின்மூன்ருண்டில் புறப்பனும் வேறுஇல்லம்
சந்ததம் முப்பானுண்டில் சார்ந்திடும் இல்லமென்றோம்.

24. எந்தக் காலத்தில் இவனுக்கு வீடு சேரும்? விவரம் சொல்லுங்கள். இவனுடைய ஆருவது வயதிற்குள் வீடு நேரிடும் என்றோம். பின்னல் பதிமூன்றும் வயதில் வேறு ஒரு வீடு கட்டுவான். முப்பதாவது வயதில் மறுபடியும் வீட்டுக்கு யோகம் இருக்கிறது என்றோம்.

25. பெரிதான குடும்பமேற்பன் பந்துவை ஆதரிப்பன்
தரிதொழில் பெருக்கம்செய்வன் தந்தைக்குத் தாழ்வுருதான்
நெறிகாப்பன் திருப்பணியும்(செய்வன்) நேர்ந்திடும் சகடு [தானும்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

25. பெரிய குடும்பத்தை வகிப்பான். சொந்தக்காரர்களைப் ஆதரிப்பான். நெசவுத் தொழிலே விருத்தி செய்வான். தகப்பனுரின் மகிமைக்குக் குறைவு வராதபடி நடப்பான். தர்ம வழிகளில் நடப்பான். கடவுள் வழிபாடுகள் செய்வான். வண்டிகளும் வாகனமும் உடையவன். விக்கினேசுவரனைப் பெற்ற அம்பிகையே! கேட்பாயாக.

26. தன் துணை முன்பின்தோஷம் தங்கிடும் அதன்மேல்விருத்தி
கன்னிகை இரெண்டுளென்றோம் காளையும் ஒருவன்தீர்க்கம்
பின்பாகம் விபரமாகப் பேசுவோம் தாயேயாங்கள்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

26. தன்னுடைய முன்பின் சகோதரர்களுக்குத் தோஷம் ஏற்படும். பிறகு அவர்களின் விருத்தி ஏற்படும். தங்கைகள் இருவர் என்றோம். சகோதரனும் ஒருவன் என்றோம். அவனும் தீர்க்கம். இவைகளைப்பற்றிப் பின்பாகத்தில் விவரமாகப் பேசுவோம். தாயே! உத்தமனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

27. பாரியும் பதினேழாண்டில் பகருவோம் அன்னைவர்க்கம்
நாரியின் குணத்தைச்சொல்வேன் நவின்றிடாள் கட்டு [வார்த்தை
சீரியோர்க் குதவிசெய்வள் சீலியாம் முன்கோபத்தாள்
காரிழை யோகசாலி கனத்தபுத் திகளுமேற்பள்.

27. இவனுடைய பதினேழாம் பிராயத்தில் பெண்டாட்டி தன் அன்னையின் வமிசத்திலிருந்து வருவாள். மனைவியின் குணங்களைச் சொல்லுவோம். பொய் பேசமாட்டாள். இவள் நல்ல யோகசாலி. கௌரவமான புத்திமதிகளை ஏற்பாள்.

28. மாதுவும் சிவந்தமேனி மாரன்தன் மனதுக்கேத்தோள்
தீதுகள் ஒருவர்க்கெண்ணுள் சிறப்பான குடும்பமேற்பள்
ஓதுவோம் சுதர்பலத்தை ஒன்பது திக்குமென்றேம்
மேதினில் ஆண்பால்மூன்று மெல்லியு மிரண்டுதீர்க்கம்.

28. இவளும் சிவந்த நிற முள்ளவள். புருஷனுக்குப் பிரியமாய் நடப்பாள். பிறருக்குத் தீங்கு நினைக்க மாட்டாள். மேன்மையான குடும்பத்தை வகிப்பாள். புத்திரபாவத்தைக் கூறுவோம். ஒன்பது குழந்தைகள் பிறக்கும். ஆண் குழந்தைகள் மூன்று. பெண் குழந்தைகள் இரண்டு. இவை தீர்க்கம்.

29. அன்னையின் குணத்தைச்சொல்வே னழகுளாள் மாஞ்
[சிவப்பள்
அன்னமும் அன்பாயீவள் ஆளன்தன் மனதுக்கேத்தோள்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடாபடி தன்னில்செல்லாள்
அன்னவள் வந்தபின்பு அம்புலி போலேயோகம்.

29. தாயின் குணத்தைச் சொல்லுவோம். அழகுள்ளவள். மாநிற முள்ளவள். பிரியமாக அன்னதானம் செய்வாள். புருஷன் மனதிற்குத் தகுந்தபடி நடப்பாள். பிறரைப் பற்றிய குற்றங்களைக் கூற மாட்டாள். அடாபடியான காரியங்களில் தலையிடமாட்டாள். அவளுக்குக் கலியாணம் ஆன பிறகு பிறைச் சந்திரனைப்போல் யோகம் ஓங்கிடும்.

30. குடும்பத்தை ஆதரிப்பள் கோபமும் கொஞ்சமுண்டு
உடன்சாந்தம் தாயினில்லம் உத்திர திசையாம்தாயே
அடவுட னில்லம்போக்கி அடைகுவார் தன்னூர்தன்னில்
விடமுனி பாரியாளே விளம்புவோம் துணைவர்தன்னை.

30. குடும்பத்தைப் கவனிப்பாள். சிறிது கோப முடையவள். உடனே சாந்தம் அடைவாள். வட திக்கில் தாயின் வீடு உள்ளது. அடவாக வீடு கட்டித் தன்னூருக்கு வருவாள். பார்வதியே! சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம்.

31. தன்துணை ஆண்பால்மூன்று தையலர் ஒன்றேயாகும்
பின்பாகம் அவர்கள்சேதி பேசுவோம் தாயேயாங்கள்
முன்சென்மம் அன்னைக்கேதான் மொழிகுறேம் புலியூர்
[தன்னில்
வன்னிய குலமுதித்து மதலைகள் அதிகமுண்டாய்,

31. தன்னுடைய சகோதரர்கள் மூன்று பேர்கள். சகோதரி ஒருத்தியே யாகும். நாங்கள் அவர்களுடைய செய்தியைப்பற்றிப் பின் பாகத்தில் விவாமாய்ப் பேசுவோம். தாயின் முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். சிதம்பரத்தில், வன்னியர் குலத்திலுதித்து, அதிகக் குழந்தைகள் ஏற்பட்டு,

32. சுகமுள குடும்பியாகிச் சுந்தரி வாழ்ந்துமேதான்
இகபர மடியாருக்கு இவளுமே அன்னமீந்து
பகையான காலனுடு பற்றினுள் வரன்முன்னுகச்
செகபதி வரியப்பட்டுச் செனித்தனள் என்றுசொல்வோம்.

32. சுகமான குடும்பத்தை வகித்து, இந்த சுந்தரி வாழ்ந்து, சிவனடியார்களுக்கு அன்னம் கொடுத்து, கடைசியில் தன்னுடைய புருஷனுக்கு முன்பே எமலோகம் செல்லுவாள். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு, திரும்பவும் ஜனிக்கலானுள்.

33. எண்நான்கு இரண்டுஆண்டில் ஏகுவாள் காலனுடு
திண்ணமாய் இவள்பின்சென்மம் செப்புவோம் காளத்தி [தன்னில்
வண்ணமாய்ச் சௌராஷ்டிரவமிசம் வருகுவா ளென்று [சொன்னேம்
அண்ணலைப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

33. முப்பத்து நான்காம் பிராயத்தில் மரண மடைவாள். நிச்சயமாக இவள் மறு ஜன்மத்தில் திருக்காளத்திதன்னில் சௌராஷ்டிர வமிசத்தில் வருவாள் என்று சொல்லுவோம். கடவுளைப் பூஜை செய்யும் அம்பிகையே! கேளாய்.

34. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பானேழில்
பிந்திய சென்மம்சொல்வோம் பிரிதிவு கீழ்பாலாக
முந்தின போரூர்தன்னில் உதிப்பனும் சைவசேயாய்த்
தந்தன முடையனுகித் தரணியில் வாழ்வானுகும்.

34. தகப்பனுரின் மரண காலத்தை எடுத்துக் கூறுவோம். அது ஜாதகனுடைய முப்பத்தேழாவது வயதில் ஏற்படும். அடுத்த ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். எரிமலைக்குக் கிழக்கே, திருப்போரூரில், சைவக் குழந்தையாய்ப் பிறப்பான். தானே சம்பாதித்துப் பொருள் தேடி, உலகில் வாழ்வானுகும்.

35. பாலகன் மரணகாலம் பகருவோம் அறுபானெண்பான்
சாலவே தனுசுமாதம் சத்தமி வளர்பக்கத்தில்
ஏலவே வாயுவாலே ஏகிடும் உடலமென்றேம்
சீலமாம் அத்திரிசொல்வார் செனித்தவன் எட்டாண்டுக்குள்.

35. ஜாதகனுடைய மரண காலத்தைப் பகருவோம். அறுபத்தெட்டாம் பிராயத்தில், பொருந்தவே மார்கழி மாதத்தில், சுக்கில பட்சம் சப்தமி திதியில், வாயு உபத்திரவத்தினுல் உடலம் உலகை விட்டு நீங்கும். சீலமுள்ள அத்திரி மகரிஷி சொல்லலுற்றுர். ஜனித்தவன் எட்டு வயதிற்குள்,

36\. மாரகம் என்றுசொல்வோம் வதிஷ்டரும் தடுத்துச்
[சொல்வார்
காரியும் எட்டில்தங்க கலைக்குமே அஞ்சில்பொன்னேன்
தீரமா யிருப்பதாலே செப்பினேம் வயதுதீர்க்கம்
கூறுவோம் சங்கைஒன்று குழவியின் பிதாமகிக்கு,

36\. மரணத்தை யடைவான் என்று சொல்லுவோம். வசிஷ்டரும் தடுத்துச் சொல்லுவார். சனி லக்கினத்திலிருந்து எட்டா மிடத்தில் தங்க, சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் குரு தீரமாயிருப்பதாலே வயசு தீர்க்கம் என்று சொல்லுவோம். சந்தேகம் ஒன்று. குழந்தையின் பாட்டிக்கு,

37\. ஆறுண்டு(க்கு)ள் அன்னைதந்தை அணுகிடும் மாரகங்கள்
மாறாது இந்தவார்த்தை வரைகுறுன் அத்திரிதானும்
காரியின் தசைகாலத்தில் காவலன் தனக்குக்கெண்டம்
கூறும்நா லாம்தசையில் குறிக்குறோம் அன்பான்நாலுள்.

37\. ஆறுவது வயதிற்குள் தாயைப் பெற்ற பாட்டனுக்கும் மரணம் நேரிடும். இந்த வார்த்தையை மாற்ற முடியாது என்று அத்திரி மகரிஷி சொல்ல, சனியின் தசையில் ஜாதகனுக்குக் கண்டம் கூறுவோம். அதுவும் நாலாவது தசையில் குறிக்கிறோம். அதுவும் ஐம்பத்திநாலாவது வயதில்.

38\. தென்முனி தடுத்துச்சொல்வார் செல்லாது அந்தவார்த்தை
புந்தியின் காலம்தன்னில் பொருந்திடும் மாரகங்கள்
பின்சென்மம் அவ்வூர்தன்னில் பிறப்பனும் பௌத்திரனுகப்
பொன்பணி அதிகமுண்டாய்ப் புகழ்ச்சியால் வாழ்வானுமே.

38\. அகஸ்தியர் இது கேட்டுத் தடுத்துச் சொல்லலுற்றார் நீங்கள் சொல்லியது சரியில்லை. புதன் தசையில்தான் மரணங்கள் பொருந்தும். அடுத்த ஜன்மம், அதே ஊரில் பேரனுகப் பிறந்திடுவான். பொன், பூஷணங்கள் இவைகளை அதிகமாகப் பெற்று புகழுடன் வாழ்வான்.

39\. மாரனும் செனிக்கும்காலம் மான்தனை ரண்டாம்பாதம்
ஆரலின் திசைமூன்றுண்டு அதனுடன் திங்களாறும்
தீரமாய் நாட்கள்பத்தும் செப்பினேம் பூர்வபாகம்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

39\. இவன் பிறந்த காலத்தில் அவிட்டம் இரண்டாம் பாதம், செவ்வாய் தசையில் இருப்பு வருஷம் மூன்று, மாசம் ஆறு, நாள் பத்து என்று சொன்னேம். இதுதான் பூர்வபாக விவரம். ஆறுமுகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 46

1. பிறைதனு பணிபொன்மானில் புதன்நந்தி புகருமேடம்
கரியவன் மீனமாகக் கதிர்வீணை சிகிசேய்வண்டி[1]
வருவது தகரு[2]சென்மம் வரைகுவீர் பலனையே
....புகலுகின்றார்.

1. சுக்கிரன் மேஷத்திலும், புதன் இரிஷபத்திலும், சூரியன் மிதுனத்திலும், கேதுவும் செவ்வாயும் கடகத்திலும் சந்திரன் தனுசிலும், இராகுவும் குருவும் மகரத்திலும், சனி மீனத்திலும் நிற்க, இப்படிப்பட்ட கிரக நிலை அமைந்த மேஷலக்கின ஜாதகத்திற்குப் பலாபலன்களைச் சொல்லுங்களென்று பார்வதிதேவி கேட்க, ரிஷிகளும் சொல்லலுற்றனர்.

சனி	லக்கினம் சுக்கிரன்	புதன்	சூரியன்
	இராசி சக்கரம்		கேது செவ்வாய்
ராகு குரு			
சந்திரன்			

2. வந்தசேய் ஆணும்சென்மம் வாசலும் மேற்குப்பார்வை
தென்வட வீதியாகும் சிம்மவா கனத்தான்உத்திரம்
அந்தரி[3] தென்பாலாகும் ஆனையின்கோஷ்.......................
..............................செனிப்பனும் இந்தபாலன்.

2. இக்குழந்தை ஆண் ஜன்மம். பிறந்த வீடு மேற்குப்பார்த்த வாசலுடையது. தெற்குவடக்கு வீதியிலுள்ளது. சிம்மவாகனமுடைய பராசக்தி கோவில் வடக்கிலும், அம்பிகை கோவில் தெற்கிலும், பிள்ளையார் கோவில் கிழக்கிலும் உள்ள ஊரில், இந்தப் பாலகன் ஜனிப்பானும்.

3. பாலகன் கங்கைசேயாய்ப் பகருவோம் தாயேயாங்கள்
சாலவே தந்தைவர்க்கம் திரிதிய ஆண்பாலென்றேரும்
வேல்விழி...
மேல்வேறுய்ச் செல்வர் நவிலுவோம் பின்பாகத்தில்.

---

1. கடகம்
2. மேஷம்
3. துர்க்கை

3. வேளாளர் குலத்தில் பிறப்பான் என்று நாங்கள் கூறுவோம். இவன் இவனுடைய தந்தையின் வர்க்கத்தில் மூன்றாவது ஆண் ஜன்மமென் போம். வேல்விழியையுடைய சகோதரி.......................வேறாகச் செல்லுவார்கள். இதன் விவரம் பின்பாகத்தில் கூறுவோம்.

4. இவன்பிதா குணத்தைச்சொல்வே னிடர்செய்யான்
[யாவருக்கும்
அவனியை விருத்திசெய்வன்........................
............................சதுஷ்பாதம் விருத்திஅல்பம்
அவனியில் நல்லோனுவன் ஆள்கார ருடையனுமே.

4. இவனுடைய பிதாவின் குணத்தைச் சொல்லுவோம். யாவர்க்கும் தீங்குகள் செய்யமாட்டான். பூஸ்திதியை விருத்தி செய்வான்............... ....நாற்கால் பிராணிகளின் விருத்தி அல்பமாகும். உலகினில் நல்லவன் என்று பெயர் பெறுவான். பரிஜனங்களை யுடைய வனுவன்.

5. இல்லமும் வேறுசெய்வன் இருவித குணமுமுண்டு
வல்லியார் மோகனுகும்........................
...............விருத்திசெய்வன் இனமது மதிக்கவாழ்வன்
சல்லியம் கொள்ளானுகும் தன்துணை பகையுமெய்தும்.

5. வீடும் புதிதாகக் கட்டுவான். நல்லது பொல்லாதது என்ற இருவித குணங்களையும் உடையவன். ஸ்திரீகளைக்கண்டு மோகிப்பான்.............. பணங்காசுகளை விருத்தி செய்வான். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். கடன் வாங்கமாட்டான். சகோதரனுடைய பகைமையும் ஏற்படும்.

6. கரமதில் பிரம்மரேகை கடந்தோர்போல் வா............
..............................முள்ள முடையனுமே
வரிவிழி மார்கள்நேயன் வடைந்தோரை ஆதரிப்பன்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

6. கையினில் பிரம்மரேகையை யுடையவன். தன்னிடம் வந்தவர் களுக்கு ஒத்தாசை செய்வான்.. சற்று முன்கோபமுடையவனுவன். செவ்வரிபடர்ந்த கண்களையுடைய ஸ்திரீகளிடத்தில் நேசமாயிருப்பான். தன்னை அண்டின பேர்களை ஆதரிப் பான். பிரளயகாலத்தில் ஆனந்தநடனமாடும் அம்பிகையே! கேட்பாயாக.

7. சொன்ன இக் குணத்தான்.................
.........குணத்தைச் சொல்வேன் அழகுளான் மாநிறத்தான்
தன்னுடல் வாயுமுண்டு தரணியை விருத்திசெய்வன்
உன்னத செட்டுச்செய்வன் உணர்வதில்...................

7. இப்படிப்பட்ட குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அன்னவன் குணங்களைக் கூறுவோம். அழகுள்ளவன். மாநிறம் பொருந்தியவன். வாயு உபத்திரவமுள்ள சரீரமுடையவன். நிலபலங்களை விருத்தி செய்வான். மேலான வியாபாரங்களைச் செய்வான். பிறரை உணர்வதில் கெட்டிக்காரன் ....கந்தஸ்வாமியிடம் பக்தி கொண்டவன்.

8. ....கந்தன்மேல் புத்திபூண்பன்
இல்லையென் றுரைக்கமாட்டான் இன்பசொல் ஈகை
[கொஞ்சம்
புல்லிய புத்திகொஞ்சம் பொய்யது வழுத்துநெஞ்சம்
இல்லறம்.....................................

8. யாசிப்பவருக்கு இல்லையென்று சொல்லமாட்டான். இன்பமான வார்த்தைகளைப் பேசுவான். சிறிது தருமசிந்தனை யுள்ளவன். கெட்ட புத்தியும் கொஞ்சமுடையவன். பொய் பேசும் மனதை யுடையவன். இல்லற தருமத்தை நடத்துவான்.

9. போஜன வறுமைகாணுன் புகழ்ந்தோருக் குதவிசெய்வன்
நேசர்கள் அதிகம்சேர்ப்பன் நிதானமாய்ப் பேசவல்லன்
காசுமேல் பிரியமுண்டு கடன்தோர்போ..............
.................கும் சுகதுக்க மிரண்டுமுண்டு.

9. சாப்பாட்டுக்குக் கஷ்டப்படமாட்டான். தன்னை தோத்திரம் செய்பவர்களுக்கு உதவி செய்வான். அநேகம் பேர்களைச் சிநேகிதர்களாகக் கொள்ளுவான். நிதானமாகப் பேசவல்லவன். பணம்காசு சேர்ப்பதில் பிரியங் கொண்டவன். பிதிருகாரியங்களைச் செவ்வனே செய்வான்.................சுகம் துக்கம் இரண்டையும் அனுபவிப்பான்.

10. இவனுட துணைவர்தன்னை இயம்புவோம் ஆண்பாலொன்று
நவனியில் கன்னிநான்கு நவிலுவோம் தீர்க்கமாகப்
பவமாகும் மற்றதெல்லாம்..................
.....................அவன்குணத்தைச் சாற்றுவோம்
[இனிமேலாக.

10. இவனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரிகள் நால்வர். இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். மற்றவையெல்லாம் வியோகமாகும். சகோதரனுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவோம் இனி மேலாக.

11. தந்திர மொழியேசொல்வன் சாற்றுமுன் கோபியாவன்
இந்திர சாலவார்த்தை யாவர்க்கும் நல்லோனுவன்
....வார்த்தை
தந்தைஆர்ச் சிதங்கள்விருத்தி தந்தியின் நிறத்தனுமே.

11. தந்திரமாகப் பேசும் இயல்பினன். முன்கோப முடையவன் என்று சொல்லுவாகள். இந்திரஜாலவித்தை செய்பவனைப்போல் வார்த்தையாடுவான். யாவர்க்கும் நல்லவனுவன்...........................

12. அவசர மனத்தனுகும் ஆண்மையாய்க் குடும்பமேற்பன்
தவசிபோல் வார்த்தைசொல்வன்..................
...........................வண்டர்க்கு மிண்டனுவன்
இவனுமே வறுமைகாணுன் இடுக்கமாம் குணமும்
[கொஞ்சம்.

12. அவசரமான எண்ணங்களை யுடையவன். தைரியமாகக் குடும்ப காரியங்களைப் பார்ப்பான். தபோதனர்களைப்போல் வேதாந்த தத்துவங்களைப் பேசுவான்..............................போக்கிரிக்குப் போக்கிரியாயிருப்பான். தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான். கொஞ்சம் தப்புத் தண்டாக்களுடையவன்.

13. பாரியு மொன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்மூன்று
நாரியு மிரண்டுஎன்றேம் நாவ....................
...................................லன் ஒன்றுய்வாழ்ந்து
தீரமாய்ப் பின்பால்வேருய்ச் செல்லுவா னென்று
[சொல்வோம்.

13. பெண்டாட்டியும் ஒருத்திதான். ஆண் குழந்தைகள் மூவர். பெண்கள் இருவர் என்றேம்.. முதலில் குடும்பத்தினர் ஒன்றுய் வாழ்ந்து பிற்காலத்தில் வேருகப் பிரிந்து செல்லுவார்க ளென்று சொல்லுவோம்.

14. பின்பாகம் விபரமாகப் பேசுவோம் தாயெயாங்கள்
கன்னிமார் சேதியாவும் கழறுவோம்...............
.......................இயம்புவோம் இருபானேழில்
கன்னிகை வடபால்நேரும் கழறுவோம் அவள்குணத்தை.

14. நாங்கள் மற்ற விவரங்களைப் பின்பாகத்தில் எடுத்துரைப்போம். பெண்களைப்பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் கூறுவோம்................ ஜாதகனுடைய பெண்டாட்டி இவனது இருபத்தேழாம் பிராயத்தில் நேருவாள். அவளும் வடக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களை எடுத்துரைப்போம்.

15. புத்திமான் பொறுமைசாலி புண்ணிய மனத்தளாகும்
பத்திமார் அவர்க்குஅன்னம் படை................
...............மதிக்கவாழ்வள் சுந்தர முடையளாகும்
நத்திஞேர்க் குதவிசெய்வள் நாயகன் மனதுக்கேற்ருள்.

15. புத்திமதி, பொறுமை யுள்ளவள். தருமசிந்தனை யுள்ளவள். தன்னைச் சேர்ந்த பந்துக்களுக்கு அன்னம் படைப்பாள்.............................. பொது ஜனங்கள் மதிக்கும்படியாக வாழ்வாள். நல்ல அழகுடையவளாவள். ஏழைகளுக்கு உதவி செய்வாள். புருஷன் மனதிற்குகந்தவள்.

16. தோகைபோல் வடிவுமுண்டு சுந்தரி வயதுதீர்க்கம்
....தனக்குத் தாரம்
பாகமாய் இரண்டுநேரும் பகர்ந்தகா ரணங்கௗெவ்வார்
மோகமாய் ஏழோன்சென்மம் மேவிடம் சரமேயாக,

16. தோகைமயிலைப்போன்ற வடிவமுள்ளவள். இந்த சுந்தரி தீர்க்காயுளுடனிருப்பாள்.................... இவள் புருஷனுக்குத் தாரம் இரண்டு நேரிடும். இப்படிச் சொன்னதற்குக் காரணங்கள் யாவை? விரும்பும்படியான ஏழாமிடத்திற்குரிய சுக்கிரன் லக்கினத்தில் தங்க, அதுவும் சரராசியாயிருக்க, கேதுவும் செவ்வாயும் நாலாம் வீட்டில் தங்க,

17. கேதுசேய் நாலில்தங்க....................
........................அத்திரிதானும் உயர்மதி நவத்திலேற
மேதையோன் இரண்டில்மேவ மேவாது தாரம்ரெண்டில்
காதலி ஒன்றேதீர்க்கம் கழறின மொழிகுன்ருது.

17. ....இதனை அத்திரிமகரிஷி தடுத்துச் சொல்லலானுர். சந்திரன் ஒன்பதாம் வீட்டில் தங்க, புத்திவித்தைகளுக்கு உடையவன் இரண்டாம் வீட்டிலிருக்க, இரண்டு பெண்டாட்டிகள் ஏற்படார்களே. காதலி ஒருத்திதான். அவள் தீர்க்கம். சொன்னசொல் தவருது.

18. இதற்கு................................. ...பாவத்தில் பாரு
அதின்சொலும் விபரம்இரண்டேழோன் கேந்திரம்
[ஆறில் தாரமும்ஒன்றே
சதியில்லா வர்க்கில் பரல்மேல்ஒன்று சார்ந்திடும் அதுகளைக்
....காண்பாய் அதிக.

18. இதற்கு......................த்வீதியசப்தமாதிபதியாகிய (இரண்டு, ஏழுக்குடைய) சுக்கிரன் லக்னகேந்திரம் பெற்றிருக்க.................. தாரம் ஒருத்தி யென்றே சொல்லுவோம்.

19. சுதர்களு மெழுவர்தோன்றும் சோர்வுறும் சிலதுஎன்றேம்
சதமுள ஆண்பால்ரெண்டு தையலு மவ்வார்தீர்க்கம்
முதல்ரெண்டு நாலுஆறும்...................
...........பால்சொல்வேன் அம்பிகை யாளேகேளாய்.

19. பிள்ளைகளும் எழுபேர்கள் பிறப்பார்கள். சிலர் வியோகமடைவர். ஆண் குழந்தைகள் இருவர். பெண்களும் இருவர். இவர் தீர்க்கம். முதலாவது, இரண்டாவது, நாலாவது, ஆறுவது தீர்க்கம்................ அம்பிகையே! கேட்பாயாக.

20. அன்னையு மிருநிறத்தாள் அன்புள மனத்தளாகும்
தன்சொலும் அடக்கமுண்டு சாற்றுமுன் கோப.............
...................கும் புருடன்தன் மனதுக்கேற்றேள்
பன்னியே பேசவல்லள் பாட்டாளி யென்றுசொல்வோம்.

20. தாயும் பொதுநிற முள்ளவள். மனதில் அன்பு கொண்டவள். அடக்கமான வார்த்தை பேசுவாள். சொல்லும்முன் கோபியாவள்........ ....புருஷனுடைய மனதிற்குகந்தவள். பன்னிப்பன்னிப் பேசுவாள். நல்ல உழைப்பாளி என்று சொல்லுவோம்.

21. சந்தேக குணத்தாளாகும் சத்திக்கு அன்னைரெண்டு
தன்துணை ஆண்பால்ரெண்டு சத்தியும் ஒருத்தியென்றேம்
அன்னையில் உத்திரமாகும் அணுகிடும் பித்தசூடு
பந்துவை ஆதரிப்பாள் பார்வதி கேட்டிடாயே.

21. சந்தேகமுள்ள மனதை யுடையவள். இவளுக்கு இரண்டு தாய்மார்கள். தன்னுடைய சகோதரர் இருவர். சகோதரியும் ஒருத்தி யென்றேம். தாயின் வீடு வடக்கே யுள்ளது. பித்தசூடுடையவள். பந்து ஜனங்களை ஆதரிப்பாள். பார்வதி! கேட்பாயாக.

22. முன்னவள் இருந்தசென்மம் மொழிகுறேம் கடையூர் [தன்னில்
அன்னவள் வைசியசேயாய் அணுகியே மதலையுண்டாய்க்
கன்னிகை வாழ்ந்துமேதான் காதலி பவமில்லாமல்
தென்திசைக் காலனுடு சென்றுமே பிரமன்லக்கம்,

22. முதல் தாயினுடைய ஜன்மாந்தரத்தைப்பற்றிக் கூறுவோம். திருக்கடையூரில் வைசிய குலத்திலுதித்து, புத்திரன் ஏற்பட்டு வாழ்ந்து வரும்நாளில், பவவினைகள் இல்லாமல் எமலோகம் சென்றான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

23. வந்தவ ளிவளேயென்றோம் வரைகுறோ மிவள்பின்சென்மம்
கந்தன்வாழ் தோகைமேற்கில் கனமில்லாச் சிறுவூர்தன்னில்
சந்ததம் ரெட்டிவமிசம் செனிப்பளாம் என்றுசொல்வோம்
தந்தியைப் பெற்றமாதே சாற்றின மொழிகுன்றாது.

23. ஜனித்தவள் இவளே என்றோம். இவளுடைய பின் ஜன்மத்தைக் கூறுவோம். கந்தன்வாழ் தோகைக்கு மேற்கில் சாதாரணச் சிறுஊரில் ரெட்டி வமிசத்தில் ஜனிப்பாள் என்று சொன்னோம். யானைமுகத்தோனைப் பெற்ற மாதே! நாங்கள் சொன்ன சொல் தவறாது.

24. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் பட்சி [தன்னில்
விந்தையாய் வடுகர்வர்க்கம் மேவியே கிருஷிசெய்து
சிந்தையும் நல்லதாயும் சிறப்பான குடும்பம்பெற்றுத்
தன்மனை மதலையுண்டாய்ச் சண்முகன் பத்திகொண்டு,

24. தகப்பனின் முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருக்கழுக் குன்றத்தில் தெலுங்கர் வமிசத்தில் பிறந்து, கிருஷித்தொழிலைச் செய்து, நல்ல மனதையுடையவனாய்ச் சிறப்புற்றோங்கிய குடும்பத்தை வகித்து, பெண்டாட்டி பிள்ளை ஏற்பட்டு, முருகக்கடவுளிடம் பக்திபூண்டு,

25. அறமதில் இச்சையுண்டாய் அண்டகன் நாடடைந்து
பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தவ னென்றுசொல்வோம்
வரும்சென்மம் காஞ்சிதன்னில் வருகுவான் செங்குந்தனாகும்
பெருநிதி உடையனாகிப் பூமியில் வாழ்வானாமே.

25. தருமத்தில் விருப்பம் உள்ளவனாய் வாழ்ந்து வரும்நாளில், எமலோகமடைந்து, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவன் இவனே என்போம். அடுத்த ஜன்மத்தில், காஞ்சீபுரத்தில், செங்குந்தர் வமிசத்தில், உதிப்பான். பெரிய பணக்காரனாகி உலகினில் வாழ்வானாகும்.

26. உதித்தவன் பூர்வம்தன்னை உரைக்கிறோம் பழனிநாட்டில்
சதிசெய்யும் வைசியசேயாய்ச் செனித்துமே செட்டுச்செய்து
நிதிமிக உடையனாகி நிமலியும் மதலையுண்டாய்
நதிபல தேசம்சென்று நலிந்தோரை ஆதரித்து,

26. இவனுடைய பூர்வோத்தரத்தை உரைக்கிறேம். பழனி நாட்டினில் சூழ்ச்சிசெய்யும் வைசியர் குலத்திலுதித்து, வியாபாரங்கள் செய்து, சொத்துக்களை நிறைய சம்பாதித்து, பெண்டாட்டி பிள்ளை உண்டாகி, தீர்த்தாடனங்கள் செய்து ஸ்தலங்களுக்குப்போய் தரிசித்து, ஏழைகளை ஆதரித்து,

27. காலன்தன் நாடடைந்து கஞ்சனால் வரியப்பட்டுச்
சீலமில் லாதகங்கை குலமதில் உதிப்பானுகும்
ஏலவே இவனின்யோகம் இயம்புவோம் இனிமேலாக
ஞாலங்கள் விருத்திசெய்வன் நலமிலா வடிவம்செய்வன்.

27. எமலோகம் சென்று, பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு, வேளாளர் குலத்திலுதிப்பான். ஏற்கவே, இனிமேலாக, இவனுடைய யோகங்களைக் கூறுவோம். பூஸ்திதியை விருத்தி செய்வான். நன்மையில்லாத உடலை விருத்தி செய்வான்.

28. செட்டுகள் கத்திரியோகம் சிறப்பிலா செய்வானுகும்
இட்டர்கள் அதிகமுண்டு இன்பச்சொல் யூகைவானும்
துட்டரை நேசம்கொள்ளான் சோம்பலும் கொஞ்சமுண்டு
கட்டங்க ளில்லாவாழ்வன் காதலி கேட்டிடாயே.

28. வியாபாரங்கள் செய்வான். கத்திரியோகமுள்வளன். சிறப்பில்லாத காரியங்களைச் செய்வானுகும். சிநேகிதர்கள் அதிகம் உண்டு. இன்பமாகப் பேசுவான். புத்திக்கூர்மையுள்ளவன். போக்கிரிகளை நேசங்கொள்ளுவான். சிறிது சோம்பலும் உள்ளவன். கஷ்டங்களில்லாமல் வாழ்வான். பார்வதி! கேட்டிடாயே.

29. பாரியாள் வந்தபின்பு பகருவோம் யோகம்தானும்
பாருகள் அதிகம்சேர்ப்பன் பண்போருக்கு அன்னமீவன்
காரிய புத்தியேற்பன் பலதல வாசம்செய்வன்
பாரினில் சல்லியம்காணுன் பரஉப காரனுமே.

29. பெண்டாட்டி வந்ததும் அவனுக்கு ஏற்படும் யோகங்களைக் கூறுவோம். கிராமங்களை அதிகம் சேர்ப்பான். பண்ணையாட்களுக்கு அன்னதானம் செய்வான். காரியங்களைச் செய்து முடிப்பதில் மிக்க பாக்கியசாலி. பல ஸ்தலங்களுக்குப்போய் தரிசிப்பான். உலகினில் கடன் காரனுகமாட்டான். பரோபகாரியாயிருப்பான்.

30. அன்னமும் குறைவுருதான் அடாபடி தன்னில்செல்லான்
பொன்பணி சேர்ப்பானுகும் புகருவோம் முப்பாண்......
முன்பொருள் பூமிதன்னில் மேவிடும் என்றுசொல்வோம்
என்னகா ரணத்தினுலே இயம்பினீர் அந்தச்சங்கை.

30. சாப்பாட்டுக்கு யாதொரு குறையுமில்லை. அடாபடிக் காரியங்களில் தலையிடமாட்டான். பொன், பூஷணாதிகளைச் சேர்ப்பானாகும். முப்பதாவது பிராயத்தில் பழைய சொத்துக்களும் பூமிகளும் இவனுக்கு வந்து சேரும். என்ன காரணத்தைக் கொண்டு இவ்வாறு சொன்னீர்கள்?

31. மதிக்குமே ரெண்டில்நல்லோன் மருவினால் சுரர்[தம்]யோகம்
புதனுக்கு லாபம்காரி..............நாள கமலயோகம்
நதிபுகர் ஜன்மம்தங்க ராகுவும் பத்திலேற..............
அதுபலன் இருபானேழு ஆண்டுமேல் யோகம்சொன்
[னோம்.

31. சந்திரனிருக்குமிடத்திற்கு இரண்டாம் வீட்டில் சுபனாகிய குரு பகவான் இருந்தால் தேவயோகம். புதனுக்கு லாபஸ்தானத்தில் சனி பகவானிருப்பதனால் சிலநாள் கமலயோகம். சுக்கிரன் மேஷலக்கினத்தில் தங்குவதனாலும், இராகுவும் பத்தாமிடத்தில் தங்குவதனாலும் ஜாதகனுக்கு இருபத்தேழாம் பிராயம் ஆனபிறகு நல்லயோகம் ஏற்படும் என்று சொன்னோம்.

32. பெரிதான செட்டுச்செய்வன் புகழது அதிகமேற்பன்
இருபது ஒன்றுஆண்டில் இவன்தந்தை கெண்டமெய்தும்
திருகாக முப்பானாறில் செப்புவோம் அன்னைகெண்டம்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

32. பெரியதாகிய வியாபாரங்களைச் செய்வான். அதிகமான கீர்த்திகளைப் பெறுவான். இவனுடைய இருபத்தோராவது பிராயத்தில் இவன் தந்தைக்கு கண்டம் ஏற்படும். முப்பத்தாறாவது வயதில் அன்னையின் கண்டம் ஏற்படும். பிரளயகாலத்தில் ஆனந்தக்கூத்தாடும் அம்பிகையே! கேட்பாயாக.

33. அறுபது எட்டுஆண்டில் ஆடிமா தத்திலேதான்
திருமகன் உடலம்வாடும் செப்புவோம் இவன்பின்சென்மம்
விரிஞ்சிமா நகர்க்குமேல்பால் மேவிய பேரூர்தன்னில்
மறைகுல முதிப்பானாகும் அம்பிகை யாளேகேளாய்.

33. அறுபத்தெட்டாவது பிராயத்தில், ஆடிமாசத்தில், ஜாதகன் உடலம் உலகைவிட்டு நீங்கும். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். விரிஞ்சிமாநகருக்கு மேற்கே இருக்கும் பேரூரில் பிராமண குலத்தில் உதிப்பானாகும். அம்பிகையே! கேட்பாயாக.

34. பிருகுமே புகலுகின்றார் பேசினீர் வயதுதீர்க்கம்
திருகாக ஈராறுண்டுள் சகடைதோ ஷத்தினாலே
மரலியின் பதிக்குப்பாலன் வருகுவா னென்றுசொல்வோம்
பிறையது தனுசுவாகப் புகன்றனன் சகடைபங்கம்.

34. பிருகுமகரிஷி சொல்லலுற்றார். ஜாதகனுக்குத் தீர்க்காயுசு என்று சொன்னீர்கள். இவனுடைய பன்னிரண்டாவது வயதிற்குள் சகடை (வண்டி)யின் தோஷத்தாலே எமலோகத்தை அடைவான் என்று சொல்லுவோம். சந்திரன் தனுசில் இருப்பதனால் இத்தகைய சகடை பங்கத்தைக் கூறினோம்.

35. பொன்னவன் தசமம்நிற்கப் புதல்வனும் வயதுதீர்க்கம்
என்னநோய் வந்தபோதும் இரவிமுன் பனிபோல்நீங்கும்
இன்னவன் செனனகாலம் இசைமூலம் முதல்பாதத்தில்
மன்னிய ஞானிகாலம் வருடமோ ஆறதாகும்,

35. வியாழபகவான் பத்தாமிடத்தில் நிற்க, இவனுக்கு தீர்க்காயுசு என்போம். என்ன வியாதி வந்தபோதிலும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இவனுடைய ஜனனகாலத்தில் மூலநட்சத்திரம் முதல்பாதத்தில் கேதுதசையில் இருப்பு ஆறு வருடங்கள்,

36. திங்களும் தசமேயாகும் தினமது இருபதாகும்
சங்கையில் லாமல்சொன்னோம் சாதகன் தனக்குரோகம்
மங்கிடும் காலிதானும் வரும்துணை விருத்தியாகும்
நங்கையால் கலகமுண்டு நாயகி கேட்டிடாயே.

36. மாசம் பத்து, நாள் இருபதாகும். இதில் யாதொரு சந்தேகமும் இல்லாமல் கூறினோம், ஜாதகனுக்கு ரோகம் ஏற்படும். நாற்கால் பிராணிகள் குறையும். வரும் சகோதரருக்கு விருத்தி ஏற்படும். பெண்டாட்டியினால் கலகமுண்டு. பார்வதி! கேட்பாயாக.

37. தன்துணை நாற்பான்மேலாய்த் தானவன் வேறாய்ச்செல்வன்
உன்னத இல்லமொன்று உறைந்திடு முப்பதாண்டில்
பின்பாகம் விபரமாகப் பேசுவோம் தாயேயாங்கள்
உன்னத தவங்கள்செய்யும் உத்தமி கேட்டிடாயே.

37. இவனுடைய நாற்பதாம் வயதிற்குமேல் சகோதரன் வேறாகச் செல்வான். முப்பதாவது வயதில் மேலான வீடு கட்டுவான். மற்றவைகளை இரண்டாம் பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம். மேலான தவங்கள் செய்யும் உத்தமியே! கேட்பாயாக.

ஜாதகம் 47

1. மதியும் தேளில் பணிதேளில் மால்பொன் காரி மாதையுறக்
கதையன்[1] சியம் புகர்நண்டு உயர்வான் ஞானி[2] நந்தியுறச்
சதிராய்ச் சேயும் தகரதனில் செனமம் மேடம்
[பலனேவதோர்
துதிசெய் வதிட்டர் தான்சொல்வார் தோன்றும்
[பெண்பால் செனமூவர்.

1. செவ்வாய் மேஷத்திலும், கேது ரிஷபத்திலும், சுக்கிரன் கடகத்திலும், சூரியன் சிம்மத்திலும், புதன் குரு சனி கன்னியிலும், சந்திரனும் இராகுவும் விருச்சிகத்திலும் தங்கும் படியான கிரகநிலை கொண்ட இந்த மேஷலக்ன ஜாதகத்திற்குப் பலாபலன்கள் என்னவென்று பார்வதி கேட்க, வசிஷ்டரும் சொல்லலுற்றார். இந்த ஜாதகம் பெண்ணினுடையது. இவளுடன் பிறந்தோர் மூவராவர்.

	லக்கினம் செவ்வாய்	கேது	
	இராசி சக்கரம்		சுக்கிரன்
			சூரியன்
	சந்திரன் ராகு		புதன் குரு சனி

2. அதுவே கீழ்பால் வாசலது
ஐரா வதத்தின் நகரொக்கும்
பதியும் பேரூர்க் கரிவாசம்
கனத்த செட்டுத் தானேங்கும்
சதியே அரசர் தான்வாசம்
செப்பு மடையா ளத்தினிலே
இதுபெண் தோன்றும் எனஉரைத்தோம்
இயம்பும் குடும்பச் சேதிதனே.

2. இவள் ஜனித்தவீடு கிழக்குப்பார்த்த வாசலுடையது. ஐராவதம் கொண்ட அமராவதிபோன்ற ஊர், வீடும் பேரூரிலுள்ளது. விஷ்ணுவாலயமுள்ளது. மகத்தான வியாபாரங்கள் செழிக்கும் அரசர் வசிக்கும்

---

1. சூரியன்
2. கேது

படியான ஊர். இப்படிப்பட்ட அடையாளத்தைக்கொண்ட இடத்தில் நம் ஜாதகி தோன்றுவாள் என்று உரைத்தோம். இனி இவளுடைய குடும்பச் செய்திகளைக் கூறுவோம்.

3. தந்தை துணைகள் நவமாகும்
செப்பு மத்தில் சிலசேதம்
பிந்தி பாகம் அவர்சேதி
புகல்வோம் தந்தை குணமதனை
நொந்த பேர்க்கு உதவிடுவன்
நேமியில் செட்டுத் தான்செய்வன்
வந்தோர்க் கன்னம் தானீவன்
வாக்குத் தவறான் அரசரிஷ்டன்.

3. தந்தையுடன் பிறந்தவர்கள் ஒன்பதுபேர்கள். அவருள் சிலர் மத்தியகாலத்தில் சேதமடைவர். அவர்களுடைய செய்திவிவரங்களைப் பிந்திய பாகத்தில் கூறுவோம். தந்தையின்குணங்களை எடுத்துச் சொல்லுவோம். சிரமப்பட்ட பேர்களுக்கு ஒத்தாசைசெய்வன். உலகினில் வியாபாரங்கள் செய்வான். வந்த விருந்தினருக்கு அன்னம்கொடுத்து உதவுவான். சொன்ன சொல் தவறமாட்டான். அரசருக்கு இஷ்டனுவன்.

4. இஷ்டர் அதிகம் வறுமையிலான்
ஏவலா ளர்கள் ஈகையுளன்
துஷ்டர் உறவு கொள்ளாதான்
சுகதுக் கங்கள் உடையவனே
செட்டும் புஷ்பச் சோலையுளன்
செய்நன் றிகளும் ஆவாதான்
குத்தாய் வார்த்தை கல்வியுளான்
கோதை யிரண்டு கூறிடுமே.

4. இவனுக்குச் சிநேகிதர்கள் அதிகம். தரித்திரமில்லாதவன். ஏவலாளர்களை அதிகமாய் உடையவன். தர்மிஷ்டன். துஷ்டர்களைத் தன்னிடம் சேர்க்கமாட்டான். சுகதுக்கங்களை உடையவன். வியாபாரம் செய்வான். புஷ்பச்சோலைகளை (நந்தவனங்களை) யுடையவன். செய்நன்றியுடையவனில்லை. குத்தான வார்த்தைகளைச் சொல்லுவான். பெண்டாட்டி இருவரென்று கூறுவோம்.

5. கூறியதோர் குணத்தானுக் கிந்தப்பாவைக்
குலவுவாள் இவள்குணத்தைக் கூறக்கேண்மோ
மாறிடாள் பெரியோர்கள் வார்த்தைதன்னை
மாஞ்சிவப்பள் நீட்சியுண்டு உளைச்சல்தேகி

தேரினதோர் புத்தியுண்டு கல்விமேன்மை
சிறுத்தோர்க்கு உதவிடுவள் திரநெஞ்சம்
போர்செல்லாள் வறுமையிலாள் புலிபோல்கோபம்
பின்சாந்தம் பொய்புகலாள் பேதைதானே.

5. இப்படிப்பட்ட குணவானுக்குப் புத்திரியாயவதரித்தாள் நம் ஜாதகி. இவளுடைய குணாதிசயங்களைக் கூறுவோம். கேட்பாயாக. மூத்தோர் சொல் வார்த்தையை அமிர்தமாகக்கருதுவாள். மாநிறமுள்ளவள். நீளமான தலைமயிருள்ளவள். உளைச்சலுடைய சரீரத்தையுடையவள். முதிர்ந்த புத்திக்கூர்மையுள்ளவள். மேன்மையான கல்விகேள்விகளை யுடையவள். ஏழைகளுக்கு உதவிசெய்வாள். மனதில் தைரியமுடையவள். பொய் பொரை சொல்லமாட்டாள். தரித்திரமில்லாதவள். புலியைப்போல் சீறும் கோபமுடையவள். உடனே சற்றுநேரம் கழித்து சாந்தமடைவாள். பொய் வார்த்தைகள் சொல்லமாட்டாள். பேதைக்குணமுடையவள்.

6. நன்நடையும் மிருதுசொல்லும் நயப்பாய்வார்த்தை
நல்கிடுமே கரன்காலில் வாயுபீடை
பின்வயதில் உபதேசம் பெருவாளாகும்
பிறைபோலே அத்வைதம் பேசுவாளாம்
அன்னையுமே இரண்டாகும் முந்தாய்க்கின்றாள்
அருளுவாள் தன்துணைகள் நலமேயாகும்
பின்னமாம் ஆண்துணைகள் கன்னிரெண்டு
புகலுவோம் தீர்க்கமதாய்ப் பூவைக்கேதான்.

6. நல்ல நடத்தையுடையவள். மிருதுவான சொல்லுடையவள். நயமான வார்த்தைகளையுடையவள். காலில் வாயுவினால் உபத்திரவம் ஏற்படும். பின்னால் வயசுகாலத்தில் பெரியவர்களுடைய உபதேசத்தைப் பெறுவாள். வளர்பிறைச் சந்திரனைப்போல் அத்துவைத வேதாந்தவிசாரம் மேன்மேலும் செய்வாளாகும் இவளுக்கு இரண்டு தாய்மார்களாவர். மூத்த தாய்க்கு இவள்பிறப்பாள். தன்னுடைய சகோதரர்கள் நன்மையேயாகும். ஆண்துணைவர்கள் பின்னமடைவார்கள். தங்கைகள் இருவர். இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம்.

7. மங்களங்கள் பதினாறில் தென்பால்தன்னில்
மாரனுமே நேருமென்றோம் வரையக்கேண்மோ
துங்கமனம் சிவந்தமை கல்விமேன்மை
துரைராசர் பேட்டிமிகும் துறவோர்நேயன்

பங்கயன்போல் முகமுடையான் பணிந்தோர்க்கிஷ்டன்
பார்விருத்தி பணேயோர்கள் சகடுமுண்டு
எங்கள்போல் அதிதிக்கன்னம் ஈகுவானும்
இராசனுல் தொழிலேற்பன் இடுக்கமில்லான்.

7. இவனுடைய பதிஞரும் பிராயத்தில் கலியாணவைபவங்கள் நடக்கும். புருஷனும் தெற்குத்திக்கிலிருந்து வருவான். அவன் விவரம் கூறுவோம். கேட்பாயாக. துல்லியமான மனதை யுடையவன். சிவந்தநிறமும், படிப்பின்மேன்மையுமுள்ளவன். துரைராசர் பேட்டிகள் அதிகமாகும். சன்னியாசிகளின் நேசம்கொள்ளுவான். தாமரைப்பூப்போன்ற முகவிலாசத்தை யுடையவன். தாழ்ந்தவர்களை ஆதரிப்பன். பூஸ்திதிகளை விருத்திசெய்வான். பண்ணேயாட்கள் அதிகம். அநேகம் ஏர்களுடையவன். வண்டிவாகனமுடையவன். ரிஷிகளைப்போல் அதிதிகளுக்கன்னம் கொடுப்பான். அரசாங்கத்தில் தொழில் செய்வான். தொந்தரைகள் இல்லாதவன்.

8. அரியெனும் ராசிஆ யில்யநாளில்
அருளுவான் யாவர்க்கும் நேயன்
பொருளது சேர்ப்பன் செலவுகள்செய்வன்
புண்ணிய தீர்த்தங்கள் சேர்வை
நெறியதைக் காப்பன் நினைத்ததை முடிப்பன்
நிருபர்க்கு இவன்சொல்லு மேன்மை
குறிமுக மார்க்குப் போஜன சுகியன்
குமரன்தன் பத்தியே கொள்வன்.

8. இவனுடைய இராசி சிங்கமாகும். நட்சத்திரமோ ஆயில்யம். யாவருக்கும் சிநேகிதனுயிருப்பான். பணம் காசுகளை விருத்திசெய்வன். செலவுகளும் செய்வான். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம்செய்து கடவுளைச் சேவிப்பான். தருமத்தைக் காப்பாற்றுவான். எண்ணிய கருமத்தைச் செவ்வனே முடிப்பான். எழுத்தாளர்கள் இவனுடைய அபிப்பிராயங்களைச் சிறந்தனவென மதிப்பார்கள். முகத்தில் குறிகளைப்போட்டுக் கொள்ளுவான். யாவர்க்கும் போஜனமளிப்பான். சுகவாசி. குமரக்கடவுளிடத்தில் பக்தி பூண்டவன்.

9. கொள்ளவும் விற்கவும் வல்லவன்
சமர்த்தன் புன்சிரிப் புடையனுகும்
விள்ளவே உரைப்பன் பூர்வம்புகல்வோம்
விளங்கிய காஞ்சிகீழ் பேரூர்

கள்ளமில் லாதசெங்குந்தர் மரபில்
கவர்ந்துமே தனம்மிகப் படைத்து
நல்லிருள் மதிபோல் ஜனங்களுக்குதவி
நல்கியே அறமன முண்டாய்,

9. கொடுக்கல் வாங்கல்கள் செய்வன். சாமர்த்திய முடையவன். புன் சிரிப்புடையவன். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று கூற வல்லான். இவனது பூர்வோத்தரத்தைக் கூறுவோம்; காஞ்சீபுரத்திற்குக் கிழக்கே, ஒரு பெரிய ஊரில், குற்றமற்ற செங்குந்தர் வமிசத்தில் பிறந்து, தனத்தை யடைத்து, நல்ல இருட்டின் நடுவில் சந்திரன் உதயமானாற்போல, பொது ஜனங்களுக்கு உதவி செய்து தருமஞ்செய்வதில் விருப்பங்கொண்டு,

10. வருமார்க்கம் தாகப்பந் தலும்வைத்து
அருமுகன் பத்தியே கொண்டு
மரலியின் பதிக்குவந்துமே இன்னோன்
மலரயன் விகிதத்தா லுதித்தோன்
அரிவையும் மணங்கள் கொண்டிடுவாளாம்
அரைகுறோம் புத்திர பாகம்
திறமுடன் ஐந்துசெனித்திடும் தாயே
தீர்க்கமாய் ஆனது ரெண்டு.

10. வரும் வழிகள்தோறும் தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்தி, ஆறுமுகக் கடவுளுடைய பக்தியே மேலாகக்கொண்டு எமலோகம் சென்றான். இவன் திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தனன். மனைவியும் கலியாண வைபவங்களைக்கொண்டிடுவாள். அவளுடைய புத்திரபாவத்தைக் கூறுவோம். திடமாக ஐந்து குழந்தைகள் ஜனித்திடும். தாயே! அவற்றில் தீர்க்கமாக இருப்பது இரண்டாகும்.

11. கன்னிகை அவ்வார் கழறுவோம் யாங்கள்
கனக்காது ஒன்றுமே யென்றோம்
பின்னமாம் இரண்டாம் கர்ப்பமேயாகும்
பூர்வம் புகலுவோம் தாயே
முன்செனமம் தணிகை உத்திரதிக்கில்
உதித்தனள் ரெட்டியின் குலத்தில்
பொன்பணி யுண்டாய்ப் புகழான இல்லம்
பூவைக்கு வரன்சுத னுண்டாய்,

11. கன்னிகைகள் அவ்வாறு என்று கூறுவோம் யாங்கள். ஒன்றும் தங்காது என்றோம். இரண்டு கர்ப்பங்கள் பின்னமடையும். இவளுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். முன்ஜன்மத்தில் திருத்தணிகைக்கு

வடக்கில் ரெட்டி வமிசத்தில் உதித்தனள். பொன் பூஷணம் இவைகள் ஏற்பட்டு, புகழ்பெற்ற வீடுவாசல் ஏற்பட்டு, இவளுக்குப் புருஷன் பிள்ளைகள் உண்டாகி,

12. மாதுவும் வாழ்நாள் வினையதைப் புகல்வேன்
மைத்துனன் மேல்சில நிந்தை
ஓதினாள் அவனும் மனமதுவாடி
உரைத்தசா பத்தையே கேண்மோ
மேதில் பின்சென்மம் எனைப்போலவே துணைஆண்
விளங்காது விளங்கியும் தீதாம்
வேதனை வாயுப்பிணியுமே உண்டாய்
மேதினில வாழ்குவாய் மாதே.

12. வாழ்ந்துவரும் நாளில், ஏற்பட்ட வினையைக் கூறுவேன். மைத்துனனைப் பார்த்துச் சில நிந்தனைகள் கூறினாள். அவனும் மனம்வாடி உரைத்தான் சாபத்தை. அதைக் கேட்பாயாக. இனி வரும் ஜன்மத்தில் என்னைப் போன்ற ஆண் சகோதரன் விளங்கமாட்டான். அப்படி ஏற்பட்டாலும் பிரயோசனப் படமாட்டான். வாயு உபத்திரவம் ஏற்பட்டு வியாதிவரும். இதனுடன் உலகினில் வாழக்கடவாய் என்று சபித்தான்.

13. இன்னமும் பலவார் சொல்லியே சென்றான்
எய்திற்று மைத்துனன் சாபம்
கன்னிகை அந்தம் கனத்தவர் தொண்டு
கடவுளார் பத்தியு மாகி
தென்திசைக் காலனுடுமே சென்று
சிரநான்கோன் வரியவே வந்தாள்
முன்வினை சாபமதன் துணைஆண்பால
விளங்காது என்றுமே சொன்னோம்.

13. இவ்விதம் இன்னும் பல சாபங்களைச் சொல்லிவிட்டுச் சென்றான். மைத்துனனுடைய சாபம் இவளைச் சார்ந்தது. இவள் அந்திய காலத்தில் பெரியோருக்குத் தொண்டு செய்து கடவுள்மேல் பக்திபூண்டு, தெற்குத்திக்கிலுள்ள எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தனள். முன்னைவினை தன்னைச்செய்தவனை அடைந்தது. சகோதரன் இவளுக்கு விளங்கவே யில்லை என்று சொன்னோம்.

14. மங்கையின் யோகம் வரைகுறேம் தாயே
வளர்பிறை போலே செல்வம் பெருகும்
பொங்கியே குடும்பம் ஏற்பளாம் வறுமை
புகலொணு மரணம் மட்டும்தான்

சங்கரன் அடியார் ஒருவரால்
முப்பாண்ட தனில்மேல் ஞானங்கள்பெற்று
எங்கள்போல் யோகம் எய்துவாள் காலம்
இயம்புவள் நாற்பதா றுண்டில்.

14. மங்கையின் போகபாவங்களைக் கூறுவோம், தாயே! வளர்பிறை போல் செல்வம் ஓங்கிடும். சிறப்புற்றோங்கும் குடும்ப பாரத்தை வகிப்பாளாம். தரித்திரமே யில்லை. சாகும்வரை சுபிட்சம்தான். பரமசிவனுடைய அடியார்களில் ஒருவரால், தன்னுடைய முப்பதாவது வயதில் ஞானோபதேசம் பெற்று, மகரிஷிகளைப்போல் யோகம் பெறுவாள். அதுவும் அவளுடைய நாற்பத்தாறும் வயதில் ஏற்படும்.

15. ஞானங்கள் புகல்வோம் குணமதைப்
புகழ்வீர் நாயகி ஊர்க்குக் கீழ்பாலில்
மானிடர் மானம் காத்திட குலத்தில்
வந்தவர் கல்வியும் அற்பம்
ஊனமில் லாததேகி மாநிறத்தான்
உளைச்சலான் உயர்வான தேகி
ஈனமில் லாதான் பாரியும் மதலை
எய்தியே இல்விட்டு நீங்கி,

15. அவளுக்கேற்பட்ட ஞானபாகங்களைச் சொல்லுவோம். குணங்களையும் கூறுவோம். இவளுடைய ஊருக்குக் கிழக்கே மானிடர்களுடைய மானங்காத்திட, குலத்திலுதித்த புருடனின் கல்வியும் அற்பமாகும். பின்னமில்லாத தேகத்தை யுடையவன். மாநிற முள்ளவன். உளைச்சலான சரீரத்தை யுடையவன். மேலான தேகத்தை யுடையவன். இளப்பமான புத்தி யில்லாதவன். பெண்டாட்டியும் பிள்ளையும் ஏற்பட்டு வீடுவிட்டு நீங்கி,

16. பலர்கள் பால்சென்று ஞானங்கள் பெற்று
பலதேசம் சென்றுமே அன்னோன்
தலைவிபால் அணுகி உபதேசம் புகல்வன்
தன்னைத்தான் அறிகிற குணத்தான்
சிலர்களும் வணங்க வாழ்குவான் மாதே
தேவிக்கு நாற்பத்தே ழாண்டில்
குலவுவான் காலன் பதிக்கு யோகத்தால்
கொம்பனை கேட்டிடு வாயே.

16. பலரிடம் போய்ச் சென்று, ஞானோபதேசம் பெற்று, பலதேசங்களுக்குப்போய், அவனுடைய தலைவியினிடம் சென்று, நெருங்கி உபதேச மொழிகளைக் கூறுவான். தன்னைத் தானறிகிற குணத்தை யுடையவன்.

குணசீலர்களும் வணங்கும்படி வாழ்வான். பெண்டாட்டிக்கு நாற்பத்தேழாம் பிராயம் நடக்கும்போது காலன்நாடு செல்வன். இவனை யோகத்தில் கொம்பன் என்றே சொல்லலாம். பார்வதியே! கேட்பாயாக.

17. அன்னையின் குணத்தை அறிவிப்போ மினிமேல்
ஆளன்தன் மனதுக்கு ஏற்றோள்
அன்னியர் குற்றம் புகன்றிடாள் என்றேம்
அலைச்சலாம் தாயது இல்லம்
அன்னையின் பூர்வம் அருணைக்கு உத்திரம்
அணுகியே வன்னிய மரபில்
அன்னவள் உதித்து அடைந்தோரைக் காத்து
அதிதிகட் கன்னமு மீந்து,

17. இனிமேல் அன்னையின் குணங்களைக் கூறுவோம் புருஷனுடைய மனதிற்குத் திருப்தியாய் நடப்பாள். பிறருடைய குற்றங்களை எடுத்துரைக்க மாட்டாள் என்றேம். அலைச்சல் திரிச்சல் உண்டு. தாயினில்லம் செல்லு வாள். பூர்வம் இவளின் தாய் திருவண்ணாமலைக்கு வடக்கே வன்னியர் குலத்திலுதித்து, அண்டினவர்களைக் காப்பாற்றி, ஏழைகளுக்கும் விருந்தினர் களுக்கும் அன்னமளித்து,

18. காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனால் வரியப்பட்டு
ஞாலமேல் உதித்தாளென்றேம் நவிலுவோம் முப்பான்
[நாளில்
சீலியும் மரணமாவள் செப்புவோம் இவள்பின்சென்மம்
சாலவே தணிகைதன்னில் செனிப்பளாம் இக்குலத்தில்.

18. எமலோகம் சென்று, பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பூமியில் அவதரித்தாள். இவனுடைய முப்பத்திநாலாம் பிராயத்தில் இவளும் மரணமடைவாள். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். பொருத்தமாகவே திருத்தணிகையில் இக்குலத்தில் ஜனிக்க லானாள்.

19. தந்தையின் பூர்வம்சொல்வேன் சலகண்டி ஈசர்வாழும்
அந்திடம் [1]சேடர்வமிசம் அணுகியே மனைவிமைந்தர்
தன்தனம் உடையனாகித் தான்வாழ்நாள் வினையைக்
[கேண்மோ
மூந்தின குலத்துமாது விசேஷமாய்ப் பொருள்படைத்து,

19. தந்தையின் பூர்வோத்தரத்தைக் கூறுவோம். சலகண்டேசர் வாழுமூரில் ஏவலாளர் வமிசத்தில் உதித்து, மனைவிமக்கள் ஏற்பட்டு, சுயமாகச்

1. அடிமைக்காரர்

சம்பாதித்து வாழ்ந்து வரும்நாளில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைக் கேட்பாயாக. முந்தின (பழைய) குலத்திலுதித்த மாது விசேஷமாகப் பணங்காசுகளைச் சேர்த்து, சில தொகையை இவனிடம் கொடுத்து,

20. சிலதுபொன் இவன்பால்தங்கச் சென்றனள் சேதுக்கேதான்
நலமிலா பீதியாலே நாயகி மரணமானாள்
தலைவனும் அறத்திலிச்சை செய்துமே மரணமாகித்
தலைநான்கோன் வரியப்பட்டுச் செனித்தவ னிவனே
[யென்றோம்.

20. வைத்துக்கொள்ளும்படி சொல்லி, ராமேசுவரம் சென்றாள். பேதி ஏற்பட்டு நாயகி மரணமானாள். தலைவனும் தருமஞ்செய்வதில் இச்சைகொண்டு மரணமானான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவன் இவனே என்றோம்.

21. முன்சென்மம் பொருளைத்தந்த முதல்குல மாதுதானும்
இந்ததோர் சென்மந்தன்னில் எய்துவாள் ரெண்டாம்பாரி
அந்தவன் இருபானாறில் அந்தகன் பக்கல்சேர்வன்
பிந்திய சென்மந்தன்னைப் பேசுவோம் அவ்வூர்தன்னில்,

21. முன்ஜன்மத்தில் பொருளைக் கொடுத்துச் சென்ற பிராமண ஸ்திரீயும் இந்த ஜன்மத்தில் இவனுக்கு இரண்டாவது பெண்டாட்டியாக அவதரித்தாள். அவன் இவளுக்கு இருபத்தாறும் பிராயத்தில் எமனுடைய உலகம் சென்றான். பின்னால் ஏற்படும் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். அவ்வூரில்,

22. உதிப்பனும் சைவசேயாய் உரைக்குறோம் அறுபதாண்டில்
அதிபதி வரனும்கெண்டம் வரைகுறோ மிவன்பின்
[சென்மம்
கதிதரும் தணிகைஉத்திரம் கனமுள பேரூர்தன்னில்
சதிசெய்யும் க்ஷத்திரியசேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்.

22. சைவக்குழந்தையாய் உதிப்பனுகும் என்று உரைக்கிறோம். இவளுடைய அறுபதாவது பிராயத்தில் புருஷனுக்குக் கண்டம் ஏற்படும். இவனுடைய மறு ஜன்மத்தில் மோட்சத்தைக் கொடுக்கக்கூடிய திருத்தணிகைக்கு வடக்கே மதிப்பான பேரூரில் வஞ்சனைசெய்யும் க்ஷத்ரியக்குழந்தையாய் ஜனிப்பனும் என்று சொல்வோம்.

23. இந்ததோர் சென்மந்தன்னி லிவன்செய்த புண்ணியமென்ன
சந்ததம் கடவுள்பக்தி சலித்தோர்க்கு உதவியாயும்
கந்தன்மேல் பத்தியாயும் கடந்தோர்க்குத் தொண்டு [பூண்டும்
முந்தின தலங்கள்சென்றும் முதல்வனும் வாழ்வதாலே,

23. இந்த ஜன்மத்தில் இவன்செய்த புண்ணியங்களென்ன? எப்பொழுதும் கடவுளிடம் பக்திகொண்டவன். ஏழைகளுக்கு உதவி செய்வான். முருகக்கடவுள்மேல் பக்திபூண்டவன். இறந்தவர்களுக்குச் சடங்குகள் செய்தும், பழமையான சிவஸ்தலங்களுக்குச் சென்றும் வாழ்ந்துவந்த தனுலே,

24. செனிப்பனு மென்றுசொல்வோம் சாதகிக்கு அருபானேழில்
வனிதையின் மாதம்தன்னில் வளர்பிறைச் சஷ்டிதன்னில
கனமுள யோகம்செய்து காலன்தன் பதிக்குச்செல்வள்
வினையிலாத் தவங்கள்செய்யும் வித்தகி கேட்டிடாயே.

24. இக்குலத்தில் ஜனிப்பளும் என்று சொல்லுவோம். ஜாதகிக்கு அறுபத்தேழாவது பிராயத்தில், தைமாசத்தில், சுக்கிலபட்ச சஷ்டிதிதியில், நல்லயோகம் புரிந்து எமலோகம் சென்றுள். யாதொரு வினைகளும் இல்லாமல் தவங்கள் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

25. மறுசென்மம் காசிதன்னில் மறை(க்)குல முதிப்பாளாகும்
திருமக ளிச்சென்மத்தில் செய்தபுண் ணியங்களென்ன
பெரியோர்கள் உறவுகொண்டும் பகவானின் பத்தியாயும்
வருவோரை யாதரித்தும் மருமனூல் அறிவதாலும்,

25. அடுத்த ஜன்மம், காசியில், பிராம்மணகுலத்தில் உதிப்பாளாகும். இவள் இந்த ஜன்மத்தில் செய்தபுண்ணியச் செயல்கள் யாவை? பெரியோர்களுடைய சிநேகத்தைக் கொண்டதாலும், பகவானிடத்தில் பக்தி கொண்டதாலும், வரும் விருந்தினரை உபசரித்து ஆதரித்ததாலும், வேதம் மனுதர்மசாஸ்திரங்களை ஆராய்ந்து அறிந்ததாலும்,

26. பிறப்பளா மென்றுசொல்வோம் பிறக்குங்நால் விசாக [நாளில்
குருதசை தன்னிருப்புக் கூறுவோம் பதின்மூன்றுண்டும்
உரைந்திடும் திங்களெட்டும் உரைத்தனம பூர்வபாகம்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

26. மறைக்குலத்தில் பிறப்பாள் என்று சொல்லுவோம். பிறக்கும்போது விசாகநட்சத்திரம். குருமகாதசையில் இருப்பு வருஷம் பதிமூன்று, மாசம் எட்டு. இதுவரை எடுத்துச்சொன்னவை பூர்வபாக விவரங்கள். பிரளய காலத்தில் ஆனந்தக்கூத்தாடும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 48

1. திங்களும் கடகமாகச் சேய்ராகு கன்னிபுக்கப்
பங்கயன் குருவும்சாடி பளிங்கனும் கேதுமீனம்
துங்கமாய்ப் புந்திகாரி தோன்றிடம் மானதாக
இங்கிவை கிரகம்நின்று லக்கினம் மேடமாக,

1. சந்திரன் கடகத்திலும், செவ்வாயும் இராகுவும் கன்னியிலும், புதனும் சனியும் மகரத்திலும், சூரியனும் குருவும் கும்பத்திலும், சுக்கிரனும் கேதுவும் மீனத்திலும் தங்கும்படியான கிரக நிலையைக் கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்தின் பலனை,

சுக்கிரன் கேது	லக்கினம்		
சூரியன் குரு	இராசி சக்கரம்		சந்திரன்
புதன் சனி			
			செவ்வாய் ராகு

2. பலன்தனைப் புகலுமென்று பார்வதி கேட்கும்போது
குலவிய வதிஷ்டர்சொல்வார் குறித்தது பெண்பால்சென்மம்
தலமது கிழமேல்வீதி சண்டன்தன் வாசலாகும்
பலமுள ஊரேயாகும் பேசுவோம் பலதேவாசம்.

2. சொல்லுங்கள், என்று பார்வதி கேட்கும்போது, வசிஷ்ட மகரிஷி சொல்லலுற்றார். இந்த ஜாதகம் பெண் ஜன்மம். இருக்குமிடம் கிழக்கு மேற்கு வீதி. தெற்குப் பார்த்த வாசல். பலமான ஊரே யாகும். பல தேவதைகள் வசிக்கு மிடமாகும்.

3. இந்திர நகரமாகு மியம்பின அடையாளத்துள்
சந்தத மிரண்டாம்சென்மம் செனிப்பளாம் கங்கை
[சேயாய்த்
தந்தைதாய்த் துணைவர்யோகம் சாதகி வரனின்யோகம்
முன்பின்சென் மங்கள்யாவு முரைக்குறோ மின்னால்
[தன்னில்.

3. அவ்வூரை இந்திர லோக மெனலாம். இப்படிச் சொன்ன அடையாளத்துள், இவள் தன்னுடைய இரண்டாம் ஜன்மத்தில் ஜனிப்பளாகும். அதுவும் வேளாளர் குலத்தில் ஜாதகி உதிப்பாள். தந்தை தாய் துணைவரின் யோகம், அவள் புருஷனின் யோகம், இவர்களுடைய முன்பின் ஜன்மங்களின் விவரங்கள் முதலியவற்றை எல்லாம் விவரமாக இந்தப் புஸ்தகத்தில் கூறுவோம்.

4. தந்தையின் துணைஆண்ரெண்டு சாற்றுவோம் தீர்க்கமாக
நொந்திடும் மற்றதெல்லாம் நுகர்ந்தஆண் முன்ஒன்றுரும்
அந்தவர் சேதிபின்பால் அறிவிப்போம் தாயேயாங்கள்
சந்ததம் பிதாகுணத்தைச் சாற்றுவோம் தாயேகேளும்.

4. இவர்களுடைய தந்தையுடன் பிறந்த சகோதரர்கள் இருவர். அவர்கள் தீர்க்காயுளுடனிருப்பார்கள் என்று சொல்லுவோம். மற்றவர்கள் வியோக மடைவார்கள். சொன்ன சகோதரர்களில் ஒருவன் மூத்தவன். அவருடைய செய்தி விவரங்களைப் பின்னால் அறிவிப்போம். தாயே! நாங்கள். பிதாவின் குணங்களை எடுத்துரைப்போம். தாயே! கேளும்.

5. மிதுனம்பூ ராடநாளில் விளம்புவான் குணத்தைச் [சொல்வேன்
பதியது விட்டுஇன்னேன் பலஊரில் வாசம்செய்வன்
அதிகாரத் தொழிலுமேற்பன் அவன்கிராமச் செட்டு [செய்வன்
துதிசெய்தோருக் குதவுவானும் சோம்பிடான் காரியத்தில்.

5. ஆனி மாதம், பூராட நட்சத்திரம் கூடிய தினத்தில் உதித்தான். அவன் குணங்களாவன:—வீட்டைவிட்டு இவன் பல ஊரில் போய் வசிப்பான். அதிகாரமுள்ள உத்தியோகத்தைச் செய்வான். கிராம வியாபாரமும் செய்வான். ஸ்தோத்திரம் செய்பவர்களுக்கு ஒத்தாசை செய்வான். காரியத்தைச் செய்வதில் சோம்பலுடன் இருக்கமாட்டான்.

6. மாநிறம் சமதிரேகம் மன்னனால் செட்டுச்செய்வன்
ஊனமில் லாததேகி உரோமங்கள் முதுகில்நேரும்
ஈனமாம் குணமில்லாதான் இடர்செய்யான் யாவருக்கும்
மான்விழி மார்கள்மோகன் வல்லபன் கணக்கிலேதான்.

6. மாநிறம் கொண்டவன். சமமான தேகத்தை யுடையவன். அரசனுதவியால் வியாபாரம் செய்வான் பின்னமில்லாத சரீரத்தை யுடையவன். முதுகினில் ரோம முடையவன். இளப்பமான புத்தியை யுடையவனல்லன். எவருக்கும் தீங்கிழைக்க மாட்டான். மான்விழி கொண்ட ஸ்திரீகளிடத்தில் மோகங் கொண்டவன். கணக்கு விஷயங்களில் வல்லபன்.

7. சிலதுநாள் அரசுசெய்வன் செட்டுக்கள் சிலநாள்செய்வன்
புலவன்போல் யூகையுண்டு புசபலன் பொருந்துரைப்பன்
தலவாசம் செல்வானுகும் தனம்சேர்ப்பன் ரோமம்நீட்சி
நிலையதைக் காப்பானுகும் நீக்குவான் தந்தைஆஸ்தி.

7. சில நாட்கள் இராஜயோகத்துட னிருப்பான். சில நாள் வியாபாரங்கள் செய்வான். புலவர்களைப்போல புத்திக் கூர்மை யுள்ளவன். புஜ பல பராக்ரம முள்ளவன். ஸ்தலங்களுக்குப் போய் சிவ தரிசனம் செய்வான். பணத்தைச் சேர்ப்பான். நீளமான தலைமயிர்களை யுடையவன். தன்னுடைய ஸ்திதிக்குத் தக்கபடி நடப்பான். தந்தையின் ஆஸ்தியை ஒழிப்பான்.

8. கல்விமான் கடவுள்பக்தி கடந்தோர்க்கு அன்னமீவன்
நல்லவன் நல்லவர்க்கு நாயகி மேல்வெறுப்புத்
தொல்லையும் சுகமுமுண்டு சித்திர இல்லம்பின்னுல்
வல்லபன் செய்வானுகும் மங்கையே கேட்டிடாயே.

8. நல்ல படிப்பாளி. கடவுளிடம் பக்தி பூண்டவன். இறந்தோர்க்குச் சடங்கு செய்வான். நல்லவர்க்கு நல்லவனுவன். பெண்டாட்டிமேல் வெறுப்புள்ளவன். நல்லதும் பொல்லாததும் உண்டு. அழகான வீடு கட்டுவான். அதிகாரம் செய்வானுகும் பார்வதியே! கேட்பாயாக.

9. சொன்னஇக் குணத்தானுக்குத் தோகையு முதிப்பாளாகும்
இன்னவள் குணத்தைச்சொல்வேன் இளம்சொலள் மாஞ் [சிவப்பள்
உன்னத கல்விமானும் உயர்வோர்கள் பத்திபூண்பள்
அன்னியர் மதிக்கவாழ்வாள் அடாபிடி தன்னில்செல்லாள்.

9. இவ்வித குணங்களை யுடையவனுக்கு, நம் ஜாதகி பெண்ணுய்ப் பிறப்பாள். இவளுடைய குணத்தைச் சொல்லுவேன். இனிமையான வார்த்தைகளைப் பேசுவாள். மாநிற முள்ளவள். மேலான படிப்பை யுடையவள். பெரியோர்களிடம் பக்தி பூண்டவள். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். அடாபடி காரியங்களில் செல்ல மாட்டாள்.

10. பெரிதான குடும்பமேற்பள் போசன வறுமைகாணுள்
முருகர்தன் பக்திபூண்பள் மூலசூ டுடையளாகும்
திருமகள் ஒப்பதாகும் சித்திரப் பணிகள்சேர்ப்பள்
குறையென்றோர்க் குதவுவளாம் கொழுநன்தன் மனம் [போல்வாழ்வாள்.

10. பெரிய குடும்பத்தை வகிப்பாள். சாப்பாட்டுக்கு எவ்விதக் குறைவுமில்லை. முருகக் கடவுளிடம் பக்தி செலுத்துவாள். மூலச் சூடுடையவளாகும். இலட்சுமீ தேவியை ஒப்பாள். அழகான ஆபரணங்களை

அணிவாள். ஏழைகளுக்கு உதவுவாள். புருஷனுடைய மனதிற்குகந்தவள்.

11. முன்றுணை தோஷமெய்தும் மேவிடும் பின்னதுவிருத்தி
கன்னிகை இருவர்தீர்க்கம் காளையும் மவ்வாரென்றேம்
இன்னவன் பின்ஆண்தோன்றும் இயம்புவோம் பின்பால் [சேதி
கன்னென மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

11. மூத்த சகோதரன் தோஷமாவன். பின் துணைவர்கள் விருத்தியடைவார்கள். இரண்டு தங்கைகள் நிச்சயம். இரண்டு சகோதரர்களும் உண்டு. இவனுக்குப் பிறகு பிறக்கும் தம்பிகளைப்பற்றிப் பின்பாகத்தில் கூறுவோம். கனிந்த மொழிகளைக் கூறும் பார்வதியே! கேட்பாயாக.

12. மங்களர் பதினாலாண்டில் மருவிடும் தென்பால்மாரன்
அங்கவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் செவந்த [மேனி
துங்கமா மனத்தனுகும் சொல்லது சுகமேயுண்டு
பங்கய ரேகைஉள்ளான் பலர்களை வசியம்கொள்வன்.

12. இவனுடைய பதினன்காம் வயதில் இவனுக்குக் கலியாணம் ஆகும். புருஷனும் தெற்குத் திக்கிலிருந்து வருவான். அவனுடைய குணங்களை எடுத்துரைப்போம். அழகுடையவன். சிவந்தமேனியன். துல்லியமான மனதையுடையவன். சுகமான வார்த்தைகளைப் பேசுவான். கையில் பத்மரேகையை யுடையவன். பல பேர்களை வசியப்படுத்தும் இயல்பினன்.

13. வித்தையு மிரண்டுதேர்வன் வேந்தனுல் சீவனங்கள்
நத்திஞேர்க் குதவிசெய்வன் நாட்டினில் புகழுமேற்பன்
சுத்தவான் இனமதிப்புத் தொல்புவி சேர்ப்பாறுகும்
பத்தினிசொல் தட்டாதாகும் பால்தயிர் பிரியனுகும்.

13. இரண்டு விதமான கல்வித் துறையில் பயிற்சி யுடையவன். அரசனுல் ஜீவனம் செய்வான். ஏழைகளுக்கு உதவி செய்வான். ஊரில் நல்ல கியாதியைப் பெறுவான். சுத்த முடையவன். சொந்தக்காரர்களால் மதிக்கப்பட்டவன். பழைய பூஸ்திதியை விருத்தி செய்வான். பெண்டாட்டி சொல்லைத் தட்ட மாட்டான். பால் தயிர்களில் பிரியங் கொண்டவன்.

14. எப்போதும் வறுமைகாணுன் ஏவலாள் உடையனுகும்
தப்பித குணமில்லாதான் சனஉப காரியாகும்
மைப்பொருள் பத்திமானும் விருதரும் தடுத்துச்சொல்வார்
செப்பினீர் வரன்குணத்தைச் சிகியோடு ஏழோன்கூடி,

14. தரித்திரமே எப்போதும் கிடையாது. வேலை ஆட்களை உடையவன். தப்பிதமான குணங்களில்லாதவன். பொது ஜனங்களுக்கு ஒத்தாசை செய்வான். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். விருதர் இதனைத் தடுத்துச் சொல்லலானார். இவளுடைய புருஷனுடைய குணங்களை எடுத்துரைத்தீர்கள். கேதுவுடன் ஏழுக்குடைய சுக்கிரனும் கூடி,

15. ஈராறில் இருப்பதாலே எப்படிப் புகன்றீர்ஐயா
நாரிக்கு மாரன்தானம் நவமென்றோம் நவத்தோன்லாபம்
சூரிய னுடனேயோகம் செப்பினோம் யோகம்தானும்
பாரினில் புகழுமேற்பன் பகர்ந்தனம் வயதுதீர்க்கம்.

15. பன்னிரெண்டாம் வீட்டில் இருப்பதனாலே எப்படிச் சொன்னீர் ஐயா? பெண்டாட்டியின் புருஷஸ்தானம் ஒன்பதாமிடம் என்றோம். ஒன்பதாம் வீட்டிற்குடைய வியாழன் லாபஸ்தானத்தில் சூரியனுடன் சேர்ந்து நிற்பதனால் இங்ஙனம் கூறினோம். இவன் யோகவான். பூலோகத்தில் புகழை யடைவான். இவனுடைய வயசு தீர்க்கம் என்போம்.

16. புத்திரர் ஏழுவர்தோன்றும் போகிடும் சிலதுஎன்றோம்
சித்தமாய் ஆண்பால்ரெண்டு தோகைமார் மூன்றுநிற்கும்
குத்தங்கள் மூன்றுஏழும் கூறுவோம் பாவைக்கேதான்
அத்தியை வளர்த்தமாதே அறைந்தது தப்பாதென்றோம்.

16. ஏழு பிள்ளைகள் பிறப்பார்கள். சில வியோக மடையும் என்றோம். நிச்சயமாய் ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகள் மூன்று. இவை தீர்க்கம். மூன்று கெட்டுப்போம். ஏழு குழந்தைகளும் நம் ஜாதகிக்கே பிறந்தன. கடவுளை அடைந்த பார்வதியே! சொன்னது தப்பாதாகும்.

17. அன்னையும் மாநிறத்தாள் அன்புள மனத்தளாகும்
தன்னுடல் மெலிவுமுண்டு சத்பாத்திரி யோகசாலி
அன்னையும் மூன்றுமாகும் அறைந்தனம் முதல்தாய்க் [கின்றோன்
தன்துணை காணுளாகும் தனியளாம் என்றுசொல்வோம்.

17, தாயும் மாநிறங் கொண்டவள். மனதில் பிரிய முடையவள். மெலிந்த சரீரமுடையவள். சத்தான பாத்திரம். நல்ல யோகசாலி. அன்னையும் மூன்று பேர்கள் ஆவர். முதல் தாய்க்குப் பிறந்தவள் இவள். சகோதரம் இல்லை. தன்னந்தனியே பிறந்தவள் என்று சொல்லுவோம்.

18. இல்லமும் தென்பாலாகும் இடுக்கமில் லாதாளாகும்
வல்லிமுன் கோபியாவள் மருவிடும் பித்தசூடு
நல்லவ ளாகிவாழ்வாள் நவிலுவோம் இவள்முன்சென்மம்
எல்லையில் உயர்வதான எழில்கொங்கு நாட்டிலேதான்,

18. வீடும் தெற்குத் திக்கிலாகும். கஷ்டமில்லாதவள். சிறிது முன் கோப முடையவள். பித்த சூட்டின் உபத்திரவு முடையவள். நல்ல வளாகவே வாழ்ந்து வருவாள். இவளுடைய, முன்ஜன்ம விவரத்தைக் கூறுவோம். எல்லைப் புறத்தில் உயர்ந்திருக்கும்படியான, வளப்பம் பொருந்திய, மலையாள தேசத்திலே,

19. வன்னிய குலமுதித்து மதலைகள் உடையதாகிக்
கன்னிகை வாழும்நாளில் கலந்ததோர் வினையைக்கேண்மோ
தன்வரன் தங்கைபேரில் சாற்றினாள் சிலேடைவார்த்தை
அன்னவள் வரனும்கேட்டு அவளையே விலக்கலுற்றான்.

19. வன்னியர் குலத்திலுதித்து, குழந்தைகள் பிறந்து, வாழ்ந்து வரும் காலத்தில், ஓர் ஊழ்வினை வந்தடைந்தது. தன் புருஷனுடைய தங்கையின் மேல் பல அர்த்தங்கள் கொள்ளும்படியான அவதூறு வார்த்தைகளைச் சொல்ல, அதைக் கேட்ட அவள் புருஷன், அது காரணமாக, அவளைக் குடும்பத்தை விட்டே விலக்கி விட்டான்.

20. மாதுவும் திகிலடைந்து வரைந்தசா பத்தைக்கேண்மோ
பாதகி அடாதவார்த்தை பகர்ந்திட்டாய் தனியாளானேன்
காதலி பின்சென்மத்தில் காணாது துணைவர்தானும்
தீதாகும் அன்னைதானும் செனித்தசேய் முதலில்பீடை.

20. அம்மாது திகிலடைந்து, சொன்ன சாபத்தைக் கேளுங்கள். அடாத வார்த்தைகளை இந்தப் பாதகி சொன்னாள். அதன் காரணமாக நான் தனியாக ஒதுக்கப்பட்டேன். உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் உடன் பிறப்புக்கள் இருக்கா. அன்னையும் தோஷ மடைவாள். பெற்ற பிள்ளை பீடை யடையும்.

21. வரனில்லம் வாழாதாகி மறுவூரில் வாசமாகும்
திருகாகப் பலவார்சொன்னாள் ததாஸ்து என்றுசித்தர்கூற
அரிவைக்கு அந்தச்சாபம் அணுகிற்று என்றுசொல்வோம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

21. புருஷன் வீட்டில் வாழாமல் வேறு ஊரில் வசிப்பாய் என்று இவ்வாறாகத் திருகு வார்த்தைகள் சொன்னாள். சித்தர் அப்படியே ஆருக என்று சொல்ல, இவளுக்கு அந்தச் சாபம் வந்து சேர்ந்தது என்று சொல்லு வோம். விக்னேச்வரனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

22. மங்கையும் அந்தியத்தில் வாய்ப்புண்ணால் மரணமாகிப்
புங்கவன் வரியப்பட்டுப் பிறந்தனள் இவளேயென்றோம்
சங்கையாய் நாத்திசாபம் சார்ந்திடு மிச்சென்மத்தில்
தங்காது துணையும்தாயும் தன்சுதர் முதல்பீடை.

22. இவளும் அந்திய காலத்தில் வாய்ப்புண்ணால் மரண மடைந்து, திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு பிறந்தவள் இவளே என்றோம். சமுசயமாய் எண்ணின நாத்தனாருடைய சாபம் இந்த ஜன்மத்தில் இவளைச் சார்ந்தது, சகோதரமும், தாயும் தங்கவில்லை. பிறந்த பிள்ளையும் பீடையடைந்தது.

23. வனவாச மாகவாழ்வள் வரைகுறோம் இவள்பின்சென்மம்
கனமுள்கா ளாத்திதன்னில் கலப்பளாம் சைவசேயாய்த்
தனம்பணி அதிகமுண்டாய்த் தரணியோர் மதிக்கவாழ்வள்
சினமில்லாத் தவங்கள்செய்யும் செல்வதி கேட்டிடாயே.

23. வனவாசத்தில் வாழ்வதுபோல் வசித்து வந்தாள். இவளுடைய பின் ஜன்மத்தைக் கூறுவோம். மேன்மை தங்கிய திருக்காளத்தி தன்னில் சைவக் குழந்தையாய்ப் பிறப்பாள். பொன், பூஷணங்கள் அதிகமாக ஏற்பட்டு, பூமியிலுள்ளோர் மதிக்கும்படி வாழ்வாள். சதா தபசு செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

24. சாதகி தந்தைபூர்வம் சாற்றுவோம் பழனிநாட்டில்
ஓதுவார் குலமுதித்து உயர்வான கிருஷிசெய்து
மேதினில் வாழும்நாளில் மேவின வினையைக்கேண்மோ
காதலி ஒருத்திபேரில் கட்டுரை பகர்ந்தானென்றோம்.

24. ஜாதகியின் தந்தையின் பூர்வோத்தரங்களைச் சொல்லுவோம். பழனி நாட்டில், கோவிலில் பணி செய்யும் ஓதுவார் குலத்திலுதித்து, உயர்வான கிருஷித் தொழிலைச் செய்து, உலகினில் வாழும் நாட்களில், ஒரு வினை மேவிற்று. அதைக் கேளுங்கள். காதலி ஒருத்திபேரில் கெட்ட பொய் வார்த்தைகளைச் சொன்னான் என்றோம்.

25. பெண்பழி சொன்னபாவி பிறக்கும்பின் சென்மந்தன்னில்
பெண்துணை இல்லாதாயும் பிதுரில்லம் தங்காதாயும்
திண்ணமாய் வேறூர்வாசம் செப்பியே தெருத்தூள்விட்டாள்
வண்ணமா யிந்தச்சாபம் மருவிற்று இவனுக்கேதான்.

25. பெண்ணைப் பார்த்துப் பழி வார்த்தைகள் சொன்ன பாபியாகிய உனக்கு ஏற்படும் அடுத்த ஜன்மத்தில் சகோதரி இல்லாமல், பிதாவின் வீடு தனக்கு நிலைக்காமலும், நிச்சயமாக வேறு ஊர்களில் போய் வசிப்பாய் என்று சொல்லி, தெருவிலிருக்கும் மண்ணை வாரி இறைத்தாள். இந்தச் சாபம் சொல்லிய பிரகாரம் இவனை வந்தடைந்தது.

26. மரலியின் பதிக்குச்சென்று மறையவன் வரியப்பட்டு
வரனது குலமுதித்தான் மங்கையின் சாபத்தாலே
அரிவைமார் துணைகள்காணன் அயலூரில் வனவாசங்கள்
பிருகுமே தடுத்துச்சொல்வார் புனிதன்முன் சென்மந்
[தன்னில்,

26. இவனும் மரண மானன். பிரம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பெற்று, இக் குலந்தன்னி லுதித்தான். அம்மங்கையின் சாபத்தினாலே சகோதரி இல்லாமல், அயலூரில் வசித்து வரலாயினன். பிருகு மகரிஷி இதனைத் தடுத்துச் சொல்லுவார். முன் ஜன்மத்தில் இப்புனிதன்,

27. மறைகுல முதித்தோனிங்கு வரநதி குலமெவ்வாறும்
உரையும்கா ரணங்களெவ்வா றுத்தமன் முன்சென்மத்தில்
அருமறை விருப்பமின்றி அவனுமே வாழ்வதாலே
குறைவுள குலமுதித்தான் கோமளி கேட்டிடாயே.

27. பிராம்மண குலத்தில் பிறந்து, இப்போது இந்தக் குலத்தில் எவ்வாறு வசிக்கலாயினன்? அதற்கு என்ன காரணங்கள் என்று கூறுங்கள்? இவ்வுத்தமன் போன ஜன்மத்தில் கேவலமான குற்றமுள்ள குலத்தில் பிறந்தான். பார்வதியே! கேட்பாயாக.

28. மறுசென்மம் தில்லைதன்னில் மறைக்குலம் முதிப்பானாகும்
திருமகன் இச்சென்மத்தில் தனத்தின்மேல் இச்சையாகும்
குறையது சிலர்க்குச்செய்து குமரனும் வாழ்வதாலே
அருமறைக் குலமெவ்வாறு அணுகும்கா ரணங்கள்
[சொல்வார்.

28. அடுத்த ஜன்மம் சிதம்பரத்தில் பிராம்மண குலத்தில் உதிப்பான். இப்போது தனத்தில் அதிக ஆசை பெறுவான். சிலருக்குக் குற்றங்கள் செய்து இவன் வாழ்ந்து வந்ததனாலே அருமறை யோதும் அந்தணர் குலம் இவனுக்கு எப்படிக் கிட்டும்? காரணங்கள் கூறலாயினர்.

29. இந்ததோர் சென்மந்தன்னில் இகபரன் பத்தியாயும்
வந்தவர்க் கன்னமீந்தும் வருமுகன் தொண்டுபூண்டும்
நொந்தபேர்த் தம்மைக்காக்கும் நிகர்த்திருப் பணியும்
[செய்யும்
வந்ததால் உதிப்பனாகும் மங்கையே கேட்டிடாயே.

29. இந்த ஜன்மத்தில் இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் கடவுளிடத்தில் பக்திபூண்டு, வந்த விருந்தினருக்கு அன்னம் கொடுத்து உபசரித்து, முகமன்கூறி, தொண்டுகள் புரிந்தும், கஷ்டப்படுகிறவர்களைக் காப்பாற்றியும்,

ஒத்த திருப்பணிகள் செய்தும் வந்ததனாலே மறைக் குலத்தில் உதிக்கலானான். பார்வதியே! கேட்பாயாக.

30. பிறந்தசேய்ப் பூர்வம்தன்னைப் பேசுவோ மினிமேலாகச்
சிறந்திடு மறுவுநாட்டில் ஜெனித்தனள் [1]சேடர்வமிசம்
அறமதில் இச்சையுண்டா யழகான குடும்பியாகி
முருகர்தன் பத்தியாகி முன்வினை இல்லாதாகி,

30. இனிமேலாக, இவனுக்குப் பிறந்த பெண் குழந்தையின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். சிறந்த காவிரிப்பூம்பட்டினத்தின் புற நகரில், அடிமைக்காரர் வமிசத்தில் பிறந்தாள். தருமத்தில் அதிக விருப்பமுண்டாகி, அழகான குடும்பத்தை வகித்து, முருகக் கடவுளின் மேல் பக்தி ஏற்பட்டு, பவ வினைகள் இல்லாதவளாகி,

31. வந்தவ ளிவளேயென்றோம் வறைகுறோம் இவளின்யோகம்
செந்திரு விலாசம்பெற்றுச் செல்வதி வாழ்வாளாகும்
தந்தைக்கு முப்பானாறில் சாற்றுவோம் மாரகங்கள்
பிந்தியும் நாற்பானெட்டில் பேசுவோம் அன்னைகெண்டம்
கந்தனை ஈன்றமாதே கழறின மொழிகுன்றாது.

31. வந்தவளிவளே என்றோம். இவளுடைய யோகத்தைப்பற்றி விவரமாய்க் கூறுவோம். லட்சுமீ கடாட்சம் பெற்று, இச்செல்வி வாழ்ந்து வருபவளாகும். இவளுடைய முப்பத்தாறும் வயதில் இவள் தந்தைக்கு மரணம் ஏற்படும். பிறகு இவளுடைய நாற்பத்தெட்டாம் பிராயத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். கந்த ஸ்வாமியைப் பெற்ற பார்வதியே! நாங்கள் சொன்ன சொல் தவறாது.

32. சாதகி மரணகாலம் சாற்றுவோம் அன்பானெட்டில்
கோதிலாக் கடகமாதம் கூறுவோம் கெண்டம்தானும்
நீதியாய்ப் பராசரர்சொல்வார் நிமலிக்கு ஆறாண்டுக்குள்
வேதனைக் கெண்டமென்றோம் விளம்புவீர் அந்தச்சங்கை.

32. நம் ஜாதகியின் மரண காலத்தைப்பற்றிச் சொல்லுவோம். இவளுடைய ஐம்பத்தெட்டாம் பிராயத்தில், குற்றமற்ற கடக மாசத்தில், கண்டம் ஏற்படும் என்று நியாயமாய்ப் பராசரர் சொல்லலுற்றார். இவளுடைய ஆறும் வயதிற்குள் வேதனையினால் கண்டமேற்படும். அந்தச் சமுசயத்தைப்பற்றிய விவரம் கூறுங்கள்.

---

1. அடிமைக்காரர்

33. பொன்னவன் தனக்குஆறில் பிறைநிற்க சகடைதோஷம்
என்னுட கருத்தேஜயா இயல்செய முனியேசொல்வார்
கன்னிக்குச் சகடையுண்டு கடகம்மீன் தனுசுநந்தி
சொன்னதோர் நான்குவீட்டில் சந்திரன் இருப்பதாலே.

33. வியாழ பகவானுக்கு ஆறும் வீட்டில் சந்திரன் நிற்க, சகடயோக தோஷம் என்பது என்னுடைய கருத்தாகும் என்று ஜயமுனி சொல்லலுற்றார். கடகம், மீனம், தனுசு, ரிஷபம் இந்த நான்கு இராசிகளில் சந்திரன் இருப்பானாகில், கன்னிக்குச் சகடயோகம் உண்டு என்றோம்.

34. பரிதிமுன் பனிபோல்நீங்கும் பாவைக்கு வயதுதீர்க்கம்
குருதசை செனனகாலம் கூறுவோம் ஆண்டுஏழும்
மருவிடும் திங்களெட்டும் மாதுக்குச் சிலதுநோய்கள்
வருமென்றோம் நிவிர்த்தியாகும் மறலியே காணாளாகும்.

34 அதுவும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இவளுக்குத் தீர்க்காயுசுண்டு. ஜனனகாலத்தில் குரு தசை இருப்பு வருஷம் ஏழு, மாசம் எட்டாகும். இவளுக்குச் சில வியாதிகள் நேரிடும். வந்த வேதனை நீங்கும். எமன் உபாதையையே காணமாட்டாள்.

35. புகருமே ஒச்சத்தாலே பூவைக்குச் சுதர்கள்தோன்றும்
தகைமையாய் அன்பான்ரெண்டில் தன்வரன் மரணமாகும்
உவமையாய் இரண்டாம்பாகம் உரைக்குறோம் விபரமாக
மிகுதவம் புரியுமெங்கள் வித்தகி கேட்டிடாயே.

35. சுக்கிரன் உச்சஸ்தானத்திலிருப்பதனால் இவளுக்குக் குழந்தைகள் ஏற்படும். சரியாக, ஐம்பத்திரண்டாம் பிராயத்தில், இவளுடைய புருஷன் மரணத்தை யடைவான். இன்னும் மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். மிகுந்த தவங்களைப் புரிந்து வரும் பார்வதி தேவியே! கேட்பாயாக.

ஜாதகம் 49

1. சந்திரன் நந்தியாகச் சனிதேளில் ராகுசீயம்
புந்திசேய் இரவிமேரு புகரது மானில்தங்க
மந்திரி கேதுசாடி மேடமும் சென்மமாக
இந்தவார் கோளும்நின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரன் ரிஷபத்திலும், இராகு சிம்மத்திலும், சனி விருச்சிகத்திலும், புதன் செவ்வாய் சூரியன் இவர்கள் தனுசிலும், சுக்கிரன் மகரத்திலும், குருவும் கேதுவும் கும்பத்திலும் தங்கும்படியான இவ்விதமான கிரகநிலைகொண்ட இந்த மேஷலக்கின ஜாதகனுக்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள்,

	லக்கினம்	சந்திரன்	
குரு கேது	இராசி சக்கரம்		
சுக்கிரன்			ராகு
புதன் செவ்வாய் சூரியன்	சனி		

2. மங்கையும் கேட்கும்போது வசிஷ்டரும் கூறுகின்றார்
இங்கிவை ஆண்பால்சென்மம் இல்லமும் வடதென்வீதி
துங்கமாம் கிழக்குவாசல் தோகையுமா காளிஉத்திரம்
மங்கைபா கத்தோன்கீழ்பால் மாரியும் தந்திதென்மேல்,

2. என்று பார்வதி கேட்கும்பொழுது, வசிஷ்டமகரிஷி சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஓர் ஆண் மகனதாகும். அவனுடைய வீடும் வடக்குத்தெற்கு வீதியிலுள்ளது. துல்யமான கிழக்குப்பார்த்த வாசலுள்ளது. மகாகாளி கோவில் வடக்கேயுள்ளது. மங்கையை வாமபாகத்தில் வைத்த பரமசிவன் கோவில் கிழக்கேயுள்ளது. அம்மனும், விநாயகரும் தென்மேற்கே கோவில் கொண்டுள்ளார்கள்.

3. அருகினில் அருகர்கோஷ்டம் அணுகிடும் சிறுவூர்தன்னில்
வருகுவான் இந்தபாலன் அவன்தந்தை தாயின்யோகம்
திருமணத் துணைவர்புத்திரர் செப்புவோம் முன்பின்
[சென்மம்
பெருவயி றோனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

3. அதனருகில் அருகக்கடவுளின் கோவில். அதன் பக்கத்திலுள்ள சிறிய ஊரில் இந்தப் பாலன் உதிப்பான். அவனுடைய தாய் தந்தையர்கள், மனைவிமக்கள், சகோதரர் இவர்களுடைய யோகங்களையும், முன்பின் ஜன்மங்களையும் இப்புஸ்தகத்தில் விரிவாய்க் கூறுவோம். பெரிய வயிறை யுடையோனாகிய விக்னேசுவரரைப்பெற்ற புண்ணியசாலியாகிய பார்வதியே! கேட்பாயாக

4. தந்தையின் குணத்தைச்சொல்வேன் சாந்தவா னுயர [மில்லான்
சந்ததம் மால்நிறத்தான் சகலரும் புகழவாழ்வன்
வந்தவர்க் கன்னமீவன் மாநிலம் நல்லோனுவன்
சிந்தையில் மர்மமில்லான் சேயிழைப் பிரியனுவன்.

4. இவனுடைய தந்தையின் குணங்களைக் கூறுவோம். சாந்த குணமுள்ளவன். உயரமில்லாதவன். கருநிறமுடையவன். எல்லாரும் புகழும் படி வாழ்வான். வந்த விருந்தினருக்கு அன்னம் அளிப்பான். உலகினர்க்கு நல்லவனுவன். மனதில் ரகசியமில்லாதவன். பெண்டாட்டியிடம் பிரிய முள்ளவனுயிருப்பான்.

5. பூமியும் பரிபாலிப்பன் புதிதான கிருகம்செய்வன்
சேமமாம் குடும்பியாவன் தீரமில் லாதநெஞ்சம்
தாமத குணத்தனுகும் தன்துணை பெண்பாலொன்று
தீமையை ஒருவர்க்கெண்ணுன் சீலமு முடையதாமே.

5. பூமியைக் கிருஷிசெய்து பரிபாலிப்பான். புதிதான வீடு கட்டு வான். க்ஷேமத்தையுடைய குடும்பத்தை வகிப்பான். மனதில் தைரிய மில்லாதவன். தாமசகுணமுள்ளவன். ஒரு சகோதரி உண்டு. யாவர்க்கும் தீங்குசெய்ய நினைக்கமாட்டான். சீலமுடையவன்.

6. யூகைவான் பலபேர்நேயன் உண்பர்கள் பூசைபூண்பன்
பாகமாய்ப் பேசவல்லன் பரிந்துப சாரம்செய்வன்
ஆகம நுணுக்கம்தேரான் அருகர்தன் பத்திகொள்வன்
போகபாக் கியங்கள்பின்னுல் பொருந்திடு மென்று [சொல்வோம்.

6. நல்ல புத்திக்கூர்மை யுள்ளவன். பலபேர்களுடைய சிநேகத் தைப் பெற்றவன். பிராமண போசனம் செய்வான். விருந்தினரை ஆதரிப்பான். பக்குவமாகப் பேசுந்திறமையுடையவன். பிரியத்துடன் உபசாரம் செய்வான். வேதாந்த சாஸ்திர நுணுக்கங்களில் தேர்ச்சிபெற்ற வன். அருகக்கடவுளிடம் பக்தி கொள்ளுவான். பிற்காலத்தில் போக போக்கியங்களைப் பெறுவான். அப்பொழுதுதான் இவனுக்கு அவை பொருந்தும் என்று சொல்லுவோம்.

7. கரமதில் கமலரேகை காலாள்கள் உடையனுகும்
நெறியதைக் காப்பாஞகும் நேர்ந்திடும் மூலசூடு
குறையென்ருேர்க் குதவிசெய்வன் குலத்துளோர் மதிக்க [வாழ்வன்
பெருமையாய்க் குடும்பியென்ருேம் புண்ணிய வதியே [கேளாய்.

7. கையில் தாமரைரேகையை யுடையவன். வேலையாட்களை உடையவனுகும். தர்மத்தைக் காப்பாற்றுவான். மூலச்சூடு உபத்திரவ முடையவன். இல்லையென்ருேர்க்கு உதவி செய்வான். குலத்தவர் தன்னை மதிக்கும்படி வாழ்வான். பெருமைமிக்க குடும்பியாவன். பார்வதியே! கேட்பாயாக.

8. சொன்னஇக் குணத்தானுக்குச் சுதனுமே உதிப்பாஞகும்
அன்னவன் குணத்தைச்சொல்வே னழகுளான் சிவந்தமேனி
பன்னியே பேசவல்லன் பலர்களும் புகழவாழ்வன்
உன்னத வார்த்தைசொல்வன் உலகுக்கே நல்லோனுவன்.

8. இப்படியான குணங்களையுடைய தகப்பனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பாஞகும். அவனுடைய குணங்களைக் கூறுவோம். அழகுடையவன். சிவந்த நிறமுடையவன். பன்னிப்பன்னிப் பேசுவான். பலபேர்கள் இவனைப் புகழும்படி வாழ்வான். மேலான வார்த்தைகளைப் பேசுவான். உலகத்திற்கே நல்லவனுவான்.

9. வித்தையும் புத்திமானும் வீண்வம்பில் செல்லாஞகும்
அத்திபோல் நடையுமாவன் அவனியை விருத்திசெய்வன்
நத்திஞேர்க் குதவிசெய்வன் நற்பரி சகடுமுள்ளான்
சுத்தவான் கடவுளர்க்குத் தொண்டுமே செய்வாஞகும்.

9. நல்ல கல்விமான். புத்திக்கூர்மையை யுடையவன். வீண்வம்படிக்கமாட்டான். மத்தகஜம்போல் நடப்பான். பூஸ்திதியையும் விருத்தி செய்வான். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான். நல்ல குதிரை வண்டி வாகனமுள்ளான். சுத்தமுடையவன். கடவுளுக்கு வழிபாடுகள் செய்வாஞகும்.

10. மாமிகள் மூன்றுமாக மருவிடும் இவனுக்கேதான்
சேமமாம் குடும்பியாவன் செய்நிலம் விருத்திசெய்வன்
காமனை யொத்ததேகன் கனத்தவர் நேசம்கொள்வன்
தீமையை விரும்பாஞகும் சென்உப காரியாமே.

10. இவனுக்கு மூன்று மாமியார்கள் உண்டு. க்ஷேமமான குடும்பியாவன். நன்செய் நிலங்களை விருத்திசெய்வான். மன்மதாகாரமான தேகத்தையுடையவன். கனவான்களுடைய சிநேகத்தைப் பெறுவான். கெடுதலை விரும்பவேமாட்டான். பொதுஜனங்களுக்கு உபகாரம் செய்வான்.

11. தன்துணை காணுகும் தரிக்கினும் தீதேயாகும்
பொன்பணி அதிகம்சேர்ப்பன் பிதுராஸ்தி விருத்திசெய்வன்
கன்னிகை வர்க்கத்தாரால் கலந்திடும் கிராமச்செட்டுச்
சொன்னசொல் காப்பாளுகும் தொல்புவி புகழுமேற்பன்.

11. தனக்குச் சகோதரரிருக்கமாட்டார்கள். இருப்பினும் மரித்திடுவர். பொன் பூஷணங்களை அதிகமாகச் சேர்ப்பான். பிதிரார்ச்சிதத்தை விருத்தி செய்வான். பெண்டாட்டியின் குடும்பத்தினரால் ஏற்படும் கிராமவியாபாரமுண்டு. சொன்னசொற்படி நடப்பான். பூலோகத்தில் கீர்த்திமானுவன்.

12. சிலதுநாள் அதிகாரங்கள் செய்குவன் வறுமைகாணுன்
தலம்தீர்த்தம் தோய்வாளுகும் சற்பாத்திரன் சொகுசனுவன்
நலமையாய்ப் பணிகள்செய்வன் நல்லோர்க்கு நல்லனுவன்
கலவர புத்தியுள்ளான் காதலி மார்கள்தன்னுல்.

12. சிலநாட்கள் அதிகாரமுள்ள உத்தியோகங்களைச் செய்வான். தரித்திரத்தைப் பார்க்கமாட்டான். ஸ்தலங்களைத் தரிசிப்பான். தீர்த்தாடனங்கள் செய்வான். நல்ல பாத்திரன். சொகுசுக்காரன். காரியங்களை நல்லதாகச் செய்வான். நல்லவர்களுக்கு நல்லவனுவன். காதலிமார்கள் மூலமாய்க் கலவரங்கள் செய்யும் எண்ணமுள்ளவன்.

13. இருபது மூன்றுஆண்டுள் இவனுக்குப் பாரிவாய்க்கும்
வருமனை உள்ளூராகும் மாதுவின் குணத்தைக்கேளாய்த்
திருமகள் ஒப்பதாகும் சொல்லது சுகமேயாகும்
பெரும்புத்தி அடக்கமுண்டு பேதைக்கு வயதுதீர்க்கம்.

13. இவனுடைய இருபத்துமூன்றும் பிராயத்தில் கலியாணமாகும். உள்ளூரிலேயே பெண்டாட்டி ஏற்படுவாள். அவளுடைய குணங்களைக் கேட்பாயாக. லட்சுமீதேவியை ஒப்பாள். சுகமாகச் சம்பாஷிப்பாள். பெரும்புத்தியை (மேலான நோக்கங்களை) யுடையவள். அடக்கமுள்ளவள். இவளுக்குத் தீர்க்கமான ஆயுளுண்டு.

14. செயமுனி இதனைக்கேட்டுத் திடுக்கென உரைக்கலுற்ருர்
வியமாகும் தாரம்தானும் மேவிடும் இரண்டாம்மாது
நயமுடன் சுதர்கள்தோன்றி நசித்திடும் அந்தமாதும்
பயமிலா மூன்ரும்மாது பருகிடும் தீர்க்கமாக.

14. இதனைக்கேட்ட ஜயமுனிவர் திடுக்கிடும்படியாகச் சொல்லலுற்றார். தாரம் வியோகத்தையடைவள். இரண்டாவது கலியாணம் ஏற்படும். நன்மையான பிள்ளைகள் பிறந்து, அந்த மாதும் மரிப்பாள். பயமில்லாமல் மூன்றும்தாரமும் ஏற்படும். அது தீர்க்கம்.

15. எப்படிச் சொல்லுமென்ன ஏழுளோன் கருமமேற
ஒப்புடன் சனியும்பார்க்க உரைத்திட்டோ மந்தச்சங்கை
மைப்படி ரெண்டுமாதும் மரலியின் பதிக்குச்செல்லும்
செப்புவீர் மூன்றும்மாது சேதுவாம் பிள்ளைவர்க்கம்.

15. எப்படிச் சொன்னீர்? என்று கேட்க, ஏழுக்குடையோனான சுக்கிரன் கர்மஸ்தானமாகிற பத்தாமிடத்தில் தங்க, அவனைச் சனி மூன்றும் பார்வையினால் பார்க்க, அந்தச் சந்தேகத்தைச் சொன்னோம். அடுத்தபடி இம்மாதும் எமலோகம் சேருவாள். மூன்றும் பெண்டாட்டி பிள்ளைகளின் குடும்பத்தினருடைய வருக்கத்திற்கு ராமேஸ்வரம் இருப்பிடம்.

16. இதுவன்றி வர்[வா]க்கிலேதான் எய்திடும் பிந்துமூன்றும்
சதியாகத் தாரம்மூன்று சார்ந்திடும் காலனுக்கு
மதிமுக மூன்றும்மாது வருகும்கா லங்கள்சொல்வாய்
அதிதியே முப்பானைந்தில் அணுகிடு மென்றுசொல்வோம்.

16. இதுவில்லாமல், மூன்று பிந்துக்கள் ஏற்பட்டதனால் இந்த வர்க்கத்தில் ஒழுங்காக தாரம் மூன்று சார்ந்திடும். மூன்றும் மாது காலன் பதிக்குச் செல்லும் காலத்தைச் சொல்லுவாய். அதிதியே! முப்பத்தைந்தாம் ஆண்டில் அணுகிடுவாள் என்று சொல்லுவோம்.

17. இருமனை தங்காவண்ணம் இயம்புவீர் முனியேநீதான்
திருமகன் பூர்வம்சேதம் தீவினை புதனால்நேரும்
உரைகுவீர் அந்தச்சங்கை உத்தமன் பூர்வம்சொல்வேன்
வரும்பாண்டிய நாட்டிலேதான் மறைக்குல முதித்து
[என்றோம்,

17. இரு மனைவிகள் தங்காமல் மரித்துப்போன காரணம் என்ன? சொல்லுங்கள், முனிவரே! நீங்கள்தான். ஆதியில் புத்திரதோஷம் புதனால் ஏற்படும். அந்தச் சந்தேகத்தைச் சொல்லுங்கள். இவ்வுத்தமனுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லுவேன். பாண்டியதேசத்தில் பிராமண குலத்திலுதித்து இவன்,

18. பலவித வணிபம்செய்து பாரியும் மதலையுண்டாய்
நலமுள குடும்பியாகி நாயகன் வாழுநாளில்
குலமதில் விதவைதன்னைக் கூடியே வாழும்நாளில்
தலைவித்தி கருவுதங்கிச் சாற்றினாள்இவன் தன்னோடு.

18. பலவிதமான வியாபாரங்கள் செய்து, மனைவிமக்கள் உண்டாகி, நல்லபடியான குடும்பத்தை வகித்து, வாழ்ந்துவரும் காலத்தில், குலத்தினில் ஒரு விதவையைக்கூடி போகம் துய்த்து வாழ்ந்துவரும் காலத்தில், தலைவிதியினால் அவளுக்குக் கர்ப்பம் ஏற்பட்டு இவனுடன் சேர்ந்து பேசினாள்.

19. மாரனும் அதனைக்கேட்டு மங்கைக்கு அவிழ்தமீய
நாரிக்குக் கருவுநீங்கி யமன்பதி சேர்ந்தாளென்றேம்
தீரமாய் அந்ததோஷம் சேர்ந்தது இதுவுமன்றிக்
காரிழை வேறுமாதைக் கலந்தனன் ஆலயத்தில்.

19. இவனும் அவள் கர்ப்பமான சங்கதியைக் கேட்டு மருந்துகள் கொடுக்க, அவளுடைய கர்ப்பம் நீங்கி எமலோகம் சென்றாள். நிச்சயமாய் அந்த தோஷம் இவனைச் சார்ந்தது இதுவுமல்லாமல், கோவிலில் வேறொரு ஸ்திரீயைக் கலந்தனன்.

20. இதுவன்றி வேறுசொல்வேன் ஏழையோன் மகனுக்காகக்
கதியின்றி மணங்கள்வேண்ட கிஞ்சித்துப் பொருளைத்தந்து
பதியதை தன்கைக்கொண்டான் பகருவார் ஏழையோர்கள்
சதிசெய்து இல்லம்கொண்டாய்ச் சாரும்பின் சென்மந்
[தன்னில்,

20. இதுவுமல்லாமல் மற்றொன்று சொல்லுவேன். ஓர் ஏழையாயிருப்போன் தன் மகனுக்காகக் கதியில்லாமல் கலியாணத்தை உத்தேசித்துப் பொருளையளித்து, அவன் வீட்டைத் தன் கைக்கொண்டான். ஏழையோர் சாபம் இட்டனர். சூதுசெய்து எங்கள் வீட்டைக் கைப்பற்றிக்கொண்டாய். இனிவரும் ஜன்மங்களில்,

21. துணைவர்கள் இல்லாதாயும் தோகைமார் மரணமாயும்
பிணையாகும் சுதர்கள்தானும் புகன்றவர் தெருத்தூள்
[விட்டார்
கனமாக அந்ததோஷம் கலந்தது இவனுக்கேதான்
அனையவே நரகமில்லம் அநேகநாள் வாசமாகும்.

21. சகோதரர்கள் இல்லாமலும், பெண்டாட்டி இறந்தும், புத்திர தோஷம் ஏற்பட்டும் வாழ்வாய் என்று தெருவிலிருக்கும் மண்ணை எடுத்துத் தூற்றினர். கடுமையான அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. அதன் காரணமாக நரகத்தில் அநேககாலம் வசிக்கலாயினான்.

22. மருமத்தால் வெளியேசெல்ல மரலியின் பதிக்குச்சேர்ந்தான்
பகையாக அந்ததோஷம் பற்றிற்று இவனுக்கேதான்
தகைமையாம் அந்தியத்தில் தன்மனை மரணமாகி
அகமதில் வருத்தமுற்று அச்சேது பதிக்குபுக்கி,

22. இரகசியமாக வெளியே வருவான். கடைசியில் எமலோகம் சென்றான். பழைமையான அந்ததோஷம் இவனையே வந்தடைந்தது. தகுதியாக அந்திய காலத்தில் தன் மனைவி மரணமடைந்து வீட்டில் வருத்த முற்று இராமேசுவரம்போய்ச் சேதுஸ்னானம் செய்து,

23. மரலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டு
அருகர்தன் குலத்திலேதா னணுகுவா னிவனேயென்றோம்
உரைந்திடு முன்னூழ்ச்சாபம் உத்தமன் துணைகள்காணான்
இருமனை மரணமெய்தும் இசைந்திடும் மூன்றும்மாது.

23. எமலோகம் சென்று, திரும்பவும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டு, அருகர் (சைனர்) குலத்திலுதித்தான் இவனே யென்றோம். முன்னை ஊழ்வினையின் பலன் தன்னைச் செய்தவனை வந்தடைந்தது. இவனுக்குச் சகோதரம் இல்லை. இரண்டு பெண்டாட்டிகளும் இறந்தனர். மூன்றாவது கலியாணமும் ஏற்பட்டது.

24. அத்திரி சொல்லுகின்றார் அணுகின தோஷம்தீரச்
சுத்தமாய்ச் சாந்திஒன்று செப்புவீர் முனியேநீதான்
வித்தகன் தனக்குச்சாந்தி விளம்பவே மாட்டோம்யாங்கள்
குத்தங்கள் குத்தமேதான் கருவதை அழித்ததோஷம்.

24. இதைக் கேட்ட அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். ஏற்பட்ட தோஷம் தீருவதற்குச் சுத்தமான பரிகாரம் சொல்லுவீர் என்று முனிவரைக் கேட்க, நாங்கள் இவன் செய்த கர்மாவிற்குச் சாந்தி சொல்லவேமாட்டோம். குற்றம் குற்றமேயாகும். கர்ப்பத்தை அழித்த தோஷம் தோஷம்தான்.

25. அரவினை அடித்ததோஷம் அதற்குமே சாந்திசொல்வோம்
வருவினை அடையவேண்டும் மைந்தர்கள் பலத்தைச் [சொல்வேன்
பெருமையாய் ஆண்பால்ரெண்டு பேதையர் மூன்று [என்றோம்
பராசரும் புகலுகின்றார் எந்தப்பாவைக்கு (சுதர்கள்)விருத்தி.

25. பாம்பைக் கொன்ற அந்த தோஷத்திற்குச் சாந்தி சொல்லுவோம். வந்த கர்மவினைகளைப் பெறவேண்டிய மைந்தர் ஏற்படும் பலத்தைக் கூறு வோம். பெருமையுடன் ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகள் மூன்று என்றோம். இதைக் கேட்ட பாராசரர் சொல்லலுற்றார். எந்தப் பெண்டாட்டிக்குப் பிள்ளைகள் பிறக்கும்?

26. சொல்லுவீர் விபரமாகச் சுதர்காணா முதல்மனைக்கு
அல்லலாய்க் காலனூடு அடைகுவாள் ரெண்டாம்மாது
வல்லிக்குச் சுதர்ஆண்ஒன்று மங்கையர் அவ்வாறென்றோம்
புல்குவார் காலனூடு புத்திரன் உதித்துப்பின்பு.

26. என்று விவரமாகச் சொல்லுவீர். முதல் மனைவிக்குப் பிள்ளைகள் பிறக்கா. துன்பப்பட்டு எமலோகம் சேர்வாள். இரண்டாம் பெண்டாட்டிக்கு ஆண் ஒன்று, பெண் ஒன்று பிறக்கும். புத்திரன் பிறந்தபின்பு மரணத்தை யடைவாள்.

27. திருதிகை மாதுக்கேதான் தீர்க்கமாம் ஆண்பால்ஒன்று
மருமமாய்ப் பெண்பால்ரெண்டு மருவிடு மென்றுசொல்
[வோம்
வரும்சுதர் இவன்மேலாக வாழ்குவார் என்றுசொல்வோம்
பெருகிடு முள்ளூர்தன்னில் பேதையர் என்றுசொல்வோம்.

27. மூன்றாவது பெண்டாட்டிக்குத்தான் ஓர் ஆண் குழந்தையும், இரண்டு பெண்களும் பிறக்கும். இவை தீர்க்கம் என்று சொல்லுவோம். இவனுடைய குழந்தைகள் இவனுக்கு மேலாக மதிப்பாய் வாழ்வார்கள் என்று சொல்லுவோம். அப்பெண் குழந்தைகள் குடும்பிகளாக உள்ளூரில் பெருமையுடன் வாழ்வார்கள் என்று சொல்லுவோம்.

28. அன்னைமாஞ் சிவப்பளாகும் அழகுளாள் பொறுமைசாலி
தன்சொலு மடக்கமுண்டு தன்தனம் கபடுமில்லாள்
கன்னென மொழியேசொல்வள் காதலி யோகசாலி
பின்னமில் லாததேகி புருடனுக் கினியளாமே.

28. இவனுடைய தாய் மாநிறமும் அழகுமுள்ளவள். பொறுமையுடையவள். அடக்கமாய்ப் பேசுவாள். தன் காசு தனியே வைத்திருப்பாள். கபடமில்லாதவள். கனிவான வாய்ச்சொற்களைச் சொல்லுவாள். இவள் நல்ல யோகசாலி. பின்னமில்லாத சரீரத்தை யுடையவள். புருஷனுக்குப் பிரியமாய் நடப்பாள்.

29. இல்லமும் உள்ளூராகும் இவள்துணை ஆண்பால்ஒன்று
வல்லிமார் மூவர்தீர்க்கம் வளமிலா மற்றதெல்லாம்
சொல்லுவோம் இவள்தன்பூர்வம் சோழநா டதனிலேதான்
நல்லதோர் கங்கைசேயாய் நாயகி உதித்தாளென்றேம்.

29. இவள் வீடும் உள்ளூரிலேதான். இவளுக்குச் சகோதரன் ஒருவன். சகோதரிகள் மூன்று பேர்கள். மற்றவைகள் தங்கா. இவளுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லுவோம். சோழவளநாட்டிலே மேன்மைமிக்க வேளாளர் குலத்தில் இவள் உதித்தாள் என்றேம்.

30. சுகமுள குடும்பியாகித் துறவிகட் கன்னமீந்து
செகமதில் பலமில்லாமல் சென்றனள் காலன்பக்கம்
தகைமையாய்ப் பிரம்மன்லக்கம் தரணியில் வரியப்பட்டுப்
பகையில இக்குலத்தில் பாவையும் வந்தாளென்றேம்.

30. சுகமான குடும்பத்தை வகித்து, சன்னியாசிகளுக்கு அன்னம் அளித்து, உலகில் பவவினைகள் இல்லாமல் காலனுடு சென்றாள். ஒழுங்காக பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, பூமியில் பகையில்லாத இக்குலத்தில் இவள் வந்துதித்தாள் என்றோம்.

31. மாதுக்குப் பித்தவாயு மருவிடும் வறுமைகாணாள்
ஓதுவேன் இவள்பின்சென்மம் உயர்வான அருணைநாட்டில்
தீதிலா இக்குலத்தில் செனிப்பளா மென்றுசொல்வோம்
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

31. இவளுக்குப் பித்தவாயுவின் உபத்திரவம் ஏற்படும். தரித்திரத்தைக் காணமாட்டாள். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். மேலான திருவண்ணாமலையில் குற்றமற்ற இந்தக் குலத்தில் ஜனிப்பாளென்று சொல்லுவோம். கடவுளைப்பெற்ற புண்ணியசாலியான பார்வதியே! கேட்பாயாக.

32. தந்தையின் பூர்வம்சொல்வேன் சட்டநா தீசர்வாழும்
முந்திய ஊரிலேதான் உதித்தனன் பிரம்மசேயாய்த்
தன்தனம் உடையனாகிச் சங்கரன் தொண்டுபூண்டு
முந்தினோர்க் கன்னமீந்தும் உயர்வான தலங்கள்சென்று,

32. தகப்பனாரின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். சட்டநாதேசுவரர் வாழும் சீர்காழி என்ற ஸ்தலத்தில், பிராமணக் குழந்தையாய் உதித்தனன். தன்னுடைய சுயார்ச்சிதம் ஏற்பட்டு, சங்கரனுக்கு (சிவபெருமானுக்கு)த் தொண்டு செய்து வழிபாடுகள் செய்து பிராமணர்களுக்கு அன்னதானம் செய்து மேலான சிவஸ்தலங்களுக்குப் போய்த் தரிசித்து,

33. வினையது இல்லாதாகி மேவினன் காலன்பக்கல்
சினமிலா பிரமன்லக்கம் செனித்தனன் இக்குலத்தில்
அணையவே பின்சென்மத்தை அறைகுறோம் வடமேல்திக்கில்
கனமுள தலத்திலேதான் கலப்பனும் இக்குலத்தில்.

33. பவவினைகள் இல்லாமல் எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தனன். பொருத்தமாகவே இவனுடைய பின் ஜன்மத்தைக் கூறுவோம். வடமேற்குத் திக்கில் மேன்மைதங்கிய ஸ்தலத்திலே பிறந்து இக்குலத்தில் வருவான்.

34. எண்ணஞ்சு ஒன்றுஆண்டில் இடபமா தத்திலேதான்
பொன்திசை சேய்ப்புகுத்திப் பொருந்திடு காலந்தன்னில்
வண்ணமாய்த் தந்தைகெண்டம் வரைந்தது தப்பாதாகும்
அண்ணலைப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

34. இவனது நாற்பத்தோராம் ஆண்டில், வைகாசி மாசத்திலே, வியாழ தசையில்; செவ்வாய் புக்திபொருந்திடும் காலத்தில், ஒழுங்காகத் தந்தையின்

கண்டம் ஏற்படும். எழுதினது தப்பாதாகும். பகவானைப் பூசை செய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

35. நாற்பது ஐந்துஆண்டில் நல்துலா மாதம்தன்னில்
ஏற்கவே காரிகாலம் எழில்சுய புத்திதன்னில்
தீர்க்கமாய் அன்னைகெண்டம் செப்பின மொழிகுன்றாது
ஆர்க்கவே தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

35. இவனது நாற்பத்தைந்தாம் ஆண்டில், நல்ல துலாமாசத்தில், (ஐப்பசியில்) பொருத்தமாக இவன் அன்னைக்கு மரணம் ஏற்படும். சனி தசையின் சுயபுக்தியில் தீர்க்கமாய்க் கண்டம் ஏற்படும். சொன்னசொல் தவறாது. விசேஷமான தவங்கள் செய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

36. உதித்தவன் நிரியாணத்தை[1] உரைக்குறோம் அறுபான்மூன்றில்
சதியிலா ரிடபமாதம் சாற்றுவோம் கெண்டம்தானும்
எதிர்சென்மம் உத்திரத்தில் எழில்பிரயாகை[2] தன்னிலே [தான்
எதுகுலம் தனிலுதிப்பான் ஈசுவரி கேட்டிடாயே.

36. ஜாதகனுடைய மரணகாலத்தைக் கூறுவோம். அறுபத்துமூன்றாம் வயதில், குற்றமற்ற வைகாசிமாசத்தில், கண்டம் ஏற்படும். அடுத்த ஜன்மத்தில் வடக்குத்திக்கில் பெருமைமிக்க பிரயாகை என்னும் க்ஷேத்திரத்தில் எது குலத்தில் உதிப்பான். ஈசுவரி! கேட்பாயாக.

37. வந்தவன் பொதுயோகத்தை வரைகுறோம் தாயேயாங்கள்
முந்துகே சரியோகங்கள் உயர்கிரி யோகமொன்று
கந்துக[3] யோகமொன்று கழறுவோம் பலனையாங்கள்
முந்தின புகழுமேற்பன் உயர்திருப் பணியும்செய்வன்.

37. அவனுடைய பொதுப்படையான யோகபாவத்தை எடுத்துரைப்போம், தாயே! நாங்கள். முதலில் கேசரியோகம். இதைத் தவிர மேலான கிரியோகம் ஒன்று. இராஜயோகம் ஒன்று. இத்தகைய யோகங்களின் பலாபலன்களைக் கூறுவோம். பிரம்மவித்துக்களுக்குரிய கீர்த்தியை ஏற்பான். மேலான திருப்பணிகளும் செய்வான்.

---

1. மரணத்தை

2. பிரயாகை = திரிவேணி சங்கமம். பிரசாபதி க்ஷேத்திரம். இது கங்கையும் யமுனையும் கூடு மிடத்தி லுள்ளது. இது பிரபலமான ஒரு புண்ணிய க்ஷேத்திரம்.

3. குறுநிலமன்னர்

குறிப்பு :—கேசரி யோகம் = இலக்கினத்திற்கு நாலிலும் ஏழிலும் சந்திரன் நிற்பதும், வியாழனும் சந்திரனும் கூடி நிற்பதுமாம். நமது இந்த 49—ஆவது ஜாதகத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்து கேந்திர சம்பந்தத்திலிருப்பதைப் பார்க்க.

38. பந்துவும் புகழுவாழ்வன் பாருகள் விருத்திசெய்வன்
வந்தவர்க் கன்னமீவன் வண்டிவா கனமுமுள்ளான்
எந்திடும் பெருமையேற்பன் இராசபூ சிதனுமாவன்
சந்தத மூன்றுஇல்லம் சாற்றிேனும் இவனுக்கேதான்.

38. சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். நிலங்களை விருத்திக்குக் கொண்டு வருவான். வந்த விருந்தினருக்கு அன்னதானம் செய்வான். வண்டி வாகனமுமுடையவன். எங்கினும் பெருமை பெறுவான். அரசர்களால் பூஜை செய்யப்படுவான். மூன்று வீடுகள் கட்டுவான். எல்லாச் சௌகர்யமும் இவனுக்கேதான் ஏற்படும்.

39. பிறையது போலேயோகம் பொருந்திடும் நல்லசோலை
குறையிலாக் குடும்பியாவன் குருவுப தேசம்கொள்வன்
நெறியது தவறுனும் நினைத்தது முடிக்கவல்லன்
பறைபள்ளு அதிகமுண்டு பரஉப காரியென்றேம்.

39. பிறைச்சந்திரனைப் போலவே யோகம் வளர்ந்து ஓங்கிடும். நல்ல தோட்டம் துரவுகளுடையவன். குறைவில்லாத குடும்பியாவன். குருவுபதேசம் கொள்ளுவான். தருமநெறி தவறமாட்டான். எண்ணிய கருமத்தைச் சாமர்த்தியமாய் முடிக்கவல்லான். பறையன், பள்ளன் முதலான ஆட்களை யுடையவன். பரோபகாரி யென்றேம்.

40. நல்லவன் நல்லவர்க்கு லண்டர்க்கு மிண்டனுவன்
புல்லிய புத்திகொஞ்சம் பிதுராஸ்தி பாகமில்லை
வல்லவன் பணிகள்பூமி மருவுமெண் ணுயிரம்பொன்
சொல்லது தவறுதல்இல்லை சுந்தரி கேட்டிடாயே.

40. நல்லவர்க்கு நல்லவனுவன். போக்கிரிக்குப் போக்கிரியாவன். கேவலமான புத்தி கொஞ்சம் உடையவன். பிதாவின் ஆஸ்தி பாகமாகாமலிருக்கும். சாமர்த்தியசாலி. காரியங்களைச் செவ்வனே செய்வன். பூமிகள் சேரும். மொத்தச் சொத்துக்கள் எண்ணுயிரம் பொன்கள் பெறும். சொல்லுவது தவறது. பார்வதியே! கேட்பாயாக.

41. சாதகன் செனிக்குங்காலை சந்திரன் தசையிருப்பு
ஓதுவேன் ஆண்டுரெண்டும் உரைந்திடும் திங்களொன்பான்
தீதுண்டு சாதகர்க்குச் செனசூதம் அன்னைவர்க்கம்
கோதில்லாப் பின்பாகத்தில் பகருவோம் விபரமாக.

41. ஜாதகன் ஜனிக்கும்போது சந்திரதசையில் இருப்பு வருஷம் இரண்டு, மாசம் ஒன்பது ஆகும். அக்காலம் ஜாதகருக்குக் கெடுதல் உண்டு. தாயின் வர்க்கத்தில் ஆசௌசம் ஏற்படும். பாக்கி விவரங்களை குற்றமற்ற பின்பாகத்தில் விவரமாக்க் கூறுவோம்.

ஜாதகம் 50

1. பிறைவீணை காரிமீனம் புதன்புகர் சேயம்கன்னி
குருராகு மானதாகக் கூறிய ரவியும்செட்டி
அரைபாம்பு கடகம்புக்க ஆடது ஜென்மமாக
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்கலுற்றாள்.

1. சந்திரன் மிதுனத்திலும், கேது கடகத்திலும், புதன் சிம்மத்திலும், சுக்கிரனும் செவ்வாயும் கன்னியிலும், சூரியன் துலாத்திலும், குருவும் ராகுவும் மகரத்திலும், சனி மீனத்திலும் நிற்கும்படியான கிரக நிலை கொண்ட இம் மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கலுற்றாள். (பக்கத்தில் கணித்துள்ள ஜாதகம் சில சந்தேகங்களை உண்டு பண்ணியதனால் பாசுரங்கள் 16, 17, 19 முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு இதை வரைந்துள்ளோம்.)

சனி	லக்கினம்		சந்திரன்
	இராசி சக்கரம்		கேது
குரு ராகு			புதன்
		சூரியன்	சுக்கிரன் செவ்வாய்

2. அத்திரி சொல்லுகின்றார் ஆணது ஜெனனமாகும்
வித்தகன் உதித்தஇல்லம் விளம்புவோம் கீழ்மேல்வீதி
உத்திரம் வாசலாகும் உயர்மேற்கில் மாரிதங்கும்
பத்திர காளிகீழ்பால் பரமனும் உத்தரமாகும்.

2. அத்திரி மகரிஷி சொல்லலுற்றார். இஃது ஆண் ஜன்மம். ஜாதகன் பிறந்த வீட்டின் விவரம் கூறுவோம். அது கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வாசலாகும். மேற்கே அம்மன் கோவிலும், கிழக்கே பத்திரகாளி கோவிலும், வடக்கே பரமேசுவரன் கோவிலுமுள்ளது.

3. அதற்குமேல் மாயோன்தங்கும் அருகிலே மாரிதங்கும்
இதற்குமே தெற்கில்அம்மன் ஈசனும் மாரிதங்கும்
நதியுமே ஓடுமென்றோம் நற்பதி வரத்தால்சூழ்
பதிக்குமே வடகீழ்தன்னில் பகருவோம் சமலூர்தன்னில்.

3. அதற்கு மேற்கே விஷ்ணு கோவில் உண்டு. அதுவும் அம்மன் கோவிலின் அருகே உள்ளது. இதற்கு மேற்கே, ஈசுவரன் கோவிலும்

அம்மன் கோவிலும் உள்ளது. அருகில் ஒரு நதி ஓடிக்கொண்டே இருக்கிறது. இது நல்ல க்ஷேத்திரம். கோவில் குளம் கொண்ட இடம். இதற்கு வடக்கே சமவூர் தன்னிலே,

4. உதிப்பனும் வைசியசேயாய் உரைக்குறேம் நான்காம் [சென்மம்
அதிபனின் யோகம்தானும் அவன்தந்தை தாயின்யோகம்
சதியிலா களத்திரபுத்திரர் சாற்றுவோம் முன்பின்சென்மம்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

4. நம் ஜாதகன் வைசிய குடும்பத்தில் உதிப்பானுகும் என்று உரைக்கிறேம். இஃது இவனுடைய நான்காவது ஜன்மம். இவனுடைய யோகமும் தாய் தந்தையர் யோகமும், களத்திர புத்திரர் யோகமும், முன்பின் ஜன்ம வரலாறுகளும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். அதிதிகளை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

5. தந்தையின் வர்க்கம்தன்னைச் சாற்றுவோம் இருவராகும்
சந்ததம் ஒருவன்தீர்க்கம் சாற்றுவோம் அவன்குணத்தை
எந்தையே மால்நிறத்தான் இவனுமே உயரமில்லான்
தன்தனம் இல்லானுகும் சமர்த்தாக வார்த்தைசொல்வன்.

5. தந்தையின் குடும்பத்தைப்பற்றிப் பேசுவோம். தந்தைக்குச் சகோதரர் இரண்டு பேர்களுண்டு. ஒருவன் தீர்க்காயுசுடையவன். அவனுடைய குணதிசயங்களைக் கூறுவோம். மாநிறம் கொண்டவன். உயரமில்லாதவன். தன்னுடைய சுயார்ச்சிதம் இல்லாதவன். சாமர்த்தியமாய்ப் பேசக் கூடியவன்.

6. எப்போதும் வறுமையுள்ளான் இவனுக்குப் புத்திரதோஷம்
ஒப்புடன் தந்தையில்லம் உரைகுவா னிவனேயென்றேம்
மைப்புடன் செட்டுச்செய்வன் விசும்புவான்[1] சுகபுசிப்புத்
தப்பித மெண்ணுனுகும் தந்திர வாதியென்றேம்.

6. எப்பொழுதும் வறுமைப் பிணியை அனுபவிப்பான். புத்திர தோஷமுள்ளவன். தகப்பன் வீட்டிலேயே வசிப்பான் என்றேம். அதனுடன் வியாபாரங்கள் செய்வான். சுகமான சாப்பாட்டை விலக்குவான். தப்பிதமான வழிகளை மனதினுலும் எண்ண மாட்டான். தந்திரமாகப் பேசி, காரியத்தை ஜயித்துக் கொள்ளுவான் என்றேம்.

---

1. விலக்குவான்

7. அவனுமே வேருய்ச்செல்வ னறைந்தன னவன்குணத்தை
இவன்தந்தை சேதிகேளாய் இருநிறம் குள்ளனுகும்
நவனியில் கபடுமில்லான் நளினமாய் வார்த்தைசொல்வன்
பவமுள நற்குணத்தான் பாவைகள் அதிகமுள்ளான்.

7. அவனுமே வேருகச் செல்லுவன். அவன் குணத்தைக் கூறினேம். இவன் தந்தையின் செய்தி விவரத்தை இனி கேட்பாயாக. பொது நிற முள்ளவன். குள்ளமான உருவமுள்ளவன். உலகினில் கபடமில்லாதவன். இனிமையாய் வார்த்தை சொல்லுவான். புண்ணியமும் நல்ல குணமும் உடையவன். ஸ்திரீகளை அதிகமாயுடையவன்.

8. மரமாட்டும் தொழிலுடையான்
மாநிலங்கள் சேர்த்திடுவன் மனைவிபட்சன்
கரம்காலில் வலிவுமுள்ளான்
கனத்தசித்திர வீடுகட்டுவானும்
பெருமையாய்ச் செட்டுச்செய்வன்
புத்திரர்கள் ஆசையுளன் பெரியோரிஷ்டன்
விரைவிலே நடக்கவல்லன்
ஏழைமேல் இரக்கமுளன் வித்தைகொஞ்சம்.

8. மரங்களை மாட்டும் தொழிலை (தச்சு வேலையை) உடையவன். நில பலங்களை விருத்தி செய்வான். மனைவியினிடம் பிரியமுள்ளவனுய் இருப்பான். கை கால்களில் பலம் உள்ளவன். மதிப்பான பெரிய அழகுள்ள வீட்டைக் கட்டுவான். பெருமையுடன் வியாபாரம் செய்வான். புத்திரர்களிடம் பிரியமுள்ளவனுயிருப்பான். பெரியோர்களுடன் சிநேகம் செய்வான். சுறு சுறுப்பாய் நடக்கக் கூடியவன். ஏழைகளிடத்தில் இரக்க புத்தி யுள்ளவன். சிறிது கல்வி கேள்விகளுடையவன்.

9. சல்லியங்கள் கொண்டுபின்பு நிவிர்த்தி
செய்வன் பலருக்கும்கன சகாயன்
புல்லியர்கள் உறவுகொள்ளான் சகடுவாகன
முடையோன் பொருள்மேலிச்சை
நல்லவனுய்ப் புகழுடையான் பணிதிபாத்திரம்
சேர்ப்பன் நாற்காலி விருத்தி
இல்லையென்று சொல்லாதான் பந்துபுகழ்
தாட்சிணியன் ஈகைவானே.

9. முதலில் கடன்கள் ஏற்படும். பிறகு நிவிர்த்தியாகும். பலருக்குப் பெரிய உபகாரியாவன். அல்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ள மாட்டான். வண்டி வாகன முடையவன். பணத்தி லாசை யுடையவன்

நல்லவன் என்ற கீர்த்தி யுடையோன். சொத்துச் சுதந்தரங்களை யுடையவன். பசுக் கூட்டங்களை விருத்தி செய்வான். யாசகர்களுக்கு இல்லை என்று சொல்ல மாட்டான். பந்துக்கள் புகழும்படி வாழ்வான், தாட்சிணிய புத்தி யுள்ளவன். தர்மிஷ்டன்தானே.

10. தேவதா பக்திகொள்வன் தீரனும் மனத்தனுகும்
மேவுமிக் குணத்தானுக்கு வித்தக னுதிப்பானென்றோம்
தாவிய இவன்தன்சேதி சாற்றுவோம் இருநிறத்தான்
ஆவலாய் மீட்சியுள்ளான் யாரையும் உறவுகொள்வன்.

10. தேவதைகளிடம் பக்தி கொள்ளுவான். தைரியமுள்ள மனதை யுடையவன். இப்படிப்பட்ட குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். இனிமேல் இவனுடைய செய்தி விவரம் எடுத் துரைப்போம். பொது நிறமுள்ளவன். எதையும் கைப்பற்ற ஆவலுடைய வன். எவரையும் சொந்தம் கொண்டாடுவான்.

11. வித்தையு முடையானுகும் [1]விவேகியாம் செட்டுச்செய்வன்
[உத்தம]ர் நேசம்கொள்வன் உள்மனம் கபடுமில்லான்
சித்தச னுைப்பதாகும் சிநேகிதன் அதிகமுள்ளான்
பத்தியு முடையனுகும் பாருகள் விருத்திசெய்வன்.

11. நல்ல படிப்பாளி. வேதாந்த தத்துவங்களை அறிந்தவன். வியா பாரம் செய்வான். பெரியோர்களை நேசம் கொள்ளுவான். மனதில் கபட மில்லாதவன் சித்தர்களைத் தன் பரிவாரங்களாகக் கொள்ளுவான். அநேக சிநேகிதர்களை யுடையவன். பக்தியும் உடையவனுகும். நிலபலங் களை விருத்தி செய்வான்.

12. செகமதில் நல்லோனுவன் செய்நன்றி மறவானென்றோம்
சிகையது நீட்சியுள்ளான் சித்தினி சாதியாவன்
பகைவரை உறவுகொள்வன் பால்தயிர்ப் பிரியனுகும்
வகையான குடும்பியாவன் மருமமும் கொஞ்சமுள்ளான்.

12. உலகினில் நல்லவன் என்று பெயரெடுப்பான். செய்நன்றி மறக்க மாட்டான். நீளமான தலைமயிருள்ளவன். சூட்சும ஞானத்தை யுடையவன். சிநேகிதர்களை வசியப்படுத்துவான். தயிர் பால் இவற்றில் இச்சையுள்ளவன். ஒழுங்கான குடும்பத்தை யுடையவன். சிறிது இரகசிய முடையவன்.

---

1. பிரம்மஞானமறிந்தவன்

13. இவனுட துணைவர்தன்னை இசைகுறோம் ஈரஞ்சாகும்
அவனியில் ஆண்பால்மூன்று அவ்வாறே கன்னியாகும்
இவர்களும் விருத்தியென்றோம் இதுகளும் இளையோராகும்
கவனமாய் அவர்கள்சேதி கழறுவோம் இரண்டிலேதான்.

13. இவனுடைய சகோதரர்கள் பத்துப்பேர்களென்று கூறுவோம். ஆண்கள் மூன்று பேர்கள். அப்படியே மூன்று சகோதரிகள். இவர்களும் விருத்தி அடைவார்கள். இவர்களும் இவனுக்கு இளையோராவர். கவனமாய் அவர்களைப்பற்றிய செய்தியை இரண்டாம் பாகத்தில் விவரமாய்க் கூறுவோம்.

14. இன்னவன் மணத்தின்கால மியம்புவோ மிருபான்ரெண்டில்
கன்னிகை தெற்கிலேதான் கலந்திடு மென்றுசொன்னோம்
அந்தவூர் பெரிதாய்க்காட்டும் அக்கன்னி குணத்தைச் [சொல்வேன்
பின்னமில் வாததேகி பேதையும் இருசிகப்பள்.

14. இவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். இருபத்திரண்டாம் பிராயத்தில், கன்னிகை தெற்குத் திக்கிலிருந்து வருவாள். அந்த ஊர் பெரிதானது. அவளுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவோம். தேக அமைப்பில் யாதொரு குறைவு மில்லாதவள். அவளும் பொது நிற முள்ளவள்.

15. அன்னம்போல் சாயலுள்ளா ளவள்மனம் கபடமில்லாள்
சொன்னசொல் தவறுளாகும் சுந்தரி யோகசாலி
கன்னென மொழியேசொல்வள் கல்விமான் யூகையுள்ளாள்
இன்னவள் தெய்வபத்தி இவளுக்கு வயதுதீர்க்கம்.

15. அன்னம் போன்ற சாயலுள்ளவள். மனதில் கபடமில்லாதவள். சூதுவாதில்லாதவள். சொன்ன சொல்படி நடக்கத் தவறமாட்டாள். நல்ல அழகி யோகசாலி. இனிமையான மொழிகளைக் கூறுவாள். படிப்பாளி. புத்திக் கூர்மை யுள்ளவள். தெய்வத்தினிடத்தில் பக்தி பூண்டவள். இவளுக்கு ஆயுள் தீர்க்கமாகும்.

16. சயமுனி இதனைக்கேட்டுச் செப்புவார் முனிவருக்குப்
பயமிலா தாகமொன்று பகர்ந்துநீர் காரணஞ்சொல்
வியமத்தோன் ஏழோன்நீசம் மிக்கஏழ் பரிதிநீசம்
நயமிலா திருப்பதலே நாட்டுவோம் தாரம்ரெண்டே.

16. ஜயமுனி இதனைக் கேட்டு மற்ற முனிவர்களுக்குச் சொல்லலுற்றார். பயமில்லாதபடி ஆயுள் விஷயத்தைப்பற்றிச் சொன்னீர்கள். காரணம் என்ன ? சொல்லுங்கள். விரயஸ்தானத்திற்குடைய வியாழனும்,

ஏழுக்குடைய சுக்கிரனும், இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சூரியன் தங்கி நீசம் பெற்றிருப்பதனாலும், நயமில்லாத கிரக நிலைகளினாலும் தாரம் இரண்டென்றே நாட்டுவோம்.

17. அப்படிச் சொல்லொண்ணாது அம்புலி தனக்குநாலில்
மைப்புடன் ஏழோன்நிற்கப் பூமகன் குசனும்கூட
ஒப்புடன் குருவும்பார்க்க உரைத்திட்டோம் தாரம்ஒன்றே
இப்படி இருவர்கூற ஈசுவரி சொல்லுகின்றார்.

17. அப்படிச் சொல்லொணாது. ஏனெனில், சந்திரனிருக்கு மிடத்திற்கு நாலாமிடத்தில், இலக்கினத்துக்கு ஏழாம் வீட்டிற்குடைய சுக்கிரன் தங்க, பூமிக்கு அதிபதியாகிய செவ்வாயும் ஆங்கு சேர்ந்திருக்க, அவர்களை குரு ஒன்பதாம் பார்வையினால் பார்க்க, தாரம் ஒன்றென்றே சொல்லுவோம். இப்படி இரண்டு ரிஷிகள் சொல்ல, பார்வதி சொல்லலுற்றார்.

18. இருவர்கள் வார்த்தைதானும் இசைந்திட்டீர் சரியேஅப்பா
வருமவன் தனக்குத்தாரம் வரைகுறோம் ஒன்றேயாகும்
திறமாகும் அந்தமாது சேயிழை தனக்குமேதான்
இருமுத்திரை செய்வானாகும் எப்படிச் சொல்லுமென்ன,

18. இருவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, சொன்னது சரிதான், ஜாதகனுக்குத் தாரம் ஒன்றென்றே கூறுவோம். ஸ்திரமாகும் அந்தப் பெண். அவளுக்கே இரண்டு தரம் தாலி கட்டுவான் (மாங்கலிய தாரணம் செய்வான்). அஃதெப்படி என்று சொல்லுங்கள் என்று கேட்க,

19. பனிரெண்டில் காரிநின்று பளிங்கனைப்[1] பார்த்ததாலே
பிணையாகும் முதல்மாங்கலியம் பின்புமாங் கலியம்செய்வன்
சினமிலா எவ்விதத்தால் செய்குவான் சொல்லுமென்ன
அனையவே கள்ளராலே அடிபடும் அந்தமுத்திரை.

19. இலக்கினத்திற்குப் பன்னிரண்டா மிடத்தில் சனி நிற்க, அங்கிருந்து அவர் சுக்கிரனைப் பார்த்ததனால், முதல் மாங்கல்யத்திற்குக் கேடு வரும். பின்பு ஒரு மாங்கல்யம் செய்வான். இடைஞ்சலில்லாமல் எவ்விதம் அப்படிச் செய்வான்? என்று சொல்லும்படி கேட்க, பொருத்தமாகவே திருடர்களால் அந்த மாங்கலியம் தொலையும்.

20. அந்தக்கா லத்திலேதான் இவ்விதம் நடக்கும்சொல்வாய்
முந்தியே சொல்லுகின்றேன் முப்பத்தி நாலுஆண்டில்
இந்தமாங் கலியம்செல்லும் இவ்வூர்க்குத் தெற்கிலேதான்
சந்ததம் காஞ்சிக்கேகிச் சண்டாளக் கள்ளராலே,

1. சுக்கிரன்

20. அந்தக் காலத்திலேதான் அவ்விதம் நடக்கும் என்று எப்படிச் சொல்லுவாய்? மூர்த்தியே சொல்லுகின்றேன். முப்பத்தி நாலாம் பிராயத்தில் இந்த மாங்கலியம் ஏற்படும். இந்த ஊருக்குத் தெற்கிலேதான் எப்பவும் காஞ்சிபுரத்திலிருக்கும் சண்டாளக் கள்ளனாலே,

21. நீங்கிப்போம் வேறுமுத்திரை நிமலனும் செய்வானாகும்
தீங்கில்லா தாரம்ஒன்றே செப்புவோம் தீர்க்கமாக
ஆங்கதற் கிசைவதாக அறைகுறோம் மணத்தின்காலம்
பாங்கியால் களவுபோகிப் பலித்திடு மென்றுசொன்னோம்.

21. மாங்கலியம் நீங்கிப்போம். ஜாதகனும் வேறு மாங்கலியம் செய்வானாகும். ஆதலால் தோஷம் இல்லாத தாரம் ஒன்றென்றே சொல்லுவோம். இது தீர்க்கமாகச் சொல்லுவோம். அதற்கு ஒத்தாற்போல அவனுடைய கலியாண காலத்தைக் கூறுவோம். அது வேலைக்காரியினால் திருட்டுப்போய் அகப்படும் என்று சொன்னோம்.

22. இருபத்தோ ரூண்டில் இவன்மணம் முடிய
எண்ணங்கள் கொண்டுமே விலகும்
உரைகுறோம் இதற்கு நேராக வேதான்
உரைமணம் முடிக்கும் காலையினில்
திருமண மிரண்டு சேர்ந்துமே முடியும்
செப்புவோம் சாதகர் தனக்கு
அருமறை முடிவி லாடிடும் தாயே
அறைகுறோம் புத்திர பாகம்.

22. இவனது இருபத்தொன்றாம் பிராயத்தில் இவனுக்குக் கலியாணப் பேச்சு ஏற்பட்டு எண்ணங்கள் மாறிவிடும். இதற்குச் சரியாக மற்றோர் இடத்தில், மணம் முடியும் காலத்தில், ஒரே பந்தலில் இரண்டு கலியாணங்கள் சேர்ந்து முடியும் என்று செப்புவோம். பிரளயகாலத்தில் ஆனந்தக் கூத்தாடும் பார்வதியே! இனிக் கூறுவோம், புத்திர பாவத்தைப்பற்றி.

23. ஆணது இரெண்டு பெண்ணதுமூன்று
அறைகுறோம் தீர்க்கமா யென்றோம்
நாணியமூன்று நஷ்டமாம் இவர்க்கு
நவிலுவோம் முதல் புத்திரதோஷம்
பூணுவோம் ஐந்து ஆறுமே தோஷம்
புகன்றனம் சாதகர் தனக்கு
வேணு கோபாலன் தங்கையே யாங்கள்
விளம்பின மொழிகுன் றுது.

23. ஆண் குழந்தைகள் இரண்டு பெண் குழந்தைகள் மூன்று. இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். மூன்று பிறந்து நஷ்டமாகும், இவர்களுக்கு. முதல் புத்திரன் தோஷமடைவான். அதன் பிறகு ஐந்தாவதும் ஆறுவதும் தோஷமாகும். இவை எல்லாம் ஜாதகனுக்குக் கூறினோம். வேணுகோபாலனாகிய விஷ்ணுவின் தங்கையாகிய பார்வதியே! நாங்கள் சொன்ன சொல் தவறாது.

24. என்னகா ரணத்தினாலே இவன்முதல் புத்திரதோஷம்
பன்னியே சொல்லுமென்னப் பாலகன் முன்சென்மத்தில்
பின்னங்கள் அதிகம்செய்ய பலத்தினால் மதலைதோஷம்
தன்னிலே மனைவிக்கேதான் தரிப்பன்மாங் கலியம்ரெண்டு.

24. என்ன காரணத்தினால் இவனுடைய சீமந்த புத்திரன் இறப்பான்? அதை அறிந்து சொல்லுமென்ன, இவன்போன ஜன்மத்தில் கெடுதல் அதிகம் செய்ய, அவற்றின் பலனாகப் புத்திர தோஷம் ஏற்படும். அதன் காரணமாகவேதான் மனைவிக்கும் இரண்டு மாங்கலியம் கட்டுவான்.

25. வினையதைச் சொல்லுமென்ன விளம்புவார் அத்திரிதானும்
தனயனும் முன்சென்மங்கள் திருக்கச்சூர் தன்னிலேதான்
அனையவே முத்திரையனாகி அவ்வூர்க்கு அதிகாரங்கள்
பிணையிலாச் செய்துவந்தான் புத்திரர் மனைவியாகி,

25. ஏற்பட்ட வினையை விவரமாகச் சொல்லும் என்று கேட்க, அத்திரி மகரிஷியும் சொல்லலுற்றார். ஜாதகன் போன ஜன்மங்களில் திருக்கச்சூர் தன்னில் உத்தியோகம் பெற்று அவ்வூரில் அதிகாரம் செய்து வந்தான் மனைவி மக்கள் உண்டாகி,

26. பந்துவுக் கினியனாகிப் பலருக்கு நல்லோனாகி
வந்திடு காலம்தன்னில் வரைகுறேம் ஊழிதானும்
சொந்தகன் மனைவியோடு துறவியு மதுபுசித்துச்
சந்தத மார்க்கம்தன்னில் சண்டைகள் இட்டானென்றோம்.

26. சொந்தக்காரர்களுக்கு இனியவனாகி, பல பேர்களுக்கு நல்லவனாகி, வாழ்ந்து வரும் நாளில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. மதுபானத்தின் வினையினால் தன் சொந்தக்காரனுடைய மனைவியுடன் சண்டைகள் இட்டான் என்றோம்.

27. மாதுவும் மனம்கலங்கி வரனுக்குப் பயந்துகொண்டு
ஓதவே முத்திரியன்பக்கல் போற்றினான் விரோதம்தன்னைத்
தீதுகள் செய்தோன் தன்னைத் தீரனும் பிடித்துவந்து
ஓதினான் எசமான்பக்கல் உத்தமி கேட்டிடாயே.

27. மனைவியும் மனக்கலக்கமுற்று, புருஷனுக்குப் பயந்து, பல விஷயங்களை எடுத்துச் சொல்லும் அதிகாரியிடம் தங்களுக்குள் ஏற்பட்ட விரோதங்களை எடுத்துச் சொன்னாள். தீங்குசெய்தவனை அந்த தைரியசாலி பிடித்து எஜமானிடம் கொண்டு வந்து நிறுத்தினான். பார்வதியே! கேட்பாயாக.

28. வேவுகன் சொல்போல்தானும் வேந்தன்தண் டிக்கலுற்றான்
ஓவிய அகதிதானும் உரைக்குறான் மனவெறுப்பால்
மேவிய என்மேல்தானும் வீண்அப வாதம்சொன்ன
பாவிக்கு மறுசென்மத்தில் பாவையர் இருவராவர்.

28. வேவுகாரன் எடுத்துரைத்தபடியே அரசனும் தண்டிக்கலுற்றான். மனவெறுப்பால் அந்த அகதி பின்வருமாறு சாபமிட்டாள். என்பேரில் வீணாக அபவாத வார்த்தைகளைச் சொன்ன பாவிக்கு அடுத்த ஜன்மத்தில் பெண்டாட்டி இருவராவர்.

29. பிறக்கிற மதலைதீதாம் புகன்றனன் அகதிதானும்
உரைத்தது அந்ததோஷம் உறைக்குறோம் இதுவுமன்றிப்
பிறர்மனை யாளைபோகம் புக்கியே வாழும்நாளில்
அறிந்தனன் அவள்வரன்தான் அவளையே நீக்கலுற்றான்.

29. பிறக்கின்ற பிள்ளைகள் தோஷமடையும் என்று அந்த அகதி சொன்னான். அந்த தோஷம் இவனை வந்து சேர்ந்தது. இதுவுமல்லாமல், வேறொன்றுண்டு. அன்னியனுடைய மனையாளுடன் போகம் துய்த்து வாழ்ந்து வரும் நாளில் அவள் புருஷனுக்கு விஷயம் தெரிந்தது. அவன் தன் பெண்டாட்டியை விலக்கலானான்.

30. நீக்கின மாதுதானும் நிமலன்பால் அணுகியேதான்
ஏக்கமும் அதிகம்கொண்டு இயம்பினாள் சேதிதன்னைத்
தூக்குறி அவள்மேலிச்சை துறந்துமே சொல்லுகின்றான்
ஏற்கவே வேண்டாமென்று இயம்பினோம் இவனை
[யென்றோம்.

30. தள்ளப்பட்ட மாது கள்ள புருஷனிடம்போய்த் தனது அதிகமான மனக்கலக்கத்தையும் ஏக்கத்தையும் அடைந்து செய்தியை விவரமாய்ச் சொன்னாள். அந்த அல்பன், அவள் மேலுள்ள ஆசையைத் துறந்து, என்னிடம் இனி வரவேண்டாம் என்று இவனை அவளிடம் கூறினான், என்றோம்.

31. கலங்கின மனத்த ளானகாரிகை புகலுகின்ருள்
நிலமையாய் மறுசென்மத்தில் நேர்ந்திடுமாங் கலியம் [ரெண்டு
குலவிய புத்திரதோஷம் கொண்டிடும் உனக்கேதானும்
அலைகுவாய் இச்சென்மத்தில் அப்படி அவளும்சொல்லி,

31. கலங்கின மனத்தையுடைய அவள், பின்வருமாறு சொல்லலுற்ருள். அடுத்த ஜன்மத்தில் உனக்கு இரண்டு தாரங்கள் ஏற்படும். உனக்கே புத்திர தோஷமும் ஏற்படும் என்றும், இந்த ஜன்மத்தில் அங்குமிங்கும் அலைந்து திரிவாய் என்றும் அவளும் சொல்லி,

32. அன்னிய தேசம்சென்ருள் அணுகிற்று அந்ததோஷம்
இன்னவன் தனக்குமேதான் இடறுகள் அனந்தம் நேர்ந்து
தன்னிலே காலன்பக்கல் சார்ந்துபின் நரகம்புக்கிப்
பன்னிய வேதனுலே பாரினில் வரியப்பட்டு,

32. வேறு தேசம் சென்ருள். அந்த தோஷமும் இவனை வந்தணுகிற்று. இவனுக்கு எத்தனையோ இடைஞ்சல்கள் மேன்மேலும் ஏற்பட்டன. கடைசியில் காலனுடு சேர்ந்தான். நரகலோகத்தை அடைந்தான். பிறகு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு,

33. பிறந்தவ னிவனேயென்ருேம் பேசுவோம் இச்சென்மத்தில்
உரைந்திடு மாதுசாபம் உற்றதோர் அகதிசாபம்
இருவர்தன் சாபத்தாலே இவன்புத்திர தோஷமாகும்
வருமனை தோஷமென்ருேம் விருதரும் சொல்லுகின்ருர்.

33. பிறந்தவன் இவனே என்ருேம். இந்த ஜன்மத்தில் அம்மாதுவின் சாபமும் அகதியின் சாபமும், சேர்ந்தது. இருவருடைய சாபத்திஞலே இவன் புத்திர தோஷ மடைவான். வரும் மனைவியும் தோஷமாகும். விருதரும் இதைக் கேட்டு சொல்லலுற்ருர்.

34. பொன்னவன் பத்தில்நின்று புகரையே பார்த்ததாலே
முன்வரும் மனைவிக்கேதான் மொழிகுருேம் வயதுதீர்க்கம்
பின்னங்கள் காணுதாகும் புகர்நீச்ச பங்கயோகம்
சொன்னசொல் குன்றிடாது சுந்தரி மேலும்கேளே.

34. வியாழன் பத்தாமிடத்திலிருந்து, சுக்கிரனையே பார்த்ததனுலே ஏற்படும் மனைவிக்கேதான் வயசு தீர்க்கம் என்று சொல்லுகிருேம். யாதொரு இடைஞ்சல்களும் இல்லை. சுக்கிரனுல் நீசபங்கராஜயோகம் ஏற்படும். சொன்ன சொல் தவறிடாது. சுந்தரி! மேலும் கேட்பாயாக.

35. அன்னையும் சிவந்தமேனி அழகுளாள் பொறுமையுண்டு
பின்னையும் அடக்கமுள்ளாள் புத்திரர் ஆசையுள்ளாள்
கன்னென மொழியேசொல்வள் காதலி அதிர்ஷ்டசாலி
அன்னவள் வர்க்கத்தார்க்கு அறைகுறேம் தாரம்ரெண்டு.

35. அன்னையும் சிவந்த நிறமுடையவள். அழகுள்ளவள். பொறுமை யுள்ளவள். அடக்க முள்ளவள். புத்திரர்மேல் ஆசை யுள்ளவள். கனிந்த மொழிகளைக் கூறுவாள். இவள் நல்ல அதிர்ஷ்டசாலி. அவளுடைய குடும்பத்தினருக்கே இரண்டு தாரம் என்றே கூறுவோம்.

36. அவள் துணை ஆண்பால்மூன்று அவ்வாறே பெண்பா
[லென்றேம்
நவனியில் தீர்க்கமாகும் நாட்டுவோம் மேற்கேஇல்லம்
இவளுட பூர்வம்சொல்வேன் எழில்காஞ்சி மேல்பாலாகப்
பவமுள பனங்காட்டூரில் பாவையும் அருகர்வமிசம்.

36. அவளுடைய சகோதரர் மூன்று பேர்கள். அங்ஙனமே சகோதரி களும் மூன்று பேர்கள். அவர்கள் தீர்க்காயுசுடையவர்கள். அவர்கள் வீடு மேற்குத்திக்கிலுள்ளது. அவர்களுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவேன். பெருமை பொருந்திய காஞ்சிபுரத்திற்கு மேற்குப் பக்கத்தில் பனங்காட்டூரில் சைவ வமிசத்தில் இருவரும் உதிக்கலானார்கள்.

37. பிறந்துமே சுகமுள்ளாகிப் புருடனும் பிருதிவிதன்னில்
உரைந்தனன் பணிகளுண்டாய் உத்தமி கர்ப்பநோயால்
மரலியின் பதிக்குச்சென்று மறையவன் வரியப்பட்டு
விரைவினில் செக்கான்வம்சம் வித்தகி உதித்தாளென்றேம்.

37. பிறந்து சுகமடைந்து, புருடனும் பூமிதன்னில் தொழில்செய்யும் காலில், உத்தமி கர்ப்பவேதனையினால் எமலோகம் சென்றாள். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, செக்கான் வமிசத்தில், இவ்வித்தகி உதிக்க லானாள்.

38. முன்சென்மம் அருகர்வமிசம் முயன்றவள் இச்சென்மத்தில்
அன்னவள் வைசியசேயாய் அணுகும்கா ரணங்களென்ன
தன்னிலே முன்சென்மத்தில் தான்தெய்வ பக்தியின்றி
இன்னவள் அகதிக்கன்னம் ஈயாம லிருந்ததாலும்,

38. போன ஜன்மத்தில் சைனவமிசத்தில் பிறந்தவள் இந்த ஜன் மத்தில் வைசியக் குழந்தையாய்ப் பிறந்ததன் காரணங்களென்ன? போன ஜன்மத்தில் அதிக தெய்வ வழிபாடுகள் செய்யாமலும், அதிதிகளுக்கன்னம் கொடாமலும் இருந்ததினாலே,

39. உதித்தனள் இக்குலத்தில் உதித்தசேய் முதலில்மூன்று
மதித்திடு மென்றுசொன்னோம் மங்கையும் பின் [சென்மத்தை
விதிக்குறோம் காஞ்சிதன்னில் வித்தகி அருகர்வம்சம்
சதியிலா உதிப்பாளாகும் சங்கரி கேட்டிடாயே.

39. இக்குலத்தில் உதித்தனள். பிறந்து குழந்தைக்கு முதலில் மூன்றுவயது மதிக்கும்போது அடுத்த ஜன்மம் ஏற்பட்டது. அதைக்கூறுவோம். காஞ்சீபுரத்தில் இவள் அருகர்வமிசத்தில் இடைஞ்சலின்றி உதிப்பாளாகும். சங்கரியே! கேட்பாயாக.

40. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் வள்ளூர் [மேற்கே
பந்தமாய்ச் சிற்றூர்தன்னில் பிறந்தனன் ரெட்டிவம்சம்
தன்தன முடையனாகித் தன்மனை புத்திரருண்டாய்
முந்தவே கீர்த்திபெற்று முயற்சியாய்க் குடும்பியாகி,

40. தந்தையின் முன்ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். திருவள்ளூருக்கு மேற்கே சிறிய ஊரில் ரெட்டிவமிசத்தில் பிறந்தனன். தன்னுடைய சுயார்ச்சித சொத்துக்களுண்டாகி, மனைவிமக்கள் ஏற்பட்டு, எங்குப் பார்க்கினும் கீர்த்தியடைந்து, பெரிய சிரமமுள்ள குடும்பியாகி,

41. தருமத்தி லிச்சையின்றித் தானவன் மரணமாகித்
பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தனன் வைசியசேயாய்
அறைகுறே மிவன்பின்சென்ம மம்பலம் தன்னிலேதான்
உறைகுவான் இக்குலத்தில் உத்தமி கேட்டிடாயே.

41. தருமம் செய்வதில் விருப்பமில்லாமல் அவன் மரணத்தையடைந்தான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு வைசியக் குழந்தையாய்ப் பிறந்தான். இவன் பின்ஜன்மத்தைக் கூறுகிறோம். சிதம்பரத்தில் இக்குலத்தில் உதிப்பானாயினன். உத்தமியே! கேட்பாயாக.

42. இன்னவன் யோகச்சேதி இயம்புவோம் செனனம்தொட்டு
அன்னவன் மரணமட்டும் அம்புலி போலேயோகம்
பின்னையும் நாட்குநாளாய்ப் பூமியும் சேருமென்றோம்
தன்னிலே செட்டுஓங்கும் தனமிகச் சேருமென்றோம்.

42. இவனுடைய யோகவிவரங்களைக் கூறுவோம். பிறந்ததுமுதல் மரணம்வரை பிறைச்சந்திரனைப்போல் நாளுக்குநாள் யோகம் அபிவிருத்தியடையும். பூஸ்திதியும் சேரும். தனிமையாகவே வியாபாரம் செழித்தோங்கும். பணத்தை அதிகமாய்ச் சேர்ப்பான்.

43. சல்லியம் கொள்ளானுகும் தன்மனை யாளால்யோகம்
நல்லவ னுகிவாழ்வன் நடனசங் கீதமிஷ்டன்
சொல்லது தவருனுகும் துன்மார்க்கம் செய்யானுகும்
அல்லலை அகற்றுமெங்கள் அம்பிகை புகன்றிட்டோமே.

43. கடன்வாங்கமாட்டான். பெண்டாட்டியினுல் யோகமடைவான். நல்லவனுகவே வாழ்ந்துவருவான். நாட்டியம் சங்கீதம் இவைகளில் இஷ்டமுடையவன். சொன்னசொல் தவறிடான். துன்மார்க்கங்களில் செல்லமாட்டான். துன்பங்களைப்போக்கும் எங்கள் அம்பிகையே! இவ்வாறு சொன்னேம்.

44. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பான்நாலில்
முந்திய தனுசுமாதம் மொழிகுறேம் கருமம்தானும்
அந்ததோர் காலம்தன்னில் அருணன்தன் திசையிலேதான்
பிந்துசெம் பாம்புபுத்தி சொல்லினே மேலும்கேளே.

44. இவனுடைய தந்தையின் மரணகாலத்தைக் கூறுவோம். இவனது முப்பத்திநாலாவது பிராயத்தில், மேலான தனுர் (மார்கழி)மாசத்தில் தந்தைக்குக் கருமகாலம் ஏற்படும் என்று சொல்லுகிறேம். அந்தச் சமயத்தில் சூரியதசையில் கேது புக்தியில் அஃது ஏற்படும். தாயே! மேலும் கேட்பாயாக.

45. அன்னைக்கு முப்பானெட்டில் ஆடிமா தத்திலேதான்
உன்னத கண்டமென்றேம் உயர்புதன் தசையிலேதான்
சந்திரன் புத்திதன்னில் சாற்றுவோம் கெண்டம்தானும்
பன்னிய நவக்கோள் ஆய்ந்து பகர்ந்தது தப்பாதென்றேம்.

45. தாய்க்கு, இவனது முப்பத்தெட்டாவது வயதில், ஆடிமாசத்தில் கண்டம் நேரும் என்றேம். அதுவும் மேலான புதன் தசையிலே சந்திரனுடைய புக்தியில் நேரிடும். நவக்கிரகங்களை ஆராய்ந்து சோதித்துக் கூறிய இப் பலன்கள் தப்பமாட்டா.

46. உதித்தவன் மரணகாலம் உரைக்குறேம் எழுபத்தைந்தில்
சதியில மகரமாதம் சப்தமி வளர்பக்கத்தில்
அதிபன்தன் உடலம்வாடும் மறுசென்மம் வள்ளூர்தன்னில்
நதிகுல சைவசேயாய் நாயகன் உதிப்பானென்றேம்.

46. ஜாதகன் அவனுடைய எழுபத்தைந்தாவது பிராயத்தில், அருமையான தைமாசத்தில், சுக்கிலபட்சம் சப்தமிதிதியில் உயிர்துறப்பான். இவன் அடுத்த ஜன்மத்தில் திருவள்ளூரில் நதிகுல சைவக்குழந்தையாய் உதிப்பான் என்றேம்.

47. முனிவர் இவ் விதமாய்க்கூற மொழிகுவாள் அம்மன்தானும்
கனமுடன் சிறியதந்தை காளைகள் இல்லைஎன்றீர்
அனயவே அவற்குக்கர்மம் யார்செய்வார் சொல்லுமென்னச்
சினமிலா இவன்பின்வந்தோன் செய்குவான் கருமம்தானே.

47. முனிவர் இவ்வாறுகூற பார்வதி சொல்லலுற்றாள். சிறிய தந்தைக்குப் பிள்ளைகள் இல்லை என்று சொன்னீர். அவருக்குக் கருமம் யார் செய்வார் என்று சொல்லுங்கள். இவனுக்குப் பிறகு வந்த தம்பி அக்கருமங்களைச் செய்வான்.

48. குடும்பத்தின் செய்திதன்னை கூறுவீர் முனியேநீதான்
அடவுடன் நாற்பானொன்பா னவன்துணை வேறாய்ச்செல்வர்
திடமுடன் பாகம்நான்கு செப்புவோம் இவனுக்கேதான்
தடவரை மகளேயாங்கள் சாற்றின மொழிகுன்றாது.

48. குடும்பத்தின் செய்திவிவரங்களைக் கூறுங்கள், முனிவரே, நீங்கள் தான். அடவாக நாற்பத்தொன்பதாவது வயது நடக்கும்போது அவன் சகோதரர் வேறாகச் செல்வார். திடமாகச் சொத்துக்களை நான்கு பாகம் போடுவார்கள். இவனுக்கு ஒருபாகம் கிடைக்கும். மலையவான் புத்திரியே! நாங்கள் சொன்ன பலனுக்குக் குறைவு ஏற்படாது.

49. புறந்தசேய்ச் செனனகாலம் பொன்திசை பதினோராண்டும்
சிறந்திடும் திங்கள்அஞ்சும் செப்புவோம் பலனையாங்கள்
உரைந்திடும் துணைவர்விருத்தி உயர்செட்டு மேன்மே [லோங்கும்
நிரைந்திடும் பூமிசேரும் நேமிபால் கீர்த்திஓங்கும்.

49. பிறந்த குழந்தைக்கு ஜனனகாலத்தில் குருதசையில் இருப்பு பதினோறு வருடம், மாசம் ஐந்து. அதன் பலனை நாங்கள் கூறுவோம். சகோதர விருத்தி ஏற்படும். உயர்ந்த வியாபாரம் மேன்மேலும் செழித்தோங்கும். சம்பத்துக்கள் நிறைந்திடும். பூமிகள் சேரும். உலகினில் கீர்த்தி ஏற்படும்.

50. கன்றுகா லிகள்விருத்தி காலாட்கள் உடையனுகும்
சென்றபாக் கியமும்சேரும் சிறப்பான பணி[யு]முண்டு
துன்றிய களவுகொஞ்சம் துன்பங்கள் தந்தைக்குண்டு
நன்றுநற் பலன்கள்யாவும் நாட்டுவோம் விபரம்ரெண்டில்.

50. மாடு கன்றுகள் விருத்தியாகும். வேலையாட்கள் உடையவனுகும். போனசொத்துக்களும் திரும்பிவரும். மேலான தொழிலுமுண்டு. கொஞ்சம் களவுபோகும். தந்தைக்குத் துன்பங்களுண்டு. எல்லாப் பலன்களும் நல்லவைதான். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

ஜாதகம் 51

1. மதிராகு நந்தியாக மறைவண்டி தேளில்
விதிதனு வெள்ளிமீனம் வெய்யவன் புதன்சேய்மேடம்
இதிவிதக் கோளும்நின்று லக்கினம் தகரமாக
அதுபலன் சொல்லுமென்று சுந்தரி கேட்கலுற்ருள்.

1. சூரியன் புதன் செவ்வாய் மேடத்திலும், சந்திரனும் இராகுவும் ரிஷபத்திலும், குரு கடகத்திலும், சனியும் கேதுவும் விருச்சிகத்திலும், சுக்கிரன் மீனத்திலும் நிற்கும்படியான கிரகநிலை கொண்ட இம் மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதிதேவி கேட்கலுற்ருள்.

சுக்கிரன்	லக்கினம் சூரியன் புதன் செவ்வாய்	சந்திரன் ராகு	
	இராசி		குரு
	சக்கரம்		
	சனி கேது		

2. அத்திரி சொல்லுகின்ருர் ஆணது செனனமாகும்
வித்தகன் இல்லம்சொல்வேன் வடபார்வை கீழ்மேல்வீதி
சத்தியும் தென்பால்தங்கும் சங்கரன் மகனும்மீனம்
இத்தகை அடையாளத்துள் இயம்பினேம் பாலனைத்தானே.

2. அத்திரி சொல்லுகின்ருர். இஃது ஆண்ஜன்ம ஜாதகம். இவனுடைய வீட்டுவிவரம் சொல்லுவேன். அது கிழக்கு மேர்கு வீதியில் வடக்குப் பார்த்தது. அம்மன்கோவில் தெற்கேயுள்ளது. வடகிழக்கே விக்னேசுவரர் கோவில் உள்ளது. இந்த அடையாளங்களைக் கொண்ட இடத்தில் இப்பாலகன் உதிக்கலானன்.

3. இன்னவன் செனனயோகம் எழில்பெறு அன்னைதந்தை
தன்துணை களத்திரபுத்திரர் சாதகன் முன்பின்சென்மம்
உன்னத நவக்கோளாய்ந்து உரைக்குறே மின்னூல்
[தன்னில்
தந்தையின் துணைஆண்ரெண்டு தையலர் அவ்வா
[றென்றேம்.

3. இவனுடைய ஜனனகால யோகபாவங்களையும், தாய்தந்தையர் யோகத்தையும், சகோதரர் பெண்டாட்டி பிள்ளைகள் இவர்களுடைய போகங்களையும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மபலாபலன்களையும், மேலான நவக்கிரகங்களை ஆராய்ந்து அறிந்து இந்தப்புஸ்தகத்தில் விரிவாக உரைக்கிறோம். தந்தைக்குச் சகோதரர்கள் இரண்டுபேர்கள். சகோதரிகளும் இருவராவர்.

4. மத்தியில் கன்னிமார்கள் மடிவுண்டு பின்பால்சொல்வேன்
வித்தகன் தந்தைசேதி விளம்புவோம் மால்நிறத்தான்
சுத்தவான் கிருஷிசெய்வன் சோம்பிடான் காரியத்தில்
நத்திேனார்க் குதவிசெய்வன் நாற்காலி விருத்தியுள்ளான்.

4. மத்திய காலத்தில் தங்கைமார்கள் மரித்துப்போவார்கள். அதைப் பற்றிப் சொல்லுவோம். ஜாதகனுடைய தந்தையைப்பற்றிய விவரங்களைக் கூறுவோம். கருநிற முடையவன். சுத்தவான். நிலங்களைக் கிருஷிசெய்து பரிபாலிப்பான். காரியம் செய்வதில் சோம்பல் கிடையாது. சிரமப்படுபவர்களுக்கு ஒத்தாசைசெய்வான். பசுக்கூட்டங்களை விருத்தி செய்வான்.

5. இளமன துடையனாகும் யாவர்க்கும் நல்லோனவன்
களங்கமில் லாதானாகும் கடவுளர் பத்திபூண்பன்
வளமையாயக குடும்பியாவன் ஆதியில் வறுமையுண்டு
தளமது செய்வானாகும் சாந்தமும் கோபமுண்டு.

5. இளக்கமான மனதை யுடையவன். யார்க்கும் நல்லவனவன். மனதில் களங்கமில்லாதவன். கடவுளிடத்தில் பக்திபூண்பான். வளப்பம் பொருந்திய குடும்பத்தை உடையவன். ஆரம்பகாலத்தில் வறுமைத்துன்பத்தை அனுபவிப்பான். பின்பு வீடுகள் கட்டுவான். சாந்தமு முண்டு. கோபமு முண்டு.

6. செய்நன்றி மறவானாகும் தேவிசொல் கடவானாகும்
அய்யமேல் இச்சையுண்டு அவன்துணை வேறாய்ச்செல்வன்
நய்யவே கூறானாகும் நல்கிடும் பித்தவாயு
கய்யினில் கமலரேகை கனதன மில்லானாகும்.

6. செய்தநன்றியை மறக்கமாட்டான் பெண்டாட்டியின் சொல்லைத் தட்டமாட்டான். பணத்தின்மேல் ஆசையுண்டு. அவன் சகோதரன் வேறாகக் குடித்தனம் நடத்துவான். வருந்தும்படியான பேச்சுக்களைப் பேசமாட்டான். பித்தவாயுவின் உபத்திரவமுடையவன். செங்கைதனில் தாமரைரேகையை யுடையவன். அதிகப்பணம் இல்லாதவனாகும்.

7. இக்குண முடையோனுக்கு இவனுமே உதிப்பானுகும்
மிக்கவே இவன்குணத்தை விளம்புவோம் மாநிறத்தன்
அக்கரை செல்வானுகும் அணுகிடும் இரெண்டுகல்வி
தக்கவர் நேசம்கொள்வன் சகராசர் பேட்டிபூண்பன்.

7. இத்தகைய குணங்களையுடையவனுக்கு, நம் ஜாதகன் புத்திரனுய்ப் பிறப்பான். மிகுதியாகவே இவனுடைய குணங்களை எடுத்துரைப்போம். மாநிறமுள்ளவன். பிறவித்துன்பங்களைக் கடந்து செல்லுவான். இவன் இரண்டுவிதமான கல்வித்துறையில் பயிலுவான். தகுந்த பெரியோர்களைச் சிநேகம் கொள்ளுவான். உலகினிலுள்ள அரசர் பேட்டிகொள்ளுவான்.

8. துருவசக் கரத்தின்ஓட்டும் துரைராசர் தன்னுலுய்வன்
விரவில்சங் கதியும்சொல்வன் மனவேக வித்தைகற்பன்
கரைமனம் யூகைசாலி கனத்தபுத் திகளுமுண்டு
பிறைபோல யோகம்வாய்க்கும் புண்ணிய மனத்தனுமே.

8. செங்கோல் செலுத்தும் அரசர்களால் உஜ்ஜீவிப்பான். விரைவில் தகவல்களைத் தெரிவிப்பான். மனதில் எண்ணுவதை வேகமாகப் பிரச்னம் பார்த்துத் தெரிந்துகொள்ளும் கல்வியை அறிவான். இரக்கமுள்ள புத்தியை யுடையவன். புத்திக் கூர்மையுடையவன். மதிப்பான புத்திமதிகளை யுடையவன். பிறைச்சந்திரனைப் போல் யோகங்கள் விளங்கி ஓங்கும். தர்மஞ் செய்வதில் விருப்பமுடையவன்.

9. மூவெட்டு ஆண்டின்மேலாய் விளம்பிஞேம் ராசயோகம்
தாவின் பேரைக்காப்பன் சல்லியம் கொள்ளானுகும்
ஏவலாள் அதிகமுண்டு இருள்தீபம் போலேகாட்டும்
நாவது சுத்தமுண்டு நற்றந்தை இல்லம்வாழான்.

9. இருபத்துநான்கு வருஷங்களுக்குமேல் இராஜயோகம் ஏற்படும். அண்டினபேரைக் காப்பான். கடன்கள் வாங்கமாட்டான். ஏவலாளர்கள் அதிகம் உண்டு. இருட்டில் தீபம் எப்படிப் பிரகாசிக்குமோ அஃதேபோல் விளங்குவான். வாக்குச் சுத்தமுண்டு. நல்ல தகப்பனின் வீட்டில் வாழ மாட்டான்.

10. பலருக்கும் நல்லோனுவன் புரிந்துப சாரம்செய்வன்
கலகத்தைக் கூருனுகும் கட்செவி[1] போலேகோபம்
உலவிப்பின் சாந்த[னுவன்] உண்டியும் சுகமாய்க்கொள்வன்
விலைமாதர் மோகம்கொள்ளான் வீண்பழி யேற்கானுகும்.

---

1. பாம்பு

10. பலபேர்களுக்கு நல்லவனுவன். விருப்பத்துடன் உபசாரம் செய்வான். கலகவார்த்தைகளைச் சொல்லமாட்டான். கோபம் வந்தால் பாம்பு போல் சீறுவான். பிறகு சாந்தமடைவான். சுகமான சாப்பாட்டைப் புசிப்பான்.. தேவடியாளைக் கண்டு மோகம் கொள்ளான். வீண்பழி வார்த்தைகளை ஏற்கமாட்டான்.

11. தன்துணை அறுவர்தோன்றும் சாற்றுவோ மாண்பால்நான்கு
கன்னிகை இருவரென்றேம் கழறுவோம் பின்பால்சேதி
பின்துணை ஆண்பாலாகும் பேதையர் முன்பின்னுகும்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

11. தன்னுடைய சகோதரர் ஆறுபேர்கள் தோன்றுவார்கள். ஆண்பால் நான்கு. சகோதரிகள் இரண்டுபேர்கள் என்றேம். இவர்களைப்பற்றிய செய்தி விவரங்களைப் பிறகு சொல்லுவோம். தம்பிகள் அதிகம். சகோதரிகள் முன்பின்னுகும். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

12. முப்பது மூன்றுஆண்டில் மேவிடும் பாரிதானும்
செப்புவோம் அன்னைபக்கம் தேவியின் குணத்தைக் [கேளாய்த்
தப்பிதம் எண்ணுநெஞ்சம் சரசமாய் வார்த்தைகூர்வள்
மெய்ப்புள மனத்தளாகும் விருந்திேனேர்ப் பிரியமாகும்.

12. இவனது முப்பத்துமூன்றும் பிராயத்தில் பெண்டாட்டி ஏற்படுவாள். அவளும் தாயின் வர்க்கத்திலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைக் கேளுங்கள். மனதில் தப்பான காரியங்களை நினைக்கமாட்டாள். சரசமான வார்த்தைகளைப் பேசுவாள். இளக்கமான மனதை யுடையவள். வந்த விருந்தினரைப் பிரியமாக உபசரிப்பாள்.

13. பால்பாக்கிய முடையளாகும் பகையென்று மனதில் [வையாள்
சீலமும் அறத்திலிச்சைச் செனஉப காரியாகும்
காலத்தை அறிந்துரைப்பள் கடவுளர் விரதமேற்பள்
மால்மனை ஒப்பதாகும் மனதுக்கு ஏற்றமாது.

13. பால்பாக்கியம் உடையவள். பிறரிடம் பகைமை இருப்பதாகவும் மனதில் நினைக்கமாட்டாள். சீலமுள்ளவள். தருமம்செய்ய விரும்புவாள். பொதுஜன உபகாரியாவாள். காலநிர்ணயம் செய்துரைக்கும் திறமையுடையவள். கடவுள் வழிபாடுகள் விஷயமாக விரதங்களை அனுஷ்டிப்பாள். இலட்சுமியை ஒத்தவளும் மனதுக்கேற்றவளுமான பெண்டாட்டியாவாள் இவள்.

14. சுதர்களும் ஆண்பால்மூன்று தோகையு மவ்வார்திர்க்கம்
பதராகு மிரண்டுஎன்றேம் பகருவோம் பின்பால்சேதி
பொதுசுதர் தோஷம்சொல்வாய் இரெண்டய்ந்தும் தோஷ
[மெய்தும்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

14. மூன்று ஆண்குழந்தைகள் உண்டு. மூன்று பெண் குழந்தைகளும் உண்டு. இரண்டு குழந்தைகள் விசிறியாய்விடும். இவர்களைப் பற்றிய செய்தி பிற்பகுதியில் கூறுவோம். பொதுவாகக் குழந்தைதோஷம் சொல்லுவோம். இரண்டாவதும் ஐந்தாவதும் தோஷமடையும். அதிதிகளை ஆதரிக்கும் அம்பிகையே ! கேட்பாயாக.

15. பெற்றதாய்ச் சேதிசொல்வேன் பிறர்குற்றம் புகலாளாகும்
உற்றேர்கள் மெச்சவாழ்வள் உறுதியில் லாதநெஞ்சம்
குற்றமும் அறத்திலிச்சை சொல்லுமுன் கோபியாவள்
உற்றநற் றுணைஆண்ரெண்டு ஒண்டோடி ஒன்றேதிர்க்கம்.

15. பெற்றதாயின் செய்திகளைச் சொல்லுவேன். பிறருடைய குற்றங்களை எடுத்துக் கூறமாட்டாள். உற்றார் உறவினர் மெச்ச வாழ்வாள். மனதில் தைரியம் கிடையாது. குற்றமுடையவள். தருமம்செய்ய விரும்புவாள். முன்கோப முடையவள் என்று சொல்லப்படுவாள். நல்ல சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருத்தியே தீர்க்கம்.

16. அன்னையின் வர்க்கம்தன்னில் அணுகிடும் தோஷமொன்று
பின்பாகம் விபரம்சொல்வேன் பேசுவோம் இவளின்பூர்வம்
கன்னியாக் குமரிதன்னில் கலந்தனள் கோகுலத்தில்
தன்சுதர் அதிகமுண்டாய்த் தரணியில் வறுமையின்றி,

16. அன்னையின் குடும்பத்தில் தோஷம் ஒன்று வந்துசேரும். அதனுடைய விவரத்தைப் பின்பாகத்தில் எடுத்துக்கூறுவோம். இனி இவளுடைய பூர்வோத்தரத்தைப் பற்றிக் கூறுவோம். இடையர்குலத்தில் கன்னியா குமரியில் பிறந்தாள். குழந்தைகள் அதிக மேற்பட்டபோதிலும், உலகினில் தரித்திரத்தை அனுபவியாமல்,

17. சுகமுள குடும்பியாகிச் சோமனை[1] அணிந்தோனுக்குச்
வகையாக ஆவின்பாலை மருவினள் பூசைக்காகச்
செகமதில் நல்லோளாகிச் சென்றனள் காலனுடு
செகபதி வரியப்பட்டுச் சிங்களத் தீவிலேதான்.

---

1. சந்திரன்

17. சுகமான குடும்பத்தை வகித்துச் பிறைச்சந்திரனை அணிந்த பரம சிவனது பூஜைக்காகப் பசுவின்பாலை ஒழுங்காகக் கொடுத்துவந்தனள். உலகினில் நல்லவள் என்று பெயரெடுத்து எமலோகம் சென்றாள். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுச் சிங்களத்தீவில் (இலங்கையில்),

18. வந்தனள் இவளேயென்றோம் வறுமைகள் காணுளாகும்
பிந்திய சென்மம்சொல்வேன் பழனியி னகரம்தன்னில்
கந்தன்தன் பூசைக்காகக் காராவாய்[1] உதிப்பாளாகும்
பிந்தியும் தேவனாகப் பிறப்பளா மென்றுசொல்வோம்.

18. வந்து பிறந்தவள் இவள்தானென்றோம். சிரமம் என்பதையே அறியமாட்டாள். அடுத்த ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். பழனி என்ற ஊரிலே முருகக்கடவுளின் பூஜைக்காக, காராம்பசுவாய்ப் பிறப்பாளாகும். பிறகு தேவதாரூபமாகப் பிறப்பாளென்றோம்.

19. இவள்பிதா பூர்வம்தன்னை எடுத்துநா முரைப்பக்கேண்மோ
தவசிவாய்க் கதிர்காமத்தில்[2] செனித்தனன் சிங்களவர்க்கம்
நவனியில் கிருஷிசெய்து நலிந்தோரை ஆதரித்துப்
பவமன மில்லானாகிப் பவமது இல்லாதாகி,

19. இவளுடைய பிதாவின் பூர்வோத்தரங்களை இனி நாங்கள் எடுத்துரைப்போம். கேளுங்கள். சிங்களஜாதியில் தபசிகள் வசிக்கும் கதிர்காம க்ஷேத்திரத்தில் ஜனித்தான். பூமியைக் கிருஷிசெய்து ஏழைகளுக்கு ஒத்தாசை செய்து ஆதரித்து பவவினைகளில் மனம்பற்றாமலும், பவ வினைகளைச் செய்யாமலும்,

20. வேலன்தன் பத்திகொண்டு மேவினன் காலனாடு
சாலவே அந்நாடன்னில் சனித்தனன் இவனேயென்றோம்
ஏலவே இவன்பின்சென்மம் இருஷிகள் வாழுகின்ற
சீலமாம் பரங்குன்றத்தில் செனிப்பனும் பிரம்மசேயாய்.

20. முருகக்கடவுளிடம் அனவரதமும் பக்திபூண்டு காலநாடு மேவினன். பொருத்தமாகவே அக்காலத்தில் ஜனித்தவன் இவனே என்றோம். ஏற்கவே இவனுடைய மறுஜன்மத்தைக் கூறுவோம். மகரிஷிகள் வசிக்கின்ற மேன்மைதங்கிய திருப்பரங்குன்றத்தினில் பிராமணக் குழந்தையாய் ஜனிப்பானாகும்.

---

1. காராம்பசு

2. கதிர்காமம் = இலங்கைத்தீவில் திருப்புகழ் பெற்ற ஒரு சுப்பிரமணிய முக்கிய ஸ்தலம்.

21. இந்ததோர் சென்மந்தன்னி லிவன்செய்த புண்ணியமென்ன
நிந்தையு மில்லாதாகி நிமலன்தன் பத்தியாயும்
தன்மமாம் குணத்தனுயும் சான்ருேர்கள் பக்திபூண்டும்
சந்ததம் வாழ்வதாலே சனிப்பனும் பிரம்மசேயாய்.

21. இந்த ஒரு ஜன்மத்தில் இவன்செய்த புண்ணியங்களென்ன ? எவ்வித அவதூறுமில்லாமல், கடவுளிடம் பக்திபூண்டு, தர்மநெறி தவருத குணத்தனுகி, பெரியோர்களிடம் பக்திவிசுவாசம் கொண்டு, எப்பொழுதும் வாழ்ந்து வந்ததனுலே, பிரம்மகுலத்தில் பிறக்கலானுன்.

22. உதித்தவன் பூர்வம்சொல்வேன் உயர்பாண்டி[ய] நாட்டிலே [தான்
விதியவன்[1] குலமுதித்து விளைபுலம் அதிகமுண்டாய்
நிதிமிக பெருக்கமாய்[கி] நீள்நிலம் சுகமாய்வாழ்ந்து
அதிபதி மனைவிஉண்டாய் மருவினுன் காலனுடு.

22. அப்படி உதித்தவனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். மேலான பாண்டியநாட்டிலே கணக்கர் குலத்திலுதித்து, விளைநிலங்களை அதிகம்பெற்று, பணத்தை அதிகமாகச்சேர்த்து, உலகினில் சுகமாக வாழ்ந்து, வீடுவாசல் மனைவிமக்கள் ஏற்பட்டு, எமலோகம் சென்ருன்.

23. சிரநான்கோன் வரியப்பட்டுச் சிங்கள நாட்டிலேதான்
வருகுவான் இந்தபாலன் வரைகுருேம் இவனின்யோகம்
மறுதேசம் வாசம்செய்வன் மன்னனுல் உயர்வானுகும்
கரமதால் வேலைசெய்து காணுத வார்த்தைசொல்வன்.

23. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுச் சிங்களநாட்டிலே (இலங்கையிலே) திரும்பவும் பிறப்பான், இந்த பாலன். இவனுடைய யோகபாவங்களைக் கூறுகிருேம். வேறுதேசத்தில் போய் வசிப்பான். அரசனுல் கௌரவிக்கப்படுவான். கைத்தொழில் செய்வான். காணுததைக் கண்டதாகச் சொல்லுவான்.

24. அன்பது ரெண்டுஆண்டும் அரசுமே யொக்குமென்ருேம்
துன்பங்கள் இதுமத்தில் தோன்ருதோ தொழிலுக்கேதான்
மன்னனுல் சிலதுகாணுன் மருவிடும் நிவிர்த்தியாகும்
என்னகா ரணத்தினுலே இயம்பினீர் யோகம்தானும்.

24. ஐம்பத்திரெண்டு வயது வரை அரசனைப்போல் வாழ்வான். மத்தியகாலத்தில் இவன் செய்யும்தொழிலுக்கு இடைஞ்சல்கள் ஏற்படாதோ. மன்னனுல் சில இடைஞ்சல் ஏற்பட்டு, பிறகு நிவிர்த்தியாகும். இவனுக்கு

---

1. கணக்கர்

என்ன காரணங்களைக்கொண்டு இவ்வளவு பெரிய யோகத்தைச் சொன்னீர்கள்?

25. மதிபுகர் பரிதிகேது மன்னவன் உச்சமாக
அதுபலன் யோகம்சொன்னேன் அறைகுவர் வசிஷ்டர் [தானும்
நதிபுகர் தன்னைப்பொன்னோன் நயப்புடன் பார்த்ததாலும்
சதிசெய்யும் கேதுதன்னைச் சந்திரன் பார்த்ததாலே.

25. சந்திரன், சுக்கிரன், சூரியன், கேது, வியாழன் இவ்வைந்து கிரகங்களும் உச்சஸ்தானத்திலிருக்க, அப்படிப்பட்ட யோகபாவங்களைச் சொன்னோம். இதைக் கேட்ட வசிஷ்டர் சொல்லலுற்றார். சுக்கிரனை வியாழ பகவான் நயமாகப் பார்ப்பதனாலும், இடைஞ்சல் செய்யும் கேதுவைச் சந்திரன் பார்ப்பதனாலும்,

26. உச்சனை உச்சன்பார்க்க உரையாது விசேஷயோகம்*
சித்தமாய் ரவியும்புந்தி சேயுமே சென்மம்தங்க
வெந்தியாய் அரசர்பக்கல் மேவியே சீவிப்பானும்
அத்தியைப் பெற்றமாதே அறைகுவோம் வேசியோகம்[1].

26. உச்சமாயிருக்கும் ஒரு கிரகம் அம்மாதிரியே உச்சஸ்தானத்திலிருக்கும் மற்றொரு கிரகத்தைப் பார்த்தால் விசேஷமான பலன் ஏற்படாது. சித்தமாக, சூரியனும், புதனும், செவ்வாயும் இலக்கினத்திலிருப்பதாலே அரசரிடம்போய் உத்தியோகம் செய்து பிழைப்பானும். பாம சிவனையடைந்த பார்வதியே! இந்தப் புமானுக்கு வேசியோகம் ஏற்படும் என்று சொல்லுவோம்.

27. சாமரை யோகமென்று சாற்றுவோம் பலனையின்று
பூமிகள் சேர்ப்பானும் பிதுராஸ்தி விருத்திசெய்வன்
நேமியில் புகழுமேற்பன் நிருபர்கள் உறவுகொள்வன்
சேமமாம் குடும்பியாவன் சேதுவின் தலங்கள்செல்வன்.

---

*இது ஜோதிஷ சாஸ்திரப்படி சரியல்ல. உலகவழக்கு அப்படி இருந்தாலும் ஒரு பழஞ்சொல்லும் அப்படியே உண்டு. 'உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சைக்குப் போவான்' என்று சொல்லுவதுமுண்டு. இப்படிக் கூறுவது சாஸ்திர விரோதமானது. ஜோதிட நூல்களில் இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இதை வாசகர்கள் நன்கு அறியவும்.

1. வேசியோகம்= (1) இஃது ஒரு நல்லயோகம்; அது சூரியனுக்கு முன்னே கிரகங்கள் நிற்பது; (2) சூரியனுக்கு இரண்டில் சந்திரன் நீங்கிய சுபகிரகங்கள் நிற்பதுமாம்.

27. அவனுக்குச் சாமரையோகமு மூண்டு என்று சொல்லுவோம். அதன்பலனைக் கூறுவோம். நிலபலங்களைச் சேர்த்து விருத்திக்குக் கொண்டு வருவான். பிதிரார்ச்சிதத்தை விருத்திசெய்வான். உலகினில் கீர்த்தி பெறுவான். அரசர்களுடைய சிநேகிதத்தைப் பெறுவான். க்ஷேமமான குடும்பத்தைப் பெறுவான். ராமேசுவரம் போன்ற விசேஷமான ஸ்தலங் களுக்குப் போய் தரிசிப்பான்.

28. துணைவரை யாதரிப்பன் சொல்லது காப்பானுகும்
வினைசெய்யான் தாய்தந்தைக்கு மெஞ்ஞானம் பின்னுல் [கற்பன்
சினமதைக் காப்பானுகும் சிறப்பான குடும்பியாவன்
கனமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

28. தன்னுடைய சகோதரர்களை ஆதரிப்பான். சொன்னசொற்படி நடப்பான். தாய் தந்தையர்களுக்குண்டான காரியங்களைச் செய்வான். ஞானநூல்களைப் பிற்காலத்தில் கற்பான். கோபத்தை அடக்குவான். மேலான குடும்பத்தை வகிப்பான். விக்னேசுவரனைப் பெற்ற பார்வதியே! கேட்டாயாக.

29. முப்பது ஏழுஆண்டில் மீனமா தத்திலேதான்
செப்புவோம் தந்தைகெண்டம் செம்பொன்னின் தசை [காலத்தில்
ஒப்புடன் கேதுபுத்தி புரைந்திடு மந்தக்காலம்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்ருது.

29. ஜாதகனுடைய முப்பத்தேழாவது வயதில், பங்குனிமாசத்தில், தந்தையின் கண்டம் ஏற்படும். அஃது எந்தக்காலத்திலென்ருல், வியாழபக வானுடைய தசையில், கேது புக்தி நடக்கும்போது ஏற்படும். கங்கை வார்சடையான்தன்னைமணந்த பார்வதியே! நாங்கள் கூறிய அருள்வாக் கிற்கு யாதொரு குறைவு மேற்படாது.

30. எண்ணஞ்சு மூன்றுஆண்டில் இடபமா தத்திலேதான்
திண்ணமா யன்னைகெண்டம் செம்பொன்னின் தசையே [யாகும்
வண்ண[மா]ம் மதிபுகுத்தி வந்திடு மந்தக்காலம்
அண்ணலைப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

30. இவனுடைய நாற்பத்துமூன்ருவது வயதில், வைகாசி மாசத்தில், நிச்சயமாய் அன்னைக்கு மரணம் ஏற்படும். குருமகாதசையில், சந்திரபுக்தி நடக்கும்போது மரணம் வாய்க்கும். பகவானைப் பூஜைசெய்யும் பார்வதியே! கேட்பாயாக.

31. அறுபது ஏழுஆண்டில் அத்தனுர் மாதம்தன்னில்
நிரைபக்கம் துவாதேசி நீங்கிடு முடலமென்றோம்
வரும்சென்மம் அந்நாடன்னில் மறைகுல முதிப்பானும்
பெருவயி றோனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்

31. ஜாதகனுடைய அறுபத்தேழாம்ஆண்டில் அழகிய தனுர் (மார்கழி) மாசத்தில், சுக்கிலபட்சம் துவாதசியன்று மரணம் ஏற்படும். அடுத்த ஜன்மத்தில் பிராம்மணகுலத்திலுதிப்பான். விக்னேசுவரனைப் பெற்ற புண்ணியவதியாகிய பார்வதியே! கேட்பாயாக.

32. நாற்பது ஆண்டின்மேலாய் நற்றுணை வேருய்க்கொள்வர்
ஏற்கவே பாகம்நான்கா யியம்புவோம் முனியேகேளும்
ஆற்கவே பாகமைந்து ஆகாத காரணம்சொல்
தீர்ப்பாக ஒருவனும்தான் செல்லுவான் காலனுடு.

32. இவனது நாற்பதாவது வயதிற்குமேல் இவன் சகோதரர்கள் வேருகக் குடித்தனம் போவார்கள். நான்கு பாகமாக வேண்டியிருந்தது, ஐந்து பாகம் ஆகாத காரணத்தைச் சொல்லுங்கள், முனிவரே! நிச்சயமாய் ஒருவன் மரணத்தை அடைந்ததனுல்தான் அவ்விதம் நேர்ந்தது.

33. பின்பாகம் விபரம்சொல்வேன் புதல்வனின் செனனகாலம்
பன்னிரு மீனும்நாளில் பற்றிய மூன்றும்பாதம்
துன்னுசந் திரனிருப்புச் செப்புவோம் ஆண்டுநாலும்
மன்னுதிங் களுமிரெண்டு வரைகுறோம் பலனையாங்கள்.

33. பிற்பகுதியில் விவரங்கள் கூறுவோம். ஜாதகனுடைய ஜனன காலத்தில் ஹஸ்தநட்சத்திரம், மூன்றும் பாதம். சந்திரதசை யிருப்பு வருஷம் நான்கு, மாசம் நான்கு. இதன் பலன்களை எடுத்துரைப்போம்.

34. சாதகன் தனக்குரோகம் தன்துணை விருத்தியாகும்
மேதினில் விரயமாகும் மெல்லியாள் பிணியுமெய்தும்
சூதுகள் காலிக்கேதான் செனபந்து சூதமெய்தும்
ஓதுவேன் பின்பால்சேதி உத்தமி கேட்டிடாயே,

34. ஜாதகனுக்கு வியாதி ஏற்படும் சகோதர விருத்தி ஏற்படும். உலகினில் விரயங்கள் ஏற்படும். மனைவி தேக அசௌக்கியமடைவான். காலிகளுக்குச் சூதுவாதுகள் ஏற்படும். பந்து ஜனங்களுடைய ஆசௌச மேற்படும். இதைப்பற்றிய விவரங்கள் பிற்பகுதியில் சொல்லுவேன். பார்வதி! கேட்பாயாக.

ஜாதகம் 52

1. பிறைமேடம் குருவும்வீணை புயங்கனும்[1] கடகமாக
தரைமகன் கோலதாகச் சல்லியன்[2] புதனும்தேளில்
பரிதியும் வில்லுமாகப் பங்குமே[3] சியதாக
வருவது மேடம்சென்மம் வரைகுவீர் பலனையென்று.

1. சந்திரன் மேஷத்திலும், குரு மிதுனத்திலும், இராகு கடகத்திலும், சனி சிம்மத்திலும், செவ்வாய் துலாத்திலும், சுக்கிரனும் புதனும் விருச்சிகத்திலும், சூரியன் தனுசிலும், கேது மகரத்திலும் தங்கும்படியான கிரகநிலை கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள் என்று,

	லக்கினம் சந்திரன்		குரு
	இராசி	சக்கரம்	ராகு
கேது			சனி
சூரியன்	சுக்கிரன் புதன்	செவ்வாய்	

2. சங்கரி கேட்கும்போது சடைமுனி புகலுகின்றார்
இங்கிவை ஆண்பால்சென்மம் இல்லமும் வடபால்நோக்கம்
சங்கரன் கோஷ்டமுத்திரம் தணல்காவி மேல்பாலாகும்
இங்கிவை அடையாளத்துள் இப்பாலன் சேஷ்டனாக,

2. பார்வதிதேவி கேட்கும்போது, சடையை தரித்த வசிஷ்டர் சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஆண்மகனுடையது. அவன்வீடு வடக்குப் பார்த்தது. அதற்கு, சங்கரன் கோவில் வடக்கிலுள்ளது. அம்மன்கோவில் மேற்கிலுள்ளது. இத்தகைய அடையாளங்கள் கொண்ட இடத்தில் நம் ஜாதகன் ஜேஷ்டனாக,

3. பிறப்பனும் பறவைவர்க்கம் பேசுவோம் இவனின்யோகம்
அறிவையாம் புத்திரயோகம் அன்னைபின் தந்தையோகம்
திருமகன் முன்பின்சென்மம் செப்புவோ மின்னூல்தன்னில்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

---

1. இராகு
2. சுக்கிரன்
3. சனி

3. பிறப்பான். அதுவும் பறவையர் குலத்திலுதிப்பான் என்று சொல்லுவோம். இவனுடைய யோகங்களையும், மனைவிமக்கள் யோகங்களையும், தாய்தந்தையர் யோகங்களையும், இவனுடைய முன்பின் ஜன்மங்களின் விவரங்களையும் இந்தப் புஸ்தகத்தில் எடுத்துரைப்போம். விக்கினேசுவரனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

4. சாதகன் தன்னைப்பெற்ற தாய்க்குணம் புகலக்கேண்மோ
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உரகன்போல் கோபமேற்பள்
தீங்கான மனமுமில்லாள் தீங்கதை யெவர்க்குமெண்ணாள்
சாதிப்பாள் சிலதுசங்கை சிவந்தமை உளைச்சலுள்ளாள்.

4. ஜாதகனுடைய தாயின்குணத்தை எடுத்துரைப்போம், கேளுங்கள். சுகமாக சம்பாஷிப்பாள். கோபம் வந்தால் பாம்புபோல் சீறுவாள். கெடுதலில்லாத மனமுடையவள். யாவர்க்கும் கெடுதல் செய்யமாட்டாள். சில சந்தேகங்களை எடுத்துச் சாதனை செய்வாள். சிவப்பான சரீரமுடையவள். உளைச்சலுடைய தேகமுடையவள்.

5. சுகதுக்கம் கலந்துவாழ்வள் சொல்வதைக் காப்பாளாகும்
பகையென்று மனதில்வையாள் பணிந்தோரை ஆதரிப்பள்
செகமதில் நல்லோளாவள் சீலம்போல் வெளிமயக்கம்
உகமையாய்ப் பேசுவாளாம் உண்மையா மனத்தளாகும்.

5. வாழ்க்கையில் சுகதுக்கங்களைக் கலந்து அனுபவிப்பாள். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவாள். மனதில் பகைமை கொள்ளமாட்டாள். தன்னிடம் சரணமடைந்தவரைக் காப்பாற்றுவாள். உலகினில் நல்லவள் என்று பெயர் பெறுவாள். சீலமுடையவள் போல் வெளிப்பகட்டுடனிருப்பாள். திருஷ்டாந்தங்களுடன் பேசுந்திறமை யுடையவள். சத்தியத்தை விரதமாகக் கொண்டவள்.

6. மங்கைக்குத் துணையாண்காணு மாதுவும் ஒன்றேதீர்க்கம்
அங்கவள் சேதிபின்பால் அறிவிப்போம் தாயேயாங்கள்
இங்கிவன் பாலன்சேதி இயம்புவோம் சிவந்தமேனி
பங்கய வர்ணமொக்கும் பகைத்தோரை நசிக்கவைப்பன்.

6. இவளுக்குச் சகோதரனில்லை. சகோதரி ஒருத்தி தீர்க்கம். அவளுடைய செய்திவிவரங்களைப் பற்றிப் பிற்பகுதியில் விவரிப்போம், தாயே! நாங்கள். இந்த ஜாதகனுடைய செய்திவிவரங்களை இங்குக் கூறுவோம். சிவப்பான சரீரத்தோற்ற முடையவன். தாமரைப்பூப்போன்ற மேனியுடையவன். பகைவரை அடியோடு ஒழித்து விடுவான்.

7. இருவிதக் கல்விகற்பன் ராசபூ சிதனுமாவன்
அரசரால் தொழிலுமேற்பன யாரையும் உறவுகொள்வன்
பரிவண்டி யுடையனாகும் பாரினில் புகழுமேற்பன்
தரிபடக் கூறானாகும் சாதமும் குறைவுறாதான்.

7. இரண்டுவிதக் கல்வித்துறைகளில் பயிலுவான். அரசர்களால் பூஜிக்கப்படுவான். அரசாங்கத்தில் உத்தியோகம் ஏற்பான். எவரையும் சிநேகங்கொள்வான். குதிரைவண்டி யுடையவனாகும். உலகினில் கீர்த்தி பெறுவான். வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனப் பேசமாட்டான். சாப்பாட்டுக்கு யாதொரு குறைவுமில்லை.

8. பலதல வாசம்செல்வன் பலபாவை மோகம்கொள்வன்
சொலுமொழி காப்பானாகும் திருமாளி இரெண்டுசெய்வன்
நலமதை யெவர்க்கும்செய்வன் நல்லோர்க்கு நல்லோனாவன்
திலர்தம்போல் யாவருக்கும் தீர்க்கமாய் வயதுமேற்பன்.

8. பலஸ்தலங்களுக்குப் போய்த் தரிசிப்பான். பல ஸ்திரீகளிடத்தில் மோகங் கொள்ளுவான். சொல்லும் வார்த்தையைக் காப்பாற்றுவான். இரண்டு திருமாளிகைகளைக் கட்டிக்கொள்ளுவான். யாவர்க்கும் நல்லதையே செய்வான். நல்லவர்களுக்கு நல்லவனாவன். யாவர்க்கும் ஒரு ஸ்தம்பம் போலிருந்து காப்பாற்றுவான். தீர்க்காயு ளுடையவனாவன்.

9. தன்துணை காணானாகும் செனிக்கிலும் தீதேயாகும்
என்னகா லத்திலானே இயம்பினீர் அந்தச்சங்கை
பொன்னவன் மூன்றில்தங்கப் புறவியோன் பார்த்ததாலே
இன்னவர் பலத்தினாலே இவன்துணை தோஷம்
[சொன்னோம்.

9. தனக்குச் சகோதரனில்லை. ஏற்பட்டாலும் தீதாய்முடியும். எந்தக் காலத்தில் அப்படிப்பட்ட சங்கேதத்தைச் சொன்னீர்? வியாழன் இலக்ினத்திற்கு மூன்றாமிடத்தில் தங்க, சூரியனும் அவனைப் பார்ப்பதனாலே இவர்களுடைய பலத்தாலே இவனுடைய சகோதரதோஷம் ஏற்படும் என்று சொன்னோம்

10. மங்களம் இருபதாண்டில் மருவிடும் வடகீழ்பாரி
அங்கவள் குணத்தைச்சொல்வே னழகுளா ளிருசிகப்பள்
துங்கமா மனத்தளாகும் சொல்லது மேன்பாடாகும்
சங்கையென றோரைச்சாராள் தன்னவன் மனதுக்
[கேற்றாள்.

10. இவனுடைய இருபதாவது வயதில் கலியாணம் நேரிடும். அவளும் வடகிழக்கிலிருந்து வருவாள். அன்னவள் குணத்தைச் சொல்வோம். அழகுடையவள். பொதுநிறமுடையவள். துல்லியமான மனதை யுடையவள். பொன்போன்ற மொழிகளைக் கூறுவாள். சமுசயமுள்ளவர்களுடன் சேரமாட்டாள். தனமுடையவள். புருஷனுக்குக் பிடித்தமானவள்.

11. புத்திமான் பொறுமைசாலி புண்ணிய மனத்தளாகும்
பத்திமா னவர்க்குஅன்னம் படைப்பளாம் வருமைகாணுள்
சுத்தமு முடையளாகும் சுந்தரி வந்தபின்பு
பர்த்தாவுக் கதிகயோகம் பார்வதி கேட்டிடாயே.

11. புத்தியுள்ளவள். பொறுமை யுடையவள். தருமஞ் செய்வதில் விருப்பமுள்ளவள். பக்தியுடையவள். சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வாள். தரித்திரத்தை அனுபவிக்கமாட்டாள். சுத்த முடையவள். இவளுக்குக் கலியாணம் ஆனபிறகு புருஷனுக்கு அதிகயோகம் ஏற்படும். பார்வதிதேவியே! கேட்பாயாக.

12. புத்திர ராண்பால்ரெண்டு பெண்ணது ஒன்றேதீர்க்கம்
வித்தகன் முன்சென்மத்தை விளம்புவோம் காரைக்காலில்
குத்தமா முத்திரியசேயாய்க் குலாவியே வாழுநாளில்
பத்தின வினையைச்சொல்வேன் பஞ்சைகட் கிடைஞ்சல்
[செய்தான்.

12. ஆண்குழந்தைகள் இரண்டு. பெண்குழந்தை ஒன்றேயாகும். இது தீர்க்கம். ஜாதகனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். காரைக்காலில் குற்றமற்ற முத்திரிய வமிசத்தில் பிறந்து வாழ்ந்து வரும் நாளில், பண்டைவினை இவனைப் பற்றியது. அதன் விவரங் கூறுவோம். ஏழைகளுக்கு இடைஞ்சல் செய்தான்.

13. ஏழைகள் மனதுவாடி இயம்பின சாபம்கேண்மோ
தாழ்படச் செய்தாய்நீயும் செனிக்கும்பின் சென்மந்தன்னில்
ஊழியால் துணையுமின்றி உன்பிதா குலம்வேறாகும்
தாழ்வான குலமுதிப்பாய்ச் செப்பினர் ஏழையோர்கள்.

13. ஏழைகள் மனவருத்தத்துடன் கூறிய சாபத்தைக் கேட்பாயாக. தாழ்வுபடும்படிச் செய்த உனக்கு ஏற்படும் மறுஜன்மத்தில் ஊழ்வினையின் காரணமாகச் சகோதரனில்லாமல், உன்பிதாவின் குலமே சந்ததியில்லாமல், வேறாக மாறும். தாழ்ந்த குலத்தில் பிறப்பாய் என்று ஏழைகள் கடுமையாகச் சொன்னார்கள்.

14. மாரனும் அந்தியத்தில் வருவோர்க்குத் தாகமீந்து
திரமாய்க் காலனூடு சென்றுமே பிரமன்லக்கம்
பாரினில் உதிப்பானும் பற்றுது துணைவர்தானும்
வேறுசா தியனும்தந்தை விளம்புவீர் அவன்குணத்தை.

14. ஜாதகனும் அந்தியகாலத்தில் வந்த விருந்தினர்க்கு அன்னபானாதிகளைக் கொடுத்து, தைரியமாய் மரணத்தை யடைந்தான். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உலகினில் பிறப்பான். அவன் சகோதரர் காணான். வேறு ஜாதியில் பிறப்பான் அவன் தந்தை. அவன் குணத்தை எடுத்துச் சொல்லுவீர்.

15. இந்திர சித்தைவென்ற எதிரிபேர்[1] கொள்வானும்
சுந்தர முடையனாகும் துவாரகை கிருஷ்ணன்போல
பந்தணி மார்கள்போகன் பலபேர்க்கு நல்லோனவன்
விந்தையாய்ப் பேசுவானும் வெற்றியாம் நினைத்ததெல்லாம்.

15. இந்திரஜித்தைவென்ற எதிரியாகிய இராமானுஜனுடைய (இலக்ஷ்மணனுடைய) பெயரை வகிப்பான். நல்ல அழகுடையவன். துவாரகாதிபதியாகிய கிருஷ்ணபகவானைப்போல ஸ்திரீலோலனயிருப்பான். பலபேர்களுக்கு நல்லோனவன். வேடிக்கையாய்ப் பேசுவான். நினைத்த காரியங்களில் வெற்றி பெறுவான்.

16. அரசரால் சீவனங்கள் அணுகிடும் மேன்மேலாகக்
குறையென்றோர்க் குதவிசெய்வன் கொள்ளவும் அழிக்க
[வல்லன்
பெருமையாய்த் தலங்கள்செல்வன் புண்ணிய மனத்தனாகும்
திருமகன் தன்னைக்காப்பன் செல்வதி கேட்டிடாயே.

16. அரசனால் சீவனங்கள் செய்வான். உத்தியோகங்கள் மேன் மேலும் விருத்தியாகும். இல்லாத பேர்களுக்கு ஒத்தாசை செய்து காப்பாற்றுவான். பொருள்களைச் சம்பாதிப்பான். செலவுகளும் செய்வான். பெருமையுடன் சிவஸ்தலங்களுக்குப் போய்த் தரிசிப்பான். தருமம் செய்வதில் விருப்பமுள்ளவன். புத்திரனைக் காப்பாற்றுவான். பார்வதியே! கேட்பாயாக.

17. வந்தவன் யோகச்சேதி அரசனால் தொழிலுமேற்பன்
முந்திய தனங்கள்சேர்ப்பன் உயர்வான குடும்பியாவன்
விந்தையா யிரெண்டுகல்வி மேன்மையாய்ப் புகழுமேற்பன்
நந்திஆ விருத்தியுண்டு நவிலுவார் பிருகுதானே.

---

1. இலக்குமணன்

17. வந்தவனுடைய யோகச்சேதி கூறுவோம். அரசாங்கத்தில் உத்தியோகம் ஏற்பான். பூர்விகச் சொத்துக்களை விருத்தி செய்வான். மேலான குடும்பத்தை வகிப்பான். வேடிக்கையாக இரண்டுவித கல்வி கேள்விகளில் பிரசித்தி பெறுவான். மேன்மைதங்கிய கீர்த்தியையுமடைவான். பசு, எருதுகளை விருத்தி செய்வான். இதைக்கேட்ட பிருகுமகரிஷி சொல்லலுற்ருர்.

18. எந்தக்கா லத்தில் இராசயோகமு மெய்தும்சொல்வாய்
விந்தையாய்ப் பானுகாலம் மேவிடும் தொழிலுமென்றேம்
அந்தவன் மரணம்மட்டும் அரசுமே ஓங்குமென்றேம்
இந்திரன் போலேவாழ்வன் ஈசுவரி கேட்டிடாயே.

18. எந்தக்காலத்தில் இவன் இராசயோகத்தை அனுபவிப்பான்? சூரியதசையில் யோகம் வலுக்கும். தொழிலும் அபிவிருத்தியடையும். அவனுடைய மரணகால பரியந்தம் இராஜபோகத்தை மேன்மேலும் அனுபவிப்பான். தேவர்களில் இந்திரன் எப்படியோ, அப்படி சாலச்சிறந்து வாழ்வான். பார்வதி! கேட்பாயாக.

19. அன்னையின் முன்செனமத்தை அறிவிப்போ மவ்வூர் [தன்னில்
விந்தையாய் வணிபம்செய்யும் வைசிய குலமுதித்துப்
பொன்மிக உடையளாகிப் பூவையும் வாழ்ந்தநாளில்
துன்மைகள் வந்தசேதி செப்புவோம் இனிமேலாக.

19. இவனுடைய தாயின் முன்ஜன்மத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். அவ்வூரில் ஆச்சரியமாய் வியாபாரம் செய்யும் வைசியர் குல முதித்து, பணம் காசுகளை அதிகமாகப் படைத்து, இவள் வாழ்ந்துவரும் நாளிலே, துன்பங்கள் நேரிட்டன. அவற்றின் விவரம் இனிமேலாகக் கூறுவோம்.

20. துன்மைகள் வார்த்தையொன்று செப்பினுள் ஒருபெண் [பேரில்
கன்னிகை வருத்தமுற்றுக் கழறின சாபம்கேண்மோ
பின்வரும் செனமந்தன்னில் பாவையின் குலமுதிப்பாள்
இன்னமும் பலவார்சொன்னுள் எய்திற்று அந்தச்சாபம்.

20. ஒரு பெண்ணின்மேல் கெட்ட அவதூறுகளைப் பேசினுள். அக்கன்னிகை வருத்தப்பட்டுச் சொன்ன சாபமொழிகளைக் கேட்பாயாக. இனி வரும் ஜன்மங்களில் பாவையின் குலமுதிப்பாய் என்றும், இன்னும் பலவாருன சாபமொழிகளையும் சொன்னுள். அந்தச் சாபம் இவளை வந்தடைந்தது.

21. மாதுவும் வேறுகாணுள் மரலியின் பதிக்குச்சென்று
மாதவன் வரியப்பட்டு வந்தவள் என்றுசொல்வோம்
காதலி பின்சென்மத்தைக் கழறுவோம் காஞ்சிதன்னில்
ஓதுவார் குலமுதிப்பாள் உத்தமி கேட்டிடாயே.

21. இம்மாதுவும் வேறுநன்மைகளை யடையாமல் காலன்நாடு சென்றாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு வந்தவள் இவளே என்றோம். இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். காஞ்சீபுரத்தில் ஓதுவார் குலத்தில் உதிப்பாள். உத்தமியே! கேட்டிடாயே.

22. இந்தவோர் சென்மந்தன்னி லிவள்செய்த புண்ணியமென்ன
முந்தின குலமுதிக்கும் காரணம் புகலுமென்ன
அந்தவள் இச்சென்மத்தில் அறமது இச்சையாகும்
சிந்தையும் நல்லதாயும் தேவதா பத்தியாயும்.

22. இந்த ஒரு ஜன்மத்தில் இவள் செய்த புண்ணிய காரியங்கள் என்ன? பிராமணகுலத்தில் உதித்ததன் காரணமென்ன? சொல்லுங்கள். அவள் இந்த ஜன்மத்தில் தருமத்தில் இச்சையுள்ளவளாவள். நல்ல சிந்தனைகளும் உடையவள். கடவுளிடத்தில் அதிக பக்தி பூண்டவள்.

23. கன்னிகை வாழ்விலேயே கலப்பளாம் மறைக்குலத்தில்
சந்திரன் தசையிலேதான் செப்புவோம் அன்னைகண்டம்
மன்னிய முப்பானேழில் மடிவுண்டு அன்னைக்கென்றோம்
உன்னத தவங்கள்செய்யும் உத்தமி கேட்டிடாயே.

23. அவளுக்குப் பிராமணகுலத்தில் கலியாணம் ஆகும். அதுவும் சந்திரதசையிலேதான் நடக்கும். ஜாதகனுடைய முப்பத்தேழாம் பிராயத்தில் அன்னைக்கு மரணகாலம் என்றோம். மேலான தவங்களைச் செய்யும் உத்தமியே! கேட்பாயாக.

24. அறுபது மூன்றுஆண்டில் அணுகிய தேளின்மாதம்
திருமகன் உடலமேகும் செப்புவோம் இவன்பின்சென்மம்
குறைதீர்க்கும் பட்சிதன்னிற் குதிப்பனும் சைவசேயாய்க்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

24. ஜாதகனுடைய மரணத்தைப்பற்றிக் கூறுவோம். அவனுடைய அறுபத்துமூன்றும் வயதில், விருச்சிக மாதத்தில், மரணமடைவான். இவனுடைய அடுத்த ஜன்மத்தில் மனக்கவலையை மாற்றும் ஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்தில் சைவக்குழந்தையாய் உதிப்பானும். விக்கினேசுவரனைப் பெற்றெடுத்த பார்வதியே! கேட்பாயாக.

25. இதுமத்தில் சாதகர்க்கு எய்தாதோ மாரகங்கள்
விதவிதப் பிணியநேகம் மேவிடும் நிவிர்த்தியாகும்
எதுவித காரணத்தால் இயம்பினீர் அந்தச்சங்கை
சதுர்ஏழு பத்துசென்மம் சாலவே கிரகம்நிற்க,

25. இதன் மத்தியில் ஜாதகனுக்கு மரணங்கள் ஏற்படாதோ என்று வினவ, விதவிதமான ரோகபீடைகள் ஏற்பட்டு, அப்போதைக்கப்போது நிவிர்த்தியாகும். எந்தக் காரணத்தினால் இப்படிச் சொன்னீர்? அந்தச் சங்கை (சந்தேகம்) எதனால் ஏற்பட்டது என்றால், லக்கினத்திற்கு நாலு, ஏழு, பத்து, லக்கினம் இந்த நான்கு கேந்திரஸ்தானங்களிலும் கிரகங்கள் தங்க,*

26. பாலகன் தனக்குப்பாரி பற்றிடும் சுதரும்தோன்றும்
ஏலவே அன்னைக்கேதான் இவனுமே கருமம்செய்வன்
சாலவிப் பலத்தினாலே சாதகன் தீர்க்கசீவி
ஆலத்தை யுண்டோன்தேவி அறைந்தன மொழிகுன்றாது.

26. இவனுக்குப் பாரியை ஏற்படுவாள். குழந்தைகளும் பிறக்கும். பொருந்தவே, இவன் தாய்க்குக் கருமம் செய்வான். கிரகபலங்களைக்கொண்டு ஜாதகன் தீர்க்காயுசுடையவன். ஆலகால விஷத்தையுண்ட பரமசிவனின் தேவியாகிய பார்வதியே! சொன்ன அருள் வாக்கில் யாதொரு குறைவுமிருக்காது.

27. அன்னவன் சென்னகாலம் அசுவினி கடைபாதத்தில்
துன்கேது தசைஓராண்டும் திங்களு நவமேயாகும்
முன்பாகம் விபரம்சொன்னோம் மொழிகுறோம் பின்பால் [சேதி
கன்னென மொழியையொக்கும் காதலி புகன்றிட்டோமே.

27. அவனுடைய ஜனனகாலத்தில் அசுவினிநட்சத்திரம் நாலாம் பாதம். கேதுதசையில் இருப்பு ஒரு வருஷம், மாசம் ஒன்பது. இதுவரையில் முதல் பாகத்தின் பலன்களை விவரித்தோம். இனி, பின்பாகத்தில் மற்ற விவரங்கள் கூறுவோம். கனிந்த சொற்களை இனிமையாய்க் கூறும் பார்வதியே! புகன்றிட்டோமே.

---

*இதுபெரிய மகத்தான ஜோதிடசாஸ்திர நுட்பமாகும். இதை மெத்தப் படித்தவர்களே அறிந்து சொல்லக்கூடிய தத்துவ ரகசியம். அறுபத்துமூன்று இராஜயோகங்களைபற்றி விவரிக்கும் பிருகத்ஜாதகத்திலும் கிடைக்காதது. அதே ஆசிரியசிரேஷ்டரான வராகமிகிரர் செய்தருளிய 'பிருகத் ஸம்ஹிதை'யில் இந்த நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் இருக்கும் வைபவமும், அதன் பலன்களும் ஆராய்ந்து அறிவிக்கப்பட்டுள்ளன. இஃது ஒரு மகத்தான யோகம். இஃது ஆயிரக்கணக்கான ஜாதகங்களில் சிலவற்றிலேதான் காணலாகும். ஸ்வாமி விவேகானந்தரைப்போன்ற ஜகத்பிரசித்தி பெற்றவர்களின் ஜாதகங்களைப் பார்த்து, சுபாசுபர்களுடைய வீட்சண்ணிய விசேஷத்தைக் கண்டு ஜோதிடர்கள் பலன் அளிக்க வேண்டும்.

ஜாதகம் 53

1. மதிவண்டி ராகுகன்னி மால்சிகி மீனமாக
நதிபுகர் இரவிமேடம் நற்குரு மானதாக
விதிசனி கோலதாக மங்களன் சாடிபுக்க
இருவிதக் கோளுநின்று இலக்கினம் வருடையாக.

1. சுக்கிரனும் சூரியனும் மேஷத்திலும், சந்திரன் கடகத்திலும், ராகு கன்னியிலும், விதியைக் குறிக்கும் சனி துலாத்திலும், குரு மகரத்திலும், செவ்வாய் கும்பத்திலும், புதனும் கேதுவும் மீனத்திலும் தங்கும் படியான இவ்வித கிரகநிலை கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள் என்று,

புதன் கேது	லக்கினம் சுக்கிரன் சூரியன்		
செவ்வாய்	இராசி சக்கரம்		சந்திரன்
குரு			
		சனி	ராகு

2. பார்வதி கேட்கும்போது பராசரும் கூறுகின்றார்
சீர்புகழ் ஆண்பால்சென்மம் சேத்திர மகிழ்மேல்வீதி
கூறுவோம் உத்திரம்வாசல் குஞ்சர முகத்தோன்காளி
சாரியாய்க் கீழ்பால்தங்கும் சங்கரன் தென்கீழென்றோம்.

2. பார்வதி கேட்கும்போது பராசர முனிவர் சொல்லலுற்றார். இது சிறப்பும் புகழும் பெற்ற ஆண் மகனுடைய ஜாதகம். அவனது வீடு கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாசல் கொண்டது. அதற்குக் கிழக்கே பிள்ளையார் கோவிலும் காளி கோவிலும் உண்டு. சங்கரன் கோவில் தென் கிழக்கே உண்டு என்றோம்.

3. குறைதலை மாரிதெற்கில் குறித்தனம் தீர்த்தமுண்டு
சிறுவூரில் இந்தபாலன் செனிப்பனும் விசுவசேயாய்
வரும்துணை களத்திரபுத்திர ரவன்தந்தை தாயின்யோகம்
மருமமாய் முன்பின்சென்மம் வரைகிறோ மின்னூல்
[தன்னில்.

3. மாரி அம்மன் கோவில் தெற்கே யுள்ளது. புஷ்கரணியும் உண்டு. இந்த அடையாளங் கொண்ட சிற்றூரில் இந்த ஜாதகன் உதிப்பான். விசுவ கர்மாவின் குலத்தில் பிறந்தான். இவனுடைய சகோதரர், மனைவி மக்கள், தாய் தந்தையர் இவர்களுடைய யோக பாவங்களையும், இவனுடைய முன்பின் ஜன்மங்களின் இரகசியங்களையும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம்.

4. தந்தையின் துணைவர் தன்னை[ம்மை]ச் சாற்றுவோ
[மெழுவராகும்
எந்தையே ஆண்பால்மூன்று எழிலுள கன்னியொன்று
நொந்திடு மற்றதெல்லாம் நுவலுவோம் பிதாகுணத்தை
முந்துமால் நிறத்தனுகும் மூலசூ டுடையனுமே.

4. இவனுடைய தந்தையின் துணைவர்களைப்பற்றிப் பேசுவோம். அவர்கள் மொத்தம் ஏழு பேர்கள். சகோதரர்கள் மூன்று பேர்கள். பெருமை மிக்க கன்னிகை ஒருத்தி. மற்றவையெல்லாம் நசித்துப்போம். பிதாவின் குணத்தை எடுத்துரைப்போம். கரு நிற முடையவன். மூலச் சூட்டின் உபத்திரவ முடையவன்.

5. யோகமே சமமதாகும் உள்மனம் கபடுமில்லான்
தோகையர் மோகவானும் சுகதுக்க முடையனுவன்
வேகமாய் நடக்கவல்லன் வீடுகள் கட்டுவானும்
ஆகம மறியானுகும் அதிகமாய்ச் செலவுசெய்வன்.

5. சமமான யோக முள்ளவன். மனதில் கபடமில்லாதவன் ஸ்திரீகளைக் கண்டு மோகிப்பான். சுகதுக்கங்களை யுடையவன். சுறுசுறுப்புடன் நடப்பான். வீடுகள் கட்டுவானும். வேத சாஸ்திரங்களை அறிய மாட்டான். அதிகமாகச் செலவு செய்வான்.

6. சொன்னசொல் கேட்பானுகும் துராசையு மில்லா
[னென்றேும்
பன்னியே பேசவல்லன் பங்கய ரேகையுள்ளான்
தன்னுமே தனியனுவன் தனமிலான் பொறுமைசாலி
அன்னியர்க் குதவிசெய்வன் யாவர்க்கும் நல்லோனுவன்.

6. சொன்ன வார்த்தைகளைக் கேட்பான். துராசை என்பதே கிடையாது என்றேும். பக்குவமாய்ச் பேசவல்லான். தாமரை ரேகையை யுடையவன். தன்னந்தனியனுகவே வாழ்வான். தனமில்லாதவன். பொறுமை யுடையவன். பிறருக்கு ஒத்தாசை செய்வான். எல்லாருக்கும் நல்லவனுவன்.

7. [1]மாரியால் குற்றமில்லான் மர்மத்தை வெளிக்காட்டாதான்
திரமில் லாதநெஞ்சன் செய்நில மில்லானாகும்
ஆறுமா முகன்தன்பேரில் அன்புளன் சுகிபுசிப்பன்
நீரினில் தோயவல்லன் நிகர்பித்த ரோகியாவன்.

7. மாரியினால் குற்ற மில்லாதவன். தன்னுடைய மனதில் இருக்கும் இரகசியத்தை வெளிக்காட்ட மாட்டான். தைரிய மில்லாத மனதை யுடையவன். விளை நில மில்லாதவனாவன். ஆறுமுகக் கடவுளிடம் அன்பு பூண்டவன். சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான். தீர்த்தாடனங்கள் செய்வான். பித்த ரோக முடையவன்.

8. இக்குண முடையோனுக்கு இவனுமே உதிப்பானாகும்
மிக்கவே இவன்குணத்தை விளம்புவோம் இருநிறத்தான்
சிக்கன மில்லானாகும் சமதேகம் யூகைவானும்
நக்கன்மேல் பத்திகொள்வன் நற்சித்திர வேலைசெய்வன்.

8. இவ் விதமான குணங்களை யுடைய தந்தைக்கு, நம் ஜாதகன் புத்திரனாய்ப் பிறப்பானாகும். சிறப்பாகவே இவனுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவோம். கரிய நிறத்தான். சிக்கனமான வாழ்வுடையவன். சமமான தேகத்தை யுடையவன். புத்திக் கூர்மை யுள்ளவன். சிவனிடத்தில் பக்தி பூண்டவன். நல்ல சித்திர வேலை செய்வான்.

9. பண்டுநாள் பூமியில்லான் [பெ]பருகிடும் பூமிபின்னால்
அண்டினோர்க் குதவிசெய்வன் எவரையும் உறவுகொள்வன்
குண்டுணி கலகம்கூறான் குணமது சீலனாகும்
எண்டிசைப் புகழவல்லன் ஈகையு முடையனாமே.

9. பண்டைக் காலத்துப் பூஸ்திதி யில்லாதவன். பிற்காலத்தில் பூஸ்திதி ஏற்படும். அண்டினோர்க் குதவி செய்வான். யாரையும் சிநேகம் கொள்ளுவான். கோள் குண்டுணிகள் சொல்லிக் கலகம் செய்யமாட்டான். நல்ல குணங்களை யுடையவன். எட்டுத் திக்கிலும் புகழ் பெறுவான். தருமமு முடையவனாகும்.

10. சொல்லிடு வசனமெல்லாம் சுத்தமாம் விநோதமாகும்
வெல்லுவா னெதிரிதன்னை [2]வழக்கோர மிவனும்சொல்லான்
பலகவி உடையனாகும் பாக்கியம் சேர்ப்பானென்றோம்
தொல்லையு முடையனாகும் சுந்தரி மேலும்கேளே.

10. சொல்லும் வார்த்தைகளெல்லாம் சுத்தமாகவும் விநோதமாகவு மிருக்கும். எதிரிகளை ஜயிப்பான். பொய்ச்சாட்சி சொல்ல மாட்டான்.

---

1. மாரி=வைசூரி
2. பொய்ச்சாட்சி

பலவிதமான கவித்திற முடையவன். சொத்துக்களைச் சேர்ப்பான். சிரமங்களும் உடையவன். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

11. சித்திர வீடுசெய்வன் சேயிழைப் பிரியனாகும்
சுற்றத்தார் மதிக்கவாழ்வான் சொல்லது காப்பானாகும்
குத்தத்தை வெளிவிடாதான் குலவிடும் மூலசூடு
அத்தியைப் பெற்றமதே அறைந்தன மொழிகுன்றாது.

11. அழகான வீடு கட்டுவான். பெண்டாட்டியிடம் பிரியமுள்ளவனாயிருப்பான். சொந்தக் காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். சொன்ன பேச்சுப்படி நடப்பான். குற்றங்களை வெளிக்காட்ட மாட்டான். மூலச்சூடு ஏற்படும். விநாயகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! சொன்ன சொல் தவறாது.

12. எந்திடும் எந்தக்காலம் இவன்வீடு செய்வான்சொல்வாய்
வந்தவன் இல்லத்துக்கு வாய்வினில் அவ்வூர்தன்னில்
சொந்தமாய்ச் செய்தானென்றேம் சுதனுக்கு முப்பான் [நாலில்
இந்தவார் மன்னன்வீடு எய்துவான் கேட்டிடாயே.

12. எந்த இடம் எந்தக் காலம் இவன் வீடு கட்டுவான். சொல்லுங்கள். வந்தவன், வீட்டை, வந்த பணத்தைக் கொண்டு வாயுதிக்கில் கட்டினான். இவனுடைய முப்பத்து நாலாவது பிராயத்தில் இவன் வீட்டைக் கட்டி முடிப்பான். கேட்பாயாக.

13. அன்னவன் துணைவரெட்டில் ஆணது காணாகும்
கன்னிகை நான்குந்தீர்க்கம் கனக்காது மற்றதெல்லாம்
இன்னவன் மணத்தின்காலம் இருபது ஆண்டுதன்னில்
உன்னத குடகுதிக்கில் உரைந்திடு மாதுதானே.

13. அவனுடன் கூடப்பிறந்த எட்டுப்பேர்களில் ஆண் ஒருவருமில்லை. நான்கு சகோதரிகள். இவர்கள் தீர்க்கம். மற்றவர்கள் வியோகமாவார்கள். இவனுடைய கலியாணம் இருபதாவது வயதில் ஏற்படும். பெண்டாட்டி மேற்கிலிருந்து வருவாள்.

14. மாதுமே மால்நிறத்தாள் வடிவினில் குள்ளமாவள்
தீதுகள் எண்ணாளாகும் தேவியும் யோகசாலி
சூதான மனமில்லாதாள் சொல்லுமுன் கோபம்கொஞ்சம்
மேதினில் வரன்மனம்போல் வித்தகி வாழ்வாளாகும்.

14. அவளும் கரு நிறமுடையவள். குட்டையா யிருப்பாள். கெடுதல்களை நினைக்க மாட்டாள். அவளும் யோக முள்ளவள். சூதுவாதில்லாதவள். சிறிது முன்கோப முண்டு என்று சொல்லுவார்கள். உலகில், புருஷனுடைய மனதிற்கேற்றபடி இவள் வாழ்ந்து வருவாள்.

15. பந்துவை ஆதரிப்பள் பரியாச வசனம்கூர்வள்
வந்தபின் புருடன்யோகம் வரைந்தனம் இதுவல்லாமல்
பிந்தியும் நாபிநோயும் பித்தகூ டுடையதாகும்
நொந்தவர் தன்னைக்காப்பள் நிமலியே மேலும்கேளே.

15. சொந்தக்காரர்களைக் காப்பாற்றுவாள். பரிகாசமாய்ப் பேச வல்லாள். கலியாணமான பிறகு புருஷனுக்கு யோகம் ஏற்படும். பிற்காலத்தில் மூலச் சூடும், பித்த சூடும் ஏற்படும். ஏழைகளைக் காப்பாற்றுவாள். பார்வதியே ! மேலும் கேட்பாயாக.

16. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலத்தைக்காணோம்
சித்தினி மாதுஒன்று செனித்திடும் இதுவேயன்றிக்
குத்தமாம் சுதர்களென்றோம் கூறிய மொழியைக்கேட்டு
அத்திரி சொல்லுகின்றார் அணுகாது புத்திரரென்றீர்.

16. புத்திரபாவத்தைக் கூறுவோமென்றால் யாதொரு பலத்தையும் காணோம். அழகான பெண் குழந்தை பிறக்கும். இதுவல்லாமல் புத்திரர்களெல்லாம் தோஷ மடைவார்கள். இப்படிச் சொன்ன வார்த்தையைக் கேட்டு அத்திரி முனிவர் சொல்லலுற்றார். புத்திரனே பிறக்காது என்றீரே.

17. காரணம் யாதுஎன்றீர் கழறுவார் பராசர்தானும்
நீர்ப்புகர் இரண்டோனாகி லக்கினம் தன்னில்நின்று
காரியும் பார்த்ததாலே காணாது புத்திரர்ஆண்பால்
தீரமாய் எட்டோனைந்தைத் தரிசித்த குற்றத்தாலே,

17. இதற்குக் காரணம் என்ன ? பராசரர் சொல்லலுற்றார். இரண்டாமிடத்திற் குரிய சுக்கிரன் லக்கின பலம் பெற்று நிற்க, அவனைச் சனி பகவானும் பார்ப்பதனாலே ஆண் குழந்தைகள் பிறக்கா. தைரியமாய் எட்டுக் குடைய செவ்வாய் ஐந்தாமிடமாகிய சிம்மத்தைப் பார்ப்பதனாலே குற்ற மாகும். அதனால் அக்குற்றத்தை,

18. உரைத்தனம் இதுவல்லாமல் ஊழ்வினை சேர்ந்ததாலே
குறையுண்டு சுதர்கள்தானும் கூறுவோம் முன்னூழ்த் [தோஷம்
திருவொற்றூர் அதற்குமேலே சிற்றூரில் பிரம்மசேயாய்ப்
புரோகித னாகத்தோன்றி புக்கினன் இவனேயென்றோம்.

18. சொன்னோம். இதுவு மல்லாமல் ஊழ்வினையும் சேர்ந்தது. அதனாலும் குற்றம் உண்டு. புத்திர தோஷம் ஏற்படும். ஊழ்வினையின் தோஷத்தைக் கூறுவோம். திருவொற்றியூரின் அருகில் உள்ள ஒரு சிற்றூரில்

பிராமணக் குழந்தையாய்ப் புரோகித வமிசத்தில் தோன்றினன் இவனே என்றோம்.

19. திதிகளைப் புரட்டிச்சொல்வன் செய்மந்திரம் குறையாய்க் [கூர்வன்
அதிதிகட் கன்னமீவன் யாவர்க்கும் நல்லோனவன்
மதலைகள் மனைவியுண்டாய் வளமுள குடும்பியாகிப்
பதியினில் திருவுமோங்கிப் பாக்கிய முடையனாகி,

19. பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்துத் திதிகளைச் சொல்லுவான். செய்யும் மந்திரங்களைச் சரிவரச் சொல்ல மாட்டான். அகதிகளுக்கு அன்னதானம் செய்வான். எவருக்கும் நல்லவனவன் பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு வளப்பம் பொருந்திய குடும்பியாகி வீட்டில் லட்சுமீ கடாட்சம் ஏற்பட்டு பாக்கியங்கள் உடையவனாகி,

20. சுகமுடன் வாழ்ந்தஇன்னோன் சண்டன்தன் பதிக்குச் [சென்று
செகமதை விளக்கும்பிரம்ம தேவனால் வரியப்பட்டுத்
தகைமையாய் விசுவசேயாய்த் தானவன் வந்தானென்றோம்
இகபரம் பூசைசெய்யும் ஈசுவரி கேட்டிடாயே.

20. சுகமாக வாழ்ந்த இவன் எமலோகம் சென்றான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு விசுவ கர்மாவின் வமிசத்தில் உற்பவித்தான் என்றோம். இம்மை மறுமை பூசைப் பயன்களை அளிக்கும் ஈசுவரியே ! கேட்பாயாக.

21. முன்சென்மம் சிராத்தம்தப்பி மொழிந்துமே குறையாய் [மந்திரம்
இன்னவன் சொன்னதாலே இப்பிறப் பினிலேபுத்திரர்
அன்னவன் காணுகும் அதுவின்றிக் காரிஏழில்
தன்னிலே இரவிபார்க்கத் தன்மனை தோஷத்தாலே,

21. சென்ற ஜென்மத்தில் சிராத்தம் தப்பிப்போனதாலும், மந்திரங்களைச் சரியாகச் சொல்லாததனாலும், இந்த ஜன்மத்தில் புத்திர தோஷம் ஏற்படும். புத்திரப் பேறு இராது. அதுவு மல்லாமல் சனி இலக்கினத்திலிருந்து ஏழாம் வீட்டிலிருப்பதனாலும், அவனை சூரியன் பார்ப்பதனாலும் மனைவியின் தோஷத்தினாலே,

22. மதலைகள் தோஷமாகும் வரைகுறோம் அந்தச்சங்கை
அதிபதி பூர்வம்தன்னை வரைகுறோம் தவளைதெற்கில்
அதிகாரம் கெடிகள்பெற்ற அழகிய நகரம்தன்னில்
சதிசெய்யும் வைசியசேயாய்த் தானவளுதித்தாளென்றோம்.

22. புத்திரர்கள் தோஷமாகும். அந்தச் சந்தேகத்தை எடுத்துக் கூறுவோம். இவளுடைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். தவளை என்னுமிடத்திற்குத் தெற்கில் குற்றமுடையோர் அதிகாரம் பெற்ற அழகிய நகரத்தில் வஞ்சனை செய்யும் வைசியக் குழந்தையாய் இவள் உதித்தாள் என்றோம்.

23, வாசமாய் மதலையுண்டாய் வரனுண்டாய்ச் சேமமாகிப்
பாசமாய் வாழுநாளில் கூறுவோம் ஊழிதானே
ஆசையாய் முனிகருப்பன் அவள்கொல்லை வாசமாகும்
பூசைகள் பலிகள்வாங்கும் புராதன தெய்வமென்றோம்.

23. அவள் இவ்வாறு வாழ்ந்துவரும் காலத்தில், புருஷனையடைந்து, க்ஷேமமாகிப் பிரியமுடன் வாழ்ந்து வரும் காலத்தில், ஊழ்வினை ஒன்று ஏற்பட்டது. ஆசையாக ஒரு முனி கருப்பன் அவள் கொல்லைப்புறத்தில் வாழ்ந்து வந்தான். பலர் அதைப் பூஜைகள் செய்து வந்தார்கள். அது பலிகளும் வாங்கி வந்தது. அது பண்டைக் காலத்துத் தெய்வமாகும் என்றோம்.

24. அத்தெய்வம் தன்னை அனுசரிக் காமல்
வித்தகி வாழ்ந்தாள் விளம்பிற்று முனியும்
குத்தமாய் உந்தன் குழவிகள் யாவும்
சித்தமாய்க் கொல்வேன் செப்பிற்று கருப்பன்.

24. அந்தத் தெய்வத்தை அனுசரித்து வழிபாடுகள் செய்து வாராமல் இவள் வாழ்ந்து வந்தாள். இதைக் கண்ட முனி சொல்லிற்று. என்னை அனுசரிக்காமலிருந்ததனால், ஏற்பட்ட குற்றத்திற்கு உனக்கு இனி பிறக்கும் குழந்தைகளை யெல்லாம் கொல்லுவேன். இது நிச்சயம் என்று அக் கருப்பன் சொல்லுவான்.

25. மறுசென்மம் தோன்றி மதலைக ளின்றி
உரைகுவா யென்று உளரிஅச் சென்மம்
வரும்சுதர் யாவும் மரலியின் பதிக்கு
உரைந்தது என்றோம் உத்தமி கேளாய்.

25. அடுத்த ஜன்மத்திலும் குழந்தைகள் இல்லாமல் வாழ்வாய் என்று சொல்லிற்று. ஏற்பட்ட குழந்தைகள் எல்லாம் எமலோகம் சென்றது என்றோம். உத்தமியே! கேட்பாயாக.

26\. மங்கையும் முனிசோகத்தால் மரலியின் பதிக்குச்சென்று
துங்கமாய் அயன்குலத்தில் தோன்றின ளிவளேயென்றோம்
சங்கையாய் முன்தோஷத்தால் சந்ததி உதிக்காதென்றோம்
தங்கியும் தீதேயாகும் சங்கரி கேட்கலுற்றாள்.

26\. முனீசுவரனின் சாபத்தினால் சோகமடைந்து, எமலோகம் சென்று, பிறகு, துல்லியமான பிரம்ம குலத்தில் தோன்றினாளிவள் என்றோம். பழைய சங்கைப்படி புத்திர தோஷம் ஏற்பட்டுச் சந்ததி உதிக்காது என்றோம். அப்படித் தட்டுக் கிட்டுப் பிறந்தாலும் வியோகமாகும். இதைக் கேட்ட சங்கரி கேட்கலுற்றாள்.

27\. பெண்ணது ஒன்றுஎன்று பேசினீர் வரனுக்கேதான்
ஒண்ணது எவ்வார்தீர்க்கம் உரைவீர்கள் விபரமாகத்
திண்ணமாய் அஞ்சோன்உச்சம் தினகர னாகிநிற்க
விண்ணினில் தீர்க்கமென்றோம் வித்தகி தோஷத்தாலே,

27\. ஜாதகனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறக்கும் என்று சொன்னீரே. அப்படி ஒன்று பிறந்து எவ்வாறு தீர்க்கமா யிருக்கும்? அதன் விவரத்தைக் கூறுங்கள். திண்ணமாக இலக்கினத்திலிருந்து ஐந்தாமிடத்திற்கு உடையவன் உச்சஸ்தானத்திலிருக்க, அதுவும் சூரியனாயிருக்க, கிரக பலன் தீர்க்கமா யிருந்தாலும் இவளுக்கு ஏற்பட்ட தோஷத்தினாலே,

28\. பின்புதான் உதிக்கில்தீதாம் பேசுவோம் கிரிகைதானும்
கன்னிக்குக் கருமசாந்தி கழித்துமே தாம்பரத்தில்
அன்னையின் பீசம்தன்னை அறைந்துமே அணிவாளாகில்
மன்மதன் போலேபுத்திரர் வந்திடு மென்றுசொன்னோம்.

28\. பிற் காலத்தில் உதிக்கும் குழந்தைகள் இறந்து போகும். பரிகாரமாக ஏதாவது செய்து, அதாவது கரும சாந்திகள் செய்து, தாமிரத் தகட்டில் தேவியினுடைய பீஜாக்ஷரத்தை வரைந்து, பூஜை செய்து, பிறகு அணிந்து கொண்டால், மன்மதனைப் போன்ற (திவ்யரூபத்தை யுடைய) புத்திரன் பிறப்பான் என்று சொன்னோம்.

29\. சாந்திஎவ் விதமாய்ச்செய்யச் சாற்றுவீர் முனியேநீதான்
கூர்ந்துமே கலசம்தானியம் குருசுக நவமதாமே
ஏந்திழை முன்பாய்வைத்து ஓமங்கள் செய்துமேதான்
தீர்ந்துபின் பலிகள்தந்து சக்தியின் மூலம்தன்னை.

29\. முனி சிரேஷ்டரே! சாந்தி செய்ய வேண்டும் எப்படிச் சொல்லுவீர்? எத்தகைய சாந்தி செய்வது நலம்? கலசம் வைத்து, நவதானியங்களையும் படைத்து, தேவகுரு அசுரகுரு இவர்களுக்குப் பிரீதி செய்து, பெண்டாட்டிக்கு முன்னால் வைத்து, ஹோமங்கள் விதிப்படி செய்து, பின்

பலிகள் கொடுத்தால் தன் உடம்பிலிருக்கும் தோஷங்கள், பண்டை வினையின் சிரமம் இவைகள் தொலைந்து, தேவிக்கு,

30. சகஸ்திரம் செபித்துப்பின்னால் தகடுமே அணிந்துகொண்டு
பகையிலாச் சுக்கிரவாரம் பாவைஓ ராண்டுநோன்பு
தகைமையாய்ச் செய்வாளாகில் சந்ததி விருத்திதீர்க்கம்
பகையென்று செய்யாளாகில் பருகாது சுதர்கள்தானே.

30. சகஸ்ரநாம பூஜை செய்து, பின்னால் குலிசத்தில் பீஜாக்ஷரத் தகட்டை அடைத்து, அணிந்து, பின், யாதொரு கெடுதலுமில்லாத சுக்கிர வார விரதம் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஒருவருஷ காலம் செய்து வந்தால், அதுவும் திருப்தியாக நடந்தால், புத்திர பாக்கியம் நிச்சயமாய் ஏற்படும். அதில் பிசகு ஏதாகிலும் ஏற்பட்டால், பிள்ளைகள் பிறக்கா.

31. சொற்படிச் செய்வாளாகில் தோன்றிடு மாண்பாலொன்று
மைப்புடன் பெண்பால்ரெண்டு விளங்கிடும் தீர்க்கமாகக்
கற்புள மாதுர்சேதி கழறுவோம் துணைகள்ஏழு
தப்பிதம் யாவும்தானும் தனியளாய் ஒருபெண்தோன்றும்.

31. விதித்தபடி விரதங்களைச் செய்தாளானல், ஆண் பிள்ளைக் குழந்தை ஒன்று முதலிலும், பிறகு பெண் குழந்தை இரண்டும் விளங் கிடும், இது தீர்க்கம். இந்தக் கற்புடைய மாதின் செய்தி விவரங்களைக் கூறுவோம். கூடப் பிறந்தவர்கள் ஏழு பேர்கள். எல்லாரும் வியோக மான போதிலும் ஒரே ஒரு பெண் தன்னந் தனியே வாழ்வாள்.

32. அவளுட பூர்வம்தன்னை அறைகுறோம் காஞ்சிகீழ்பால்
இவளுமே செக்கான்வம்சம் எய்தியே பெருமைபூண்டு
நவமதில் காஞ்சிதன்னில் நாயகன் தன்பால்சேர்ந்து
சிவனடி யார்க்குஅன்பு செய்துமே சேயருண்டாய்,

32. அவளுடைய பூர்வோத்தரங்களைக் கூறுகிறோம். காஞ்சீபுரத் திற்குக் கிழக்கே செக்கான் குடும்பத்தில் பிறந்து பெருமை பெற்றுப் புதிய மதில்களையுடைய காஞ்சியில் (புதுக் காஞ்சீபுரத்தில்) புருஷனை அடைந்து சிவனடியார்களுக்கு அன்ன பானதிகள் அன்புடன் கொடுத்துதவியபின் புத்திரர்கள் ஏற்பட்டு,

33. வறுமைகள் இல்லாதாகி அறமதில் இச்சைவைத்து
உறன்முறைக் கினியளாகி உத்தமி சுகமாய்வாழ்ந்து
திருமகள் பேதியாலே சண்டன்தன் பதிக்குச்சென்று
பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தன ளிவளேயென்றோம்.

33. யாதொரு சிரமங்களுமில்லாமல் தருமம் செய்வதில் விருப்ப முற்று, சொந்தக்காரர்கள் மெச்சும்படி இவ்வுத்தமி சுகமாய் வாழ்ந்து, பேதி உபத்திரவத்தினால் எமலோகம் சென்று, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவள் இவளே என்றோம்.

35. பிறந்தவள் குணத்தைச்சொல்வேன் பின்புத்தி கபடு
[மில்லாள்
அறமனம் பொறுமைசாலி அதிர்ஷ்டமு முடையாளாகும்
உறன்முறைக் கினியளாகும் உத்தமி வாயுரோகி
நிறையவே குடும்பியாவள் நிமலியே மேலும்கேளே.

34. அவ்விதம் பிறந்தவளுடைய குணங்களைச் சொல்லுவோம். பின் புத்தி யுடையவள். கபடு இல்லாதவள். தருமத்திலிச்சை யுடையவள். பொறுமை யுள்ளவள். அதிர்ஷ்டசாலி. சொந்தக்காரர் விஷயத்தில் இனிமையாய் நடப்பாள். இவ்வுத்தமிக்கு வாயு உபத்திரவத்தினால் வியாதி ஏற்படும். நிறைந்த குடும்பத்தை யுடையவள். பார்வதியே! கேட்பாயாக.

35. தந்தமும் பெரிதாய்க்காட்டும் சாந்தமாய்ப் பேசவல்லாள்
வந்தவர்க் கன்னமீவள் வரைகுறோம் இவள்பின்சென்மம்
கந்தன்வாழ் தணிகைதன்னில் காதலி சத்திரியசேயாய்த்
தன்தன முடையளாகித் தானவள் வாழ்வாளென்றோம்.

35. பெரிய பற்களையுடையவள். சாந்தமாகப் பேசுவாள். வந்த விருந்தினருக்கு அன்ன மளிப்பாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். முருகக் கடவுள் வசிக்கும்படியான திருத்தணிகையில் க்ஷத்திரியக் குழந்தையாய் உதிப்பாள். தன்னுடைய பணம் காசுகள் ஏற்பட்டு அவள் வாழ்ந்து வருவாள் என்றோம்.

36. தந்தையின் பூர்வம்தன்னைச் சாற்றுவோம் கஞ்சிகீழ்பால்
முந்தியே பேரூர்தன்னில் உதித்தனன் வைசியசேயாய்த்
தன்தன மதிகமுண்டாய்ச் செட்டுகள் மிகவேசெய்து
தென்திசைத் தலங்கள்தோய்ந்து திருப்பணி அதிகம்
[செய்து,

36. தந்தையின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். காஞ்சிபுரத்தின் கிழக்கே, பழைய பட்டணத்தில், வைசியர் குடும்பத்தில் உதிப்பான். சுயார்ச்சித சொத்துக்கள் அதிகமாக உண்டாகி, வியாபாரங்கள் அதிகமாகவே செய்து, தெற்குத் திக்கிலுள்ள திவ்ய ஸ்தலங்களைத் தரிசித்து, தீர்த்தாடனங்கள் செய்து, கடவுளுக்கு வழிபாடுகள் அதிகம் செய்து,

37. மலர்வனம் வந்துபின்பும் மனைவிமைந் தருமுண்டாகி
உலகிலோர் மெச்சவாழ்ந்து உறைந்தனன் காலன்பக்கல்
தலைநான்கோன் வரியப்பட்டுச் செனித்தவ னிவனே
[யென்றோம்
நிலைமையாய் இவன்பின்சென்மம் நிகழ்த்துவோம்
[கேளும்தாயே.

37. மலர்வனம் வந்து, இன்புறும் மனைவி மைந்தர்கள் ஏற்பட்டு, உலகினர் மெச்சும்படி வாழ்ந்து வந்தான். பிறகு மரண மடைந்தான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவன் இவனே என்றோம். சரியாக இவனுடைய மறு ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

38. கோகர்ணம் தன்னிலேதான் குலாவுவான் இக்குலத்தில்
போகங்கள் அதிகமுண்டாய்ப் புரவலர் பக்கம்சேர்ந்து
பாகமாய்ச் செட்டுச்செய்து பாலகன் வாழ்வானுமே
தோகைவா கனனைப்பெற்ற சுந்தரி யாளேகேளாய்.

38. இவன் கோகர்ண க்ஷேத்திரத்தில் இக்குலத்தில் பிறப்பான். போக போக்கியங்களை அதிகமாக அனுபவிப்பான். அரசர்கள் பக்கம் அடைந்து, பக்குவமாய் வியாபாரங்கள் செய்து, இவன் வாழ்ந்து வருவான். மயில் வாகனனைப் பெற்ற சுந்தரியே! கேட்பாயாக.

39. முப்பது எட்டுஆண்டில் உயர்தேளின் மாதம்தன்னில்
செப்புவோம் தந்தைகெண்டம் தீர்ந்துபன் னீராருண்டில்
ஒப்புடன் கடகமாதம் உத்தமி மாதுர்தோஷம்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றாது.

39. முப்பத்தெட்டாவது வயதில், உயர்ந்த விருச்சிக (கார்த்திகை) மாசத்தில் இவன் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். இதற்கு பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு, ஆடி மாதத்தில், உத்தமியாகிய மாதாவின் கண்டம் ஏற்படும். கங்கையைத் தலையில் அணிந்தவனுடைய தேவியே! நாங்கள் கூறிய அருள் வாக்கு குறைவு படாது.

40. உதித்தசேய் அறுபானஞ்சில் உயர்கும்ப மாதம்தன்னில்
விதியினால் சூலையாலே வளர்பிறைச் சஷ்டிதன்னில்
அதிபன்தன் உடலம்வாடும் வரைகுறோ மிவன்பின்
[சென்மம்
நதியுயர் கயாவிலேதான் நாயகன் இக்குலத்தில்,

40. நம் ஜாதகனுக்கு அறுபத்தைந்தாம் வயதில், மாசி மாசத்தில், விதி வசத்தினுல் சூலை ரோய் ஏற்பட்டு, சுக்கில பட்சத்தில், சஷ்டி திதியில், மரண மடைவான். இவனுடைய அடுத்த ஜன்மத்தில், மகத்தான கங்கா நதி தீரத்திலே யுள்ள கயை என்னும் க்ஷேத்திரத்தில் இவன் இக்குலத்தில்,

41. பிறப்பனும் என்றுசொன்னோம் ப்ராசரும் கேட்கலுற்றார்
சிறப்புட னிச்சென்மத்தில் செய்தபுண் ணியங்களென்ன
உரைப்பீர்கள் என்றுகேட்க உத்தமன் இச்சென்மத்தில்
திருப்பணி ஆலயத்தில் செய்தபுண் ணியமதாலே,

41. பிறப்பான் என்று சொல்லுவோம். இதைக்கேட்ட பராசரும் கேட்கலுற்றார். சிறப்பான இந்த ஜன்மத்தில் இவன் செய்துள்ள புண்ணிய கருமங்கள் என்ன? அவற்றைச் சொல்லுங்களேன், என்று வினவ, இவ்வுத்தமன் இந்த ஜன்மத்தில் கடவுளுடைய கோவில்களில் விசேஷமான வழிபாடுகள் செய்து வந்ததனுல்,

42. வருகுவா னென்றுசொன்னோம் வகுக்குறோ மிவனின் [யோகம்
திறமையா யாறுமாண்டின் மேலேதான் யோகம் [சொல்வோம்
விரைவினில் புகரின்காலம் விளம்புவோம் விசேஷயோகம்
தரையது சேருமென்றோம் சந்ததி தன்னுல்யோகம்.

42. இவவிதம் ஜனிக்கலானுன் என்று சொன்னோம். இவனுடைய யோகபாவங்களை வகை வகையாகக் கூறுகிறோம். இவனுடைய ஆறுவது வயதிற்குமேல்தான் யோகம் ஏற்படும். விரைவாக, சுக்கிர தசையில், விசேஷமான யோகங்கள் ஏற்படும் என்று கூறுவோம். பூமிகள் சேரும் என்போம். சந்ததியினுல் யோகம் ஏற்படும்.

43. வந்திடும் சல்லியனில்லான் மாநிலம் அதிகம்சேர்ப்பன்
தன்தனம் முடையனுகும் சகலபாக் கியமும்சேர்ப்பன்
முந்திசொல் வளத்தைநீக்கில் மொழிகுறோம் விசேஷ [யோகம்
சந்ததி விருத்தியாகும் சங்கரி கேட்டிடாயே.

43. கடன் என்பதே கிடையாது. பூஸ்திதிகளை விருத்தி பண்ணுவான். சுயார்ச்சிதம் அதிகமாக உடையவன். சகலவிதமான பாக்கியங்களையும் சேர்ப்பான். பழைய செல்வம் நீங்கினுல் விசேஷ யோகம் ஏற்படும். சந்ததிகள் விருத்தியாகும். பார்வதியே! கேட்பாயாக.

44. செனித்திடு காலம்தன்னில் சனிதசை இருப்புத்தானும்
குனித்திடு ஈராருண்டும் கூறிய திங்களேழும்
தினமது இருப்பதாமே செப்புவோம் பலனையாங்கள்
தனமது சிலவேயுண்டு தன்பந்து சூதமுண்டு.

44. ஜனனகாலத்தில் சனி தசையில் இருப்பு வருஷம் பன்னிரண்டு, மாதம் ஏழு, நாள் இருபது. இதன் பலனைச் சொல்லுவோம். கொஞ்சம் தனமுண்டு. சொந்தக்காரர்களின் ஆசௌசம் உண்டு.

45. தேகமே நலிவும்காணும் சிதைந்திடும் மாதுர்வர்க்கம்
பாகமாய்த் தந்தைவர்க்கம் பகருவோம் சூதமுண்டு
சேகரம் துணைவர்சேதம் சிற்சில நிந்தையுண்டு
தோகையே குடும்பம்வேறு சொல்லுவோம் விபரம்
[ரெண்டில்.

45. தேகத்தில் நலம் குறையும். மாதாவின் குடும்பத்தினர் வியோகமடைவார். பக்குவமாய்த் தகப்பன் குடும்பத்தைப்பற்றிக் கூறுவோம். ஆசௌசமுண்டு. சொத்துக்கள் சேதமாகும். சகோதரர்களும் சேதமாவர். சிற்சில அவதூறு வார்த்தைகள் ஏற்படும். குடும்பமும் வேறாகும். இதன் விவரங்களை எல்லாம் இரண்டாம்பாகத்தில் எடுத்துரைப்போம்.

ஜாதகம் 54

1. தகரது சென்ம மூன்றினில் மதியும்
சனிராகு நாலினில் தங்கப்
பகலவன் புந்தி ஏழினில் நிற்கப்
பார்க்கவன்[1] பொன்னனு மெட்டில்
செகமதுக் குடையோன் நவமதில் ஞானி
தசமத்தில் கோள்களு மிருக்கப்
புகலுவீர் பலனை அத்திரி சொல்வார்
பெண்ணது சென்னமே யாகும்.

1. சந்திரன் மிதுனத்திலும், சனியும் இராகுவும் கடகத்திலும், சூரியனும் புதனும் துலாத்திலும், குருவும் சுக்கிரனும் விருச்சிகத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது மகரத்திலும் தங்கும்படியான இவ்வித கிரகநிலை கொண்ட ஜாதகத்திற்குண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்க, அத்திரி மகரிஷி சொல்லுவார். இது பெண்ணின் ஜாதகம்.

	லக்கினம்		சந்திரன்
	இராசி சக்கரம்		சனி ராகு
கேது			
செவ்வாய்	குரு சுக்கிரன்	சூரியன் புதன்	

2. ஆகுமே வடதென் வீதியே யென்றோம்
அருக்கனின் வாசலாம் தாயே
தோகையாம் கன்னி[2] அருகினில் தங்கும்
சிங்கள நாடதா மென்றோம்
பாகமாய் அன்னை தந்தையின் யோகம்
பாலர்கள் துணைவர் யோகம்
தோகையின் முன்பின் சென்மங்கள் யாவும்
செப்புவோம் கோள்களை ஆய்ந்து.

---

1. சுக்கிரன்
2. கன்னியாகுமரி

2. அவள் இருக்கும் வீடு வடக்குத்தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வாசலுடையதாகும். தாயே! அவள் பிறந்த ஊர் சிங்களநாட்டில் உள்ளது. அது கன்னியாகுமரிக்கு அருகில் உள்ளது. பக்குவமாய், தாய்தந்தையர் யோகங்களையும், இவளுடைய முன்பின் ஜன்மங்களையும், மற்றவைகளையும் நவக்கோள்களை ஆராய்ந்து கூறுவோம்.

3. ஆயவே தந்தை துணைவர்க ளாண்பால்
அணுகிடு மூன்றதாம் கன்னி
நேயமா யொன்றே தீர்க்கமா யிரெண்டு
நஷ்டமாய்ப் பிதாகுணம் கேளாய்த்
தீயரை வசியம் செய்குவான் வணிபம்
திருத்தமா யுரைத்திடு வானும்
காய்கனிப் பிரிய னுபாயமாய் வார்த்தை
கடவுளின் பத்தியே பூண்பன்.

3. இவள் தன்னுடைய தாய்தந்தையர்களுக்கு மூன்றாவது குழந்தையாய்ப் பிறப்பாள். ஆண் சகோதரர்கள் உண்டு. ஒருவன் தீர்க்கம், இருவர் நஷ்டமாகும். பிதாவின் குணத்தைக் கேட்பாயாக. கெட்ட பேர்களைத் தான் வசியம் செய்குவான். வியாபாரம் வெகு நன்றாகச் செய்வான். காய் பழங்கள் இவைகளைச் சாப்பிடுவதில் பிரியப்படுவான். உபாயமாய் வார்த்தைகள் பேசுவான். கடவுளிடம் பக்தி பூண்டவன்.

4. பன்னியே புகல்வன் பார்மன்னர் நேசம்
பருகிடு முஷ்ணமே யென்றேம்
சொன்னதைக் காப்பன் துறவிகட் கன்னம்
சுகதுக்க மிரண்டுளான் தூயன்
அன்னையால் சிலது கொடுமையே எற்பன்
அறுமுகன் பத்தியே பூண்பன்
சொர்ணமும் சேர்ப்பன் செலவுகள் உடையான்
செப்புவோம் பூருவ மதனை.

4. பக்குவமாகப் பேசுவான். உலகஅரசர் சிநேகமுண்டு. உஷ்ணத்தினால் வியாதி ஏற்படும்; சொன்னசொல் தவறமாட்டான். சிவனடியார்களுக்கு அன்னமளிப்பான். சுகமும் துக்கமும் அனுபவிப்பான். சுத்தமானவன். ஆறுமுகக்கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். பொன்னும் சேர்ப்பான். செலவுகளும் செய்வான். இவனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம்.

5\. மதமேனை எரித்தோன் வாழு மையூர்[1]
மாநகரின் தன்னிலே கங்கைச்
சுதனுமாய்த் தோன்றி வறுமை களின்றித்
தொல்புவி கிருஷியே செய்து
விதவித லாபம் பாரியு மதலை
விளங்கிவாழ் வினைகளைக் கேண்மோ
துதிசெய்து வணிபன் பொருளதைப் பெற்றுத்
தொல்புவிச் செட்டுமே செய்து,

5\. மன்மதனை எரித்த பரமசிவன் வாழும் மையூர் என்ற மாநகரில், வேளாளர்குலத்தில் தோன்றி, வறுமைகளில்லாமல், பண்டைப் பூஸ்திதிகளைப் பண்படுத்தி, கிருஷிசெய்து, விதவிதமாக லாபமடைந்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, வாழ்ந்துவரும் நாளில், ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைக் கேளுங்கள். ஒரு வாணிபனைத் தோத்திரம் செய்து கைப்பொருள் பெற்று வாணிபம் செய்து வரும்போது,

6\. செய்ததில் நட்டம் சேர்ந்து வணிகன்
சிந்தையும் கலங்கியே வாழ
உய்வகைத் தந்தோ ஹிரணியம் கேட்க
உன்பொருள் பின்புநான் தாரேன்
ஐயமில் லாமல் இம்மொழி உரைக்க
அரசர் முறிதனை நீட்டி
நெய்மன மாக இல்லம்கைக் கொண்டான்
நலிந்தவன் மனம் திகிலடைந்து,

6\. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது வாணிபன் மனக்கலக்கமுற்று வாழ்ந்துவர, வியாபாரம் செய்து உஜ்ஜீவிக்கப் பொருள் தந்ததைத் திருப்பிக்கேட்க, உன்னுடைய பொருளைப் பிறகு நான் தருகிறேன் என்று சந்தேகமறக் கூறும் காலத்தில், அரசாங்க நியாயஸ்தலத்தில் எட்டுப்பத்திரம் எடுத்துக்காட்டி, பொய் ஆதாரவைக்கொண்டு, கெட்ட மனத்துடன் வாணிபனின் இல்லத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மனம் நலிந்து அவன் திகிலடைந்து,

---

1\. மையூர் = திருக்கோடிக்குழகர். காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இஃது ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திர வெண்பாவாலும் சம்பந்தவாகீசரது தேவாரத்தாலும் பக்திப்பெருக் கெழப்பாடப்பட்டது.

மையார்தடங்கணுயகி—அம்மன் பெயர். திருக்கோடிக்குழகரிலே கோயில் கொண்டிருக்கும் தேவி.

7. அடைந்திடு மில்லம் பறித்திடு பாவி
அணுகிய பின்சென்ம மதனில்
விடவிழி அன்னை யாலது நிந்தை
விளங்கிடும் முன்போல்வர் வழக்குத்
தொடர்ந்திடு மென்று செப்பியே சென்றார்
சேர்ந்தது வினைகளு மென்றோம்
மூடவனும் காலன் பதிக்குமே இன்னோன்
மேவிமே குறைதலை வரிய,

7. ஏற்பட்ட வீட்டைக் கைப்பற்றின பாவிக்கு, அடுத்த ஜன்மத்தில் விஷப்பார்வையுடைய தாயினால் அவதூறு வார்த்தைகள் பரவும். முன் போலவே நியாயஸ்தலத்தில் வழக்குகள் ஏற்பட்டுத் தொடரும் என்று சொல்லி, சாபமளித்துச் சென்றான். உடனே இவனைச் சேர்ந்தன வினைகளெல்லாம். காலன்பதிக்கு இம்மூடவன் செல்லலானான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

8. வரியவே வந்தான் ஏழைசொல் போலே
மருவிடும் இக்குணத் தானுக்குக்
குரியஇம்மாது குலவுவாள் துணைகள் கூறுவோம்
ஆண் துணை இரெண்டு
அரிவையின் முன்னோர் அணுகிடும் தாயே
அவர்பலன் சிறந்தமை யூகி
பெருகிடும் கல்வி அரசனு லுய்வன்
புன்செகன்[1] தனை துதிப் பவனும்.

8. அவ்வேழை சபித்தபடியே, இக்குலத்தில் இந்த ஜன்மத்தில் உதித்தனன் இத்தகைய குணத்தவனும். அவனுக்கு நம் ஜாதகி பெண்டாட்டியாய் ஏற்படுவாள். அவளுடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரர் இரண்டு பேர்கள். இவர்கள் இவளுடைய தமயன்கள். அவருள் மூத்தவனுடைய பலன் இனிக் கூறுவோம். சிறந்த பெரிய படிப்பாளி. மையூரிலே அரசாங்கத்தில் உத்தியோகம் செய்வான். சங்காரக்கடவுளாகிய பரமசிவனைத் துதிப்பானும்.

9. துதிப்பவர்க்கு இவன் செவித்தலூ ரடையான்
செல்லுவான் சொங்கின்[2] மேலென்றோம்
அதிகமாய்ப் புகழும் பாரியு மென்றே
அவனுக்குச் சுதர்களும் ஆண்பால்

---

1. பினாகன் = பரமசிவன்
2. சுற்றம்

சதமுடன் மூன்று கன்னிகை இரெண்டு
சாற்றினோம் தீர்க்கமாய்த் தாயே
நிதியது பின்னால் நேர்ந்திடு மென்றோம்
நேமியில் வறுமையே காணான்.

9. கடவுளைத் துதிப்பவருக்குப் பிறவிப்பெருங்கடல் நீந்தி, பகவானுடைய பாதத்தைச் சேர்வர். சுற்றத்தவர்களில் மேலாக வாழ்வான். அதிகமாகக் கீர்த்தி பெறுவான். பெண்டாட்டி ஒருத்திதான். ஓர் ஆண் குழந்தையும் ஒழுங்காக மூன்று கன்னிகைகளுமாக நான்கு குழந்தைகள் உண்டு என்றோம். இது தீர்க்கம். தாயே! சொத்துக்கள் பின்காலத்தில் நேரிடும் என்றோம். உலகினில் தரித்திரத்தை அனுபவியான்.

10. வறுமையா மாறில் வனவாச முடையான்
மறுவுவான் ஞாதியின் பக்கல்
குறைவிலான் பின்னோன் குணமதைப் புகல்வேன்
புன்சிரிப் புடைய மொழிகள்
இருவித மென்றோம் இடுக்கமாம் குணத்தன்
இயம்புவான் கட்டு வார்த்தைகளைப்
பெருகிடும் கல்விபின் புத்தி யுடையோன்
பேதையர் மோகனு மென்றோம்.

10. ஆறும் பிராயத்தில் வறுமையாய் வனவாசமு மடைவன். சொந்தக்காரரிடம் போய்ச் சேருவான். எல்விதக் குறைவுமில்லாதவன். தம்பியின் குணத்தைக் கூறுவோம். புன்சிரிப்புடன் பேசுவான். இரண்டு வித குணங்களுமுண்டு. சூதுவாதுள்ளவன். பொய் வார்த்தைகளைப் பேசுவான். படிப்பு அதிகரிக்கும். பின்புத்தி யுடையவன். ஸ்திரீலோலனுயிருப்பான் என்றோம்.

11. [1]மோகினி வித்தை மேன்மையோ றுறவு
மெல்லியு மொன்றதாய் விளம்பும்
ஆகிய சுதர்கள் ஆணது மூன்று
அம்பிகை ஒன்றுமே அறைந்தோம்
சாகிற மட்டும் அரசனு லுய்வன்
தந்தையார்ச் சித்தையே வேண்டாம்
நாகரி கத்தன் தனத்தின்மேல் பிரியன்
நாயகி கேட்டிடு வாயே.

---

1. மோகினி = தாருகாவனத்தில் சிவபெருமான் மிக்க அழகான வடிவங் கொண்டபோது, விஷ்ணுமூர்த்தியானவர் எடுத்த மோகினி வடிவு; அல்லது அப்ஸரஸ் ஸ்திரீகளில் ஒருத்தி. இவள் பூஞ்சோலை முதலிய இடங்களிலும் காமுகர்கனவிலும் தோன்றி அவர்களை உருக்குலைக்குந் தொழிலையுடையவள். காமத்தால் மயங்கச்செய்தல்.

11. பிறரை மயக்கும்படியான வித்தைகளில் தேர்ச்சிபெற்ற மேன்மை தங்கிய பெரியோரைச் சிநேகம் செய்வான். இவனுக்குப் பெண்டாட்டியும் ஒருத்திதான் என்று சொல்லுவோம். ஆண் குழந்தைகள் மூன்றும், பெண் ணொருத்தியும் பிறப்பார்கள் என்போம். சாகும்வரை அரசாங்கத்தில் உத்தியோகம் செய்வான். தகப்பனின் சொத்தே தேவையில்லை. நாகரிக முடையவன். பணத்தாசை பிடித்தவன். பார்வதியே! கேட்பாயாக.

12. வந்தவள் குணத்தை வரைகுறே மினிமேல்
மங்கள வார்த்தையே புகல்வள்
சந்தேக மனத்தள் சிவந்தமை யூகி
சற்பாத்திரி கோபமும் சாந்தம்
நிந்தைகள் ஏற்காள் தரித்திர மடையாள்
நேமியில் நல்லவ ளாவள்
தந்தங்கள் பிரியம் பணிகள் மேலிச்சை
காதலி விரதமே ஏற்பள்.

12. இனிமேல் ஜாதகியின் குணங்களை எடுத்துரைப்போம். மங்கள கரமான வார்த்தையையே சொல்லுவாள். சந்தேகமுள்ள மனதையுடைய வள். சிவந்த நிறமுடையவள். நல்ல புத்திக்கூர்மையுள்ளவள். நல்ல பாத்திரமானவள். கோபமுடையவள். சாந்தமுமுடையவள். பிறர் தன்னை நிந்தித்துப் பேசுவதைப் பெறமாட்டாள். தரித்திரமேயில்லை. உலகினில் நல்லவளாவள். பற்களைச் செவ்வனே காப்பாற்றுவாள். பூஷணங் களிலாசையுள்ளவள். விரதங்களை அனுஷ்டிப்பாள்.

13. ஏற்பவற் கீவள் ஈன்ற அன்னையில்
எய்தாது சுகமது என்றேம்
மார்க்கமாய் வேறுதாய் தந்தை யாலே
மங்கையும் சுகமுறும் வரனல்
ஆர்க்கவே அணுகும் ஈரெட்டு ஆண்டுள்
அறைந்தனம் சுபங்களு மென்றேம்
தீர்க்கமாய்த் தந்தை வர்க்கத்தில் நேரும்
செப்புவோம் வரன்குண மதனை.

13. ஏழைகளுக்குத் தருமம் செய்வாள். பெற்ற தாயால் இவளுக்கு யாதொரு சுகமும் இல்லையென்றேம். சொந்தத்திலே மற்றவர் கள் தாய்தந்தையர் போலவே இவளைப் பாதுகாத்து வருவார்கள். அவளுக் கும் சௌகரியங்கள் ஏற்படும். புருஷனால் இன்னும் அதிக நன்மைகள் ஏற்படும். கலியாணம் பதினாறுவது வயதில் ஏற்படும். சுபங்கள் ஏற்படும் என்றேம். கலியாணமும் பிதாவின் ஞாதிவர்க்கத்தில் ஏற்படும். புருஷனின் குணங்களை எடுத்துரைப்போம்.

14. மதனையே யொப்பாம் மருவிடும் கல்வி
மன்னர்கள் பேட்டியே பூண்பன்
நிதியதைச் சேர்ப்பன் அன்னிய ரிடத்தில்
நேருவான் யூகைசா லியுமாம்
சதியிலா மனத்தன் சான்றோர்கள் புத்தி
சண்முகன் பத்தியே பூண்பன்
[1]அதிதிபோல் ஞானம் அருளுவான் ஈகை
அவனியில் வறுமையே அடையான்.

14. மன்மதனைப் போலிருப்பான். வித்தைகளைக் கற்பான். அரசர்களுடைய பேட்டியே காண்பான். சொத்துக்களைச் சேர்ப்பான். பிறரிடத்தில் உடன்படுவான். புத்திக்கூர்மையுள்ளவன். சூதுவாதில்லாத மனதையுடையவன். பெரியோர்களுடைய புத்திமதியை ஏற்பான். ஆறுமுகக் கடவுளிடத்தில் பக்தி கொள்ளுவான். வித்தியாதானம் செய்வான். தர்மிஷ்டன். பூலோகவாழ்வினில் தரித்திரத்தையே அடையமாட்டான்.

15. புதல்வர்கள் ஒன்று பொருந்திடும் கன்னி
புகலுவேன் இரெண்டுமே யென்றோம்
இதுவிதம் தீர்க்கம் இயம்புவோம் பூர்வம்
இலங்கையில் [2]சிவனடி கிரியில்
ததிநெய்பால் கொள்ளும் கோகுலம் தன்னில்
செனித்தனள் வரனுமே அவ்வூர்
அதிகமாம் சுதர்கள் அணுகியே வாழ்ந்து
அறுமுகன் மாரியின் பத்தி,

15. ஆண் பிள்ளை ஒன்று பொருந்திடும். நாலு பெண்கள் பிறக்கும். இவர்கள் தீர்க்கம். இவளுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். இலங்கைத்தீவில் சிவனடிகிரியில், தயிர் நெய் பால் விற்கும் கோகுலத்தில் ஜனித்தனள். புருஷனுமே அவ்வூரிலேதான் ஏற்பட்டான். அதிகக் குழந்தைகளைப்பெற்று வாழ்ந்து, ஆறுமுகக்கடவுளிடமும் தேவியினிடமும் தீவிரமான பக்தி பூண்டு,

---

1. அதிதி = காசிபப்பிரம்மாவின் மனைவிகளிலொருத்தி.

2. உதயகாலத்தில் பகவானுடைய பாததரிசனம் செய்யும் மலை. இன்றைக்கும் பலர் அம்மலை உச்சியிலிருக்கும் சிவனுடைய பாதத்தைத் தரிசிக்க யாத்திரை செய்கின்றனர்.

16. பத்தியே கொண்டு வரன்முன்னே காலன்
பதிக்குமே சென்றுமே இன்னாள்
வித்தகர் எழுத விளங்கினு ளென்றோம்
மேதினில் ஆதியில் வறுமை
பெத்துமே பின்பு பிரபல குடும்பி
புகலுவோம் சாதகி தனக்குச்
சுத்தமு முடையாள் வரனுக் கிசைந்தோள்
தேவியே கேட்டிடு வாயே.

16. புருஷனுக்கு முன்பே மரணமடைந்து, பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு விளங்கினாள் என்றோம். உலகவாழ்க்கையில் ஆரம்பத்தில் சிரமம் அடைந்து, பிறகு பிரபல குடும்பியாகி, இவள் வாழுங்காலத்தில், சுத்தமடைந்தவளாவள். புருஷனுக்குப் பிரியமானவள். தேவியே! கேட்பாயாக.

17. அன்னையின் குணத்தை அறிவிப்போம் தாயே
ஆளனுக் கினியளாய் வாழ்வள்
தன்சொலு மடக்கம் இளமன துடையாள்
தன் துணை யானது ஒன்றே
பின்புத்தி உடையாள் பூர்வம் புகலுவோம்
பெண்சிறை வைத்த தொருநாட்டில்
கன்னிகை ரெட்டி குலமதில் தோன்றிக்
கனத்ததோர் குடும்பியாய் வாழ்ந்து,

17. தாயின் குணங்களை அறிவிப்போம், தாயே! புருஷனுக் கினியளாய் வாழ்வள். அடக்கமான பேச்சுடையவள். இளகிய மன முடையவள். அவளது துணைவன் ஒருவனே. பின்புத்தி உடையவள். அவளுடைய பூர்வம் கூறுவோம். பெண்கள், தங்கள் கற்பைக்காப்பாற்றும் ஒரு நாட்டில், ரெட்டி வமிசத்தில் பிறந்து, பெரிய குடும்பியாக வாழ்ந்து, ஒரு ஸ்திரீயைப் பார்த்து, பலவிதமாக அர்த்தம் கொள்ளும் சிலேடை வார்த்தைகளைச் சொன்னாள்.

18. மாதுமேல் சிலேடை[1] வார்த்தைக ளுரைத்தாள்
மங்கையும் திகிலது கொண்டு
ஓதுவாள் நிந்தை உரைத்திட்ட பாவி
உரையும்பின் சென்மத்தி லென்போல்

---

1. சிலேடை = ஓலங்காரம். அஃது இரண்டர்த்தமுள்ளது. செம்மொழிச்சிலேடை, பிரிமொழிச்சிலேடை என்ற இரு பிரிவினையுடையதாய், ஒரு வடிவாக நின்ற சொற்றொடர் இது.

காதலி யென்று பலநகை செய்யக்
காசினில் வாழ்குவாய் நீயும்
தீதான குணத்தால் மாரிமுன் செப்பித்
தெளிந்தனள் கரத்தினுல் தூசை.

18. இந்தச் சிலேடைச் சொற்களைக் கேட்ட மாதுவும் திகிலடைந்து சாபம் கொடுக்கலானாள். என்னைப் பார்த்து நிந்தைமொழிகளைக் கூறிய பாவி, இனி வரும் ஜன்மத்தில் என்னைப்போல் காதலியென்று பலர் நகைப்புக் கள் செய்யும்படி நீயும் உலகத்தில் வாழ்வாய். இப்படிக் கோபத்துடன் சாபமொழிகளை மாரியம்மனுக்கு முன் சொல்லி, தெருவிலுள்ள மண்ணைவாரி இறைத்தாள்.

19. கன்னிகை சாபம் கலந்தது என்றோம்
கனமிலார் சாபங்க ளொன்று
பின்னமாய்ச் சேர்ந்து அந்திய காலம்
புக்கிற்றுப் பார்சுவ வாயு
துன்னிய காலன் நாடதைச் சேர்ந்து
சிரநான்கோன் வரியவே வந்தோன்
முன்மாது சாபம் மேவிடும் தாயே
விளங்காது துணைகள் பெண்விருத்தி.

19 அம்மாதின் சாபம் இவளைச் சேர்ந்தது என்றோம். ஏழைகளுடைய சாபமொன்று இடைஞ்சலாய் இவளைச் சேர்ந்தது. அந்தியகாலம் வந்தது. பார்சுவவாயுவின் உபத்திரவம் ஏற்பட்டது. மரணமும் ஏற்பட்டது. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவள் உலகினில் வந்து பிறந்தாள். முன்பு சொன்ன மாதின் சாபம் இவளைச் சார்ந்தது. சகோதரம் விளங்காது. பெண்கள் விருத்தியாகும்.

20. குலமதில் குற்றம் கூறுவோம் தாயே
கோதையும் வறுமையை அடையாள்
தலைவியின் சென்மம் சாற்றுவோம் யாங்கள்
சண்முகன் வாழ்பதி தன்னில்
நிலைமையாய்த் தீயின் குலமதி லுதித்து
நேமியில் வறுமையே காணுள்
மலையிறை மகளே ஈரஞ் சாண்டிலே
மடிவளே அன்னையே யென்றோம்.

20. குலத்தினில் குற்றம் கூறுவோம், தாயே! இவளும் வறுமைத் துன்பத்தை யடையமாட்டாள். தலைவியின் பின் ஜன்மத்தை நாங்கள் கூறுவோம். முருகக்கடவுள் கோவில்கொண்டருளும் ஸ்தலத்தில், வன்னியர் குலத்திலுதித்து, உலகினில் சகல சம்பத்துக்களுடன் வாழ்ந்து, பத்தாவது வயதில் மடிவாள். தாயே! கேட்பாயாக.

21. என்றதோர் தந்தை ஏழாண்டு தன்னில்
ஏகுவான் காலநா டதனை
இன்றவள் தனக்கு ஏழெழான்ப தாண்டில்
எழில்வீணை மாதத்தில் ஏகும்
மன்றலின் கணவன் அம்பத்தா றுண்டில்
மடிவுறும் பின்சென்மம் கேளாய்க்
குன்றுதோ றுடல் செந்திமா மலையில்[1]
குதிப்பளாம் முதற்குலம் தன்னில்.

21. இவள் தந்தை இவளது ஏழாவது வயதில் எமலோகம் செல்லுவான். இவளுக்கு அறுபத்துமூன்றும் வயதில், விளங்கிய ஆனி மாதத்தினில், மரணம் ஏற்படும். இவளுடைய புருஷன் இவளுடைய ஐம்பத்தாறும் பிராயத்தில் மரணமடைவான். இவளுடைய அடுத்த ஜன்ம விவரத்தைக் கேட்பாயாக. முருகக்கடவுள் குன்றுதோறுடம்படியான செந்தின்மாமலையில் ஜனிப்பாள். அதுவும் பிராமணகுலத்தில் உதிப்பாளாகும்.

22. செயமுனி அதனைக்கேட்டுத் திடுக்கென உரைக்கலுற்றார்
பயமிலாச் சகடைதோஷம் பற்றியே யிருப்பதாலே
வியமாகு மெட்டாண்டுக்குள் விருதரும் புகலுகின்றார்
நயமுட னிரண்டேழோனும் நற்புகழ் ஆகியேதான்.

22. ஜயமுனி அதனைக் கேட்டுத் திடுக்கிட்டுச் சொல்லலுற்றார். பயமில்லாத சகடைதோஷம் ஜாதகியைப்பற்றி இருப்பதனாலே எட்டாம் வயதிற்குள் வியோகத்தையடைவாள் என்று விருதமகரிஷி சொல்லுகின்றார். நன்மையாக, துவிதீயசப்தமாதிபதி (இரண்டுக்கும் ஏழுக்குமுடையவன்) சுக்கிரன் நல்ல புகழ் பெறும்படியான,

---

1. செந்தில் = திருச்செந்தூர். அநேகப் பிரபந்தங்களால் புகழப்பட்ட இத்தலம் முருகக்கடவுளது படைவீடுகளில் ஒன்று. குமாருருபரர் தமது ஊமைத்தன்மை நீங்கப்பெற்ற தலம் இதுவே.

23. இருநான்கி லிருப்பதாலே இவர்தசை காலம்தன்னில்
திருமகள் தனக்குக்கெண்டம் செப்பலாம் மத்திலேதான்
வருகினும் நிவிர்த்தியாகும் மறையவன் பூர்வம்தன்னில்
உரைந்ததோர் தசையில்கன்னி உதித்ததால் வயதுதீர்க்கம்.

23. இலக்கினத்திற்கு எட்டாமிடத்திலிருப்பதனாலே, அவனுடைய தசையின் காலம் நடக்கும்பொழுது ஜாதகிக்குக் கண்டம் ஏற்படும் என்று சொல்லலாம். மத்தியகாலத்திலே கண்டம் ஏற்பட்டாலும் வந்து நிவிர்த்தியாகும். வியாழபகவானுடைய தசையின் ஆரம்பகாலத்தில் இவள் பிறந்ததனால் இவளுக்குத் தீர்க்காயுசுதான்.

24. நிலமகன் எட்டோனுகி நிகர்தனு வதனில்நிற்கத்
தலைவிக்கு வயதுதீர்க்கம் தசஆண்டுள் தந்தைதாயும்
இலகுவார் காலனூடு வித்தகி வேறூர்செல்வள்
பலனது இவ்வாருகும் பார்வதி கேட்டிடாயே.

24. பூமிக்கு அதிபதியாகிய செவ்வாய் தனுசில் தங்க, ஜாதகிக்கு வயது தீர்க்கம். பத்து வயது ஆவதற்குள் தாய்தந்தையர் எமபட்டணம் சேர்வர். இவளும் வேறு ஊர் செல்வாள். இவைதான் இவளுடைய பலாபலன்களாகும். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 55

1. பிறைமானில் குருவும்சாடி புதன்வெள்ளி பணியும்நந்தி
தரைமகன் பரிதிவீணை சனிசீயம் கேதுதேளில்
திருவோணம் ரெண்டாம்பாதம் சென்மமும் மேடமாக
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்கும்போது,

1. புதனும் சுக்கிரனும் இராகுவும் இடபத்திலும், செவ்வாயும் சூரியனும் மிதுனத்திலும் சனி சிம்மத்திலும், கேது விருச்சிகத்திலும், சந்திரன் மகரத்திலும், குரு கும்பத்திலும் நிற்க, இவ்வித கிரக நிலைகளும் திருவோண நட்சத்திரம் இரண்டாம் பாதம் கொண்டதுமான இந்த மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலன்களைக் கூறுங்கள், என்று பார்வதிதேவி சப்தரிஷிகளைப் பார்த்து வினவ,

	லக்கினம்	புதன் சுக்கிரன் ராகு	செவ்வாய் சூரியன்
குரு	இராசி சக்கரம்		
சந்திரன்			சனி
	கேது		

2. அத்திரி முனிவர்சொல்வார் ஆணது செனனமாகும்
வித்தகன் இல்லம்சொல்வேன் மேல்வாடை வடதென்வீதி
உத்திரமீசன் கோஷ்டம் ஓரானை முகத்தோன்தென்பால்
சித்தசன் தந்தைமாரி தங்கிடும் மேல்பால்தன்னில்.

2. அத்திரிமுனிவர் சொல்லலுற்றார். இஃது ஆண்மகனுடைய ஜாதகம். அவனுடைய வீட்டின் விவரம் கூறுவேன். அது வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப்பார்த்த வாசலுடையது. வடக்குப் பக்கத்தில் பரமசிவனின் கோவிலும், பிள்ளையார் கோவிலும் உண்டு. அம்மன் கோவில் சுவாமி கோவில்களும் மேற்குப்பாகத்தி லுள்ளன.

3. இன்னமும் பலதேவாச மிலகிய பேரூராகும்
அன்னவன் சேஷ்டனுகை அருளுவ னென்றுசொல்வோம்
மன்னவன் குடும்பச்சேதி வரைகுறே மின்னூல்தன்னில்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

3. இன்னமும் பலவிதமான தேவதைகள் வசிக்கும்படியான பெரிய ஊராகும் அவ்வூர். ஜாதகன் மூத்தகுமாரனாய்ப் பிறப்பான் என்று சொல்லு

வோம். இவனுடைய குடும்பச்செய்தி விவரங்களை இந்தப்புஸ்தகத்தில் எடுத்துரைப்போம். உத்தமனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைஆண்காணுன் சக்தியு மொருத்தியாகும்
அந்தப்பெண் மட்டிலேகும் அவன்தனி யாகவாழ்வன்
எந்தக்கா ரணத்திறுலே இவன்தனி சொன்னீரையா
மைந்தனும் அஞ்சில்நிற்க வரைந்தனம் அந்தச்சங்கை.

4 தந்தைக்குக் கூடப்பிறந்த சகோதரனில்லை. சகோதரி ஒருத்தி யுண்டு. அவன் தனிமையாக வாழ்வான். அவன் தனியாகப் போவான். எந்தக் காரணத்திஞல்தான் அவன் தன்னந்தனியே வாழ்வான் என்று சொன்னீரோ? சனிபகவானும் ஐந்தாமிடத்திலிருக்க, அந்தச் சந்தேகத்தைப் பற்றி எடுத்துக் கூறினேம்.

5. குணமது புகழ்வீரையா குஞ்சர நடையுமாகும்
தணிவுள குணமுமுண்டு சர்ப்பம்போல் கோபமேற்பன்
வினையதை ஒருவர்க்கெண்ணுன் மேதினி சேர்ப்பாஞகும்
கணிகையர் மோகனுவன் கல்விமா னீகையாளன்.

5. அவனது குணங்களைக் கூறுங்கள் ஐயா. மத்தகஜம்போல் நடப்பான். சாந்தமான குணங்களுண்டு. கோபம் ஏற்படும்போது பாம்புபோல் சீறுவான். பிறருக்கு யாதொரு தீங்கும் இழைக்கமாட்டான். நிலங்களை விருத்திசெய்வான். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொண்டவன். நல்ல படிப்பாளி. தர்மிஷ்டன்.

6. ஊகவான் நுணுக்கம்தேர்வ னுண்மையாம் மனத்தனுகும்
பாகமாய்ப் பேசுவானும் பதர்குணம் இல்லாஞகும்
நாகரிகங்க ளுள்ளான் நற்றந்த ரோகமுள்ளான்
போகபாக்கியங்கள்பூர்வம் பெறுவனு மென்றுசொல்வோம்

6. புத்திக்கூர்மை யுடையவன். விஷயங்களின் நுட்பங்களை ஆராய்ந்து அறிவான். சத்தியத்தை மனதில் கொள்ளுவான். பக்குவமாய்ப் பேசுந் திறமையுள்ளவன். பிச்சைக்காரபுத்தி இல்லாதவனுகும். நாகரிக வழக்கங்களை யுடையவன். பல்வலி யுடையவன். போகபோக்கியங்களை யுடையவன். அவற்றைப் பூர்விக சொத்துக்களாகப் பெறுவான் என்று சொல்லுவோம்.

7. மத்தியில் சல்லியபாதை மருவிடும் தரணிநஷ்டம்
வெத்தியாம் தொடுவழக்கு வலரிவாயன் விஷவாக்குள்ளான்
பத்தினிக் கிஷ்டனுகும் பணிந்தோரை யாதரிப்பன்
புத்தியில் மந்திரியாகும் போசன வறுமைகாணுன்.

7. மத்தியகாலத்தில் கடன் தொந்திரவுண்டு. பூமி நஷ்டம் ஏற்படும். தொடுத்த வழக்குகள் பயனில்லாதுபோம். வளவளவென்று பேசுவான். தோசித்தனமான பேச்சுக்களையுடையவன். பெண்டாட்டிக்குப் பிரியமானவன் தன்னை ஆண்டினவரை ஆதரிப்பான். மந்திரிகளைப்போல் புத்தி சாதுர்யமுள்ளவன். சாப்பாட்டுக்கு யாதொரு குறையுமில்லை.

8. தரிதொழில் பணையோர்விருத்தி சாராள்க ளுடையனுகும்
அறுமுகன் பத்திகொள்வன் அஞ்சிடான் எதிரிகட்கு
மருமத்தை வெளிகாட்டாதான் மாத்தானை லகுவில் [வெல்வன்
வருவோரை யாதரிப்பன் மங்கையே கேட்டிடாயே.

8. தரித்தொழிலைச் செய்வான். பண்ணையாட்களும் ஏர்களும் விருத்தியாகும். பரிஜனங்களை அதிகமாக வுடையவன். ஆறுமுகக்கடவுளிடம் பக்தி கொண்டவன். எதிரிகளைக் கண்டு பயப்படான். இரகசியத்தை வெளிக் காட்டமாட்டான். பகைவரைச் சுலபமாக வெல்லுவான். வந்த விருந்தினரை உபசரித்து ஆதரிப்பான். பார்வதியே! கேட்பாயாக.

9. முன்னவன் இருந்தசென்மம் மொழிகுவோம் நேபாளத்தில்
வன்னிய குலமுதித்து வணிபங்கள் பலவாய்ச்செய்து
பொன்னொடு பணிதிபெற்றுப் புகழுடன் வாழுநாளில்
தன்னுட துணைவன்பாகம் தராமலே மோசம்செய்தான்.

9. முன்பு அவனிருந்த ஜன்மத்தின் விவரத்தைப்பற்றிக் கூறுவோம். நேபாளதேசத்தில் வன்னியர் குலத்திலுதித்து, பலவிதமான வாணிபங்கள் செய்து, பொன் பூஷணம் இவற்றை அடைந்து, புகழ்பெற்று வாழ்ந்துவரும் நாளில், தன்னுடைய சகோதரனுக்குச் சேரவேண்டிய சொத்தின் பாகத்தைத் தராமலே மோசடி செய்தான்.

10. துணைவனும் வருத்தமுற்றுச் செப்பின சாபம்கேண்மோ
கனமான பொருளீயாமல் கடனைதைத் தந்தபாவி
இனிவரும் சென்மந்தன்னி லெனைப்போலே துணைவரின்றிச்
சினம்வரும் தந்தைக்கேதான் தாய்சுக மின்றியேதான்,

10. சகோதரனும் வருத்தமடைந்து சாபம் இட்டான். அதனைக் கேளுங்கள். மதிப்புள்ள பொருள்களைத் தராமலே கடனை என் தலையில் சுமத்தின பாவிக்கு, இனி ஏற்படும் ஜன்மத்தில் என்னைப்போல் சகோதரனில்லாமல், தந்தையின் கோபத்திற்கு ஆளாகி, தாய்க்குத் தேக சௌக்கியமு மின்றி,

11. பிறந்தஇல் அடையதாகிப் பொருளுமே இல்லாதாகித்
தரணியில் வாழ்வாயென்ன ததாஸ்தென்று அந்திரம்பேச
உறைந்தது அந்தச்சாபம் உத்தம னந்தியத்தில்
பொருளது குறைவுநேர்ந்து புக்கினன் காலனுடு.

11. பிறந்த வீட்டையும் அடையாமல், பணம் காசும் இல்லாமல், பூமியில் வாழக்கடவாய் என்று சபிக்க, அப்படியே ஆகட்டும் என்று அசரீரி ஆகாசத்திலிருந்து முறையிட, இவனுக்கு அந்தச்சாபம் அந்தியகாலத்தில் வந்தடைந்தது. பொருள்கள் குறைவு நேர்ந்து மரணமடைந்தான்.

12. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனித்தவ னென்று [சொல்வோம்
மருவிடும் துணைமுன்சாபம் மாதுரு சுகமில்லாதான்
பிறந்தவூர் தன்னில்வாழான் போகிடும் துணைவர்தானும்
தரைசேர்ப்பன் செலவுசெய்வன் சல்லிய பாதையாலே,

12. பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தவன் இவனே என்று சொல்லுவோம். முதலில் சகோதரனுடைய சாபம் வந்து பற்றியது. மாதாவிற்குத் தேக அசௌக்கிய மேற்பட்டது. தான் பிறந்த (சொந்த) ஊரில் வாழவில்லை. பிறந்த சகோதரனும் இறப்பான். பூஸ்திதிகளை விருத்திசெய்வான். செலவும் செய்வான். கடன் தொந்தரவின் காரணமாக,

13. சொன்னஇக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தபாலன்
அன்னவன் குணத்தைச்சொல்வே னழகுளா னிருசிகப்பன்
பன்னுவே[னியே] பேசவல்லன் பாரதை விருத்திசெய்வன்
பின்னமில் லாததேகி பொய்யது புகலானுகும்.

13. இவ்வித குணங்களை யுடையவனுக்கு, நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவேன். அழகுள்ளவன். பொதுநிற முடையவன். பக்குவமாகப் பேசுந்திறமை யுடையவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். பின்னமில்லாத தேகத்தை யுடையவன். பொய்யையே பேசமாட்டான்.

14. வித்தையும் சமமதாகும் விருந்தினர்ப் பிரியனுகும்
சத்திய மென்றுலச்சம் தன்குலத் தொழிலும்சொல்வன்
பத்தினிக் கிஷ்டனுமே பகைத்தோரை நசிக்கவைப்பன்
சுத்தமு முடையனுகும் சோம்பிடான் காரியத்தில்.

14. சமமான வித்தையை யுடையவன். விருந்தினருக்கிஷ்டமானவன். சத்தியம் என்று சொல்லும்போதே மனதில் அச்சமுடையவன். தன் குலத்தின் தொழிலையும் செய்வான். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்

பான். பகைவரை அடியோடு ஒழித்து விடுவான். சுத்தமுமுடையவன். காரியம் செய்வதில் சோம்பலே கிடையாது.

15. கடன்படான் இடுக்கமில்லான் காரிய சமர்த்தனுகும்
உடன்படான் பிழைக்ளுக்கு உறுதியில் லாதநெஞ்சம்
தடபுடல் செய்கையுண்டு தாட்சிணியன் கனத்தபுத்தி
படையின்முன் செல்லானுகும் பணயோர்கள் விருத்தி
[செய்வன்.

15. கடன் வாங்கமாட்டான். துன்பமில்லாதவன். காரியங்களைச் சாமர்த்தியமாய் முடிக்கவல்லான். பிசகான காரியங்களில் தலையிட மாட்டான். மனதில் தைரியமில்லை. தடபுடலான காரியங்களைச் செய்வான். தாட்சிணிய புத்தியுடையவன். கௌரவமாக நடப்பான். கூட்டத்தின் முன் செல்லமாட்டான். பண்ணையாட்களையும் ஏர்களையும் விருத்திக்குக் கொண்டு வருவான்.

16. தந்தைக்குத் தாழ்வுருதான் சாதமும் குறைவுருதான்
நொந்தவர் தம்மைக்காப்பன் நிதானமாய் வார்த்தை
[சொல்வன்
விந்தைக ளேற்கானுகும் நினைத்தகா ரியமுடிப்பன்
கந்தன்மேல் பத்திகொள்வன் கலைத்தொழில் புரிவானுகும்.

16. தந்தைக்குக் குறைவாக வாழமாட்டான். சாப்பாட்டுக்குக் குறைவு இல்லாதவன். சிரமப்பட்டவர்களைச் சிரமத்தினின்றும் காப்பாற்றுவான். நிதானமாகச் சம்பாஷணை செய்வான். வேடிக்கைப்பேச்சே பிடிக்காது. நினைத்த காரியங்களை முடிக்கவல்லான். முருகக்கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். கலைத்தொழில்களைச் செய்வான்.

17. தன்துணை இருநான்காக உதித்திடும் சிலதுசேதம்
மன்னன்போல் ஆண்பாலொன்று மங்கையர் மூவர்தீர்க்கம்
அன்னவர் சேதியாவும் அறவிப்போம் பின்பாகத்தில்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

17. இவனுடன் பிறந்தவர்கள் எட்டுப்பேர்கள். அவர்களில் சிலர் தோஷமடைவார்கள். அரசனைப்போன்ற சகோதரன் ஒருவன். சகோதரிகள் மூவராவர். இவர் தீர்க்கம். இவர்களுடைய செய்தி விவரங்கள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் தெரிவிப்போம். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

18. மங்களம் பத்தொன்பாண்டில் மருவிடும் உள்ளூர்பாரி
அங்கவள் குணத்தைச்சொல்வேன் அரிமனை ஒப்பதாகும்
திங்கள்போல் வசனமுண்டு தேறின புத்தியேற்பள்
சங்கையென் றுரைச்சாராள் சாதிப்பாள் சிலதுசங்கை.

18. பத்தொன்பதாவது பிராயத்தில் கலியாணம் ஆகும். உள்ளூரிலிருந்தே பெண்டாட்டி ஏற்படுவாள். இவளுடைய குணங்களைக் கூறுவோம். இலட்சுமியை ஒப்பாள். குளிர்ந்த இனிய மொழிகளைப் பேசுவாள். மிக்க தேர்ச்சிபெற்ற புத்திமதிகளை ஏற்பாள். சந்தேகப் பேர்வழிகளுடன் சேரமாட்டாள். சில சமுசயங்களை எடுத்துக்கூறி சாதனைகள் செய்வாள்.

19. அன்னம்போல் வடிவுமொக்கு மாபத்தைச் சிலர்க்குநீப்பள்
அன்னமும் அன்பாயீவள் அடிசலுக் கினியளாகும்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடாபிடி கூறுளாகும்
அன்னவள் வயதுதீர்க்கம் அம்பிகை யாளேகேளாய்.

19. அன்னம்போன்ற சாயலையுடையவள். சிலரை ஆபத்தினின்றும் விலக்குவாள். அன்னதானமும் பிரியமாய்ச் செய்வாள் சமையல் செய்வதில் கெட்டிக்காரி. பிறரைப்பற்றிக் குற்றமாக ஒன்றும் சொல்லமாட்டாள். அடாபடியான வார்த்தைகளைக் கூறமாட்டாள். அவளுடைய வயசு தீர்க்கம். அம்பிகையே! கேட்பாயாக.

20. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் எழுவர்தோன்றும்
சுத்தமாய் ஆண்பால்ரண்டு தோகையர் அவ்வார்தீர்க்கம்
குத்தமாம் முதலிலென்றேம் கூறுவீர் அந்தச்சங்கை
புத்திரனுக் குடையோனஞ்சில் பதிந்ததால் புகன்றேம்
[தாயே.

20. புத்திரபாக்கியத்தைப் பற்றிப் பேசுவோம். எழுபேர்கள் பிறப்பார்கள். ஆண்குழந்தைகள் இருவர். பெண்களும் அப்படியே. இவர்கள் தீர்க்கம். முதலில் பிறக்கும் குழந்தைகள் விரயமாகும். அதன் காரணம் என்ன? சொல்லுங்கள். புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சனி இருப்பதனால் சொன்னேம், தாயே!

21. பாலகன் முன்சென்மத்தைப் பகருவோம் தாயேகேளும்
வேலன்வாழ் தோகைதன்னில் விளங்கினன் அருகர்வர்க்கம்
ஞாலங்கள் விருத்திசெய்து நலிந்தோர்க்கு அன்னமீந்து
காலன்தன் நாடடைந்து கஞ்சனுல் வரியப்பட்டு,

21. ஜாதகனுடைய முன்ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம், தாயே! கேளும். திருவேலன்காட்டினில் சைனர்வமிசத்தில் பிறந்தான். பூமிகள்

விருத்திசெய்வான். ஏழைகளுக்கு அன்னதானம் செய்து எமலோகம் சென்று, பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு,

22. உதிப்பனும் இந்தபாலன் உரைக்குறேம் இவனின்யோகம்
பதிபாக்கிய முடையனுகும் சல்லிய பாதையேற்கான்
நதிபல தீர்த்தம்தோய்வன் நவின்றிடான் கட்டுவார்த்தை
புதையலும் வையானுகும் பூமியை விருத்திசெய்வன்.

22. அவதரிப்பான் இந்த பாலகன். இவனுடைய யோகபாவங்களை இனி எடுத்துச்சொல்லுவோம். வீட்டு பாக்கிய முடையவனும். கடன்தொந்தரவு வைத்துக் கொள்ளமாட்டான். பல நதிகளின் தீர்த்தங்களில் ஸ்னனம் செய்வான். பொய் பிறட்டு வார்த்தைகளைச் சொல்லமாட்டான். பணத்தைப் புதைத்து வைக்கமாட்டான். பூஸ்திதியை விருத்திசெய்வான்.

23. இருபத்தோர் ஆண்டுமட்டு மெய்திடும் சல்லியபாதை
தரைகொஞ்சம் சேதமெய்தும் சஞ்சல மனமுமுண்டு
உரைத்தஆண் டதன்மேலாக உயர்பிறை போலேயோகம்
பறைபள்ளு விருத்திஓங்கல் பலதானிய பலிதமேன்மை.

23. இவனுக்கு இருபத்தெட்டு வயதுவரை கடன் தொந்தரவுண்டு. பூமிகொஞ்சம் நஷ்டமடையும். சஞ்சல மனமுடையவன். சொன்ன பிராயத்திற்குமேல் பூரணசந்திரனைப்போல் யோகம் ஓங்கி விளங்கும். பள்ளுப் பறைகாலாட்கள் விருத்தி உண்டு. பலதானிய வகைகள் மேன்மேலும் விருத்தியாகும்.

24. அதுமுதல் வறுமைகாணுன் அளகேசன் போலேவாழ்வன்
இதுநிற்க அன்னைசேதி இயம்புவோம் இனிமேலாகச்
சதியிலா மனத்தளாகும் சாந்தமும் கோபமேற்பள்
துதிசெய்தோருக் குதவுவாளாம் தோழன்தன் மனதுக்
[கேத்தோள்.

24. அதுமுதற்கொண்டு தரித்திரமில்லை. குபேரன்போல் சம்பத்துக்களுடன் வாழ்வான். இது நிற்க. இனிமேல், இவனுடைய தாயைப்பற்றிய செய்தியை விவரமாய்க் கூறுவோம். குற்றமற்ற மனதை யுடையவள். சாந்தகுணம் உடையவள். கோபமும் உண்டு. அண்டினவரைக் காப்பாற்றுவாள். புருஷனுக்குகந்தவள்.

25. தோகைபோல் நிறத்தளாகும் சொல்லது சுருக்கமெய்தும்
பாகமாய்ப் பேசுவாளாம் பர்த்தாவின் மனம்போல்வாழ்வள்
நாகரி கங்களுண்டு நடைநன்மை பித்ததேகி
தாகமென் றேர்க்குமவள் சக்திக்கு வயதுதீர்க்கம்.

25. மயில்தோகை போன்ற நிறத்தை யுடையவள். சுருக்கமாகப் பேசுவாள். பக்குவமாகப் பேசுவாள். புருஷனுடைய மனம் கோணுமல் நடப்பாள். நாகரிகமான வாழ்க்கையை யுடையவள். நல்ல நடத்தையை யுடையவள். பித்தசம்பந்தமான தேகத்தை யுடையவள். பசி, தாகம் என்ற பேர்களுக்கு அன்னபானுதிகளைக் கொடுப்பாள். இவளுக்கு வயது தீர்க்கம்.

26. தன் துணை ஆண்பால்ரெண்டு சக்திமார் நால்வராகும்
பின்னமாம் பின்பால்சொல்வேன் பேசுவோ மிவள்முன் [சென்மம்
கன்னமா புரியிலேதான் கலந்தனள் கர்ணசேயாய்ப்
பொன்னெடு பணிதிபெற்றுப் புகழ்ச்சியாய் வாழ்ந்துமே [தான்,

26. இவளுடன் பிறந்த சகோதரர் இருவர். பெண்கள் (சகோதரிகள்) நான்கு பேர்களாவர். பின்னமாய்ப் போனவர்களைப்பற்றிப் பிறகு சொல்லுவோம். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். கன்னியாகுமரியிலே கணக்கர் வமிசத்தில் பிறந்து, பொன்னெடு பூஷணங்களைப் பெற்றுக் கீர்த்தியுடன் வாழ்ந்து வரும்நாளில்,

27. முன்வினை இல்லாதாகி ஒதுங்கினுள் காலனுடு
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தனள் இந்தமாது
பின்சென்மம் தணிகைதன்னில் பிறப்பளாம் ரெட்டிவம்சம்
கன்னென மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

27. பவவினைகளில்லாமல் எமலோகம் சேர்ந்தாள். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தனள். இந்த மாது, அடுத்த ஜன்மத்தில் திருத்தணிகையில் ரெட்டி வமிசத்தில் பிறப்பாளாகும். கனிவுடைய சொற்களைப் போன்ற காதலியே! கேட்பாயாக.

28. ஆருறு மூன்றுஆண்டில் அணுகிடும் தந்தைகெண்டம்
சூரியன் தசையில்கெண்டம் செப்பொணு மாரகங்கள்
வேறுசென் மத்தைச்சொல்வேன் வேலங்காட தனிலேதான்
சேருவன் க்ஷத்ரியசேயாய்ச் செப்பின மொழிகுன்ருது.

28. இவனுடைய முப்பத்தொன்பதாவது பிராயத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். சூரியன் தசையில் சொல்லமுடியாத மரணங்கள் ஏற்படும். வேறு ஜன்மத்தைக் கூறுவேன். வேலங்காட்டினிலே க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான். சொன்னசொல் தவருது.

29. நாற்பது நாலுஆண்டில் நமன்பதி அன்னைசேர்வள்
ஏற்[பா]க சாதகர்க்கு எழுபது ஆண்டுதன்னில்
தீர்ப்பாக மகரமாதம் செப்புவோம் மாரகங்கள்
ஆர்க்கவே தவங்கள்செய்யும் அம்பிகை யாளேகேளாய்.

29. நாற்பத்துநான்காம் பிராயத்தில் தாய் மரணமடைவள். ஜாதகனுக்கு எழுபதாவது வயதில், தைமாசத்தில், நிச்சயமாய் மரணம் ஏற்படும். எப்பொழுதும் தபசிலிருக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

30. மறுசென்மம் வேங்கடத்தில் வருகுவான் சைவசேயாய்ப்
பொருளது பெருக்கமாகிப் புகழுடன் வாழ்வானும்
திருமகன் செனனகாலம் சந்திரன் தசைஆறுண்டும்
உரைந்திடும் திங்கள்மூன்று முரைக்குறேம் பலனை
[யாங்கள்.

30. அடுத்த ஜன்மம் திருவேங்கடத்தில், சைவவமிசத்தில் உதிப்பான். பணம் காசுகள் அதிகம் ஏற்பட்டு, கீர்த்தியுடன் வாழ்வானும். இவனுடைய ஜனனகாலத்தில் சந்திரமகாதசையில் இருப்பு வருஷம் ஆறு, மாதம் மூன்று. இதன் பலன்களை நாங்கள் உரைக்கிறேம்.

31. இல்லமும் அலேச்சலாகு மேகுவான் பிதாவின்தந்தை
வல்லியால் பகையுமெய்தும் மருவிடும் சல்லியபாதை
தல்லிக்குப் பிணியுமாகும் சகோதர விருத்தியுண்டு
எல்லேகள் சேர்தலுண்டு இனபந்து சூதமெய்தும்.

31. வீடு மாறும். பிதாவின் தந்தையின் வீட்டிற்குப் போவான். பெண்டாட்டியினல் சிரமமேற்படும். கடன் தொந்தரவு வந்தடையும். தாயாருக்கு வியாதி உண்டாகும். சகோதர விருத்தியும் ஏற்படும். சொத்துக்கள் சேரும். இனத்தார்களும் பந்துக்களும் ஆசௌசத்தை உண்டு பண்ணுவார்கள்.

32. மனமது சஞ்சலங்கள் மருவிடுமென்று சொல்வோம்
இனமதை நிந்தையெய்தும் இடருக ளதிகமுண்டு
தனசேதம் திடுக்கள்சிந்தை சாற்றுவோம் விபரம்ரெண்டில்
கனமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

32. மனஞ்சலித்து, கவலேகள் ஏற்படும் என்று சொல்லுவோம். சொந்தக்காரர்களுடைய நிந்தைகள் ஏற்படும். இடைஞ்சல்கள் அநேகம் உண்டு. தனம் சேதமடையும். மனதில் பயம் ஏற்படும். மற்றைய விவரங்கள் இரண்டாம் பாகத்தில் விவரமாய்க் கூறுவோம். விக்னேசு வரனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 56

1. சென்மமு மேடமாகச் சுக்கிரன் அதிலிருக்கப்
புந்தியும் இரவிரண்டில் பூமகன் கேதுநாலில்
மன்னவன் அஞ்சில்நிற்க மதியாறில் சனியு மெட்டில்
வன்கயர் தசமதாக வரைகுவீர் பலனேஎன்றாள்.

1. சுக்கிரன் மேஷத்திலும், புதனும் சூரியனும் ரிஷபத்திலும், செவ்வாயும் கேதுவும் கடகத்திலும், குரு சிம்மத்திலும், சந்திரன் கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், இராகு மகரத்திலும் உள்ள இவ்வித கிரகநிலைகள் கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைக் கூறுங்கள் என்றாள்.

	லக்கினம் சுக்கிரன்	புதன் சூரியன்	
	இராசி		செவ்வாய் கேது
ராகு	சக்கரம்		குரு
	சனி		சந்திரன்

2. கோதையும் கேட்கும்போது குறுமுனி கூறுகின்றார்
நீதியாய் ஆண்பால்சென்மம் நிகழ்த்துவோம் வடதென்வீதி
வேதினில் கிழக்குப்பார்வை விளம்புவோம் உத்திரத்தில்
ஆதியாய்க் கணேசன்கோவில் அதன்மேற்கில் காளிதங்கும்.

2. பார்வதி கேட்கும்போது அகஸ்திய முனிவர் கூறலுற்றார். இது நியாயமாக ஆண் ஜனனம். வடக்குத் தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வீட்டில் பிறந்தவன். வடக்கில் கணேசர் கோவிலுள்ளது. அதன் மேற்கில் காளி கோவிலுள்ளது.

3. இதுவலால் மாரிதங்கும் இசைகுவோம் அருகில்சூழி
சதமுள தென்மேல்தெற்கில் சலகுண்டம் சோலையாகும்
பதியுமே கூரையாகும் பகருவோம் சிற்றூர்தன்னில்
மதியென கௌரிசேயாய் வந்தவ னிவனேயம்மா.

3. இதுவுமல்லாமல், அம்மன் கோவிலும் உள்ளது. அதன் அருகே குளம், நீரோட்டம் இருக்கிறது. தெற்குத் திக்கில் பெரிய குளம், சோலை

க்ளையுடையது. வீடோ கூரை வீடு. இந்தச் சிறிய ஊரில், இலட்சுமீ புத்திரனாய் வந்துதித்தவன் நம் ஜாதகன், அம்மா!

4. இன்னவன் செனனயோகம் எழிலுறு தந்தையோகம்
மன்னிய அன்னையோகம் வரும்புத்திர களத்ரயோகம்
துன்னிய சகோதரயோகம் சொல்லுவோம் முன்பின் [சென்மம்
அன்னையே யாங்கள்சொல்லும் அடைமொழி குன்றிடாது.

4. இவனுடைய ஜனனகாலத்திய யோகமும், தாய் தந்தையின் யோகமும், ஏற்படும் களத்திர புத்திரர்களின் யோகமும், துல்லியமான உடன்பிறந்தாரின் யோகமும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மங்களுமாகிய எல்லாவற்றின் விவரத்தையும் நாங்கள் விரிவாகக் கூறுவோம். நாங்கள் கூறும் பலாபலன்களுக்கு யாதொரு குறைவும் வராது.

5. தந்தையின் குணத்தையாங்கள் சாற்றுவோம் சிவந்தமேனி
பன்னிய உயரமில்லான் பாரினில் சமதேகத்தன்
கன்னென மொழியுமுள்ளான் கல்வியும் கொஞ்சமுள்ளான்
மன்னிய சுகவானாகும் மர்மமு முடையானாமே.

5. இவனுடைய தகப்பனாரின் குணங்களை எடுத்துச் சொல்லுவோம். சிவப்பான சரீர முடையவன். அதிக உயர மில்லாதவன். உலகில் சமமான தேகத்தை யுடையவன். இனிமையான வார்த்தையை யுடையவன். சிறிது கல்வி கேள்விகளு முடையவன். பொருத்தமான சுகவாசி. மனதில் இரகசியங்களுடையவன்.

6. அன்னங்கள் போடவல்லான் ஆள்கார ருடையனாவன்
பின்னமில் லாததேகன் பெரும்பொருள் அதிகம் சேர்ப்பன்
துன்னிய சோம்பல்கொஞ்சம் சித்திர வீடுசெய்வன்
தன்னிலே பூமியாலும் தனம்சேரும் செட்டினாலும்.

6. அன்னதானம் செய்யக்கூடியவன். வேலையாட்களுடையவன். தேக அமைப்பில் யாதொரு குறையு மில்லாதவன். அதிகச் சொத்துக்களைச் சேர்ப்பான். சிறிது சோம்பலுள்ளவன். அழகான வீடு கட்டுவான். தன்னுடைய பிரயத்தனத்தினாலும், பூமியின் கிருஷிப் பயனாலும், வியாபாரத்தினாலும் திரவ்ய சேர்க்கை ஏற்படும்.

7. கைகளில் வடிவுமுள்ளான் கனத்தவர் நேசம்கொள்வன்
மெய்யுமே வடிவுமுள்ளான் வீண்வார்த்தை அதிகம்பேசான்
நய்யவே உரைக்கமாட்டான் நாடெல்லாம் மெச்சவாழ்வன்
பொய்யது அதிகம்சொல்லான் போசனம் பூகியனாமே.

7. கைகளில் அழகும் வலுவு முடையவன். பெரியவர்களுடைய நேசத்தைப் பெறுவான். சத்தியமே தேகமாகக் கொண்டவன். வீணுக வம்படிக்க மாட்டான். புண்படும்படியான ஹிம்சையான வார்த்தைகளைச் சொல்ல மாட்டான். உலகெலாம் மெச்சும்படி வாழ்வான். பொய் அவ்வள வாக அதிகம் பேசமாட்டான். போஜன சௌக்கியமும் புத்தி சாதுர்யமு முடையவன்.

8. வண்டிவா கனமுமுள்ளான் வார்த்தைகள் தப்பாளுகும்
குண்டைகோ விருத்தியுள்ளான் குணமுளான் சுசீலனுவன்
அண்டின பேரைக்காப்பன் அநேகருக் குதவிசெய்வன்
எண்டிசை கீர்த்தியுள்ளான் எடுத்தகா ரியமுடிப்பான்.

8. வண்டி வாகனங்களை யுடையவன். சொன்ன வார்த்தை தப்ப மாட்டான். எருதுகள், பசுக்கள் இவற்றின் விருத்தியுடையவன். குணவான். சுகஜீவனம் செய்பவன். அண்டினவர்களை ஆதரிப்பான். அநேகம் பேர் களுக்கு ஒத்தாசை செய்வான். எட்டுத் திக்கிலும் பரவிய கீர்த்தியுடையவன். எடுத்த காரியங்களைச் சாமர்த்தியமாய்ச் செய்து முடிப்பான்.

9. இன்னவன் துணைவர்தம்மை இசையவே ஆண்பாலில்லை
கன்னியும் மூவராகும் கனக்காது சிலதுதுன்பம்
மன்னுமிக் குணத்தானுக்கு மைந்தனும் பிறப்பாளுகும்
துன்னிய அவன்குணத்தைச் சொல்லுவோம் மேலும்
[கேளே.

9. இவனுடைய உடன்பிறந்தாரைப்பற்றிக் கூறுவோம். சகோதர னில்லை. சகோதரி மூன்று பேர்கள். சில தரிக்காமல் வியோகமடையும். இத்தகைய குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் புத்திரனுய்ப் பிறப் பாளுகும். துல்லியமான அன்னவன் குணங்களை விவரித்துக் கூறுவோம், கேள்.

10. சாதகன் இருசிகப்பன் சமர்த்தனும் கல்வியுள்ளான்
கோதுறு[1] முன்கோபத்தான் குறைவிலாச் செல்வமுள்ளான்
மேதினில் கீர்த்தியுள்ளான் விசேஷபூ மிகளும்சேர்ப்பன்
தீதிலா குணத்தாளுகும் செப்புநன் னடக்கையுள்ளான்.

10. ஜாதகன் பொது நிறமுடையவன். சாமர்த்திய முடையவன். படிப்புடையவன். குற்றமுள்ள முன்கோப முடையவன். குறைவற்ற செல்வத்தைப் பெற்றவன். உலகத்தில் கியாதி பெற்றவன். விசேஷமான நில பலங்களைச் சேகரிப்பான். குற்றமில்லாத சற்குணவான். நல்ல நடத்தையையு முடையவன்.

---

[1] ள்ள

11. தானிய விருத்தியுள்ளான் தரணியில் செட்டுச்செய்வன்
மானமாய்ச் சீவிப்பானும் மன்னர்கள் நேசம்கொள்வன்
தேனென மொழியுமுள்ளான் சேர்ந்தவர் தம்மைக்காப்பன்
ஈனமாம் குணங்களில்லான் எதிரியை நாசம்செய்வன்.

11. தானியங்களை விருத்தி செய்வான். பூமியில் வியாபாரங்களைச் செய்வான். கௌரவமாய் ஜீவிப்பானுகும். அரசர்களுடைய பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவான். இனிமையான வார்த்தைகளைக் கூறுவான். சொந்தக்காரர்களை ஆதரிப்பான். கேவலமான குணங்களே இவனிடமில்லை. எதிரிகளை அடியோடு ஒழிப்பான்.

12. அன்னிய ருறவுகொள்வன் ஆள்கார னுடையனுவன்
பின்னமில் லாததேகன் பசுவுகள் விருத்தியுள்ளான்
தன்னிலே யீகையுள்ளான் தாய்தந்தை தனக்குஇஷ்டன்
உன்னித நடையுமுள்ளான் உத்தமர் வசியம்செய்வன்.

12. பிறரைச் சிநேகம் செய்வான். வேலைக்காரர்களை யுடையவன். சரீர அமைப்பில் யாதொரு குறையு மில்லாதவன். தாய் தந்தையர் மனம் கோணுமல் நடப்பான். மேன்மையான நடத்தையை யுடையவன். மேலாரைத் தன்வசப்படுத்தும் இயல்புடையவன்.

13. ரோமங்கள் நீட்சியுள்ளான் நுவலுப தேசமுள்ளான்
சேமமாம் குடும்பமுள்ளான் செந்திரு விலாசமுள்ளான்
காமியும் அதிகமுள்ளான் கனமான புத்தியுள்ளான்
சாமிமேல் பத்தியுள்ளான் சல்லிய நில்லானுமே.

13. நீளமான தலைமயிருள்ளவன். சொல்லும்படி மேலான உபதேசங்களைப் பெறுவான். க்ஷேமமான குடும்பமுள்ளவன். லட்சுமீ கடாட்சமுடையவன். அநேக விஷயங்களில் காமாதுரனுயிருப்பான். கௌரவமான மனப்பான்மையை யுடையவன். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன். கடன் தொந்தரவே இல்லாதவனுவன்.

14. இவனுட துணைவர்தம்மை இசைகுறேம் மூத்தோர் [காணும்
அவனியி லிளையோனென்று அதுவலால் கன்னிரெண்டு
நவமதில் மூன்றுதீர்க்கம் நவிலுவோ மிதன்மேல்தோன்றில்
பவமுள நட்டமாகும் பார்வதி மேலும்கேளே.

14. இவனுடன் பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம். இவனுக்கு அண்ணனில்லை. தம்பி ஒருவன் உண்டு. அதுவுமில்லாமல், சகோதரிகள் இரண்டு பேர்கள். உலகில் இம் மூன்று பேர்களும் தீர்க்காயுசுடையவர்கள். இதற்குமேல் பிறந்தவர்கள் நஷ்டமாவர். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

15. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் ஒருபாறுறில்
மாதிவள் கிழக்குத்திக்கில் மாதுரு வர்க்கம்தன்னில்
நீதியாய் உதித்தமாதை நிமலனும் மணமேகொள்வன்
பாதியாய் வடிவெடுத்த பத்தினி[1] மேலும்கேளே.

15. ஜாதகனுடைய கலியாண காலம்பற்றிக் கூறுவோம். இவனுடைய பதினறுவது பிராயத்தில் கிழக்குத் திக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள். அதுவும் தாயின் குடும்பத்திலிருந்து வருவாள். நல்ல குடும்பத்திலிருந்து வந்த மாதை மணம் புரிவான். மாதொரு பாகத்தானுடைய பத்தினியே! மேலும் கேட்பாயாக.

16. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் ஆண்பால்ரெண்டு
பத்தினி அவ்வாருகும் புகலுவோம் மூன்றுநட்டம்
வித்தகி மாதுர்சேதி விளம்புவோம் இருநிறத்தாள்
உத்தம குணத்தாளாகு முறுதியாய் [2]மாய்த்தாளென்றோம்.

16. புத்திர பாக்கியத்தைப்பற்றிக் கூறுவோம். ஆண் குழந்தைகள் இரண்டு. பெண் குழந்தைகளும் இரண்டு. மூன்று குழந்தைகள் நஷ்டமாகும். இவனுடைய பத்தினியின் செய்தி விவரங்களைப்பற்றிக் கூறுவோம். கரிய நிறமுடையவள். உத்தமமான குணங்களை யுடையவள். சிரமப்படும் காலத்தில் மனதைரியத்துடனிருப்பாள்.

17. வருவோரை ஆதரிப்பள் வரனுக்கு நேயமுள்ளாள்
பெருமர்க்கு இனியளாகும் மேதினியில் பொறுமை
[யுள்ளாள்
திறமையாய்ப் பேசவல்லாள் செப்புமுன் கோபம்கொஞ்சம்
வரவர யோகமுள்ளாள் வரைகுறோம் மேலும்கேளே.

17. வந்த விருந்தினரை ஆதரிப்பாள். புருஷனிடம் பிரியமுள்ளவளாயிருப்பாள். பெரியோர்களுக்கினியளாகும். உலகில் பொறுமை யுடையவள். சாமர்த்தியமாய்ப் பேசும் இயல்பினள். சிறிது முன்கோப முடையவள். வரவர மேன்மேலும் யோக முடையவள். இன்னும் சொல்லுவோம். கேட்பாயாக.

18. இன்னவள் துணைவர்தம்மை இசைகுறோம் ஆண்பால்
[ரெண்டு
கன்னியு மவ்வாருகும் கனக்காது இதன்மேல்தோன்றில்
பன்னிய தந்தைக்கேதான் பகருவோம் முன்ஜென்மத்தை
மன்னிய கொச்சிநாட்டில் மறையவர் குலமுதித்து,

1. அர்த்தநாரீசுவரி
2. அறப்பாடுபடுதல்

18. இவனுடைய சகோதரரைப்பற்றிக் கூறுவோம். ஆண் இருவர். தங்கைகள் இருவர். இதன்மேல் பிறந்தாலும் இருக்காது. இவர்களுடைய தந்தையின் முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். கொச்சி (Cochin) நாட்டிலே பிராம்மணர் குலத்தில் பிறந்து,

19. புரோகிதம் செய்துமேதான் புண்ணியன் வாழும்நாளில்
அறைகிறோம் வந்தவூழி அவன்செய்யும் கருமம்தன்னில்
நிறையவே திதிகள்தம்மை நேராகச் சொல்லாமல்தான்
மறையவே புரட்டிச்சொன்னான் வந்தது தோஷம்தானே.

19. புரோகிதனுடைய தொழிலைச் செய்து, இப்புண்ணியன் வாழ்ந்து வரும் காலத்தில், ஓர் ஊழ்வினை அவனைப் பற்றியது. அவன் செய்யும் சிராத்த கருமாக்களில் பொருத்தமாகத் திதிகளைச் சரிவரச் சொல்லாமல் புரட்டிச் சொன்னான். அது சாஸ்திரத்திற்கு விரோதமானதால் தோஷம் வந்து சேர்ந்தது.

20. பலசாதி திதிகள்தம்மை இவனுமே புரட்டிச்சொல்ல
நலபிதா தேவதைகள் நாட்டினார் சாபம்தானும்
உலகினில் மறுசென்மத்தில் உதித்துமே துணைவரின்றி
அலைகுவாய் என்றுசொல்லி அறைந்தனர் சாபம்தானே.

20. பலஜாதி மனிதர்களுக்குச் சடங்குத் திதிகளை இஷ்டப்போல் புரட்டிச் சொல்லி வந்ததனால், நல்ல பிதிர்தேவதைகள், நீ அடுத்த ஜன்மம் எடுக்கும்போது சகோதரனில்லாமல் அலைந்து திரிவாய் என்று சாபம் கொடுத்தனர்.

21. ஆகையால் இச்சென்மத்தில் அவனுமே உதித்தானம்மா
பாகமாய்ப் பிற்சென்மத்தைப் பகருவோம் காஞ்சிதன்னில்
ஏகமாய்ப் பிரம்மசேயாய் விளைபுலம் அதிகம்பெற்று
ஏகபோ கங்களுள்ளாய் இவனுமே வாழ்வானென்றோம்.

21. ஆதலால் இந்த ஜன்மத்தில் அவனே வந்து இவனைப் பிறக்கலானான். பக்குவமாக அவனுடைய அடுத்த ஜன்மத்தை எடுத்துக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் மேலான பிராமணக் குழந்தையாய்ப் பிறந்து, விளையும் நிலங்களை அதிகம் பெற்று, ஏகபோகமாய்ப் பெரிய ஜமீன்தார் போல இவன் வாழ்வானென்றோம்.

22. சாதகன் முன்சென்மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சிநாட்டில்
மேதினில் சூத்ரனாகி விசேஷமாய்ச் செட்டுச்செய்து
சூதுகள் இல்லானாகிச் சுதர்களும் மனைவியோடு
நீதியாய் வாழ்ந்துபின்பு நிமலனும் மாலின்பூசை,

22. ஜாதகனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். விரிஞ்சி தேசத்தில், ஜனித்து விசேஷமான வியாபாரம் செய்து, சூதுவாதுகள் இல்லாதவனாகி, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, தரும சாஸ்திரப்படி கிரகஸ்தாஸ்ரமத்தை நடத்தி, பிறகு இவன் திருமாலின் (விஷ்ணுவின்) பூஜைகள் சரிவரச் செய்து,

23. பலவித தானம்செய்து பரமர்க்கு அன்னமீந்து
நிலைமையாய்ச் சாலைமார்க்கம் நீர்ப்பந்தல் வைத்துப்பின்பு
குலவிய அரங்கம்தன்னில் குணமுடன் தீபமொன்றும்
தலைவனும் வைத்திருந்தான் சத்தியே மேலும்கேளே.

23. பலவிதமான தான தருமங்களைச் செய்து, ஏழைகளுக்கு அன்ன தானம் செய்து, ஒழுங்காகச் சாலைகள் வழியில் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து, பின்பு ஸ்ரீரங்கநாதருக்கு சாஸ்திரோக்தமாக விளக்குகள் ஏற்றி வைத்தான். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

24. இவ்வித மனத்தானாகி இறைவனும் மரணமாகிப்
பவ்வமாய் இக்குலத்தில் பாலகன் செனித்தானம்மா
நவ்விய இச்சென்மத்தில் நாயகன் செய்யும்புண்ணியம்
திவ்விய மாதேயாங்கள் செப்புவோம் கேட்டிடாயே.

24. இவ்வித நல்ல தரும சிந்தனைகளையுடையவன், மரணமாகித் திரும்பவும் இக்குலத்தில் ஜனிக்கலானான். இந்த ஜன்மத்தில் இவன் செய்யும் புண்ணிய காரியங்களை நாங்கள் சொல்லுவோம் பார்வதியே! கேட்பாயாக.

25. சோலைகள் செய்துவைப்பன் துறவிகட் கன்னமீவன்
சாலவே குளங்கள்கூவம் தான்திருப் பணியும்செய்வன்
ஏலஇப் புண்ணியத்தால் இவனுமே பின்சென்மத்தில்
கோலமாய்க் காசிதன்னில் குதிப்பனே பிரம்மசேயாய்.

25. சோலைகள் செய்து வைப்பான். சன்னியாசிகளுக்கு அன்ன தானம் செய்வான், பொருத்தமாகவே குளங்கள், கிணறுகள், சித்திரமடைகள் இவைகளை ஏற்படுத்திக் கடவுளுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்வான். ஏற்கவே இப்புண்ணிய காரியங்களால் இவனுமே அடுத்த ஜன்மத்தில் அழகான காசிப்பட்டணத்தில் பிராம்மணக் குழந்தையாய்ப் பிறப்பான்.

26. தனங்களும் அதிகம்பெற்றுச் சகலர்க்கு முதல்வியாகி
இனங்களை ஆதரித்து எழிலுள தீர்த்தம்தோய்ந்து
தனயரும் மனைவியுண்டாய்த் தானது யோகம்பெற்றுச்
சினமிலா வாழ்வானாகும் செல்வியே மேலும்கேளே.

26. அதிகச் சொத்துக்களை அடைந்து, யாவருக்கும் ஒத்தாசை செய்து, சொந்தக்காரர்களை ஆதரித்து, மேன்மை வாய்ந்த ஸ்தலயாத்திரை செய்து, தீர்த்தாடனங்கள் செய்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, பிரமாதமான யோகங்களை அடைந்து, சிரமமில்லாமல் வாழ்வானாகும். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

27. பராசரும் சொல்லும்போது பகருவார் புசண்டர்தானும்
திறமையாய்த் தாய்தந்தைக்கே செல்காலம் சொல்லு [மென்ன
அருமறை புசண்டர்கேட்க அறைகுவார் பராசர்தானும்
விரைவுடன் முப்பானுண்டில் மேவுவன் தந்தைதானும்.

27. இவ்விதம் பராசரர் சொல்லும்போது, புசண்டர் பின்வருமாறு கூறலுற்றார். சரியாக இவனுடைய தாய் தந்தையருடைய வியோக காலத்தைக் கூறுங்கள், என்று வேதியரான புசண்டர் கேட்க, பராசரும் பதில் தாம் கூறலுற்றார். இவனுடைய முப்பதாவது வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும்.

28. நாற்பது ஆண்டுதன்னில் நாயகி மாதுர்கெண்டம்
பார்ப்பது இவன்தன்காலம் பகருவோம் அன்பானேழில்
சேர்க்கையாம் மேடம்திங்கள் திதியது பருவம்தன்னில்
ஆர்க்கவே மரணமாவன் அம்மையே மேலும்கேளே.

28. இவனுடைய நாற்பதாவது வயதில் இவன் நாயகி மரண மடைவாள். இவனுடைய மரண காலத்தைச் சொல்லுவோம். இவனது ஐம்பத்தேழாம் பிராயத்தில், மேஷ மாதத்தில், நல்ல பருவ காலத்தில் மரணமாவான். அம்மையே! மேலும் கேளே.

29. செயமுனி எழுந்திருந்து திடுக்கென உரைக்கலுற்றார்
நயமுடன் தாரம்சேதி நாட்டுவீர் என்றுகேட்க
தயையுள ஏழோன்தானும் சரத்தினில் இருப்பதாலும்
பயமுள சுகத்தோன்தானும் பற்றிய ஆறிலேதான்,

29. இதைக் கேட்ட ஜயமுனி திடுக்கிட்டுப் பின்வருமாறு சொல்லலுற்றார். நயமுடன் இவன் பெண்டாட்டியின் செய்திகளைச் சொல்லுங்கள், என்று கேட்க, ஏழாமிடத்திற்குடைய சுக்கிரன் சராசியில் இருப்பதனாலும், சுகஸ்தானாதிபதியாகிய சந்திரன் ஆறுமிடத்திலிருப்பதனாலும்,

30. இப்படி இருப்பதாலே இவனுக்குத் தாரம்ரெண்டு
செப்பினேன் என்றுசொல்ல செயமுனி கூறுகின்றார்
ஒப்புடன் குடும்பத்தோனை உத்தமன் குருவும்பார்க்க
எப்படி மனையாளென்று இவனுக்கு வாராதென்றோம்.

30. இப்படிக்கெல்லாம் இருப்பதனால், இவனுக்குத் தாரம் இரண்டு என்று சொன்னேன், என்று சொல்ல, ஜயமுனி சொல்லலுற்றார். குடும்பாதிபதியாகிய சுக்கிரனை உத்தமமான வியாழபகவான் ஒன்பதாம் பார்வையினால் பார்ப்பதனாலே இரண்டு தாரங்கள் இவனுக்கு ஏற்படாது என்றோம்.

31. தாரமே ஒன்றுஎன்று சாற்றினோம் இவனுக்கேதான்
தீரனும் மரணமாகிச் சென்றபின் மனைவிஉய்வாள்
பாரிய குடும்பச்செய்கை பகருவீர் என்றுகேட்க
வாரணி தனத்தினாலே வகுக்குறோம் மேலும்கேளே.

31. இவனுக்கு ஓரே தாரம்தான் என்று சொன்னோம். இவனும் மரணமான பிறகு மனைவி வசிப்பாள். பெரிய குடும்பச் செய்கையின் விவரங்களைச் சொல்லுங்கள், என்று கேட்க, தனஸ்தானத்தைக் கொண்டே விவரிப்போம்.

32. இன்னவன் செனனம்தொட்டு இவனுட ஆயுள்மட்டும்
அன்னங்கள் குறைவுறாது அநேகமாய்ப் பொருளும்சேர்ப்பன்
உன்னித பூடணங்கள் உத்தமன் கொள்வானாகும்
மன்னவர் பேட்டியுள்ளான் மாநிலம் சேர்ப்பானென்றோம்.

32. இவனுடைய ஜனனகாலம் தொட்டு, மரணம் வரை சாப்பாட்டுக்குக் குறைவில்லை. அநேகமான பொருள்களைச் சேர்ப்பான். மேலான பூஷணங்களை இவ்வுத்தமன் அணிவானாகும். அரசருடைய பேட்டியைப் பெறுவான். பெரிய பூமிகளைச் சேர்ப்பான் என்றோம்.

33. சல்லிய பாதையில்லான் சந்தோஷ மனத்தனாகும்
நல்லவர் பலர்களாலே நாட்டினில் கீர்த்தியேற்பன்
இல்லறம் புதிதாய்ச்செய்வன் இவன்புண்ணிய செனனமென்றோம்
அல்லலைத் தவிர்க்கும்மாதே அறைகுறோம் மேலும்கேளே.

33. கடன் தொந்தரவே கிடையாது. மனதில் சந்தோஷமுள்ளவன். நல்லவர் பலராலே தேசத்தில் புகழ் பெறுவான். இல்லற தர்மத்தைப் புதிது புதிதாக நடத்துவான். இவன் புண்ணியம் செய்யவே ஜனித்தவன் என்றோம். துன்பங்களைப் போக்கடிக்கும் பார்வதியே! மேலும் சொல்லுகிறோம், கேட்பாயாக.

ஜாதகம் 57

1. கலைசனி ராகுகும்பம் கதிர்புகர் [1]சேவில்தங்க
நிலமகன் மானில்புக்க நிருபனும்[2] வில்லில்புக்க
நலமதாய்க் கேதுசிம்மம் புதனுமே ஆட்டில்நிற்க
நிலைமையாம் சென்மம்மேடம் நிகழ்த்துவீர் பலனைத்தானே.

1 புதன் மேஷத்திலும், கேது சிம்மத்திலும், குரு தனுசிலும், செவ்வாய் மகரத்திலும், சந்திரன் சனி இராகு முதலியோர் கும்பத்திலும், சூரியனும் சுக்கிரனும் மீனத்திலும் தங்கும்படியான இவ்வித கிரக நிலைகொண்ட இந்த மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைச் சொல்லுங்கள் என்று கேட்க, (இதனுடன் 19ஆம் செய்யுளையும் பார்க்க.)

சூரியன் சுக்கிரன்	லக்கினம் புதன்		
சந்திரன் சனி ராகு	இராசி சக்கரம்		
செவ்வாய்			கேது
குரு			

2. பார்வதி கேட்கும்போது பகருவார் பு(கு)சண்டர்தானும்
சீர்புக ழாண்பால்சென்மம் செப்புவோ மிவன்தன்னில்லம்
கூறிய கீழ்மேல்வீதி குணமுடன் வடக்குவாடை
தேறிய கிழக்கிலேதான் செப்புவோம் கன்னிகோயில்.

2. இப்படி பார்வதி கேட்கும்போது, பு(கு)சண்டர் சொல்லலுற்றார். இந்த ஜாதகம் சீரும் சிறப்பும் பெற்ற ஆண்மகனுடையது. இவனது வீட்டின் விவரம் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில், வடக்குப்பார்த்த வீடு. கிழக்குப் பக்கம் கன்னிகாபரமேசுவரி கோவில்.

3. மேற்கினில் [3]தந்தியப்பன் மெல்லியாள் கோவிலுண்டு
தீர்க்கமாம் ...புமுண்டு தெற்கினில் நதியுமுண்டு
ஏற்கவே பலதெய்வங்கள் இலகிடும் அவ்வூர்தன்னில்
ஆர்க்கவே பேரூர்தன்னில் அவனுமே வாழ்வானென்றோம்.

---

1. மீனம்
2. குரு
3. பரமேசுவரன்

3. மேற்கே சிவனின் (யானை முகத்தோனின் பிதாவின்) கோவிலும் அம்மன் கோவிலும் உண்டு. இப்படிப் பல தெய்வங்களின் வாசஸ்தலமாகி விளங்கிடும் அவ்வூரில், மகிமை மிக்க பேரூர் தன்னில், ஜாதகனுமே வாழ் வான் என்று சொல்லுவோம்.

4. இவனுட யோகச்செய்கை இசைந்ததாய் தந்தையோகம்
அவனியில் துணைவர்யோகம் அவன்புத்திர களத்(தி)ர [யோகம்
கவனமாய் முன்பின்சென்மம் கழறுவோ மின்னூல் [தன்னில்
சிவனிடப் பாகத்தாளே செல்வியே மேலும்கேளே.

4. இவனுடைய யோகச் செய்தி விவரங்களும், பொருந்திய தாய் தந்தையர் யோகமும், உடன் பிறந்தார் யோகமும், மனைவி மக்கள் யோகமும், கவனமாய் அவனுடைய முன்பின் ஜன்மங்களின் விவரமும், இந்தப் புஸ்த கத்தில் விவரமாய்க் கூறுவோம். பரமசிவனுடைய வாமபாகதிலமர்ந்த வளே! இலட்சுமியே! கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தையாங்கள் சாற்றுவோம் சிவந்தமேனி
பந்தமாய் வாயுதேகன் பாரினில் யூகையுள்ளான்
வந்தவர்க் கன்னமீவன் வாக்குகள் சுத்தமுள்ளான்
சிந்தையில் கபடமில்லான் சனங்களுக் குதவிசெய்வன்.

5. இவனுடைய தகப்பனாரின் குணங்களைச் சொல்லுவோம். சிவப் பான சரீர முடையவன். வாயுப் பிடிப்புள்ள தேகத்தை யுடையவன். உலகினில் நல்ல புத்திகூர்மை யுடையவன். வந்த விருந்தினருக்கு அன்னங் கொடுத்து உபசரிப்பான். சுத்தமான வாக்குகளை யுடையவன். மனதில் கபடமில்லாதவன். பொது ஜனங்களுக்கு ஒத்தாசை செய்வான்.

6. சிவபூசை செய்வானுகும் திருமகள் வாசமுள்ளான்
நவமதில் பொய்கள்பேசான் நாட்டினில் கீர்த்தியேற்பான்
தவமுடை யோர்க்குஅன்பன் தாட்சிணியன் கனவானுகும்
அவனியில் சுகபுசிப்பன் அம்மையே மேலும்கேளே.

6. சிவபூஜை செய்வான். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். உல கில் பொய் வார்த்தை பேசமாட்டான். உலகில் புகழ் பெறுவான். தபசி களுக்குப் பிரியமானவன். தாட்சிணிய புத்தி யுடையவன். கனவான் என்று சொல்லாம். பூமியில் சுகமாகச் சாப்பிடுவான். அம்பிகையே! மேலும் கேட்பாயாக.

7. பந்துவும் மெச்சவாழ்வன் பாரினில் தனங்கள்சேர்ப்பன்
சொந்தமாய்ப் பூமிசேர்ப்பன் சொல்லது தவருனென்ருேம்
நல்லவர் பலர்களாலே நாட்டினில் மேன்மையுள்ளான்
இல்லையென் றுரைக்கமாட்டா னெதிரியை வசியம்
[செய்வன்.

7. சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். உலகில் சொத்துக்களைச் சேர்ப்பான். சொந்தத்தில் நிலபலங்கள் வாங்கிச் சேகரிப்பான். சொன்ன சொல் தவறமாட்டான் என்ருேம். நல்லவர் பலரின் மேன்மையான அபிப்பிராயங்களாலே இவனும் மேன்மை யடைவான். யாசிப்போருக்கு இல்லை என்று சொல்லமாட்டான். எதிரிகளைத் தன்வசப் படுத்துவான்.

8. கல்வியும் உடையனுவன் கனதன ரேகையுள்ளான்
தொல்லையு முடையனுவன் சுந்தரி தன்னுல்யோகம்
இல்லறம் புதிதாய்ச்செய்வன் எவர்களும் மெச்சவாழ்வன்
வல்லவன் சுசீலமுள்ளான் வரைகுருேம் மேலும்கேளே.

8. நல்ல படிப்பும் உடையவன். கையில் தனரேகை யுடையவன். சிரமங்களும் உடையனுவன். பெண்டாட்டியினுல் அதிக யோகங்களைப் பெறுவான். இல்லற தர்மத்தை நூதனமாய் நடத்துவான். யாவரும் தன்னை மெச்சும்படி வாழ்வான். சாமர்த்தியசாலி. நல்ல சீல முள்ளவன். இன்னும் கூறுவோம். கேட்பாயாக.

9. இன்னவன் துணைவர்தம்மை இசைகுருே வாண்பா
[லொன்று
கன்னியும் அவனுக்கில்லை கண்டிடில் [1]அரிதம்காணும்
அன்னமே துணைவன்சேதி அறைகுருேம் விபரமாகத்
தன்னிலே யூகைகொஞ்சம் சந்ததி இல்லானென்ருேம்.

9. இவனுடைய சகோதரத்தைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் ஒருவன். அவனுக்கு சகோதரி இல்லை. ஏற்பட்டாலும் சேதமாகும். தாயே! இவனுடைய செய்திகளை விவரமாகக் கூறுவோம். தன்னிலே புத்தி கூர்மை யுடையவன். சந்ததிகள் இல்லாதவன் என்று கூறுவோம்.

10. மனைவியா லவமானத்தன் வரும்சுகம் குறைச்சலுள்ளான்
இணையிலாக் கோபமுள்ளான் இவன்மன வேதையுள்ளான்
கனமுளோர் நேசம்கொள்ளான் கல்வியு முடையனுவன்
வினைகளும் கபடுமுள்ளான் மெல்லியே மேலும்கேளே.

---

1. அரிஷ்டம்

10. மனைவியினால் அவமான மடைவான். சுகம் அவ்வளவு அதிகமாக இல்லை. அடங்காத கோபத்தை யுடையவன். மனதில் வேதனை யுள்ளவன். கௌரவமுள்ளவர் சிநேகத்தைக் கொள்ளுவான். படிப்பு முடையவன். வினைக்கட்டுகளும் கபடங்களு முடையவன். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

11. இப்படி இருக்கும்தந்தை இவனுக்கு உதித்தபாலன்
செப்புவோம் பலன்கள்யாவும் சிவந்திடு மேனியாவன்
மைப்படி ஸ்ரீ[ஸ்திரீ]கள்மோகன் மறுமொழி அதிகம்கூர்வன்
தப்பிதம் எண்ணுநெஞ்சன் தயையுளான் யூகைசாலி.

11. இவ்வித குணங்களை யுடைய தந்தைக்கு நம் ஜாதகன் புத்திர னாய்ப் பிறப்பான். இவனுடைய பலன்களை யெல்லாம் கூறுவோம். சிவந்த சரீரத்தை யுடையவன். ஸ்திரீ லோலனுவன். பதில்கள் விவர மாய்க் கூறுவான். தப்பிதம் என்பது மனதில் உதிக்காதவன். தயாள குணமுடையவன். புத்தி கூர்மை யுள்ளவன்.

12. வித்தையு முடையனுவன் வீண்வார்த்தை அதிகம்பேசான்
பத்தினி நேயமுள்ளான் பந்துவும் மெச்சவாழ்வான்
நித்தியம் சுகபுசிப்பன் நிதானமாய் வார்த்தைகூர்வன்
தத்திய நெய்பாலிஷ்டன் தைரிய மனத்தனுமே.

12. நல்ல படிப்பாளி. அனுவசியமான வார்த்தைகளைப் பேசமாட் டான். பெண்டாட்டியிடத்தில் நேச முள்ளவன். சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். தினந்தோறும் சுகமாகச் சாப்பிடுவான். நிதான மாகச் சம்பாஷிப்பான். தயிர், நெய், பால் இவைகளை உண்பதில் பிரியப் படுவான். மனதில் தைரிய முடையவன்.

13. ஆள்கார ருடையனுவன் அவன்பூமி அதிகம்சேர்ப்பன்
வாள்விழி மனையாளொன்று வகுக்குறோம் இவனுக்கேதான்
காளைகள் தோஷமுள்ளான் கரமதில் சங்குசக்கரம்
நீள்பூமி தன்னிலேதான் நிருபனும் செட்டுச்செய்வன்.

13. அதிக வேலையாட்களை யுடையவன். அதிகமாகப் பூஸ்திதிகளைச் சேர்ப்பான். வாளைமீனைப்போன்ற நேத்திரங்களை யுடைய பெண்டாட்டி ஒருத்தியுண்டு என்று இவனுக்கு வகுத்துக் கூறுவோம். ஆண் பிள்ளைகள் பிறந்து தோஷமடையும். கையில் சங்கு ரேகை, சக்கர ரேகை இவைகளை யுடையவன். பரந்த உலகத்திலேதான் இவன் வியாபாரம் செய்வானுகும்.

14. பால்பாக்கிய முடையனுவன் பந்துவுக் கினியனுவன்
கால்கரம் வலுவுமுள்ளான் கனத்தகூ டுடையனுவன்
சீலமா சாரமுள்ளான் சித்தினி சாதியாவன்
வேலனைப் பெற்றமாதே மெல்லியே மேலும்கேளே.

14. பால் பாக்கிய முடையவன். சொந்தக் காரர்களுக்குப் பிரிய மானவன். கைகால்களில் பல முள்ளவன். உஷ்ணத்தினுல் உபாதை யடைவான். சீல முள்ளவன். ஆசாரமுறைப்படி நடப்பவன். சித்தர்களைப் போல் மேல்நோக்குடையவன். வேல் முருகனைப் பெற்ற பார்வதியே! மேலும் கேட்பாயாக.

15. நடையது துருசுமுள்ளான் நன்முக வடிவுமுள்ளான்
மடையரை நேசம்கொள்ளான் வாக்குகள் தப்பானுகும்
அடைமொழி அதிகம்கூருன் பொருளையும் போற்றுவானும்
திடமதாய்க் குடும்பமுள்ளான் செல்வியே மேலும்கேளே.

15. சுறுசுறுப்பான நடத்தையை யுடையவன். நல்ல முக லக்ஷணத்தை யுடையவன். மூளை இல்லாதவர்களை நேசிக்க மாட்டான். சொன்ன வார்த்தைப்படி நடப்பான். அடைமொழிகளை அதிகமாக உபயோகப்படுத்த மாட்டான். பொருள் தன்னைப் போற்றுவானுகும். சுகமான குடும்பத்தை யுள்ளவன். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

16. இவனுட துணைவர்தம்மை இயம்புவோ மாண்பால் [காணும்
அவனியில் கன்னிரண்டு அறைகுருேம் தீர்க்கமாக
நவமதில் மணத்தின்காலம் நாட்டுவோம் இருபான்ரண்டில்
கவனமாய்த் தட்சிணத்தில் கன்னியும் வருவாளென்றுேம்.

16. இவனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். சகோதரன் இல்லை. உலகில் இரு தங்கைகள் உண்டு. இவர்கள் தீர்க்கம். உலகத்தில் இவனுடைய கலியாண காலத்தை எடுத்துரைப்போம். இவ னுடைய இருபத்திரண்டாம் பிராயத்தில் தெற்குத் திக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள் என்றுேம்.

17. அவள்குணம் சிவந்தமேனி ஆளனுக் கினியளாவள்
தவமுடை யோர்க்குஅன்பள் தயாளமாம் குணத்தாளாகும்
கயவரை மனதிலெண்ணுள் கற்புளாள் பொறுமைசாலி
நயமான வார்த்தைகூர்வள் நாயகி அதிருஷ்டசாலி.

17. அவளுடைய குணங்களை எடுத்துக் கூறுவோம். சிவப்பான சரீர முள்ளவள். புருஷனுக்கு இனிமையாய் நடப்பாள். சிவனடியார்களுக்கு அன்புடன் ஒத்தாசை செய்வாள். தயாள குணமுள்ளவள். அல்பரை

மனதிலும் நினைக்க மாட்டாள். கற்புடையவள். பொறுமை யுடையவள். நயமுள்ள வார்த்தைகளைக் கூறுவாள். இவள் நல்ல அதிர்ஷ்டசாலி எனலாம்.

18. சாதகன் தனக்குப்புத்திரர் சாற்றவே பலத்தைக்காணும்
தீதிலாப் புசண்டர்சொல்லச் செயமுனி கூறுகின்றார்
மேதினில் புத்திரரில்லை விளம்பின காரணத்தை
ஓதுவீர் என்றுகேட்க உரைக்குறார் புசண்டர்தானும்.

18. ஜாதகனுடைய புத்திரபாவத்தை எடுத்துச் சொல்லுவோம் என்றால், அதற்கேற்ற பலமொன்றும் இல்லையே. குற்றமற்ற புசண்டர் இவ்வாறு கூற, ஜயமுனி பின்வருமாறு கூறலுற்றார். உலகில் இவனுக்குப் புத்திரரில்லை என்று சொன்னீர்களே? அப்படிச் சொல்லக் காரணமென்ன? என்று சொல்லுங்கள், என்று கேட்க, புசண்டரும் சொல்லலுற்றார்.

19. அஞ்சினில் பாம்புநிற்க அறவுமே காலிபார்க்கப்
பஞ்சமன் விரயமாகப் பகருவோம் முன்னூழ்தன்னால்
துஞ்சிடு மதலைஎன்றோம் சொல்லுவாள் அம்மன்தானும்
மிஞ்சிய முன்னால்ஊழி விளம்புவாய் என்றுகேட்டாள்.

19. இலக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் கேது நிற்க, அவனைச் சனியும் பார்க்க, பஞ்சமஸ்தானாதிபதியாகிய சூரியன் விரயஸ்தானத்திலிருக்க, பண்டை ஊழ்வினையின் காரணமாகப் புத்திர தோஷம் ஏற்படும் என்றோம். இதைக் கேட்ட பார்வதி, முனிவரைப் பார்த்து, முன் காலத்தில் இவன் செய்த பெரிய பிராரப்தவினை என்ன, என்று சொல்லுவீர்கள் என்று கேட்கலானாள்.

20. சாதகன் முன்சென்மத்தைச் சாற்றுவோம் சோழநாட்டில்
மேதினில் யாழிபக்கல் விளங்கிய பேரூர்தன்னில்
தீதிலா சூத்திரவமிசம் செனித்தவர் இவரேயம்மா
போதக வானைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

20. ஜாதகனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். சோழவள நாட்டிலே, சமுத்திரக்கரை யோரத்தில் விளங்கும் தேரோடும் ஊரில், குற்றமற்ற சூத்திர வமிசத்தில் ஜனித்தவன் இவன்தானம்மா. யானைமுகத்தோனைப் புதல்வனா யடைந்த புண்ணியவதியான பார்வதியே! கேட்பாயாக.

21. அங்கர் நதியின்பக்கல் அணுகிய அரசின்கீழே
தந்தியும் நாகம்நிற்கும் தானவர் வாசம்செய்வர்
மந்திரம் ஓதும்வேத மறையவர் பூசைசெய்வார்
மன்னனும் நிசியிலோர்நாள் மங்கிலிய மின்றிப்பெண்ணை[1],

1. கைம்பெண்

21. அவ்வூரின் நதிக்கரையிலுள்ள அரசமரத்தின் அடியில் பிள்ளையாரும், நாகர்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றர். அது பெரிய தெய்வங்களின் வாசஸ்தானம். அது மந்திரங்களை ஜபிக்கும் வேதநாயகரான வேதியர் பூசைகள் செய்யுமிடம். இப்படிப்பட்ட விசேஷ ஸ்தலத்தில், ஓர் இரவில், ஒரு விதவையை,

22. இன்னவன் போகம்துய்க்க இதுஒரு தோஷமுண்டாய்
அன்னமே அதுவல்லாமல் அவன்கிர கத்திலேதான்
மன்னிய நாகமொன்றை மரணமே செய்துவிட்டான்
இந்தவார் நாகசாபம் இலகிற்று இவனுக்கேதான்.

22. நம் ஜாதகன் போகங்களை அனுபவிக்க, அஃது ஒரு தோஷமாக ஏற்பட்டது. இதுவுமல்லாமல், அவன் வீட்டிலே வந்த நாகப்பாம்பை, சாக அடித்து விட்டான். இவ்விதம் நாகசாபம் இவனுக்கு ஏற்பட்டது.

23. ஆகையால் அச்சென்மத்தில் அவன்மனை யாளும்மாண்டு
போகமும் குறைச்சலாகிப் புண்ணியன் சேதுக்கேகிப்
பாகமாய்த் தீர்த்தம்தோய்ந்து பலவித ஆலயங்கள்
ஏகனாய்த் தரிசித்தேதான் இவனுமே உள்ளூர்மீண்டு,

23. ஆகையால், அந்த ஜன்மத்தில் அவன் மனைவியும் இறந்துபோக, போக்கியங்களும் குறைவடைந்து, இப்புண்ணியவான் இராமேசுவரம் சென்று, சேதுஸ்னானம் செவ்வையாய்ச் செய்து, பலவிதமான கோவில்களுக்குத் தனியேபோய்த் தரிசனம் செய்து, திரும்பவும் தன்னூருக்கே வந்து,

24. வருவோர்க்கு அன்னமீந்து வரன்பூசை அதிகம்செய்து
உருமையாய் மரணமாகி உரைந்தனன் இவனேயம்மா
பெருமையா யிச்சென்மத்தில் பூருவ தோஷம்தானும்
உரமுட னுரைந்ததாலே உரைத்திட்டோம் புத்திர
[தோஷம்.

24. வந்த விருந்தினர்களுக்கு அன்னதானம் செய்து, சிவபூசை அதிகமாய்ச் செய்து, ஒழுங்காக மரணமடைந்தான். பெருமையாக இந்த ஜன்மத்திலே முன்செய்த ஊழ்வினை வந்து சேர்ந்தது. அது வலுவாக இவனைப் பாதித்ததனாலே புத்திரதோஷம் ஏற்பட்டது என்று சொன்னோம்.

25. இந்ததோர் தோஷம்தீர இசைகுரோம் கிரிகைஒன்று
மைந்தனும் அரசுவைத்து வளமுடன் நாகம்செய்து
சொந்தமாய்ப் பிரதிஷ்டைசெய்தால் துலங்கிடும் புத்திரர்
[தானும்
இந்தவார் செய்யாதாகில் இலகாது புத்திரர்தானும்.

25. இந்த தோஷம் தீருவதற்காக ஒரு பரிகாரம் சொல்லுகிறோம். ஓர் அரசமரத்தை வைத்து, அதனடியில் ஒரு நாகர்செய்து சொந்தமாய்ப் பிரதிஷ்டை செய்தால், புத்திரன் பிறப்பான். இப்படியெல்லாம் செய்யாமலிருந்தால் புத்திரனே பிறக்கான்.

26. தந்தையின் முன்சென்மத்தைச் சாற்றுவோம் வேலங்
[காட்டில்
வந்ததோர் பிரம்மசேயாய் மனைவிமைந் தருமுண்டாகிச்
சொந்தமாய்ப் பூமிபெற்றுச் சுகமுடன் வாழ்ந்துபின்பு
விந்தையாய் மரணமாகி விளங்கினன் இவனின்தந்தை.

26. தந்தையின் முன் ஜன்மத்தைக் கூறுவோம். வேலங்காட்டில் பிராமணக் குழந்தையாய் அவதரித்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, சொந்தத்தில் நிலம்வாங்கி, சுகமாக வாழ்ந்து, பிறகு மரணமடைந்தான் இவனுடைய தந்தை.

27. முனிவரிவ் வாறுய்க்கூற மொழிகுவள் அம்மன் தானும்
அனையவே முன்சென்மத்தில் அந்தணர் குலமுதித்துத்
தனிகனும் வாழ்ந்தானென்றீர் தானவன் இச்சென்மத்தில்
கனிவுசெங் குந்தர்வமிசம் காவலன் உதித்ததென்ன.

27. இவ்விதம் முனீசுவரர் சொல்ல, அம்மன் பின்வருமாறு வினவினள். போன ஜன்மத்தில் அந்தணர் குலத்திலுதித்து, பணக்காரனாக வாழ்ந்து வந்தான் என்று சொன்னீர்கள். அவன் இந்த ஜன்மத்தில் செங்குந்தர் வமிசத்தில் என் உதித்தனன் ?

28. அறைகுவீ ரென்றுகேட்க அருளுவார் புசண்டர்தானும்
மறைகளை முன்சென்மத்தில் மைந்தனுமோ தாததாலே
உரிமையாய் இக்குலத்தில் உதித்தவன் இவனின்தந்தை
திறமையாய்ப் பின்சென்மத்தைச் செப்புவோம் விரிஞ்சி
[நாட்டில்.

28. இதன் காரணத்தைச் சொல்லுங்கள், என்று வினவ, புசண்டர் பின்வருமாறு புகலுவார். இவன் போன ஜன்மத்தில் வேதங்களைப் படிக்காததாலே இக்குலத்தில் வந்துதித்தனன் இவனுடைய தந்தை. திறமையுடன் இவனுடைய பின் ஜன்மத்தைக் கூறுவோம். விரிஞ்சிபுரத்தில்,

29. வைசிய குலமுதித்து மனைவிமைந் தருமுண்டாகிப்
பெருமையாய் வணிபம்செய்து பிரபல கீர்த்திபெற்றுத்
திறமையாய் வாழ்வானம்மா சயமுனி கூறுகின்றார்
அருமையாய் மாதுர்சேதி அறைகுவீர் என்றுகேட்டாள்.

29. வைசிய குலத்திலுதித்து, மனைவிமக்கள் ஏற்பட்டு, பெருமையுடன் வியாபாரம் செய்து, பிரபலமான புகழ்பெற்று, மேன்மையாய் வாழ்ந்து வருவான் என்று ஜயமுனிவர் கூறுவார். அருமையாய் மாதாவின் செய்தியை விவரமாய்க் கூறுவீர் என்று கேட்டாள்.

30. மாதுரு குணத்தையாங்கள் வரைகுவோம் சிவந்தமேனி
தீதிலா குணத்தளாகும் செப்புநன் னடக்கையுள்ளாள்
பாதகமொருவர்க்கெண்ணாள் பகைவரை மனதிலெண்ணாள்
கோதிலா வரனுக்கேதான் குணம்போலே நடப்பாளென்
[றோம்.

30. மாதாவின் குணங்களை நாங்கள் கூறுவோம். சிவப்பான சரீரமுடையவள். குற்றமற்ற குணமுடையவள். நல்ல நடத்தையை யுடையவள் என்று பலர் சொல்லுவார்கள். பிறருக்கு யாதொரு இடைஞ்சலும் செய்ய நினைக்கமாட்டாள். புருஷனுடைய குறிப்பறிந்து நடக்கும் இயல்பினள்.

31. வருவோரை ஆதரிப்பாள் மனதினில் கபடுமில்லாள்
பெரிதான குணமுமுள்ளாள் பிஞ்சகன்[1] தனைத்துதிப்பாள்
திறமையாய் அடக்கமுள்ளாள் திருமகள் ஒப்பதாகும்
அருமையாய் முன்சென்மத்தை அறைகுவோ மிவளுக்கே
[தான்,

31. வந்த விருந்ினரை ஆதரிப்பாள். மனதில் கபடு இல்லாதவள். மேலான குணங்களை யுடையவள். பரமசிவனைத் துதிசெய்வாள். நல்ல அடக்கமுள்ளவள். இலட்சுமீதேவியைப் போன்றவள். அருமையாக அவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம்.

32. இன்னவள் முன்செென்மத்தை இயம்புவோம் பாண்டி
[நாட்டில்
வன்னிய மரபில்தோன்றி மைந்தரும் முள்ளாளாகிப்
பொன்னோடு பணிபெற்றுப் புகழ்ச்சியாய் வாழ்ந்துபின்பு
மன்னுசொக் கேசருக்கு மவளுமே பணிகள்செய்து,

32. இவளுடைய முன் ஜன்மத்தில் பாண்டியநாட்டில் வன்னியர் குலத்திலுதித்து, குழந்தைகளும் ஏற்பட்டு, பொன்னொடு பூஷணங்கள் பெற்று, புகழுடன் வாழ்ந்து, பின்பு சொக்கநாதஸ்வாமிக்கு அவளுமே வழிபாடுகள் செய்து,

---

1. சிவன்

33. வருவோர்க்கு அன்னமீந்து வன்மையாய்த் தண்ணீர்ப்பந்தல்
பெருமையாய் வைத்துப்பின்பு பிரபல கீர்த்திபெற்றுச்
சிறுமையும் இல்லாளாகிச் சென்றனள் சேதுக்கேதான்
அருமையாய் இராமலிங்கம் அருச்சித்து உள்ளூர்மீண்டு,

33. வந்த விருந்தினருக்கு அன்னதானம் செய்து, ஒழுங்காய்த் தண்ணீர்ப்பந்தல் பெருமையுடன் வைத்து, பின்பு பிரபலமான கீர்த்திகளையடைந்து, யாதொரு சிரமமும் இல்லாமல் சேதுஸ்நானம் செய்து, இராமலிங்கத்திற்கு அபிஷேக அருச்சனைகள் செய்து, உள்ளூருக்குத் திரும்பி,

34. அநாயாச மரணமாகி அவளுமே இச்சென்மத்தில்
கனமுள இக்குலத்தில் காதலி பிறந்தாளம்மா
இனங்களை ஆதரிப்பாள் இவளுட பின்சென்மத்தை
அனையவே சொல்லுகின்றோம் அம்மையே மேலும்கேளே.

34. சிரமில்லாமல் சுலபமாக மரணத்தையடைந்து, அவளும் இந்த ஜன்மத்தில் கௌரவம்மிக்க இந்தக் குலத்தில் பிறக்கலானாள். சொந்தக்காரர்களை ஆதரிப்பாள். இவளுடைய பின் ஜன்மத்தைப் பொருந்தவே சொல்லுகின்றேன். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

35. தில்லைமா நகரம்தன்னில் செல்வதி கங்கைவம்சம்
மெல்லியு முதிப்பாளென்றோம் வித்தகர் சொல்லும்போது
அல்லலைத் தவிர்க்குகின்ற அம்மையும் கேட்கலுற்றாள்
நல்லதோர் கன்மகாலம் நவிலுவீர் என்றுகேட்டாள்.

35. சிதம்பரஸ்தலத்தில் வேளாளர் வமிசத்தில் இவள் பிறந்தாள். இப்படி முனிவர் சொல்லும்போது, துன்பத்தைப் போக்குகின்ற பார்வதி, இவளுடைய கருமகாலத்தைக் கூறுங்கள், என்று கேட்டாள்.

36. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் முப்பானேழில்
பின்னையும் அன்னைகாலம் பேசுவோம் அதின்மேல்மூன்று.

36. தந்தையின் மரணகாலத்தைக் கூறுவோம். அஃது இவனுடைய முப்பத்தேழாவது வயதில் ஏற்படும். அதற்குமேல் மூன்று வருஷங்கள் கழித்து அன்னையின் மரணம் ஏற்படும்.

ஜாதகம் 58

1. மதிகுடம் ராகுமானின் மங்களன் மேருவாக
விதிபுந்தி புகர்பொன்கேது மேவிடம்[1] அளவனாக
உதயனும் மிதுனமாக உயிரது[2] மேடமாக
அதுபலன் புகலுமென்று அம்பிகை கேட்கலுற்றாள்.

1. சூரியன் மிதுனத்திலும், சனி புதன் கேது குரு சுக்கிரன் இவர்கள் கடகத்திலும், செவ்வாய் தனுசிலும், ராகு மகரத்திலும், சந்திரன் கும்பத்திலும் நிற்க இவ்வித கிரக நிலை கொண்ட இம் மேஷ லக்ன ஜாதகத்திற்கு உண்டான பலா பலன்களைச் சொல்லுங்கள் என்று அம்பிகை கேட்க லுற்றாள்.

	லக்கினம்		சூரியன்
சந்திரன்	இராசி	சக்கரம்	சனி புதன் கேது குரு சுக்கிரன்
ராகு			
செவ்வாய்			

2. குருமுனி புகலுகின்றார் குறித்தது ஆண்பால்ஜென்மம்
வருமில்லம் கீழ்மேல்வீதி வாசலும் வடபாலாகும்
பிரிதிஉ தலைமையென்றோம் பெரியதீ தென்பாலாகும்
வருகுவான் சேஷ்டனாக வர்க்கமோ கர்ணசேயாய்.

2. அகஸ்தியர் பின்வருமாறு சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஓர் ஆண் மகனது. அவன் பிறக்கும் வீடு கிழக்குமேற்குத் தெருவில் வடக்குப் பார்த்த வாசலுடையது. அஃது உலகில் மேன்மையான ஊராகும். அக்கினி பகவான் தெற்குத்திக்கில் கோவில் கொண்டுளார். ஜாதகன் ஜேஷ்டனாக வந்துதிப்பான். கணக்கர் வமிசத்தில் பிறப்பான்.

---

1. கடகம்
2. ஜன்ம லக்கினம்

3\. இன்னவன் ஜெனனயோகம் எழில்பெரும் தந்தையோகம்
அன்னையின் துணைவர்யோகம் அவன்மனைப் புத்திரயோகம்
முன்பின்ஜென் மங்கள்யாவு முரைக்குறே மின்னூல் [தன்னில்
கன்னென மொழியையொக்கும் காதலி கேட்டிடாயே.

3\. இவனுடைய ஜனனகாலத்துயோகமும், பெருமைபொருந்திய தந்தையின் யோகமும், தாய் சகோதரர் யோகமும், மனைவி மக்கள் யோகமும், முன்பின் ஜன்மங்கள் எல்லாவற்றையும் இப்புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுகின்றோம். கனிந்த மொழிகளையுடைய காதலியே! கேட்பாயாக.

4\. தந்தையின் துணையாண்தோஷம் சத்திமார் நால்வராகும்
எந்தக்கார ணத்தினாலே இவன்துணை ஆண்பால்தோஷம்
துன்மையாய் நவத்தில்சேயும் தொடர்ந்ததால் தோஷம் [சொன்னோம்
சந்ததம் பிதாகுணத்தைச் சாற்றுவோம் தாயேகேளும்.

4\. தந்தையின் சகோதரன் தோஷத்தை யடைவான். சகோதரிகள் நான்கு பேர்களாகும். எந்தக் காரணத்தினால் இவன் சகோதரன் தோஷம் ஏற்படும் என்று வினவ, துன்பமான ஒன்பதாமிடத்தில் செவ்வாய் தங்குவதால் தோஷம் என்று சொன்னோம். பிதாவின் குணத்தைச் சாற்றுவோம். பார்வதியே! கேட்பாயாக.

5\. [1]கோல்ராசி பரணிநாளில் குதிப்பனும் யூகைசாலி
நீள்புவி விருத்திசெய்வன் நேமியில் புகழுமேற்பன்
காலத்தை அறிந்துரைப்பன் கல்விமான் கணக்கில்யூகி
ஆலம்போல் பகைவருக்கு அவனுமே கருடனாவன்.

5\. துலாராசி, பரணி நட்சத்திரமுள்ள நாளில் உதிப்பனும் இந்தப் புத்திகூர்மை யுள்ளவன். பரந்த நிலபலங்களை விருத்தி செய்வான். உலகினில் கீர்த்தியைப் பெறுவான். காலபலன்களை நிர்ணயித்துக் கூறுவான். கல்விமான். கணக்கில் புத்திசாலி. பகைவருக்கு அவன் கருடனைப் போல் பயமுறுத்தக் கூடியவன்.

6\. வஞ்சக வஞ்சனாவன் வருமுகன் பத்திபூண்பன்
செஞ்சொலின் நுணுக்கம்தேர்வன் தீரமாம் மனத்தனாகும்
வஞ்சியர் மோகனாவன் மாடுகள் பனையோர்விருத்தி
நஞ்சுபோல் மனமும்கொஞ்சம் நற்கிராமக் கணக்குவேலை.

1\. துலாம்

6. வஞ்சகர்க்கு வஞ்சகம் செய்வான். ஆறுமுகன் பக்தி பூண்பான். அருமையான சம்பாஷணையின் தத்துவத்தை அறிவான். தைரியமுள்ள மனமுடையவன். ஸ்திரீலோலனானவன். மாடுகள், பண்ணையாட்கள், ஏர் இவைகளின் விருத்தியுள்ளவன். கொஞ்சம் இடைஞ்சலான புத்தியுடையவன். நல்ல கிராமக்கணக்குகள் பார்க்கும் வேலையை,

7. செய்குவான் அறத்திலிச்சை செலவுக ளுடையனாகும்
வையமேல் நல்லோனென்பர் மருவிடும் பித்தசூடு
மையுறு மணியும்பொன்னும் கிறற்சியாய்த் தேடவல்லன்
பொய்மையாய்ப் புகல்வனாகும் புண்ணிய தலங்கள்
[செல்வன்.

7. செய்வான். தருமஞ்செய்ய விரும்புவான். செலவுகளும் உடையவனாகும். உலகினில் நல்லவன் என்று பெயர் வாங்குவான். பித்தசூட்டின் உபத்திரவமுடையவன். பொன்னும் பூஷணமும் அபாரமாய்த் தேட வல்லவன். பொய்மையும் பேசவல்லவன். புண்ணிய ஸ்தலங்களுக்குப்போய் தரிசிப்பான்.

8. முன்னவ னிருந்தசென்மம் மொழிகுவோம் தோகைகீழ்பால்
உன்னத பேரூர்தன்னில் உதித்தனன் பிரம்மசேயாய்ப்
பொன்பொ ருளுடையனாகிப் பஞ்சாங்கத் தொழிலும்
[செய்து
தன்மனை மதலையுண்டாய்த் தரித்திரமில் லானாகி,

8. இவனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். தோகைக்குக் கிழக்கே மேலான பேரூரில் பிராமணக் குழந்தையாய் உதித்தான். பொன்னும் பொருளும் பெற்று, பஞ்சாங்கத்தொழிலையும் செய்து கொண்டு, மனைவி மக்கள் உண்டாகி, தரித்திரமில்லாமல்,

9. வாழ்நாளில் வினையைச் சொல்வேன் வேறுமாது
வரனின்றி தாயில்லம் வாசமாகும்
தாழ்வானோன் அவள்பேரில் மோகம் கொண்டு
சரசமாய் வார்த்தைசொல்ல இசையாளாகித்
தோழிசில நாள்சென்று தனியாய்ச் செல்ல
தூதுவனும் அவன்பின்னால் தொடர்ந்துமேதான்
பாழான காமத்தால் பலவந் தத்தால்
பாவைதனை போகமுற்றான் பயிங்கொடியுமேதான்,

9. வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட வினையைச் சொல்லுவோம். வேறு ஒரு ஸ்திரீ புருஷனில்லாமல் தாய் வீட்டில் வசித்து வரும்போது, இந்தக் கீழ்நோக்கான புத்தியுடையவன், அவள் மேல் மோகம் கொண்டு,

சரசமாய்ச் சம்பாஷணை நடத்த, இவனுடைய இஷ்டத்திற்கு அவள் ஒத்துக் கொள்ளாமல், தோழியானவள் சிலநாள் கழித்து, தனிமையாய்ச் செல்லும் போது தூதனும் அவள் பின்னால் தொடர்ந்து செல்ல, பாழான காமத்தின் வசப்பட்டு, பலவந்தம் செய்து, அப்பாவையுடன் போகம் துய்த்தான். அப் பைங்கொடியாளும்,

10. மனவருத்த முடன் துணையோ டிவ்வார் சொல்ல
வரிபோலக் கோபமுற்று மறையோன் பக்கல்
வினையதனைத் தான்புகலத் தூதன் தன்னால்
வீண்வம்பு செய்தவனை அழைத்துக் கேட்க
தனமவனால் தான்பெற்றுப் பெண்மேல் குற்றம்
சாற்றினான் அம்மாது தயங்கி யேதான்
தனமாசை ஆசையினால் என்மேல் குற்றம்
செப்பியதோர் பாவிக்கு மறுசென் மத்தில்,

10. மனவருத்தத்துடனே தோழியிடம் நடந்த விருத்தாந்தத்தை எடுத்துச்சொல்ல, ருத்திரமூர்த்தியைப்போல் கோபமடைந்து, பிராமணனிடம் வினையைப்பற்றி விவரித்துக்கூற, இவனும் ஒரு தூதுவன் மூலமாக வீண் வம்பு அடித்தவனை அழைத்துக் கேட்க, கைக்கூலிபெற்ற அவன் குற்றம் பெண்பேரில்தான் உளது என்று சொன்னான். அம்மாது தயக்கமுற்று, தனத்தினாசைக்கு வசப்பட்டு என்மேல் குற்றம்சாட்டிய பாவிக்கு அடுத்த ஜன்மத்தில்,

11. துணையாணு மில்லாமல் சுதர்பெண் ணின்றித்
தொல்புவியில் தான்வாழ்வா யென்று சொல்ல
வினையதுவே தான்சேர்ந்து மரண மாகி
வேதத்தோன் வரியவந்தான் இவனின் தந்தை
சினமில்லா அத்திரியும் மறுத்துச் சொல்வார்
செப்பினீர் முன்சென்மம் பிர்ம்ம சேயாய்க்
கனமில்லா இச்சென்மம் கர்ண னாகக்
கலந்தகா ரணம்புகல்வீர் முன்சென் மமதில்.

11. சகோதரனில்லாமலும் பெண்குழந்தையில்லாமலும் தொல்லுல கில் வாழக்கடவாய் என்று சொல்ல, வினையும் வந்து சேர்ந்தது. மரண மடைந்து, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு உதித்தான் இவனின் தந்தை. இதைக் கேட்ட அத்திரிமகரிஷி மறுத்துச் சொல்லலுற்றார். போன ஜன்மத்தில் பிராமணக் குழந்தையாய்ப் பிறந்து இந்த ஜன்மத்தில் கணக்கர் வமிசத்தில் கலந்ததன் காரணமென்ன? சொல்லுங்கள், என்று வினவ, போன ஜன்மத்தில்,

12. மறைகளில் விருப்பமின்றி மகாதலம் செல்லாதாலும்
குறைவான குலமுதித்தான் குழவிகள் துணைகள்காணுன்
உரைத்தஇக் குணத்தானுக்கு உதிப்பனும் இந்தபாலன்
விவரிப்போம் இவன்குணத்தை மங்கையே கேட்டிடாயே.

12. வேதங்களில் விருப்பமில்லாமல் மகத்தான ஸ்தலங்களுக்குப் போய்த் தரிசனம் செய்யாததனுலும், கீழ் ஜாதியில் பிறக்கலானுன். குழந்தைகள், சகோதரர் இல்லாமலிருப்பான். இவ்விதமுள்ள குணங்களைப்பெற்ற தந்தைக்கு நம் ஜாதகன் புத்திரனுய்ப் பிறப்பான். இவனுடைய குணங்களை விவரிப்போம். பார்வதியே! கேட்பாயாக.

13. இருநிறம் உயரமில்லான் இன்பச்சொல் யூகவானும்
தரையது விருத்திசெய்வன் தாட்சிணியன் கனத்தபுத்தி
மருவிடும் வாயுகொஞ்ச மரசர்கள் பேட்டிசின்னுள்
பறைபள்ளு முடையனுவன் பத்தினி நேயனுவன்.

13. பொதுநிற முள்ளவன். உயரமில்லாதவன். இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவான். புத்திகூர்மை யுள்ளவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். தாட்சிணிய குணமுள்ளவன். கௌரவமான புத்தியுடையவன். வாயுவின் உபத்திரவம் கொஞ்சமுடையவன். அரசர்களுடைய பேட்டி சிலநாள்களுக்குண்டு. பள்ளுப்பறை முதலான பரிஜனங்களை யுடையவன். பெண்டாட்டியினிடம் பிரியமாயிருப்பான்.

14. ரோமங்கள் நீட்சியில்லான் நுவலுப தேசம்கொள்வன்
காமனை விருப்பம்கொள்வன் கரமதில் விஷ்ணுரேகை
தாமத குணமும்கொஞ்சம் தந்தைக்குத் தாழ்வாம்கீர்த்தி
தீமையாம் குணமும்கொஞ்சம் தீரமர் மனத்தனுகும்.

14. நீளமான தலைமயிரில்லாதவன். உபதேசங்களைப் பெறுவான். காமாதுரனுயிருப்பான். கையினில் விஷ்ணுரேகையை யுடையவன். கொஞ்சம் தாமதகுணத்தை யுடையவன். தந்தைக்குத் தகுந்த கீர்த்தியை இவன் பெறவில்லை. கொஞ்சம் கெட்டகுணமு முடையவன். தைரியமுள்ள மனதை யுடையவன்.

15. நல்லவன் நல்லவர்க்கு லண்டர்க்கு மிண்டனுவன்
சொல்லது சுருக்கமாகும் சோம்பிடான் காரியத்தில்
சல்லிய மத்தில்கொஞ்சம் சார்ந்திடும் வறுமைகாணுன்
தல்லியால் பெருமையுண்டு சதுஷ்பாதம் விருத்தி
[யென்றேம்.

15. நல்லவர்களுக்கு நல்லவனுவன். போக்கிரிக்குப் போக்கிரியா யிருப்பன். சுருங்கச் சொல்லுமியல்பினன். காரியங்களைச் செய்வதில் சோம்பல் கிடையாது. மத்தியகாலத்தில் சொஞ்சம் கடனுண்டு. வறுமைப் பிணியே கிடையாது. தாயினுல் பெருமையுடையவன். நாற்கால் ஜீவன்கள் விருத்தியாகும் என்றேம்.

16. ஆறுமுகன் பத்திகொள்வன் அல்பரை உறவுகொள்ளான்
சிறுமையென் றேரைக்காப்பன் சித்திரம்[1] சிலர்க்குச்
[செய்வான்
மருவிடும் காலில்நோயும் வார்த்தையும் இரெண்டுமாகும்
பெருமையாய்த் தலங்கள்செய்வன் பிதுரில்லம்
[வாழானுகும்.

16. ஆறுமுகக்கடவுளிடம் பக்தி கொள்ளுவான். கேவலமானவர் களுடன் சிநேகம் செய்யமாட்டான். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான். சிலர்க்குப் புகழ் அளிப்பான். காலில் வியாதி ஏற்படும். வார்த்தைகள் பேசுவதில் இரண்டுவித அர்த்தங்கள்படும்படி பேசுவான் பெருமையுடன் ஸ்தலங்களுக்குப்போய்க் கடவுளைத் தரிசிப்பான். பிதாவின் வீட்டில் போய் வசிப்பான்.

17. தன்துணை தோஷமெய்தும் தனியனுய் வாழ்வானுகும்
என்னகா ரணத்தினுலே இவன்துணை தோஷம்சொன்னீர்
துன்மையாய் மூன்றில்பானு தொடர்ந்ததால் துணைவர்
[தோஷம்
மன்னவன் மணத்தின்பூர்வம் வரைகுறேம் இனிமேலாக.

17. தன் சகோதரன் தோஷத்தை யடைவான். தன்னந்தனியனுய் வாழ்வான். என்ன காரணத்தினுல் இவன் துணைவன் தோஷமடைவான் என்று சொன்னீர்? மூன்ரும் இடத்தில் சூரியன் இருப்பதனுல் துணைவர் தோஷம் ஏற்பட்டது. ஜாதகனுடைய கலியாண காலத்தைப்பற்றி இனிக் கூறுவோம்.

18. மூவெட்டு ஆண்டுக்குள்ளே மேவிடும் தென்மேல்பாரி
பாவையின் குணத்தைச்சொல்வேன் பதரினில் செல்லா
[ளாகும்
தாவினேர்க் குதவிசெய்வள் தன்வரன் மனதுக்கேத்தோள்
நாவது சுத்தமுண்டு நடைநன்மை சீலியாகும்.

---

1. புகழ்.

18. இவனுடைய இருபத்துநான்காம் வயதிற்குள் தென்மேற்கி லிருந்து பெண்டாட்டி வருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுவேன். கெட்ட காரியங்களில் பிரவேசிக்கமாட்டாள். அண்டினவரைக் காப்பாற்று வாள். புருஷனுக்குப் பிரியமாக நடப்பாள். வாக்குச் சுத்தமுண்டு. நல்ல நடத்தை யுண்டு. சீலமுள்ளவள்.

19. அன்னம்போல் சாயலொக்கும் அடாபடி கூறுளாகும்
அன்னமும் அன்பாயீவள் அடிசிலுக் கினியளாகும்
அன்னியர் குற்றம்சொல்லா ளரன்தொண்டு புரிவோளாகும்
அன்னியர் மதிக்கவாழ்வள் அணுகிடும் நாபிசூடு.

19. அன்னம்போன்ற சாயையுடையவள். அடாபடிப் பேச்சுகள் பேசமாட்டாள். அன்னதானமும் பிரியத்துடன் செய்வாள். சமையல் நன்ருய்ச்செய்வாள். பிறர்மேல் குற்றம் கூறமாட்டாள். பரமசிவனுக்கு வழிபாடுகள் செய்வாள். பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். மூலச் சூட்டின் உபத்திரவம் உடையவள்.

20. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலமுறுது
சுத்தமாய்க் கன்னியொன்று தீர்க்கமாம் என்றுசொல்வோம்
குத்தமா முதலுமென்ருேம் கூறுவீர் அந்தச்சங்கை
பத்தினில் ராகுதங்க பாலராண் தோஷம்சொன்ஞேம்.

20. புத்திர பாவத்தைப்பற்றிப் பேசுவோமென்ருல் பலம் இருப்ப தாகத் தெரியவில்லை. பெண்குழந்தை ஒன்று நிச்சயம் பிறக்கும். அவள் தீர்க்காயுளுடையவள். முதல்குழந்தை குற்றமாகும். அந்தச் சந்தேகத்தை விளக்க வேண்டும், என்று வினவ, பத்தாமிடத்தில் இராகு நிற்க, ஆண் குழந்தைகளுக்குத் தோஷம் சொன்ஞேம்.

21. இவிதுன்றிப் பூர்வம்தன்னி லிவன்சில கொடுமைசெய்தான்
அதுவினை புகலுமென்ன அவனுடைய பூர்வம்கேளாய்ச்
சநிதரும் திருச்செந்தூரில் கலந்தனன் செட்டிவம்சம்
நிதிமிக உடையனுகி நிமலியும் மதலையுண்டாய்,

21. இதுவல்லாமல், ஆதியில் இவன் சில கொடுமைகள் செய்தான். அந்த வினையின்விவரம் சொல்லுங்களென்று கேட்க, அவனுடைய பூர்வோத் தாங்களைக் கூறுவோம். மோட்சத்தை யளிக்கவல்ல திருச்செந்தூரில் செட்டி வமிசத்தில் பிறந்தான். அதிகச் சொத்துக்களுடையவஞகி, பெண்டாட்டி பிள்ளைகள் உண்டாகி,

22. மைந்தனும் வாழுநாளில் மருவின வினையைக்கேண்மோ
அந்தியில் ஒருநாள்தன்னில் அதிதியும் அன்னம்கேட்க
முந்தின கோபமுற்று மூதவாது அன்னமென்ன
வந்தவர் மனவெறுப்பா லறைந்தசா பத்தைக்கேண்மோ.

22. நம் ஜாதகன் வாழ்ந்துவரும் நாளில், வந்தடைந்த ஊழ்வினையைக் கேளுங்கள். ஒரு நாள் சாயங்காலம் ஓர் ஏழை பசிப்பிணியால் அன்னம் கொடுக்கும்படி கேட்க, முன்கோபமடைந்து அன்னங்கொடுக்க முடியாது என்று சொல்ல, வந்தவன் மனவெறுப்புற்றுச் சாபங் கொடுக்கலானான். அதைக் கேளுங்கள்.

23. அன்னமு மீயாப்பாவி அணுகாது சுதர்கள்தாமும்
பின்வரும் சென்மந்தன்னில் புதல்வரும் இல்லாதாகி
மன்னனால் தொழிலும்கேடாய் மத்தியில் நேருமென்று
துன்மையாய்த் துணைவரின்றித் தொல்புவி தன்னில்
[வாழ்வாய்.

23. அன்னம் கொடுக்காதபாவிக்குக் குழந்தைகள் பிறக்கா. இனி வரும் ஜன்மத்தினில் பிள்ளையில்லாமல் அரசாங்கத்தில் வகித்திருந்த உத்தியோகம் மத்தியில் கெட்டு, திரும்பவும் சகோதரரின்றி உலகில் வாழ்வாய்.

24. அரனடி சொல்லும்போது அந்தரம் ததாஸ்துஎன்ன
மருவிற்று அந்தச்சாபம் மாரனும் அந்தியத்தில்
திருகான குன்மநோயால் சென்றனன் காலநாடு
பிரமனால் வரியப்பட்டுப் பிறப்பனும் என்றுசொல்வோம்.

24. என்று அந்த அதிதிசொன்ன சாபத்தைக் கேட்ட அசரீரி, 'ததாஸ்து' என்று சொல்லிற்று. சாபமும் இவனை வந்தடைந்தது. கடைசி காலத்தில் இடைஞ்சலான குன்மநோயால் எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் திரும்பவும் பிறப்பானும் என்று சொல்வோம்.

25. ஆகையால் அதிதிசாபம் அணுகியே இச்சென்மத்தில்
ஏகனாய் வாழ்வானுகும் எய்தாது கர்மபுத்திரன்
தோகைப்பெண் ஒன்றுதீர்க்கம் செயமுனி தடுத்துச்
[சொல்வார்
ஆகம கருமம்சொல்வோன் அறிவிப்பீர் முனியேநீதான்.

25. ஆகையினால் அந்த அதிதியின்சாபம் இந்த ஜன்மத்தில் இவனை வந்தடைய, தன்னந்தனியனாய் வாழலானான். கருமத்திற்குப் புத்திரன் ஏற்படவில்லை. பெண்குழந்தை ஒன்று நிச்சயம். இதைக் கேட்ட ஜயமுனி

தடுத்துச் சொல்லலானர். வேதசாஸ்திரப்படி கருமசாந்தி சொல்லுவேன். அதைத் தெரிவியுங்கள், என்று சொல்ல,

26. புத்திரி புதல்வன்தானும் பொருந்துவான் கர்மமென்றோம்
புத்திரி குணமெவ்வாறு புகலுவீர் முனியேநீதான்
புத்திமான் பொறுமைசாலி புண்ணிய மனத்தளாகும்
பத்திமா னவர்க்குஅன்னம் படைப்பளா மென்று
[சொல்வோம்.

26. கர்மபலனால் புத்திரியும் புதல்வனும் இவனுக்குப் பொருந்தும். புத்திரியின் குணம் எப்படி என்று சொல்லுங்கள், முனிவரே நீர்தான், என்று வினவ, அவள், நல்ல புத்திசாலி. பொறுமையுடையவள். தருமசிந்தனையுள்ளவள். பத்தியுள்ள சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வாள் என்று சொல்லுவோம்.

27. தோகைபோல் சாயலொக்கும் சுந்தர முடையளாகும்
தாகமென் றோர்க்குஈவள் தனவரன் மேல்பாலாகும்
போகபோக் கியங்களேற்பள் புருடன்தன் மனதுக்
[கேற்றோள்
நாகரி கங்களுண்டு நடைநன்மை களென்றுசொல்வோம்.

27. மயில்போன்ற சாயலை யுடையவள். நல்ல அழகு வாய்ந்தவள். பசிதாகம் என்ற பேர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்துதவுவாள். தனமுடையவள். மேல் ஜாதியைச் சேர்ந்தவள். போக போக்கியங்களை அனுபவிப்பாள். புருஷனுக்கு உகந்த மனைவி. நாகரிகங்களை யுடையவள். நல்ல நடத்தைகளை யுடையவள் என்று சொல்லுவோம்.

28. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையும் ஒன்றுஎன்றோம்
இதுமூன்று தீர்க்கமெய்தும் ஏகிடும் முதலில்புத்திரர்
அதிபதி சுதர்கள்தானும் மருவிடும் கர்மமென்றோம்
இதுவிப ரங்கள்யாவும் இயம்புவோம் பின்பாகத்தில்.

28. ஆண்குழந்தைகள் இரண்டுண்டு. பெண் குழந்தை ஒன்றாகும் என்றோம். இம்மூன்றும் தீர்க்கமாகும். முதலில் ஆண்குழந்தைகள் பிறக்கும். இவர்களால் சதிபதிகளுக்குக் கருமங்கள் ஏற்படும். இதன் விவரங்களை எல்லாம் பின்பாகத்தில் கூறுவோம்.

29. பாலகன் யோகச்சேதி பகருவோம் இனிமேலாக
ஞாலத்தால் உய்வானுகும் நற்கிராமக் கணக்குநேரும்
ஏலவே நாற்பான்மூன்று ஆண்டுமட் டுலகிலோங்கும்
போலாகு மதின்மேலாகப் பின்சிகி தன்னிலேதான்.

29. ஜாதகனுடைய யோகச்செய்திகளை இனிமேலாக விவரமாய்க் கூறுவோம். பூமியைக் கிருஷிசெய்து ஜீவிப்பான். நல்ல கிராமத்தின் கணக்குகளைப் பார்க்கும்படி நேரிடும். நாற்பத்துமூன்று வயதுமட்டும் உலகினில் யோகபாவங்கள் ஓங்கிடும். அதற்கு மேலாக கேதுதசை பின் பாகத்திலேதான்.

30. கேதுவின் தசைபின்பாகம் கௌரவக் குறைவுநேரும்
சூதினால் தொழிலும்கேடாம் சுகதுக்க மிரண்டும்நேரும்
நீதியாய்ப் புகரின்காலம் நேர்ச்சுய புத்திதன்னில்
போதனம் பூமியாலே புறப்பனு மென்றுசொல்வோம்.

30. கேதுவின் திசையின் பிற்பகுதியில் கௌரவக்குறைவு நேரிடும். சூதுவாதுகளினால் செய்யும்தொழிலுக்கே ஹானி ஏற்படும். சுகமும் துக்கமும் அடிக்கடி நேரிடும். நியாயமாக சுக்கிரதசையில் சுயபுக்தியில் இழந்த தனம், பூமி இவைகளைத் திரும்பப்பெற்று ஜீவிப்பான் என்று சொல்லுவோம்.

31. புகர்தசை முதலாய்ஆகப் போகிடும் மனதுதுன்பம்
பகையோர்கள் உறவுமாகும் பார்மன்னன் நேசமெய்தும்
தகைமையாய் ஒருவர்வேலை தானுமே பார்க்கவெய்தும்
இகபர னருளினாலே இடரில்லா வாழ்வன்மாதே.

31. சுக்கிரதசையின் ஆரம்பத்திலிருந்தே மனத்தாங்கல்கள் தீரும். எதிரிகள் நேசமாவர். உலகின் அரசர்கள் உறவு ஏற்படும். மதிப்பான ஓர் உத்தியோகம் தானே வகிக்கும்படி நேரிடும். பரமசிவனுடைய அருளாலே துன்பமில்லாமல் வாழ்வானாகும்.

32. அன்னையின் குணத்தைச் சொல்வே ளழகுளாள்போகசாலி
கன்னென மொழியேசொல்வள் கட்டுரை பகராளாகும்
பின்னமில் லாததேகி பிறரர் குற்றம் புகலாளாகும்
சொன்னசொல் சுகமே யாகும்.................

32. இவனுடைய தாயின் குணங்களை எடுத்துரைப்போம். அழகுள்ளவள். போகபோக்கியங்களை அனுபவிப்பாள். இனிமையான வார்த்தைகளைப் பேசுவாள். பொய் பேசமாட்டாள். சரீரத்தில் யாதொரு பின்னமுமில்லை. புத்திரருடைய குற்றங்குறைகளை எடுத்துப் பேசமாட்டாள். நன்மையான வார்த்தைகளைச் சுகமாகப் பேசுவாள்.

33. வருவோரை ஆதரிப்பள் வரனுக்கு யோகமுண்டு
அரிவையில் மேல்பாலாகும் அவள்துணை யாண்பால்ரெண்டு
இருகிலாள் குணத்தாளாகும் தீங்கதை யெவர்க்கு [மெண்ணுள்
உரைகுறேம் இவளின்பூர்வம் உத்தமி கேட்டிடாயே.

33. வந்த விருந்தினர்களை ஆதரிப்பாள். இவளால் புருஷனுக்கு யோகங்கள் ஏற்படும். இவளுடைய வீடு மேற்கிலுள்ளது. இவளுடைய சகோதரர் இருவராவர். சூதுவாதில்லாதவள், நல்ல குணசாலி. பிறருக்குக் கெடுதல் நினைக்கமாட்டாள். இவளுடைய பூர்வவிருத்தாந்தங்களை எடுத்துரைப்போம். உத்தமி! கேட்பாயாக.

34. தென்திசை பாண்டிநாட்டில் செனித்தனள் வைசிய
[சேயாய்ப்
பொன்பொரு ளுடையளாகிப் புதல்வர்க ளதிகமுண்டாய்க்
கன்னிகை வாழ்ந்துமேதான் காலன்தன் நாடடைந்து
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தவ ளென்று
[சொல்வோம்.

34. தெற்குத்திக்கில் பாண்டியநாட்டினில் வைசியகுலத்தில் ஜனித்தாள். பொன், பூஷணங்களை யுடையாளாகி அதிக புத்திர பாக்கியத்தைப் பெற்று, இவள் வாழ்ந்து, பிறகு எமலோகம் சென்றாள். பின்பு, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவள் இவள்தான் என்போம்.

35. நாற்பது நாலுஆண்டில் நமன்பதி அன்னைசேர்வள்
ஏற்கவே இவள்பின்சென்ம மெழில்காஞ்சி நகரம்தன்னில்
ஆர்க்கவே சௌராஷ்டிரவமிசம் அவளுமே உதிப்பாளாகும்
தீர்க்கமாம் வயதுபத்துச் செல்வமாய் வாழ்வாளாகும்,

35. ஜாதகனுடைய நாற்பதாவது வயதில் அவன் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். ஏற்கவே இவள் மறுஜன்மத்தினில் மேன்மைவாய்ந்த காஞ்சீபுரத்தினில் உயர்வான சௌராஷ்டிர வமிசத்தில் உதிக்கலானாள். தீர்க்கமாய்ப் பத்துவயது மட்டும் செல்வமாய் வாழ்ந்து வருவாள்.

36. முப்பது நாலுஆண்டில் விளம்புவோம் தந்தைகெண்டம்
செப்புவோம் இவன்பின்சென்மம் திருவேலங்காடுதன்னில்
ஒப்புடன் பிரம்மசேயாய் உதிப்பனும் அரசுசெய்வன்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றாது.

36. இவனுடைய முப்பத்துநான்காவது வயதில் இவன் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். திருவேலங்காட்டினில் பிராமணக்குழந்தையாய்ப் பிறப்பானும். இராஜயோகத்தை அனுபவிப்பான். கங்கைவார் சடையான் தேவியே! நாங்கள் சொன்ன அருள்வாக்கு என்றைக்கும் பழுதுபடாது.

37. அறுபது ஐந்துஆண்டில் ஆவணி மாதம்தன்னில்
குறைபக்கம் துவாதசிக் குழவியின் உடலமேகும்
வருசென்மம் தணிகைதன்னில் வருகுவான் க்ஷத்ரிய
[சேயாய்
அரசரால் தொழிலும்பெற்று அவனுமே வாழ்வான்மேலே.

37. ஜாதகனுடைய அறுபத்தைந்தாம் பிராயத்தில், ஆவணிமாதத்தில், கிருஷ்ணபட்சம் துவாதசித்திதியன்று மரணமடைவான். அடுத்த ஜன்மம் திருத்தணிகையில், க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான். அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று, அவனுமே மேன்மையுடன் வாழ்ந்து வருவான்.

38. பிறந்திடு காலம்தன்னில் பூரட்டாதி மூன்றும்பாதம்
குருதசை ஆண்டுஐந்தும் கூடிய திங்களொன்றும்
உரைத்தனம் பூர்வபாகம் உரைக்குறோம் விபரம்பின்பால்
அறம்தனை வளர்க்குமெங்கள் ஆத்தும தாயேகேளாய்.

38. பிறக்கும் காலத்தில், பூரட்டாதி நட்சத்திரம் மூன்றும் பாதம்: குருமகாதசையில் இருப்பு வருஷம் ஐந்து, மாதம் ஒன்று. இதுவரையில் ஜாதகனுடைய வாழ்க்கையின் பூர்வபாகத்தைப்பற்றிக் கூறினோம். மற்ற விவரங்களைப் பிற்பகுதியில் விவரமாய்க் கூறுவோம். தருமத்தை வளர்த்து எங்களுக்கு ஆத்மதரிசனம் தந்தருளும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 59

1\. மதிகுயன் அரவுசியம் மால்பானு கன்னியாக
நதிகோளு கோலதாக நற்சனி மானதாக
அதிதியும் சாடிபுக்க அந்தணன் மேடமாக
இதுவிதக் கோளுநின்று லக்கினம் மேடமாக.

1\. குரு மேஷத்திலும், செவ்வாய் சந்திரன் இராகு இவர்கள் சிம்மத்திலும், புதனும் சூரியனும் கன்னியிலும், சுக்கிரன் துலாத்திலும், சனி மகரத்திலும், கேது கும்பத்திலும் தங்கும்படியான இந்த மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலன்களை,

	லக்கினம் குரு		
கேது	இராசி சக்கரம்		
சனி			செவ்வாய் சந்திரன் ராகு
		சுக்கிரன்	புதன் சூரியன்

2\. சொல்லுவீர் பலனையென்று சுந்தரி கேட்கும்போது
புல்குவார் பராசர்தானும் புறந்திடு ஆண்பால்சென்மம்
இல்லமும் கீழ்மேல்வீதி யமன்வாசல் கன்னிதென்பால்
வல்லியந் தீயும்தென்கீழ் வரைந்தனம் சிறுவூராகும்.

2\. சொல்லுங்கள், என்று பார்வதிதேவி கேட்கும்போது, பராசரர் சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஆண்மகனது. அவனுடைய வீடும் கிழக்குமேற்கு வீதியில், தெற்குப்பார்த்த வாசலுடையது, அம்மன்கோயில் தெற்கேயுள்ளது. தென்கிழக்கே சிவன்கோவிலுள்ளது. அஃது ஒரு சிறு ஊராகும்.

3\. பாலகன் ஏழாம்சென்மம் பிறப்பனும் ரெட்டிவம்சம்
சாலவே அன்னைதந்தை சகோதர களத்திரபுத்திரர்
ஏலவே முன்பின்சென்ம மியம்புவோ மின்னூல்தன்னில்
ஆலத்தை யுண்டோன்தேவி அறைகுறேம் பலனையாங்கள்.

3\. இப்பாலகனுக்கு இஃது ஏழாம் ஜன்மம். ரெட்டியார் வமிசத்தில் பிறந்தான். பொருத்தமாகவே தாய்தந்தையர் யோகமும், சகோதரர்,

களத்திரம் புத்திரர் இவர்களுடைய யோகங்களும், இவனுடைய முன்பின் ஜன்மங்களும் விவரமாக இந்தப்புஸ்தகத்தில் கூறுவோம். ஆலகாலவிஷத்தை உண்ட பரமசிவனின் தேவியே! கூறும் பலாபலன்களைக் கேட்பாயாக.

4. தந்தைதுணை யாண்ஒன்று கன்னி அவ்வார்
சாற்றுகிறோம் தீர்க்கமதாய் ஆண்பால் சேதி
விந்தையதாய்ப் பேசிடுவன் யூகை சாலி
விகடங்கள் கூறிடுவன் முன்கோ பத்தன்
நந்திஆவு பனையேர்கள் விருத்தி யுண்டு
நல்கிடுமே பாரிஒன்று சுதரா ணொன்று
சுந்தரியும் ஒன்றென்றோம் வறுமை காணான்
துணைபகையும் துரியன்குணம் செப்ப லாகும்.

4. தந்தையின் சகோதரன் ஒருவன். சகோதரியும் அப்படியே என்று சொல்லுவோம். சகோதரன் விந்தையாய்ப் பேசுவான். புத்தி கூர்மை யுள்ளவன். விகடமான வார்த்தைகளை வேடிக்கையாகவும் விளையாட்டாக வும் பேசிடுவான். முன்கோபமுடையவன். பசுக்கள், எருதுகள், பனை, ஏர் இவற்றின் விருத்திகளையுடையவன். ஆண்பிள்ளை ஒருவனுண்டு. பெண் குழந்தையும் ஒன்றுதான். தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான். பகை வரைத் துணைக் கொள்ளுவான். இவன் இத்துரீய நிலையை அடைந்த குணவான் என்று சொல்லலாம்.

5. செப்புகிறேன் மத்தியினில் மரிப்பா னுகும்
சிலவழக்குத் தொடுத்திடுவன் தீரநெஞ்சன்
மைப்படிமார் மோகமுளன் சிலது சேதி
வரைகுறோம் பின்பாகம் விபர மாக
ஒப்புடனே தந்தைகுணம் கிருஷி செய்வன்
உறுதிவான் தந்திரமொழி உண்மை வார்த்தை
அப்புகொள்வன் சொல்காப்பன் அடைந்தோர்க் கன்பன்
அடாபடியும் கொஞ்சமுளான் அலைச்ச லுள்ளான்.

5. மத்தியகாலத்தில் இவன் மரணமடைவான். சில வழக்குகளைத் தொடுப்பான். தைரியமுள்ள மனமுடையவன். ஸ்திரீகளிடத்தில் மோகங் கொண்டவன். இன்னும் இவைபோன்ற சிற்சில செய்தி விவரங்களைப் பிற் பகுதியில் குறிக்கிறோம். இவனது தந்தை கிருஷித்தொழிலைச் செய்வான். திடமான மனதை யுடையவன். தந்திரமாகப் பேசுவான். சத்தியம் பேசுவான். கடன் கொள்ளுவான். சொன்னசொல்லைக் காப்பான். அண்டினவரிடம் பிரியமாயிருப்பான். சிறிது அடாபடிகளும் செய்வான். அலைச்சலும் திரிச்சலுமுடையவன்.

6. உள்மனதில் கபடுகொஞ்சம் உறுதியில்லான்
உறவோர்கள் மதிக்கஉய்வன் யுத்திபுத்தி
கள்ளவிழி யார்மோகன் இருசி கப்பன்
கனத்த இல்லம்செய்திடுவன் அதனில் வாழான்
பள்ளுபறை தானுடையன் பலர்க்கு நல்லன்
பச்சைமால் நாமமுளன் பாரிக்கிஷ்டன்
தள்ளோனும் பெரியோர்கள் வார்த்தை தன்னை
சாற்றுகிறோம் முன்சென்மம் கழுக்குன் றத்தில்,

6. மனதில் சிறிது கபடமுள்ளவன். நிச்சய புத்தி யில்லாதவன், உறவினர் மதிக்கும்படி வாழ்வான். யுக்தி புத்தியுள்ளவன். மாயக்காரிகள் வலையில் சிக்குவான். பொதுநிறமுள்ளவன். பெரியவீட்டைக் கட்டுவான். அதனில்தானே வசித்துவருவான். பள்ளு பறை முதலான பண்ணையாட்களை யுடையவன். பலபேர்களுக்கு நல்லவன். விஷ்ணுவின் பெயருடையவன். பெண்டாட்டிக்குப் பிரியமானவன். பெரியார் வார்த்தைகளை அசட்டை செய்யாமல் 'மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்' என்று கருதுவான். இவனுடைய முன்ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருக்கழுக்குன்றத்தில்,

7. கங்கைகுலம் தானுதித்துக் கிருஷி செய்து
காதலை[வி]யும் மதலையுடன் வாழும் நாளில்
சங்கையொன்று மறையோர்பால் கட்டு வார்த்தை
சாற்றினன் சொல்லினால் கெடுதி நேர
அங்கவர்கள் இடும்சாபம் பின்சென் மத்தில்
அடாபடிகள் துணைக்குணக்கு அதிகம் நேர
பங்கமாய்ப் பலவாறாய்ப் புகன்றா ரந்த
பாவமது இச்சென்மம் பற்றி யேதான்.

7. வேளாளர் குலத்திலுதித்து, கிருஷித்தொழில் செய்து, பெண்டாட்டி பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் நாளில், ஒரு சமுசயம் ஏற்பட்டது. பிராமணர்களிடத்தில் பொய்வார்த்தை சொன்னான். அதனால் கெடுதல் நேர்ந்தது.. அவர்கள் சாபம் கொடுத்தனர். பின்ஜன்மத்தில், இன்னும் மற்ற அடாபடிகளால் துன்பங்கள் அதில் சேர்ந்தன. இடைஞ்சலான பலவிதமான வார்த்தைகளைப் புகன்றனர். அந்தப்பாவம் இந்த ஜன்மத்தில் பற்றிற்று. அதனால்,

8. துணைபகையும் வனவாசம் செய்வானாகும்
சொல்லியதோர் குணத்தானுக் கிந்தபாலன்
வினையாக உதித்திடுவன் இவன்குணத்தை
விளம்புகிறோம் இருசிகப்பன் வித்தையுள்ளான்

சினமுடையான் பகைவெல்வன் தீரநெஞ்சன்
சிறப்பாக வாழ்ந்திடுவன் தியாகியாவன்
கனமான புகழேற்பன் காலிவிருத்தி
காலாள்கள் சேர்த்திடுவன் காமனெப்பாம்.

8. சகோதரர் பகையும் வனவாசமும் ஏற்பட்டது. இத்தகைய குணங்களையுடைய பிதாவிற்கு, நம் ஜாதகன் பாலகனாய் அவதரித்தான். இதுவும் ஒருவினையின் காரணமாக அவதரித்தான். இவனுடைய குணங்களை எடுத்துக்கூறுவோம். பொதுநிறத்தான். படிப்புடையவன். கோபமுடையவன். பகைவரை வெல்லுவான். தைரியமுள்ள மனமுடையவன். சீருடனும் சிறப்புடனும் வாழ்வான். தியாகி என்று பெயர் பெறுவான். கௌரவமான கீர்த்தியைப்பெறுவான். பசுக்கூட்டங்கள் விருத்தியாகும். வேலையாட்களை அதிகமுடையவன். எதிலும் ஆசையுடையவன்.

9. தந்தைசுகம் இல்லாதான் தாய்சு கத்தன்
தரணி விருத்திசெய்வன் தாட்சி ணிய(த்த)ன்
பிந்திநாள் யோகமுளன் பொய்யும் மெய்யும்
புகன்றிடுவன் பின்புத்தி உடைய னாகும்
முந்திதுணை யாண்மூன்று கன்னி ரெண்டு
மொழிகுறோம் அவர்சேதி பின்பால் சொல்வேன்
மந்தனுக்குப் பின்துணைகள் மருவ தாகும்
(வி)வரிவிப்பீர் அச்சங்கை மாலு மாறில்,

9. தந்தையினால் சுகமில்லை. தாயினால் சுகமுள்ளவன். பூஸ்தியை விருத்திசெய்வான். தாட்சிணிய முடையவன். வாழ்க்கையில் பிற்பகுதியில் யோகமுள்ளவன். பொய்யும் மெய்யும் கலந்தேபேசுவான். பின் புத்தியுடையவனாவான். தமயனார்கள் மூன்று பேர்கள். தங்கைகள் இருவர் என்று சொல்லுகிறோம். அவர்கள் செய்திவிவரங்களைப் பின்பால் சொல்வோம். சனிக்குப்பின் துணைகள் ஏற்படும். அந்த சந்தேகத்தை விளக்குங்கள் என்று சொல்ல, புதன் ஆறும் இடத்திலும்,

10. பானுவுடன் கூடினதோர் பலத்தால் சொன்னோம்
பெற்றதந்தை மறுஆண்டில் மரிப்பா னாகும்
ஆனதால் துணைதோஷம் அன்னைசேதி
ஆசார முடையவளாம் இருநிறத்தாள்
ஊனமில் லாததேகிஎன்றோம் பித்தகூடு
உரைந்திடுமே சுகமொழியும் உண்மைகாட்டாள்
ஈனரை உறவுகொளாள் சஞ்ச லத்தாள்
ஈன்றதாய் இல்லமது வடகீழாகும்.

10. அவனுடன் சூரியனும் கூடின பலத்தினால் சொன்னோம். பெற்ற தந்தை மறுவருஷத்தில் மரிப்பானாகும். ஆதலால் துணைவன் தோஷமடைவான். அன்னையின் செய்தி கூறுவோம் ஆசாரமுடையவளாம். கரிய நிறமுடையவள். பின்னமில்லாத தேகத்தையுடையவள். பித்தசூடு உடையவள். சுகமான பேச்சுடையவள். உண்மையைக் காட்டாள். அல்பரை உறவு கொள்ளமாட்டாள். சஞ்சலமுள்ள மனத்தையுடையவள். தாயின் வீடு வடகிழக்கிலுள்ளது.

11. தன் துணைகள் ஆண்ரெண்டு தீர்க்கம்சொன்னோம்
சாற்றுகிறோம் அவர்சேதி தரித்திரம்காணான்
தன்மனைவி ஒன்றாகும் தரணிவிருத்தி
சந்ததிகள் முதலவனுக்குச் சாராதாகும்
கன்ம சாந்திகள்செய்ய சுதராமென்று
காதலியும் அவ்வாறாய்க் கழறலாகும்
பின் துணைக்குச் சுதராண்பா லிரண்டேயாகும்
பேதையுமே அவ்வாறாய்ப் பேசலாகும்.

11. இவனுடைய துணைவர் ஆண் இருவர். இவர்கள் தீர்க்கம். அவர்களுடைய விவரம் கூறுவோம். தரித்திரமே இல்லை. மனைவி ஒருத்தி தான். பூமி விருத்தி ஏற்படும். முதல் சகோதரனுக்குச் சந்ததிகள் ஏற்படாது. கருமசாந்திகள் செய்தால் ஆண்குழந்தை ஒன்று பிறக்கும். காதலியும் ஒருத்திதான். பின் சகோதரனுக்கு இரண்டு ஆண்குழந்தைகள். பெண்டாட்டியும் இருவர்தான் என்று சொல்லலாம்.

12. இருவருமே ஒருமித்து வாழ்வாராகும்
எழிலான குடும்பியதாய் இயம்பலாகும்
உரைக்குறோம் அன்னையின்தன் பூர்வம் தன்னை
உயர்வான பெண்ணைபக்கல் கருவூர்தன்னில்
அரிமதமாம் வடுகர்பக்கல் தானுதித்து
அழகான குடும்பியதாய் வாழும்நாளில்
திருகான வார்த்தைசொன்னாள் ஒருபெண்பேரில்
திகிலடைந்து அம்மாது புகலும்சாபம்.

12. இரண்டு சகோதரர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்வார்கள். மேன்மையாய் விளங்கும் குடும்பத்தினர் என்று சொல்லலாகும். தாயின் பூர்வகால நிலையை உரைப்போம். மேலான பெண்ணையாற்றின் பக்கத்திலுள்ள கருவூரில் வைஷ்ணவ மதத்தினரான தெலுங்கரின் குடும்பத்தினில் உதித்து, அழகான குடும்பியாய் வாழ்ந்துவரும் நாளில், ஒரு பெண்ணைப் பார்த்து, இடக்கான வார்த்தைகளைச் சொன்னாள். அம்மாது திகிலடைந்து சாபங்கொடுக்க ஆரம்பித்தாள்.

13. பெண்பழிகள் சொன்னதொரு பாவிக்கேதான்
பின்சென்மம் எனைப்போலே துணைபெண்ணின்றி
குன்னியதோர் மனமாகி விதவைமத்தில்
கொண்டுமே குடிஅலைச்சல் ஆகிவாழ்வாய்த்
திண்ணமாய்ச் சொல்லலுற்றார் அந்தச்சாபம்
சேர்ந்துமே இச்சென்மம் துணைபெண்காணார்
கெண்ணியமாய்க் குடியலைச்ச லாகிவாழ்வாள்
கோதையின் பின்சென்மம் அதாகக்கேளாய்.

13. பெண்பழிகள் சொன்ன இப்பாவிக்கு, அடுத்தஜன்மம் என்னைப் போன்ற சகோதரியில்லாமல், மனம் நொந்து, மத்தியகாலத்தில் விதவையாகி, குடித்தன விஷயமாய் அலைந்துதிரிந்து, வாழக்கடவாய், என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன் என்றாள். அந்தச் சாபம் இவளைச் சார்ந்தது. இந்த ஜன்மத்தில் சகோதரியே யில்லை, குடித்தன விஷயத்தில் கண்யமாய் அலைந்து திரிந்து வாழ்ந்துவந்தாள். இதுதான் அன்னையின் பின்ஜன்மத்தின் விவர மென்று கேட்பாயாக.

14. திருவாலங் காடதனி விக்குலத்தில்
செழிப்பான குடும்பியதாய் வாழ்வாளாகும்
இருபது ஆண்டதனில் அவளேகுவாளாம்
இப்பாலன் தனக்குஅன்ப தொன்பதாண்டில்
[1]அரிமதம் கெண்டமெய்தும் மறுபிறப்பு
அனந்த சயனித்திலே ஆண்மையான
தரிதொழிலும் செயும்சேடர்[2] குலமுதிப்பான்
செயமுனியும் மறுத்துரைப்பார் தீர்க்கம்சொன்னீர்.

14. திருவாலங்காட்டில் இக்குலத்தில் செழிப்பான குடும்பியாய் வாழ்வாள். இவளுடைய இருபதாவது வயதில் காலனதுநாட்டிற்கு ஏகுவாள். இவனுக்கு ஐம்பத்தொன்பதாம் ஆண்டில், ஆவணிமாதத்தில், கெண்டம் ஏற்படும். அடுத்த பிறப்பு அனந்தசயனத்தில் (திருவனந்தபுரத்தில்) ஆண்மையான தறித்தொழில் செய்யும் சேடர்குலத்தில் பிறப்பானும். ஜய முனிவரும் இதனைத் தடுத்துக் கூறுவார். தீர்க்காயுசு என்று சொன்னீரே.

15. இதுமட்டில் சாதகர்க்கு மாரகங்கள்
எய்தாதோ அதன்விபரம் இயம்புவீர்கள்
அதிகமதாய் மூன்றுண்டுள் எட்டுப்பத்துள்
அறுமூன்று ஆறஞ்சில் கெண்டமெய்தும்

1. ஆவணி
2. அடிமைக்காரர்

விதம்விதமாய்ப் பிணிநேர்ந்தும் குருவும்சென்மம்
மேவினதோர் பலத்தாலே விலகுமென்றோம்
துதிசெய்யும் அடியாரைக் காக்கும்மாதே
செப்புகிறோ மிவன்யோகம் தெளிவாய்க்கேளே.

15. இவ்வளவுகாலம்வரை ஜாதகனுக்கு மரணங்கள் ஏற்படாதோ. அதன் விவரத்தைச் சொல்லுங்கள். அதிகமாய் இடைஞ்சல் ஏற்படும் காலம் மூன்றுவது வயதிற்குள்ளாகும். பதினெட்டு, முப்பது இந்த பிராயங்களில் கண்டம் ஏற்படும். விதவிதமாக வியாதிகள் ஏற்படும். ஆனால் குரு இலக்கினபலம் பெற்று ஜன்மத்திலிருப்பதனால் ஆயுள் பலம் தான். வியாதிகள் நிவிர்த்தியாகும். ஸ்தோத்ரம் செய்து வழிபாடுகள் செய்யும் சிவனடியாரைக் காக்கும் பார்வதியே! இவனுடைய யோகபாவங்களைக் கூறுகிறோம்; தெளிவாகக் கேட்பாயாக.

16. பிறந்தநாள் முதலாக நாலாண்டுக்கும்
பிலமிலாக் குடியாகும் கலகமுண்டு
வரவுகொஞ்சம் செலவதிகம் வழக்குநேரல்
அந்தஆண்டு முதலாகப் பிறைபோல்யோகம்
தரைவிருத்தி சாரார்கள் தனமும்சேரல்
தன்பந்து மதிப்புகொளல் தைரியநெஞ்சம்
பெருமையாய்க் குடும்பமதாய்ப் பேசலாகும்
பிதாமேலாய் வாழ்ந்திடுவன் புதல்வன்தானே.

16. பிறந்தகாலம் தொட்டு நாலுவயது வரையில் பலமில்லாத குடும்பமாகும். குடும்பக் கலகமுண்டு. வரவுக் கொஞ்சமாயும் செலவு அதிகமாயுமிருக்கும். வழக்குகளும் ஏற்படும். அந்த வருடத்திற்குப் பிறகு வளர் பிறைச் சந்திரனைப்போல் யோகமேற்படும். பூமி விருத்தி ஏற்படும். ஆள் காரர்கள் அதிகம் ஏற்படும். பணமும் சேரும். தன்னுடைய பந்து ஜனங்களால் மதிப்பு ஏற்படும். மனதில் தைரியம் ஏற்படும். பெருமையான குடும்பமென்று பேசலாகும். பிதாவைக் காட்டிலும் மேலாக வாழ்ந்திடுவான், இப்புதல்வன் தானே.

17. புதல்வனுக்கு ஈரெட்டு ஆண்டுதன்னில்
பாரியுண்டாம் [1]மாதுலன்தன் வர்க்கம்தன்னில்
மதிமுகத்தாள் மான்சிவப்பள் மறுத்துக்கூறுள்
வருவோரை ஆதரிப்பள் விரதமேற்பள்

1. தாய்மாமன்

சுதராண்பால் மூன்றுவிருத்தி கன்னிரெண்டு
செப்புகிறோம் தீர்க்கமதாய்த் தோகைக்கேதான்
அதிபதியாய் வாழ்ந்திடுவள் வறுமைகாணுள்
அம்பிகையே நின்னருளால் அருளினுமே.

17. இப்புதல்வனுடைய பதினூரும்வயதில் கலியாணம்நேரும். அதுவும் தாய்மாமன் குடும்பத்திலிருந்து ஏற்படும். அவள் சந்திரபிம்பம் போன்றவள். மாநிறமுள்ளவள். எதிர்த்துப் பேசமாட்டாள். வந்த விருந்தினரை உபசரித்து ஆதரிப்பாள். விரோதங்கள் ஏற்படும். மூன்று ஆண்குழந்தைகள் விருத்திக்குவரும். பெண்குழந்தைகள் இரண்டு. இவர்கள் தீர்க்கம். எல்லாருக்கும் மேலாய் அதிகாரம்செய்து வாழ்வாள். அம்பிகையே! இப் பலாபலன்களை, உன்னுடைய கிருபையினுல் கூறினேம்.

18. புறந்திடு காலம்தன்னில் பூரத்தில் முதல்பாதத்தில்
சிறந்தசுக் கிரனிருப்புச் செப்புவோம் பதினேழாண்டும்
உரைந்திடும் திங்களாறு முரைத்திட்டோம் பூர்வபாகம்
அறம்தன்னை வளர்க்குமெங்கள் ஆத்துமத் தாயேகேளாய்.

18. ஜாதகன் பிறந்தகாலத்தில் பூராடட்சத்திரம் முதல்பாதம். சுக்கிர மகாதசையில் இருப்பு வருஷம் பதினேழு, மாதம் ஆறு. இதுவரையில் பூர்வ பாகத்தின் விவரங்களைக் கூறினேம். தருமத்தை வளர்த்து ஆத்துமதரிசன மளிக்கும் தாயே! கேட்பாயாக.

19. தந்தைபின் சென்மம்சொல்வேன் சாற்றுவோம் காஞ்சி
[கீழ்பால்
முந்தின பேரூர்தன்னி லுதிப்பனும் செங்குந்தனுகி
விந்தையாய்ச் செட்டுச்செய்து வித்தகன் வாழ்வானுகும்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்றுது.

19. தந்தையின் பின் ஜன்மம்பற்றிக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் பழய பேரூர்தன்னில் ஜனிப்பான். செங்குந்தர் வமிசத்தில் ஜனிப்பான். வேடிக்கையாகவும், ஆச்சரியப்படும்படியாகவும் வியாபாரங்கள் செய்து இவன் வாழ்ந்து வருவானுகும். கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! நாங்கள் சொல்லிய பலன்களுக்குக் குறைவு ஏற்படாது.

ஜாதகம் 60

1. பிறைவீணை பரிதிநண்டு புதன்ராகு சிம்மமாகத்
தரைமகன் தேளதாகச் சனிகேது சாடிபுக்கக்
குருபுகர் நந்தியாகக் கொச்சையும் சென்மமாக
வரும்புனர் பூசம்மூன்றும் பாதத்தில் வந்தவர்க்கு,

	லக்கினம்	குரு சுக்கிரன்	சந்திரன்
சனி கேது	**இராசி சக்கரம்**		சூரியன்
			புதன் ராகு
	செவ்வாய்		

1. குருவும் சுக்கிரனும் இரிஷபத்திலும், சந்திரன் மிதுனத்திலும், சூரியன் கடகத்திலும், புதனும் ராகுவும் சிம்மத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், சனியும் கேதுவும் கும்பத்திலும் தங்கும்படியான இந்த மேஷலக்கின ஜாதகத்திற் குண்டான பலாபலன்களைக் கூறுங்கள். இந்த ஜாதகன் புனர்ப்பூச நட்சத்திரம் மூன்றும் பாதத்தில் உதித்துளான். இப்படிப்பட்டவனுக்கு,

2. பலனதைப் புகலுமென்னப் பராசரும் சொல்லுகின்றார்
நலமுள ஆண்பால்சென்மம் நவிலுவோம் தந்தையில்லம்
குலவிடும் கீழ்பால்வாசல் குபேரன்தென் வாடையாகும்
பலர்செல்லு மார்க்கம்மேல்பால் பகருவோம் கீழ்பால்
[கன்னி.

2. பலன்களைச் சொல்லுங்கள், என்று பார்வதி கேட்க, பாராசரர் சொல்லலுற்றார். இது நல்ல ஆண் மகனுடைய ஜாதகம். தகப்பனுடைய வீட்டைப்பற்றிக் கூறுவோம். அது கிழக்குப் பார்த்தவாசலுடையது; வடக்குத் தெற்கு வாடையாகும். பலர் போய் வரும் மார்க்கம் மேற்குப்பக்கமுளது. கிழக்கே துர்க்கையின் கோவிலுளது.

3. சிறுவூரா மிரண்டாம்சென்மம் செப்புவோம் வடுகர்சேயாய்த்
திருமகன் யோகச்சேதி தாய்தந்தை துணைவர்யோகம்
வரும்துணை களத்திபுத்திரர் வரைகுறேம் முன்பின்
[சென்மம்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

3. இஃது ஒரு சிற்றூர். ஜாதகனுக்கு இது நான்காம் ஜன்மம். தெலுங்கர் வமிசத்தில் உதிப்பான். இவனுடைய யோகங்களின் செய்தி விவரமும், தாய் தந்தையர் சகோதரர்களது யோகமும், பெண்டாட்டி பிள்ளை களின் யோகமும், ஜாதகனுடைய முன்பின் ஜன்மமும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய் வரைகிறோம். விக்னேசுவரரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைஆண்மூன்று சக்தியு மவ்வாறுகும்
அந்தவர் ஒன்றுய்வாழ்வர் அல்பமாம் குடும்பமென்றேம்
இந்தவன் தந்தைதானும் இவனுமே வேறுய்ச்செல்வன்
சந்ததம் அவன்குணத்தைச் செப்புவோம் தாயேகேளும்.

4. தந்தையுடன் பிறந்தவர் மூன்று சகோதரர்கள். சகோதரிகளும் அவ்விதமே யாவர். எல்லாரும் ஒன்றுய் வாழ்வார். அது சாதாரணமான குடும்ப மென்றேம். இவன் தந்தையும் இவனுமே குடும்பத்தைச் தனியாகச் செய்வர். அவனுடைய குணங்களைக் கூறுவோம. தாயே! கேட்பாயாக.

5. மூலமும் சிம்மராசி உதிப்பனும் சிவந்தமேனி
வேலவன் நாமம்கொண்டோன் வெறிகொளு வணிபம் [செய்வன்
ஞாலங்கள் சேர்ப்பானுகும் நல்லோர்க்கு நல்லோனுவன்
பால்தயிர் பிரியனுகும் பிதுராஸ்தி விரும்பானுகும்.

5. இம்முதல்வன் சிம்ம ராசியில் உதிப்பானுகும். சிவந்த சரீரத்தை யுடையவன். முருகக் கடவுளுடைய திவ்ய நாமத்தைக் கொண்டவன். அஞ்சும்படியான வியாபாரத்தைச் செய்வான். பூஸ்திதியை விருத்தி செய்வான். நல்லவர்களுக்கு நல்லவனுய் நடப்பான். பால் தயிர் இவற்றில் இஷ்ட முடையவன். பிதாவின் சொத்துக்களை விரும்பமாட்டான்.

6. பலஊரில் வணிபம்செய்வன் பஞ்சைமேல் இரக்கனுவன்
நலமதை எவர்க்கும்செய்வன் நாற்காலி விருத்தியல்பம்
கலகத்தைக் கூறுனுகும் கல்வியு முடையனுகும்
விலைமாதர் மோகம்கொள்ளான் வாததே கத்தானுகும்.

6. பல ஊர்களில் வியாபாரம் செய்வான். ஏழைகளிடத்தில் இரக்க புத்தி யுள்ளவன். எவருக்கும் நன்மையையே செய்வானுகும். பசுக் கூட்டங்கள் அவ்வளவு விருத்தியாகா. கலகமான வார்த்தைகளைக் கூற மாட்டான். படிப்புடையவன். விலைமாதரிடம் மோகங் கொள்ள மாட்டான். வாத சரீரமுள்ளவன்.

7. இன்னவன் செங்கைதன்னி லிலகிடும் கமலரேகை
மன்னிய சங்குசக்கரம் மருவிடு மென்றுசொல்வோம்
பொன்பொருள் பின்னால்சேர்ப்பன் பூமியும் பெருக்கம் [செய்வன்
அன்னிய ரிஷ்டம்கொள்வ னறிவுளா னென்றுசொல்வோம்.

7. இவனுடைய சிவந்த கைகளில் தாமரை ரேகை விளங்கிடும். சங்க ரேகையும், சக்கர ரேகையும் சேர்ந்திருக்கும். பொன்னும் பொருளும் பிற் காலத்தில் சேர்ப்பான். பூமியையும் விருத்தி செய்வான். பிறருடைய சிநேகத்தை யடைவான். நல்ல புத்திசாலி என்று சொல்லுவோம்

8. வறுமைக ளாறிலேற்பன் வருவோரை ஆதரிப்பன்
பொருளைப்பின் சேர்ப்பானாகும் புகழுளான் பொறுமைசாலி
உரைத்தஇக் குணத்தானுக்கு உதிப்பனு மிந்தபாலன்
திருமகன் குணத்தைச்சொல்வேன் சிவந்திடு மேனியாகும்.

8. வறுமைப் பிணிகளை ஆறுவது பிராயத்தில் ஏற்பான். விருந் தினரை உபசரிப்பான். சொத்துக்களைப் பின்னால் சேர்ப்பான். புகழுடை யவன். பொறுமை யுள்ளவன். இவ்வித குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் புத்திரனாய்ப் பிறப்பான். இவனுடைய குணங்களை விவரிப் போம். சிவந்த சரீர முடையவன்.

9. அஞ்சின வார்த்தைக்கூர்வன் அரசர்க ளிஷ்டம்கொள்வன்
வஞ்சியர் மோகனவன் வருணித்தோர்க் குதவிசெய்வன்
தஞ்சமென் றோரைக்காப்பன் தன்மனம் கபடில்லான்
பஞ்சுபோல் ரோமமுள்ளான் பலரையும் வசியம்கொள்வன்.

9. பயந்த சுவபாவத்துடன் பேசுவான். அரசர்களுடைய சிநேகத் தைப் பெறுவான். ஸ்திரீகளிடம் மோகத்தை யடைவான். தோத்திரம் செய்வோருக்கு ஒத்தாசை செய்வான். அண்டினோரைக் காப்பான். மனதில் கபடமில்லாதவன். வெள்ளை மயிரை யுடையவன். பலரையும் வசியப்படுத்துவான்.

10. உண்டியும் சிறிதுஉண்ப னுவமையாய் வார்த்தை [சொல்வன்
குண்டுணி கூறுனுகும் குலமதிப் பாகவாழ்வன்
பண்டுநாள் பூமிஅல்பம் பாலகன் பூமிசேர்ப்பன்
வண்டிவா கனமுமேற்ப னரசனால் தொழிலுமேற்பன்.

10. உண்டியும் கொஞ்சமாக உண்பான். திருஷ்டாந்தங்களுடன் பேசுவான். பொய் பொரை கூறமாட்டான். தன் குலத்தோர் மதிக்கும் படி வாழ்வான். ஆதி காலத்துப் பூஸ்திதி மிக்க கொஞ்சம். இவன்

பூமிகளை விருத்தி செய்வான். வண்டி வாகனங்களை யுடையவன். அர சாங்கத்தில் தொழிலை ஏற்றுக் கொள்ளுவான்.

11. கடன்கொளா ளிடுக்கமில்லான் காலாட்க ளுடையனுகும்
படைசெல்லான் செல்லின்வெற்றி பசியென்றோர்க் குதவி [செய்வன்
விடவாக்கன் பெரியோர்நேயன் விகடங்கள் கூறுனுகும்
தடபுடல் செய்கையுள்ளான் தான்நினைத் ததுமுடிப்பன்.

11. கடன் வாங்கமாட்டான். சிரம மில்லாதவன். வேலைக்காரர்களை அதிகமாக யுடையவன். கூட்டத்தில் போய் எதிர்க்க மாட்டான். போனல் ஜயம் பெறுவான். பசித்தோர்க்கு அன்னம் கொடுப்பான். விஷ வாக்குகளை யுடையவன். பெரியவர்களைச் சிநேகம் செய்வான். வேடிக்கையாகப் பேச மாட்டான். தடபுடலான செய்கைகளை யுடையவன். நினைத்த காரியங் களை முடிப்பான்.

12. இன்னவன் தனக்குயோகம் இயம்பின காரணம்சொல்
பொன்புகர் ரெண்டில்தங்க [1]பங்குமே லாபம்நிற்க
மன்னனுக் கிரண்டில்திங்கள் மங்களன் ஆட்சியாகச்
சொன்னனே வாசியோகம் [2]மரகத யோகமொன்று.

12. இவனுக்கு இவ்வளவு யோகங்களைக் கூறின காரணம் என்ன வென்று சொல்லுங்கள்? குருவும் சுக்கிரனும் இரண்டாமிடத்தில் தங்க, சனி லாபஸ்தானத்திலிருக்க, குருவுக்கு இரண்டாம் வீட்டில் சந்திரனிருக்க, செவ்வாயும் தன் வீட்டில் ஆட்சி பெற்றிருக்க, இந்த யோகம் இவனுக்குச் சொன்னேம். இதற்குப் பெயர் வாசியோகம் என்பது. மரகதயோகமும் ஒன்றுண்டு.

13. இருவகை யோகத்தாலே இயம்பினேம் யோகம்தானும்
அரசனல் தொழிலுமேற்பன் அன்னிய பாஷையுண்டு
பொருளது பெருக்கம்செய்வன் பிறந்தநாள் முதலாமாகப்
பிறைபோல யோகமெய்தும் பெரிதான இல்லம்செய்வன்.

13. இரண்டுவித யோகத்தினுலே யோகம் உண்டு என்று விவரமாய்க் கூறினேம். அரசாங்கத்தில் தொழிலைப் பெறுவான். அன்னிய பாஷையில் தேர்ச்சி பெறுவான். பணத்தை அதிகமாகச் சேர்த்து விடுவான். பிறந்த நாள் முதற் கொண்டு பிறைச்சந்திரனைப்போலே யோகம் பெறுவான். பெரிய வீட்டைக் கட்டுவான்.

---

1. சனி
2. குபேரன்; தனபதி

14. எந்தக்கா லத்திலில்ல மெய்துவான் விபரம்சொல்வாய்
வந்தவன் ஒன்பானுண்டுள் மருவிடும் இல்லமென்றோம்
இந்தவன் கல்விமூலம் ஏகுவான் வெளியூர்தன்னில்
முந்தின கல்விரெண்டு மேவின பாலனுக்கு.

14. எந்தக் காலத்தில் வீட்டைக் கட்டுவான்? அதன் விவரம் சொல்லுங்கள். இவனுடைய ஒன்பதாவது வயதில் வீடு சேரும் என்றோம். இவன் கல்வி காரணமாக வெளியூருக்குப் போவான். இந்த ஜாதகனுக்கு பழைய கல்வித்துறைகள் இரண்டில் பயிற்சியுண்டு.

15. இருபது இரண்டாண்டின்மே லெய்திடு மரசுதானும்
பிறைபோல தொழிலுமோங்கும் பேசுவோம் நாற்பானாறும்
குறைவிலா அரசுசெய்வன் கூறின மொழிகுன்றாது
பொருள்கடன் இல்லாவாழ்வன் புண்ணிய சாலிகேளாய்.

15. இருபத்திரண்டாம் வயதிற்குமேல் ராஜயோகம் ஏற்படும். பிறைச் சந்திரனைப்போல் தொழில் ஓங்கும். நாற்பத்தாறும் வயதில் குறைவற்ற அரசு செலுத்துவான். சொன்ன சொல் தவறான். கடன் கப்பி இல்லாமல் வாழ்வான். புண்ணியவதியே! கேட்பாயாக.

16. தன்துணை முன்னால்நஷ்டம் தங்கும்பின் கன்னிரெண்டு
மன்னன்போல் ஆண்பாலொன்று மருவிடும் தீர்க்கமாகப்
பின்பாகம் அவர்கள்சேதி பேசுவோம் தாயேயாங்கள்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

16. தன்னுடைய சகோதரன் முதலில் நஷ்ட மடைவான். தங்கைகள் இருவர். அரசனைப்போன்ற தம்பி ஒருவன். இவர்கள் தீர்க்கம். இவர்களுடைய செய்தி விவரங்களை நாங்கள் பின்பாகத்தில் கூறுவோம். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

17. பாலகன் மணத்தின்காலம் பகருவோம் இருபான்ரெண்டில்
வேல்விழி தென்கீழ்தன்னில் மேவுவாள் தந்தைவர்க்கம்
பாலிகை குணத்தைச்சொல்வேன் பதர்குண மில்லாளாகும்
காலத்தை அறிந்துரைப்பள் கணவன்தன் மனதுக்
[கேற்றாள்.

17. இவனுடைய கலியாண காலத்தைப்பற்றிப் பேசுவோம். இருபத்திரண்டாம் பிராயத்தில் தென்கிழக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள். அதுவும் பிதாவின் வர்கத்திலிருந்து ஏற்படும். இவளுடைய குணங்களைக் கூறுவோம். பிச்சைக்கார புத்தி இல்லாதவள். காலத்தை நிர்ணயித்துக் கூறுவாள். கணவன் மனதிற்குப் பிடித்தவள்.

18. மாதுவும் வந்தபின்பு மாரனுக் கதிகயோகம்
ஓதுவாள் சுகமாய்வார்த்தை உண்மையா மனத்தளாகும்
பாதக மனமில்லாதாள் தன்முகம் வசியமுண்டு
சீதள குணத்தாளாகும் தீங்கதை எவர்க்குமெண்ணுள்.

18. பெண்டாட்டி வந்த பின்பு, ஜாதகனுக்கு அதிக யோகம் ஏற்படும். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள். மனதில் உண்மையான எண்ணங்களை மனதில் உடையவள். கெடுதலான எண்ணங்களை யுடையவளாவள். முகத்தில் வசீகரமான களையுண்டு. குளிர்ந்த தன்மையை யுடையவள். யாவர்க்கும் கெடுதல் நினைக்க மாட்டாள்.

19. மங்கையும் வயதுதீர்க்கம் வளமான குடும்பியாவள்
அங்கவள் தனக்குப்புத்திரர் அணுகாது அணுகிற்றீதாம்
சங்கையைச் சொல்லுமென்ன சௌமியன் ராகுஅஞ்சில்
பங்குமே பார்த்ததாலே பருகாது புத்திரரென்றோம்.

19 இவளோ தீர்க்காயுசுள்ளவள். வளப்பம் பொருந்திய குடும்பத்தை யுடையவள். அவளுக்குப் புத்திரனே பிறக்காது. பிறந்தாலும் வியோகமடையும். அந்தச் சந்தேகத்தை விவரமாய்ச் சொல்லவும் என்று கேட்க, புதனும் இராகுவும் ஐந்தாமிடத்தில் நிற்க, சனியும் பார்த்ததனுல் புத்திரன் ஏற்படாது என்றோம்.

20. முன்னவன் இருந்தசென்மம் மொழிகுறோம் [1]கூடல்தன்னில்
அன்னவன் வைசியசேயாய் அணுகியே செட்டுச்செய்து
உன்னத குடும்பியாகி உத்தமன் வாழுநாளில்
துன்மைகள் வந்தசேதி செப்புவோம் முனியேகேளும்.

20. அவனுடைய முன்ஜன்மத்தைம்பற்றிக் கூறுவோம். முக்கூடல் தன்னில் வைசிய குடும்பத்தில் பிறந்து, வியாபாரம் செய்து, மேன்மையான குடும்பத்தை வகித்து, வாழ்ந்து வரும் காலத்தில், இடைஞ்சல்கள் ஏற்பட்ட செய்தி விவரங்களைக் கூறுவோம். முனிவரே! கேளுங்கள்.

21. இல்லத்தில் வெகுநாளாக இருந்தது நாகமொன்று
அல்லலாய் மகுடம்கொண்டு அதுமுற்றம் தூங்கும்போது
வல்லவன் அரங்கம்செய்து வாட்டினன் கழியினலே
புல்கிற்று காலனுடு புக்கிற்று அதுஓர்தோஷம்.

---

1. முக்கூடல் = ஒரு மலை. மூன்று நதிகள் கூடும் புண்ணியத்துறை. திருநெல்வேலி ஜில்லாவில் சித்திரா நதியும் உப்போடையும் தாமிரபரணியுடன் கூடும் இடத்துள்ளதொரு விஷ்ணு ஸ்தலம்.

21. இவன் வீட்டில் வெகுகாலமாக ஒரு பாம்பு இருந்தது. துன்பத்தினால் வெளியே வந்து, வீட்டின் முற்றத்தில் படமெடுத்து நின்று ஆடும்போது, மறைவாக இவன் நின்று, அதை ஒரு கம்பை எடுத்து அடித்தான். அதன் காரணமாக அஃது இறந்தது. அஃது ஒரு தோஷம்.

22. விதவையைப் போகம்செய்து மேவிற்று கருவுதானும்
அதம்செய்தான் பண்டிதத்தால் அம்மாது சுகமேஆனுள்
மருவிற்று அதுஓர்தோஷம் மாரனும் அந்தியத்தில்
புதல்வர்கள் தோஷமாகிப் புக்கினன் காலனூடு.

22. இன்னொரு காலத்தில் ஒரு கைம்பெண்ணோடு இவன் போகம் துய்த்ததனால் கர்ப்ப மேற்பட்டு, அதை அழிக்க வைத்தியர்களைக் கொண்டு முயன்றான். அவளும் சுகமடைந்தாள். அந்த ஒரு தோஷம் இவனைச் சார்ந்தது. இவனுக்குக் கடைசி காலத்தில் புத்திர தோஷம் ஏற்பட்டு எமலோகம் சென்றான்.

23. சிரநான்கோன் வரியப்பட்டுச் செனிப்பனும் அந்தபாலன்
அரவத்தைக் கொன்றதோஷ மணுகிடும் கருவின்தோஷம்
பெறும்சுதர் தோஷமெய்தும் புகலுவோ மதற்குச்சாந்தி
அரவுபோல் சிலையில்செய்து அம்மாரி கோஷ்டம்தன்னில்,

23. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, இந்த பாலன் ஜனிக்கலானான். பாம்பைக் கொன்ற தோஷம் அணுகிற்று. அதனுடன் கர்ப்ப தோஷமும் சேர்ந்தது. பெற்ற புத்திரனுக்கும் தோஷம் ஏற்படும். அதற்குப் பரிகாரம் சொல்லுவோம். கல்லில் ஒரு நாகம் செய்து மாரியம்மன் கோவிலில், இவன்

24. பாலகன் வைப்பானாகில் பத்தின வினைகள்நீங்கிச்
சாலவே சுதர்கள்தோன்றும் செப்பின மொழிசெய்யானேல்
ஏலாது சுதர்கள்தாமும் இயம்பின மொழிபோல்செய்யில்
மால்மகன் ஒப்பதாக மருவிடும் ஆண்பாலொன்று.

24. வைப்பானாகில், இவனைப் பிடித்த பீடைகள் நீங்கி ஒழுங்காகவே புத்திரர் தோன்றுவர். சொன்னபடி செய்யாமற் போனால் பிள்ளைகள் பிறக்கார். சொன்னபடி செய்தால் திருமாலைப்போன்ற ஆண் பிள்ளை ஒன்று பிறக்கும்.

25. கன்னிமா ரிருவர்தீர்க்கம் கழறுவோ மன்னைசேதி
தன்சொலு மடக்கமுண்டு சற்பாத்திரி பித்ததேகி
மன்னவன் மனதுக்கேற்றாள் வஞ்சனை மனமில்லாதாள்
பொன்பணி இச்சையுள்ளாள் பொய்யது புகலாளாகும்.

25. இரண்டு பெண் குழந்தைகள் தீர்க்கம். இவனுடைய தாயின் செய்தி விவரங்களைக் கூறுவோம். அடக்கமுடன் பேசுவாள். நல்ல பாத்திரமானவள். பித்த சரீர முடையவள். புருஷன் மனதிற்கு இசைந்தவள். மனதில் வஞ்சக மில்லாதவள். பொன், பூஷணம் இவைகளில் ஆசையுள்ளவள். பொய்யே பேசமாட்டாள்.

26. இல்லமும் கீழ்பாலாகும் இவள்துணை ஆண்பாலொன்று
வல்லிமார் அவ்வார்தீர்க்கம் மறுத்துரை அதிகம்கூறாள்
சில்லரைப் புத்தியில்லாள் செப்புவோ மிவள்முன்சென்மம்
வல்லியும் பூசைசெய்யும் வாழைமா நகரிலேதான்,

26. இவளுடைய வீடும் கிழக்குப் பக்கத்திலுள்ளது. இவளுடைய சகோதரன் ஒருவன் உண்டு. சகோதரியும் ஒருத்திதான். இவ்விருவரும் தீர்க்கம். அதிகமாக எதிர்த்துப் பேசமாட்டாள். கீழ்நோக்கான புத்தி இல்லாதவள். இவளுடைய முன் ஜன்ம விவரங்களைக் கூறுவோம். தேவி பூஜை செய்யும் வாழைமாநகரிலேதான்,

27. பிறந்தனள் கர்ணசேயாய்ப் பேதையும் சுகமாய்வாழ்ந்து
அறமதில் இச்சைஉண்டாய் அச்சென்மம் வினையில்லாமல்
உறைந்தனள் காலனூடு உலகவன் வரியப்பட்டு
அரிவையு முதித்தாளென்றோ மறைகுறோ மிவள்
[பின்சென்மம்.

27. கணக்கர் வம்சத்தில் பிறந்தாள். இவளும் சுகமாக வாழ்ந்து, தருமம் செய்வதில் விருப்பங்கொண்டு, அந்த ஜன்மத்தில் பவவினைகளில்லாமல் எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவளும் உதித்தனள். இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம்.

28. பிருதிவி தலத்திலேதான் பிறந்தனள் வேளாண்வம்சம்
வறுமையில் லாமல்வாழ்வாள் வரைகுறோம் தந்தைபூர்வம்
விரிஞ்சியில் வன்னியசேயாய் விளங்கியே கிருஷிசெய்து
அறிவோர்கள் நேசம்கொண்டு அறுமுகன் பத்தியாகி,

28. அவள் பூலோகத்தில் வேளாளர் வம்சத்தில் பிறந்து தரித்திரமில்லாமல் வாழ்வாள். இனி, தந்தையின் பூர்வத்தைப்பற்றிக் கூறுவோம். விரிஞ்சிபுரத்தில் வன்னியர் குலத்தில் பிறந்து, கிலத்தைப் பண்படுத்தி, அறிவுடையோர் நேசம் கொண்டு, ஆறுமுகக்கடவுளிடம் பக்தி பூண்டு,

29. காலன்தன் நாடுசென்று கஞ்சனால் வரியப்பட்டுச்
சீலமில் லாதஇந்தக் குலத்தினி லுதித்தானென்றோம்
சாலவே இவன்பின்சென்மம் செப்புவோம் [1]மயிலம்தன்னில்
ஏலவே ரெட்டிவம்சம் இறங்குவா னென்றுசொல்வோம்.

1. தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம்

29. எமலோகம் சென்முன். பின்பு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு, குற்றமற்ற இந்தக் குலத்தில் பிறந்தான் என்ருேம். பொருந்தவே இவனுடைய பின் ஜன்மத்தைப் பேசுவோம். மயிலம் என்ற ஊரில் ரெட்டியார் வம்சத்தில் பிறப்பானென்று சொல்லுவோம்.

30. முப்பது ஆண்டுதன்னில் விளம்புவோம் தந்தைகெண்டம்
அப்போது புந்திகாலம் அதிதியின் புத்தியாகும்
செப்புவோம் நாற்பானுலில் செல்லுவா ளன்னைதானும்
மைப்புடன் தவங்கள்செய்யும் வித்தகி கேட்டிடாயே.

30. முப்பதாவது வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அப்போது புதன்தசையில் செவ்வாய் புக்தியாகும். நாற்பத்திநாலாம் பிராயத்தில் அன்னை மரண மடைவாள். விசேஷமான தபசுகளைச் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

31. அறுபது நாலுஆண்டில் ஆனிமா தத்திலேதான்
திருமக னுடலமேகும் செப்புவோ மிவன்பின்சென்மம்
பிரிதிவு மேல்பாலாகப் பேருரில் லருகர்வர்க்கம்
வருகுவா னிவனேயென்ருேம் மருத்துமே அத்திரி
[சொல்வார்.

31. ஜாதகனுடைய அறுபத்துநான்காம் பிராயத்தில், ஆனி மாதத்தில், மரணம் ஏற்படும். இவனுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். பூமியின் மேற்குப் பக்கத்தில், பேரூரில், சைனவம்சத்தில் இவன் பிறப்பான் என்போம். இதனை அத்திரி மகரிஷி மறுத்துச் சொல்லுவார்.

32. இதுமத்தில் சாதகர்க்கு எய்தாதோ மாரகங்கள்
குருதசை ஆதிகாலம் குழவிக்கு அனேகபாதை
மருவிப்பின் நிவிர்த்தியாகும் மாரனும் தீர்க்கசீவி
இருரெண்டு ஆண்டுதன்னில் இவன்பிதா பிணியநேகம்
மறலியைக் காணுகு மறுரெண்டு ஆண்டிலொன்று.

32. இதன் மத்திய காலங்களில் ஜாதகனுக்கு மாரகங்கள் ஏற்படாதோ? குருமகாதசையின் ஆரம்பத்தில் இவனுக்கு அநேக உபாதைகள் ஏற்பட்டுப் பின் நிவிர்த்தியாகும். இவனும் தீர்க்காயுசுள்ளவன். இவனுடைய நான்காவது வயதில் இவன் பிதாவிற்கு வியாதி அநேகம் ஏற்படும். எமனைப் பார்க்க மாட்டான். அப்படி பன்னிரண்டு வயதிற்குள் ஒன்று.

33. அதிகமாம் தந்தைக்கெண்ட மந்தகன் தன்னைப்பாரான்
திருகில்லா முப்பதாண்டில் தீர்க்கமாம் கெண்டமென்ருேம்
குருதசை ஆதிகாலம் கூறுவோம் திங்களேழும்
மருவிடும் பதிஞேர்திங்கள் வரைகுருேம் பலனையாங்கள்.

33. தந்தைக்கு அநேக கண்டங்கள் ஏற்படும். எமலோகம் செல்ல மாட்டான். இடைஞ்சலில்லாத முப்பதாவது வயதில் கண்டம் ஏற்படும். அஃது எப்போது என்றால், குருமகாதசையின் ஆரம்பத்தில் ஏழு மாதங்களி லிருந்து பதினேரு மாதங்கள் வரையிலுள்ள பலன்களை நாங்கள் கூறுவோம்.

34. வரவுக்குச் செலவுமுண்டு மானிலம் சேர்க்கையாகும்
திருமாளி செயமுயற்சித் தீரமில்லாத நெஞ்சம்
மருவும்பின் துணைகள்தானும் வனவாச மாகவாழ்வன்
அறன்தனை வளர்க்குமெங்க ளாத்துமத் தாயேகேளாய்.

34. வரவிற்கு அதிகம் செலவு உண்டு. பரந்த பூமிச் சேர்க்கையும் உண்டு. பெரிய வீடும் கட்ட முயலுவான். தைரிய மில்லாத நெஞ்சத்தை யுடையவன். பின் சகோதரர்கள் வந்து சேருவார்கள். வனவாசத்திலிருப் பதுபோல் வாழ்ந்து வருவான். தருமத்தை வளர்க்கும் எங்கள் ஆத்துமத்தாயே! கேட்பாயாக.

35. அன்னிய சாதியோடு அணுகிடும் செட்டுமேன்மை
பொன்னது சேருமென்றும் போசன வறுமைநேரா
துன்சனி தசையிலேதான் சொந்தமாய்ச் செட்டுஓங்கல்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

35. அன்னிய ஜாதியினருடன் வியாபார மேன்மை ஏற்படும். பொன் அதிகமாய்ச் சேர்ந்திடும். சாப்பாட்டுக்குக் குறைவு வராது. துல்லியமான சனிமகாதசையில் சொந்தமான வியாபாரம் மேன்மையாய் விருத்தியாகும். உத்தமனைப் பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

ஜாதகம் 61

1. திங்கள்சேய்த் தனுசுவாகச் சனிகேது சாடியாகப்
பங்கயன்[1] புதனும்கன்னி பணிபுகர் சீயமாகப்
பொங்குரு நந்தியாகப் பூராடம் இரண்டாம்பாதம்
இங்கிவை கிரகம்நின்று லக்கினம் மேடமாக.

1. குரு ரிஷபத்திலும், இராகுவும் சுக்கிரனும் சிம்மத்திலும், சூரியனும் புதனும் கன்னியிலும், சந்திரனும் செவ்வாயும் தனுசிலும், சனியும் கேதுவும் கும்பத்திலும் தங்கும்படியான இத்தகைய கிரகநிலை கொண்ட இந்த ஜாதகம் மேஷத்தை இலக்கினமாக உடையது. பூராடநட்சத்திரம் இரண்டாம் பாதம் கொண்டது.

	லக்கினம்	குரு	
சனி கேது	இராசி		
	சக்கரம்		ராகு சுக்கிரன்
சந்திரன் செவ்வாய்			சூரியன் புதன்

2. சொல்லுவீர் பலனேயென்று சுந்தரி கேட்கும்போது
புல்குவார் அத்திரிதானும் புறந்திடும் ஆண்பால்சென்மம்
இல்லமும் வடதென்வீதி இந்திரன் வாடையாகும்
எல்லையை அடைந்தோன்தென்மேல் இடிபடு அந்த
[கோஷ்டம்.

2. இத்தகைய ஜாதகத்திற்குண்டான பலனைச் சொல்லுங்கள், என்று பார்வதி கேட்கும்போது, அத்திரி மகரிஷி சொல்லலுற்றார். இவன் ஆண் மகன். இவன் வீடு வடக்குத் தெற்குப்பார்த்த வீதியிலுள்ளது. கிழக்கு வாடையாகும். எல்லைக்கு அதிபதியின் கோவில் இடிந்துள்ளது. அதுவும் தெற்குத் திக்கிலுள்ளது.

3. அருகினில் தீபாஞ்சாலி அருபட்ட மாலிதங்கும்
எருதுவா கனத்தோன்உத்திரம் எல்லைமா காளிகீழ்பால்
குறுகிய ஊரேயாகும் குழவியும் கங்கைசேயாய்
வருகுவா னென்றுசொல்வோம் மங்கையே கேட்டிடாயே.

1. சூரியன்

3. அருகே திரௌபதி அம்மன்கோவிலுண்டு. அங்கே சூரியபகவானுக்கும் கோவில் உண்டு. வடக்கே எருமை வாகனமுடைய யமதருமனும், கிழக்கே எல்லைக்கடவுளான மகாகாளியுமுள்ள சிறிய ஊராகும். ஜாதகனும் வேளாளர் குலத்தில் வந்து பிறப்பான் என்று சொல்லுவோம். பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தைகுணம் கூறுகின்றோம் மாநிறத்தான்
தரணிவிருத்தி செய்திடுவான் சமமாம்கல்வி
தந்தமும் தரளமொக்கும் ஈகையாளன்
சமர்த்தான வார்த்தைசொல்வன் சொற்பகோபம்
தந்தைமொழிக் கிடருரையான் மாமிரெண்டு
தன்கரத்தில் பத்மவரி தங்குமென்றோம்
தன்பந்து மதிக்கஉய்வன் பனையேர்விருத்தி
சண்முகன்தன் பத்தியுண்டு தனமும்சேர்ப்பன்.

4 இவனுடைய தகப்பனுடைய குணத்தை எடுத்துக்கூறுவோம். மாநிறமுள்ளவன். பூஸ்திதியை விருத்திக்குக் கொண்டு வருவான். சமமான கல்வியை யுடையவன். முத்துப்போன்ற பற்களை யுடையவன் நல்லகொடையாளி. புத்திசாலித் தனமான வார்த்தைகளை சொல்லுவான். சர்ப்பம்போல் கோபங்கொள்ளுவான். பிதாசொன்ன வார்த்தையை மறுத்துக் கூறமாட்டான். மாமியார் இருவர். கையினில் பத்மரேகையை யுடையவன். தன்னுடைய சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். பனைமரம் ஏர்கள் இவைகளை விருத்திசெய்வான். ஆறுமுகக்கடவுளிடம் பக்தி பூண்டவன். பணத்தையும் சேர்ப்பான்.

5. இல்லமது செய்திடுவன் இடுக்கமில்லான்
இவன்துணைகள் காணும் இரண்டுசொல்லன்
மல்லில்செல்லான் வலவாயன் மனதுதீரன்
மாநிலத்தில் [1]கூவல்செய்வன் ஈகைகொஞ்சம்
சொல்லுவோம் முன்சென்மம் அருணைமேற்கில்
சிறுவூரில் சீலமிலா இக்குலத்தில்
புல்கியே மனைவிமைந்தர் பூமிவிருத்தி
புகழாக வாழ்நாளில் வினையைச்சொல்வேன்.

5. வீடு கட்டுவான். சிரமமில்லாதவன். இவனுக்குச் சகோதரன் இல்லை. இரண்டுவிதப் பொருள் படும்படி பேசுவான். சண்டைக்குப் போகமாட்டான். வாய்ச்சமர்த்தன். தைரியமுள்ள மனமுடையவன். பரந்தபூமியில் வியா

1. வியாபாரம்

பாரம் செய்வான். கொஞ்சம் தருமசிந்தனை யுடையவன். இவனுடைய முன்ஜன்மத்தைப் பற்றிய விவரம் கூறுவோம். அருணாசலத்திற்கு மேற்கே சிறிய கிராமத்தில் குற்றமற்ற இக்குலத்தில் பிறந்து, மனைவி மைந்தர் ஏற்பட்டு, பூமிகளை விருத்திசெய்து, கீர்த்தியுடன் வாழ்ந்துவரும் நாளில் ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதனைச் சொல்லுவோம். கேட்பாயாக.

6. தன்குலத்தில் மாதொருத்தி விதவையாகித்
தாயில்லம் வாசமுற அவள்மேல்வீணாய்த்
துன்மார்க்க வார்த்தைஒன்று இவனும்சொல்லத்
தோகைமன வருத்தமுற்றுப் புகலும்சாபம்
பின்சென்மம் துணைஇன்றி பாரிரெண்டாய்ப்
பொருந்திடுமே அவர்களால் துன்மையாகி
அன்னவனும் வாழ்வாயென் றவளும்சொல்லி
அள்ளியே தெருத்தூளைத் தூற்றிச்சென்றாள்.

6. தன்னுடைய குடும்பத்தில் ஒரு ஸ்திரீ பர்த்தாவைத் தோற்றுக் கைம்பெண்ணானாள். அவள், தன்தாயின் வீட்டில் வசித்துவர, வீணாக அவளைப்பார்த்து 'கெட்டவழியில் சென்றாள்' என்ற அவதூறான வார்த்தையை இவனும் சொல்ல, அம்மாது மனவருத்தமுற்று, சாபம் கொடுக்கலானாள். அடுத்த ஜன்மத்தில் சகோதரமின்றி, இரண்டு பெண்டாட்டிகள் ஏற்பட்டு, அவர்களால் மகத்தான துன்பங்கள் ஏற்பட்டு வாழக்கடவாய் என்று அவனைப்பார்த்து அவளும்சொல்லித் தெருவிலுள்ள மண்ணைவாரி இறைத்துச் சென்றாள்.

7. மாதுசொன்ன சாபத்தால் இச்சென்மத்தில்
மனைவிரெண்டு துணையின்றி வாழ்வானாகும்
ஓதியதோர் குணத்தானுக் கிளையானுக்கு
உதிப்பனும் இப்பாலன் குணத்தைச்சொல்வேன்
சாதிப்பன் பீஷ்மமுளன் தக்கோர்நேசம்
தான்செய்வன் கல்வியுளன் தரணிவிருத்தி
போதனையே கேட்டிடுவன் புகழுமேற்பன்
புறம்சொல்லான் புண்ணியமனம் புகட்டிச்சொல்வன்.

7. அம்மாது கூறிய சாபமொழிகளால் இந்த ஜன்மத்தில் இரண்டு பெண்டாட்டிகள் ஏற்பட்டு, சகோதரனில்லாமல் வாழ்வானாகும். இப்படி விவரித்த குணங்களை யுடையவனுக்கு, நம் ஜாதகன் இரண்டாவது சம்சாரத்திற்குப் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுவோம். சொன்ன வார்த்தைகளைச் சாதிப்பான். ஆசாரியனை யுடையவன். தகுதியுள்ளோருடன் சிநேகம் கொள்ளுவான். நல்ல படிப்பாளி. பூமியை விருத்தி

செய்வான். பிறர் போதனையைக் கேட்பான். கீர்த்தியும் அடைவான். ஒருவர் இல்லாதபோது வசைமொழிகளைக் கூறுவான். தரும சாஸ்திரப்படி நீதிகளைப் புகட்டிப் பேசுவான்.

8. சொல்லிலே கபடுமுண்டு அஞ்சாநெஞ்சம்
சுற்றத்தார் மதிக்கஉய்வன் சொகுசனுவன்
சல்லியங்கள் கொள்ளாதான் துணைசொல்தட்டான்
தான்தொடுத்த காரியத்தை முடிப்பானுகும்
புல்குவோம் துணைஆண்பால் மூன்றேதீர்க்கம்
பெண்ணுமவ்வார் தான்உரைப்போம் புனிதனுக்கு
நில்லாது மற்றதெல்லாம் அவன்முன்சேதி
நுகலுவோம் பின்பாகம் நிமலியேகேள்.

8. கபடமான வார்த்தைகளைச் சொல்லுவன். அஞ்சாத நெஞ்சமுடையவன். சொந்தக்காரர்கள் மதிக்கும்படி வாழ்வான். சொகுசுக்காரன். கடன் வாங்கமாட்டான். சகோதரன் பேச்சை (பெண்டாட்டியின் சொல்லை)த் தட்டமாட்டான். எடுத்த காரியத்தைச் சாமர்த்தியமாய் முடிப்பான். மூன்று சகோதரர்களுண்டு. அவர்கள் தீர்க்கம். சகோதரிகளும் அவ்வாறாகும். இப்புனிதனுக்கு மற்றவையெல்லாம் நில்லா. அவனுடைய முன்ஜன்ம விவரத்தைப்பற்றிப் பின்பாகத்தில் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

9. அன்னைகுணம் இருநிறத்தாள் சுகமாய்வார்த்தை
அரவுபோல் கோபமுண்டு அடைந்தோர்க்கன்பள்
பின்னோர்மேல் பிரியமுண்டு பொய்கள்சொல்லாள்
பேதைவந்த பின்புபிறை போலேயோகம்
கன்னிகையும் வறுமைஉள்ளாள் இளமனத்தள்
கணவன்மனம் போல்வாழ்வள் துணையாண்ரெண்டு
மின்னல்போ லிடைமார்கள் நால்வராகும்
விளம்புவோம் தாயில்லம் உள்ளூராகும்.

9. தாயாரின் குணங்களைக் கூறுவோம். பொதுநிறமுள்ளவள். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள். பாம்பைபோல் கோபித்துச் சீறுவாள். அண்டினவரைக் காப்பாற்றுவாள். தம்பிகளிடத்திலும் கீழ் ஜாதியினரிடத்திலும் பிரியமுள்ளவள். பொய் வார்த்தைகளைப் பேசமாட்டாள். இவள் கலியாணத்திற்குப் பிறகு பிறைச்சந்திரனைப்போல யோசங்கள் வளரும். இவளும் வறுமைத்துன்பத்தை யனுபவிப்பாள். இளகிய மனமுடையவள். புருஷன் மனம்போல் குறிப்பறிந்து நடப்பாள். இரண்டு சகோதரருண்டு. நான்கு சகோதரிகள் உண்டு. இவளுடைய வீடும் உள்ளூரிலேதான்.

10. மாதுவின்தன் பூர்வமது சேரநாட்டில்
வந்தனள்காண் கருணீக குலத்திலேதான்
போதனமு முடையவளாய்ப் புதல்வருண்டாய்ப்
பெரிதான குடும்பியதாய்ப் பாபமின்றித்
தீதான காலன்பதி சென்றுஇன்னேள்
சிரநான்கோன் வரியவந்தாள் சீலிதானும்
மேதினியில் வறுமைஇல்லாள் இருபானேழில்
மேவுவாள் காலன்பதி மெல்லிதானே.

10. இம்மாதுவின் பூர்வம் சேரநாட்டினில் உதித்தாள். கிராமக் கணக்குகளைப் பார்க்கும் குலத்தில் பிறந்தாள். வேண்டிய சம்பத்துக்களைப் பெற்றுப் புதல்வர்களுமுண்டாகிப் பெரிய குடும்பியாகிப் பாபகர்மாக்கள் எது வுமில்லாமல் மரணமடைந்தாள். பிரம்மாவினுல் திரும்பவும் சிருஷ்டிக்கப் பட்டு இக்குணசீலி வந்தாள். உலகினில் தரித்திரமில்லாதவள். இருபத் தேழாம் வயதில் இவள் எமலோகம் செல்லுவாள்.

11. மறுசென்மம் [1]கச்சியினில் பிரம்மசேயாய்
வருகுவாள் சுகமுடனே வாழ்வாளாகும்
பிருகுமே மறுத்துரைப்பார் இந்தமாது
புலிகோபம் முடையவளாய்ப் பெரியோர்க்கு
மறுமொழியும் சொல்லிவந்தோள் பின்செனமத்தில்
மறைகுலத்தில் எவ்விதமாய் வருவாள்சொல்வாய்.

11. அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்தில் பிராமணக்குழந்தையாய்ப் பிறப் பாள். சுகமாக வாழ்வாளாகும். இதைக் கேட்ட பிருகுமகரிஷி மறுத்துக் கூறுவார். இந்தமாது, கோபம் வந்தால் புலியைப் போல் பாய்வாள். பெரியவர்களுக்குப் பதில் சொல்லி வருவாள். பின்ஜன்மத்தில் பிராமணக் குழந்தையாய் எப்படி அவதரித்தாளென்று சொல்லுங்கள் ?

12. சொல்லிடு வசமெல்லாம் சுத்தமாய் ஏழையோர்க்குத்
தல்லிபோல் தாகம்தந்து தன்வரன் மனம்போல்வாழ்ந்தும்
வல்லியும் வாழ்வதாலே மறைகுல முதிப்பாளாகும்
அல்லலைத் தவிர்க்குமெங்கள் ஆத்துமத் தாயேகேளாய்.

12. சுத்தமான வாசகமுடையவள். ஏழைகளுக்குத் தாயைப்போல தாகத்திற்குத் தண்ணீர் அளித்தும், புருஷனுடைய மனம் கோணுமல் வாழ்ந்தும் வந்ததனுலே பிரம்மகுல முதிப்பாளாகும். துன்பங்களைப் போக்கும் தயாபரியே ! கேட்பாயாக.

---

1. காஞ்சீபுரம்

13. இருபது ஆண்டுதன்னில் இயம்புவோம் தந்தைகெண்டம்
வரும்சென்மம் [1]புதுவைதன்னில் மறைக்குல முதித்து
[இன்னோன்
அரசரால் தொழிலும்பெற்று அவனுமே வாழ்வானாகும்
கரிமத வானைப்பெற்ற காதலி கேட்டிடாயே.

13. ஜாதகனுடைய இருபதாவது வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். அடுத்த ஜன்மம் புதுச்சேரியில் பிரம்ம குலத்தில் பிறந்து, அரசாங்கத்தில் உத்தியோகம் செய்து வாழ்வானாகும். விக்கினேசுவரனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

14. உதித்தவன் மணத்தின்கால முரைக்குறோ மிருபான்
[ரெண்டில்
அதிபதி வடபால்நேரும் மாதிரு கிளையிலேதான்
அதிபதி யாகவாழ்வள் அறிவுளாள் சிவந்தமேனி
துதிசெய்தோர்க் குதவுவாளாம் துன்பங்க ளெவர்க்கு
[மெண்ணாள்.

14 பிறந்தவனுடைய கலியாண காலத்தை எடுத்துரைப்போம். இருபத்திரண்டாம் பிராயத்தில் வடக்கே கலியாணம் ஆகும். அவளும் அன்னையின் குடும்பத்திலிருந்துதான் வருவாள். மேலாம் பதத்திலிருந்து வாழ்வாள். நல்ல புத்திசாலி. சிவப்பான சரீரத்தையுடையவள். தோத்திரம் செய்தோருக்கு ஒத்தாசை செய்வாளாகும். யாவருக்கும் துன்பங்கள்செய்ய நினைக்கமாட்டாள்.

15. மங்கையும் தீர்க்கசீவி வருவோரை ஆதரிப்பள்
நங்கைக்குப் புத்திரர்தோன்றும் நசித்திடும் யாவும்தானே
சங்கையைச் சொல்லுமென்ன சர்ப்பமும் புகரும்அஞ்சில்
பங்குமே பார்த்ததாலே பாலர்கள் தோஷம்சொன்னோம்.

15. இவளும் தீர்க்காயுசுடையவள். வந்த விருந்தினரை உபசரித்து ஆதரிப்பாள். இவளுக்குப் பிள்ளைகள் பிறக்கும். ஆனால் எல்லாம் நசித்துப் போகும். இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யுங்கள் என்று கேட்க, இராகுவும் சுக்கிரனும் ஐந்தாமிடத்திலிருப்பதனாலும், சனியும் அவர்களைப் பார்த்ததினாலே புத்திரதோஷம் சொன்னோம்.

16. இன்னவன் பின்சென்மத்தை எடுத்துநா முரைப்பக்கேளாய்
தென்திசை பாண்டிதன்னில் செனித்தனன் வன்னியசேயாய்
அன்னையும் தந்தையுமிக்க அவன்வாழ்நாள் வினையைச்
[சொல்வேன்
கன்னியா மாரிகோஷ்டம் கார்க்கோடன் வாசமாகும்.

---

1. புதுச்சேரி

16. இவனுடைய பின்ஜன்மத்தை நாம் எடுத்துரைப்போம். கேட்பாயாக. தெற்குத்திக்கில் உள்ள பாண்டியதேசத்தில், வன்னியர் குலத்தில் ஜனித்தான். அன்னையும் தந்தையும் மெச்சும்படி அவன் வாழ்ந்துவரும் நாளில், ஏற்பட்ட வினையைச் சொல்லுவோம். ஒரு கன்னி அம்மன் கோவிலில் ஒரு வாழும்பாம்பு வசித்து வந்தது.

17. வஞ்சனை மனமில்லாமல் மடித்தனன் நாகந்தன்னை
நஞ்சது மாண்டதென்றோம் நல்கிற்று அந்ததோஷம்
கொஞ்சியே விதவைமாதைக் கூடியே கருவுதங்க
மிஞ்சின பண்டிதத்தால் விரயத்தங்கள் செய்யலுற்றான்.

17. வஞ்சனை மனத்தைக்கொண்டு அந்த நாகப்பாம்பைச் சாக அடித்தான். அந்த தோஷம் இவனை வந்தடைந்தது. கொஞ்சிக் கொண்டுவந்த விதவை ஸ்திரீயைக் கூடியதனால் கர்ப்பம் ஏற்பட, வைத்தியர்களைக் கொண்டு அதை அழிக்க முயன்றான்.

18. ஆகையால் இரண்டுதோஷம் அணுகிடு மிச்சென்மத்தில்
பாகமாய்த் சுதர்கள்தோன்றும் பதறாதே யென்று
[செல்வோம்
போகிடு கிரிகைஒன்று புகலுவீர் முனியேநீதான்
நாகத்தை அணிந்தோன்வாழும் நற்புட வேடுசென்று,

18. ஆதலால் இந்த இரண்டு தோஷங்களும் இந்த ஜன்மத்தில் வந்து சேர்ந்தன. பக்குவமாய்க் குழந்தைகள் தோன்றும். அவசரப் படாதே யென்று சொல்லுவோம். இந்த தோஷம் நீங்க, ஒரு பரிகாரம் சொல்லுங்கள், முனியே நீங்கள்தான். பாம்பை ஆபரணமாய் அணிந்த பரமசிவன் கோவில் கொண்டுள்ள நற்புடவேடு என்ற ஊருக்குச்சென்று,

19. மாரிக்கு அபிஷேகித்து வெள்ளியில் மதலைசெய்து
தேரின மறையோருக்குத் தாம்பூல சொர்ணமீந்து
திரனும் உள்ளூர்சென்று சிரமற்றோன் தனக்கர்ச்சித்து
நேரினில் தீபமொன்று நிமலன்மூ வாண்டுவைக்க,

19. அம்மனுக்கு அபிஷேகம்செய்து, வெள்ளியில் குழந்தையைப்போல் பிரதிமை செய்து, மகத்தான பிராமணப் பெரியோர்களுக்குச் சொர்ணமும் தாம்பூலமும் தந்து, நம் ஜாதகன் உள்ளூர் திரும்பி, பிரம்மாவிற்கு அருச்சனை செய்து, சன்னிதியில் மூன்றுவருஷங்கள் விளக்கு ஒன்று ஏற்றி வைத்தால்,

20. கூறிய வினைகள்நீங்கி புதல்வர்கள் விருத்திதீர்க்கம்
கூறுவோம் ஆண்பாலொன்று கோதையு மவ்வார்தீர்க்கம்
மாறிடா திந்தவார்த்தை வரைகுறோம் இவனின்யோகம்
பாரிநாள் சீவிப்பானும் பாக்கிய முடையனாகும்.

20. சொல்லிய வினைக்கட்டுக்கள் நீங்கிடும். புதல்வர்கள் ஏற்பட்டுத் தீர்க்கமாய் விருத்தியாகும். ஆண்குழந்தை ஒன்று. பெண்ணும் ஒன்று. இவர்கள் தீர்க்கம். இந்த வாக்கு மாறிடாது. இவனுடைய யோகபாவத்தைக் கூறுகிறோம். பெண்டாட்டி வெகுநாள் ஜீவிப்பாள். பாக்கியமுடையவனாகும்.

21. அன்னமும் குறைவுறுதான் ஆள்கார ருடையனாகும்
சொன்னமும் பணிதராவும் சேர்ப்பனு மென்றுசொல்வோம்
இன்னவன் அறுபாறொன்றில் இடபமா தத்திலேதான்
தென்கால னுடுசெல்வன் செயமுனி மறுத்துச்சொல்வார்.

21. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை. வேலைக்காரர்களை அதிகமாக வுடையனாவான். சொர்ணத்தையும், பூஷணங்களையும், பசுக்கூட்டங்களையும் சேர்ப்பான் என்று சொல்லுவோம். இவன் தன்னுடைய அறுபத்தொன்றாம் வயதில், இரிஷபமாசத்தில், எமலோகம் செல்லுவான். இதைக்கேட்ட ஜயமுனிவர் மறுத்துக் கூறுவார்.

22. பொன்னனைத் தனக்குளெட்டில் பிறையுமே இருப்பதாலே
துன்மையாய்ச் சகடைதோஷம் தோன்றிடு மெட்டாண் [டுள்ளே
சந்திரன் தனுசில்தங்கச் சகடையும் பங்கமாகும்
சொன்னது வயதுதீர்க்கம் செல்வதி கேட்டிடாயே.

22. வியாழபகவானுக்கு எட்டாமிடத்தில் சந்திரன் இருப்பதனாலே கெடுதலான சகடயோக தோஷம் ஏற்படும். அதுவும் எட்டு வருஷத்திற்குள் ஏற்படும். சந்திரன் தனுசில் இருப்பதனால் சகடயோகத்திற்கு ஒரு பங்கம் ஏற்படும், வயசு தீர்க்கம். சொல்வதைக் கேட்பாயாக.

23. மறுசென்மம் காஞ்சிகீழ்பால் வளமுள சிறுவூர்தன்னில்
உறைகுவான் இக்குலத்தில் உயர்வான குடும்பியாவன்
பிறகுதந்தி சேய்பூர்வத்தில் புக்கிடும் பதினொலாண்டும்
மறுவிடும் திங்களாறும் வரைந்தனம் பூர்வபாகம்.

23. அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்திற்குக் கிழக்கே வளப்பம்பொருந்திய சிறிய ஊரில் இக்குலத்தில் உதிப்பான். மேலான குடும்பத்தை வகிப்பான். பிறந்தகாலத்தில் புதன்தசை ஏற்படும். அது வருஷம் பதினொன்கு, மாசம் ஆறு ஆகும். இதுவரையில் பூர்வபாகத்தைப் பற்றிக் கூறினோம்.

ஜாதகம் 62

1. சந்திரன் கோலதாகச் சனிகுரு மீனம்தங்கப்
புந்தியும் இரவியும் பூமகன் புகருகன்னி
மந்தரக் கயிறுமேரு மிதுனத்தில் சிகியும்நிற்க
வந்தது சென்மமேடம் வரைகுவீர் பலனைத்தானே.

1. கேது மிதுனத்திலும், புதனும் சூரியனும் சிம்மத்திலும், செவ்வாயும் சுக்கிரனும் கன்னியிலும், சந்திரன் துலாத்திலும், இராகு தனுசிலும், சனியும் குருவும் மீனத்திலும் தங்கி நிற்கும்படியான இவ்வித கிரகநிலை கொண்ட இந்த மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று,

சனி குரு	லக்கினம்		கேது
	இராசி சக்கரம்		
			புதன் சூரியன்
ராகு		சந்திரன்	செவ்வாய் சுக்கிரன்

2. உத்தமி கேட்கும்போது உரைக்குறுர் வசிஷ்டர்தானும்
வித்தகி ஆண்பால்சென்மம் விளம்புவோம் இல்லம்தானும்
உத்திரம் தெற்குவீதி உம்பர்கோன்[1] வாடையாகும்
பத்திர காளிமீனம் [2]பாரளந் தோனும்கீழ்பால்.

2. உத்தமியாகிய பார்வதி கேட்கும்போது, வசிஷ்டரும் உரைக்கலானர். இந்த ஜாதகம் ஓர் ஆண் மகனுடையது. அவனுடைய வீட்டைப் பற்றிக் கூறுவோம். அது வடக்குத்தெற்கு வீதியில் கிழக்கு வாசலுடையதாகும். வடமேற்கே பத்திரகாளியின் கோவிலும், கிழக்கில் உலகளந்த பெருமாளின் கோவிலுமுண்டு.

3. தூதனும் ஆணும்தெற்கில் தோன்றிடும் இதுவல்லாமல்
நீதியாய் அரசர்வாசம் நிகரில்லாச் செட்டுஓங்கும்
மேதினில் அநேகர்கோஷ்டம் வினைதீர்க்கு நதிகளுண்டு
ஆதியாய்த் தவமேயாகும் அத்தியும் வாசமாகும்.

---

1. இந்திரன்
2. விஷ்ணு

3. முருகக்கடவுளின் கோவில் தெற்கில் தோன்றிடும். இதுவல்லாமல், அவ்வூரில் தர்ம மார்க்கத்திலுள்ள அரசர் வசிப்பார். இணையில்லாத வியாபாரம் ஓங்கும். உலகிலுள்ள அநேக தெய்வங்களுடைய கோவில்களும் இங்கேயுண்டு. பிராரப்தவினைகளைப் போக்கும் நதீதீரங்களுண்டு. இஃது ஒரு புராதன ஸ்தலமேயாகும். பகவானுடைய வாசஸ்தலமுமாகும்.

4. இவ்வித அடையாளத்துள் இலகிய கெட்டிவீட்டில்
பவ்வமாய் உதிப்பானும் பாலகன் யோகச்செய்கை
ஒவ்விய தந்தைமாதா உறும்துணை களத்திரபுத்திரர்
நவ்விய முன்பின்சென்மம் நாட்டுவோம் இந்நூல்தன்னில்.

4. இவ்விதமான அடையாளங்களைக்கொண்ட பலமான வீட்டில் ஜாதகன் பிறப்பான். அவனுடைய யோகச்செய்திகளையும், தாய்தந்தையரின் யோகங்களையும், துணைவர் களத்திரபுத்திரர் இவர்களுடைய யோகங்களையும், இவனுடைய முன்பின் ஜன்மங்களையும் இந்தப் புஸ்தகத்தில் எடுத்து விவரமாய்க் கூறுவோம்.

5. தந்தையின் துணைவர்தம்மைச் சாற்றவே பலத்தைக் [காணும்
தந்தையின் குணத்தைக்கேளாய்ச் சாந்தவா னிருநிறத்தான்
தந்தையின் ஆஸ்திதன்னைத் தானவன் விருத்திசெய்வான்
தன்தன முடையனாகும் தரணிக ளதிகம்சேர்ப்பன்.

5. தந்தையுடன் கூடப்பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோம் என்றால் யாதொரு பலத்தையும் காணும். தந்தையின் குணங்களைக் கூறுவோம். சாந்தமுடையவன். கரிய நிறமுடையவன். பிதிரார்ச்சித சொத்துக்களை விருத்தி செய்வான். தன்னுடைய சுயார்ச்சிதத்தையு முடையவன். பூமிகள் அதிகம் சேர்ப்பான்.

6. வணிபங்கள் செய்வானாகும் மாநிலம் கிருஷிஉண்டு
அணிகலன் சேர்ப்பானாகும் அவனுக்கு மாமிமூன்று
கணிகையர் மோகமுள்ளான் கட்டுவன் சித்திரவீடு
துணிவான குணத்தானாகும் சோம்பிடான் காரியத்தில்.

6. வாணிபங்கள் செய்வானாகும். பாரதபூமியைப் பண்படுத்துவான். நகை, ஆபரணங்கள் இவைகளைச் சேர்ப்பானாகும். அவனுக்கு மாமிகள் மூன்று பேர்கள். நாட்டியப்பெண்களைக் கண்டு மோகிப்பான். அழகான வீடு கட்டுவான். துணிச்சலான குணங்களை யுடையவன். காரியம் செய்வதில் சோம்பலில்லாதவன்.

7. யோசனை பலவும்சொல்வன் உறுதியா மனத்தனுகும்
காசுமேல் ஆசைஉள்ளான் காலாள்கள் உடையனுகும்
பாசமாய் எவர்க்கும்நண்பன் பால்தயிர் பிரியனுகும்
வீசிய நடையுமுள்ளான் வீண்வம்பு செல்லானென்றேம்.

7. எல்லா யோசனைகளையும் கூறுவான். உறுதியான மனதை யுடையவன். பணம் காசுகள் மேல் ஆசையுள்ளவன். வேலையாட்களை யுடையவன். யாவரிடத்திலும் சிநேகமாயும் பிரியமாயுமிருப்பான். தயிர், பால் இவற்றில் அதிக இஷ்டமுள்ளவன். கால்வீசி நடக்கும் இயல்பினன். வீண்வம்பு பேசமாட்டானென்றேம்.

8. இந்நெறி உடையானுக்கு இருதாரம் இளையாளுக்கு
அன்னவனும் மூன்றும்சென்ம மறைந்தன மவன்
[குணத்தைப்
பிந்தமில் லாததேகி பெரியவர் உறவுகொள்வன்
உந்நத தரளதந்தம் உண்மையா மனத்தனுமே.

8. இந்த மாதிரியான குணங்களை யுடையவனுக்கு இரண்டு பெண்டாட்டியுண்டு. இளையாளுக்கு இவன் பிறந்தான். அதுவும் மூன்றும் ஜன்மம். அவன் குணத்தைக் கூறுவோம். பின்னமில்லாத சரீரத்தை யுடையவன். பெரியாரைத் துணைக்கொள்ளுவான். மேலான முத்துப் போன்ற பற்களையுடையவன். சத்திய சிந்தனையை யுடையவன்.

9. கல்வியு மிரண்டுகற்பன் கட்டுவார்த் தைகளும்சொல்வன்
இல்லையென் றுரைக்கமாட்டா னிடரில்லாப் புத்திஇல்லான்
நல்லவன் நல்லவர்க்கு நாட்டினில் வணிகம்செய்வன்
அல்லலென் றேரைக்காப்ப னவன்திருப்பணியும் செய்வன்.

9. இருவித கல்வித்துறைகளில் பயின்றவன். பொய் வார்த்தைகளை இட்டுக்கட்டிக் கூறுவான். யாசகர்களுக்கு இல்லையென்று சொல்ல மாட்டான். இடைஞ்சலில்லாத புத்தியை யுடையவனல்லன். நல்லவர்களுக்கு நல்லவன். ஊரில் வியாபாரம் செய்வான். துன்பம் என்றவருக்கு ஒத்தாசை செய்வான். கடவுளுக்குத் திருப்பணிகளும் செய்வான்.

10. தந்தைநாள் பூமிதன்னைத் தானவன் விருத்திசெய்வன்
நந்திஆ உடையனுகும் நற்பணி அதிகம்சேர்ப்பன்
எந்திடும் பெருமைபூண்பன் இனியவஸ்துக் களுமிஷ்டன்
கந்தன்மேல் பத்திகொள்வன் காதலி கேட்டிடாயே.

10. தந்தையின் காலத்தில் ஏற்பட்ட பூஸ்திதியை நம் ஜாதகன் விருத்தி செய்வான். எருதுகளும் பசுக்களும் உடையவனுகும். நல்ல பூஷணுதிகளை அதிகம் சேர்ப்பான். எங்குப் பார்க்கினும் பெருமை பெறு

வான். தித்திப்பாயுள்ள பட்சணங்களைச் சாப்பிடுவான். முருகக்கடவுளின் மேல் பக்தி கொள்ளுவான். காதலியே! கேட்பாயாக.

11. இவனுட துணைவர்தம்மை இயம்புவோ மிருரெண்டாகும்
நவமது முன்பின்சேதம் நாயகர் இருவர்தீர்க்கம்
பவமுள மூத்தோர்சேதி பகருவோம் மர்மனுவன்
தவசிகள் உறவுகொள்ளான் சந்தேக மனத்தனுகும்.

11. இவனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுவோம். அவர்கள் நால்வர். முன்னும் பின்னும் சேதமாகும். இரண்டு பேர்கள் தீர்க்கமாகும். மூத்தவனுடைய செய்தி விவரங்களைக் கூறுவோம். ரகசியமுள்ளவன். சன்னியாசிகளின் உறவு கொள்ளுவான். சந்தேக புத்தியுள்ளவன்.

12. வித்தையு முடையனுகும் விவேகியாம் பித்ததேகி
உத்தம னுகிவாழ்வன் உறைந்திடு மனைவிரெண்டு
சுத்தமு முடையனுகும் சுதர்களும் ஆண்பால்மூன்று
சித்தமாய்ப் பெண்பால்ரெண்டு செப்புவோ மிவனுக்கே
[தான்.

12. கல்வி கேள்விகளை யுடையவன். நல்ல விவேகி. பித்த சரீர முடையவன். மேன்மையான உத்தமனாய் வாழ்வான். இரண்டு பெண்டாட்டிகள் உண்டு. சுத்தமுடையவனுதும். மூன்று ஆண் குழந்தைகள் உண்டு. பெண் குழந்தைகள் இரண்டு. இவைகள் இவனுக்கே ஏற்படும் என்று சொல்லுவோம்.

13. தன்னுடன் கூடிவாழ்வன் செயமுனி கேட்கலுற்ருர்
கன்னிகை இரெண்டுளன்றீர் காவலன் தனக்குச்சொன்னீர்
பின்னையும் சுதராண்மூன்று பெண்ணது இரெண்டுளன்றீர்
கன்னிகை யவர்க்குப்புத்திரர் கலந்திடும் விபரம்சொல்
[வோம்.

13. குடும்பத்துடன் சேர்ந்து வாழ்வான். இதைக் கேட்ட ஜயமுனி கேட்கலுற்ருர். இரண்டு பெண்டாட்டிகள் என்று சொன்னீரே. பின்பு ஆண் குழந்தைகள் மூன்று. பெண்கள் இரண்டு என்று சொன்னீரே. பெண்களுக்குப் புத்திரர்கள் எப்படிப் பிறந்து கலந்து வாழ்வார்கள்? அந்த விவரம் சொல்லுங்கள்

14. வந்திடு முதல்மாதுக்கு மருவிடு சுதராெனொன்று
அந்தகன் பக்கல்சேர்வள் அதுவன்றி இளையாளுக்கு
விந்தையாய் ஆண்பால்ரெண்டு மேவிடும் கன்னிஅவ்வார்
சந்ததம் விருத்தியென்றேம் சங்கரி கேட்டிடாயே.

14. முதல் பெண்டாட்டிக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கும். அதற்குப்பின் அவள் எமலோகம் சேர்வாள். அதுவுமல்லாமல் இளைய தாரத்திற்கு வேடிக்கையாக இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் ஏற்படும். எல்லாம் எப்பொழுதும் விருத்திக்கு வரும். சங்கரி! கேட்பாயாக.

15. பஞ்சம துணைவன்சேதி பகருவோம் யூகைசாலி
அஞ்சிடான் ஒருவருக்கும் அரசர்கள் பேட்டிகொள்வன்
கஞ்சம்போல் ரேகையுள்ளான் கல்வியு மிரண்டுகற்பன்
வஞ்சியர் மோகவானு மதிகார முடையனுமே.

15. ஐந்தாவது துணைவனுடைய செய்தியைக் கூறுவோம். நல்ல புத்தி கூர்மையுள்ளவன். எவருக்கும் பயப்படமாட்டான். அரசர்களுடைய பேட்டி கொள்ளுவான். பத்மரேகையை யுடையவன். இரண்டுவிதமான கல்வித்துறைகளில் பயிலுவான். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொள்ளுவான். அதிகாரத்தை வகிப்பான்.

16. தந்திர வாதியாவன் சத்துரு வணங்கவாழ்வன்
கந்தனும் குலதெய்வங்கள் கருத்தினில் கொள்வானுகும்
வந்தவர்க் கன்னமீவன் அரசுமே செய்வானுகும்
தன்தனம் அதிகம்சேர்ப்பன் சகடுவா கனமுமுள்ளான்.

16. தந்திரமாக வாதம் செய்வான். சத்துருக்கள் தன்னைப்பணிந்து நடக்கும்படி வாழ்வான். கந்தஸ்வாமியையே குலதெய்வமாகக் கொண்டவன். வந்த விருந்தினருக்கு அன்னமளிப்பான். அரசு செலுத்தும் பாக்கியமுடையவனுகும், தன்னுடைய சுயார்ச்சிதத்தை அதிகம் சேர்ப்பான், வண்டிவாகனமு முடையவன்.

17. பாரியை ஒன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்ரெண்டு
தீரமாய்ப் பெண்பாலவ்வார் செப்புவோம் தீர்க்கமாக
வீரிய முடனேவாழ்வன் விதேசத்தில் சிலநாள்வாசம்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை புகன்றிட்டோமே.

17. பெண்டாட்டி ஒருத்தியாகும். ஆண் குழந்தைகள் இரண்டு உண்டு. அப்படியே பெண்களும் இரண்டு உண்டு. இதைத் தீர்க்கமாய்ச் சொல்லுவோம். வீரியத்துடனே வாழ்ந்து வருவான். வேறு தேசத்தில் சிலநாள் வசிப்பான். ஆறுமுகனைப்பெற்ற பார்வதியே! இவ்வாறு கூறினேமே.

18. முனிவரிவ் விதமாய்க்கூற மொழிகுவா ளம்மன் தானும்
கனமுடன் முதல்தாயொன்று கழறினீ ரவர்க்குப்புத்திரர்
சினமில்லாச் சொல்லுமென்ன தேவியின் குணத்தைச்
[சொல்வேன்
வினையிலா மனத்தளாகும் வாததே கத்தாளென்றோம்.

18. முனீசுவரர் இவ்விதமெடுத்துச் சொல்ல, பார்வதி வினவலானாள். கௌரவமாக முதல்தாய் ஒருத்தி என்று சொன்னீர். அவளுக்குப் புத்திரருண்டானால் சொல்லும், என்ன, தேவியின் குணத்தைச் சொல்லுவோம். விகல்பமில்லாத மனதை யுடையவள். வாதசரீர முள்ளவள்.

19. பொறுமையும் பெருமையுள்ளாள் புருடனுக் கினியளாகும்
வருவோரை ஆதரிப்பள் அவள்சாய நேத்ரமுள்ளாள்
திருமகள் ஒப்பதாகும் சேயர்கள் காணாளாகும்
மறுமாது இவளின்தாயார் வரைகுறோ மவள்குணத்தை.

19. பொறுமையும், பெருமையுமுள்ளவள். புருஷனுக்குகந்தவள். வந்த விருந்தினரை ஆதரிப்பாள். சாய்ந்த பார்வையை யுடையவள். லட்சுமியைப் போன்றவள். குழந்தைகள் இல்லை. இவளுடைய தாய்தான் இவன் தந்தைக்கு இளையதாரம். அவளுடைய குணங்களைக் கூறுவோம்.

20. முன்கோபம் மூர்க்கமுண்டு முதிர்ந்தோரை உறவு
[கொள்ளாள்
தன்சொலே மேன்மையாகச் சாதிப்பாள் இருநிறத்தாள்
அன்னவள் துணையாணில்லா ளக்க[ன்]னிஇரண்டு என்றோம்
தன்னில்லம் மேற்கேசிற்றூர் சாற்றுவோம் கேளும்தாயே.

20. முன்கோப முடையவள். மூர்க்க சுவபாவமுள்ளவள். பெரியவர்களை உறவு கொள்ளாள். தன் சொல்லுக்கு ஈடு கிடையாதென்று சாதனை செய்வாள். கரிய நிறமுடையவள். சகோதரனில்லை. தங்கைகள் இரண்டு பேர்கள் என்றோம். தன் வீடு மேற்கிலுள்ளது. அதுவும் ஒரு சிறிய ஊர் என்று சொல்லுவோம். தாயே! கேட்பாயாக.

21. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் பத்தொன்பானில்
காதலி உள்ளூர்மேற்கில் கழறுவோம் அவள்குணத்தைப்
பாதக மனமில்லாதாள் பஞ்சைகட் கன்னமீவள்
சூதுகள் கொஞ்சமுள்ளாள் துருசான நடையுமாவள்.

21. ஜாதகனுடைய கலியாணகாலத்தை எடுத்துச் சொல்லுவோம். பத்தொன்பதாவது பிராயத்தில் உள்ளூருக்கு மேற்கிலிருந்து அவள் வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். கெட்ட புத்தியில்லாதவள். ஏழைகளுக்கு அன்னதானம் சிறிது செய்வாள். சூதுவாதுள்ளவள். சுறுசுறுப்பாக நடப்பாள்.

22. அன்னம்போல் சாயலுள்ளாள் ஆளனுக் கினியளாகும்
பன்னியே பேசவல்லள் பாவையும் யோகசாலி
கன்னென மொழியேசொல்வள் காதலி நன்நடக்கை
உன்னத சீலமுள்ளாள் உத்தமி மேலுங்கேளே.

22. அன்னம்போன்ற சாயலுள்ளவள். புருஷனுக்கு இனிமையாக நடப்பாள். பன்னிப்பன்னிப் பேசுவாள். இவளும் நல்ல யோகசாலி. கனிவான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் நல்ல நடத்தையை யுடையவள். மேலான சீலமுள்ளவள் உத்தமி! மேன்மேலும் கேட்பாயாக.

23. வயதுமே தீர்க்கமென்றோம் மாமுனி கூறுகின்றார்
பயமில்லாத் தாரமொன்று பகர்ந்தினீர் காரணம்சொல்
நயமுள மதியுமேழில் நல்கியே இருப்பதாலே
வியமிலாத் தாரமொன்று விளம்பினோம் தீர்க்கமாக.

23. இவளுக்குத் தீர்க்காயுசுண்டு. மகாமுனிவர் சொல்லுகின்றார். பயமில்லாமல் ஒருதாரம் உண்டு என்று சொன்னீரே! அதற்குக் காரணம் என்ன? நயமாகவே சந்திரனும் ஏழாமிடத்தில் இருப்பதனாலே வியோக மடையாத தாரம் ஒருத்தி என்று தீர்க்கமாகச் சொன்னோம்.

24. செயமுனி இதனைக்கேட்டுத் திடுக்கென உரைக்கலுற்றார்
மனைக்கோனு மிரண்டேழாகி யட்டமத் தோனும்சேர்ந்து
நயமில்லா ஆறில்நீச்சம் நல்கியே இருப்பதாலே
வியமாகும் முதல்மனைதான் மேவிடு மிரண்டாம்மாது.

24. ஜயமுனிவர் இதைக்கேட்டுத் திடுக்கிட்டுக் கேட்கலானார். துவிதீய சப்தமாதிபதியாகிய (இரண்டு, ஏழுக்குடைய) சுக்கிரனும் எட்டாமிடத் தோனாகிய செவ்வாயும் சேர்ந்து ஆறாம் இடத்தில் நீசம் பெற்றிருப்பதனாலே முதல் பெண்டாட்டி இறப்பாள். இரண்டாந்தாரம் ஏற்படும்.

25. இருவர் இவ்விதமாய்க்கூற ஈசுவரி சொல்லுகின்றாள்
குருசனி புகரைப்பார்க்கக் குலவேழில் மதிஇருக்க
வருமனை ஒன்றேதீர்க்கம் மைந்தன்தன் பலத்தைச் [சொல்வார்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

25. இருவரும் இவ்விதமாய்ச் சொல்ல, ஈசுவரி பின்வருமாறு சொல்லுகின்றாள். குருவும் சனியும் சுக்கிரனைப் பார்க்க, இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரனிருக்க, பெண்டாட்டி ஒருத்திதான். ஜாதகனுடைய பலத்தைச் சொல்லுவோம். பிரளயகாலத்தில் ஆனந்தக்கூத்தாடும் அம்பிகையே! கேட்பாயாக.

26. புத்திரர் ஆண்பால்ரெண்டு பெண்ணது அவ்வார்தீர்க்கம்
குத்தமாம் மூன்றுஎன்றேம் குறித்தனம் முதலில்பீடை
சித்தமாய்ப் பின்பால்விருத்தி செப்புவோ மிவனுக்கேதான்
அத்தியைப் பெற்றமாதே அறைகுறேம் இவன்தன்பூர்வம்.

26. ஆண் பிள்ளைகள் இரண்டு. பெண் குழந்தைகளும் அப்படியே. இது தீர்க்கம். மூன்று குழந்தைகள் குற்றமாகும். முதலில் பீடை ஏற்படும். நிச்சயமாய்ப் பின்பாதியில் விருத்தி ஏற்படும். எல்லாம் இவனுக்கே தான். பகவானையடைந்த பார்வதியே! இவனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுகிறேம்.

27. முன்சென்மம் தில்லைகீழ்பால் முயற்சியாய்ப் பேரூர்தன்னில்
அன்னவன் தீயின்வமிசம் அணுகியே பெருமையுண்டாய்
உன்னதக் கிருஷிசெட்டு ஓங்கியே மனைவிமைந்தர்
இந்நில மதிக்கவாழ்ந்து ஏழையோர்க் குதவிசெய்து,

27. முன்ஜன்மத்தில் சிதம்பரத்திற்குக் கிழக்கேயுள்ள பேரூரிலே வன்னியர் குலத்தில் பிறந்து,பெருமை ஏற்பட்டு, மேலான கிருஷி வியாபாரம் விளங்கி, விருத்தியாகி, மனைவி மைந்தர் ஏற்பட்டு, இவ்வுலகினில் யாவரும் மதிக்க வாழ்ந்து, ஏழைகளுக்கு ஒத்தாசை செய்து,

28. பலவித தலங்கள்சென்று பஞ்சைகட் கன்னமீந்து
உலகினில் சிறப்புற்றேங்கும் உயர்சேது பதிக்குச்சென்று
நலமுள தீர்த்தம்தோய்ந்து ராமலிங் கத்தைப்போற்றித்
தலமது வந்துபின்பு தாகநோய் நிவிர்த்திசெய்து,

28. பலவிதமான ஸ்தலங்களுக்குப்போய், கடவுளைத்தரிசனம் செய்து, ஏழைகளுக்கு அன்னதானம் செய்து, உலகத்திலே சிறப்படைந்து, மேன்மையாயுள்ள உயர்வான சேதுபதிக்குப்போய், நன்மையான சேதுஸ்னனம் செய்து, ராமலிங்கத்தைத் துதித்து, தன்னூர் திரும்பி, பின்பு தாகப்பந்தல்கள் வைத்து, தாகசாந்தி செய்து,

29. குருஉப தேசம்கொண்டு கூற்றன்தன் பதிக்குச்சென்று
பிரமனுல் வரியப்பட்டுப் பிரிதிவு தலத்திலேதான்
திருமகள் விலாசம்போன்ற சிறப்பான கங்கைவமிசம்
உரைந்தன னிவனேயென்றே முரைக்குறேம் யோகச்சேதி.

29. குருவினுடைய உபதேசம் பெற்று, காலனுடு சென்றான். பிறகு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பூலோகத்திலே லட்சுமீகடாக்ஷம் போன்ற சிறப்புற்ற வேளாளர் வமிசத்தில் பிறந்தான் இவனே என்றேம். இனி இவனுடைய யோகச்செய்திகளைக் கூறுவோம்.

30. பிறையது போலேயோகம் போற்றுவோ மூழிசேர்ப்பன்
கருமஞ்சள் வெள்ளைபொன்போல் கனமுள தூதுசெட்டுக்
குறைவிலாச் செய்வானுகும் குலத்துளோர் மதிக்க [வாழ்வன்
திருமகள் விலாசம்போன்று தீவினை அணுகாதாகி,

30. வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் வளரும். ஊழ்வினைகளைச் சேர்ப்பான். கரிமஞ்சள் வெள்ளைப்பொன்போல மாற்றுச்செய்யும் கௌரவமான வியாபாரம் செய்து, குறைவற்ற தனவந்தனுய் தன் குலத்திலுள்ளோர் மதிக்கும்படி வாழ்ந்து வருவான். லட்சுமீகடாக்ஷம் ஏற்பட்டது போன்று, தீவினைகள் அணுகாமல்,

31. சத்தான அறமும்செய்வன் சனஉப காரியாவன்
பெற்றோர்க்கு அன்பனுவன் பொய்யது பகராணுகும்
வெற்றியாம் தொடுவழக்கு வீண்வம்பில் செல்லானுகும்
உத்தமன் சுகிபுசிப்பன் உறுதியா மனத்தனுவன்.

31. மேலான தர்மமும் செய்வான். பொதுஜன உபகாரியாவன். பெற்றோர்க்குப் பிரியமாக நடப்பான். பொய் பேசமாட்டான். எடுத்த வியாச்சியங்களில் வெற்றி பெறுவான். வீண் வம்படிக்கமாட்டான். இவ்வுத்தமன் சுகமான போசனத்தைப் புசிப்பான். உறுதியுள்ள மனதையுடையவன்.

32. பண்ணிய தொழிலில்பொய்கள் புகருவா னுபதேசம் [கேட்பன்
கெண்ணிய குடும்பியாவன் கிஞ்சித்து ரோகமுள்ளான்
அண்ணன்தம் பிகள்மேலிஷ்ட னருமறை யவர்கள்நேசன்
திண்ணமாய் வதிஷ்டர்சொல்லத் தேவியும் கேட்கலுற்ருள்.

32. செய்யும் தொழிலில் பொய்கள் சொல்லுவான். பெரியவர்களிடம் உபதேசமொழிகளைக் கேட்பான். கண்ணியமான குடும்பத்தை யுடையவன். கொஞ்சம் வியாதியுடையவன். அண்ணன் தம்பிகளிடம் இஷ்டம் அதிகமுள்ளவன். அருமையான வேதியர்களிடம் நேசமாயிருப்பான். இவ்வாறு நிச்சயப்படுத்தி வசிஷ்டர் சொல்ல, தேவியும் வினவலுற்ருள்.

33. ஏதுகா ரணத்தினுலே இவனுக்கு யோகம்சொன்னீர்
ஓதுவீர் அந்தச்சங்கை உரைக்குரோம் கேளும்தாயே
கோதில பத்தொன்பானும் கூடியே இருப்பதாலே
தீதிலா விசேஷயோகம் செப்பினேம் மேலும்கேளே.

33. என்ன காரணத்தினுலே இவனுக்கு யோகம் இவ்வளவு தூரம் சொன்னீர்? அந்தச் சந்தேகத்தை விளக்கிக் கூறுங்கள். தாயே! சொல்லு

கிரோம் கேட்பாயாக. குற்றமற்ற பத்துக்குடையவனான சனியும், ஒன்பதாமிடத்திற்குரிய குருவும் சேர்ந்திருப்பதனாலே, கெடுதலில்லாத விசேஷயோகத்தைச் சொன்னோம். மேலும் கேட்பாயாக.

34. இவன்பிதா பூர்வம்தன்னை எடுத்துநாம் உரைப்பக்கேளாய்
தவசிறு பாக்கம்தன்னில் செனித்தனள் கௌரிவமிசம்
நவமது செட்டுச்செய்து நாயகி மதலையுண்டாய்
அவனியில் வாழும்நாளில் அறைகுரோம் ஊழிதானே.

34. இவனுடைய பிதாவின் பூர்வோத்தரத்தை எடுத்து நாம் சொல்லுவோம். கேட்பாயாக. உயர்ந்த சிறுபாக்கம் என்ற ஊரிலே கௌரிவமிசத்தில் பிறந்து, நவீன வியாபாரங்கள் செய்து, பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு, உலகினில் வாழும்போது, ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைக் கூறுவோம்.

35. ஏழையாம் ஸ்ரீ[ஸ்திரீ]யும்ஓர்நாள் இவன்தெரு வாசல்வந்து
தாழ்வுடன் வார்த்தைபேசிச் சாதங்கள் வினவும்போது
தோழிக்குச் சாதமீந்து சுகமுள வார்த்தைசொல்லி
பாழான விஷமத்தாலே பணம்தூசு தாரேனென்று.

35. ஏழையான ஒரு ஸ்திரீ, ஒரு நாள், இவன் வீட்டுவாசலுக்கு வந்து, தாழ்மையுடன் கெஞ்சி அன்ன பிக்ஷைகேட்க, அத்தோழிக்கு அன்னமளித்துச் சுகமான வார்த்தைகள் சொல்லி, பாழான விஷமத்தினாலே பணம் சிறிது தாரே னென்று சொல்லி,

36. சேர்ந்தனன் பொருளீயாமல் தேவியும் பொருளும்கேட்கச்
சார்ந்தனன் வேறுஇல்லம் தோகையும் மனவெறுப்பால்
சார்ந்தவர் போலேபேசித் தனமீயாப் பாவிக்கேதான்
ஏர்ந்ததோர் மறுசென்மத்தில் இவன்துணை யில்லாதாயும்,

36. அவளைச் சேர்ந்தான். பொருள் தரவில்லை. அவளும் பொருள் கேட்க, வேறு வீட்டிற்குள் போய்விட்டான். அவளும் மனவெறுப்பினால், பிரியப்பட்டவனைப்போல் பேசி பணம்கொடாத பாவிக்கு, அடுத்த ஜன்மத்தில் சகோதரனில்லாமலும்,

37. மனைவியும் முதலில்தோன்றி மைந்தர்கள் இல்லாதாகி
மனைவிகள் தன்னால்துன்பம் வந்திடு மென்றுசொல்லிச்
சினம்கொண்டு சென்றாளென்றோம் சிரித்தவள் சாபம் [சேர்ந்து
வினையான் மனத்தனுகி வியாபாரக் குறைவுநேர்ந்து,

37. பெண்டாட்டியும் முதலில் ஏற்பட்டு, புத்திர பாக்கியமில்லாமல், மனைவிமார்களால் துன்பங்கள் வந்துசேரும், என்று கோபித்து, சாபங்

கொடுத்துச் சென்றாள். முதலில் சிரித்து விளையாடினவளுடைய சாபம் வந்து சேர்ந்தது. கெடுதலான மனதைக்கொண்டு வியாபாரக் குறைவுகள் ஏற்பட்டு,

38. சல்லிய பாதையுண்டாய்த் தவசிபோல் வேடம்கொண்டு
எல்லைகள் அதிகம்சென்று இடருகள் நிவிர்த்திசெய்யும்
நல்லதோர் காசிக்கேகி நற்பல தீர்த்தம்தோய்ந்து
புல்கினன் காஞ்சிதன்னில் பேதியால் மரணமெய்தி,

38. கடன் தொந்தரவு உண்டாகி, தவசிபோல் வேஷம்பூண்டு, பல விடங்களுக்குச் போய், தொந்தரைகளை நிவிர்த்திசெய்யும் காசிமா நகருக்குச் சென்று, நல்ல பல தீர்த்தாடனங்கள் செய்து, காஞ்சீபுரத்திற்குத் திரும்பினன். அங்கே பேதி உபத்திரவம் ஏற்பட்டு மரணமடைந்து,

39. பிரமனல் வரியப்பட்டுப் பிறந்தனன் கங்கைசேயாய்ப்
பராசரும் கேட்கலுற்றார் பாலகன் முன்செனமத்தில்
குறைவான குலமுதித்தும் கோதையும் சாபம்நேர்ந்து
வருவதால் இச்செனமத்தில் வரநதி குலமுதிக்கும்,

39. பிரம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டு, வேளாளர் குலத்தில் பிறந்தான். இதைக்கேட்ட பராசரும் வினவலானார். இவன் முன்ஜன்மத்தில் கீழ்ஜாதியில் பிறந்து, பெண்டாட்டிக்குச் சாபமும் ஏற்பட்டு வந்ததால் இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் உதிக்கும்,

40. காரணம் யாதுஎன்ன கழறுவார் வதிட்டர்தானும்
தீரனும் முன்செனமத்தில் சிலசில தலங்கள்சென்றும்
பாரினில் உயர்ந்தகாசி பதிக்குமே சென்றதாலும்
நாரியின் பூசைசெய்ய நற்காஞ்சி தன்னில்மாண்ட,

40. காரணம் என்ன என்று கேட்க, வசிஷ்டரும் சொல்லலுற்றார். இந்த ஜாதகன் முன்ஜன்மத்தில் சிற்சில தலங்கள் சென்று, கடைசியில் மேன்மைதங்கிய காசிக்ஷேத்திற்குச் சென்றதனல், தேவியின் பூஜைசெய்ய, (காமாக்ஷிதேவியைத் துதிக்க) நல்ல காஞ்சிக்கு வந்து இறந்த,

41. பலத்தினல் பிறந்துயோகம் பாக்கிய முடையோனுகிக்
குலவியே வாழ்வானுகும் கூறுவோம் மூவைந்தாண்டில்
நலமுள சாடிமாதம் நமன்பதிக் காளாயின்னேன்
நிலமையாய் மறுபிறப்பு நிகழ்த்துவோம் கேளும்தாயே.

41. பலத்தினல் (புண்ணியத்தினல்) பிறந்து யோகபாக்கியங்கள் உடையவனுகிச் சுகமாய் வாழ்வானுகும் என்று கூறுவோம். பதினைந்து வருஷத்தில் நல்ல கும்பமாசத்தில் எமலோகம் சென்றான். இவன் ஒழுங்காக மறுபிறவி அடைந்தான். அதைப்பற்றிக் கூறுவோம். தாயே! கேளும்.

42. உத்திரம் கோகர்ணத்தில் உதிப்பனும் க்ஷத்ரியசேயாய்ச்
சித்தமாய் அரசுசெய்து சேனைகள் துரகம்யானை
பெத்துமே வாழ்வானுகும் பேசுவோம் மாதுர்பூர்வம்
அத்தியை ஈன்றதாயே அறைகுறோம் கேட்டிடாயே.

42. வடக்கே கோகர்ண க்ஷேத்திரத்தில் க்ஷத்திரியக் குழந்தையாய்ப் பிறப்பானுகும். சித்தமான ராஜயோகத்தைப் பெற்று, கஜ, ரத, துரக, பதாதிகளைப் பெற்று வாழ்வானுகும். இவனுடைய மாதாவின் பூர்வஸ்திதியைப் பற்றிக் கூறுவோம். யானைமுகனைப் பெற்ற தாயே! கூறுகிறோம். கேட்பாயாக.

43. பெற்றமா தாவின்சேதி பேசுவோம் பனங்காட்டூரில்
சுத்தமாய்க் கோகுலத்தில் செனித்துமே மதலையுண்டாய்
வித்தகி வாழுநாளில் விமலன்தன் பூசைக்காகச்
சித்தமாய் ஆவின்பாலைத் தாயென்று கேட்கலுற்றார்.

43. இவனைப்பெற்ற மாதாவின் செய்திகளைக் கூறுவோம். பனங்காட்டூரில் சுத்தமான இடைச்சேரியில் பிறந்து, பிள்ளையேற்பட்டு, இவள் வாழ்ந்துவரும் நாளில், பகவானுடைய பூஜைக்காகச் சித்தமாய்ப் பசுவின் பாலைத் தருவாய் என்று கேட்டனர்.

44. [1]மேதியின் பாலைச்சேர்த்து வித்தகி ஈன்றாளென்றோம்
வேதத்தோன் ஓர்நாள்தன்னில் மெத்தவும் தாகம்கொண்டு
மாதிவள் தன்னைத்தாகம் வருந்தவும் அன்னப்பாலைச்[2]
சூதினால் சேர்த்துத்தந்தாள் சேர்ந்தது அதுஓர்தோஷம்.

44. எருமைப்பாலைக் கலந்து இவள் கொடுத்தாள் என்றோம். ஒரு வேதியர் ஒரு நாள் மிகவும் தாகமடைந்து இம்மாதுவைக் கண்டு, தாகத்திற்கு ஏதாவது கொடுங்கள், என, சூதுசெய்து சோற்று ஜலமும் தண்ணீரும் தெரியாமலிருக்கும்படி சேர்த்துத் தந்தாள். அந்த தோஷமும் சேர்ந்தது.

45. இன்னமும் பலதோஷங்க ளியம்புவோ மிவள்தன்பேரில்
அன்னவள் குன்மநோயால் அந்தகன் பக்கல்சேர்ந்து
மண்ணுண்டோன்[3] மகனுல்லக்கம் வரியவும் காஞ்சி
[மேற்கில்
உன்னத கங்கைசேயாய் உதித்தன ளென்றுசொன்னோம்.

---

1. எருமை
2. சோறுதண்ணீர்
3. நந்த கோகுலத்தில் பாலகிருஷ்ணன் மண்ணையுண்ட பாலகனானதும், யசோதாதேவி அவரைக் கண்டிக்க அவருடைய வாயினில் அண்ட சராசரங்களையும் பார்த்து திடுக்கிட்டாள் என்பதும் பாகவத கதையாகும்.

45. இன்னும் இவைபோன்ற பலதோஷங்கள் இயம்புவோம். இவள் மேல், அதன் காரணமாக, அவள் குன்மநோயால் மரணமடைந்தாள். மகாவிஷ்ணுவின் நாபிகமலத்தில் உதித்த பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப் பட்டு, காஞ்சீபுரத்திற்கு மேற்கே, மேலான வேளாளர் குலத்திலுதித்தனள் என்று சொன்னோம்.

46. மங்கையும் கேட்கலுற்றாள் மாதுவும் முன்சென்மத்தில்
சங்கையா தவகுலத்தில் செனித்தனள் இச்சென்மத்தில்
துங்கமாம் கங்கைசேயாய்த் தோன்றும் காரணத்தால்
நங்கையு முன்சென்மத்தில் நாதர்[க்]காவின் பால்தந்த,

46. இவளும் கேட்கலுற்றாள், இவள் முன்ஜன்மத்தில் இடையர்கள் வமிசத்தில் பிறந்தாள். இந்த ஜன்மத்தில் மேலான வேளாளர் குலத்தி லுதித்தாள். இந்த ஸ்திதி எதனால் ஏற்பட்டதென்றால், இவள்முன் ஜன்மத் தில் பகவானுடைய அபிஷேகத்திற்குப் பசுவின்பாலைத் தந்த,

47. புண்ணிய மிக்குலத்தில் பிறந்தனள் மேதிதோஷம்
வண்ணமாய் மறுமனைத்தான் வந்தனள் துணையா
[ணில்லாள்
திண்ணமாம் மத்தியத்தில் செகப்பும் மஞ்சள்களும்நீங்கும்
அண்ணலைப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

47. புண்ணியத்தின் காரணமாக இப்போது இக்குலத்தில் பிறந்தனள். எருமைப்பால் கலந்த தோஷத்தினால் வேறுவீட்டிற்கு வந்ததும், சகோதர னேயில்லாமல் இருந்தாள். நிச்சயமாய் மத்தியகாலத்தில் பலவிதமான இவளுக்குண்டான தோஷங்களும் அதன் குறிகளும் நீங்கிவிடும். பகவானைப் பூஜைசெய்யும் பார்வதிதேவியே! கேட்பாயாக.

48. முப்ப[த்து]தொ[ஒ]ன்பான் ஆண்டில் மான்றலை
[[1]மாதம்தன்னில்
செப்புவோம் அன்னைகெண்டம் சிறந்திடு மறுசென்மத்தை
ஒப்புடன் அவ்வூர்த்தில் உதிப்பளாம் இக்குலத்தில்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றாது.

48. முப்பத்தொன்பதாம் பிராயத்தில் தைமாசத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். மேன்மைபெற்ற அடுத்த ஜன்மத்தில் அவ்வூர்க் கடைசியில் இக்குலத்தில் உதிப்பளாம். கங்கையைத் தலையில் வைத்த பரமசிவனுடைய தேவியாகிய பார்வதியே! நாங்கள் கூறிய அருள்வாக்கிற்கு யாதொரு குறைவும் ஏற்படாது.

---

1. தைமாசம்

49. உதித்தவன் மரணகால முரைக்குறே னன்பாறுறில்
சதிஇல்லா ரிடபமாதம் சதுர்தசி வளர்பக்கத்தில்
விதியது முடியுமென்றேம் விளம்புவோ மிவன்பின் [சென்மம்
கதிதரும் அவ்வூர் தன்னில் கனமுள மறையோர்வமிசம்,

49. ஜாதகனுடைய மரணகாலம் பற்றிக் கூறுவோம். அவனுடைய ஐம்பத்தாறும் பிராயத்தில் குற்றமற்ற வைகாசி மாசத்தில், சுக்கில பட்சம் சதுர்த்தசியில், விதியது முடிவடையும் என்றேம். இவனுடைய பின் ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். மோட்சத்திற்குச் சாதகமாயிருக்கும் அவ்வூரில் கௌரவமிக்க பிராமணவமிசத்தில்,

50. பிறப்பனும் அரசர்பக்கல் போற்றியே சேவிப்பானும்
குறுமுனி கேட்கலுற்றர் குமரனு மிச்சென்மத்தில்
உரைந்தபுண் ணியங்களென்ன உரைப்பீர்கள் விபரமாக
அறுமுகன் பத்திகொண்டு அவன்திருப் பணியும்செய்து,

50 பிறப்பானுகும். அரசருடைய பக்கத்திலிருந்தே துதிசெய்து ஜீவனம் செய்வானுகும். அகஸ்தியர் இதைக் கேட்கலானார். பாலகனும் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியங்களென்ன ? அதை விவரமாய்ச்சொல்லுங்கள். முருகக்கடவுளின் பக்திபெற்று அவருக்குத் திருப்பணிகளும் செய்து,

51. அன்னமும் ஏழைக்கீந்தும் யாவர்க்கும் நல்லோனுகும்
தன்மனம் இரக்கமாயும் சான்றேர்கள் இஷ்டம்கொண்டும்
இன்னவன் வாழ்ந்ததாலே இயம்புவோம் மறையோனுகச்
சொன்னமும் பணிகளுண்டாய்ச் சுகமுடன் வாழ்வானுமே.

51. ஏழை ஜனங்களுக்கு அன்னதானம்செய்து, எவருக்கும் நல்லவனுவான். இரக்கமான புத்தியை யுடையவன். பெரிய புத்திசாலிகளுடன் உறவு கொள்ளுவான். இப்படி யெல்லாம் இவன் வாழ்ந்துவந்ததனுலே வேதியர்குலத்திலே பிறந்தான் என்றேம். சொர்ணமும் பூஷணங்களும் உண்டாகி, சுகத்துடன் வாழ்வானுகும்.

52. செனித்திடு காலம்தன்னில் சேய்திசை தலிருப்புக்
குனித்திடும் ஆண்டுமூன் றும் கூறிய திங்கள்நாலும்
வினையுண்டு சாதகர்க்கு விளங்கிடும் துணைவர்தாமும்
கனதன மேன்மேலோங்கும் சாற்றுவோம் விபரம்ரெண்டு.

52. இவன் பிறந்தகாலத்தினில் செவ்வாய்த்தசையில் இருப்பு வருஷம் மூன்றும், மாதங்கள் நான்குமாகும். வினைக்கட்டுகள் ஜாதகனுக்கு உண்டு. சகோதரர்கள் விளங்கிடுவார்கள். அதிகச்சொத்து சுதந்திரங்கள் மேன்மேலும் ஓங்கி வளரும். இவற்றின் விவரங்களை இரண்டாம்பாகத்தில் விவரமாய் எடுத்துச் சொல்லுவோம்.

ஜாதகம் 63

1. மேடலக் கினமதாக வெண்மதி காரிநாலில்
கூடிய ராகுஅஞ்சில் குருஆறில் புகருமேழில்
தேடிய பானுபுந்தி யெட்டினில் சேயுமொன்பான்
பாடுவீர் பலனையென்று பார்வதி கேட்கும்போது,

1. சந்திரனும் சனியும் கடகத்திலும், இராகு சிம்மத்திலும், குரு கன்னியிலும், சுக்கிரன் துலாத்திலும், சூரியனும் புதனும் விருச்சிகத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது கும்பத்திலும் தங்கும் படியான இப்படிப்பட்ட கிரகநிலைக்கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற் குண்டான பலன்களைச் சொல்லுங்கள், என்று சப்த ரிஷிகளைப் பார்வதிதேவி கேட்கும்போது,

	லக்கினம்		
கேது	இராசி		சந்திரன் சனி
	சக்கரம்		ராகு
செவ்வாய்	சூரியன் புதன்	சுக்கிரன்	குரு

2. குறுமுனி புகலுகின்றார் குறித்தது ஆணும்சென்மம்
வருமில்லம் வடதென்வீதி வாசலு மிந்திரனேக்கம்
நரிவாக னத்தா[1]ரீசன் நல்கிடும் வடபால்தன்னில்
சிறுவூராம் கூரையில்லம் சேயனு மிரெண்டாம்சென்மம்.

2. அகஸ்திய முனிவர் பின்வருமாறு சொல்லலுற்றார். இந்த ஜாதகம் புருஷப்பிரஜையின் ஜாதகம். இவன் பிறந்தவீடு வடக்குத் தெற்குவீதியி லுள்ளது. கிழக்குப்பார்த்த வாசலுடையது. ரிஷபவாகனத்திலமர்ந்த பரமசிவன் கோவில் வடக்கேயுள்ளது. அஃது ஒரு சிறிய ஊர். வீடோ கூரை வீடு. ஜாதகனும் இரண்டாவது ஜன்மமெடுத்தான்.

3. உதிப்பனும் இவனின்யோகம் உறும்தந்தை தாயின்யோகம்
சதிஇல்லாத் துணைவர்யோகம் தையலின் புத்திரயோகம்
அதிபன்தன் முன்பின்சென்மம் வரைகுறே மின்னூல்
[தன்னில்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

1. ரிஷபவாகனமுடையவர்

3. இவனுடைய யோகமும், தாய்தந்தையர் யோகமும், சகோதரர் மனைவி மக்கள் இவர்களின் யோகமும், இவனுடைய முன்பின் ஜன்மங்களும் ஆகிய இவைகளைப் பற்றியும் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். கதியற்றவர்களை ஆதரவு அளித்துக் காக்கும் பார்வதியே! கேட்பாயாக.

4. தாதைக்குத் தாரம்ரெண்டில் தரித்திடு மிளையாளீன்ற
நீதியாய் மைந்தன்தானும் நிகழ்த்துவோம் இவனின்தந்தை
போதவே துணையாண்காணன் பெண்ணது நால்வராகும்
ஓதுவேன் பின்பாகத்தில் உத்தமி சேதியாவும்.

4. தகப்பனுருடைய பெண்டாட்டிகள் இருவரில் இளையாள் பெற்ற பிள்ளைதான் தங்கம். அப்படி ஜனித்தவன் நம் ஜாதகன். இவனுடைய தந்தையைப் பற்றிய விவரம் கூறுவோம். அவனுக்கு ஆண்சகோதரமே யில்லை. சகோதரிகள் நால்வராகும். இவ்வுத்தமிகளின் செய்திகளை விவரமாகப் பிற்பகுதியில் கூறுவோம்.

5. தந்தையின் குணத்தைச்சொல்வேன் தானிரு நிறத்தனுகும்
தன்தனம் இல்லானுகும் சாகையும் வாடையாகும்
தன்பந்துக் கிணக்கம்சொல்வன் தரணிக ளில்லானுகும்
தன்தன மில்லானுகும் சதுஷ்பாதம் விருத்திஅல்பம்.

5. தந்தையின் குணங்களைக் கூறுவோம். கரிய நிறமுடையவன். சுயார்ச்சிதம் இல்லாதவனுவன். இருக்கும் வீடு வாடகை வீடாகும். தன்னுடைய பந்துக்களுக்கு ஆதரவான வார்த்தைகளைச் செல்லுவான். பூஸ்திதிகள் இல்லாதவனுதும். சொந்த சம்பாத்தியத்தில் மிச்சமில்லை. நாற்கால் பிராணிகளின் விருத்திகொஞ்சம் ஏற்படும்.

6. சுகதுக்கம் கலந்துவாழ்வன் தொல்லுல கோர்க்குநல்லன்
அகம்து முன்னுல்செய்வன் அண்டினோர் தம்மைக்காப்பன்
பகையென்று மனதில்வையான் பாரபட் சங்கள்பேசான்
உகமையாய்ப் பேசுவானும் உறுதியில் லாதநெஞ்சம்.

6. சுகமும் துக்கமும் கலந்து வாழ்வான். பரந்த பூமியிலுள்ளவர்களுக்கு நல்லவன். வீட்டை முதலில் கட்டிடுவான். அண்டினவர்களைக் காப்பாற்றுவான். மனதில் பகைமையே வைக்கமாட்டான். பட்சபாதமாய்ப் பேசமாட்டான். திருஷ்டார்த்தங்களுடன் பேசுவானுதும். மனதில் நிச்சய புத்தியில்லாதவன்.

7. ஆதியில் வறுமையுண்டு அலைச்சலாம் குடும்பம்தானும்
தீதாக வாயுபாதை செறிந்திடும் பின்னால்யோகம்
வேதனை ஒருவர்க்கெண்ணான் வெஞ்சினம் வெளிக்காட்டா [தான்
நீதிமான் ஞாயம்சொல்வான் [1]நிருபன்போல் பின்னால் [வாழ்வன்.

7. ஆரம்பத்தில் தரித்திரம் ஏற்படும். குடும்ப விஷயமாய் அலைச்சல் ஏற்படும். வாயுவின் உபத்திரவம் இடைஞ்சலைச் செய்யும். பிற்பகுதியில் நல்ல யோகம் ஏற்படும். பிறருக்குத் தீங்கு நினைக்கமாட்டான். தன்னுடைய கடுமையான கோபத்தை வெளிக்காட்டமாட்டான். தர்ம நியாயப்படி நடப்பான். நியாயங்களை எடுத்துச்சொல்லுவான். பிற்காலத்தில் அரசனைப்போல் வாழ்வான்.

8. தந்தையி னாஸ்தியில்லான் தன்கரம் பத்மரேகை
வந்திடு மாமிரெண்டு வாக்கதைக் காப்பானாகும்
பந்தினர் புகழப்பின்னால் பாருகள் சேர்ப்பானாகும்
நொந்திடும் பேரைக்காப்பன் நிமலியே கேட்டிடாயே.

8. பிதுரார்ஜிதமில்லாதவன். கையில் தாமரைரேகையை யுடையவன். இரண்டு மாமிகள் வருவார்கள். சொன்னசொல் தவறமாட்டான். சொந்தக்காரர்கள் புகழ்வார்கள். பின்பகுதியில் நிலங்களைச் சேர்ப்பான். சிரமப்படுகிறவர்களைக் காப்பாற்றுவான். பார்வதியே! கேட்பாயாக.

9. இந்நெறி யுடையானுக்கு இவனுமே உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வே ளழகுளா னிருசிவப்பன்
கன்னென மொழியுமுண்டு கல்வியும் சமமதாகும்
பின்னமில் லாததேகி பிறர்குற்றம் புகலானாகும்.

9. இத்தகைய தர்மநெறிகளைக் கொண்ட தந்தைக்கு, இவனே புத்திரனாகப் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவோம். அழகுள்ளவன். பொதுநிறமுள்ளவன். கனிவான மொழிகளைக் கூறுவான். சமமான கல்வியை யுடையவன். சரீரத்தில் யாதொரு பின்னமு மில்லாலவன். பிறருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லமாட்டான்.

10. பிறந்தநாள் முதலாமாகப் பிறைபோலே செல்வமோங்கும்
தரைசேரல் இல்லம்நேரல் தனமது பெருக்கமாகும்
திருமாளி செய்வானாகும் திகைத்தோர்க்கு உதவிசெய்வன்
வறுமைகள் தீங்குமென்றோம் வாக்கதைக் காப்பானாகும்.

---

1. அரசன்

10. பிறந்தநாள் முதலாக வளர்பிறைபோல செல்வங்கள் ஓங்கும். பூமி சேருதல், வீடு சேருதல், பணம் பெருகுதல் இவை ஏற்படும். பெரிய திருமாளிகையைக் கட்டுவான். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான். தரித்திரம் ஹதமாகும். சொன்னசொல் தவறமாட்டான்.

11. சல்லிய பாதையில்லான் தைரியமில் லானுகும்
இல்லையென் றுரைக்கமாட்டா னிடர்செய்யான் [யாவருக்கும்
அல்லலெப் போதும்காணுன் ஆவுகள் பெருக்கமாகும்
நல்லதோர் தலங்கள்செல்வன் நயப்பான வார்த்தைகூர்வன்.

11. கடன் தொந்தரவு இல்லாதவன். மனதில் தைரியமில்லாதவன். யாசகர்களுக்கு இல்லை என்று சொல்லமாட்டான். யாவருக்கும் தீங்கு செய்யமாட்டான். எப்பொழுதும் யாதொரு இடைஞ்சலும் இல்லாதவன். பசுக்கூட்டங்கள் விருத்தியாகும். நல்ல க்ஷேத்திரங்களுக்குப் போய்க் கடவுளைத் தரிசிப்பான். வேடிக்கையாக வார்த்தைகள் பேசுவான்.

12. தன் துணை முன்னுல்நஷ்டம் தங்கும்பின் ஆண்பாலொன்று
கன்னிமார் மூவராகும் கழறுவோம் ஆண்பால்சேதி
உன்னத வார்த்தைகூர்வன் உறுதியா மனத்தனுகும்
அன்னிய ருறவுகொள்வன் அல்பமாம் கோபியாவன்.

12. தன் சகோதரன் முதலில் நஷ்டமாவன். தம்பி ஒருவன் தங்குவான். மூன்று தங்கைகளும் உண்டு. சகோதரனின் செய்திகளைக் கூறுவோம். மேலான வார்த்தைகளைப் பேசுவான். திடமான மனதை யுடையவன். பிறருடைய சிநேகத்தைப் பெறுவான். கொஞ்சம் கோபமுடையவன்.

13. உதித்தநாள் முதலாமாக உயர்மதிபோலே யோகம்
சதியுள மனத்தனுகும் தரணிகள் விருத்திசெய்வன்
அதிகமாம் வார்த்தையேற்பன் அடாபிடி கொஞ்சமுண்டு
நிதியது செலவுசெய்யான் நிருபர்கள் உறவுகொள்வன்.

13. பிறந்தநாள் முதற்கொண்டு வளர்பிறைபோலே யோகம் விருத்தியடையும். பேத்துமாத்தல் புத்தியை யுடையவன். பூஸ்திதிகளை விருத்தி செய்வான். அதிக வார்த்தைகளைப் பெறுவான். அடாபிடிகள் கொஞ்சம் உண்டு. சொத்துக்களை அழிக்கமாட்டான். அரசர்களுடைய உறவைப் பெறுவான்.

14. கடன்படான் இடுக்கமில்லான் காரிய சமர்த்தனுகும்
உடன்படான் பிழைகளுக்கு உபாயங்க ளதற்குச்செய்வன்
மடையரைச் சேரானுகும் வண்டிவா கனமுமேற்பன்
தடபுடல் செய்கைகொஞ்சம் சந்தேக மனத்தனுகும்.

14. கடன் வாங்கமாட்டான். சிரமங்கள் கிடையா. காரியங்கள் செய்வதில் சாமர்த்தியமுடையவன். குற்றமான காரியங்களுக்குத் தான் உடன்படமாட்டான். இடுக்கண்களிலிருந்து விலகுவதற்கு உபாயங்களைக் கூறுவான். மடைப்பையல்களுடன் சேரமாட்டான். வண்டிவாகனங்களையு முடையவன். கொஞ்சம் தடபுடலான செய்கைகளை யுடையவன். மனதில் சந்தேக புத்தியுடையவன்.

15. பாரியு மொன்றேயாகும் பாலர்கள் ஆண்பாலொன்று
நாரியு மூவராகும் நாயகன் வயதுதீர்க்கம்
காரிய சமர்த்தனாகும் கட்டுரை பகர்வானாகும்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

15. பெண்டாட்டி ஒருத்திதான். ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் உடையவன். இவனுடைய ஆயுள் தீர்க்கம். காரியங்களைச் செய்வதில் சாமர்த்தியமுடையவன். பொய்களை இட்டுக்கட்டி வார்த்தைகள் சொல்லுவான். ஆறுமுகக்கடவுளைப்பெற்ற அம்பிகையே! கேட்பாயாக.

16. கன்னிமார் சேதியாவும் கழறுவோம் பின்பாகத்தில்
இன்னவன் மணத்தின்காலம் இருபத்தோ ருண்டில்நேரும்
அன்னவள் உள்ளூராகும் அவள்குணம் கூறக்கேண்மோ
பொன்னிற முடையளாகும் புகழ்ந்தோரை ஆதரிப்பள்.

16. இவனுடைய தங்கைமார்களுடைய செய்திகள் எல்லாவற்றையும் பின் பாகத்தில் கூறுவோம். இவனுடைய கலியாணம் இருபத்தொன்றாம் வயதில் நேரிடும். அவளும் உள்ளூரிலிருந்து வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுவோம். கேட்பாயாக. தங்கநிறமுடையவள். தன்னைப் பெருமைப்படுத்திப் பேசுபவரை நன்கு ஆதரிப்பாள்.

17. மாதுவும் வந்தபின்பு வளர்பிறை போலேயோகம்
சூதிலா அடக்கவார்த்தை சொல்லுமுன் கோபம்கொஞ்சம்
சாதிப்பாள் சிலதுசங்கை தன்வரன் மனதுக்கேத்தோள்
வேதனை ஒருவர்க்கெண்ணாள் விருந்தோர்மேல் பிரியமாவள்.

17. பெண்டாட்டி வந்தபின்பு வளர்பிறைச சந்திரனைப்போல் யோகம் வளர்ந்திடும். சூதுவாது இல்லை. அடக்கமான வார்த்தை பேசுவாள். முன்கோபம் கொஞ்சமுண்டு என்பார்கள். சில சந்தேகங்களைப்பற்றிச் சாதனை செய்வாள். தன் புருஷனுடைய மனதிற்குகந்தவள். பிறருக்கு இடைஞ்சலே எண்ணமாட்டாள். விருந்தினர்மேல் பிரியம் வைப்பாள்.

18. பால்பாக்கிய முடையளாகும் பசித்தோர்க்குத் தாகமீவள்
சீலியாம் விரதசாலி சென உப காரியாகும்
காலத்தை அறிந்துரைப்பள் கண்முகம் வசியமுண்டு
சாலவே வயதுதீர்க்கம் சடைமுனி புகலுகின்ருர்.

18. பால்பாக்கியமுடையவளாகும். பசித்தவர்களுக்கு அன்னபானுதிகளைக் கொடுப்பாள். சீலமுள்ளவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். பொதுஜன உபகாரியாவள். காலகதிகளை அறிந்துரைப்பாள். குளிர்ந்த முகத்தையுடையவள். பிறரை வசீகரம் செய்யும் அழகுடையவள். பொருத்தமாகவே தீர்க்காயுசுடையவள். ஜடாமுனி இதைக்கேட்டு வினவலானுர்.

19. எப்படி வயதுதீர்க்கம் இரெண்டேழோன் சரத்திலாகத்
தப்பித மாகநிற்கத் தாரமும் இரெண்டுநேரும்
அப்படிச் சொல்லொண்ணுது அம்புலி நாலினுட்சி
செப்புவேன் ஏழோனுட்சி சிகியுமே லாபம்தங்க,

19. எப்படி வயசு தீர்க்கம் என்றீர்? துவிதீய சப்தமாதிபதி (இரண்டு ஏழுக்குடையோன்) சரராசியிலிருக்க (துலாத்திலிருக்க), பிசகான வழியில் தங்கி இருப்பதனுல், பெண்டாட்டி இரண்டு நேரிடும். அப்படியும் சொல்லுவதற்கில்லை. சந்திரன் நான்காமிடத்தில் சுவக்ஷேத்திரம் பெற்றிருப்பதனுல், ஏழாமிடத்திற்குடையவனும் ஆட்சிபெற்றிருப்பதனுல், கேதுவும் லாபஸ்தானத்திலிருக்க (பதினென்ருமிடத்திலிருக்க),

20. இருமனை அணுகாதாகும் இப்பாரி இவன்முன்னுக
மரலியின் பதிக்குச்செல்வள் வரைகுவீர் காலம்தன்னைத்
திருமகன் அன்பாறு றில் செல்லுவாள் காலனுடு
பிறைதிசைக் காலமாகும் பேசொண்ணுத் தாரம்ரெண்டு.

20. இரண்டு பெண்டாட்டி ஏற்படாது. இம்மனைவியும் இவன் முன்னுக மரணமடைவாள். அதுவும் எந்தக்காலத்திலென்ருல், இவனுடைய ஐம்பத்தாரும் பிராயத்தில் காலன்நாட்டிற்குச் செல்லுவாள். அதுவும் சந்திரதசைக் காலமாகும். தாரம் இரண்டு என்று சொல்லுவதற்கே இடமேயில்லை.

21. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலமுருது
சித்திமா யுதித்தாலும்தான் தீங்காகு மென்றுசொல்வோம்
குத்தத்தைச் சொல்லுமென்ன கோள்பணி அஞ்சில்தங்கப்
புத்திர னுதனுறில் பொருந்தின பலத்தால்சொன்னேம்.

21. புத்திர விருத்தியைப்பற்றிப் பேசுவோமென்ருல், அதற்கு பலமேயில்லை. அப்படியே ஏற்பட்டாலும் இடைஞ்சலாய் முடியும். என்ன குற்றம்

அதற்கு? சொல்லுங்கள், என்று கேட்க, இராகு லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் தங்க, புத்திரனை வியாழபகவான் ஆறுமிடத்தில் பொருந்தின பலத்தினுல் இப்படிச் சொல்லலாஞேம்.

22. சாதகன் முன்செென்மத்தில் சார்ந்தது அந்ததோஷம்
ஓதுவீர் அந்தச்சங்கை உதித்தசேய் பூர்வம்கேளாய்ப்
பாதகம் விலக்கும்பட்சி நகரினில் வன்னியசேயாய்
மேதினில் உதித்தாறுகும் வேதியர்க் கூழிசெய்து,

22. ஜாதகனுடைய போனஜன்மபிராரப்த வினையினுல் அந்ததோஷம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யுங்கள். அவனுடைய பூர்வோத்தரத்தைக் கேட்பாயாக. பிரம்மஹத்தி முதலான தோஷங்களைப் போக்கும் திருக்கழுக்குன்றத்தில், வன்னியகுலத்தில் பிறந்து, பூமியில் வேதியர்களுக்கு ஊழியம் செய்து,

23. பாரியு மதலையுண்டாய்ப் பாலனும் வாழுநாளில்
கார்க்கோடன் இல்லம்வாசம் கலவரம் குடகத்தாலே
மாரியே முத்தம்தங்க மாரனும் அரங்கம்செய்து
தீரமாய்க் காலனுடு சேர்த்தன னென்றுசொல்வோம்.

23. பெண்டாட்டி பிள்ளை ஏற்பட்டு, இப்பாலகன் வாழ்ந்து வரும் நாளில், கார்க்கோடகன் என்ற வாழும் பாம்பு இவன் வீட்டில் வசித்து வந்தது. ஒருநாள் படமெடுத்து முற்றத்தில் அது காற்றுட வர இவன் பதுங்கி இருந்து அதை அடித்துக் கொன்றுவிட்டான் என்று சொல்லுவோம்.

24. ஆகையால் அந்ததோஷம் அணுகிற்று பாலனுக்குப்
பாகமாய் அந்தியத்தில் பாலர்கள் தோஷமாகித்
தோகைவா கனத்தோன்.........செய்துமே ஏழைக்கன்னம்
பாகமாய் ஈந்துஇன்னுேன் பரந்தனன் காலனுடு.

24. ஆதலால் அந்ததோஷம் இவனை வந்தடைந்தது. பக்குவமாய் அந்தியகாலத்தில் பிள்ளைகள் பிறந்து இறந்தார்கள். மயிலேறும் முருகனுக்கு வழிபாடுகள் செய்து, ஏழைகளுக்கன்னம் பக்குவமாகக் கொடுத்து, கடைசியில் இவன் எமலோகம் சென்ருன்.

25. மால்மகன் வரியப்பட்டு வந்தவனென்று சொல்வோம்
[1]ஆலத்தைக் கொன்றதோஷ மணுகிடு மிச்சென்மத்தில்
..............தோஷமெய்தும் பகருவீர் அதற்குச்சாந்தி
வேலன்வாழ் மயிலத்துக்கு வித்தகன் ஏழுகார்த்தி,

---

1. விஷப்பாம்பு

25. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவன் இவனென்று சொல்லுவோம். விஷப்பாம்பைக்கொன்ற தோஷம் இந்த ஜன்மத்தில் இவனை அணுகிற்று. அதன் காரணமாய்ப் புத்திரதோஷம் ஏற்பட்டது. அதற்குண்டான சாந்தி (பரிகாரம்) சொல்லுங்கள் என்று கேட்க, மயிலம் என்ற ஊரில் வேலனுடைய திருக்கோயிலுள்ளது. இவன் அங்கு எழு கார்த்திகைகள்,

26. இடைவிடா சென்றுமேதான் யீராறு கரத்தோனுக்கு
அடவுட னர்ச்சித்தேத்தி அறுரெண்டு........அன்னம்
தடையிலா ஈந்துஇன்னேன் தாம்பூலம் தனமுமீந்து
உடன்நகர் சென்றுஇன்னேன் உருவற்ற மாரிக்கே[1] தான்,

26. இடைவிடாது போய்த்தரிசித்து, பன்னிரண்டு கைகளையுடையானுக்கு அடவாக அருச்சனைகள் செய்து, துதித்து, வழிபாடுகள் செய்து, பன்னிரண்டு பிராமணர்களுக்கு அன்னதானம் யாதொரு தடையும் இல்லாமல் தந்தருளி, வெற்றிலை பாக்கு தக்ஷிணைகள் கொடுத்து, தன்னூருக்கு வந்து ரூபமில்லாத மாரியம்மனுக்கு,

27. சோதியும் ஒன்றுவைக்கச் செனித்திடும் சுதர்கள்விருத்தி
தீதென்று நினைத்தானாகில் செனிக்காது செனிக்கில்தீதாம்
ஓதின மொழிபோல்செய்யில் உதித்திடு மாண்பாலொன்று
மாதுவும் மூவர்தீர்க்கம் மங்கையே கேட்டிடாயே.

27. விளக்கு ஒன்று ஏற்றிவைக்க, பிள்ளைகள் பிறந்து விருத்தியாகும். இது சரியல்ல என்று நினைத்தானாகில், பிள்ளை பிறக்காது. பிறந்தாலும் இருக்காது. சொன்னபடி செய்தால் ஆண் குழந்தை ஒன்று பிறக்கும். மூன்று பெண்களும் பிறக்கும். இவர்கள் தீர்க்கம். மங்கையே! கேட்பாயாக.

28. மாரிக்கு தீபமொன்று வைத்திட உரைத்தீர்.........
............ருவீர் காலம்தன்னை உத்தமன் மரணமட்டும்
பாரினில் வைக்கவேண்டும் பற்றுது தரித்திரங்கள்
கூறுவோம் பிறைபோல்யோகம் குவலயம் மதிக்கவாழ்வன்

28. மாரியம்மனுக்கு விளக்கு ஒன்று ஏற்றி வைக்கும்படி சொன்னீர்கள். அஃது எந்தக்காலத்திலென்று கூறுவீர். இவ்வுத்தமன் மரணபரியந்தம் உலகினில் வைக்கவேண்டும். தரித்திரமே நெருங்காது. பிறைச்சந்திரனைப் போல் யோகம் வளர்ந்து கொண்டேவரும். உலகினர் மதிக்கும்படி வாழ்வான்.

---

1. அம்மா மாரி (ரேணுகையின் கதை)

29. தரணிகள் நாட்குநாளாய் விருத்திகாலி விருத்தி
உறன்முறை மதிக்கவாழ்வன் உலகினில் புகழுமேற்பன்
பெருமையும் புகழுமெய்தும் பிதாமேலாய் வாழ்வானுகும்
திருமால்ஐயைந்தின்மேல் செப்பினுன் என்று..........

29. பூஸ்திதிகளை நாளுக்குநாள் விருத்தி செய்வான். நாற்கால் பிராணிகள் விருத்தியாகும். சொந்தக்காரர்கள் மதிக்க வாழ்வான். உலகத்தில் கீர்த்தியைப் பெறுவான். பெருமையையும் அடைவான். தந்தைக்கு மேலாய் வாழ்வான். இவ்விதம். விஷ்ணு, இருபத்தைந்தாம் வயதிற்குமேல் ஏற்படும் என்று செப்பினுர். என்று.................

30. தனம்பணி பூமியாவும் சேர்ப்பன் பத்தாயிரம்பொன்
கனமுடன் வாழ்வானுகும் கழறுவோம் அன்னைசேதி
சினமுண்டு வெளிக்காட்டாதாள் சீலம்போல் வெளி
[மயக்கம்
.................வித்தகி பாட்டாளியாகும்.

30. தனம், ஆபரணங்கள், பூமிகள் யாவும் சேர்ப்பான். மொத்தத்தில் பத்தாயிரம் பொன்கள் சேர்த்துக் கௌரவவாக வாழ்வானுகும் என்று சொல்லுவோம். அன்னையின் செய்தி விவரங்களை இனிக் கூறுவோம். கோபமுள்ளவள் அதை வெளிக்காட்டமாட்டாள் சீலமுள்ளவள்போல் வெளிமயக்கம் செய்வாள். இவ்வித்தகி நல்ல வேலைக்காரியாவள்.

31. பித்தவாய் வுடையளாகும் பேதைக்கு அன்னைரெண்டு
சக்தியும் இளையாளுக்குச் செனிப்பளாம் துணையாளுென்று
வித்தகி பெண்பாலொன்று அறைகிறும் தீர்க்கமாகப்
புத்திரன் தன்னுல்யோகம் பொருந்திடும் பாவைக்கேதான்.

31. பித்தவாயு உடையவளாகும். இவளுக்கு இரண்டு தாயார்கள். இவள் இளையாளுடைய மகளாவள். சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தி. இரண்டும் தீர்க்கம். புத்திரனுல் இவளுக்கு அதிகம் யோகம் பொருந்திடும்.

32. அவளுட பூர்வம்சொல்வேன் அருணையில் வன்னியசேயாய்
இவளுமே செனித்துமேதான் இடரது இல்லாவாழ்ந்து
தபசிகட் கன்னமீந்து சலித்தோர்க்குத் தாகமீந்து
பவமன மில்லாதானுகிப் பற்றினள் காலநாடு.

32. அவளுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவேன். திருவண்ணுமலையில், வன்னியர் குலத்தில், இவள் ஜனித்தாள். இடைஞ்சல்களில்லாது வாழ்ந்து, தபசிகட்கு அன்னமளித்து, ஏழைகளுக்குத் தாகசாந்தியடையும்படி கஞ்சிவார்த்து, பவவினைகளில்லாமல் எமலோகம் சென்றுள்.

33. வேதனால் வரியப்பட்டு விளங்கினாள் இந்தமாது
ஓதுவேன் இவள்பின்சென்மம் உயர்சிறு பாக்கம்தன்னில்
சூதான வைசியசேயாய்ச் செனித்துமே வறுமையின்றி
போதன முடையளாகிப் பூமியில் வாழ்வாளாகும்.

33. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, இம்மாது வந்து பிறந்து விளங்கினாள். இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். உயர்வான சிறுபாக்கம் என்ற இடத்தில், சூதுவாதுகளுள்ள வைசியசேயாய் ஜனித்து, வறுமைத் துன்பங்களில்லாமல், வேண்டிய தனத்தையடைந்து பூமியில் வாழ்வர்ளாகும்.

34. தந்தையின் பூர்வம்சொல்வேன் சீர்காழி தன்னிலேதான்
வந்தனன் மறவனாக மானிலம் விருத்திசெய்து
இந்தவன் வாழும்நாளில் எய்தின வினையைக்கேண்மோ
தன்னுட துணைவன்பாகம் தராமலே மோசம்செய்தான்.

34. தந்தையின் பூர்வவிஷயங்களை எடுத்துச் சொல்லுவோம். சீர்காழி தன்னிலே மறவனாகப்பிறந்து, மாநிலத்தை கிருஷிசெய்து, விருத்திபண்ணி, இவன் வாழ்ந்து வரும்காலத்தில், ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பாயாக. தன்னுடைய சகோதரனுடைய பாக சொத்தைத் தாராமலே மோசடி செய்தனன்.

35. பின்னவன் வருத்தமுற்றுப் புகன்றசா பத்தைக்கேண்மோ
பொன்கடன் தராதபாவி பிறக்கும்பின் சென்மந்தன்னில்
அண்ணன்தம் பிகளுமின்றி அவன்தந்தை ஆஸ்தியின்றி
குன்னிய மனத்தனாகிக் குவலயம்தன்னில் வாழ்வாய்.

35. தம்பியும் வருத்தமுற்றுச் சாபம் கொடுக்கலானான். அதன் விவரத்தைக் கேட்பாயாக. பொன் சொத்தை எனக்குக் கொடுக்காத பாவிக்கு அடுத்த ஜன்மத்தில் அண்ணன் தம்பிகள் இல்லாமல் அவன் பிதாவின் சொத்துமில்லாமல் மனத்தாங்கலுடன் உலகினில் வாழக்கடவான் என்று,

36. இன்னமும் பலவார்சொன்னான் எய்திற்று அந்தச்சாபம்
மன்னனும் அந்தியத்தில் வறுமையாய் மரணமாகிப்
பொன்னவன் வரியப்பட்டுப் பிறந்தன னென்றுசொல் [வோம்
முன்சாபம் சேர்ந்ததாலே மேவாது துணையானுந்தான்.

36. இன்னமும் இதைப்போல் பலவாறு சொன்னான். அந்தச் சாபம் அவனை வந்தடைந்தது இவனும் கடைசிகாலத்தில் வறுமைத்துன்பத்துடன் மரணமடைந்து, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, பிறந்தான் இவன் என்று சொல்லுவோம். முன்ஜன்ம சாபத்தின் கொடுமை இவனைச் சேர்ந்ததனால் சகோதரன் ஏற்படவில்லை.

37. வறுமையும் ஆதில்உண்டு வளைவுமே இல்லாவாழ்வன்
பெறும்சுதர் தன்னால்யோகம் பெறுவனும் புகழுமேற்பன்
வரும்சென்மம் தக்கோலத்தில் மருவுளான் க்ஷத்திரிய
[சேயாய்த்
திருகிலா வணிபம்செய்வன் செல்வதி கேட்டிடாயே.

37. ஆதியில் (ஆரும் பிராயத்தில்), வறுமைத்துன்பம் ஏற்படும். வசிக்கச் சொந்தவீடு இல்லாமல் வாழ்வான். பிறக்கும் பிள்ளைகளால் யோகம் அடைவான். கீர்த்தியும் ஏற்படும். அடுத்த ஜன்மம் தக்கோலத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான். இடைஞ்சலில்லாத வாணிபம் செய்வான். பார்வதியே! கேட்பாயாக.

38. இருபது ஒன்பதாண்டில் இவனுக்குக் கெண்டமெய்தும்
மறலியைக் காணுகும் வரைகுரும் முப்பானலில்
பெருஆடி மாதம்தன்னில் புகலுவோம் மாரகங்கள்
முப்பான் மூன்றில்கூறுவோம் அன்னை கெண்டம்.

38. இவனுடைய இருபத்தொன்பதாவது ஆண்டில், இவனுக்குக்கண்டம் ஏற்படும். அப்பொழுது எமலோகம் செல்வதற்கில்லை. முப்பத்திநாலாம் வயதில், பெருமைபொருந்திய ஆடிமாசத்தில், மரணங்கள் ஏற்படும் என்று சொல்லுவோம். இந்த முப்பத்துமூன்றும் பிராயத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும் என்று கூறுவோம்.

39. அன்பது ஒன்பதாண்டில் அணுகிய கும்பமாதம்
இன்னவ னுடலமேகு மியம்புவோம் இவன்பின்சென்மம்
தென்திசை தில்லைதன்னி லுதிப்பனும் சைவசேயாய்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

39. ஐம்பத்தொன்பதாம் பிராயத்தில், மாசிமாதத்தில் இவன், மரணமடைவான். இவனுடைய மறு ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். தெற்குத் திக்கிலுள்ள சிதம்பரத்தில், உயர்ந்த சைவக்குழந்தையாய்ப் பிறப்பான். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

40. பிறந்திடும் காலம்தன்னில் பூசத்தின் கடைபாதத்தில்
தரியவன்[1] திசைநாலாண்டும் கலந்திடும் திங்கள்ரெண்டும்
..........பிணியுமுண்டு செப்பினோம் பூர்வபாகம்
அருமறை முடிவிலாடும் அம்பிகையாளே கேளாய்.

40. பிறக்கும்போது பூசநட்சத்திரம் கடைசி (நான்காவது) பாதமாகும். அப்போது சனிமகாதசையில் இருப்பு வருஷம் நான்கு, மாசம் இரண்டு. அக்காலத்தில் துன்பங்களுமுண்டு. இதுவரை பூர்வபாகத்தினுடைய விவரங்களைக் கூறினோம். ஊழிக்காலத்தில் ஆனந்தக்கூத்தாடும் அம்பிகையே! கேட்பாயாக.

---

1. சனிபகவான்

ஜாதகம் 64

1. சந்திரன் சாடியாகச் சனிசேயும் மீனமாகப்
புந்தியும் பானுவீணை புகர்மண்டி[1] குருவும்சீயம்
மந்தர கயிறு[2]நந்தி அவிட்டமும் கடைபாதத்தில்
இந்தவார் கோளுநின்று லக்கினம் மேடமாக,

1. இராகு இருஷபத்திலும், சூரியனும் புதனும் மிதுனத்திலும், சுக்கிரன் கடகத்திலும், குரு சிம்மத்திலும், கேது விருச்சிகத்திலும், சந்திரன் கும்பத்திலும், சனியும் செவ்வாயும் மீனத்திலும், தங்கும்படியான இவ்வித கிரகநிலைகள் கொண்ட இம்மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலனைக் கூறுங்கள். ஜாதகனுக்கு நட்சத்திரம் அவிட்டம்; நான்காம் பாதமாகும்.

சனி செவ்வாய்	லக்கினம்	ராகு	சூரியன் புதன்
சந்திரன்	இராசி சக்கரம்		சுக்கிரன்
			குரு
	கேது		

2. பார்வதி கேட்கும்போது பராசரும் புகலுகின்றார்
சீர்புகழ் ஆண்பால்சென்மம் செனிக்குமில் தென்பால்
[நோக்கம்
கூறுவோம் வாடைஇல்லம் கோவலர்[3] வாசமாகும்
மாரியும் கீழ்பாலாகும் வடதிசை நகரமொப்பாம்.

2. இப்படி பார்வதி கேட்கும்போது, பராசாரும் சொல்லலுற்றார். இந்த புருஷஜன்ம ஜாதகம் புகழ்பெற்றது. பிறந்தவீடு தெற்குப்பார்த்த வாசலுடையது. கிழக்குமேற்கு வாடையிலுள்ளது. இடையர்கள் வசிக்கும் ஊர். அம்மன்கோவில் கிழக்கே யுள்ளது. வடக்கேயுள்ள நகரங்களை ஒப்பதாகும்.

---

1. கடகம்
2. இராகு
3. இடையர்

3. பாலகன் வேளாண்வம்சம் பிறப்பனு மென்றுசொல்வோம்
ஏலவே அன்னைதந்தை இவன்துணை களத்திரபுத்திரர்
கோலமாய் முன்பின்சென்மம் கூறுவோ மின்னூல்தன்னில்
ஆலத்தை உண்டோன்தேவி அறிவிப்போம் பிதாவின்சேதி.

3. இந்த ஜாதகன் வேளாளர் வமிசத்தில் பிறந்தவன் என்று சொல்லு வோம். ஏற்கவே இவனுடைய தாய்தந்தையர், சகோதரர், புத்திர களத்திரம் முதலானவர்களுடைய யோகங்களையும், ஒழுங்காக இவனுடைய முன்பின்ஜன்மம் இவைகளையும் விவரமாக இப்புஸ்தகத்தில் கூறுவோம். ஆலகால விஷத்தையுண்டவனின் தேவியாகிய பார்வதியே! பிதாவின் செய்தியை முதலில் தெரிவிப்போம்.

4. தந்தையின் துணையாண்ரெண்டு சத்திமார் அவ்வார் தீர்க்கம்
நொந்திடு மற்றதெல்லாம் நுகர்ந்தஆண் ஒன்றாய்வாழ்வர்
அந்தவர் சேதிபின்பால் அறிவிப்போம் தாயேயாங்கள்
இந்தவன் தந்தைசேதி இயம்புவோம் இனிமேலாக.

4. தந்தையுடன் பிறந்தசகோதரர் இருவர். சகோதரிகளும் இருவ ராவர். யாவரும் தீர்க்கும். மற்றவைகள் வியோகமடையும். சகோதரர்கள் ஒன்றுபட்டு வாழ்வாராவர். அவர்களுடைய செய்திவிவரங்களைப் பின்பால் அறிவிப்போம். தாயே! நாங்கள். இனிமேலாக ஜாதகனுடைய தந்தையின் விவரங்களைக் கூறுவோம்

5. யூகைவான் நுணுக்கம்தேர்வ னுண்மையை வெளிக்
[காட்டாதான்
பாகமாய்ப் பேசுவானும் பதர்குணம் இல்லானாகும்
ஆகம முணர்ந்தோரிஷ்ட மழகுளான் மாம்சிவப்பன்
தோகையால் பெருமையேற்பன் துன்பங்க ளெவர்க்கு
[மெண்ணான்.

5. நல்லபுத்திகூர்மை யுள்ளவன். நுட்பங்களை அறியக்கூடிய சக்தி யுள்ளவன். உண்மையை வெளிக்காட்டமாட்டான். பக்குவமாய்ப் பேசு வானாகும். பிச்சைக்கார புத்தியில்லாதவன். ஆகம சாஸ்திரங்களில் வல்ல வர்களிடம் சிநேகம் செய்வான். அழகுடையவன். மாநிறமுள்ளவன். பெண் டாட்டியினால் பெருமையை யடைவான். யாவர்க்கும் துன்பம்செய்ய நினைக்க மாட்டான்,

6. தந்தையின் இல்லம்விட்டுச் சாருவான் தென்பால்திக்கில்
தன்துணை உதவியாலே பாக்கியம் சேர்ப்பானாகும்
விந்தையாய்ச் செட்டுச்செய்வன் வீண்வம்பில்
[செல்லானாகும்
கந்தன்மேல் பத்திபூண்பன் கல்விமான் கடன்கொள்ளா
[தான்.

6. தந்தையின் வீட்டைவிட்டுத் தெற்கே செல்லுவான். தன்னுடைய சகோதரர்களின் உதவியினாலே சொத்துக்களைச் சேர்ப்பான். ஆச்சரியப் படும்படி செட்டுகள் செய்வான். வீண் வம்படிக்கமாட்டான். வம்புகளில் தலையிடமாட்டான். முருகக்கடவுளிடம் பக்திகொள்ளுவான். படிப்பாளி. கடன் வாங்கமாட்டான்.

7. சலதொழில் வணிபம்செய்வன் சாந்தவான் முன் [கோபத்தான்
நிலையதைக் காப்பானாகும் நிஷ்டூர வசனம்கூறான்
பலர்களால் பெருமையேற்பன் பரிந்துப சாரம்செய்வன்
கலகத்தைக் கூறானாகும் கனத்தவர் நேசம்கொள்வன்.

7. ஜலசம்பந்தமான தொழில்களைச் செய்து வாணிபம் செய்வான். சாந்த குணமுடையவன். முன்கோபமுடையவன். தன்நிலைமையை காப்பானாகும். நிஷ்டூரவசனம் கூறமாட்டான். பலபேர்களால் பெருமையை யடைவான். பிரியத்துடன் யாரையும் உபசரிப்பான். கலகவார்த்தைகளைக் கூறமாட்டான். பெரியமனிதர்களுடன் சிநேகம் கொள்ளுவான்.

8. பூமிகள் சேர்ப்பானாகும் புண்ணிய மனத்தனாகும்
தர்மத குணமும்கொஞ்சம் தரிபடக் கூறானாகும்
காமனை விருப்பம்கொள்வன் கரமதில் விஷ்ணுரேகை
ஆமதை வாங்குவானும் அடைந்தவூர் தன்னிலேதான்.

8. பூமிகளைச் சேர்ப்பானாகும். புண்ணியமனத்தனாகும். கொஞ்சம் தாமதகுணமுடையவன். இடைஞ்சலான வார்த்தைகளைக் கூறமாட்டான். எந்த விஷயத்திலும் ஆசைகொண்டவன். கையில் விஷ்ணுரேகையை யுடையவன். பசுக்களையும் எருமைகளையும் வாங்குவான். அதுவும் அவனிருக்கும் ஊரிலேதான்.

9. இந்நெறி உடையானுக்கு இப்பாலன் உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வே னழகுளான் சிவந்தமேனி
உன்னதக் கல்விரெண்டு உணருவான் அல்பகோபி
தன்சொல்லே மேன்மையாக்ச் சாதிப்பான் என்று [சொல்வோம்.

9. இப்படிப்பட்ட தருமநெறியும் ஒழுக்கமும் உடையவனுக்கு, இந்த ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணங்களை எடுத்துச் சொல்லுவேன். அழகுடையவன். சிவந்தமேனி யுள்ளவன். மேலான கல்வித்துறைகள் இரண்டில் பயிற்சி பெற்றவன். விஷயங்களை அறிவான். கொஞ்சம் கோபமுடையவன். தன்னுடைய வார்த்தையையே மேலானதாகச் சாதனைசெய்வான் என்று சொல்லுவோம்.

10. அன்னிய பாஷைமேன்மை அரசனுல் தொழிலுமேற்பன்
மன்னர்க்கு இவன்சொல்மேன்மை விஷவாக்கு
[உடையனுகும்
பொன்னது பெருக்கம்செய்வன் பூமியை விருத்திசெய்வன்
பின்னமில் லாததேகி பேதையர் மோகனுவன்.

10. அந்நியபாஷைகளில் மேன்மையடைவான். அரசாங்கத்தில் தொழில் (உத்தியோகம்) செய்வான். அரசருக்கு இவன்பேச்சில் அதிக மதிப்புண்டு. கொடிய வாக்கையுடையவன். பொன்னை அதிகமாய்ச் சேர்ப்பான். பூஸ்திதியை விருத்திசெய்வான். தேகத்தில் யாதொரு பின்னமுமில்லாதவன். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொண்டவன்.

11. கரமதில் கோதுமைரேகை கஞ்சமாம் ரேகையுண்டு
உறன்முறை மதிக்கவாழ்வன் ஓராறு முகத்தோன்பத்தி
மர்மநூல் அறிவானுகும் வாகன முடையனுகும்
கரிமத வாணைபெற்ற காதலி கேட்டிடாயே.

11. கையினில் கோதுமைரேகை யுடையவன். பத்மரேகையு முண்டு. உறன்முறையோர்கள் மதிக்கும்படி வாழ்வான். அறுமுகத்தானிடம் பக்தி கொள்வான். மர்ம சாஸ்திரங்களை யறிவான். வண்டிவாகன முடையனுவன். விக்கினேஸ்வரனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

12. தன்துணை முன்னுல்சேதம் தங்கும்பின் ஆண்பால்ரெண்டு
கன்னியும் அவ்வாருகும் கழறுவோம் பின்னுல்சேதி
இன்னவன் மணத்தின்கால மியம்புவோம்
[பதினேழாண்டில்
அன்னவன் தந்தைவர்க்கம் அணுகிடும் குணத்தைச்
[சொல்வேன்.

12. தன்சகோதரன் முன்னமே இறப்பான். பின்னுடி பிறக்கும் ஆண்குழந்தைகள் இரண்டு தங்கும். பெண்குழந்தைகளும் அவ்வாருகும். இவர்களைப்பற்றிய செய்தி விவரங்களை பிறகு கூறுவோம். இவனுடைய கலியாணகாலம் கூறுவோம். பதினேழாவது வயதில் அவனுடைய தந்தையின் வருக்கத்தில் பெண் ஏற்படும். அவளுடைய குணங்களைக் கூறுவோம்.

13. கல்விமான் கடவுள்பத்தி கண்முகம் வசியமுண்டு
சொல்லது சுருக்கமாகும் தோழன்தன் மனதுக்கேத்தோள்
நல்லவளாகி வாழ்வள் நாதனுர் பத்திபூண்பள்
அல்லலெப்போதும்காணு ளற்புத சொல்லுமுண்டு.

13. நல்ல படிப்பாளி. கடவுளிடம் பக்திபூண்டவள். கண், முகம் இவைகளில் பிரத்யோகமான வசீகரத்தன்மையுள்ளவள். சுருக்கமாகப் பேசுந் திறமையுடையவள். புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி நடப்பாள். நல்லவளாக வாழ்ந்துவருவாள். பகவானிடத்தில் பக்தி பூண்டவள். துன்பம் என்பது எப்பொழுதும் இல்லை. அற்புதமான சொற்களைச் சொல்லுவாள்.

14. சீலியாம் விரதசாலி செனபந்து மதிக்கவாழ்வள்
பாலிகை வயதுதீர்க்கம் பிருகுமே மறுத்துச்சொல்வார்
வேல்விழி இரண்டுஎன்று விளம்புவோம் பாலனுக்குச்
சாலவே விபரம்சொல்வாய்ச் சத்தமத்தேன் சரத்தில்,

14. சீலமுள்ளவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். பந்துஜனங்கள் மதிக்கும்படி வாழ்வாள். இவளுக்கு தீர்க்காயுசுண்டு. இதைக்கேட்ட பிருகு மகரிஷி மறுத்துச்சொல்லுவார். ஜாதகனுக்கு இரண்டுபெண்டாட்டி என்று சொல்லுவோம். பொருத்தமாகவே விபரம் சொல்லுவாயாக ஏழுக்குடைய சுக்கிரன் சரராசியில் (கடகத்தில் இருக்க),

15. இருப்பதால் தாரம்ரெண்டு இயம்புவோம் முனியேயானும்
குறுமுனி புகலுகின்ருர் கூறெருணுத் தாரம்ரெண்டு
வருமாறு சொல்லுமென்ன மதிதேளில் குருவும்தங்கக்
குருதியின்[1] ஏழைப்பார்க்கக் கூறினேம் தாரம்ரெண்டு.

15. இருப்பதனுல் தாரம்ரெண்டு என்று சொல்லுவோம். இதைக் கேட்ட அகஸ்தியர் கூறுகின்ருர். இரண்டுதாரம் என்று சொல்லுவது சரியல்ல. அஃதெப்படி என்றுவினவ, சந்திரனுக்கு ஏழில் வியாழபகவான் தங்க, செவ்வாயும் இலக்கினத்திற்கு ஏழாமிடத்தை தனக்குரிய எட்டாம் பார்வையினுல் பார்க்க, கூறினேம் தாரம் இரண்டு என்று.

16. இதற்கு நேரிடையாய்ச் சாதகசுருதி
இதிலேழாம் பாவத்தில் பாரு
அதில்சொலும் விபரம் ரெண்டேழோன்
கேந்திர மாகிலும்கோ ணத்திலிருக்க
அதிபதி ஒன்றேவரைந்தனம் தாயே
மண்ணு வத்தினில் பரல்ஒன்று
சதியிலா திருக்கதாரம் ஒன்றே
சாத்திய பலன்களைக் கேளாய்.

---

1. செவ்வாய்

16. இதற்கு நேரிடையாக ஜாதகசுருதியில் ஏழாம்பாவத்தைப் பார். அதில் சொல்லும் விபரம் பின்வருமாறு. இரண்டு எழுக்குடைய சுக்கிரன் கேந்திரஸ்தானமாகிய கடகத்திலிருந்த போதிலும், திரிகோணத்திலிருந்தாலும் ஒரு தாரம்தான் என்று கூறினோம் தாயே. மன்வந்தரத்தில் பரல் ஒன்று குற்றமில்லாமலிருக்க தாரம் ஒன்றுதான். அதற்குண்டான பலாபலன்களைக் கேட்பாயாக.

17. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையர் நால்வர்தீர்க்கம்
இதுநிற்க உதித்தோன்பூர்வம் இயம்புவோம் விரிஞ்சி [தன்னில்
நிதிமிக உடையானுக்கு நேர்ந்தனன் வன்னியசேயாய்ச்
சுதர்களும் மனைவியுண்டாய்த் துறவோர்கள் பத்தியாகி,

17. ஆண்குழந்தைகள் இரண்டு, பெண்குழந்தைகள் நால்வர். இவர்கள் தீர்க்கம். இதுநிற்க. ஜாதகனின் பூர்வவிவரத்தைக் கூறுவோம். விரிஞ்சிநகரத்தில் பெரிய பணக்காரனுக்குப் பிறந்தான். அதுவும் வன்னியர் குலத்தில் பிறந்தான். மனைவிமக்கள் உண்டாகி, சிவனடியார்கள், சன்னியாசிகள் இவர்களிடம் பக்தி ஏற்பட்டு, (விரிஞ்சிபுரம் = வேலூருக்குப் பக்கவில் உள்ள ஒரு சிவஸ்தலம்)

18. அறமதில் இச்சைஉண்டாய் அந்தகன் நகரம்சென்று
பிரமனால் வரியப்பட்டுப் பிறப்பனும் இந்தபாலன்
உரைகுறோம் இவனின்யோகம் உயர்வான குடும்பியாவன்
அரசரால் தொழிலும்பெற்று அநேகமாய்ப் பொருளும் [சேர்ப்பன்.

18. தருமத்தில் விருப்பம்உண்டாகி, கடைசியில் எமலோகம்சொன்று, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு பிறப்பனுகும் இந்தபாலகன். இவனுடைய யோகங்களை உரைக்கிறோம். உயர்வான குடும்பியாவன். அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று அநேகமாய்ச் சொத்துக்களைச் சேர்ப்பான்.

19. எந்தக்காலத்தில் ராசயோகமு மெய்தும் சொல்வாய்
மந்திரி தசையில்நேரும் வளர்பிறை போலேயொக்கும்
எந்திடம் பெருமையேற்பன் இடரான குணமில்லாதான்
பந்துவை யாதரிப்பன் பார்கள் அதிகம்சேர்ப்பன்.

19. எந்தக்காலத்தில் இராஜயோகம் எய்துவான்? சொல்லுங்கள். வியாழனுடைய தசையில் நேரிடும். வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகங்கள் ஓங்கிடும். சென்றவிடமெல்லாம் பெருமையை யடைவான். இடைஞ்சலான குணமில்லாதான். பந்துக்களை யாதரிப்பான். பூமிகள் அதிகம் சேர்ப்பான்.

20. யோகம்எவ் விதமாய்ச்சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்சங்கை
ஆகமன்[1] தனக்குஏழில் அம்புலி இருப்பதாலும்
நாகமும் ரிடபமாகக் கார்புதன் ஆட்சியாகப்
பாகமாய்க் கேசரியோகங்கள் பர்வத யோகமொன்று.

20. இத்தகைய யோகங்களை எப்படிச்சொன்னீர்கள்? அந்தச் சந்தேகத்தை எடுத்துச்சொல்லுங்கள். வியாழபகவானுக்கு ஏழாம்வீட்டில் சந்திரன் இருப்பதனாலும், இராகுவும் ரிஷபத்திலிருப்பதனாலும், கருநிறம் பொருந்திய புதன் தன் வீட்டில் ஆட்சிபெற்றிருப்பதனாலும் பக்குவமான கேசரியோகம், பர்வதயோகம் இவைகள் ஏற்படும்.

21. இருவித யோகத்தாலே இயம்பினோம் ராசயோகம்
பரிவண்டி உடையனாகும் பலதல வாசம்செய்வன்
முருகர்தன் அருளுமோங்கும் மேவிடும் ரெண்டுஇல்லம்
திருமாளி எந்தக்காலம் சேர்ந்திடும் விபரம்சொல்வாய்.

21. இந்த இரண்டுயோகத்தினாலே ராஜயோகம் ஏற்படும் என்று சொன்னோம். குதிரைவண்டி யுடையவனாகும். பலஸ்தலவாசங்கள் செய்வான். முருகக்கடவுளின் அருளும் ஓங்கிடும். இரண்டுவீடுகள் ஏற்படும். திருமாளிகை எந்தக்காலம் சேர்ந்திடும்? விவரம் செல்லுவாய்.

22. உதித்தசேய் மூன்றுமாண்டி லுரைந்திடு மில்லமொன்று
நிதிகுரு தசையிலொன்று நேர்ந்திடு மில்சொல்வேன்
பதிபணி பூமிபொன்னும் படைப்பன் முப்பாயிரம்பொன்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளேகேளாய்.

22. பிள்ளை பிறந்து மூன்று வருடங்களுக்கெல்லாம் வீடுஒன்று ஏற்படும். குருமகா தசையில் ஒன்று ஏற்படும் என்றுசொல்லுவோம். பெண்டாட்டி, பூஷணம், பூமி, பொன் இவைகள் ஏற்படும். முப்பதினாயிரம் பொன் ஏற்படும். அதிதிகளை ஆதரிக்கும் அம்பிகையே! கேட்பாயாக.

23. அன்னையின் குணத்தைச்சொல்வேன் அரிமனை ஒப்பதாகும்
அன்னமும் அன்பாயீவள் அயல்குற்றம் புகலாளாகும்
அன்னவள் வந்தபின்பு ஆளனுக் கதிகயோகம்
அன்னம்போல் சாயலொக்கும் அல்பமாம் பித்ததேகி.

23. அன்னையின் குணங்களைச் சொல்லுவோம். லட்சுமியை யொப்பாளாகும். அன்னமும் அன்புடன் தருவாள். பிறருடைய குற்றங்களை எடுத்துரைக்கமாட்டாள். அவளுக்குக் கலியாணம் ஆனபின்பு புருஷனுக்கு அதிகயோகம் ஏற்படும். அன்னம்போன்ற சாயலையுடையவள். கொஞ்சம் பித்த சரீரமுடையவள்.

---

1. குரு

24. தன் துணை ஆண்பால்மூன்று சக்திமார் ஒருத்தியென்றும்
பின்னோர்க்கு தாகமீவள் பிழையதை ஒருவர்க்கெண்ணாள்
பொன்பணி அதிகம்சேர்ப்பள் பொய்யது புகலாளாகும்
முன்செனமம் புகலுகின்றேன் முதல்வியே கேட்டிடாயே.

24. இவளுடைய சகோதரன் மூன்று பேர்கள். சகோதரி ஒருத்தியென்றும். ஏழைகளுக்கு அன்ன பானாதிகள் கொடுப்பாள். யாவர்க்கும் கெடுதலை யெண்ணமாட்டாள். பொன்பூஷணங்கள் அதிகமாய்ச் சேர்ப்பாள். பொய் பேசமாட்டாள். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்றேன். பார்வதியே! கேட்பாயாக.

25. பிரிதிவு தலத்திலேதான் பிறந்தனள் வைசியசேயாய்த்
திருமகள் விலாசம்பெற்றுப் செல்வதி வறுமையின்றி
பெருகிய குடும்பியாகிப் பின்னோர்க்குத் தாகமீந்து
அருமையாய்த் தலங்கள்சென்று ஆளன்முன் மதிப்புமே
[தான்.

25. இவ்வுலகில் வைசியகுலத்தில் பிறந்தாள். லட்சுமீ கடாக்ஷம் பெற்று, இச்செல்வி தரித்திரத்தை அனுபவியாமல் சகல சௌக்கியங்களையுமுடைய குடும்பியாகி, ஏழைமக்களுக்கு அன்னபானாதிகள் அளித்து, அருமையான சிவக்ஷேத்திரங்கள் சென்று, புருஷனும் அதிகமாய் மதிக்கும்படி இருந்து,

26. காலன்தன் நாடடைந்து கஞ்சனால் வரியப்பட்டுச்
சீலமில் லாதகங்கைக் குலமதில் உதித்தாளென்றும்
காலிகை வருமைகாணாள் பதர்குண மில்லாளாகும்
வேலனைப் பயின்றமாதே வித்தகி கேட்டிடாயே.

26. காலன் நாடடைந்து, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, குற்றமற்ற வேளாளர்குலத்திலுதித்து, வந்தாளென்றும். இவள் வறுமைத்துன்பத்தை யடையவில்லை. தாழ்ந்த குணமில்லாதவளாயிருந்தாள். வேல்முருகனைப்பயின்ற பார்வதியே! கேட்பாயாக.

27. மறுசென்மம் தணிகைஉத்திரம் வளமுள பேரூர்தன்னில்
உரைகுவார் பிரம்மசேயாய் உயர்வான குடும்பியாவள்
திருமகன் தந்தைபூர்வம் செப்புவோம் அருணைதன்னில்
பெருநிதி உடையானுக்குப் பிறந்தனன் வன்னியசேயாய்.

27. அடுத்தஜன்மம் தணிகைக்கு வடக்கே, வளப்பம்பொருந்திய பேரூரில், பிராம்மணக் குழந்தையாய்ப் பிறந்து, மேன்மையுள்ள குடும்பத்தை வகிப்பாள். ஜாதகனுடைய தந்தையின் பூர்வத்தைப்பற்றிக் கூறுவோம். திருவண்ணாமலையில் பெரிய பணக்காரனுக்குப்பிறந்தனன். அதுவும் வன்னியர் குலத்திலுதித்தான்.

28. பாரியும் மதலையுண்டாய்ப் பஞ்சைகட் கன்னமீந்து
ஆறுமா முகத்தோன்தொண்டு அணுகியே வினையில்லாமல்
மாரனும் மரணமாகி மறையவன் வரியப்பட்டுப்
பார்விருத்தி செய்யுங்குலத்தில் பிறந்தவனென்றுசொல்
[வோம்.

28. பெண்டாட்டி பிள்ளைகள் உண்டாகி, ஏழைகளுக்கு அன்னம் கொடுத்து, அறுமுகக்கடவுளுக்குத் தொண்டுசெய்ய விரும்பியே, பவவினைகள் இல்லாமல் இவனும் மரணமாகி, பின்பு பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு, பூமிகளைப் பண்படுத்தி விருத்திசெய்யும் குலத்தில் பிறந்தவன், என்று சொல்லுவோம்.

29. வந்தவன் யோகச்சேதி வரைகுவோம் வறுமைகாணான்
பந்தணி துணைவியாலே பாக்கியம் பெறுவானாகும்
பிந்திய சென்மம்சொல்வேன் போரூரில் பிரம்மசேயாய்
அந்தவன் உதிப்பானாகும் அத்திரி மறுத்துச்சொல்வார்.

29. இவனுடைய யோகச்செய்தி விவரங்களைக் கூறுவோம். தரித்திரத்தைக் காணமாட்டான். அழகிய கூந்தலுடைய பெண்டாட்டியின் அதிர்ஷ்டத்தினாலே பாக்கியம் பெறுவானாகும். அடுத்த ஜன்மத்தைச் சொல்லுவோம். திருப்போரூரில் பிராமணக் குழந்தையாய் உதிப்பானாகும். அத்திரிமகரிஷி இதனைக்கேட்டு மறுத்துச்சொல்லலானார்.

30 இந்ததோர் சென்மந்தன்னிலிவன்செய்த புண்ணிய
[மென்ன
முந்தவே கூறுமென்ன மொழியதைக் காத்தலாலும்
நொந்தபேர் தம்மைக்கார்த்தும் நீத்தோர்க்கு அன்னமீந்தும்
விந்தையாய்த் தலங்கள்சென்றும் வேலவன் பத்தியாயும்.

30. இந்த ஒரு ஜன்மத்தில் இவன்செய்த புண்ணியங்களென்ன? அவற்றை முதலில் கூறுங்களென்று கேட்க, தன்வாக்குப் பிசகாமல் காத்ததினாலும், சிரமப்பட்டவர்களை ஆதரித்தும், இறந்தவர்களுக்கு சிரார்த்தாதிகள் செய்தும், துறவிகளுக்கு அன்னதானம்செய்தும், வேடிக்கையாகத் தலங்கள் சென்று கடவுளைத்தரிசித்தும், முருகக்கடவுளினிடம் பக்தி கொண்டும்,

31. அறமதில் இச்சையுண்டாய் அவனுமே வாழ்வதாலே
உரைகுவான் பிரம்மசேயாய் உயர்வான குடும்பியாவன்
கருமகா லங்கள்தம்மைக் கழறுவீர் முனியே நீதான்
மறலியின் நாட்டைத்தந்தை வாங்குவான் முப்பதாண்டில்.

31. தருமஞ்செய்வதில் விருப்பங்கொண்டும், அவனுமே வாழ்ந்து வந்ததனாலே பிராமணக்குழந்தையாய் அவதரித்தான். மேலான குடும்பத்தை வகிப்பான். கருமகாலங்கள் எவைஎன்று முனிவரே நீங்கள் கூறுங்கள். ஜாதகனுடைய முப்பதாவது வயதில் தந்தை எமலோகம் செல்லுவான்.

32. முப்பது ஆறுஆண்டில் விளம்புவோம் அன்னைகெண்டம்
செப்புவோம் பாலனுக்குச் சஷ்டிமேல் ஐந்துஆண்டில்
ஒப்புடன் மாசிமாதம் உடலமே யேகுமென்றோம்
இப்படி பராசர்சொல்ல இயம்புவோர் பிருகுதானும்.

32. முப்பத்தாறுவது பிராயத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். ஜாதகனுக்கு மரணகாலம் கூறுவோம். அறுபத்தைந்தாமாண்டில், மாசி மாதத்தில் மரணம் ஏற்படும். இப்படி பராசார்சொல்ல, பிருகுமகரிஷி சொல்லலுற்றார்.

33. ஓராண்டு இருஆண்டுள்ளே உரைக்குறோம் கெண்டம் [தானும்
குருவுமே அஞ்சில்தங்க கூறோணு மாரகங்கள்
வருகுமே பிணிஅநேகம் விலகிடும் உடனேயென்றோம்
திருமகன் அறுபானைந்தும் தீர்க்கமாம் வயதுஎன்றோம்.

33. ஒருவருஷம் அல்லது இரண்டுவருஷங்களுக்குள்ளே கண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். இலக்கினத்திற்கு ஐந்தாம்வீட்டில் குருவும் தங்க, மாரகங்கள் சொல்லுவதற்கில்லை. வியாதிகள் அநேகம் வரலாம். உடன்காலத்திலேயே விலகிப்போம். ஜாதகனுக்கு அறுபத்தைந்து வருடங்கள் தீர்க்கமான வயசு என்றோம்.

34. மறுசென்மம் கலிங்கநாட்டில் வருகுவான் சத்திரிசேயாய்த்
திருமகன் செனனகாலம் சேய்தசை திங்கஒளான்பான்
உரைத்தனம் பூர்வபாகம் உத்தமி கேட்டிடாயே
அறம்தனை வளர்க்குமெங்கள் ஆத்துமத்தாயே கேளாய்.

34. அடுத்த ஜன்மம் கலிங்கதேசத்தில் க்ஷத்திரியக்குழந்தைமாய் அவதரிப்பான். இவனுடைய ஜனனகாலத்தில் செவ்வாய் தசையில் இருப்பு ஒன்பது மாசம்தான். இதுவரை சொன்னது பூர்வபாகமாகும். உத்தமியே! கேட்பாயாக. தருமத்தைக் காப்பாற்றும் ஆத்துமார்த்தமான பார்வதி தேவியே! கேட்பாயாக.

ஜாதகம் 65

1. ஆடுசென்மம் சேய்நிற்கப் புகர்பொன்மூன்றில்
அலரிபுதன் நாலிலுற மதியும்மொன்பான்
நீடுசனி கேதாரில்[1] பணி வியத்தில்
நின்றிடவே பூராடம் முதலாம்பாதம்
பாடுவீர் இப்பலனை முனியே என்ன
பராசருமே புகலுகின்றார் ஆணும்சென்மம்
பீடு[2]பெறும் சிறுவூராம் தந்தையில்லம்
புகலுவோம் கீழ்மேற்கு வீதியாகும்.

1. செவ்வாய் மேஷத்திலும், சுக்கிரனும் குருவும் மிதுனத்திலும், சூரியனும் புதனும் கடகத்திலும், சந்திரனும் சனியும் தனுசிலும், இராகு மீனத்திலும், கேது கன்னியிலும் தங்கும்படியான இந்த ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள். நக்ஷத்திரம் பூராடம்: முதல் பாதம் என்று முனிவர்களைப் பார்வதி கேட்க, பராசாரும் சொல்லலுற்றார் இவன் ஆண் ஜன்மம். பீடை பெற்ற சிறிய ஊராகும். அதில் இவனுடைய தகப்பனின் வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். அது கிழக்குமேற்கு வீதியிலுள்ளது.

ராகு	லக்கினம் செவ்வாய்		சுக்கிரன் குரு
	இராசி சக்கரம்		சூரியன் புதன்
சந்திரன் சனி			கேது

2. ஆகுமே தென்வாசல் கணேசன்மேற்கில்
அம்பிகையும் வடகீழ்பால் அடையுமென்றோம்
தோகையே சேஷ்டனென்னும் கங்கைசேயாய்ச்
செப்புவோம் இவனின்யோகம் அன்னையோகம்
பாகமாய்ப் பிதுர்யோகம் துணைவர்யோகம்
பாலகன் முன்பின்சென்மம் பகருவோம் யாங்கள்
தாகமாய்ப் பிதுர் துணை ஆண் இரண்டு என்றோம்
சக்தியுமே அவ்வாறாய்ச் சாற்றலாகும்.

---

1. மலையில்—மேருவில்—தனுர்ராசியில்
2. தாழ்வு

2. அது தெற்குப்பார்த்த வாசலுடையது. கணேசர் கோவில் மேற்கிலுள்ளது. அம்மன் கோவில் வடகிழக்கிலுள்ளது. இவன் வேளாளர் குலத்தில் ஜேஷ்டகுமாரனாய்ப் பிறந்தான். இவனுடைய யோகங்களையும், தாய் தந்தையர் யோகங்களையும் சகோதரர்யோகங்களையும், இவனுடைய முன்பின் ஜன்மங்களையும் நாங்கள் விவரமாக இப்புஸ்தகத்தில் கூறுவோம். பிதாவுடன் பிறந்தசகோதரர் இருவர். சகோதரிகளும் அவ்வாறுவர் என்று சொல்லலாம்.

3. சாற்றுகிறோம் ஆணொருவன் மணமில்லாமல்
தரணியின்மேல் திரிவானும் வேடம்பூண்டு
காற்றினிலே பஞ்சுபோலக் காணுகும்
கழறுவோம் மற்றொருவன் உள்ளூர்வாசம்
வேற்றுமையாய் வறுமையின்றி வாழ்வானுகும்
விளம்புகிறோம் பிதுர்சேதி விளைவுசெய்வன்
நீற்றோருக் கன்னமீவன் தரணிவிருத்தி
நினைத்தகா ரியம்முடிப்பன் நிதானவார்த்தை.

3. ஒரு சகோதரன் கலியாணமாகாமல் பூமியின்மேல் அங்குமிங்கும் திரிவானுகும். வேஷம் போட்டுக்கொண்டு ஆடிக்காற்றில் அலையும் பஞ்சு போல் பலர் கண்களில் படாமல் திரிவான். மற்றொருவனைப்பற்றிக் கூறுவோம். உள்ளூரிலே வசிப்பான். முதலில் சொன்னவனுக்கு மாருகத் தரித்திரமில்லாமல் வாழ்வானுதும். பிதாவின் செய்தியைக் கூறுவோம். கிருஷித்தொழில் செய்வான். தபசிகளுக்கு அன்னம் கொடுத்துதவுவான். பூமியை விருத்தி செய்வான். எண்ணின காரியத்தை முடிப்பானுகும். நிதானமாக வார்த்தை பேசுவான்.

4. வார்த்தை தப்பான் பொய்புகலான் மருமமில்லான்
மாஞ்சிவப்பன் மாடுபடி யாளும்விர்த்தி
பாத்திரங்கள் அறியவல்லன் படைமுன் செல்லான்
பதரில்லான் பலர்க்குநல்லன் பனைஏர் விருத்தி
சூத்திரங்கள் சிலர்க்குச் செய்வன் துரவுசோலை
சொந்தமாய்ப் படைத்திடுவன் துணையைக்காப்பன்
ஆத்திரங்கள் உடையவனும் அறிவோர்நேயன்
அல்பஉண்டி நடைகடியன் அறிவித்தோமே.

4. சொன்னசொல் தவறமாட்டான். பொய்வார்த்தை சொல்ல மாட்டான். மனதில் ரகசியமில்லாதவன். மானிறமுள்ளவன். மாடு விருத்தியுள்ளவன். வேலையாட்களும் அதிகமுடையவன். கீழ்நோக்கான புத்தியில்லாதவன். பல பேர்களுக்கு நல்லவன் என்று பெயரெடுப்பான். பனைமரங்களும் ஏர்களும் விருத்தியாம். சிலருக்குச் சிற்சில உபாயங்களைக்

கற்பிப்பான். தோட்டம் துரவுகளை ஏற்படுத்துவான். சொந்தமாகப் பரி ஜனங்களைச் சேர்ப்பான். காரியங்களைச் சிருஷ்டிப்பான். சொந்தக்காரர் களுக்கு ஒத்தாசை செய்வான். ஆத்திரக்காரன் (கோபக்காரன்) என்னலாம். படித்தவர்களுக்கு இஷ்டமானவன். சிற்றுண்டிகளில் சிறிது பிரியமுடைய வன். வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் நடப்பான் என்று இவனைப்பற்றி நாங்கள் தெரிவித்தோம்.

5. அறிவிப்போம் பாலன்குணம் சமமாம்கல்வி
அஞ்சின வார்த்தைகள் உரைப்போன்
[அடைந்தோர்க்கன்பன்
பொருள்சேர்ப்பன் பிதுர்பூமி விருத்திசெய்வன்
பொய்புகலான் புலிக்கோபம் புறம் சொல்லாதான்
இருநிறத்தான் ஈகையுளன் இன்பசொல்லன்
இடர்செய்யான் இடுக்கமில்லான் இராசர்க்கிஷ்டன்
நெறிகாப்பன் சுகிபுசிப்பன் நிதான வார்த்தை
நேமியினுல் ஜீவிப்பன் நீரில் தோய்வன்.

5. ஜாதகனுடைய குணங்களைத் தெரிவிப்போம். சமமான கல்வியை யுடையவன். பயந்த சுவபாவத்துடன் வார்த்தைகள் பேசுவான். தன்னைச் சேர்ந்தவர்களிடம் அன்பு காட்டுவான். சொத்து சேர்ப்பான். பிதிரார்ஜி தத்தை விருத்தி செய்வான். பொய் வார்த்தைகள் பேசமாட்டான். கடுமை யான கோபமுடையவன். புறத்தில் கண்டபடி யாரைப்பற்றியும் பேசமாட் டான். கரிய நிறமுள்ளவன். தர்மிஷ்டன். இன்பமான வார்த்தைகளைப் பேசுவான். பிறருக்கு இடைஞ்சல் செய்யமாட்டான். சிரமமில்லாதவன். அரசர்க்கு இஷ்டமானவன். தருமசாஸ்திரங்களில் சொல்லிய நீதிமுறை களைக் காப்பான். சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான். நிதானமான வார்த்தைகளைப் பேசுவான். பூமியைப் பண்படுத்தி ஜீவனம் செய்வான். தீர்த்தாடனங்கள் செய்வன்.

6. கொள்ளவிற்க வல்லவனும் குறிப்புத்தேர்வன்
குணம் நலமாம் சிலர்க்குஇவன் கொடுமைஏற்பன்
விள்ளவே உரைத்திடுவன் கடனேகொள்ளான்
வேதியர்க்கும் பாவலர்க்கும் விரைந்தீவன்
கள்ளமில்லான் புகழுடையான் கனல்போல்தேகன்
கார்குத்தன் ரேகையுளன் காமனெப்பாம்
தெள்ளுதமிழ் செட்டுச்செய்வன் க்ஷேத்திரம் வேறு
செய்திடுவன் பூமிவேறு சேர்ப்பானென்றோம்.

6. கொள்முதல், கொடுக்கல் வாங்கல், என்ற வியாபார வழிகளில் தீரனும். குறிப்பு அறியும் இயல்பினன். நல்ல குணமுடையவன். சிலர்க்கு இவன் கொடுமைகள் செய்வான். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கண்டித்துப் பேசுவான். கடன் வாங்கவேமாட்டான். பிராமணர்களுக்கும், படித்த பண்டிதர்களுக்கும் கேட்பதற்கு முன்பே தருமம் செய்வான். கெட்டபுத்தி என்பது இல்லை. புகழைப் பெறுவான். பளபளப்பான சரீரமுடையவன். விஷ்ணுரேகையைக் கையில் உடையவன். மன்மதனை யொப்பவன். தெளிந்த தமிழ்தேசத்தில் வியாபாரம் செய்வான். (தமிழ் நூல்களை விற்பனை செய்வான்). வேறு வீடு கட்டுவான். வேறு நிலங்களைச் சேர்ப்பானென்றும்.

7. பின்றுணைகள் ஆறென்று தீர்க்க மெய்தும்
பேசுவோம் அவன்குணத்தைப் பரிவாய்ச் சொல்வேன்
கன்மனத்தான் தந்திரமொழி ஈகை கொஞ்சம்
கட்டுரைப்பான் பலர்நேயன் கடனே கொள்ளான்
அன்னியர்கள் இஷ்டமுறும் அவனி விருத்தி
அறிவாளி கல்வியுளான் அஞ்சா நெஞ்சம்
கன்னியர்கள் மோகமுளான் வறுமை காணன்
காதலியும் ஒன்றேயாம் மேல்பால் நேரும்.

7. இவனுக்குத் தம்பி ஒருவன். அவன் தீர்க்காயுசுடையவன். அவன் குணத்தைப்பற்றிப் பேசுவோம். பிரியமாகச் சொல்லுவோம். கடுமையான மனதை யுடையவன். தந்திரமான வார்த்தைகளைப் பேசுவான். கொஞ்சம் தருமம் செய்ய விருப்பமுடையவன். பொய்வார்த்தை சொல்லுவான். பலருக்குச் சிநேகிதன். கடனே வாங்கமாட்டான். அன்னியர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். பூமி விருத்தி ஏற்படும். நல்ல புத்திசாலி. கல்வி கேள்விகள் உடையவன். தைரியமுள்ள மனமுடையவன். கன்னிப் பெண்களை சிநேகம் பிடிப்பான். தரித்திரமே கிடையாது. பெண்டாட்டியும் ஒருத்திதான். அவளும் நாள் கழித்து ஏற்படுவாள்.

8. நேருமே சுதராண்பால் ஒன்றேயாகும்
நிமலியர்கள் மூவரென்றும் தீர்க்கமாகும்
மாரனுமே வயதீர்க்கம் ஒன்றாய் வாழ்வன்
வறுமையில்லான் வயதீர்க்கம் ஒன்றாய் வாழ்வன்
காரிழை மார்தோஷ முறும்காரணம் சொல்
கவிமகனும்[1] கனகனுமே மூன்றில் தங்க
நாரியர்கள் தோஷமுறும் அன்னைசேதி
நவிலுவோம் இருநிறத்தாள் நடையும் நன்மை.

1. சுக்கிரன்

8. ஆண் குழந்தை ஒன்று பிறக்கும். பெண் குழந்தைகள் மூவராகும். இவர்கள் தீர்க்கம். மகனுக்கும் தீர்க்காயுசுண்டு. குடும்பத்தில் சேர்ந்து வாழ்வன். வறுமைப் பிணி யில்லாதவன். சிற்சில செய்திகள் பிற்பகுதியில் கூறுவோம். பெண்கள் தோஷமடைவார்கள். இதற்குண்டான காரணங் களைச் சொல்லுங்கள் என்று வினவ, சுக்கிரனும், வியாழனும் இலக் கினத்திற்கு மூன்றாமிடத்தில் தங்க பெண்கள் தோஷமடைவார்கள். தாயின் செய்திகளை விவரிப்போம். பொதுநிறமுடையவள். நல்ல நடத்தை யுடையவள்.

9. சொல்காார்ப்பள் வறுமையில்லாள் சீலி யாவள்
துணைகார்ப்பாள் தோஷமுறும் தேவி ஒன்றே
இல்லமுமே தென்பாலாம் இடர்செய் யாதாள்
இயம்புவோம் முன்சென்மம் தில்லை தன்னில்
புல்கினல் இக்குலத்தில் மதலை யுண்டாய்
பூவையுமே வாழும்நாளில் வினையைச் சொல்வேன்
தல்லியின்தன் துணைபேரில் அடாதவார்த்தைகள்
செப்பினள்காண் அத்துணைவன் புகலும் சாபம்.

9. சொன்னசொல் காப்பாள். தரித்திரமில்லாதவள். சீலமுள்ள வள். சகோதரர்களைக் கவனிப்பாள். புத்திரதோஷ மேற்படும். பெண் ஒன்றுண்டு. இவள் வீடும் தெற்குத் திக்கிலுள்ளது. துன்பம் செய்யாதவள். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். சிதம்பரத்தில் இக் குலத்தில் இவள் பிறந்து குழந்தை ஏற்பட்டு வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையைச் சொல்லுவோம். தாயாரின் சகோதரனைப் பற்றித் தகாத வார்த்தைகளைச் சொன்னாள். அதனல் அவன் சாபம் கொடுத்தான்.

10. மங்கையரே வீண்மொழியா சொன்னபாவி
வருஞ்சென்மம் துணையாணும் இல்லாதாகி
தங்காது கன்னிசுதர் என்று சொல்ல
சார்ந்ததுவே அச்சாபம் தையலுக்கு
நங்கையுமே அந்தியத்தில் வாய்புண்கண்டு
நமன்பதிக்கு ஆளாகி நரகம் புக்கி
புங்கவனும் வரியவந்தா ளிந்த மாது
புல்கிடுமே பூர்வவினை பூவை யர்க்கு

10. இப்படி அடாதவார்த்தைகள் சொன்ன பாவிக்கு இவ்வீண் மொழிகள் காரணமாக அடுத்த ஜன்மத்தில் சகோதரனேயில்லாமல், பெண், ஆண் குழந்தைகளும் பிறவா. பிறந்தாலும் தங்காது என்றுசொல்ல, அந்தச்

சாபம் இவளைச் சார்ந்தது. இவளும் அந்தியகாலத்தில் வாய்ப்புண் ஏற்பட்டு எமலோகம் சென்றாள். நரகலோகம் சென்றாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவளும் வந்துதித்தாள். பூர்வ கர்மவினை இவளை வந்தடைந்தது.

11. துணை ஆண்பால்தோஷமுறும் சுதர்பெண் தோஷம்
செப்புவோம் வறுமையிலாள் சுகமாய் வாழ்வள்
வனிதையின் பின்செனமம் வரையக் கேண்மோ
வடமலையில் ரெட்டிகுலம் தன்னில் உதித்து
கனமான குடும்பியதாய் வாழ்வா ளாகும்
கழறுவோம் பிதாபூர்வம் கருவூர் தன்னில்
சினமில்லா வைசியகுலம் தன்னில் உதித்து
செட்டுமிகத் தான்செய்து சேடி யுண்டாய்.

11. சகோதரனின் தோஷமும், பெண் குழந்தையின் தோஷமும் ஏற்படும் என்று சொல்லுவோம். தரித்திரமில்லாதவள். சுகமாய் வாழ்வாள். இவளுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். கேட்பாயாக. வடமலையில் ரெட்டியார் வமிசத்தில் பிறந்து மேலான குடும்பத்தை வகித்து வாழ்வாளாகும். பிதாவின் பூர்வோத்தரங்களைப்பற்றிக் கூறுவோம். கருவூரில் குற்றமற்ற வைசிய குலத்திலுதித்து வியாபாரம் அதிகமாய்ச் செய்து பெண்டாட்டி ஏற்பட்டு,

12. தருமகுண முடையவனாய் வருவோர்க்கு
தாகமது தான்தந்து கடவுள்பத்தி
பெரிதான தலம்சென்று வினையில்லாமல்
புக்கினன்காண் காலன்பதி பிரமன்லக்கம்
வரந்தியின் குலம்உதித்தான் செனனம்தொட்டு
மரணமட்டும் வறுமையிலான் மாரன்தானும்
திருமகன்பின் செனமமதை செப்பக்கேண்மோ
திருவள்ளூர் இக்குலத்தில் செனிப்பா னென்றோம்.

12. தருமம் செய்வதில் இஷ்டமுள்ளவனாய், வரும் விருந்தினருக்கு அன்னபானாதிகள் தந்து கடவுளிடம் பக்திபூண்டு பெரிதான விசேஷ ஸ்தலங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்துப் பவவினைகள் இல்லாமல் மரணமடைந்தான். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் இக்குலத்திலுதித்தான். இவன் ஜனனகால முதற்கொண்டு மரணம் பரியந்தம் வறுமைப்பிணி யில்லாதவன். இவனுடைய பின் ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். கேட்பாயாக. திருவள்ளூரில் இக்குலத்தில் இவன் ஜனிப்பானாகும்.

13. பரிதிதிசை தனில்கெண்டம் யமனைக் காணான்
பணிதிசையில் மாரகமாய்ப் பகர லாகும்
அறுஅஞ்சு நாலாண்டில் தந்தை கெண்டம்
அதின்பின்னால் ஏழாண்டில் அன்னைகெண்டம்
திருகில்லா இப்பாலன் தனக்கு மேதான்
சேடிவரும் காலத்தை செப்பக் கேண்மோ
பிறைதிசையில் மணமுடியும் ஈரெட் டாண்டில்
பேதையுமே பிதுர்வழியில் மேல்பால் நேரும்.

13. சூரியதசையில் கண்டம் ஏற்படும். இயமனைக் காணமாட்டான். இராகுதசையில் மரணம் ஏற்படும் என்று சொல்லலாகும். ஜாதகனுடைய முப்பத்துநான்காம் பிராயத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அதற்குப் பிறகு ஏழு வருஷத்திற்கெல்லாம் தாயாருக்குக் கண்டமேற்படும். இடைஞ்சலில்லாத இவனுக்குக் கலியாணகாலம் எப்பொழுது என்று சொல்லுவோம். கேட்பாயாக. சந்திரதசையில் மணம் ஏற்படும். அதுவும் பதினாறு வயதில் ஏற்படும். அவளும் தகப்பனார் வருக்கத்தில் சேர்ந்தவள். மேற்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள்.

14. நேருகின்ற மாதுர்குணம் உளைச்சல்[1]தேகி
நிமலன்மனம் போல்வாழ்வள் நிதான வார்த்தை
வேறுகுண மில்லாதாள் இருநி றத்தாள்
மேவிடுமே பித்தகூடு உடைய ளாகும்
தேடினவர் தொண்டுசெய்வள் வறுமை காணாள்
சீலியாம் விரதமுளாள் சிறப்பாய் வாழ்வள்
போர்புரியாள் அன்னையைப்போல் பிரிய வார்த்தை
புண்ணியமன முடையவளாம் பேதை தீர்க்கம்.

14. ஏற்படும் பெண்டாட்டியின் குணங்களைக் கூறுவோம். உளைதலான (மெலிவடைதலான) சரீரத்தை உடையவள். புருஷன் குறிப்பறிந்து நடப்பாள். நிதானமாய் வார்த்தைகள் பேசுவாள். வேறு கெட்ட குணங்களில்லாதவள். கரியநிறமுடையவள். பித்தகூட்டின் உபத்திரவமுடையவள். அண்டினோரைக் காப்பாற்றுவாள். தரித்திரமில்லாதவள். சீலமுள்ளவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். சீரும் சிறப்புமாய் வாழ்வாள். சண்டை சச்சரவுகளில் தலையிடமாட்டாள். தாயைப்போல் பிரியமான வார்த்தைகளைப் பேசுவாள். தருமசிந்தனை யுடையவள். இவளுக்கு ஆயுள் தீர்க்கம்.

---

1. மெலிவடைதல்

15. தீர்க்கவய துடையவளாம் சுதராண் மூன்று
சேயிழைமார் இருவரென்று செப்ப லாகும்
ஏர்க்கவே இப்பாலன் பூர்வம் சொல்வேன்
இடர்தீர்க்கும் பட்சிதன்னில் யாத வன்சேய்
பார்க்கவே தாமுதித்து மனைவி மைந்தர்
ஆவுகளும் மேஷங்கள் விருத்தி யுண்டாய்
பாருகளும் விருத்தியதாய் பாத்தியம் உண்டாய்
பண்போருக்கு அனமீந்து பவமில் லாமல்.

15. தீர்க்காயுசுடையவளாம். ஆண் குழந்தைகள் மூன்று. பெண் குழந்தைகள் இரண்டு பேர்கள் என்று சொல்லலாம். இப்பாலகனுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவேன். துன்பத்தைத் தீர்க்கும் திருக்கழுக் குன்றத்தில் இடையர்கள் வமிசத்திலுதித்து மனைவி மைந்தர் உண்டாகி, பசுக்கள், எருதுகள் இவைகளும் விருத்தியாகி நிலபலங்களும் மேன்மை யடையப் பாக்கியங்கள் ஏற்பட்டுப் பண்புடையாருக்கு அன்னதானம் செய்து பவவினைகளில்லாமல்,

16. அரனபி ஷேகத் துக்கு ஆவின்பால் தந்து வின்னேன்
மறலியின் நாடு சென்று மறையவன் வரியப் பட்டு
திருகிலா உதிப்பா னுகும் செப்புவோம் இவனின் யோகம்
தரையது நான்கு நாளாய் சேர்ப்பனும் என்று சொல்வோம்.

16. பரமசிவன் அபிஷேகத்திற்குப் பசுவின்பால் தந்து இவன் கடைசியாக எமலோகம் சென்ருன். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இடைஞ்சலில்லாமல் பிறக்கலானுன். இவனுடைய யோகங்களைச் சொல்லு வோம். பூஸ்திதியை நான்கு விதமாய்ச் சேர்ப்பான் என்று சொல்லுவோம்.

17. பந்துவு மதிக்க வாழ்வன் பகனமாம் குடும்பி யாவன்
இந்திரன் போல வாழ்வன் இருஇல்ல முடைய னுவன்
தந்தனம் அதிக முள்ளான் தரியலர் வெற்றி கொள்வன்
நந்தியா விருத்தி உண்டு நாட்டினில் வறுமை காணுன்.

17. பந்து ஜனங்கள் மதிக்கும்படி வாழ்வான். கௌரவமுள்ள குடும்பத்தை வகிப்பான். இந்திரனைப்போல் மேன்மையாய் வாழ்வான். இரண்டு வீடுகளுக்கு சொந்தக்காரனுவன். சுயார்ச்சிதம் அதிகமாக உடைய வன். விரோதிகளை ஜயிப்பான். எருதுகள், பசுக்கள், இவைகளுடைய விருத்தி ஏற்படும். ஊரில் தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான்.

18. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீர் அந்த சங்கை
ஒப்புடன் மதிக்கேள் பொன்னேன் உரைந்திடில் [கேசரி யோகம்
மைப்புடன் பானு புந்தி வீற்றிடம் நான்க தாக
செப்புவேன் இராச யோகம் சேயுமே ஆட்சி யாக.

18. எப்படி யோகம் ஏற்படும் என்று சொன்னீர்கள். அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்யுங்கள். சந்திரனுக்கு ஏழாம் வீட்டில் வியாழ பகவானிருக்கக் கேசரியோகம் உண்டு என்போம். அத்துடன் சூரியன், புதன், இலக்கினத்திற்கு நான்காமிடத்தில் இருப்பதனுல் இராஜயோகம். செவ்வாயும் சுவட்சேத்திரத்திலிருப்பதனுல் அவனுக்கு யோகம் நிச்சயம்.

19. பிறந்தநாள் முதலாய் ஆக புதல்வன்தன் மரண மட்டும்
நிரந்தர யோகம் சொன்னேம் நேமிகள் இருவூர் சேர்ப்பன்
அரசர்கள் மதிக்க வாழ்வன் அவனியில் புகழு மேற்பன்
பெரிதான தலங்கள் செல்வன் புண்ணிய மனத்த னுகும்.

19. பிறந்தநாள் முதலாக இவனுடைய மரணகால பரியந்தம் நிரந்தரமான யோகம் ஏற்படும் என்று சொன்னேம். இரண்டு கிராமங்களைப் பெறுவான். அரசர்கள் மதிக்கும்படி வாழ்வான். பூலோகத்தில் கீர்த்தி அடைவான். பெரிய ஸ்தலங்களில்போய் சுவாமிதரிசனம் செய்வான். தரும சிந்தனையை யுடையவனுகும்.

20. சத்துரு தன்னை வெல்வன் சகலரை வசியம் கொள்வன்
வெற்றிசொல் உடைய னுகும் வேதியர் பூமி சேர்ப்பன்
பத்திமார் அவர்க்கு அன்னம் படைப்பனும் பணியும் [செய்வன்
சுற்றத்தார்க் குதவி செய்வன் சோம்பிடான் காரி யத்தில்.

20. சத்துருக்களை ஜயிப்பான். சகலரையும் வசியம் செய்வான். ஜயகரமான வார்த்தைகளைப் பேசுவான். பிராமணர்களுடைய பூமிகளைச் சேர்ப்பான். பக்தி செலுத்துபவர்களுக்கு அன்னதானம் செய்வான். பூஷணங்களும் செய்வான். சொந்தக்காரர்களுக்குதவி செய்வான். காரியம் செய்வதில் சோம்பலில்லாதவன்.

21. சாதகன் எழுபான் அஞ்சில் பங்குனி மாதம் தன்னில்
காலன்தன் நாடு செல்வன் கழறுவோம் இவன்பின் சென்மம்
சீலமாம் தில்லை தன்னில் செனிப்பனும் பிரும்ம சேயாய்
ஞாலமேல் புகழு மேற்பன் நாயகி கேட்டி டாயே.

21. ஜாதகன் தன்னுடைய எழுபத்தைந்தாம் பிராயத்தில் பங்குனி மாதத்தில் எமலோகம் செல்லுவான். இவனுடைய மறு ஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். மேன்மைபொருந்திய சிதம்பரஸ்தலத்தில் பிராமணக் குழந்தையாய்ப் பிறப்பான். உலகினில் புகழை எற்பான். பார்வதியே! கேட்பாயாக.

22. புறந்திடு காலம் தன்னில் புகர்திசை பதினு றுண்டு
சிறந்திடு திங்கள் எட்டும் சேர்ந்தநாள் இருப தாகும்
பிறந்தசேய் பிணியு மாகும் பரிதியின் திசைநோய் உண்டு
அறம்தன்னை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

22. பிறக்கும் காலத்தில் சுக்கிரதசை இருப்புப் பதினுறு வருஷம், எட்டு மாதம், இருபது நாள். பிறந்த குழந்தை வியாதியில் அடிபடும். சூரியதசையிலும் வியாதியுண்டு. தருமத்தை வளர்க்கும் எங்கள் ஆத்துமா திருப்திபெறும் தாயே! கேட்பாயாக.

ஜாதகம் 66

1. மதிபுகர் பானு நந்தி மால்குசன் மேட மாக
விதிவீணை குருவும் சீயம் விடம்கன்னி சிகியும் மீனம்
......தியது மேட மாகப் பகரினீர் பலனை யென்று
அதிபதி கேட்கும் போது மாமுனி புகலு கின்ருர்.

1. சந்திரன், சுக்கிரன், சூரியன் விருஷபத்திலும், புதனும் செவ்வாயும் மேஷத்திலும், சனி மிதுனத்திலும், வியாழன் சிம்மத்திலும், இராகு கன்னியிலும், கேது மீனத்திலும் தங்கும்படியான கிரக நிலைகள் கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்க மகா முனிவர் சொல்லலுற்ருர்.

கேது	லக்கினம் செவ்வாய் புதன்	சந்திரன் சுக்கிரன் சூரியன்	சனி
	இராசி சக்கரம்		
			குரு
			ராகு

2. இந்தசேய் ஆணும் சென்மம் இல்லமும் மேல்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் சிரமத்தோன் வடபால் தங்கும்
முந்துமால் ஈசன் கீழ்பால் உயர்விலா கோஷ்ட முண்டு
தந்தியும் வடகீ ழாகும் சமவூரா னென்று சொல்வோம்.

2. இந்த ஜாதகம் ஆண் ஜன்மம். இவன் வீடு மேற்குப் பார்த்தது, தெற்கு வடக்கு வீதியில் உள்ளது. பிரம்மாவின் சிரசை அறுத்த முருகனின் கோவில் வடக்கிலும், விஷ்ணு, சிவன் இவர்களுடைய கோவில்கள் கிழக்கிலும் உள்ளன. அவ்வளவு உயர்ந்த கோவில்களில்லை. தந்திமுகன் (விநாயகர்) கோவில் வட கிழக்கே யுள்ளது. சமமான ஊராகும் என்று சொல்லுவோம்.

3. அறுமுகன் அடுமை வர்க்கம் அப்பாலன் மூன்ரும் சென்மம்
வருகுவான் இவனின் யோகம் மாதுரு தந்தை யோகம்
திருமனை புத்திர யோகம் சேயன்தன் முன்பின் சென்மம்
உரைகிரேம் இந்நூல் தன்னில் உத்தமி கேட்டி டாயே.

3. முருகக் கடவுளுக்கு அடிமை பூண்ட குடும்பம். ஜாதகனுடைய மூன்றும் ஜன்மம் இது. இவனுடைய யோகங்களையும், தாய் தந்தையர் யோகமும், மனைவி மக்கள் யோகமும், இவனுடைய முன்பின் ஜன்மங்களின் விவரமும் இப்புஸ்தகத்தில் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சமரச கல்வி யுண்டு
முந்தின கோப மேற்பன் மொழியதைக் காப்பா னாகும்
சிந்தையு மிரண்டு மாகும் செய்நிலம் விருத்தி செய்வன்
கந்தன்தன் நாமம் கொண்டோன் கசடரை உறவு
[கொள்ளான்.

4. தகப்பனாரின் குணத்தைச் சொல்லுவேன். சமரசமான கல்வி கேள்விகளை யுடையவன். சொன்னசொல் தவறமாட்டான். இரண்டுவித மான மனப்பாங்குகளை யுடையவன். நஞ்சை நிலங்களை விருத்திக்குக் கொண்டு வருவான். கந்தஸ்வாமியின் பெயரை யுடையவன், கேவலமான வர்களை சிநேகம் செய்யமாட்டான்.

5. குலதொழில் புரிவா னாகும் கொடுமையை எவர்க்கும்
[எண்ணான்
கலகத்தைக் கூறா னாகும் கஞ்சமாம் ரேகை யுண்டு
தலவாசம் செல்வா னாகும் சந்தேக மனத்த னாகும்
பலர்களும் மதிக்க வாழ்வன் பஞ்சைபோல் உணவு
[கொள்வன்.

5. குலத்திற்குண்டான தொழில்களைச் செய்வான். பிறருக்குக் கெடுதலே எண்ணமாட்டான். கலகங்களைக் கூறமாட்டான், பத்ம ரேகை யைக் கையிலுடையவன். விசேஷமான தெய்வீக ஸ்தலங்களில் ஸ்வாமி தரிசனம் செய்வான். சந்தேக புத்தியுள்ளவன். பலபேர்கள் மதிக்கும்படி வாழ்வானாகும். ஏழைக் குடும்பனாயிருந்து உண்பான்.

6. பூமியும் சேர்ப்பா னாகும் புயபல முடைய னாகும்
மாமிக ளிருவ ராகும் மாத்தானை லகுவில் வெல்வன்
காமனை விருப்பம் கொள்வன் காலிகள் விருத்தி யுண்டு
தாமத குணத்தா னாகும் தன்துணை ஆண்பால் மூன்று.

6. நிலங்களைச் சேர்ப்பான். புஜபல முடையவன். மாமியார் இருவர் ஆவார். எதிரிகளைச் சுலபமாக ஜயிப்பான். காமாதுரனாயிருப்பான். நாற் கால் பிராணிகள் விருத்தி யாகும். தாமதமான குணமுடையவன். உடன் பிறந்த சகோதரர்கள் மூன்று பேர்கள்.

7. கன்னிகை தோன்றும் தீதாம் கருதின ஆண்பால் தன்னில்
மன்னன்போல் ஒருவன் தங்கும் மடி[1] உண்டு பின்பால்
[சொல்வேன்
இந்நெறி உடையா னுக்கு இப்பாலன் உதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான்
[இருநி றத்தான்.

7. சகோதரியும் உண்டு. ஆனல் வியோகமாவள். சொன்ன ஆண் சகோதரர்களில் ஒருவன் மாத்திரம் மன்னனைப்போல் தங்கி வாழ்வான். கெடுதலும் உண்டு. பின் பகுதியில் விவரம் சொல்லுவோம். இம்மாதிரி ஒழுக்கங்களை உடையவனுக்கு நம் ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவேன். அழகுள்ளவன். கரிய நிறமுள்ளவன்.

8. மால்மனை கணேசன் போலே மருவுவான் சினுள் தானும்
சீலம்போல் வெளிம யக்கன் செட்டுகள் செய்வா னுகும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நயப்புறு வார்த்தை
[யுள்ளான்
காலத்தை அறிந்து வாழ்வன் கண்முகம் வசிய முண்டு.

8. லட்சுமீ கணேசனைப்போல சிலநாள் வசித்து வருவான். பெரிய குணசீலம் பெற்றவனைப்போல் வெளிமயக்கங்களுடையவன். வியாபாரங்கள் செய்வானுகும். பூமிகளை விருத்தி செய்வான். வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் வார்த்தைகள் பேசுவான். காலகதியை நிர்ணயித்துக் கூற வல்லவன். முகத்திலும் கண்களிலும் ஒருவித வசீகரமுண்டு.

9. வித்தையு முடைய னுகும் விவேகியாம் பொறுமை சாலி
நத்திஞேர்க் குதவி செய்வன் நடையது துருசு மாவன்
எத்திசை நல்லோ னுவன் இடரான புத்தி யில்லான்
குற்றத்தை மனதில் வையான் கொடுமையை எவர்க்கும்
[எண்ணுன்.

9. நல்ல படிப்பாளி. விவேக முடையவன். பொறுமை யுடையவன். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான். சுறுசுறுப்பான நடையுடை பாவனைகளை யுடையவன். எல்லாத் திசைகளிலுள்ளவர்களும் நல்லவன் என்று சொல்லுவார்கள். இடைஞ்சலான புத்தி யில்லாதவன். பிறர் குற்றத்தை மனதில் வைத்திருக்க மாட்டான். யாவர்க்கும் கொடுமை செய்ய மனதிலும் நினைக்க மாட்டான்.

1. கேடு

10. கரமதின் மாலின் ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
மறுவூரில் சின்னாள் வாசம் வணிபங்கள் பலவாய் செய்வன்
நரைமலர் இஷ்டம் கொள்வன் நல்லோர்க்கு நல்லோ னுவன்
அறுமுகன் பத்தி பூண்பன் ஆபத்தை சிலர்க்குக் காப்பன்.

10. கையினில் திருமாலின் ரேகை யுடையவன். பத்ம ரேகையு முண்டு. வேறு ஊரில் சிலநாள் வசிப்பான். பலவிதமான வாணிபங்கள் செய்திடுவான். வெண்மை நிறமுள்ள மலர்களில் பிரிய முடையவன். நல்ல வர்களுக்கு நல்லவனுவன். ஆறுமுகக் கடவுளிடம் பக்தி பூண்பான், சிலரை ஆபத்தினின்றும் காப்பான்.

11. தன்துணை முன்ஆண் ஒன்று தங்கிடும் தீர்க்க மாக
பின்துணை ஆண்பால் மூன்று பேதையும் ஒன்றே தீர்க்கம்
சொன்னது தீர்க்க மெய்தும் சோர்வுறும் மற்ற தெல்லாம்
பின்பாகம் அவர்கள் சேதி பேசுவோம் தாயே யாங்கள்.

11. தனக்கு மூத்த சகோதரன் ஒருவன் உண்டு. அவனுக்கு தீர்க்க மான ஆயுள். தம்பிகள் மூன்று பேர்கள். தங்கையும் ஒருத்தி. சொன்ன பேர்கள் தீர்க்கம். மற்றவரெல்லாம் வியோக மடைவார்கள். அவர்களைப் பற்றிய செய்தி விவரங்கள் பின்பாகத்தில் கூறுவோம். தாயே! நாங்கள்.

12. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பத்தொன்
[பாண்டுள்
வேல்விழி உள்ளூர் நேரும் விளம்புவோம் அவள் குணத்தை
காலத்தை அறிந்து ரைப்பள் கபடான மனமு முண்டு
ஆலம்போல் மனத்த ளாகும் ஆளனும் பகைய தாகும்.

12. ஜாதகனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பத்தொன்பதாம் பிராயத்தில் பெண்டாட்டி உள்ளூரிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். காலபலத்தை அறிந்து சொல்லக் கூடியவள். மனதில் கபட முள்ளவள். விஷம்போன்ற கொடிய மன முள்ளவள். புருஷனிடம் பகைமை யுள்ளவள்.

13. மாதுபாட் டாளி யாகும் மனமது இரண்டு முண்டு
சூதுளாள் சோர புத்தி தோகையும் தீர்க்க ஜீவி
ஓதுவான் பிருகு தானும் உரைந்திடும் தாரம் ரெண்டு
காதலி இரண்டு நேரும் காரணம் புகலு மென்ன.

13. இவள் நல்ல வேலைக்காரியாவாள். நல்லது பொல்லாதது இரண்டும் இவள் எண்ணத்திலுண்டு. சூதுவாதுள்ளவள். திருட்டு புத்தி உண்டு. தீர்க்காயுசுண்டு. படிப்பாள். இதைக் கேட்ட பிருகு மகரிஷி உரைக்கலுற்றார், தாரம் இரண்டு என்றீர். இரண்டு பெண்டாட்டிகள் நேரக் காரணம் என்ன சொல்லுங்களென்று வினவ,

14. சத்தமத் தோனும் ரெண்டில் சந்திரன் பானுங் கூடி
வெற்றியாய் இருப்ப தாலே விளம்பினோம் தாரம் ரெண்டு
பத்தினி இரண்டென் றீர்முன் பாவையும் தீர்க்க மாமோ
குற்றங்கள் விளையு மோசொல் கூறுவார் பிருகு தானும்.

14 சப்தமஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் இரண்டாமிடத்தில் சந்திர சூரியர்களுடன் கூடியிருப்பதனால் தாரம் இரண்டு என்று கூறினோம். பத்தினி இரண்டானால் முதல் பெண்டாட்டிக்கு ஆயுசு எப்படி? தீர்க்கமாமோ? அல்லது குற்றங்கள் ஏற்படுமாமே? சொல்லுங்கள். பிருகு மகரிஷி கூறலுற்றார்.

15. இருமனை தீர்க்க மெய்தும் இயம்புவீர் அந்த சங்கை
திருகாக முதல்மனைத்தான் சுதர்களும் தோஷ மெய்தும்
மறுமனை உத்தி ரத்தில் வருகுவாள் வேரூர் தன்னில்
அரிவையும் எந்தக் காலம் அடைகுவாள் விபரம் சொல்வாய்.

15. இரண்டு பெண்டாட்டியும் தீர்க்கம்தான். அந்த சந்தேகத்தை விளக்குங்கள். இடைஞ்சலான முதல் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தோஷம் ஏற்படும். இரண்டாவது மனைவி வடக்குத் திக்கிலுள்ள வேறு ஊரிலிருந்து வருவாள். அவள் எந்தக் காலம் வந்தடைவாள்? அதன் விவரம் சொல்லுங்கள்.

16. பணிதசை காலம் தன்னில் புந்தியின் புத்தி தன்னில்
அணையும்பா ரியுமேநேரும் அறைகுறோம் புத்திர பாகம்
பிணையிலா ஆண்பால் மூன்று பேதையும் இருவர் தீர்க்கம்
சினமிலா தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

16. இராகு தசை நடக்கும்போது புதனுடைய புக்தியில் மணம் நேரிடும். புத்திர பாவத்தைப் பற்றிப் பேசுவோம். துன்பமில்லாத ஆண் குழந்தைகள் மூன்று. பெண்கள் இருவராவர். இது தீர்க்கம். தபசுகளைச் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

17. முன்னவன் இருந்த சென்மம் மொழிகிறோம் பசுமாட் டூரில்
அன்னவன் வைசிய சேயாய் அணுகியே வாணிபம் செய்து
தன்மனை மதலை யுண்டாய் தனியனாய் வாழ்ந்து இன்னோன்
பின்னோர்க்கு தாக மீந்து புதல்வனும் வாழு நாளில்.

17. இவனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். *பசுமாட்டு ஊரில் வைசியர் குலத்தில் பிறந்து வியாபாரம் செய்து, மனைவி மக்கள் உண்டாகி, தனவானாய் ஏழைகளுக்கு அன்னபானாதிகள் கொடுத்து இவன் வாழ்ந்து வாழ்ந்தான். அப்போது,

---

*(ஆவூர் = தஞ்சாவூரைச் சேர்ந்த ஓர் பழைய ஊர்.)

18. கன்னிகை ஒருத்தி பேரில் கழறெருணு வார்த்தை சொல்லி
மன்னர்பால் அவமா னங்கள் மாரனும் செய்யும் போது
அன்னவள் வருத்த முற்று அறைந்தசா பத்தைக் [கேண்மோ
துன்மைகள் என்மேல் சொல்லி தூருகள் செய்த பாவி.

18. ஒரு கன்னிகையைப் பார்த்துச் சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லி, அரசனிடம் அவமானங்களை இவன் அடையும்போது அவள் வருத்தமடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள். கெடுதல்களை என் பேரில் சொல்லி அவதூறுகள் செய்த பாவிக்கு,

19. மற்றொரு சென்மம் தன்னில் மனைவியால் அவமா னங்கள்
சித்தமாய்ப் பெறுவாய் நீயும் செப்பியே தெருதூள் [விட்டாள்
பற்றிற்று அந்த சாபம் பாலகன் அந்தி யத்தில்
வெற்றிவேல் கடவுள் பத்தி விரும்பியே மரண மாகி.

19. மற்றொரு ஜன்மத்தில் மனைவியினால் அவமானங்கள் நிச்சயமாய்ப் பெறுவான் என்று தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தாள். இவனுடைய அந்திய காலத்தில் அந்த சாபம் பற்றியது. வேல் முருகனிடம் பக்தி பூண்டு மரணமானான்.

20. பிரமனால் வரியப் பட்டு பிறப்பனும் இந்த பாலன்
உரைந்திடும் முன்னூழ் சாபம் ஒண்டொடி மார்கள் ரெண்டு
மருவிடும் என்று சொல்வோம் வரைகிறோம் இவனின் [யோகம்
தரையினில் சல்லிய மேற்பன் சல்தியில் நிவர்த்தி செய்வன்.

20. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் பிறப்பான். முன்னூழ் வினையின் சாபம் வந்து சேர்ந்தது. இரண்டு பெண்டாட்டிகள் ஏற்படுவர் என்று சொல்லுவோம். இவனுடைய யோகத்தைப்பற்றிக் கூறுவோம். உலகில் கடன் வாங்குவான். சீக்கிரம் நிவர்த்தி செய்வன்.

21. பலவணி கங்கள் செய்வன் பாருகள் சேர்ப்பா னுகும்
குலமதிப் பாக வாழ்வன் கூறுவார் அத்திரி தானும்
தலைவனுக் கெவ்வாறு யோகம் செப்பின கார ணம்சொல்
புலவன்சேய் சென்மம் தங்க பொன்(ன)னவன் அஞ்சி [லாக.

21. பலவிதமான வியாபாரங்கள் செய்வான். பூமிகள் சேர்ப்பானுகும். குலத்தவர் மதிக்கும்படி வாழ்வான். இதைக்கேட்ட அத்திரி மகரிஷி கூற லுற்றார். இவனுக்கு யோகம் எவ்வாறு ஏற்படும் என்று சொன்னீர்? காரணம் சொல்லுங்கள். புதனும் செவ்வாயும் லக்கினத்திலிருக்க, குருவும் லக்கினத்திலிருந்து ஐந்தாமிடத்தில்,

22. மதிஉச்சம் புகர்சேய் ஆட்சி மலைப்பாம்பு கன்னி யாக
இதுபலன் வறுமை காணுன் யாவர்க்கும் இவன்சொல் [மேன்மை
பதிபாக்கிய முடைய ஞகும் தடமது சித்திரம் செய்வன்
நிதிமிக்க சேர்க்கை யுண்டு நிருபனய் வாழ்வா னம்மா.

22. சந்திரன் உச்சஸ்தானத்திலிருப்பதனுலும், சுக்கிரன் சுபட்சேத்திரத்திலிருப்பதனுலும், செவ்வாயும் தனஸ்தானத்திலிருப்பதனுலும், இராகு கன்னியிலிருப்பதனுலும், இப்படிப்பட்ட பலன்களைச் சொன்னேம். தரித்திரத்தைப் பார்க்கமாட்டான். எவருக்கும் இவன் வார்த்தையில் மதிப்பு உண்டு. பெண்டாட்டியினுல் அதிர்ஷ்ட முடையவன். நிலத்தில் சித்திரங்கள் செய்வான். சொத்துக்களை அதிகம் சேர்ப்பான். அரசனைப்போல் வாழ்வான்.

23. எந்தக்கா லத்தில் யோகம் எய்திடும் விபரம் சொல்வாய்
சந்ததம் இருபான் ஏழு ஆண்டினில் யோக மெய்தும்
அந்தநாள் முதலா யாக அவனுட மரண மட்டும்
சந்திரன் பிறைபோல் யோகம் தங்கிடும் வறுமை காணுன்.

23. எந்தக்காலத்தில் யோகம் ஏற்படும்? விவரங்கள் சொல்லவும் என்று வினவ, இருபத்தேழாவது பிராயத்தில் யோகங்கள் ஏற்படும். அக்காலம் முதற்கொண்டு அவனுடைய மரணகால பரியந்தம் பிறைச் சந்திரனைப் போல யோக மடைவான். வறுமைப் பிணிகள் இவனை அணுகா,

24. தந்தையோர் சுகமி ராதான் சமபல னென்று சொல்வோம்
அன்னிய ஊரில் லாபம் அணுகிடும் பால னுக்கு
பின்பாகம் விபர மாகப் பேசுவோம் தாயே யாங்கள்
கன்னென மொழியை யொக்கும் காதலி புகன்றிட் டோமே.

24. தந்தையின் வருக்கத்தினரால் சுகமே கிடையாது. சமமான பலன்களுண்டு என்று சொல்லுவோம். வேறு ஊரில் லாபம் ஏற்படும். இவற்றைப் பற்றிப் பின்பாகத்தில் விவரமாகக் கூறுவோம் நாங்கள். தாயே! கனிவான மொழிகளைக் கூறும் காதலியே! இவ்வாறு சொன்னேமல்லவா.

25. மாதுரு குணத்தைச் சொல்வோம் மனமது கபடு மில்லாள்
சூதிலாள் முன்கோ பத்தாள் சொல்லது சுருக்க மாகும்
பாதக மனமில் லாதாள் பதர்குண மில்லா ளாகும்
வேதனை ஒருவர்க் கெண்ணுள் மேவிடும் பித்த வாயு.

25. மாதாவின் குணத்தைச் சொல்லுவேன். மனதில் கபடமே இல்லாதவள். சூதுவாதில்லாதவள். முன்கோப முடையவள். சுருக்கமாகப் பேசுவாள். (அனுவசிய அதிக வார்த்தைகளைக்கொண்டு பேச மாட்டாள்.) இடைஞ்சலான புத்தி இல்லாதவள். கீழ்நோக்கான புத்தி

இல்லாதவளாகும். பிறருக்குத் துன்பம் செய்ய நினைக்கமாட்டாள். பித்த வாயுவினால் உபத்திரவப்படுவாள்.

26. இல்லமும் வடகீ ழாகும் இவள்துணை நவமே தோன்றும்
நில்லாது சிலது என்றோம் நிற்பது ஆண்பா லொன்று
வல்லியு மவ்வார் தீர்க்கம் மாதுரு இரண்டே யாகும்
தலைவியும் முதல்மா.துக்கு செனிப்பளாம் என்று
[சொல்வோம்.

26. அவள் வீடு வட கிழக்கிலுள்ளது. இவளுடன் பிறந்தவர்கள் ஒன்பது பேர்கள். சிலர் மரிப்பர். இருப்பது கடைசியில் சகோதரன் ஒருவனே யாகும். சகோதரியும் ஒருத்திதான். இரண்டு மாதாக்கள் ஏற்படும். இவள் முதல் தாயாருக்குப் பிறப்பாள் என்று சொல்லுவோம்.

27. மங்கையின் முன்சென் மத்தை வரைகுறோம் தாயே:கேளும்
துங்கமாம் காஞ்சி தன்னில் தோன்றினாள் இக்கு லத்தில்
பொங்கின குடும்பி யாகி புதல்வர்கள் அதிக முண்டாய்
அங்கவள் வினையில் லாமல் அறமதில் இச்சை யின்றி.

27. இவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுவோம். தாயே! கேட்பாயாக. துல்லியமான காஞ்சீபுரத்திலே இக்குலத்தில் தோன்றினாள். வளப்பம் பொருந்திய குடும்பத்தைப்பெற்று, புத்திரர்கள் அதிகமேற்பட்டு யாதொரு பவவினைகளுமில்லாமல் தருமத்தில் ஆசையில்லாமலும் இருந்து,

28. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரியப் பட்டு
திருமகள் உதித்தா னென்றோம் செப்புவோம் இவள்பின்
[சென்மம்
முருகர்வாழ் தணிகை தன்னில் உதிப்பளாம் ரெட்டி வமிசம்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா யென்றோம்.

28. எமனுலகம் சென்று, பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவள் பிறக்கலானாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். முருகக் கடவுள் வாழும் திருத்தணிகையில் ரெட்டி வம்சத்தில் பிறப்பாள். அதிகப் பணம் காசுகளைச் சேர்த்துக் கீர்த்தியுடன் வாழ்வாளென்றோம்.

29. தந்தையின் முன்சென் மத்தை செப்புவோம் அருணை
[தன்னில்
அந்தவன் வேளாண் வமிசம் அணுகியே கிருஷி செய்து
முந்தினோர் தொண்டு பூண்டு முருகர்தன் பத்தி யாகி
விந்தைக ளில்லா தாகி நெரிந்தனன் கால னூடு.

29. தந்தையினுடைய போன ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். திருவண்ணமலையில் வேளாளர் வம்சத்தில் பிறந்து கிருஷித் தொழில் மேற்கொண்டு பெரியோர்களுக்குத் தொண்டுகள் செய்து முருகக் கடவுளிடம் பக்தி செலுத்தி ஆச்சரியங்களில்லாமல் சாதாரண வழியில் எமலோகம் சென்றான்.

30. சிரநான்கோன் வரியப் பட்டு செனித்தன னென்று
[சொல்வோம்
வரும்சென்மம் காஞ்சி தன்னில் வருகுவான் சைவச் சேயாய்
கருமகா லங்கள் தன்னைக் கழறுவீர் முனியே நீதான்
உரைகுறோம் முப்பான் ரெண்டில் உறங்குவான் தந்தை
[தானும்.

30. பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்டுத் திரும்பவும் ஜனித்தான் என்று சொல்லுவோம். அடுத்த ஜன்மம் காஞ்சீபுரத்தில் சைவக் குலத்தில் பிறப்பான். முனிவரே! இவன் சம்பந்தமான கரும காலங்களைக் கூறுங்கள். ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் பிராயத்தில் தந்தை மரண மடைவான்.

31. ஆறுறு ஆண்டு தன்னில் அன்னைக்குக் கெண்ட மெய்தும்
மாரனுக் கருபான் யெட்டில் மார்கழி மாதம் தன்னில்
தீரமாய் சூல யாலே தேகமே யேகு மென்றோம்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

31. ஜாதகனுடைய முப்பத்தாறுவது வயதில் இவனுடைய தாய்க்குக் கண்டம் ஏற்படும். இவனுடைய மரணம் எப்பொழுது என்றால் அறுபத் தெட்டாவது வயதில் மார்கழி மாதத்தில் சூலநோய் ஏற்பட்டு மரண மடைவான் என்றோம். உலகில் சதா தவஞ்செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

32. பின்சென்மம் போரூர் தன்னில் பிறப்பனும் பிரும்ம சேயாய்
அன்னவன் இச்சென் மத்தில் அணுகின புண்ணிய மென்ன
தன்மனக் கட்டு மின்றி சலித்தோர்க் குதவி செய்தும்
பின்னோர்ஆ பத்தைக் கார்த்தும் பெரிதான தலங்கள்
[சென்றும்.

32. அடுத்த ஜன்மம் திருப்போரூரில் பிராமணக் குழந்தையாய் அவதரிப்பான். அவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய காரியங்கள் யாவை என்று வினவ, மனதில் யாதொரு கட்டுப்பாடுகளுமில்லாமல் ஏழை களுக்கு உதவி செய்தும், கீழ் ஜாதி மனிதர்களுக்கு ஆபத்துக்களை விலக்கிக் காத்தும் பெரிதான புண்ணிய ஸ்தலங்கள் போய்க் கடவுளைத் தரிசித்தும்,

33. வருவதால் மறுபி றப்பு மறைகுல முதிப்பா னாகும்
திருமகன் செனன காலம் செங்கதிர் தசைஒ ருண்டும்
உரைந்திடும் திங்க ளேழும் உரைத்தனம் பூர்வ பாகம்
அருமறை முடியி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

33. வந்ததனால் மறு பிறப்பில் மறையோர் குலத்தில் உதிப்பான் என்றோம். இவனுடைய ஜனனகாலத்தில் சூரியமகா தசையில் இருப்பு வருஷம் ஒன்றும், மாசம் ஏழும் தான். இதெல்லாம் பூர்வபாகமாக எடுத்துக் கூறினோம். மறைகளின் முடிவு காலத்தில் ஆனந்தக் கூத்தாடும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 67

1. சந்திரன் சாடியாக சனிகுசன் கேதுகன்னி
புந்திபான் துலையிலேற புகர்தேளில் பொன்ஞேன்நந்தி
மந்தரக் கயறுமீனம் மேகமும் சென்மமாக
இந்தவார் கிரகம்நின்ருல் இயம்புவீர் பலனைத்தானே.

1. *சந்திரன் கும்பத்திலும், சனியும் செவ்வாயும், கேதுவும் சேர்ந்து கன்னியா ராசியில் நிற்க, புதனும் சூரியனும் துலாத்தில் தங்க, சுக்கிரன் விருச்சிகத்திலும், குரு ரிஷபத்திலும், இராகு மீனத்திலும் தங்கும்படியான கிரக நிலைகள் கொண்ட இம் மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலா பலன்களைச் சொல்லுங்கள் என்று,*

ராகு	லக்கினம்	குரு	
சந்திரன்	இராசி சக்கரம்		
	சுக்கிரன்	புதன் சூரியன்	சனி செவ்வாய் கேது

2. பலன்தனைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும்போது
நலமுள வதிஷ்டர்சொல்வார் நாயகன் செனனமாகும்
குலவிய யில்லம்சொல்வேன் குணத்தினில் வாசலாகும்
சலமிலா தென்வடக்கு வீதியாகும் சக்திகணபதி தெற்கில்
[சாரும்தானே.

2. *பார்வதிதேவி கேட்கும்போது, நன்மையான வசிஷ்டர் கூறலுற்ருர். ஜாதகன் பிறக்கும் வீட்டைப்பற்றிக் கூறுவேன். கிழக்குப் பார்த்த வாசலாகும். தெற்கு வடக்கு வீதியாகும். சக்தி கணபதியின் கோவில் தெற்கிலுள்ளது.*

3. சாரும்தீ பாஞ்சாலி அருகிலேதான்
சாத்தானும் மாரியுண்டு அதின்கீழ்தன்னில்
மாரனையே பெற்றதந்தை ஈசன்கோஷ்டம்
மருவிடுமே வடகீழ்பால் அருகர்மேற்கு

ஊர்கார்க்கும் காளியுமே அதற்கு உத்திரம்
உரைக்குமிந்த அடையாளம் பேரூர்தன்னில்
தீரமாய் செங்குந்தர் மரபிலேதான்
செனிப்பனும் இப்பாலன் தேவியேகேள்.

3. திரௌபதி அம்மனுடைய கோவில் பக்கத்திலுள்ளது. அதற்குக் கிழக்கே சாஸ்தாவின் கோவிலும் மாரியம்மன் கோவிலும் உண்டு. மன் மதனைப் பெற்ற திருமால், பரமேச்வரன் ஆகியோர் கோவில்களும் வட கிழக்கே உள. அருகருடைய கோவில் மேற்கே யுள்ளது. ஊர்காக்கும் காளி கோவில் அதற்கு வடக்கே யுள்ளது. இவ்வித அடையாளங்கள் கொண்ட பேரூரில் மேலான செங்குந்தர் குடும்பத்தில் நம் ஜாதகன் ஜனிப்பானுகும். தேவியே! கேட்பாயாக.

4. தேவியே தந்தைவர்க்கம் காணுதாகும்
செனிக்கினுமே தீதாகும் தந்தைசேதி
தாவினபேர்க் குதவிசெய்வன் வறுமைகாணுன்
தரைமிகவே தேடிடுவன் தருமம்செய்யான்
மாதவரைத் தான்சேரான் பொருள்மேல்இச்சை
மனவருமன் ஈகைகொஞ்சம் வசனம்நல்லன்
நாவுசொல் இரண்டுமுண்டு நாபிசூடன்
நற்றந்த குற்றமுள்ளான்....................

4. இவனுடைய தந்தையின் குடும்பத்ினரைக் காணுவதற்கே யில்லை. யாராவது பிறந்தால் தீதாகும். தந்தையின் செய்தியைக் கூறுவோம். தன்னிடம் வந்த பேருக்கு உதவி செய்வன். வறுமைப் பிணியைக் காண மாட்டான். நிலபலங்களை அதிகமாகச் சேர்த்திடுவான். தருமம் செய்ய மாட்டான். பகவானிடம் பக்தி கொள்ளமாட்டான். பணத்தாசை பிடித்தவன். மனக்கவலை யுடையவன். கொஞ்சமாகப் பேசுவான். நல்லவன். நல்லது பொல்லாததுகள் இரண்டையும் நாக்கினுல் சொல்லுவான். மூலச் சூட்டின் உபத்திரவம் உடையவன். நல்ல பல் வரிசைகளை யுடையவன். குற்றமுள்ளவன்.

5. குற்றத்தை வெளிகாட்டாதான் குலவிடும் பித்தவாயு
சத்திய மென்றால்அச்சம் ஷண்முகர்க் கன்புபூண்டன்
வித்தகன் நீரில்தோய்வன் மேதினில் அடக்கமாவன்
புத்தியில் பெரியோனுவன் பூஷண மிச்சையுள்ளான்.

5. குற்றத்தை வெளியில் தெரியும்படி செய்யான். பித்தவாயுவின் பீடையுண்டு. சத்தியம் என்ற சொல்லைக் கேட்டே அச்சப்படுவான். முருகக் கடவுளிடம் அன்பு பூண்டவன். நல்ல கெட்டிக்காரன். தீர்த்தாட

ணங்கள் செய்வான். உலகினில் அடக்க ஒடுக்க முடையவன். மேன்மை யான புத்தியை யுடையவன். பூஷணங்களில் இச்சை யுடையவன்.

6. பந்துவை ஆதரிப்பன் பால்பாக்கிய னிஷ்டனுவன்
நிந்தையும் சிலர்கள்சொல்வார் நிதானமாம் குடும்பியாவன்
தன்கரம் கமலரேகை தலவாசம் செல்லயிச்சை
இந்திரன் இறைஞ்சும்மாதே இக்குணமுடையோனுக்கு.

6. சொந்தக்காரர்களை ஆதரிப்பான். பால் பாக்கியன். சிநேகபாவ முடையவன். சிலர் இவனைப்பற்றிய நிந்தனைகளையும் கூறுவார். நிதான மான குடும்பத்தை யுடையவன். கையில் தாமர ரேகையை யுடையவன். பல ஸ்தலங்களைப்போய்ப் பார்ப்பதில் இஷ்டமுள்ளவன். இந்திரன் தவஞ் செய்து வேண்டும் தேவியே! இத்தகைய குணங்களை யுடையவனுக்கு,

7. உதிப்பனும் இந்தபாலன் உரைக்குறேம் துணைஆண்
[கானுன்
மதிநுதல் பெண்பால்ரெண்டு வரைகுறேம் தீர்க்கமாக
அதுவுமே மூத்தோராக அறைகுறேம் தாயேகேளும்
அதிபதி மூத்தோள்சேதி வரைகுறேம் இருசிகப்பள்.

7. நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். சகோதரன் இல்லை. சகோதரிகள் இருவர். இவர்கள் தீர்க்கம். இவன்தான் மூத்தவன் என்று சொல்லுவோம். தாயே! கேளும். மூத்தவளுடைய குணங்களைக் கூறு வோம். பொது நிறமுடையவள்,

8. புத்திமான் வறுமைகாணுள் புகலுமுன் கோபியாவள்
சித்தமும் கரப்புமில்லாள் திருகுகள் செய்யாளாகும்
சுத்தமும் சீலமுண்டு துறவிகட் கன்னமீவள்
நத்தினேர்க் குதவிசெய்வள் நற்புத்தி உடையளாமே.

8. புத்தி யுள்ளவள். வறுமைப் பிணிகள் இல்லை. முன்கோபி என்று சொல்லப்படுவாள். மனதில் கெடுதல் இல்லாதவள். சூதுவாதுகள் செய்யமாட்டாள். சுத்த முடையவள். சீல முடையவள். சன்னியாசி களுக்கு அன்னம் போடுவாள். சிரமப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்வாள். நல்ல புத்தி யுடையவளாகும்.

9. தந்தையால் சுகமுமெய்தும் தன்வரன் உள்ளூர்ஆகும்
நொந்தபேர்க் கன்னமீவள் நீங்காத செல்வமுண்டு
பந்துவும் புகழுவாழ்வள் பகவானின் பக்திகொள்வள்
சந்ததி அதிகமுண்டு சங்கரி மேலும்கேளே.

9. தந்தையால் சுகமுண்டு. புருஷனும் உள்ளூரிலிருந்து வருவான். ஏழைகளுக்கு அன்னதானம் செய்வாள். அழியாத செல்வத்தை யுடையவள். பகவானிடத்தில் பக்தி கொண்டவள். குழந்தை குட்டிகள் அதிகமுண்டு. பார்வதியே ! மேலும் கேட்பாயாக.

10. சுதராண்பால் மூன்றுஎன்றோம் தோகையு மவ்வாறுகும்
இதுஆறும் தீர்க்கமெய்தும் இளையபெண் சேதிகேளாய்
வதிமதி மாம்சிவப்பள் மறுமொழி அதிகம்கூர்வள்
சதியான மனத்தளாகும் சாற்றுமுன் கோபியாவள்.

10. ஆண் குழந்தைகள் மூன்று என்றோம். பெண் குழந்தைகளும் அப்படியே. இவர்கள் ஆறு பேர்களும் தீர்க்காயுசுள்ளவர்கள். இனி இளையாளுடைய செய்தி விவரங்களைக் கூறுவோம். மாநிறமுள்ளவள். அதிகமான வார்த்தைகளால் பதில் சொல்லுவாள். சரியான மனதை யுடையவள். முன்கோப முடையவள் என்று சொல்லப்படுவாள்.

11. நடையது துருசுமுண்டு நவிலுவாள் தந்திரவார்த்தை
குடதிசை வரனுமேரும் புன்சிரிப்புடையளாகும்
மடையான புத்தியில்லாள் வார்த்தைகள் தவறாளாகும்
தடவரை மகளேயாங்கள் சாற்றிய மொழிகுன்றாது.

11. சுறுசுறுப்பாய் நடப்பாள். தந்திரமாகப் பேசும் இயல்பினள். மேற்கிலிருந்து புருஷன் ஏற்படுவான். புன் சிரிப்புடையவள். அசட்டுத்தனமான புத்தி யில்லாதவள். சொன்ன சொல் தவறமாட்டாள். மலையவானின் புத்திரியே! நாங்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மதிப்புக் குறையாது.

12. மதலைகள் ஆண்பால்ரெண்டு மங்கையு மவ்வாறுகும்
சதமுடன் தீர்க்கமெய்தும் தந்தையால் பெருமைபூண்பள்
பதமான குடும்பமாகும் பசுவுகள் விருத்தியாகும்
அதிதிகட் கன்னமீவள் அம்பிகை யாளேகேளாய்.

12. இரண்டு ஆண் குழந்தைகள். இரண்டு பெண் குழந்தைகள். அவர்கள் தீர்க்காயுசுடையவர்கள். தந்தையினால் பெருமையடைவாள். நேர்த்தியான குடும்பத்தை வகிப்பாள். பசுக்கள் விருத்தியாம். விருந்தினருக்கு அன்னதானம் செய்வாள். அம்பிகையே ! கேட்பாயாக.

13. உதித்தவன் குணத்தைச்சொல்வேன் யூகைவான் [புத்திசாலி
மதித்திட வாழ்வானுகும் மால்நிறம் சமதேகத்தன்
நதிபல தீர்த்தம்தோய்வன் நாதனுர் பக்திகொள்வன்
பதியினில் திருபுமோங்கும் பகைவரை உறவுகொள்வன்.

13. ஜாதகனுடைய குணங்களைச் சொல்லுவேன். புத்தி கூர்மை யுள்ளவன். புத்திசாலி. பிறர் தன்னை மதிக்கும்படி வாழ்வான். கருப்பு உடம்பை யுடையவன். சமமான தேகத்தை யுடையவன். பல நதிகளில் போய் ஸ்நானம் செய்வான். கடவுளிடம் பக்தி யுடையவன். வீட்டில் குழப்பங்கள் ஏற்படும். பகைவர்களை உறவு கொள்ளுவான்.

14. தந்தைநாள் பூமிதன்னை தானவன் விருத்திசெய்வன்
வந்தவர்க் கன்னமீவன் மாற்றானை லகுவில்வெல்வன்
முந்தின கோபமுள்ளான் உயர்வான குடும்பியாவன்
வன்மனமுடையனாகும் மறுத்த வார்த்தைகளும் சொல்வன்.

14. பிதாவின் காலத்தில் ஏற்பட்ட நிலத்தை விருத்தி செய்வான். வந்தவர்களுக்கு அன்னமளிப்பான். எதிரிகளை சுலபமாய் வெல்லுவான். முன்கோபமுடையவன். மேலான குடும்பியாவன். கொடிய மனமுடையவன். எதிர்த்துப் பேசும் இயல்புடையவன்.

15. நேத்திர வூனமாகும் நிமலியர் மோகவானும்
பாத்திர மறியவல்லன் பணத்தின்மேல் இசையுள்ளான்
நாத்திசை கீர்த்திகொள்வன் நல்லோர்க்கு நல்லனாவன்
சூத்திரம் செய்வானாகும் துருசான கோபியாவன்.

15. கண் பார்வை கெடும். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொள்ளுவான். சற்பாத்திரங்களை நன்கு அறியும் திறமையுடையவன். பணத்தாசை யுடையவன். நாலா பக்கங்களிலும் கீர்த்தி பெறுவான். நல்லவர்களுக்கு நல்லவனாவன். சூத்திரங்கள் செய்யும் திறமையுடையவன். சீக்கிரம் கடுமையான கோபம் வரும் குணமுடையவன்.

16. வித்தையும் கொஞ்சமுண்டு வீண்வம்பில் செல்லானாகும்
சுத்தவான் உதவிசெய்வன் சித்திர இல்லம்செய்வன்
அத்தி[1]போல் நடையுமாவன் அவன்கரம் உத்திரரேகை
பத்தினிக்கன்பனாவன் பால்தயிர் பிரியனாவன்.

16. படிப்பும் கொஞ்சமுள்ளவன். வீண்வம்படிக்கமாட்டான். சுத்தமுடையவன். உதவி செய்வான். சித்திரமான வீடு கட்டுவான். மத்த கஜம்போல் நடப்பான். அவன் கையில் விஷ்ணுரேகை யுடையவன். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான். பால் தயிர் இவைகளில் பிரியமுள்ளவன்.

---

1. யானை

17. பாரியு மூவைந்தாண்டில் பகருவோம் குடகுதிக்கில்
நாரியின் வர்க்கம்தன்னில் நவிலுவோம் அந்தமாது
கூறுவோம் அவள்குணத்தைப் புன்சிரிப்புடையளாகும்
காரிய சமர்த்தளாகும் கழறுவாள் சுகமாய்வார்த்தை.

17. பெண்டாட்டியும் பதினைந்தாம் பிராயத்தில் மேற்குத்திக்கிலிருந்து வருவாள். தாயின் வமிசத்திலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். புன்சிரிப்பை யுடையவள். காரியங்கள் புரிவதில் சாமர்த்திய முள்ளவள். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள்.

18. இருநிறம் உணைச்சல்தேகி இடறுன புத்தியில்லாள்
திருமகள் ஒப்பதாகும் சீலவாள் வறுமைகாணுள்
பெரும்புத்தி அடக்கமுண்டு பிழையிலாள் யோகசாலி
குருமுனி இவ்வார்கூற கூறுவார் பராசர்தானும்,

18. கரியநிறமுள்ளவள். மெலிவடைந்த தேகத்தை யுடையவள். இடைஞ்சலான புத்தியில்லாதவள். இலட்சுமியைப் போன்றவள். சீல முடையவள். வறுமைப்பிணி இல்லாதவள். மேல்நோக்கான புத்தியை யுடையவள். அடக்கமுடையவள். பிழையில்லாதவள். யோகங்களை யுடையவள். அகஸ்தியர் இவ்விதம் கூறுவதைக் கேட்டு பராசரர் வினவ லானார்.

19. பொன்னவன் ஏழோன்தன்னைப் பொருந்தியே
[பார்த்ததாலே
தன்மனை உள்ளூராகும் தடுத்தவர் சொல்லுகின்றார்
மன்னவ னேழைபார்த்தும் மதிக்கேழோன் துலையிலேற
அன்னவள் குடகுதிக்கில் அறைந்தனம் வயதுதீர்க்கம்.

19. வியாழபகவான் இலக்கினத்திற்கு ஏழுக்குடையவனைப் பார்த்த தனாலே தன்வீடு உள்ளூரிலேதான். அவர் அதைத் தடுத்துச்சொல்லுவார். சனி சுக்கிரனைப் பார்த்தும், சந்திரனுக்கு ஏழாமிடத்திற்குரிய சூரியன் துலாத்தில் தங்க, அவள் மேற்கிலிருந்து வருவாள் என்று சொன்னோம். வயது தீர்க்கம்.

20. எப்படி வயதுதீர்க்கம் ஏழுளோன் சனியேயாகி
தப்பிதம் கேதும்சேர்ந்து தனத்துளோர் நீச்சமாக
ஒப்புடன் தாரம்ரெண்டு உரைக்கலா மிவனுக்கேதான்
அப்படிச் சொல்லொணுது அந்தணன் ஏழைப்பார்க்க.

20. எப்படி வயசு தீர்க்கம் என்று சொல்லுவீர்? ஏழில் சனியிருந்து தப்பிதமான கேதுவும் ஒன்றுசேர, அவனுக்கு தனஸ்தானத்திலுள்ள சூரியன்

நீச்சமாக தாரம் இரண்டு என்று இவனுக்கே சொல்லலாம். அப்படிச் சொல்லுவதற்கில்லை. வியாழன் சுக்கிரனைப் பார்ப்பதனால்,

21. மறுமனை யணுகாதாகும் மாதுவேறொருத்தி சேர்வள்
வருமனை யபிமானப்பெண் வந்திடு முப்பாண்டின்மேல்
உருமனை யெந்தசாதி உரைப்பீர்கள் குலத்துமாது
அருளுவோம் வடகீழ்தன்னில் அம்மாது வருவாளாகும்.

21. வேறு பெண்டாட்டி ஏற்படாள், வேறு ஒரு ஸ்திரீ வந்து சேருவாள். அவள் அபிமான ஸ்திரீயாவள். அவள் முப்பது வயதிற்கு மேல் வருவாள். அவள் எந்த ஜாதி என்று சொல்லுங்கள். அவள் நல்ல குலம் என்போம். வடகிழக்கிலிருந்து அவள் வருவாளென்றோம்.

22. பின்மாது தனக்குப்புத்திரர் பொருந்தாது என்றுசொல்வோம்
முன்மனை தனக்குப்புத்திரர் மொழிகுறோம் நவமேதோன்றும்
கன்னிமார் மூன்றுயென்றோம் காளையும் இரண்டுதீர்க்கம்
பின்னமா மற்றதெல்லாம் பராசரும் கேட்கலுற்றார்.

22. பின்னால் வந்த ஸ்திரீக்குப் புத்திரர் பிறவார் என்று சொல்லுவோம். முதல் மனைவிக்குப் பிறக்கும் புத்திரரைப்பற்றிக் கூறுவோம். ஒன்பது குழந்தைகள் பிறக்கும். பெண்கள் மூன்று பேர்கள். ஆண் குழந்தைகள் இரண்டு பேர்கள். அவர்களும் தீர்க்கம் என்றோம். மற்றவர்கள் பின்னமாய்ப் போவார்கள். பாராசரும் கேட்கலுற்றார்.

23. அஞ்சினில் புகரும்நிற்க அஷ்டமத் தோனும்பார்க்க
துஞ்சிடும் சுதர்ஆண் என்றோம் செயமுனிகூறுகின்றார்
தஞ்சமாய் பத்தோன்சேயாய் சந்ததி தானத்தோனாய்
கொஞ்சியே மூன்றில்நிற்க குழவியாள் கர்மம்நேரும்.

23. ஐந்தாமிடத்தில் சுக்கிரனும் நிற்க, அவனை அஷ்டமத்தோனும் பார்க்க ஆண் குழந்தைகள் இறக்கும் என்றோம். அப்போது ஜயமுனி கூறுகின்றார்; தஞ்சமாய்ப் பத்துக்குடைய சனி, செவ்வாயுடன் சேர்ந்து மூன்றிலிருக்கும் சுக்கிரனைப் பார்ப்பதனாலே குழந்தைகளால் கர்மம் நேரிடும்.

24. ஆகினும் சொல்லுகின்றேன் அந்திய சுதர்களாவர்
பாகமாய் இவன்போல்ஆகும் பிந்தமை இரண்டுமூன்று
எய்திடுங் காலன்பக்கல் இதுவன்றி பூர்வதோஷம்
நாகத்தின் விஷம்போல்சேர்ந்து நல்கின பலத்தினாலே.

24. இருந்தாலும் சொல்லுகின்றேன். கடைசிகாலத்தில் புத்திரர்கள் ஏற்படுவர். பக்குவமாய் இவனைப் போலவேயிருப்பர். இரண்டாவதும், மூன்றாவதும் காலனுடு எய்திடும். இது நீங்கலாகப் பூர்வகாலத்து தோஷம் ஒன்று நாகப்பாம்பின் விஷம்போல் சேர்ந்த பலத்தினாலே,

25. பவமதைச் சொல்லுமென்ன பாலகன் பூர்வம்கேளாய்
தவசிகள் வாழுகின்ற தண்டகாவனத்துக் கீழ்பால்
நவனியில் சமலூர் தன்னில் நல்கினான் வன்னியசேயாய்
இவன் கிராமகாவலாக இருந்தனன் என்றுசொன்னோம்.

25. பவவினையைப்பற்றிச் சொல்லுங்களென்ன பாலகனுடைய பூர்வோத்தரத்தைக் கேட்பாயாக. தபசிகள் வாழும் தண்டகாரணியத் திற்குக் கிழக்கே உலகத்தில் சமலூரில் வன்னியர் குலத்தில் பிறந்தான். கிராமத்தில் காவலாக இருந்தான் என்று சொன்னோம்.

26. வந்தவூழ் தன்னைச்சொல்வேன் மார்க்கத்தில் முள்ளை
[யிட்டான்
அந்தரி மாரிகோஷ்டம் அழகிய தீபம்தன்னை
இந்தவன் பறித்துக்கொண்டான் இருபிறப் பாளர்மாது
சிந்தையைக் கலங்கவைத்துத் திருப்பணிகளவு செய்தான்.

26. ஏற்பட்ட ஊழ்வினையை எடுத்துக் கூறுவேன். பத்துப்பேர் நடக்கிறவழியில் முள்ளை வைத்தான். அம்மன் கோவிலிலுள்ள அழகிய விளக்கை இவன் கைப்பற்றிக் கொண்டான். பிராமண ஸ்திரீயை மனங் கலங்க வைத்து அவள், ஆபரணங்களைத் திருடிக் கொண்டான்.

27. ஆவின்நெய் தீபம்வைக்க அதிகாரி இவன்பால்தந்தான்
மேவினில் அதைநிறுத்தி ஏற்றினன் முத்துநெய்யாய்
தாவிய அந்ததோஷம் சார்ந்தது இவனுக்கேதான்
ஏகினான் காலன்பக்கல் இடரான பாதையாலே.

27. பசுவின் நெய்யைக்கொண்டு விளக்குப் போடும்படி அதிகாரி இவனிடம் உத்திரவிட்டான். அதை இவன் திருடிக்கொண்டு கொட்டை முத்தினால் ஏற்பட்ட ஆமணக்கெண்ணையால் ஏற்றினான் தீபத்தை. அந்த ஒரு தோஷமும் இவனை வந்தடைந்தது. நிரம்பக் கஷ்டப்பட்டு எமலோகம் போனான்.

28. வேதனால் வரியப்பட்டு விளங்கினான் இந்தபாலன்
ஓதுவேன் மாரி(தீபம்) உத்தமன் களவுசெய்த
பாதகம் நேத்ரயீனம் பணிகளும் பறித்ததோஷம்
நீதியாய் முதலில்புத்திரர் நிலைக்காது என்றுசொல்வோம்.

28. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவன் பிறந்து விளங்கினுன். அம்மன்கோவிலின் விளக்கைத்திருடின தோஷத்தால் கண் பார்வையில்லாமற் போயிற்று. திருப்பணிகள் திருடிய தோஷத்தினுல் ஒழுங்காக முதலில் புத்திரர் நிலைக்காது என்று சொல்லுவோம்.

29. மார்க்கத்தைத் துத்ததோஷம் வரும் துணை யாணில்லாமல்
ஏர்க்கவே அந்தியத்தில் எய்தினுன் இந்தபாலன்
வர்க்கமும் துணையாணின்றி வாழ்குவா னிவனேயம்மா
தீர்க்கமாய் எந்தவர்க்கம் செய்துணையில்லா நின்றீர்

29. வழியை அடைத்து முள்வேலி வைத்தடைத்த தோஷத்தின் பயனுகச் சகோதரனில்லாமல் கடைசிகாலத்தில் இந்தப் பாலகன் எய்தினுன். அந்தக் குடும்பத்தில் சகோதரனே இல்லாமல் இவன் வாழ்குவான் அம்மா! தீர்க்கமாய் எந்தக் குடும்பத்தில் சகோதர பாவமில்லையென்று சொன்னீர்கள்?

30. தந்தைதாய் வர்க்கம்ஆண்பால் சாராது என்றுசொன்னேம்
வந்தவன் நேத்திரதோஷம் விலகவும் கிரிகைசொல்வீர்
எந்தசாந் திகள்செய்தாலும் விலகாது மாரிதோஷம்
எந்தையே முத்தின்நெய்யை ஏற்றின தோஷத்துக்கும்.

30. தந்தைதாய் வர்க்கத்தினில் ஆண் குழந்தைகள் பிறவா என்று சொன்னேம். அப்படி ஏற்பட்டவனுக்குக் கண் நோய் விலக சாந்தி பரிகாரம் கூறுங்கள். எப்படிப்பட்ட சாந்திகள் செய்தபோதிலும் அம்மனுடைய தோஷம் விலகாது. ஆமணக்கெண்ணையைப் போட்டு விளக்கேற்றின தோஷத்திற்கும்,

31. உரைக்கவே மாட்டோமம்மா உபசாந்தி ஒன்றுசொல்வேன்
சரவிளக் கொன்றுசெய்து சங்கரன் முன்பால்வைக்க
அரைபார்வை தெளிவாய்க்காணும் அதுவன்றி கூறுேது
பெருவயி ருேனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

31. வேறு உபசாந்திகள் சொல்லுவதற்கில்லை. சரவிளக்கொன்று செய்து சங்கரன் (பரமசிவன்) முன்பு வைத்து வந்தால் கண்ணுக்குப் பாதி பிரகாசம் ஏற்படும். அதைத்தவிர வேறு சொல்லுவதற்கில்லை. பிள்ளை யாரைப்பெற்ற புண்ணியசாலியே! கேட்பாயாக.

32. அத்திரி சொல்லுகின்ருர் அவனுமுன் சென்மந்தன்னில்
குத்தங்கள் அனந்தமாக குறித்தினீர் இச்சென்மத்தில்
பெத்திடும் தனவரனென்றீர் பிறக்கும்கா ரணங்களென்ன
வித்தகன் முன்சென்மத்தி(னி)ல் வேதியர் தொண்டு
[பூண்டும்.

32. அத்திரிமகரிஷி சொல்லுகின்றார். அவன் முன் ஜன்மத்தில் அநேக குற்றங்களைச் செய்ததாகச் சொன்னீரே! இந்த ஜன்மத்தில் பெரிய தனவானென்றீர். இப்படிப் பிறக்கும் காரணங்கள் என்ன? என்று சொல்லுங்கள். இவன் முன் ஜன்மத்தில் பிராமணர்களுக்குத் தொண்டுசெய்து,

33. ஏழைமேல் இரக்கமாயும் இடறுகள் தவிர்த்ததாலும்
ஆழியில்சுகவானாக அணுகினான் இந்தபாலன்
தாழ்விலாக் குடும்பமாவன் சல்லியம் கொள்ளானாகும்
சூழ்புவி விருத்திசெய்வன் சோலைகள் துரவும்செய்வன்.

33. ஏழைகள்பேரில் இரக்கம் கொண்டும் பிறருடைய சிரமங்களைத் தவிர்த்தும் பூமியில் சுகவானாக அணுகினான் இந்தப் பாலகன். தாழ்வு இல்லாத குடும்பத்தை வகிப்பான். கடன் வாங்கமாட்டான். நிலபலங்களை விருத்திக்குக் கொண்டு வருவான். தோட்டம் துரவுகளும் ஏற்படுத்துவான்.

34. தந்தைக்குத் தாழ்வுறாதான் தனமது கொடுக்கல்வாங்கல்
பிந்தியும் சேர்ப்பானாகும் பந்துவும் மெச்சவாழ்வன்
எந்திடம் பெருமைபூண்பன் இலாபமேல் சிந்தையுள்ளான்
இந்தவனால் பணிபொன்பூமி யெய்தும்பத் தாயிரம்பொன்.

34. தந்தையைக் காட்டிலும் தாழ்வாக வாழமாட்டான். பணம் கொடுக்கல் வாங்கல் செய்வான். பின்னால் பணத்தைச் சேர்ப்பான். பந்துக்கள் மெச்சவாழ்வான். எந்த இடத்திலும் பெருமை பெறுவான். இலாபத்தின்பேரில் மனதை வைப்பான். இவனால் பொன் பூஷணங்கள் சேரும். மொத்தம் பத்தாயிரம் பொன் பெறும்.

35. அன்னையும் இருநிறத்தாள் அன்புள வார்த்தை சொல்வள்
பன்னியே பேசுவாளாம் பரவுபகாரம் கொஞ்சம்
தன்சொல்லே மேன்மையாக சாதிப்பள் பாட்டாளியாகும்
தன்துணை பெண்பால்ரெண்டு சார்ந்திடும் குடகுயில்லம்.

35. தாயும் கரியநிறமுடையவள். அன்பான வார்த்தை சொல்லுவாள். பிரியமாய்ப் பேசுவாள். கொஞ்சம் பரோபகார சிந்தனையுண்டு. தன் வார்த்தையையே பெரிதாகச்சொல்லி சாதிப்பாள். நல்ல வேலைக்காரியாவாள். சகோதரிகள் இருவர். மேற்கே இவளுடைய வீடு.

36. வந்தபின் விசேஷயோகம் வரைகுறும் வரனுக்கேதான்
முந்திய சென்மம்சொல்வேன் முக்கூடல் மேல்பாலாக
வந்தனள் சிற்றூர்தன்னில் வளமுள கங்கைசேயாய்
சிந்தையும் நல்லதாகி சிவத்தொண்டு செய்துஇன்றேன்.

36. கலியாணம் ஆனபிறகு புருஷனுக்குப் பிரமாதயோகம் ஏற்படும். முந்திய ஜன்மத்தைப்பற்றிக் கூறுவேன். முக்கூடலுக்கு மேற்கே சிறிய கிராமத்தில் பிறந்தாள். அதுவும் வேளாளர் குலத்தில் பிறந்து நல்ல மனமுடையவளாகி சிவபக்தி மேலிட்டு,

37. மறலிதன் பதிக்குபுக்கி மறையவன் வரியப்பட்டு
முருகர்தன் அடியார்வம்ச முதித்தனள் இந்தமாது
வறுமைகள் காணுளாகும் மறுசென்மம் காஞ்சிதன்னில்
திருமகள் விலாசம்போன்ற சீலமாம் கங்கைசேயாய்.

37. எமன் உலகத்திற்குச்சென்று பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு முருகர் தம் அடியார் (முருகதாசர்) வமிசத்தில் இவள் உதித்தாள். வறுமைத் துன்பமே கிடையாது. அடுத்த ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் லட்சுமீகடாக்ஷம் பொருந்திய சீலம்உள்ள வேளாளர் குலத்துதித்து வாழ்வாள் இம்மாது.

38. உதிப்பளாம் இந்தமாது உரைக்குறேம் தந்தைபூர்வம்
கதிதரும் தில்லைதன்னில் காவலன் வைசியசேயாய்
அதிகமாய் செட்டுசெய்து அவனியில் வாழும்நாளில்
விதியவன் குலத்துதித்த மெல்லிமேல் மோகம்கொண்டு.

38. தந்தையின் பூர்வோத்தரத்தை எடுத்துச் சொல்லுவோம். மோட்சத்தைத் தரும் சிதம்பர ஸ்தலத்தில் வைசியர் குலத்தில் பிறந்தான். அதிகமாய் வியாபாரம் செய்து பூமியில் வாழ்ந்து வரும் காலத்தில் விதி வலிதாகி அவன் குலத்திலுதித்த ஸ்திரீயின் பேரில் மோகம் கொண்டு,

39. தந்திர வார்த்தைசொல்லி தனம்காசு அவளுக்கீந்து
இந்தவன் போகம்துய்த்து இப்படி சிலநாள்சென்று
அந்தவள் இனத்தார்கண்டு அவளையே விலக்கும்போது
பந்தமாய் நின்றமாது பகருவாள் வைசியன்பால்.

39. தந்திரமாக வார்த்தைகளைச் சொல்லி பணம் காசு அவளுக்குக் கொடுத்துப் போகம் துய்த்து, இப்படிச் சிலகாலம் செல்ல அதை அவளைச் சேர்ந்தவர்கள் கண்டு அவளையே விலக்கலுற்றனர். இதற்குப் பந்தமாயிருந்த அந்த மாது வைசியனைப் பார்த்துச் சொல்லலுற்றாள்.

40. உன்னிட மதியால்கெட்டேன் உலகினில் வசியமானேன்
தன்னுமே தனியளானேன் தற்காக்க வேணுமென்ன
என்பாரி பொல்லாள்மேலும் எனங்களும் பகையுமெய்தும்
என்னிடம்வேண்டாம் நீயும் ஏகுவாய் இஷ்டம்போலே.

40. உன்னுடைய புத்திமதிகளைக் கேட்டு நான் கெட்டேன். உலகினில் வசியமானவளானேன். தன்னந்தனியளானேன். என்னைக்காப்பாற்ற

வேண்டுமென்று கெஞ்சிக்கேட்க, என் பெண்டாட்டி பொல்லாதவள். மேலும் என்னைச் சேர்ந்தவர்களும் பகைமையடைவார்கள். என்னிடம் வராதே. இஷ்டம்போல் எங்கு வேண்டுமானாலும் போவாயாக என்றான்.

41. மாதுவும் மனம்கலங்கி வரைகுழல் சாபம்தானும்
மேதினில் மறுசென்மத்தில் விளங்கிய துணைகளின்றி
ஆதியில் வறுமையாயும் அக்குலம் தாழ்வதா[கி]ய்
ஓதியே சென்றாள்மாது உரைந்தது இவனுக்கேதான்.

41. இம்மாதுவும் மனக்கலக்கமுற்று சாபத்தைக் கொடுக்கலானாள். உலகினில் அடுத்த ஜன்மத்தில் சகோதரமேயில்லாமல் ஆரம்பத்தில் தரித்திரமாயும் தாழ்ந்த குலத்தில் பிறந்து வாழ்வாய் என்று அம்மாது கூறிச் சென்றாள். அச்சாபம் இவனை வந்தடைந்தது.

42. வேறொரு தீங்குகாணான் மேவினான் காலன்பக்கல்
தீரமாய் இக்குலத்தில் செனித்தனன் இவனேயென்றோம்
காரிழை சாபம்போலே கலந்திடுமிச் சென்மத்தில்
மாறிய சென்மம்தன்னை வரைகுறோம் தாயேகேளும்.

42. வேறு யாதொரு பாவமும் செய்யாமல் கடைசியில் எமலோகம் சென்றான். இக்குலத்தில் ஜனித்தவன் இவனே என்றோம். ஸ்திரீயின் சாபம் இந்த ஜன்மத்தில் கலந்திட்டது மாறிய ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். தாயே! கேளும்.

43. பொங்கிய காஞ்சிதன்னில் பிறப்பனும் இக்குலத்தில்
துங்கமாம் கடவுள்பத்தி செய்குவான் இவனேயென்றோம்
சங்கையாய் இருபான்ரெண்டில் சாடிமாதத்திலேதான்
பங்கமாம் காலன்பக்கல் பரவுவான் இவனேயென்றோம்

43. மேலான காஞ்சிபுரத்தில் இக்குலத்தில் பிறப்பான். கடவுளிடம் மேலான பக்தியைச் செலுத்துவான். இருபத்திரண்டாம் வயதில் கும்ப மாசத்திலே எமலோகம் செல்லுவான் என்றோம். இதுவும் ஒரு சமுசயமான விஷயம்.

44. முப்பது ஆண்டுதன்னில் முயர்ஆனி மாதம்தன்னில்
செப்புவோம் அன்னைகெண்டம் சேயனும் அறுபான் [ஒன்றில்
ஒப்புடன் கன்னிமாதம் உயர்பக்கம் தசமிநாளில்
தப்பிதம் காலன்பக்கல் சாருவா னிவனேயம்மா.

44. முப்பதாவது பிராயத்தில் உயர்ந்த ஆனி மாசத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். இவனும் அறுபத்தொன்றாம் வருஷம் புரட்டாசி மாசத்தில் சுக்கிலபட்சம் தசமிதிதியில் மரணமடைகுவான் அம்மா!

45. பின்சென்மம் அருணைதன்னில் பிறப்பனும் பிரும்மசேயாய்
மன்னர்பால் செட்டுசெய்வன் மறித்தவர் கூறுகின்றார்
இன்னவன் இச்சென்மத்தில் எய்தும்புண் ணியங்களென்ன
உன்னத தலங்கள்சென்றும் உயர்வோருக் குதவிசெய்தும்.

45. அடுத்த ஜன்மம் திருவண்ணாமலையில் பிராமண வமிசத்தில் பிறப்பான். அரசர்களிடம் வியாபாரம் செய்குவான். அதை மறுத்துக் கூறுவர். இவன் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய காரியங்களென்ன? என்று வினவ, மேலான ஸ்தலங்கள் சென்று பிராமணர்களுக்கு ஒத்தாசை செய்தும்,

46. வருவதால் உதிப்பானென்றோ மன்னவன் செனனகாலம்
கரியவன் திசையிலேதான் கழறுவோம் ஈரேழாண்டும்
உரைந்திடும் திங்கள்பத்தும் உரைக்குறோம் பலனையாங்கள்
பெருவயி றோனைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

46. வந்ததனால் இக்குலமுதிப்பான் என்றோம். இவனுடைய ஜனன காலத்தில் சனிதசையில் இருப்பு வருஷம் பதினான்கு, மாசம் பத்து என்று கூறுவோம். நாங்கள் இதன் பலனைக் கூறுவோம். விக்கின விநாயகக் கடவுளைப்பெற்ற புண்ணியசாலியான பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 68

1. சந்திரன் கேதுமேரு சனிசியம் ராகுவீணை
புந்தியும் புகருமேடம் பரிதியு மீனமாக
மந்திரி மானதாக மங்களன் தேளதாக
இந்தவார் கிரகம்சேர்ந்து லக்கினம் மொத்தையாக.

1. சந்திரனும் கேதுவும் தனுசிலும், சனி சிம்மத்திலும், ராகு மிதுனத்திலும், புதன் சுக்கிரன் மேஷத்திலும், சூரியன் மீனத்திலும், குரு மகரத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும் தங்கும்படியான கிரகநிலை கொண்ட இம் மேஷலக்ன ஜாதகனுக்கு உண்டான,

சூரியன்	லக்கினம் புதன் சுக்கிரன்		ராகு
	இராசி சக்ரம்		
குரு			சனி
சந்திரன் கேது	செவ்வாய்		

2. சொல்லுவீர் பலனைஎன்று சுந்தரி கேட்கும்போது
நல்லதோர் வதிஷ்டர்சொல்வார் நாயகன் செனனமாகும்
இல்லமும் கீழ்மேல்வீதி யமன்வாடை தெற்கில்தந்தி
அல்லலை அகற்றுமீசன் ஆதிமால் யெதிரில்தோன்றும்.

2. பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி சப்தரிஷிகளைக் கேட்கும்போது நன்மை மிகுந்த வசிஷ்டரிஷி பின்வருமாறு சொல்லலுற்றார். இந்த ஜாதகம் ஒரு ஆண் மகனுடையது. இவன் பிறக்கும் வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப்பார்த்த வாசலுடையது. தெற்கே விநாயகர் கோவில். அல்லலைத்தொலைக்கும் ஈசுவரன் கோவிலும், திருமாலின் கோவிலும் எதிரே தோன்றும்.

3. மாரிபாஞ்சாலி தென்மேல் மருவிடும் அருகர்மேற்கு
ஊர்காளி அதின்மேல்ஆகும் உரைக்குமிவ் வடை
[யாளத்துள்
நாரியே சமவூராகும் நாயகன் சேஷ்டனுக
தீரமாய் கங்கைசேயாய் செனிப்பனும் இந்தபாலன்.

3. பாஞ்சாலி அம்மன் கோவில் தென்மேற்கில் சமீபத்திலுள்ளது. அருகக் கடவுளுடைய கோவில் மேற்கேயுள்ளது. அதற்கு மேற்கே அவ்வூர் காக்கும் காளியம்மன் கோவில். இவ்வித அடையாளங்கள் கொண்ட சம ஊரில் ஜாதகன் ஜேஷ்ட குமாரனுக மேன்மைவாய்ந்த வேளாளர் குலத்தில் ஜனிப்பான்.

4. பாலகன் செனனயோகம் பருகிடும் அன்னைதந்தை
சாலவே துணைவர்யோகம் தன்மனை புத்திரயோகம்
ஏலவே முன்பின்சென்மம் இயம்புவோம் இந்நூல்தன்னில்
ஆலத்தை உண்டோன்தேவி அறிவிப்போம் இந்நூல்
[தன்னில்.

4. ஜாதகனுடைய ஜனனகாலத்து யோகபாவங்களையும், தாய்தந்தையர் யோகமும், சகோதரர் யோகமும், மனைவி புத்திரர் யோகமும், ஏற்பவே முன்பின் ஜன்மபலன்களும் இப்புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம். ஆலகால விஷத்தையுண்ட பரமசிவனின் தேவியே! நாங்கள் விவரங்கள் தெரிவிப்போம் இந்த நூலில்.

5. தந்தையின் துணைவர்தன்னை சாற்றில்ஆண் பலத்தைக்
[காணும்
வந்திடும் கன்னிஒன்று வரைகுரும் தீர்க்கமாக
எந்தையே பிதாகுணத்தை இயம்புவோம் இருநிறத்தன்
சந்ததம் உணைச்சல்நீட்சி சன்மார்க்கன் கிருஷிசெய்வன்.

5. தந்தையுடன் கூடப்பிறந்தவர்களைப்பற்றிக் கூறுவோமென்றால் சகோதரன் என்று சொல்லுவதற்கே ஜாதகத்தில் யோகமில்லை. அவனுக்குத் தங்கை ஒருத்தியுண்டு. அவள் தீர்க்கம். பிதாவின் குணங்களைக் கூறுவோம். கரியநிறமுள்ளவன். மெலிந்த தேகத்தையுடையவன். உயரமானவன். நல்ல தரும வழிகளை அநுசரிப்பவன். கிருஷித்தொழிலைச் செய்வான்.

6. வித்தையும் கொஞ்சமுள்ளான் வீண்வம்பில் செல்லானுகும்
சுத்தவான் தந்தைஆஸ்தி சேர்ந்திடும் வேரூர்செல்வன்
நித்தியம் சீலனுவன் நிகர்தந்தை வர்க்கம்தன்னில்
வித்தகன் சேருவானும் மேன்மையாய்க் குடும்பியாவன்.

6. கொஞ்சம் படிப்பும் உடையவன். வீண் வம்புகளில் தலையிட மாட்டான். சுத்தமுடையவன். தந்தையின் சொத்து சேர்ந்திடும். வேறு ஊருக்குச் செல்லுவான். சீலவான். தந்தையின் வருக்கத்தில் இவன் மணம் புரிவான். மேன்மையான குடும்பியாவன்,

7. தந்தையி ஞர்ச்சிதத்தைத் தானவ னடையானுகும்
தந்தன மில்லானுகும் சாற்றுமிக் குணத்தானுக்கு
இந்தவன் உதிப்பானுகும் இவன் துணை பின் ஆண் ஒன்று
சந்ததம் விருத்திஎன்றேம் திருவோண மேடசென்மம்.

7. தந்தையின் சொத்துக்களைப் பிள்ளையடைவான். சுயார்ச்சிதம் இல்லாதவனுகும். இத்தகைய குணங்களையுடையவனுக்கு இப்பாலகன் பிள்ளையாய்ப் பிறப்பான். இவனுடன் பிறந்த சகோதரன் ஒருவன. அவனுக்குத் திருவோணம் நட்சத்திரமாகும். லக்கினம் மேஷம். இவன் தீர்க்கம்.

8. வருகுவான் அவன்குணத்தை வரைகிறேம் தாயேகேளும்
பெரும்புத்தி விசேஷகல்வி பூமிகள் அதிகம்சேர்ப்பன்
திருமகள் வாசமுள்ளான் தீரனும் ஈகையுள்ளான்
குறைவிலா குடும்பியாவன் குலத்துளோர் மதிக்கவாழ்வன்.

8. அவனுடைய குணங்களைக் கூறுவோம். தாயே! கேளும். பெரிதான புத்தியை யுடையவன். விசேஷமான கல்விகேள்விகளை யுடையவன். நிலபலங்களை அதிகமாகச் சேர்ப்பான். லட்சுமீகடாக்ஷமுள்ளவன். தைரிய மனத்தனுவன். தர்மிஷ்டன். குறைவற்ற குடும்பச்செல்வத்தை யுடையவன். தன் குலத்திலுள்ளோர் தன்னை மதிக்கும்படி வாழ்ந்து வருவான்.

9. அரசர்பூ சிதனுமாவன் ஆசாரன் இருநிறத்தான்
நரைமலர் கந்தம்இஷ்டன் நவிலுவான் தந்திரவார்த்தை
தரையினில் சல்லியம்கொள்ளான் தனமது கொடுக்கல்
[வாங்கல்
விரைவினில் நடக்கவல்லன் வெற்றியாம் தொடுவழக்கு.

9. அரசனுல் மதிக்கப்படுவான். ஆசாரமுள்ளவன். கரியநிறமுள்ளவன். வெண்மை நிறமுள்ள புஷ்பங்களையும் வாசனைகளையும் விரும்புவான். தந்திரமான வார்த்தைகள் கூறுவான். உலகினில் கடன் வாங்க மாட்டான். பணம் கொடுக்கல் வாங்கலுடையவன். சுறு சுறுப்பாக நடப்பவன். தொடுத்த வழக்கில் வெற்றி பெறுவான்.

10. பாரியும் ஒன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்ரெண்டு
நாரியும் அவ்வாருகும் நாயகன் ஒன்றுய்வாழ்வன்
கூறுவோம் பின்பாகத்தில் குமரன்தன் சேதியெல்லாம்
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

10. பெண்டாட்டியும் ஒருத்திதான். ஆண் குழந்தை இருவர். பெண் குழந்தைகளும் இருவர்வர். எல்லாரும் ஒத்தகுடித்தனமாய் வாழ்வதில் ஜாதகன் இஷ்டப்படுவான். பிள்ளைகளின் செய்தி விவரங்களை எல்லாம்

பின் பாகத்தில் கூறுவோம். அறுமுகக் கடவுளைப்பெற்ற அம்பிகையே! கேட்பாயாக.

11. உதித்தவன் குணத்தைச் சொல்வேன் உணைச்சலா
[மிருநிறத்தன்
சதியிலா மனத்தனுகும் சாந்தவான் அடக்கமுள்ளான்
பதியதை சித்திரம்செய்வன் பாருகள் சேர்ப்பானுகும்
நதிபல தீர்த்தம்தோய்வன் நாதனுர் பக்திகொள்வன்.

11. பிறந்தவன் குணத்தைச் சொல்லுவேன். மெல்லிய தேகமுடையவன். கரியநிறமுள்ளவன். வஞ்சனையில்லாத மனத்தையுடையவன். சாந்தகுணமுடையவன். அடக்கமுடையவன். வீட்டை அழகுபடக் கட்டுவான். பூமிகள் சேர்ப்பான். பல நதிகள் இன்னும் மற்ற தீர்த்தாடனங்கள் செய்வான். கடவுளிடத்தில் பக்தி பூண்டவன்.

12. கல்வியு மிரண்டுகற்பன் கரமதில் உத்திர[1]ரேகை
மல்லுக்குச் செல்லானுகும் மாடுகள் விருத்தியுள்ளான்
இல்லையென் றுரைக்கமாட்டான் எதிரியை நாசம்செய்வன்
அல்லல்என் ருேரைக்கார்ப்பன் அவன்யிள மனத்தனுமே.

12. இரண்டு விதமான துறைகளில் கல்வி கற்பான். கைதனில் விஷ்ணுவின் ரேகையுண்டு. சண்டைக்குப் போகமாட்டான். மாடுகள் அதிகமாக விருத்தியடையும். யாசகர்களுக்கு இல்லையென்று சொல்ல மாட்டான். எதிரிகளை ஒழித்துக் கட்டுவான். இடைஞ்சல் உள்ளவர்களை அதினின்றும் காப்பாற்றுவான். குழந்தை மனமுடையவன்.

13. நந்தியும் பனைசேர்இல்லம் பார்ப்பணி சேர்ப்பானுகும்
தந்தையால் பெருமைபூணுன் செயமுனி கேட்கலுற்ருர்
எந்தவர் தன்னுல்யோகம் இயம்புவீர் காரணம்சேர்ல்
தந்தையின் தந்தைபின்ஞேன் தானவன் பக்கல் சேர்ந்து.

13. எருதுகளும், பனைகளும், வீடுகளும் சேரும். கிருஷித்தொழில் விருத்திசெய்வான். தகப்பனுரால் மதிப்பு இல்லை. இதைக்கேட்ட ஜய முனிவர் வினவலானுர். யாரால் யோகம் எற்படும் என்று சொல்லுவீர். காரணமென்ன? பாட்டனுரின் தம்பியுடன் (சிறிய பாட்டனுடன்) ஜாதகன் போய்ச்சேர்ந்து.

14. சேவிப்பான் இந்தபாலன் செப்புவீர் அவன்குணத்தை
மேவியே வீணைசென்மம் வாதிரைநாளே தோன்றும்
நாவது சோரானுகும் நற்றந்தை ஆஸ்திகாணுன்
தாவிஞேர்க் குதவிசெய்வன் தரித்திரம் ஆறிலேதான்.

1. விஷ்ணு

14. ஜீவிப்பானுகும். அவன்குணத்தைச் சொல்லுங்கள் என்று வினவ, அவனே மிதுனலக்னத்தில் ஜனித்தவன். திருவாதிரை நட்சத்திரம் கொண்டநாளில் பிறந்தவன். வாக்கு விருத்தியுடையவன். நல்லதந்தையின் ஆஸ்தி (சொத்து) இவனைச்சேராது. அண்டினவரைக் காப்பாற்றுவான். ஆறுவது பிராயத்தில் தரித்திரம் ஏற்படும்.

15. இல்லத்தை எகுரவிட்டு ஏகுவன் குணக்கிலேதான்
வல்லியாம் பெருமைபூண்பன் மைந்தர்கள் காணுகும்
எல்லைகள் அதிகம்சேர்ப்பன் எதிரியை நாசம்கொள்வன்
அல்லலோர்க் குதவிசெய்வன் அகாத்தியம் பேசுவானும்.

15. வீட்டைவிட்டு வெளியேபோவான். கிழக்குத்திசையில் பிரயாணம் போவான். பெண்டாட்டியினுல் பெருமை பெறுவான். பிள்ளைகள் பிறவா. நிலங்களை அதிகம் சேர்ப்பான். எதிரிகளை நாசம் செய்வான். சிரமப் படுகிறவர்களுக்கு ஒத்தாசைசெய்வான். நிச்சயப்படுத்திப் பேசுவானுகும்.

16. தோத்திரப் பிரியனுகும் மதுஆசையும் கொஞ்சமுள்ளான்
பாத்திரம் அறிவானுகும் பகருவான் கட்டுவார்த்தை
சூத்திரம் சிலர்க்குசெய்வன் துருசான கோபியாவன்
சாத்திர முரைப்பானுகும் தானென்று கொள்வானுமே.

16. தோத்திரப் பிரியனுவன். மதுபானம் செய்வதில் ஆசை கொஞ்ச முள்ளவன். சத்பாத்திரமான மனிதர்களை நன்குஅறிவான். பேத்துமாத்த லான வார்த்தைகளைப் புனைந்துரைப்பான். சிலருக்குச் சிலசூட்சிகளைச் செய் வான். சீக்கிரம் கோபமடைவன். சாஸ்திர நீதிகளை எடுத்துரைப்பானுகும். தான் என்கிற அகம்பாவமுடையவனுகும்

17. துணைஆண்பால் காணுகும் சுந்தரி ஒருவள்தீர்க்கம்
கனமுள புதல்வர்காணுன் காதலன் மத்தியத்தில்
பிணையாகும் தன்பால்செல்வன் பராசரும் கேட்கலுற்றுர்
வினைபண்டு அதற்குபுத்திரர் வீறுத காரணம்சொல்.

17. சகோதரன் இல்லை. சகோதரி ஒருத்திஉண்டு. அவள் தீர்க்கம். கௌரவமான புதல்வரில்லை. இவனுடைய மத்தியகாலத்தில் இடைஞ் சலில் அகப்பட்டுக்கொள்ளுவான். இதைக்கேட்ட பராசரர் வினவலானுர். புத்திரதோஷம் ஏற்படக்காரணம் என்ன? இவன்செய்த பண்டைவினை யாது? என்று சொல்லுங்கள்.

18. முன்சென்ம வினையினுலே மேவிற்று அந்ததோஷம்
என்னஊழ் செய்தான்அத்தை இயம்புவீர் விபரமாக
அன்னவன் பூர்வம்சொல்வேன் அக்காஞ்சி வடபாலாக
தன்னிலே பேரூர்தன்னில் செனித்தனன் பிரும்மசேயாய்.

18. முன்ஜன்மத்தின் கருமவினையினால் அப்படிப்பட்ட தோஷம் ஏற்பட்டது. என்ன ஊழ்வினைசெய்தான்? அதன்விவரம் கூறுங்கள் என்று கேட்க, அவனுடைய பூர்வோத்திரத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள். காஞ்சீபுரத்தின் வடக்கே ஒரு பேரூரில் பிராமண வருக்கத்தில் பிறந்தான்.

19. அன்னிய பாஷைகற்று அதிகார மரசராலே
பொன்பதி யதிகமுண்டாய் புத்திரர் மனைவியாகி
இன்னவன் வாழும்நாளில் இயம்புவோம் ஊழிதானும்
தன்குல தமையன்தம்பி தானவர் விரோதமுற்று.

19. அன்னியபாஷையில் தேர்ச்சிபெற்று அரசாங்கத்தில் அதிகார முள்ள உத்தியோகம் பெற்றான். பொன் பூஷணங்கள் அதிகம் ஏற்பட்டு மனைவி புத்திரர்கள் ஏற்பட்டு இவன் வாழ்ந்துவரும் காலத்தில் ஒரு ஊழ்வினை ஏற்பட்டது. தன்குலத்திலுள்ள தமையன்தம்பி இவர்களுடைய விரோதம் ஏற்பட்டு.

20. ஏகினர் இருவரும்தான் இல்லமும் பாகம்வேண்டி
ஆகமன் அதையுணர்ந்து அவர்களில் இளையோன்பக்க
லேகமாய்ப் பொருளும்பெற்று விளம்பினான் பின்னோர்
[பக்கல்
நாகம்போல் வார்த்தைஒன்று நவிலுவான் இன்னோன்
[தானும்.

20. இருவரும் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி இவனிடம் கேட்டனர். சாஸ்திரமுணர்ந்த இவன், இவ்விருவரில், இளையவனிடம் மிகுந்த பொருளைப் பெற்றுக்கொண்டு, அவனுக்குச் சாதகமாகக் கூறினான். அதைக்கேட்டு, மூத்தவன் கோபமுற்று, நல்லபாம்பின் விஷம்போன்று கொடிய வார்த்தை ஒன்று சொன்னான்.

21. ஓரவஞ் சனையால்தீர்ப்பு உகந்திட்ட பாவிக்கேதான்
வேறொரு சென்மந்தன்னில் விளங்காது துணைவர்புத்திரர்
திரமாய் தந்தைஆஸ்தி சிதறிடும் வறுமையாகி
கூறியே தெருதூள்விட்டு குலத்துளோன் இல்லம்
[சென்றான்.

21. ஓரவஞ்சனையினால் தீர்ப்புச் சொன்னபாவிக்கு அடுத்த ஜன்மத்தில் சகோதரர், புத்திரர் ஏற்படமாட்டார்கள். நிச்சயமாகத் தகப்பனுடைய சொத்துக்கள் சின்னாபின்னமாகும். தரித்திரம் ஏற்படும் என்று சபித்துத் தெருவிலுள்ள மண்ணை வாரி இறைத்தான். பிறகுதன் வீடுசேர்ந்தான்.

22\. அதுஒரு தோஷமாச்சு அரவுமேயில் லம்வாழ்க
வதிபனும் கழியால்வாட்டி மறலியின் பதிக்குச்செல்ல
இதுஒரு தோஷமெய்தும் இதுவன்றி சிலர்கள்சாபம்
பொதுவாகச்-சேர்ந்ததென்றும் புண்ணியவதியே கேளாய்.

22\. அது ஒரு தோஷமாச்சு, வீட்டில் வாழும் ஒரு பாம்பு இருந்தது. அவன் அதைக் கம்பால் அடித்துக்கொன்றான். இது ஒரு தோஷமாச்சுது. இதுவுமல்லாமல் சிலருடையசாபம் பொதுவாக இவனைச்சேர்ந்தது. புண்ணியவதியே ! கேட்பாயாக.

23\. மைந்தனும் அந்தியத்தில் அரசனால் தொழிலும்நீங்கி
தென்திசை தலங்கள்சென்று சேதுவின் தீர்த்தம்தோய்ந்து
வந்தனன் உள்ளூர்தன்னில் வாய்வினால் மரணமெய்தி
விந்தையாய் பிரமன்லக்கம் மேதினில் வரியப்பட்டு.

23\. இவனும் கடைசிகாலத்தில் அரசன் அண்டையில் செய்த தொழிலும் நீங்கி, தெற்குத்திக்கிலுள்ள ஸ்தலங்கள்போய்த் தரிசித்து சேது ஸ்நானம்செய்து உள்ளூர்திரும்பி வாயு உபத்திரவத்தினால் மரண மடைந்து, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

24\. உதித்தனன் கங்கைசேயாய் உயர்குல மறையோன்சாபம்
பதிங்கிற்று இச்சென்மத்தில் பாலர்கள் துணைஆண்
[தோஷம்
சதியாகும் தந்தைஆஸ்தி தரணியில் நிந்தையேற்பன்
அதிதிகள் சொல்லும்போது அம்பிகை கேட்கலுற்றாள்.

24\. வேளாளர் குலத்தினில் உதித்தான். பிராம்மண சாபம் நெருங்கிற்று. இந்த ஜன்மத்தில் கூடப்பிறந்த சகோதரர்கள் சேதம். தந்தையின் ஆஸ்தி வஞ்சனையால் சிதறும், உலகினில் அவதூறான வார்த்தைகளைப்பெறுவான். சப்தரிஷிகள் சொல்லும்போது அம்பிகை கேட்கலானாள்.

25\. மறைகுலம் உதித்தோன்இப்பால் வரநதிகுல முதிக்கும்
முறைதனைச் சொல்லுமென்ன முன்சென்மம் மறை
[களின்றி
குறைமனம் சிலர்க்குசெய்த கோதையாள் குலம்தாழ்வாக
உரைந்தன னென்றுசொல்வோம் உரைக்குறோம் இவன்
[பின்சென்மம்.

25\. பிராமணகுலத்திலுதித்தவன் இச்சென்மத்தில் வேளாளர்குலத்தில் உதிக்கும் நெறிமுறையாதென்று சொல்லவேண்டும் என்றுவினவ, இவன் போன ஜன்மத்தில் வேதங்களை அனுஷ்டிக்காமல், சிலருக்கு மனக்குறைவு

ஏற்படும்படி செய்த இவன் பெண்டாட்டியின் தாழ்வான குலத்தினால் ஏற்பட்டதை இவனும் கூடஇருந்து செய்ததன் வினைவாக ஏற்பட்டது. இவன் பின்ஜன்மத்தைப் பற்றிக் கூறுகிறோம்.

26. பின்சென்மம் தில்லைதன்னில் பிறப்பனும் பிரும்மசேயாய்
கொன்றையே தரித்தோன் பூசைகொள்ளுவா னிவனே
[யென்றோம்
இன்னவார் வதிஷ்டர்சொல்லி ஈசுவரி கேட்கலுற்றார்
தன்மனம் கபடுகொஞ்சம் கனத்ததோர் மூர்க்கனுயும்.

26. பின்ஜன்மத்தில் சிதம்பரஸ்தலத்தில் பிறப்பனும். அப்போது பிராமணக்குழந்தையாய்ப் பிறந்து கொன்றைப்பூவைச் சூடிய பரமசிவனுக்குப் பூஜை செய்பவனுயினன். இவ்விதம் வசிஷ்டர்சொல்ல, ஈசுவரி கேட்கலானுள். மனதில் கொஞ்சம் கபடு உடையவன். பெரியமுரடன்.

27. சொல்லது தவறுதலாலும் தொல்புவி இச்சைவைத்து
வல்லவன் வாழ்வதாலே மறைகுலம் உதிக்கும்வண்ணம்
புகலுவீர் விபரமாகப் போற்றுவோம் கேளும்தாயே
அல்லல்கள் அதிகம்செய்தும் அறுமுகன் பத்திகொண்டும்.

27. சொன்னசொல் தவறுவான். பழையபூமியில் ஆசைவைத்து இவன் வாழ்ந்து வந்ததனுலே வேதியர் குலத்திலுதிக்கும் வண்ணம் புகல்வீர் விவரமாக என்றுகேட்க, தாயே! கேளும் சொல்லுகிறோம். ஹிம்சைகள் அதிகம்செய்தும் ஆறுமுகக்கடவுளிடம் பக்தி கொண்டும்,

28. அடைந்தோரை ஆதரித்தும் அரைமனம் கொண்டதாலும்
தடமதில் தீர்த்தம்தோய்ந்தும் சனஉபகாரி யாயும்
உடன்பழி கொள்ளாததாலும் உரையோர்மேல் பக்தி
[கொண்டும்
திடமுடன் வாழ்வதாலே செனிப்பனும் என்றுசொல்வோம்.

28. அண்டினவரைக் காப்பாற்றியும். மனதில் தருமசிந்தனை கொண்டதனுலும் உலகில் நல்ல தீர்த்தாடனங்கள் செய்தும், பொதுஜன உபகாரியாகியும், பிறர்பழிகளில் தலையிடாததனுலும், பெரியோர்கள் பேரில் பிரியம் கொண்டும் மனதிடத்துடன் வாழ்வதனுலே செனிப்பான் என்று சொல்லுவோம்.

29. மரணகாலங்கள் தன்னை வருணிப்பீர் முனியேநீதான்
பரிதியின் திசையிலேதான் பார்க்கவன்[1] பொசிக்குநாளில்
உரைகுறோம் வீணைசென்மம் உதித்தவன் ஏகுவானும்
பெறும்தந்தை நாலாம்ஆண்டில் மரதுளைதன்னில்
[கெண்டம்.

1. சுக்கிரன்

29. முனிவரே! நீர்தாம், மரணகாலங்களைப் பற்றி விவரமாய்க் கூறுங்கள். சூரிய மகாதசையில் சுக்கிரனுடைய புக்தியில் சொல்லுவோம். மிதுனலக்ன ஜாதகன் மரணமடைவான். பெற்றதந்தை நாலாவது வயதில் மகரமாசத்தில் கண்டம் அடைவான்.

30. சாதகன் மணத்தின்காலம் சாற்றுவோம் பதினேழாண்டில்
காதலிபெண் மேல்திக்கில் கலந்திடுமென்று சொல்வோம்
ஓதுவேன் அவள்குணத்தை உண்மையா மனத்தளாகும்
தீதான குணமிலாதாள் செனஉபகாரி யாகும்.

30. ஜாதகனுடைய கலியாணகாலத்தைச் சொல்லுவோம். பதினேழாவது வயதில் மேற்குத்திக்கிலிருந்து காதலி வருவாள். அவளுடைய குணங்களை எடுத்துக்கூறுவோம். நல்ல உண்மை பேசும் புத்தியுடையவள். கெட்ட சுபாவமில்லாதவள். பொதுஜன உபகாரியாவள்.

31. மாநிறம் சமதேகத்தாள் வருவோரை ஆதரிப்பள்
தேன்மொழி நற்குணத்தாள் செப்புவோம் புத்திரபாவம்
ஊனம் இல்லாம லேழுஉதித்திடும் ஆண்பால்ரெண்டு
மான்விழி பெண்பால்அவ்வார் மருவிடும் தீர்க்கமாக.

31. மாநிறமுள்ளவள். சமமான தேகத்தையுடையவள். வந்தவிருந்தினரை ஆதரிப்பாள். இனியமொழிகளைக் கூறுவாள். நல்லகுணமுடையவள், புத்திரபாவத்தைச் சொல்லுவோம். யாதொரு இடைஞ்சலும் இல்லாமல் ஏழுகுழந்தைகள் பிறக்கும். ஆண்குழந்தைகள் இரண்டு. மான்போன்ற மருளும் விழிகளுடைய பெண்கள் இருவர். இவர்கள் தீர்க்கம்.

32. அன்னையின் குணத்தைச்சொல்வேன் ஆளனுக்
[கினியளாகும்
பன்னியே பேசவல்லாள் பரஉபகாரி யாவள்
தன்தேகம் உணைச்சல்நீட்சி சத்தியும் நிந்தை...........
தன் துணை இருநான்காகும் சாற்றுவோம் ஆண்பால்ரெண்டு.

32 தாயாரின் குணங்களைச்சொல்லுவோம். புருஷனுக்கு இனியவளாகும். பிரியமாகப் பேசவல்லாள். பரோப்காரியாவள். மெலிந்ததேகத்தையுடையவள். சிலநிந்தைகளுக்கு உள்ளாவள். அவளுடன் கூடப்பிறந்தவர்கள் எட்டுப்பேர்கள். அவர்களில் சகோதரர் இருவர்.

33. இல்லமும் உள்ளூராகும் ஏழையாம் குடும்பமென்றேம்
அல்லல்கள் உடையோளாகும் அவர்பலன் இரண்டில்
[சொல்வேன்
வல்லியின் பூர்வம்கேளாய் மாபலி நகரிலேதான்
புல்கினள் வன்னியசேயாய் புத்திர ருள்ளாளாகி.

33. உள்ளூரிலேயே அவள்வீடு. குடும்பமோ ஏழைக்குடித்தனம். சிரமங்களையுடையவளாகும். இவர்களைப்பற்றிய பலாபலன்களை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். இவளுடைய பூர்வோத்திரங்களைக் கேட்பாயாக. மகாபலிபுரத்தில் வன்னியர்குலத்தில் பிறந்தாள். புத்திரர்கள் ஏற்பட்டு,

34. வரனுடன் பட்சிக்கேகி வள்ளலை அடிபணிந்து
பெருங்கடை வீதிசென்று பசப்புகுங்கு மங்கள்சீப்பு
விரவுடன் வாங்கிக்கொண்டு வினயங்கள் யீயாதாகி
உரைந்தனள் நகரந்தன்னில் உத்தமன் வைசியர்பார்த்து.

34. புருஷனுடன் திருக்கழுக்குன்றம் போய் பகவானைத்தரிசித்து பெரிய கடைவீதிக்குப்போய் மஞ்சள், குங்குமம் சீப்புகள் விரைவாக வாங்கிக்கொண்டு அதன்விலையைக் கொடுக்காமல் ஊருக்குள் போய்விட்டாள். மேன்மையுள்ள வியாபாரிபார்த்து,

35. பொருளீயா சென்றபாவி பசப்புகளழியா முன்னம்
திருமுத்திரை[1] விலகுமென்றும் திரும்பியும் மறுசென்மத்தில்
குறையான மனத்தளாகி கொழுநனும் மத்தியத்தில்
மறலியின் பதிக்குச்செல்வான் வைசியன் இவ்வார்சொல்லி.

35. பொருள் கொடாதுசென்றபாவி மஞ்சள் செலவழிவதற்குள் மாங்கலியம் இழப்பாள் என்றும், திரும்பியும் அடுத்தஜன்மத்தில் குறைவான மனத்தையுடையவளாகி புருஷனும் மத்தியகாலத்தில் எமலோகம் செல்வான் என்றும் வியாபாரி இவ்வார்த்தைகளைச் சொல்லிவிட்டு.

36. தீவித்து சென்றுனென்றேம் சேர்ந்தது அந்ததோஷம்
நேமியில் ஆண்டுக்குள்ளே நிருபனும் மரணமாகி
தீவினையாக வாழ்ந்து சென்றனள் காலன்பக்கல்
நாமகள் வரனுலக்கம் நல்கியே வந்தாளென்றேம்.

36. சபித்துச்சென்றான் என்றேம். ஜாதகனை அந்த தோஷம் சேர்ந்தது. உலகினில் அல்ப ஆயுசுக்குள் புருஷனும் மரணமானன். தீவினை இவளைச்சூழ்ந்தது. அவளும் கஷ்டப்பட்டு இறந்தாள். பிரம்மாவின் சிருஷ்டியின் காரணமாக இவள் வந்தாளென்றேம்.

37. வணிபன்தன் சாபம்போலே மருவிடுமிச் சென்மத்தில்
வினையுண்டு வரனும்தோஷம் மேவிடு மிவளுக்கேதான்
துணிவுடன் இவள்பின்சென்மம் சொல்லுவோம் அருணைதன்னில்
கனமுள கங்கைசேயாய் கலப்பளாம் இவளேயம்மா.

1. மாங்கலியம்

37. வியாபாரியின் சாபம்போல இச்சென்மத்தில் இவளை மருவிற்று. கர்மவினையினால் புருஷனுக்கு தோஷம் ஏற்பட்டு, இவளுக்கும் இடைஞ்சல் மேவிற்று. இவளுடைய பின்ஜன்மத்தைப் பற்றிப் பேசுவோம். திருவண்ணா மலையில் கௌரவமுள்ள வேளாளர்வமிசத்தில் இவளே வந்து பிறப்பாள் அம்மா!

38. சாதகன் பூர்வம்சொல்வேன் தோகையின் மலைக்குமேற்கில்
தீதில்லா ரெட்டிவமிசம் செனித்துமே கிருஷிசெய்து
போதனம் உடையனாகி புகழ்உண்டாய் முருகர்தொண்டு
மேதினில் அதிகம்செய்து மேவினன் காலன்பக்கல்.

38. ஜாதகனுடைய பூர்வோத்திரத்தைச் சொல்லுவேன். குமரன் மயில்வாகனத்திலிருக்கும் மலைக்கு (திருத்தணிகை) மேற்கில் குற்றமற்ற ரெட்டியார் வமிசத்தில் பிறந்து கிருஷித்தொழில் செய்து பெரிய தனப் பிராப்தி ஏற்பட்டுக் கீர்த்தியும்பெற்று முருகக்கடவுளுக்குத் தொண்டுசெய்து பூஸ்திதிகளை விருத்திசெய்து எமலோகம் சென்றான்.

39. பிரமனால் வரியப்பட்டு பிறந்தனன் இந்தபாலன்
மர்மமில் லாதகங்கை வமிசத்தில் உதித்தானென்றோம்
உரைகுறோம் இவனின்யோகம் உதித்தநாள் முதலாயாக
பிறையது போலேயோகம் பொருந்திடு பூமிசேர்ப்பன்.

39 பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவன் இரகசியமில்லாத வேளாளர்வமிசத்தில் உதித்தானென்றோம். இவனுடைய யோகங்களைச் சொல்லுவோம். பிறந்தநாள் முதலாகப் பிறைச்சந்திரன்போல் யோகம் பொருந்திடும் பூமிகளைச்சேர்ப்பான்.

40. குலத்துக்கு மேலாய்வாழ்வன் குவலயம் சல்லியம் [கொள்ளான்
தலமது தீர்த்தம்தோய்வன் சற்சனருறவு கொள்வன்
நிலமது கீர்த்திஏற்பன் நேமியோர்க் குதவிசெய்வன்
உலவுவான் துணைவனோடு உரைக்குமே ழாயிரம்பொன்.

40. குலத்துளோர்களுக்கு மேலாகவாழ்வான். உலகினில் கடன் படான். நல்லதலங்கள் சென்று தீர்த்தாடனங்கள் செய்வான், நல்லவர் களுடைய உறவுகொள்ளுவான். உலகினில் புகழ்பெறுவான். உலகத் தோருக்கு ஒத்தாசைசெய்வான். சகோதரருடன் கொஞ்சிக் குலாவுவான். சுமார் ஏழாயிரம்பொன் சம்பாதிப்பான்.

41. இருபத்தி ஏழாமாண்டில் ஏகுவான் மகரமாதம்
பெரியதோர் தந்தையென்றோம் பேசுவோம் அதின் [மேலாகும்
மருமமாய் பெரியதாயார் வாங்குவாள் யமலோகத்தை
திறமுடன் நாற்பதாண்டில் செல்லுவாள் அன்னைதானும்.

41. இவனுடைய இருபத்திஏழாம் ஆண்டில் தைமாசத்தில் பெரிய தந்தை மரணம் அடைவான். அதற்குமேல் இரகசியமாகப் பெரியதாயார் எமலோகம் சேருவாள். தாயாரும் இவனுடைய நாற்பதாவது பிராயத்தில் இறப்பாள்.

42. அன்பது யெட்டுஆண்டில் ஆடிமா தத்திலேதான்
துன்மையாய் காலன்பக்கல் சேருவான் இந்தபாலன்
பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனே வைசியசேயாய்
மேன்மையாய் செட்டுச்செய்வன் மேதினில் வறுமை [காணன்.

42. ஜாதகனும் அவனுடைய ஐம்பத்தெட்டாவது பிராயத்தில் ஆடி மாசத்திலே துன்மையான காலன்பக்கல் சேருவான். அடுத்த ஜன்மம் காஞ்சிபுரத்தில் வைசியகுலத்தில் பிறப்பான். மேன்மையுடன் வியாபாரம் இவன் செய்குவான். தரித்திரத்தைக் காணமாட்டான்.

43. மங்கலன் திசையிலேதான் வந்திடும் கெண்டம்ஒன்று
தங்கவேல் தரித்தோனாலே சாந்தமாம் வினையுமேதான்
தொங்கமாய் இவன்பின்வந்தோன் பிரபல கீர்த்தியாக
துங்கமா மனத்தனாகி துறவிகட் கன்னமீந்து.

43. செவ்வாய் தசையிலேதான் கெண்டம் ஒன்று ஏற்படும். தங்க வேல் தரித்தவனான முருகக்கடவுளின் கிருபையினால் வந்தவினைகள் சாந்த மாகும். இவனுக்கு அடுத்த தம்பி பிரபலமான கீர்த்தியுடனும் மேன்மை யான மனத்துடனும் சன்னியாசிகளுக்கு அன்னதானம் செய்து,

44. சாதகன் இன்னம்யேழு ஆண்டினில் மரணமாவான்
காதலி கேட்கலுற்றாள் கட்டுவான் இல்லம்என்றீர்
ஓதுவீர் அந்தச்சங்கை உதித்தவன் பதினைந்தாண்டில்
கோதில்லா இல்லம்செய்வன் கூறுவோம் இன்னம்ஒன்று,

44. ஜாதகன் இன்னும் ஏழுவருடங்களில் மரணமடைவான். காதலி கேட்கலுற்றாள். வீடுகட்டுவான் என்றீரே! அந்த சமுசயத்தைத் தீர்ப் பீராக. பிறந்தவன் பதினைந்து வருஷத்தில் குற்றமற்ற வீடுகட்டுவான். இன்னும் ஒன்று சொல்லுவோம்.

45. ஐயைந்து ஆண்டுதன்னில் அணுகிடும் வேறுஇல்லம்
மையவே மூன்றுஇல்லம் படைப்பனும் இவனேயம்மா
தையலும் இவன்பின்னாலே சாருவாள் யமபதிக்கு
துய்யமா மனத்தர்வார்த்தை சோராது தாயேகேளும்.

45. இருபத்தைந்து பிராயத்தில் வேறுவீடு வந்துசேரும். மெதுவாகவே மூன்றுவீடுகளைப் பெறுவான் இவனேயம்மா. இவன் பெண்டாட்டியும் இவனுக்குப்பின்னாலே இறப்பாள். துல்யமான மகரிஷிகளின் வாக்குத் தவறாது, தாயே! கேளும்.

46. செயமுனி இதனைக்கேட்டுத் திடுக்கென உரைக்கலுற்றார்
வியமாகு மிவன்முன் பாரிமேவும் காரணங்களெவ்வார்
நயமுடன் ஏழோன்சென்மம் நலமிலா புதனும்சேரில்
பயமுண்டு மனைவிக்கென்றோம் பராசரும் சொல்லுகின்றார்.

46. ஜயமுனிவர் இதனைக்கேட்டுத் திடுக்கிட்டுப் பின்வருமாறு உரைக்கலானார். இவனுக்குமுன் பார்யை இறப்பாள். அதற்குண்டான காரணங்களைச் சொல்லுங்கள். நயமாக ஏழுக்குடையோனான சுக்கிரன், லக்கின பலம்பெற்றிருப்பதனாலும் குற்றமுள்ள புதனும் சேர்ந்திருப்பதனாலும் மனைவிக்குப் பயமுண்டு என்றோம். இதைக்கேட்ட பராசரரும் சொல்லலுற்றார்.

47. குடும்பத்தை குருவும்காரி குலவியே பார்த்ததாலே
அடவுடன் மனைவியொன்று அவளும்முன் மரணம்காணாள்
திடமுடன் வயதும்தீர்க்கம் சேயிழை யோகசாலி
தடவரைமகளே பின்பால் சாற்றுவோம் விபரமாக.

47. குடும்பஸ்தானத்தை குரு பஞ்சமபார்வையினாலும், சனி பத்தாம் பார்வையினாலும் பார்ப்பதனாலே அடைவாக புருஷனும் பெண்டாட்டியும் முன்னால் மரணம் காணார்கள். திடமான வயதுள்ளவர்கள். பெண்டாட்டி நல்ல யோகசாலி. மலையவான் புத்திரியே. மற்றையபலன்களைப் பிற்பகுதியில் விவரமாகச் சொல்லுவோம்,

48. செனித்திடு காலம்தன்னில் செம்பாம்பு[1] திசையிருப்பு
குனித்திடு ஆண்டுஒன்று கூறுவோம் திங்கள்ஒன்றும்
வினையுண்டு சாதகர்க்கு விளங்காது காலிசேதம்
தனமது விரயம்ஆகும் சஞ்சலம் கலகமுண்டாம்.

48. ஜாதகனுடைய ஜனனகாலத்தில் கேது மகாதசையில் இருப்பு வருஷம் ஒன்றும் உண்டு. ஜாதகனுக்கு கர்மபந்தங்கள் உண்டு. பசுக்கூட்டங்கள் விருத்தியாகாமல் சேதமாம். பணம் விரயமாகும். பலவிதமான சஞ்சலமும் கலகமும் உண்டாகும்.

---

1. கேது

ஜாதகம் 69

1. சந்திரன் மானதாக சனிவீணை புகரும்வண்டி
புந்திபான் ராகுகன்னி பொன்சியம் குசனும்கோலில்
பிந்தியகேது மீனம்பேசுவோம் சென்மம் மேடம்
இந்தவார் கோள்கள்நின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரன் மகரத்திலும், சனி மிதுனத்திலும், சுக்கிரன் கடகத்திலும், புதன், சூரியன், இராகு இவர்கள் சேர்ந்து கன்னியில் தங்கவும், குரு சிம்மத்திலும், செவ்வாய் துலாத்திலும் கேது மீனத்திலும் தங்கும்படியான கிரகநிலைகளைக் கொண்ட இந்த மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள்

கேது	லக்கினம்		சனி
	இராசி சக்கரம்		சுக்கிரன்
சந்திரன்			குரு
		செவ்வாய்	புதன் சூரியன் ராகு

2. கோமளி கேட்கும்போது குறுமுனி புகலுகின்றார்
நேமியில் ஆண்பால்சென்மம் நிகழ்த்துவோம் இல்லம் [தானும்
சேமமாம் வடதென்வீதி தெருவாசல் குடகுபார்வை
காமனை எரித்தோன்மாயோன் கனமிலா கோஷ்டம்வாயு.

2. இவ்விதம் பார்வதிதேவி கேட்கும்போது அகஸ்தியர் சொல்லலுற்றார். உலகினில் இது ஆண்மகனின் ஜாதகம், இவனுடைய வீட்டின் விவரம் கூறுவோம். வடக்குத் தெற்கு வீதியில் மேற்குப்பார்த்த வாசலுடையது. மன்மதனை எரித்த பரமசிவனுடைய கோவிலும், விஷ்ணுவின் கோவிலும் வாயுதிக்கிலும்

3. தந்தி பாஞ்சாலி மாரிதென்திசை தங்குமென்றோம்
இந்திரன் திசையில் புத்தர்இலகிடும் கோஷ்டமென்றோம்
சந்தி மாகாளிமினம் சாற்றுமிவ் வடையாளத்துள்
வந்தனம் மாதுர்இல்லம் வளமிலாக் கூரையென்றோம்.

3. பிள்ளையார், திரௌபதியம்மன்கோவில் எல்லாம் தெற்குத்திக்கிலும் தங்கும் என்றோம். கிழக்கே புத்தர்கோவில் விளங்கிடும். சந்திமகாகாளி கோவில் மீனதிக்கிலும் உள்ளது. சொன்ன இந்த அடையாளத்துள் மாதாவின் வீடு உள்ளது. அதுவும் சாதாரண கூரைவீடு என்றோம்.

4. தந்தையி னில்லம்அவ்வூர் சாற்றுவோம் தென்கீழ்தன்னில்
அந்தயில் குடகுபார்வை அதுவுமே கூரையாகும்
இந்தவா ரடையாளத்துள் இலகிய சமவூர்தன்னில்
முந்திய சென்மம்புத்தனு யுதிப்பனும் இந்தபாலன்.

4. தகப்பனாரின் வீட்டைப்பற்றிக் கூறுவோம். தென்கிழக்கே யுள்ளது. மேற்குப்பார்த்த வாசலுடையது. அதுவுமே கூரைமேய்ந்தவீடு. இப்படிப்பட்ட அடையாளங்கொண்ட சமவூரில் முந்தியஜன்மத்தில் பௌத்தனுயிருந்தான் இந்த பாலன்.

5. பாலகன் செனனயோகம் பருகிய அன்னையோகம்
சாலவே தந்தையோகம் சகோதரக் குடும்பசெய்கை
ஏலவே களத்திரபுத்திரர் இயம்புவோம் முன்பின்சென்மம்
ஆலத்தை யுண்டோன்தேவி அறைகுறோம் இந்நூல்
[தன்னில்.

5. ஜாதகனுடைய ஜனனகால யோகமும், தாய்தந்தையர் யோகங்களும், சகோதரர், குடும்பச்செய்தி, களத்திரபுத்திரயோகம், இவனுடைய முன்பின்ஜன்மம் இவைகளும் விவரமாக இந்தப்புஸ்தகத்தில் கூறுகிறோம். ஆலகால விஷத்தையுண்ட பார்வதியே! கேட்பாயாக.

6. தந்தையின் துணைவர்ஏழு ஆண்துணை தங்காதென்றோம்
வந்திடும் கன்னிமூன்று வளமுறும் தீர்க்கமாக
எந்தையே பிதாநாள்கன்னி ஏழிலுள்.........தனுளாம்
சந்ததம் அவன்குணத்தைச் சாற்றுவோம் கேளும்தாயே.

6. தந்தையின் சகோதரர்கள் ஏழுபேர்கள். ஆண்துணைவர் தங்கமாட்டார் என்றோம். தங்கைகள் மூன்றுபேர்கள். தீர்க்காயுசுடன் வாழ்வார்கள். பிதாவின் இராசி கன்னியாராசி..........அவனுடைய குணங்களைக் கூறுவோம். தாயே! கேளும்.

7. கல்விமான் உயரமில்லான் கனமுள குடும்பியாவன்
சொல்லதைக் காப்பானும் தேவதாப் பணிகள்செய்வன்
புல்லிய புத்தியில்லான் பூமியை விருத்திசெய்வன்
நல்லவனுகி வாழ்வன் நாட்டினில் வறுமைகாணுன்.

7. கல்வியுடையவன், உயரமில்லாதவன், பெரிய குடும்பியாவன், சொன்னசொல் தவறமாட்டான், கடவுளுக்கு வேண்டிய வழிபாடுகளைச் செய்வான். இளப்பமான புத்தியில்லாதவன். பூமியை விருத்திசெய்வான். நல்லவனாக வாழ்ந்துவருவான். உலகவாழ்வில் தரித்திரமேயில்லை.

8. இருணிற முடையனுவன் இன்பமாய் வார்த்தைசொல்வன்
திருமகள் வாசமுள்ளான் சல்லியம் கொள்ளானென்றேும்
மருமனையாள்கள் மோகன் மருமத்தை வெளிக்காட்டா [தான்
திருகுடை பகவான்பக்தி செய்குவன் ஈனமில்லான்.

8. கரிய நிறமுள்ளவன். இன்பமான வார்த்தைகளைப் பேசுவான். லட்சுமி கடாக்ஷமுள்ளவன். கடன் வாங்கவேமாட்டான். பிறர்மனைவி மார்களிடம் மோகம்கொள்ளுவான். மனதில் இருக்கும் இரகசியத்தை வெளிக்காட்டமாட்டான். பாக்கியத்தையளிக்கும் பகவானிடம் பக்திபூண்டவன். இளப்பமான புத்திக்குறையில்லாதவன்.

9. முகமது வசியமுள்ளான் விதவையர் போகம்செய்வன்
பகைவரை உறவுகொள்ளான் பலசகாயங்கள் செய்வன்
அகமது புதிதாய்ச்செய்வன் ஆவுகள் விருத்தியுள்ளான்
உகமைகள் சொல்வானும் ஒண்டொடி இஷ்டமாவன்.

9. முகத்தினில் வசீகரமுள்ளவன். விதவைகளை போகம்துய்ப்பன். பகைவரை உறவுகொள்ளான். பலவிதமான சகாயங்கள் செய்வான். புதிய வீடுகட்டுவான். பசுக்கள் விருத்தியாம். திருஷ்டாந்தங்களுடன் பேசுவான். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான்.

10. வல்லியும் கேட்கலுற்றாள் மாரனு மெந்தகால்ம்
இல்லறம் செய்வான் சொல்வோம்ஈரெட்டு ஆண்டுதன்னில்
நல்லதோர் கிரகம்செய்வான் அதற்குமேல் இரண்டு [ஆண்டில்
வல்லியின் ஞாதியோரால் வருகர்தன் கோஷ்டம்செய்வன்.

10. பார்வதியும் பின்வருமாறு கேட்கலுற்றாள். ஜாதகன் எந்தக் காலம் இல்லறம் செய்வான் என்றுகேட்க, அதனைச்சொல்லுவோம்: பதினாறு வயதினில் நல்லதோர் கிரகம்கட்டுவான். அதற்குமேல் இரண்டுவருஷங்களுக்கெல்லாம் பெண்டாட்டியின் சொந்தக்காரர்கள் மூலமாய் அருகக் கடவுளின் கோவிலைக்கட்டுவான்.

11. செய்குவான் எந்தவிடத்தில் செப்புவீர் விபரமாக
மையவே பழையகோயில் பாலிப்பான் புதிதாய்என்றேம்
கைதனில் விஷ்ணுரேகை கண்டிடும் பொறுமைசாலி
உய்வகை கிருஷிஎன்றேம் ஓங்கிடும் பணிஏர்விருத்தி.

11. எந்த இடத்தில் செய்குவான். அதன்விவரம் சொல்லுங்கள். மெதுவாகவே பழையகோவிலைப் புதியதாய்ப் புதுப்பிப்பான். கைதனில் விஷ்ணுரேகை உண்டு. பொறுமையுள்ளவன். கிருஷித்தொழிலைச் செய்து ஜீவிப்பான். பணிகளும் ஏர்களும் விருத்தியாம்

12. சொன்னவிக் குணத்தானுக்கு சுந்திரன் உதிப்பானும்
அன்னவன் துணைமுன்காணேன் அடுத்தவாண் ஒன்று [தோன்றும்
தையலும் அதின்பின்தோன்றும் தங்காது அதின்பின்னுக
பின்வரும் துணைவன்கன்னி பூரநாள் தோன்றுவானும்.

12. இக்குணங்களையுடையவனுக்கு இச்சாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுக்கு அண்ணன் இல்லை. தம்பி ஒருவன் உண்டு. சகோதரியும் அதற்குப்பின்னால் ஏற்படுவாள். அதற்கப்புறம் பிறப்பதெல்லாம் இருக்காது. தம்பியின் நட்சத்திரம் பூரம். இராசி கன்னியாகும்.

13. யானைபோல் ஒத்ததேகன் அகசியம்[1] சொல்வானும்
தேன்மொழி தந்திரவாதி தீரமா நெஞ்சுமுள்ளான்
மானனையார்க்கு நேயன் மனவரிம்மி கல்விமானும்
ஊனமில் லாததேகன் உரைந்திடும் பித்ததேகி.

13. யானையைப்போன்ற ஒத்ததேகன். ஹாஸ்யமாகப்பேசும் இயல்பினன். இனியமொழிகளைக் கூறுவான். தந்திரமாகப் பேசுவான். தைரியமுள்ள நெஞ்சம் உடையவன். ஸ்திரீலோலனுவன். சிறிது கல்விகேள்விகளையுடையவன். பின்னமில்லாத சரீரத்தையுடையவன். பித்தத்தொந்தரவையுடைய தேகத்தையுடையவன்.

14. பயிர்த்தொழில் உடையனுகும் பால்தயிர் பிரியனுவன்
நயமாகப் பேசவல்லன் நற்றந்தை தனக்குத்தாழான்
பயமிலா மனத்தனுகும் பாருகள் விருத்திசெய்வன்
தவசிபோல் வார்த்தைசொல்வன் தனமது கொடுக்கல் [வாங்கல்.

14. பயிர்த்தொழில் உடையவனுகும். பால்தயிர் இவைகளில் பிரியமுள்ளவன். இன்பமாய் பேசவல்லான். நல்லதந்தைக்குத் தாழ்வாயிருக்க

1. வேடிக்கை

மாட்டான். மனதில் பயமில்லாதவன். பூஸ்திதிகளை விருத்திசெய்வான். தபசிகளைப்போல் வார்த்தை பேசுவான். பணம் கொடுக்கல் வாங்க லுடையவன்.

15. பெரிதான குடும்பியாவன் பிசகிலான் வறுமைகாணுன்
வருவோரை ஆதரிப்பன் மாற்றுனை லகுவில்வெல்வன்
அரசர்கள் மெச்சவாழ்வன் அதிகபூ டணமும்சேர்ப்பன்
இருவிதக் கல்வியுள்ளான் இடுக்கமாம் குணத்தனுமே.

15. பெரிய குடும்பியாவன். பிசகில்லாதவன். வறுமைப் பிணியில்லாதவன். வந்தவிருந்தினரை ஆதரிப்பான். எதிரிகளை எளிதில் வெல்லுவான். அரசர்கள் மெச்சும்படி வாழ்வான். அதிகமாகப் பூஷணங்களைச் சேர்ப்பான். இரண்டுவிதமான கல்விகேள்விகளை யுடையவன். இடைஞ்சலான குணத்தனுவன்.

16. வடதிசை உள்ளூர்மாமன் மகள்தனை மணங்கள்கொள்வன்
அடவுடன் தாரம்ஒன்று ஆண்சுத ரிரண்டேயாகும்
மடமையில் கன்னிஅவ்வார் வழுத்துவோம் தீர்க்கமாக
உடன்கூடி வாழ்வானென்றேும் உத்தமி மேலும்கேளே.

16. உள்ளூரில் வடக்கிலுள்ள மாமன்மகளை மணம்புரிந்து கொள்ளுவான். அடைவான பெண்டாட்டி ஒருத்தி. ஆண்குழந்தைகள் இரண்டு பேர்கள் உண்டு. மயில்போன்ற சாயலையுடைய பெண்குழந்தைகள் இருவராவர் என்று கூறுவோம். இவர்கள் தீர்க்கம். எல்லாரும் கூடிவாழ்வார்கள். உத்தமி! இன்னும் கேட்பாயாக.

17. பாலகனிறம் குணத்தை பகருவோம் தாயேகேளும்
சீலவான் இருசிகப்பன் சிற்றுண்டி யூகைவானும்
பால்தயிர் பிரியனுவன் பந்துவும் புகழவாழ்வன்
வேல்விழி மாதர்மோகன் வீண்வம்பில் செல்லானென்றேும்.

17. பாலகனுடைய நிறத்தையும் குணத்தையும் கூறுவோம் தாயே! கேளும். சீலமுள்ளவன், பொதுநிறமானவன், சிற்றுண்டிபுசிப்பான், புத்திகூர்மையுள்ளவன். பால், தயிர் இவைகளில் பிரியமுள்ளவன், சொந்தக்காரர்கள் மெச்சவாழ்வான், ஸ்திரீகளிடத்தில் மோகம்கொள்ளுவான். வீண்வம்புகளில் தலையிடமாட்டான்.

18. நித்திரை விருப்பம்கொள்வன் நீர்தனில் தோயவல்லன்
புத்திர வசனம்கூறுன் குணமுளான் மிருதுவார்த்தை
வெற்றிசேர் மனத்தனுகும் வித்தையு மிரண்டுகற்பன்
சுத்தவான் பெரியோர்நேயன் துராசைகளில்லா
[னென்போன்.

18. தூங்குவதில் இஷ்டமானவன். தீர்த்தாடனங்கள் செய்வன். சின்னக்குழந்தைகளைப்போல் பேசமாட்டான். குணவான். மிருதுவான வார்த்தை பேசுவான். வெற்றிபெறும் மனத்தையுடையவன். இரண்டுவித மான கல்வித்துறைகளில் பயிலுவான். சுத்தமனமுடையவன். பெரியாரைத் துணைக்கொள்ளுவான். துராசைகள் இல்லாதவன் என்பார்கள்.

19. அன்னிய பிரபுநேயன் அவன்தந்தை ஆஸ்திவிருத்தி
தன்னிய முடையனாகும் கடும்பல வார்த்தைகூறான்
பின்னையும் விவேகனவன் பிரிவிலா ஞானநூலை
தன்மன தறிவானாகும் தாய்குணம் கூறக்கேளாய்.

19. அன்னிய பிரபுக்களை சிநேகம்செய்வான். அவனுடைய தந்தையின் ஆஸ்தியை விருத்திசெய்வான். கண்ணிய முடையவனாகும். கடுமையான வார்த்தைகளைக் கூறமாட்டான். மேலும், விவேகமுள்ளவன். மனதைவிட்டு நீங்காத ஞானநூல்களை மனப்பாடம் பண்ணுவான். தாயாருடைய குணங்களைக்கூறுவோம்.

20. மாநிறம் சமதேகத்தாள் மருவிடும் பித்தசூடு
ஈனமாம் குணங்களில்லாள் இடரான புத்தியில்லாள்
வானவர் பத்தியுண்டு வறுமைகள் காணளாகும்
ஊனமில் லாததேகி உள்மனம் கபடுகொஞ்சம்.

20. மாநிறமுள்ளவள், சமமானதேகத்தையுடையவள். பித்த சூட்டின் உபத்திரமுடையவள். இளப்பமான குணங்களையுடையவள். இடைஞ்சலான புத்தியில்லாதவள். தேவர்களுடைய பக்தியுண்டு. வறுமையே கிடையாது. பின்னமில்லாத தேகத்தையுடையவள். மனதில்கொஞ்சம் கபடமுண்டு.

21. அன்னியர் குற்றம்தன்னை அவள்வெளி விடாதாளாகும்
தன்னினத் தவரைக்காப்பள் சுதர்கள்மேல் ஆசையுள்ளாள்
இன்னவர் துணைவர்நான்கில் இரண்டுஆண் பெண்ணோ [தீர்க்கம்
அன்னவன் மூத்தோன்சேதி அறைகுவோம் தாயேகேளும்.

21. பிறருடைய குற்றத்தை எடுத்து அவள் வெளிக்காட்டமாட்டாள். சொந்தக்காரர்களுக்கு ஒத்தாசை செய்வாள். குழந்தைகளிடத்தில் பிரியமுள்ளவள். இவளுடைய உடன்பிறந்தவர்கள் நால்வரில் இரண்டு ஆண். இரண்டு பெண்கள். இவர்கள் தீர்க்கம். அவர்களில் மூத்தவனின் செய்தியைக் கூறுவோம் தாயே! கேளும்.

22. சொல்லது மிருதுவாகும் தேகமும் மால்நிறத்தான்
புல்லிய புத்தியில்லான் பொருந்திய சொல்பரோகி
மல்லுக்குப் போகானுகும் மானிலம் கிருஷிசெய்வன்
நல்லவனுகி வாழ்வன் நங்கைமார் மோகம்கொள்ளான்.

22. மிருதுவாகப் பேசுவான். மாநிறமுள்ளதேகத்தையுடையவன். கீழ்நோக்கான புத்தியில்லாதவன். கொஞ்சம் வியாதியுள்ளவன். சண்டை சச்சரவு செய்யமாட்டான். பரந்தபூமியைப் பண்படுத்துவான். நல்லவனுக வாழ்வான். ஸ்திரீகளிடத்தில் மோகம்கொள்ளான்.

23. மணமிலான் மதலையில்லான் மரித்துமே பேசானுகும்
அனையவே பின்பாகத்தில் அறிவிப்போம் விபரமாக
துணைபின்னேன் சேதிசொல்வேன் சொல்பமாங் [கல்வியுள்ளான்
வினையதை ஒருவர்க்கெண்ணுன் மால்நிறம் சமதேகத்தன்.

23. கலியாண மில்லாதவன், பிள்ளையில்லாதவன், எதிர்த்துப்பேச மாட்டான், இவற்றையெல்லாம் பொருத்தமாகவும் விவரமாகவும் தெரிவிப்போம். அடுத்த சகோதரனின்செய்தி சொல்லுவோம். சொற்பப்படிப்புடையவன். பிறருக்குத் தீங்குநினைக்கமாட்டான். மாநிறமுள்ளவன். சமமான தேகத்தையுடையவன்.

24. வறுமைகள் மத்தியத்தில் வந்திடும் கிருஷிசெய்வன்
திருமகன்தன் பாலும்தான் சிலதுநாள் வாசமாகும்
வரும்கன்னி ஒன்றேயாகும் மைந்தர்கள் முதலில்பீடை
மருசுதர் பெண்பாலாகும் மைந்தராண் இரண்டுதீர்க்கம்.

24. மத்தியகாலத்தில் வறுமைகள் வந்திடும். கிருஷிசெய்வான், தன்னுடைய பிள்ளையினிடத்தில் சிலகாலம் வசிப்பான். பெண்டாட்டி ஒருத்திதான். முதலில்பிறக்கும் குழந்தைகள் பீடையுறும். அடுத்தது பெண்குழந்தையாகும் ஆண்குழந்தைகள் இரண்டுதீர்க்கம்.

25. கன்னிகை அவ்வாருகும் கழறின நான்கும்தீர்க்கம்
அன்னவன் பூமிகொஞ்சம் அவன்சம யோகவானும்
பின்துணை பெண்பால்சேதி புத்திரர் இல்லாள்என்றேம்
தன்வரன் சுகம்குறைச்சல் தவசியே வாழ்வாளாகும்.

25. கன்னிகையும் அவ்வாருகும். சொன்னநான்கு குழந்தைகளும் தீர்க்கம். அவனுக்கு பூஸ்திதிகொஞ்சமுண்டு. சமமான யோகத்தையுடையவன். தங்கைக்குக் குழந்தைகள் இல்லை என்று சொன்னேம். அவள் புருஷனுக்கு சுகக்கேடுண்டு. தவசியைப்போல வாழ்ந்து வருவாள்.

26. நிந்தையும் கொஞ்சமேற்பள் நல்லோர்க்கு நல்லளாவள்
விந்தையாய்ப் பேசவல்லள் விகடவார்த்தைகள் சொல்வள்
தன்தன மில்லாளாகும் சத்தானவஸ்து இஷ்டம்
அந்தவள் பூமியாகும் அவள்துணை பக்கல்நேரும்.

26. பிறருடைய நிந்தைகளைக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ளுவாள். நல்லவர்களுக்கு நல்லவளாவள். வேடிக்கையாகப் பேசும் சாமர்த்தியமுண்டு. விகடமான வார்த்தைகளைப் பேசுவாள். சொந்தப்பண மில்லாதவளாகும். உயர்வான (லோகோத்தரமான) விஷயங்களில் ஆசையுண்டு அவளுடைய பூஸ்திதிகள் அவளுடைய சகோதரன்பக்கம் நேரிடும்.

27. இன்னமும் விபரமாக இயம்புவோம் இரண்டிலேதான்
முன்னவன் மணத்தின்காலம் வரைகுறேம் ஈரொன்பானில்
கன்னிகை உத்திரத்தில் கலந்திடும் அன்னைவர்க்கம்
இன்னவாறு முனிவர்கூற இயம்புவார் வசிஷ்டர்தானும்.

27. இன்னமும் மற்றச்சங்கதிகளை விவரமாக இரண்டாம் பாகத்தில் கூறுவோம். மூத்தவனுடைய கலியாணகாலம் பதினெட்டாம் பிராயத்தில் நடக்கும் என்று கூறுவோம். வடக்குத்திக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள். தாயார் வருக்கத்திலிருந்து ஏற்படும். இவ்விதம் முனிவர் சொன்னதும் வசிஷ்டர் வினவலானார்.

28. உத்திரம் திக்கில்எவ்வாறு உரைந்திடும் பாரிதானும்
சித்தமாய் தெற்கில்தோன்றும் சேயேழில் ஏழோன்வெள்ளி
சுத்தமாய் இருப்பதாலே செப்பினேம் மந்தசங்கை
இத்தகை வசிஷ்டர்சொல்ல இயம்புவார் முனிவர்தானே.

28. வடக்குத்திக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள் என்று எப்படிச் சொன்னீர்கள்? நிச்சயமாய்த் தெற்கிலிருந்து தோன்றுவாள். காரணம் என்னவெனில் லக்கினதிபதியாகிய செவ்வாய் ஏழாமிடத்திலும், ஏழுக்குடைய சுக்கிரன் சுத்தமாய்த்தனியே சுகஸ்தானத்திலிருப்பதனாலே அந்த சந்தேகத்தைக் கூறினேம். இவ்விதம் வசிஷ்டர்கூற, முனிவர் மேலும் கூறலுற்றார்.

29. மதியுமே யேழோன்தன்னை மகிழ்வுடன் பார்த்ததாலே
விதியினால் வடபால்ஆகும் மெல்லியின் குணத்தைக்கேளாய்
சதியிலா மனத்தளாகும் தானவள் யோகசாலி
நிதிமிக உடையளாகும் நேமியில் நல்லோளாவள்.

29. சந்திரன் மகரத்திலிருந்து ஏழுக்குடைய சுக்கிரனை மகிழ்வுடன் பார்ப்பதனாலே, வடக்கேயிருந்துதான் வருவாள் என்று விதித்திருக்கிறது. அவளுடைய குணங்களை எடுத்துரைப்போம், கேட்பாயாக. வஞ்சகமில்லாத

மனத்தையுடையவள், நல்லயோகசாலி, சொத்துக்கள் அதிகமாகவுடையவள். உலகினில் நல்லவளாவள்.

30. வரன்மனம் போலேவாழ்வள் மங்கையும் ஒன்றேயாகும்
பராசரும் சொல்லுகின்றார் பாவையும் இரண்டேயாகும்
குறிதியும்[1] ஏழாய்நிற்க குலவேழோன் சரத்தில்நிற்க
இருமனை அணுகுமென்றோம் மறுத்துமே ஓதுகின்றார்.

30. புருஷனுடைய இஷ்டம்போல் வாழ்வாள். பெண்டாட்டியும் ஒருத்திதான். இதைக்கேட்டுப் பராசரரும் சொல்லலுற்றார். பெண்டாட்டி இருவரேயாம். செவ்வாய் ஏழில் நிற்க, ஏழுக்குடையோனான சுக்கிரன் சராராசியிலிருக்க இரண்டு பெண்டாட்டிகள் நேருவர் என்றார். இதனை மறுத்துச் சொல்லலானார்.

31. புகர்குசன் மதியுமூவர் பொருந்திடம் சதமேயாகும்
தகமையாய்த் தாரம்ஒன்று செப்பினோம் தீர்க்கமாக
அதிபதி இவளின்முன்னே மரணமாம் அன்பானுலில்
பொதுவாக முன்பால்சொன்னேன் புகலுவோம் விபரம்
[ரெண்டில்.

31. சுக்கிரன், செவ்வாய், சந்திரன், லக்கினம் ஆகிய நான்கும் கேந்திரஸ்தானத்திலிருப்பதனாலும், சுக்கிரனும், செவ்வாயும் தசமஸ்தானமாகிய மகரத்தைப் பார்ப்பதனாலும் தகைமையான தாரம் ஒன்றென்றே தீர்க்கமாய்ச் சொல்லுவோம். புருஷன் அவளுக்குமுன்பே மரணமாவன். அதுவும் அவனுடைய ஐம்பத்திரான்காம் பிராயத்தில் ஏற்படும். பொதுப்படையாக இவ்விஷயத்தை முன்பாகத்தில் கூறினோம். மற்ற விவரங்கள் இரண்டாம் பாகத்தில் விரிவாய்க்கூறுவோம்.

32. புத்திரர் எழுவர்தோன்றும் பெண்மூன்று ஆண்பால்
[ரெண்டு
சுத்தமாய்த் தீர்க்கமெய்தும் சோர்ந்திடும் இரண்டுஎன்றோம்
வித்தகன் பூர்வம்சொல்வேன் மேற்றிசை யருணைகீழ்பால்
பத்திய வைசியசேயாய் பாலகன் உதித்தானென்றோம்.

32. பிள்ளைகள் எழுபேர்கள் பிறப்பார்கள். பெண்குழந்தைகள் மூன்றும், ஆண்குழந்தைகள் இரண்டும் சுத்தமாய்த் தீர்க்கமெய்தும். இரண்டு வியோகமடையும் என்றோம். ஜாதகனுடைய பூர்வோத்திரங்களைக் கூறுவோம். மேற்குத்திக்கில் திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்குக் கிழக்கே வைசியர்குலத்தில் இவன் பிறப்பான் என்றோம்.

---

1. செவ்வாய்

33. மரமாட்டும் தொழில்சிறந்து மனைவிமைந்தரும் உண்டாகி
திருமகள் விலாசம்பெற்று சிறப்பான குடும்பியாவன்
பெருநதி தலங்கள்சென்று புண்ணிய மனத்தனாகி
வருமார்க்கம் தாகப்பந்தல் வைத்துமே சுகமாய்வாழ்ந்து.

33. மரங்களை மாட்டும்தொழில் (தச்சன்) செய்து மனைவி, மைந்தர் உண்டாகி, லட்சுமிகடாக்ஷம் பெற்றுச் சிறப்புப்பொருந்திய குடும்பத்தை வகித்து பெரியநதி தீரங்கள் சென்று மற்ற திவ்யக்ஷேத்திரங்கள் போய்க் கடவுளைத் தரிசித்து, தர்மசிந்தனையுடையனாகி சாலையோரங்களில் தண்ணீர்ப்பந்தல்கள் வைத்து சுகப்பட்டு வாழ்ந்து,

34. சண்டன்தன் பதிக்குச்சென்று தலைநான்கோன் வரியப்பட்டு
அன்னவர்(கள்) பதிக்குத்தெற்கில் அருகர்தன் குலமுதித்து
கொண்டனன் இந்தபாலன் கூறுவோம் தந்தைபூர்வம்
வண்டணிக் குழலாள்பூசை வளத்திவாழ் பந்தல்தன்னில்.

34. எமலோகம் சென்று, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு அவர்களுடைய ஊருக்குத் தெற்கே ஜைனர்கள் குலத்திலுதித்து வந்தவன் இந்தபாலகன். இவனுடைய தந்தையின் பூர்வோத்திரங்களைக் கூறுவோம். வண்டுகள் மொய்க்கும் குழலையுடைய அம்பிகைக்குப் பூஜைநடக்கும் பந்தலில்,

35. பிறந்தனன் கங்கைசேயாய் பெம்மான்மேல் பக்தியுண்டாய்
அறமதில் இச்சைவைத்து அநேககீர்த்திகளு முண்டாய்
வருவோரை யாதரித்து வளமுள குடும்பியாகி
திருப்பணிசெய்து இன்னோன் சென்றனன் காலன்பக்கல்.

35. வேளாளர்குலத்தில் பிறந்தான். சிவபெருமானிடம் பக்தியுண்டாகித் தருமத்தில் விருப்பம் ஏற்பட்டு அநேகவிதமான புகழ்களைப்பெற்று, வந்தவிருந்தினரை உபசரித்து ஆதரித்து வளப்பம்பொருந்திய குடும்பத்தைப் பெற்று, கடவுளுக்கு வழிபாடுகள்செய்து வாழ்ந்து கடைசியில் இவன் மரணமடைந்தான்.

36. வேதனால் வரியப்பட்டு மேவினன் இக்குலத்தில்
போதவே இவன்பின்சென்மம் போற்றுவோம் காளாத்தி [தன்னில்
ஓதுவேன் க்ஷத்திரியசேயாய் உத்தமன் வாழ்வானாகும்
மாதவர் சொல்லும்போது மங்கையும் கேட்கலுற்றாள்.

36. பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தான். இவனுடைய மறுஜன்மத்தைப் பொருத்தமாகவே கூறுவோம். திருக்காளத்தியினில் க்ஷத்திரியக்குழந்தையாய்ப் பிறந்து இவ்வுத்தமன்

வாழ்வானும். இவ்விதம் சப்தரிஷிகள் சொல்லும்போது பார்வதியும் கேட்கலுற்றாள்.

37. இந்ததோர் சென்மந்தன்னில் இவன்செய்த புண்ணிய
[மென்ன
அந்ததோர் சேதிசொல்வாய் அவனுமிச் சென்மந்தன்னில்
நொந்தவர் தன்னைக்கார்த்தும் நேமியி லறத்திலிச்சை
முந்தமுக் குடையோனுக்கு உயர்தொண்டு செய்ததாலும்.

37. இந்த ஜன்மத்தில் இவன்செய்த புண்ணியங்கள் என்ன? அந்த விவரங்களைச் சொல்லுங்கள். அவன் இந்த ஜன்மத்தில் சிரமப்பட்டவர்களை சிரமத்தினின்றும் நீக்கி உலகினில் தருமசிந்தனையுடன் பரமசிவனிடத்தில் மேன்மையான பக்திபூண்டு வழிபாடுகள்செய்தும்,

38. திருப்பணி செய்ததாலும் செனிப்பனே க்ஷத்ரியசேயாய்
கரிபரி யுடையனாகி காவலன் வாழ்வானும்
பெரும்தாயின் பூர்வம்சொல்வேன் புதுவையில் வைசிய
[சேயாய்
திருமகள் விலாசம்போன்ற தனவைசிய குலமுதித்து.

38. திருப்பணிகள் செய்ததனாலும் க்ஷத்திரியவமிசத்தில் ஜனிக்கலானான். யானை, குதிரை, இவைகளைப்பெற்று இக்காவலன் வாழ்ந்து வருவான். பெற்றதாயின் பூர்வம்சொல்லுவோம். புதுச்சேரியில் வைசிய மைந்தனாய் லட்சுமீகடாக்ஷம் பொருந்திய தனவைசியர் குலத்திலுதித்து,

39. தோகை வாகனத்தோன்பத்தி சுந்தரி செய்துவந்தாள்
நாகரீகங்க ளுண்டாய் நாயகன் உள்ளூர்தன்னில்
பாகமாய் சுதர்கள்உண்டாய் பணிதிக ளதிகமாகி
போகமும் அதிகமுண்டாய் புகழ்பெற வாழ்ந்துஇன்னோன்.

39. மயில்வாகனத்தையுடைய குமரக்கடவுளிடம் பக்திபூண்டு வழிபாடுகள் செய்துவந்தாள் இவன் மனைவி. நாகரீகங்களேற்பட்டு இவனும் உள்ளூரில் பக்குவமாய்க் குழந்தைகள் ஏற்பட்டு ஆபரணங்களை அதிகமாய்ச் செய்து போகபோக்கியங்களும் அதிகமுண்டாய் கீர்த்திமிகப் பெற்று வாழ்ந்தான்.

40. கூத்தன்தன் பதிக்குச்சென்று குரைதலை வரியப்பட்டு
நீத்தர்போல் அருகர்வம்சம் நிமலியும் உதித்தாளென்றோம்
நாத்திசை புகழவாழ்வள் நாட்டினில் வறுமைகாணாள்
மாத்திடு சென்மமுத்திரம் வளமுள காஞ்சிதன்னில்.

40. எமலோகம் சென்றதும் திரும்பவும் பிரம்மதேவனால் சிருஷ்டிக் கப்பட்டுத் துறவிகளைப்போல இவளும் சைனரின் வமிசத்தில் பிறந்து நாலாபக்கங்களிலும் கீர்த்திபெற வாழ்வாள். உலகினில் தரித்திரத்தை அனுபவிக்கமாட்டாள். அடுத்த ஜன்மத்தில் வடக்கே வளப்பம்பொருந்திய காஞ்சிபுரத்தில்,

41. உதிப்பளாம் பிரும்மசேயாய் உயர்நிதி தனவானுக்கு
விதித்தனம் இந்தமாது வித்தகி கேட்கலுற்ருள்
அதிபதி இச்சென்மத்தில் அறமது இச்சையின்றி
சதியான மனத்தளாகி தானவள் வாழ்வதாலே.

41. பிராம்மணக்குழந்தையாய்ப் பிறப்பாள். அதுவும் பெரிய சொத்துக்களையுடைய தனவந்தனுக்குப் பிறக்கும்படி விதி இருக்கிறது. இதைக்கேட்ட பார்வதி கேட்கலுற்ருள். அவள் இந்த ஜன்மத்தில் தருமத்தில் விருப்பமின்றி வஞ்சனையுள்ள மனத்தளாகி வாழ்ந்ததனுலே,

42. எப்படி உதிப்பாள்சொல்வாய் இடருகள் அனந்தம் [செய்தும்
அப்பணி சிரமணிந்தோன் அருகர்தன் பத்திகொண்டும்
தப்பித குணமில்லாமல் தரணியில் வாழ்வதாலே
செப்பினேன் மறைகுலத்தில் செல்வதி வாழ்வாளாமே.

42. எப்படி உதிப்பாளென்று சொல்லுவீர். தொந்தரவு பல செய்தும், தலையில் கங்கையை அணிந்த பரமசிவனுடைய பக்தியையும், அருகரிடமும் பக்திகொண்டும் யாதொரு தப்பிதமான நடவடிக்கைகளில்லாமல் பூலோகத்தினில் வாழ்ந்ததனுலே இச்செல்வி மறையவர்குலத்தில் வாழ்வாளென்று சொன்ஞேம்.

43. ஆறஞ்சு மூன்றுஆண்டில் அணுகிய மேடமாதம்
கூறிஞேம் தந்தைகண்டம் குலராகு மதிபுகுத்தி
தீரமாய் நடக்குமென்ருேம் செப்பின மொழிதப்பாது
ஆறுமா முகனைப்பெற்ற அம்பிகை யாளேகேளாய்.

43. ஜாதகனுடைய முப்பத்திமூன்ரும் பிராயத்தில் மேஷமாசத்தில் தகப்பனுடைய கண்டம் ஏற்படும். இராகு, சந்திரன், புதன் குடும்பஸ்தருடைய மாரகத்தை கவனிக்குமிடத்தில் சேர்ந்திருப்பதனுல் நிச்சயமாய் நடைபெறும். சொன்னசொல் தவருது. ஆறுமுகனைப்பெற்ற அம்பிகையே கேட்பாயாக.

44. முப்பது நாலுஆண்டில் மூலமா தத்திலேதான்
செப்புவேன் அன்னைகண்டம் செனித்தவன் தனக்குக் [கேளாய்
கப்பிய அறுபான்ஒன்றில் கடகமா தத்திலேதான்
ஒப்புடன் துவாதேசி உடலமும்வாடு மென்றேரும்.

44. முப்பத்திநாலாம் பிராயத்தில் தனுர்மாசத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். ஜாதகனுக்கு அறுபத்திஒன்றும் பிராயத்தில் கடக மாசத்தில் துவாதசிதிதியில் மரணம் ஏற்படும்.

45. செயமுனி இதனைக்கேட்டு திடுக்கென உரைக்கலுற்றார்
பயமிலா வயதுதீர்க்கம் பகர்ந்தினீர் எட்டோன்ஏழில்
தயவுடன் சகடையோகம் தங்கிற்று இவனுக்கேதான்
வியமாகும் பத்தாண்டுக்குள் இயம்புவீர் விபரம்தானே.

45. ஜயமுனி அதைக்கேட்டு திடுக்கிட்டு உரைக்கலானார். பயமில்லாமல் வயசுதீர்க்கம் என்று சொன்னீர். எட்டுக்குடைய செவ்வாய் ஏழாமிடத்திலிருப்பதனால் இவனுக்குச் சகடையோகம் ஏற்பட்டது, வியோகத்தையடையும் பத்து வருஷத்திற்குள். அதன்விவரத்தைக் கூறுங்கள்.

46. மந்திரி ஐந்தில்நிற்க மழைக்கோளு[1] நாலிலேற
வந்தவன் வயதுதீர்க்கம் வரைந்தனம் கேளும்தாயே
பிந்திய சென்மந்தன்னைப் பேசுவோம் காசிதன்னில்
இந்தஓர் குலமுதித்து எய்துவானென்று சொன்னோம்.

46. குரு ஐந்தாமிடத்தில் இருக்க, சுக்கிரனும் நாலிலிருக்க, ஜாதகனுடைய வயசு தீர்க்கம் என்று சொல்லுவோம். தாயே! கேளும். அடுத்த ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோம். காசிக்ஷேத்திரத்தில் இந்தக் குலத்திலேயே உதித்து வாழ்வான் என்று சொன்னோம்.

47. இவனுட பொதுயோகத்தை இயம்புவோம் வறுமை [காணுன்
மதிபிறை போலேயோகம் வளர்ந்திடும் தந்தைஆஸ்தி
நிதிகளும் உதவிசெய்வன் நேமியில் வறுமைகாணுன்
பதியினில் திருவும்ஓங்கும் பஞ்சைகட் குதவியாவன்.

47. இவனுடைய பொதுப்படையான யோகத்தைச்சொல்லுவோம். வறுமைப்பிணி கிடையாது. பிறைச்சந்திரனைப்போல யோகம் வளர்ந்திடும். தந்தையின் ஆஸ்தியும். பணங்களும் எடுத்து உதவிபுரிவான். உலகினில் சிரமமிருக்காது. வீட்டில் லட்சுமிகடாட்சம் ஏற்படும். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வான்.

---

1. சுக்கிரன்

48. தந்தைநாள் பூமிமேலாய் தானிவன் சேர்ப்பானுகும்
தந்தனம் பூமிவீடு தன்பணி முப்பாயிரம்பொன்
இந்தவன் சேர்ப்பானுகும் இரண்டினில் விபரம்சொல்வேன்
கந்தனை யீன்றமாதே கழறின மொழிகுன்ருது.

48. தந்தைகாலத்தில் ஏற்பட்டபூஸ்திதிகள் விருத்தியாகி மேன் மேலும் இவன்சேர்ப்பானுகும். சுயார்ச்சிதம் பூமி, வீடு, பணம், ஆபரணம் இவைகள் மொத்தமாக முப்பதினுயிரம் பொன்னிருக்கும். எல்லாம் இவனே சம்பாதித்துச் சேர்த்த சொத்து. இதன் விபரம் இரண்டாம் பாகத்தில் விபரமாகச் சொல்லுவோம். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே ! சொன்னசொல் தவருது.

49. பாலகன் செனிக்கும்காலே பரிதியின் திசையிலேதான்
கோலமாய்த் திங்கள்ஒன்றும் கூறுவோம் பலனையாங்கள்
சாலவே யன்னைநோயாம் சஞ்சல மனங்களாகும்
ஏலவே பின்பாகத்தில் இயம்புவோம் விபரம்ரெண்டில்.

49. ஜாதகன் பிறக்கும் காலத்தில் சூரியன் மகாதசையில் இருப்பு வருஷம் பூஜ்ஜியம் மாசம்ஒன்று என்று கூறுவோம். இதன் பலன் யாதெனில் தாயார் நோய்வாய்ப்படுவாள், மனத்தினில் சஞ்சல மேற்படும். ஏற்பவே பின்பாகத்தில் (இரண்டாம் பகுதியில்) மற்ற விவரங்களைவிரிவாய்க் கூறுவோம்.

ஜாதகம் 70

1. பிறைராகு மீனமாக புதன்புகர் இரவிக்கோலில்
கரியவன் கேதுகன்னி கனகனும் வீணையாக
தரைமகன் மேடமாக சென்மமு மொத்தையாக
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்கலுற்றாள்.

1. சந்திரனும் இராகுவும் மீனராசியிலும், புதன், சுக்கிரன், சூரியன் இவர்கள் சேர்ந்து துலாத்திலும், சனியும் கேதுவும் கன்னியாராசியிலும், குரு மிதுனத்திலும், செவ்வாய் மேஷத்திலும் தங்கும் படியான இவ்வித கிரகநிலை கொண்ட இம்மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதிதேவி கேட்கலுற்றாள்.

சந்திரன் ராகு	லக்கினம் செவ்வாய்		குரு
	இராசி சக்கரம்		
		புதன் சுக்கிரன் சூரியன்	சனி கேது

2. குறுமுனி புகலுகின்றார் குறித்தது ஆண்பாலாகும்
வருமில்லம் கீழ்மேல்வீதி வாசலும் உத்தரநோக்கம்
பெருவயிறப்பன் தென்கீழ் பாஞ்சாலி அருகில்தங்கும்
அருகரும் தென்பாலாகும் அரன்மாயோன் கீழ்பாலாகும்.

2. அகஸ்தியர் சொல்லலுற்றார். சொன்ன ஜாதகம் ஓர் ஆண் மகனுடையது. அவன் பிறந்தவீடு கிழக்கு மேற்குவீதி, வடக்குப்பார்த்த வாசலுடையது. விக்நேசுவரர் கோவில் தென்கிழக்கேயுள்ளது. திரௌபதியம்மன் கோவில் அதன் அருகில் உள்ளது. அருகக்கடவுளின் கோவில் தென்பக்கத்திலுள்ளது. சிவன் விஷ்ணு இவர்கள் கோவில் கிழக்கேயுள்ளது.

3. மாரியும் அதற்குத் தென்மேல் மாகாளி உத்தரமாகும்
கூரிய அடையாளத்துள் கூரையாம் கிரகமென்றோம்
பாரிய ஊரேயாகும் பலசாலி அவ்வூர்வாசம்
நாரியும் அருகர்வம்சம் நல்குவாரென்று சொன்னோம்.

3. அம்மனும் அதற்குத் தென்மேற்கிலுள்ளது. மகாகாளி கோவில் வடக்கேயுள்ளது. இவ்விதம் சொல்லிய அடையாளங்கள் கொண்டஇடத்தில் ஒருகூரை வீட்டில் ஜாதகன் பிறந்தான். ஊர் பெரிதானது. பலசாலிகள் வசிக்கும் ஊர் அது. பெண்டாட்டியும் அருகர் (சைனர்) வமிசம். சௌக்கியமாய் யாவரும் வசிப்பார்கள்.

4. தந்தையின் துணைவரெட்டில் ஆண்துணை காணுதாகும்
வந்திடும் கன்னிஐந்து வரைந்தனம் தீர்க்கமாக
அந்தவர் சிலர்கள்சேமம் அமங்கிலி சிலர்கள்யென்றோம்
சந்ததம் கடகம்கேட்டை செனிப்பனும் தந்தையென்றோம்.

4. தந்தையுடன் பிறந்தார் எட்டுப்பேர்கள். அவர்களில் ஆண்துணைவனில்லை. சகோதரிகளில் ஐந்துபேர்கள் தீர்க்காயுசுடையவர்கள். அவர்களில் சிலர்க்ஷேமமாக வாழ்வர். சிலர் அமங்கலியாயிருப்பர் (புருஷனை இழப்பார்) என்றோம். கடகலக்கினம் கூடிய கேட்டை நட்சத்திரமுடைய தினத்தன்று தந்தையானவன் ஜனிப்பான் என்றோம்.

5. மால்நிறம் வாததேகி மருமமில் லாதநெஞ்சம்
சீலவான் தெய்வபத்தி திருப்பணி செய்வானாகும்
கால்கரம் வலிவுமுள்ளான் கனத்தபுத் திகளுமுண்டு
பால்பாக்கியம் குறைவுமுள்ளான் பகைவரை நாசம்
[செய்வன்.

5. கருப்பு நிறமுடையவன், வாதசரீரமுடையவன், இரகசியமில்லாத மனத்தையுடையவன், சீலமுள்ளவன், தெய்வபக்தியுடையவன், திருப்பணிகள் (தெய்வவழிபாடுகள்) செய்வான், கைகால்களில் நல்லபலமுடையவன், கௌரவமான புத்தியையுடையவன். பால்பாக்கியம் அவ்வளவு அதிகமாக இல்லை. பகைவரை நாசம்செய்யும் இயல்பினன்.

6. ஆதியில் வறுமையுள்ளான் அலைச்சலாம் குடும்பமென்றோம்
மாதுவும் வந்தபின்பு வந்திடும் புகழும்யோகம்
தீதுகள் ஒருவர்க்கெண்ணான் செய்நிலம் சேர்ப்பானாகும்
சூதுகள் சிலர்க்குசெய்வன் திரிச்சலும் அதிகமுள்ளான்.

6. ஆரம்பத்தில் சிரமமுடையவன். குடும்ப அலைச்சல்களையுடையவன். பெண்டாட்டி வந்தபின்பு கீர்த்தியும், யோகங்களும் ஏற்படும். பிறருக்கு இடைஞ்சலே எண்ணமாட்டான். நன்செய் நிலம் சேர்ப்பானாகும். சில பேர்களுக்குச் சூதுவாதுகளைச் செய்வான். அலைச்சல் திரிச்சல் அதிகமுள்ளவன்.

7. வண்டிவா கனமுமுள்ளான் மாநிலம் சேர்ப்பானுகும்
அண்டினோர்க் குதவிசெய்வன் அவன்பந்தை யாதரிப்பன்
தண்டமிழ் நுணுக்கம்தேர்வன் சல்லியம் கொள்ளானுகும்
கண்டித முரையானுகும் கரமதில் விஷ்ணுரேகை

7. வண்டிவாகனங்களையு முடையவன். பரந்தபூமிகளைச் சேர்ப்பான். தன்னை அண்டினவர்களுக்கு ஒத்தாசை செய்வான். சொந்தக்காரர்களை ஆதரிப்பான். அழகிய தமிழ் நூல்களின் தத்துவங்களை அறிவான். கடன் வாங்கமாட்டான். கண்டிப்பான பேச்சுகளைப் பேசமாட்டான். கையில் விஷ்ணுரேகையை யுடையவன்.

8. இல்லமும் பின்னுல்செய்வன் எய்துவான் மடமும்சோலை
நல்லவன் நல்லவர்க்கு நற்கூவல் செய்வானுகும்
வல்லியர் வர்க்கநாச மாசானை பூசைபூண்பன்
எல்லைகள் விருத்திசெய்வன் இவன்சுக போசனத்தன்.

8. வீடும் பிற்காலத்தில் கட்டுவான். மடமும் சோலையும் ஏற்படுத்துவான். நல்லவர்களுக்கு நல்லவனுவன். நல்ல கிணறுகளை வெட்டுவிப்பான். பெண்டாட்டி வர்க்கத்தினர் நாசமடைவார்கள். குருபூஜை செய்வான். நிலத்தின் எல்லைகளை விருத்தி செய்வான். சுகமான போஜனங்களைப் புசிப்பான்.

9. இந்நெறி உடையானுக்கு இம்மாது ரெண்டாம்சென்மம்
தன்னிலே உதிப்பாளாகும் சாற்றுவோம் அவள்குணத்தை
பன்னியே பேசவல்லள் பால்பாக்கிய முடையளாகும்
உன்னத வார்த்தைசொல்வள் உள்மனம் கபடமில்லாள்.

9. இப்படிப்பட்ட குணங்களையுடையவனுக்கு இம்மாது இரண்டாவது ஜன்மத்தில் உதிப்பாள். அவளுடைய குணங்களை எடுத்துக் கூறுவோம். சுகமாகவும் இனிமையாகவும் பேசக்கூடியவள். பால்பாக்கியம் உடையவளாவள். மேலான வார்த்தைகளைச் சொல்லுவாள். மனதில் கபடமில்லாதவள்.

10. கார்நிறம் சமதேகத்தாள் கணவனுக் கினியளாகும்
தூர்சொல்வாள் ஏழைக்கன்பள் துருசான நடையுமாவள்
பாரிய புத்தியுண்டு பரஉப காரியாவள்
காரிய சமர்த்தியாவள் கரமதில் ருத்ரரேகை.

10. கருப்பு நிறமுடையவள். சமமான தேகத்தையுடையவள். புருஷனுக்குப் பிரியமாக நடப்பாள். பிறரைப்பற்றி அவதூறுகள் சொல்லுவாள். ஏழைகளிடத்தில் விசுவாசமாயிருப்பாள். சுறுசுறுப்பான நடையுடை பாவனைகளையுடையவள். பெரிய எண்ணங்களுடையவள். பரஉப

காரம் செய்வாள். காரியங்களை சாமர்த்தியமாகச் செய்வாள். கையில் ருத்திரனுடைய ரேகையை யுடையவள்.

11. அன்னமும் அன்பாயீவள் அவள் துணை நான்குதோன்றும்
பின்னங்க ளாகுமென்றேம் பராசரும் கேட்கலுற்றார்
கன்னிக்குத் துணைகள்தோஷம் கழறும்கா ரணங்களென்ன
பொன்னவன் மூன்றில்நிற்க பங்குமே பார்த்ததாலே.

11. பிரியத்துடன் அன்னதானம் செய்வாள். அவளுடன் பிறந்தவர் நான்குபேர்கள். அவர்களில் சிலருக்குப் பின்னம் ஏற்படும். இதுகேட்ட பராசரர் பின்வருமாறு வினவலாயினர். இவருக்குத் துணைவர் தோஷமென்றீரே! காரணங்கள் என்னவென்று சொல்லுங்கள். இலக்கினத்திற்கு மூன்றில் குருபகவானிருக்க சனியும் அவனைப்பார்த்ததனாலே,

12. மடிவுண்டு துணைவருக்கு மாதுருசெய் பவத்தால்
இடிபோலே தோஷமெய்தும் இயம்புவீர் அந்தச்சங்கை
துடியிடை மாதுர்சேதி செப்புவோம் இனிமேலாக
தடவரை மகளேயாங்கள் சாற்றுவோம் மேலும்கேளே.

12. துணைவர் மரிப்பார். இவளுடைய பிராரப்த வினையின்காரணமாக இடிஇடித்தாற்போல தோஷங்கள் ஏற்படும். அத்தகைய சமுசயத்தை விளக்கமாகச் சொல்லுங்கள். உடுக்கைபோல் இடையையுடைய இம்மாதின் செய்தி விவரங்களை இனிமேலாகத் தெரிவிப்போம். மலையவானின் புத்திரி யாகிய பார்வதியே! இனிமேல் நாங்கள் சொல்லுவதைக் கேட்பாயாக.

13. ஆனையின் நிறத்தளாகும் ஆளனுக் கினியளாகும்
தானமும் தருமமிச்சை சதியில்லா மனத்தளாகும்
ஈனரை உறவுகொள்ளாள் இன்பமாய் வார்த்தைசொல்வள்
ஊனமில் லாததேகி உரைக்குமுன் கோபியாவள்.

13. யானையின் நிறத்தைக்கொண்டவள். புருஷனுக்கு இனியவளாவள். தானதருமம் செய்வதில் விருப்பமுள்ளவள். வஞ்சனையில்லாத மனத்தையுடையவள். அல்ப ஜனங்களை சிநேகம்செய்யாள். இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவாள். சரீரத்தில் யாதொரு பின்னமுமில்லாதவள். சற்று முன்கோபமுடையவள் என்று சொல்லுவார்கள்.

14. பலபேர்க்கும் பந்தினர்க்கும் பரிந்துபசாரம் செய்வள்
கலவர புத்தியுள்ளாள் காதலி யோகசாலி
நிலமையாய் விரதம்பூண்பள் நிதானமாய் உரைப்பாளாகும்
உலவிடும் பித்தசூடு உறுதியில் லாதநெஞ்சம்.

14. பலபேர்களுக்கும் பந்து ஜனங்களுக்கும் விரும்பி உபசரிப்பாள். கலவரங்கள் செய்யும் புத்தியையுடையவள். இவள் நல்ல யோகசாலி. தன்னுடைய நிலைமைக்குத் தகுந்த விரதங்களை அனுஷ்டிப்பாள். நிதானத்துடன் சம்பாஷிப்பாள். பித்தசூட்டின் உபத்திரவத்தையுடையவள். மனதில் நிச்சயபுத்தி கிடையாது.

15. தந்தைக்குத் தாரம்ரெண்டில் தரித்திடு மிளையாள்ஈன்ற
இந்ததோர் கன்னியென்றோம் இவள் துணை காணளாகும்
தந்தைதாய் ஆதிலேதான் சண்டன்தன் பதிக்குச்சென்று
பிந்திதாய் தந்தையில்லம் பேணுவாளென்று சொன்னோம்.

15. தந்தைக்கு இரண்டுதாரங்கள். இவள் இளையாளுடைய மகள். உடன் பிறந்தார் இவளுக்கில்லை. பால்யத்திலேயே தாய்தந்தையர் எமலோகம் சென்றதன்பயனாக இவள் பின்பு பெற்றோருடைய இல்லத்தைப் பரிபாலிப்பாள் என்று சொன்னோம்.

16. என்னகா ரணத்தினாலே இவள்துணை இல்லாதாகும்
தந்தையும் சேதமெய்தும் சாற்றுவீர் அந்தச்சங்கை
அன்னைதா னத்துமூன்றில் அலரியும் மகனும்[1]கேது
தன்துணை காணளாகும் தாய்தந்தை தோஷமெய்தும்.

16. என்னகாரணத்தினாலே இவள் சகோதரனில்லாமலும், தந்தையும் இறப்பானென்றும் சொன்னீர். அதன் விவரம் கூறுங்கள். மாதுர்ஸ்தானத்திற்கு மூன்றுமிடத்தில் சனியும் கேதுவு மிருப்பதனால் சகோதரன் இல்லை. தாய் தந்தையருக்கு தோஷம் ஏற்படும்.

17. இதுவன்றி பூர்வதோஷம் எய்திற்று இவளுக்கேதான்
அதுவினை சொல்லுமென்ன அவளும்முன் சென்மந்தன்னில்
புதுவையில் கங்கைசேயாய்ப் பிறந்துமே தனவானுக்கு
விதவிதப் பணிகள்பூண்டு வரனுமே அவ்வூர்தன்னில்.

17 இதுவும் இல்லாமல் பூர்வகாலத்தில் தோஷம் ஏற்பட்டது இவளுக்கேதான். அந்தவினையைப் பற்றிக் கூறுமென்று கேட்க, அவள் போனஜன்மத்தில் புதுச்சேரியில் வேளாளர்குலத்தில் தனவானுக்குப் பெண்ணாய்ப்பிறப்பாள். விதவிதமாகப் பணிகள்பூண்டு புருஷனும் அவ்வூரிலேயே ஏற்படுவான்.

18. சுதர்களும் அதிகமுண்டாய் சுகமுடன் வாழும்நாளில்
பதர்வார்த்தை நாத்திபேரில் பகர்ந்தனள் உறவோர்கேட்டு
அதிபதி தனைவளர்க்க மாதுவும் மனம்கலங்கி
சதியான வார்த்தைசொன்னாய் சனித்திடு மறுசென்மத்தில்.

1. சனி

18. பிள்ளைகள் அதிகமாக ஏற்பட்டு சுகமாக வாழ்ந்துவரும் நாளில் இளப்பமான வார்த்தைகளை நாத்தனார் பேரில் சொன்னாள். சொந்தக்காரர்கள் கேட்டு புருஷனும் தன்னை ஆளாக்காமல் புறக்கணிக்க அவளும் மனம் கலங்கி, வஞ்சனையான வார்த்தைகளைச் சொன்னாய். இனிவரும் ஜன்மத்தில்,

19. துணைவர்கள் இல்லாதாயும் தாயதுமில் லாதாயும்
வினையாகும் தந்தைதாயார் விளங்கிடும் சுதர்கள்தோஷம்
பிணையான நிந்தையேத்து பூமியில் வாழ்வாளாகும்
சினமுடன் சொல்லிதூளை தூத்தியே சென்றாளென்றோம்.

19. சகோதரர் இல்லாமலும் தாயார் இல்லாமலும் தந்தையும் பிராரப்தவசமாகியும், பிள்ளைகளுக்குத் தோஷமும் இடைஞ்சலான நிந்தனைகளையும் ஏற்றுப் பூமியில் வாழ்வாளாகும். இப்படிக் கோபத்துடன்கூறித் தெருவிலுள்ள மண்ணைவாரி இறைத்தாள். பிறகு சென்றாள்.

20. அந்தவோர் தோஷம்தானும் அணுகிற்று இவளுக்கேதான்
அந்திய காலம்தன்னில் அவள்சேது பதிக்குச்சென்று
பிந்தியும் வாயுநோயால் புக்கினள் காலன்பக்கல்
சந்ததம் வேதனாலே தரையினில் வரியப்பட்டு.

20. அந்த ஒரு தோஷமும் வந்துசேர்ந்தது. கடைசிகாலத்தில் அவள் இராமேச்வரத்திற்குச் சென்று, பிறகு வாயு உபத்திரவத்தினால் எமலோகம் செல்ல, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு,

21. வந்தவ ளிவளேயென்றோம் மாதுவின் சாபம்போலே
இந்தவோர் சென்மந்தன்னில் எய்திடும் இவளுக்கேதான்
தந்துணை தோஷமெய்தும் தாய்தந்தை அவ்வாறாகும்
இந்தவாறு முனிவர்கூற ஈசுவரி கேட்கலுற்றாள்.

21. பிறந்தவள் இவளேயென்றோம். அம்மாதுவின் சாபத்திற்கிணங்க, இந்த ஜன்மத்தினில் இவளுக்கு நேர்ந்ததென்னவெனில் சகோதரனுக்கு தோஷம் ஏற்படும், தாய்தந்தையருக்கும் அப்படியே ஏற்படும். இவ்விதம் முனிவர்சொல்ல ஈசுவரி பின்வருமாறு கேட்கலுற்றாள்.

22. பூருவம் கங்கைசேயாய்ப் பிறந்துமே பழியும்பெற்று
நாரியும் வாழ்ந்ததாலே நாயகி யிச்சென்மத்தில்
தீரமாய் அருகர்வம்சம் செனிக்கும்கா ரணங்களென்ன
கூறுவீர் அந்தசங்கை குறுமுனி புகலுகின்றார்.

22. ஆதியில் வேளாளர்குலத்தில் பிறந்து பழிகளைப்பெற்று இவள் வாழ்ந்ததனாலே இவள் இந்த ஜன்மத்தில் தீரமான சைனர் குடும்பத்தில் பிறக்கும் காரணங்களென்ன என்று கூறுங்கள். அந்தசந்தேகத்தை அகஸ்தியர் பின்வருமாறு கூறலுற்றார்.

23. முன்செென்ம சேதுபுண்ணியம் முயன்றது குலமேலாக
முன்பாவம் விலகாதோசொல் மொழிகுறேன் கேளும்
[தாயே.
கன்னிகை திகிலடைந்து கழறின சாபம்நீங்கா
தென்கருத்ததிலும் தேசம்செல கன்னிதோஷம் நீங்கா.

23. முன்ஜன்மத்தில் சேதுஸ்நானம் செய்தபுண்ணியம் ஏற்பட்டது; குலம் மேலாக ஏற்பட்டு முன்செய்த பாவம் விலகாதோ என்பதைச் சொல்லுகிறேன் கேளும் தாயே. அம்மாது திகிலடைந்து சொன்னசாபம் நீங்காது. எந்தவிதமான தேசாந்திரம், ஸ்தலவாசம் சென்று செய்தாலும் கன்னிகை சொன்னசாபம் பலித்தே தீரும்.

24. சுதர்களும் தோஷமென்றீ ரிந்தத்தோகையும் வயதுதீர்க்கம்
பதரினீர் காரணம்சொல் பார்மகன் சென்மமாட்சி
புதன்புகர் ஏழில்தங்கப் புகன்றனம் வயதுதீர்க்கம்
இதுமுன்பின் தோஷமெய்தும் இயம்புவோம்
[சாந்திதானே.

24. புத்திரர்களுக்கும் தோஷம் ஏற்படும் என்றுசொன்னீர். இவளுக்கு தீர்க்காயுசு என்றும் சொன்னீர். காரணம் சொல்லுங்கள். பூமிக் கதிபதியாகிய செவ்வாய் ஜன்மத்தில் ஆட்சிபெற்று சொந்தவீட்டிலிருப் பதனாலும், புதனும், சுக்கிரனும் லக்கினத்திலிருந்து ஏழாமிடத்திலிருப் பதனாலும் வயசுதீர்க்கம் என்று சொன்னோம். இப்படி முன்னும் பின்னும் தோஷம் ஏற்படும் என்று சொன்னோம் அதற்குப் பரிகாரம் சொல்லுவோம்.

25. கருமசாந்திகளும் செய்து காதலி பீஜம்தன்னை
இரணிய தகட்டில்கீறி இடரில்லா சகஸ்திரம் சொல்லி
திருமகள் அணிவாளாகில் சனித்தசேய் தீர்க்கமெய்தும்
மர்மமாய் செய்யாளாகில் மரித்திடும் சுதர்கள்தானே.

25. கருமசாந்திகள் செய்து இவள் பீஜாட்சரத்தைத் தங்கத்தகட்டில் வரைந்து யாதொரு இடைஞ்சலுமில்லாமல் சகஸ்ர நாமங்களை ஜபித்து அதை இவள் அணிந்துகொண்டால் பிறந்த குழந்தை தீர்க்காயுசுடனிருக்கும். இரகசியமாயிருந்து இப்பரிகாரத்தைச் செய்யாமற்போனால் பிள்ளைகள் மரித்திடும்.

26. சொற்படி செய்யானுகில் சுதர்களும் தோஷமெய்தும்
சொற்படி செய்வானுகில் தோன்றிடும் ஆண்பால்ஒன்று
செப்பின கருமசாந்தி சேதியை விபரம்சொல்வாய்
ஒப்புடன் அந்தியத்தில் உரைக்குறோம் விபரமாக.

26. சொன்னபடி செய்யாமற்போனால் புத்திரதோஷம் ஏற்படும். சொன்னபடி செய்தால் ஆண்குழந்தை ஒன்று பிறக்கும். சொன்னகரும சாந்தியின் விவரத்தை விபரமாய்ச் சொல்லுங்கள். கடைசியில் விவரங் களைப் பொருத்தமாகக் கூறுவோம்.

27. மறுசென்மம் அன்னைக்கேதான் வாயுவின் மூலைதன்னில்
பெருமடம் அந்தநாட்டில் பிறப்பளே இக்குலத்தில்
சிறுமைகள் இல்லாவாழ்வள் செப்பின மொழிகுன்றுது.
அருமறை முடிவிலாடும் அம்பிகை புகன்றிட்டோமே.

27. தாயின் மறுஜன்மத்தில் வாயுவின் மூலையில் உள்ள பெரிய வீட்டில் அந்தத்தேசத்தில் பிறப்பாள். அதுவும் இதேகுலத்தில் யாதொரு சிரமமும் இல்லாமல் வாழ்வாள். சொன்னசொல் தவருது. பிரளயகாலத்தில் ஆனந்தக்கூத்தாடும் அம்பிகையே! நாங்கள் இவ்வாறுசொல்லுவோம்.

28. தந்தையின் பூர்வம்சொல்வேன் தாம்பிர பரணிபக்கல்
வந்தனன் கங்கைசேயாய் பானிலம் அதிகம்உண்டாய்
நொந்தவர்க் கன்னமீந்து நீள்நிலம் நல்லோனுயும்
சந்ததம் கடவுள்பத்தி சான்றேர்கள் நேசம்கொண்டு.

28. தந்தையின் பூர்வத்தைச்சொல்லுவோம். தாமிரபரணியில் வேளாளர்குலத்தில் பிறந்து அதிகநிலங்கள் சேர்த்து ஏழைகளுக்கு அன்ன தானம்செய்து உலகம் முழுமையும் நல்லவன் என்று பெயர்பெற்று, எப்பொழு தும் கடவுளிடம் பக்திபூண்டு பெரியோர்களுடன் சிநேகம்செய்து,

29. ஏகினன் காலன்பக்கல் இறைவனுல் வரியப்பட்டு
ஆகிய வருகர்வமிசம் அடைந்தனன் வினையில்லாமல்
பாகமாய் பின்சென்மத்தைப் பகருவோம் துவாரைதன்னில்
போகபாக் கியங்களுண்டாய் பிறப்பனும் சத்தியசேயாய்.

29. எமலோகம் சென்றுன். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு மேன்மையுள்ள அருகர் (சைனர்) வமிசத்தில் பிறந்தான். பலவினைகள் இல்லாமல் பக்குவமாய் மறுஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். துவாரகையில் போகபோக்கியங்கள் ஏற்பட்டு யாதவ குடும்பத்தில் (சத்திய சேயாய்) பிள்ளை யாய்ப் பிறப்பான்.

30. இந்தவோர் சென்மந்தன்னில் இவன்செய்த புண்ணிய [மென்ன
வந்தவர்க் கன்னமீந்தும் மடமது செய்ததாலும்
முந்திய கடவுள்பத்தி முடக்குகள் சிலர்க்குத் தீர்த்தும்
வந்ததால் மறுபிறப்பு அரசனுய் உதிப்பானென்றேம்.

30. இந்த ஜன்மத்தில் இவன்செய்த புண்ணியங்களென்ன. விருந்தினர்க்கு அன்னமளித்து மடங்கள் கட்டியும் முதலில் கடவுளிடம் பக்தி பூண்டும், சிலருக்குண்டான இடைஞ்சல்களைத் தீர்த்தும் வந்ததனால் மறுபிறப்பிலும் ராஜயோகத்துடன் பிறப்பான்.

31. மாதுவின் மணத்தின்காலம் வரைகுறேும் பத்தாண்டுக்குள்
ஓதுவேன் குணக்கிலேதான் உயர்அன்னை கிளையிலேதான்
நீதியாய் வரனும்தோன்றும் நுவலுவோம் அவன் [குணத்தை
பாதக மனமில்லாதான் பரஉபகாரி யாகும்.

31. இவனுடைய கலியாணகாலத்தைப் பற்றிக்கூறுவோம். பத்தாவது வயதிற்குள் கிழக்குத் திக்கிலிருந்து பெண்டாட்டி வருவாள். அவள் தாயார் வருக்கத்தைச் சேர்ந்தவள். நியாயமாய்த் தக்கபுருஷன் தோன்றுவான். அவனுடைய குணத்தைச் சொல்லுவோம். பாதகங்கள் செய்யும் மனமில்லாதவன். பரோபகாரியாவான்.

32. கருநிறம் கல்விகொஞ்சம் கனத்த புத்திகளுமாவன்
வருவோரை ஆதரிப்பன் மனமது தளர்ச்சியுள்ளான்
திருகுகள் செய்யானுகும் சல்லிய முடையனுகும்
நரைமலர் கந்தம்இஷ்டம் நாயகி தன்னுல்யோகம்

32. கருப்புநிறமுள்ளவன். கொஞ்சம் படிப்புடையவன். கௌரவ புத்தியுள்ளவன். விருந்தினரை ஆதரிப்பான். தளர்ந்த புத்தியுள்ளவன். இடைமுடைஞ்சல்கள் செய்வானுகும். கடன் பாதையுள்ளவன். வெள்ளைப் புட்பங்களுடைய வாசனையில் பிரியமுள்ளவன். பெண்டாட்டியினுல் யோக முடையவன்.

33. இருதுணை ஆண்பாலாகும் இயம்பின பெண்பால்ஒன்று
திருதிகை தீர்க்கமெய்தும் செப்பினோர் மூத்தோராவர்
வரும் கன்னிசுதர்கள் காணுள்மாரன் முன்துணைபெண் [பாலில்
உரைகுவாமென்று சொல்வோம் உத்தமி மேலுங்கேளே.

33. இரண்டு ஆண்சகோதரர்கள் உண்டு. சகோதரியும் ஒருத்தியாவள். இம்மூவரும் தீர்க்கம். இவர்கள் ஜாதகனுக்கு மூத்தவர்களாவர். இளையசகோதரிக்குக் குழந்தைகள் இல்லை. அக்காளுக்குக் குழந்தையுண்டு. மேலும் சொல்லுவோம். உத்தமி கேட்பாயாக.

34. சுதர்களும் எழுவர்தோன்றும் செனிப்பது ஆண்பால் [ரெண்டு
மதிநுதல் பெண்பால்அவ்வார் வரைகுறேும் [தீர்க்கமாக]
அதமாகு மற்றதெல்லாம் அரைகுறேும் அவள்தன்பூர்வம்
முதல்தலம் அருகில்கீழ்பால் உதித்தனள் பேரூர்தன்னில்.

34. எழுபிள்ளைகள் பிறக்கும். ஆண்குழந்தைகள் இரண்டு, பெண் குழந்தைகளும் அப்படியே இருவராவர். இவர்கள் தீர்க்கம். மற்றதெல் லாம் மரித்துப்போம். அவளுடைய பூர்வோத்திரங்களைக் கூறுவோம். முதலில் மேன்மைதங்கிய பேரூரின் கிழக்கே பிறந்தாள்.

35, செங்குந்தர் மரபில்தோன்றி சுதர்களும் அதிகம்உண்டாய்
பொங்கிய குடும்பியாகி பூமியில் நல்லோளாகி
துங்கமாம் தலங்கள்சென்று சென்றனள் காலன்[பக்கல்]
பங்கயன் வரியப்பட்டுப் பிறந்தனள் இந்தமாது.

35. செங்குந்தர் குலத்தில்தோன்றி குழந்தைகளும் அதிகமாக ஏற்பட்டு வளப்பம்பொருந்திய குடும்பியாகி பூமியில் நல்லவளாகி மேன்மை மிக்க ஸ்தலயாத்திரைகள் செய்து மாணமடைந்தாள். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தாள் இம்மாது.

36. பிறந்திடு பெண்பால்யோகம் காரியின் திசையிலேதான்
வரனுலே யோகமில்லாள் மாதுரு தன்னுல்யோகம்
உரைந்திடும் பணிகள்பூமி உயர்வான குடும்பியாவள்
அறம்தன்னை வளர்க்குமெங்கள் ஆத்துமத் தாயேகேளாய்.

36. பிறந்த பெண்பாலின்யோகத்தை எடுத்துப் பேசுவோம். கேளும்! தாயே! புருஷனுல் யோகமில்லாதவள். மாதாவினுல் யோகமுண்டு. பூமியும், பூஷணங்களும் ஏற்படும். மேலான குடும்பத்தை வகிப்பாள். தருமத்தை வளர்த்திடும் எங்கள் ஆத்துமஸ்வரூபியாகிய பார்வதியே! கேட் பாயாக.

37. இருபது ஏழுஆண்டில் இசைந்த கார்த்திகைமாதத்தில்
பெருந்தந்தை கெண்டமென்றேும் பேசுவோம் [முப்பதாண்டில்
உரைதனுர் மாதம்தன்னில் உத்தமி அன்னைகெண்டம்
அறம்தனை வளர்க்குமெங்கள் ஆத்துமத்தாயே கேளாய்.

37. இருபத்தி ஏழாவது பிராயத்தில் கார்த்திகைமாதத்தில் பெற்ற தந்தையின் கண்டம் என்றேும். முப்பதாவது வயதில் தனுர்மாதத்தில் உத்தமியான தாயாரின் கெண்டம் என்றேும். தருமத்தை வளர்த்து ஆத்துமஞானத்தை அளித்திடும் தாயே! கேட்பாயாக.

38. எண்ணஞ்சு ஐந்துஆண்டில் ஏகுவன் வரனுமேதான்
திண்ணமாய் அன்பான்நாலில் துலாமாதம் இவர்க்குக்
[கெண்டம்
வண்ணமாய் இவள்பின்சென்மம் வரைகுறோம் காஞ்சி
[தன்னில்
கண்ணிய முடையளாகி யுதிப்பளாம் இக்குலத்தில்.

38. நாற்பத்தைந்தாவது வயதில் ஜாதகனும் மரணமடைவான். ஐம்பத்திநாலாவது வருஷத்தில் துலாமாசத்தில் இவளுக்குக் கண்டம். இவளுடையபின்ஜன்மத்தைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் இக்குலத்தில் கௌரவத்துடன் பிறப்பாள்.

39. காதலி செனனகாலம் காரியின் திசையிலேதான்
ஓதுவீர் ஈரஞ்சாண்டும் உரைந்திடும் திங்கள்ஆறும்
மேதினில் துணைவர்விருத்தி விளங்காது பூமிசேரும்
தீதுகள் விலகுமென்றோம் திருப்பணி செய்தலுண்டு.

39. காதலியின் ஜனனகாலத்தில் சனிதசையிலிருப்பு வருஷம் பத்து, மாசம் ஆறு. உலகினில் சகோதரர்கள் விருத்தியடையமாட்டார்கள். பூஸ்திதிகள் விருத்தியாம். பீடைகள் நீங்கும். திருப்பணிகள் செய்வாள்.

40. தானிய பலிதமுண்டு சகடுகள் நேருமென்றோம்
மானனை யாட்குரோகம் மருவிபின் நிவிர்த்திஎய்தும்
ஆனதோர் மணங்கள்நேரும் அன்னமும் விரயமாகும்
பான்மையாய் விபரம்ரெண்டில் பகருவோம் தாயேகேளு.

40. தானியங்கள் அதிகமாய் விளையும். வண்டிவாகனங்கள் நேரிடும். மான்போன்ற சாயலுள்ளவளுக்கு வியாதி ஏற்பட்டுப் பின்னால் நிவிர்த்தியாகும். கலியாணச் சடங்குகள் நடக்கும். அன்னதானமும் அதிகமாய் ஏற்படும். பக்குவமாய் மற்றைய விவரங்களையெல்லாம் இரண்டாம் பாகத்தில் விரிவாகக் கூறுவோம். தாயே! கேட்பாயாக.

ஜாதகம் 71

1. சந்திரன் கோலதாக சனிதேளில் கேதுமானில்
மந்திரி நந்தியாக மார்க்கண்டன்[1] ராகுநண்டில்
புந்தியும் வெள்ளிசியம் பூமகன் மாலை[2]புக்க
இந்தவார் கிரகம்நின்று லக்கினம் மேடமாக.

1. சந்திரன் துலாத்திலும், சனிவிருச்சிகத்திலும், கேதுமகரத்திலும், குரு இருஷபத்திலும், சூரியனும் இராகுவும் கடகத்திலும், புதனும் சுக்கிரனும் சிம்மத்திலும், செவ்வாய் கன்னியிலும் நிற்கும்படியான கிரகநிலைகொண்ட இம்மேஷலக்ன ஜாதகத்திற்கு,

	லக்கினம்	குரு	
	இராசி		சூரியன் ராகு
கேது	சக்கரம்		புதன் சுக்கிரன்
	சனி	சந்திரன்	செவ்வாய்

2. பலனதைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும்போது
குலவிய வதிஷ்டர்சொல்வார் குறித்தது ஆண்பால்சென்மம்
தலமது வடதென்வீதி தலைவாசல் இந்திரநோக்கம்
அலைகடல் துயின்றோன்ஈசன் அணுகிடும் குடகிலேதான்.

2. உண்டான பலன்களைச் சொல்லுங்களென்று பார்வதிதேவி கேட்கும்போது வசிஷ்டமகரிஷி சொல்லலுற்றார். இங்குக் குறிப்பிட்டது ஆண்பால் ஜன்மம். பிறந்தவிடம் வடக்குத்தெற்கு வீதியில் கிழக்குப்பார்த்த வாசலையுடையது. திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாளின் கோவில் மேற்குத்திக்கில் உள்ளது.

3. மாரியும் காளிவாயு மஸ்தானும் அருகில்தங்கும்
பாரிய கேடி[3]யுமுண்டு பாஞ்சாலி வடகீழாகும்
வாரண[4] முகத்தோன் தென்மே லரசர்கள்வாசமாமே
மாரிய ஊரேயாகும் பலசாலி இவ்வூர்வாசம்.

---

1. சூரியன்
2. கன்னியாராசி
3. ருத்திரன்
4. யானை

3. அம்மனும், காளியும், மஸ்தானும் அதன்சமீபத்திலே உள்ளர். பெரியசம்ஹாரக் கடவுளாகிய சிவனின் கோவிலும் உண்டு. திரௌபதி அம்மன்கோவில் வடகிழக்கிலுள்ளது. யானைமுகத்தோன் தென்மேற்கில் கோவில் கொண்டுள்ளான். அரசர்கள் வசிக்கும் பெரியஊர். அடிக்கடி மாறுதலையுடைய ஊரேயாகும். பலசாலிகள் வசிக்கும் இடமாகும்.

4. இந்தநல் அடையாளத்துள் இயம்பினேன் இந்தபாலன்
சுந்தர குலத்துவேளாண் சுதனுமே நான்காம்சென்மம்
வந்தவன் தந்தையோகம் வரும்துணை களத்திரபுத்திரர்
சந்தத முன்பின்சென்மம் சாற்றுவோம் இந்நூல்தன்னில்.

4. இத்தகைய நல்ல அடையாளங்கள்கொண்ட இடத்தில் பிறந்தான் நம் ஜாதகன். அழகிய வேளாளர்குலத்தில் இவன் பிறந்தான். இது அவனுடைய நான்காவது ஜன்மம். இவனுடைய தந்தையின்யோகமும் சகோதர, களத்திர, புத்திரர் இவர்கள் யோகங்களையும், முன்பின் ஜன்மங்களைப் பற்றியும் இந்தப்புஸ்தகத்தில் விவரமாய்க்கூறுவோம்.

5. தாதைக்கு தாரம்மூன்றில் தரித்திடு முதல்மாதுக்கு
நீதியாய் உதித்துமைந்தன் நிகழ்த்துவோம் இவனின்தந்தை
மேதினில் துணையாண்காணன் மெல்லியும் ஒருத்தியாகும்
தீதிலா தந்தைசேதி செப்புவோம் கேளும்தாயே.

5. இவனுடைய தந்தைக்கு மூன்று பெண்டாட்டிகள். தீர்க்கமாயுள்ள முதல்பெண்டாட்டிக்கு நியாயமாய் உதித்தமைந்தன் இவன் என்று சொல்லுவோம். இவன் தகப்பன் உலகினில் சகோதரமில்லாமல் வாழ்வான். சகோதரியும் ஒருத்திதான். குற்றமற்ற தந்தையின் செய்திவிவரங்களைச் சொல்லுவோம். கேளும் பார்வதியே!

6. இருநிறம் சமதேகத்தான் இன்பமாய் வார்த்தைசொல்வன்
பெரும்புத்தி அடக்கமுள்ளான் பூமியு மதிகம்சேர்ப்பன்
திருமகள் விலாசமுள்ளான் சேயிழை தன்னால்யோகம்
வருவோரை ஆதரிப்பன் வாக்குசொல் தப்பானுமே.

6. கரியநிறமுள்ளவன். சமமான தேகத்தையுடையவன். இன்பமான வார்த்தைகள் சொல்லுவான். பெருமைதங்கிய புத்திக் கூர்மையுள்ளவன், அடக்கமுடையவன், பூஸ்திதியும் அதிகம் சேர்ப்பான். லட்சுமி கடாக்ஷமுடையவன். பெண்டாட்டியினால் யோகமுண்டு. வந்தவிருந்தினரை ஆதரித்து உபசரிப்பான். சொன்னவாக்குப் பிசகமாட்டான்.

7. கைமுதல் உடையனுகும் கனத்திடும் பனையேர்விருத்தி
ஐயமென் ருேரைக்காப்பன் யாவர்க்கும் உதவிசெய்வன்
பொய்யது வழுத்தாநெஞ்சன் புறம்சொல்லான் இல்லம்
[செய்வன்
மைதனில் பித்தவாயு மேவிடும்என்று சொன்ஞேம்.

7. சுயார்ச்சித சொத்துக்களையுடையவனுகும். பனை, ஏர், இவைகள் அதிகமாக விருத்தியாகும். அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றுவான். யாவர்க்கும் ஒத்தாசை புரிவான். மனத்திலும் பொய்பேச எண்ண மாட்டான். புறங்கூறமாட்டான். வீடுகட்டுவான். இத்துடன் பித்தவாயுவின் தொந்தரவு ஏற்படும் என்று சொல்லுவோம்.

8. பால்பாக்கிய முடையனுகும் பணிதிபாத் திரங்கள்
[சேர்ப்பன்
மால்பத்தி கொஞ்சமுள்ளான் மருமத்தை வெளிக்
[காட்டாதான்
சாலவே சுகபுசிப்பன் தங்கிடு நாபிசூடு
காலத்தை அறிந்துவாழ்வன் கனத்திடும் குடும்பி
[யென்ருேம்.

8. பால்பாக்கிய முடையவனுகும். பணங்காசுகள், பூஷணங்கள், சம்பத்துக்கள், இவைகளைச்சேர்ப்பான். திருமாலினிடம் கொஞ்சம் பக்தி பூண்டவன். இரகசியத்தை வெளிக்காட்டமாட்டான். பொருத்தமாகவே சுக போஜனம் அருந்துவான். மூலச்சூட்டின் உபத்திரவமுடையவன். காலத்தை அறிந்து அதற்குத்தகுந்தாற்போல நடப்பான். பெரிய குடும்பத்தை வகிப்பான்.

9. இந்நெறி உடையானுக்கு இவனுமே உதிப்பாஞகும்
அன்னவன் துணைபன்ஞென்றில் ஆணது இரண்டே
[தீர்க்கம்
பின்துணை ஆண்பாலாக பேசுவோம் எட்டாம்ஜென்மம்
மன்னிய பாட்டிஞலாம் வீணையாம் ராசியாமே.

9. இத்தகைய தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கு இவனுமே புத்திரஞகப் பிறப்பான். அவனுடன் பிறந்த பதிஞெருதுணைவர்களில் இரண்டு சகோதரர்கள் மாத்திரம் தீர்க்கம். அவர்கள் இவனுக்குப்பின் பிறந்தவர்கள். இது அவனுடைய எட்டாவது ஜன்மம். பொருந்திய சங்கீதத்தை எடுத்து விளக்கும் வீணைவாத்தியமாகிய (மிதுனம்) குறிக்கோளாகிய ராசியில் உதித்தவன்.

10. இந்தநாள் உதிப்பானுகும் இயம்புவோம் அவன்குணத்தை
பின்னமில் லாததேகி பிறர்பொருள் இச்சையில்லான்
அன்னியர்க் குதவிசெய்வன் அவனியை விருத்திசெய்வன்
பன்னியே பேசவல்லன் பயிர்த்தொழில் உடையனுமே.

10. இந்ததினத்தில் பிறப்பான். அவனுடைய குணங்களை எடுத்துரைப்போம். பின்னமில்லாத சரீரத்தையுடையவன். பிறருடைய சொத்துக்கு ஆசைப்படமாட்டான். பிறருக்கு ஒத்தாசைசெய்வான். பூஸ்திதிகளை விருத்திசெய்வான். பிரியமாகப் பேசக்கூடியவன். கிருஷித்தொழிலையுடையவனுவன்.

11. தந்தைநாள் பூமிதன்னை தானவன் விருத்திசெய்வன்
பிந்தியும் பூமிசேர்ப்பன் பூமியில் சல்லியம்கொள்ளான்
முந்திடும் பேரைக்காப்பன் நிமலியர் மோகவானும்
தந்தனம் உடையனுவன் தாட்சணியன் தந்திரவாதி.

11. பிதாவின் காலத்திலேற்பட்ட நிலபலங்களை இவன் விருத்தி செய்வான். மேன்மேலும் பூமிகளைவாங்குவான். உலகினில் கடன்வாங்க மாட்டான். அண்டினவரை ஆதரிப்பான். ஸ்திரீகளிடத்தில் மோகங்கொண்டவன். சொந்த சம்பாத்தியமும் உடையவன் தாட்சணியமுடையவன். தந்திரமாகப் பேசிவாதம் செய்வான்.

12. பாரியும் ஒன்றேயாகும் பகர்ந்தன முள்ளூராகும்
கூறுவோம் சுதன்ஆணிரண்டு கோதையும் மூன்றுமாகும்
வீரியன் சிலநாள்ஒன்ருய் மேவுவன் பின்னுல்வேறு
ஏருகள் விருத்திசெய்வன் பால்பாக்கிய முடையனுமே.

12. பெண்டாட்டியும் ஒருத்திதான். அவளும் உள்ளூரிலிருந்து வருவாள். ஆண்குழந்தைகள் இருவரும், பெண்கள் மூவரும் பிறப்பார்கள். இவன் சிலகாலம் எல்லாருடன் ஒத்துவாழ்வான். பின்னுல் வேருயிருப்பான். ஏர்கள் விருத்தியாகும். பால்பாக்கிய முடையவனுகும்.

13. பின்வரும் துணைவன்சேதி பேசுவோம் தேங்காய்நாளாம்
மன்னிய தனுசுநாளாம் அவன் பதிஞேராம்சென்மம்
பன்னியே பேசுகின்ருேம் பகருவான் கட்டுவார்த்தை
தன்சொல்லே மேன்மையாக சாதிப்பான் கல்விமானும்.

13. தம்பியின் சங்கதிகளைக் கூறுவோம். கேட்டை நட்சத்திரம் பொருந்திய மார்கழிமாதம் பிறப்பான். இது அவனுடைய பதிஞேராம் ஜன்மம். பிரியமாகப்பேசுவான். பேத்துமாத்தலாய்ப் பேசுவான். தன்னுடைய வார்த்தைகளைப் பெரிதென்று சொல்லி சாதிப்பான். நல்லபடிப்பாளி.

14. நித்திரை விருப்பம்கொள்வன் நீர்தன்னில் தோயவல்லன்
பத்தினி நேயனுகும் பணிதிபாத் திரங்கள்சேர்ப்பன்
சித்தினி வியாதியாவன் தந்தைக்குத் தாழ்வுருதான்
சுத்தவான் செட்டுச்செய்வன் சிறப்பான குடும்பியாவன்.

14. தூங்குவதில் பிரியம் அதிகம். தீர்த்தாடனம் செய்வதில் பிடித்த முள்ளவன். பெண்டாட்டியினிடம் பிரியமாக இருப்பான். சகலசொத்துக் களேயும் சம்பத்துக்களேயும் சேர்ப்பான். கொஞ்சம் மனேவியாகூலத்தினுல் வியர்தி ஏற்படும். தந்தையின் ஸ்திதிக்குத் தாழ்வாக இருக்கவே மாட்டான். சுத்தமுடையவன். வியாபாரம்செய்வான். சிறப்புற்ற குடும் பத்தை வகிப்பான்.

15. வஞ்சக வஞ்சனுவன் மனமது கபடுமுண்டு
அஞ்சிலான் ஒருவருக்கும் யாரையும் வசியம்கொள்வன்
மிஞ்சியே பேசுவானும் மனேவியும் ஒன்றேயாகும்
தஞ்சமாய் உள்ளூராகும் சந்ததி ஆணபால்ஒன்று.

15. வஞ்சகர்களுக்கு வஞ்சகனுவன். மனதில் கபடமுமுடையவன். யாவருக்கும் பயப்படமாட்டான். யாரையும் தன்வசப்படுத்து மியல்பினன். அதிகமாகப் பேச்சுப்பேசுவான். பெண்டாட்டியும் ஒருத்திதான். அவளும் உள்ளூரிலிருந்து வருவாள். ஆண்குழந்தை ஒன்று பிறக்கும்.

16. பெண்ணது மூன்றும்தீர்க்கம் பூமியில் சல்லியம்
[கொள்ளான்
கண்ணன்தன் பத்திபூண்பன் கனமான குடும்பியாவன்
விண்ணினில் கீர்த்தியேற்பன் வீண்கலகங்கள் செய்யான்
அண்ணலேப் பூசைசெய்யும் அம்பிகை யாளேகேளாய்.

16. பெண்குழந்தைகள் மூன்று, அவர்கள் தீர்க்கம். பூலோகத்தில் கடன்படான். கிருஷ்ணப்பிரேமையில் ஈடுபடுவான். கௌரவமுள்ள குடும் பத்தை யுடையனுவன். மறுமையிலும் கீர்த்திபெறுவான். வீணுகக் கலகங் கள் செய்யமாட்டான். பகவானேப் பூஜைசெய்யும் அம்பிகையே! கேட்பா யாக.

17. உதித்தவன் குணத்தைச்சொல்வேன் உறுதியில்லாத
[நெஞ்சன்
மதிப்பான குடும்பியாவன் மறுமொழி கூறுனுகும்
சதியிலா மனத்தனுவன் தன்மனம் கபடுமில்லான்
நதிபல தீர்த்தம்தோய்வன் நல்லோர்க்கு நல்லனுவன்.

17. ஜாதகனின் குணங்களைச்சொல்லுவோம். மனதில் திடமில்லாதவன். மேன்மையான குடும்பத்தில் வாழ்பவன். பெரியோர் சொற்களுக்கு எதிர்மொழி சொல்லாதவன். பற்பல நதிகளிலும் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்வான். நல்லவர்களுக்கு நல்லவனுவன்.

18. மால்நிறம் சமதேகத்தன் மானிலம் கிருஷிசெய்வன்
ஈனமாம் குணங்களில்லான் இன்பமாய் வார்த்தை
[சொல்வன்
தானமும் தருமம்செய்வன் சகோதரர் தன்னைக்காப்பன்
ஊனமில் லாததேகன் உத்தமி மேலும்கேளே.

18. மாநிறமுடையவன். சமமான தேகத்தையுடையவன். பரந்த பூமியில் கிருஷித்தொழில் செய்வான். சகோதரர்களைக் காப்பாற்றுவான். பின்னமில்லாத சரீரத்தையுடையவன். பார்வதியே மேன்மேலும் கேட்பாயாக.

19. உண்டியும் சுகமாய்க்கொள்வன் உறப்பொடு புளிப்பிலிச்சை
வண்டிவா கனமுமுள்ளான் மானனையார்க்கு நேயன்
துண்டமாய்ப் பேசமாட்டான் சொல்லுமுன் கோபியாவன்
தண்டமிழ் உடையனுகும் தையலர் மோகவானே.

19. சுகமாய்ச் சாப்பிடுவான். உறைப்பு, புளிப்பு என்ற உருசிகளுள்ள உண்டிகளையே ஆசைப்பட்டுப் புசிப்பான். வண்டிவாகனமுமுள்ளவன். ஸ்திரீகளிடத்தில் பிரியமாயிருப்பான். கண்டிப்பாய்ப் பேசமாட்டான். முன் கோபமுடையவன் என்று சொல்லுவார்கள். இனிமையாய்க் குளிர்ந்த தமிழ் வித்தையை உடையவன். ஸ்திரீலோலனுவன்.

20. கடன்கொளான் இடுக்கம்யில்லான் காரிய மறிந்துசெய்வன்
மடையரைச் சேரானுகும் வந்தவர்க் கன்னமீவன்
தடபுடல் செய்கையுள்ளான் தன்கரம் பத்மரேகை
விடவுரை கூருனுகும் வித்தகி மேலும்கேளே.

20. கடன்வாங்கமாட்டான். இடைஞ்சல் இல்லாதவன். காரியங்களை ஆராய்ந்தறிந்து செய்வான். மடையரைச் சேர்த்துக் கொள்ளமாட்டான். வருவிருந்தினரை உபசரிப்பான் தடபுடலான காரியங்களைச் செய்வான். தன்கையில் பத்மரேகையையுடையவன். கோபமான பதிலுத்தரம் சொல்ல மாட்டான். பார்வதி ! மேலும் கேட்பாயாக.

21. ஐயைந்து ஆண்டுமேலாய் அணுகிடும் பாரிதானும்
தையலும் உள்ளூர்தெற்கில் தாய்வர்க்கம் மாமன்பெண்ணை
ஐயமில் லாமல்கொள்வன் அவள்குணம் மாஞ்சிவப்பள்
நையவே கூருளாகும் மந்தபுத்தி யோகசாலி.

21. இருபத்தைந்து பிராயத்திற்குமேல் கலியாணம் ஏற்படும். பெண் டாட்டியும் உள்ளூரிலிருந்து வருவாள். தெற்கே தாய்வருக்கத்தில் மாம னுடைய பெண்ணை சந்தேகமில்லாமல் மணப்பான். அவள்குணங்களைக் கூறுவோம். மாநிறமுள்ளவள். கோபமாகப் பேசமாட்டாள். மந்தமான புத்தியுடையவள். நல்ல யோகசாலி.

22. வரன்மனம் போலேவாழ்வள் மறுத்தவார்த்தைகளும் [கூறுள்
உறன்முறைக் கினியதாகும் உரைக்குமுன் கோபியாவள்
பொரைசொல்லாள் பணிகளிச்சை புண்ணியமனத்த [ளாகும்
திருமகள் வாசமுள்ளாள் சீலமா மென்றுசொல்வோம்.

22. புருஷனுடைய இஷ்டம்போல் நடப்பாள். எதிர்த்துப் பேசமாட் டாள். சொந்தக்காரர்களிடம் இனிமையாய் நடப்பாள். முன்கோபமுடை யவள். பொய்பொரை சொல்லமாட்டாள். பூஷணங்களில் இச்சையுள்ளவள். தருமசிந்தனையுள்ளவள். லட்சுமீ கடாக்ஷமுடையவள். சீலமுள்ளவள் என்று சொல்லுவோம்.

23. புத்திர விருத்திதன்னைப் புகலுவோம் எழுவர்தோன்றும்
சித்தமாய் ஆண்பாலொன்று தீர்க்கமாம் பெண்பால் [மூன்று
குத்தமாம் முதலில்என்றீரும் குறுமுனி கேட்கலுற்றார்
புத்திரர் முதலில்பீடை புகலும் காரணங்களென்ன.

23. புத்திரபாவத்தைப் பற்றிக் கூறுவோம். ஏழுகுழந்தைகள் பிறக்கும். நிச்சயமாய் ஆண்குழந்தை ஒன்று பிறக்கும். அது தீர்க்கம். பெண்குழந்தைகள் மூன்று. முதலில் சிலசேதமாம். அகஸ்தியர் வினவ லானார். புத்திரர்பிறந்து முதலில் பீடையடையும் என்றீர்களே. காரணங்க ளென்னவென்று சொல்லும்.

24. அஞ்சினில் புகரும்புந்தி அமர்ந்திட காரிபார்க்க
துஞ்சிடு முதலில்புத்திரர் தோன்றிடும் அதன்பின்விருத்தி
மிஞ்சிய ஜென்மந்தன்னில் மேவிற்று அந்ததோஷம்
தஞ்சமாய் வந்தஊழை சாற்றுவீர் முனியேநீதான்.

24. லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் சுக்கிரனும் புதனும் சேர்ந்து நிற்க, அவர்களைச் சனி தன் பத்தாம்பார்வையினால் பார்க்க முதலில் புத்திரர் பிறந்து தோஷமாம். அதற்குப் பிறகு விருத்தியாகும். மேல்வரும் ஜன்மங்களில் அந்ததோஷம் ஏற்படும். அப்படி வந்து அடைந்த ஊழ்வினை யைச் சொல்லுங்கள் முனிவரே நீங்கள்.

25. முன்னவன் இருந்தசென்மம் மொழிகுறோம் ஊரின்பக்கல்
பன்னுமா பலியிலேதான் பிறந்தனன் வன்னியனுக
தன்மனை மதலையுண்டாய் தரணியில் கிருஷிசெய்து
இன்னவன் வாழும்நாளில் இயம்புவோ மூழிதானே.

25. முன்பு அவன் இருந்தஜன்மத்தைப் பற்றிப்பேசுவோம். ஊரின் பக்கத்தில் உள்ள மகாபலிபுரத்தில் பிறந்தான். வன்னியர்குலத்தில் பிறந்து பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டுப் பூமியில் கிருஷித்தொழில் செய்து இவன்வாழ்ந்து வரும் காலத்தில் ஓர் ஊழ்வினை ஏற்பட்டது. அதைக் கூறுவோம் கேட்பாயாக.

26. அந்நகர் வைசியன்தான் அவனுக்குச் சுதர்களின்றி
நன்னயக் கிரிப்பிள்ளை நாயகன் வளர்த்தானென்றும்
இன்னவன் குக்கல்[1] தன்னை யேவினன் மிருகத்தின்மேல்
துன்மர ணங்களாக சேர்ந்தது கிரிதானும்

26. அந்த ஊரில்உள்ள வைசியன் ஒருவன் பிள்ளைகளில்லாமல் நன்னயமாகக் கிரிப்பிள்ளையை வளர்த்துவந்தான் என்றும். இவன் அந்த மிருகத்தின்பேரில் தன்னுடைய நாயை ஏவினன். கிரியும் இறந்தது.

27. வணிகனும் மனவெறுப்பால் வரைகுறன் பாவியேநீ
வினைகொண்டாய் பிள்ளைதன்னை மேவிய மறுசென்மத்தில்
கனமுள மதலைதோன்றி கழறுகா லங்கள்தன்னில்
பிணையாகும் சுதர்கள்தானும் பேசினன் வைசியனென்றன்

27. வணிகனும் மனவெறுப்புக்கொண்டு சபிக்கலானன். பாவியே! நீ ஒரு பாவத்தைச்செய்தாய். இந்தவினை உன்னைவிடாது. அடுத்த ஜன்மத்தில் பிள்ளை உண்டாகி வாழ்ந்து வருங்காலத்தில் தோஷம் புத்திரர் களுக்கு ஏற்படும். இவ்வாறு வைசியன் சபித்தான்.

28. அந்ததோர் தோஷமுண்டு அணுகிற்று இவனுக்கேதான்
பிந்தியும் சிலதுதுன்பம் புக்கிற்று குற்றமில்லை
இந்தவன் சிலதுபுண்ணியம் இசைந்தது இவனுக்கேதான்
சந்திரன் பிறையணிந்த சங்கரன் தொண்டுசெய்து.

28. அந்த ஒரு தோஷமுமுண்டு. அது இவனை வந்தடைந்தது. பின்னல் சிலதுன்பங்கள் ஏற்பட்டன. அதனல் குற்றமொன்றுமில்லை. இவன்சில புண்ணியங்கள் செய்தான். அது காரணமான சௌகர்யங்கள் அவனுக்கு ஏற்பட்டன. பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்த பரமசிவனைத் தொண்டுசெய்து துதித்து,

---

1. நாய்

29. ஏமனூர் உலகடைந்து எய்தினன் இந்தபாலன்
சேமமாம் குடும்பியாவன் செட்டியின் சாபத்தாலே
தீமைகள் முதல்சுதர்க்கு செப்பினோம் கேளும்தாயே
நேமியில் தோஷம்தீர நிகழ்த்துவீர் சாந்திதானே.

29 எமலோகம்சென்று திரும்பவும் உதிக்கலானன். இந்தபாலகன் சேமமான குடும்பியாவன். வைசிய செட்டியின் சாபத்தினாலே பிள்ளைகளுக்கு முதலில் தீங்கு ஏற்படும் என்று சொன்னோம். தாயே! கேளும், உலகினில்தோஷம் தீருவதற்கு ஒருசாந்திசொல்லுவீர்.

30. எச்சாந்தி செய்தாலும்தான் இலகாது கீரிதோஷம்
நச்சுபோல் சேருமென்றோம் நசித்திடு முதலிலேதான்
கச்சணி மாதுர்வம்சம் கழறுவோம் இனிமேலாக
பச்சைமால் மனைவியொக்கும் பகருவாள் சுகமாய்வார்த்தை.

30. எந்தப் பரிகாரம் செய்தபோதிலும் கீரியின்தோஷம் விலகாது. விஷம்போல் வந்தடையும். முதலிலேயே இடைஞ்சல் ஏற்படும். மாதாவின் வமிசத்தைப்பற்றிக் கூறுவோம் இனிமேலாக. திருமாலின் மனைவியைப் போன்றவள். சுகமான வார்த்தைகளைப் பேசுவாள்.

31. பித்தமாம் வாயுரோகம் பொருந்திடும் நிதானமுள்ளாள்
சுத்தமாம் வறுமைகாணுள் துணைவர்கள் மூன்றுண்
[என்றோம்
சக்திமார் அவ்வார்தீர்க்கம் தங்காது மற்றதெல்லாம்
வித்தகர் சிலநாள்பின்பு வேறுவர் யோகவான்கள்.

31. பித்தத்தினாலும் வாயுவினாலும் ரோகபீடைகள் ஏற்படும். நிதானமுள்ளவள் சுத்தமுள்ளவள். மூன்று சகோதரர்கள் உண்டு. சகோதரிகள் அப்படியே. இவர்கள் தீர்க்கம். மற்றவை தங்கா. எல்லாரும் சிலநாள் கழித்து வேருகப் பிரிந்துபோவார்கள். யாவரும் யோகவான்கள்.

32. மாதுரு பூர்வம்சொல்வேன் மதுரைக்கு அருகில்கீழ்பால்
மேதினில் சமவூர்தன்னில் விளங்கினள் கோகுலத்தில்
பாதக மனமில்லாமல் பரஉப காரியாயும்
பூதலம் நல்லோளாயும் புத்திர ரதிகம்உண்டாய்.

32. மாதாவின் பூர்வோத்திரத்தைச் சொல்லுவேன். மதுரைக்குச் சமீபத்தில் கிழக்கே சமவூரில் இடைச்சேரியில் விளங்கினள். கெட்டபுத்தியில்லாமல் பரோபகாரியாகி உலகினர்க்கு நல்லவளாயும், புத்திரர்கள் அதிகம் ஏற்பட்டும்,

33. வினையது இல்லாதாகி மேவினள் காலன்பக்கல்
கனமுள பிரமன்லக்கம் காசினில் வரியப்பட்டு
சினமிலா கங்கைசேயாய் செனித்தனள் இவளேயென்றோம்
கனமத வானைபெற்ற காதலி மேலும்கேளே.

33. பலவினைகள் இல்லாமல் எமலோகம் சென்றாள். பிரம்மாவின் சிருஷ்டியினால் வேளாளர்குலத்தில் இவளே செனித்தாள். விக்கினேச்வரரைப்பெற்ற பார்வதியே! மேலும் கேட்பாயாக.

34. மறுசென்மம் சேரநாட்டில் மாதுவும் இக்குலத்தில்
திருமகள் விலாசம்பெற்று செல்வதி வாழ்வாளாகும்
உரைகுறோம் தந்தைபூர்வம் உயர்காஞ்சி தன்னிலேதான்
அருமறை குலமுதித்து அரசரால் தொழிலும்பெற்று,

34. அடுத்தஜன்மம் சேரநாட்டில் இவள் இக்குலத்தில் லட்சுமி கடாட்சம்பெற்று வாழ்வாளாகும். பிதாவின் பூர்வத்தைக் கூறுவோம். மேலான காஞ்சீபுரத்தில் பிராமணகுலத்திலுதித்து அரசாங்கத்தில் தொழிலும் பெற்று,

35. சுகமுள குடும்பியாகி சுந்தரன் வாழுநாளில்
பகையாக வந்தஊழைப் பகருவேன் கேளும்தாயே
தகைமையாய் இருவர்தானும் சாதியோர் விரோதமுற்று
அகமது திரிதல்வேண்டி அடைந்தனர் இவர்பாலும்தான்.

35. சுகம் அனுபவிக்கும் குடும்பியாகி இவன்வாழ்ந்துவரும் காலத்தில் பகையாக வந்த ஊழ்வினையைச் சொல்லுவேன். கேளும் தாயே! தகுதியாக இரண்டு சாதியினர் விரோதமடைந்து வீட்டைவிட்டுத் திரிந்து இவனிடம் வந்து முறையிட,

36. மாரனும் அவர்சொல்கேட்டு மதிப்பிலா ஒருவன்தன்பால்
ஓரவஞ் சனையால்தீர்ப்பு உகந்திட்டான் ஒருவன்கண்டு
சாரியாய் தீர்ப்புஇன்றிச் சதிசெய்த பாவிக்கேதான்
வேறொரு சென்மந்தன்னில் விளங்காது துணைவர்தானே.

36. இவன் அவர்கள் வார்த்தையைக்கேட்டு மதிப்பில்லாத ஒருவன் பக்கத்தில் பட்சபாதமாக ஓரவஞ்சனையுடன் தீர்ப்புச்சொன்னான். மற்றொருவன் இதுகண்டு, பட்சபாதமாய் சரியான தீர்ப்பு இல்லாமல் வஞ்சனைசெய்த பாவிக்கேதான் வேறு ஒருஜன்மத்தில் சகோதரர் விளங்கமாட்டார்கள்.

37. ஆதியில் அலைச்சலாகி ஆய்சுக மில்லாதாகி
மாதுமே வேறுகண்டாய் வாழ்குவாய் என்றுசொல்லி
வேதத்தோன் தெருதூள்வாரி விட்டனன் இல்லம்
[சென்றான்
போதவே அந்ததோஷம் புக்கிற்று இவனுக்கேதான்.

37. ஆதியில் அலைச்சல் ஏற்படும், தாய்க்குச் சுகமில்லாமலும், வேறு இடத்தில் வாழ்குவாய் என்று மறையவர் தெருவிலுள்ள புழுதிமண்ணை வாரி இறைத்தான். பிறகுதன் வீடுசென்றான். அந்ததோஷம் இவனையே வந்தடைந்தது.

38. 38-வது பாட்டு ஏட்டுப்பிரதியில் காணப்படவில்லை.

39. மைந்தனும் அந்தியத்தில் அரசர்பால் தொழிலும்நீங்கி
பந்துகட் கன்னமீந்து பரந்தனன் காலன்பக்கல்
புந்தியில் உதித்தோன்தன்னால் உதித்தனன் இக்குலத்தில்
சுந்தரி கேட்கலுற்றாள் சுதனுமே முன்சென்மத்தில்.

39. இவனும் கடைசிகாலத்தில் அரசாங்கத்தொழிலுமில்லாமல் பந்துக்களுக்கு அன்னமளித்துக் காலன்பக்கல் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் உதிக்கலானான். இந்த வார்த்தை பார்வதி கேட்கலுற்றாள். இவனுமே முன்ஜன்மத்தில்,

40. மறைகுல மதனில்உதித்து வந்தவன் இச்சென்மத்தில்
வரநதி குலத்திலேதான் வந்தகா ரணங்களென்ன
மறைகளை முன்சென்மத்தில் மருவாமல் நின்றதோஷம்
உறைந்தனன் இக்குலத்தில் உத்தமி மேலும்கேளே.

40. பிராம்மண குலத்தினில் உதித்துவந்தவன் இச்சென்மத்தில் வேளாளர்குலத்தில் வந்த காரணங்களென்ன என்றுவினவ, முன்ஜன்மத்தில் வேதங்களை சிரவணம் செய்யாமல் நின்ற தோஷத்தினால் இக்குலத்தில் உதித்தான். உத்தமி! மேலுங்கேட்பாயாக.

41. இருபிறப் பாளன்சாபம் எய்திற்று இச்சென்மத்தில்
வரும்துணை ஆண்பால்காணான் மாதுரு ஆதிவீழ்வள்
உரைந்திடும் இரண்டாம்தாய்மார் உரையாது அவர்க்குப்
[புத்திரர்
பிறந்தினும் தீதேயாகும் புக்கிடும் நாபிரோகம்.

41. பிராம்மண சாபமும் வந்துசேர்ந்தது. இந்தஜன்மத்தில், சகோதரனேயில்லை. மாதா ஆரம்பத்தில் மரிப்பாள், இரண்டாவது தாயார்

வருவாள். அவளுக்குப் புத்திரர் இல்லை. பிறந்தாலும் இறக்கும். மூலச் சூடு ஏற்படும்.

42. எந்தகா லத்திலேதான் எய்திடு மந்தரோகம்
வந்தவன் இருபான்எட்டு மேலேதான்......காதம்
விந்தையாய் வாயுரோகம் மேவிடும் இவனுக்கேதான்
அந்ததோர் ரோகம்தீர அறைகுவீர் கிரியையொன்று.

42. அந்தரோகம் எந்தக்காலத்தில் ஏற்படும். ஜாதகனுக்கு இருபத்து எட்டாம் பிராயத்திற்குப் பிறகுதான். ஆச்சரியமான ரோகம் இவனுக்கே தான் ஏற்படும். அப்படிப்பட்ட ரோகம் தீருவதற்கு சாந்திஒன்று சொல்லுங்கள்.

43. கருமசாந் திகளும்செய்து கனத்தகூஷ் மாண்டலேகியம்
ஒருமண் டலங்கள்கொள்ள ஒதுங்கிடு மந்தரோகம்
மருமமாய் செய்யானுகில் மறலிதன் பதிக்குச்செல்வன்
உரைகுறும் விபரம்ரெண்டில் உத்தமி மேலும்கேளே.

43. கருமசாந்திகளும் செய்து கனமான கூஷ்டமாண்டலேகியம் ஒரு மண்டலம் சாப்பிட்டால் அந்தவியாதி நிவர்த்தியாகும். இரகசியமாய்ச் செய்யானுகில் எமலோகம் செல்லுவான். இவனைப்பற்றிய மற்றைய விவரங்கள் இரண்டாம்பாகத்தில் கூறுவோம். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

44. முப்பது ஐந்துஆண்டில் மேடமா தத்திலேதான்
செப்புவேன் காரிசத்திரம் சிறந்திடு ராகுபுத்தி
ஒப்புடன் தந்தைகெண்டம் உரைத்தனம் இதுமுன்னாக
மைப்புடன் முப்பான்மூன்றில் விளம்பின ரோகத்தாலே.

44. முப்பத்து ஐந்தாவதுவயதில் சித்திரைமாசத்தில் சனிதசையில் இராகுபுக்தியில் தந்தையின்கண்டம் ஏற்படும். இதற்கு முன்னமேயே முப்பத்துமூன்றாவது வயதில் சொன்ன வியாதியின் காரணமாக,

45. மாரகம் போலேகண்டு மருந்தினால் நிவர்த்தியாகும்
தீரமாய் நாற்பதாண்டில் திருவாதிரை மாதம்தன்னில்
காரியின் திசையிலேதான் குலவிய சுயபுகுத்தி
பாரினில் அன்னைகண்டம் பார்வதி மேலும்கேளே.

45. மாரகம்போல் ஏற்பட்டு மருந்துகள்கொடுத்து நிவர்த்தியாகும். நிச்சயமாக நாற்பதாவது வயதில் மார்கழிமாசத்தில் சனிதசை சுயபுத்தியில் அன்னையின்கண்டம் ஏற்படும். பார்வதி! மேலும்கேட்பாயாக.

46. அறுபது ஐந்துஆண்டில் அர்ப்பசி மாதம்தன்னில்
குறைபக்கம் சதுர்த்தசியில் கூத்தன்தன் பதிக்குச்செல்வன்
மறுசென்மம் மதுரைதன்னில் வளமுள தனவானுக்கு
உரைகுவான் கங்கைசேயாய் உத்தமி கேட்கலுற்றார்.

46. அறுபத்தைந்தாவது வயதில் அற்பசிமாதத்தினில் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசியில் நம் ஜாதகன் எமலோகம்செல்லுவான். அடுத்த ஜன்மம் மதுரையில் வளப்பம்பொருந்திய தனவானுக்கு வேளாளர்குலத்தில் பிறப்பான். உத்தமி கேட்கலுற்றாள்.

47. தந்தையின் மறுசென்மத்தைச் சாற்றுவீர் மறு
[சென்மத்தை
அந்தவன் துவாரைபக்கல் அணுகிய பேரூர்தன்னில்
முந்திய குலமுதிப்பான் முதல்வனு மிச்சென்மத்தில்
எந்தபுண் ணியங்கள்செய்தான் இயம்புவீர் விபரமாக.

47. தந்தையின் மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுங்கள். அவன் துவாரகையின் பக்கத்திலுள்ள பேரூரில் பிராம்மண குலமுதிப்பான். அவனும் இந்த ஜன்மத்தினில் எப்படிப்பட்ட புண்ணியங்களைச் செய்தான்? விவரமாகச் சொல்லுங்கள்.

48. சொல்லுவேன் கேளுமம்மா சுத்தநன் மனத்தனும்
புல்லியோர்க் குதவிசெய்தும் புகல்வது தவறாதாகும்
எல்லையை அளந்தோன்பத்தி இடுக்கமென் றோரைக்காத்தும்
வல்லவன் வாழ்வதாலே மறைக்குலம் தோன்றுவானும்.

48. சொல்லுவோம். அம்மா! கேளும். சுத்தமான நல்லமனத்தை யுடையவனும், ஏழைகளுக்கு உதவிசெய்தும், தப்பில்லாதவார்த்தைகளைச் சத்தியமொழிகளாகக் கூறியும், உலகளந்த பெருமாளிடம் பக்திபூண்டும், சிரமப்பட்டவர்களுக்கு ஒத்தாசைசெய்தும் இவன் வாழ்ந்ததனாலே பிரம்ம குலத்தில் தோன்றலானான்.

49. இன்னவன் பொதுயோகத்தை இயம்புவோம் தாயேகேளு
அன்னவன் செனனம்தொட்டு அவனுட ஆயுள்மட்டும்
சந்திரன் பிறைபோல்யோகம் சார்ந்திடும் வறுமைகாணான்
தன்னிலே பூமியாலே சம்பத்துண் டாகுமின்னே.

49. இவனுக்குப் பொதுவாக ஏற்பட்ட யோகங்களை எடுத்துரைப் போம். தாயே! கேளும். அவன் பிறந்தநாள் முதல் சாகும்வரை பிறைச் சந்திரனைப்போல யோகம் வளர்ந்தோங்கும். தரித்திரமேயில்லை. தானாகவே பரிசிரமப்பட்டு பூஸ்திதிகளை விருத்திசெய்து சம்பத்துக்கள் ஏற்படும்.

50. எண்ணஞ்சு ஆருண்டின்மேல் இல்லமும் பாகம்மூன்ருய்
திண்ணமாய் நேருமென்ருேம் செப்பின மொழிகுன்ருது
வண்ணமாய் மூன்றுஇல்லம் வரைந்தனம் இவனுக்கேதான்
எண்ணிய குடும்பியாவன் கீர்த்தியு மேறபானென்ருேம்.

50. நாற்பத்து ஆருவது வயதிற்குமேல் வீடு மூன்றுபாகமாகிவிடும். இதுதிண்ணம். நாங்கள் சொன்னபலன் சரியாகவேயிருக்கும். இவனுக்கே அழகான மூன்றுவீடுகள் ஏற்படும் என்று சொல்லுவோம். மதிப்பான குடும்பியாவன். கீர்த்திபெறுவான் என்ருேம்.

51. பொன்பணி பூமிவீடு புரப்பன் முப்பாயிரம்பொன்
பின்வய தினிலேதானிய செட்டுகள் பொருந்துமென்ருேம்
அன்னவன் செனனகாலம் அரவுதன் திசையிருப்பு
சொன்னனே ஆண்டுநாலும் திங்களு மேழதாமே.

51. பொன், பூஷணம், பூமி வீடு இவைகளைத்தேடுவான். மொத்தம் அவன்சொத்துக்கள் முப்பதிஞயிரம் பொன்களாம். பிற்காலத்தில் தானிய வியாபாரம்செய்து சம்பத்துக்கள் சேரும். அவனுடைய பிற்காலத்தில் இராகுதசையில் இருப்பு வருஷம் நான்கு, மாசம் ஏழாகும்.

52. பலனது புகலக்கேளாய் பாலகன் தனக்குரோகம்
குலவிபின் நிவர்த்தியாகி யுதித்திடும் துணைவர்தானும்
நிலமதால் தான்யம்சேரும் நேர்ந்திடும் பொருளுமேதான்
மலையிறை மகளேபின்பால் வரைகுருேம் விபரமாக.

52. இதன் பலனைச்சொல்லுகிறேன், கேள். பாலகன் தனக்கு வியாதிஏற்பட்டுப் பிறகு நிவர்த்தியாகிவிடும். சகோதரர் ஏற்படுவார்கள். பூமிவிளைச்சலால் கண்டுமுதல் அதிகமாகும். பொருள்களும் சேர்ந்திடும். மலையவான் புத்திரியே! மற்றைய விவரங்களைப் பின்பாதியில் கூறுவோம்.

ஜாதகம் 72

1. மதிகுரு சீயமாக மங்களன் கேதுவண்டி
புதன்ரவி நந்தியாக புகர்மேடம் காரிதேளில்
அதிகயர் மானதாக ஆட்டது சென்மமாக
இதுவிதக் கோளுநின்றால் இயம்புவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் குருவும் சிம்மத்திலும், செவ்வாயும் கேதுவும் கடகத்திலும், புதனும் சூரியனும் ரிஷபத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், சனி விருச்சிகத்திலும், இராகு மகரத்திலும் நிற்கும்படியான கிரக நிலை கொண்ட இம் மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலா பலன்களைக் கூறுங்கள்.

	லக்கினம் சுக்கிரன்	புதன் சூரியன்	
	இராசி சக்கரம்		கேது செவ்வாய்
ராகு			சந்திரன் குரு
	சனி		

2. இத்தகை நவக்கோள்நிற்க இந்தசேய் ஆணும்சென்மம்
பெத்திடு பலன்[கள்]எல்லாம் பேசுவோம் கீழ்மேல்வீதி
சத்தியே தென்பால்வாடை சார்ந்திடும் கூரைஇல்லம்
அத்திமா முகனுமுத்திர மருகரும் வடமேலாகும்.

2. இத்தகைய நவக்கிரகங்கள் நிற்கும்படியான இந்த ஜாதகன் ஆண் ஜன்மம். அதற்குண்டான பலன்கள் எல்லாம் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில் அவன் பிறந்த வீடு. அம்பாளுடைய கோவில் தெற்கு வாடையிலுள்ளது. வீடு ஒரு கூரை மேய்ந்த வீடு. பிள்ளையார் கோவில் வடக்கிலுள்ளது. அருகர் கோவில் வடமேற்கில் உள்ளது.

3. மாரியும் காளிகோஷ்டம் வடகீழ்பால் தங்குமென்றேம்
தீரமாய் மேற்கில்சந்தி செப்புமிவ் வடையாளத்துள்
சீரிய ஊரேயாகும் சிறந்திடும் புத்தர்வம்சம்
மாரனும் இரண்டாம்சென்மம் வருகுவா னிந்தபாலன்.

3. அம்மன், காளி இவர்கள் கோவில்கள் வடகிழக்கிலுள்ளன. மேற்கில் சந்து உள்ளது. சொல்லிய இந்த அடையாளங்கள் கொண்ட சிறிய ஊரில் புத்தர் வம்சத்தில் இவன் பிறந்தான். இது இவனுடைய நாலாவது ஜன்மம்.

4. தந்தைதுணை இருமூன்றில் ஆண்பா லிரண்டு
சாற்றுகிறேம் பெண்ணிரண்டு தீர்க்க மெய்தும்
நொந்திடுமே இரண்டு என்றேம் வேறுய்ச் செல்வர்
நேமியினில் தாமகரம்பூ ரட்டை நாளாம்
சந்ததமு மாநிறத்தான் சமதே கத்தன்
சாந்தவான் கல்விகொஞ்சம் தைரி யத்தன்
நொந்தவரை ஆதரிப்பான் ஈகையுள்ளான்
நிலமதனுல் சீவனங்கள் நிகழ்த்த லாமே.

4. தந்தையின் துணைவர் ஆறு பேர்கள் ஆண்பாலிரண்டு என்போம். சகோதரிகள் இருவர். இவர்கள் தீர்க்கம். இரண்டு பேர்கள் வேறுகச் செல்லுவார் உலகினில். மகர லக்கினம், பூரட்டாதி நட்சத்திரத்தில் உதிப்பான். மாநிற முள்ளவன். சமமான தேகத்தை யுடையவன். சாந்தகுண முடையவன். கொஞ்சம் படிப்புடையவன். தைரியஸ்தன். சிரமப்பட்டவர்களை ஆதரிப்பன். தருமிஷ்டன். நிலங்களின் பலனைக்கொண்டு ஜீவனங்கள் நிகழ்த்துவான்.

5. மனமது அழுத்தமுள்ளான் மங்கையர் மோகவானும்
இனமதற் கினியனுகும் இடரான புத்திஇல்லான்
தனமது சிலவுசெய்யான் சாற்றுவான் அற்பப்பொய்யும்
முனிவிலான் துருசாய்ச்செல்வன் மூலமாம் வஸ்துஇஷ்டன்.

5. மனதில் அழுத்த முடையவன். ஸ்திரீகளிடத்தில் மோக முடையவன். சொந்தக்காரர்களுக்கு இனிமையாக நடப்பான். தொந்தரவான புத்தியை யுடையவனல்லன். பணத்தைச் செலவு செய்ய மாட்டான். கொஞ்சம் பொய்யும் சொல்லுவான். கோப மில்லாதவன். சுறுசுறுப்பாய் நடப்பான். மூலப் பொருள்களில் இஷ்ட முள்ளவன்.

6. மனைவிசொல் கடவானுகும் மைந்தர்கள் ஆசைஉள்ளான்
வினைசெய்யான் ஒருவருக்கும் மேவிடும் நாபிசூடு
தனையன்சொல் தட்டானுகும் சதுஷ்பாதம் விருத்தி
[யுள்ளான்
அனையஇக் குணத்தானுக்கு அவனுமே உதிப்பனுகும்.

6. மனைவியின் சொல்லைத் தட்ட மாட்டான். மைந்தர்களிடம் விருப்பமுடையவன். யாவருக்கும் தீங்கு செய்யமாட்டான். மூலச்சூட்டின் உபத்திரவ முடையவன். பிள்ளையின் சொல்லைத் தட்ட மாட்டான். நாற்கால் பிராணிகள் விருத்தியாகும். இத்தகைய குணத்தானுக்கு நம் ஜாதகனும் பிள்ளையாய்ப் பிறப்பானாகும்.

7. உதித்தவன் குணத்தைச்சொல்வேன் உண்மையன்
[அதிககாமி
மதிப்பான குடும்பியாவன் வாக்குகள் சுத்தமுள்ளான்
ததிநெய் பால்பிரியனவன் சரசமாய் வார்த்தைசொல்வன்
துதிசெய்தோர் தம்மைக்காப்பன் தேகமால் நிறத்தன்வாயு.

7. பிறந்தவன் குணங்களைக் கூறுவோம். சத்திய சந்தன். அதிக ஆசைகளுடையவன். மதிப்பான குடும்பத்தை வகிப்பான் சுத்தமான வாக்கை யுடையவன். தயிர், நெய், பால் இவற்றில் பிரியமுள்ளவன். சரசமான வார்த்தைகளைப் பேசுவான். தோத்திரம் செய்பவரைக் காப்பாற்றுவான். கரு நிறமுடைய தேகத்தை யுடையவன். வாயுவின் உபத்திரவம் உடையவன்

8. உண்டியும் சுகமாய்க்கொள்வன் ஓதுவான் கல்விரெண்டு
பண்டித னுகுவானும் பார்த்திபர்[1] இஷ்டம்கொள்வன்
வண்டிவா கனமும்சேர்ப்பன் வாக்குசொல் மேன்மையாவன்
முண்டக[2] ரேகையுள்ளான் மூலசூ டுடையனமே.

8. சுகமான போஜனத்தைச் சாப்பிடுவான். இரண்டுவித கல்வித்துறையில் பயின்றவன். பெரிய பண்டிதனெனப்படுவான். அரசருக்கு இஷ்டமானவன். வண்டிவாகன முடையவன். வாக்கு, சொல், இவற்றில் மேன்மை வாய்ந்தவன். கையில் பத்ம ரேகையை யுடையவன். மூலச்சூடுடையவனவன்.

9. இவனுட துணைவர்தன்னை இயம்புவோம் முன்பெண்ஒன்று
அவனியில் தீர்க்கமெய்தும் அவன்பின்னல் அறுவர்
[தோன்றும்
நவனியில் ஆண்பாலொன்று நாட்டுவோம் தீர்க்கமாக
பவமுள பெண்பால்ஒன்று பருகிடு மிவனுக்கேதான்.

9. இவனுடைய சகோதரர்களைப்பற்றிப் பேசுவோம். இவனுக்கு அக்காள் ஒருத்தி. அவள் தீர்க்காயுசுடையவள். அவளுக்குப் பிறகு ஆறு

---

1. வேந்தன்
2. தாமரை

பேர்கள் தோன்றுவார்கள். ஆண் ஒன்று. அவனும் தீர்க்கம். பவவினைகள் கொண்ட இரண்டு சகோதரிகள் இவனுக்கே உண்டு.

10. பின்துணை ரிடபம்சென்மம் பூரநாள் அதனில்தோன்றும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அவன்இரு நிறத்த
[னாகும்
தன்சொல்லே மேன்மையாகச் சாதிப்பான் அதிககல்வி
மன்னவர் பேட்டிகொள்வன் மாநிலம் அதிகம்சேர்ப்பன்.

10. தம்பியானவன் ரிஷபலக்கினத்தில் பூர நட்சத்திரத்தில் ஜனிப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவோம். கரிய நிறமுள்ளவன். தன் வார்த்தையையே பெரிதெனச் சாதிப்பான். மெத்தப் படித்தவன். அரசர்களுடைய பேட்டியைப் பெறுவான். பரந்த பூமியைச் சேர்ப்பான்.

11. அன்னைமேல் பிரியனுவன் அனைவோர்க்கு நல்லனுவன்
மின்னனை யார்க்குமோகன் மிகும்வசனங்கள் கூர்வன்
தன்னிலே தர்க்கவாதி சாப்பாடு சுகியனுவன்
சொன்னனே சமர்த்தனென்று தொல்புவி சல்லியம்
[கொள்ளான்.

11. தாயினிடத்தில் விச்வாசமுள்ளவன். யாவருக்கும் நல்லவனுவன். ஸ்திரீகளிடம் மோகங் கொள்ளுவான். அதிகமான வார்த்தைகளைப் பேசுவான். தானுகவே தர்க்கம் செய்பவன். சாப்பாட்டு சுகமுடையவன். சாமர்த்தியசாலி என்று சொல்லக் கூடியவன். பழைய பூமியை யுடையவன். கடன்பட மாட்டான்.

12. உருத்திர ரேகையுண்டு நுண்ணிய புத்தியுண்டு
பத்திமான் அவர்க்குநேயன் பரவுப காரியாவன்
சத்தியம் தவருனுகும் தன்மனை ஒன்றேயாகும்
புத்திரர் ஆண்பால்ஒன்று பெண்ணது மூன்றுஎன்றேம்.

12. கையில் ருத்திர ரேகையை யுடையவன். நுட்பமான புத்தியை யுடையவன். நல்ல பக்திமான்களுக்குப் பிரியமானவன். பரோபகார முடையவன். சத்தியம் சொல்லித் தவறமாட்டான். மனைவி ஒருத்தி தான். புத்திரன் ஒருவனும் புத்திரிகள் மூவருமாவர்.

13. இவனுடன் சிலநாள்ஒன்று மிசைந்துபின் வேருய்ச்செல்வன்
நவனியில் இரண்டாம்பாகம் நாட்டுவோம் விபரம்கேளு
தவசியே பெண்பால்சேதி சாற்றுவோம் அவ்வாருக
சிவன்தனை பூசைசெய்யும் தேவியே மேலும்கேளே.

13. இவனுடன் சில நாட்கள் சேர்ந்திருப்பான். பின்பு வேருகச் செல்லுவான். உலகினில் இவனைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் விவரமாய்க் கூறுவோம். பார்வதியே! சதா தவம் செய்பவளே! பெண்களைப்பற்றிய விவரமும் அவ்விதமேயாகும். அப்பொழுது (இரண்டாம் பாகத்திலேயே) கூறுவோமாக. பரமசிவனை என்றைக்கும் பூஜை செய்யும் பார்வதி தேவியே! மேன்மேலும் கேட்பாயாக.

14. உதித்தவன் மணத்தின்காலம் உரைக்குறேம் பதினே
[ழாண்டில்
மதிமுக மாதுர்வர்க்கம் அருகினில் தெற்கிலேதான்
வதிபதி குணத்தைச்சொல்வேன் மாநிறம் சமதேகத்தாள்
சதியிலா மனத்தளாகும் தன்பந்து மெச்சவாழ்வள்.

14. ஜாதகனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பதினேழாவது பிராயத்தில் மாதாவின் வருக்கத்தினில் தெற்கிலுள்ள பக்கத்து ஊரிலிருந்து பெண்டாட்டி வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். மாநிற முள்ளவள். சமமான தேகத்தை யுடையவள். வஞ்சனையில்லாத மனதை யுடையவள். தன்னுடைய பந்துக்கள் மெச்சும் படி வாழ்வாளாகும்.

15. பால்பாக்கிய முடையளாகும் பரஉப காரியாவள்
சீலவாள் பொறுமைசாலி தேவதா பக்திகொள்வள்
ஞாலமேல் வறுமைகாணுள் நற்புத்தி அடக்கமாவள்
காலத்தை அறிந்துவாழ்வாள் கணவனுக் கினியளாகும்.

15. பால் பாக்கிய முடையவளாகும். பரோபகாரியாவள். சீல முடையவள். பொறுமை யுடையவள். தேவதா பக்தி யுடையவள். உலகில் தரித்திரத்தை அனுபவிக்க மாட்டாள். நல்ல புத்தி யுடையவள். அடக்க முடையவள். காலத்திற்குத் தகுந்தபடி வாழ்வாள். புருஷனுக்குப் பிரியமானவள்.

16. தீர்க்கமாம் வயதும்உள்ளாள் செயமுனி கேட்கலுற்றார்.
ஏற்கவே தாரம்ரெண்டு இயம்பலாம் இவனுக்கேதான்
மூர்க்கமாய் புகருமேழாய் மேவிடம் சரமேயாக
பார்மகன்[1] ஏழைப்பார்க்கப் பகர்ந்தனன் தாரம்ரெண்டாய்.

16. தீர்க்காயுசுடையவள். ஜயமுனி இது கேட்டுப் பின்வருமாறு வினவலானார். பொருத்தமாகவே இவனுக்கே இரண்டு பெண்டாட்டிகள் என்று சொல்லலாம். வலுவான ஏழாமிடத்திற்குரிய சுக்கிரன் சரராசியான

1. செவ்வாய்

மேஷத்தில் தங்க, அம் மேஷத்திற்குடையவனான பூமிக்கதிபதியாகிய செவ்வாய் தன்னுடைய நாலாம் பார்வையினால் லக்கினத்திற்கு ஏழாமிடத்தைப் பார்ப்பதனால் இரண்டு பெண்டாட்டிகள் என்று சொன்னோம்.

17. மறுத்தவர் கூறுகின்றார் மால்ரவி இரண்டில்நிற்கக்
குருமதி அஞ்சில்நிற்கக் கூறொணு அந்தசங்கை
ஒருமனை தீர்க்கமாகும் உத்தமி புகலுகின்றார்
இருவரும் விரோதம்வேண்டாம் இவனுக்குப் பாரிஒன்று.

17. இதற்கு மறுப்புக் கூறுவர் பின்வருமாறு: புதனும் சூரியனும் இரண்டாமிடத்தில் தங்க, குருவும் சந்திரனும் ஐந்தாமிடத்தில் நிற்க, அத்தகைய சமுசயத்தைச் சொல்லுவதற்கில்லை. ஒரு பெண்டாட்டி தீர்க்கமாவள். இதைக் கேட்ட பார்வதி தேவி கூறலுற்றார். இரண்டு பேருக்குள் சச்சரவும் வித்தியாசமும் வேண்டாம். இவனுக்குப் பெண்டாட்டி ஒருத்திதான்.

18. மாதுவுக்கு திருமாங்கலியம் மன்னனும் தரிப்பானாகும்
ஏதுகா ரணத்தினாலே இம்மாதுக் கிரண்டுமுத்திரை
காதலன் செய்வன்சொல்வாய் கள்ளரால் விலகியேதான்
மீதியாய் வேறுமுத்திரை போற்றுவான் இதுவும்அன்றி

18. பெண்டாட்டிக்குத் திருமங்கலிய தாரணம் புருஷன் செய்வான். என்ன காரணத்தைக்கொண்டு இம்மாதுக்கு இரண்டு மாங்கலிய சூத்திரங்கள் புருஷன் செய்ய வேண்டும்? திருடனால் ஒன்று மறைய, வேறு மாங்கலியம் செய்து அணியும்படி செய்வான் இவனே என்றோம்.

19. எந்தகா லத்திலேதான் இக்குற்றம் நடக்கும்சொல்வாய்
வந்தவ னிருபான்ஏழில் மாதுமங் கலியம்நீங்கும்
பிந்தியே வேறுமுத்திரை போற்றுவான் இதுவும்அன்றி
பந்தமாய் அபிமானப்பெண் பகர்ந்தன முப்பானுண்டில்.

19. எந்தக் காலத்தில் இத்தகைய குற்றம் ஏற்படும் சொல்லுங்கள்? புருஷனுடைய இருபத்தேழாவது பிராயத்தில் பெண்டாட்டியின் மாங்கலியம் நீங்கும். பின்னால் வேறு மாங்கலியம் செய்து போடுவான். இதுவுமல்லாமல் சொன்ன முப்பதாவது வயதில் பிரியமான அபிமான புத்திரி,

20. குலமிலா மாதுஒன்று குறித்தன மிவனுக்கேதான்
பலமிக அவளால்நேரும் பாலர்கள் காணுளாகும்
உலகினில் கீழ்பாலாக உறைந்திடும் அந்தமாது
மலையிறை மகளேயாங்க ளறைந்தது தப்பாதாமே.

20. தன் குலத்தைச் சேராத மாது ஒருத்தி இவனுக்கே ஏற்பட்டாள். அவளால் அதிக நன்மைகள் ஏற்படும். குழந்தைகள் இல்லை. உலகத்தினில் அவள் ஒரு கீழ் ஜாதியில் பிறந்தவளாகும். மலையவான் பெற்ற பார்வதி தேவியே! சொன்னது தப்பாது.

21. புத்திரர் ஆண்பால்ரெண்டு பெண்ணது அவ்வாறுகும்
சித்துவாய் நான்கும்தீர்க்கம் சீரணம் மூன்றுஎன்றேம்
வித்தகன் தனக்குமேலாய் மேதினில் வாழ்வார்புத்திரர்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தது தப்பாதாமே.

21. ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தைகள் இரண்டும் பிறக்கும். இவர்கள் நான்கும் தீர்க்கம். மூன்று குழந்தைகள் சேதமாம். இவனுக்கு மேலாக உலகினில் இவனுடைய புத்திரர் வாழ்வார். பரமசிவனைப் புருஷனாய்ப் பெற்ற பார்வதியே! சொன்னது தப்பாது.

22. பாலகன் பூர்வம்சொல்வேன் பிறந்தஇல்லம் கீழ்தன்னில்
சாலவே சிற்றூர்தன்னில் செனித்தனன் வன்னியனுக
ஏலவே பூமியுண்டாய் இசைந்ததோர் குடும்பியாகி
கோலமாய் மனைவிமைந்தர் குலாவியே வாழும்நாளில்.

22. இவனுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவேன். இவன் வீட்டிற்குக் கிழக்கேயுள்ள ஒரு சிறு ஊரில் வன்னியர் குலத்தில் பிறந்தான். பொருத்தமாக பூஸ்திதியைப்பெற்று ஏற்பட்ட குடும்பத்தை வரித்து அழகாக மனைவி மைந்தர் இவர்களுடன் சுகமாக வாழ்ந்து வரும் காலத்தில்,

23. பஞ்சையாய் சீயும்ஓர்நாள் பாலகன் தன்பால்சென்று
அஞ்சின வார்த்தைசொல்லி ஆளனும் எனக்குஇல்லை
தஞ்சமாய் இல்லம்வேலை தான்செய்வே னென்றுசொல்லி
வஞ்சனை மனத்தளாகி வருணித்தாள் இவனையென்றேம்.

23. ஒரு ஏழை ஸ்திரீ இவனிடம் ஓர் நாள் வந்து பயந்து வினயத்துடன் வணங்கி, எனக்கோ புருஷனில்லை; வேறு தஞ்சம் புகும் இடமும் இல்லை; வீட்டுவேலை நன்றாய்ச் செய்வேன் என்று வஞ்சனை மனத்துடன் இவனை ஸ்தோத்திரம் செய்யலானாள்.

24. அண்டின மாதைத்தானும் ஆதரவிவனும் செய்து
துண்டமாம் குணங்களின்றிச் சிலதுநாள் சென்றுபின்பு
வண்டணி குழலாள்தானும் மாரன் இல்லாதவேளை
பண்டி பண்டாரம்பெற்றுப் பறந்தனள் வேறுநாடு.

24. இவனை வந்தண்டின ஸ்திரீயை இவன் ஆதரித்துக் கெட்ட சுவபாவமில்லாமல் சிற்சில நாட்கள் சென்ற பின்பு, இந்த ஸ்திரீ இவன் இல்லாத சமயம் பார்த்துச் சில சொத்துக்களைப் பெற்று வேறு நாடு சென்றாள்.

25. சென்றுபின் மாரனில்லம் சென்றுபின் சேதிகேட்க
அன்றவள் செய்தகுற்றம் அறிந்துபின் மனவெறுப்பால்
தன்குல தெய்வத்தோடு சாற்றியே தெருதூள்வாரி
குன்றிய மனத்தன் தூத்தி கோடித்தான் தேவன்தன்னை.

25. இவள் சென்றபின் அவன் வந்து பார்த்தான். செய்தி விவரங்களைக் கேட்கலானான். அன்று அவள் செய்த குற்றத்தைத் தெரிந்து பிறகு மன வெறுப்புக்கொண்டு தன் குல தெய்வத்துடன் சொல்லித் தெருவில் இருக்கும் மண்ணை வாரி இறைத்தான். மனம் குன்றிப்போய் தெய்வத்தை வேண்டினான்.

26. பின்பவன் சிலநாள்சென்று புக்கின ஸ்தலங்களுக்கு
கன்மங்கள் விலக்கும்சேது கங்கையின் தீர்த்தம்தோய்ந்து
பொன்பொருள் அன்னம்காசு பொருந்திய அடியார்க்கீந்து
தன்னகர் அடைந்துபின்னோன் தருமத்தி லிச்சையாகி.

26. பிறகு அவன் சில நாட்கள் கழித்து ஸ்தலங்களுக்கெல்லாம் போய்க் கர்மாக்களைப் போக்கும் சேதுவிற்கும் போய், கங்கா ஸ்நானமும் செய்து பொன், பொருள், அன்னம், காசு இவைகளைப்பெற்றுச் சிவனடியார்களுக்குக் கொடுத்துத் தன் ஊர் சேர்ந்தான். இவனும் தருமத்தில் ஆசையடைந்து,

27. மறலியின் பதிக்குச்சென்று மால்மகன் வரியப்பட்டு
அருகர்தன் குலத்திலேதான் அவனுமே உதித்தா[னென்றோம்
குறுமுனி கேட்கலுற்றார் குமரனும் முன்சென்மத்தில்
குறைவான குலமுதித்தான் உதித்தனன் அருகர்வம்சம்.

27. எமலோகம் சென்று, பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பெற்று ஜைநர் குலத்தில் பிறந்தான். அகஸ்தியர் கேட்கலுற்றார். ஜாதகன் முன் ஜன்மத்திலும் தாழ்ந்த ஜாதியில் பிறந்தான். இப்பொழுது அருகர் வம்சத்தில் பிறந்தான்.

28. காரணம் யாதுஎன்ன காவலன் முன்சென்மத்தில்
தீரமாய்த் தலங்கள்சென்று சேதுவின் தீர்த்தபுண்ணியம்
பாரினில் மேன்மையான புத்தர்தன் வமிசம்வந்தான்
நாரியும் முன்சென்மத்தில் நற்பொருள் பறித்துக்[கொண்டார்.

28. இதன் காரணம் என்ன? இவன் முன் ஜன்மத்தில் தைரியமாய் ஸ்தல யாத்திரைகள் செய்து சேது ஸ்நானம் செய்து வந்ததனால் உலகில் பிரபலமான புத்தருடைய வம்சத்தில் பிறந்தான். ஸ்திரீயும் முன் ஜன்மத்தில் பொருளைப் பறித்துக்கொண்டாளல்லவா?

29. அக்கடன் தீர்க்கவேண்டி அடைகுவாள் முப்பானுண்டில்
சிக்குபோல் சேர்வாளாகும் செப்புவோம் இவனின்யோகம்
தக்கவே பூமிசேர்ப்பன் தந்தைக்கு மேலாய்வாழ்வன்
திக்கெலாம் கீர்த்திகொள்வன் செயம்செய்வன் எடுத்த
[வேலை.

29. அந்தக்கடன் தீர்ப்பதற்காகவே இவனுடைய முப்பதாவது பிராயத்தில் வந்து சேருவாள். இவனுடைய யோகங்களைக் கூறுவோம். தகுந்தபடியே நிலங்களைச் சேர்ப்பான். தன்னுடைய தகப்பனுக்கு மேலான ஸ்திதியிலிருந்து வாழ்வான். சென்றவிடமெல்லாம் கீர்த்தி பெறுவான். எடுத்த காரியங்களை ஜயிக்கும் திறமையுடையவன்.

30. இருமூன்று ஆண்டுமேலாய் எய்திடு மில்லம்தானும்
குறுமுனி கேட்கலுற்றார் குறித்தயில் எந்திடத்தில்
உறைந்திடும் விபரம்சொல்வாய் உரையில்லம் தன்னில்
[செய்வன்
இருபாகம் எவ்வார்செய்வன் இயம்புவீர் முனியேநீதான்.

30. ஆறு வருஷங்களுக்குமேல் சொந்த வீடு ஏற்படும். இதைக் கேட்ட அகஸ்தியர் கேட்கலுற்றார். குறிப்பிடப்பட்ட வீடு எந்த இடத்தில் ஏற்படும்? விவரம் சொல்லுங்கள். ஒரு வீடு கட்டும்போது இரண்டு பாகமாக எப்படிச் செய்வான்? இதன் விவரத்தைச் சொல்லுங்கள். முனிவரே!

31. தந்தைக்கு மூத்தோனுண்டு தானவன் தென்பால்செல்வன்
அந்தவன் பாகம்சேரும் அறைகுவோம் விபரம்ரண்டில்
பிந்திய துணைவன்தானும் பிறர்தேசம் செல்வானும்
தந்துணை பக்கல்சென்று தானவன் வாழ்வானுமே.

31. தந்தைக்கு ஒரு தமையன் உண்டு. அவன் தெற்குத் திக்கில் செல்வான். அவனுடைய சொத்தின் பாகமும் இவனைச் சேரும். இதன் விவரம் இரண்டாம்பாகத்தில் கூறுவோம். தம்பியும் வேறு தேசம் செல்லுவான். தன்னுடைய சகோதரனின் பக்கத்தில் சென்று இவன் வாழ்ந்து வருவான்.

32. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புளமனத்த
[ளாகும்
தன்உடல் இருநிறத்தாள் தங்கிடும் பித்ததேகி
அன்னியர் குற்றம்சொல்லாள் அறையுமுன் கோபியாவள்
தன்மனம் கபடுமில்லாள் தடபுடல் செய்கையாவள்.

32. தாயாரின் குணத்தைச் சொல்லுவேன். அன்புள்ள மனத்தை யுடையவள். கரிய நிறமுள்ள சரீரத்தை யுடையவள். பித்தத்தினால் சரீரபீடை ஏற்படும். பிறருடைய குற்றங்குறைபாடுகளை எடுத்துச் சொல்ல மாட்டாள். தடபுடலான காரியங்களைச் செய்வாள்.

33. பின்புத்தி அடக்கமுள்ளாள் பேசுவோம் துணையாண்ஒன்று
கன்னிகை இரண்டுஎன்றேம் கருதின மூன்றும்தீர்க்கம்
பின்னமாம் இரண்டுஎன்றேம் பிறந்தயில் தெற்குமாகும்
அன்னவள் பூர்வம்சொல்வேன் அம்பிகை யாளேகேளாய்.

33. பின் புத்தி யுள்ளவள். அடக்க முடையவள். சகோதரன் ஒருவன் உண்டு. தங்கைகள் இருவர். இவர்கள் மூவரும் தீர்க்கம். நான்கு குழந்தைகள் பின்னமாம். பிறந்த வீடு தெற்கிலுள்ளது. அவளுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவோம். அம்பிகையே! கேட்பாயாக.

34. கச்சணி மாதுமுன்னால் கலந்ததோர் சென்மம்சொல்வேன்
கச்சித தோகைமேல்பால் உயர்விலா சிற்றூர்தன்னில்
மெச்சிடு ரெட்டிவம்சம் மேவியே சுகமுள்ளோளாய்
லச்சையோர் தம்மைக்காக்கும் நாயகன் உள்ளூராகி;

34. இவள் போன ஜன்மத்தில் பிறந்த விவரங்களைக் கூறுவேன். காஞ்சிபுரத்திற்கு அண்டையிலுள்ள தோகைக்கு மேற்கே, சாதாரண கிராமத்தில் மெச்சும்படியான ரெட்டியார் வமிசத்தில் பிறந்து சுகமாக வாழ்ந்து, ஏழைகளைக் காப்பற்றும் புருஷன் உள்ளூரிலேயே ஏற்பட்டு,

35. வருவோர்க்குத் தாகம்அன்னம் மனம்களிப் புடனேஈந்து
பெரும்புத்தி உடையாளாகி புருடன்சொல் கடவாநின்று
முருகர்க்குத் தொண்டுசெய்தும் முதல்வன்முன் மரணமாகி
சிரநான்கோன் வரியப்பட்டு செனித்தனள் அருகர்வம்சம்.

35. வரும் விருந்தினருக்கு அன்னபானாதிகளைப் பிரியத்துடனளித்து, பெரும் புத்தியைப் பெற்று, புருஷன் சொல் தவறாது நடந்து, முருகக் கடவுளுக்குத் தொண்டு செய்து, அவனுக்கு முன் மரணமடைந்து, பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு அருகர் வமிசத்தில் வந்து உதித்தாள்.

36. வந்தவள் பின்சென்மத்தை வரைகுறேம் அவ்வூர்கீழ்பால்
முந்திய பேரூர்தன்னில் முன்குல முதிப்பாளாகும்
இந்தவார் பராசர்சொல்ல இயம்புவார் விருதர்தானும்
அந்தவள் இச்செனமத்தில் அவள்வரன் சொல்தடுத்தும்.

36. இவளுடைய பின் ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். அந்த ஊருக்குக் கிழக்கே பண்டைப் பேரூரில் பிராமண குலத்திலுதிப்பாளா ளாகும். இந்தவாறு பராசரர் சொல்லக்கேட்ட விருதர் பின்வருமாறு சொல்லலுற்றார். அவள் இச் சென்மத்தில் புருஷனுடைய சொல்லைத் தடுத்தும்,

37. முன்னோர்க்கு எதிர்த்துவார்த்தை மொழிந்து முன்
[கோபியாயும்
தன்மத்தி லிச்சையின்றி சத்தியம் வாழ்வதாலே
பின்சென்மம் முன்குலத்தில் பிறக்கும்கா ரணங்களெவ்வார்
என்மனம் தெளிவதாக இயம்புவீர் பராசரேசீர்.

37. பெரியோரை எதிர்த்து வார்த்தை சொல்லுவதும் கோபித்துக் கொண்டும், தருமத்திலிச்சையின்றி சத்தியமாய் வாழ்ந்து வந்ததனாலே அடுத்த ஜன்மம் பிராமண குலத்தில் பிறப்பதற்குண்டான காரணங்கள் எவ்வாறுண்டாகும்? என் மனம் தெளிவாகும்படி இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் என்று பராசரரை வேண்டினார்.

38. அதிக குற்றங்கள்செய்தும் அருகர்தன் பத்திகொண்டு
க்தியில்லா ஏழைபேரில் நிமலியும் அன்புபூண்டும்
வதிபதி வாழ்வதாலே வறைந்தனம் மறைகுலத்தில்
பதியினில் திரிபுமுண்டாய்ப் பாரினில் வாழ்வாளாமே.

38. அதிகக் குற்றங்கள் செய்தும் அருகருடைய பக்தி பூண்டு கதியற்ற ஏழைகளின்பேரில் இவளும் அன்பு பூண்டு வாழ்ந்து வந்ததனால் பிராம்மண குலத்தில் பிறந்து வீட்டில் விரோதம் ஏற்பட்டு உலகினில் வாழ்வாள்.

39. இவன்பிதா பூர்வம்சொல்வேன் இயல்காஞ்சி மேல்பாலாக
அவனியில் பேரூர்தன்னில் அக்கினி குலமுதித்து
நவனிகள் அதிகம்உண்டாய் நற்பந்து புகழவாழ்ந்து
தவசிகட் கன்னமீந்து தாகப்பந் தலுமமைத்து.

39. இவனுடைய தகப்பனாரின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். காஞ்சிபுரத்தின் மேற்கே பெரிய ஊரில் வன்னியர் குலத்திலுதித்து சம்பத்துக்கள் அதிகம் ஏற்பட்டு நல்ல பந்துக்கள் புகழும்படி வாழ்ந்து சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்து தண்ணீர்ப் பந்தல்களும் வைத்து,

40. நலமுள குணத்தனாகி நமன்பதிக் காளாய்இன்னோன்
தலைநான்கோன் வரியப்பட்டு செனித்தனன் இக்குலத்தில்
மலைமகள் கேட்கலுற்றாள்............................
குலம்தாழ்வால் உதித்தவன்தான் கூறுமிச் சென்மந்தன்னில்

40. நன்மையுள்ள குணத்தைப்பெற்று எமலோகம் சென்ற இவன், பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இக்குலத்தில் ஜனித்தான். மலையவான் புத்திரியாகிய பார்வதி கேட்கலுற்றாள்...............தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் இந்த ஜன்மத்தில்,

41. முக்குடைச் [1]செல்வன்பத்தி முயலும் காரணங்களென்ன
மிக்கவே முன்சென்மத்தில் வீண்அப வாதமின்றி
....குதவியாயும்
தக்கவே அறங்கள்செய்த தன்பலமுதித் தானென்றோம்.

41. அருகக் கடவுளிடம் பக்தி பூண்டதன் காரணங்களென்ன? போன ஜன்மத்தில் வீண் அபவாதங்களில்லாமல்.................உதவியும், தகுதியாகத் தருமங்கள் செய்த பலனின் காரணமாக உதித்தான் என்றோம்,

42. மறுசென்மம் கொங்குதேசம் மன்னுமிக் குலத்திலேதான்
உறைகுவான் செட்டுச்செய்வன் உரைக்குறோம்..............
............................னில் இடரான கெண்டம்நேரும்
விரைவினில் சுகமேஎய்தும் விளம்புவோம் முப்பதாண்டில்.

42. அடுத்த ஜன்மம் மலையாள தேசத்தில் இக்குலத்திலேதான் வந்து பிறப்பான். நல்ல வியாபாரம் செய்வான் என்று சொல்லுவோம்........... காலத்தில் துன்பம் தரக்கூடிய கெண்டம் ஒன்று நேரிடும். சீக்கிரம் சுகமடையும். முப்பதாவது வயதில் சொல்லுவோம்.

43. மகரமா தத்திலேதான் மதிதசை ராகுபுத்தி
பகையான வாயுநோயால் பகருவோம் தந்தைகெண்டம்
தகைமையாய் இருபத்தொன்பான் சந்திரன் சுயபுத்தி
மிகதனுர் மாதம்தன்னில் மேவிடும் அன்னைகெண்டம்.

43. தை மாசத்திலே சந்திர மகாதசையில் இராகு புக்தியில் பகையான வாயு உபத்திரவத்தால் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். தக்கபடி இருபத்தொன்பதாம் பிராயத்தில் சந்திரதசை சுயபுக்தியில் மார்கழி மாதத்தில் தாய்க்குக் கண்டம் ஏற்படும்.

---

1. முக்குடைச் செல்வன் = அருகக் கடவுள். முக்குடை—சந்திர வட்டம், சகல பாசனம், நித்திய விநோதம். அவை, நிரையே, முத்துக்குடை, பொற்குடை, மணிக்குடை என்னும் மூவடுக்குள்ளதான் குடை. இது அருகக் கடவுளுக்குரியது.

44. அறுபது ஒன்றுஆண்டில் ஆவணிமாதம் தன்னில்
குறைபக்கம் தசமிநாளில் கூறுவோம் சாதகர்க்கு
குறுமுனி கேட்கலுற்றார் குருதியின் காலம்தன்னில்
மருமமாய்க் கெண்டம்நேரும் வரைகுறும் விபரம்தானே.

44. அறுபத்தொன்றாம் பிராயத்தில் ஆவணி மாசத்தில் கிருஷ்ண பட்சம் தசமி திதியில் நம் ஜாதகனுக்கு மரணம் ஏற்படும். இது கேட்ட அகஸ்தியர் சொல்லலுற்றார். செவ்வாய் தசையில் இரகசியமாய் மரணம் ஏற்படும். அதன் விவரம் பின்வருமாறு சொல்லப்படும்.

45. எட்டினிற் குடையோன்நாலி லிருந்திட நீச்சமாயும்
துட்டமாம் கேதுகூடச் செப்பினோம் அந்தச்சங்கை
எட்டினில் காரிநிற்க இரணியன் அஞ்சில்தங்க
மட்டிலாப் புகரும்சென்மம் வருவதால் வயதுதீர்க்கம்.

45. இலக்கினத்திற்கு எட்டாமிடத்திற்குடையோன் நாலாமிடத்தில் நீச்சம் பெற்றிருப்பதனாலும் கெடுதலான கேது சம்பந்தப்படக் கூறினோம், அம்மாதிரியான சந்தேகத்தை. எட்டாமிடத்தில் சனி பகவான் இருக்க, குருவும் ஐந்தாமிடத்திலிருக்க, குறைவற்ற சுக்கிரனும் லக்கின பலம் பெற்றிருக்க ஜாதகனுக்கு ஆயுள் தீர்க்கம் என்று கூறுவோம்.

46. பின்சென்மம் புதுவைதன்னில் பிறப்பனே பிரும்மசேயாய்
மன்னரால் பெருமைபூண்டு மாநிலம் தன்னில்வாழ்வன்
தன்னிட குடும்பச்சேதி சகலபாக் கியமுமுள்ளான்
பின்துணை பாகமுப்பான்ஆறினில் பிரிதல் சொன்னோம்.

46. அடுத்த ஜன்மம் புதுச்சேரியில் பிராம்மணக் குழந்தையாய்ப் பிறப்பான். அரசர்களால் பெருமை பெற்றுப் பரந்த உலகினில் வாழ்ந்து வருவான். அவனுடைய குடும்பச் செய்தியைச் சொல்லப் புகுந்தால் சகல பாக்கியமுள்ளவன்; இவன் தம்பி இவனுடைய முப்பத்தாறாம் பிராயத்தில் இவனை விட்டுப் பிரிந்து போவான் என்று சொன்னோம்.

47. செனித்திடு காலம்தன்னில் [1]செம்பாம்பு திசையிருப்பு
குனித்திடு ஆண்டுரெண்டும் கூறுவோம் பலனையாங்கள்
தனமது சிலவுமுண்டு தாய்துணை சுபமுமெய்தும்
இனபந்து சூதமெய்தும் இடருகள் வந்துஎய்தும்.

47. ஜனனகாலத்தில் கேது மகாதசையில் இருப்பு வருஷம் இரண்டு என்று கூறுவோம். இதன் பலன்களாவன. பணச் செலவு உண்டு. தாய்

1. கேது

சகோதரர் இவர்கள் சுகமடைவர். பந்துமித்திரர்கள் சுகமாயிருப்பார். இடைஞ்சல்களும் வந்து சேரும்.

48. இன்னமும் சிலதுசேதி இயம்புவோம் விபரம்ரெண்டில்
தன்மனை பூமிவீடுதனம்பணி எண்ணுயிரம்பொன்
அன்னவ னுஸ்திசொன்னேம் அறைந்தது தப்பாதாகும்
உன்னத வானைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

48. இன்னமும் இது சம்பந்தமான விவரங்களை இரண்டாம் பாகத்தில் விரிவாகக் கூறுவோம். தனக்குரிய, பூமி, வீடு, தனம், பூஷணம் எல்லாம் சேர்ந்து எண்ணுயிரம் பொன்கள் ஆம். அவனுடைய சொத்துக்கள் இவ்வளவு என்று சொன்னேம். சொன்னது தப்பாதாகும். உத்தமனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 73

1. திங்கள் கேதுவீணையுற சேயும்சனியும் தேளிலுற
சுங்கன்[1] குருமால்இரவி துலை சேடன்தனுசு மேடம்உயிர்
தங்கும் கிரகம்பலன்எவ்வார் சாற்றும் முனியேவிபரமதாய்ப்
பொங்கும் ஆண்பால்செனனமுறும் பிறக்கு மில்லம்
[புகல்வோமே.

1. சந்திரனும் கேதுவும் மிதுனத்தில் தங்க, செவ்வாயும் சனியும் விருச்சிகத்திலிருக்க, சுக்கிரன், குரு, புதன், சூரியன் இவர்கள் சேர்ந்து துலாத்தில் தங்க, இராகு தனுசிலும் நிற்கும்படியான கிரக நிலை கொண்ட இந்த மேஷலக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி சப்த ரிஷிகளை வினவ, அவர்கள் சொல்லலுற்றார்கள். மேலான ஆண்மகனுடைய ஜாதகம் இது. அவன் பிறக்கும் வீட்டின் விவரம் கூறுவோம்.

	லக்கினம்		சந்திரன் கேது
	இராசி		
	சக்கரம்		
ராகு	சனி செவ்வாய்	சுக்கிரன் சூரியன் குரு புதன்	

2. ஆமேகிழ் மேல்வீதிஇது அடைவாய் தென்பால்வாசலிது
பூமிகார்க்கும் காளியுத்திரம் பேணிவயித் தோன்மாரியுமே
தீமையதாக வடமேற்கு தெரியாதீசன் மால்கோஷ்டம்
நேமிஅய லார்வீடாகும் நிகர்தாய்தந்தை இல்லம்அவ்வூர்.

2. கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப்பார்த்த வாசலுடையது. பூமியைப் பரிபாலிக்கும் காளி கோவில் வடக்கே யுள்ளது. பிள்ளையாரும் மாரியம்மனும் வடமேற்கில் கோவில் கொண்டனர். சிவன், விஷ்ணு இவர்கள் கோவிலிருக்குமிடம் தெரிவதற்கில்லை. உலகில் பிறருடைய வீட்டில் ஜனிப்பான். தாய் தந்தையர் வீடு அவ்வூரில்.

3. ஊரைவிட்டு வடகீழ்பால் உறைவான் இந்தபாலனுமே
வேரூர்செல்வன் தென்வாடை மேற்கு கிழக்குவீதியதே
மாரிதென் கீழ்உத்திரத்தில் மடமும்ஈசன் தந்தியுமே
கூறுமடை யாளத்துள்ளே குலாவுமிந்த பாலனுமே.

---

1. சுக்கிரன்

3, ஊரை விட்டு வட கிழக்கே யுள்ளது. அங்கே உதிப்பான் இப் பாலகன். வேறு ஊருக்குச் செல்லுவான். மேற்குக் கிழக்கு வீதியில் தெற்கு வாடையிலுள்ளது. தென் கிழக்கே அம்மன் கோவிலும், வடக்கில் வீடும், பரமசிவன், விக்னேசுவரர் இவர்களுடைய கோவிலும் உள்ள இந்த அடையாளங்கள் கொண்ட இடத்தில் உதிப்பனும் இந்த பாலன்.

4. பாலன்யோகம் அன்னைதுணை மற்றும் மனைவிபுத்திரர்
சாலதுணைவர் யோகங்கள் சாரும்முன்பின் சென்மங்கள்
ஏலஉரைப்பேன் தாதைக்கு செப்பும்மனைவி இரண்டாகும்
கோலமிரண்டாம் பாரிக்குகுதிப்பான் இவனின் தந்தை
[என்றேம்.

4. ஜாதகனுடைய யோகமும், தாய், சகோதரர் இன்னும் மற்ற மனைவி, மைந்தர், பொருந்தும் கூடப்பிறந்தவர்கள் இவர்களுடைய யோகங்களும், ஏற்படும் முன்பின் ஜன்மங்களைப்பற்றிய விவரமும் ஆகியவற்றைப் பொருத்தமாக எடுத்துரைப்போம். பாட்டனுக்கு இரண்டு பெண்டாட்டிகள் என்று சொல்லுவோம். இவன் தந்தை இவ்வளவு மேன்மை வாய்ந்த இரண்டாம் மனைவியின் புத்திரனுவன்.

5. தந்தைதுணை ஆண்இரண்டென்றேம் சதிராய்ப் பெண்பா
[லொன்றுகும்
அந்தமாது நீராலே அடைவாள் காலன்பக்கலிலே
முந்துகால மென்றுரைப்போம் மொழிவாள் அம்மன்முன்
[தாய்க்கு
விந்தையாக சுதருண்டோமேவும் பெண்பால் ஒன்றேயாம்.

5. தந்தையுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள், சகோதரி ஒருத்தி. அவளுக்குச் சலகண்டம் ஏற்பட்டுக் காலனுடு செல்லுவாள். அல்ப ஆயுசில் இறந்தாள் என்போம். பார்வதி கேட்கலுற்றுள். முதல் தாய்க்குக் குழந்தைகளுண்டோ ? பெண் குழந்தை ஒன்று உண்டு.

6. அதுவும்தீதாம் பிதாகுணத்தை அறையக்கேண்மோ
[தனுர்சென்மம்
நலிஉத்திராட நாளாகும்நயப்பாய் வார்த்தை தான்புகல்வன்
துதிசெய்தோர்க்குஅன்பனுமாம் துருவார்த்தைகளும்
[தான்பேசான்
பதியைநீக்கி வடகீழ்பால் பறப்பன்வேறூர் இவனென்றேம்

6. அதுவும் கெடுதியடையும். பிதாவின் குணங்களைக் கூறுகிறேம். கேட்பாயாக. உத்திராட நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் தனுர் லக்கினத்

தில் பிறந்தவன். நயப்புடன் பேசுந்திறமை பூண்டவன். தன்னுடன் பிரியமாய்ப் பேசுபவர்களுக்கு அன்பாய் நடப்பான். கெட்ட வார்த்தைகளைப் பேசமாட்டான். வீட்டை விட்டு வட கிழக்கில் பிரயாணம் செய்வான். வேறு ஊரில் வசிப்பான் இவன் என்றோம்.

7. இவனே பூமிசீவனங்கள் செய்தும் கிருஷிதன்னாலே
அவன் மாநிறத்தன் முருகர்பத்தி அடைவான்அறத்தில்
[இச்சையுளன்
தவமே புரிவோர்க்கன்புளனும் சதுஷ்பாதங்கள் விருத்தி
[யுளன்
நவமே விருத்திசெய்வன் நற்போசனங்கள் இச்சையுளன்.

7. இவன் பூமியைக் கிருஷி செய்து ஜீவனம் செய்குவான். தன் முயற்சியினாலே முன்னுக்கு வருவான். மாநிற முள்ளவன். முருகக் கடவுளிடம் பக்தி பூண்பான். தருமத்தில் விருப்ப முள்ளவன். தபசிகளிடம் அன்பு பூண்டவன். நாற்கால் பிராணிகள் விருத்தியாம். மனதி விருப்பதைச் சொல்லுவான். கபடமில்லாதவன். சொந்தக்காரர்களிடம் சிநேகமா யிருப்பான். பொறுமை யுள்ளவன்.

8. உள்ளம் உரைப்பன் கபடமில்லான்
உற்றார்நேயன் பொறுமை யுளன்
கள்ளமில் லாதான்மனைவி பட்சன்
கரத்தினில் ருத்திர ரேகையுளன்
பள்ளுபறையும் உடையவனே
பாரு விருத்தி செய்திடுவன்
சள்ளை[1] கொஞ்சம் உடையவனே
தந்தை ஆஸ்தி வேண்டாதான்.

8. உண்மை கூறுவான். வஞ்சனையில்லாதவன். சேர்ந்தவர்களுக்கு இனியவன். பொறுமைசாலி. கள்ளத்தனமுள்ள மனமில்லாதவன். மனைவியிடம் பிரியமாயிருப்பான். ருத்திர ரேகையைக் கையில் உடையவன். பள்ளு பறை முதலிய காலாட்களை யுடையவன். பூஸ்திதியை விருத்திசெய்வான். சிறிது கடன் தொந்தரவு உடையவன். பிதிரார்ச்சிதம் வேண்டுவதில்லை என்றவன்.

9. உரைத்த குணத்தானுக்கிவன்
உதிப்பான் இருநால் செனனமுறும்
மறையோர் நேயன் கல்வியுளன்
வாக்குத் தவறுன் நெறியோனும்

---

1. தொந்தரவு

குறையென் றோரை யாதரிப்பன்
கூறும் சொல்லே சுபமாகும்
துரையாய் நடப்பன் வறுமையிலான்
சிறப்பாய் வீடு செய்குவனே.

9. இவ்விதமான குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளை யாய்ப் பிறப்பான். இது இவனுடைய எட்டாவது ஜன்மமாகும். அந்தணர் களிடம் அன்புபூண்டவன். கல்வியறிவுடையவன். சொன்னசொல் தவறா தவன். நல்லொழுக்க முடையவன். சிரமப்படுகின்றவர்களுக்கு ஆதர வளிப்பான். பேசும் வார்த்தையே சுலபமாகும். துரையைப்போல நடையுடை பாவனைகளை யுடையவன். தரித்திரமில்லாதவன். சிறப்பான வீடு கட்டுவான்.

10. மனமது அழுத்தமில்லான் மங்கையர் மோகவானும்
தனமிக உடையனாகும் சாற்றுவான் அற்பப்பொய்யும்
வினயதாய் எதிரிக்கஞ்சான் வீண்பழி யேற்கானாகும்
முனிமுன்னால் பின்னால்தாழ்வன் உயர்வான குடும்பியாவன்.

10. மனதில் அழுத்த மில்லாதவன். ஸ்திரீகளிடத்தில் மோகங் கொண்டவன். பணம் அதிகமாக உடையவன். சில பொய்களும் சொல்லுவான். வினயமா யிருப்பான். பகைவரைக்கண்டு அஞ்ச மாட்டான். வீண்பழிகளை ஏற்கமாட்டான். முதலில் கோப முடையவன். பிறகு சாந்தமடைவான். மேலான குடும்பத்தைச் சேர்ந்தவன்.

11. தானிய விருத்திசெய்வன் தரியலர் வெற்றிகொள்வன்
மானமாய் சீவிப்பனும் மாடுஆடுகளும் விருத்தி
தானமும் தருமம்இச்சை சகடுகள் உடையனாகும்
ஈனரைச் சேரானாகும் இருநிற முடையனாமே.

11. தானியங்களை விருத்தி செய்வான். எதிரிகளை ஜயிப்பான். கௌரவமாய் ஜீவனம் செய்வான். மாடு, ஆடுகளை விருத்தி செய்வான். தான தருமங்களில் இச்சை யுடையவன் வண்டி வாகன முடையவன். கயவர்களுடன் சேரமாட்டான். கரிய நிறமுடையவனாகும்.

12. துணைஆண்கள் காணாகும் தோகையும் நான்குஎன்றோம்
பிணையாகு மவ்வார்என்றோம் பேசுவோம் விபரம்ரெண்டில்
கனமுடன் மணத்தின்காலம் கழறுவோம் ஈரொன்பாண்டில்
சினமிலா தென்மேல்திக்கில் செப்புவோம் அன்னைவர்க்கம்.

12. சகோதரர்கள் இவனுக்கு இல்லை. சகோதரிகள் நான்கு பேர்கள். அதுவும் இடைஞ்சலாகும் என்றோம். இதன் விவரங்களை விரிவாக இரண்டாம் பாகத்தில் கூறுவோம். நேர்மையான காலத்தைப்பற்றிச் சொல்லுவோம். இவனுடைய பதினெட்டாம் பிராயத்தில் தென் மேற்குத் திக்கில் தாயாரின் வர்க்கத்தைச் சேர்ந்த பெண் வருவாள்.

13. மாதுலன் மகளைக்கொள்வன் அவள்குணம் சிவந்தமேனி
சூதிலாள் முன்கோபத்தாள் சுபமுள வார்த்தைசொல்வள்
மாதவர்க் கன்னமீவள் மாநிலம் நல்லோளாவள்
பாதக மனமில்லாதாள் பஞ்சைகட் கன்னமீவள்.

13. மாமனின் பெண்ணை மணப்பான். அவள் குணங்களை உரைப்போம். சிவந்த நிறமுள்ள சரீரத்தை யுடையவள். சூதுவாதில்லாதவள். முன்கோப முடையவள். மங்களகரமான வார்த்தைகளைச் சொல்லுவாள். தபசிகளுக்கு அன்னதானம் செய்வாள். உலகில் நல்லவள் என்று பெயர் பெறுவாள். பாதகமான மனம் இல்லை. ஏழைகளுக்கு அன்னதானம் செய்வாள்.

14. மத்திய வயதிலேதான் மாதுவும் மரணமாகி
சித்தமாய் இரண்டாம்மாது சேர்ந்திடுமென்று சொல்வோம்
இத்தகை பராசர்கூற ஈசுவரி கேட்கலுற்றாள்
பத்தினி இரண்டுஎன்றீர் பகர்ந்தகா ரணங்களென்ன.

14. மத்திய வயதில் இவள் மரணமாவள். நிச்சயமாய் இரண்டாம் கலியாணம் ஏற்படும். வேறு பெண்டாட்டி வருவாள். இப்படிப் பாராசர் சொல்ல ஈசுவரி கேட்கலுற்றாள். பத்தினிகள் இரண்டு பேர்கள் என்று சொன்னீரே! அதற்குரிய காரணங்கள் யாவை?

15. இரவிபுதன் புகர்குருவு மேழில்நிற்க
இயம்பினோம் அந்தசங்கை எந்தக்காலம்
மறுமனைவி ஏறும் விபரம் சொல்லுமென்ன
ஆறஞ்சாண்டு தன்னில் கெர்ப்பத்தாலே
திருகானகாலன்பதி சேர்வாளாகும்
சீக்கிரத்தில் அத்திசையில்மாதுநேரும்
வருமாதுதனக்குசுதர் ஆண்பால்ரெண்டு
மங்கையுமே அவ்வாறாய் தீர்க்கமென்றோம்.

15. சூரியன், புதன், சுக்கிரன், குரு ஆகியோர் ஏழாமிடத்தில் சேர்ந்திருப்பதனால் இருமனைவியர் என்று கூறினோம். இரண்டாவது மனைவி வரும் விவரம் கூறுவோம். முப்பதாவது வயதிலே கர்ப்பத் தொந்தரவினால் காலன் பதிக்கு ஏகுவாள். சீக்கிரமே அதே திக்கிலிருந்து மறு மனைவி ஏற்படுவாள். வருபவளுக்கு ஆண் குழந்தைகள் இருவர். பெண் குழந்தைகளும் இரண்டு பேர்கள். அவர்கள் தீர்க்கம் என்றோம்.

16. தீர்க்கமென்றீர் முதல்மனைக்கு சுதர்தானுண்டோ
செப்புவீர் முதல்மனைக்குப் பெண்பாலொன்று
ஏரநேக விருத்தின்றோம் அன்னைசேதி
இயம்புவோம் சிவந்திடுவள் உயரமில்லாள்

பார்ப்போருக்கு அடக்கமுள்ளாள் பொறுமைசாலி
பதரிலாள் சமதேகம்முன் கோபத்தாள்
வாக்குசொல் இரண்டுமுள்ளாள் துணைவர்ஐந்தில்
ஆண்ரெண்டு கன்னிஒன்று வரைந்தேன்பாரு.

16. தீர்க்கம் என்று சொன்னீரே? முதல் மனைவிக்குக் குழந்தைகள் தாமுண்டோ? முதல் மனைவிக்குப் பெண் குழந்தை ஒன்று பிறக்கும். ஏர்கள் அநேகம் விருத்தியாகு மென்றோம். அன்னையைப்பற்றிய செய்தி விவரம் கூறுவோம். சிவப்பாக இருப்பாள். உயரமில்லாதவள். பார்ப்பவர்களுக்கு அடக்க முள்ளவள். பொறுமை யுடையவள். சின்ன புத்தி யில்லாதவள். சமமான தேகத்தை யுடையவள். முன்கோப முடையவள். சொல்வது ஒன்று; வாக்குக் கொடுப்பது ஒன்று. கூடப்பிறந்தவர்கள் ஐவரில், சகோதரர் இருவர்; சகோதரி ஒருத்தி என்று நிச்சயமாய்க் கூறுவோம்.

17. பார்தனிலே வேறுவர் அவர்கள்சேதி
பகருவோம் பின்பாகம் பாவைபூர்வம்
சேரநாடனில் கோகுலத்தில்தோன்றி
சேயருண்டாய் சுககுடும்பியாக வாழ்ந்து
நாரியுமே பவமின்றிவரன் முன்னேதான்
நமன்பதிக்கு ஆளாகி நாற்றலையோனாலே
தீரமாய் வரியவந்தாள் இந்தப்பாவை
சனிதிசையில் இருபத்தெட் டாண்டிலேதான்.

17. அவர்கள் உலகினில் தனித்தனியே வாழ்வார்கள். அவர்களுடைய செய்தி விவரங்களைப் பின்பாகத்தில் கூறுவோம். ஆதியில் சேர நாட்டில் இடைச்சேரியில் பிறந்து குழந்தைகள் உண்டாகி சுகமான குடும்பியாக வாழ்ந்து பெண்சாதி, பவவினைகள் இல்லாமல் புருஷனுக்கு முன்பே எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு ஜனித்தாள் இப்பாவை. இருபத்தெட்டாவது வயதில் சனி தசை நடக்கும்போது,

18. ஆண்டினிலே வைகாசி மாதம்தன்னில்
அந்தகன் தன்நகரடைவாள் அவள்பின்சென்மம்
பாண்டிநகர் தென்பாலில் சிறியஊரில்
பிறப்பதாம் வைசியகுலம் பாவைதானும்
வேண்டிய பொன்பணியுண்டாய் வறுமையின்றி
வித்தகியும் வாழ்ந்திடுவாள் விமலிகேளே
தூண்டும் தந்தைபூர்வமதை சொல்வோம்யாங்கள்
துறவோர்கள் வாசமுறும் அருணைநாட்டில்;

18. வைகாசி மாசத்தில் எமன்பதி அடைவாள். அவளுடைய அடுத்த ஜன்மம் பாண்டிய தேசத்தில் மதுரைக்குத் தெற்கே சிறிய கிராமத்தில் வைசிய குலத்தில் பிறந்து வேண்டிய பொன், பூஷணம் இவைகள் ஏற்பட்டுத் தரித்திரம் இல்லாமல் இவளும் வாழ்ந்திடுவாள். பார்வதியே! கேட்பாயாக, தந்தையின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். தபசிகள் வாழும் திருவண்ணுமலையில்,

19. பிறந்தான் கங்கைகுலமதனில் பூமியதனுல் செட்டுவினுல்
நிறைவாய் குடும்பிதாஞகி நீத்தோருக்கு அன்னம் [தானளித்து.
அறம்தா னிச்சைபவமின்றி அடைந்தான் காலன்பக்கலிலே
மறையோன் வரியவந்தனன் காணமடிவு காலம்மூப் [பாஞண்டில்.

19. வேளாளர் குலத்தில் பிறந்தான். பூஸ்திதியினுல் வியாபாரம் செய்து நிறைந்த குடும்பியாகி, சன்னியாசிகளுக்கு அன்னதானம் செய்து தருமம் செய்வதிலேயே விருப்பங்கொண்டு பவவினைகள் இல்லாமல் எமலோகம் சென்றுன். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு, முப்பதாவது வயதில் மடிவான்.

20. கரமாதம் ஏகுவாஞமறு சென்மத்தைக் கூறுகிறேம்
செகமே புகழும்தில்லையினில் செனிப்பான் சைவகுலமதனில்
துகையு மதிகமுள்ளவஞய் செட்டுமதிகம் தான்செய்வன்
அகமே மகிழத்தாம்செய்யும் அம்மை கேண்மோ இனிமேலே

20. தை மாசம் காலனாடு செல்லுவான். மறு ஜன்மத்தைக் கூறுவோம். உலகில் மிகவும் கியாதி பெற்ற சிதம்பர ஸ்தலத்தில் சைவ குலத்தில் ஜனிப்பான். அதிகப் பணக்காரனும். வியாபாரமும் அதிகம் தான் செய்வான். மனதில் ஆனந்தப்பாலை வார்க்கும் அம்பிகையே! இனி சொல்வதைக் கேட்பாயாக.

21. இன்னவன் முன்சென்மத்தை இயம்புவோம் தோகை [கீழ்பால்
அன்னிய பேரூர்தன்னில் பிறந்தனன் மறையோஞக
மன்னர்பால் அரசுசெய்து மாநிதி அதிகம்பெற்றுத்
தன்னிலே வாழும்நாளில் சாற்றுவோம் ஊழிதானே.

21. இவனுடைய முன் ஜன்ம விவரங்களைக் கூறுவோம். தோகைக்குக் கிழக்கே பிறருடைய பெரிய ஊரில் பிராம்மணஞகப் பிறந்தான். அரசனின் கீழ் உத்தியோகம் பெற்று அதிக சொத்துக்களை யடைந்து தன்னந்தனியே வாழ்ந்து வரும் காலத்தில் ஒரு ஊழ்வினை ஏற்பட்டது. அதைக் கூறுவோம்.

22. தன்குல தமையன்தம்பி தன்இல்லம் பாகம்வேண்டி
முன்னமே கோபம்கொண்டு மொழிந்தனன் இவன்
[பாலும்தான்
அன்னவர் இளையோன்பக்கல் அணிபணி தன்கைப்பற்றி
சொன்னனன் இளையோன்பக்கல் சுதந்திரம் என்றுரைத்
[தான்.

22. தன் குலத்தில் பிறந்த தமையன் தம்பி இவர்கள் தன் வீட்டில் பாகம் வேண்ட முதலில் கோபம் கொண்டு இவன் சொன்னதாவது, அவர்களில் இளையவன் பக்கலில் பணம் காசுகளை வாங்கிக்கொண்டு அவனுக்கு சாதகமாகத் தீர்ப்பு உரைத்தான். வீடு அவனுக்குத்தான் சுதந்திரம் என்றான்.

23. பெரியவன் உரைக்கலுற்றான் பொருளது பெற்றுக்
[கொண்டு
ஒருபுறம் நியாயம்சொன்னாய் உதித்திடு மறுசென்மத்தில்
குறைவான குலமுதித்து குதித்தயில் விட்டுநீங்கி
பெருந்தந்தை யாஸ்திநீங்கி பிறவூரில் வாழ்வாயென்றும் ;

23. இவ்விதம் பெரியவன் சொன்னான்: பணத்தைப் பெற்றுக் கொண்டு ஒருபுறம் பட்சபாதமாக நியாயம் அளித்தான். அடுத்த ஜன்மத்தில் கீழ்ஜாதியில் பிறந்து வீட்டைவிட்டு விலகி பெற்றதந்தையின் ஆஸ்தியில்லாமல் வேறு ஊரில் வாழ்வாயாக என்றும்,

24. துணையாண்பால் இல்லாதாயும் தோகையர் இருவராயும்
வினையாக சொல்லிச்சென்றான் மேவிற்று அந்ததோஷம்
பிணையாக வேறுஒன்று புகலுவோம் நேசன்பெண்டை
அணைந்தனன் நேசம்கொண்டு அறைகுறள் மனம்
[வெறுப்பால்.

24. சகோதரனை இல்லாமல், இரண்டு பெண்டாட்டிக்காரனாகியும் இருப்பாய் என்று வஞ்சனையுடன் சொன்னவனைப் பார்த்துச் சொன்னான். மேவிற்று அந்ததோஷம். வேறு ஒரு தொந்தரவு ஏற்பட்டது. அதைச் சொல்லுவோம், சிநேகிதன் பெண்டாட்டியை நேசித்து அணைந்தான். அவள் மனம் வெறுப்புக்கொண்டு பின்வருமாறு சொல்லுவாள் :

25. உடலுயிர்போல நின்றுகொண்டாடி போகம் செய்தாய்.
அடவுடன் பின்செனமத்தில் ஆண்துணை யில்லாதாயும்
மடமையில் இரண்டுமாயும் வாழ்குவாயென்று சொல்லி
விடமனதாய் சென்றாள் மேவிற்று அதுஓர்தோஷம்.

25. உடலும் உயிரும்போலே இருந்துகொண்டு போகங்களைத் துய்த்தாய். அடைவாகப் பின்ஜன்மத்தில் ஆண்துணைவர்களில்லாமலும் பெண்டாட்டிகள் இருவராயும் வாழ்வாயாக என்று சபித்துச்சொல்லிக் கொடிய மனத்துடன் சென்ருள். இந்த ஒரு தோஷமும் அவனை வந்தடைந்தது.

26. இன்னமும் பலபேர்சாபம் எய்திற்று அந்தியத்தில்
பின்பக்கம் பருவுகண்டு புக்கினன் காலன்பக்கல்
பொன்னவன் வரியப்பட்டு பிறந்தனன் இந்தசேயும்
முன்மறை சாபம்போலே மேவிடும் மனைவிரெண்டாய்.

26. இன்னமும் பலபேர்களுடைய சாபங்கள் இவனைச்சேர்ந்தன. அந்தியகாலத்தில் பின்பக்கம் பருவுகண்டு எமலோகம் சென்ருன். பிரம்மாவிஞல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தான் இவன் முன்பு பிராமணன் சபித்தது போல இரண்டுபெண்டாட்டிகள் நேருவர்.

27. தாதையின் ஆர்ஜிதத்தில் தானவன் வாழாஞகும்
ஓதுவேன் இவனின்யோகம் உயர்பூமி சேர்ப்பாஞகும்
நீதிவான் பொறுமைசாலி நேமியில் தானியசெட்டு
தீதுகள் அடையாஞகும் ஜனபந்து புகழவாழ்வன்.

27. பிதிரார்ச்சிதத்தில் இவன் வாழ்ந்துவரலாஞன். இவனுடைய யோகத்தைக் கூறுவோம். மேலான பூமிகளைச்சேர்ப்பாஞகும். நீதிமான். பொறுமைசாலி. பூமியில் தானிய வியாபாரம்செய்து தீங்குகளைப் பெருமல் பந்து ஜனங்களால் புகழப்பட்டு வாழ்வான்.

28. இல்லமும் செய்வாஞகும் ஈசுவரி கேட்கலுற்ருள்
வல்லவன் யெந்தகாலம் அருளுவீர் இல்லம்தானும்
புல்குவோம் ஆறுஆண்டில் பிறப்பஞம் சித்திரயில்லம்
மெல்லவே நாட்குநாளாய் மேவிடும் பூமிதானே.

28. வீடும் கட்டுவாஞகும். பார்வதி கேட்கலுற்ருள். இவன் எந்தக் காலம் வீடுகட்டுவான்? ஆறுவருடத்தில் அழகானவீடு கட்டுவான். மெல்லவே நாளுக்குநாள் பூஸ்திதிகள் விருத்தியாகும்.

29. பாலிகள் சேர்ப்பாஞகும் கனத்ததோர் குடும்பியாவன்
சாலவே அறத்திலிச்சை தனமது கொடுக்கல் வாங்கல்
ஞாலமேல் வறுமைகாணுன் நல்காது சல்லியங்கள்
பாலகன் தேடும்செம்பொன் பார்ப்பணி ஐயாயிரம்பொன்.

29. வரிசைகளும், புகழ்களையும் சேர்ப்பாஞகும். கௌரவமுள்ள குடும்பத்தை வகிப்பான். பொருத்தமாகவே தருமத்திலிச்சையுடையன்.

பணங் கொடுக்கல் வாங்கல்கள் உண்டு. பூமியில் தரித்திரமில்லாதவன். கடன்கள் ஏற்படா. இவன்தேடிய சொத்துக்கள், செம்பொன், பூமி, பூஷணம் இவைகள் எல்லாம் சேர்ந்து ஐயாயிரம் பொன்களாம்.

30. அத்திரி சொல்லுகின்றார் அவன்தந்தை இளையோன்சேதி
சுத்தமாய்ச் சொல்லுமென்ன செப்புவோம் விபரம்ரெண்டில்
வித்தகர் குடும்பம்வேறும் இடுக்கமாம் இல்லம்ஆகும்
எத்திசை வறுமைஉள்ளார் ஈரஞ்சு ஆண்டுமேலாய்.

30. இதைக்கேட்ட அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். அவன் தந்தையின் தம்பியின் செய்தியைச் சுத்தமாய்ச் சொல்லுமென்ன, சொல்லுவோம் இரண்டாம்பாகத்தில் விவரமாக. இவனுடைய குடும்பம் வேறாக இருக்குமாம் வீடும் அப்படியே. எங்கும் தரித்திரம் கிடையாது. பத்து வயதிற்குமேல்,

31. அவர்களும் சுகமேயாகும் அணுகிடும் புதிதாய்இல்லம்
நவனியில் உதித்தோனுக்கு நாட்டுவோம் மரணகாலம்
தவசியே இரண்டுமூன்று சத்தமம் இருபானுண்டு
பவமுள இருபத்தைந்து பகருவோம் முப்பான்ஏழில்.

31. அவர்களும் சுகமாகயிருப்பர், புதியவீடும் ஏற்படும். பூமியில் பிறந்தவனுக்கு மரணகாலத்தை நிர்ணயிப்போம். இரண்டுக்குடையவனும், மூன்றுமிடத்திற்குடையவனும் சப்தமத்திலிருப்பதனால் இருபதும், இருபத்தைந்தும் சேர்ந்து இருக்கும்போது சொல்லுவோம். முப்பத்தி ஏழாவது வயதில்,

32. சொல்லிய ஆண்டிலேதான் சுதனுக்கு ரோகம்வாய்க்கும்
சல்லியம் குருவுமேழில் சார்ந்ததால் பிணிகள்நீங்கி
அல்லல்கள் நிவிர்த்தியாகி அறுபது யெட்டுஆண்டில்
வல்லியே மகரமாதம் மடிவுண்டு சாதகர்க்கு.

32. சொன்ன பிராயத்தினில் இவனுக்கு வியாதி ஏற்படும். சுக்கிரனும் குருவும் ஏழாமிடத்தில் சேர்ந்திருப்பதனால் பிணிகள் விலகி அல்லல்கள் நிவர்த்தியாகி அறுபத்திஎட்டாம் வயதில் சாதகனுக்குத் தை மாசத்தில் மாரகம் ஏற்படும்.

33. மறுசென்மம் காளாத்திதன்னில் மாரனும் க்ஷத்ரியசேயாய்
அரசனால் சீவிப்பானும் அரன்பூசை செய்வானாகும்
பிறந்திடு காலம்தன்னில் புயங்கன்தன் திசையிருப்பு
நிறையவே ஆண்டுஐந்தும் நிகர்திங்கள் நாலுமென்றோம்.

33. அடுத்தஜன்மம் காளாஸ்தியில் இவன் க்ஷத்திரியக்குழந்தையாய்ப் பிறந்து அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்று ஜீவிப்பானும். பரமசிவனைப் பூஜைசெய்வானும். பிறக்கும் காலத்தில் சூரியமகாதசையில் இருப்பு வருஷம் ஐந்து, மாசம் நாலு என்போம்.

34. பின்துணை விருத்தியாகும் பூமிகள் சேருமென்றோம்
தன்துணை சுபமுமெய்தும் தனக்குமே ரோகம் காட்டும்
மன்னிய காளிபீடை மனமது சஞ்சலங்கள்
பின்பாகம் விபரமாகப் பேசுவோம் தாயேயாங்கள்.

34. இவனுக்குப் பிறகு உடன்பிறந்தவன் விருத்தியாவன். பூமிகள் சேரும் என்றோம். தன்னுடைய மனைவி சுகப்படுவாள், தனக்குரோகம் ஏற்படும். காளிதேவியின் பீடையும் கலியாண சஞ்சலங்களும் உண்டாகும். பின்பாகத்தில் விவரமாய்க் கூறுவோம், பார்வதியே! நாங்கள்.

35. நிலமகன் காரியெட்டில் நேர்ந்ததால் பலனெவ்வாறு
குலவிடும் பூர்வம்பொன்னும் குறித்தனம் ஆறுண்டின்மேல்
பலர்நேசம் காலிசேரும் பணிதிகள் சேர்ப்பானும்
குலவிடும் மாதுதானும் கோமளி மேலுங்கேளே.

35. செவ்வாயும், சனியும் எட்டாம் இடத்தில் இருப்பதால் பலன் எப்படி? ஜாதகனின் ஆரம்பதசையில் செல்வம் பெருகும். ஆறு வருஷத்திற்குப் பிறகு பலருடைய சிநேகம் ஏற்படும். கால்நடைச் செல்வங்கள் சேரும். ஆபரணங்களைச் சேர்ப்பான். மனைவியும் நன்கு விளங்குவாள். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

ஜாதகம் 74

1. புதன்புகர் பரிதிமேடம் பூமகன் சீயமாக
மதிராகு தேளிலாக மறைசனி மேருவாக
சதிசெயும் கேதுநந்தி தகரது சென்மமாக
இதுபலன் யெவ்வாறென்று ஈச்வரி கேட்கலுற்றாள்.

1. புதனும் சுக்கிரனும் சூரியனும் மேடத்திலும், பூமிக்கதிபதியாகிய செவ்வாய் சிம்மத்திலும், சந்திரனும் இராகுவும் விருச்சிகத்தில் நிற்கவும், குருவும் சனியும் தனுசிலும், கேது ரிஷபத்திலும் நிற்கும்படியான இந்த கிரகநிலைகொண்ட மேஷலக்ன ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கலுற்றாள்.

	லக்கினம் புதன் சுக்கிரன் சூரியன்	கேது	
	இராசி சக்கரம்		
			செவ்வாய்
குரு சனி	சந்திரன் ராகு		

2. அத்திரி சொல்லுகின்றார் ஆணது சென்னமாகும்
வித்தகன் இல்லம்சொல்வேன் விளங்கிடும் கீழ்பால்வாடை
உத்திரம் தெற்குவீதி ஓடையும் நதிவடக்கு
சுத்தமாய் கேடியும்கீழ்பால் செகராசர் வாசமாகும்.

2. அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். இது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுவோம். வடக்குத் தெற்குவீதியில் கிழக்குப் பார்த்த வாடையில் உள்ளது. ஓடும் நதி வடக்கேயுள்ளது. ருத்திரனுடைய கோவில் கிழக்கே உள்ளது. உலகின் அரசர் வசிக்கும் ஊராகும்.

3. தந்தியும் ஈசன்கன்னி தட்சிணம் தங்குமென்றோம்
முந்திய பேரூர்ஆகும் உயர்வான செட்டுஓங்கும்
சிந்தையில் விரோதமுற்றோர் தீர்ப்புகள் செய்யுநாடு
இந்தவா றடையாளத்துள் இலகிய கூரையில்லம்.

3. பிள்ளையாரும் ஈசுவரனும், துர்க்கையும் தெற்குத்திக்கில் தங்கிடுவர் என்றோம். பழைய பெரிய ஊராகும் அது. மேலான வியாபாரம் செய்து

செழித்தோங்கும். மனதில் சஞ்சலமுள்ளவர்கள் விமோசனமடையும் நாடாகும். இப்படிப்பட்ட அடையாளங்கள் கொண்ட இடத்தில் ஜாதகன் ஒரு கூரைமேய்ந்த வீட்டில் பிறந்தான்.

4. இன்னமும் பலதேவாசம் இலகிய சோலையுண்டு
அன்னையின் தந்தையோகம் அவன் துணை களத்திரபுத்திரர்
முன்பின் சென்மங்கள்யாவும் உரைக்குறோம் இந்நூல்
[தன்னில்
கந்தனைப் பெற்றமாதே கழறுவோம் கேட்டிடாயே.

4. இன்னமும் பல தெய்வங்கள் உள்ள ஊராகும் அழகிய சோலையுமுண்டு. இந்த ஜாதகனுடைய தாய் தந்தையர் யோகமும், சகோதரர, களத்திர புத்திரயோகமும், இவனுடைய முன்பின் ஜன்மங்களும் மற்றைய எல்லாவற்றையும் விஸ்தாரமாக இந்தப் புஸ்தகத்தில் கூறுவோம். முருகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! சொல்லுவோம்; கேட்பாயாக.

5. தந்தையின் வர்க்கம்ஐந்தில் தங்காது யாவும்தானும்
இந்துவின் வதனம்போன்ற எழில்பெறும் கன்னிஒன்று
அந்தவள் தீர்க்கமெய்தும் அவள்வரன் தென்கீழாகும்
பிந்திய மனையாளாகப் பேசுவோம் தாயேயாங்கள்.

5. தந்தையின் குடும்பத்தில் மொத்தம் ஐந்து பேர்களில் ஒருவரும் தங்கமாட்டார்கள். சந்திரபிம்பம்போன்ற தங்கை ஒருத்தி உண்டு. அவள் தீர்க்கம். அவளுடைய புருஷன் தென்கிழக்கிலிருந்து வருவான். இவளை இரண்டாவது மனையாளாகக் கூறுவோம் நாங்கள்; தாயே!

6. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையும் அவ்வாறுகும்
இதுநான்கும் தீர்க்கமெய்தும் இடரில்லா வாழ்வாளாகும்
பதியினில் வறுமைகாணுள் பந்துவும் மெச்சவாழ்வள்
அதிதியே தந்தைசேதி அறைகுறோம் மேலும்கேளே.

6. இரண்டு ஆண் குழந்தைகள். பெண்களும் இரண்டாம். இந்த நான்கு பேர்களும் தீர்க்கம். இடைஞ்சலில்லாமல் வாழ்வாளாகும். உலகினில் தரித்திரமில்லை. பந்துக்கள் மெச்சும்படி வாழ்வாள். தந்தையின் செய்தி விவரங்களை இன்னும் கூறுவோம்; கேட்பாயாக.

7. பூகைவான் கல்விமானும் உறுதிவான் பொறுமைசாலி
பாகமாய்ப் பேசவல்லன் பரஉபகாரியாவன்
நாகரீகங்களுள்ளான் நற்றூசு தொழிலும்செய்வன்
ஆகமநுணுக்கம் தேருன் அவனியில செட்டும்செய்வன்.

7. புத்திக்கூர்மை யுள்ளவன். கல்வியுடையவன். பரஉபகாரி யாவான். நாகரீகங்களுடையவன். நல்ல தூசுத் தொழிலும் (சீலை வியாபாரம்) செய்வான். ஆகம நூல்களின் நுட்பங்களைப் படித்து உணர்வான். வியாபாரங்கள் செய்வான்.

8. ரோமங்க ளதிகமில்லான் நுவலுபதேசம் கொள்வன்
தீமையை எண்ணானும் செய்நன்றி மறவானாகும்
காமனை விருப்பம்கொள்வன் கரமதில் உத்திரரேகை
தாமத குணத்தானாகும் சண்முகன் பக்திபூண்பன்.

8. அதிகமாகத் தலைமயிர் இல்லாதவன். சொல்லும் உபதேச மொழிகளைப் பெறுவான். கெடுதி எண்ணமாட்டான். பிறர்செய்த நன்றியை மறக்கமாட்டான். காமாதுரனாயிருப்பான். கையில் உயர்ந்த ரேகைகளுண்டு. தாமசமான குணமுடையவன். முருகக்கடவுளிடம் பக்தி கொண்டவன்.

9. மனமது தளர்ச்சிஉண்டு வாக்குசொல் காப்பானாகும்
இனமதற் கினியனாகும் இளைத்தோர்மேல் பிரியனாகும்
தனமது பின்னால்சேர்ப்பன் சாப்பாடு சுகிப்பானாகும்
வினையிலா மனத்தனாகும் விளம்பிய குணத்தானுக்கு.

9. தளர்ந்த மனத்தை யுடையவன். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான். சுற்றத்தாருக்கு வேண்டியவன். ஏழைகளிடத்தில் அன்பாயிருப்பான். பின்னால் பணம் சேர்ப்பான். சாப்பாட்டு சுகமுடையவன். வஞ்சனையில்லாத மனதை யுடையவன். இப்படி விவரித்த இக் குணவானுக்கு,

10. உதிப்பனும் இந்தபாலன் உரைக்குறோம் துணைவர்யெட்டில்
மதிநுதல் முன்பெண்ரெண்டு வளர்ந்திடும் அவ்வார்சேதம்
சதியிலா பின்பால்ஆண்பால் சாற்றுவோம் ஒருவன்தீர்க்கம்
அதிதியே பெண்பால்ஒன்று அறைகுறோம் தீர்க்கமாக.

10. பிறப்பானும் இந்த ஜாதகன். இவனுடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர்கள். அவர்களில் முதலில் இருவர் பெண்கள். இரண்டு பேர்கள் சேதமடைவார்கள். பின்பு ஆண் குழந்தைகள் பிறக்கும். அவர்களில் ஒருவன் தீர்க்கம். பெண்ணும் ஒன்று. அவளும் தீர்க்காயுளுடையவள்.

11. பின்துணை யாண்பால்சேதி பேசுவோம் மிதுனம்கொஞ்சம்
மன்னிய உத்திராடம் வருகுவான் அந்தபாலன்
கன்னென மொழியுமுள்ளான் கல்நெஞ்சம் தந்திரவாதி
அன்னியர்க் கீகைகொஞ்சம் அவசரமனத்தனாமே.

11. சகோதரனுடைய செய்தியைப் பேசுவோம். மிதுன லக்கினத்தில் ஜனித்தவன். அவன் நட்சத்திரமோ உத்திராடம். கனிவான மொழிகளைப் பேசுவான். கடினமான மனமுடையவன். தந்திரசாலி. பிறருக்குத் தருமம் சிறிது செய்குவான். பரபரப்பான மனமுடையவன்;

12. இருவித கல்விகற்பன் யாரையும் நேசம்கொள்வன்
தரிதொழில் ராஜமூலம் செட்டுகள் செய்வானுகும்
பெருமவர் நேசம்கொள்வன் பூமியில் வறுமைகாணுன்
மறுமனை இஷ்டம்கொள்வன் வாக்கது சுத்தமுள்ளான்.

12. இரண்டு விதமான கல்வித்துறைகளில் பயிலுவான். யாவரையும் சிநேகம் கொள்ளுவான். தரித்தொழில் செய்வான். ராஜாக்கள் மூலம் வியாபாரம் செய்குவான். பெரியோர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். பூமியில் தரித்திரத்தை அனுபவிக்கமாட்டான். பிறர்மனை நயத்தல் செய்வான். வாக்குச்சுத்தம் உள்ளவன்.

13. பாரியும் ஒன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்காணுன்
காரிழை நான்குஎன்றேும் கழறுவோம் பின்பாகத்தில்
மாரன்தன் சேதிசொல்வேன் மால்நிறம் சமதிரேகம்
பாரிய கல்விகற்பன் பதர்வார்த்தை சொல்லானுகும்.

13. பெண்டாட்டியும் ஒருத்திதான். ஆண் குழந்தைகள் இல்லை. பெண்கள் நான்கு என்றேம். இதைப்பற்றிப் பின்பாகத்தில் விவரம் கூறுவோம். இவனுடைய செய்தி விவரங்களைக் கூறுவோம். மாநிறமுள்ளவன். சமமான தேகத்தை யுடையவன். விசேஷமான கல்வி பயிலுவான். இளப்பமான வார்த்தைகளைப் பேசமாட்டான்.

14. உண்டியும் சுகமாய்க்கொள்வன் உறப்பொடு புளிப்பிலிச்சை
வண்டிவாகனங்களு மில்லான் மருமநூல் அறிவானுகும்
அண்டிஞேர் தம்மைக்காப்பன் அகசிய வார்த்தைசொல்வன்
குண்டுணி கூறுனுகும் குலத்துளோர் மதிக்கவாழ்வன்.

14. சாப்பாடும் சுகமாகச் சாப்பிடுவான். உறைப்போடு புளிப்பான பதார்த்தங்களில் இஷ்டம் கொண்டவன். வண்டி வாகனங்களில்லாதவன். இரகசிய நூல்களைத் தெரிந்தவன். அண்டினவர்களை ஆதரிப்பான். எது வேண்டுமோ அதைப்பற்றிப் பேசுவான். கோள் குண்டுணி சொல்லமாட்டான். குலத்திலுள்ளவர்கள் மதிக்கும்படி வாழ்வான்.

15. கரமதில் கமலரேகை காதலிமார்கள் மோகன்
நிறையவே குடும்பியாவன் நீள்நிலம் சேர்ப்பானுகும்
திருமகள் வாசமுள்ளான் செட்டுகள் பலவாய்ச்செய்வன்
அறுமுகன் தனைபூசிப்பன் அம்பிகையாளே கேளாய்.

15. கையில் பத்மரேகை யுடையவன். ஸ்திரீகளிடத்தில் மோகங் கொண்டவன். நிறைந்த குடும்பியாவன். பரந்த பூமிகளைச் சேர்ப்பான். லட்சுமீகடாக்ஷமுள்ளவன். பலவிதமான வியாபாரங்கள் செய்வான். முருகக் கடவுளைப் பூசிப்பான். அம்பிகையே! கேட்பாயாக.

16. தேவதாப் பணியும்செய்வன் தந்தைக்கு மேலாய்வாழ்வன்
நாவுகள் பலிதமுண்டு நல்முக வடிவுகாணும்
கோவுகள் விருத்தியுள்ளான் குஞ்சர நடையுமாவன்
காவலர் நேசம்கொள்வன் கனசோலை துரவுசெய்வன்.

16. கடவுளுக்குத் திருப்பணிகள் செய்வான். தகப்பனுக்கு மேலாக வாழ்வான். வாக்குப் பலிதமுடையவன். நல்ல முகஅழகு உடையவன். பசுக்கூட்டங்கள் விருத்தியாகும். மத்தகஜம்போல் நடப்பான். அதிகாரிகளுடைய சிநேகத்தைப் பெறுவான். தோட்டம் துரவுகள் ஏற்படுத்துவான்.

17. இல்லம் சித்திரம்செய்வன் இருபது ஆண்டுதன்னில்
நல்லதோர் மணங்கள்கூடும் நாயகி அன்னைவர்க்கம்
புல்குவோம் குடகுதிக்காம் பேதையு மிருசிகப்பள்
அல்லல்லென் றோரைக்காப்பள் அன்புள மனத்தளாகும்.

17. அழகான வீட்டைச் செப்பனிடுவன். இருபதாவது வயதில் நல்ல கலியாணம் நேரிடும். பெண்டாட்டி தன்தாயின் குடும்பத்தைச் சேர்ந்தவள். மேற்குத் திக்கிலிருந்து வருவாள். அவளும் நல்ல சிவப்பு நிறங் கொண்டவள். துன்பப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்து காப்பாற்றுவாள். மனதில் அன்பு கொண்டவள்.

18. மனமதுக் கிசைந்துவாழ்வள் வளமையாய்க் குடும்பியாவள்
வினையதை எண்ணாளாகும் மெல்லியும் யோகசாலி
கன்முள சுதரேழ்தோன்றும் காளையுமிருவர் தீர்க்கம்
சினமிலாப் பெண்பால்மூன்று தீர்க்கமாம் என்று
[சொல்வோம்.

18. புருஷனுக்குகந்தவள். வளப்பம்பொருந்திய குடும்பத்தை யுடையவள். கெடுதலான காரியங்களைச் செய்ய எண்ணமாட்டாள். இவளும் நல்ல யோகசாலி. குழந்தைகள் ஏழு பேர்கள் பிறப்பார்கள். இரண்டு ஆண் பிள்ளைகள் தீர்க்கம். பெண் குழந்தைகள் மூவர் தீர்க்கம் என்று சொல்லுவோம்.

19. அன்னைமா நிறத்தளாகும் அழகுளாள் வறுமைகாணுள்
பன்னியே பேசுவாளாம் பகருமுன் கோபியாகும்
தன்சொல்லே மேன்மையாகும் சத்திநன் நடக்கையுண்டு
தன் துணை யாண்பால்நான்கு சத்தியும் இரண்டேயாகும்.

19. தாயார் மாநிறமுள்ளவள். அழகுள்ளவள். தரித்திரத்தை அனுபவிக்கமாட்டாள். பிரியமாகப் பேசுவாள். முன்கோப முடையவள் என்று சொல்லுவார்கள். தன் வார்த்தையே மேன்மையெனக் கருதுவாள். நல்ல நடத்தை யுடையவள். உடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர் களாவர். சகோதரியும் இரண்டு பேர்களாவர்.

20. இல்லமும் குடகுஎன்றேும் இவள்பூர்வம் காஞ்சிதன்னில்
அல்லலாய் கிருஸ்துவர்க்கம் அடைந்தனள் வன்னிவம்சம்
நல்லதோர் குடும்பியாகி நற்சுதர் அதிகமுண்டாய்
வல்லியும் வரன்முன்னுலே மாண்டனள் பேதியாலே.

20. வீடும் மேற்கிலுள்ளது. இவள் பூர்வத்தில் காஞ்சிபுரத்தில் கஷ்டப்பட்ட கிருஸ்துவக் குடித்தனமாகிய வன்னியர் வமிசத்தில் பிறந்தாள். குழந்தை குட்டிகள் அதிகமுள்ள நல்லதொரு குடும்பியாகிப் புருஷனுக்கு முன்னுல் பேதி ஏற்பட்டு மாண்டாள்.

21. பிரமனுல் வரியப்பட்டு பிறந்தனள் இக்குலத்தில்
வறுமைகள் இல்லாவாழ்வள் ஆறஞ்சுரெண்டு ஆண்டில்
அரிமாது அன்னைகெண்டம் அக்காலம் வெள்ளிச்சக்(க)ரம்
கரும்பாம்பு புக்தியாகும் கழறின மொழிகுன்ருது.

21. பின்பு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பெற்று இவள் இக்குலத்தில் பிறந்தாள். தரித்திரமில்லாமல் வாழ்வாள். முப்பத்திரண்டாவது பிராயத்தில் அன்னைக்குக் கண்டம் ஏற்படும்: அக்காலம் சுக்கிரதசையில் இராகு புக்தியாகும். நாங்கள் சொன்னசொல் தவருது.

22. மறுசென்மம் [1]விரிஞ்சிநாட்டில் மாதுவும் கங்கைசேயாய்
உரைகுவாள் சுகமுண்டாகி உத்தமி வாழ்வாளாமே
பெரும்தந்தை பூர்வம்சொல்வேன் பிரிதிவிதலத்திலே தான்
அரிமதம் தீயின்வமிசம் அணுகினுன் என்றுசொல்வோம்.

22. மறு ஜன்மம் விரிஞ்சிபுரத்தில் வேளாளர் குலத்தில் இவள் வந்து பிறப்பாள். சுகம் ஏற்பட்டு உத்தமி வாழ்வாளாகும். பெற்ற தந்தையின் பூர்வோத்தரங்களைக் கூறுவோம். உலகினில் ஒரு நல்ல ஸ்தலத்தினில் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த வன்னியர் குலத்தில் வந்து பிறந்தான் என்று சொல்லுவோம்.

23. தன்குல விதவைமாதை தந்திரவார்த்தை சொல்லி
பொன்பணி தாரேனென்று போகங்கள் துய்த்துயின்னேன்
பின்பொருள் ஈயாவிட்டான் பேதையும் மனம்கலங்கி
உன்துணையாண் இல்லாமல் உதித்திடு மறுசென்மத்தில்.

---

1. இது வேலூருக்குச் சமீபத்திலுள்ளது.

23. தன் குலத்திலுள்ள விதவை ஸ்திரீயைத் தந்திரமாக வார்த்தை சொல்லி, பொன்னும் பூஷணமும் தருகிறேன் என்று கூறிப் போகங்களைத் துய்த்து இவன் பிறகு கொடுக்காமலிருந்து விட்டான். இவளும் மனம் கலக்கமுற்று உனக்கு மறு ஜன்மத்தில் ஆண் துணைவர்கள் இல்லாமல்,

24. ஆண்துணை காணுதாகி ஆதியில் சுதர்கள்பீடை
வீண்பழி குலத்தில்நேரும் விளம்பியே சென்றுளென்றேம்
காணவே யந்ததோஷம் காதலன் தனக்குநேர்ந்து
ஆண்துணை யாவும்போக்கி அடைந்தனன் காலன்பக்கல்.

24. அதாவது சகோதரனில்லாமல், ஆதியில் புத்திரதோஷமும், குலத்தில் வீண் அபவாதங்களும் நேரிடும் என்று சொல்லிச் சென்றுள் என்றேம். இம்மாதிரியே இவனுக்கு இந்த தோஷம் நேரிட்டது. சகோதரர்கள் யாவரும் போனபின்பு இவனும் எமபுரம் சென்றான்.

25. சிரநான்கோன் வரியப்பட்டு செங்குந்தகுலத்தில் வந்தான்
வரும்துணை யாண்பால்தோஷம் மனமது திரிச்சலாகும்
இருபது ஒன்பதாண்டில் இடபமாதத்திலே தான்
பிரசுரன்[1] திசையில் சந்திரபுத்தியு நடக்குமென்றேம்.

25. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவன் செங்குந்தர் குலத்தில் உதித்தான். உடன்பிறந்த சகோதரர் தோஷம் ஏற்பட்டது. மனமும் சஞ்சலப்பட்டது. இருபத்தொன்பதாவது பிராயத்தில் வைகாசிமாசத்திலே தான் சுக்கிரனுடைய தசையில் சந்திரபுக்தி நடக்கும் என்றேம்.

26. தந்தைக்கு மார்புநோயால் சண்டன்தன் பதிக்குச்செல்வன்
பிந்திய சென்மம்சொல்வேன் பிரிதிவி தலத்திலேதான்
சந்ததம் கங்கைசேயாய்ச் செனித்துமே செட்டுச்செய்து
கந்தனைப் பூசைசெய்வன் காதலி கேட்டிடாயே.

26. தகப்பனும் மார்புநோயினுல் எமலோகம் செல்லுவான். அடுத்த ஜன்மத்தில் உலகினில் வேளாளர் குலத்தில் பிறந்து வியாபாரங்கள் செய்தும் முருகக்கடவுளைப் பூசைசெய்தும் வருவான். பார்வதியே! கேட்பாயாக.

27. சாதகன் பூர்வம்சொல்வேன் சட்டநாதீசர் வாழும்
நீதியாய் நகரம்தன்னில் நேர்ந்தனன்தீயின் வம்சம்
மாதவர்க் கன்னம்தந்து மனைவிமைந்தரு முண்டாகி
தீதென்றேர்க் குதவிசெய்து சேயனும் பலமில்லாமல்;

27. ஜாதகனுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லுவேன். சட்டநாதீசுவரர் வாழும் சீர்காழிப்பதியில் வேளாளர் குலத்தில் பிறந்தான்.

---

1. சுக்கிரன்

தபசிகளுக்கு அன்னதானம் செய்து மனைவி மக்கள் ஏற்பட்டு சிரமப்பட்டவர்களுக்கு உதவிசெய்து உடம்பில் பலமில்லாமல்,

28. காலன்தன் பதிக்குச்சென்று கஞ்சனால் வரியப்பட்டு
வேலவன் அடியார்வர்க்கம் மேவுவான் இந்தபாலன்
சாலவே இவனின்யோகம் சாற்றுவோம் ஐந்தாண்டின்மேல்
பாலசூரியன் போல்யோகம் பருகிடுமென்று சொல்வோம்.

28. எமலோகம் செல்லுவான். பின்பு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பெற்று முருகக்கடவுளை வணங்கி அடிமைத்தொண்டு செய்பவரின் வமிசத்தில் பிறப்பான் இந்த பாலகன். பொருத்தமாகவே இவனுடைய யோகங்களைப் பற்றிக் கூறுவோம். ஐந்து வயதிற்குமேல் பாலசூரியன்போல யோகம் விளங்கிடும் என்று சொல்லுவோம்.

29. தரும கர்மாதிகூடி தருமதானத்தில் நிற்க
பெருகிடும் யோகம்தானும் பருவத யோகமொன்று
குறுகிய சகடயோகம் கூறுவோம் பலனையாங்கள்
அரசர்பூசிதமுமாவன் அவன்பந்து புகழவாழ்வன்.

29. தருமகர்மாதிகள்கூடி தருமஸ்தானத்தில் சேர்ந்து நிற்க, யோகம் பெருகிடும்; இதைப் பருவதயோகமென்றும் சிறிய சகடயோகமென்றும் கூறுவோம். அவற்றின் பலன்களாவன: அரசர்களால் பூசிக்கப்படுவான். அவனுடைய பந்துக்களால் புகழப்படுவான்.

30. சித்திர இல்லம்செய்வன் செயமுனி கேட்கலுற்றார்.
எத்திசை யெந்தகாலம் இல்லமும் செய்வான்சொல்வாய்
வித்தகன் நாலாண்டின்மேல் மேவிடும் இல்லம்தானும்
சுத்தமாய் செனித்தஇல்லம் செய்குவா னிவனேயென்றோம்.

30. அழகான வீடு கட்டுவான். செயமுனி பின்வருமாறு வினவலானார். எந்தத்தசாபுக்தியில் எப்பொழுது வீடு கட்டுவான்? சொல்லுங்கள். இவனுக்கு நாலு வருஷத்திற்குப் பிறகு வீடு ஏற்படும். பிறந்த வீட்டைப் பெரிதாகவும் சுத்தமாகவும் செய்பவன் இவனே யென்றோம்.

31. பலவித வணிபத்தாலும் பயிர்த்தொழில் தன்னாலும்தான்
குலவிடும் தனங்களென்றோம் கோதையு மிருபானேழில்
நலமுள பணிசெம்பொன்னும் நாயகன் தன்பால்ஈந்து
சலமாவாள் காலன்பக்கல் சாதிசக்தியாள் என்றோம்.

31. பலவிதமான வியாபாரங்களாலும், பயிர்த்தொழில் விருத்தியினாலும் ஐசுவரியங்கள் பொங்கிடும். பெண்டாட்டியும் இருபத்தேழாம்

பிராயத்தில் நல்ல பொன், பூஷணங்கள் இவைகளைப் புருஷனிடம் கொடுத்து எமலோகம் செல்லுவாள். இவள் ஸ்திரீ ஜாதியில் மிக்க சக்தி பெற்றவள் என்றோம்.

32. இன்னமும் பலவாறுக எய்திடும் பூமிபொன்னும்
அன்னிய ரார்ச்சிதங்கள் அணுகிடு முப்பதாண்டில்
அன்னவன் தேடும்செம்பொன் ஆறுயிரம் பொன்னு
[மென்றோம்
உன்னத வானைப்பெற்ற உத்தமி சொல்குன்றுது.

32. இன்னும் பல காரணங்களைக் கொண்டு பூஸ்திதியும், பொன்னும் பெருக்கமடையும். பிறருடைய சொத்துக்கள் இவனை வந்து அடையும். அது இவனுடைய முப்பதாவது பிராயத்தில் ஏற்படும். இவன் தேடும் சொத்துக்கள் மொத்தம் ஆறுயிரம் பொன்களாம் என்றோம். உத்தமனைப் பெற்ற உத்தமியே! சொன்னசொல் தவறுது.

33. அறுபது ஆண்டுதன்னில் ஆனிமாதத்திலேதான்
திருமகன் தனக்குக்கண்டம் சயமுனி தடுத்துச்சொல்வார்
ஒரு ஆண்டுள் கண்டம்நேரும் உரைக்குறோம் விபரமாக
குருபக்தி வியத்தில்ராகு குறைமதி இருப்பதாலே.

33. அறுபதாவது வயதில் ஆனி மாசத்திலே ஜாதகனுக்கு மரணம் சம்பவிக்கும். இது கேட்டு ஜயமுனி தடுத்துக் கூறுவார். ஒரு ஆண்டிற்குள் கெண்டம் நேரிடும். அதை விவரமாய் உரைப்போம். வியாழபகவானுக்கு விரயஸ்தானத்தில் ராகுவும், கிருஷ்ணபட்சத்துச் சந்திரனு மிருப்பதனுலே,

34. மாரகம் நேருமென்றோம் மறுத்து அத்திரியும் சொல்வார்
காரியும் குருவும்ஒன்பான் கவிசென்மம் இருப்பதாலே
தீரமாம் இருபதாண்டு தீர்க்கமாம் வயதுஎன்றோம்
வேறொரு தீங்குகாணுன் விளம்புவோம் பின்சென்மத்தை.

34. மரணம் நேரிடும் என்றோம். இதனை மறுத்து அத்திரிமகரிஷி சொல்லலுற்றூர். சனியும் குருவும் இலக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டி லிருப்பதனுலும், சுக்கிரன் லக்கினத்திலேயே இருப்பதனுலும் நிச்சயமாய் இருபது வயதுவரை தீர்க்காயுசுண்டு என்றோம். வேறு யாதொரு இடைஞ் சலும் இவனுக்கில்லை. அடுத்த ஜன்மத்தில்,

35. உத்திரம் கோகர்னத்தில் உதிப்பனும் சத்ரியசேயாய்
அத்தியும் பரியுமுண்டாய் அரசனுய் வாழ்வானுகும்
வித்தகன் செனனகாலம் வீர்புதன் பதினைந்தாண்டும்
சுத்தமாய்த் திங்களொன்பான் செப்புவோம் பலனையாங்கள்.

35. வடக்கே கோகர்ண க்ஷேத்திரத்தில் ராஜகுலத்தில் பிறப்பான். பகவானுடைய கிருபையினல் ராஜயோகத்துடன் வாழ்ந்து வருவான். இவனுடைய ஜனனகாலத்தில் புதன்தசையில் இருப்புப் பதினைந்து வருஷம்; மாதம் ஒன்பது. இதன் பலனை நாங்கள் கூறுவோம்.

36. வினைவரும் சாதகர்க்கு மேவிபின் நிவர்த்தியாகும்
துணைவிக்கு சுபமுமெய்தும் சித்திரயில்லம் செய்தல்
கனமுள செட்டுஓங்கும் கனத்திடும் பூமிதானும்
தனயன்பின் துணைவர்விர்த்தி தாய்தந்தை பிணியு
[மெய்தும்.

36. ஜாதகருக்கு வினைக்கட்டுகள் ஏற்படும். பிறகு நிவர்த்தியுமாகும். பெண்டாட்டிக்குச் சுபங்கள் ஏற்படும். அழகான வீடு கட்டுவான். கௌரவமான வியாபாரம் ஓங்கிடும். அதிகமான பூஸ்திதிகள் ஏற்படும். இவனுடைய தம்பிமார்கள் விருத்தியடைவார்கள். தாய் தந்தையருக்கு வியாதி ஏற்படும்.

(மற்றசங்கதி இரண்டில் தெரியலாம்.)

ஜாதகம் 75

1. சந்திரன் புகரும்நந்தி சனிதேளில் ராகுமேரு
மந்திரி கோலதாக மங்கலன் சீயமாக
புந்தியும் கடகம்புக்க பரிதியும் கேதுவீணை
வந்தது சென்மமேடம் வரைகுவீர் பலனைத்தானே.

1. சந்திரனும் சுக்கிரனும் இரிஷபத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு தனுசிலும், குரு துலாத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், புதன் கடகத்திலும், சூரியனும் கேதுவும் மிதுனத்திலும் தங்கும் படியான கிரகநிலை கொண்ட இம்மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கலுற்றாள்.

	லக்கினம்	சந்திரன் சுக்கிரன்	சூரியன் கேது
	இராசி		புதன்
	சக்கரம்		செவ்வாய்
ராகு	சனி	குரு	

2. குறுமுனி புகலுகின்றார் குறித்தது ஆண்பால்சென்மம்
வரும்இல்லம் கீழ்மேல்வீதி வாசலும் யெமனின்பார்வை
அறைகுவோம் அவ்வூர்தன்னில் ஆலயம் ஒன்றும்காணோம்
கரிமுகன் பின்பால்தென்மேல் கலந்திடு மென்று
[சொல்வோம்.

2. அகஸ்தியர் பின்வருமாறு சொல்லலுற்றார். இங்குக் குறித்துள்ளது ஒரு ஆண் மகனுடைய ஜாதகம். இவன் ஜனித்த வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப்பார்த்த வாசலுடையது. அந்த ஊரில் கோவில் ஒன்றும் இல்லை. பிள்ளையார் கோவில் பின் பக்கத்திலுள்ளது. அதுவும் தென் மேற்கிலுள்ளது.

3. சொன்னஇவ் வடையாளத்துள் சுதனுமே யுதிப்பானுகும்
அன்னையின் தந்தையோகம் அவன்துணை களத்(தி)ர
[புத்திரர்
இன்னவன் யோகச்சேதி இயம்புவோம் முன்பின்சென்மம்
உன்னத வாணைப்பெற்ற உத்தமி கேட்டிடாயே.

3. இவ்வித அடையாளங்கள் கொண்ட இடத்தில் ஜாதகனும் உதிப்பானும். இவனுடைய தாய் தந்தையர் யோகமும், சகோதரர், மனைவி மக்கள் யோகமும், இவனுடைய யோகச்செய்திகளும், முன்பின் ஜன்ம விவரங்களையும் விவரமாய்க் கூறுவோம். உத்தமனைப்பெற்ற உத்தமியே! கேட்பாயாக.

4. தந்தையின் தந்தைக்கேதான் தாரமும் இரண்டேயாகும்
முந்தின தாரத்துக்கே உதித்தனன் மூன்றும்சென்மம்
அந்தவன் துணைமுன்ஒன்று அணுகிடும் தீர்க்கமாக
பிந்தின துணையாண்ஒன்று அணுகிடும் தீர்க்கமாக.

4. தந்தையின் தகப்பனுக்கு இரண்டு பெண்டாட்டிகள். முதல் தாரத்திற்குப் பிறந்தவன் ஜாதகனின் தகப்பன். இது அவனுடைய மூன்றும் ஜன்மம். அவனுக்கு அண்ணன் ஒருவன் உண்டு. அவன் தீர்க்கம். தம்பி ஒருவன் உண்டு. அவனும் தீர்க்காயுளுடையவன்.

5. மறுமனை தாதைக்குஒன்று வரைந்தினீர் அவர்க்குப்புத்திரர்
உரைப்பீர்கள் முனியேநீதான் உத்தமிக் காண்பால்ஒன்று
திருமகள் ஒப்பதாக செல்வியும் அவ்வார்தீர்க்கம்
குறைவின்றி ஒன்றாய்வாழ்வர் கோதையும் விதவை
[யென்றேம்.

5. தகப்பனுக்கு வேறு பெண்டாட்டி உண்டு என்றீரே: அவளுடைய புத்திரரைப்பற்றிக் கூறுங்கள். முனிவரே! அவ்வுத்தமிக்கு ஆண் குழந்தை ஒன்று. லட்சுமியை ஒப்பதான புத்திரி ஒருத்தி தீர்க்கம். குறைவில்லாமல் அவர்கள் ஒருமனப்பட்டு ஏககுடும்பமாய் வாழ்வார்கள். பெண்டாட்டியும் கைம்பெண்ணுவள் என்றேம்.

6. சிலதுநாள் ஒன்றாய்வாழ்ந்து செல்லுவார் வேறாகத்தான்
தலைவன்தன் குணத்தைச்சொல்வேன் தரணியால்
[ஜீவிப்பானும்
நிலையிலார்க் கன்னமீவன் நிறமாலாம் உணைச்சல்நீட்சி
பலருக்கும் நல்லோனுவன் பனையேர்கள் விருத்திசெய்வன்.

6. சில நாட்கள் ஒன்றாக வாழ்ந்து பிறகு வேறாகச் செல்லுவார். அந்தத் தலைவனுடைய குணங்களைக் கூறுவோம். கிருஷித்தொழில் செய்து ஜீவிப்பான், ஏழைகளுக்கு அன்னதானம் செய்குவான். கருப்பு நிறமுள்ளவன். மெல்லிய நீண்டசரீரம். யாவருக்கும் நல்லவனுவன். பனை, ஏர் இவைகளை விருத்தி செய்வான்.

7. பாரியும் ஒன்றேயாகும் பாவையும் வடபால்நேரும்
திரமாய் சுதர்ஆண்ரெண்டு செல்வதி அவ்வார்தீர்க்கம்
காரிய சமர்த்தனுகும் கல்விமான் வறுமைகாணுன்
ஊரினில் செல்லானுகும் பின்புத்தி உடையனுமே.

7. பெண்டாட்டியும் ஒருத்திதான். அவளும் வடக்கிலிருந்து வருவாள். ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தைகள் இரண்டும் பிறக்கும். அவர்கள் தீர்க்கம். காரியங்கள் செய்வதில் சாமர்த்தியமுள்ளவன். படிப்பாளி. தரித்திரமில்லாதவன். ஊருக்குள் போகமாட்டான். பின்புத்தி உடையவனுகும்.

8. இன்னமும் விபரமாக இயம்புவோம் பின்பாகத்தில்
தந்தையின் மூத்தோன்சேதி தான்எடுத் தியம்பக்கேண்மோ
உன்னத மால்நிறத்தன் உள்மனம் கபடுமில்லான்
கண்ணிய குடும்பியாவன் கீர்த்திமான் சமதேகத்தன்.

8. இன்னும் மற்ற விவரங்களை விரிவாகப் பின்பாகத்தில் கூறுவோம். தந்தையின் தமையனைப்பற்றிய செய்திகளை எடுத்துச் சொல்லுவோம். கேட்பாயாக. கருப்பு நிறமுடையவன். மனத்தில் கபடமில்லாதவன். கௌரவமுள்ள குடும்பத்தை யுடையவனுவன். கீர்த்தியுள்ளவன். சமமான தேகத்தை யுடையவன்.

9. சுக்கிர நேத்திரமாவன் செகராசர் பேட்டிகொள்வன்
தக்கவே கிராமசெட்டு சகடுகள் பரியுமுண்டு
சிக்கன மில்லானுகும் சுகபுசிப்புடைய னுவன்
மைக்கன்னி மார்கள்மோகன் மனைவியுமொன்றே
[யென்றேம்.

9. ஒன்றரைக்கண்களை யுடையவன். செகராஜர் பேட்டிகள் கொள்ளுவான். தகுந்தபடி கிராமத்தில் வியாபாரங்கள் செய்வான். வண்டி, குதிரைகள் உடையவன். செட்டுங்கட்டுமா யிருக்கமாட்டான். சுகமான சாப்பாட்டுக்குக் குறைவில்லை. மைதீட்டிய கண்களையுடைய ஸ்திரீகளிடத்தில் மோகங்கொண்டவன். பெண்டாட்டியும் ஒருத்திதான்.

10. சுதர்களும் ஆண்பால்ரெண்டு தோகையு மொன்றுதீர்க்கம்
பதராகும் அவ்வாறென்றேம் பாலகன் உடனேவாழ்வன்
வதிபன்பின் தந்தைசேதி வறைகுறேம் மான்சிவப்பன்
துதிசெய்தோர்க் கன்னமீவன் சோம்பிடான் காரியத்தில்.

10. ஆண் குழந்தைகள் இரண்டு பேர்கள். பெண் குழந்தையுமொன்று. இவர்கள் தீர்க்கம். மற்றவர்கள் வியோகமாவர். பாலகன் நன்றாய் வாழ்வான். இவனுடைய சிற்றப்பன் செய்தியைக் கூறுவோம். மாநிற

முள்ளவன். வேண்டினேர்க்கு அன்னதானம் செய்வான். காரியத்தில் சோம்பலில்லாதவன்.

11. கருவியாயுத அப்பியாசன் காவலர் நேசம்கொள்வன்
மருவரை வசித்தேவெல்வன் அவன்கிராம செட்டும்
[செய்வன்
இருவித குணத்தாளுகும் ஏழைமேல் பிரியளுகும்
வருமனே ஒன்றேயாகும் வருபுதன் திசையில்நேரும்

11. போர்க்கருவிகள் ஆயுதங்கள் இவைகளை அப்பியாசம் செய்யும் காவலர்களை நேசம் கொள்வான். எதிரிகளை வஞ்சித்தே வெல்லுவான். கிராம வியாபாரம் செய்வான். இரண்டுவித குணங்களை யுடையவன். ஏழைகளிடம் அன்பாயிருப்பான். மனைவி ஒருத்திதான். அவளும் புதன் தசையில் நேரிடுவாள்.

12. மதலைகள் ஆண்பால்ஒன்று மங்கைமார் இருவராகும்
இதுமூன்றும் தீர்க்கமெய்தும் இடருது சிலதுஎன்றேம்
முதலிலே நஷ்டமெய்தும் உயர்வான குடும்பியாவன்
சதியிலா ஒன்ருய்வாழ்வன் சங்கரி கேட்டிடாயே.

12. ஆண் மகன் ஒருவனும், பெண் குழந்தைகள் இருவரும் உண்டு. இவர்கள் மூன்று பேர்களும் தீர்க்கம். சிலர் இடைஞ்சலுக்காளாவர். முதலிலே பிறக்கும் பிள்ளைகள் நஷ்டமடையும். மேலான குடும்பத்தை வகிப்பான். யாவரும் வித்தியாசமில்லாமல் ஒன்ருய் வாழ்வார். பார்வதியே! கேட்பாயாக.

13. தந்தையின் சேதிசொல்வேன் சன்மார்க்கன் மால்நிறத்
[தான்
சிந்தையில் மர்மம்கொஞ்சம் தீரமாம் நெஞ்சுமுள்ளான்
வந்தவர்க் கன்னமீவன் வண்டிவாகனமு முள்ளான்
நிந்தையு மில்லாளுகும் நேமியில் சல்லியம்கொள்ளான்.

13. தந்தையின் செய்தி விவரங்களைச் சொல்லுவேன். சன்மார்க்க முடையவன். கருப்பு நிறமுடையவன். மனதில் சில இரகசியங்களை யுடையவன். தைரியமான நெஞ்சுடையவன். வந்த விருந்தினரை அன்ன மளித்து உபசரிப்பான். வண்டி வாகனங்களை யுடையவன். யாதொரு அவதூறுமில்லாதவன். உலகினில் கடன் வாங்கமாட்டான்.

14. ரோமங்கள் நீட்சியில்லான் நீண்டதோர் மூக்குமுண்டு
காமனை விருப்பம்கொள்வன் கல்வியும் கொஞ்சமுண்டு
தீமையை வெளிக்காட்டாதான் சிறப்புள குடும்பியாவன்
மாமன்னர் மெச்சவாழ்வன் மருவிடும் பித்தகூடு.

14. தலைமயிர் நீளம் இல்லாதவன். நல்ல தீர்க்கமான மூக்குடையவன். காமாதுரனுயிருப்பான். கொஞ்சம் படிப்பும் உண்டு. கெடுதலை வெளிக்காட்டமாட்டான். சிறப்புப்பெற்ற குடும்பமுடையவன். உலகில் அரசர்கள் மெச்சவாழ்வான். பித்தசூடு மருவிடும்.

15. துணைவர்சொல் கடவானுகும் சீக்கிர நடையுமாகும்
துணிவுள மனத்தனுகும் காரியம் செய்வானுகும்
பனையேர்கள் விருத்திஉண்டு பங்கயரேகை உண்டு
தணிவுண்டு சுகபுசிப்பு சாதிப்பான் சிலதுசங்கை.

15. சகோதரர்கள் வார்த்தைகளைத் தட்டமாட்டான். சுறுசுறுப்பான நடையுடை பாவனைகளை யுடையவன். துணிவுள்ள மனத்தை யுடையவன். காரியம் செய்வானுகும். பனைகளும் ஏர்களும் விருத்தியாகும். கையில் பத்மரேகையை யுடையவன். சாந்தமுடையவன். சுகமாகச் சாப்பிடுவான். சில சந்தேகங்களைத் தீர்ப்பான்.

16. சாதகன் குணத்தைச்சொல்வேன் சற்சனர் உறவுகொள்வன்
ஓதுவான் இரண்டுகல்வி உயர்வான குடும்பியாவன்
மேதினில் அரசர்பேட்டி வாதுக் கேகாதானுகும்
சூதான மால்நிறத்தன் சுந்தர னுடையனுமே.

16. நம் ஜாதகனுடைய குணங்களைச் சொல்லுவேன். நல்ல சத்துக்களுடன் சிநேகம் செய்வான். இரண்டு விதமான கல்வித்துறைகளில் பயிலுவான். மேலான குடும்பத்தை வகிப்பான். உலகினில் இராஜாக்களை பேட்டி கொள்ளுவான். அதிக சச்சரவிற்கு இடமான வார்த்தைகளைக்கூற மாட்டான். சூதுவாதுடையவன். கருப்பு நிறமுடையவன். நல்ல அழகன். இக்குணங்களை யுடையவனுமே.

17. தந்தையின் தந்தைபோலே தானவன் வாழ்வானுகும்
எந்திடும் பெருமைஏற்பன் இடரென்றோர்க் குதவி [செய்வன்
தன்தனம் அதிகம்சேர்ப்பன் சற்சனருறவு கொள்வான்
விந்தையாய்ப் பேசவல்லன் விரோதத்தை மனதில் [வையான்.

17. தந்தையின் தந்தையைப்போலவே இவன் வாழ்ந்து வருவான். எல்லாவிடங்களிலும் பெருமை பெறுவான். இடைஞ்சல்பட்டவர்களுக்கு ஒத்தாசை செய்வான். சுயார்ச்சிதமாகப் பொருள்கள் சேர்ப்பான். பெரியோர்களை சிநேகம் செய்வான். வேடிக்கையாகப் பேசவல்லன். மனதில் வெறுப்புக் கொள்ளமாட்டான்.

18. பரிவண்டி உடையனுகும் பந்துவும் புகழவாழ்வன்
அரசனுல் பெருமையேற்பன் அதிகார முடையனுகும்
திருமகள் வாசமுள்ளான் செய்நன்றி மறவானுகும்
அரிபக்தி பூண்பானுகும் அத்திரி புகலுகின்ருர்.

18. குதிரைவண்டி யுடையவன். பந்துக்கள் புகழவாழ்வன். அரசனுல் பெருமையையடைவான். அதிகாரமுடையவனுகும். லட்சுமீகடாக்ஷமுடையவன். பிறர் செய்த நன்றியை மறக்கமாட்டான், திருமாலிடத்தில் பக்தி பூண்டவன். இதுகேட்ட அத்திரிமகரிஷி சொல்லலுற்ருர்.

19. தந்தையின் தந்தைசேதி சாற்றுவீர் முனியேநீதான்
அந்தவன் மால்நிறத்தான் அரசர்கள் மெச்சவாழ்வன்
முந்திஞள் வறுமையுள்ளான் மங்கையும் வந்தபின்பு
சந்திரன் பிறைபோல்யோகம் சார்ந்திடு மென்று
[சொல்வோம்.

19. தந்தையின் தந்தை சேதியைச் சொல்லுங்கள். முனிவரே! நீர்தாம். அவன் மாநிறமுள்ளவன். அரசர்கள் மெச்சும்படி வாழ்வான். ஆதியில் கொஞ்சம் சிரமமுள்ளவன். பெண்டாட்டி வந்தபின்பு பிறைச் சந்திரனைப்போல யோகங்கள் வந்து சேரும் என்று சொல்லுவோம்.

20. அதிகமாய்ப் பூமிசேர்ப்பன் யாரையும் வசியம்கொள்வன்
புதிதாக இல்லம்செய்வன் பிரபல புகழுமேற்பன்
துதிசெய்தோர்க் குதவிசெய்வன் துணைவரை யாதரிப்பன்
விதவித செட்டுச்செய்வன் வேந்தரால் என்றுசொல்வோம்.

20. அதிகமாய்ப் பூஸ்திதியை விருத்தி செய்வான். யாவரையும் வசியப்படுத்தும் இயல்பினன். புதிதாக வீடு கட்டுவான். பிரபலமான கீர்த்தியைப் பெறுவான். வேண்டினவர்களுக்கு உதவி செய்வான். சகோதரர்களுக்கு ஒத்தாசை செய்வான். விதவிதமான வியாபாரம் செய்வான். அரசனுடைய ஒத்தாசையினுல் வியாபாரம் செய்வான்.

21. இன்னவன் பூர்வம்சொல்வேன் எழில்பாண்டி நாட்டிலே
[தான்
உன்னத மறவர்வர்க்கம் உதித்துமே சொக்கருக்கு
தன்னிலே ஊழிசெய்து சரங்களும் தொடுத்துஈந்து
மன்னவன் தீபம்பார்த்து மறலியின் பதிக்குப்புக்கி.

21. இவனுடைய பூர்வோத்தரங்களைச் சொல்லுவேன். விளங்கும் பாண்டிய நாட்டிலேதான் மேலான மறவர் வமிசத்தில் பிறந்து, மதுராபுரியிலுள்ள சொக்கநாதருக்கு மாலை முதலியன தொடுத்து, வழிபாடுகள் செய்து போற்றித் தானங்கள் செய்தும், தீபங்கள் ஏற்றிப்பார்த்தும் கடைசியில் எமலோகம் சென்றான்.

22. பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தனன் இவனேயென்றேும்
அரன்பணி விடையும்செய்த அப்பலன் யோகமெய்தும்
மறுசென்மம் மலைநாடன்னில் மன்னர்தன் குலமுதிப்பான்
பெருமையாய்ப் புகழுமேற்பன் புரவியும் கரியுமுள்ளான்.

22. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவன் இவனேயாகும். பரமசிவனுக்குப் பணிவிடைகள் செய்ததன் பலனாக யோகங்கள் ஏற்படும். அடுத்த ஜன்மம் மலைநாட்டினில் அரசருடைய வமிசத்தில் பிறப்பான். பெருமையுடன் கீர்த்தியுமடைவான். குதிரையும் யானையுமுடையவன்.

23. சொல்லிய குணத்தான்போலே சுதனுமே வாழ்வானாகும்
வல்லபன் துணைமுன்காணான் வந்திடும் பின்ஆண்ஒன்று
புல்குவோம் பெண்பால்ரெண்டு பேசின மூன்றும்தீர்க்கம்
அல்லல் இல்லாமல்ஒன்றாய் அணுகியே வாழ்வாணாகும்.

23. விவரமாகச்சொன்ன இக்குணத்தானைப்போலவே இவன் மகன் வாழ்ந்து வருவான். இவனுக்கு முன்பிறந்த சகோதரனில்லை. தம்பி ஒருவன் உண்டு. சகோதரிகள் இருவராவர். இவர்கள் மூன்று பேர்களும் தீர்க்கம். துன்பமில்லாமலே எல்லாரும் ஒன்று சேர்ந்து வாழ்வார்கள்.

24. ஈரெட்டு ஆண்டுதன்னில் எய்திடும் பாரிதானும்
நாரியும் வடகீழ்தன்னில் நல்குவாள் அந்தமாது
பாரிய புத்தியோடு பந்துவுக் கினியளாகும்
சீரிய குணமில்லாதாள் சிவந்திடு மேனியாவாள்.

24. பதினாறு பிராயத்தில் இவனுக்குப் பெண்டாட்டி வருவாள். பெண்டாட்டியும் வடகீழ் பாகத்திலிருந்து ஏற்படுவாள். மேலோங்கிய புத்தியை யுடையவள். சொந்தக்காரர்களுக்கு இனியவளாவள். சிறப்புற்ற குணமில்லாதவள். சிவப்பான சரீரத்தை யுடையவள்.

25. அன்னம்போல் சாயலுண்டு ஆளனுக் கினியளாவள்
பொன்பணி அதிகமுண்டு புண்ணிய மனத்தளாகும்
கண்ணிய மாகவாழ்வள் கேவலமில்லாச் சித்தம்
கன்னிகை விரதம்பூண்பள் கழறுவோம் புத்திரபாகம்.

25. அன்னம்போன்ற சாயலையுடையவள். புருஷனுக்குப் பிரியமாய் நடப்பாள். பொன், பூஷணங்கள் அதிகம் உடையவள். தருமசிந்தனை யுடையவள். கௌரவமாக வாழ்வாள். மனதில் கீழ்நோக்கான புத்தி கிடையாது. இவள் விரதங்களை அனுஷ்டிப்பாள். புத்திர பாவத்தைப் பற்றிப் பேசுவோம்.

26. புத்திரர் எழுவர்தோன்றும் போகிடும் சிலதுஎன்றேம்
சித்தமாய் ஆண்பால்ரெண்டு செல்வதி ஒன்றேதீர்க்கம்
குத்தமா முதலில்ரெண்டு கூறுவோம் தாயேயாங்கள்
சுத்தமாய்ப் பின்பாகத்தில் செப்புவோம் தாயேயாங்கள்.

26. ஏழு பிள்ளைகள் பிறக்கும். சில வியோகமடையும். நிச்சயமாய் ஆண் குழந்தைகள் இரண்டுண்டு. பெண் ஒருத்திதான். இவர்கள் தீர்க்கம். முதலில் பிறக்கும் இருவர் இறப்பர் என்று சொல்லுவோம், தாயே! நாங்கள். விவரங்களைப் பின்பாகத்தில் சொல்லுவோம்.

27. சாதகன் பூர்வம்தன்னைச் சாற்றுவோம் புதுவைதன்னில்
நீதியாய் வைசியசேயாய் நேர்ந்துமே செட்டுச்செய்து
மாதவர் பக்திபூண்டு மானிலம் நல்லோனும்
தீதிலா குணத்தனும் திருப்பணி மிகவேசெய்தும்

27. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். புதுச்சேரியில் நியாயமாய் வைசியர் குலத்தில் பிறந்து வியாபாரம் செய்து, தபசிகளிடம் பக்தியடைந்து, உலகினில் நல்லவன் என்று பெயர் பெற்று, கெட்ட குண மில்லாமல் கடவுள் வழிபாடுகள் அதிகமாய்ச் செய்தும்,

28. மடம்சோலை செய்துஇன்னேன் மறலியின் பதிக்குப்புக்கி
திடமாகப் பிரமன்லக்கம் செனிப்பனும் இவனேயென்றேம்
அடவுடன் இவனின்யோகம் அரசர் பூசிதனுமாவன்
கடலுளோர் வசியம்கொள்வன் கனத்ததோர் குடும்பி
[யாவன்.

28. மடங்கள், சோலைகள் இவைகளையும் ஸ்தாபித்துக் கடைசியில் எமலோகம் சென்று, பிறகு பிரம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டு ஜனிப்பான் இவனே என்றேம். அடைவாக இவனுடைய யோகம் ஏற்படும். அரசர் களால் பூஜிக்கப்படுவான். கடல் பக்கத்திலுள்ளவர்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுவான். பெரிய குடும்பியாவன்.

29. கல்வியால் பெருமையேற்பன் காலாட்கள் அதிகமுள்ளான்
சொல்லதைக் காப்பானும் தொடுத்ததை வெல்வானும்
நல்லவன் நல்லவர்க்கே லண்டர்க்கு மிண்டனுவன்
அல்லல்கள் அடையானும் ஆடுமாடுகள் விருத்தி.

29. வித்தியா விசேஷமுடையவன். ஏவலாட்களை அதிகமுடையவன். தன் வார்த்தையைக் காப்பாற்றுவான். தொடுத்த வழக்குகளில் ஜயிப்பான். நல்லவர்களுக்கு நல்லவன். போக்கிரிக்குப் போக்கிரியாயிருப்பான். துன்பங்களைப் பெறமாட்டான். ஆடு மாடுகள் விருத்தியாம்.

30. மாதுரு குணத்தைச்சொல்வேன் மாஞ்சிவப் புடையளாகும்
சூதிலாள் அடக்கமுண்டு சொல்லது சுகமேயெய்தும்
பாதக மனமில்லாதாள் பகையென்று மனதில்லையாள்
மேதினில் வாதத்தேகி வீண்வம்பு புகலாள்என்றேம்.

30. மாதாவின் குணங்களைச் சொல்லுவோம். மாநிறமுள்ளவள். சூதுவாதில்லாதவள். அடக்கமுடையவள். பேச்சு நன்மை பெறும். மனதில் கெடுதலில்லாதவள். மனதில் வெறுப்பு என்பது கிடையாது. வாதசரீரமுடையவள். வீண்வம்படிக்கமாட்டாள் என்றேம்.

31. இல்லமும் வடபால்நேரும் இவள்துணை ஆண்பால்ரெண்டு
வல்லியும் ஒருத்தியென்றேம் வரன்துணை ஒருவன்தீர்க்கம்
நில்லாது மற்றதெல்லாம் நிகழ்த்துவோ மவள்தன்பூர்வம்
நல்லதோர் காஞ்சிதன்னில் நல்கினுள் சௌராஷ்டிரவமிசம்.

31. வீடும் வடக்கேயுள்ளது. இவளுடன் பிறந்த சகோதரர் இருவர். சகோதரி ஒருத்தியென்றேம். புருஷனுடன் பிறந்தவன் ஒருவன் தீர்க்கம். மற்றவர் மரிப்பார்கள். அவளுடைய பூர்வோத்தரத்தைக் கூறுவோம். நன்மை பொருந்திய காஞ்சிபுரத்திலே சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்தாள்.

32. சுகமுள குடும்பியாகி சுதர்களும் அதிகம் உண்டாய்
அகமதில் வருவோருக்கு அன்னமும் அன்பாயீந்து
பகையான காலநாடு பறந்துமே பிரமன்லக்கம்
தகைமையாய் வடுகர்வம்சம் சார்ந்தனள் இவளே
[யென்றேம்.

32. சுகமுள்ள குடும்பியாகி அதிகமாகப் புத்திரர்கள் ஏற்பட்டு, வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்து அன்புடன் அன்னதானம் செய்து பகையான எமலோகம் சென்றாள். பிறகு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுத் தக்கபடி தெலுங்கர் குடும்பத்தில் பிறந்தாள் இவளே என்றேம்.

33. மறுசென்மம் காஞ்சிதன்னில் வைசிய குலமேதோன்றி
திருமகள் விலாசம்பெற்றுச் செல்வதி வாழ்வாளாகும்
பெருமையாய் தந்தைபூர்வம் பேசுவோம் தில்லைதன்னில்
அருமறை குலமுதித்து அதிக பூமிகளுமுண்டாகி,

33. அடுத்த ஜன்மம் காஞ்சிபுரத்தில் வைசியர் குலத்திலே தோன்றி லட்சுமீகடாக்ஷம் பெற்று இச்செல்வி வாழ்வாளாகும். பெருமையுடன் தகப்பனாரின் பூர்வகால விவரத்தைப் பேசுவோம். சிதம்பரத்தில் பிராமணர் குலத்திலுதித்து அதிக பூஸ்திதிகள் ஏற்பட்டு,

34. தனமது பெருக்கமாகி சண்டன்தன் பதிக்குப்புக்கி
வினைசெய்யும் இக்குலத்தில் விளங்கினான் இவனே [யென்றோம்
கனமுள அத்திரிசொல்வார் காவலன் முன்சென்மத்தில்
சினமிலா பிரும்மசேயாய்ச் செனித்தவனிச்சென்மத்தில்.

34. பணம் காசுகள் அதிகம் ஏற்பட்டு எமலோகம் சென்று, பிறகு வினைசெய்யும் இக்குலத்தில் வந்து பிறந்தவன் இவனே என்றோம். இதைக் கேட்ட அத்திரிமகரிஷி சொல்லலுற்றார். இவன் முன் ஜன்மத்தில் பிராமணகுலத்தில் ஜனித்து இந்த ஜன்மத்தில்,

35. இக்குல முதிக்கும்சேதி இயம்புவீர் முனியேநீதான்
முக்கியம் வேதம்தன்னை முயலாமல் வாழ்ந்ததாலே
தக்கவே குலம்தாழ்வாக செனித்தனன் இவனேயென்றோம்
மிக்கவே இவன்பின்சென்மம் விளம்புவோம் தாயேகேளு.

35. இந்தக்குலத்தில் உதிக்கும் காரணம் யாதெனச் சொல்லுவீர்: முனிவரே! நீர்தாம். முக்கியமாக வேதபுஸ்தகங்களைப் பாராயணம் பண்ணுமல் வாழ்ந்து வந்ததனாலே, இந்த தாழ்ந்த குலத்தில் ஜனித்தனன். இவனுடைய பின்ஜன்ம விவரத்தை எடுத்துச் சொல்லுவோம். பார்வதியே! கேட்பாயாக.

36. உத்திரம் கோகர்னத்தில் உதிப்பனும் ரெட்டிவர்க்கம்
மெத்தவே தனம்படைத்து மேதினி செட்டுச்செய்வன்
சுத்தமாய் முப்பானெட்டில் தேள்மாதம் தந்தைகெண்டம்
அத்தியைப் பெற்றமாதே அறைந்தன மொழிகுன்றுது.

36. வடக்கே கோகர்ன க்ஷேத்திரத்தில் ரெட்டி வமிசத்தில் பிறப்பானும். அதிகமாகப் பொருட்செல்வத்தைப்பெற்று உலகினில் வியாபாரம் செய்வான். சுத்தமாக முப்பத்தெட்டாவது பிராயத்தில் கார்த்திகை மாசத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். விநாயகனைப்பெற்ற பார்வதியே! நாங்கள் சொன்னசொல் தவறாது.

37. எண்ணஞ்சு மூன்றுஆண்டில் இயல்துலா மாதம்தன்னில்
திண்ணமாய் அன்னைகெண்டம் செப்பின மொழிகுன்றுது
வண்ணமாய் அறுபான்ஐந்தில் மார்கழி மாதம்தன்னில்
கண்ணன்தன் பட்சம்தன்னில் காவலன் ஏகுவானும்

37. நாற்பத்துமூன்றுவது பிராயத்தில் ஐப்பசிமாதத்தில் நிச்சயமாய்த் தாயாரின்கண்டம் ஏற்படும். சொன்னசொல் தவருது. ஒழுங்காக அறுபத்து ஐந்தாம் பிராயத்தில் மார்கழிமாசத்தில் கிருஷ்ணபட்சத்தில் இவன் மரண மடைவான்.

38. பின்சென்மம் காஞ்சிதன்னில் பிறப்பனும் மறைக்குலத்தில்
மன்னர்பால் அரசுசெய்வன் மாநிலம் புகழுமேற்பன்
சொர்னமும் அதிகம்சேர்ப்பன் தொல்புவி நல்லோனுவன்
அன்னையே யாங்கள்சொல்லும் அருள்மொழி குன்று
[தென்றேம்.

38. அடுத்தஜன்மம் காஞ்சிமாநகரில் பிராம்மணகுலத்தில் பிறப்பானும். அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவான். பரந்தபூமியில் புகழும்பெறுவான். பொன்னும் அதிகமாய்ச்சேர்ப்பன். உலகினில் நல்லவனுவன். பார்வதியே! நாங்கள் சொல்லும் அருள்வாக்கிற்குக் குறைவு ஏற்படாது என்றேம்.

39. இதுஆண்டில் மீனமாதம் ஏகுவான் தானத்தானும்
உரைகுறேம் இருநான்காண்டில் உயர்ஆனி மாதம்தன்னில்
பெரும்தந்தை அன்னைகெண்டம் பேசின மொழிகுன்றுது
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளேகேளாய்.

39. இந்தவருஷத்தில் பங்குனிமாசத்தில் காலன்பதிக்கு ஏகுவான். எட்டாவது வயதில் உயர்ந்த ஆனிமாசத்தில் பெற்றதந்தை, தாயார் கண்டம் ஏற்படும். பேசினமொழி குறைவுபடாது. பிரளயகாலத்தில் ஆனந்தக் கூத்தாடும் அம்பிகையே! கேட்பாயாக.

40. பனிரெண்டு ஆண்டுதன்னில் பகர்தந்தை பாகம்மூன்றய்
சினமிலா செல்வாணுகும் செப்புவோம் இருபான்ஏழில்
கனமுள தந்தைபாகம் கழறுவோம் இவ்வாறுக
துணைவனேடொத்து வாழ்வன் சுந்தரி கேட்டிடாயே.

40. பனிரெண்டாவது வயதில் தந்தையின் சொத்து மூன்றுபாக மாகும். செல்வனுவான் என்று சொல்லுவோம். இருபத்தேழாவது பிராயத்தில் ஏற்படும். எல்லாரும் ஒத்த குடித்தனமாக வாழ்வார்கள். பார்வதியே! கேட்பாயாக.

41. காவலன் செனிக்குங்காலை கார்த்திகை இரண்டாம்பாதம்
மேவுசெங் கதிரிருப்பு விளங்கிடு ஆண்டுமூன்று
தாவிய திங்கள்நாலும் சாதகன் பிணியுமெய்தும்
ஓவிய துணைவிருத்தி உத்தமி அன்னைவர்க்கம்.

41. இவனுடைய ஜனனகாலத்தில் கார்த்திகை நட்சத்திரம் இரண்டாம் பாதமாகும். சூரிய மகாதசையில் இருப்பு; வருஷம் மூன்று, மாசம் நான்கு. ஜாதகன் ரோகபீடிதனுவன். பெண்டாட்டி (சகோதரி) விருத்திக்கு வருவாள். உத்தமியான தாயாரின் குடும்பத்தினருக்கு,

42. சூதகம் நேருமென்றேம் சோர்வுறும் காலிதானும்
போதனம் தானியம்சேரும் பிதாமகி கெண்டம்நேரும்
நீதியாய் பந்துசூதம் நிகழ்த்துவோம் பின்பாகத்தில்
மாதவர் பூசிக்கின்ற மங்கையே கேட்டிடாயே.

42. ஆசௌசம் ஏற்படும் என்றேம். நாற்கால் பிராணிகள் நாசமாகும், தனம், தானியம் இவைசேரும். பிதாவைப் பெற்ற பாட்டி இறப்பாள். நியாயமாய்ப் பந்துக்களின் சூதகமும் ஏற்படும். எல்லாவற்றையும் பற்றிப் பின்பாகத்தில் விவரிப்போம். மாதவர்கள் பூசிக்கின்றபார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 76

1. மதிபுதன் மேடமாக மங்கலன் ராகுநந்தி
விதிசியம் கேதுதேளில் வெள்ளியும் குருவும்சாடி
உதயனும் மீனமாக உயிரது கொண்டலக்க
இதுபலன் புகலுமென்று ஈச்வரி கேட்கலுற்றார்.

1. சந்திரன், புதன் மேஷத்திலும், செவ்வாயும் இராகுவும் ரிஷபத்திலும், சனி சிம்மத்திலும், கேது விருச்சிகத்திலும், சுக்கிரனும் குருவும் கும்பத்திலும், சூரியன் மீனத்திலும், தங்கும்படியான கிரகநிலை கொண்ட இந்த மேஷ லக்கின ஜாதகத்திற்கு உண்டான பலாபலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி சப்த ரிஷிகளை வினவினாள். (உதயன் = சூரியன்)

சூரியன்	லக்கினம் புதன் சந்திரன்	செவ்வாய் ராகு	
குரு சுக்கிரன்	இராசி சக்கரம்		
			சனி
	கேது		

2. இந்தசேய் ஆணும்சென்மம் இல்லமும் அயலார்தாகும்
தென்வட வீதியாகும் சித்திர இல்லமாகும்
தந்தைதாய் துணைவர்யோகம் தன்துணை களத்திரயோகம்
முன்பின் சென்மங்கள்யாவும் உரைக்குறோம் இந்நூல்
[தன்னில்.

2. இவன் ஆண் ஜன்மமுடையவன். பிறந்த வீடும் வேறு ஒருவருடையது. தெற்கு வடக்கு வீதியிலுள்ளது. அழகான வீடாகும். தாய் தந்தையர் யோகமும், மனைவி மக்கள், சகோதரர்கள் யோகங்களும், முன்பின் ஜன்மங்களும் இன்னும் மற்ற விவரங்களெல்லாம் இந்தப் புஸ்தகத்தில் விவரமாய்க் கூறுவோம்.

3. தந்தையின் துணையாண்ஒன்று சக்தியுமவ் வார்தீர்க்கம்
நொந்திடு மற்றதெல்லாம் நுகர்ந்தஆண் இளையோனாகும்
அந்தவன் சேதிசொல்வேன் அவன்தந்தை ஆஸ்திகாணான்
தன்துணை பெண்பாலுக்குத் தானவன் உறுமம்செய்வன்.

3. தகப்பனாரின் சகோதரன் ஒருவன். சகோதரியும் ஒருத்தி. மற்றவர்கள் மரிப்பார்கள். சொன்ன சகோதரன் இளையவனாகும். அவனுடைய செய்தி விவரங்களைக் கூறுவேன். அவன் தகப்பனாரின் சொத்துக்களை அனுபவியான். தன்னுடைய சகோதரிக்கு ஒத்தாசை செய்வான்.

4. கல்வியால் பெருமைஏர்ப்பன் கனராசர் பேட்டிகொள்வன்
சொல்லினால் சீவிப்பானும் சுகம்முன்னால் பின்னால்அலைச்சல்
நல்லவனாகி வாழ்வன் நாயகன் சிவந்தமேனி
இல்லறம் அலைச்சலுண்டு இடுக்கமாம் குணமும்கொஞ்சம்.

4. கல்விச் செல்வத்தினால் பெருமை யடைவான். கனவான்களும் அரசர்களும் பேட்டி அளிப்பார்கள். தன் பேச்சினால் சீவனம் செய்வான். முதலில் சுகமும் பின்னால் அலைச்சல் திரிச்சலும் உண்டு. நல்லவனாகவே வாழ்ந்து வருவான். இவன் சிவப்பான சரீரத்தை யுடையவன். குடித்தன விஷயமாக அலைச்சலுடையவன். கொஞ்சம் இடைஞ்சலான குண முடையவன்.

5. பாரியு மொன்றேயாகும் பாலர்கள் ஆண்பால்ரெண்டு
கூறுவோம் தீர்க்கமாகக் கோதையும் மத்தில்மாண்டு
மாரனும் சிறையாய்வாழ்வன் வயதுமே தீர்க்கமென்றோம்
காரிய சமர்த்தனாகும் கடவுளர் பக்திகொஞ்சம்.

5. பெண்டாட்டியும் ஒருத்தியேயாகும். ஆண் குழந்தைகள் இருவ ராவர். இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். மாதுவும் மத்திய காலத்தில் மரணமடைந்து புருஷனும் சிறையிலிருப்பவன்போல் வாழ்ந்து வருவான். இவனுக்கு வயது தீர்க்கம். காரியம் செய்வதில் சாமர்த்திய முடையவன். கடவுளிடத்தில் கொஞ்சம் பக்தி பூண்டவன்.

6. இல்லாத வார்த்தைசொல்வன் யாரையும் வசியம்கொள்வன்
சொல்லிடு வசனமெல்லாம் சுத்தமாய் சொகுசுஊண் [உண்பன்
மல்லில்முன் செல்லானாகும் மருவரை வசித்தேவெல்வன்
நல்லதோர் தலங்கள்செல்வன் நாயகி கேட்டிடாயே.

6. இல்லாததை உண்டு என்று சொல்லுவான். யாரையும் தன்வசப் படுத்துவான். சுகமாகவே சம்பாஷிப்பான். சொகுசாகவே சாப்பாடு புசிப்பான். சண்டைக்கு முன்னே செல்ல மாட்டான். எதிரிகளை வஞ்சித்தே வெல்லுவான். நல்ல க்ஷேத்திரங்களுக்குப்போய் சுவாமி தரிசனம் செய்வான். பார்வதியே! கேட்பாயாக.

7. தந்தையின் சேதிசொல்வேன் சிவந்தமை உணச்சல்தேகி
சிந்தையில் கபடமில்லான் சிறப்பான புகழுமேற்பன்
வந்தவர்க் கன்னமீவன் மன்னரால் உய்வானுகும்
முந்துமால் பத்திகொள்வன் உலகுக்கு நல்லோனுவன்.

7. தந்தையைப்பற்றிய செய்திகள் சொல்லுவோம். சிவந்த உடம்பு. மெல்லிய சரீரம். மனதில் கபடமில்லாதவன். மேன்மையான கீர்த்தியைப் பெறுவான். வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் செய்வான். மன்னனுல் மேலாகக் கருதப்படுவான். விஷ்ணு பக்தி உடையவன். உலகிற்கே நல்லவனுவன்.

8. அன்னிய பாஷையாலே அவனுமே உய்வானுகும்
மன்னர்க்கு இவன்சொல்மேன்மை வார்த்தையாம் தனமும் [சேர்ப்பன்
பொன்சேர்ப்பன் சிலவுசெய்வன் பிதுர்ஆஸ்தி விருத்தி [செய்வன்
அன்னியர் வழக்கைவாங்கும் அகசிய வார்த்தைகூர்வன்.

8. அன்னிய பாஷை ஞானத்தினுல் அவனுமே உஜ்ஜீவிப்பானுகும். மன்னர்களும் இவன் வார்த்தையை மதிப்பார்கள். பணமும் சேர்ப்பான். பொன்னும் சேர்ப்பான். செலவுகளும் செய்வான். பிதாவின் ஆஸ்தியை விருத்திக்குக் கொண்டு வருவான். அன்னியருடைய வழக்கைத் தீர்க்கும் நியாயவாத முடையவன்.

9. காந்தம்போல் புத்தியேற்பன் கட்டுரை புகல்வானுகும்
சேர்ந்தவர் தம்மைக்காக்கும் சித்தினி சாதியாவன்
கூர்ந்துமே வார்த்தைசொல்வன் குலத்துளோர் மதிக்க [வாழ்வன்
வேந்தர்போல் வாழ்வானுகும் மெல்லியர் தன்னுல்யோகம்.

9. காந்தம்போல் எதையும் தன் புத்தியினுல் கிராக்கியம் செய்து கொள்ளுவான். நடந்ததுபோல் கதைகட்டி யுரைப்பான். பந்து ஜனங்களைக் காப்பாற்றுவான். சத்துக்களை மெச்சும் இயல்பினன். ஆராய்ந்து அறிந்தே கூறுவான். குலத்திலுதித்தவர்கள் இவனை மதிப்பார்கள். அரசனைப்போல் மேன்மையாக வாழ்வான். ஸ்திரீகளால் யோகம் பெறுவான்.

10. யூகைவான் நுணுக்கம்தேர்வன் உலகுளோர் வசியம் [கொள்வன்
பாகமாய்ப் பேசவல்லன் பசித்தோருக் கன்னமீவன்
நாகரீகங் களுண்டு நற்பரி சகடுமேற்பன்
போகபாக் கியங்களுள்ளான் புண்ணிய மனத்தனுமே.

10. நல்ல புத்திக் கூர்மை யுள்ளவன். உலகினரைத் தன்வசப் படுத்துவான். பக்குவமாய்ப் பேசுவான். பசித்தவர்களுக்கு அன்னதானம் செய்வான். நாகரீகங்களை யுடையவன். நல்ல குதிரையும் வண்டியும் உடையவன். போக பாக்கியங்களை யுடையவன். தரும சிந்தனை யுடையவன்.

11. கோலது ராசியாகும் கூர்ஓண அவிட்டநாளில்
சாலவே தோன்றுவானும் சதாவுமே தருமமிச்சை
ஆலம்போல் பகைவருக்கு அவனுமே கருடனுவன்
மால்பத்தி உடையனுகும் வளமுள தலங்கள்செல்வன்.

11. இவனுடைய ராசி துலா ராசியாகும். திருவோணத்திற்கப்புற முள்ள அவிட்ட நட்சத்திரம் நாலாம்பாதத்தில் பொருத்தமாகவே ஜனிப் பானுகும். எப்பொழுதும் அறஞ்செய்ய விரும்புவான். கொடிய விஷம் போன்ற பகைவருக்குக் கருடனைப்போல் இருப்பவன். விஷ்ணு வினிடத்தில் பக்தி பூண்டவன். வளப்பம் பொருந்திய ஸ்தல யாத்திரை செய்வான்.

12. முன்னவ னிருந்தசென்மம் மொழிகுறோம் மலைநாடன்னில்
மன்னர்தன் குலமுதித்து மனைவி மைந் தருமுண்டாகி
அந்நகர் அதிகாரங்கள் அணுகியே அறத்திலிச்சை
பின்னோர்க்கு அன்னமீந்து பெரிதான தலங்கள்சென்று,

12. முன்பு அவனிருந்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். மலை நாட்டினில் அரசர் குலத்திலுதித்து, மனைவி மக்கள் ஏற்பட்டு, அவ்வூர் அதிகாரங்களை அடைந்து, தருமம் செய்வதில் விருப்பம் கொண்டு, ஏழைகளுக்கு அன்னதானம் செய்து மேன்மை பெற்ற ஸ்தலங்களுக்குச் சென்றும்,

13. வினையது இல்லாதாகி மேவினன் காலனுடு
கனமுள பிரமன்லக்கம் கலப்பனும் என்றுசொல்வோம்
அனையஇக் குணத்தானுக்கு அப்பாலன் உதிப்பானுகும்
சினமிலா இவன்குணத்தைச் செப்புவோம் இனிமேலாக.

13 பவவினைகள் இல்லாமல் எமலோகம் சென்றான். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறப்பானுகும் என்று சொல்லுவோம். இத்தகைய குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். இவனுடைய குணங்களை இனிமேலாகக் கூறுவோம்.

14. பாலகன் சிவந்தமேனி பகருவான் கல்விமூன்று
சீலவான் குணவானுகும் செகராசர் தன்னுல்உய்வன்
ஞாலங்கள் அதிகம்விருத்தி நற்றந்தை மேலாய்வாழ்வன்
மால்பத்தி பூண்பானுகும் வாக்கதைக் காப்பானுகும்.

14. சிவப்பான நிறமுடையவன். மூன்று விதமான கல்வித் துறைகளில் பயின்று பேசுவான். சீல முள்ளவன். குணமுள்ளவனுகும். உலகினில் அரசர்களால் ஜீவிப்பான். பூஸ்திதிகள் அதிகமாக விருத்தியாகும். தன்னுடைய தந்தையைக் காட்டிலும் மேலாக வாழ்வான். விஷ்ணுவினிடத்தில் பக்தி கொண்டவனுவன். சொன்ன வாக்குப்படி நடப்பான்.

15. நல்லவன் நல்லவர்க்கு லண்டர்க்கு மிண்டனுவன்
அல்லல்கள் அடையானுகும் அதிகமாய்ப் பொருளும்
[சேர்ப்பன்
வல்லியர் மோகனுவன் வடிமையோர் குடிபெருக்கம்
இல்லறம் சித்திரம்செய்வன் ஈகைவான் இவனேஎன்றேம்.

15. நல்லவர்களுக்கு நல்லவன். பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவன். துன்பங்கள் அடைய மாட்டான். பணம் காசுகளை அதிகமாகச் சேர்ப்பான். பெண்களிடம் விருப்பமுள்ளவன். வேலைக்காரர்கள், ஏர், குடும்பப் பெருக்கம் இவற்றை உடையவன். வீட்டை அழகு படுத்துவான். தர்மிஷ்டன் இவனே என்றேம்.

16. இன்னவன் செங்கைதன்னில் இலகிடும் பத்மரேகை
அன்னியர் கல்விமேன்மை அற்புத வார்த்தைசொல்வன்
முன்னேர்க்கு அன்னமீவன் உயர்வான குடும்பியாவன்
தன்னினத் தவரைக்காப்பன் சம்பத்து முடையனுமே.

16. இவனுடைய சிவந்த கையினில் தாமரை ரேகை விளங்கிடும், அன்னிய பாஷைக் கல்வி கற்று மேன்மை யடைவான். அற்புதமாக வார்த்தைகள் சொல்லுவான். பெரியோர்களுக்கு அன்னம் அளிப்பான். மேலான குடும்பத்தை வகிப்பான். சொந்தக்காரர்களைக் காப்பாற்றுவான். சம்பத்துக்களும் உடையவன்.

17. தன்துணை முன்னேர்நஷ்டம் தங்கும்பின் கன்னிரெண்டு
இன்னவர் தீர்க்கமெய்தும் இயம்புவோம் பின்பால்சேதி
மன்னவன் மணத்தின்காலம் வரைகுறேம் பதி
[னேழாண்டுள்
தென்திசை பாரிவாய்க்கும் செப்புவோம் அவள்குணத்தை.

17. தன் உடன் பிறந்தவர்களில் பெரியவர்கள் நஷ்டமாவர். தங்கைகள் இருவர் தீர்க்கம். இவர்களைப்பற்றிய செய்திகளைப் பின்பாகத்தில் கூறுவோம். இவனுடைய கலியாண காலத்தைக் குறிப்போம்.

பதினேழாவது வயதில் தென் திசையிலிருந்து பெண்டாட்டி வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம்.

18. மாந்தளிர் மேனியாகும் வருவோரை ஆதரிப்பள்
சூர்ந்துமே வார்த்தைசொல்வள் குணமது நல்லதாகும்
சாந்தமும் பெருமைஏற்பள் சலித்தோர்க்கு அன்னமீவள்
காந்தம்போல் புத்திஏற்பள் கல்விமான் யோகசாலி.

18. மாந்தளிர் போன்ற மேனியை யுடையவள். வந்த விருந்தினரை ஆதரிப்பாள், ஆராய்ந்து யோசித்தே வார்த்தைகள் சொல்லுவாள். அவளுக்கு நல்ல குணங்கள் உண்டு. எப்பொழுதும் பெருமை பெறுவாள். ஏழைகளுக்கு அன்னங் கொடுத்துதவுவாள். எதையும் சீக்கிரத்தில் அறியும் சக்தியுள்ள புத்தியை உடையவள். நல்ல படிப்பாளி. யோகமு முடையவள்.

19. அடிசிலுக் கினியளாகும் அரிமனை ஒப்பதாகும்
நடைநன்மை விரதசீலி நாயகன் மனதுக்கேத்தோள்
விட்வுரை பகராளாகும் மேலவர் பத்திபூண்டள்
தடபுடல் செய்கையுண்டு சக்திக்கு வயதுதீர்க்கம்.

19. சமையல் செய்வதில் கெட்டிக்காரி. லட்சுமீ தேவியைப் போன்றவள். நல்ல ஒழுக்க முடையவள். விரதங்களை நன்றாய் அனுஷ்டிப்பாள், புருஷனுடைய இஷ்டம்போல் நடப்பாள். கோபமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். கடவுளிடத்தில் பக்தி யுடையவள். தடபுடலான காரியங்களைச் செய்வாள். இவளுக்குத் தீர்க்கமான ஆயுளுண்டு.

20. புத்திர விருத்திதன்னைப் புகலவே பலத்தைக்காணோம்
சித்தமாய் உதித்ததாலும்தான் தீங்காகுமென்று [சொல்வோம்.
குத்தத்தைச் சொல்லுமென்ன குழவியின் தானம்தன்னில்
வித்தகர் காரிதங்க வெய்யவன் விரயம்புக்க.

20. புத்திர பாக்கியத்தைப்பற்றிக் கூறுவோமென்றால் யாதொரு பலமுமில்லை. அப்படியே உற்பத்தியானாலும் வியோகமாகும். இதில் இருக்கும் குற்றத்தைச் சொல்லுங்களென்று வினவ, புத்திர ஸ்தானத்தில் சனி பகவான் இருக்க, அந்த ஸ்தானாதிபதியாகிய சூரிய பகவான் இலக்கினத்திற்குப் பனிரண்டாமிடத்தில் தங்க (விரயஸ்தானத்திலிருக்க),

21. சுதர்களும் தோஷமென்றோம் தென்முனி இவ்வார்கூற
வசிஷ்டரும் புகலுகின்றார் மறைபுகர் லாபம்நின்று
புதல்வர் தானத்தைப்பார்க்கப் புத்திரன் தன்னால்கருமம்
வதிபர்க்கு நேருமென்றோம் மாமுனி தடுத்துச்சொல்வார்.

21. புத்திர தோஷம் என்றோம். அகஸ்தியர் இவ்வாறு சொல்ல, வசிஷ்டரும் சொல்லலுற்றார். குருவும் சுக்கிரனும் இலாபஸ்தானத்தி லிருந்து புத்திரஸ்தானத்தை ஏழாம்பார்வையினால் பார்க்கப் புத்திரனாலேயே கருமம் ஜாதகனுக்கு ஏற்படும் என்றோம். இதை மாமுனி தடுத்துக் கூறலுற்றார்.

22. அஞ்சவன் விரயம்புக்க அப்பாலன் பூர்வம்தன்னில்
மிஞ்சின வினைகள்செய்தான் மேவிற்று புத்திரதோஷம்
வஞ்சனை என்னசெய்தான் அறிவிப்பீர் விபரம்தன்னை
தஞ்சமாய்ப் பூர்வம்சொல்வேன் தவமுனிவர்களே கேளீர்.

22. ஐந்துக்குடைய சூரியன் விரயத்திலிருக்க, பாலகன் ஆதியில் அதிதமான காரியங்களைச் செய்தான். அவ்வினைகளின் பயனாகப் புத்திர தோஷம் ஏற்பட்டது. வஞ்சனையான காரியங்கள் என்ன செய்தான்? அவற்றை விவரமாகச் சொல்லுங்கள். பூர்வகால விவரங்களைக் கூறுவேன். தவமுனிவர்களே! கேளுங்கள்.

23. கோங்குநா டதனிலேதா னுதித்தனன் சைவசேயாய்
பாங்கியு மதலையுண்டாய் பாரினல் சீவித்தேதான்
ஆங்கவன் வாழும்நாளில் அணுகின வினையைக்கேண்மோ
ஏங்கினோர் தனக்குப்பொன்னை ஈந்துமே முறியும்தீட்டி.

23. மலையாள தேசத்தில் சைவ வம்சத்தில் உதித்தனன். பெண்டாட்டி பிள்ளைகள் ஏற்பட்டு உலகினில் ஜீவித்தேதான் அவன் வாழ்ந்து வரும் நாளில் ஏற்பட்ட ஊழ்வினையைக் கேட்பீராக. ஏழை களுக்குப் பொருளுதவி செய்து வட்டியும் கூட்டி,

24. பின்சில நாட்கள்சென்று பொருளுக்கு லாபம்கூட்டி
அன்னவர் பூமிஇல்லம் அதுகளைத் தன்கைக் கொண்டான்
பொன்னில்லா ஏழையோர்கள் புகலுவார் சாபம்தானும்
பின்வரும் சென்மந்தன்னில் புதல்வர்கள் தோஷமாயும்.

24. பிறகு சில நாட்கள் சென்று பொருள்களுக்கு இலாபம் சேர்த்து அவர்களுடைய பூஸ்திதிகளை எல்லாம் தன்வசப்படுத்திக் கொண்டான். பண மில்லாத ஏழைகள் சாபம் கொடுத்தனர். அடுத்த ஜன்மத்தினில் புத்திர தோஷ மேற்பட்டு,

25. சிலதுநாள் வனவாசங்கள் செய்குவாய் என்றுசொல்லி
புலம்பியே தெருதூள்விட்டார் புக்கிற்று அந்ததோஷம்
பலர்செல்லு மார்க்கம்துத்தான் பற்றிற்று அந்ததோஷம்
தலைவனுக் கந்தியத்தில் சந்ததி நஷ்டமாகி.

25. சில நாட்கள் வனவாசங்கள் செய்குவாய் என்று சொல்லி வருத் தத்துடன் தெருவிலிருக்கும் மண்ணை வாரி இறைத்தார்கள். அந்த தோஷம் அவனைச் சேர்ந்தது. பலர் செல்லும் மார்க்கத்தை அடைத்தான். அந்தத் தோஷமும் பற்றியது. இவனுக்குக் கடைசி காலத்தில் சந்ததி நஷ்டமாகி,

26. மனமது சஞ்சலத்தால் மறையவர்க் கன்னமீந்து
கனமுள சேதுசென்று கடவுளர் பத்தியாகி
வினையான காலனூடு மேவியே பிரமன்லக்கம்
சினமிலா பிரும்மசேயாய் செனிப்பனும் இந்தபாலன்.

26. சஞ்சல மனத்துடன் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்து சேது யாத்திரை செய்து கடவுளுக்கு வழிபாடுகள் செய்து காலன் பதிக்குச் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு பிராமணக் குழந்தையாய் இந்த பாலகன் ஜனிப்பான்.

27. முன்சென்மம் ஏழைசாபம் முயன்றிடு இச்சென்மத்தில்
தன்சுதர் தோஷமெய்தும் சாற்றுவோம் கிரியைஒன்று
தென்திசை அரங்கம்சென்று தேவியும் தானுமாக
உன்னத தீர்த்தம்தோய்ந்து உயர்மாதுக் கருச்சித்தேத்தி;

27. முன் ஜன்மத்தில் ஏற்பட்ட ஏழைகள் சாபம் இப்பொழுது இவனை வந்தடைந்தது. புத்திர தோஷம் ஏற்படும் என்று சொல்லுவோம். அதற்கு ஒரு பரிகாரம் சொல்லுவோம். தெற்கே உள்ள திருவரங்கம் சென்று தானும் பெண்டாட்டியும் தீர்த்தாடனங்கள் செய்து மலைக்கோட்டை யிலிருக்கும் மாதுர்பூதேச்வரருக்கு அருச்சனை அபிஷேகங்கள் செய்து துதித்து,

28. அன்பது மறையோருக்கு அவனும்சந்தர்ப் பணையும்செய்து
பொன்கந்தம் விடமும்தானம் பூசுரர் தனக்குஈந்து
பின்னகர் சென்றுஇன்னோன் பெம்மானுக் கருச்சித்தேத்தி
முன்வினை நீங்கியேதான் உதித்தசேய் தீர்க்கமெய்தும்.

28. ஐம்பது பிராமணர்களுக்கு போஜன சந்தர்ப்பணை (சமாராதனை) செய்து தக்ஷிணை, சந்தனம், வெற்றிலைப் பாக்கு இவைகளை அளித்து, பிறகு தன்னூருக்குச் சென்று இவன் வழிபடு கடவுளுக்கு அருச்சனை செய்து துதி செய்து, பண்டை வினைகள் நீங்கிப் பிறக்கும் குழந்தை தீர்க்கமா யிருக்கும்.

29. சொற்படி செய்யானாகில் சுதர்தோன்று தோன்றினால்தீதாம்
சொற்படி செய்வாராகில் தோன்றிடும் ஆண்பாலொன்று
மைப்படி பெண்பால்ரெண்டு வறைகுறேம் தீர்க்கமாக
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றாது.

29. சொன்னபடி செய்யாமற்போனால் புத்திரன் பிறவான். பிறந்தாலும் அழிவான். சொன்னபடி செய்வானாகில் ஆண் குழந்தை பிறக்கும்; பெண் குழந்தைகள் இரண்டு பிறக்கும். இவைகள் தீர்க்கம் என்போம். கங்கையைச் சடாமகுடத்தில் தரிக்கும் பரமசிவனின் தேவியே! நாங்கள் சொல்லிய பலா பலன்கள் தவறமாட்டா.

30. அன்னையின் குணத்தைச்சொல்வேன் அழகுளாள்
[பொறுமைசாலி
அன்னமும் அன்பாய்ஈவள் அறிவுளாள் அடக்கமாவள்
அன்னியர் குற்றம்சொல்லாள் அடாபடி தன்னில்செல்லாள்
அன்னம்போல் சாயலொக்கும் அரிமனை ஒப்பதாகும்.

30. தாயாரின் குணங்களைச் சொல்லுவேன். அழகுள்ளவள். பொறுமை யுடையவள். அன்புடன் அன்னதானம் செய்வாள். நல்ல அறிவாளி. அடக்க முடையவள். பிறர் குற்றம் கூறமாட்டாள். அடாபடியான காரியங்களில் பிரவேசிக்க மாட்டாள். அன்னம் போன்ற சாயலை யுடையவள். லட்சுமீ தேவியை ஒப்பாள்.

31. அறமதில் இச்சைஉண்டு ஆளன்தன் மனம்போல்வாழ்வள்
அரிவைக்குத் துணையாண்ரெண்டு அரிவையும் ஒன்று
[தீர்க்கம்
திருமகள் தாய்இல்லங்கள் செப்புவோம் தென்பாலாகும்
உரைகுறோம் இவள்தன்பூர்வம் உத்தமி கேட்டாயே.

31. தருமத்தில் விருப்பமுள்ளவள். புருஷனுடைய இஷ்டம்போல நடப்பாள். இவளுடன் பிறந்த சகோதரர் இருவர். சகோதரியும் ஒருத்தி. இவர்கள் தீர்க்கம். இவளுடைய தாயாரின் வீடுகள் தெற்குத் திக்கில் உள்ளன. இவளுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

32. தென்திசைப் பாண்டிதன்னில் செனித்தனள் சைவசேயாய்
பொன்னொடு பணிதிஉண்டாய்ப் புகழான குடும்பம்பெற்று
முன்னோர்க்குத் தொண்டுபூண்டு வினையது இல்லாதாகி
உன்னத சேதுசென்று ஒதுங்கினள் காலனொடு
சிரநான்கோன் வரியப்பட்டுச் செனித்தவ ளிவளே
[யென்றோம்.

32. தெற்குத் திசையிலுள்ள பாண்டிய நாட்டிலே சைவக் குழந்தையாய் ஜனித்தாள். பொன்னும் பூஷணமும் உண்டாகிப் புகழான குடும்பத்தைப்பெற்றுப் பெரியோர்களுக்கு உபசாரங்கள் செய்து பவவினைகள்

இல்லாமல் மேன்மை பெற்ற இராமேச்வரம் சென்று பிறகு எமலோக மடைந்தாள். பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவளிவளே என்றோம்.

33. கன்னிகை முன்சென்மத்தில் கங்கையின் குலமுதித்தோள்
முன்குல முதிக்கும்அன்னம் உரைப்பீர்கள் முனியேநீதான்
தென்திசை சேதுபுண்ணியம் செனித்தவ ளென்று
[சொல்வோம்
உன்னத தவங்கள்செய்யும் உத்தமியே கேட்டிடாயே.

33. இவள் முன் ஜன்மத்தில் வேளாளர் குலத்திலுதித்து பிறகு பிராம்மண குலத்தில் உதித்த காரணம் என்ன என்று சொல்லுங்கள், முனிவரே! நீங்கள். தென் திசையிலுள்ள சேது ஸ்நானம் செய்த புண்ணியத்திஞல் ஜனித்தனள் என்று சொல்லுவோம். மேலான தவங்கள் செய்யும் உத்தமியே! கேட்பாயாக.

34. முன்சென்மம் துவாரைதன்னில் மறைகுல முதிப்பாளாகும்
அரிவைக்கு இச்சென்மத்தில் அணுகின புண்ணியமென்ன
பெரும்புத்தி அறத்திலிச்சை பிறர்குற்றம் புகலாததாலும்
திருமகள் உதிப்பளாகும் செல்வதி கேட்டிடாயே.

34. போனஜன்மத்தில் துவாரகையினில் பிராம்மணக் குலத்தில் உதிப்பாளாகும். அவளுக்கு இந்த ஜன்மத்தில் நேர்ந்த புண்ணியங்களென்ன? மேலான புத்தியை யுடையவள். தருமம் செய்வதில் விருப்ப முள்ளவள். பிறருடைய குற்றத்தை எடுத்துச் சொல்ல மாட்டாள். ஆதலால் இத்திரு மகள் இவ்விதம் உதிக்கலானுள். பார்வதியே! கேட்பாயாக.

35. பதினாந் தாண்டுக்குள்ளே பகருவோம் தந்தைகெண்டம்
வதிஷ்டரும் தடுத்துச்சொல்வார் வரைந்தகா ரணங்கள்
[சொல்வார்
பிருகு[1]தன் திசையிலேதான் புரவியோன் மகன்[2]புகுத்தி
திரமுடன் நடக்குமென்றோம் செப்புவார் பராசர்தானும்.

35. இவனுடைய பதினைந்தாம் பிராயத்திற்குள் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். இதைக்கேட்ட வசிஷ்டரும் தடுத்துச் சொல்லலானுர். நீங்கள் சொன்ன விஷயத்தின் காரணங்களைச் சொல்லுங்கள். சுக்கிரனுடைய தசையிலே, சனி புக்தியில் நிச்சயமாய் நடக்குமென்றோம். இதைக் கேட்ட பராசரர்தானும் சொல்லலுற்றுர்.

---

1. சுக்கிரன்
2. சனி

36. புகர்திசை கரிபுத்தி பெரிதான பணியும்நேரும்
இகபர னருளினாலே எய்தாது மாரகங்கள்
பகைபானு திசைஅந்தத்தில் பகருவோம் மாரகங்கள்
தகைமையாய் இருபான்ஆறில் சாற்றுவோம் மாரகங்கள்.

36. சுக்கிர தசை சனி புக்தியில் பெரிய தொழிலும் நடக்கும். இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் கடவுளின் அருளினாலே மாரகங்கள் ஏற்படா. சூரிய தசைக் கடைசியில் மாரகங்கள் ஏற்படும் என்று சொல்லு வோம். தகுதியாக இருபத்தாறும் பிராயத்தில் மாரகங்கள் ஏற்படும் என்று சொல்லுவோம்.

37. பின்சென்மம் காசிதன்னில் பிறப்பனும் இக்குலத்தில்
அன்னவன் இச்சென்மத்தில் அதிகமாய்ப் பொருள்மே [லிச்சை
உன்னத கட்டுவார்த்தை உவமையாய்ச் சொல்வதாலும்
என்னமாய் பிரும்மசேயாய் எய்துவா னென்றுசொல்வீர்.

37. அடுத்த ஜன்மம் கடைசியில் இக்குலத்தில் பிறப்பான். அவன் இந்த ஜன்மத்தில் அதிகமாகப் பணத்தாசை பெற்று மேலான வார்த்தைகளை இட்டுக்கட்டி, திருஷ்டாந்தங்களுடன் சொல்லுவதனாலும் எவ்விதம் பிராம்மண குலத்தில் பிறப்பான் என்று சொல்லுவீர்கள்.

38. மாலின்மேல் பத்தியாயும் வருவோர்க்கு அன்னமீந்தும்
சாலவே தலங்கள்சென்றும் செனஉப காரியாயும்
ஞாலமேல் நல்லோனாயும் நாயகன் வாழ்வதாலே
ஏலவே உதிப்பானாகும் ஈசுவரி கேட்டிடாயே.

38. விஷ்ணுவினிடத்தில் பக்தி செலுத்தி, வரும் விருந்தினருக்கு அன்னதானம் செய்து, பொருத்தமாகவே திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்றும் பொதுஜன உபகாரியாகியும், உலகினில் நல்லவனாகியும் இவன் வாழ்ந்து வந்ததனாலே, ஏற்பவே உதிப்பானும். பார்வதியே! கேட்பாயாக.

39. ஆறுமூன்றுஆண்டில் அன்னைக்குக் கண்டமெய்தும்
கூறுவோம் பாலனுக்கு குருதிசை எழுபதாண்டில்
பாரினில் தேளின்மாதம் பகருவோம் மாரகங்கள்
வேறொரு சென்மந்தன்னை விளம்புவோம் இனிமேலாக.

39. முப்பத்தொன்பதாவது பிராயத்தில் தாய்க்குக் கண்டம் ஏற்படும். இவனுக்கு எழுபதாவது வயதில் குரு தசை நடக்கும்போது கார்த்திகை மாசத்தில் மாரகம் ஏற்படும். இனிமேலாக வேறு ஒரு ஜன்மத்தைப்பற்றிப் பேசுவோமாக.

40. உத்திரம் கோகர்னத்தில் உதிப்பனும் இக்குலத்தில்
மெத்தன பொருள்படைத்து வித்தகன் வாழ்வானுகும்
அத்திரி தடுத்துச்சொல்வார் அவனுக்குச் சீவனங்கள்
சித்தமாய்ச் சொல்லுமென்ன செயமுனி புகலுகின்றூர்.

40. வடக்கே கோகர்ன க்ஷேத்திரத்தில் இக்குலத்தில் உதிப்பானுகும். மேன்மையாக அதிகப் பொருள் படைத்து இவன் வாழ்வானுகும். இதனைக் கேட்ட அத்திரி மகரிஷி தடுத்துக் கூறுவார். அவனுடைய சீவன ஸ்தானத்தை விளக்கமாகச் சொல்லுங்கள் என்று வினவ, ஜயமுனிவர் சொல்லுகின்றூர்.

41. அன்னிய பாஷையாலே அரசனுல் அதிகாரங்கள்
இன்னவன் செய்வானுகும் இருபது ஆண்டுமேலாய்
மன்னரால் சீவனங்கள் மருவிடும் பிறைபோல்யோகம்
அன்பது ஆறுஆண்டும் அரசுமே செய்வானுகும்.

41. அன்னிய பாஷா ஞானத்தினுல் அரசனுடைய அதிகாரங்கள் இவன் செலுத்துவானுகும். இருபது வயதிற்குமேல் அரசனுல் ஜீவனங்கள் ஏற்படும். பிறைச் சந்திரனைப்போல் யோகங்கள் ஏற்படும். ஐம்பத்தாறு வருஷங்கள் ராஜ யோகத்தை அனுபவிப்பான்.

42. இன்னமும் விபரமாக இயம்புவோம் பின்பாகத்தில்
அன்னவன் செனனகாலம் அசுவினி கடைப்பாகத்தில்
துன்சிகி திசையிருப்பு செப்புவோம் திங்கள்மூன்று
முன்பாகம் விபரம்சொன்னேம் முதல்வியே கேட்டிடாயே.

42. இன்னும் மற்ற விஷயங்களை விவரமாகப் பின்பாகத்தில் விரித்துரைப்போம். அவனுடைய ஜனனகாலத்தில் அசுவனி நட்சத்திரம் கடைசி பாதமாகையால், கேது மகா தசையில் இருப்பு மாதம் மூன்றேயாகும். இதுபரியந்தம் முன்பகுதியை விவரமாக எடுத்துரைத்தோம். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 77

1. திங்கள்புலி[1] சனிமீனம் கேது கெண்டை
சேய்கோலில் ராகுகுரு சுறுவில்[2] தங்க
செங்கதிரும் புதனும்வெள்ளி தெருக்கால் ஏற
சென்மமொத்தை[3] பலனெவ்வார் செப்பு வீர்கள்
இங்கிவை ஆண்செனனமுறும் வடதென் வீதி
இந்திர திசைவாடையது கூரை யாகும்
மங்கை பாஞ்சாலிதந்தி தெற்கே யாகும்
மால்ஈசன் வடமேல்பால் அருகனிந்திரம்.

1. சந்திரன் சிம்மத்திலும், சனி மீனத்திலும், கேது கடகத்திலும், செவ்வாய் துலாத்திலும், இராகுவும் குருவும் மகரத்திலும், சூரியனும் புதனும் சுக்கிரனும் விருச்சிகத்திலும் ஏறி நிற்கும்படியான கிரகநிலைகள் கொண்ட இம்மேஷலக்ன ஜாதகத்திற்குண்டான பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி சப்தரிஷிகளைக் கேட்டாள். இது ஒரு ஆண் மகனது ஜாதகமாகும் வடக்குத்தெற்கு வீதியில் கிழக்குப் பார்த்த வாசலையுடைய வீடு. அது ஒரு கூரைக்கட்டு. திரௌபதி அம்மனும், பிள்ளையாரும் தெற்கேயுளர். விஷ்ணுவும் ஈசுவரனும் வடமேற்கில் கோவில் கொண்டுளர். அருகர் கோவில் கிழக்கே யுள்ளது.

சனி	லக்கினம்		
	இராசி சக்கரம்		கேது
ராகு குரு			சந்திரன்
	சூரியன் புதன் சுக்கிரன்	செவ்வாய்	

2. தீரமிலா அருகினிலே காளி வாசம்
செப்புமிந்த அடையாளம் சமவூர் தன்னில்
அருகர்குலகம் திரிதிகையாம் செனன மாகும்
அவன்தந்தை தாய்துணைவர் களத்திரபுத்திரர்

---

1. சிம்மம்
2. மகரம்
3. மேஷம்

பெரும்சென்மம் முன்சென்மம் இந்நூல் தன்னில்
பேசுவோம் சாந்திகளும் பிரிய மாக
வரும்தந்தை வர்க்கமது ஆண்பால் காணு
வளமையுறும் பெண்ணொன்று தீர்க்க மெய்தும்.

2. அதற்குச் சமீபத்தில் காளி கோவில். சொல்லிய இந்த அடையாளம் கொண்ட சமவூரில் சைனர் குலத்தில் மூன்றாவது ஜன்மத்தில் உதிப்பான். அவன் தாய் தந்தையர், சகோதரர், மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களும், முன்பின் ஜன்மமும் இந்தப் புஸ்தகத்தில் விரித்துரைப்போம். சாந்திகளும் கூறுவோம். பிரியமாக வரும் தந்தை வர்க்கத்தில் ஆண் மகனில்லை. வளப்பம்பொருந்திய பெண்ணொன்றுண்டு. அவள் தீர்க்கம்.

3. எய்துபிதா சேதிதனை இயம்பக் கேளாய்
இடரான புத்தியிலான் உனைச்சல் நீட்சி
அய்யமென்றோர் தனைக்காப்பன் மால்நி றத்தான்
அதிககல்வி வேதங்கள் அறிவா னுகும்
நய்யவே கூறுனும் கிருஷி செய்வன்
நற்புத்தி கடவுள்பத்தி வறுமை காணுன்
செய்தன்னிலே சாமரைரே கையுமே உண்டு
சித்திர மில்லம்செய்திடுவன் தீர நெஞ்சன்.

3. பெற்ற தந்தையின் செய்தி விவரங்களைச் சொல்லக் கேட்பாயாக. இடைஞ்சலான புத்தியில்லாதவன். இளைத்து நீண்ட தேகத்தை யுடையவன். அண்டினோரைக் காப்பாற்றுவான். கருப்பு நிறமுடையவன். அதிகக் கல்வி கேள்விகளை யுடையவன். வேதங்களை அறிந்தவன். வருந்தும்படியான பேச்சுப் பேசமாட்டான். கிருஷித்தொழிலைச் செய்வான். நல்ல புத்தியை யுடையவன். கடவுளிடம் பக்தி பூண்டவன். தரித்திரமில்லாதவன். கைதன்னிலே பத்மரேகையை யுடையவன். அழகான வீடு கட்டுவான். தைரியமுள்ள மனத்தை யுடையவன்.

4. நெஞ்சிரக்கம் துலைசென்ம சித்திரை நாளாம்
நீர்தோய்வன் சகலரையும் நேசம் கொள்வன்
கஞ்சமலர் ரேகையுண்டு கரத்தி லேதான்
கனத்தபுத்தி காலாள்கள் கருதான் பொய்யும்
மிஞ்சிஉரை நாபிநோய் பித்ததேகன்
மேதினியை விருத்திசெய்வன் விரதம் பூண்பன்
தஞ்சமென்றோர்க் குதவிடுவன் பனையோர் விருத்தி
சாற்று குணத்தானுக்கு செனித்த பாலன்.

4. மனதில் இரக்கபுத்தி யுடையவன். சித்திரா நட்சத்திரம் கூடிய தினத்தில் துலா லக்கினத்தில் உதித்தான். தீர்த்தாடனங்கள் செய்வான். யாரையும் சிநேகம் செய்வான். பத்மரேகை கையில் உண்டு. பெரும்புத்தி யுடையவன். காலாள்களை யுடையவன். பொய்யுரைக்க எண்ணவும் மாட்டான். அதிகமாய்ப் பேசுவான். மூலச்சூடுடையவன். பித்தசரீர முடையவன். பூஸ்திதியை விருத்தி செய்வான். விரதங்களை அனுஷ்டிப் பான். அண்டினோருக்கு ஒத்தாசை செய்வான். பனை, ஏர்கள் விருத்தி யாம். இத்தகைய குணங்களை யுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறந்தான்.

5. பாலன்குணம் மாநிறத்தான் யூகை யுள்ளான்
பணிதிபாத்திரம் சேர்ப்பன் சமமாம் கல்வி
சீலவான் பொறுமையுளன் பலர்க்கு நேயன்
செய்நிலத்தை விருத்திசெய்வன் தாழ்வு றுதான்
சாலவே தாயிரண்டு இளையா ளுக்கு
செனித்தவனும் தந்தையைப்போல் சமயோ கத்தோன்
வேல்விழியாள் மனைவியொன்றே இருபான் ஒன்றில்
விளங்கிடுமே அருகில்உத்திரம் அன்னை வர்க்கம்.

5. ஜாதகனுடைய குணங்களை உரைப்போம். மாநிறமுள்ளவன். புத்திக்கூர்மை யுடையவன். சம்பத்துக்களைச் சேர்ப்பான். சமமான கல்வியை யுடையவன். சீலமுடையவன். பொறுமை யுடையவன். பல பேர்களுக்குச் சிநேகிதன். நஞ்செய் நிலத்தை விருத்தி செய்வான். தாழ்மையை அடையமாட்டான். இரண்டு தாயார்களுண்டு. இவன் இளையாளுடைய பிள்ளை. தகப்பனைப்போல் சமமான யோகத்தையுடையவன். மனைவி ஒருத்திதான். இவனுடைய இருபத்தொன்றும் பிராயத்தில் சமீபத் தில் வடதிக்கில் அன்னையின் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்டாட்டி வருவாள்.

6. அன்னைதுணை புத்திரியாம் துணைகா ணாம்
அவள்குணத்தைக் கூறுகின்றேன் மாம்சி வப்பள்
பின்னமில்லாள் அடக்கமுளாள் பெருத்த புத்தி
புகழேற்பள் மருமமுளாள் பணிதி இச்சை
முன்கோபம் வெளிக்காட்டாள் பித்த தேகி
உதித்திடுமே சுதரேழு அதில்ஆண் ஒன்று
கன்னிகையு மூன்றுஎன்றோம் தீர்க்க மெய்தும்
காளையுமே இருசென்மம் கழறு வோமே.

6. தாயாருடைய சகோதரனில்லை. சகோதரிதான் உண்டு. அவ ளுடைய குணங்களைக் கூறுகின்றோம். மாநிறமுள்ளவள். பின்னமில்லாத சரீரத்தை யுடையவள் அடக்கமுடையவள். பெருத்தபுத்தி கொண்டவள்.

கீர்த்தியைப் பெறுவாள். ரகசியமுள்ளவள். பூஷணங்களில் இச்சையுள்ளவள். முன்கோபமுள்ளவள். அதை வெளிக்காட்டமாட்டாள். பித்தசரீரமுள்ளவள். ஏழு குழந்தைகள் பிறக்கும். ஆண் ஒன்று. பெண்கள் மூவர். இவர்கள் தீர்க்கம். இது இவனுடைய இரண்டாவது ஜன்மம் என்றும் கூறுவோம்.

7. மேதினியில் இவன்மேலாய் புத்திரன் வாழ்வன்
விளம்புகிறேம் உதித்தவன்தன் துணைவர் சேதி
தீதுண்டு பின்துணைவர் முன்பெண் ஒன்று
தீர்க்கமுறும் அவள்குணத்தை செப்பக் கேளாய்
சூதிலாள் பொறுமையுளாள் முன்கோ பத்தாள்
செல்விக்கு உத்திரத்தில் வரனும் தோன்றும்
நீதியாய் சுதராண்பால் இரண்டு தீர்க்கம்
நிமலிகளும் அவ்வாறுய் நிகழ்த்து றேமே.

7. உலகில் இவனுக்கு மேலாக இவனுடைய புத்திரன் வாழ்வானுகும். இவனுடைய சகோதரருடைய செய்தி விவரங்களைக் கூறுவோம். அக்காள் ஒருத்தி தீர்க்கம். தம்பிகள் தீதடைவர். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம்; கேட்பாயாக. சூதுவாதில்லாதவள். பொறுமையுள்ளவள். முன்கோபமுடையவள். இவளுக்கு வடக்கிலிருந்து புருஷன் வருவான். இரண்டு ஆண் குழந்தைகள் நிச்சயம். பெண் குழந்தைகளும் அவ்வாறென்றே சொல்லுவோம்.

8. நிகழ்த்துவோம் அவளுக்கோர் வடிவ முண்டு
நெஞ்சில்முகம் தன்குற்றம் நேரு மம்மா
அகமதனில் பாதையிலாள் வெளியா ருக்கு
அச்சமுறும் பிரைகுழல்யென் றறைவாள் மாதே
செகமதனில் அவ்வினைகள் விலகா தாகும்
முன்செய் வினையதனுல் சேர்ந்த தம்மா
பகைவந்த காரணம்சொல் பராச ரேநீர்
பத்தினியும் முன்சென்மம் தோகை மேல்பால்.

8. அவளுக்குப் பிரத்தியேகமாக ஒரு அழகிய சொரூபமுண்டு. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். மனதில் உள்ள குற்றம் முகத்தில் விளங்கும். மனதில் உபாதை இல்லாதவள். வெளிப்படையாகப் பிறருக்குப் பயப்படும்படியான சுவபாவமுள்ளவள்போல் தெரிவித்துக் கொள்ளுவாள். உலகினில் அவளுடைய வினைகள் நிவர்த்தி ஆகா. அவை பண்டை பிராரப்த வினையின் பயனும். பகைமை ஏற்பட்ட காரணத்தைச் சொல்லுங்கள். பராசரரே! நீங்கள்தான். இப்பத்தினியும் முன் ஜன்மத்தில் தோகைக்கு மேற்குப் பக்கத்தில்,

9. மேல்பாலின் அருகில் சிறுவூரி லேதான்
 மேவினுள் இரட்டித்த குலமே தோன்றி
பால்பாக்கியம் வறுமையின்றி சுதர்கள் உண்டாய்
 பஞ்சைகட் குதவிசெய்து வரனுள் ளூரில்
நீலியும் சுககுடும்பி யாகி வாழும்
 நாளிலே வந்தவினை நிகழ்த்து வோமே
சாலவே மைத்துனன்தன் மனைவிபேரில்
 சதியான வார்த்தைசொன்னுள் தையல்தானும்.

9. சமீபத்திலுள்ள சிறிய கிராமத்திலேதான் ரெட்டியார்கள் வமிசத்தில் உதித்தனள். பால் பாக்கியமுடையவள். தரித்திரமில்லை. பிள்ளைகள் பிறக்கும். ஏழைகளுக்கு உதவி செய்வாள். உள்ளூரிலிருந்தே புருஷன் வருவான். சுகமான குடும்பத்தைப்பெற்று வாழ்ந்து வரும்நாளில் ஏற்பட்ட ஊழ்வினையைக் கூறுவோம். தன்னுடைய மைத்துனனின் மனைவிபேரில் அவதூருன வார்த்தைகளைச் சொன்னுள்.

10. தையல்மொழி தானறிந்து விலக்க லுற்ருர்
 தரணியிலே நீங்கியபெண் சஞ்ச லத்தால்
பயமில்லா என்மீதில் பழியே சொன்னுள்
 பத்தினிக்கு மறுசென்மம் பாரோர் யேச
ஐயமில்லா வாய்த்தொண்டை குற்ற மாயும்
 அவள் துணைபெண் காணுமல் அலைவாய் என்று
நய்யமனத் துடன்தெருதூள் வாரி விட்டு
 நடந்தனள்காண் அம்மாது வேறு நாடு.

10. இப்படி அம்மாதின் சொல்லையறிந்து இவள் வீட்டிலிருந்து விலக்கப்பட்டாள். பூமியில் விலக்கப்பட்டவள் சஞ்சலமுற்று, பயம் யாதும் இல்லாத என்பேரில் பழிவார்த்தைகளைச் சொன்னுய். அடுத்த ஜன்மத்தில் உன்னைப்பலர் கேலிசெய்து யேச, சந்தேகமில்லாமல் வாயும் தொண்டையும் குற்றமடைந்து, சகோதரியே இல்லாமல் அலையக்கடவாய் என்று வருந்தும் மனத்துடன் தெருவிலிருக்கும் மண்ணைவாரித் தூற்றி விட்டு, வேறு தேசத்திற்கு அவள் போய்விட்டாள்.

11. நாடு சென்ற மாது சாபம்ஒன்று
 நல்கிற்று இதுவன்றி வேறு யில்லை
காடுமயில் வாகனத்தோன் பத்தி கொண்டு
 கனமிலா ஏழைக்கு அன்ன மீந்து

கூடுவிட்டாள் காலன்பக்கல் சென்றுயின்னேள்
குரைதலையன் வரியவந்தாள் கோதை தானும்
தேடியே அருகர்குலம் வந்தாள் மாது
தேவியிதை மறுத்துசில வார்த்தை சொல்வாள்.

11. அப்படி நாட்டை விட்டுச்சென்ற மாதின் சாபம் ஒன்று இவளைச் சார்ந்தது. இதுவன்றி வேறில்லை. மயில் வாகனத்தோனுகிய முருகக் கடவுளிடம் பக்திபூண்டு பணமில்லாத ஏழைகளுக்கு அன்னதானம் செய்து தன் சரீரத்தை இழந்து எமலோகம் சென்ருள். பிறகு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவள் அருகர் வமிசத்தில் வந்துதித்தாள். இதுகேட்ட தேவி அதனை மறுத்துச் சில வார்த்தைகள் சொல்லலானுள்.

12. வால்விழியும் முன்சென்மம் ரெட்டி வமிசம்
வந்தவளாம் இச்சென்மம் இக்கு லத்தில்
மேவின காரணம்சொல் முனியே முன்சென்மத்தில்
ஞமலி யசமான் தொண்டு நிதமும்கொண்டு
ஆளன்மனம் கோணுமல் வாழ்ந்த தாலே
அருகர் மதம்தனில் உதித்தாள் இந்த மாது
தேள்விஷம் போல் மாதுமொழி சிறந்த தாலே
....தாயே.

12. இம்மாது போன ஜன்மத்தில் ரெட்டி வமிசத்தில் பிறந்து வளர்ந்தவள்: இந்த ஜன்மத்தில் இக்குலத்தில் வந்துதித்த காரணம் சொல்லுங்கள் முனியே! முன் ஜன்மத்தில் நாயகனுக்கு நாய்போலத் தினந்தோறும் தொண்டுசெய்தும், புருஷனுடைய மனம் கோணுமல் வாழ்ந்தும் வந்ததனுலே அருகர் மதத்தில் உதித்தாள் இந்தமாது. தேளின் விஷம் போல் கடுமையான வார்த்தைகள் சொல்லுவதில் சிறந்தவள் இவள். அதனுல்..தாயே.

13. செறிந்த வினைதனக்குப் பரிகாரம் சொல்வாய்
தீராது யெச்சாந்தி செய்தாலும் தான்
மறுசென்ம..
....

13. ஏற்பட்ட ஊழ்வினைக்குத்தக்க பரிகாரம் சொல்லுங்கள். எந்த சாந்தி செய்தாலும் இவ்வினை தீர்வதற்கில்லை. அடுத்த ஜன்மம்...........
....

14. ....

14. ....

15. விளம்புகிறோம் தந்தையின் பூர்வம்தன்னை
பூர்வமாது...
....
....

15. தந்தையின் பூர்வகால விவரங்களை எடுத்துக் கூறுவோம். ஆதியில்...........................

16. நகரம் தானடைந்து நமன்பால் சென்று
மாரன் துணை வரியவந்தான் இந்தபாலன்
மங்கை மறித்தோதுகின்றாள் மனைவி ரெண்டு
....

16. தன் ஊர் வந்ததும் எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு வந்து உதித்தவன் இந்த பாலகன் தான். இதுகேட்ட பார்வதி தடுத்துக் கூறலுற்றாள். பெண்டாட்டி இரண்டு என்றீரே.......
... .

17. ....அனுசரித்தான்....................
பிந்தியும் அந்ததோஷம் புக்கிற்று என்றுசொன்னோம்.

17. ....அநுசரித்து வந்தான்..................
............திரும்பவும் அந்த தோஷம் வந்தடைந்தது என்று சொன்னோம்.

18. மறையவன் மணத்துக்காக அரும்பொருள் தாரேனென்று
நெறிசொல்லி ஈயாவிட்டான் நேர்ந்தது அந்ததோஷம்
இருமனை அணுகிற்றன்றேயிதுவன்றித்துணையாண் காணான்
வருமனை முதலா.........கள் உண்டோசொல்வாய்

18. பிராமணனுடைய கலியாணத்திற்காக அரியபொருள் தருவதாகச் சொல்லி, உபாயமும் நியாயமும் சொல்லிக் கொடுக்காமலிருந்து விட்டான். அதனால் அந்த தோஷம் நேர்ந்தது. இரண்டு பெண்டாட்டிகள் ஏற்பட்டனர். சகோதரன் எவனுமில்லை. முதல் பெண்டாட்டிக்குப்...................... ..... புத்திரபாவமுண்டோ சொல்லுங்கள்.

19. சுதர்காணான் சுகமும்காணான் சென்மாந்திரக் கடனையம்மா
வதிபன்தன் மறுசென்மத்தை வறைகுறோம் பிரயாகை
[பக்கல்
எதுகுலம் தனிலுதித்து இகபரன் பத்திகொண்டு
சதியிலா தேவராகச் சாருவா னென்றுசொன்னோம்.

19. பிள்ளைகள் இல்லை. சுகமும் இல்லை. இது இவனுடைய ஜன்மாந்திர காலத்தில் செய்த கர்மபலனேயாகும். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிய விவரம் கூறுவோம். பிரயாகை பக்கத்தில் யதுகுலத்தில் பிறந்து இம்மை மறுமைப் பலனையளிக்கும் கடவுளிடம் பக்திபூண்டு குற்றமில்லாத தேவஸ்வரூபமாகச் சேர்வன் என்று சொன்னோம்.

(பிரயாகை = ஓர் தலம். ஓர் நதி. திரிவேணி சங்கமம். பிரசாபதி க்ஷேத்திரம். இது கங்கையும் யமுனையும் கூடுமிடத்திலுள்ளது. இது பிரபலமானதொரு புண்ணிய க்ஷேத்திரம்.)

20. இந்ததோர் சென்மத்திலே இவன்செய்த புண்ணியம்என்ன
சந்ததம் கடவுள் தியானம் சார்ந்ததால் உதிப்பானென்றோம்
விந்தையாய் முப்பாஞ்றில் மேடமா தத்திலேதான்
சந்திரன் திசையிலேதான் சனிபுக்தி காலம்தன்னில்.

20. இந்த ஒரு ஜன்மத்தில் இவன் செய்த புண்ணிய காரியங்களென்ன? எப்பொழுதும் கடவுளைத் தியானித்து வந்ததனால் மேன்மையுள்ள குலத்தில் பிறப்பானென்றோம். அதிசயமாக முப்பத்தாறும் பிராயத்தில் மேஷமாசத்தில் சந்திரதசையில் சனியின்புக்தி நடக்கும்போது,

21. மரகம் தந்தையென்றோம் அதற்குமேல் மூன்றுஆண்டில்
தீரமாய் சாடிமாதம் செல்லுவாள் அன்னைதானும்
பாரினில் இவன்தன்பூர்வம் பகருவோம் தாயேகேளு
ஆறுமா் முகனைப்பெற்ற அம்பிகையாளே கேளாய்.

21. தந்தைக்கு மரணம் ஏற்படும் என்றோம். அதற்குமேல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு நிச்சயமாய் மாசிமாதத்தில் தாய்க்கு மரணம் ஏற்படும். உலகினில் இவனைப்பற்றிய பூர்வகால விவரங்களைக் கூறுவோம். தாயே! கேள். ஆறுமுகக் கடவுளைப்பெற்று எடுத்த பார்வதியே! கேட்பாயாக.

22. அருணைக்கு மேல்பாலாக அருகினில் பேரூர்தன்னில்
திருவருள் விலாசம்போன்ற தனவைசிய குலமுதித்து
பெருமையாய் செட்டுச்செய்து பூமியில் வாழும்நாளில்
உறைந்த ஊழ்முதனைச்சொல்வேன் உத்தமி கேட்டிடாயே.

22. திருவண்ணாமலைக்கு மேற்கே சமீபத்திலுள்ள பேரூரில் லட்சுமீ கடாக்ஷம் பொருந்திய தன வைசியர் குலத்திலுதித்துப் பெருமையுடன் வியாபாரம் செய்து பூமியில் வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினையைப் பற்றிச் சொல்லுவோம். உத்தமி! கேட்பாயாக.

23. செட்டுகள் செய்யும்காலை சிவவேடம் தரித்தோன்தானும்
துட்டுகள் இவனைக்கேட்க துர்வார்த்தை மிகவேசொல்லி
நட்டமாய் ஓட்டிவிட்டான் நவிலுவான் அகதிதானும்
தட்டுதல் செய்தபாவி செனித்திடு மிச்சென்மத்தில்.

23. வியாபாரங்கள் செய்யும்போது சிவவேடம் தரித்தோன் ஒருவன் இவனைத் துட்டுகள் கேட்க, அவனைப் பார்த்துக் கெட்டவார்த்தைகள் அதிகமாய்ச் சொல்லி ஒன்றும் கொடுக்காமல் விரட்டி விட்டான். அந்த அகதி அவனைப் பார்த்துச் சொன்னதாவது, பணம் கொடுக்காமல் தடுத்த பாவிக்கு இனி ஜனித்திடும் ஜன்மத்தில்,

24. துணையாண்கள் இல்லாதாகி செனித்தயில் தீயால்சேதம்
பிணையாகு முதலில்புத்திரர் பாரியின் வர்க்கநாசம்
துணிவுடன் சொல்லிச்சென்றான் தொடர்ந்தது [அந்ததோஷம்
தனயனும் அந்தியத்தில் சங்கரன் தொண்டுசெய்து.

24. சகோதரனில்லாமலும், பிறந்த வீடு தீக்கு இரையாகியும், முதலில் பிறக்கும் புத்திரர் தோஷமடைந்தும், பெண்டாட்டியைச் சேர்ந்தவர்கள் நாசமடைந்தும் திண்டாடுவான் என்று துணிச்சலுடன் சொல்லிச் சென்றான். அந்த தோஷம் இவனைத் தொடர்ந்தது. இவனும் கடைசி காலத்தில் பரமசிவனைத் தொண்டுகள் செய்து வழிபட்டு,

25. பலபல தலங்கள்சென்று பரங்களுக் கன்னமீந்து
குலவினன் காலன்பக்கல் குறைதலை வரியப்பட்டு
நலமுள அருகர்வமிசம் நாயகன் உதித்தானென்றோம்
உலவிடு முன்னூழ்தோஷம் உறும்துணை ஆணில்லாமல்.

25. பற்பல ஸ்தலங்களுக்குச் சென்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்து கடைசியில் எமலோகம் சென்றான். பிரம்மாவினால் சிருஷ்டிக்கப் பட்டு நன்மை மிகுந்த அருகர் வமிசத்தில் இவன் உதித்தானென்றோம். முன்பு செய்த ஊழ்வினை இவனைச் சார்ந்தது. உற்ற சகோதரனில்லாமல்,

26. முன்துணை நாசமாயும் உதித்தயில் சேதமாயும்
அன்னவன் வாழ்வானுகும் அம்பிகை கேட்கலுற்றாள்
யெந்த காலத்திலேதான் இல்லமும் கெடுதிநேரும்
வந்தவன் ஈரேழாண்டில் மடிவுண்டு தீயால்இல்லம்.

26. முதல் சகோதரர் நாசமடைந்தும், பிறந்த வீடு சேதமாயும் அவன் வாழ்வானுகும். இதுகேட்ட அம்பிகை சொல்லலுற்றாள். எந்தக்காலத்தில்

வீடும் நாசமடையும்? இவனுடைய பதினான்காவது பிராயத்தில் தரித்திரம் ஏற்படும். வீடும் தீக்கு இரையாகும்.

27. பிந்தியும் அல்பமில்லம் பேணுவான் அதின்பின்னாக
விந்தையாய் சித்திரயில்லம் எய்துவான் இருபான்ஐந்தில்
அந்தஇல் வாயுதிக்கில் அறைந்தனம் இவனுக்கேதான்
தந்தைநாள் பூமிதன்னைத் தானவன் குறைவுசெய்யான்.

27. பிறகும் சாதாரண வீடு ஒன்று பரிபாலிப்பான் அதன் பின்னாக அதிசயமான அழகிய வீட்டையடைவான். இருபத்தைந்தாவது பிராயத்தில் வாயு திக்கிலுள்ள அந்த வீடு இவனையே அடையும். தந்தை காலத்தில் சம்பாதித்து வைத்திருந்த பூஸ்திதியை இவன் செலவு செய்யான்.

28. சல்லியம் கொள்ளானாகும் தரியலர் வெற்றிகொள்வன்
இல்லையென் றுரைக்கமாட்டான் இவன்பந்து புகழ [வாழ்வன்
அல்லல்கள் அடையானாகும் அவனியோர்க் குதவிசெய்வன்
புல்லிய உறவுகொள்ளான் பிரபல குடும்பியாவன்.

28. கடன் வாங்கமாட்டானாகும். எதிரிகளை ஜயிப்பான். யாரைப் போருக்கு இல்லை என்று சொல்லமாட்டான். இவன் சொந்தக்காரர்கள் இவனைப் புகழும்படி வாழ்வான். இடைஞ்சல்களுக்கு ஆளாகமாட்டான். உலகிலுள்ளோர்க்கு ஒத்தாசை செய்குவான். அல்பர்களுடன் சிநேகம் செய்ய மாட்டான். பிரபலமான குடும்பத்தை வகிப்பான்.

29. களத்திரம் தன்னால்பூமி கலந்திடு மிவனுக்கேதான்
தளர்ச்சியாய் அதின்பின்னாக சாற்றுவான் துணைவிபக்கல்
வளர்த்தியாய்க் குடும்பியாவன் வாகன விருத்தியுள்ளான்
கிளைத்திடும் பூமிதானும் கூறிய மொழிகுன்றாது.

29. பெண்டாட்டியினால் பூஸ்திதி இவனுக்கு வந்து சேரும். மனத் தளர்ச்சியுடன் அதனைப் பின்பற்றி மனைவியிடம் பிரியமாயிருப்பான். வளப்பம்பொருந்திய குடும்பியாவன். வாகன அபிவிருத்தியுடையவன். பூஸ்திதியும் விருத்தியாகும். நாங்கள் சொன்னசொல் தவறாது.

30. செனித்திடு காலம்தன்னில் செம்பாம்பு திசையிருப்பு
குனித்திடு ஆண்டுஐந்தும் கூறுவோம் பலனையாங்கள்
தனதான்ய மேன்மேல்ஓங்கும் சகோதர விருத்திசேதம்
இனமது சூதகங்கள் எய்திடு மென்றுசொல்வோம்.

30. ஜனனகாலத்தில் கேதுமகாதசையில் இருப்பு வருஷம் ஐந்து. இதன் பலனைக் கூறுவோம் நாங்கள். தனதான்ய விருத்தி மேன்மேலும் ஓங்கிடும். சகோதர விருத்தியும் சேதமும் ஏற்படும். சொந்தக்காரர்கள் மூலம் ஆசௌசம் ஏற்படும் என்று சொல்லுவோம்.

31. அறுபது ஆறுஆண்டில் ஆவணிமாதம் தன்னில்
திருதிகை முன்பக்கத்தில் செனித்தனன் உடலம்வாடும்
மறுசென்மம் தில்லைதன்னில் மறைகுல முதிப்பானுகும்
பெருமையும் புகழுமுண்டாய் புண்ணியன் வாழ்வானுமே.

31. அறுபத்தாறும் வயதில் ஆவணி மாசத்தில் சுக்கிலபட்சம் திருதியையில் நம் ஜாதகன் மரணம் அடைவான். அடுத்த ஜன்மம் சிதம்பரத்தில் பிராமண குலத்தில் பிறப்பானுகும். பெருமையும் புகழும் உண்டாகி இந்த தர்மிஷ்டன் வாழ்வானுகும்.

ஜாதகம் 78

1. மதிபுதன் இரவிகேது மங்கலன் சாடியாக
விதி மிதுனத்தில்தங்க வெள்ளியு மீனம்புக்க
நிதிகுரு கோலதாக நீண்டதோர் பணியும்சீயம்
இது கிரகங்கள்கூடி லக்கினம் மேடமாக.

1. சந்திரன் புதன் சூரியன் கேது செவ்வாய் இவர்கள் ஒருங்கே கும்பத்தில் தங்க, சனி மிதுனத்தில் நிற்க, சுக்கிரனும் மீனத்தையடைய, பாக்கியாதிபதியாகிய குரு துலாத்திலும், இராகு சிம்மத்திலும் தங்கும்படியான கிரக நிலை கொண்ட இம்மேஷ லக்கின ஜாதகத்திற்கு,

சுக்கிரன்	லக்கினம்		சனி
சந்திரன் செவ்வாய் புதன் சூரியன் கேது	இராசி சக்கரம்		
			ராகு
		குரு	

2. உரைப்பீர்கள் பலனையென்று உத்தமி கேட்கும்போது
குறுமுனி புகலுகின்றார் குறித்தது ஆண்பால்சென்மம்
பெரும்தந்தை இல்லம்சொல்வேன் புதன்வாடை கீழ்மேல் [வீதி
அருகினில் சந்திதோன்றும் ஆனைமாமுகத்தோன் மாரி.

2. உண்டான பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கும் போது, அகஸ்தியர் சொல்லலுற்றார். இங்குக் குறிப்பிட்டது ஆண்பால் ஜன்மம். பெற்ற தந்தையின் வீட்டைப் பற்றிச் சொல்லுவேன். கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையிலுள்ளது. பக்கத்தில் சந்து ஒன்றுண்டு. யானை முகத்தோனை பிள்ளையாரும் மாரியம்மனும்,

3\. குடகினில் தங்குமென்றேம் கூன்பிறை அணிந்தோனீசன்
வடமேல்பால் பாழதாகும் அருகினில் அக்கினிகாளி
அடவுடன் கீழ்பால்கன்னி அணுகிடும் உத்திரம்காளி
இடமது சிறுவூராகும் ஈன்றயில் அன்னைக்ஷேத்திரம்.

3\. மேற்கே கோவில் கொண்டருளினர். பிறைச்சந்திரனைத் தரித்த பரமசிவன் வடமேற்கிலுள்ளார். அக்கோவில் பாழடைந்துள்ளது. அதற்குச் சமீபத்தில் அக்கினி, காளிதேவி ஆகியோர் கோவில்கள். கீழ் பாகத்தில் துர்க்கை கோவில். வடக்கிலும் காளி கோவில். இவர்கள் இருக்கும் இடம் சிறிய ஊராகும். பிறந்த இடம் தாயின் வீடு.

4\. உத்திரம் திசையாமென்றேம் உதித்தவன் யோகம்தானும்
பத்தினி அன்னைதந்தை பாலர்கள் துணைவர்பாரி
சித்தமாய் இவர்கள்யோகம் செப்புவோம் முன்பின் [சென்மம்
சுத்தமாய் இந்நூல்தன்னில் தோகையே கேட்டிடாயே.

4\. வடக்குத் திசையாகும் என்றேம். ஜாதகனுடைய யோகமும், தாய் தந்தையர், சகோதரர், பத்தினி இவர்கள் யோகமும், இவனுடைய முன்பின் ஜன்மங்களின் விவரமும் சுத்தமாக இந்தப் புஸ்தகத்தில் விஸ்தாரமாய்க் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

5\. தந்தைதுணை ஆணென்று பெண்பால் ரெண்டு
சாற்றுகிறேம் பெண்ணொன்று பின்பால் சேதம்
முந்திதுணை ஆணுக மொழிய லாகும்
விளம்புகிறேம் அவன்குணத்தை வீர சூரன்
பிந்நாள் சல்லியங்கள் பெறுவா னுகும்
பெரும்புலிபோல் கோபமுளன் எதிரிக் கஞ்சான்
சிந்தைமர்மன் சொற்சோரான் கிராமச் செட்டு
செய்குவான் சிலதுநாள் தீர நெஞ்சன்.

5\. தந்தையுடன் பிறந்தவன் ஒருவன். சகோதரி இரண்டு பேர்கள். அவர்களில் ஒருத்தி பிற்பாதியில் சேதமடைவாள். அண்ணன் ஒருவன் உண்டு. அவன் குணங்களை எடுத்துச் சொல்லுவோம். வீரனும் சூரனும் ஆவன். பிற்பாதியில் கடன்களை அடைவான். கோபம் வந்தால் புலி போல் பாய்வான். எதிரிகளுக்குப் பயப்படமாட்டான். மனதில் சில இரகசியங்களை வைத்துக் கொள்ளுவான். பேசுவதில் சளைக்கமாட்டான். கிராமத்தில் வியாபாரம் செய்குவான் சிலகாலம். தைரியமுள்ள நெஞ்சத்தை யுடையவன்.

6. நெஞ்சுடையான் மாநிறத்தன் கிருஷி செய்வன்
நேமியினுல் தன்பணியும் நிதமும் செய்வன்
வஞ்சியர்கள் இரண்டாகும் ஒன்ருய் வாழ்ந்து
மறுஆண்டில் வேருவன் வார்த்தை யாலே
தஞ்சமாய் ஆண்சுதர்கள் இரண்டே யாகும்
தையலரும் அவ்வாருய் சாற்ற லாகும்
துஞ்சிடுமே முதல்மனையும் இரண்டாம் தீர்க்கம்
செப்புவோம் பின்பாகம் சேதி யெல்லாம்.

6. உறுதியான நெஞ்சத்தைப் பெற்றவன். மாநிறமுள்ளவன். கிருஷித் தொழிலைச் செய்வான். பூமியினுல் தினசரி தன் பணிகளைச் செய்து வருவான். பெண்டாட்டிகள் இரண்டு பேர்களாம். ஒன்ருக முதலில் வாழ்ந்து பிறகு அடுத்த வருஷம் வேருகப் பிரிப்பான். அதுவும் பேச்சு வார்த்தை முற்றிப் போய்ச் செய்வான். ஆண் குழந்தைகள் இரண்டேயாம். பெண்களும் அப்படியே ஆவர் என்று சொல்லலாம். முதல் பெண்டாட்டி இறப்பாள். இரண்டாம் மனைவி தீர்க்கம். மற்ற செய்திகளெல்லாம் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

7. தந்தைகுணம் கூறுகின்ருேம் மாம்சி வப்பன்
சமர்த்ததாக வார்த்தையுளன் ஈகை யாளன்
தந்தனமும் சேர்த்திடுவன் கிராமச் செட்டு
சிலதுநாள் செய்திடுவன் சாற்றுன்பொய்யுந்
தன்மனையாள் தன்னுலே யோகம் வாய்க்கும்
தரணிபணி தான்சேரும் சமமாம் கல்வி
தந்தைதனக் கதிகமதாய் வாழ்வா னுகும்
சகலருக்கும் நல்லோனும் சாந்த வானும்.

7. தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். மாநிறமுள்ளவன். சாமர்த்தியமாகப் பேசுவான். தர்மிஷ்டன். சுயார்ச்சிதமாய்ப் பணம் காசுகளைச் சேர்ப்பான். கிராமத்தில் வியாபாரம் சிலநாள் செய்வான். பொய் சொல்லமாட்டான். தன்னுடைய பெண்டாட்டியினுலேயே அதிக யோகங்கள் ஏற்படும். பூமி பூஷணங்கள் தாமே சேரும். சமமான கல்வியை யுடையவன். தந்தையைக் காட்டிலும் அதிகமான ஸ்திதியில் வாழ்வான். யாவருக்கும் நல்லோனுவன். சாந்தகுண முடையவன்.

8. சல்லியம்கொள்ளான் சதுஷ்பாதம் விருத்தி
தரணியில் வறுமையே காணுன்
இல்லமும் பின்னுல்புதிதாகச் செய்வன்
எளியோர்மேல் பட்சமு மாவன்

வல்லியர் மோகன் நாபிசூடுடையன்
வளமுள குடும்பியே யாவன்
சொல்லதைக் கார்ப்பான் காரியசமர்த்தன்
செப்புவோம் மாமிமார் இரண்டே.

8. கடன் வாங்கமாட்டான். நாற்கால் பிராணிகள் விருத்தியடையும். பூமி வாழ்வில் தரித்திரத்தையே அனுபவிக்கமாட்டான். பிற்பாதியில் தன்னுடைய வீட்டைப் புதுப்பிப்பான், ஏழைகளிடத்தில் பிரியமுள்ளவன். ஸ்திரீகளிடத்தில் மோகங் கொண்டவன். மூலச்சூடுடையவன். வளப்பம் பொருந்திய குடும்பத்தை யுடையவன். சொன்ன வார்த்தையைக் காப்பாற்று வான். காரியத்தில் சாமர்த்தியமுள்ளவன். மாமிகள் இருவராவர்.

9. கோதைவந்த பின்யோகம் குறித்தேன் பாரு
குவலயத்தில் சீவிப்பன் குமரன் தானும்
தீதெண்ணுன் ஒருவனுக்கும் அடக்க முள்ளான்
திகம்பரன்தன் பத்திகொள்வன் திரிச்ச லுள்ளான்
காதிமிக யேற்றிடுவன் காம னொப்பன்
கரமதனில் கோதுமைரே கையுமுள் ளானேன்
பேதையில்லம் நாஸ்தியென்று போற்று வோமே
புதையல்வைப்பன் அந்தியத்தில் புனிதன் தானே.

9. பெண்டாட்டி வந்தபிறகு யோகம் ஏற்படும் என்று குறிப்பிட்டோமல்லவா? உலகினில் ஜீவனம் செய்குவான் இக்குமரன். யாவருக்கும் தீங்கு எண்ணமாட்டான். அடக்கமுள்ளவன். பகவானிடத்தில் பக்தி கொண்டவன். அலைச்சல் திரிச்சலுடையவன். கர்மங்கள் அதிகமாகச் செய்வான். மன்மதனை யொப்பானாகும். கைதனில் கோதுமை ரேகையை யுடையவன். இவனுடைய வீட்டில் நாஸ்திக மதத்தைப் போற்றுவான். தனத்தைப் புதைத்து வைப்பான். கடைசிகாலத்தில் புனிதனாய் வாழ்வான்.

காதி = ஒருவகைக் கன்மம். காதிகள் = ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், மோகனீயம், அந்தராயம் என்னும் முக்திக்குப் பாதகமாயுள்ள கர்ம கிரியைகள். இதை வங்காளத்தில் உள்ளவர்களில் ஒரு ஜாதியினர் பழக்கத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

10. இந்நெறி உடையானுக்கு இவனுமே உதிப்பானாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் மாம் [சிவப்பன்
சொன்னசொல் சுகமேயெய்தும் தோகையர் மோகனவன்
பன்னியே பேசவல்லன் பனையோர்கள் விருத்திசெய்வன்.

10. இத்தகைய பழக்க வழக்கங்களையுடையவனுக்கு நம் ஜாதகன் பிள்ளையாய்ப் பிறப்பான். அவனுடைய குணங்களை எடுத்துச் சொல்லு வேன். அழகுடையவன். மாநிறமுள்ளவன். சுகமான வார்த்தைகளைப் பேசுவான். ஸ்திரீகளிடத்தில் மோகங் கொள்ளுவான். பிரியமாகப் பேச வல்லவன். பணைகள், ஏர்கள் இவைகளை விருத்தி செய்வான்.

11. கைமுதல் உடையனுகும் கனத்திடும் பூமிதானும்
மய்யுறு மணியும்பொன்னும் மகிழ்ச்சியாய்த் தேடவல்லன்
பொய்யுரை வழுத்தானெஞ்சம் போசன சுகியனுகும்
அய்யன்மேல் இச்சையுள்ளான் அவனியில் புகழுமேற்பன்.

11. கையில் பணம் விருத்தியாகும். பூஸ்திதி அதிகரிக்கும். பணம் காசுகள் விருத்தியாம். சந்தோஷமாகச் சம்பாதிக்கக் கூடியவன். மனதினுல் பொய்பேச நினைக்கமாட்டான். சுகமான போஜனத்தைப் புசிப்பான். பகவானிடத்தில் பக்தி பூண்டவன். உலகினில் புகழைப் பெற்றவன்.

12. தந்தைக்கு மேலாய்வாழ்வன் சாதிப்பான் சிலதுசங்கை
வந்தவர்க் கன்னமீவன் வரும்துணை தனைக்கார்ப்பானும்
யெந்திடம் பெருமையேற்பன் இளமனம் ஈரமில்லான்
பந்தினர் தமக்குமேலாய்ப் பாரினில் வாழ்வானுமே.

12. தந்தைக்கு மேலாக வாழ்வான். சில சந்தேகங்களைத் தீர்ப் பான். வந்த விருந்தினர்களுக்கு அன்னங்கொடுத்து உபசரிப்பான். சகோதரர்களைக் காப்பாற்றுவான். எல்லாவிடங்களிலும் பெருமை பெறு வான். குழந்தையைப் போன்ற மனமுடையவன். இரக்கமில்லாதவன். சொந்தக்காரர்களைக் காட்டிலும் மேலாக உலகினில் வாழ்வானுகும்.

13. பின்துணை ஆண்பாலொன்று பேதையு மவ்வார்தீர்க்கம்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அதிகமாய் வார்த்தை [யாளன்
தந்திர மொழியேகூர்வன் சாதமேல் உணவுகொள்வன்
விந்தையாய் வார்த்தைசொல்வன் விளம்புவான் கட்டு [வார்த்தை.

13. தம்பி ஒருவன். தங்கையும் ஒருத்தி. இவர்கள் தீர்க்கம். தம்பியினுடைய குணத்தைச் சொல்லுவேன். அதிகமாகப் பேசக்கூடியவன். தந்திரமாகப் பேசக்கூடியவன். சாப்பாட்டிற்கு மேலும் சிற்றுண்டிகளைக் கொள்ளுவான். வேடிக்கையாய்ப் பேசக்கூடியவன். இட்டுக்கட்டி வார்த்தை களைச் சொல்லுவான்.

14. கல்விமான் முன்கோபத்தன் காதலிமார்கள் மோகன்
சொல்லிலே கபடுமுண்டு தொடுத்ததை வெல்வானுகும்
தல்லிமேல் பிரியனுவன் தற்சொல்லே மேன்மையாகும்
புல்லிய புத்திகொஞ்சம் புராதனம் விருத்திசெய்வன்.

14. கல்வியறிவுடையவன். முன்கோபமுடையவன். ஸ்திரீலோலன். கபடமான வார்த்தைகளைச் சொல்லுவான். பெண்டாட்டியிடம் பிரியமாயிருப்பான். கேவலபுத்தி கொஞ்சமுடையவன். பூர்வீக சொத்துக்களை விருத்தி செய்வான்.

15. பாரியு மொன்றேயாகும் பாவையும் வடகீழ்நேரும்
கூறுவோம் சுதராண்ஒன்று கோதையு மிரண்டே [யென்றேம்
வீரியனுடனே வாழ்வள் மங்கையின் சேதிகேளாய்
தீரமா மனத்தளாகும் தேவதா பத்திகொள்வன்.

15. பெண்டாட்டி ஒருத்திதான். அவளும் வடகிழக்கிலிருந்து வருவாள். ஆண் குழந்தை ஒன்றுண்டு. பெண் குழந்தைகள் இரண்டு பேர்கள். வீரதீரனாய் வாழ்வான். பெண்டாட்டியின் செய்திகளைக் கூறுவோம். தைரியமுள்ள மனதை யுடையவள். தெய்வத்தினிடத்தில் பக்தி பூண்டவள்.

16. அன்னம்போல் சாயலொக்கும் அழகுளாள் சிவந்தமேனி
தன்வரன் வடபால்நேரும் சாந்தவாள் கபடில்லாதாள்
கன்னிக்கு சுதராண்ரெண்டு காதலி அவ்வார்தீர்க்கம்
பொன்பணி அதிகம்சேர்ப்பள் பூமியில் வறுமைகாணுள்.

16. அன்னம்போன்ற சாயலுடையவள். அழகுடையவள். சிவப்பான சரீரத்தை யுடையவள். புருஷன் வடக்கிலிருந்து வருவான். சாந்த குணமுடையவள். கபடமில்லாதவள். இவளுக்கு ஆண் குழந்தைகள் இரண்டு பேர்கள். பெண்களும் அப்படியே ஆம். அவர்கள் தீர்க்கம். பொன், பூஷணங்கள் அதிகமாய்ச் சேர்ப்பாள். பூமியில் தரித்திரமில்லை.

17. இன்னவன் மணத்தின்காலம் இயம்புவோம் பத்தொன் [பாண்டில்
கன்னிகை வடகீழ்தன்னில் கலப்பளாம் குணத்தைச் [சொல்வேன்
சென்னிறம் அடக்கமுண்டு திருமகள் ஒப்பதாகும்
அன்னியர் மதிக்கவாழ்வள் அன்புள மனத்தளாமே.

17. இவனுடைய கலியாண காலத்தைப்பற்றிக் கூறுவோம். பத்தொன்பதாவது பிராயத்தில் பெண்டாட்டி வடகிழக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணங்களைக் கூறுவோம். சிவப்பு நிறம். அடக்கமுடையவள்.

லட்சுமீதேவியை ஒப்பவள். அன்னியர்கள் தன்னை மதிக்கும்படி வாழ்வாள். அன்புடைய மனத்தை யுடையவள்.

18. சீலமும் தேவபத்தி சிறுத்தோரை யாதரிப்பள்
காலத்தை அறிந்துரைப்பள் கணவனுக்கினிய ளாகும்
பாக்கிய முடையளாகும் பாலர்கள் காணுளாகும்
ஏலவே புத்திரதோஷம் மெய்தும் காரணங்கள்எவ்வார்.

18. சீலமுடையவள். தெய்வபக்தி யுடையவள். ஏழைகளை ஆதரிப்பாள். இன்னகாலத்தில் இன்னது நடக்கும் என்று தெரிந்து சொல்லக் கூடியவள். புருஷனுக்குப் பிரியமாயிருப்பாள். பால்பாக்கிய முடையளாகும். புத்திரர்கள் இல்லை. ஏற்பவே, புத்திரதோஷம் ஏற்படக்காரணம் என்ன ?

19. அஞ்சினில் ராகுநிற்க அலரியும் மந்தன்[1] பார்க்க
துஞ்சிடும சுதர்களென்றோம் செயமுனி தடுத்துச்சொல்வார்
தஞ்சமாய் ஐந்தோன்லாபம் தேவர்கோன் பார்த்ததாலே
கொஞ்சிடும் சுதர்கள்என்றோம் கூறுவார் பராசர்தானும்.

19. இராகு ஐந்தாமிடத்தில் தங்க, அவனைச் சூரியனும் சனிபகவானும் பார்ப்பதனால் பிள்ளைகள் பிறந்து இறக்கும் என்றோம். இதைக்கேட்டு ஜயமுனி தடுத்துச் சொல்லுவார். ஐந்துக்குடையவனான சூரியன் லாப ஸ்தானத்தி லிருப்பதனாலும், வியாழபகவானும் அவனைப் பார்த்ததனாலும், புத்திரபாவத்திற்கு இடைஞ்சல் இல்லை என்றோம். இதுகேட்ட பராசரர் கூறலுற்றார்.

20. முதல்ரெண்டு சுதர்கள்தோஷம் மேவிடும் என்று
[சொல்வோம்
அதற்குப்பின் விருத்தியாகும் அஷ்டமம் சுதர்கள் தோன்றும்
சதமுடன் ஆண்பால்ரெண்டு சத்திகள் மூன்றுயென்றோம்
இதுவைந்தும் தீர்க்கமெய்தும் இயம்புவோம் பின்பால்
[சேதி.

20. முதல் இரண்டு குழந்தைகள் தோஷமடைவார்கள் என்று சொல்லுவோம். அதற்குப்பின் பிறக்கும் குழந்தைகள் விருத்தியடைவார்கள். எட்டுக்குழந்தைகள் பிறப்பார்கள். ஆண் குழந்தைகள் இரண்டு, பெண்கள் மூன்று என்றோம். இவர்கள் ஐந்து பேர்களும் தீர்க்கமடைவார்கள். இவர்களைப்பற்றிய விவரங்கள் பின்பாகத்தில் எடுத்துரைப்போம்.

---

1. சனி

21. அன்னைகுணம் சிவந்தமெய் உணைச்சல் தேகி
அடக்கமுளாள் வரன்மனம்போல் அறிவோர் நேயள்
தன்துணைகள் ஒன்றுஉண்டு தீதே யாகும்
தாயுடனே மரித்திடுவள் மறுதாய் தோன்றும்
கன்னிகையும் ஒன்றுஉண்டு தீர்க்க மாக
காதலியின் ஊர்வடக்காம் கருத லாகும்
இன்னவள்தாய் ஆஸ்தியெல்லாம் இவளே கொள்வள்
ஏகாவா மற்றெவர்க்கும் யெய்தி(டே)ணுமே.

21. அன்னையின் குணங்களைச் சொல்லுவோம். இளைத்த உடம்புடையவள். அடக்கமுடையவள். புருஷனுடைய மனம் கோணாமல் நடப்பாள். புத்திசாலிகளைச் சிநேகம் செய்வாள். சகோதரி ஒருத்தி உண்டு. அவளும் இறப்பாள். தாயார் உடனே மரித்திடுவாள். வேறு தாயார் ஏற்படுவாள். தங்கையும் ஒருத்தி உண்டு. அவள் தீர்க்கம். காதலியின் ஊர் வடக்கேயுள்ளது என்று எண்ணுவோம். இவளுடைய தாயார் ஆஸ்திகளையெல்லாம் இவளே பெறுவாள். மற்றவர்களுக்கு இது போய்ச்சேராது.

22. துணைவர்கள் காணவண்ணம் செப்புவீர் முனியேநீர்தான்
வினையுண்டு பூர்வம்தன்னில் மேவிற்று அந்ததோஷம்
பிணையதை சொல்லுமென்ன பூருவம் விரிஞ்சிதன்னில்
கனமுடன் பிரும்மசேயாய் காதலி உதித்தாளென்றோம்.

22. சகோதரர்கள் இல்லாததற்குக் காரணம் சொல்லுங்கள் முனிவரே! நீங்கள். பூர்வத்தில் பிராரப்த வினையுண்டு. அந்ததோஷம் இப்பொழுது வந்தடைந்தது. அதன் விவரத்தைச் சொல்லுங்கள் என்றுகேட்க, ஆதியில் விரிஞ்சிபுரத்தில் பெருமைபெற்ற பிராமணக் குழந்தையாய் இக் காதலி உதித்தாளென்றோம்.

23. சுதர்களும் வரனுமுண்டாய் சுகமுடன் வாழும்நாளில்
சதமுடன் ஊழைச்சொல்வேன் தன்வரன் தங்கைபேரில்
அதனமாய் நிந்தைசொல்லி அப்புறம் விலக்கலுற்றாள்
வதிபதி மனவெறுப்பால் வரைகுருள் சாபம்தானும்.

23. பிள்ளைகளும் புருஷனும் உண்டாய் சுகமுடன் வாழ்ந்து வரும் நாட்களில் ஓர் ஊழ்வினை ஏற்பட்டது; அதனைச் சொல்லுவேன். தன் புருஷனின் தங்கைமீது அகாரணமாய் நிந்தைகள் சொல்லி அவளை விலக்கலானாள். அவள் மனம் வெறுப்புக்கொண்டு சாபம் கொடுக்கலானாள்.

24. மற்றொரு சென்மந்தன்னில் வரும்துணை காணுதாயும்
பெற்றதாய் இல்லம்பாழாம் பேசியே தெருதூள்விட்டு
வித்தகி சென்றுளென்றோம் மேவிற்று அந்ததோஷம்
குற்றமாம் வேறுஒன்று கூறுவோம் முனியேகேளு.

24. அடுத்த ஜன்மத்தில் சகோதரனில்லாமலும், பெற்ற தாயின் வீடு பாழாகும் என்றும் சொல்லித் தெருவிலுள்ள மண்ணைவாரி இறைத்து விட்டு அவள் சென்றாள். அந்த தோஷம் இவளை யடைந்தது. வேறு ஒரு குற்றமும் ஏற்பட்டது. அதைச் சொல்லுவோம் முனிவரே ! கேளும்.

25. விரதங்கள் முற்றும்செய்தாள் மேலோரை இகழ்வாய்ச் [சொன்னாள்
குறையாகக் கூலிதந்தாள் குலவிற்று அதுஓர்தோஷம்
குறுகின காலம்தன்னில் குலவிற்று சச்சுவாயு
மறலியின் பதிக்குப்புக்கி மால்மகன் வரியப்பட்டு,

25. விரதங்களை எல்லாம் செய்தாள். ஆனால் பெரியவர்களை இகழ்ந்து பேசுவாள். கூலிக்காரர்களுக்குக் குறைவாகக் கொடுத்தாள். அப்படி ஒரு தோஷம் வந்தது. கடைசி காலத்தில் சச்சுவாயுவின் உபத்திரவம் ஏற்பட்டது. கடைசியில் எமலோகம் சென்றாள். பிரம்மாவினால் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டு,

26. வந்தவளிவளே யென்றோம் மருவிற்று நாத்திசாபம்
தந்துணை காணுதாகும் தாயில்லம் நாஸ்தியாகும்
பின்செனமம் அவ்வூர்தன்னில் பிறப்பளாம் இக்குலத்தில்
தன்னிலே வறுமைகாணாள் சங்கரி கேட்டிடாயே.

26. உதித்தவள் இவளேயென்றோம். நாத்தனாருடைய சாபம் ஏற்பட்டது. சகோதரனில்லை. தாயின் வீடு நாஸ்தியாகும். அடுத்தஜன்மம் அவ்வூரில் இக்குலத்தில் பிறப்பாள். தன் சம்பந்தப்பட்டவரையில் தரித்திரமில்லை. பார்வதியே! கேட்பாயாக

27. இவன்பிதா பூர்வம்சொல்வேன் எழில்கொங்கு நாட்டிலே [தான்
பவமிலா ரெட்டிவமிசம் பிறந்துமே கிருஷிசெய்து
தவசிகட் கன்னமீந்து தாகப்பந்தலு மமைத்து
நவனியில் சேதுபுக்கி நமன்பதிக்காளாய் இன்னோன்.

27. இவனுடைய தகப்பனின் பூர்வோத்தரத்தைக் கூறுவேன். பெருமைபொருந்திய கொங்குதேசத்தில் பவவினைகளில்லாத ரெட்டியார் வமிசத்தில் பிறந்து கிருஷிகள் செய்து தபசிகளுக்கு அன்னதானம் செய்து தண்ணீர்ப்பந்தலும் வைத்து,சேது யாத்திரைசெய்து கடைசியில் எமலோகம் சென்றான்.

28. கஞ்சனுல் வரியப்பட்டு கனமுள அருகர்வமிசம்
மிஞ்சியே உதித்தானென்ருேம் மேதினில் வறுமைகாணுன்
தஞ்சமா இவன்பின்சென்மம் சாற்றுவோம் காஞ்சிநாட்டில்
கொஞ்சுவான் இக்குலத்தில் கோதையே மேலுங்கேளே.

28. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு மேலான அருகக்கடவுளின் வமிசத்தில் மேன்மையுடன் உதிக்கலானுன். உலகில் தரித்திரத்தை அனுப விக்கவில்லை. இவன் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் இக்குலத்திலேயே பிறப்பான். பார்வதியே! கேட்பாயாக.

29. சாதகன் பூர்வம்தன்னைச் சாற்றுவோம் காளாத்திதன்னில்
மேதினில் சத்தியசேயாய் விளங்கியே செட்டுச்செய்து
போதன மதிகமுண்டாய்ப் புகழான குடும்பியாகித்
தீதிலா வாழுநாளில் சீர்மறை ஒருவன்தானும்.

29. ஜாதகனுடைய பூர்வோத்தரங்களைக் கூறுவோம், திருக்காளத்தி யில் உலகினில் க்ஷத்திரியக் குழந்தையாய்ப் பிறந்து, வியாபாரம் செய்து விசேஷமான தனத்தை சம்பாதித்து, புகழ்பெற்ற குடும்பத்தைப்பெற்றுக் குற்றமில்லாமல் வாழும் காலத்தில்,சிறப்புப்பொருந்திய பிராமணன் ஒருவன் இவனுடன்,

30. நேசமே செய்துநாளாய் நீங்காமல் உயிர்மெய்போலே
பாசமாய் வாழ்ந்துபின்பு பணிபொருள் தங்கைக்கொண்டு
பேசாமல் சென்ருனென்ருேம் புனிதனும் தேடிச்சென்று
வாசவன் தனைக்காணுமல் ஆனையின் கோஷ்டம்முன்பாய்;

30. சிநேகம் செய்து நெடுநாள் உயிரும் உடலும்போலப் பாசத்துடன் வாழ்ந்து பிறகு, பொன் பொருள் இவற்றைத் தன் கைவசமாக்கிக் கொண்டு பேசாமல் போய் விட்டான் என்ருேம். இவனும். தேடிச்சென்று பிராமண னைக் காணுமல் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக,

31. முன்கடனோ பின்கடனோ அறியேன் யானும்
மூலபொருள் நீயறிவாய் என்று சொல்லி
தன்கரத்தால் தெருத்தூளைத் தூற்றிச் சென்ருன்
தினமுமே தந்திக்குத் தீபம் வைத்து
அந்தகன்தன் நகரடைந்து பிரமன் லக்கம்
அருகர்குலம் தனிலுதிப்பான் இந்த பாலன்
முன்சென்மம் பொருள்மோசம் செய்தோன் தானும்
உதித்தனன்காண் அன்னைக்குத் தந்தை யாக.

31. முன்பு நான் இவனுக்குக் கடன்பட்டேனே! பின்காலத்தில் கடன்பட்டேனே; நான் அறியேன். எல்லாவற்றிற்கும் மூலப்பொருளாயுள்ள நீயதனை அறிவாய் என்று சொல்லித் தன் கையினுல் தெருவிலுள்ள மண்ணைவாரி இறைத்தான். தினசரி பிள்ளையாருக்குத் தீபம் ஏற்றிக் கடைசியில் எமலோகம் சென்று, பிறகு பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு அருகர் வமிசத்தில் பிறப்பான் இந்த பாலகன். முன் ஜன்மத்தில் பணத்தை மோசம் செய்தவனும் பிறந்தான். அதுவும் இவனுடைய தாய்க்குத் தகப்பனுகப் பிறந்தான்.

32. அக்கடன் தீரவேண்டி அன்னையின் தந்தைஆஸ்தி
சிக்கிடு மிவனுக்கேதான் செப்புவோம் இவனின்யோகம்
தக்கவே இருபதாண்டில் தாய்ஆஸ்தி விரயம்செய்து
பக்குவ உள்ளும்வேதன் பாரது சேர்ப்பானுகும்.

32. அந்தக்கடன் தீருவதற்காக அன்னையின் தந்தை ஆஸ்தி இவனுக்கே கிடைக்கும். இவனுடைய யோகத்தைப்பற்றிச் சொல்லுவோம். இருபதாவது வயதில் தாயினுடைய சொத்துக்களை விரயம் செய்து பக்குவமான மனத்துடன் பூமிகளை வாங்கிச் சேர்ப்பானுகும்.

33. இருபது ஆண்டுமேலாய் இல்லமும் செய்வனுகும்
பெருகிடு நாட்குநாளாய் பூமிகள் தானியமோங்கும்
குரவர்கள் நேசத்தாலே குலவிடும் கிராமமேன்மை
பிறையது போலேசெல்வம் புகலுவோம் முனியோர்கள்.

33. இருபது வயதிற்குமேல் வீடு கட்டுவானுகும். நாட்குநாளாய் சொத்துக்கள் பெருகும். பூமிகள், தானியம் ஓங்கும். குடிகளுடைய சிநேகத்தினுலே கிராமமேன்மை ஏற்படும். பிறைச்சந்திரனைப் போலே செல்வம் விருத்தியாகும் என்று சொல்லுவோம்.

34. பரிவண்டி அதின்பின்னுக பரவிடும் புகழுமெய்தும்
திருப்பணி செய்வானுகும் சௌசகாயங்களுண்டு
அரசர் பூசிதமுமெய்தும் ஆளடிவிசேஷம் சேர்க்கை
நிறையவே குடும்பியாவன் ஞாதியின் பூமிசேர்க்கை.

34. குதிரை வண்டியும் அதன் பின்னுல் புகழும் ஏற்படும். திருப்பணிகள் செய்வானுகும். பொதுஜன சகாயமுண்டு. அரசர்களால் பூஜிக்கப்படுவான். ஆள்கள் விசேஷமாய் இவனிடம் சேருவார்கள். பெரிய குடும்பியாவான். சொந்தக்காரர்களுடைய பூமியும் சேரும்.

35. முப்பது யெட்டுஆண்டில் மீனமாதத்திலேதான்
செப்புவோம் தந்தைகெண்டம் சென்றுபின் முப்பான்
[ஒன்பான்
ஒப்புடன் தனுசுமாதம் உரைக்குறேம் அன்னைகெண்டம்
அப்பணி சடையோன்தேவி அருளிய மொழிகுன்றுது.

35. முப்பத்தெட்டாவது வயதில் பங்குனி மாசத்திலேதான் தந்தையின் கண்டம் ஏற்படும். முப்பத்தொன்பதாவது பிராயத்தில் மார்கழி மாசத்தில் தாய்க்குக் கண்டம் ஏற்படும். பரமசிவனின் தேவியாகிய பார்வதியே! நாங்கள் அருளிய மொழிக்குக் குறைவு ஏற்படாது.

36. உதித்தவன் மரணகாலம் உரைக்குறேம் அறுபான்நாலில்
சதியிலா கன்னிமாதம் சதுர்த்தசி வளர்பக்கத்தில்
விதியது முடியுமென்றேம் விளம்புவோம் இவன்பின்
[சென்மம்
கதிதரும் கலிங்கநாட்டில் கலப்பனும் க்ஷத்ரியசேயாய்.

36. ஜாதகனுடைய மரணகாலத்தை எடுத்துரைப்போம். அறுபத்து நாலாவது பிராயத்தில் புரட்டாசி மாசத்திலே சுக்கிலபட்சம் சதுர்த்தசியில் விதி முடியும். இவனுடைய அடுத்த ஜன்மத்தைப்பற்றிக் கூறுவோம். மோட்சத்தை அளிக்கக்கூடிய கலிங்கதேசத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான்.

37. இந்ததோர் சென்மந்தன்னில் இவன்செயல் சொல்லு
[மென்ன
தந்தனம் கொடுக்கல்வாங்கல் தானிய செட்டுச்செய்வன்
நொந்திடும் ஞாதிதானும் நேமியில் வறுமைகாணுன்
சிந்தைகள் களிப்பேயெய்தும் திருமகள் வாசமுள்ளான்.

37. இந்த ஜன்மத்தில் இவன் செய்ததைச் சொல்லுங்கள் என்று கேட்க, தான் சம்பாதித்த சொத்துக்களைக் கொடுக்கல் வாங்கல் செய்வான். தான்ய வியாபாரமும் செய்து வருவான். சொந்தக்காரர்கள் இறப்பார்கள். பூமி வாழ்க்கையில் தரித்திரம் இல்லை. எண்ணங்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும். வீட்டில் லக்ஷ்மிதேவி வாசம் செய்வாள்.

38. செனித்திடு காலம்தன்னில் சதையமூன்றும் பாதத்தில்
குனித்திடு ராகுதன்னில் கூறுவோம் ஆண்டுஏழும்
கனமுடன் திங்கள்மூன்றும் கழறுவோம் துணைவிருத்தி
தனயனும் பிணியால்வாடும் தாய்வர்க்கம் நாசமாமே.

38. இவன் பிறந்த காலத்தில் சதய நட்சத்திரம் மூன்றும் பாதம்; இராகுமகாதசையில் இருப்பு வருஷம் ஏழு; மாதம் மூன்று என்று சொல்லுவோம். இக்காலத்தில் சகோதர விருத்தி. ஜாதகன் வியாதியினால் கஷ்டப்படுவான். தாயாரைச் சேர்ந்தவர் நாசம் அடைவார்கள்.

39. இல்லமும் வேறதாகும் ஏகுவான் வேறுஇல்லம்
மல்லுகள் வந்துநீங்கும் மன்னர்கள் நேசமெய்தும்
தல்லியும் பிணிகள்கண்டு சாந்தமாம் காலிபீடை
சொல்லுவோம் பின்பாகத்தில் தேவியே கேட்டிடாயே.

39. வேறு வீட்டிற்குப் போவான். பிறந்த வீடு வேறு ஒருவனுக்குப் போகும். இடைஞ்சல்கள் வந்து சேரும். சுலபமாய் விலகும். அரசர்களின் சிநேகம் ஏற்படும். பெண்டாட்டிக்கு வியாதி ஏற்பட்டு சொஸ்தமாகும். நாற்கால் பிராணிகள் இறக்கும். மற்ற விவரங்களைப் பின்பாகத்தில் தெரிவிப்போம். பார்வதிதேவியே! கேட்பாயாக.

ஸப்தரிஷி நாடி

இரண்டாம் பாகம்

இரண்டாம் பாகம்

முதற் பகுதி

1. முனிவர் இவ்வாறுரைக்கூற மொழிகுவாள் அம்மன்தானும்
கனமுடன் மாதுருக்குக் கனத்ததோர் முன்சென்மத்தை
அனையவே சொல்லுமென்று அம்மனும் கேட்கும்போது
சினமிலா முனிவர்தானும் தீர்க்கயோ சித்துச்சொல்வார்.

1. முனிவர்கள் இவ்விதம் சொல்ல பார்வதி தேவி கேட்கலுற்றார். மாதாவிற்கு உண்டான மேன்மை வாய்ந்த முன் ஜன்ம விவரங்களை எல்லாம் சொல்லுங்கள் என்று கேட்டாள். அம்மன் இப்படிக் கேட்கும்போது முனிவரும் அன்பு கொண்டு தீர்க்காலோசனை செய்து பின்வருமாறு கூறலானார்.

2. மண்டூக மலைக்குஉத்திர மருங்கினில் பேரூர்தன்னில்
விண்டதோர் சூத்திரவமிசம் விளங்கினாள் இவளே [என்றோம்
பண்டுகள் அதிகம்உண்டாம் பாலர்கள் இல்லாளாகி
கொண்டதோர் தோகைக்கேகி குமரனை அர்ச்சித்தேத்தி,

2. தவளை மலைக்குச் சமீபத்தில் வடக்கே யுள்ள பேரூரில் சூத்திர வமிசத்தில் வந்து பிறந்தாள் இவள் என்றோம். சொத்துக்கள் அதிகம் உண்டு. குழந்தைகள் இல்லாததனால் தோகை க்ஷேத்திரம் சென்று குமரக் கடவுளை அருச்சித்து வழிபாடுகள் செய்து,

3. அந்ததோர் ஆலயத்தில் அவள்தாகப் பந்தல்செய்து
வந்தவர் களைகள்தீர வகையுடன் நீர்மோர்தந்து
முந்தவே ஆலயத்தில் முருகன்முன் தீபம்வைத்துப்
பந்தமாய் வாழ்ந்துபின்பு பாவையும் மரணமானாள்.

3. அந்தக் கோவிலில் அவள் தண்ணீர்ப்பந்தல்கள் வைத்து, வந்தவர்களுக்குக் களைப்புத்தீர ஒழுங்காக நீர்மோர் கொடுத்துக் கோவிலில் முருகக் கடவுளுக்குத் தீபம் ஏற்றி வைத்து நேர்மையாய் வாழ்ந்து, பின்பு இவளும் மரணமானாள்.

4. பிரமனால் வரியப்பட்டுப் பிறந்தவ ளிவளின் தாயார்
அறைகுறோம் அவள்பின்சென்மம் அருணையின் நகரிலே [தான்.
திறமையாய் வைசியவம்சம் செனித்துமே பெருமைபூண்டு
உரிமையாய் வாழ்வாளென்றோம் உத்தமி மேலும்கேளே.

4. பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டுப் பிறந்தவள் இவளுடைய தாயாராகும். இவளுடைய பின் ஜன்ம விவரம் கூறுவோம். திருவண்ணாமலையில்

மேலான வைசியர் குடும்பத்தில் ஜனித்துப் பெருமை பெற்று விளங்கி வாழ்வானென்றோம். உத்தமியே! மேலும் கேட்பாயாக.

5. தந்தையின் துணைவனுக்குச் சாற்றுவோம் புத்திரபாவம்
வந்திடும் ஆண்பால்ரெண்டு வளமுள கன்னிரெண்டு
சந்ததம் நான்குதீர்க்கம் தங்காது இரண்டுதானும்
பந்தமாய்க் குடும்பம்ஒன்றாய்ப் பாலிப்பான் என்று
[சொன்னோம்

5. தந்தையின் சகோதரனுடைய புத்திரபாவத்தைக் கூறுவோம். இரண்டு ஆண் குழந்தைகள். வளப்பம் பொருந்திய பெண்கள் இருவர். எப்பொழுதும் இந்நான்கும் தீர்க்கம். இரண்டு குழந்தைகள் வியோக மடையும். கட்டுப்பாட்டுடன் குடும்பம் ஒன்றாக வைத்துக் காப்பாற்றுவான் என்று சொன்னோம்.

6. சாதகன் கெண்டகாலம் சாற்றுவேன் ஐந்தும்எட்டில்
நீதியாய் சுரத்தினாலே நேர்ந்திடு மிவனுக்கென்றோம்
கோதிலாப் பண்டிதத்தால் குணமாகும் இவனுக்கேதான்
சோதித்து அதற்குமேலே சொல்லுவோம் கேளுமம்மா.

6. ஜாதகனுடைய மாரகத்தைச் சொல்லுவேன். நாற்பதாவது பிராயத்தில் நியாயமாய் ஜுரம் ஏற்பட்டுக் கண்டம் ஏற்படும். குற்றமற்ற வைத்தியர்களால் குணமாகும் இவனுக்கேதான். அதற்குமேலே நாங்கள் நவக்கிரகங்களை சோதித்துச் சொல்லுகின்றோம்; கேளும் அம்மா.

7. பனிரண்டு ஆண்டுதன்னில் பாலகன் உயரம்நின்று
தனிமைகீழ் விழுவானென்றோம் சத்தியும் கேட்கலுற்றாள்
இனங்கள் எவ்வாறாய்என்று ஈசுவரி கேட்கும்போது
தனிகனும் சகடுதன்னால் தான்அவன் வீழ்வா னென்றோம்.

7. பன்னிரண்டாவது பிராயத்தில் இவன் உயரமாயிருக்கு மிடத்தினின்று தன்னந்தனியே கீழே விழுவான் என்றோம். அம்பிகையும் கேட்கலுற்றாள். எந்தக் காரணத்தினால் விழுவான் என்று சொன்னீர்கள் என்று ஈசுவரி கேட்கும்போது, அவனும் வண்டியிலிருந்து கீழே விழுவான் என்றோம்.

8. இருபத்து மூன்றும்ஆண்டில் ஸ்திரீகளால் பாதைநேரும்
வரும்பிணி அதிம்உண்டாம் மருந்துகள் அதனால்நீங்கும்
பெருமையாய் முப்பதாண்டில் பேசிய தனுசுமாதம்
அருமையாய் தந்தைக்கேதான் அறைகுறோம் கெண்டம்
[தானே.

8. இருபத்துமூன்றும் வயதில் ஸ்திரீகளால் உபாதை நேரிடும்; பிணிகள் அதிகமாகி மருந்துகள் கொடுக்க நீங்கும். பெருமையாக முப்பதாவது பிராயத்தில் மார்கழி மாதத்தில் அருமையான தந்தைக்குக் கண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம்.

9. ஆறுறு இரண்டுஆண்டில் ஆவணி மாதம்தன்னில்
சீரான மாதுருக்குச் சேத்தும [1]நோயினாலே
கூறுவோம் கெண்டம்தானும் குறித்தசொல் தப்பாதம்மா
பேரானை தன்னைப்பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

9. முப்பத்தெட்டாவது பிராயத்தில் ஆவணி மாசத்தில் சிறப்புப் பொருந்திய மாதாவுக்குச் சிலேஷ்ம நோயினால் கெண்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். சொன்னசொல் தப்பாதம்மா; யானைமுகனைப் பெற்றெடுத்த புண்ணியசாலியாகிய பார்வதியே!

10. நாற்பத்தி இரண்டுஆண்டில் நலமுள பூமிதன்னால்
ஏற்பவே கலகம்நேரும் இரணிய [2]மதனால்சேரும்
தோற்பனும் இந்தபூமி சொல்லுவோம் அதற்குமேலே
பார்ப்பது நாற்பத்தைந்தில் பந்துவும் பகையதாலே.

10. நாற்பத்திரண்டாம் பிராயத்தில் புதிதாக ஏற்பட்ட பூஸ்திதியினால் பொருந்தும்படியான கலகம் நேரிடும். அதனால் பொருட்சேரும். அதனால் பூமியும் நஷ்டமடைவான். அதற்குமேலே சொல்லுவோம். நாற்பத்தைந்தாம் வயதில் சொந்தக்காரருடைய பகைமையினாலே,

11. பம்பு[3]சூ னியங்களாலே பாலகன் வாதைநேரும்
இன்பமாய் அதற்குச்சாந்தி இசைகுறோம் முருகனுக்கு
அன்புடன் அர்ச்சித்தேத்தி ஐந்துபேர் அதிதிகட்கு
இன்பமாய் அன்னமீந்தால் இடருகள் நீங்கும்தானே.

11. இரகசியமாக வைத்த சூனியங்களாலே (மரண வித்தைபோன்ற கெடுதல்கள்) இவனுக்குப் பலவிதமான உபத்திரவம் நேரிடும். பிரியமாக அதற்குண்டான பரிகாரத்தைச் சொல்லுகிறோம். முருகக் கடவுளுக்கு அன்புடன் அருச்சனைகள் செய்து துதித்து, வழிபாடுகள் செய்து ஐந்து அதிதிகளுக்குப் பிரியமாய் அன்னமளித்து வந்தால் இடைஞ்சல் நீங்கிப்போகும்.

---

1. கபசுரம்
2. பொருள்
3. மறைவான

12. அன்பது மூன்றுஆண்டில் அவன்முது கதனில்ரோகம்
இன்பமாய் ரணங்கள்உண்டு இதுகளால் துன்பம்நேர்ந்து
வன்மையாய் வடிவேலர்க்கு மங்கள வாரம்தன்னில்
நன்மையாய் அர்ச்சித்தேத்தி நற்பசு நெய்யினாலே ;

12. ஐம்பத்துமூன்றும் பிராயத்தில் அவனுடைய முதுகினில் ரோகம் ஏற்பட்டு இரணங்கள் உற்பத்தியாகி அவற்றால் துன்பம் சேரிடும். சிரத்தையுடன் வடிவேல் முருகனுக்கு வெள்ளிக்கிழமை யன்று நன்மையாக அபிஷேக அருச்சனைகள் செய்து நல்ல பசுவின் நெய்யினாலே,

13. மண்டலம் தீபம்வைத்து வளமுள பண்டிதத்தால்
கண்டதோர் ரோகம்தீரும் காளையும் சுபமேயாகும்
எண்டிசை முனிவர்கூற ஈசுவரி கேட்கலுற்றாள்
விண்டதோர் அந்தக்காலம் விளங்கிடும் திசையைச்
[சொல்வாய்.

13. ஒரு மண்டலம் (42-நாள்) விளக்கேற்றி வைத்து வளப்பம் பொருந்திய வைத்தியத்தினால் ஏற்பட்ட ரோகங்கள் நிவர்த்தியாகி விளங்கும். அவனும் சுபத்தையடைவான். எட்டுத்திக்குகளிலும் சிரேஷ்டமான ரிஷிகள் இவ்விதம் சொல்ல ஈசுவரி பின்வருமாறு வினவலானாள். அப்படி விடிவு காலம் எப்பொழுது ஏற்பட்டு விளங்கிடும். அந்த தசையைச் சொல்லுங்கள்.

14. இரண்டு ஏழுக்குடையனான ராட்சதன்[1] திசையிலேதான்
திரண்ட மூன்றாறிடத்தோன் புதன்பொசிப்ப தனில்
[கண்டம்
திறமையாய் முனிவர்கூற செயமுனி சொல்லுகின்றார்
மறையவன் இரவிபுந்தி மருவியும் புகர்க்கு ரண்டில்.

14. இரண்டு ஏழுக்குடையவனான சுக்கிரனுடைய தசையிலே மூன்று, ஆறு என்ற இடங்களுக்குடைய புக்தியிலே திறமையாய்க் கஷ்டங்கள் நிவர்த்தியாகும் என்று முனிவர் கூற, ஜயமுனிவர் தடுத்துச் சொல்லலுற்றார்: குரு, சூரியன் புதன் இவர்கள் சேர்ந்து சுக்கிரனுக்கு இரண்டில்,

ராட்சதன் திசை. ராட்சதன்=சுக்கிரன். அசுர குரு. காசியபருக்கு சுரசையிடத்துப் பிறந்த புத்திரர்கள் ராட்சஸர் எனப்படுவர். புலஸ்தியன் மரபில் வந்தவர்களென்றும் கூறுதலுண்டு. தேவர்களுடைய பகைவர்கள். சுக்கிரன் நவக்கிரகங்களிலொருவன். இவனிருக்கும் மண்டலம் அப்பு மண்டலம். சுக்கிரன் சுபஸ்தானங்களில் நிற்கப் பிறந்தோர் திரிகால உணர்ச்சியும் இராஜ யோகங்களுமுடையவராய் விளங்குவார். சுக்கிரன் மழைக்கதிபதியாதலின் மழைக்கோள் எனப்படுவான்.

---

1. சுக்கிரன்

15. இருப்பதால் சாதகர்க்கு எவ்வித கெண்டம்நீங்கும்
சிறப்புடன் ஆய்ந்துநன்ருய் சொல்லுவீர் என்றுகேட்க
குரவனும் சேர்ந்ததாலே குணமாகும் ரோகம்தானும்
இரவியின் திசையிலேதான் இவனுக்குக் கெண்டம்நேரும்.

15. இருப்பதனுல் ஜாதகனுக்கு எப்படிக் கெண்டங்கள் நீங்கிடும்? இவ்விஷயத்தை நன்ருக ஆராய்ந்து சொல்லுங்கள் என்று கேட்க, சூரியனும் சேர்ந்ததனுலே வியாதிகள் சுவஸ்தப்படும். ஆனுல் சூரியனுடைய தசையில் தான் இவனுக்குக் கெண்டம் நேரிடும்.

16. சாதகன் யோகச்செய்கை சாற்றுவோம் ஈராண்டுக்கும்
நீதியாய் சிலவனேகம் நெஞ்சினில் கலக்கமாகும்
மேதினில் நினைத்ததெல்லாம் வீருது பலன்குறைச்சல்
தீதுகள் அதிகம்உண்டாம் சல்லியப் பாதைஉண்டு

16. ஜாதகனுடைய யோகச் செய்திகளைச் சொல்லுவோம். இரண்டு வருஷத்திற்கு மனதில் அநேக கலக்கங்கள் ஏற்படும். உலகினில் நினைத்ததெல்லாம் நடக்காமல் பலன் குறையும். கெடுதல்கள் அதிகம் ஆம். கடன் உபத்திரவம் அதிகம் உண்டு.

17. அதுமுதல் ஐந்தாண்டுக்கும் அறைகுறோம் பலனையாங்கள்
மதிபிறை போலேயோகம் வளர்ந்திடு மிவனுக்கேதான்
சதியில்லா குடும்பம்தன்னில் சகோதர விருத்தியுண்டாம்
விதவித லாபம்உண்டு வந்திடும் சவுக்யம்தானே.

17. அதுமுதல் ஐந்து வருஷங்களுக்கும் உண்டான பலன்களை நாங்கள் சொல்லுகிறோம். பிறைச்சந்திரனைப்போல இவனுக்கு யோகங்கள் விருத்தியாம். வஞ்சனை இல்லாத குடும்பத்தினில் சகோதர விருத்தி யுண்டாகும். வெவ்வேறு இலாபங்கள் ஏற்படும். தானே சவுக்கியமும் வந்திடும்.

18. சல்லிய பாதைநீங்கும் தட்சிணம் தன்னிலேதான்
நல்லதோர் பூமிகொஞ்சம் நற்பொருள் அதனுல்சேரும்
தொல்லையும் விலகிப்போகும் சுகப்பொசிப் பதிகம்நேரும்
அல்லலைத் தவிர்க்குகின்ற அம்மையே மேலும்கேளே.

18. கடன் தொந்தரவு நீங்கும். அதுவும் பிறருடைய தாட்சணியத் தினுலேதான். நல்லதொரு பூமியும், நல்ல சொத்துக்களும் அதன் காரண மாகச் சேரும். தொல்லைகள் விலகும். சுகபோஜனம் அதிகமாய் ஏற்படும். துன்பங்களை அடியோடு ஒழிக்கும் அம்பிகையே! மேலும் கேட்பாயாக.

19. இருநான்கு ஆண்டுதன்னில் இவன்பிதா தாய்க்குக்கெண்டம்
பெருமவர் நேசம்உண்டு பெரும்பூமி அதிகம்சேர்ப்பன்
திருமகள் வாசமாகும் செப்புவோம் பதின்மூன்ருண்டில்
அருமையாய் மனைவிநேரும் அதுமுதல் யோகம்வாய்க்கும்.

19. எட்டு வருஷத்தில் இவன் பிதாவின் தாயாருக்குக் கெண்டம் ஏற்படும். பெற்ரேருடைய பிரியம் ஏற்படும். பெரிய பூமிகளை அதிகமாய்ச் சேர்ப்பான். திருமகள் (லட்சுமீ) கடாட்சம் ஏற்படும். பதின்மூன்ரும் பிராயத்தில் அருமையான பெண்டாட்டி வாய்ப்பாள். அதுமுதற்கொண்டு நல்ல யோகம் ஏற்படும்.

20. ஈரேழு ஆண்டுதன்னில் இவனுக்குக் கிரகம்நேரும்
ஊரெலா முறவுகொள்வர் உயந்திடுஞ் செல்வம்தானும்
கூறினர் முனிவரும்தான் கோதையும் கேட்கலுற்ருள்
பாரினில் கிரகம்வாய்க்கு மென்றுமே பகர்ந்திட்டீரே.

20. பதினலாவது பிராயத்தில் இவனுக்கு வீடு ஏற்படும். ஊரில் இருப்பவர்கள் இவனிடம் சிநேகமாக இருப்பர். செல்வம் மேன்மேலும் அதிகரிக்கும். இதை இவ்வாறு முனிவர் சொல்லப் பார்வதியும் வினவலானள். பூமியில் வீடு ஏற்படும் என்று சொன்னீர்களே!

21. எந்ததோர் திக்கிலேதான் எவ்விடம் தன்னில்நேரும்
அந்ததோர் சேதிதன்னை அறிவிப்பீர் விபரமாக
முந்தவே ரிஷிகள்சொல்வார் முயலுவான் கிரகத்துக்கு
சந்ததம் உத்திரத்தில் தன்சாதி கிரகம்தன்னை,

21. எந்தத் திக்கினில் எந்த விடத்தில் கிரகம் நேரும்? அந்த ஒரு விஷயத்தை விளக்கவும், விரிவாக உரைக்கவும் என்று கேட்க, சப்த ரிஷிகள் சொல்லலுற்ருர்கள். வீட்டிற்குப் பிரயத்தினப்படுவான். எப்பொழுதும் வடக்குத் திக்கில் தன்னுடைய ஜாதியினர் இருக்கும் வீடுகளின் நடுவே,

22. இவனுக்கு நேருமென்ருேம் இன்பங்கள் அதினல்உண்டு
அவனியில் அதற்குமேலே அறைகுருேம் குடும்பக்ஷேமம்
நவமதில் இருபான்ஆறில் நற்குரு உபதேசங்கள்
கவனமாய்ப் பெறுவானென்ருேம் காளைக்கு மதலையுண்டாம்

22. இவனுக்கு வீடு ஏற்படும் என்ருேம். அதனல் இன்பங்கள் பூமியில் அதிகமுண்டு. அதற்குமேல் குடும்ப க்ஷேமம் ஏற்படும் என்போம். உலகில் இருபத்தாருவது வயதில் நல்ல குரு உபதேசங்களைக் கவனமாய்ப் பெறுவான் என்ருேம். இவனுக்குப் புத்திரன் பிறப்பான்.

23. முப்பத்து நாலுஆண்டில் முயற்சியாய்த் தீர்த்தம்நேரும்
அப்பனும் முருகனுக்கு அவன்பிரார்த் தனையைச்செய்வன்
எப்பவு மிவனுக்கேதான் இடருகள் ஒன்றும்காணுன்
செப்புவோம் இதற்குமேலே சேதியை விபரமாக.

23. முப்பத்துநான்காம் பிராயத்தில் பிரயத்தனப்பட்டுத் தீர்த்த ஸ்நானம் ஏற்படும். அவன் முருகக் கடவுளுக்குப் பிரார்த்தனையைச் செலுத்துவான். அதற்குப் பிறகு அவனுக்கு இடைஞ்சல்கள் ஒன்றும் இல்லை. இதற்கு மேலே மற்றைய செய்தி விவரங்களைக் கூறுவோம்.

24. கூட்டுவா ணிபங்கள்செய்வான் குண்டைகோ விருத்தி [உண்டு
ஈட்டிய பொருளும்சேரும் எமன்திசை பூமிநேரும்
வாட்டமாய் மேற்குத்திக்கில் வந்திடும் பூமிதானும்
தாட்டியாய் நினைத்தவேலை சல்தியாய்க் கூடுமென்றேம்.

24. நாலுபேர்களுடன் சேர்ந்து வியாபாரங்கள் செய்வான். மாடுகள், பசுக்கள் விருத்தி ஏற்படும். தேடிய திரவியம் சேரும். தெற்குத் திக்கில் பூஸ்திதி ஏற்படும். சௌகர்யமாய் மேற்குத் திக்கிலும் பூஸ்திதி ஏற்படும். பெரிய காரியங்களைச் செய்ய நினைத்தபோதிலும் சீக்கிரம் செவ்வனே முடிவடையும்.

25. பாக்கியத் தோன்அதற்குப் பத்தினில் இருக்கவேதான்
தேக்கிய லாபத்தோனும் தசமக்கேந் திரமதாக
மார்க்கமாம் சாதகர்க்கு வரும்பொன் நாலாயிரம்தான்
தீர்க்கமாய் சீவிப்பானும் செல்வியே மேலும்கேளே.

25. பாக்கியத்தோன் தன் ஸ்தானத்திற்குப் பத்தாமிடத்தில் தங்க, லாபஸ்தானத்திற்குரியவன் தசம கேந்திரத்திலிருக்க, வழியாக ஜாதகனுக்கு நாலாயிரம் பொன்கள் வரும். தீர்க்காயுசுடன் ஜீவிப்பானும். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

இரண்டாம் பாகம்

இரண்டாம் பகுதி

1. பிறந்தசேய் ஜெனனகாலம் பொன்திசை இருப்புத்தானும்
சிறந்திடு ஆண்டுமாறும் திங்களும் ஏழுக்குள்ளே
உரைத்திடுவீர் ஐயம்கொஞ்சம் உடலுக்கு ரோகம் [வாய்க்கும்
குறைந்திடும் பொசிப்புமேதான் கூறுவோம் அலைச்சல் [தானே.

1. பிறக்கும் குழந்தையின் ஜனனகாலத்தினில் வியாழ பகவானுடைய தசையில் இருப்பு வருஷம் ஆறு, மாசம் ஏழும் உண்டு. அதில் சிறிது சந்தேகம் சொல்ல வேண்டும். உடலுக்கு வியாதி ஏற்படும். சாப்பாடும் குறையும். அலைச்சலும் அதிகம் என்று சொல்லுவோம்.

2. பொன்னவ னுட்சியாகில் புகலுவோம் பலனனேகம்
உன்னித தனமும்சேரும் உற்றதோர் செட்டுமோங்கும்
மன்னிய சுகமுமுண்டாம் மனக்கவலையுமே நீங்கும்
இன்னமும் தொழிலும்விருத்தி இவன்பின்னால் துணைவி [நேரும்.

2. குரு சுவட்சேத்திரத்திலிருப்பானாகில் அநேகவிதமான பலன்களைச் சொல்லுவோம். மேலான திரவிய லாபம் ஏற்படும். சேர்ந்த வியாபாரமும் செழிக்கும். பொருந்திய சுகமுண்டாகும் மனக்கவலைகள் நீங்கும். மேன்மேலும் தொழில் விருத்தி. இவனுக்குப் பின்னால் சகோதரி ஏற்படுவாள்.

3. குடும்பத்தில் சுபமேயுண்டாம் குணமுடன் தந்தைக்கே [தான்
இடும்பான ரோகம்வாய்க்கும் இவன்க்ஷேத்திர மராமத் [தாகும்[1]
அடவுடன் பந்துதன்னில் அநேகரும் ஆழ்வாரென்றோம்[2]
உடன்பிறந் தோர்க்குக்கெண்டம் உத்தமி மேலும்கேளே.

3. குடும்பத்தில் சுகமே ஏற்படும். குணமுள்ள தந்தைக்குக் கடுமையாய் ஏற்படும் வியாதி. இவன் வீடு பழுதுபார்த்துச் சீர்ப்படுத்துவான். அடைவான பந்துக்கள் யாவரும் பகவத் பக்தராவர். உடன் பிறந்தவர்களுக்குக் கண்டம் ஏற்படும். உத்தமியே! மேலும் கேட்பாயாக

---

1. வீட்டைச் சீர்படுத்துவான்
2. பகவத்பக்தர்கள்

4. மந்தனவன்[1] திசைவருடம் பத்தொன்பான் தன்னில்
வரும்பலன்கள் முற்பாதி வரைகிறோம் யாங்கள்
சந்ததமும் செலவதிகம் தன்துணைக்குச்சுபமும் தந்தை
வர்க்கம்தன்னில் ஸ்திரீயாலே தான்குலத்தில் குற்றம்
வந்துவிடும் நினைத்தகாரியம் சேத மாகும்
வரும்தந்தை தாய்களுக்கு மருவிடுமே யோகம்
சந்ததமுற்பாதி இப்பாலகன் நடக்கும்
இதற்குமே பிற்பாதி இசைகின்றோம் யாங்கள்.

4. சனி பகவானுடைய தசை வருஷம் பத்தொன்பதில் ஏற்படும் பலன்களில் முற்பாதியில் ஏற்படுபவைகளை நாங்கள் கூறுவோம். எப்போதும் செலவதிகம். சகோதரனுக்கு சுகம். தந்தை வருக்கத்திலே இருந்து வந்த ஸ்திரீயாலேதான் குலத்திற்குக் குற்றம் ஏற்படும். நினைத்த காரியம் நடைபெறும். பிறகு சேதமாகும். தாய் தந்தையருக்கு யோகங்கள் ஏற்படும். முற்பாதியில் இந்தப் பலன்கள் ஏற்படும். இதற்குமேல் பிற்பாதியில் நடக்கும் பலன்களை நாங்கள் கூறுவோம்.

5. கதிர்மகன்[2] திசையில்பிற்பாதி பலனைக்கழறுவேன் பூமி
[பொன்சேரும்
சதிருடன் செட்டுஓங்கிடு மதனுக்குத் தாரமும் வாய்த்திடும்
[மேலும்
பதிதனில் துணைக்கு சுபங்களும்நேரும் பாலர்கள் விருத்தியு
[முண்டாம்
அதிசயமாக க்ஷேத்திரமமையும் அம்மையே
[இன்னமும்கேளே.

5. சனி தசையில் பிற்பாதியில் ஏற்படும் பலன்களைக் கூறுவோம். பூமியும் பொன்னும் சேர்ந்திடும். ஒழுங்காக வியாபாரம் ஓங்கிடும். பெண்டாட்டியும் ஏற்படுவாள். மேலும் வீட்டில் சுபசோபனங்கள் ஏற்படும். புத்திரர்கள் பிறப்பார்கள். அதிசயிக்கும்படியான வீடு அமையும். பார்வதியே இன்னும் சொல்லுவோம். கேட்பாயாக.

6. பால்பாக்கிய விருத்தியுண்டாம் பந்துவும் மெச்சவாழ்வன்
சீலமாய்ப் பூசைசெய்வன் சேருவன் அன்னியமாதை
ஞாலமேல் பாக்கியம்சேரும் நற்றந்தை தனக்குரோகம்
வேல்விழி மாதர்தன்னால் வித்தகன் தனக்குரோகம்.

---

1. சனிபகவான்

2. சூரியனுடைய புத்திரன் (சனி).

6. பால்பாக்கியங்கள் அதிகரிக்கும். சொந்தக்காரர்கள் மெச்சும்படி வாழ்வான். சீலமாய் (விசேஷ சிரத்தையுடன்) பூசைகள் புரிவான், பிற ஸ்திரீயைச் சேருவான். உலகினில் சம்பத்துக்களைப் பெறுவான். நல்ல தகப்பனுக்கு ரோகம் ஏற்படும். ஸ்திரீகளின் சேர்க்கையால் இவனுக்கு வியாதி ஏற்படும்.

7. புசண்டறிவ் வாருய்க்கூறப் புகழுவார் பராசர்தானும்
நயமுடன் மணத்தின்காலம் நாட்டுவீர் விபரமாக
கதிர்மகன் திசையிலேதான் கரும்பாம்பு புசிப்பிலேதான்
துரிதமாய் மணமேகாணும் சொல்லுவோம்
[மேலும்கேளே

7. புசண்டர் இவ்வாறு கூற, பராசரும் சொல்லலுற்றார். நயமாகக் கலியாண காலத்தை விவரமாய்ச் சொல்லுங்கள். சனி தசையிலேதான் இராகு புக்தியில் சீக்கிரமாகக் கலியாணம் காணும் என்று சொல்லுவோம். மேலும் கேட்பாயாக.

8. இப்படி முனிவர்கூற ஈசுவரி கேட்கலுற்றாள்
செப்புவாய் ராகுபுத்தி செறிந்திடு காலம்தன்னில்
எப்போது சுபங்கள்காணும் என்றுமே அம்மன்கேட்க
மைப்புடன் முனிவர்தானும் விளம்புவார் முற்பாதிக்கே.

8. இப்படி முனிவர் சொல்ல, ஈசுவரி கேட்கலுற்றாள். இராகு புக்தி நடக்கும்போது எப்பொழுது கலியாணம் ஏற்படும் என்று வினவ, முன்பாதியிலே ஏற்படும் என்று முனிவர் விளம்பலுற்றார்.

9. சாதகன் துணைவிக்கேதான் சாற்றுவோம் சுபங்கள்காணும்
நீதியாய் பிற்பாகத்தில் நிகழ்த்துவோம் சாதகர்க்கு
மாதிவள் வருவாளென்றோம் மங்கள காலம்தன்னில்
பேதிக்கும் மனசுதானும் போய்விடும் களவுகொஞ்சம்.

9. ஜாதகனுடைய சகோதரிக்கு சுபசோபனங்கள் ஏற்படும் என்று சொன்னோம். ஒழுங்காகப் பின்பாகத்தில் ஜாதகர்க்குக் கூறுவோம். பெண்டாட்டி வருவாள் என்றோம், கலியாணகாலம் தன்னில் மனம் பேதமடையும். வீட்டில் கொஞ்சம் களவுபோகும்.

10. புதன்திசை ஆண்டுமேதான் புகலுவோம ஒருபான்ஏழும்
நிதம்நித லாபம்உண்டு நீள்நில மதிகம்சேரும்
பதியினில் திருவும்வாசம் பாலர்கள் அதிகம்உண்டாம்
அதிபதியாக வாழ்வன் ஆடையா பரணம்சேரும்.

10. புதன் தசை நடக்கும்போது அதாவது பதினேழு வருஷகாலத்தில் நாளுக்குநாள் இலாபங்கள் ஏற்படும். பாந்த பூமி அதிகம் சேரும். வீட்டில் லட்சுமீ கடாட்சம் ஏற்படும். புத்திரர்கள் அதிகம். அரசனாக அதிகாரத்துடன் வாழ்வான். ஆடையும் ஆபரணமும் சேரும்.

11. மதிமகன்[1] திசை நடக்கின்றபோது மாதுர்தந்தை மரணமாம்
அதிகவே ளாண்மைசவுக்கியம் வேதவர்த்தனை சிவசக்தி
[மைந்தர்
சதிகண்டு மகிழ்தல்பகைவரை செயித்தல்தவறிய
[பொருளும் கைகூடும்
நிதிதரும்பூமி வாணிபம்பலிக்கும் நிறைகீர்த்தி ராச
[போசனமே.

11. புதன் தசை நடக்கும்போது தாய் தந்தையர் மரணம் அடைவார்கள். கிருஷியின் லாபம் அதிகம். வேதியரும் சிவனடியார்களும் இவனைக் கண்டு சந்தோஷப்படுதலும், பகைவர்களை ஜயித்தலும், தவறிய பொருள்கள் சேருதலும் ஏற்படும். பொருட் செல்வத்தை அதிகரிக்கும் பூமியும் வாணிபமும் பலனைத்தரும். கீர்த்தியும் கௌரவமும் ஏற்படும். சுகபோஜனமும் ஏற்படும்.

12. ஆள்கார ரதிகமுண்டாம் அவன்வீடு சித்திரமாகும்
நாளுக்கு நாளாய்யோகம் நவதானிய மிகவேஉண்டாம்
சோலையும் துரவுபூமி சொந்தமாய் சேர்ப்பானும்
ஏலவே இருவர்சேர்ந்து இன்பமாய் செட்டுச்செய்வன்.

12. வேலையாட்கள் அதிகமுண்டு. வீட்டை அலங்காரம் செய்வார்கள். நாளுக்கு நாள் யோகங்கள் விருத்தியாம். நவதானியங்கள் மிகுதியாக உண்டாம். தோட்டந்துரவுகள், நிலபலங்கள் சொந்தமாக ஏற்படுத்துவான். ஏற்பவே இரண்டு பேர்கள் சேர்த்து இன்பமாக வியாபாரம் செய்குவான்.

13. தீர்த்த யாத்திரைகளும்செய்வன் சிறந்தபூஷணமும்
[சேர்ப்பன்
நாற்றிசை கீர்த்திஏற்பன் நாடெல்லாம் வசியம்கொள்வன்
பார்த்திபர் நேசம்கொள்வன் பாமரர்க்கு அன்னமீவன்
கூற்றனை உதைத்தோன்தேவி கூறினமொழி குன்றாது.

13. தீர்த்த யாத்திரைகள் செல்லுவான். மேலான ஆபரணங்களைச் சேர்ப்பான். நாலு திக்குகளிலும் புகழ் பெறுவான். நாட்டிலுள்ளவர்களைத் தன்வசப்படுத்துவான். அரசர்களுடைய சிநேகம் பெறுவான். ஏழை

1. புதன்

களுக்கு அன்னதானம் செய்வான். காலனைக் காலால் உதைத்த பரம சிவனின் தேவியாகிய பார்வதியே! நாங்கள் கூறிய பலன்களுக்குக் குறைவுவராது.

14. செயமுனி எழுந்திருந்து திடுக்கென உரைக்கலுற்றார்
நயமிலா மூன்றாறுக்கும் நாயகன் புதனேயாகி
வியமத்தோன் அஷ்டமத்தோன் மேவியே அவரைப்பார்க்க
தயவுடை நற்பலன்கள் சாற்றினீர் முனிவரேகேள்.

14. ஜயமுனிவர் எழுந்திருந்து திடுக்கிட்டுச் சொல்லலானார். நய மில்லாத மூன்று, ஆறு முதலிய இடங்களுக்கு புதனே ஸ்தானாதிபதியா யிருப்பதனாலும், விரயஸ்தானத்திலிருந்து அஷ்டமத்தோன் அவனைப் பார்க்கப் பலன்களைச் சொன்னீர். முனிவரே! கேளும்.

15. எட்டும் ஈராறுக்குள்ளோன் இவர்பார்த்த பலனைச்சொல்வீர்
திட்டமாய்ச் சொல்வோம்யாங்கள் திசையது மத்திலேதான்
நஷ்டங்கள் அதிகமுண்டு நன்மைந்தர் சேதமாகும்
இஷ்டர்கள் பகையதாகும் இவன்தேக பாதையுண்டாம்.

15. எட்டு, பனிரெண்டுக்குடையோன் இவர்களைப் பார்த்த பலன் களைச் சொல்லுவீர். நாங்கள் அதனைத் திட்டமாய்ச் சொல்லுவோம். தசையின் மத்தியிலேதான் அதிக நஷ்டங்கள் ஏற்படும். நல்ல புத்திரர்கள் தோஷமடைவார்கள். சிநேகிதர்கள் விரோதமாவார்கள். இவனுக்குச் சரீர உபாதைகள் ஏற்படும்.

16. பூமியில் வழக்குநேரும் புவிதனில் திரிச்சலாகும்
நேமங்கள் தவறிப்போகும் நினைத்தகா ரியங்களாகா
தீமைகள் அனேகமுண்டு செப்புவோம் இதற்குச்சாந்தி
நேமியில் திருமாலுக்கு நிதமும் அருச்சனைகள்செய்து,

16. நில சம்பந்தமான விவகாரங்கள் ஏற்படும். பூமியில் அலைச்சல் ஏற்படும். விரதங்கள் அனுஷ்டிப்பது தவறிப்போகும். நினைத்த காரியங் கள் நடக்கமாட்டா. தீமைகள் அநேகம் ஏற்படும். இதற்கு உண்டான சாந்தியைச் சொல்லுவோம்.

17. மண்டலம் தோத்தரித்தால் வரும்பிணி யாவும்நீங்கும்
கொண்டதோர் பகையும்வெல்லும் குணமாகு நினைத்த
[தெல்லாம்.

17. மகா விஷ்ணுவிற்குத் தினமும் அருச்சனை செய்து ஒரு மண்டலம் தோத்தரித்து வழிபாடுகள் செய்து வந்தால் வரும் பிணிகள் விலகும். எதிரிகளையும் வெல்லலாம். நினைத்த தெல்லாம் வெற்றியாகும்.

இரண்டாம் பாகம்

மூன்றும் பகுதி

1. முனிவர் இவ்வாறுய்க்கூற மொழிகுவாள் அம்மன்தானும்
இணையிலா மாதுருக்கு இசைகுவீர் முன்சென்மத்தை
வனிதையும் கேட்கும்போது வரைகுவார் முனிவர்தானும்
கனமுடன் அருணைகிழ்பால் கனத்ததோர் பேரூர்தன்னில்.

1. முனிவர் இவ்விதமாய்ச்சொல்ல, அம்மன் பின்வருமாறு கேட்க லுற்ருள். இணையற்ற இம்மாதுக்கு ஏற்பட்ட முன்சென்மத்தை எடுத்துச் சொல்லுவீர். இதைக்கேட்ட முனிவர் சொல்லலுற்ருர்: திருவண்ணுமலைக் குக் கிழக்கேஉள்ள மதிப்பான பேரூரில்,

2. பஞ்சால குல[1]முதித்து பாலர்கள் அதிகமுண்டாய்
தஞ்சமாய் அகதிகட்கு தானவன் பக்திபூண்டு
அஞ்சலென் றடைந்தோருக்கு அன்புடன் அன்னமீந்து
வஞ்சியும் பேதிகண்டு மரணமே ஆனுளென்ருேம்.

2. வன்னியர் குலத்திலுதித்துக் குழந்தைகள் அதிகம் ஏற்பட்டு, தஞ்சமடைந்தோரைக் காப்பாற்றி, அடைந்தோருக்கு அஞ்சல் என்று ஆறுதல் கூறி, அன்புடன் அன்னமளித்து, வாழும்பொழுது இவளும் பேதி ஏற்பட்டு மரணமடைந்தாள் என்ருேம்.

3. கஞ்சனுல் வரியப்பட்டுக் காதலி இச்சென்மத்தில்
மிஞ்சிய இக்குலத்தில் மேவின ளிவளேயம்மா
தஞ்சமாயிவள் பிற்சென்மம்சாற்றுவோம் காஞ்சி கிழ்பால்
கொஞ்சிய பேரூர்தன்னில் கோவைசிய குலத்திலேதான்,

3. பிரம்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்டு இவள் இந்த ஜன்மத்தினில் இக்குலத்தில் வந்து பிறந்தாள். இவளுடைய பின்சென்மத்தைப்பற்றிக் கூறுவோம். காஞ்சீபுரத்திற்குக் கிழக்கேயுள்ள பேரூரில் கோவைசிய குலத்தில்,

4. உதித்துமே தனங்கள்பெற்று உயர்செட்டு அதிகமுண்டாய்
நிதநித லாபமுண்டாய் நிமலியும் வாழ்வாள் என்ருேம்
மிதித்திட சிறியதந்தை மைந்தர்கள் இவளேஎன்ருேம்
சதிருடன் அந்தசேதி சாற்றுவோம் கேளுமம்மா.

4. பிறந்து தனங்களைப்பெற்று மேலான வியாபாரமும் உண்டாகி, தினம்தினம் லாபம்பெற்று இவளும் வாழ்வாள் என்ருேம். சிறிய தந்தையின்

---

1. வன்னியர்

மைந்தர்கள் இவளை மதிப்பதில்லை. ஒழுங்காக அந்தச்செய்தியைச் சொல்லு வோம் அம்மா! கேளும்.

5. பின்தந்தை முன்பாவத்தால் பேசினோம் மதலைதோஷம்
இன்பமாய் அதற்குச்சாந்தி இசைகுறோம் தணிகைக்கேதான்
மன்னவன் மனைவியோடு வந்துமே ஐந்துதிங்கள்
அன்னவன் முருகனுக்கு அர்ச்சித்து அகதிகட்கு.

5. சிறியதந்தையின் பிராரப்தகருமத்தினுல் புத்திரதோஷம் ஏற்படும் என்றுசொன்னோம். அதற்குண்டான சாந்தியைச்சொல்லுவோம். திருத் தணிகைக்குத் தானும்தன்மனைவியும் சேர்ந்துசென்று ஐந்துகிழமைகள் முருகக்கடவுளுக்கு அர்ச்சனைசெய்தும், அகதிகள்,

6. ஐந்துபேர் தனக்குஅன்னம் அவனுமே அளிப்பானுகில்
மைந்தரும் விருத்தியாகும் வன்மையாய் செய்யானுகில்
முந்திடும் மதலைதானும் நுவல்சாந்தி செய்துவந்தால்
பந்தமாய் ஆண்பால்ஒன்று பருகிடும் பெண்பால்ரண்டு.

6. ஐந்துபேர்கட்கு அன்னமும் அளித்தால் மைந்தர்கள் விருத்தி யாவார்கள். ஒழுங்காய்ச் செய்யாமற்போனுல் புத்திரதோஷம் ஏற்படும். சாந்திசெய்து வந்தால் ஆண்குழந்தையொன்றும், பெண்குழந்தைகள் இரண்டும் பிறக்கும்.

7. கவி[1] திசை இருப்புஆண்டு கழறுவோம் இருமூன்றுண்டும்
நவமதில் திங்கள்ஐந்தும் நவிலுவோம் பலனையாங்கள்
அவனியில் துணைவர்விருத்தி அம்மாதர் துணைவருக்கு
வினையிலா சுபமேநேரும் விளைபுலம் வருகுமென்றோம்.

7. சுக்கிரதசையிலிருப்பு வருஷம் ஆறும், மாசம் ஐந்துமாகும். இதன் பலனைச் சொல்லுவோம். உலகில் சகோதரர் விருத்தியாவர். அம்மாதர்களின் சகோதாருக்குச் சிரமமில்லாத சுபங்களே நேரிடும். விளையும்நிலம் வரும் என்போம்.

8. க்ஷேத்திரம் சித்திரமாகும் செய்தொழில் அதனுல்லாபம்
நாற்றிசை கீர்த்திஉண்டு நற்பசு விருத்தியாகும்
வேற்றெரு குறைவுமில்லை விரயத்தில் இருந்ததாலே
பார்த்தானும் சாதகர்க்குப் பலபல பிணிகளுண்டாம்.

8. வீடு அலங்கரிக்கப்படும். செய்தொழிலில் லாபம் கிடைக்கும். நாலாபக்கங்களிலும் கீர்த்தி ஏற்படும். நல்ல பசுக்கள் விருத்தியாகும். வேறு ஒரு குறைவுமில்லை. விரயத்திலிருந்ததனுலே சூரியனுல் பலபல பிணிகள் ஏற்படும்.

---

1. சுக்கிரன்

9. சுடர்திசை[1] ஆருண்டுக்கும் சொல்லுவோம் பலனையாங்கள்
தடம்பூமி அதிகம்சேரும் சகோதரர் விருத்தியுண்டாம்
திடமான லாபம்காணும் சித்திர வீடுசெய்வன்
அடல்பணி இரத்தினங்கள் ஆள்காரருண்டு கண்டாய்.

9. சூரியதசை ஆறுவருஷத்திற்கும் உண்டான பலன்களைச்சொல்லுவோம். பூஸ்திதிகள் அதிகம் விருத்தியாம். சகோதரர்விருத்தி ஏற்படும். நிச்சயமான லாபம் ஏற்படும். அழகான வீடுகட்டுவான். பொன், இரத்தின ஆபரணங்கள், ஆள்காரர்கள் இவைகள் அநேகமுண்டு.

10. தேவதா பக்தியுண்டு திருமகள் வாசமாகும்
பூமியும் தனதானியங்கள் பொருந்திடும் இவனுக்
[கென்ரும்
நேமியில் ஒன்பான்ஆண்டில் நேத்திரரோகம் காணும்
தீமையும் விரயமுண்டு செப்புவோம் இதன்மேலாக.

10. தெய்வத்தினிடத்தில் பக்தியுண்டு. லட்சுமீகடாக்ஷமேற்படும். பூமியில் தனதானியங்கள் இவனுக்கு ஏற்படும். உலகில் தொண்ணூறு வயதில் நேத்திரரோகம் காணும். கெடுதலும் நஷ்டமுமுண்டு. இதற்கு மேலாகச் சொல்லுவோமாக.

11. மதிதிசை ஒருபான்ஆண்டும் வரும்பலன் கூறுகின்ரும்
நிதம்நிதம் லாபமுண்டு நினைத்தகாரியங்களாகும்
மதிநிகர் மனையாள்வாய்க்கும் மன்றுபூடணங்கள்
[உண்டாம்
பதியினில் திருவும்வாசம் பால்பாக்கிய மதிகமாமே.

11. சந்திரதசை பத்துவருஷங்களுக்கும் பலன்களைக் கூறுவோம். தினசரிலாபமுண்டு. நினைத்தகாரியம் கைகூடும். சந்திரபிம்பம்போன்ற மனையாட்டி வாய்ப்பாள், பொருந்தும் ஆபரணங்கள் ஏற்படும். வீட்டில் லட்சுமி வாசம்பண்ணுவாள். பால்பாக்கியங்களும் அதிகம் ஏற்படும்.

12. அன்னங்கள் விரயமாகும் அநேககாரியங்கள் கூடும்
சொர்னங்கள் சேருமென்ரும் சுகமது மிகவேயுண்டாம்
அன்னையின் தந்தைதாயார் அரிதமா மென்றுசொன்னோம்
பின்னங்கள் ஒன்றுமில்லை பேசுவோம் இதற்குமேலே.

12. போஜன விரயமாகும். அநேககாரியங்கள் கைகூடும். பொன்கள் சேரும் என்ரும். அதிகசுகமும் ஏற்படும். அன்னையின் தாய் தந்தையருக்கு

1. சூரிய தசை

அதிர்ஷ்டமேற்படும் என்போம். பின்னங்கள் யாதொன்றுமில்லை. சொல்லுவோம் இதற்குமேலே.

13. மங்களன்[1] திசையிலேதான் வந்திடும் தேகபாதை
இங்கித ரணங்கள்உண்டாம் இதற்குமேல் சாந்தி
[சொல்வேன்
பொங்கமாய் முருகனுக்குப் பிரார்த்தனை செய்வாளுகில்
மங்கிடும் ரோகம்தானும் மைந்தரும் உண்டாம்மின்னே.

13. செவ்வாய் தசையிலேதான் தேகஉபாதைகள் வந்திடும். புண்கள், சிரங்குகள், ஏற்படும். இதற்கு உண்டான பரிகாரத்தைக் கூறுவேன். பக்தியாய் முருகக்கடவுளுக்குப் பிரார்த்தனைகள் செய்வாளுகில் வியாதி தொலையும். பிள்ளைகளும் பிறக்கும். பார்வதியே ! கேட்பாயாக.

14. குடும்பத்தில் குறைவுமில்லை குலவிடும் பலன்அநேகம்
உடன் பிறந்தோன்தனக்கும் உரைக்குறோம் சுகமே
[உண்டாம்
கடலுளோர் மெச்சவாழ்வன் கனத்தவர் நேசமாகும்
படைவெல்லும் பாக்கியம்சேரும் பந்துக்கள் வணங்கு
[மென்றோம்.

14. குடும்பத்தில் குறைவுஇல்லை. அநேக நன்மைகள் நேரிடும். உடன்பிறந்தோருக்கும் சுகமுண்டாகும் என்று சொல்லுவோம். கடற்கரையிலுள்ளோர் மெச்சும்படி வாழ்வான். பணக்காரர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். படைகளைவென்று அடையும் பாக்கியம் சேரும். பந்துக்களும் இவனை மதிப்பார்கள்.

15. அதற்குமேல் கருங்கோள்ஆண்டு மறைகிறோம் ஈரொன்
[பாண்டும்
சதியிலா பூமிசேரும் சகலரும் வணங்கவாழ்வன்
விதவித செட்டுலாபம் வண்டிவாகனமும் உண்டு
மிகவுமாம் தீர்த்தயாத்திரை ஆள்காரர் அந்தம்சேரும்.

15. அதற்குமேல் இராகுதசை பதினெட்டுவருஷங்கள். அதில் பூமி சேரும். சகலமானவரும் இவனை வணங்குவார்கள். வித்விதமான வியாபாரங்கள் செய்து லாபம்பெறுவான். வண்டிவாகனமும் உண்டு. அதிகமாய்த் தீர்த்தாடனங்கள் செய்வான். ஆள்காரர்கள் அநேகர் சேருவார்கள்.

---

1. செவ்வாய்

16. இரத்தினபூஷணங்கள் நல்கிடும் இவனுக்கேதான்
புத்திர விருத்தியாகும் பூமியு மதிகம்சேரும்
எத்திசை கீர்த்தியுண்டாம் ஏழையை ஆதரிப்பன்
வித்தகர் ஆலயங்கள் இறைதிருப் பணியும்செய்வன்.

16. இரத்தின பூஷணங்கள் இவனுக்கேசேரும். புத்திர விருத்தியாகும். பூமியும் அதிகம் சேரும். எந்தத்திக்கிலும் புகழ்பெருகும். ஏழைகளை ஆதரிப்பான். கடவுளுக்கு ஆலயங்களும் திருப்பணிகளும் செய்வான்.

17. கூவலும்[1]சோலைவைப்பன் கூறுவோம் இதற்குள்ளாக
சேவலம் கொடியோனுக்குத் திருப்பணி வேலைசெய்வன்
ஆவலாய் அடுத்தோருக்கு அநேகமாய் உதவிசெய்வன்
தீவுகள் வஸ்துவாலே செட்டுகள் அதிகம் செய்வன்.

17. கிணறு சோலையும் ஏற்படுத்துவான் என்று கூறுவோம். இதற்குள்ளாக சேவல் கொடியுடையோனுக்குத் திருப்பணிவேலைகள் செய்வான். ஆவலாய் வந்து அண்டினோருக்குப் பலவிதங்களில் உபகாரம்செய்வான். தீவாந்திரங்களிலுள்ள வஸ்துக்களாலே வியாபாரம் அதிகம் செய்வான்.

18. தந்தைதாய் கருமம்செய்வன் சகோதர பகையுமுண்டாம்
சொந்தமாய்க் கிரகம்தானும் சுந்திரன் செய்வானென்றோம்
பந்தமாய்க் குடும்பம்வேறு பாகிப்பான் இவனேயம்மா
கந்தனைப் பெற்றமாதே கழறின மொழிகுன்றாது.

18. தாய்தந்தையருக்குக் கருமங்கள் செய்வான். சகோதரனுடைய பகைமைகளுமுண்டாய், சொந்தமாக வீடும்கட்டுவான். பந்திக்கப்பட்ட குடும்பத்தை வேறாகப் பரிபாலித்துவருவான் இவனே அம்மா: கந்தஸ்வாமியைப் பெற்றெடுத்த பார்வதியே! சொன்னசொல் தவறாது.

19. மந்திரி[2] திசையிலேதான் அனேகமாய்ப் பொருளும் [வாய்க்கும்
சந்ததம் கீர்த்தியோங்கும் சகலரும் வணங்கவாழ்வன்
இந்திர யோகம்உண்டாம் இடருகள் ஒன்றும்காணோம்
மைந்தர்க்குச் சுபமேயுண்டாம் மறையவர் நேசமாகும்.

19. வியாழனுடைய தசையிலேதான் அநேகமாய்ச் சொத்துக்கள் சேரும். அடிக்கடி கீர்த்தி பெருகும். எல்லாரும் இவனை வணங்குவார்கள். இந்திரயோகங்களை அனுபவிப்பான். இடைஞ்சல்கள் ஒன்றும்இல்லை. பிள்ளைகளுக்கு சுகமேயுண்டாகும். பிராமணர்களின் சிநேகமுண்டாகும்.

---

1. கிணறு
2. குரு

20. தனதானிய விருத்திஉண்டு சஞ்சலமில்லை கண்டாய்
அனையவே பெருமைஉண்டு அவனுபதேசம்கேட்பன்
கனமுள தீர்த்தம்தோய்வன் கனத்ததோர் செட்டும்
[செய்வன்
இனங்களால் பெருமைபூண்பன் இவன்தர்ம கதைகள்
[கேட்பன்.

20. தனதானிய விருத்திஉண்டு, சஞ்சலமில்லை, பொருந்தவே பெருமை உண்டு. பெரியவர்கள் உபதேசங்களைக் கேட்பான். மேலான தீர்த்தங்கள் தோய்வான். மகத்தான வியாபாரம்செய்வான். சொந்தக்காரர்களால் பெருமை பெறுவான். இவன் புண்ணிய புராணங்களைக் கேட்பான்.

21. இப்படிமுனிவர் கூற ஈசுவரி கேட்கலுற்றாள்
மைப்புடன் சாதகர்க்கு விளங்கிடும் தனங்கள்தன்னை
செப்புவாய் என்றுகேட்க சொல்லுவார் முனிவர்தானும்
அப்பணி சடையோன்தேவி அருளுவோம் கேளுமம்மா.

21. இவ்விதம் முனிவர்சொல்ல ஈசுவரிகேட்கலுற்றாள். ஜாதகர்க்கு சொத்துக்கள் சேரும். அவைகளின் விவரங்களைச் சொல்லுங்கள் என்று வினவ, முனிவர் சொல்லலுற்றார். கங்கைவார்சடையான் தன்னை அடைந்த பார்வதியே! சொல்லுவோம் கேட்பாயாக.

22. தனபாக்கிய லாபத்தோனும் சதிருடன் உச்சமாக
அனையவை யாயிரம்பொன் அவனுமே சேர்ப்பா
[னென்றோம்
கனமுடன் பூமிதானும் கழறுவோம் ஆயிரம்பொன்
இனமுடன் பூடணங்கள் இதுவுமே அவ்வாறென்றோம்.

22. தனபாக்கியாதிபதியும் இலாபஸ்தானாதிபதியும் பொருத்தமாக உச்சஸ்தானத்திலிருக்க, அநேகமாய் ஐயாயிரம் பொன் அவனுமே சேர்ப்பானென்றோம். பெரிய பூஸ்திதியும் ஆயிரம்பொன் பெறும். ஆபரணாதிகளும் அவ்வாறாகும்.

ஸப்தரிஷி நாடி மேஷலக்னம் முற்றும்

BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

AN APPEAL.

The Government Oriental Manuscripts Library, Madras, is unique in point of variety and vastness of collections covering a very wide field of Indian Literature in Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahratti, Arabic, Persian and Urdu. The dates of several of the manuscripts go back to many hundreds of years. From an academic point of view, these collections contain some very interesting specimens of Literary, Scientific, Historical and Artistic importance. A large number of them have not yet been printed and some of them are available only in this Library. With a view to placing these manuscripts in the hands of the public in a printed form, the Government of Madras were pleased to sanction the starting of a BULLETIN under the auspices of the Government Oriental Manuscripts Library. For the present only two numbers are issued in a year. They contain critical editions of original works in Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahratti, Persian and Urdu. The annual subscription is only Rs. 4 inland and 8 shillings foreign. Scholars, Patrons of Culture, Universities, Public Libraries and Educational Institutions are requested to enrol themselves as susbscribers for this Bulletin and thus encourage the cause of Oriental Studies and Culture.

A few copies of back numbers are available for sale, post free, at the following prices which should be sent in advance.

Vol. I, No. 2, July to December, 1948	..	Rs. 2.
Vol. II, 1949	..	Rs. 4.
Vol. III, 1950	..	Rs. 4.
Vol. IV, 1951	..	Rs. 4.

T. CHANDRASEKHARAN,
Curator,
Government Oriental Manuscripts Library.

TRIPLICANE,
MADRAS-5.

LIST OF CATALOGUES PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRABY, MADRAS.

SANSKRIT.

Descriptive Catalogues.

	Numbers.	*Price.* RS. A. P.
* Vol. I.—Part I, Vedic Literature	1 to 46	0 12 0
* Vol. I.—Part II. Vedic Literature	47 to 245	0 12 0
* Vol. I —Part III. Vedic Literature	246 to 852	2 0 0
* Vol. II.—Vedic Literature	853 to 1245	1 12
* Vol. III.—Grammar. Lexicography aod Prosody	1246 to 1805	1 8 0
* Vol. IV—Part I. Ithihāsa and Purāṇa	1806 to 2337	1 8 0
* Vol. IV.—Part II. Upapurāṇas and Sthalamāhātmyas	2338 to 2610	1 4 0
* Vol. V.—Dharmaśāstra	2611 to 3045	1 8 0
* Vol. VI.—Dharmaśāstra	3046 to 3427	1 4 0
* Vol. VII.—Dharmaśāstra	3428 to 3872	1 4 0
* Vol. VIII.—Arthaśāstra, Kāmaśāstra and Systems of Indian Philosophy—Nyāya	3873 to 4334	1 4 0
* Vol. IX.—Systems of Indian Philosophy—Vaiśeṣika, Yoga, Mīmāmsā and Vedānta-Advaita Philosophy	4335 to 4780	1 12 0
* Vol. X.—Systems of Indian Philosophy—Dvaita, Viśiṣṭādvaita and Śaiva Vedāntas	4781 to 5122	1 12 0
* Vol XI.—Systems of Indian Philosophy	5123 to 5558	1 12 0
Vol. XII.—Religion	5559 to 6266	1 12 0
Vol. XIII.—Religion	6267 to 7006	1 12 0
* Vol. XIV.—Religion	7007 to 7729	1 12 0
* Vol. XV,—Religion	7730 to 8165	1 12 0
* Vol. XVI.—Religion, Vrata and Pūjā	8166 to 8780	1 12 0
Vol. XVII.—Stotras	8781 to 9357	1 12 0
Vol. XVIII.—Stotras—Praśaṃsā Stotras	9358 to 10540	1 12 0
Vol. XIX.—Stotras—Praśamsā Stotras	10541 to 11450	1 12 0
Vol. XX.—Kāvyas	11451 to 12143	2 12 0
Vol. XXI.—Kāvyas	12144 to 12783	3 0 0
Vol. XXII.—Rhetoric, Poetics, Music, Dancing and Śilpa śāstra	12784 to 13068	4 0
Vol. XXIII.—Medicine	13069 to 13381	1 8 0
Vol. XXIV.—Jyotiṣa	13382 to 14076	3 2 0
* Vol. XXV.—Supplemental	14077 to 14560	2 4 0
Vol. XXVI.—Supplemental	14561 to 15000	2 12 0
Vol. XXVII.—Supplemental	15001 to 15692	5 14 0
Vol. XXVIII.—Supplemental	15693 to 16200	3 12 0
Vol. XXIX.—Supplemental	16201 to 16700	3 2 0
Vol. XXX.—Supplemental	16701 to 17200	7 10 0
Vol. XXXI.—Supplemental	17201 to 17700	11 12 0

Triennial Catalogues.

	Numbers.	*Price.* RS. A. P.
* Vol. I-A (1911—13)	1 to 342	2 0 0
* Vol. I-B (1911—13)	343 to 573	1 6 0
* Vol. I-C (1911—13)	574 to 801	1 6 0
Vol. II-A (1914—16)	802 to 1329	18 2 0 (Vols. II-A, II-B, II-C)
Vol. II-B (1914—16)	1330 to 1456	
Vol. II-C (1914—16)	1457 to 1942	
* Vol. III-A (1917—19)	1943 to 2348	6 0 0
* Vol. III-B (1917—19)	2349 to 2679	6 0 0
* Vol. III-C (1917—19)	2680 to 2894	4 4 0
Vol. IV-A (1920—22)	2895 to 3203	9 0 0
Vol. IV-B (1920—22)	3204 to 3634	8 0 0
Vol. IV-C (1920—22)	3635 to 4155	10 0 0
* Vol. V-A (1923—25)	4156 to 4300	4 0 0
* Vol. V-B (1923—25)	4301 to 4415	2 8 0

SANSKRIT—*contd.*

Triennial Catalogues—(*cont.*)

	Numbers.	Price. RS. A. P.
Vol. V-C (1923—25) ..	4416 to 5041	5 12 0
Vol. VI (1926—28) ..	5042 to 5380	10 0 0
Vol. VII (1929—31) ..	5381 to 5532	2 14 0
Vol. VIII (1931-32—1933-34) ..	5533 to 5700	1 4 0
Vol. IX (1934—37) ..	5701 to 5996	6 0 0
Vol. X-A (1937-38 to 1939-40) ..	5997 to 6496	14 10 0
Vol. X-B and X-C (1937-38 to 1939-40) ..	6497 to 7496	*In the press.*

GENERAL.

Alphabetical Index of Sanskrit Manuscripts, Part I. ..		13 12 0
Alphabetical Index of Sanskrit Manuscripts, Part II ..		10 0 0
Alphabetical Index of Sanskrit Manuscripts, Part III ..		3 6 0
Author Index of Sanskrit Manuscripts ..		1 8 0

TAMIL.

Descriptive Catalogues.

Vol. I.—Alphabet, Primer. Lexicography, Grammar and Literature ..	1 to 511	1 14 0
Vol. II.—Itihāsa, Purāṇa, Religion and Philosophy (Vaiṣṇavism) ..	512 to 1122	2 2 0
Vol. III.—Religion and Philosophy (Śaivism) ..	1123 to 1620	6 0 0
Vol. IV.—Religion and Philosophy (Śaivism) ..	1621 to 1867	3 10 0
Vol. V.—Alchemy, Medicine, Magic, Witchcraft and Supplement	1868 to 2173	6 0 0
Vol. VI.—Miscellaneous ..	2174 to 2725	19 12 0
Vol. VII.—Local Records ..	2726 to 2949	13 4 0
Vol. VIII.—Local Records ..	2950 to 3169	*In the press.*

Triennial Catalogues.

Vol. I.—Miscellaneous (1910-13) ..	1 to 114	1 6 0
Vol. II.—Miscellaneous (1914-16) ..	115 to 310	4 14 0
Vol. III.—Miscellaneous (1917-19) ..	311 to 409	5 0 0
Vol. IV.—Miscellaneous (1920-22) ..	410 to 535	5 0 0
Vol. V.—Miscellaneous (1923-25) ..	536 to 859	6 8 0
Vol. VI.—Miscellaneous (1926-28) ..	860 to 952	4 10 0
Vol. VII.—Miscellaneous (1929-34) ..	953 to 1055	2 6 0
Vol. VIII.—Miscellaneous (1935-43) ..	1056 to 1473	34 14 0
Vol. IX.—Miscellaneous (1944-49) ..	1474 to 1605	13 8 0

GENERAL.

Alphabetical Index of Tamil Manuscripts. Vol. I ..		5 4 0
Alphabetical Index of Tamil Manuscripts, Vol. II ..		12 6 0
Alphabetical Index of Tamil Manuscripts, Vol. III Local Records ...		8 6 0
Author Index of Tamil Manuscripts ...		3 10 0

TELUGU.

Descriptive Catalogues.

Vol. I.—Ithihāsa, Purāṇa and Māhātmya ..	1 to 369	2 12 0
Vol. II (1).—Śṛṅgāra Prabandhas ..	370 to 616	1 0 0
Vol. II (2).—Śṛṅgāra Prabandhas ..	617 to 806	4 0 0
Vol. III.—Śṛṅgāra Prabandhas ..	807 to 941	3 14 0
Vol. IV.—Prabandhas—Dvipadakāvya ..	942 to 1221	5 12 0
Vol. V.—Grammar, Prosody and Lexicography ..	1222 to 1395	3 6 0
Vol. VI.—Vacana Kāvyas ..	1396 to 1466	1 4 0
Vol. VII.—Śatakas ..	1467 to 1833	5 6 0
Vol. VIII.—Yakṣagānams and Daṇḍakams ..	1834 to 2040	4 10 0
Vol. IX.—Vedānta ..	2041 to 2273	21 12 0
Vol. X.—Gaṇita and Jyotiṣa ..	2274 to 2399	13 0 0
Vol. XI.—Medicine ..	2400 to 2481	6 8 0
Vol. XII.—Music (Saṅgīta) ..	2482 to 2592	7 6 0
Vol. XIII.—History ..	2593 to 2657	4 14 0
Vol. XIV.—Local tracts (Mackenzie Collections) ..	1 to 150	*In the press.*

Triennial Catalogues.

* Vol. I. Miscellaneons (1910-13) ..	1 to 137	1 6 0
Vol. II.—Miscellaneous (1913-16) ..	138 to 292	2 6 0
Vol. III.—Miscellaneous (1916-19) ..	293 to 539	6 0 0
Vol. IV.—Miscellaneous 1919-22) ..	560 to 715	7 14 0
Vol. V.—Miscellaneous (1922-28) ..	716 to 812	3 0 0
Vol. VI.—Miscellaneous (1928-41) ..	813 to 1069	25 12 0

TELUGU—*contd.*

	Numbers.	Price. RS. A. P.
GENERAL.		
Alphabetical Index of Telugu Manuscripts ..		3 12 0
KANNADA.		
DESCRIPTIVE CATALOGUES.		
Vol. I.—Grammar, Lexicography, Prosody, Itihāsa and Purāṇa	1 to 138	6 0 0
Vol. II.—Itihāsa and Purāṇa ..	139 to 317	4 12 0
Vol. III.—Religion—Āgama ..	318 to 476	6 12 0
Vol. IV.—Religion—Āgama, Vīraśaiva and Christianity ..	477 to 825	21 12 0
Vol. V.—Religion and Kāvyas ..	826 to 1038	35 2 0
Vol. VI.—Kāvyas		*In the press.*
GENERAL.		
Alphabetical Index of Kannada Manuscripts ..		2 4 0
MALAYALAM.		
DESCRIPTIVE CATALOGUES.		
Vol. I Miscellaneous ..	1 lo 351	8 2 0
Vol. II Do. ..	352 to 368	2 8 0
GENERAL.		
Alphabetical Index of Malayalam Manuscripts ..		0 2 0
ISLAMIC LANGUAGES.		
Descriptive Catalogue of Islamic Manuscripts, Vol. I ..	..	13 14 0
Descriptive Catalogue of Islamic Manuscripts, Vol. II ..	..	16 12 0
Alphabetical Index of Urdu Manuscripts ..	..	0 2 0
Alphabetical Index of Persian Manuscripts ..	..	1 2 0
Alphabetical Index of Arabic Manuscripts ..	..	0 8 0
MARATHI.		
Alphabetical Index of Marāṭhī Manuscripts } Subject Index of Marāṭhī Manuscripts }	In one volume	9 14 0
Descriptive Catalogue of Marāṭhi Manuscripts—Kaifiyats ..		*In the press.*

N. B.—* The books marked with an asterisk are out of stock.

LIST OF BOOKS PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS, UNDER THE MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES.

Serial Number	Name of the work.	Name of the Editor.	Language	Price. Rs.	A.	P.
1.	*Sarva-siddhānta-saṅgraha	M. Rangacarya, M. A. Rao Bahadur.	SANSKRIT.	0	12	0
2.	*Gaṇita-sārasaṅgraha	Do.	Do.	2	4	0
3.	Padya-cūḍāmaṇi with commentary	Do.	Do.	2	8	0
4.	Brahma-siddhi with commentary	Mahāmahopādhyāya S. Kuppuswami Sastri.	Do.	7	12	0
5.	Ratneśvara-prasādana-nāṭakam	P. P. S. Sastri	Do.	1	2	0
6.	Rāmānuja-campū with commentary	Do.	Do.	3	0	0
7.	Mahābhāṣya with the commentary of Kaiyaṭa and super-commentary - Pradīpoddyotana of Annambhaṭṭa, Vol. I. Āhnikas 1 to 4.	P. P. S. Sastri & Dr. A. Sankaran.	Do.	20	12	0
8.	Śāstradīpikā with the commentary Mayūkhāvaḷi	P. P. S. Sastri	Do.	*In the press.*		
9.	Bāla-bhārata with commentary	Do.	Do.	2	0	0
10.	Nayā-mañjarī	Do.	Do.	2	0	0
11.	Ḍamarukam with commentary	Do.	Do.	0	8	0
12.	Śṛṅgāra-prakāśa, Part I.	Do.	Do.	1	8	0
13.	Mahābhāṣya with the commentary of Kaiyaṭa and the super commentary Pradīpoddyotana of Annambhaṭṭa. Vol. II. Āhnikas 5 to 9.	T. Chandrasekharan, M. A., L. T.	Do.	*In the press.*		
14.	Nannūr Kāṇḍikaiyurai.	Do.	TAMIL.	*In the press.*		
15.	Māṇikka-vācakar Ammāṇai.	Do.	Do.	Do.		
16.	Ādi-parvattādi-parvam.	Do.	Do.	Do.		
17.	Vasu-carittiram.	Do.	Do.	Do.		
18.	Sakala-nīti-kathā-nidhānamu.	Do.	TELUGU.	Do.		
19.	Pañca-tantramu.	Do.	Do.	Do.		
20.	Sundara-kāṇḍam (Rāmāyanam) by Venkamatya.	Do.	KANNADA.	Do.		
21.	Bhāgavatam Bhāṣā	Do.	MALAYALAM	Do.		
22.	Raṅgābhyāsam.	Do.	Do.	Do.		

N. B.—No. 5 is available at the Balamanorama Press, Mylapore, Madras.
Nos. 8 to 12 are available at the Sri Vani Vilas Press, Srirangam.
*The books marked with an asterisk are out of stock.

LIST OF BOOKS PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS, UNDER THE MADRAS GOVERNMENT ORIENTAL SERIES.

Serial Number.	Name of the work.	Name of the Editor.	Language.	Price. Rs. A. P.
I.	Kappal Śāttiram	T. P. Palaniappa Pillai, B. O. L.	*Tamil*	1 10 0
II.	Anubhava Vaiddiya Murai. Volumes I & II.	Dr, C. Dorairajan & Dr. C. S. Uttamarayan, H. P. I. M.	Vol. I	3 14 0
			Vol. II	4 8 0
III.	Aṭṭāṇa Kōlāhalam	Tirumalai Sri Saila Sarma	*Tamil*	5 0 0
IV.	Upadēsa-kāṇḍam Volumes I, II & III.	V. S. Chengalvaraya Pillai, M. A.	Vol. I	4 10 0
			Vol. II	5 0 0
			Vol. III	5 8 0
V.	Cōlaṉ Pūrva Paṭṭayam	C. M. Ramachandra Chettiar, B.A., B.L.	*Tamil*	5 0
VI.	Koṅgadeśa Rājākkaḷ	Do.	Do.	1 8 0
VII.	Sivajñāṇa-dīpam	T. P. Palaniappa Pillai, B.O.L.	Do.	1 6 0
VIII.	Daṭca-nāyaṇār Vaiddiya Aṭṭavaṇai	Dr. R. Tyagarajan, L.I.M.	Do.	1 8 0
IX.	Abhinaya-darpaṇamu	T. V. Subba Rao, B.A., B.L.	*Telugu*	1 12 0
X.	Auṣadha-yōgamulu	Dr. Veturi Sankara Sastri	Do.	3 12 0
XI.	Vaidya Nighaṇṭuvu	Do.		2 12 0
XII.	Dhanur-vidyā Vilāsamu	Veturi Prabhakara Sastri	Do.	4 14 0
XIII.	Yōga-darśana-viṣayamu	Vedam Lakshmi Narayana Sastri, B.O.L.	Do.	1 2 0
XIV.	Khaḍgalakṣaṇa Sirōmaṇi	N. Venkata Rao, M.A.	Do.	1 12 0
XV.	Tantra-sāra-saṅgraha (Viṣanārāyaṇīya)	Vaidyaratna. Dr. M. Doraiswami Ayyangar	*Sanskrit*	15 4 0
XVI.	Bhārgava-nāḍikā	Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.	Do.	6 0 0
XVII.	Hariharacaturaṅgam	S. K. Ramanatha Sastri	Do.	6 8 0
XVIII.	Brahma - sūtravṛtti-Mitākṣarā of Annambaṭṭa	P. S. Rama Sastri	Do.	7 0 0
XIX.	Nyāyasiddhānta-tattvāmṛtam of Srinivasa	S. Subrahmanya Sastri, B. O. L.	Do.	2 8 0
XX.	Garbha-cikitsā	Dr. N. Madhava Menon, A.M.A.C.,	*Malayālam*	3 8 0
XXI.	Vāstulakṣaṇam and Silpaviṣayam	S. K. Ramanatha Sastri	Do.	2 0 0
XXII.	Kaṇakku - sāram - Bālaprabōdham	Dr. C. Achuta Menon, B.A., Ph. D.	Do.	2 0 0
XXIII.	Kaṇakku-sāram	Do.	Do.	2 12 0
XXIV.	Kriyākramam	P. Narayanan Kutty Menon, M.A.	Do.	2 4 0
XXV.	Lōkōpakāra of Cāmuṇḍarāya	H. Sesha Ayyangar	*Kannada*	8 0 0
XXVI.	Raṭṭaṇatam	Do.	Do.	4 4 0
XXVII.	Vaidya-sāra-saṅgraha	Vaidyaratna Dr. G. Srinivasamurti, B.A., B.L., M.B. & C.M.	Vol. I	*In the press*

Serial Number.	Name of the work	Name of the Editor	Language.	Price.
XXVIII.	Aśva-śāstram of Abhinavacandra	Dr. P. Srinivasa Rao & H Sesha Ayyangar	*Kannada*	4 2 0
XXIX.	Auṣadhagalu-Vaidya Viṣaya	Vaidyaratna Dr. G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & CM.	Do	6 14 0
XXX.	Saṅgīta-ratnākara	M. Mariappa Bhat, M.A., L.T.	Do.	1 8 0
XXXI.	Sūpa Śāstra	U. Sitaramacarya	Do.	2 0 0
XXXII	Jami-al-Ashya	Afzal-ul-Ulama Hakim Abdul Qadir Ahmed Sahib	*Persian*	13 8 0
XXXIII.	Tibb-e-Faridi	Do.	Do.	8 4 0
XXXIV.	Tahqiq-al-Buhran	Do.	Do.	1 8 0
XXXV.	Safinat-al-Najat	Janab Rahim Ahmed Farooqui, M.A.	Do.	1 10 0

Serial Nos. XXXVI to LXX were published under the auspices of the TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY. TANJORE.

LXXI.	Vaiddiyak Kalañciyam	Dr. C. N. Kuppuswami, H.P.I.M., & Dr. V. S. Parvati, L.I.M.	*Tamil*	2 8 0
LXXII.	Anubhava-vaiddiyamurai, Vol. III.	Do.	Do.	5 0 0
LXXIII.	Anubhava Vaidyamu	Dr. Mulugu Visvesvara Sastri, H.P.I M.	*Telugu*	6 0 0
LXXIV.	Saivācāra-saṅgrahamu	Vidvan G. J. Somayaji, M.A., L.T.	Do.	2 0 0
LXXV.	Arogya-cintāmaṇi	Dr. N. Visvanatha Sarma	*Sanskrit*	9 0 0
LXXVI.	Tattvasāra with Ratnasāriṇī	Karappankad V. S. Venkatacaryaswami,	Do.	6 0 0
LXXVII.	Sūtrārthāmṛtalaharī	Dr. R. Nāgaraja Sarma. M.A., Ph.D., L.T.	Do.	3 4 0
LXXVIII.	Ratna-dīpikā and Ratna-śāstram	Sri P. S. Rama Sastri	Do.	2 4 0
LXXIX.	Aśva-cikitsā	Dr. C. K. Velayudhan Nair, B. V. Sc.	*Malayālam*	1 8 0
LXXX.	Phalasāra-samuccaya	Dr. C. Achutha Menon, B.A. Ph.D	Do.	8 0 0
LXXXI.	Mahā-sāram	Dr. M. K. Vaidyar, A.M.A.C.	Do	11 0 0
LXXXII.	Saptariṣi-nāḍi	Professer K. Natesan	*Tamil*	20 0 0
LXXXIII.	Karnāṭaka Rājākkaḷ Savistāra Carittiram	V. R. Ramachandra Dikshitar, M.A.	Do.	*In the press.*
LXXXIV.	Bharata-siddhāntam	P. Sambamurti, B.A., B.L.	Do.	Do.
LXXXV.	Piḷḷaippiṇi-Vākaṭam	Vaidyaratna Dr. M. Duraiswami Ayyangar	Do.	Do.
LXXXVI.	Anubhava Vaiddiyam Vol. IV	Dr. C. N. Kuppuswami, H. P. I. M.	Do.	Do.
LXXXVII.	Māṭṭu-Vākaṭam	Dr. I. M. Azizuddin, B.A., G.M.V.C.; B.V. Sc., Ph. D. (Edin.)	Do.	Do.
LXXXVIII.	Brahma Vidyā Sudhārṇavamu	V. V. Kriṣna Rao, B.A.	*Telugu*	Do.
LXXXIX.	Rāgatāḷa Cintāmaṇi	T. V Subba Rao, B.A., B.L.	Do.	Do.
XC.	Vaidya-cintāmaṇi	Dr. Mulugu Visvesvara Sastri, H.P.I.M.	Do.	Do.
XCI.	Kumāra Rāmuni Kathā	Dr. N. Venkataramanayya, M.A., Ph.D.	Do.	Do.
XCII.	Kāṭamarāju Caritra	Sri V. Prabhakara Sastri	Do.	Do.
XCIII.	Deva-keraḷam (Candra-kalā-nāḍī)	Sri T. S. Ranganatha Josyar	*Sanskrit*	Do

Serial Number.	Name of the work.	Name of the Editor.	Language.	Price.
XCIV.	Pātañjala - Yogasūtra-bhāṣya-vivaraṇam	P. S Rama Sastri and S. R. Krishanamurti Sastri	*Sanskrit*	*In the Press*
XCV.	Kiḷi-vaṇḍu-saṁvādam	V. H. Subrahamanya Sastri	*Malayālam*	Do.
XCVI.	Advaita-vedāntam	S. K. Ramanatha Sastri	Do.	Do.
XCVII.	Bārhaspatya-sūtra with Commentary	Dr. C. Achyuta Menoh, B.A., Ph. D.	Do.	Do.
XCVIII.	Karaṇa-paddhati	Do.	Do.	Do.
XCIX.	Yōga-sāram	Dr. M. K. Vaidyar A.M. A.C.	Do.	Do.
C.	Vaidya-sāra-saṅgraha Volume II	Vaidyaratna Dr. G Srinivasamurti, B.A., B.L., M.B. & C. M.	*Kannaḍa*	Do.
CI.	Sadguru-rahasya	Sri M. Mariappa Bhat, M.A., L.T	Do.	2 6 0
CII.	Shawakil-al-Hur	Dr. M. Abdul Haq, M.A. D. Phil.	*Arabic*	*In the press*

Terms of Sales

Packing, Postage and Sales Tax extra.

25 per cent. discount will be allowed to all *bona fide* book-sellers.

Books will not be sent by V. P. P.

The cost of the books together with the sales tax, packing and postal charges, should be sent in advance to:

THE CURATOR,
GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
LIBRARY, UNIVERSITY BUILDINGS.
TRIPLICANE, MADRAS 5.
INDIA.

6897a

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

M. L. J. PRESS, MADRAS—4.